ஸ்ரீ ஜகத்குரு திவ்ய சரித்திரம்



ஸ்ரீ ஜகத்குரு பொன்விழா வெளியீடு—1

ஸ்ரீ ஜகத்குரு
திவ்ய சரித்திரம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்.

தொகுத்தவர்
இராமச்சந்திரபுரம்
எஸ். சாம்பமூர்த்தி சாஸ்திரி

மாஜி சுப்ரீம் கோர்ட் நீதிபதி
என். சந்திரசேகர ஐயர்
எழுதிய ஆங்கில முன்னுரையுடன் கூடியது.

பிரசுரகர்த்தர்கள்:
பி. ஜி. பால் அண்டு கம்பெனி,
பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை 1.

முதற் பதிப்பு :
மார்ச்சு 2, 1957. (துர்முகி-மாசி, 19)

ஆர்ட்பேப்பர் பைண்டு	ரூ. 5/
அட்டை பைண்டு	ரூ. 6/8
கலிகோ பைண்டு	ரூ. 7/8

PRINTED AT THE LIBERTY PRESS, G. T., MADRAS.

4-5



ப்ரதோஷ பூஜாகால தர்சனம்

॥ श्रीः ॥

॥ श्रीजगद्गुरुपादधूलिस्तोत्रपंचकम् ॥

अद्यापि योगुरुवरस्य परम्परायां
प्रत्यक्षतो विजयते गिरिशावतारः ।
यत्पीठराडपरशङ्करदेवपादः
तत्पादपङ्कजरजः शिरसा वहामि ॥ १ ॥

धर्मेषु यो लसति रामयुधिष्ठिराभः
कृष्णः स्वयं प्रवचने निबिडे समाधौ ।
श्रीदक्षिणाभिमुखमूर्तिरमोघशक्तिः
तत्पादपङ्कजरजः शिरसा वहामि ॥ २ ॥

पापज्वरौ हरति यस्य कटाक्षवीक्षा
अज्ञानमाश्वपहिनोति च यस्य वाणी ।
भूयोपि जन्म न ददाति हि यत्प्रसादः
तत्पादपङ्कजरजः शिरसा वहामि ॥ ३ ॥

यत्पीठदास्यनिरताः विबुधेशमुख्याः
वाणीविधिप्रभृतयः सततं स्तुवन्ति ।
कामाक्ष्यनुग्रहविलासि च यस्य पीठम्
तत्पादपङ्कजरजः शिरसा वहामि ॥ ४ ॥

यो भाति मुक्तिफलशोभितकल्पशाखी
पाषण्डषण्डतिमिरोल्बणचण्डभानुः ।
आस्तिक्यधर्मकलशार्णवपूर्णचन्द्रः
तत्पादपङ्कजरजः शिरसा वहामि ॥ ५ ॥



ப்ரதம சிஷ்யர் : ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்

ஸமர்ப்பணம்

|| ஶ்ரீ: ||

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின்

பிரதம சிஷ்யர்களாக விளங்கும்

ஸ்ரீமத்

பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவரய

ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளுக்கு

இந்நூல்

பக்தியுடன் ஸமர்ப்பணம் செய்யப்பெறுகிறது.

INTRODUCTION

THE SAGE OF KANCHI

Sri Chandrasekharendra Sararswathi Swamigal, who was known by the name of Swaminathan before he took holy orders in 1907, at the early age of 13, was born in an orthodox family of scholars in Villupuram in the South Arcot District. His parents were Sri Subrahmanya Sastrigal and Srimathi Mahalakshmi Ammal. It is now fifty years since he ascended the *Gadi* of the Sri Kamakoti Peetam. The Golden Jubilee of this event is being celebrated this year in most of the important places in India.

The Tamil biography, which has been written in facile and simple prose by S. Sambamurthi Sastrigal of Ramachandrapuram is a unique one, not merely because such books are comparatively rare in South India, but also for the reason that the life portrayed is that of a great spiritual personality crowded with notable events, endeavour and achievement. The work contains an account of his travels all over India. Some of his wise sayings uttered in the course of informal conversations and regular discourses also find prominent mention.

His Holiness is a very remarkable person. Deeply imbued in Sanskrit lore, especially the Shastras and the Vedanta, he is at the same time a scholar in several branches of learning like art, architecture, archaeology, politics, economics, numismatics and inscriptions. He is a linguist who can speak several languages, besides his own which is Kannada. Though austere by himself and immersed in penance by fastings and vigils, puja and contemplation, his accessibility to all who go to him for advice and guidance is well-known. He is endowed with

singular powers of memory and his expositions of abstract and abstruse philosophic truths are marked with a facility of expression and a singular capacity to convey their meaning even to the ordinary and uninstructed laymen.

He has proved himself to be an able administrator, under whose management the Mutt has assumed unprecedented importance and influence. He has got all the affairs of the Mutt at his fingers' ends and those around him including the *sarvadhikari* are agents to carry out his personal directions and instructions.

But these are comparatively minor matters. For over three decades now, he has been engaged in incessant travel from town to town and village to village so that he might come into contact with the poorer classes of society and show to them by example and precept how they can develop true religion and spirituality. No hardship, mental or physical, is too much for him to carry on his life's work. His message, to put it in a nutshell, has been the synthesis of all religions and the need for profound and unswerving faith in the benevolence of God. He has striven unceasingly for bringing together classes and creeds into one group of believers, notwithstanding outward differences in forms of worship and habits and manners. Who dares to say he has not succeeded in his sacred mission in making people feel that they belong to the same brotherhood and are the children of one and the same God?

The late Sri Chandrasekhara Bharathi of Sringeri who disapppeared in the Tunga river the year before last on the *Mahalaya Amavasya* day was of a slightly different type. He was of a retiring disposition and confined himself in his later years mostly to his Tapovana at Sringeri. But Sri Chandrasekharendra Saraswathi believes, like Swami Vivekananda, in carrying the true message to the

people's doors. The former bewitched those who went to him by his radiant smiles; the latter casts his spell over them by his large luminous eyes which shed divine grace into you.

Stern in his own habits of orthodoxy, and never deviating from prescribed routine and ritual, he is broad-minded and catholic in temperament and people of all sects, classes and communities, including Harijans flock to him daily by hundreds to have his *darshan*, advice and guidance. During the last four decades, he has been touring and working steadily for the promotion of peace and amity among different religious faiths and has preached the gospel of the harmony of all religions despite outward differences in the methods of approach. His synthesis of modern thought with ancient beliefs and usages finds a well-reasoned exposition in an article on 'Our Spiritual Crisis' which he has contributed to the Vidya Bhavan Journal of Bombay.

Sages like him, who see far and beyond what they see around them are the very salt of the earth. They are the true representatives of Indian culture and religion at their highest. It is such men that we now need in plenty to show us the sure and safe path to national welfare and progress. At present, in this country, there is any amount of false doctrine, cheap shibboleths, and ruinous philosophy. Every man who is fortunate enough to secure some sort of position in public life believes that he is competent to speak on every subject under the sun with the authority of an expert or a prophet. The sooner this delusion is dispelled and people realise that their ignorance is comprehensive and their knowledge infinitesimal, the better for public good. Saviours of humanity like our sages of old, of which line the Jagadguru is a distinguished representative, are sorely needed to rescue us from the

chaos - social, religions and political - which is threatening to overwhelm us. Pinchbeck politicians and silly social reformers who, by reason of their brief authority, indulge in cheap clap-trap and who pose as leaders and think they can reform or demolish the structure of Hindu society which has been built during centuries are a public menace.

It is but approppariate that we should celebrate the Golden Jubilee of the ascension to the gadi of the Kama-Koti Peeta of one who serves as a fingerpost to mankind showing the right path to take to reach *shanti* and *bliss*. To change the metaphor, he is a beaconlight to all those travelling in ships and boats on the ocean of *samsara* warning them off against hidden rocks and shoals so that they may reach the haven with perfect safety.

May the Almighty vouchsafe to us the privilege of his spiritual guidance for many more years to come and may His Holiness's blessings be on all of us!

Madras
March 17, 1957.

N. CHANDRASEKHARA AIYAR
(Retired Judge, Supreme Court of India)

முகவுரை

புண்ணிய பூமியான நம் பரதகண்டத்தில் தருமத்தை நிலை நாட்டுவதற்காகப் பகவானுடைய திரு அவதாரங்கள் பற்பல காலங்களில் நிகழ்ந்ததுண்டு: அவைகளில், திரேதாயுகத்தில் நேர்ந்த ஸ்ரீ ராமாவதாரமும், துவாபர யுகத்தில் நிகழ்ந்த ஸ்ரீ கிருஷ்ணவதாரமும் எல்லோரும் அறிந்தனவே. இவ்வகையில், இக்கலியுகத்திலும் சில அவதாரங்கள் நிகழ்ந்துள்ளன. அவைகளில் ஸ்ரீ ஆதி சங்கரரது அவதாரம் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். முன் யுகங்களில் வந்த மேற்கண்ட அவதார புருஷர்கள் மன்னர்களின் வழியில் தோன்றி அதர்மத்தை எதிர்த்துத் தர்ம யுத்தம் புரிந்து சத்தியத்தை நிலைநாட்டினார்கள். ஆனால், ஸ்ரீ பரமேசுவரரின் அவதாரமெனக் கருதப்படும் ஸ்ரீ ஆதி சங்கரரோ, சிவகுரு என்னும் ஓர் அந்தணருக்கும் ஆரியாம்பிகை என்னும் அவர் பத்தினிக்கும் திருமகனாகக் கேரளநாட்டில் காலடி என்னும் தலத்தில் அவதாரம் செய்தார். இந்த மகான் மிக இளம் பருவத்திலேயே துறவுபூண்டு, தம் உபதேசங்களினாலும், பிரசாரங்களினாலும் பாரத பூமியில் தருமத்தை நிலைக்கச் செய்தார். அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலம் முப்பத்திரண்டு ஆண்டுகளேயாகும்.

ஸ்ரீ சங்கரரது அவதார காலம் கலியுகம் 2593 (கி. மு. 509) நந்தன வருஷமெனப் பல மேதாவிகள் ஆராய்ச்சிகள் மூலம் முடிவு செய்துள்ளார்கள். இக்கருத்தில் வேறுபாடுகள் பல இருந்தாலும், நம் பெரியோர்கள் சிறந்த ஆராய்ச்சியின்பின் கொண்ட இந்த முடிவே நமக்கும் ஒத்ததாகும். மேலும், ஸ்ரீ ஆதிசங்கரர் ஸ்தாபனம் செய்த மடங்கள் பாரதநாட்டில் எல்லாப் பாகங்களிலும் இன்றும் பிரகாசிக்கின்றன. அந்த மடங்களின் குருபரம்பரைகளைப் பரிசீலனை செய்யும்போதும் ஆதி சங்கரரது காலம் இக்கருத்தையே வலியுறுத்துவதாகும்.

சங்கரர் பாரத பூமி முழுவதையும் மூன்று முறை வலம் வந்து தம் உபதேசங்களால் மக்களது அஞ்ஞான இருளைப் போக்கி, வேத தர்மங்களுக்கு உட்பட்டிருந்தும், கொள்கைகளிலும் முறைகளிலும் மாறுபட்டிருந்த சைவம், வைஷ்ணவம், ஸௌரம், சாக்தம், காணபதம், கௌமாரம் முதலான பல மதங்களையும் சீர்திருத்தம் செய்தார். அதனால், அவர் ஷண்மத ஸ்தாபனாசாரியார் என்னும் பெயரையும் பெற்றார். அவர் நேபாளம் முதல் திருச்செந்தூர் ஈறாகவுள்ள பல புண்ணிய ஸ்தலங்களையும் தரிசித்து, ஆங்காங்கே ஸ்ரீ சக்ர ப்ரதிஷ்டைகளையும் செய்தருளினர். பத்ரிகாச்ரமத்திலும்,

(இமாசலத்தில்) துவாரகையிலும், ஜகந்நாதத்திலும், சிருங்ககிரியிலும் மடங்களை ஸ்தாபனம் செய்த பின்னர், அவர் காஞ்சீபுரத்தை அடைந்து, சர்வக்ஞ பீடமேறி, அங்கு காமகோடி பீடத்தையும் ஸ்தாபனம் செய்து, அவ்விடத்திலேயே நிர்விகல்ப சமாதி அடைந்தார்களெனச் சிவ ரகஸ்யம், மார்க்கண்டேய சம்ஹிதை, ஆனந்த கிரி சங்கர விஜயம், முதலிய பழமையான நூல்களிலிருந்தும், சமீப காலத்தில் ராஜசூடாமணிமகி என்பவரால் இயற்றப்பட்ட சங்கராப்யுதயம், இராமபத்ர தீக்ஷிதர் இயற்றிய பதஞ்சலி விஜயம் முதலான காவியங்களிலிருந்தும் தெளிவாகின்றது. வங்காள பாஷையில் 1892-வது ஆண்டில் வெளியிடப்பட்ட வங்காள ச்கல கலா நிகண்டுவின் (The Bengali Encyclopaedia) மூன்ருவது பாகத்தில், காஞ்சி என்ற தலைப்பின்கீழ், ‘அது ஸப்த புரிகளில் ஒன்று; ஓர் மகாபீட ஸ்தானம்; மேலும் அது ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளது சமாதி ஸ்தானம்; அந்நகரத்திலுள்ள ஸ்ரீ காமாக்ஷியம்மையின் ஆலயத்தில் பூர்ண புருஷாகிருதியாக ஸ்ரீ ஆதி சங்கரரது சிலாவிக்ரகம் அமைந்திருக்கிறது’ என்று கூறப்பட்டுள்ளது.

மேலும் பெரிய காஞ்சீபுரத்திலுள்ள ஸ்ரீ சங்கரமடத்தில் ஸ்ரீ ஆதிசங்கராசாரியரின் பிரதம சீடரான ஸ்ரீ ஸுரேச்வரருக்கு ஆலயமும் பிம்பமும் அமைந்துள்ளன. ஸுரேச்வரரது பூர்வ ஆசிரமப் பெயரான மண்டனமிச்ரரின் பெயரால் காஞ்சியில் அக்ரகாரம் ஒன்றும் இருந்துவருவதை நாம் இன்றும் காணலாம், இன்னும் காஞ்சியில் வரதராஜர், ஏகாம்பரர், காமாக்ஷி முதலான தேவாலயங்களிலெல்லாம் ஸ்ரீ சங்கரரின் பிம்பங்கள் காணப்படுவதுடன், காஞ்சியை அடுத்த திருவொற்றியூர் முதலான தலங்களில் உள்ள வேறு ஆலயங்களிலும் அவை புராதனமாகவே ஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளன. இக்காரணங்களினால் காஞ்சி நகரத்திற்கும் ஸ்ரீ ஆதிசங்கரருக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருந்தது என்பதை நாம் உணரலாம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் இதுவரை 68 ஆசாரியர்கள் எழுந்தருளியுள்ளதாகச் சொல்லப்படுகிறது. அவர்களில் பலர் பெரிய தவசிகள்; பலர் சிறந்த கவிஞர்கள்; பலர் தலைசிறந்த யோகிகள்; பலர் சாஸ்திரங்கள் பல கற்றவர்கள்; பலர் பக்திமார்க்கத்தை உலகிற் பரப்பியவர்கள்.

இப்பொழுது ஸ்ரீ காமகோடி பீடத்தில் 68-வது ஆசார்ய ஸ்வாமிகளாகப் பிரகாசிக்கும் ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி

ஸ்வாமிகள் ஸ்ரீ ஆதி சங்கரரின் அவதாரமெனவே கருதப்பட்டு வருவதை உலகம் அறியும்; அவர்களுடைய வரலாற்றையும், சநாதன தர்மத்திற்கு அவர்கள் ஆற்றிவரும் அரும் பெரும் பணிகளையும் சிறிதளவாகவேனும் எடுத்துக்கூறும் நோக்கத்துடன் இப்புத்தகம் தொகுக்கப்பட்டுள்ளது. அம்மகான் வைதிக மார்க்கத்தையும், வேதாந்த தத்துவத்தையும் பாதுகாக்கச் செய்துவரும் அரிய முயற்சிகளையெல்லாம் இச்சிறு புத்தகத்தில் எழுதிவிடுவதென்பது இயலாத காரியமாகும். ஆனால், அத்துறையில் சிறியதொரு முயற்சியேயாயினும் இதனை உலகம் ஏற்குமென்றே எண்ணுகின்றேன். ஒருபுறம் மடத்தின் அன்றாட நிர்வாகம்; மற்றொருபுறம் தம்மை நாடி வரும் சிஷ்யர்களை உய்விக்கச் செய்வதில் அவர்கள் காட்டும் ஆர்வம்; தினந்தோறும் பலமணி நேரம் அவர்கள் செய்துவரும் ஸ்ரீசந்திரமௌளீச்வர பூஜை; இவற்றிற்கிடையே அவர்கள், தாம் மேற்கொண்ட துறவறத்தைச் சாஸ்திர விதிகளுக்குச் சிறிதும் மாறுபடாமல் காத்துவரும் சிறப்பு; ஆகிய இவை போன்றவற்றை அவர்களைத் தரிசித்தவர்களே அறிவர். இவற்றோடு அவர்கள் தம் ஆசிரமத்திற்குரிய கடுந்தவத்தினாலும் உபவாசத்தினாலும் தமது சரீரத்தை இளைக்கச் செய்து, பசி, தூக்கம் இவைகளை முற்றிலும் வென்று, ஒவ்வொரு நாளின் முழு நேரத்தையும் சமூகம் சீர்திருந்த வழிகளென்ன என்பதைப்பற்றி ஆலோசித்து, அத் துறைகளுக்கு ஏற்றபடி அவ்வப்போது உபதேசித்தும், ஆற்றியும் வரும் அரும் பணிகளை உலகம் நன்கு அறியும்.

1907-வது ஆண்டில் ஸ்வாமிகள், தமது 13-ஆவது பிராயத்தில் பீடத்தி லமர்ந்தார்கள். அக்காலம் முதல் அவர்கள் பல வருடங்கள் தொடர்ந்து யாத்திரைகளில் அமர்ந்து ஆங்காங்குள்ள மக்களுக்குத் தரிசனமளித்தும், அவர்களைக் கருணையுடன் அனுக்கிரகித்தும் வருகிறார்கள். அவர்கள் அவ்வப்போது மேற்கொண்டுள்ள விஜய யாத்திரைகளைப் பற்றிய குறிப்புக்களின் சில பகுதிகள் இப்புத்தகத்தில் சேர்க்கப்பெற்றுள்ளன. ஸ்வாமிகள் விஜயம் செய்த ஸ்தலங்களின் விசேஷங்களும் ஆங்காங்கே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. அவர்களின் உபதேச மொழிகள் சிலவும் இதில் காணப்படும். மகாபண்டிதர்களும் வியக்கத்தக்கவாறு சாஸ்திர ஞானம் படைத்த நமது ஸ்வாமிகளின் அருள்மொழிகள், பண்டிதர் பாமரர் யாவருக்கும் பயன் தரக்கூடியனவாயிருக்கும். இவ்வுபதேசங்களில் அவர்களின் மேதை, கருணை, இவற்றின் சிகரங்களை நாம் காணலாம். ஸ்வாமிகளின் அபாரமான ஞாபக சக்தியையும், சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி, ஆங்கிலம் முதலான பாஷைகளை அவர்கள் எளிதில் கையாளும் வன்மையை

யும் கண்டு வியப்படையாதார் இலர். பாமரர்களும் அறியும் வண்ணம் அத்வைத சித்தாந்தத்திற்கு ஸ்வாமிகள் விளக்கம் கூறிவருவது தனிச் சிறப்பு வாய்ந்ததாகும்.

இந்நூலைத் தொகுக்கப் பல வெளியீடுகள் உதவியாக இருந்தன. ஸ்வாமிகளின் யாத்திரையின் தினசரிக் குறிப்புக்களும் பெரிதும் பயன்பட்டன; ஸ்வாமிகள் அவர்களின் யாத்திரைகள் சம்பந்தமாய், வடமொழி, ஹிந்தி, தெலுங்கு முதலான பாஷைகளில் வெளிவந்துள்ள கட்டுரைகள் பலவற்றைத் தமிழில் மொழி பெயர்ப்பதில் புலமை வாய்ந்த பல அன்பர்கள் மனமார இப்பணியில் உதவியுள்ளார்கள். இத்துறையில் புதுக்கோட்டை மல்லாதி ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி சாஸ்திரிகளின் சேவை குறிப்பிடத் தக்கது. அவர்கள் யாவர்க்கும் அடியேனது நன்றி உரித்தாகும்.

மேலும் அடியேன் பல வருடங்களாகச் சேகரித்துவைத்த நிகழ்ச்சிக் குறிப்புகளை ஓர் புத்தகவடிவமாக அமைப்பதில் எனக்கு அவ்வப்போது ஆலோசனைகள் பல கூறி, புத்தகம் முழுவதையும் பரிசீலனை செய்து ஆங்காங்கு பொருத்தமான தலைப்புகள் அமைத்தும், அச்சில் ஏறியபொழுது பிழைகள் திருத்தியும் பேருதவிபுரிந்த சென்னை இராசதானிக் கல்லூரியின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் ஸ்ரீ ஆர். விச்வநாத ஐயர், எம். ஏ., அவர்களுக்கும், இப்புத்தகத்தை வெகு சீரிய முறையில் மிக விரைவில் அச்சிட்டுக் கொடுத்த சென்னை லிபர்ட்டி அச்சகத்தின் உரிமையாளர் ஸ்ரீ டி. ஆர். ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்களுக்கும், இதை வெளியிடும் பணியை மிகுந்த ஆர்வத்துடன் ஏற்று மக்களுக்குப் பேருபகாரம் செய்த சென்னைப் பிரசுரகர்த்தர்கள் B. G. பால் அண்டு கம்பெனியின் நிர்வாகி ஸ்ரீ K. நீலகண்ட ஐயர், B.A. அவர்களுக்கும் எனது நன்றி உரியதாகும். இதை ஸ்வாமிகளின் பொன்விழா நினைவு மலராக வெளியிட அனுமதித்த அவ்விழாக் கமிட்டியாருக்கும் நான் என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலைத் தொகுக்கும் காலத்தில் அயர்வு, மறதி முதலியவற்றால் பல அரிய சம்பவங்களும், ஸ்ரீ மடத்தின் தொண்டில் ஈடுபட்ட பல அன்பர்களின் பெயர்கள் முதலியனவும் விடப்பட்டிருக்கக்கூடும். நூலில் சில பிழைகளும் புகுந்திருக்கக்காரணமுண்டு. இவை போன்ற எல்லாக் குறைகளையும் அன்பர் உலகம் க்ஷமிக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

சென்னை,
2 மார்ச்சு 1957. } ஸ்ரீ. ஸாம்பமூர்த்தி சாஸ்திரி.

பொருளடக்கம்

ஸ்ரீ காமகோடி பீடம் 68வது சங்கராசாரிய ஸ்வாமிகளான ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய ஸ்ரீமத் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின் திவ்ய சரித்திரம்

1. இளமையும் கல்வியும்

முன்னோர்கள்.

ஸ்ரீ ஆதிசங்கரர் ஸ்தாபித்தருளிய ஸ்ரீ காமகோடி பீடத்தின் பரம்பரையில் 68-ஆவது ஆசாரிய மூர்த்தமாக இப்பொழுது விளங்கி வரும் ஸ்ரீமத் சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் ஜய வருடம் வைகாசி மாதம் 8௨ (1894-ஆம் வருடம் மே மாதம் 20௨) ஞாயிற்றுக்கிழமை, அனுஷ நக்ஷத்திரம் கூடிய புண்ய தினத்தில், பகல் நாழிகை 19-க்குத் திரு அவதாரம் செய்தருளினார்கள். தென்னார்க்காடு ஜில்லா, விழுப்புரம் நகரத்தில், நவாப் தோப்புக்கு அருகில் உள்ள அக்ரஹாரத்தின் கீழ்ப்பகுதியில், அக்காலத்தில் கோவிந்தராயர் வீடு என்னும் பெயருடன் விளங்கிவந்த கிருஹத்தில் அச்சுப நிகழ்ச்சி ஏற்பட்டது. சுப்பிரமண்ய சாஸ்திரிகள் என்னும் அந்தணப் பெரியாரும் அவருடைய தருமபத்தினி மகாலக்ஷ்மி அம்மையாரும் தம் இரண்டாவது குமாரராக இப்புண்ணிய புருஷனை உலகுக்களிக்கும் பேறு பெற்றார்கள். ஸ்ரீஸ்வாமிகள் பூர்வாச்சிரமத்தில் கன்னடத்தைத் தாய்ப் பாஷையாகக் கொண்ட ஹோஸல கர்னாடக ஸ்மார்த்தப் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவ் வகுப்பினர் சிலர் சில நூற்றாண்டுகளுக்கு முன், காவிரி பாயும் சோழ நாட்டில் குடியேறி ஆங்காங்கே தங்கி வரலாயினர். அவர்களின் ஒரு கிளை திருவிடைமருதூர் என்ற திவ்ய க்ஷேத்திரத்தில் தங்கலாயிற்று. அக் குடும்பமே நம் ஸ்வாமிகளின் முன்னோர்களின் குடும்பமாகும். அக் குடும்பத்தினரிற் சிலர் தஞ்சையில் ஆண்டுவந்த மகாராஷ்டிர மன்னரான அமரசிம்ம மகாராஜாவின் (சரபோஜி மன்னரின் சிறிய தந்தை) தர்பாரில் கௌரவமுள்ள பதவிகளை

வகித்துவந்தனர். அவர்கள் வழிவந்த கணபதி சாஸ்திரிகள் என்பவர் நம் ஸ்வாமிகளின் தந்தை வழிப் பாட்டனார் ஆவர்.

கணபதி சாஸ்திரிகள் தமது இளமைப் பருவத்திலேயே சாஸ்திரங்களில் விற்பன்னராகவும், ரிக் வேதத்தில் நல்ல பயிற்சி பெற்றவராகவும் விளங்கினார். அவர் கன்னடம், மகாராஷ்டிரம், தமிழ், தெலுங்கு முதலான பாஷைகளில் தேர்ச்சியும், சிறந்த நிர்வாகத் திறனும் படைத்தவராகவும் இருந்தார். காமகோடி பீடத்தின் 64-ஆவது ஆசார்ய ஸ்வாமிகளான ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் இவரது திறனைக் கண்டு 1835-இல் மடத்தின் சர்வாதிகாரியாக இவரை நியமனம் செய்தார்கள். இந்தச் சர்வாதிகாரப் பதவியை இவர் 64, 65-ஆவது பீடாதிபதிகளின் காலத்திலும், சுமார் 50 வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து வகித்துவந்தார்.* 64-ஆவது ஆசாரிய ஸ்வாமிகள் 1840-இல் காஞ்சீபுரம் காமாக்ஷி அம்பிகை ஆலயத்திற்குக் கும்பாபிஷேகத்தையும், 1846-இல் திருவானைக்கா ஸ்ரீ அகிலாண்டேச்வரி அம்பிகைக்குத் தாடங்க பிரதிஷ்டையும் நடத்தி வைத்தார்கள். இந்த இரண்டு வைபவங்களையும் கணபதி சாஸ்திரிகள் மிகத் திறமையுடன் நிர்வகித்து ஸ்வாமிகளின் ஆசியைப் பெற்றார். மேலும், அக்காலத்தில் அவரால் மடத்திற்குப் பல நிரந்தரமான நன்மைகளும் செய்துவைக்கப்பெற்றன. அவற்றில் முக்கியமான ஒன்றை இங்குக் குறிப்பிடுவோம்.

பாட்டனார் கணபதி சாஸ்திரிகள்.

பதினெட்டாவது நூற்றாண்டில் நாட்டில் நடந்த யுத்தகாரணத்தால், காமகோடி மடமானது காஞ்சீபுரத்திலிருந்து கும்பகோணத்திற்கு மாற்றப்பெற்றது; அதன் விளைவால், முன் பல தேச மன்னர்களால் மடத்திற்குத் தான சாஸனம் செய்விக்கப்பட்டிருந்த கிராமங்களிற் பல மடத்தின் நிர்வாகத்திலிருந்து பிரிந்துபோய்விட்டன. அப்பொழுது அக்காலத்திலிருந்த சர்க்கார் அளித்து வந்த மோகினித் தொகையைக் கொண்டே மடத்தின் நிர்வாகம் நடைபெற வேண்டியிருந்தது. இந்நிலையைக் கண்டு, சர்வாதிகாரி கணபதி சாஸ்திரிகள் நிரந்தரமாக மடத்திற்குச் சிறிதளவேனும் பூமி

*65-வது பீடாதிபதிகளான ஸ்ரீ மஹாதேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் தமது பூர்வ ஆசிரமத்தில் கணபதி சாஸ்திரிகளின் தமையனார் புதல்வர் ஆவர்.



1908-ல் தஞ்சாவூருக்கு விஜயம். தஞ்சை அரண்மனையில் ராஜபரம்பரையினர் பூஜித்த சமயம்



விழுப்புரத்தில் ஸ்வாமிகள் ஜனித்த இல்லம்



தந்தை சுப்பிரமண்ய சாஸ்திரிகள்



தாயார் மகாலக்ஷ்மி அம்மாள்

வாங்கி வைத்து விடவேண்டுமென்று எண்ணம் கொண்டார். 1850-வது வருடத்தில், அப்பொழுது இருந்த ஆசாரிய ஸ்வாமிகள் கும்பகோணத்திலிருந்து திருவையாற்றிற்கு ஒரு முறை ஸ்வாமி தரிசனத்திற்குச் சென்றார்கள். பிறகு, அவர்கள் பங்காருகாமாக்ஷி அம்மனையும் தரிசிக்க விரும்பித் தஞ்சைக்கும் விஜயமானார்கள். தஞ்சையில் கடைசியாக அரசாண்ட சிவாஜி மகாராஜா அவர்கள் ஸ்வாமிகளைத் தமது அரண்மனைக்கு அழைத்து, அவர்களுக்குரிய மரியாதைகளை யெல்லாம் செய்து, அவர்களுக்குக் கனகாபிஷேக மும் செய்தார். தங்க நாணயங்களால் அபிஷேகம் செய்வதையே கனகாபிஷேகம் என்பர். அன்று மன்னர் செய்த கனகாபிஷேகத் தில் ஐயாயிரம் தங்க வராகன் நாணயங்கள் இருந்தன. அந்த நாணயங்கள் யாவற்றையும் கணபதி சாஸ்திரிகள் மிகுந்த ஜாக் கிரதையுடன் சேகரித்துப் பத்திரப்படுத்தி வைத்தார். ஆனால், ஸ்வாமிகளோ மடத்தில் அதிகப் பொருளிருந்தால் அதைக் காப் பாற்றுவதில் மிகுந்த அக்கரை கொள்ளவேண்டி வருமென்றும், ஆத்ம விசாரத்திற்கு அது இடையூறாக இருக்குமென்றும், அதனால் அப்பொருள் முழுவதையுமே வித்வான்களுக்கு அப் பொழுதே பகிர்ந்து கொடுத்து விடலாமென்றும் கருதினார்கள்.

ஆனால், கணபதி சாஸ்திரிகளின் உள்ளமோ அப்பணத்தைக் கொண்டு மடத்திற்கு நிலம் வாங்குவதில் ஈடுபட்டிருந்தது. இவ் விஷயத்தில் சாஸ்திரிகள் ஸ்வாமிகளது அநுமதியை ஒருவாறு பெற்றுப் பிறர் அறியாதவாறு அப்பொற்காசுகளுடன் குதிரை மீது அமர்ந்து கபிஸ்தலம் என்னும் ஊருக்கு வந்து சேர்ந்தார். கபிஸ்தலத்தில் இருந்த மூப்பனார் என்னும் பெரிய பிரமுகர் இவரை மிகுந்த மரியாதையுடன் வரவேற்று உபசரித்து இவரது எண்ணத்தையும் கேட்டறிந்தார். அக்காலத்தில் கும்பகோணத் துக்குக் கிழக்கே உள்ள அணக்குடி என்ற ஊரிலிருந்த அணக் குடிப் பிள்ளை என்ற மிராசுதார் தம் நிலங்கள் சிலவற்றை விற்க எண்ணம் கொண்டிருந்ததாக மூப்பனார் கேள்வியுற்றிருந்தார். அந்த மிராசுதாரை அணக்குடிப் பிள்ளை என்று மரியாதைப் பெயருடனேயே குறிப்பிடுவது வழக்கம். மூப்பனார் சாஸ்திரி களுக்குத் தகுந்த பந்தோபஸ்துக்களைச் செய்து அளித்து, தமது காரியஸ்தர் ஒருவருடன் அவரை அணக்குடிக்கு அனுப்பிவைத் தார், சாஸ்திரிகள் அணக்குடிக்குச் சென்று பிள்ளை அவர்களிடம்

தாம் கொண்டுவந்த நிதியைக் கொடுத்து, அதற்கு ஈடாக மடத்திற்கு எவ்வளவு நிலம் சாஸனம் செய்ய முடியுமோ அவ்வளவு நிலத்தைச் சாஸனம் செய்யும்படி கேட்டுக்கொண்டு, மேலும் அதிக நேரம் அங்கே தங்காமல் தஞ்சைக்குச் சென்றுவிட்டார். சாஸ்திரிகளது தூய எண்ணத்தையும், அவருக்கு மடத்திலிருந்த அபிமானத்தையும் கண்டு வியந்த பிள்ளை அவர்களும் சில மாதங்களில் கும்பகோணத்திற்கு இரண்டு மைல்கள் தூரத்திலுள்ள கருப்பூர் என்னும் கிராமத்தில் தமக்குச் சொந்தமாயிருந்த 40 வேலி பூமியை மடத்திற்குச் சாஸனம் செய்து கொடுத்தார். இன்று மடத்திற்குச் சொந்தமாயுள்ள கிராமங்களுள் அதிக வருமானம் தருவது இந்தக் கருப்பூர்க் கிராமமே ஆகும்.

தந்தை சுப்பிரமண்ய சாஸ்திரிகள்.

கணபதி சாஸ்திரிகளுக்குக் குமாரர்கள் மூவர். அவர்களுள் மூத்தவரான சுப்பிரமணிய சாஸ்திரிகளே நம் ஸ்வாமிகளின் தந்தையாவார்; சுப்பிரமணிய சாஸ்திரிகள் பிறந்த வருஷம் 1855. கணபதி சாஸ்திரிகள் தம் குமாரருக்கு உரிய காலத்தில் உபநயனம் செய்வித்து வேதப் பயிற்சியையும் அளித்தார்; பின்னர் அவர், அவருக்கு ஆங்கிலக் கல்வியிலும் பயிற்சி செய்வித்தார். 1872-ஆவது ஆண்டில் சுப்பிரமணிய சாஸ்திரிகள் கும்பகோணம் கவர்ன்மெண்டு கலாசாலையில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் முதன்மையாகத் தேறினர். கலாசாலையில் அவருக்கு இணைபிரியா நண்பராக அப்பொழுது பழகிவந்தவர், பிற்காலத்தில் பிரபல இஞ்சினீயராக விளங்கிய திருவிசைநல்லூர் ஸ்ரீநீலகண்ட சாஸ்திரிகளாவார். இருவரும் பிராயம் முதிர்ந்து ஓய்வு பெற்ற பிறகும் பல முறை சந்தித்து வருவது வழக்கம்.

கலாசாலையை விட்ட பின்னர் சுப்பிரமணிய சாஸ்திரிகள் கும்பகோணத்தில் ராவ்பகதூர் எஸ். அப்பு சாஸ்திரிகள், சுவாமிநாத ஐயர் முதலான பிரமுகர்கள் கும்பேச்வர ஸ்வாமி தெற்கு வீதியில் ஆரம்பித்திருந்த பள்ளியில் ஓர் உபாத்தியாயராக அமர்ந்தார். அக்காலத்தில் கும்பகோணம் கவர்ன்மெண்டு கலாசாலையின் தலைவராக இருந்த ஸ்ரீ கோபால ராவின் சிபார்சினுல் இந்த உத்தியோகம் இவருக்குக் கிடைத்தது. அந்தப் பள்ளியே இன்று

கும்பகோணம் நகரில் நேடிவ் ஹைஸ்கூல் என்னும் பெயருடன் விளங்குகிறது. இங்குச் சிலகாலம் வேலை பார்த்த பின்னர், சாஸ்திரிகள் திருவாரூருக்கடுத்த காவாலகுடி என்ற கிராமத்தில் பிரபல மிராசுதாராக இருந்த தியாகராஜ முதலியாருக்குக் கல்விப் பயிற்சி அளிப்பதற்காக நியமனம் செய்யப்பட்டார். சில வருடங்கள் அவர் அங்கு வேலையில் அமர்ந்திருந்து, பின்னர் சர்க்கார் கல்வி இலாகாவில், முதலில் ஓர் உபாத்தியாயராகவும், பிறகு சூபர்வைசராகவும் அமர்ந்து தென்னார்க்காடு ஜில்லாவில் விருத்தாசலம், சிதம்பரம், பரங்கிப்பேட்டை, விழுப்புரம், திண்டிவனம், விக்கிரவாண்டி, மஞ்சகுப்பம் முதலான பல ஊர்களில் 30 வருடங்களுக்குமேல் உத்தியோகம் வகித்துவந்தார். சுப்பிரமண்ய சாஸ்திரிகள் நல்ல கலா ரசிகர். அந்நாளில் சங்கீதத்தில் மிகச் சிறப்புடன் விளங்கிய மகா வித்வான் மகா வைத்யநாத ஐயரின் கச்சேரிகளைக் கேட்பதில் சாஸ்திரியாருக்கு ஆவல் அதிகம் உண்டு. அந்த மகா வித்வானின் கச்சேரியைக் கேட்ட பெருமையினால் அவருக்குப் பிற்கால வித்வான்களின் கச்சேரிகளைக் கேட்பதில் அதிக ஆர்வம் உண்டாகவில்லை. அவர் தாமே சுத்த கர்னாடக பாணியில் நன்றாகப் பாடும் வன்மையும் பெற்றிருந்தார்.

அன்னை மகாலக்ஷ்மி அம்மாள்.

தஞ்சையை அரசாண்ட முதல் நாயக்க மன்னராகிய சேவப்ப நாயக்கரிடம் அமைச்சராக அமைந்து நாட்டின் நிர்வாகத்தைத் திறம்பட நடத்திவந்த ராஜா கோவிந்த தீக்ஷிதரது மரபே நம் ஸ்வாமிகளின் தாய்வழி மரபாகும். கோவிந்த தீக்ஷிதர் மகா வித்வானாக விளங்கி வேள்விகள் பல நடத்தி உள்ளார். மேலும் இவர் தம் காலத்தில் ஐயன் என்னும் சிறப்புப் பெயரையும் பெற்று விளங்கினார். இன்று, ஐயன் வாய்க்கால், ஐயன்குளம், ஐயன் தெரு, ஐயன் கடை எனச் சோழ நாட்டின் பல பாகங்களிலும் விளங்கி வருவனவெல்லாம் இவர் பெயரால் தோன்றியுள்ளவைகளாகும். சோழநாட்டில் காவிரியின் இரு கரைகளிலும் பல தலங்களில் உள்ள கருங்கல் படிக்கட்டுகளையும், மண்டபங்களையும் அமைத்த பெருமை இந்தக் கோவிந்த தீக்ஷிதரைச் சார்ந்ததாகும். மேலும், சோழ நாட்டிலும் திருவண்ணாமலையிலும் இவர் ஆலயத் திருப்பணிகள் பல செய்துள்ளார்; பல

இடங்களில் குளங்களையும், நீர்ப்பாசனக் கால்வாய்களையும் இவர் வெட்டியுள்ளார்.*

கோவிந்த தீக்ஷிதர் தம் ஓய்வு நாட்களைக் கும்பகோணத்திற்கடுத்த பட்டீசுவரம் என்னும் பாடல் பெற்ற தலத்தில் கழித்து வந்தார். அவருடையதும், அவரது மனைவியாரதுமான முழு உருவக் கற்சிலைகள் அவ்வூர்ச் சிவாலயத்தின் உட்புறத்தில் காணப்பெறுகின்றன. இந்தத் தீக்ஷிதர் பரம்பரையிலே வந்த மகாலக்ஷ்மி அம்மையே நம் ஸ்வாமிகளை உலகுக்கு அளித்த பாக்கியவதியாவார்.

திருவையாற்றிற்குக் கிழக்கே 4 மைல் தூரத்தில், காவிரியின் வடகரையிலமைந்துள்ள ஈச்சங்குடி என்னும் அழகிய கிராமத்தில், மகாலக்ஷ்மி அம்மையார், நாகேச்வர சாஸ்திரி என்னும் அந்தணோத்தமருக்கும் அவருடைய தரும பத்னி மீனாட்சி அம்மையாருக்கும் புதல்வியாகத் தோன்றினார். தஞ்சை ஜில்லாவில் ஈச்சங்குடி என்னும் கிராமம் பல மகா வித்வான்களையும், மேதாவிகளையும் நாட்டிற்கு அளித்த பெருமையைப் பெற்ற அக்ரஹாரங்களில் ஒன்றாகும். இந்த அக்ரஹாரத்தில் யாவரும் வேதம் பயின்று, நித்ய அக்னிஹோத்திரிகளாக அக்காலத்தில் விளங்கி வந்தனர்.

உபமன்யூ வாஸிஷ்ட கோத்திரத்தைச் சேர்ந்த நாகேச்வர சாஸ்திரிகள் ரிக் வேதத்தை லக்ஷணத்துடன் அத்தியயனம் செய்து, தர்ம, சாஸ்திரங்களிலும், பிரயோகங்களிலும் நல்ல தேர்ச்சி பெற்று விளங்கினார்கள். கும்பகோணத்திலும், திருவையாற்றிலும் பல குடும்பங்கள் அவரைத் தம் ஆசார்ய ஸ்தானத்தில் அமர்த்தி மிகவும் மதிப்புடன் ஆதரித்து வந்தன. அக் குடும்பங்களில் கும்பகோணத்தில் நம் ஸ்வாமிகளின் பாட்டனார் கணபதி சாஸ்திரிகளுடைய குடும்பமும் ஒன்றாகும். நாகேச்வர சாஸ்திரிகள் ஒரு

---

*சரித்திரப் பிரசித்தி பெற்ற இவரது வரலாறு அனந்தப்பூர் அரசாங்கக் கலாசாலையில் ஆங்கிலப் பேராசிரியராயிருந்த என். கே. வெங்கடேசன் பந்துலுவால் ஆங்கிலத்தில், சென்ற 1933-வது வருடத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மைசூரைச் சார்ந்த சாமராஜ நகர் வித்வான் வேங்கடரமண சாஸ்திரி என்பவர் "தமிழ் நாட்டின் கர்னாடக மந்திரி" என்னும் பெயருடன் இவரது வரலாற்றைக் கன்னடபாஷையில் வெளியிட்டுள்ளார்.

முறை கணபதி சாஸ்திரிகளின் வீட்டில் நடைபெற்ற ஒரு விசேஷத்திற்குக் கும்பகோணம் வந்தபொழுது, அவர் தம் குமாரி மகாலக்ஷ்மியைக் கணபதி சாஸ்திரிகளின் புதல்வரான சுப்ரமணியத்திற்குக் கன்னிகாதானம் செய்து கொடுக்கத் தாம் விரும்புவதாகவும், அந்தத் தானத்தைக் கணபதி சாஸ்திரிகள் ஏற்றுக்கொண்டு தம்மைப் பெருமைப்படுத்த வேண்டுமென்றும் விண்ணப்பித்துக் கொண்டார். அச் சொற்களைக் கேட்ட கணபதி சாஸ்திரிகள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. தானாக வந்த மகாலக்ஷ்மியைத் தள்ளுவாரும் உண்டோ? மேலும், ஆசாரிய ஸ்தானத்திலுள்ள பெரியார் தம் குமாரியைத் தம் புதல்வனுக்குக் கன்னிகாதானம் செய்து கொடுப்பதாகத் தாமே கூறியதில் அவர் மிகப் பெருமை கொண்டார். பிள்ளைகளுக்குத் தகுந்த பெண்களைத் தேடி யாசிக்கும் காலமாக அக்காலம் அமைந்திருந்தது. மகாலக்ஷ்மி அம்மையாரது ஏழாவது பிராயத்திலும், சுப்ரமணிய சாஸ்திரிகளது பதினெட்டாவது வயஸிலும் அவ்விருவருக்கும் வேதோக்தமாக ஈச்சங் குடியில் விவாகம் நடந்தேறியது.

தம் கணவருடன் இல்லறத்தைச் செவ்வையாய் நடத்தி வந்த மகாலக்ஷ்மி அம்மையார் அடக்கமே உருவானவர்; அவர் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் முதலான பாஷைகளில் தோத்திரப் பாடல்களைப் பாடி மகிழ்வதிலும், கணவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்வதிலும், குழந்தைகளை நல்லவழியில் பராமரித்து வருவதிலும் தம் காலத்தைச் செலவிட்டு வந்தார். மேலும் பெண்களுக்குரிய விருதங்கள் யாவற்றையும் ஒன்று விடாது, அவ்வக் காலங்களில். அந்த அம்மையார் அனுஷ்டித்து வந்தார். சுகங்கள் வரும் காலத்தில் அதிகச் சந்தோஷத்தையும், துக்கம் ஏற்படும் பொழுது அதிகக் கவலையையும் அடையாமல், எல்லாம் கடவுள் செயல் என்ற நம்பிக்கையுடன் நல்ல விவேகியாக அந்த அம்மையார் வாழ்ந்து வந்தார். அவருடன் பிறந்தவர்கள் ஐவர். அவர்களில் இருவர் பெண்கள்; மூவர் ஆண்கள். அம்மையாரின் கடைசிச் சகோதரர் சுப்ரமண்ய சாஸ்திரிகள் ரிக் வேதம் நன்கு பயின்று, சாஸ்திரங்களிலும் தேர்ச்சி பெற்றுத் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆங்கிலம் முதலான பாஷைகளையும் கற்று, அறுபது வருடங்களுக்கு மேலாக மடத்தின் ஆஸ்தான வித்வத் சபையில் இருந்துகொண்டு இன்றும் பணியாற்றிவருகிறார்.

ஸ்வாமிகளின் தந்தை சுப்ரமண்ய சாஸ்திரிகள் விழுப்புரத்தில் கல்விச் சாலைகளின் மேற் பார்வையாளராக உத்தியோகம் வகித்து வந்த சமயம் அவருக்கு இரண்டாவது புதல்வராக, சாலிவாகன சகாப்தம் 1817-ஜய வருடம் வைகாசி மாதம் 8-ஆம் தேதி (1894-மே மாதம் 20-ஆம் தேதி) விழுப்புரம் என்னும் நகரில் நம் ஸ்வாமிகள் அவதரித்தார். அவர்களின் ஜாதக நகலைப் பிற்சேர்ப்பில் காண்க. முதல் குமாரருக்குக் கணபதி எனப் பெயரிட்டிருந்தமையை ஒட்டித் தந்தையார் தம் இரண்டாவது குமாரருக்கு முருகப் பெருமான் திருநாமமான சுவாமிநாதன் என்று பெயரிட்டார். சுப்ரமண்ய சாஸ்திரிகளின் குல தெய்வமும் சுவாமிமலையில் எழுந்தருளி இருப்பவருமான ஸ்ரீ சுவாமிநாத சுவாமியே; ஆகையால், குலதெய்வத்தின் பெயரையே சாஸ்திரியார் தம் மகவுக்கிட்டு மகிழ்ந்தாரெனவும் கூறலாம்.*

பிறப்பும் இளமைப் பருவமும்.

சாஸ்திரிகளுக்கு நம் ஸ்வாமிகளைத் தவிர நான்கு புதல்வர்களும், ஒரு பெண்ணும் உண்டு. அவர்கள் முறையே ஸ்வாமிகளுக்கு மூத்தவரான கணபதி சாஸ்திரி, இளையவர்களான, லலிதாம்பாள் அம்மையார், சாம்பமூர்த்தி சாஸ்திரி, சிவம் என்றழைக்கப்படும் சதாசிவ சாஸ்திரி, குஞ்சு சாஸ்திரி என அழைக்கப்படும் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி என்பவர்களாவர். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் மடத்தின் பரம்பரைப் புரோகிதராக இருந்த மாயவரம் பிரும்மஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகளிடம் ரிக் வேதம் கற்று, நம் ஸ்வாமிகளின் பிரதான சிஷ்யராக இப்பொழுது விளங்கும் ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளுக்கும், அவர்களது இளமைப் பருவத்தில் வேதம் கற்பித்த பாக்கியத்தைப் பெற்றார்கள். சுப்பிரமண்ய சாஸ்திரிகள் 1929-வது வருடம் ஜூலை மீ தமது 74-வது வயதில் இம்மண்ணுலகை நீத்தார்.

தந்தையார் தம் குலத்திற்குரிய சம்ஸ்காரங்களையெல்லாம் அவ்வக்காலங்களில் சுவாமிநாதருக்குச் செய்வித்து, உரிய காலத்தில் (1905-வது வருடம், திண்டிவனத்தில்) உபநயனத்தையும்

---

*விழுப்புரத்தில் ஸ்வாமிகள் ஜனித்த வீட்டை விலைக்கு வாங்கி அதை ஓர் சங்கராலயமாக அமைக்க வேண்டுமென அவ்வூர் பிரமுகர் வக்கீல் சிதம்பர ஐயரும், மற்ற சிடர்களும் முயற்சித்து வருகிறார்கள்.

நடத்தி வைத்தார். உபநயன காலத்தில் பீடத்தின் 66-வது ஆசாரிய ஸ்வாமிகள் சுவாமிநாதரை ஆசீர்வதித்துப் பிரஸாதம் அனுப்பி யிருந்தார்கள். சாஸ்திரிகளின் நண்பரான சூணம்பட்டு ஜமீன்தார் திவான்பகதூர் அருணாசல முதலியாரும், பாலகருக் குகந்ததோர் பரிசை அளித்தார். சுவாமிநாதரின் மேதா விலா ஸத்தை இளமைப் பருவத்திலேயே கண்ட சாஸ்திரிகள், பாலகரின் எட்டாவது பிராயம் வரை அவரைப் பள்ளிக்கு அனுப்பாமல், தாமாகவே அவருக்குக் கல்வி கற்றுக்கொடுத்து வந்தார். மேலும் தம் மைந்தருக்கு வெகு இளமைப் பருவத்திலேயே சங்கீதத் தில் பயிற்சியும் அளித்து வந்தார். விளையும் பயிர் முளையிலேயே என்னும் முதுமொழிப்படி ஒரு முறை கண்டதையும், ஒரு முறை கேட்டதையும் சிறிதும் மறவாத நுண்ணறிவு படைத்த தன்மை யுடன் சுவாமிநாதர் விளங்கினர். மகாலக்ஷ்மி அம்மாள் தம் குழந்தைகளுக்குத் தாம் அறிந்த ஸ்தோத்திரச் செய்யுட்களை யெல்லாம் சொல்லிவைப்பார். இளஞ் சுவாமிநாதருக்கு அவற்றை மனப்பாடம் செய்வதில் விருப்பம் அதிகம். சம்ஸ்கிருதம் கற்க அப் பொழுது சுவாமிநாதருக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. தந்தை யார் திண்டிவனத்தில் இருந்தபொழுது, அவர் அவ்வூர் ஆர்க்காடு அமெரிக்கன் மிஷன் ஹைஸ்கூலில் இரண்டாவது பாரத்தில் தம் மைந்தரை முதன் முதலாகப் பள்ளிப் படிப்புக்குச் சேர்த்தார். சுவாமிநாதர் தம் இளமைப் பருவத்திலேயே மிகுந்த ஹாஸ்யச் சுவையுடன் பேசிவருவது வழக்கம். ஒரே மொழியில் பல பொருள்களையும் அடக்கியும் பேசுவார்கள். தந்தையார் தமது தனயர்களுள் அவரை மிகுந்த பிரேமையுடன் வளர்த்து, ஓர் கிளியின் பெயரை அவருக்குச் செல்வப் பெயராக இட்டிருந்தார்.

பள்ளிப் படிப்பும், பரிசுக் குவியல்களும்.

சுவாமிநாதர் ஒவ்வொரு வகுப்பிலும் முதன்மையாக விளங்கி, பரீக்ஷைகளிலும் முதன்மையாகவே தேறி, வருட இறுதிப் பரிசளிப்பு விழாக்களில் எல்லாம் முதல் பரிசுகளையும் தாமே பெற்று வந்தார். பைபிள் என்னும் கிறிஸ்தவ மதநூலில் தேர்ச்சி பெற்றதற்கு முதல் பரிசும் அவருக்கே கிடைத்து வந்தது. பரிசு பெற்ற புத்தகங்கள் பல வீட்டில் குவிந்துவிடும்.

அக் காலத்தில் அப்பள்ளியில் இருந்த கிறிஸ்தவ ஆசிரியர்க ளெல்லாரும் சுவாமிநாதரிடம் மிகுந்த அன்பு காட்டி வந்தனர்.

அவர்கள் தங்களை அறியாமலே, பிற்காலத்தில் பெரியதோர் மேதாவியாக வரக்கூடிய மாணவர் ஒருவரைத் தம் பள்ளி பெற்றிருந்ததை உணராமல் உணர்ந்து பெருமை கொண்டார்கள் போலும். சுவாமிநாதர் மூன்றாவது பாரத்தில் படித்துக்கொண்டிருந்த பொழுது, அக்காலத்தில் பள்ளிக்கூட உதவி இன்ஸ்பெக்டராக இருந்த மஞ்சகுப்பம் சிங்காரவேலு முதலியார் என்றவர் பள்ளியின் மேற்பார்வையின் பொருட்டு ஒரு முறை அங்கே வந்திருந்தார். முதலியார் சுவாமிநாதரது முகத்தோற்ற ஒளியில் ஈடுபட்டு, அவரைச் சில கேள்விகள் கேட்க, அவைகளுக்கெல்லாம் தங்கு தடையின்றிச் சுவாமிநாதர் பதிலளித்ததைக் கண்டு வியப்படைந்தார். சுவாமிநாதரை அவர் பிற மேல் வகுப்புகளுக்கும் அழைத்துச் சென்று, அங்குள்ள ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் அச்சிறுவரை அறிமுகப்படுத்தி, அவர்களின் வகுப்புக்களுக்குரிய பாடங்களிலிருந்தும் கேள்விகளை அம் மாணவரிடம் கேட்கச் சொல்ல, சிறுவர் சுவாமிநாதர் தயங்காமல் அவைகளுக்கும் விடையளித்தார். அப்பொழுது அந்த மேலதிகாரி தமக்குக் கீழ் உத்தியோகம் வகித்து வந்த சுப்ரமண்ய சாஸ்திரிகளின் புதல்வரே அச் சிறுவர் என்பதை ஆசிரியர்கள் மூலமாக அறிந்து, சாஸ்திரிகளை அழைத்து, 'உமது புதல்வன் பெரிய மேதாவியாக விளங்கப் போகிறான்' எனக் கூறினார். அந்த மொழிகளைக் கேட்ட சாஸ்திரிகள் மனம் மகிழ்ந்து, தம் முகக் குறிப்பினால் தம் நன்றியை அவருக்குத் தெரிவித்துக் கொண்டார். தம் புதல்வர் உலக ஞான குருவாகப் பின்னர் விளங்கப் போகிறார் என்ற எண்ணம் சாஸ்திரிகளது உள்ளத்தில் அப்பொழுது தோன்றவில்லை. அரசாங்கத்தில் பெரியதொரு உத்தியோகத்தை வகித்துச் சீரும், சிறப்பும் பெற்றுத் தம் தனயர் விளங்குவார் என்ற எண்ணம் மட்டிலும் அப்பொழுது சாஸ்திரிகளுக்கு உதித்தது. அரசாங்க உத்தியோகத்தையே வாழ்க்கையின் லக்ஷ்யமாகப் பெரும்பாலோரும் எண்ணியிருந்த காலம் அது.

ஷேக்ஸ்பியர் நாடகம் நடித்தது.

சுவாமிநாதர் பள்ளியில் 1906-ஆவது ஆண்டில் நான்காவது பாரத்தில் பயின்று வந்தபொழுது, மாணவர்கள் பள்ளியின் வருடாந்தக் கொண்டாட்டத்திற்கென ஷேக்ஸ்பியர் என்னும் ஆங்கில மகா கவி எழுதிய "ஜான் மன்னர்", என்னும் நாடகத்தை நடிக்க ஏற்பாடு செய்திருந்தனர். அந்த நாடகத்தில் ஆர்தர் இள

வரசன் என்னும் முக்கிய பாத்திரத்தைத் தாங்கி நடிக்கத் தகுதி யான மாணவன் கிடைக்கவில்லை. அப்பொழுது பன்னிரண்டு பிராயமே நிரம்பிய சுவாமிநாதரின் நினைவு தலைமை ஆசிரியருக்கு வந்தது. அந்த ஆசிரியர் அச் சிறுவரை அழைத்து, அந்தக் கதா பாத்திரத்தை அவரே தாங்கி நடிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். சுவாமிநாதருக்குத் தலைமை ஆசிரியர் இவ்விதம் கூறி யதில் மிகுந்த பெருமை ஏற்பட்டது. அந்த நாடகத்தில் தாமும் நடிக்கவேண்டுமென்ற ஆவல் அவருக்கு முன்பே இருந்தது. ஆனால் பிராயத்தின் காரணமாக வகுப்பாசிரியர் அவரைப் புறக்கணித் திருந்தார். தலைமை ஆசிரியர் அளித்த இந்தச் சந்தோஷச் செய்தியை சுவாமிநாதர் தம் தாய் தந்தையரிடம் தெரிவித்து, நாடகத்தில் நடிக்கத் தகுதியான உடைகளைத் தைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். பழமையில் ஊறிய அந்தப் பெற்றோர்கள் தங்கள் புதல்வன் நாடகத்தில் நடிப்பதை விரும்பவில்லை; ஆனால் அருமைப் புதல்வரின் ஆசையைப் புறக்கணிக்கவும் அவர்கள் மனம் கொள்ளவில்லை. இந்த நிலையில் அவர்கள் சுவாமிநாதருக் குத் தேவையான உடைகளைத் தைத்துக்கொடுத்து, நாடகத்தில் நடிப்பதற்கும் ஒருவாறு அனுமதியுமளித்தார்கள். இரண்டே நாட் களில் சுவாமிநாதர் அந்த நாடகத்தில் வரும் சம்பாஷணைகளை யெல்லாம் மனப்பாடம் செய்துகொண்டார். சொல் வன்மை படைத்த அச் சிறுவர், யாவரும் வியக்கும் வண்ணம் மிகத் திறமை யுடன் அந்த நாடகத்தில் நடித்து எல்லோரின் நன் மதிப்பையும் பெற்றார். அவரது ஒவ்வொரு பேச்சிற்கும், ஒவ்வொரு நடிப் பிற்கும் எல்லோரும் கைகளைத் தட்டி, அவரை மேன்மேலும் உற்சாகப் படுத்தினார்கள். பின்னர் கேட்கவும் வேண்டுமா? அவ் விளைஞர் தம் திறன் முழுவதையும் அன்று காட்டி யாவரையும் திகைக்க வைத்துவிட்டார். அந்த நாடகத்தில் சுவாமிநாதருக்கே முதல் பரிசு கிடைத்தது. ஆசிரியர்களெல்லோரும் மறுநாள் சாஸ்திரி களது இல்லத்திற்கு வந்து சுவாமிநாதரது திறனைப் பற்றி அவரிடம் கூறித் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். சுவாமி நாதரின் தாயோ தம் அருமைக் குழந்தைக்கு எவரது திருஷ்டி யாவது பட்டுவிடுமோ எனப் பயந்து மிகுந்த கவலைகொண்டார்; அதற்கென அக் குழந்தைக்கு அன்று திருஷ்டியும் கழித்தார்.

---

2. குருநாதரின் சந்திப்பும், துறவும், பீடாதிபத்தியமும்

காமகோடி பீடத்தின் 66-ஆவது பீடாதிபதிகளும், ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸ்வாமிகள் என்ற பெயரையே தாங்கியவர்களுமான பரமகுரு ஸ்வாமிகள் தென்னார்க்காடு ஜில்லா, திண்டிவனம் தாலுக்கா, பெருமுக்கல் என்னும் சிற்றூரில் விசுவாவசு வருடம் (1906) சாதுர்மாஸ சங்கல்பத்தை நடத்தி வருங்கால், சிறுவர் ஸ்வாமிநாதரது தந்தையார் குடும்பத்துடன் ஸ்வாமிகளைத் தரிசிக்கச் சென்றிருந்தார்கள். அப்பொழுது நித்திய பூஜையில் வீற்றிருந்த ஸ்வாமிகளின் கருணைகடாக்ஷம் பாலகர் சுவாமிநாதர் மீது விழுந்தது. பூஜை முடிந்ததும் ஸ்வாமிகள் சுப்ரமணிய சாஸ்திரிகளிடம் அவரது குடும்ப நலனைப்பற்றிப் பரிவுடன் விசாரித்தார்கள். தமக்குப் பின்னர் காமகோடி பீடத்தை அலங்கரிக்கப் போகும் ஒரு மகா புருஷனை இந்தப் பாலகர் உருவத்தில் அவர்கள் கண்டார்கள் போலும். தம் உள்ளத்தில் அவ்விதத் தீர்மானத்தையே அவர்கள் அப்பொழுதே செய்துகொண்டார்களோ என்றும் பின் நிகழ்ச்சிகளிலிருந்து நாம் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. சாஸ்திரிகளின் குடும்பம் ஸ்வாமிகளின் தரிசனத்துக்கென இரண்டு நாட்கள் பெருமுக்கலில் தங்கியிருந்தது. அப்பொழுது ஸ்வாமிகள் இளைஞர் சுவாமிநாதரை அடிக்கடிச் சந்தித்துப் பல கேள்விகளையெல்லாம் கேட்டு, அதிசயிக்கத் தக்க அப் பாலகரது மறுமொழிகளாலும், அவரது வசிகர முகத் தோற்றத்தினாலும், மேதையினாலும் மகிழ்ச்சிபெற்று, 'இவன் ஒரு மகாபுருஷனாக விளங்கப் போகிறான்' என்று அங்குக் கூடியிருந்தவர்களிடம் தெரிவித்தார்கள். இம்மொழிகளைக் கேட்ட தந்தையாரின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ஆனால் 13 வயதுள்ள தம் புதல்வர் துறவு பூண்டு தம்மையும், தம் குடும்பத்தையும் விட்டுப் பிரிந்துவிடுவாரென அவர் அப்பொழுது சிறிதும் எண்ணவில்லை. சாஸ்திரிகள் ஸ்வாமிகளிடம் விடை பெற்றுக்கொண்டு தாம் அப்பொழுது உத்தியோகம் பார்த்து வந்த திண்டிவனத்திற்குப் போய்ச் சேர்ந்தார். ஆயினும் ஸ்வாமிகள் சுவாமிநாதரை அடிக்கடி மடத்தின் முகாமிற்கு அழைத்து வரும்படி கட்டளையிட்டு வந்தார்கள். அவ்விதமே சாஸ்திரிகளும் பின் பல முறை தம் குமாரரை ஸ்வாமிகளிடம்



கலவையில் 1907ல் சித்திபெற்ற
66-வது ஆசார்யஸ்வாமிகள். 12



இராமநாதபுரம் ஜில்லா இளையாற்றகுடியில் சித்தியடைந்த
௬௫-வது ஆசார்யஸ்வாமிகளான ஸ்ரீ மகாதேவேந்திர
ஸரஸ்வதி ஸ்வாமிகள்

அழைத்துச் சென்றார். குருநாதரின் அருளும் சிறுவருக்குப் பெருகத் தொடங்கிற்று.

இவ்வாறு நிகழ்ந்து வந்த காலத்தில் ஒரு நாள், திண்டிவனத்தில் சுவாமிநாதரை வீட்டில் காணவில்லை; பெற்றோர்கள் தவித்தார்கள். ஊரிலுள்ள குளம், கிணறுகள் எல்லாம் துருவிப் பார்த்தாகிவிட்டன. அருமைப் புதல்வரும் அகப்படவில்லை. இவ்வாறு இரண்டு நாட்கள் உணவு உறக்கமின்றிப் பெற்றோர்கள் தவித்தனர். மறுநாள் 5-மைல் தூரத்திலுள்ள ஸ்வாமிகளின் முகாமிலிருந்து ஒருவர் திண்டிவனத்திற்கு வந்து, சுவாமிநாதர் ஸ்வாமிகளைக் காண அவ்விடம் வந்திருப்பதாகவும், சௌக்கியமாயிருப்பதாகவும் கூறி, இந்தச் செய்தியைச் சொல்லி வரும்படி ஸ்வாமிகள் கட்டளையிட்டார்களென்றும் தெரிவித்தார். அப்பொழுது பெற்றோர்களும் அவருடைய நண்பர்களும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. சுவாமிநாதரும் மேலும் இரண்டு நாட்கள் கழித்து வீட்டிற்குத் திரும்ப அனுப்பப்பட்டார்.

துறவும், பீடாதிபத்தியமும்.

1907-ஆவது வருடம் பிப்ரவரி முதல் வாரத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளின் முகாமிலிருந்து திண்டிவனத்திற்கு, சுப்ரமண்ய சாஸ்திரிகள் பெயருக்கு ஒரு தந்திச் செய்தி கிடைத்தது. அதில் சுவாமிநாதரை அழைத்துக்கொண்டு சாஸ்திரிகள் உடனே புறப்பட்டு வரவேண்டும் எனக் கண்டிருந்தது. இச்செய்தி கிடைக்குங்கால் சுப்ரமண்ய சாஸ்திரிகள் உத்தியோக அலுவலாகத் திருச்சி சென்றிருந்தார். ஏதோ முக்கியமான காரியமாகத்தான் ஸ்வாமிகள் அழைத்திருக்க வேண்டுமென எண்ணிய சாஸ்திரிகளின் நண்பர்கள், அவரது குடும்பத்தை ரெயில் மூலம் காஞ்சிபுரத்திற்கு அனுப்பி வைத்தார்கள். காஞ்சிபுரத்திற்கு 30 மைல் தூரத்திலுள்ள கலவை என்னும் ஊரில் அப்பொழுது ஸ்வாமிகள் முகாம் செய்திருந்தார்கள். காஞ்சிபுரத்தில் இருந்த மடத்தின் அதிகாரிகள் மகாலக்ஷ்மி அம்மையாரிடம் யாதொரு விஷயமும் தெரிவிக்காமல் சிறுவர் சுவாமிநாதரை மட்டிலும் நேராகக் கலவைக்கு ஒரு குதிரை வண்டியில் அழைத்துச் சென்று விட்டார்கள். மற்றவர்கள் இரண்டு நாட்கள் கழித்துக் கலவையை அடைந்தார்கள்.

திண்டிவனத்திற்குச் செய்தி தந்தி மூலமாக அனுப்பிய பொழுது ஆசாரிய ஸ்வாமிகளின் உடலில் வைசூரி கண்டிருந்தது;

அவர்கள் தாம் இன்னும் அதிக நாட்கள் ஜீவித்திருக்கமுடியாது என்னும் எண்ணத்துடன் தமக்குப் பின் பீடத்தில் சுவாமிநாதரையே அமர்த்தவேண்டுமென்று தீர்மானித்தவராகி, இளைஞர் சுவாமிநாதரைக் கலவைக்கு அழைத்துவரும்படி கட்டளையிட்டிருந்தார்கள். ஆனால் எதிர்பாராத வகையில் சிறுவர் வந்து சேருமுன்னரே ஸ்வாமிகள் (பராபவ வருடம் மாக கிருஷ்ண அஷ்டமியில்) சித்தி அடைந்து விட்டார்கள். தாம் சித்தி அடைவதற்கு முன், அவர்கள் தம்முடைய சீடராயிருந்தவரும் ருக் வேதத்தை நன்கு பயின்றவருமான லக்ஷ்மீகாந்தன்* என்னும் 18 பிராயமுள்ள பிரும்மசாரிச் சிறுவருக்கு உபதேசம் செய்து வைத்தார்கள். காமகோடி பீடத்திலமரும் ஆசாரியர்கள் பிரும்மசரியத்திலிருந்தே சந்நியாசம் பெற வேண்டுமென்றும் ருக் வேதத்தைச் சார்ந்தவர்களாயிருக்க வேண்டுமென்றும் நியதி உண்டு.

காமகோடி பீடத்தில் இவ்வாறு உபதேசம் பெற்றுப் பட்டமேறி, 67-ஆவது ஆசாரிய ஸ்வாமிகளாக விளங்கிய பெரியாரும் பீடமேறி 8 நாட்களே அதில் அமரும்படியான பாக்யத்தைப் பெற்றார்கள். தம் குருநாதரின் சரீரத்திற்கு ஏற்பட்ட அதே நோயால் இவர்களும் பீடிக்கப்பெற்று எதிர்பாராத விதமாகச் சித்தி அடைந்து விட்டார்கள். சித்தி அடையுமுன் அவர்கள் தம் குருவின் எண்ணத்தை நிறைவேற்றும் பணியை நினைத்தவர்களாகி, இளைஞர் சுவாமிநாதரையே தமக்கு அடுத்த பீடாதிபதியாக அங்கீகரித்தார்கள். பின்னர் அவருக்கு முறைப்படி ஆசிரமும் கொடுக்கப்பட்டது. இவ்வைபவம் பராபவ வருடம் மாசி மாதம் 2-ஆம் தேதி புதன்கிழமை (13-2-1907) அன்று நிகழ்ந்தது. அப்பொழுது அவருக்குப் பிராயம் 13. அன்று முதல் நம் ஸ்வாமிகள் ஆதி சங்கரரால் நிறுவப்பெற்ற ஸ்ரீ காமகோடி பீடத்தின் 68-ஆவது பீடாதிபதியாக அமர்ந்து, ஜகத்துக்கு அருள் புரிந்து வருகிறார்கள். அவர்கள் ஏற்றுக்கொண்ட தீக்ஷாநாமம் ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி என்பதாகும்.

ஸ்வாமிகள் சந்நியாசம் ஏற்றுக்கொள்ளுமுன் நிகழ்ந்த நிகழ்ச்சி எவர் மனத்தையும் உருக்குவதொன்றாகும். பதின்மூன்

---

*இந்த லக்ஷ்மிகாந்தன் என்னும் இளைஞர் நமது ஸ்வாமிகளின் தாயாரான மகாலக்ஷ்மி அம்மாளின் மூத்த சகோதரியின் புதல்வராவர். இவர் கும்பகோணத்திற்கடுத்த திருவிசைநல்லூரைச் சார்ந்தவராவர்.

ருவது பிராயத்தில் துறவு பூண்டு, மிகக் கடுமையான தவம், த்யானம், பூஜை, வைராக்யம், ஆகார நியமம் இவைகளை மேற்கொள்ளுவதென்பது சாமான்யமாக யாராலும் எளிதில் ஏற்றுக்கொள்ளக் கூடியதன்று. தாய், தந்தையருக்கோ தாம் மிகவும் அருமையாகப் போற்றி வளர்த்த தம் சுவாமிநாதரை இக்கடுமையான தவத்தில் ஈடுபடுத்தவும் அவரைப் பிரிந்து வாழவும் மனம் தாங்கவில்லை. மடத்தின் அதிகாரிகளோ, 'உங்களுக்கு மற்ற மூன்று புதல்வர்களிருக்க, இவ்வொரு மைந்தரை உலக க்ஷேமத்தின் பொருட்டும், சிஷ்யர்களின் நன்மையின் பொருட்டும் ஏன் உதவக்கூடாது?' என்று வினவி வற்புறுத்தினார்கள். அவர்களுக்கு யாது விடை கொடுப்பதென அவர்களுக்கு விளங்கவில்லை. இக்கடுமையான சோதனையில் அவர்கள் மனம் உழன்றது. இந்த மனக் கவலையை நீக்கும் வகையில் நம் ஸ்வாமிகள் அப்பொழுது அவர்களை வணங்கி, 'நீங்கள் ஏன் தயங்கவேண்டும்? எனக்கோ குருநாதன் அருள் பரிபூரணமாக இருக்கிறது. நான் இதைக் காப்பாற்றுவேன். நீங்கள் எனக்கு முழு மனஸுடன் அனுமதி கொடுங்கள்,' எனப் பணிவுடன் தெரிவித்தார்கள். குழந்தையின் இவ்வறிவுடைச் சொற்கள் பெற்றோர்களின் உள்ளத்தை உருக்கிவிட்டனவென்பதில் ஐயமில்லை. பின் அவர்கள் ஒருவாறு மனஸைத் தேற்றிக்கொண்டு சந்நியாசத்திற்கு அனுமதியும் தந்தார்கள். இதுவரையில் சாமிநாதராக விளங்கியவர் முண்டனம், தண்டம், கமண்டலு, காஷாயம் இவைகளை ஏற்றுக்கொண்டு, ஆதி சங்கரர் போலவே சந்நியாசி ஆகித் தேஜோ மயமாய் விளங்கிய தங்கள் அருமைப் புதல்வரைப் பெற்றோர்கள் பின்னர் சந்திக்கவேயில்லை. ஆசாபாசங்களை நீக்கவே துறவு ஏற்றுக்கொள்ளப்படுவதால் தாய் தந்தையர் போன்ற நெருங்கிய உறவினர் சந்நியாசிகளை நேரில் காணும் வழக்கமில்லை. நம் ஸ்வாமிகளின் பெற்றோர் தங்கள் புதல்வர் மக்களின் துன்பங்களைப் போக்கி அவர்களை நல்வழிப்படுத்த அவதரித்த மகான் என்ற எண்ணம் பெற்றுத் தங்கள் உள்ளத்தில் பெருமை கொண்டார்களோ, அல்லது உலகெல்லாம் போற்றும் அவரைத் தங்களால் காணமுடியவில்லையே என நினைந்து வருந்தினார்களோ, யார் அறிவர்? ஆனால் ஒன்று மாத்திரம் இவ்விஷயத்தில் தெளிவாயிற்று. பிற்காலத்தில் யாரேனும் அப்பெற்றோர்களை

அடைந்து ஸ்வாமிகளைப் பற்றி ஏதாவது கேட்டால், அவர்கள் மௌனத்தையே மேற்கொண்டிருந்தார்கள். உலகினில் புதல்வனைப் பெற்ற பயனை அடைந்த உத்தமர்கள் அல்லரோ அவர்கள்?

பதினெட்டாவது நூற்றாண்டில் நம் நாட்டில் நடைபெற்ற யுத்தத்தின் காரணமாகத் தஞ்சை மகாராஷ்டிர மன்னர்களின் காலத்தில், காமகோடி பீடத்தின் நிர்வாக ஸ்தலமானது காஞ்சியிலிருந்து கும்பகோணத்திற்கு மாற்றப்பட்டது என்ற செய்தியை முன்பே கூறினோம். அந்நிகழ்ச்சி 62-ஆவது ஆசாரிய ஸ்வாமிகள் காலத்தில் ஏற்பட்டது. அவர்கள் காஞ்சியிலிருந்து கும்பகோணத்துக்குச் செல்லும் வழியில் உடையார்பாளையச் சமஸ்தானாதிபதியின் வேண்டுகோளுக்கிணங்கி, அவ்வூரில் சிலகாலம் தங்கியிருந்தார்களெனத் தெரிகிறது. பிறகு அவர்கள் தஞ்சையிலும் சில காலம் தங்கினார்கள். பின்னரே அவர்கள் கும்பகோணத்தில் காவிரி நதிக்கரையில் ஒரு மடத்தை நிறுவிக்கொண்டு அங்கே தங்கினார்கள். அதுமுதல் கும்பகோணமே மடத்தின் நிர்வாக ஸ்தானமாக அமைந்தது.

கும்பகோணத்திற்கு விஜயம்.

நம் ஆசாரிய ஸ்வாமிகள் ஆசாரிய பீடம் ஏற்றுக்கொண்டது வட ஆர்க்காடு ஜில்லாவிலுள்ள கலவை என்ற கிராமத்தில் என்று கூறினோம்; அவர்கள் அப்பதவியை மேற்கொண்ட அவ்வாண்டிலேயே கும்பகோணத்திற்குப் பிரயாணமானார்கள். வழியில் தம் தாய் தந்தையர் வசித்துவந்த ஊராகிய திண்டிவனத்தில் ஸ்வாமிகள் மூன்று நாட்கள் தங்கினார்கள்.

பொதுவாக ஆசாரிய ஸ்வாமிகள் ஓர் ஊருக்கு விஜயம் செய்கிறார்களென்றால் அவ்வைபவம் அந்த ஊர் முழுவதுமே ஒரு திருவிழாவாகக் கொண்டாடப்படும். ஒரு வாரத்திற்கு முன்னதாகவே ஸ்வாமிகளை வரவேற்கத்தக்க ஏற்பாடுகளை ஊர் மக்கள் செய்யத் தொடங்குவார்கள். மக்களெல்லோரும் கூட்டம் கூட்டமாக ஸ்வாமிகளைத் தரிசிக்க வருவார்கள். எங்கும் வேத கோஷமும், வாத்ய ஒலியும் முழங்கும். ஸ்வாமிகள் யானை மீதோ, பல்லக்கின் மீதோ, பவனி வரும் காட்சியைக் காண ஆயிரக்கணக்கான மக்கள் கூடுவார்கள். மடத்தின் பரிவாரங்களாக வரும் யானை, குதிரை, ஒட்டகம் இவைகளைக் காணக் குழந்தைகளின் கூட்டம் அங்கங்கே

காணப்பெறும். மடத்தின் அதிஷ்டான தெய்வமாகிய ஸ்ரீ சந்திர மௌளீச்வரர், ஸ்ரீ திருபுரசுந்தரி அம்மன் இவர்களுக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் செய்யும் பூஜைகளைக் காண ஏராளமான ஜனங்கள் நீராடித் தூய்மையான மனஸுடன் கூடியிருப்பர். பூஜை முடிந்ததும் ஸ்வாமிகளால் கொடுக்கப்பெறும் அபிஷேக தீர்த்தத்தைப் பக்தர்கள் மிகுந்த பணிவுடன் தங்கள் உள்ளங் கைகளில் பெற்று உட்கொள்ளுவர். இந்தத் தீர்த்தத்தை ஏற்குமுன்னர், வேறு ஆகாரம் எதையும் கொள்ளாமலேயே பக்தர்கள் அதற்காகக் காத்திருப்பார்கள். இந்தத் தீர்த்தத்தால் உடலின் அழுக்குகள் நீங்குவதுடன், மனஸும் மாசு அகன்று தூய்மை அடையுமென்று பக்தர்கள் நம்புகிறார்கள். பல அடியார்கள் கோஷ்டி கானமாகப் பஜனை செய்வார்கள். புலவர்கள் ஸ்வாமிகளைத் தரிசித்து அவர்களிடம் தங்கள் புலமையைக் காட்டிப் பொன்னுடை முதலிய சன்மானங்களைப் பெற்றுப் போவார்கள். பணம் படைத்தவர்கள் பொன்னால் அமைக்கப்பெற்ற ஸ்ரீ ஆதி சங்கரரது பாதுகைகளுக்குப் பொற்காசுகளினாலோ, வெள்ளி நாணயங்களினாலோ அர்ச்சனை செய்வார்கள். இதற்குப் பாத பூஜை என்பது பெயர். மத பேதமின்றியும், ஜாதி பேதமின்றியும் ஸ்ரீ ஸ்வாமிகளை வரவேற்கும் பணியில் யாவரும் கலந்து கொள்வர். இவ்வைபவம் எல்லாம் ஸ்வாமிகள் முகாம் செய்யும் ஒவ்வோர் ஊரிலும் சாதாரணமாக நடைபெறும் காட்சிகளாகும்.

நம் ஸ்வாமிகள் திண்டிவனத்திற்கு 1907-இல் விஜயம் செய்த காட்சியோ ஒரு தனிச் சிறப்பைப் பெற்றது. அதுவரை குழந்தைப் பருவத்திலும், பன்னிரண்டு வயது வரையிலுள்ள பாலகன் பருவத்திலும் பார்த்துப் பழகிய சுவாமிநாதரை அவ்வூர் வாசிகள் அப்பொழுது உலகத்தை உய்விக்கும் ஞானசிரியராகக் கண்டார்கள். சந்திரன் போன்ற முக மண்டலம், பால சூரியனை ஒத்த தேஜஸ், புதனை ஒத்த ஞானம், இவைகளெல்லாம் ஒருங்கே அமைந்த ஓர் உருவம் அவர்களுக்குக் காட்சியளித்தது. இவ்வுருவத்தைக் கண்டதுமே பெரியோர் சிறியோர், பெண்டிர் யாவரும், ஸ்வாமிகள் தங்கள் ஊரைச் சேர்ந்தவரென்ற பெருமையினால், ஏராளமாகக் கூடி, அவரை வணங்கத் தொடங்கினார்கள். ஸ்வாமிகள் கல்வி பயின்ற திண்டிவனம், ஆர்க்காடு அமெரிக்கன் மிஷன் உயர்நிலைப் பள்ளியின் கிறிஸ்தவ ஆசிரியர்களும், உடன் பயின்ற

மாணவர்களும் ஸ்வாமிகளைக் காண ஆவல் கொண்டார்கள். ஸ்வாமிகளும் ஒவ்வொரு ஆசிரியரிடத்திலும் தனித்தனியே உரையாடி, அவர்கள் யாவரையும் மகிழ்வித்து, அவர்களுக்குத் தக்க வெகுமதிகளையும் அளித்தார்கள். பள்ளி மாணவர்களுக்கெல்லாம் தரிசனம் கொடுத்து அவர்கள் யாவருக்கும் சிற்றுண்டிகளும், பரிசுகளும் வழங்கினார்கள்.

பட்டாபிஷேகம்

ஆசாரிய பீடத்தில் அமர்கிறவர்கள் சந்நியாசிகளே ஆனாலும் அவர்கள் ஜகத் ரக்ஷணையை மேற்கொண்டவர்களாகையால் அவர்களைச் சக்ரவர்த்திகளைப் போலப் பாவிப்பதே இந்நாட்டின் தொன்றுதொட்டு வரும் வழக்கமாகும். ஆதி சங்கரர் காலத்திலேயே, அவருக்கு அக்காலத்தில் காஞ்சியில் அரசாண்ட இராஜசேன மன்னர் பல அரசாங்க விருதுகளை அளித்திருந்தார். அவற்றுள் முக்கியமானவை யானை மீது ஏறிப் பவனி வருவதற்கு உரிய அம்பாரி, தந்தச் சிவிகை, வெண்சாமரம், வெண்பட்டுக் குடைகள், கட்டியம் கூறுவோர் தோள்களில் தாங்கி வரும் தங்கத்தடி, வெள்ளித்தடி முதலியனவும், நகரா, பேரி, காளம், கடகம். சங்கம், மிருதங்கம், வீணை, புல்லாங்குழல் போன்ற வாத்யங்கள் முதலியனவும் ஆகும்.

நம் ஸ்வாமிகளுக்கு முறைப்படியே பட்டாபிஷேகம் செய்து, அவ்வைபவத்தைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று சீடர்கள் பல்லோரும் விரும்பினார்கள். இவ்வைபவம் பிலவங்க வருடம் சித்திரை மாதம் 27-ந் தேதி (9-5-1907) வியாழக்கிழமை, கும்பகோணம் மடத்தில் மிக விமரிசையாகக் கொண்டாடப் பெற்றது. நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தும் கணக்கற்ற மக்கள் இவ்விழாவில் கலந்துகொண்டார்கள். அரசாங்க உத்தியோகஸ்தர்களும், வித்வத் ஜனங்கள் பல்லோரும் அங்கு வந்திருந்தார்கள். தஞ்சையின் கடைசி மன்னரான சிவாஜி மகாராஜாவின் இராணிகள் இருவரும் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பி ஸ்வாமிகளுக்கு எல்லாவிதமான இராஜ மரியாதைகளையும் செய்வித்தார்கள். விழா நாட்களாகிய மூன்று தினங்களிலும், அறுபது பேர்கள் அடங்கிய தஞ்சைப் பாண்டு கோஷ்டியார் தம் இன்னிசைகளால் மக்களுக்கு மகிழ்ச்சியூட்டி வந்தனர். தேவாலயங்களிலெல்லாம் விசேஷ பூஜைகள் நடந்தன. அன்று ஸ்வாமிகள் எல்லாக் கோயில்களுக்கும் சென்று ஸ்வாமி தரிசனம் செய்து

கொண்டார்கள். பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு மடத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது. வித்வான்களுக்கும் கலைஞர் களுக்கும் ஏராளமாக வெகுமதிகள் அளிக்கப்பட்டன.

நல்ல முகூர்த்தத்தில் ஸ்வாமிகளுக்குக் கங்காஜல அபிஷேகம் நடந்தேறிப் பட்டாபிஷேகம் செய்யப் பெற்றது. அபிஷேகம் முடிவு பெற்றவுடன், ஸ்வாமிகள் ஸிம்மாஸனத்தில் கொலுவீற் றிருந்தார்கள். அப்பொழுது சிஷ்யர்கள் தங்கள் காணிக்கை களையும் மரியாதைகளையும் ஸ்வாமிகளுக்குச் செலுத்தினார்கள். அன்றிரவு ஸ்வாமிகள் மடத்து யானைமீது அம்பாரியில் ஆரோ கணஞ் செய்துகொண்டு, ஸகல ஸன்னாகங்களுடன் நகரில் பவனி வந்த காட்சி யாவரையும் மெய்ம்மறக்கச் செய்தது. இவ்வாறு நம் ஸ்வாமிகள் தம் பதின்மூன்றாம் பிராயத்தில் ஜகத்குருப் பட்டம் தாங்கித் தம் ஆட்சியை மேற் கொண்டார்கள்.

---

3. முதல் விஜய யாத்திரை

காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் அடிக்கடி யாத்திரைகளை மேற்கொண்டு மக்களுக்குத் தரிசனம் அளித்து, அவர்களுக்கு உப தேசங்கள் செய்து, அவர்களை உய்விக்கச் செய்வதைத் தொன்று தொட்டே தம் கடமைகளுள் ஒன்றாகக் கொண்டிருந்தார்கள். நம் ஸ்வாமிகளும் தாம் பட்டமேறிய பின் இவ்வாறு யாத்திரையொன் றைச் செய்ய வேண்டுமென்று கருதியிருந்தார்கள். அதற்குத் தக்க சந்தர்ப்பம் ஒன்றும் கிடைத்தது.

திருச்சிராப்பள்ளிக்கடுத்த ஜம்புகேச்வரம் என்ற திருவானைக்கா க்ஷேத்திரம் உலகப் பிரசித்தி பெற்றது. அங்குள்ள கோயிலைச் சங்ககாலத்து மன்னன் கோச்செங்கட் சோழன் கட்டினன் என்பர். அங்கு எழுந்தருளியுள்ள ஸ்ரீ அகிலாண்டேச்வரி அம்பிகைக்கு ஆதி சங்கரர் தாடங்கப் பிரதிஷ்டை செய்தார். 1908-ஆம் வருஷம், அக்கோயிலுக்குக் கானாடுகாத்தான் சா. ராம. குடும்பத்தார்கள் பல லக்ஷ ரூபாய்கள் செலவிட்டுத் திருப்பணி செய்து, அவ்வருஷம் பிப்ரவரி மாதத்தில் (பிலவங்க, தை) கும்பாபிஷேகத்திற்கு நாளும் குறிப்பிட்டிருந் தார்கள். அக் காலத்தில் தென்னிந்தியாவில் நடந்தேறிய கும்பாபி ஷேகங்களில் இது மிகச் சிறந்த ஒன்றாகும். சிருங்ககிரி ஸ்ரீ சாரதா

பீடாதிபதி அவர்களான ஸ்ரீ ஜகத்குரு நரசிம்ம பாரதி அவர்களும் அவ்வைபவத்திற்கு எழுந்தருளி யிருந்தார்கள். கும்பாபிஷேகத் திற்கெனத் தனியே நியமிக்கப் பெற்றிருந்த அதிகாரி ஸ்ரீராஜஐயர் எல்லா ஏற்பாடுகளையும் கவனித்து வந்தார்.

இந்தக் கும்பாபிஷேகத்தை நடத்தி வைக்க வேண்டுமென்று திருவானைக்காவிலிருந்து நம் ஸ்வாமிகளுக்கு அழைப்பு வந்தது. விஜய யாத்திரையைத் தொடங்க விருப்பங்கொண்டிருந்த அவர் களுக்கு இஃது ஓர் அரிய சுப சகுனமாயிற்று. அவர்கள் நல்ல வேளையில் மடத்தினின்று புறப்பட்டு, கும்பாபிஷேக தினத்துக்கு ஒரு வாரம் முன்பே ஜம்புகேச்வரம் போய்ச் சேர்ந்தார்கள். அவர் களுடைய முன்னிலையில் கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடந் தேறியது.

65-ஆவது பீடாதிபதிகளின் அதிஷ்டான தர்சனம்.

அதன்பின் ஸ்வாமிகளுக்குத் தமக்குமுன் 65-ஆவது குருவா யிருந்த ஸ்ரீ மகாதேவேந்திர ஸரஸ்வதி அவர்களின் அதிஷ்டானத் தைத் தரிசிக்க வேண்டுமென்ற விருப்பம் உண்டாயிற்று. அந்த அதிஷ்டானம் இராம நாதபுரம் ஜில்லா, இளையாற்றங்குடி என்ற கிராமத்தில் இருக்கிறது. அவ்விடத்துக்குப் போகும் வழியில் கடியாப்பட்டி, கோனுப்பட்டு, கீழச் சேவல்பட்டி என்ற கிராமங்களிலுள்ள செட்டி நாட்டுப் பிரமுகர்களும் பொது மக்களும் அவர்களை வரவேற்று மரியாதை செய்தார்கள். அவ்வவ் விடங்களில் சிற்சில நாட்கள் தங்கிப் புதுக்கோட்டை நகரை ஸ்வாமிகள் அடைந்தார்கள். புதுக்கோட்டை சமஸ்தான மன்னர் பரம்பரையினரும், மக்களும் பழங்காலங்கொட்டே பீடத்தில் பற்றுக்கொண்டவர்களாதலால், அப்பொழுது பால வடிவத்தில் வரும் குருநாதரைத் தரிசிக்க அவர்கள் மிகுந்த கோலாகலத்துடன் கூடி ஸ்வாமிகளுக்கு வரவேற்பு அளித்து, 15 நாள்களுக்கு மேல் ஸ்வாமிகளை அந்நகரத்தில் தங்கச் செய்தார்கள். மன்னரின் இளைய சகோதரர் ஸ்ரீ விஜய ரெகுநாத துரைராஜாவும், திவான் வெங்கடராமதாஸ் நாயுடுவும் மற்ற அரசாங்க அதிகாரிகளும் ராஜமரியாதைகளுடன் ஸ்வாமிகளை வரவேற்று உபசரித்தனர்.

இளையாற்றங்குடி கோயில் செட்டி நாட்டிலுள்ள நகரத் தார் கோயில்களுள் பழமை வாய்ந்ததாகும். ஒரு காலத்தில் நகரத்தார் எல்லோருக்கும் அதுவே பொதுக் கோயிலாக இருந்த

தென்றும், பிறகே அவர்களுக்குள் 9 பிரிவுகள் ஏற்பட, (மாத்தூர், வைரவன் கோயில், இரணியூர், பிள்ளையார்பட்டி, நேமம். இலுப்பைக்குடி, குரக்குடி, வேலங்குடி என்ற இடங்களில்) வேறு பிரபலமான கோயில்கள் உண்டாயின என்றும் கூறுவர். இளையாற்றங்குடியில் கோயில் கொண்டவர் ஸ்ரீ நித்ய கல்யாணி சமேத கைலாச நாதர்.

காமகோடி பீடத்தில் 65-ஆவது ஆசாரிய மூர்த்தமாக எழுந்தருளியிருந்த ஸ்ரீ மகாதேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் 1889-ஆம் வருடத்தில் செட்டி நாட்டிற்கு யாத்திரையாகச் சென்றிருந்தபோது, இளையாற்றங்குடியில் சில மாதங்கள் தங்கியிருந்தார்கள். அவ்வூர் ஆலயத்தைச் சார்ந்த நகரத்தார்கள் ஸ்வாமிகளிடம் மிகுந்த மரியாதை காட்டி, அவர்கள் தங்குதற்குரிய வசதிகள் யாவற்றையும் அமைத்துக் கொடுத்திருந்தார்கள். ஸ்வாமிகள் ஒரு நாள் அவ்வூரைக் கால் நடையாகச் சுற்றி வந்தபோது, புதர் அடர்ந்த ஓர் இடத்தைக் கண்டு, அதில் ஒரு நாழிகை தங்கினார்கள். மறுநாள் அவர்கள் தேவஸ்தான டிரஸ்டியிடம் அந்த இடத்தை மடத்திற்குக் கொடுக்க இயலுமா என்று கேட்க, ஸ்வாமிகளின் கருத்தை உணராத அந்த டிரஸ்டியார் கோயிலுக்கு அருகிலேயே அகன்ற வேறொரு ஸ்தலத்தை ஸ்வாமிகளுக்குக் கொடுப்பதாக வாக்களித்தார். ஆனால் ஸ்வாமிகளோ தாம் குறித்த இடமே வேண்டுமென்று வற்புறுத்தினர்.

இது நிகழ்ந்த ஒரு வாரத்திற்குள் ஸ்வாமிகளுக்கு நோய் கண்டு, உடலம் குன்றி, அவர்களும் நிர்விகல்ப சமாதியை அடைந்தார்கள். அந்த நாள் விரோதி வருஷம் பங்குனி மாதம் 8-ந்தேதி (20-3-1860) வியாழக்கிழமை, அமாவாசையாகும். ஊரார் முன் நடந்த செய்தியைக் கேட்டு வியப்படைந்து ஸ்வாமிகள் குறிப்பிட்ட இடத்திலேயே அவர்களுக்குச் சமாதியை அமைத்து, அவ்விடத்துக்கருகில் ஒரு சிவலிங்கத்தையும் ஆதி சங்கரர் விக்ரகத்தையும் பிரதிஷ்டை செய்தார்கள். அந்தக் கோயில் இன்றும் இளையாற்றங்குடி தேவஸ்தானத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

நம் ஸ்வாமிகள் சிறந்த குரு பக்தியுடையவர்களாதலால் அவ்வூருக்குச் செல்லவேண்டும் என்ற நோக்கங் கொண்டே திருவானைக்காவிலிருந்து புறப்பட்டார்கள். புதுக்கோட்டை

யிலிருந்து அவ்வூருக்குச் சென்று அதிஷ்டானத்தைத் தரிசித்துக் கொண்டு திரும்பவும் வழியில் திருவானைக்காவில் தங்கி, தமது முதல் சாதுர்மாஸ சங்கல்பத்தை அவ்வூரிலே முடித்துக்கொண்டு, தஞ்சாவூர் வழியாகக் கும்பகோணத்திற்குத் திரும்பினார்கள்.

தஞ்சையில் ராணி ஸ்ரீ ஜீஜாம்பாபாயி ஸாகேபாவும், ராணி ஸ்ரீ ராமாம்பாபாயி ஸாகேபாவும், சீனியர் பிரின்ஸ் சிவாஜி ராஜா ஸாகேபும், ஜுனியர் பிரின்ஸ் பிரதாபசிம்ஹ ராஜா ஸாகேபும், மற்ற அரச பரம்பரையினரும் அரண்மனையில் ஸ்வாமிகளை வரவேற்றுப் பிக்ஷை, பாதபூஜைகளைச் செய்தனர். பொதுமக்களும் இந்த வரவேற்பில் கலந்துகொண்டு ஸ்வாமிகளின் அருளுக்குப் பாத்திரமானார்கள். அச்சமயம் பொதுமக்கள் ஏற்பாடு செய்த ஓர் ஊர்வலம் தஞ்சை நகரில் அதுவரையிலும் கண்டிராத ஒரு காட்சியாக விளங்கியது. மாலை 7 மணிக்குப் புறப்பட்ட ஊர்வலம் இரவு இரண்டு மணிக்கே மடத்தைத் திரும்பவும் அடைந்தது.

பன்னிரு வருஷங்களுக்கொருமுறை வரும் மாசி மகத் திருநாள் கும்பகோணத்தில் மகா மகம் என்ற பெரிய திருவிழாவாகும்.

மகா மகத்திற்குக் கும்பகோணம் திரும்புதல்.

மேலே கூறிய யாத்திரையை முடித்துக் கொண்டு, நம் ஸ்வாமிகள் 1909-ஆம் வருடம் மார்ச்சு மாதம் கும்பகோணத்திற்குத் திரும்பினார்கள். அவ்வருஷம் மகாமக வருஷம். அதற்கென அரசாங்கத்தாரும், பொது மக்களும் விசேஷ ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். மடத்திலும் யாத்திரிகர்களுக்காக ஏராளமான இட வசதியும் உணவு வசதியும் செய்து கொடுக்கப்பட்டன. மகாமகத்தன்று ஸ்வாமிகள் யானையின் மீது அம்பாரியிலமர்ந்து, தஞ்சை அரசர் குடும்பத்தினர் முன் செல்ல, மகாமகக் குளத்திற்கு ஸ்நானத்திற்கு சென்ற காட்சி, அவ்வருட மகாமகத்தில் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த விழாவாகக் காணப்பட்டது.

4. வித்தியாப்பியாசம்

1909, 1910 இந்த இரண்டு வருடங்களிலும், மடத்தின் ஆஸ்தான பண்டிதர்களால் கும்பகோணத்திலேயே ஸ்வாமிகளுக்குச் சம்ஸ்கிருத காவியங்கள், நாடகங்கள் இவைகளின் பயிற்சியும், வேதப் பயிற்சியும் செய்து வைக்கப்பட்டன. இந்த இரண்டு வருடங்களிலேயே ஸ்வாமிகளின் அறிவின் பெருமையைப் பண்டிதர்கள் கண்டு ஆச்சரிய மடைந்தனர். பக்தர்களும், மடத்தின் சிடர்களும் அதிகமாக ஸ்ரீ ஸ்வாமிகளைத் தரிசிக்க வரத் தொடங்கினார்கள். அதனால் சாஸ்திரப் பயிற்சிக்குக் கும்பகோணத்தில் வசிப்பது சிறிது இடையூறாகக் காணப்பட்டது. வித்தியாப்பியாஸத்தை உத்தேசித்து ஏகாந்தமான ஓர் இடம் நிர்ணயிக்கப்பட வேண்டியது அவசியமாகிவிட்டது. அகண்ட காவேரியின் வட கரையில், முசிரிக்கு மேற்கே ஐந்து மைலில், இயற்கை அழகுகள் அமைந்த மகேந்திர மங்கலம் என்னும் கிராமத்தை இதற்கென மடத்தின் அதிகாரிகள் குறிப்பிட்டார்கள். அந்தக் கிராமத்தில் அன்னதானக் கட்டளைக்கென மடத்திற்கு மதுரையில் அரசாண்ட கடைசி நாயக்க மன்னனான விஜய ரங்க சொக்கநாத நாயக்கர் சாலிவாகன சகம் 1603-ஆம் ஆண்டில், (1708) பூதானம் செய்திருந்தார்.

மகேந்திர மங்கலம் திருச்சி, நாமக்கல் ரஸ்தாவில், தொட்டியத்திற்கு இப்பால் உள்ளது. அக்காலத்தில் அதற்குப் போக்குவரத்து வசதிகள் அதிகமாக இல்லை. அக்கிராமத்தை அடைய வேண்டுமானால். காவிரியின் தென் கரையிலுள்ள லாலாபேட்டை என்னும் ரயில் நிலையத்தில் இறங்கி, ஒரு மைல் அகலமுள்ள காவிரியைப் பரிசலில் கடந்து செல்லவேண்டும். இவ்வளவு சிரமத்தையும் பொருட்படுத்தாது ஸ்வாமிகளின் தரிசனத்துக்கு வரக்கூடியவர்கள் சிலரே இருப்பர். ஆகையால் இந்த இடம் ஸ்வாமிகளின் வித்தியாப்பியாஸத்திற்கு மிகவும் ஏற்றதெனத் தெரிந்தெடுக்கப் பெற்றது. பூஜையும், மடத்தின் மற்ற நிர்வாச ஸ்தலங்களும் அக்ரஹாரத்தில் தனிகர், சிங்கம் ஐயங்கார் இல்லத்தில் வைக்கப்பட்டன. காவிரியின் கரையில், தண்ணீர் நிலைக்கு அருகிலேயே ஒரு சிறு பர்ணசாலை நிர்மாணிக்கப் பெற்றது.

1911-ஆம் வருடம் கும்பகோணத்திலிருந்து அந்தக் கிராமத்திற்கு ஸ்வாமிகள் பயணமானார்கள். மகேந்திர மங்கலத்துக்குச்

செல்லும் வழியில் ஸ்வாமிகள் லால்குடி என்ற ஊரில் தங்கி, அங்குச் சங்கராலயத்தையும், ஒரு குருகுலத்தையும் ஸ்தாபனம் செய்தார்கள். அந்தக் குருகுலத்திலிருந்து வித்தியாப்யாஸம் செய்த பலர் இன்று மகா வித்வான்களாக விளங்குகிறார்கள்.

ஸ்வாமிகள் வித்யாப்யாஸம் செய்த முறை தனிமையானது. சாதாரணமாக மக்கள் தமக்குக் கல்வி கற்பிக்கின்றவர்களைத் தம் ஆசாரியர்களென மதித்து, அவர்களிடம் பக்தி செலுத்திக் கல்வி பெறுவார்கள். ஸ்வாமிகளுக்குக் கல்வி கற்பித்த பண்டிதர்களோ ஸ்வாமிகளைத் தம் குருவாக ஏற்றுக் கொண்டவர்கள். பாடம் ஆரம்பிக்கும் முன்னரும், முடிந்த பின்னரும், அவர்கள் ஸ்வாமிகளை வணங்குவார்கள். இப்படிப்பட்ட ஓர் நிலையிலிருந்தும், ஸ்வாமிகள் பாடங்கள் கற்கும்பொழுது மிகுந்த கவனத்துடனும் அக்கரையுடன் கல்வியில் முன்னேற வேண்டுமென்ற எண்ணத்துடனும், வித்துவான்களிடம் மிகுந்த மரியாதையுடன் கல்வி கற்று வந்தார். அக்காலத்தில் அவர்கள் கற்ற கலைகள் வியாகரணம், தர்க்கம், வேதாந்தம் ஆகியவைகளாகும். பின்னர், மீமாம்சையும் கற்றுக் கொள்ளப் பெற்றது. ஸ்வாமிகளின் மேதையினால் பண்டிதர்களின் பணி வெகு எளிதாகிவிட்டது. 1911, 1912, 1913 ஆகிய இந்த மூன்று வருடங்களில் நம் நாட்டில் பிரசித்திபெற்ற பண்டிதர்களுக்கும், தலைவர்களுக்கும் அந்தக் கிராமம் ஒரு யாத்திரை ஸ்தலம் ஆயிற்று. இக்காலத்தில், ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு முறையாகக் கல்வி உதவியவர்களுள், பைங்காநாடு பஞ்சாபகேச சாஸ்திரிகள், மஹாமஹோபாத்யாய சாஸ்திர ரத்நாகர தி. வேங்கடசுப்பா சாஸ்திரிகள், சாஸ்திர ரத்நாகர விஷ்ணுபுரம் சாமி சாஸ்திரிகள், திருவிசைநல்லூர் வே. வேங்கடராம சாஸ்திரிகளும் குறிப்பிடத் தக்கவர்கள். இன்னும் அக்காலத்தில் மடத்து ஆஸ்தான வித்வான்களாக இருந்து ஸ்வாமிகளின் வித்யாப்யாஸத்தில் ஊக்கமளித்தவர்களுள், மஹாமஹோபாத்யாய பைங்கா நாடு கணபதி சாஸ்திரிகள், மஹாமஹோபாத்யாய கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகள், கோடி கன்னிகாதானம் உபயவேதாந்த ராஜகோபால தாதாச்சாரியார் முதலானவர்கள் முக்கியமானவர்கள்.

கல்வி முறை.

இவ்வளவு கல்விகளோடு, ஸ்வாமிகள் ஆங்கிலத்துடன் பிரஞ்சு பாஷையும் கூடக் கற்றுவந்தாரென்றால், அது யாவருக்கும்

ஆச்சரியத்தையே அளிக்கும். காலஞ்சென்ற கீர்த்தனுச்சாரிய ஸி. ஆர். சீனிவாச ஐயங்கார் அக்காலத்தில் அடிக்கடி ஸ்வாமிக ளிடம் வந்து போவதுண்டு. மகாராஷ்டிர பாஷையையும் அதி லுள்ள நூல்களையும் கற்பதில் ஸ்வாமிகளுக்கு அவா மிகுதியாய் இருந்ததால், பம்பாய் மாகாணத்திலிருந்து மகாராஷ்டிர பண்டிதர் ஒருவரைத் தருவித்து மூன்று வருடங்களுக்குமேல் அவரை மடத் தில் தங்கச் செய்து வைத்தனர். அவரிடம் ஸ்வாமிகள் பல மகா ராஷ்டிர நூல்களையும் ஆராய்ச்சி செய்துள்ளார்கள். தமிழில் ஸ்வாமிகளுக்கு இருந்த ஆர்வம் எல்லாவற்றையும்விட அதிக மாகும். ஓய்வு நேரங்களில் அவர்கள் சில புலவர்களின் துணை கொண்டு தமிழ் இலக்கண, இலக்கியங்களையும் பயின்று வந்தார் கள். தேவாரம், திருவாசகம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், திருக்குறள் ஆகியவைகளையும் அவர்கள் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து வந்தார்கள். கலைகளுக்குத் தனிமையான காலத்தை அவர்கள் ஒதுக்கிக் கொள்ளவில்லை. கலைகளில் தேர்ச்சி பெற்றவர்களுடன் ஓய்வு கிடைக்கும் நேரங்களிலெல்லாம் பேசிக் கொண்டுவரும் பொழுதே, அக்கலைகளின் நுட்பங்களை அவர்கள் அறிந்து கொள்வார்கள். அவற்றுள் சங்கீதக் கலை ஸ்வாமி களின் மனஸை மிகவும் கவர்ந்தது.

அடிக்கடி ஸ்வாமிகள் தம் பர்ணசாலையை விட்டு அகண்ட காவிரியின் நடுவில் அமைந்த திட்டுக்களுக்குச் சென்று. அவ்விடம் நெடுநேரம் தங்கி, இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்திருப்பார் கள்; அநேக சமயங்களில் அவர்கள் தனிமையில் தியானத்திலும் அங்கு அமர்ந்துவிடுவார்கள்; இயற்கைக் காட்சிகளையெல்லாம் படம் பிடிப்பதில் ஸ்வாமிகளுக்கு மிகுந்த ஆசையுண்டு. அக்காலத்தில் ஒருவர் போட்டோ காமிராவுடன் ஸ்வாமிகளைத் தொடர்ந்து வரு வது வழக்கம். அவரைக்கொண்டு பல இயற்கைக் காட்சிகளைப் படம் எடுக்கும்படி ஸ்வாமிகள் கட்டளை இடுவார்கள். காமிராவிலிருக் கும் நுட்பங்களெல்லாம் ஸ்வாமிகளுக்கு நன்கு தெரியுமாதலால், படம் நன்ருக விழக்கூடிய ஆலோசனைகளைப் படம் பிடிப்போருக்கு ஸ்வாமிகள் அடிக்கடி கூறுவதுண்டு. மேலும் மாற்றுக் கண்ணாடி யைக் கழுவுதல், பிரதிகள் எடுத்தல், இவைகளிலும் தம் அரிய யோசனைகளை ஸ்வாமிகள் அவருக்குக் கூறுவார்கள். கணிதம், சோதி டம், வானசாஸ்திரம், இவைகளிலும் ஸ்வாமிகள் நல்ல விற்பன்ன

ராக ஆனார்கள். இவைகளில் பயிற்சி பெறுவதற்கனெ அவர்கள் திருவையாறு சுந்தரேச ச்ரௌதிகளின் சீடரான மஹர், இராமஸ்வாமி சாஸ்திரிகளைப் பல வருடங்கள் மடத்திலேயே இருக்கும்படி செய்து, அவரது குடும்பத்தையும் ஆதரித்து வந்தார்கள். தேவாரம் பாடக் கேட்பதில் ஸ்வாமிகளுக்கு ஆர்வம் அதிகம். நல்ல இசையுடன் பாடுகிறவர்கள் மடத்துக்கு வரும்பொழுதெல்லாம், ஸ்வாமிகள் பல மணி நேரம் அவர்களுடன் கூட இருந்து, தம் மனஸிற்கிசைந்த தேவாரங்கள் பலவற்றைப் பாடச்சொல்லிக் கேட்டுக்கொண்டே இருப்பார்கள். திருவாய்மொழி முதலிய வைணவப் பிரபந்தங்களிலும் ஸ்வாமிகளுக்கு நல்ல பற்று உண்டாயிற்று,

மகேந்திர மங்கலத்தில் நம் ஸ்வாமிகள் தங்கியது 1911 முதல் 1914-வரையிலுள்ள காலமாகும். 1914-இல் ஸ்வாமிகள் கும்பகோணம் திரும்பினார்கள். அவர்களுக்கு வித்தியாப்யாஸ இடமாயிருந்த மகேந்திர மங்கலத்தில், அதன் ஞாபகார்த்தமாகக் காவிரியின் கரையில் ஒரு சங்கர ஆலயம் நிறுவப்பெற்றது. ஸ்வாமிகள் மகேந்திர மங்கலத்திலிருந்து திரும்பியபோது அவர்களுக்குப் பிராயம் இருபது. இக்காலத்தினுள் அவர்கள் பல துறைகளிலும் அறிவு நிரம்பி விளங்கினார்கள். புராணங்கள், ஸ்தல வரலாறுகள், கல்வெட்டுக்கள் ஆகியவற்றைப் பற்றிய அறிவு, நவீன உலக ஞானம் ஆகிய பல துறைகளிலும் அவர்களுக்கு நல்ல பரிசயம் ஏற்பட்டிருந்தது. ஒரு முறை அறிந்தவற்றை அவர்கள் என்றும் மறப்பதில்லை. தம்மைக் காண வரும் அறிஞர்களிடமிருந்து தாம் அறிந்தவற்றோடு, தம் ஊகத்தால் ஒவ்வொரு அறிவின் தத்துவத்தையும் ஆராய்ந்து உண்மையைக் கண்டு கொள்வதில், நம் ஸ்வாமிகள் மகா மேதைகளுள் ஒருவராகத் திகழ்கின்றார்கள். பிறரோடு பழகும் திறமைகளிலும் ஒவ்வொருவருடைய தாரதம்யத்தைச் சீர்தூக்கி அறியும் நிபுணத்துவத்திலும் அவர்களுக்கு இணையாக மிகச் சிலரையே கூறலாம்.

ஸ்வாமிகள் கும்பகோணத்தில் தங்கியிருந்தபொழுது, சுமார் 30 மைல் தூரத்திலுள்ள கங்கை கொண்ட சோழ புரத்திற்கு வருடத்திற்கொருமுறை விஜயம் செய்து, தஞ்சைப் பெரிய கோவிலின் அமைப்பில் கட்டப்பட்டுள்ள அவ்வாலயத்தின் மிகப் பெரிய சிவலிங்கத்தைத் தரிசித்து, சிதிலமடைந்த அக்கோவிலின்

சிலாசாஸனங்களையெல்லாம் ஆராய்ச்சி செய்துவருவார்கள். இவ்வாராய்ச்சியில் ஸ்வாமிகளுக்கு உதவியவர்களில், சிலாசாஸன இலாகா பி. வி. ஜகதீச ஐயரையும், இஞ்சினீயர் அனந்தாழ்வாரையும் குறிப்பிடலாம். இவ்வாறு நம் ஸ்வாமிகள் தம் இருபதாவது பிராயத்துக்குள்ளேயே தம் பதவிக்கேற்ற வித்யா விலாஸத்துடன் விளங்கலானார்கள்.

---

5. 1911-முதல் 1915-வரையில் மடத்தின் நிர்வாகம்

ஜில்லா கோர்ட்டு நிர்வாகத்தில் மடம்.

அக்காலத்தில் ஸ்வாமிகள் மைனராக இருந்ததால், அவர்களுக்கு இருபத்தோராவது பிராயம் பூர்த்தியாகும் வரையில், மடத்து நிர்வாகம் ஜில்லா கோர்ட்டின் பாதுகாப்பில் இருக்க வேண்டுமென்று மடத்தில் அக்கரை கொண்ட சில சீடர்கள் சென்னை அரசாங்கத்தாருக்கு விண்ணப்பித்துக் கொண்டிருந்தார்கள். கோர்ட்டு நிர்வாகத்தில் கொண்டுவரக்கூடிய அளவில் மடத்தின் சொத்துக்கள் இல்லாமலிருந்தும், அதன் நன்மையைக் கருதி மடத்தைக் கார்டியன் அண்டு வார்ட்ஸ் சட்டப்படி நடத்தக் கோர்ட்டார் உத்திரவு இட்டார்கள். கோயம்புத்தூர் ஜில்லா கொளிஞ்சிவாடி கிராமத்தைச் சார்ந்த ஸ்ரீமான் ஸி. எச். வேங்கடரமண ஐயர் என்னும் பிரமுகர் கார்டியனாக நியமிக்கப்பட்டார். 1911-ஆம் வருடம் முதல் 1915-ஆம் வருட மே மாதம் வரை, மடத்தின் நிர்வாகம் அவர் மூலம் நடைபெற்று வந்தது, 1915ஆம் வருடம் மே மாதம் நடைபெற்ற சங்கர ஜயந்தி அன்று, ஸ்வாமிகளுக்கு இருபத்தோராவது ஆண்டு பூர்த்தியாகவே, அன்றுமுதல் மடத்தின் நிர்வாகத்தை ஸ்வாமிகளே நேரில் ஏற்றுக் கொண்டார்கள். பெயரளவில் நிர்வாகம் ஏற்றுக் கொள்ளப்பட்டதேயொழிய, சர்வமுக்கியார்நாமா என்னும் அதிகாரம் பெற்ற ஏஜண்டு ஒருவராலேயே மடத்தின் நிர்வாகக் காரியங்களெல்லாம் கவனித்து வரப்பட்டன. அக்காலத்தில், பாலப்பருவம் தொடங்கியே ஸ்வாமிகளிடம் விசேஷப் பற்றும் பக்தியும் கொண்டிருந்த திருப்பாதிரிப்புலியூர் வாசியான பசுபதி ஐயர் என்னும் சீடர் ஊதியமின்றி மடத்தின் நிர்வாகத்தை ஏற்று, எல்லாத் துறைகளிலும் திறம்பட பணியாற்றி வந்தார். பழைய கால வழக்கப்படி எந்தத் தஸ்தா

வேஜாவிலும் ஸ்வாமிகள் கையெழுத்திடுவதில்லை. ஏஜண்டு களுக்குப் பவர் கொடுக்கும்பொழுதும், மடத்தின் ஸ்ரீமுக முத்திரையே உபயோகப்படுத்தப்பட்டு வருவது வழக்கம்.

இந்த முறையில் 1915-ஆவது வருட சங்கர ஜயந்தி மடத்தில் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சீடர்கள் பெருந்திரளாகக் கூடியிருந்தனர். வேத நூல்களின் சாரங்களை யாவரும் எளிதில் அறியும்பொருட்டு, ஆரிய தருமம் என்னும் தமிழ்ச் சஞ்சிகையை மடத்தின் மாத வெளியீடாக அன்று ஸ்வாமிகள் ஆரம்பித்து வைத்தார்கள். ஸ்ரீரங்கம் வாணிவிலாஸ் அச்சகத்திலிருந்து ஸ்ரீ டி. கே. பாலசுப்ர மண்ய ஐயர் மேற்பார்வையில் அந்தச் சஞ்சிகை உயரிய முறையில் வெளிவந்தது. மடத்தின் நிர்வாகத்திலும் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. சிஷ்யர்களின் நன்மையின் பொருட்டுப் பல பாஷைகளில் மடத்தின் சரித்திரம் வெளியிடப் பெற்றது. மடத்தி லுள்ள தாமிரப்பட்டையங்கள் திருவனந்தபுரம் சிலாசாஸனப் பரிசோதகர் ஸ்ரீ டி. ஏ. கோபிநாத ராவ் அவர்களால் பரிசிலனை செய்யப்பட்டுப் புத்தக வடிவமாக வெளிவந்தது.

6. நவராத்திரி உற்சவம்

லக்ஷதீபம், லக்ஷார்ச்சனை.

1916-ஆவது வருடம் அக்டோபர் மாதத்தில் கும்பகோணம் ஸ்ரீ மடத்தில் நவராத்திரி விழாவானது மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்த ஒன்பது நாட்களிலும் அம்பிகைக்கு லக்ஷார்ச்சனை செய்யப்பட்டும், நெய்யினுல் லக்ஷ விளக்குகள் ஏற்றப்பட்டும், லக்ஷம் பிராமணர்களுக்கு அன்னமளிக்கப்பட்டும் இவ்விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவைப் பற்றி ஸ்ரீ சி. சுப்ரமண்ய பாரதியார் தமது கட்டுரை ஒன்றில் கீழ்க்கண்ட வாறு குறிப்பிட்டுள்ளார்.

"உலகத்தார் பராசக்தியை நல்ல மழை அருள்புரியும் சரத் காலத்தின், முதல் ஒன்பது இரவும், வணங்கிப் பூஜைகள் செய்யவேண்டும் என்பது பூர்வீகர் ஏற்பாடு. மிகப் பயனுடைய காரியம். மேலான வழி. கும்பகோணம் சங்கர மடத்தில் இந்தப் பூஜை மிகவும் கோலாகலமாக நடத்தப்



1914-கும்பகோணம்-வித்யாப்யாஸம்
முடிவுபெற்றவுடன்



மகாராஷ்ட்ர ஸந்யாஸிகளுடன்



1915-ல் ஸ்ரீஸ்வாமிகள் மடத்தின்
நிர்வாகத்தை ஏற்றுக்கொண்ட சமயம்

போவதாகப் பத்திரிகையில் ஒரு தந்தி போட்டிருந்தது. சகஜமான விசேஷம். தேசம் முழுவதும் இப்படி நடப்பது நல்லது. சங்கர மடத்திலும் எனக்கு ஒருவிதமான ஆவல் உண்டானதால் தந்தியை வாசித்துப் பார்த்தேன். அந்தத் தந்தியிலே பாதி சாஸ்திரம்; வர்த்தமான தந்திக்குள்ளே சாஸ்திரத்தை நுழைத்தது ஒரு விநோதம். ஆனால் அதில் கண்ட சாஸ்திரம் உண்மையாக இருந்தது. நான் எதிர் பார்க்கவில்லை. எனவே தந்தியைப் படித்தபொழுது எனக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று.

கும்பகோணத்துத் தந்தி பேசுகிறது :—இந்த பூஜைகளின் நோக்கம் உலக நன்மை. நவராத்திரி காலத்தில் யோகமாயை துர்க்கை, லக்ஷ்மி, ஸரஸ்வதி என்ற மூன்று வித வடிவம் கொண்டு துஷ்டரையெல்லாம் அழித்து, மனித ஜாதிக்கு மகிழ்ச்சி பெருக வைத்தாள். மனிதர் படும் துன்பத்தைத் தீர்க்கும் பொருட்டாக, தேவி அவ்வாறு அவதாரம் செய்த காலம் முதல் இன்றுவரை பாரத தேசத்தில் எல்லாப் பக்கங்களிலும் ஆரியர் இந்தத் திருவிழாவைக் கொண்டாடி வருகிறார்கள். தேவி உலகம் முழுவதிலும் பரவி இருக்கின்றாள். ஒவ்வொரு தனிப் பொருளிலும் நிறைந்து இருக்கிறாள். இவளே மாயை; இவளே சக்தி; செய்பவளும் செய்கையும் செய்கைப் பயனும் இவளே; தந்தையும், தாயும் இவள்; இவளே பரப்ருமம்'' (பாரதி நூல்கள், கட்டுரை—பக்கம் 32, 33.)

இவ்விழாவை ஏற்பாடு செய்தவர்களில் முதன்மையானவர்கள் தஞ்சை ஜில்லா மிராசுதார்களான பில்லூர் அபிராமி ஐயர், வில்லியனூர் வைத்தியநாத ஐயர், கோட்டூர் கிருஷ்ண ஐயர், கோத்தங்குடி ஸ்ரீநிவாச ஐயர், கல்லூர் வேங்கப்ப ஐயர், சென்னை கணேஷ் கம்பெனியின் சொந்தக்காரர் ஸ்ரீ எம். ஆர். ராமசேஷ ஐயர், சித்தமல்லி சுப்ரமண்ய ஐயர் ஆகியோராவர். இவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு ஊக்கம் அளித்து விசேஷமாகப் பொருளுதவி புரிந்தவர்களில், திருப்பனந்தாள் காசி மடம் அதிபர் ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்கத் தம்பிரான் ஸ்வாமிகள் அவர்களையும், ஆண்டிப்பட்டி ஜமீன்தார் சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியார் அவர்களையும், நந்தவரம் இராஜாப்பையர் அவர்களையும் முதன்மையாகக் குறிப்பிடலாம். மடத்தின் முதல் முற்றத்தில்

சித்திர வேலைகள் அமைந்த அற்புதமான ஒரு பெரிய கொட்டகை அமைக்கப்பெற்றிருந்தது.

துர்க்கை, லக்ஷ்மி, ஸரஸ்வதி, இம்மூன்று தேவிமார்களும் கிழக்கு நோக்கி ஆவாகனம் செய்யப்பெற்றிருந்தனர். அன்றாடம் புஷ்பங்களும் மலைபோல் வந்து குவிந்தன. தேவியின் பூஜையில் தேர்ச்சி பெற்றிருந்தவர்கள் லலிதா ஸஹஸ்ரநாமத்தைச் சொல்லி ஒவ்வொரு நாளும் பலமுறை அர்ச்சனை செய்தனர். பித்தளையினால் செய்யப்பட்ட 12,000 அகல் விளக்குகளை சுவரில் லிங்க வடிவமாகவும், ரிஷப வடிவமாகவும், யானை வடிவமாகவும், துவார பாலகர் வடிவமாகவும் அமைத்து, அவற்றில் நெய் ஊற்றி விளக்குகள் ஏற்றிப் பத்து இரவிலும் எரிய விட்டிருந்தனர். ஒருபுறம் ஆழமான ஓம குண்டங்களில் புரோகிதர்கள் கொழுந்து விட்டெரியும் அக்னி ஜ்வாலையை எழுப்பிச் சண்டீஹோமம், ஸ்ரீவித்யா ஹோமம் இவைகளைச் செய்துவந்தனர். நூற்றுக்கணக்கான வித்வான்கள் இராமாயணம், பாகவதம், தேவிமகாத்மியம், சௌந்தர்ய லஹரி, பகவத்கீதை இவைகளைப் பாராயணம் செய்தனர். மூன்று வேதங்களிலும் வல்லவர்கள் வேத கோஷத்தை ஒருபுறம் ஒலிக்கச் செய்தனர். புலவர்கள் தங்கள் புலமையை விளக்கி மற்றொரு புறம் சொற்பொழிவுகள் ஆற்றிவந்தார்கள்.

அம்பிகைக்குப் பிரியமான வீணை முதலான வாத்தியங்களின் நாதம் எப்பொழுதும் ஒலித்தவண்ணமாக இருந்தது. அக்காலத்தில் நம் நாட்டில் வாழ்ந்த எல்லாச் சங்கீத வித்வான்களும், பாகவத சிகாமணிகளும் போட்டியிட்டுக்கொண்டு தங்கள் தங்கள் கலைத்திறன்களைத் தேவிக்கு அர்ப்பணம் செய்தார்கள். ஸரஸ்வதி பூஜையன்று இராமநாதபுரம் பூச்சி ஐயங்காரென்னும் ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்களின் கச்சேரியும், மதுரை புஷ்பவனம் ஐயரின் கச்சேரியும் மிகவும் சோபையை அளித்தன. அந்த விழாவில் இராமநாதபுரம் பூச்சி ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்களின் கச்சேரி தஞ்சை ஜில்லா ரசிகர்களைப் பரம ஆனந்தத்தில் ஆழ்த்திவிட்டது. ஸ்வாமிகள் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் அவ்வப்போது நேரில் விஜயம் செய்து, அடியார்களை மகிழ்வித்த காட்சி என்றும் மறக்க முடியாததாகும். ஏறக்குறைய 300 தொண்டர்கள் இவ்விழாவில் தொண்டாற்றினார்கள். ரூபாய் 50,000 வரையில் (அன்னதானம் நீங்கலாக) இவ்விழாவுக்குச் செலவிடப்பட்டது. லக்ஷம் பேர்

களுக்கு மேல் அன்னதானம் செய்யும் பணியை மகான் தேப்பெரு மாள் நல்லூர் சிவன் அவர்கள் ஏற்று நடத்தினுர்கள். ஒவ்வொரு நாளும் பதினுயிரம் மக்களுக்குமேல், சேர்ந்தாற்போல் பத்து நாட் களுக்கு அறுசுவையுடன் அன்னமிட வேண்டிய உணவுப் பொருள் களைச் சேகரிக்க எவ்வளவு பிரயாசை வேண்டுமென்பதை ஆலோசித் தால், அஃது ஓர் ஆச்சர்யத்தையே விளக்கும். திவான் சேஷையா சாஸ்திரிகள் வீட்டில் ஒரு பண்டக சாலை நிறுவப்பெற்றது. தஞ்சை ஜில்லா மிராசுதார்களும், வியாபாரிகளும் ஒரு மாதத்துக்கு முன் தொடங்கியே தங்கள் காணிக்கைகளாக உணவுப் பொருள் களை இவ்விழாவுக்கென அனுப்பிவைத்தார்கள். அரிசி மூட்டை கள் ஆயிரக்கணக்காக வந்து குவிந்தன. நூற்றுக்கணக்கான மரப் பீப்பாய்களில் மோரை அடைத்து அவற்றைத் தண்ணீரில் மிதக்கவிட்டிருந்தார்கள். சுமார் 200 சமையல் சிப்பந்திகள் பணி செய்தனர். மடத்தின் தோட்டத்தில் ஒரே தடவையில் 1000 பேர்கள் உட்கார்ந்து புசிக்கும் வசதியுடன் பெரிய பந்தல்கள் அமைக்கப்பெற்றிருந்தன. பனிக்குன்று போன்ற அன்னக் குவி யல்கள், யானைகளை முழுகவடிக்கும் அண்டாக்களில் சாம்பார், ரசம் முதலிய மற்ற உணவுப் பொருள்கள் ஆகியவை தயாரிக்கப் பெற்றன. இவையெல்லாம் சிவனது தனிமையான மேல் பார்வை யில் நடைபெற்றன. எல்லாம் அமைதியுடன் யாவருக்கும் எவ் விதமான குறைவுமின்றி நடந்தேறியது. ஒழுங்கைப் பாதுகாப் பதில் சிவன் மிகவும் கண்டிப்பானவர். எந்தச் சிப்பந்தியும் அல் லது உணவருந்த வருபவரும் அவரது கட்டுப்பாட்டுக்கு அடங் கியே நடக்கவேண்டும்.

பத்தாவது நாளாகிய விஜயதசமி அன்று இரவில். ஸ்ரீஸ்வாமி கள் உள்ளூர்த் தேவாலயங்களுக்கு விஜயம் செய்து ஸ்வாமி தரி சனம் செய்துகொண்டார்கள். அன்று யானைமீது அம்பாரியில் ஸ்வாமிகள் பவனி வந்த காட்சியைப் பல்லாயிர மக்கள் கண்டு களித்தனர். சுமார் ஒரு மைல் நீளமுள்ள அந்த ஊர்வலத்தை ஆண்டிப்பட்டி ஜமீன்தார் பெத்தாச்சி செட்டியாரும், திருப்பனந் தாள் காசி மடம் ஸ்ரீலஸ்ரீ சோக்கலிங்கத் தம்பிரான் ஸ்வாமிகளும் முன்னின்று நடத்தி வைத்தனர். இருபுறமும் நூற்றுக்கணக்கான பவர் விளக்குகள், கண்ணைக் கவரும் வாண வேடிக்கை, ஆறு ஜதை நாயனம், மூன்று ஜதை பாண்டு, வேத பாராயணம்,

தேவார கோஷ்டி, பஜனை கோஷ்டி, நான்கு யானைகள், நாட்டியக் குதிரைகள் இவைகளுடன் அன்று தேஜோமயமாய் விளங்கிய ஸ்வாமிகளின் திருமேனியைத் தரிசித்து அனைவரும் பாக்யசாலிகளானார்கள்.

---

7. கல்விக்கும் கலைகளுக்கும் ஊக்கமளித்தமை: அத்வைத சபைக் கூட்டமும் பண்டிதர்களுக்குப் பாராட்டும்

1917-ஆவது வருட ஆகஸ்ட் மாதம், கும்பகோணம் அத்வைத சபையின் வருடாந்தக் கூட்டம் முடிவு பெற்றவுடன், ஸ்வாமிகள் ஒரு வித்வத் சபையைக் கூட்டி, அக்காலத்தில் மகா வித்வான்களாக விளங்கிய பிரும்மஸ்ரீ பழமார்நேறி இராமஸ்வாமி சாஸ்திரிகள், பிரும்மஸ்ரீ திருவிசைநல்லூர் வேங்கட சுப்பா சாஸ்திரிகள், ஆகிய இவர்களுக்குச் சாஸ்திர ரத்னாகரம் என்னும் பட்டத்தை வழங்கி, இரட்டை சால்வை, வெள்ளிஜாரி முதலிய சன்மானங்கள் செய்து அவர்களைக் கௌரவித்தார்கள். இந்தப் பட்டத்தை அதன் பிறகு நாளது வரையில் பல வித்வான்கள் பெற்றிருக்கிறார்கள். அவர்களின் பெயர்கள் கீழே குறிப்பிட்டுள்ளன :—

1. மன்னார்குடி மகாமகோபாத்யாய யக்ஞசாமி சாஸ்திரிகள்.
2. சிதம்பரம் மகாமகோபாத்யாய தண்டபாணிசாமி தீக்ஷிதர்.
3. புதுக்கோட்டை சமஸ்தான தானாதிகாரி திருவையாறு விச்வநாத சாஸ்திரிகள்.
4. தேதியூர் சுப்ரமண்ய சாஸ்திரிகள்.
5. விஜயநகரம் மகாமகோபாத்யாய தாத சுப்பராய சாஸ்திரிகள்.
6. குண்டூர் திண்டுகூரி நரசிம்ம சாஸ்திரிகள்,
7. கல்கத்தா சர்வ கலாசாலை மகாமகோபாத்யாய என். எஸ். அனந்த கிருஷ்ண சாஸ்திரிகள்.
8. கல்கத்தா சர்வகலாசாலை மகாமகோபாத்யாய ஏ. சின்னசாமி சாஸ்திரிகள்.
9. காசி ஹிந்து சர்வகலாசாலை டி. இராமச்சந்திர தீக்ஷிதர்,

10. காசி மகா பண்டிதர் ராஜேச்வர சாஸ்திரி திராவிட்.

11. மடம் ஆஸ்தான வித்வான் டி. வி. லெக்ஷ்மி நாராயண சாஸ்திரிகள்.

12. சிதம்பரம் ராமசுப்பா சாஸ்திரிகள்.

13. சென்னை, சமஸ்கிருத காலேஜ் போலகம் ராமா சாஸ்திரிகள்.

14. திருச்சி, போலகம் சுந்தர சாஸ்திரிகள்.

15. கிழக்கு கோதாவரியைச் சேர்ந்த ஸ்ரீ பாதம் லெக்ஷ்மி நரசிம்ம சாஸ்திரிகள்.

16. எல்லூரு, மண்டவிக வெங்கட சாஸ்திரிகள்.

17. சென்னை அரசாங்கக் கவிஞர் மகாமகோபாத்யாய மதுரை கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்.

18. பம்பாய் பாரத வித்யா பவனத்தின் பேராசிரியர் டி. ஏ. வெங்கடேச்வர தீக்ஷிதர்.

19. புதுக்கோட்டைச் சமஸ்தான தானுதிகாரி காளி ரங்காச்சாரியார்.

இவர்கள் யாவரும் ஸ்வாமிகளால் அவ்வப்போது நன்கு கௌரவிக்கப்பட்டு மடத்திலிருந்து தகுந்த சன்மானங்களையும் அடைந்திருக்கிறார்கள்.

மாணவர்களுக்கு உதவி.

அதே வருடம் கல்லூரி மாணவர்கள் நமது மதத்தில் பற்றுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்பதை எண்ணி, அவர்களுக்கென ஆங்கிலத்தில் ஒரு கட்டுரைப் போட்டியை ஸ்வாமிகள் ஏற்படுத்தினார்கள். 'காலத்தின் மாறுபாடுகளை அநுசரித்துச் சநாதன தர்மத்தைக் காப்பாற்றும் முறையை எவ்விதம் நிர்ணயிக்கலாம்' என்பது அப்போட்டி வியாஸத்தின் தலையங்கம். சென்னை, திருச்சி, மதுரை முதலிய பெரிய நகரங்களின் கலாசாலை மாணவர்கள் இந்த வியாஸத்தை ஆங்கிலத்தில் எழுதிப் போட்டியில் கலந்துகொண்டனர். வெற்றி பெற்ற வியாஸங்கள் எழுதிய முதல் மூன்று மாணவர்களுக்கு முறையே பணப் பரிசு, புத்தகங்கள் முதலானவை வழங்கப்பட்டன. இதில் முதல் பரிசு பெற்றவர், பின்பு சென்னைச் சர்வகலாசாலையில் சரித்திரப் பேராசிரியராக இருந்த வி. ஆர். இராமச்சந்திர தீக்ஷிதர் ஆவர். அந்த வருடத்திலும்,

அடுத்த வருடங்களிலும் ஸ்வாமிகள் கல்லூரி மாணவர்களுக்கும், கலாசாலை மாணவர்களுக்கும் உபகாரச் சம்பளம் கொடுப்பதென ஓர் ஏற்பாடும் செய்தார்கள்; மதக் கல்வி போதிக்கப்படும் கல்விச் சாலைகளுக்குப் பொருளுதவியும் செய்துவந்தார்கள்.

அக்காலத்தில், மடத்தில் ஓர் ஆயுர்வேத வைத்யசாலையை நிறுவி ஏழைகளுக்கு இலவசமாக வைத்திய வசதி கிடைக்கும்படி ஸ்வாமிகள் செய்திருந்தார்கள். மயிலாப்பூர் வெங்கட்ரமண வைத்திய கலாசாலையில் தேறிய, வைத்ய விசாரத் ஜகத் ரக்ஷக சாஸ்திரிகளும், வைத்திய விசாரத் திருவண்ணாமலை கிருஷ்ண சாஸ்திரிகளும், இந்த வைத்திய சாலையில் வைத்தியர்களாக அமர்ந்திருந்தார்கள்.

ஏழைகளுக்கு வைத்திய வசதி.

1914-ஆவது வருடம் முதல் 1918-ஆவது வருடம் வரை ஸ்வாமிகள் கும்பகோணத்தில் தங்கியிருந்த காலத்தில், வடமொழி, தென்மொழி வித்வான்களும், சங்கீத வித்வான்களும், மற்றும் கல்வியில் ஆர்வமுள்ள அன்பர்கள் பலரும் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஸ்வாமிகளைத் தரிசிக்க வந்து கொண்டிருந்தனர். அநேகமாக ஒவ்வொரு நாளும் மாலை நேரங்களில் மடத்தில் வித்வான்களின் சபைகள் கூடுவதுண்டு. அப்பொழுது காரசாரமாகச் சாஸ்திர விசாரங்கள் நடைபெறும். ஸ்வாமிகள் எல்லோருடைய கட்சிகளையும் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, முடிவில் ஒவ்வொருவருடைய கட்சியின் உண்மைகளையும் விளக்கி யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு விவாதத்தை முடிக்கும் அழகைப் பார்த்து யாவரும் ஆச்சரியமடைவார்கள்.

கலைகளுக்கு ஊக்கமளித்தது

அந்நாளில் அஷ்டாவதானிகள். சதாவதானிகள் என்னும் பெயர் பெற்ற பல்கலைப் புலவர்கள் இந்தச் சபைகளுக்கு வந்து தங்கள் புலமைகளைக் காட்டுவதுண்டு. சதாவதானி என்பவர் நூறு விஷயங்களின் கேள்விகளை மனஸில் வாங்கிக் கொண்டு, பின்னர் அவைகளுக்கு ஒன்று விடாமலும், தவறு இல்லாமலும் விடை கூறுவர். அஷ்டாவதானி என்பவர் ஒரே காலத்தில் எட்டு விஷயங்களை மனஸில் வாங்கிக் கொண்டு பதில் கூறுவர். அவர்கள் பல பாஷைகளிலும் கவிதை இயற்றுவதில் வல்லவர்களாயிருப்பர்; கணிதம், ஜோதிஷம், தர்க்கம், வேதாந்தம், மீமாம்சை. வியா

கரணம், இவைகளை நன்கு கற்றவர்களாகவுமிருப்பர் ; அவர்களது திறனைப் பரீக்ஷிக்கும்போது பண்டிதர்கள் அவர்களைச் சுற்றி உட்கார்ந்திருப்பார்கள். வடமொழியிலோ, தென்மொழியிலோ ஒருவர் ஒரு செய்யுளின் முதலடியை மாத்திரம் கூறிவிட்டு அடுத்த வித்வானிடம் அந்தப் பரீக்ஷையை விட்டு விடுவர். அடுத்திருப்பவர் ஒரு கணித சாஸ்திரியாக இருந்தால், ஒரு பெரிய கணக்கை அவரிடம் கூறிவிட்டு அதன் விடைக்காகக் காத்திருப்பார். மற்றொருவர் ஒரு சோதிடராக இருக்கக்கூடும்; அவர் ஒரு ஜாதகத்தை வாயால் கூறிவிட்டு அதனுடைய இராசி பலனையும் அம்ச பலனையும் அந்த அவதானியிடமிருந்து தெரிந்துகொள்ள ஆவலுள்ளவராகவிருப்பார். சங்கீத வித்வானொருவர் ஓர் அபூர்வ ராகத்தைப் பாடுவார்; ஒருவர் ஒரு புஷ்பத்தின் பெயரைச் சொல்லிவைப்பார்; இராமாயணத்தில் ஓர் குறிப்பிட்ட செய்கையை நிகழ்த்திய ஓர் அரக்கனது பெயரைச் சொல்லும்படி ஒருவர் கேட்பார்; இவ்விதமாக இன்னும் பல கேள்விகள் பிறக்கும். கேள்விகள் முடிந்ததும் இவ்விதப் பரீக்ஷைக்கு உட்படும் கலாவல்லவர்கள் வரிசைக் கிரமமாக அவைகளுக்கு ஒரு தவறு கூட இல்லாது விடைகளைக் கூறிக்கொண்டே வருவார்கள். பார்ப்பவர்களுக்கு இக்காட்சி ஆச்சரியத்தை அளிக்கும்.

ஒரு சமயம் ஸ்வாமிகளைக் காண மிகவும் வயோதிகரான ஸ்ரீ வைஷ்ணவ சதாவதானி ஒருவர் மடத்திற்கு வந்திருந்தார்.

ஸ்வாமிகளும் அவதானமும்.

வழக்கம்போல் வித்வான்கள் அவரை இவ்விதமாகப் பரீக்ஷைகளுக்கெல்லாம் உள்ளாக்கினார்கள். வித்வான்கள் கேள்விகளையெல்லாம் கேட்டு வரும்போதே, ஸ்வாமிகள் மற்றொருவரைக் கொண்டு, தாம் கூறிவரும் விடைகளைக் குறித்துக் கொள்ளும்படி சொல்லியிருந்தார்கள். அந்தப் பெரியவர் சற்றும் தயங்காமல் விடைகளை அளித்தார். ஸ்வாமிகள் சொல்படி குறித்து வைத்திருந்த விடைகளும், அவர் கூறிய விடைகளும், ஒன்றாகவே இருந்தன. ஸ்வாமிகளின் மேதையைப் பற்றி அங்கிருந்த அனைவருக்கும் ஓர் வியப்புண்டாயிற்று. ஸ்வாமிகள் அந்த சதாவதானிக்குக் காஷ்மீர் சால்வையையும், பிற வெகுமானங்களையும் அளித்து அவரைப் பெருமைப்படுத்தினார்கள். பின்னர் சில வருடங்கள் அடிக்கடி அவர் மடத்திற்கு வருவதுண்டு. இவ்விதம் அங்

காலத்தில் பல கலைஞர்கள் ஸ்வாமிகளிடம் வந்து தங்கள் கலைத் திறன்களைக் காட்டிச் சன்மானங்கள் பெற்றுப் போவார்கள். அந்நாளில் பெரியதொரு சர்க்கஸ் கம்பெனியை நடத்திவந்த ப்ரோபெஸர் இராமமூர்த்தி என்றவரும் ஸ்ரீஸ்வாமிகளைத் தரிசித்து, யோகாப்யாஸ சம்பந்தமான சில சந்தேகங்களை ஸ்வாமிகளிடம் கேட்டு அவற்றில் விளக்கம் பெற்றுக்கொண்டார். அந்தக் கனவான் பின்பொரு தடவை ஸ்வாமிகளைப்பற்றித் தம் நண்பர் ஒருவரிடம் கூறியபோது, 'பிரும்மசரியத்தின் சக்தியை ஸ்வாமிகளிடம் தான் பார்த்ததாயும் அந்தச் சக்தியைக் கொண்டு உலகில் சாதிக்கமுடியாதன எல்லாவற்றையும் சாதிக்கலாம்' என்றும் கூறினராம்.

1917-ஆவது வருடம் தர்பங்கா மகாராஜா தமது தென்னாட்டு யாத்திரையின்போது கும்பகோணத்திற்கு வந்து, மூன்று நாட்கள் அவ்விடம் தங்கி, ஸ்வாமிகளைத் தரிசித்து தென்னாட்டையும் வட நாட்டையும் ஒற்றுமைப்படுத்தும் தேவாலயங்கள், பண்பாடு இவைகளைப்பற்றி பேசிக் கொண்டிருந்தார். ஸ்வாமிகளது தவ மகிமையில் அவர் ஈடுபட்டு, ஸ்வாமிகளை வட நாட்டுக்கு விஜயம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இரு மேதாவிகளுடன் விஞ்ஞான ஆராய்ச்சி.

கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியின் பௌதிகப் பேராசிரியராகவும், பின்னர் பிரின்ஸிபாலாகவும் விளங்கிய ஸ்ரீமான் பி. இராஜகோபால ஐயர் ஸ்வாமிகளின் கலையறிவையும், மேதையையும் நண்பர்கள் மூலம் கேள்வியுற்று, அவர்களைச் சந்தித்து அவர்களுடன் உரையாட வேண்டுமென்று அவாவுள்ளவராகவிருந்தார். ஆயினும் வைதிக ஆசார நியமங்களுடன் விளங்கும் ஒரு சந்யாசியும், பீடத்திற்கு அதிபதிகளுமான ஸ்வாமிகள், தம்மை மதித்துத் தம் பெருமைக் கேற்றவாறு தம்மை வரவேற்றுத் தம்முடன் உரையாடுவர்களாவென்னும் சந்தேகத்தை உள்ளத்தில் கொண்டே, அவ்விதச் சந்திப்பை அவர் வெகுநாள் ஒத்திப் போட்டுக் கொண்டேயிருந்தார். ஆயினும் ஒரு நாள் அவர் தமது மனஸை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு, ஸ்வாமிகளைத் தரிசித்து விடுவதெனத் தீர்மானித்தவராய் மடத்திற்கு வந்து சேர்ந்தார். ஆசாரியஸ்தானத்தில் உள்ள ஸ்வாமிகளுக்கு எவ்விதம் வந்தனை வழிபாடுகளைச் செய்யவேண்டுமென்பதை அவர் உண்மையில்

அறிந்தவரல்லர். அப்படியிருந்தும் அவரது உள்ளத்திலிருந்த அன்பை மட்டும் ஸ்வாமிகள் உணர்ந்துகொண்டு, அவரை ஆதர வுடன் ஏற்று, அவரிடம் பேசத் தொடங்கினார்கள். முதலில் கல்லூரியைப் பற்றியும் மற்றும் பொதுவான விஷயங்கள் பற்றி யும் பேச்சுக்கள் நடைபெற்றன. தொடர்ந்து, விஞ்ஞானத்தைப் பற்றிப் பேச்சுக்கள் ஆரம்பமாயின. பௌதிக சாஸ்திரத்தின் நுட்பங்கள் பலவற்றை எளிதில் விவரிக்கும் ஸ்வாமிகளின் புத்தி நுட்பத்தைக் கண்டு இராஜகோபால ஐயர் வியந்தார். இருவரும் அந்தச் சம்பாஷணையில் ஈடுபட்டிருந்த சமயத்தில், மராமத்திலாகா சூப்பரிண்டெண்டிங் இஞ்சினியராக இருந்த பி. வி. மாணிக்க நாயக்கர் ஸ்வாமிகளைத் தரிசிக்க வந்தார். ஸ்வாமிகளுக்கு அவர் பல வருடங்கள் முன்பே அறிமுகமானவர். அவர் ஸ்வாமிகளிடம் ஆழ்ந்த பக்தியும் மதிப்பும் கொண்டவர். அவர் தமக்கு முன் வந்து ஸ்வாமிகளுடன் பேசிக்கொண்டிருப்பவர் யாரென்பதை அறிந்தவரல்லர். ஆயினும் சம்பாஷணைகளின் போக்கிலிருந்து அவரைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நாயக்கர் விரும்பினார். ஸ்வாமிகளே நாயக்கருக்கு ஐயரை அறிமுகப்படுத்தினார். நாயக் கரும் கணித சாஸ்திரத்தில் எம். ஏ. பட்டம் பெற்றவர். பின்னர் வான சாஸ்திரத்தைப் பற்றிய பேச்சு தொடங்கிற்று. இந்தக் கலையில் நமது புராதன வழிக்கும், மேனாட்டார் வழிக்கும் உள்ள ஒற்றுமைகளை ஸ்வாமிகள் விளக்கிக்கொண்டு வந்தார்கள். அவர் கூறிய விளக்கங்களைக் கல்லூரியிலிருந்து ஒரு தூரதிருஷ்டிக் கண்ணாடியை வரவழைத்து மேலும் தெளிவுப்படுத்தினார்கள். வான சாஸ்திரங்களின் நுணுக்கங்களை ஸ்வாமிகள் தெளிவு படுத்தியதைக் கண்டு அந்த இரு விஞ்ஞானிகளும் மிகவும் வியப் படைந்தனர். சர்வ கலாசாலைப் படிப்பு இல்லாமலேயே இப் பயிற்சிகளெல்லாம் ஸவாமிகளுக்கு எவ்விதம் ஏற்பட்டன என்று அவர்கள் பெரிதும் வியப்பை அடைந்து, தாங்கள் சர்வகலாசாலை யின் உயர்தர பட்டதாரிகள் என்னும் பெருமையை மறந்த வர்களானார்கள். அன்று முதல் ஐயர் பல தடவைகள் மடத்திற்கு வந்து போய்க்கொண்டிருந்தார். ஸ்வாமிகளிடம் உரையாடுவதே தமது வாழ்க்கையின் லக்ஷியங்களில் சிறந்ததென அவர் மதித்தார்.

ஸ்ரீ பி. வி. மாணிக்க நாயக்கர் சம்ஸ்கிருதத்தையும் பிறமொழி களையும் தமிழ் எழுத்துக்களைக் கொண்டே எளிதாக உச்சரிக்கவும்

எழுதவும் ஓர் நூதன முறையைக் கண்டுபிடித்து, அதை ஓர் புத்தக வடிவமாகவும் வெளியிட்டிருந்தார். ஸ்வாமிகள் அவரது அந்த முயற்சியை வெகுவாகப் பாராட்டி, அந்தப் புத்தகத்திற்கு ஓர் ஸ்ரீமுகமும் கொடுத்திருந்தார்கள். நாயக்கர் வெளியூர்கள் செல்லும்போதெல்லாம் தமது நூதன முறையைப்பற்றிக் கற்றவர்களின் கூட்டங்களில் பேசி, இந்த முறையைப் பின்பற்றும்படி யாவரையும் கேட்டுக் கொள்வதுண்டு; இது சம்பந்தமாய் நாயக்கர் தஞ்சையில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும்போது, ஸ்வாமிகள் தம் ஆராய்ச்சிக்கு அநுக்ரஹம் செய்துள்ளமையையும் விளம்பரப் படுத்தினர்.

ஆந்திர ஜமீன்தாரின் அன்பளிப்பு.

விசாகப்பட்டினம் ஜில்லா ஷோர்முகம்மதுபுரம் ஜமீன்தார் ராஜா ஏ. வி. ஜெக்காராவ் என்பவர் விசாகையில் ஓர் வான சாஸ்திர ஆராய்ச்சி நிலையத்தைப் பல லக்ஷ ரூபாய்கள் செலவிட்டு நிறுவியிருந்தார். அவர் உலகம் முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்து, பல வான சாஸ்திரிகளைச் சந்தித்து அவர்கள் மூலம் அக்கலையின் விசேஷ நுட்பங்களை அறிந்து, அவைகளை நம் நாட்டிற்குப் பயன்படும்படி செய்யும் தொண்டை மேற்கொண்டிருந்தார். ஒரு சமயம் அவர் ஸ்வாமிகளைத் தரிசிக்க வந்தார். வான சாஸ்திரத்தில் ஸ்வாமிகளுக்கு இருக்கும் ஞானத்தைக் கண்டு அவர் வியப்படைந்து, அவர் இத்தாலியில் பல்லாயிரம் ரூபாய்கள் கொடுத்து வாங்கிய சுமார் நான்கடி நீளமும், ஆறங்குல குறுக்களவுமுள்ள மிகவும் நுட்பமான தூரதிருஷ்டிக் கண்ணாடி ஒன்றை ஸ்வாமிகளின் ஆராய்ச்சிக்காக அளித்தார்.

பிற மதங்களில் சமதிருஷ்டி.

கடவுளை ஒப்புக்கொண்ட மதம் எந்த மதமாக இருந்தாலும் ஸ்வாமிகளுக்கு அதனில் நல்ல மதிப்புண்டு. அந்த அந்த மதத்தினர் அவரவர்கள் மதத்திலிருந்துகொண்டே கடவுளை வழிபடவேண்டுமென்பது ஸ்வாமிகளின் அபிப்பிராயமாகும். பலர் ஸ்வாமிகளின் பரந்த நோக்கத்தையும், சகிப்புத் தன்மையும் நேரில்கண்டும் கேள்வியுற்றுமிருந்தனர். ப்ரம்மஞான சபையைச் சேர்ந்த ஸ்ரீ ஜினராஜ தாஸர் ஸ்வாமிகளை ஒருமுறை தரிசித்து உலக மதங்களைப்பற்றி விரிவாக உரையாடி, ஸ்வாமிகளின் பரந்த நோக்கங்களைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார்.

சங்கீதத்திலுள்ள சாஸ்திரீயமான அம்சங்களைச் சுவைப்பதில் ஸ்வாமிகளுக்கு இணையாக எவரையும் கூறமுடியாது. பெரிய வித்வான்கள் மடத்திற்கு வந்து கச்சேரிகள் நடத்தும் பொழுதெல்லாம் அவர்கள் பாடும் கீர்த்தனைகளின் பொருள்களிலும், ராகம், தாளம் இவைகளின் நுட்பங்களிலும், ஸ்வாமிகள் தமது கவனத்தைச் செலுத்தி, வித்வான்கள் வியப்படையும்படியாகப் பல கேள்விகளைக் கேட்டுத் தம் சந்தேகங்களையும் அவர்களிடம் தெரிவிப்பதுண்டு. தெலுங்கு மொழியில் ஸ்வாமிகளுக்கு இருக்கும் பயிற்சியினால் ஸ்ரீ தியாகையர் முதலியவர்களுடைய கீர்த்தனைகளின் பொருள்களை ஸ்வாமிகள் வித்வான்களுக்கு எடுத்துக் கூறுவார்கள். பொருளை அறிந்தே கீர்த்தனைகளைப் பாடவேண்டுமென்றும், ஆகையால் வித்வான்கள் தமிழ், தெலுங்கு, சம்ஸ்கிருதம் ஆகிய இம்மூன்று மொழிகளையாவது நன்கு கற்கவேண்டுமென்றும், பழைய காலத்தில் வித்வான்கள் இவ்விதம் பல பாஷைகளைக் கற்று வந்திருந்தார்களென்றும் ஸ்வாமிகள் அடிக்கடி வற்புறுத்திக் கூறுவர். ஸ்ரீ சாமா சாஸ்திரிகள், ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர், இவர்களின் கிருதிகள் வித்வான்களிடையில் அதிகமாகப் பழக்கத்தில் இல்லாததைக் கண்டு, தம்மிடம் வரும் வித்வான்களை அவ்விருவருடைய சாகித்தியங்களையும் பாடம் செய்து கொள்ளும்படி ஸ்வாமிகள் கூறுவதுமுண்டு.

சங்கீதக் கலைக்கு ஆதரவு.

அக்காலத்தில் சங்கீத வித்வான்களும், கதாகாலக்ஷேபங்கள் செய்வதில் ஈடுபட்டிருந்த பாகவதர்களும் ஸ்வாமிகள் முன்னிலையில் தங்கள் கச்சேரிகளையும், கதா காலக்ஷேபங்களையும் நிகழ்த்தி அவர்களின் ஆசியைப் பெறுவதை ஒப்பற்ற பெருமையாகக் கருதிவந்தார்கள்.

மகா வைத்தியநாத ஐயரின் முக்கிய சிஷ்யரும், ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் சிஷ்ய பரம்பரையில் வந்தவரும், பல மாணவர்களுக்குக் குருவாக அமைந்திருந்தவருமான உமையாள்புரம் சுவாமிநாதையர் அக்காலத்தில் கும்பகோணத்தில் தங்கியிருந்தார். அவர், அநேகமாக ஒவ்வொரு நாளும் ஸ்வாமிகளைத் தரிசிக்க வருவார். அவரிடம் ஸ்வாமிகள் சங்கீதக் கலையைப் பற்றிச் சர்ச்சைகள் பல செய்வதுண்டு. ஸ்வாமிகள் அவருக்கு 'நாதானுபவ ஸாரக்ஞ' என்னும் பட்டத்தை அளித்தார்கள். திருக்கோடி காவல் கிருஷ்ண

ஐயர் ஒரு முறை மடத்திற்கு வந்து ஸ்வாமிகள் முன்னிலையில் பிடில் வாசித்துத் தமது அபூர்வமான வாசிப்பினால் ஸ்வாமிகளை மகிழச் செய்தார்.

மாயவரம் வீணை வைத்தியநாத ஐயர் தம் புதல்வர்கள் சபேச ஐயருடனும், கிருஷ்ணமூர்த்தியுடனும் அடிக்கடி ஸ்வாமிகளைத் தரிசிக்க வருவதுண்டு. சபேச ஐயர் மிகவும் அபூர்வமாக வீணை வாசிப்பார். தமது மெல்லிய குரலுடன் வீணையின் நாதத்தை இணைத்து அவர் கச்சேரி செய்வதைக் கேட்பவர்களெல்லாம் பரவசமடைவார்கள். அம்பிகையின் பேரில் அவர் கீர்த்தனைகளைப் பாடி வீணை வாசிக்கும்போது ஸரஸ்வதியின் மேதாவிலாஸம் அவரிடம் காணப்படும். தம் புதல்வர் சபேச ஐயர் கச்சேரிகள் செய்ய முற்பட்ட பிறகு, வைத்தியநாத ஐயர் கச்சேரி செய்வதை நிறுத்திவிட்டார். ஒரு நாள் ஸ்வாமிகள் முன்னிலையில் சபேச ஐயர் மிகவும் அபூர்வமாக வீணை வாசித்துக்கொண்டிருந்தார். வைத்தியநாத ஐயரும் அவர் முன் உட்கார்ந்துகொண்டு தம்மை அறியாமலேயே. 'சபாஷ் என் அப்பனே!' எனக் கூறினார். அப்பொழுது ஸ்வாமிகள் வைத்திநாத ஐயரைப் பாத்துப் புன்னகையுடன், 'சபை நடுவில் நீங்கள் உங்கள் புதல்வனுடைய ஞானத்தை வெளிப்படையாகப் புகழலாகாது; மற்றவர்கள் புகழ்ந்தால்தான் தங்கள் புதல்வனுக்குப் பெருமை ஏற்படும். தாங்கள் மட்டும் தங்கள் மனதிற்குள்ளேதான் புதல்வன் கலைத்திறனை அனுபவிக்க வேண்டும்' எனச் சொன்னார்கள், அப்பொழுது வைத்திநாத ஐயர் ஸ்வாமிகளை வணங்கி, 'வயதான எனக்கு இந்தச் சிறிய விஷயம் புலனாகவில்லை. இனி மகா சந்நிதானத்தின் உத்திரவுப்படி நடந்துகொள்ளுகிறேன்' எனத் தெரிவித்துக்கொண்டார்.

அக்காலத்தில் அடிக்கடி நாகராஜ ராவின் புல்லாங்குழல் கச்சேரி ஸ்வாமிகளின் சந்நிதானத்தில் நடைபெறுவதுண்டு; கச்சேரிக்குப் பக்கவாத்யமாக செம்மங்குடி நாராயணஸ்வாமி ஐயர் பிடில் வாசிப்பார்; சாக்கோட்டை ரங்கு ஐயங்கார் மிருதங்கமும், உமையாள்புரம் சுந்தரம் ஐயர் கடமும் அநேகமாக இதில் சேர்ந்திருக்கும். அப்பொழுதெல்லாம் வெகுநேரம் ஸ்வாமிகள் கச்சேரிகளில் அமர்ந்திருந்து ரசமான கட்டங்களில் வித்வான்களை உற்சாகப்படுத்துவதுண்டு.

திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்திரிகள் கும்பகோணத்திலேயே வசித்து வந்ததால் அவருடைய கதாகாலக்ஷேபங்களும் அக்காலத்தில் அடிக்கடி மடத்தில் நடைபெறுவதுண்டு. ஒலிபெருக்கி இல்லாத அந்த நாளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவரது கதையைக் கேட்டு மகிழ்ச்சியுறுவார்கள். ரசிகர்களின் தன்மையை அறிந்து அவர்களின் ருசிக்குத் தக்கவாறு பேசுவதிலும், பாடுவதிலும் சாஸ்திரிகளுக்கு இணை வேறு எவரையும் கூற முடியாது. அவர் கதைக்கு அந்த நாளில் வித்வான் அழகநம்பிப்பிள்ளையும், அவருக்குப்பின் கோதண்டராம ஐயரும் மிருதங்கம் வாசித்து வந்தார்கள். இனிய சாரீரம் படைத்த குஞ்சு என்னும் சௌராஷ்டிரரும், நல்லூர் விசுவநாத ஐயரும், மாதிரிமங்கலம் நடேச ஐயரும் சாஸ்திரிகளுக்குப் பின்பாட்டுக்களைப் பாடிவந்தனர். சாஸ்திரிகள் தாம் சங்கரரது சரித்திரத்தைக் கதாகாலக்ஷேபம் செய்யும் முறையில் கீர்த்தனங்களாகவும், வசனங்களாகவும் சிறந்த வித்வான்களின் உதவியைக் கொண்டு அமைத்திருப்பதாயும், அதனை ஸ்வாமிகளும் கேட்டருளவேண்டுமென்றும் விஞ்ஞாபித்துக் கொண்டார். ஸ்வாமிகளும் அவரது கோரிக்கையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு, மடத்தில் சங்கர விஜயத்தைக் காலக்ஷேபம் செய்ய அனுமதித்தார்கள். சாஸ்திரிகள் ஏழு பாகங்களாக அக்கதையைப் பிரித்து, ஏழு நாட்கள் மடத்தில் பிரவசனம் செய்தார். சாஸ்திரிகள் மிகவும் அருமையாகச் செய்த இந்தக் கதா காலக்ஷேபத்திற்கு வெளியூர்களிலிருந்தும், உள்ளூரிலிருந்தும் ரசிகர்கள் ஆயிரக்கணக்காகக் கூடி, அதுவரை யாவராலும் நிகழ்த்தப்படாத அந்தக் கதையைக் கேட்டு மகிழ்ந்தனர். ஒவ்வொரு நாளும் ஸ்வாமிகள் முழு நேரமும் கதையில் அமர்ந்திருந்து சாஸ்திரிகளைப் பெருமைபடுத்தினார்கள். சாஸ்திரிகளது மேதையை மெச்சி முடிவு நாளன்று அவருக்குப் பீதாம்பரம், தோடா முதலான சன்மானங்களை ஸ்வாமிகள் செய்து அவரைக் கௌரவித்தார்கள்.

மேலும் அந்த நாளில் கதாகாலக்ஷேபங்கள் செய்வதில் மிகப் பிரசித்தியுடன் விளங்கிய சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர், தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதர், பாலக்காடு அனந்தராம பாகவதர், ஹரிகேசவநல்லூர் முத்தையா பாகவதர், கல்லிடைக்குறிச்சி வேதாந்த பாகவதர், மாங்குடி சிதம்பர பாகவதர், பழனி சுப்பிரமண்ய பாகவதர், ஸ்ரீரங்கம் சடகோபாச்சாரியார் முதலான

வித்வான்கள் ஸ்வாமிகள் சந்நிதானத்தில் கதாகாலக்ஷேபங்கள் செய்து ஸ்வாமிகளால் கௌரவிக்கப்பட்டு, அவர்களிடமிருந்து உயர்ந்த சன்மானங்களையும் அடைந்திருக்கிறார்கள். தம் இளம் பிராயத்திலேயே இத்துறையில் பிரசித்தி அடைந்த சூலமங்கலம் சௌந்தரராஜபாகவதரையும் இந்த வரிசையில் சேர்த்துக் கொள்ளவேண்டும். அந்த நாளில் கீதாப் பிரவசனம் செய்வதில் பிரக்யாதி பெற்றிருந்த மகா வித்வான் திருவையாறு லக்ஷ்மணாச்சாரியாரும் ஸ்வாமிகளது சந்நிதானத்தில் கதாகாலக்ஷேபம் செய்து ஸ்வாமிகளது புகழுக்குப் பாத்திரமாகி அவர்களிடம் ஒப்பற்ற சன்மானங்களைப் பெற்றிருக்கிறார். ஹரிகதா காலக்ஷேபங்களுக்குப் பிறப்பிடமான மகாராஷ்டிர தேசத்திலிருந்து பாகவதர் ஒருவர் தமது கோஷ்டியுடன் கும்பகோணத்திற்கு விஜயம் செய்திருந்தார். அவர் சிவாஜியின் குருவான ஸமஸ்த ராமதாஸ் சுவாமிகளின் சிஷ்ய பரம்பரையைச் சார்ந்த மோர்காம்கர் பீடத்தின் மடாதிபதி ஆவர். அவர் நம் ஸ்வாமிகளைத் தரிசித்து மடத்திலும் மூன்று கதாகாலக்ஷேபங்களைச் செய்தார். அந்தக் கதைகள் மகாராஷ்டிர பாஷையில் அமைந்திருந்த போதிலும் பாட்டுக்களும், வசனங்களும் உள்ளத்தை உருக்குமாறு பக்தி ரசத்துடன் அமைந்திருந்ததினால் மக்கள் அவற்றை நன்கு ரசித்தார்கள்.

சங்கீத மும்மணிகளுள் ஸ்ரீ சாமா சாஸ்திரிகளின் கிருதிகளை அதிகமாகப் பாடம் செய்த ஓர் மத்துவப் பெரியார் ஸ்வாமிகளைத் தரிசிக்க ஒரு முறை வேலூரிலிருந்து வந்திருந்தார். அம்பிகையின் பேரில் அமைந்துள்ள அந்தக் கிருதிகளை முறைப்படி இனிய சாரீரத்துடன் அவர் பாடியதை ஸ்வாமிகள் கேட்டு ஆனந்தம் அடைந்து அவரைப் பதினைந்து நாட்கள் மடத்திலிருக்கச் செய்து ஒவ்வொரு நாளும் பூஜா காலத்தில் சந்நிதியில் அவரைக்கொண்டு அந்தக் கீர்த்தனங்களைப் பாட உத்திரவிட்டார்கள். சாமா சாஸ்திரிகளின் கீர்த்தனங்களைப் பாடக் கேட்பதில் ஸ்வாமிகளுக்குத் தனிப்பட்ட அவா உண்டு.

மதுரையிலிருந்து சங்கீத வித்வான் ஒருவர் ஸ்வாமிகளைத் தரிசிக்க ஒரு முறை வந்திருந்தார். அவர் பெயர் கிருஷ்ண ஐயங்கார். அவர் ஸ்வாமிகளிடம் தமது வித்தையை வெளிப்படுத்த ஆவல் கொண்டார். ஸ்வாமிகளும் சுருதி பக்கவாத்யங்கள் எதுவுமில்லாமலேயே பாடும்படி அவருக்குக் கட்டளையிட்டார்கள். அவர் பியா

கடை ராகத்தை ஒரு மணி நேரம் ஆலாபனம் செய்து பாட, ஸ்வாமிகள் இன்பத்துடன் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இந்த வித்வான் அந்த ராகத்தைப் பாடுவதில் நிபுணரென்றும் அவருக்குப் பியாகடை கிருஷ்ண ஐயங்காரேன ஒரு சிறப்புப் பெயர் உண்டென்றும் பின்னர் தெரியவந்தது.

கோனேரிராஜபுரம் வைத்தியநாத ஐயரும் ஸ்வாமிகள் முன்னிலையில் கச்சேரிகள் செய்து ஸ்வாமிகளது பாராட்டைப் பெற்றிருக்கிறார். வாளாடி கிருஷ்ண ஐயர் கச்சேரியும் பலமுறை ஸ்வாமிகள் சந்நிதானத்தில் நடைபெறுவதுண்டு. மைசூர் பிடாரம் கிருஷ்ணப்பா, வீணை சேஷண்ணா, வீணை சுப்பண்ணா முதலான மகா வித்வான்கள் அக்காலத்தில் தஞ்சைப் பக்கம் வரும்போதெல்லாம் ஸ்வாமிகளைத் தரிசித்து மடத்தில் கச்சேரிகள் செய்துவிட்டுப் போவது வழக்கம். கோட்டு வாத்யம் என்னும் மகாநாடக வீணையைக் கையாளுவதில் மிகவும் பிரசித்தியாக அந்நாளில் விளங்கியவர் சகாராம் ராயர் என்பவராவர். அவர் திருவிடைமருதூரில் வசித்துவந்தார். அவரும் ஸ்வாமிகளின் முன்னிலையில் பலமுறை கச்சேரிகள் செய்து ஸ்வாமிகளிடமிருந்து சன்மானங்களைப் பெற்றிருக்கிறார். பம்பாய் காந்தர்வ மகா வித்யாலயத்தின் அதிபர் பண்டித விஷ்ணு திகம்பர் என்பவர் அக்காலத்தில் ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் ஓர் மகா வித்வானாக விளங்கிவந்தார்; அதனுடன் அவர் ஓர் உயரிய பாகவதோத்தமருமாவர். அவர் தமது பெரிய பக்த கோஷ்டியாருடன் ஸ்வாமிகளைத் தரிசித்து அவர்களின் முன்னிலையில் வடநாட்டுச் சம்பிரதாயமான பஜனையைச் செய்தார். பக்தி பரவசத்துடன் அமைந்திருந்த அந்த பஜனையை ஸ்வாமிகள் வெகுவாகப் பாராட்டினார்கள்.

பெண் வித்வான்கள் கச்சேரிகள் செய்யும்பொழுதோ, தனிமையில் பாடும்பொழுதோ ஸ்வாமிகள் நேரில் அமர்ந்திருந்து கேட்பது வழக்கமில்லை. அவ்வாறு கேட்பது அவர்களது ஆச்ரம தருமத்திற்கு விரோதமாகையால், பெண்மணிகளின் சங்கீதக் கச்சேரிகள் மடத்தில் நிகழ்வதற்கு அதிகச் சந்தர்ப்பம் வாய்த்ததில்லை. ஆயினும் வீணை தன அம்மாள், பெங்களூர் நாகரத்தினம் அம்மாள் இவர்களைப்போன்ற சில வித்வம்ஸினிகள் ஸ்வாமிகளது பிரத்யேக அனுமதியைப் பெற்று மடத்தில் கச்சேரிகள் செய்துள்ளார்கள். இவர்களைப் பூஜா காலத்தில் ஸ்வாமி ஸந்நிதானத்தில் இருந்து

தங்கள் வித்தையை அர்ப்பணம் செய்யும்படி ஸ்வாமிகள் உத்திர விடுவார்கள். அப்பொழுது ஸ்வாமிகள் பூஜையிலமர்ந்திருப்பார்களாதலால் ஸ்வாமிகள் முன்னிலையிலும் இந்தத் தெய்வீகக் கலையை வெளிப்படுத்த அவர்களுக்கும் வாய்ப்பு நேருவதுண்டு. மற்றும் சில பெண்மணிகளும் இவ்வாய்ப்பை அடைந்துள்ளார்கள். இவ்வரிசையில் இக்கால வித்வம்ஸினீகளான ஸ்ரீமதி பட்டம்மாளையும், ஸ்ரீமதி எம். எஸ். சுப்பு லக்ஷ்மியையும் குறிப்பிடலாம். அவர்களும் ஸ்வாமிகளின் சந்நிதானத்தில் தங்கள் கலையை அர்ப்பணம் செய்து அவர்களின் ஆசியைப் பெற்றுள்ளார்கள்.

இக்கால சங்கீத வித்வான்கள் பலரும் ஸ்வாமிகளின் முன்னிலையில் கச்சேரிகள் செய்து அவர்களது ஆசியைப் பெற்றுள்ளார்கள். அவர்கள் எல்லோரைப் பற்றியும் இங்குக் குறிப்பிடுவதென்ருல் தற்கால சங்கீத வித்வான்களின் பெயர்கள் அடங்கிய பெரிய தோர் அட்டவணையாகவே இப்பகுதி அமைந்துவிடும். எல்லோர் மனதையும் குளிரச் செய்யும் வகையில் ஹாஸ்யமாகவும், அர்த்த புஷ்டியுடனும் ஸ்வாமிகள் வார்த்தைகள் சொல்லும் திறன் படைத்தவர்களாதலால் ஸ்வாமிகளது முன்னிலையில் பெரிய வித்வான்களின் சங்கீதக் கச்சேரிகள் நடைபெறும்பொழுது ஸ்வாமிகளது திருவாக்கிலிருந்து அவ்வப்போது வரும் சொற்களை யாவரும் ஆவலுடன் நோக்கியிருப்பர்.

இசையில் சமஸ்கிருத இசை, தெலுங்கு இசை, கன்னட இசை, தமிழ் இசை என்ற பாகுபாடுகள் ஸ்வாமிகளது உள்ளத்தில் என்றுமே தோன்றியதில்லை. முத்துஸ்வாமி தீக்ஷிதர் கம்பீரமாகச் சம்ஸ்கிருதத்தில் பாடியதும், இராமதாஸ் ஸ்வாமிகள், ச்யாமா சாஸ்திரிகள், தியாகய்யர் இவர்கள் அழகிய தெலுங்கில் பாடியதும், புரந்தர தாஸர் இனிய கன்னடத்தில் பாடியதும், அருணுசல கவிராயர், முத்துத்தாண்டவர், மாரிமுத்தா பிள்ளை, கோபால கிருஷ்ண பாரதி, வேதநாயகம் பிள்ளை முதலானேர் தேன் மொழியான தமிழ் மொழியில் பாடியதும் ஒரே கடவுளைக் குறிப்பிடுவதால் இவர்கள் இயற்றிய கீர்த்தனங்கள் யாவற்றையும் எவ்வித ஏற்றத் தாழ்வுமில்லாமல் ஸ்வாமிகள் ரசித்துவருவார்கள். பக்தர்கள் உள்ளம் உருகிப் பாடியது எந்த மொழியில் இருந்தாலும் அவை யாவும் ஏற்றுக்கொள்ளத் தக்கவைதாம் என்பதே ஸ்வாமிகளது திருவுள்ளத்தின் சம்மதமாகும். வேதநாயகம் பிள்ளை கீர்த்

தனங்களில் ஸ்வாமிகளுக்கு ஒரு விசேஷ பற்று உண்டு. தமிழ்க் கீர்த்தனங்கள் பல பாடியுள்ள பாபநாசம் சிவனுக்கு 1950-ஆவது ஆண்டில் நடைபெற்ற அவரது சஷ்டியப்த பூர்த்தியின்பொழுது 'சிவபுண்யகான மணி' என்னும் பட்டத்தை ஸ்வாமிகள் அளித்துத் தமிழ் இசையைப் பெருமைபடுத்தியுள்ளார்கள்.

தக்ஷிணாமூர்த்தி பிள்ளை மிருதங்க வாத்யத்துடன் கூடின காரைக்குடி சகோதரர்களின் வீணை வாசிப்பை தேவகானத்திற்கே ஒப்பிடல் வேண்டும். இந்தக் கோஷ்டியின் சங்கீத வினிகை இரண்டொரு முறை ஸ்வாமிகளின் சந்நிதானத்தில் நடைபெற்றதுண்டு. இந்த வித்வான்களின் திறனை ஸ்வாமிகள் புகழ்ந்து அவர்களைப் பாராட்டியுள்ளார்கள். ஸ்வாமிகள் செட்டி நாட்டில் யாத்திரை செய்தபொழுது தக்ஷிணாமூர்த்தி பிள்ளை பக்தி மேலீட்டினால் ஸ்வாமிகளின் பேரில் சில பாட்டுக்களைக் கவனம் செய்து அவற்றை எழுதி மௌனத்துடன் ஸ்வாமிகளிடம் சமர்ப்பணம் செய்தார். அவற்றைத் தாம் படிக்க எண்ணம் கொள்ளவில்லையென்றும், ஸ்வாமிகளது திருக்கண்களினால் அவற்றைப் பார்வையிட்டாலே போதுமென்றும் அவர் மேலும் விண்ணப்பித்துக்கொண்டார். புகழை விரும்பாத அவரது தூய எண்ணத்தைப் பற்றி ஸ்வாமிகள் பக்தர்கள் பலரிடம் தெரிவித்து அவரைப் பெருமைப் படுத்தினார்கள். மைசூரைச் சார்ந்தவரும், வீணை வாசிப்பதில் மிகப்புகழ் பெற்றவருமான வேங்கடகிரியப்பா என்னும் வித்வான் ஸ்வாமிகள் சந்நிதானத்தில் சில கச்சேரிகளை நடத்தியிருக்கிறார். அவருக்கு ஸ்வாமிகள் 'வைணிகசிகாமணி' என்னும் பட்டத்தையும், இரட்டைச் சால்வை, இரட்டைத் தோடா இவைகளையும் பரிசாக அளித்தார்கள்.

மடத்திற்கு ஆஸ்தான சங்கீத வித்வான் ஒருவரை நிரந்தரமாக நியமனம் செய்யவேண்டுமென ஸ்வாமிகள் எண்ணம் கொண்டு, ஸ்ரீவாஞ்சியம் இராமச்சந்திர ஐயர் என்ற இளம் வித்வான் ஒருவரை 1952-ல் அப்பதவியில் அமர்த்தி, அவருக்கு 'ஆஸ்தான கீர்த்தனமணி' என்ற படத்தையும் சூட்டியருளினார்கள்.

சங்கீத வித்வான்களில் பிராயத்திலும், திறமையிலும் இன்று தலைசிறந்து விளங்குகிறவர் மைசூர் வாசுதேவாசாரியார் ஆவர். இவர் கன்னடத்திலும், சம்ஸ்கிருதத்திலும் சிறந்த கீர்த்தனைகளை

இயற்றும் வன்மை பொருந்தியவர். அவ்விரண்டு பாஷைகளி லும் இவர் நல்ல பாண்டித்யம் அடைந்து சங்கீத சாஸ்திரத்தி லும், புராணங்களிலும் ஆராய்ச்சிகள் பல நடத்தியுள்ளார். இப்பொழுது சென்னையில் வசித்து வரும் இவர் காஞ்சிபுரத்திற் குச் சில சமயங்களில் சென்று ஸ்வாமிகளைத் தரிசித்துச் சங்கீத சம்பந்தமாகவும், தாம் நிகழ்த்தியுள்ள ஆராய்ச்சிகளைப் பற்றியும் ஸ்வாமிகளிடம் உரையாடி வந்ததோடு தாம் இயற்றியுள்ள கீர்த்தனங்களைப் பாடியும் காட்டியுள்ளார். இவரிடம் ஸ்வாமி களுக்கு மிகுந்த மதிப்பு உண்டு. இந்த நூற்றாண்டில் சங்கீதத் தில் இவருக்கு நிகரான வித்வான் வேறு எவரும் இருந்ததில்லை யென ஸ்வாமிகள் பக்தர்களிடம் கூறியிருக்கிறார்கள்.

கர்னாடக சங்கீதத்திற்குத் தனிச்சிறப்பைத் தருவது நாதஸ்வர வாத்தியம். பாமரர்களும் அனுபவித்து ரசிக்கக்கூடிய அந்த வாத்தியத்தைக் கையாளுவது மிகவும் கடினம். பல பெரிய சங்கீத வித்வான்கள்கூட நல்ல நாதஸ்வர வாசிப்பைக் கேட்டுத் தங்களது ஞானத்தைப் பெருக்கிக்கொள்வது வழக்கம். இந்த வாத்தியம் திமிரி என்னும் பெயருடன் சிறிய அளவிலும், மற்றும் நடுத்தர அளவிலும், பாரி என்னும் பெயருடன் பெரிய அளவிலும் அமைந்துள்ளன. திமிரியும், பாரியும் சில குறிப்பிட்ட தேவஸ்தானங்களில் கையாளப்படுகின்றன. சுமார் 15 ஆண்டு களுக்கு முன்னர் எல்லா நாதஸ்வரக்காரர்களாலும் கையாளப் பட்டு வந்த நடுத்தர அளவுள்ள வாத்தியமானது தற்காலம் மறைந்து வருகிறது; வித்வான்கள் வாத்தியத்தின் நீளத்தைத் தங்கள் சௌகரியத்தை முன்னிட்டு அதிகரித்துக் கொண்டுவிட் டார்கள். பூர்வகாலந்தொட்டு மடத்தில் வாசித்து வரும் நாதஸ் வரம் சுமார் 15 அங்குல நீளமுள்ள திமிரி வாத்தியமேயாகும். இந்த வாத்தியத்தைச் சென்ற நூற்றாண்டில் சுப்ரமண்யம் என் னும் ஒரு மகா வித்வான் மடத்தில் வாசித்து வந்தார். அக்காலத் தில் மிருதங்கமே திமிரி நாயனத்திற்குப் பக்க வாத்தியமாக அமைந் திருந்தது. பூஜா காலத்தில் கும்பகோணம் மடத்தின் வெளித் திண்ணையில் அவர் அமர்ந்து நாதஸ்வரம் வாசிக்கும்போது தெருவில் நடமாடும் ஜனங்கள் அந்த வாத்தியத்திலிருந்து வெளிவரும் அபூர்வ நாதத்தையும், சுத்தமான சங்கீதத்தையும் அனுபவித்து மெய்ம்மறந்து மடத்தின் வாயில்முன் பெருங் கூட்டமாகக் கூடி

விடுவார்களென முதியவர்கள் கூறியுள்ளார்கள். நமது ஸ்வாமிகள் காலத்திலும் மிகுந்த மேதையாக விளங்கி இளமையிலேயே மறைந்த நாராயணன் என்னும் வித்வானும், பின்னர் கும்பகோணம் கந்தஸ்வாமி நாதஸ்வரக்காரரும், அவர் குமாரர் இரத்தினமும், கும்பகோணம் சின்னையாவும் இந்த வாத்யத்தை நன்கு கையாண்டு வந்தார்கள். இன்றும் ஸ்வாமிகள் நித்ய பூஜைகளில் இந்தச் சிறந்த வாத்யமானது வாசிக்கப்பட்டு வருகிறது.

1934-ஆவது ஆண்டில் ஸ்வாமிகள் காசிக்கு விஜயம் செய்தபொழுது அங்கு ஓர் ஹிந்துஸ்தானி சங்கீத மகாநாடு நடைபெற்றது. அந்த மகா நாட்டிற்கு மடத்தின் நாதஸ்வர வித்வானையும், அழைத்திருந்தார்கள். ஸ்வாமிகளின் அனுமதியின் பேரில் அந்த மகாநாட்டில் அந்த வித்வான் திமிரி வாத்யத்தில் சில ஹிந்துஸ்தானி அபூர்வ ராகங்களை வாசித்ததைக் கேட்ட அங்குக் கூடியிருந்த வடநாட்டு வித்வான்கள் யாவரும் மிகுந்த ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். நம் நாட்டில் தற்காலம் மிகப் பிரசித்தியாயுள்ள வித்வான்கள் பலரும் 40 ஆண்டுகளுக்கு முன்னிருந்த பிரபல வித்வான்களும் ஸ்வாமிகளின் முன்னிலையில் நாதஸ்வரம் வாசித்து அவர்களது ஆசியைப் பெற்றுள்ளார்கள். ஸ்வாமிகளின் யாத்திரையுடன் வந்துகொண்டிருக்கும் நாதஸ்வர கோஷ்டியைச் சார்ந்த சுமார் ஆறு குடும்பங்களைச் சென்ற 40 ஆண்டுகளுக்கு மேலாக ஸ்வாமிகள் அன்புடன் ஆதரித்து வருவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

---


8. இருபத்தோராண்டு விஜய யாத்திரை. (1919—1939 தொடக்கம்)

நம் நாட்டிலுள்ள திவ்ய ஸ்தலங்களைத் தரிசிக்கவும், திவ்ய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்யவும், சிஷ்யர்களுக்கு ஸத் உபதேசங்களைச் செய்யவும் ஸ்வாமிகள் 1919-ஆவது வருடம் மார்ச்சு மாதம் சிவராத்திரி அமாவாசை அன்று கும்பகோணத்திலிருந்து யாத்திரை புறப்பட்டார்கள், இந்த யாத்திரையில் சுமார் 200 பேர்களுக்கு மேற்பட்ட சிப்பந்திகளும், 30 மாட்டுவண்டிகளும் மற்றும் யானை, குதிரை, ஒட்டகம், பசு முதலான கால்நடைகளும் தந்தச் சிவிகை

முதலான விருதுகளும் ஸ்வாமிகளைப் பின் தொடர்ந்தன. அன்று காலை ஸ்வாமிகள் மடத்தின் பூஜா கிருகத்தின் தென் பிரகாரத்தி லுள்ள விநாயகரை வணங்கி, மடத்தின் தோட்டத்தில் சமாதி யடைந்திருக்கும் மூன்று பூர்வாசார்யர்களின் பிருந்தாவனங்களை யும் தரிசித்து, அந்தணர்களுக்கு யாத்திரா தானம் வழங்கிக் காவிரி நதியின் பகவத் படித்துறை என்னும் ஸ்நான கட்டத்திற்கு மேற் புறமாகப் படிக்கட்டுகளுடன் புதிதாக அமைக்கப்பெற்ற தருமக் கட்டிடத்தில், முதல் நாள் சந்திர மௌளீச்வரர் பூஜையைச் செய் தார்கள். (அந்தக் கட்டிடம் டிபுடி கலெக்டர் வி. துரைசாமி ஐயரின் புதல்வர் வி. டி. ஸ்வாமிநாத ஐயரின் முயற்சியினால் கட்டப் பெற்றதாகும்.) அன்று ஸ்வாமிகளுக்குப் பிக்ஷை பாத பூஜை முதலியவைகளை ஸ்ரீ ஸ்வாமிநாத ஐயரே செய்து வைத்தார். சுமார் நான்கு மாதங்கள் கும்பகோணத்திலுள்ள பக்தர்கள் ஸ்வாமிகளை அவரவர் இல்லங்களுக்கு வரவழைத்துப் பிக்ஷை, பாத பூஜை முதலான வழிபாடுகளைச் செய்தார்கள்.

வேப்பத்தூரில் வியாஸ பூஜை சாதுர் மாஸ ஸங்கல்பம்.

ஆஷாட (ஆனி அல்லது ஆடி) மாதத்தில் வரும் பூர்ணி மையை வியாஸ பூர்ணிமை எனக் கூறுகின்றோம். வேதாந்த சூத்திரங் கள் இயற்றிய வியாஸ பகவானைக் குறித்து அன்று பூஜை செய்யப்படுகிறது. அவர் உலக ஆசாரியராகக் கருதப்படுகிறார். நம் நாட்டில் இந்தப் பூஜையை அநேகமாகச் சந்நியாசிகளே செய்துவருகிறார்கள். விந்திய மலைக்கு வடக்கே யுள்ள நாட்டில் இந்த நாளைக் குரு பூர்ணமி என்று கூறி, அந்நாளில் ஒவ்வொருவரும் தங்கள் வித்யாகுருக்களை வணங்கி, அவர்களுக்குப் பாத காணிக்கைகள் செலுத்துகிறார்கள். வேத வியாஸர் வேதங்களுக்குச் சாகைகளையும் பிரித்து இயற்றினவர். பிரும்மசூத்திரங்கள் ஜீவப்ரம ஐக்கியத்தைப் போதிக்கின்றன. அந்தச் சூத்திரங்களுக்குச் சங்கரர், இராமாநுஜர், மத்துவர் இம் மூன்று ஆசாரியர்களும் பாஷ்யம் செய்துள்ளார்கள். இம்மூன்று ஆசாரிய புருஷர்களுக்கும் வியாஸபகவானே முதல் ஆசாரியராத லால் அந்த நாளை அத்வைத, விசிஷ்டாத்வைத, த்வைத சம்ப்ரதா யங்களைச் சார்ந்த சந்நியாசிகள் யாவரும் கொண்டாடுவது வழக்கமா யிருக்கிறது.



1919-விஜய யாத்திரை புறப்பட்ட முதல் நாளன்று (சிவராத்திரி)
கும்பகோணம் காவிரிபகவத் கட்டத்தில் நடைபெற்ற பூஜை



1923-தாடங்கப் பிரதிஷ்டை முடிந்தவுடன் திருச்சி ஜில்லா
திருச்செந்துறையில்

காமகோடி மடத்தில் விசேஷ நாட்களில் இது ஒரு முக்கிய நாளாகக் கருதப்படுகிறது. வியாஸ பூஜைக்கென ஒரு தனி மண்டபம் நிர்மாணிக்கப்பெற்று, அந்த மண்டபத்தின் மத்தியில் முழு அக்ஷதை பரப்பிய வெள்ளிப் பீடத்தில் கிருஷ்ண விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்து, அந்த விக்ரகத்தைச் சுற்றிலும் தேவதைகளையும், ரிஷிகளையும் குரு பரம்பரையில் வந்த ஆசாரியர்களையும் எலுமிச்சம் பழங்களில் ஆவாகனம் செய்து, அவர்கள் யாவருக்கும் தனித்தனியே பூஜைகள் நடத்தப்பெறும். கீதை 10-வது அத்யாயம் 37-ஆவது சுலோகத்தில் ஸ்ரீகிருஷ்ண பகவான் தாம் முனிவர்களுள் வேதவியாஸராக விளங்குவதாகக் கூறியிருப்பதற்கிணங்கி, வேத வியாஸருக்கு உரித்தான இந்தப் பூஜையைக் கிருஷ்ண பகவானுக்கே அர்ப்பணம் செய்வது மடத்தின் தொன்று தொட்ட வழக்கம். சுமார் 6 மணி நேரம் நடைபெறும் இந்தப் பூஜை முழுவதையும் ஸ்வாமிகள் தமது திருக்கரங்களினுலேயே செய்து முடிப்பார்கள். பூஜாகாலங்களில் நாட்டின் முக்கியமான தேவலாயங்களிலிருந்து பிரசாதங்களும், ராஜாக்கள், ஜமீந்தார்கள் முதலான பிரமுகர்களிடமிருந்து காணிக்கைகளும் மடத்திற்கு வந்து சேரும். ஆயிரக்கணக்கில் சிஷ்யர்களும் நாட்டின் பல பாகங்களிலிருந்து பூஜையைக் காண்பதற்கெனக் கூடுவார்கள்.

1919-ஆவது வருடத்து வியாஸ பூஜையை கும்பகோணத்திற்குக் கிழக்கே ஐந்து மைல் தூரத்திலுள்ள வேப்பத்தூரில் நடத்தவேண்டுமென்று அந்த ஊர் மகா ஜனங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஸ்வாமிகள் பூஜையை அங்கேயே வெகு விமரிசையாக நடத்தினுர்கள். அந்த ஊரும் காவிரியின் வடகரையில் அமைந்துள்ளதால் ஸ்வாமிகள் தங்குவதற்கு வசதியுடன் இருந்தது. வியாஸ பூஜைக்குப் பிறகு மழைக்கால மாதலால் சந்நியாசிகள் நான்கு மாதங்கள் அதே இடத்தில் தங்கியிருக்க வேண்டுமென்பது நியதி, மழைக் காலத்தில் சந்நியாசிகள் கால் நடையாக யாத்திரை செல்லும்பொழுது பூச்சிகள் முதலான சிறிய ஜீவஜந்துக்கள் அவர்கள் காலிற் பட்டு மரணமடையக் கூடும் என்பதற்காகவும், எவ்வித ஜீவஹிம்சையும் சந்நியாசிகள் செய்யக் கூடாதென்பதற்காகவும், இந்த நியதி ஏற்பட்டுள்ளது. இந்த

நான்கு மாதங்களையும் சாதுர்மாஸம் என்பர். அந்த நான்கு மாதங்களையும் நான்கு பக்ஷங்களாக வைத்துக்கொண்டு, சந்நியாசிகள் ஒரே ஊரில் ஆஷாட பூர்ணமியிலிருந்து இரண்டு மாதங்கள் தங்கிவருவது வழக்கமாயிருக்கிறது. இவ்விதம் தங்குவதைப் பூர்ணமி அன்று சந்நியாசிகள் சங்கல்பமாக ஏற்றுக்கொள்கிறார்கள். இதற்குச் சாதுர்மாஸ சங்கல்பம் எனப் பெயர் ஏற்பட்டிருக்கிறது. வேப்பத்தூர் மகா ஜனங்கள் அந்த இரண்டு மாதங்களிலும் ஸ்வாமிகளின் பரிவாரங்களுக்கும், ஸ்வாமிகளைத் தரிசிக்க வரும் சிஷ்ய கோடிகளுக்கும் ஏராளமான செலவில் தேவையான வசதிகளைச் செய்துகொடுத்தார்கள். அவ்வருடத்து நவராத்திரி பூஜையும் அவ்விடத்திலேயே நடைபெற்றது.

இந்தப் பூஜைகளுக்குப் பிறகு, தஞ்சை ஜில்லாக் கிராமங்களில் யாத்திரை செய்துகொண்டு ஸ்வாமிகள் 1920-ஆவது வருடம் மார்ச்சு மாதம் கும்பகோணத்திற்கு அடுத்த சிறுகளத்தூருக்கு விஜயமானார்கள். அவ்வூர் பெரிய தனவந்தரான கன்னிவாடி ஜமீந்தார் கல்கத்தா என். ஆர். ஐயர் அவர்கள் தம் இல்லத்தில் ஸ்வாமிகளை வரவேற்று, விஜய யாத்திரை தினத்தின் முதல் வருடக் கொண்டாட்டத்தை அவ்வூரில் வெகு விமரிசையாக நடத்திவைத்தார்கள். பிறகு ஸ்வாமிகள் திருவாரூருக்கு எழுந்தருளினார்கள். திருவாரூரில் சிஷ்யர்கள் அவர்களது விஜயத்தை மிகுந்த சிறந்த முறையில் கொண்டாடி ஸ்வாமிகளை வழிபட்டார்கள். அங்கு அவர்கள் தங்கியிருந்த ஒவ்வொரு நாளும் ஸ்வாமிகள் தியாகராஜ ஸ்வாமி ஆலயத்திற்கு ஸ்வாமி தரிசனத்திற்காகச் சென்று வருவார்கள்.

1920-ல் மஹோதய புண்யகாலம்.

1920-ஆவது வருஷம் ஏற்பட்ட மஹோதய புண்ய காலத்திற்கு ஸ்வாமிகள் வேதாரண்யத்திற்கு விஜயம் செய்து, சமுத்திர ஸ்நானங்களைச் செய்து கொண்டு, அவ்விடம் ஒரு வாரம் தங்கியிருந்தார்கள். மஹோதய ஸ்நானம் கோடிக் கரையில் நடந்தது. ஆதி ஸேது எனக் கூறப்படும் இந்தத் தலத்தின் அருகிலுள்ள அகத்தியாம்பள்ளி முதலான க்ஷேத்திரங்களையும் ஸ்வாமிகள் அப்பொழுது தரிசனம் செய்து கொண்டார்கள். அங்கிருந்து ஸ்வாமிகள் நாகப்

பட்டினத்திற்கு விஜயம் செய்து, அவ்விடம் பொதுமக்களால் நன்கு வரவேற்கப்பட்டு நீலாயதாக்ஷி அம்மன் கோயிலில் தங்கினர்கள். கோயிலில் ஸ்வாமிகளை வரவேற்கும்பொழுது பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்குக் கூடியிருந்தனர். நாகை நீலலோசனி பத்திராதிபர் ஜி. சதாசிவம் பிள்ளை ஸ்வாமிகளின் பேரில் ஐந்து பாட்டுக்கள் தொகுத்து அக் கூட்டத்தில் படித்தார்.

மாயவரத்தில் 1920-ஆவது வருடத்து வியாஸ பூஜை.

1920-ஆவது வருடத்து வியாஸ பூஜையை ஸ்வாமிகள் மாயவரத்தில் நடத்திப் பின்னர் மூன்று மாதங்கள் அவ்விடம் தங்கியிருந்ததும் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். அப்பொழுது பள்ளிகளில் பயிலும் பிரம்மசாரிச் சிறுவர்கள் சுமார் முந்நூறு பேருக்கு வேத வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. அவர்கள் யாவரும் சூரியோதயத்திற்கு முன்பு காவிரியில் நீராடி, சந்தியாவந்தனம் செய்து, ராஜான் தோட்டத்தில் அமைந்திருந்த கொட்டகைகளில் சமிதாதானம் என்னும் ஹோமத்தைச் செய்து, தகுந்த ஆசிரியர்கள் மூலம் வேதப் பயிற்சி பெற்றுவந்த அழகை அன்று கண்டவர்கள் என்றும் மறப்பதற்கில்லை. அப்பொழுது அந்த இடம் பழமையான ரிஷி ஆசிரமங்களையும் அவைகளில் பயின்ற ரிஷி புதல்வர்களையும் நினைவிற்குக் கொண்டுவந்தது. 2—11—1920 அன்று, அப்பொழுதிருந்த தருமபுரம் ஆதினம் ஸ்ரீலஸ்ரீ பண்டார சந்நிதிகள் ஸ்வாமிகளை மாயாவரத்தில் சந்தித்து அவர்களுக்குத் தக்க மரியாதைகளைச் செய்தனர்.

ஸ்வாமிகள் மாயவரத்தில் தங்கியிருந்தபொழுது குரானில் நல்ல தேர்ச்சி பெற்ற இஸ்லாமியர் ஒருவர் ஸ்வாமிகளிடம் நேரில் உரையாடவேண்டுமென்ற அவாவைத் தெரிவித்தார். அவரோ இரண்டு கண்களும் தெரியாதவர்; ஆனல் நல்ல சொல்வன்மை படைத்தவர். ஸ்வாமிகள் அவரை மாலை நான்கு மணிக்கு வரும்படி கட்டளையிட்டிருந்தார்கள். அதன்படி குறித்த காலத்திற்கு மடத்திற்கு அவர் வந்து சேர்ந்தார். அப்பொழுது வித்வான்களின் சபை ஒன்று கூடியிருந்தது; இந்துமதத் தத்துவங்களைப் பற்றி அந்த வித்வான்கள் விளக்கம் செய்துகொண்டிருந்தார்கள்; பக்தர்களின் கூட்டமும் அதிகமாயிருந்தது. வித்வான்கள் பேசி முடிந்ததும், ஸ்வாமிகள் இஸ்லாமியரைத் தம் பக்கத்தில் அழைத்து

அவரது மதத்திலுள்ள பொதுவான தர்மங்களைப் பற்றி விவரிக்கும்படி கட்டளையிட்டார்கள். அவர் ஸ்வாமிகள் வீற்றிருந்த இடத்தை நோக்கி 'மகான்களாகிய தங்கள் முன்னிலையில் நான் என்ன சொல்லப்போகிறேன்? எல்லா மதங்களும் முடிவில் கடவுளையடையும் மார்க்கத்தையே கூறுகின்றன. அவனைவிடப் பெரிய வஸ்து எங்குமில்லை. தங்களிடம் அக்கடவுளை நான் என் உள்ளத்தில் காண்கிறேன். எவ்விடத்தில் அன்பு இருக்கிறதோ அவ்விடத்தில் கடவுளைக் காணலாம்,' எனக் கூறிவிட்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். அப்பொழுது அங்குக் கூடியிருந்தோர் யாவரும் அந்த இஸ்லாமியரின் பக்தியைக் கண்டு ஆச்சரியமடைந்தனர்.

அவ்வருட நவராத்திரி பூஜை ஆனைதாண்டவபுரத்தில் நடைபெற்றது. அவ்விழாவிற்குப் பின் ஸ்வாமிகள் மாயவரம், சீகாழி தாலூகா கிராமங்களில் விஜயம் செய்தார்கள். அப்பொழுது திருக்கடையூர், திருப்புன்கூர், வைத்தீச்வரன் கோவில் முதலிய க்ஷேத்திரங்களில் அவர்கள் ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டார்கள். வைதீச்வரன் கோவில் கட்டளை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் ஸ்வாமிகளைப் பூரண கும்பத்துடன் வரவேற்றுத் தேவஸ்தான மரியாதைகளுடன் தக்க முறையில் உபசரித்தார். பின்னர் 1920-ஆவது வருடம் மார்கழி மாதம் ஸ்வாமிகள் சீகாழியில் தங்கி, ஸ்ரீ சட்டநாத ஸ்வாமியைத் தரிசனம் செய்துகொண்டார்கள். இத்தலம் உமா தேவியார் ஞான சம்பந்தருக்கு ஞானப்பால் ஊட்டிய பெருமை பெற்றதாகும். இந்த யாத்திரையில் சீகாழியைச் சுற்றியுள்ள எல்லாச் சிவ க்ஷேத்திரங்களையும் ஸ்வாமிகள் தரிசித்தார்கள். ஸ்வாமிகள் சீகாழியில் தங்கியிருந்தபொழுது, ஸ்ரீமான் சிதம்பரநாத முதலியார் தாம் நடத்திவரும் உயர்தரப் பள்ளிக்கு ஸ்வாமிகளை விஜயம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். அதன்படி ஸ்வாமிகளும் அந்தப் பள்ளிக்கு விஜயம் செய்து மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உபதேச மொழிகளை அருளினர்கள். சிறந்த தருமமான வித்யாதானத்தைக் குழந்தைகளுக்கு முதலியார் அளித்து வருவதற்காக அவரையும் அவருடைய குடும்பத்தாரையும் ஸ்வாமிகள் மிகவும் பாராட்டினர்கள்; சீகாழியில் ஸ்வாமிகள் தங்கியிருந்தபொழுது குன்னம் சுப்பிரமணிய ஐயர், அவரது சகோதரர் இரகுபதி ஐயர், வக்கீல் சுவேதாரண்ய ஐயர்,

வக்கீல் எஸ். சுப்பிரமணிய ஐயர், தென்பாதி திருநாராயண பிள்ளை இவர்களும் இன்னும் மற்றும் பல பிரமுகர்களும் மடத்தின் பணியில் ஈடுபட்டிருந்தனர். ஸ்வாமிகள் சீகாழிக்குக் கிழக்கேயுள்ள திருவெண்காடு என்னும் க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்து அவ்விடம் சுவேதாண்யேசுவரரைத் தரிசனம் செய்து கொண்டார்கள். அத்தலத்திலேயே நிர்விகல்ப சமாதியிலிருக்கும் காமகோடி பீடத்தின் 57-ஆவது ஆசாரிய ஸ்வாமிகளான பரம சிவேந்திர ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தையும் அவர்கள் தரிசித்துக் கொண்டார்கள். அந்தப் பரமசிவேந்திர ஸ்வாமிகள் ஸ்ரீசதாசிவ ப்ரும்மத்தின் ஞான குருவாக விளங்கியவர்கள்.

ஆழ்வார்களால் பாடப்பெற்ற பாரத பூமியிலுள்ள நூற்றெட்டு வைணவத் திருப்பதிகளில் பன்னிரண்டு திவ்ய தேசங்கள் சீகாழி தாலுகாவில் அமைந்துள்ளன. அவையாவன:

1. தாடாளங் கோவில், 2. திருநகரி, 3. திருநாங்கூர், 4. வைகுந்த விண்ணகரம், 5. அரிமேய விண்ணகரம், 6. செய்கோவில், 7. திருத்தெற்றி அம்பலம், 8. திருமணக்கூடம், 9. பார்த்தன் பள்ளி, 10. திருக்காவளம்பாடி, 11. திருவள்ளகம், 12. திருத்தேவனார் தோகை. இந்தத் திவ்ய தேசங்களையெல்லாம் ஸ்வாமிகள் தரிசித்து ஆங்காங்குப் பெருமாளைச் சேவித்துக்கொண்டார்கள். பின்னர் ஸ்வாமிகள் காவிரிப்பூம் பட்டினம் சென்று காவிரி ஆறு கடலில் சேரும் இடத்தில் நீராடினார்கள்.

1921-ஆவது வருட மகாமகம்.

1921-ஆவது வருடத்தில் கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமகத்தின் பொழுது ஸ்வாமிகள் தாராசுரத்திற்குப் பக்கத்திலுள்ள பட்டீச்வரம் என்னும் தலத்தில் பழமையான சிவாலயத்திற்கு விஜயம் செய்திருந்தார்கள். அப்பொழுது மகாமகம் நேர, ஸ்வாமிகள் அதற்காகக் கும்பகோணம் சென்றார்கள். 1919-ல் ஸ்வாமிகள் சங்கல்ப யாத்திரை தொடங்கிவிட்டதால், கும்பகோணத்திலுள்ள தம் மடத்திற்கு அப்பொழுது விஜயம் செய்யவில்லை. மடத்தில் வழக்கம்போலத் தேப்பெருமா நல்லூர் சிவன் அவர்களது சமாராதனை மிகச் சிறப்பாக நடந்தேறியது. மகாமகக்குளம் தென்கரையிலுள்ள மண்டபத்தில் ஸ்வாமிகள் தங்கி, தடாகத்தில் மகாமகத்தன்று ஸ்நானம் செய்தார்கள். பல்லாயிரக்கணக்கான சிஷ்யர்கள் ஸ்வாமிகளை அப்பொழுது தரிசித்துக் கொண்டார்கள்.

பாரத நாட்டில் மிகவும் மகிமை வாய்ந்த இந்தத் தடாகத்திற்கு ஓர் மைய்ய மண்டபம் இல்லாததை ஸ்வாமிகள் உணர்ந்து, அந்நாளில் தேசப் பணியில் ஈடுபட்டவரும், தண்ணீர்க் குன்னம் உடையார் வம்சத்தைச் சேர்ந்தவருமான இராமபத்திர உடையாரிடம் இப் பணியைச் செய்து முடிக்கும்படி சொல்லி, அதற்காக ரூபாய் ஐந் நூறு மூலதனமாக மடத்திலிருந்து கொடுக்கும்படி ஸ்வாமிகள் உத்திரவிட்டார்கள். பொது ஜனங்களிடம் மேலும் பொருள் சேர்த்து உடனே ஒரு சிறு மண்டபம் கட்ட முயற்சி எடுக்கப்பட்டது; தண்ணீர் மட்டத்திற்கு மேல் ஒரு மேடை மட்டும் தான் இதுவரை அவ்வேலை முடிந்துள்ளது.

அந்த மகாமகத்தில் பொதுஜன சேவை செய்யச் சென்னை முஸ்லிம் இளைஞர் சங்கத்திலிருந்து சுமார் இருநூறு தொண்டர்கள் கும்பகோணத்திற்கு வந்திருந்தார்கள். ஜனக் கூட்டத்தில் அவர்கள் செய்த ஒப்பற்ற பணியை ஸ்வாமிகள் நேரில் கண்டு மகிழ்ந்தார்கள். அவர்கள் யாவரும் இருபத்திரண்டு வயதிற்குட்பட்ட வாலிபர்கள். நல்ல திடகாத்திரம் படைத்தவர்கள்; தொண்டாற்றும் ஆவல் அவர்கள் முகத்தில் பிரதிபலித்தது. அவர்களை நேரில் கண்டு அருள்புரிய வேண்டுமென்று ஸ்வாமிகளுக்கு ஓர் எண்ணம் உதித்தது. ஸ்வாமிகள் விருப்பப்படி அவர்கள் யாவரும் மடம் முகாம் செய்திருந்த பட்டீச்வரத்திற்கு அழைத்து வரப்பட்டனர்; அவர்களுக்கு மடத்தில் நல்ல உணவளிக்கப்பட்டது. ஸ்வாமிகள் அவர்கள் ஒவ்வொருவருடனும் பேசி அவர்களுடைய பெற்றோர்களைப் பற்றியும், கல்வியைப் பற்றியும் அன்புடன் விசாரித்தார்கள். அவர்கள் சேவையைப் பாராட்டி ஒரு வெள்ளிக் கோப்பையை ஸ்வாமிகள் அவர்களது சங்கத்திற்கு அப்பொழுது பரிசாக அளித்தார்கள். அவ்வருட மகாமகத்தில் காங்கிரஸ் தலைவர் பந்துலு ஐயரின் தலைமையிலும் பல தொண்டர்கள் நல்ல பணியாற்றினார்கள். அத்தொண்டர்களையும் ஸ்வாமிகள் நேரில் பாராட்டி, அவர்களுக்கும் ஒரு வெள்ளிக்கோப்பையைப் பரிசாக அளித்தார்கள்.

அம்மகாமகத்தின் பொழுது கும்பகோணத்திற்கு வந்திருந்த பழுத்த தேசபக்தரான சுப்ரமண்யசிவம் என்பவர் தம் உடல் நிலையையும் பொருட்படுத்தாது பட்டீச்வரம் வந்து ஸ்வாமிகளைத் தரிசிக்கவேண்டி ஜனக்கூட்டத்தினிடையே ஓர் புறத்தில் காத்து

நின்றார். ஸ்வாமிகள் அவரை அதற்கு முன் சந்திக்கவில்லை; ஆயினும் வெகு தூரத்தில் நின்று கொண்டிருந்த அவரைக் கண்டவுடன் தொண்டர்களை அனுப்பி அவரைத் தம்மிடம் அழைத்து வரச்செய்தார்கள்; தன்பால் ஸ்வாமிகளுக்கு ஏற்பட்ட கருணையைக் கண்டு சிவம் உள்ளம் பூரித்தார்; தேசத்தின் விடுதலையில் பூரணமாக ஈடுபட்டிருந்த அவர் அப்பொழுது துறவிகளுக்கான காஷாய உடையைத் தரித்திருந்தார். அந்நிய ஆட்சியிலிருந்து பாரத பூமியானது சீக்கிரம் விடுபடவேண்டுமென்றும், மக்கள் எல்லோரும் கடவுள் பக்தியோடு இருக்க வேண்டுமென்றும், இவ்விரண்டிற்கும் ஸ்வாமிகளின் ஆசி பரிபூரணமாகத் திகழ வேண்டுமென்றும் அவர் ஸ்வாமிகளிடம் விண்ணப்பித்துக்கொண்டார். அவ்விதமே நடைபெறுமென்று ஸ்வாமிகள் அருள் புரிந்தார்கள்.

அந்த வருடத்து வியாஸ பூஜையையும் சாதுர்மாஸ சங்கல்பத்தையும், ஸ்வாமிகள் குற்றாலத்துக்குச் சமீபமுள்ள கதிராமங்கலத்தில் நிறைவேற்றினார்கள். அதற்கடுத்த ஒரு வருடம் தஞ்சை ஜில்லா சீகாழி, மாயவரம், நன்னிலம், மன்னார்குடி தாலுகாக் கிராமங்களில் விஜய யாத்திரை நடைபெற்றுக்கொண்டிருந்தது. அப்பொழுது ஸ்வாமிகள் காவிரியின் வடகரை, தென்கரையிலுள்ள பாடல் பெற்ற சிவஸ்தலங்களையும், வைணவ திவ்ய தேசங்கள் பலவற்றையும் தரிசித்து, ஒவ்வொரு ஆலயத்திலுள்ள விக்ரஹங்களுக்கும் பட்டுப் பீதாம்பரம் அணிவித்து வழிபட்டார்கள். எவ்வளவு சிறிய ஆலயமாயினும் அது ஸ்வாமிகளின் கவனத்தைக் கவராமல் இருந்ததில்லை.

ஹரிஜனங்களுக்குத் தரிசனம் அளித்தது.

தஞ்சை ஜில்லாவில் ஸ்வாமிகள் யாத்திரை செய்துகொண்டிருந்தபொழுது குடவாசலிலிருந்து கொரடாச்சேரி செல்லும் மார்க்கத்தில் செல்லூர் என்னும் கிராமத்தில் ஹரிஜனங்கள் முதியோர், பெண்கள், குழந்தைகள் உள்பட சுமார் 200 பேர்கள் நீராடி, விபூதி அணிந்து, ஸ்வாமிகளைத் தரிசிப்பதற்காகச் சாலையின் ஓரத்தில் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்டதும் ஸ்வாமிகள் தமது சிவிகையை நிறுத்தும்படி உத்தரவிட்டு, சிவிகையிலிருந்து கீழே இறங்கி, அவர்கள் யாவருக்கும் தரிசனம் அளித்தார்கள். அப்பொழுது ஸ்வாமிகள் அவர்களைப் பார்த்து அவர்

களின் எஜமானர்களான மிராசுதார்கள் அவர்களை அன்புடன் நடத்துகிறார்களாவென்றும். அவர்கள் ஆகாரத்திற்குப் போதுமான தானியத்தைக் கொடுக்கிறார்களாவென்றும் கேட்க, அவர்கள் ஆகாரத்திற்குக் குறைவில்லாமல் தங்களுக்குத் தான்யம் கிடைக்கிறதென்றும் தாங்கள் சந்தோஷமாகவே வாழ்ந்துவருவதாகவும் தெரிவித்தனர். மேலும் ஸ்வாமிகள் அவர்கள் செய்துவரும் கடவுள் வணக்கங்களைப் பற்றியும் கேள்விகளைக் கேட்டார்கள். அவர்கள் விசேட நாள்களில் தங்கள் ஜாதித் தெய்வங்களுக்குப் பூஜை போடுவதாகவும், காலரா, அம்மை முதலான நோய்கள் வரும்பொழுது வழக்கமாகத் தெய்வங்களுக்குப் பூஜை யிட்டு வீடுகளைச் சுத்தமாய் வைத்துக் கொள்வதாகவும் தெரிவித்தார்கள். ஸ்வாமிகள் மடத்துக் காரியஸ்தர்களைப் பக்கத்திலுள்ள குடவாசலுக்கு அனுப்பிப் புது ஆடைகள் வாங்கிவரச் செய்து, அவற்றை அவர்களுக்கு அளித்து அவர்களை ஆசீர்வதித்தார்கள். ஸ்வாமிகளின் கருணையைக் கண்டு அவர்கள் அகமகிழ்ந்தனர். வெகு நேரம் ஸ்வாமிகளை அவ்விடம் தங்க வைத்துவிட்டதற்காக அவர்கள் மன்னிப்பும் கேட்டுக்கொண்டார்கள். இவ்விதம் ஸ்வாமிகள் விஜய யாத்திரை செல்லும்பொழுது, பாதைகளில் ஹரிஜனங்களைக் காணநேரும்போதெல்லாம் சிவிகையை நிறுத்தச்செய்து அவர்களுக்குத் தரிசனம் கொடுத்து நல்வாழ்த்துக் கூறிச் செல்வது வழக்கம்.

வாத்திமர் கிராமங்களுக்கு விஜயம்

அவ்வாண்டு கதிராமங்கலத்தில் சாதுர்மாஸ சங்கல்பம் முடித்துக்கொண்ட பிறகு ஸ்வாமிகள் நன்னிலம் தாலுகாவிலுள்ள கிராமங்களில் விஜய யாத்திரை செய்யத் தொடங்கினார்கள். அந்தத் தாலுகாக்களில் வசிக்கும் 18 கிராமத்து வாத்திமர்கள் என்று கூறப்படும் அந்தணப் பிரிவைச் சார்ந்தவர்கள் தங்கள் கிராமங்களுக்கு ஸ்வாமிகளை விஜயம் செய்யவேண்டுமென விண்ணப்பித்துக்கொண்டனர். வாத்திமர் எனப்படுகின்றவர்கள், தமிழ் நாட்டு அந்தணர்களில் சிறியதோர் பிரிவைச் சார்ந்தவர்கள்; சுமார் ஆயிரம் குடும்பங்களைக் கொண்டு இவர்களது சமுகம் விளங்குகின்றது. ஆனைதாண்டவபுரம், கோனேரிராஜபுரம், திப்பராஜபுரம், விஷ்ணுபுரம், தேதியூர், முடிகொண்டான், செம்மங்குடி, அரசவனங்காடு, முழையூர், புலியூர் முதலான

கிராமங்கள் வாத்திமர் கிராமங்களாகும். ஆசாரத்தையும், சீலத்தையும் இவர்கள் கைக்கொண்டவர்கள்; அவற்றுடன் லக்ஷ்மீ கடாக்ஷமும் பெற்று நல்ல வசதியுடன் வாழ்கின்றவர்கள்; செட்டாகவும், கட்டுப்பாடாகவும் இருந்து எளிய முறையில் வாழ்க்கையை நடத்துகின்றவர்கள்; அப்படியிருந்தும் அவசிய மான சந்தர்ப்பங்களில், கோவில் திருவிழாக்களையும், வைதீக காரியங்களையும், அவர்கள் தம் இல்லங்களில் நடைபெறும் கலியாணங்களையும் ஏராளமான பணச் செலவில் மிகச் சிறப் புடன் யாவரும் மெச்சத் தக்கவாறு செய்து முடிப்பார்கள். வேதம் ஓதுபவர்களையும், மற்றும் சாஸ்திரம் கற்றவர்களையும் இச்சமுகத்தார் மிகப் பரிவுடன் ஆதரித்து வருகின்றனர். சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்னர் திருவனந்தபுரத்திலும், புதுக் கோட்டையிலும் திவான் உத்தியோகம் வகித்து வந்த சர், ஏ. சேஷையா சாஸ்திரிகள் இந்த மரபைச் சார்ந்தவர்களாவர். இப்பொழுது அவருடைய சுவீகார புதல்வரின் பேரன் அ.சேஷையா சாஸ்திரி என்பவரே நமது ஸ்வாமிகளிடம் அதிகாரம் பெற்று மடத்தின் ஸ்ரீகார்யம் என்னும் உயர்ந்த பதவியை வகித்து வரு கிறார். கும்பகோணம் அத்வைத சபையின் ஸ்தாபகர்களில் ஒருவரான கோனேரிராஜபுரம் சாம்பசிவ ஐயர் என்னும் பெரியார் இவ்வாத்திமர் வகுப்பைச் சார்ந்தவராவர். இவர் கும்பகோணத்தில் ஸ்ரீவித்யா அச்சுக்கூடம் என்னும் ஓர் அச்சுக்கூடத்தை அமைத்து, அத்வைதசித்தி, சித்திப் பிரம்மாநந்தியம், அப்பய்ய தீக்ஷிதரது சிவதத்துவ விவேகம் முதலிய நூல்களை வெளியிட்டார். பெரிய வாத்திமக் கிராமங்கள் ஒவ்வொன்றிலும் ஸ்வாமிகள் சுமார் ஒவ் வொரு மாதத்திற்கு மேல் தங்கி அவர்கள் பக்தியுடன் செய்துவைத்த பிக்ஷை, பாதபூஜை முதலியவற்றை ஏற்றுக்கொண்டார்கள்.

மன்னார்குடி முதலான இடங்களுக்கு விஜயம்.

நன்னிலம் தாலுகாவிலுள்ள கிராமங்களில் யாத்திரையை முடித்துக்கொண்டு ஸ்வாமிகள் மன்னார்குடி தாலுகாவிலுள்ள கிராமங்களில் பெரும்பான்மையாக யாத்திரை யைத்தொடர்ந்து நடத்தி வந்தார்கள். ஸ்வாமி கள் விஜயம் செய்த ஒவ்வொரு ஊரிலும் சமுகத்தினர் யாவரும் மிகவும் ஒற்றுமையுடன் ஸ்வாமிகளது பணியில் ஈடுபட்டிருந்தனர். மன்னார்குடி தாலுகா

பூவனூரைச் சார்ந்த பெரிய சிவபக்தரான ராஜு முதலியார் என்பவர் அப்பொழுது ஸ்வாமிகளை அவ்வூருக்கு விஜயம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். அதற்கிணங்கி ஸ்வாமிகளும் அங்குச் சுமார் பத்து நாட்கள் தங்கியிருந்தார்கள். அவ்வூரில் முதலியார் அவர்கள் நடத்தி வந்த தேவார பாடசாலைக்கு அடிக்கடி ஸ்வாமிகள் சென்று மாணவர்களைக்கொண்டு தேவாரங்களைப் பாடச்செய்து, அவைகளின் பொருளிலும், இசையிலும் மனதைச் செலுத்தி இன்புற்றார்கள். அப்பாடசாலையின் மாணவர்களுக்குப் பட்டு முதலிய சாமான்களை அவர்கள் அளித்து ஆசீர்வதித்தார்கள். நாட்டில் இன்று தேவாரம் ஓதுவதில் மிகத் தேர்ச்சி பெற்ற வித்வான்களில் பலர் பூவனூர்ப் பாடசாலையில் கற்றவர்கள் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

பின்னர் ஸ்வாமிகள் மன்னார்குடியில் சுமார் ஒரு மாத காலம் தங்கியிருந்தார்கள். அவ்வூரில் தங்கியிருந்தபொழுது ஸ்வாமிகள் நேஷனல் உயர்நிலைப்பள்ளிக்கு விஜயம் செய்து மாணவர்களுக்குப் பல உபதேசங்களை அருளினார்கள். அவ்விடம் இராஜகோபால ஸ்வாமி ஆலயத்திலும் அவர்கள் தரிசனம் செய்து கொண்டார்கள். அங்கிருந்து அவர்கள் வடுவூர் சென்று அங்குள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீ இராம விக்கிரஹத்தையும் தரிசித்துக்கொண்டார்கள். பிரபல மிராசுதாரரான குன்னியூர் சாம்பசிவ ஐயர் அவர்களின் விருப்பப்படி குன்னியூரில் ஸ்வாமிகள் சிலகாலம் தங்கியிருந்தார்கள். பின்னர் சித்தமல்லி, ஆலங்காடு முதலான ஊர்களுக்கு விஜயம் செய்து, பிறகு பட்டுக்கோட்டை, அறந்தாங்கி மார்க்கமாக ஆவுடையார் கோவிலுக்கு 1922–ஆவது வருடம் ஜூலை மாதம் முதல் வாரத்தில் விஜயம் செய்தார்கள். அக்காலத்தில் சித்தமல்லி மிராசுதார் சுப்பிரமண்ய ஐயர் ஸ்வாமிகளுடன் கூட இருந்து மடத்திற்குப் பணியாற்றி வந்தார். இவர் பல சாஸ்திரங்களைக் கற்ற மகா வித்வான்; மகாமகோபாத்யாய மன்னார்குடி ராஜு சாஸ்திரிகளிடம் சிஷ்யராக இருந்து கல்வி கற்றவர்.

ஆவுடையார் கோவிலில் சாதுர்மாஸ விரதம்.

ஸ்வாமிகள் 1922-ஆவது வருடம் வியாஸ பூஜையை ஆவுடையார் கோவிலில் நடத்தி அவ்விடம் இரண்டு மாதங்கள் தங்கியிருந்தார்கள். திருப்பெருந்துறை யென்னும் இந்தத் தலமானது தமிழ்நாட்டுச் சிவத் தலங்களுள் மிகவும்

பெருமை பெற்று விளங்குகிறது. அரிமர்த்தன பாண்டியன் தனது அமைச்சர் வாதவூரர் என்னும் மாணிக்கவாசகரைத் தனக்குக் குதிரைகள் வாங்கி வரும்படி நாற்பத்தொன்பது கோடி பசும் பொன்களுடன் அனுப்ப, அவர் இந்தத் தலத்தில் தங்கி, ஆத்ம நாதரது தரிசனத்தில் ஈடுபட்டிருந்தபொழுது, ஆலயத்தின் பிரகா ரத்திலுள்ள குருந்தமரத்தின் அடியிலுள்ள பீடத்தில் பதினறு வயதுள்ள அந்தண உருவத்துடன் ஈசன் அவர்முன் தோன்றி சிவஞான போதத்தை அவருக்கு உபதேசித்து அருளினர். மாணிக்க வாசகர் தாம் கொண்டுவந்த பொருளையெல்லாம் இந்த ஆலயத்தின் திருப்பணியில் செலவிட்டு விட்டார்.

இவ்வாலயத்திலுள்ள சிற்பக் கலையின் நுட்பங்களை வேறு எந்த ஆலயத்திலும் காணமுடியாது. இந்த ஆலயம் திருவாவடுதுறை ஆதீனத்தின் நிர்வாகத்தில் நன்கு பரிபாலிக்கப்பட்டு வருகிறது. அநேகமாக ஸ்வாமிகள் ஒவ்வொரு நாளும் ஆத்மநாத ஸ்வாமி தேவஸ்தானத்துக்குச் சென்று, அங்கு ஸ்வாமி சந்நிதியையும், யோகாம்பிகை சந்நிதியையும், மாணிக்கவாசகர் சந்நிதியையும், குருந்த மரத்தையும் தரிசனம் செய்து வந்தார்கள். அந்த ஊரில் தங்கியிருந்தபொழுது ஸ்வாமிகளிடம் மிகவும் பக்திகொண்ட நெய்க்குப்பை ஏகாம்பர சேர்வைக்காரர் சலியாத ஊக்கத்துடன் மடத்திற்கு வேண்டிய பணிகளையெல்லாம் செய்து வைத்தார். அவ்வூரிலே சாதுர்மாஸ சங்கல்பம் முடிவுபெற்று விசுவரூப யாத்திரை அன்று (8-9-1922), திருவாவடுதுரை ஆதீன கர்த்தரவர் கள் ஆவுடையார் கோவிலில் தமது கட்டளைத் தம்பிரான் மூலமாக ஸ்வாமிகளுக்குப் பிக்ஷை முதலிய மரியாதைகளைச் செய்துவைத் தார்கள். அவ்விடம் மடத்தின் சேவையில் ஈடுபட்டவர்களில், பட்டுக்கோட்டை வக்கில் வெங்கடேசுவர ஐயர், தேவஸ்தானம் ஸ்தானிகம் ஆத்மநாத நம்பியார் இவர்களைக் குறிப்பிடலாம்.

ஆவுடையார் கோவிலிலிருந்து ஸ்வாமிகள் உப்பூர், தேவிப் பட்டினம் வழியாக இராமேச்வரத்திற்குப் பயணமானர்கள்.

முதல் இராமேசுவர யாத்திரை.

ஸ்வாமிகள் பாம்பன் ஜலசந்தியை ரயில் பாலத்தின் மீது நடந்து சென்று கடக்கத் தென்னிந்திய ரயில்வே அதிகாரிகள் எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தார்கள். மற்றச் சாமான்களையும், வண்டிகளையும் படகுகளின் மூலம் ஏற்றி அனுப்புவதற்கு மண்ட

பம் மரக்காயர் எல்லாவித ஏற்பாடுகளையும் செய்து உதவினர். மரக்காயரும் ஸ்வாமிகளை நேரில் சந்தித்து ஸ்வாமிகளின் அருளைப் பெற்றார். இராமேச்வரத்தில் தேவஸ்தான அதிகாரிகளும், பரம்பரை பண்டாக்களும் தேவஸ்தான மரியாதைகளுடன் இராமநாத ஸ்வாமி தரிசனத்தை ஸ்வாமிகளுக்குச் செய்து வைத்தார்கள். இராமநாதலிங்கம் பாரத நாட்டிலுள்ள 12 ஜோதி லிங்கங்களுள் ஒன்றாகும். துந்துபி வருடம் (1922) புரட்டாசி மாதம் பூர்ணமி அன்று, ஸ்வாமிகள் இராமசேதுவில் (கங்கையில் கலப்பதற்கென) மணல் எடுத்துக் கொண்டார்கள். அந்த மணலும் பவ வருடம் (ஆடிமாதம் பத்தாம் தேதி புதன் கிழமை (25-7-1934) அலகாபாத் என்னும் பிரயாகை திருவேணிசங்கமத்தில் சேர்க்கும் வரையில்) ஸ்வாமிகளின் பூஜையிலேயே இருந்து வந்தது.

தனுஷ்கோடியில் ஸ்வாமிகள் நவராத்திரி பூஜையை முடித்துக்கொண்டு மகோததி, இரத்னாகரம் என்னும் இரண்டு கடல்கள் சேரும் இடத்தில் விதிப்படி மூன்று நாட்கள் நீராடி, வேதமோதிய அந்தணர்களுக்கு ஏராளமான பொருள்களைத் தானமாகக் கொடுத்தார்கள். சுமார் பதினாயிரம் ரூபா வரையில் அங்குத் தானங்கள் கொடுக்கப்பட்டன. ஸ்வாமிகள் தனஷ்கோடியிலிருந்து மறுபடியும் இராமேச்வரம் வந்து அவ்விடம் பக்தர்கள் செலுத்திய பிக்ஷை, பாதபூஜை முதலியவைகளை ஏற்றுக்கொண்டு ஒரு வாரம் தங்கியிருந்தார்கள்.

கதர் அபிமானம்

கதராடைகள் விற்பனைக்கு வந்த சுமார் 1918-ஆவது வருடம் முதல், ஸ்வாமிகள் கதர் வஸ்திரத்தையே உடுத்து வருகிறார்கள். எவ்வளவு முரட்டு வஸ்திரமானாலும் கதர் அணிவதில் ஸ்வாமிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைவார்கள். தனுஷ்கோடியில் ஸ்வாமிகள் நீராடிய பொழுது மடத்தின் சிப்பந்திகள் ஒவ்வொருவருக்கும் இரண்டு ஜோடி கதர் வஸ்திரம் கொடுத்து, மில் நூல் ஆடைகளைத் தரித்திருந்தவர்களை அழைத்து அவ்வாடைகளைக் கடலில் எறிந்து விடும்படி கட்டளையிட்டார்கள். சிப்பந்திகளுக்குக் கொடுப்பதற்கென எட்டு முழம் வேஷ்டிகளில் சுமார் 200 ஜோடிகள் அன்று மதுரையிலிருந்து தருவிக்கப்பட்டன. காந்தியடிகளின் திட்டங்களில் கதர் உற்பத்தியும் முக்கியமான அம்சமாக விளங்கி வந்த அந்நாளில், சீமை உடைகளை நெருப்பில் எரிப்பது தேசபக்தர்களின் பணிகளில்

ஒன்றாக அமைந்திருந்தது. அன்னியநாட்டுத் துணிகளை ஜனங்கள் முன்னிலையில் எரிப்பதைவிடக் கடலில் எறிவது ஒரு சாவதானமான முறையாயும், சாத்வீகமான முறையாயும் இருக்குமென்று ஸ்வாமிகள் எண்ணினார்கள் போலும். மடத்தின் சிப்பந்திகள் பலர் அன்று முதல் கதராடையே உடுத்துவதென்று சங்கல்பம் செய்து கொண்டனர்.

கோடிக்கரையில் நீராடிவிட்டு ஸ்வாமிகள் ஒருநாள் கடற்கரை ஓரமாக நடந்து வந்தபொழுது அடியார்கள் கூட்டம் ஏராளமாக ஸ்வாமிகளைப் பின்தொடர்ந்து வந்தது. மடத்தில் நெருங்கிய தொடர்புள்ள மிராசுதார்கள் பலர் ஸ்வாமிகளுடன் வந்தார்கள்.

மிராசுதார் ஆத்ம ஞானியானது.

வழியில் அவர்கள் ஏழை மக்களுக்குக் காசும், துணியும் கொடுத்து வந்தார்கள். வழக்கம் போல் பிச்சை வாங்குவோரின் கூட்டத்தில் 'நான் முந்தி, நீ முந்தி' என்ற போட்டியுடன் சிறிது குழப்பமும் நேர்ந்தது. அப் பிச்சைக்காரர்களில் ஒருவன் தன்னை அறியாதவாறு ஸ்வாமிகளை வழிமறைத்து நின்றுவிட்டான். உடன் வந்த மிராசுதார் ஒருவருக்கு அதனால் சினம் ஏற்பட்டு, அந்த ஏழையைத் தம் கைத்தடியினால் அவர் ஓர் அடி அடித்துவிட்டார். அந்த அடி தாங்காமல் அவனது உடலிலிருந்து சிறிது இரத்தமும் வெளிப்பட்டு விட்டது. கருணையே உருவெடுத்த ஸ்வாமிகள் இதைக்கண்டு மனம் சகியாதவராகி, அந்த மிராசுதாரை நோக்கி, "நீங்கள் சாஸ்திரங்களை நன்கு கற்று அறிந்திருக்கிறீர்கள். ஈச்வரன் உங்களுக்கு வேண்டிய அளவு பொருளையும், நல்ல அறிவையும் கொடுத்திருக்கிறார், சாந்தமும் ஜீவகாருண்யமும், எல்லாப் பிராணிகளிடத்திலும் தயையும், உங்களுக்குச் சாஸ்திரங்களிலிருந்து ஏற்பட்டிருக்க வேண்டும். மனிதன் எல்லாவற்றிலும் முதன்மையாக சினத்தை அடக்க வேண்டும்.'—என்று கூறிவிட்டு மடத்தின் சிப்பந்திகள் மூலம் அடிபட்ட பிச்சைக்காரனுக்குச் சிகிச்சை செய்வித்து அவன் கோரிய இடத்திற்கு அனுப்பி வைக்க ஏற்பாடும் செய்தார்கள். ஸ்வாமிகளின் மொழிகள் மிராசுதாரின் உள்ளத்தைத் தொட்டது. அவர் தாம் செய்த தவறை உணர்ந்து வருந்தினார். அந்த மிராசுதார் அன்று முதல் சினத்தை அடக்கியவராகித் தமது வாழ்நாளின் பிற்பகுதியில் முறைப்படி சந்நியாச ஆசிரமும் பூண்டு ஆத்மஞானியாக விளங்கலாயினார்.

இராமேச்வர யாத்திரையை முடித்துக்கொண்டு ஸ்வாமிகள் இராமநாதபுரத்திற்கு 1922-ஆவது வருடம் அக்டோபர் மாதம் பத்தாம் தேதி விஜயமானார்கள். இராமநாத புரம் ராஜா ஸ்ரீமத் முத்துராமலிங்க சேதுபதி அவர்கள் ஸ்வாமிகளைத் தமது அரண்மனைக்கு எல்லாவித அரசாங்க மரியாதைகளுடன் அழைத்துச் சென்று அவ்விடம் ஆறு நாட்கள் தங்கியிருக்கும்படி செய்தார். பிறகு ஸ்வாமிகள் இராமநாதபுரத்திலிருந்து மானமதுரை மார்க்கம் சிவகங்கையை அடைந்தார்கள். அங்கு ராஜா முத்துவிஜய ரகுநாத கௌரிவல்லப துரைசிங்கத் தேவர் அவர்கள் ஸ்வாமிகளுக்குத் தக்க முறையில் வரவேற்பு அளித்து வழக்கமாயுள்ள மரியாதைகளையும், பிக்ஷை, பாதபூஜை முதலியவைகளையும் செய்துவைத்தார். சிவகங்கைப் பொதுமக்களும் ஸ்வாமிகளுக்குப் பிக்ஷை, பாதபூஜை முதலியவைகளைச் செய்து ஸ்வாமிகளைப் பூஜித்தார்கள். ஸ்வாமிகள் அக்டோபர் மாதம் இருபதாம் தேதி முதல் இருபத்து நான்காம் தேதி வரை சிவகங்கையில் தங்கியிருந்தார்கள்.

இராமநாதபுரம். சிவகங்கை விஜயம்.

ஸ்வாமிகள் சிவகங்கையிலிருந்து புறப்பட்டு, 1922 - அக்டோபர் 28-ந் தேதி காளையார் கோவிலுக்கு விஜயம்செய்து அவ்விடம் சோமேச்வரர், காளீச்வரர், சுந்தரேச்வரர் இம்மூன்று சந்நிதிகளையும் அம்பிகை சந்நிதிகளையும் தரிசித்துக் கொண்டார்கள். சம்பந்தர், சுந்தரர், இவ்விருவராலும் இந்தத் தலம் பாடப்பெற்றதாகும். மாணிக்கவாசகர் (வாதவூர் அடிகள்) பிறந்த இடமாகிய திருவாதவூர் இவ்விடமிருந்து 10 மைல்கள் தூரத்திலுள்ளது. சிவகங்கை சமஸ்தானத்தைச் சேர்ந்த இவ்வாலயத்தின் நிர்வாகிகள் ஸ்வாமிகளைத் தேவஸ்தான மரியாதைகளுடன் வரவேற்று அவ்விடம் தங்குவதற்குச் சிறப்பான வகையில் எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொடுத்தனர். பின்னர், அவர்கள், நாட்டரசன் கோட்டை, சோளபுரம், மதகுபட்டி இவ்விடங்களில் தங்கி திருக்கோட்டியூர் என்னும் வைணவத் தலத்திற்கு விஜயம் செய்து அவ்விடம் திருமகள் நாச்சியார் சமேத சௌமிய நாராயணப் பெருமாளையும் அந்த ஆலயத்தின் பிரகாரத்தினுள் அமைந்துள்ள சரபேச்வரர் சிவாலயத்தையும் தரிசித்துக் கொண்டு மறுநாள் நவம்பர் மாதம் முதல் தேதி திருப்பத்தூருக்கு விஜயம் செய்து அப்பர், சம்பந்தர்

பாண்டி நாட்டுத் திருத்தலங்களுக்கு விஜயம்.

பாடிய சிவகாமி அம்பிகை சமேத ஸ்ரீதளிநாதர் சுவாமியைத் தரிச னம் செய்துகொண்டார்கள். நவம்பர் மாதம் 2-ந் தேதி அவர்கள் இளையாற்றங்குடிக்கு விஜயம் செய்து, நகரக்கோவிலையும் அங் குள்ள ஆசாரிய ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தையும் தரிசித்துக் கொண்டு, அவ்விடமிருந்து வார்பட்டு மார்க்கமாக நவம்பர் மாதம் 6-ந் தேதி பிரான் மலையை அடைந்து அந்த மலையின் மீது ஏறி அங்குள்ள சுனைகளில் நீராடினார்கள். அங்கிருந்து கருங்காலக்குடி, மேலூர் மார்க்கமாக நவம்பர் மாதம் 11-ந் தேதி திருமாலிருஞ்சோலை என்னும் அழகர் கோவிலுக்கு அவர்கள் விஜயம் செய்தார்கள்; அவ் விடம் மலைமீது பெருகும் நூபுரகங்கை என்னும் நீர்வீழ்ச்சியில் ஸ்நானம் செய்து, சுந்தர ராஜரையும் சுந்தர வல்லித் தாயாரையும் சேவித்துக் கொண்டார்கள். நம்மாழ்வார், பூதத்தாழ்வார், பெரியாழ் வார், திருமங்கையாழ்வார், ஆண்டாள் முதலான பக்தர்கள் இத் தலத்தில் பெருமாளைச் சேவித்துப் பாடியுள்ளார்கள். மேலும் இத்தலம் ஆறு படை வீடுகளில் ஒன்றாகிய முருகன் தலமாகவும் கருதப்பட்டு வருகிறது. இந்த முருகன் தலத்திற்குப் பழமுதிர் சோலை என்பது பெயர்.

மதுரை விஜயம்.

அழகர் கோவிலில் பெருமாளைச் சேவித்துக்கொண்டு ஸ்வாமி கள் மதுரைக்கு 1922-ஆவது வருடம் நவம்பர் மாதம் 12-ந் தேதி விஜயம் செய்தார்கள். மதுரையில் உத்தியோகஸ்தர்கள், வியா பாரிகள், வக்கீல்கள், இன்னும் மற்றோர்க ளெல்லோரும் மிகவும் ஒற்றுமையுடன் ஸ்வாமிகளுக்கு ஒரு பெரிய வரவேற்பை அளித்தார்கள். ஸ்வாமி களின் விஜயத்திற்கென ஒரு பெரிய ஊர்வலம் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. மதுரையின் முக்கிய வீதிகளில் பல்லாயிரக்கணக் கான மக்களுக்கு ஸ்வாமிகள் தரிசனம் கொடுத்து, மீனாக்ஷி அம்மன் ஆலயத்தின் கல்யாண மண்டபத்தில் அவர்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஜாகையில் வந்திறங்கினார்கள். அன்று மதுரை நகரம் முழுவதும், பெரிய கோலாகலத்தில் மூழ்கி இருந் தது. ஸ்வாமிகள் அன்று மீனாக்ஷி அம்மனையும், சுந்தரேச்வரரை யும் தரிசனம் செய்துகொண்டார்கள். தேவஸ்தான அதிகாரிகள் கோவில் மரியாதைகளுடன் ஸ்வாமிகளை வரவேற்று, அம்பாள் தரிசனத்தையும், ஸ்வாமி தரிசனத்தையும் செய்துவைத்தார்கள். ஸ்வாமிகள் சுமார் ஒரு மாத காலம் மதுரையில் தங்கி இருந்

தார்கள். ஸ்வாமிகளின் நித்ய பூஜையைக் காணவும், இரவு நேரங்களில் கல்யாண மண்டபத்தில் அவர்கள் புரிந்த உபந்யாசங்களைக் கேட்கவும், ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் வந்து குவிந்துகொண்டிருந்தனர். வக்கீல் ராவ்சாஹேப் என். நடேச ஐயர் மடத்துக்கு வேண்டுவன எல்லாவற்றையும் கவனித்து மடத்தின் பணியில் ஈடுபட்டிருந்தார். வக்கீல் கே. வி. இராமசாமி ஐயர், வக்கீல் எ. வைத்தியனுதைய்யர், ஜவுளிக் கடை மணி ஐயர் முதலான பல பிரமுகர்களும் இத்திருப் பணியில் பேருதவி புரிந்தார்கள். அந்த வருடம் மழையின் மிகுதியினுல் வைகை ஆற்றில் பெரிய வெள்ளம் ஏற்பட்டது. 1922-ஆம் வருடம் டிஸம்பர் மாதம் 11-ந் தேதி வரையில் ஸ்வாமிகள் மதுரையிலேயே விஜயம் செய்திருந்தார்கள்.

தாம்பிரபரணி தீர விஜயம்

1922-டிஸம்பர் 12-ந் தேதி மதுரையிலிருந்து புறப்பட்டுத் திருமங்கலம், வத்தராயிருப்பு, ஸ்ரீ வில்லிப்புத்தூர், இராஜபாளையம், சேத்தூர், சிவகிரி, சிந்தாமணி, கடையநல்லூர், தென்காசி, கடையம், பாபநாசம், அரியநாயகிபுரம், மார்க்கமாக ஸ்வாமிகள் திருநெல்வேலியை அடைந்தார்கள். வீரராகவபுரம், சந்நியாசி கிராமம், கைலாஸபுரம், வண்ணுரப்பேட்டை, திருநெல்வேலி டவுன் ஆகிய இவ்விடங்களில் பக்தர்கள் ஸ்வாமிகளுக்குப் பிக்ஷை, பாத பூஜை முதலியவைகளை மிகத் திறம்பட நடத்தி வைத்தார்கள். வீரராகவ புரத்தில் விவேகசம்வர்த்தனி சபையின் வருஷாந்தரக் கொண்டாட்டத்தில், ஸ்வாமிகள் தலைமை தாங்கி அந்தச் சபையின் கட்டிட நிதிக்காக ரூபாய் ஆயிரம் நன்கொடை அளித்தார்கள். 1923-வது வருடத் துவக்கத்தில் ஸ்வாமிகள் ஆழ்வார் திருநகரி, ஸ்ரீவைகுண்டம், நாங்குநேரி முதலான திவ்ய தேசங்களைச் சேவித்துக் கொண்டு 11-2-1923-ஆம் தேதி ஆதிசங்கரரால் புஜங்க ஸ்தோத்திரம் பாடப்பெற்ற திருச்செந்தூர் க்ஷேத்திரத்திற்குச் சென்று அவ்விடம் 5 நாட்கள் தங்கி, ஷண்முகநாதனைத் தரிசித்துக்கொண்டார்கள். பின்னர் அம்பா சமுத்திரம், பாபநாசம், தென்காசி, திருக்குற்றுலம், சங்கர நாராயணர் கோவில் ஆகிய திருத்தலங்களுக்கெல்லாம் யாத்திரை செய்துவந்தார்கள். கல்லிடைக் குறிச்சியில் ஸ்வாமிகள் ஒரு வாரம் தங்கி மகாஜனங்கள் அளித்த பிக்ஷை, பாதபூஜை முதலானவைகளை ஏற்றுக்கொண்டார்கள்.

அவ்வருடமே ஏப்ரல் மாதத்தில் திருவானைக்காவில் அகிலாண்டேச்வரி அம்மனுக்குத் தாடங்கப் பிரதிஷ்டைக்கு முகூர்த்தம் வைத்திருந்ததால், திருநெல்வேலி ஜில்லா யாத்திரையைச் சீக்கிரத்தில் முடித்துக் கொண்டு கோவில்பட்டி, சாத்தூர், அருப்புக்கோட்டை, மதுரை மார்க்கமாக ஸ்வாமிகள் திருச்சிராப்பள்ளிக்கு வரவேண்டியதாயிற்று. வரும் மார்க்கத்தில் ஸ்வாமிகள் திண்டுக்கல்லில் மூன்று நாட்கள் முகாம் செய்திருந்தார்கள். அப்பொழுது திண்டுக்கல்லுக்குச் சுமார் இருபது மைல் தூரத்திலுள்ள சிறுமலைக்கு விஜயம் செய்து, பரிவாரங்கள் ஒன்றுமில்லாமல், குறிப்பிட்ட சில சில சிப்பந்திகள் மாத்திரம் பின்வர மலைமீது வெகு தூரத்தில் ஏறி, அங்கே பச்சை இலைகளால் பர்ணசாலை ஒன்று அமைத்துக் கொண்டு, நிர்மானுஷ்யமான இயற்கைக் காட்சிகளிலே ஈடுபட்டவர்களாய், அங்கு இரண்டு நாட்கள் தங்கி இருந்தார்கள். மலையில் தங்குவதற்கான பந்தோபஸ்துக்களைக் கன்னிவாடி ஜமீன் அதிகாரிகள் செய்துகொடுத்தார்கள். பிறகு ஸ்வாமிகள் பழனிக்கு 22-3-1923-விஜயம் செய்து மூன்று நாட்கள் அவ்விடம் தங்கி, தண்டாயுதபாணி தர்சனம் செய்துகொண்டார்கள்.

பின்னர் யாத்திரை திண்டுக்கல், விராலிமலை, இணையாற்றங்குடி, கண்டனூர், திருமயம், புதுக்கோட்டை, கீரனூர் மார்க்கமாக 1923-ஆவது வருடம் ஏப்ரல் மாதத்தில் திருவானைக்காவுக்குச் சென்றது. திருமயம் சத்திரத்தில் ஸ்வாமிகள் விஜயம் செய்திருந்தபொழுது, கடியாப்பட்டி தீ. நா. முத்தையா செட்டியாரால் ஸ்வாமிகள் பூஜைக்காக ஒரு தங்கத் தாம்பளம் காணிக்கையாக அளிக்கப்பட்டது. புதுக்கோட்டையில் சமஸ்தான ரீஜெண்டு ஸ்ரீ விஜய ரெகுநாத துரை ராஜா அவர்கள் ஸ்வாமிகளை அரசாங்க மரியாதைகளுடன் வரவேற்று, ஸஹஸ்ர பாதபூஜை செய்வித்தார்கள். புதுக்கோட்டை மக்களும் ஸ்வாமிகளைச் சுமார் ஒரு வாரம் அவ்விடம் தங்கச் செய்து, பிக்ஷை, பாதபூஜை முதலானவைகளையும் பெரியதொரு ஊர்வலத்தையும் நடத்தினர்கள். புதுக்கோட்டை நகரத்திற்கு இது ஸ்வாமிகளது இரண்டாவது விஜயமாகும்.

காமகோடி பீடத்திற்குப் பல க்ஷேத்திரங்களில் மடங்கள் ஏற்பட்டுள்ளன. அவைகளில் திருவானைக்காவில் உள்ள மடத்தை மிகவும் பழமையானதெனச் சொல்லுகிறார்கள். விஜயரங்க

சொக்கநாதரால் மடத்திற்கு அளிக்கப்பட்ட தாமிரசாஸனத்தில் இச்செய்தி கூறப்பட்டுள்ளது. அவ்வூர் வடக்கு வீதியில் ஏற்பட்டுள்ள இந்த விசாலமான மடம் எப்பொழுது தோன்றிற்று என்று தீர்மானிக்கத் தக்க ஆதாரம் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை. பழையதொரு சிலாசாஸனம் ஒன்றில் இது நாற்பத்தி எண்ணுயிரத்தவர் மடம் எனக் குறிப்பிடப் பட்டிருக்கிறது; இந்தச் சொல் புராதனமாக ரிஷிகளைக் குறிப்பதால், ரிஷிகளின் காலம் தொட்டே இந்த மடம் இருந்து வருவதாக ஒருவாறு ஊகிக்கலாம். ஜம்புரிஷி என்றவர் இத்தலத்தில் வசித்த செய்தியையும் இங்குக் குறிப்பிடலாம். இம்மடத்தில் சமீபகாலம் வரையில் அந்தணர்கள் தங்கள் பாலகர்களுக்குப் பிரும்மோபதேசம் செய்துவைப்பது வழக்கமாயிருந்தது. இன்று இந்தியாவின் பழுத்த விஞ்ஞானியாக விளங்கும் ஸர். எம். விசுவேசுவரைய்யா தமக்கு உபநயனமும் பிரம்மோபதேசமும் இந்த மடத்தில்தான் நடைபெற்றனவென்று அவர் 1923-ஆவது வருடத்தில் திருச்சிராப்பள்ளிக்கு வந்த சமயம் தெரிவித்தார்கள். முழுவதும் கல்மண்டபங்களாக அமைக்கப்பட்டிருந்த இந்த மடமானது சென்ற 1908-ஆவது வருடத்திலேயே மிகவும் ஜீரணதசை அடைந்திருந்ததை ஸ்வாமிகள் நேரில் கண்டிருந்தார்கள்; அவர்களின் மனஸில் இதை நன்கு புதுப்பித்து வேதங்களையும் சாஸ்திரங்களையும் கற்பிக்கும் ஓர் முக்கிய ஸ்தானமாக இதனை அமைத்துவிட வேண்டுமென்ற எண்ணம் அப்பொழுதே உதித்தது. ஸ்வாமிகள் இந்த மடத்தின் திருப்பணியை 1920-ஆவது வருடம் ஆரம்பிக்கக் கட்டளையிட்டார்கள்; சுமார் ரூபாய் 75,000 செலவில் நூதன முறையில் நல்ல வசதிகளுடன் இது கட்டப்பெற்றது. இம் மடத்தில் நடைபெறும் வித்யாஸ்தானத்தின் ஆசாரியர்களுக்கும், மாணவர்களுக்குமாக தனித்தனி விடுதிகளும் கட்டப்பட்டிருக்கின்றன.

திருவானைக்கா மடம்.

இந்த க்ஷேத்திரம் திருவானைக்கா என்றும் ஜம்புகேசுவரம் என்றும் அழைக்கப்பெறும். இது பஞ்சபூத க்ஷேத்திரங்களில் அப்பு க்ஷேத்திரமாக விளங்குகிறது. அப்பு என்பது தண்ணீரைக் குறிக்கும். திருவானைக்கா ஸ்தலத்தில் லிங்கத்தைச் சுற்றி எப்

தாடங்கப் பிரதிஷ்டை

பொழுதும் ஊறிக் கொண்டிருக்கும் தண்ணீரை இறைத்த பிறகே லிங்கத்திற்குப் பூஜை செய்யமுடியும்; இறைக்க இறைக்க அவ்விடம் தண்ணீர் ஊறிக்கொண்டே இருக்கும்; அந்த நீரை முதலில் ஒரு தொட்டியில் இறைத்துப் பிறகு இயந்திர சாதனத் துடன் ஒல்வொரு நாளும் அதை வெளியேற்றுகிறுர்கள். அந்த க்ஷேத்திரத்தின் ஸ்வாமியின் பெயர் ஜம்புநாதர். அம்பிகை அகிலாண்டேச்வரி; ஆதிசங்கரர் பாரத தேசத்தில் திக் விஜயம் செய்தபொழுது, தேசத்தின் பல பாகங்களில் வெவ்வேறு க்ஷேத் திரங்களில் தோன்றியிருந்த பராசக்தியின் உக்கிர கலையைச் சாந்தப்படுத்துவதற்காக ஆங்காங்கு ஸ்ரீசக்கிர ப்ரதிஷ்டைகளைச் செய்துள்ளதாகச் சரித்திரம் கூறுகிறது. காசியில் அன்னபூரணி, வடகன்னடத்தில் மூகாம்பிகை, காஞ்சியில் காமாக்ஷி, திருவொற்றி யூரில் திரிபுரசுந்தரி, ஜம்புகேசுவரத்தில் அகிலாண்டேச்வரி ஆக இவ்விடங்களில் எல்லாம் சங்கரர் ஸ்ரீ சக்கர ப்ரதிஷ்டை செய் திருக்கிறுர். காஞ்சீபுரம், திருவொற்றியூர், திருவானைக்கா ஆகிய க்ஷேத்திரங்களில் ஆலயங்களின் உட்புறங்களில் ஸ்ரீ ஆதிசங்கரரின் பிம்பங்கள் காணப்பெறுகின்றன. அவ்விடங்களிலுள்ள அம்பி கைக்கு வைதிக முறையாகவே பூஜை நடைபெற்று வருகிறது. திருவொற்றியூரிலுள்ள அம்பிகைக்கு மலையாள நாட்டு நம்பூதிரி ஒருவர் பூஜை செய்து வருகிறுர். இந்தச் சக்கர ப்ரதிஷ்டை ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறு விதமாக அமைந்துள்ளது. அகிலாண்டேச்வரி அம்மனுக்குத் தாடங்கம் என்னும் காதிலணியும் ஆபரணத்தில், ஸ்ரீ சக்கரத்தைச் சங்கரர் ப்ரதிஷ்டை செய்துள் ளார். (அதனுடன். அம்பிகையின் முன் ஓர் விநாயகரையும் அவர் ஸ்தாபனம் செய்து, தேவியின் உக்கிரத்தையும் சாந்தப் படுத்தினுர்.) அன்று முதல் அம்பிகையின் இரு காதுகளிலும் அத்தாடங்கங்கள் அணிவிக்கப்பட்டு வருகின்றன. இரத்தினங் களால் பதிக்கப்பெற்ற அந்தத் தாடங்கங்களுக்கு எப்பொழுதா வது பழுதேற்பட்டால், அவைகளைப் புதுப்பித்து மறுபடியும் ஸ்தாபனம் செய்யும் உரிமை காமகோடி பீடத்தின் ஆசாரியர் களுக்கே உரியதாகும். 1846-ஆவது வருடத்தில் அக்காலத்தி லிருந்த ஆசாரிய ஸ்வாமிகளால் ஒரு முறை தாடங்கப் ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது, அந்தத் தாடங்கங்களுக்கு மலினம் ஏற்பட்டிருப்பதாயும், அவைகளைச் சீக்கிரம் புதுப்பித்துத் தாடங்

கப் ப்ரதிஷ்டை செய்ய வேண்டுமென்றும் தேவஸ்தானத்து அதிகாரிகள் 1920-ஆவது வருடத்திலேயே மடத்திற்குத் தெரிவித்துக்கொண்டனர். இவ்விஷயத்தில் ஸ்வாமிகள் தீர்க்கமாக ஆலோசனை செய்து, அவைகள் வெகுகாலம் அழியாமலிருக்க வேண்டுமென்பதை உத்தேசித்து, பழைமையான அந்தத் தாடங்கங்களைச் சீர்திருத்தம் செய்வதுடன் அவைகளை உள்ளடக்கி வைக்கும்படி ஸ்ரீசக்கர வடிவமாக ரத்தினங்கள் பதித்த புதிய இரண்டு மேலுறைகளையும் தயாரிப்பதென முடிவு செய்தார்கள். ஸ்வாமிகளின் விருப்பப்படி இந்தப் பணியை மடத்தின் முக்கிய சீடர்களும், சென்னையில் ரத்தின வியாபாரத்தில் மிகவும் பிரபலமாக விளங்கியவர்களுமான டி. ஆர். டாக்கர் அண்டு சன்ஸின் சொந்தக்காரர்கள் முற்றிலும் ஏற்றுக்கொண்டனர். இந்தப் ப்ரதிஷ்டையை முன்னிட்டு ஸ்வாமிகள் திருச்சிராப்பள்ளிக்கு விஜயமான பொழுது, திருச்சி மக்கள் ஸ்வாமிகளுக்கு அச்சமயம் அளித்த வரவேற்பு அதுவரையில் எவருக்கும் அளிக்கப்படாத வகையில் விளங்கிற்று. அக்காலத்தில் முனிஸிபல் சேர்மனாக இருந்த எப். ஜி. நடேச ஐயர் சமீபத்தில் வெளியிட்டிருக்கும் கட்டுரை ஒன்றில் அவ்வரவேற்பின் சிறப்பைக் கீழேகண்டவாறு விவரித்துள்ளார்.

"முப்பது வருடங்களுக்கு முன் நடந்த ஒரு சம்பவம். நான் திருச்சிராப்பள்ளி முனிஸிபல் சபையின் சேர்மனாக இருந்த காலம். கும்பகோணம் காஞ்சி காமகோடி ஆசார்ய ஸ்வாமிகள் திருவானைக்கா ஜம்புகேசுவரம் அகிலாண்டேச்வரி அம்பாளுக்குத் தாடங்கப் பிரதிஷ்டைக்காக விஜயம் செய்திருந்தார்கள். வரவேற்புக் கமிட்டிக்குத் தலைவனாக என்னையே மகா ஜனங்கள் தேர்ந்தெடுத்து என்னிடம் ஸ்வாமிகளின் வரவேற்புக்கும் பட்டணப்ரவேசத்திற்குமான சகல பொறுப்புக்களையும் ஒப்படைத்து விட்டார்கள். அதனுடன் நகரசபைத் தலைவன் என்கிற வகையிலும், பல ஆண்டுகள் கழித்து இப்பெரிய மகோத்சவத்திற்கு வரும் ஆசார்யாளுக்குகந்த மரியாதையும், கௌரவமும் நிறைந்த வரவேற்புக் கொடுப்பது என் கடமையாயிற்று.........மகாராஜாக்களுக்கும், வைசிராய், கவர்னர் முதலிய பிரமுகர்களுக்கும் அக்காலத்தில் அளித்துவந்த உபசரிப்பு, வரவேற்பு ஏற்பாடுகள், இவைகளுக்குப் பல படிகள் மேலாகவே, ஆசார்ய ஸ்வாமிகளுக்கு வரவேற்பு அளிக்கும் பாக்கியம் எனக்கும் என்னுடன் பக்கபலமாய் நின்று உழைத்த,

காலம்சென்ற எனது ஆருயிர் நண்பர்கள் ஸ்ரீ மு. கந்தசாமி சேர்வை, வக்கீல் ஸ்ரீ ரா. ஸ்ரீநிவாச ஐயர் இவர்களுக்கும் பொது மக்களுக்கும் கிடைத்தது. ஏழு மைல் தூரம் தெற்கு எல்லையிலிருந்து, வடக்கு எல்லைவரை பிரம்மாண்டமான ஊர்வலம், ஏழு ஜதை தனித்தனி நாயனம்; மூன்று ஜதை பாண்டு; நான்கு யானைகள்; பல குதிரைகள்; ஒட்டகங்கள்; பாவட்டாக்கள்; பிருதுகள்; நகரா முதலிய மடத்தைச் சார்ந்த வாத்திய கோஷ்டிகள்; பஜனைக் கோஷ்டிகள்; சேவா சமிதிக்ள் - இவைகள் முன்னும், பின்னும் செல்ல மத்தியில் தந்தச் சிவிகையில் முன் குஞ்சத்தை அடியேன் பிடித்துச் செல்ல, லோககுருவான ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் திவ்ய தேஜஸ்ஸுடன் தெருக்களின் இரு பக்கங்களிலும், வீட்டுத் திண்ணை வாயில்களிலும், மாடிகளிலும் திரண்டு நின்ற லக்ஷக் கணக்கான மக்களுக்கு-ஹிந்துக்களல்லாத கிறிஸ்தவ, முகம்மதிய சமுகத்தினரும் கொண்ட மக்களுக்கு-பக்த கோடிகளுக்குத்-தரிசனமளித்துப் பவனி சென்றார். பூர்ண கும்பங்கள், புஷ்பமாலைகள், ஆர்த்திகள், நிவேதனங்கன், ஆஸ்தீக கோஷங்கள் அபரிமிதம்; கண்கொளாக் காட்சி; ஊர்வலம் மாலை 6 மணிக்குக் கிளம்பியது. திருவானைக்கா மடத்து வாசல் சேர 10 மணிக்கு மேலாயிற்று. நான் ஆனந்த பரவசத்தினால் மெய்ம்மறந்து, உடல் சிலிர்த்து ஆசார்ய ஸ்வாமிகளைச் சாக்ஷாத் பிரதியக்ஷ ஈசுவரனாகவே கருதி அவர்கள் சேவையிலேயே ஈடுபட்டிருந்தேன்."

பிரதிஷ்டை

தாடங்கப் பிரதிஷ்டைக்கு இரண்டு நாட்கள் முன்னதாகவே ஆலயத்தில் பெரிய யாகசாலை நிர்மாணிக்கப்பெற்றிருந்தது. எங்கும் வேத கோஷம்; தேவார கானம்; பஜனைக்கோஷ்டிகளின் நாமாவளியின் சப்தம்; இவைகளெல்லாம் மூன்று நாட்கள் ஒலித்தவாறே இருந்தன. மடத்தில் ஸ்வாமிகள் ஸ்ரீ சந்திர மௌளீச்வரருக்குச் செய்யும் நித்ய பூஜையைக் காண, நியமத்துடன் காத்து நிற்கும் ஆயிரக் கணக்கான மக்களுக்கு ஸ்வாமிகள் அபிஷேக தீர்த்தமும், விபூதி, மந்திராக்ஷதைப் பிரசாதமும் வழங்கி வந்தார்கள். ஸ்ரீ ஜம்புநாதர் அகிலாண்டேச்வரி ஆலயத்தில் ப்ரதிஷ்டைத் தினத்தன்று அடங்க முடியாத ஜனக் கூட்டம். பலருக்கு மூச்சே திணறியதால் அவர்களைக் காற்றோட்டமான இடங்களுக்கு எடுத்து வந்து சிகிச்சை செய்ய வேண்டியதாயிற்று.

குறித்த முகூர்த்தத்தில் (ருத்ரோத்காரி சித்திரை 17-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை - 29-4-1923) ஸ்வாமிகள் தமது திருக்கரங்களால் இரண்டு தாடங்கங்களையும் ஏந்திப் பண்டிதர்களெனப்படும் ஆலய அர்ச்சகர்களின் உதவியுடன் அவைகளை அம்பிகையின் இரு காதுகளிலும் அணிவித்தார்கள். இந்தக் காட்சியை அன்று தரிசித்தவர்களே பாக்யசாலிகள். ஆதிசங்கரரே திரு அவதாரமெடுத்து இந்தத் தாடங்கப் பிரதிஷ்டையைச் செய்தாரென்றும் பக்தர்கள் நினைத்தார்கள். இவ்விதம் அகிலாண்டேச்வரியின் தாடங்கப் பிரதிஷ்டை மிகச் சிறப்பாக நடந்தேறியது. தேவஸ்தானத்தின் பரம்பரை டிரஸ்டிகளான கானாடுகாத்தான் சா. ராம. குடும்பத்தார்களும், திருச்சி மளிகை மு. கந்தசாமி சேர்வையும், மடத்தின் மாஜி ஏஜெண்டு மணக்கால் கந்தசாமி ஐயரும், வக்கீல் ஆர் ஸ்ரீநிவாஸ ஐயரும், வக்கீல் வி. ஜெயராம ஐயரும் இன்னும் பல பக்தர்களும் இந்த விழாவில் சலியாது உழைத்துப் பணியாற்றினார்கள்.

ஆண்டிப்பட்டி ஜமீன்தார் திவான்பகதூர் பெத்தாச்சி செட்டியார் ஸ்வாமிகளின் வரவேற்பில் முக்கிய பங்கெடுத்துக்கொண்டு, தாடங்கப் பரிதிஷ்டை சம்பந்தமாய்ப் பலவிதப் பணிகளை ஆற்றினார். இந்தப் பெரிய மகோத்ஸவத்தில் தேப்பெருமாநல்லூர் சிவனது அன்னதானம் தொடர்ந்து ஏழு நாட்களுக்கு ரங்கூன் ரெட்டியார் சத்திரத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நடைபெற்றது; அவ்வளவு பெரிய அன்னதானம் திருச்சிராப்பள்ளியில் அதுவரை ஒருவராலும் நடத்தப்பெறவில்லையென்று ஜனங்கள் கூறிக்கொண்டனர்.

இந்த விழாவை ஒட்டி மடத்தில் ஆஸ்திகர்களின் மகாநாடு ஒன்று கூட்டப்பட்டது. இந்த மகாநாட்டில் வித்வான்கள் பலரும், மற்றும் காங்கிரஸ்வாதிகள், மிதவாதிகள், ப்ரும்மஞான சங்கத்தவர்கள், உயர்தர அரசாங்க அதிகாரிகள், வழக்கறிஞர்கள், சைவ வைஷ்ணவப் பெரியார்கள், போன்ற பல்வேறு நிலையில் உள்ளவர்களை ஒரே மேடையில் காணும் சந்தர்ப்பம் (அந்த ஆஸ்திக மகாநாட்டினால்) ஏற்பட்டது. காலப்போக்கை அனுசரித்தும் பழமையை புறக்கணிக்காமலும், நமது மதத்தையும், மதத்தின் கோட்பாடுகளையும், எவ்விதம் பாதுகாக்கவேண்டுமென்பதான முயற்சியில் அந்த மகாநாட்டில் சர்ச்சைகள் செய்யப்பட்டன. மூன்று நாட்கள் மகாநாடு நடைபெற்றது. அந்நாளில் மைசூரில்

காங்கிரஸ் தலைவராக விளங்கிய செட்லூர் என்பவர் மகாநாட்டில் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். ஸ்வாமிகள் ஒவ்வொரு நாளும் சபையில் பிரசன்னமாக இருந்தார்கள். சமூக நலனுக்கும், மதத்தைக் காப்பதற்கும் எடுத்துக்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளைக் குறித்து அவரவரின் எண்ணங்களையும், ஆலோசனைகளையும் தாராளமாக எடுத்துரைக்க எல்லோருக்கும் அனுமதி அளிக்கப்பட்டது. காரசாரமான விவாதங்கள் அப்பொழுது எழுந்தன. நீடித்த சர்ச்சைகளுக்குப் பின்னர் பல தீர்மானங்கள், ஸ்வாமிகளின் அனுமதியின் பேரில், ஏக மனதாக நிறைவேற்றப்பட்டன. அவைகளில் திருவானைக்கா மடத்தில் ஒரு விச்வ வித்யாலயம் ஏற்படுத்தவேண்டுமென்பதும் ஒன்று. குருகுல முறையில் அதை நடத்தவேண்டுமென்று ஸ்வாமிகள் எண்ணம் கொண்டார்கள். அதை ஒட்டி மடத்தில் ஒரு வேத பாடசாலையும், ஒரு வேதாந்த பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டன. இந்த மகாநாட்டை நிர்வகிக்கும் பொறுப்பை ஸ்ரீரங்கம் வாணி விலாஸ அச்சகத்தின் ஸ்தாபகரான டி. கே. பாலசுப்ரமண்ய ஐயர் ஏற்றுக்கொண்டிருந்தார். யாவருக்கும் திருப்தி அளிக்கும் வண்ணம் அவர் மகாநாட்டைத் திறமையுடன் நடத்திவைத்ததற்கு ஸ்வாமிகள் அவரை மிகவும் பாராட்டினார்கள். அப்பொழுது அவர் நடத்திவந்த ஹிந்து மெஸேஜ் (Hindu Message) என்னும் ஆங்கிலப் பத்திரிகையில் ஸ்வாமிகளின் திருச்சி விஜயத்தைப் பற்றியும், தாடங்கப் பிரதிஷ்டையின் வைபவத்தைப் பற்றியும், மகாநாட்டின் நடவடிக்கைகளை பற்றியும் விரிவான தலையங்கம் ஒன்று வெளிவந்தது. அக்கட்டுரை இப்புத்தகத்தில் சேர்க்கையாக அமைந்துள்ளது.

தாடங்கப்பிரதிஷ்டை முடிந்த பின்னர் ஸ்வாமிகள் ஸ்ரீரங்கம் ஸ்ரீ ரங்கநாதரையும், மலைக்கோட்டை ஸ்ரீ மாத்ரு பூதேச்வரரையும் தரிசனம் செய்துகொண்டார்கள். அவ்விரண்டு தேவஸ்தானங்களிலும் டிரஸ்டிகள் எல்லா மரியாதைகளுடன் சுவாமிகளை வரவேற்று வழக்கம்போல் ஸ்வாமி தரிசனம் செய்து வைத்தார்கள். ஸ்வாமிகள் திருவானைக்காவில் தங்கியிருந்த பொழுது மாலை நேரங்களில் மடத்தின் பின்புறமாக அமைந்திருந்த பர்ணசாலையில் பக்தர்களுக்குத் தரிசனம் கொடுத்து வந்தார்கள். ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கானவர்கள் அவ்விடம் கூடி ஸ்வாமிகளின் உபதேச மொழிகளைக் கேட்க ஆவலுடன் காத்

திருப்பார்கள். சகலகலாவல்லபர்களான ஸ்வாமிகள் சாஸ்திரங்களி லிருந்து, விஞ்ஞானத்தின் முதிர்ச்சியால் தற்காலம் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்குத் தாத்பரியம் கூறியதையும், மேலும் மிகவும் எளி தாகவும் ஹாஸ்யச் சுவையுடனும், அழுத்தம் திருத்தமாகவும், பற் பல விஷயங்களை எடுத்துக் கூறியதையும் யாவரும் கேட்டு வியப் படைந்தார்கள். ஸ்வாமிகள் பழைமையும், புதுமையும் ஒருங்கே அமைந்த ஸரஸ்வதிவிலாஸமென்று திருச்சியில் அந்நாளில் பேரா சிரியராக விளங்கிய பி. டி. ஸ்ரீநிவாஸ ஐயங்காரும், பி. ஜி. சுந்தரேச சாஸ்திரிகளும் ஸ்வாமிகளைப் பற்றி கூறியதுண்டு.

நெரூரில் ஸ்ரீ ஸதா சிவப்ரும்மேந்திரரின் ஸமாதி தரிசனம்.

தாடங்கப் பிரதிஷ்டை முடிந்தவுடன் ஸ்வாமிகள் காவிரியின் தென்கரை வழியாகக் குழித்தலை, கிருஷ்ணராஜபுரம், மகாதானபுரம் முதலான ஊர்களில் தங்கி, கரூர் வரை விஜ யம் செய்து, பின் நெரூரில் ஸ்ரீ ஸதாசிவப்ரும மத்தின் அதிஷ்டானத்தையும் தரிசனம் செய்துகொண்டார்கள். ஸ்ரீ ஸதாசிவப்ரும் மேந்திரர் கும்பகோணத்தை அடுத்த திருவிசைநல்லூரில் உதித்த வர். காமகோடி பீடத்தின் 57-ஆவது ஆச்சாரியர்களான ஸ்ரீபரம சிவேந்திர ஸரஸ்வதியைத் தமது ஞான குருவாகப் பெற்றவர். ஸதாசிவர் இயற்றிய நூல் ஒன்றில் தமது குருநாதரைச் சந்திர னெனவும், தம்மை எல்லையற்ற ஆனந்தக் கடலெனவும், உவமை கூறியுள்ளார். என்ன அழகிய உவமை! சந்திரனைக்கண்ட கடல் பொங்கி எழுந்து ஆரவாரம் செய்வதுபோல், குருநாதரைக் கண்ட மாத்திரத்தில் உள்ளம் குளிர்ந்து மனதில் தோன்றும் எழுச்சிக ளெல்லாம் பொங்கி, அவர்பால் தன்னையே அர்ப்பணம் செய்யும் நிலையல்லவோ இது? கடலுக்கும், சந்திரனுக்கும் இடையே யார் குறுக்கே நிற்கப் போகிறார்கள்?

ஸ்ரீ ஸதாசிவேந்திரர் யோகசூத்திரவிருத்தி, பிரும்மசூத்ர விருத்தி, சித்தாந்தகல்பவல்லி, சிவமானஸ பூஜை, ஆத்மவித்யா விலாஸம் என்னும் நூல்களையும் தமது வேதாந்த அனுபவங்களை யும், பக்தி மார்க்கத்தையும் போதிக்கும் பல கீர்த்தனங்களையும் இயற்றியுள்ளார். இவைகளைத் தவிர காமகோடி பீடத்தில் தம் குரு பரமசிவேந்திரர் வரை அமர்ந்திருந்த ஆச்சாரியர்களின் சரித் திரங்களையும் விளக்கி, குருரத்தினமாலிகை என்னும் நூலையும் இயற்றியிருக்கிறார். அந்த நூலில் நமது பாரத நாட்டில் அவ்வப்

போது அரசாண்ட பல தேசத்து மன்னர்களைப் பற்றியும், அவ்வக் காலங்களில் அவர்களின் சபைகளில் விற்றிருந்த கவிகளைப் பற்றியும் விவரித்துள்ளார். அந்நூல் பீடத்தின் சரித்திரமாயிருப்பதோடு, தேச சரித்திரமாகவும் விளங்கிவருகிறது. இந்த நூலை ஆராய்ந்து வெளியிடவேண்டியது மடத்தின் சீடர்களின் பொறுப்பாகும்.

ஸ்ரீஸதாசிவர் தம் குருநாதரின் குறிப்பை உணர்ந்து மௌன நிலை அடைந்து, ஐம்புலன்களையும் அடக்கி. யாராவது அன்ன பிக்ஷை அளித்தால் அதைத் தம் கைகளால் ஏந்திப் பெற்று உட்கொண்டு, பின்னர் அதையும் குறைத்துக்கொண்டு அவதூதராக (ஆடையில்லாதவராக) காவிரி நதியின் கரை ஓரங்களிலும், மணல் திட்டுக்களிலும், செடிப்புதர்களிலும், பெரிய மரங்களின் அடிகளிலும், கூடியவரை ஜனங்களின் கண்களுக்குப் புலப்படாதவாறு சஞ்சரித்து வந்தார். ஸதாசிவர் ஒரு சமயம் புதுக்கோட்டைச் சீமையிலுள்ள காடுகளில் சஞ்சரித்தபொழுது அந்நாட்டு மன்னர் விஜயரகுநாத தொண்டைமான் அவரைக் கண்டதாகவும், தமக்கு உபதேசமருள வேண்டுமென அவரை அம்மன்னர் வேண்டிக் கொள்ள, அப்பொழுது ஸதாசிவர் தாம் நின்ற இடத்திலேயே மணலில் சில உபதேசமொழிகளை எழுதிக் காட்டியதாகவும், அந்த மன்னர் அம் மணலை அப்படியே எடுத்து வந்து தம் அரண்மனையில் பூஜையில் வைத்ததாகவும் கூறப்படுகிறது.

ஸதாசிவர் ஒரே காலத்தில் பல விடங்களில் தோன்றிப் பல அதிசயங்களைச் செய்து காட்டியுள்ளார். ஒரு நாள் பிரும்மேந்திரர் தம் சீடர்களை அழைத்து, "காசியிலிருந்து ஓர் அந்தணப் பிரும்மச்சாரி சில நாட்களில் ஒரு சிவலிங்கத்தைக் கொண்டுவருவான்; அப்படி அவன் வரும் நாளே நமக்கு நிர்யாணம் ஏற்படும்; அப்பொழுது இந்த உடலை அகண்டகாவிரியின் தென்கரையில் அமைந்துள்ள நெரூர் என்னும் இடத்தில் சமாதி வைத்து, அதன்மீது ஒரு வில்வ மரத்தையும் வளரச்செய்து அதற்குப் பக்கத்தில் அந்தணர் கொண்டுவரும் சிவலிங்கத்தையும் பிரதிஷ்டை செய்ய வேண்டும்" எனக் கட்டளையிட்டார். குறித்த நாளில் அந்தணரும் காசியிலிருந்து லிங்கத்தைக் கொண்டுவரவே, ஸதாசிவம் தமது பூத உடலை விடுத்தார். சீடர்களும் அவரது புனித உடலைக் குறிப்பிட்ட இடத்தில் சமாதியில் அமைத்து அதன்மேல் ஓர் வில்வ

மரத்தையும், வளரச்செய்தார்கள். குருநாதரது விருப்பப்படி பக்கத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டையும் செய்யப்பெற்றது. (வேறு சில இடங்களிலும் ஸதாசிவ ப்ரும்மம் சமாதி அடைந்ததாகக் கூறுவாருமுண்டு.) இந்த நிகழ்ச்சிகளெல்லாம் இன்றைக்குச் சுமார் 200 வருடங்களுக்கு முன் நடந்தவைகளாகும். ஸதாசிவப்ரும்மம் தாயுமானவரின் சம காலத்தவரெனவும் கூறுவர்.

நம் ஸ்வாமிகள் நெரூரில் சுமார் ஒரு வாரம் தங்கியிருந்தார்கள். அப்பொழுது அவர் ஸதாசிவப்ரும்மத்தின் சமாதியில் அதிக நேரம் தனிமையில் நிஷ்டையிலிருந்து வந்தார்கள். அவர்களின் விருப்பப்படி சமாதிக்கும் அதை அடுத்த சிவாலயத்திற்கும் விசேஷமான ஆராதனைகள் செய்விக்கப்பட்டன.

நெரூரிலிருந்து யாத்திரை மேலே நடந்த காலத்தில் 1923-இல் ஜுன் மாதத்தில் மலையாள நாட்டிலிருந்து ஸ்மார்த்தப் பிராம்மண

கிறிஸ்தவ மதத்தில் சேரத் தீர்மானித்த இளைஞரை மனமாற்றியது.

இளைஞர் ஒருவர் தாம் கிறிஸ்துவ மதத்தில் சேரும் தீர்மானத்துடன் திருச்சிக்கு வந்து சேர்ந்தார். அவர் ஒரு சர்வகலாசாலைப் பட்டதாரி; தெள்ளிய அறிவு படைத்தவர்தான்; ஆனால் இளமை உள்ளம்; எதைப் புகட்டினாலும் ஏற்றுக்கொள்ளும் தன்மை; அவர் தம் ஊரிலுள்ள கிறிஸ்துவப் பாதிரிகளின் பிரசங்கங்களையும் தனி உபதேசங்களையும் கேட்டு மனஸை அவ்வழியில் ஈடுபடுத்திவிட்டார். அப்பொழுது திருச்சியிலுள்ள அவர் நண்பர்கள் சிலர் அக்காலத்தில் திருச்சி முனிஸிபல் சேர்மனாக இருந்த எப். ஜி. நடேச ஐயரிடம் அவரை அழைத்துச் சென்றனர். நடேச ஐயரும் தாம் சென்ற இருபது ஆண்டுகளுக்கு மேல் கிறிஸ்துவ மதத்திலிருந்து, அதில் தாம் கண்ட அனுபவங்களையெல்லாம் விரிவாக அவ்வாலிபரிடம் உரைத்து, ஹிந்து மதம்தான் நமக்குத் தாய் என்றும், தாயைவிட்டு பிரிவது மிகுந்த பாபச்செயல் என்றும், ஏதோ விதிவசத்தினால் தாம் அந்தச் செயலை புரிய நேர்ந்துவிட்டதென்றும், இதைப் பிறர் செய்வதைக் காண தன் மனம் ஒருபொழுதும் சகியாதென்றும் கூறி, இன்னும் பலவிதமாக அவருக்கு நற்போதனைகளையெல்லாம் செய்தார். ஆனால் அந்த இளைஞர் பிடிவாதமாகவே இருந்துவிட்டார். அப்பொழுது ஐயர் அந்த இளைஞரைப் பார்த்து, 'உமது முடிவைப்பற்றி இதற்கு மேலும் நான் எதையும் கூற விரும்பவில்லை; ஆனால் கிறிஸ்துவப்

பாதிரிகளிடம் நீர் தஞ்சம் புகும் முன்னர் உம்மைக் காமகோடி பீடம் ஆசார்ய ஸ்வாமிகளிடம் அழைத்துச் செல்கின்றேன்; அவர்கள் இவ்வூருக்கு அருகில்தான் தங்கியிருக்கிறார்கள். உமக்குச் சம்மதமானால் என்னுடன் வாரும்' என்றார். அந்த இளைஞரும் ஐயர் அவர்களுடன் ஸ்வாமிகளிடம் வரச் சம்மதிக்கவே, இருவரும் மாலை நேரத்தில் ஸ்வாமிகள் தங்கியிருந்த குழுமணி என்னும் கிராமத்துக்குச் சென்றனர். ஸ்வாமிகள் அந்த இளைஞரை அவ்வூர் ஆற்றங்கரைக்கு அழைத்து வரும்படி ஐயர் அவர்களிடம் கூறினார்கள். அவ்விதமே அவர்கள் அவ்விடம் வர, ஸ்வாமிகளும் அவ்விடத்துக்குச் சற்று நேரத்தில் விஜயம் செய்தார்கள். ஆற்றின் கரையோரமாகவே அப்பொழுது தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. ஆற்றின் பெரும்பகுதி மணல் திட்டாகவே இருந்து வந்தது. ஸ்வாமிகள் அவ்விருவரையும் மணல் பிரதேசத்தில் வெகுதூரம் அழைத்துச் சென்று அந்த இளைஞர் கூறிய எல்லாவற்றையும் மிகவும் நிதானத்துடன் கேட்டுக் கிறிஸ்தவ மதத்தில் அவருக்கேற்பட்ட மோகத்தின் காரணங்களை யெல்லாம் நன்கு விசாரித்தார்கள். அந்த இளைஞரும் தம் உள்ளத்திலிருந்த எதையும் ஒளிக்காமல் ஸ்வாமிகளிடம் கூறினார். அப்பொழுது ஸ்வாமிகள் பிற மதங்களிலுள்ள தர்மங்களெல்லாம் நமது மதத்திலேயே இருக்கின்றனவென்றும், அவைகளெல்லாம் எல்லா மதங்களுக்கும் பொதுவான தர்மங்கள்தான் என்றும், ஆகையால் எல்லா மதங்களுக்கும் அடிப்படை ஹிந்து மதந்தானென்றும், மேலும் ஹிந்து மதத்தில் பல விசேஷ தர்மங்கள் கூறப்பட்டுள்ளன வென்றும், கடவுளை அடைய இந்தத் தர்மங்கள் பல மார்க்கங்களைப் போதிக்கின்றன வென்றும், ஹிந்துவாகப் பிறந்த ஒவ்வொருவனும் அவைகளில் ஏதாவதொரு மார்க்கத்தைக் கடைபிடித்துக் கடவுளைச் சுலபமாக அடையலாமென்றும் கூறி, அந்த இளைஞருக்கு இன்னும் பலவிதமாக உபதேச மொழிகளை அருளினார்கள். அன்றிரவு ஸ்வாமிகள் வெகு நேரம் அந்த இளைஞருடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு மறுபடி தொடர்ந்து இரண்டு நாட்கள் அவரை அழைத்து வரும்படி நடேச ஐயரிடம் ஸ்வாமிகள் தெரிவித்தார்கள். அப்பொழுது தனிமையில் அந்த இளைஞருக்குச் சில உபதேசங்களைக் கூறினார்கள். பின்னர் அந்த இளைஞர் தமது எண்ணத்தை மாற்றிக்கொண்டு தமது மதத்தில் நம்பிக்கை

கொண்டவராகி, ஸ்வாமிகளை வணங்கி விடை பெற்றுக் கொண்டு தம் உறவினர்களிடம் போய்ச் சேர்ந்தார். அஞ்ஞானத்தால் மத மாற்றத்தை விரும்பிய ஒருவருக்காக ஸ்வாமிகள் பல மணி நேரத்தைச் செலவிட்டு அவருக்குத் தகுந்தவாறு உபதேசங்களைச் செய்து அவரைத்தடுத்து ஆட்கொண்ட பெருமையைப் பக்தர்கள் எல்லோரும் கொண்டாடினார்கள்.

பாடகச்சேரி சுவாமிகள் செய்த ஆலயத் திருப்பணி.

இன்றைக்குச் சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்னர் கும்பகோணத்தில் இல்லறத்தை விட்டுத் துறவறம் பூண்ட ஓர் பெரியார் அடிக்கடி எல்லா வீதிகளிலும் காணப்பட்டு வந்தார். அவரைப் பாடகச்சேரி சுவாமிகள் என்று மக்கள் அழைத்து வந்தனர். அப்பொழுது சுமார் 30 பிராயமே நிறைந்த அவர் தூய வெள்ளை வேஷ்டி ஒன்றை இடுப்பிலும் கழுத்திலுமாகச் சுற்றிக்கொண்டு, நெற்றியில் விபூதி அணிந்து, ஓர் சிறிய பித்தளைச் செம்பை ஒரு கயிற்றில் கோத்து, அதைத் தம் இடுப்பின் முன்புறம் தொங்கவிட்டுக்கொண்டு இருப்பார். நல்ல மேனி படைத்த அவர் கண்களில் ஒளி வீசிக்கொண்டிருக்கும். அவர் மிதமாக இரண்டொரு வார்த்தைகளையே பேசுவார். அவர் கையில் சிறியதொரு தடியையும் ஏந்திவருவார். வேளாள வகுப்பைச் சார்ந்த அவர் எல்லாச் சமுகத்தினரின் நன் மதிப்புக்கும் பாத்திரராக இருந்து வந்தார். அவருக்குக் கால பைரவர் உபாஸனை உண்டெனக் கூறுவர். அவர் தாங்கிவரும் செம்பில் பொது மக்கள் தாராளமாக நாணயங்களைச் சேர்ப்பிப்பார்கள். தொழிலாளிகளும், வியாபாரிகளும் தவறாது அந்தச் செம்பை சிறு நாணயங்களால் ஒவ்வொரு நாளும் நிரப்பிவிடுவார்கள். அவர் எவரையும் வற்புறுத்தி எதையும் கேட்கமாட்டார். கும்பகோணத்தில் வாடகைக்கு விடப்படும் ஒற்றை மாட்டு வண்டிகள் அதிகம். அந்த வண்டிகளின் சொந்தக்காரர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் ஒரு காலணாவையாவது அந்தச் செம்பில் போடாமல் இருக்க மாட்டார்கள். இவர் எதற்காக நிதி வசூல் செய்கிறார் என்பதைப் பற்றி பொதுமக்கள் கவலைப்படுவதேயில்லை. நல்ல பாத்திரத்தில் சேரும் தொகை சிறந்த ஓர் தர்மத்திற்கே சேரும் என்னும் நம்பிக்கை நம் மக்களுள் பொதுவாக உண்டு. செப்பு நாணயமாகச் சிறிது சிறிதாகச்சேர்ந்த தொகை முடிவில் ஓர் பெரிய நிதியாகத்திரண்டது.

பாடகச்சேரி சுவாமிகளின் பார்வையும் மனமும் அவ்வூர் மிகப்பழமையான ஸ்ரீ நாகேச்வரஸ்வாமி ஆலயத்தின் பழுதடைந்த கோபுரத்தைக் கவர்ந்தன.

பொதுவாகக் கோபுரங்களின் பெருமையைப் பற்றி ஆகம சாஸ்திரங்கள் மிகவும் விசேஷமாகக் கூறுகின்றன. பிரயாணத்தின்போது யாவரும் தம் கண்களில் விழும் ஆலய கோபுரங்களை வணங்கி அவ்வாலயங்களுள் பிரதிஷ்டை செய்யப் பெற்றிருக்கும் மூர்த்திகளைத் தியானம் செய்யவேண்டும். கோபுர தரிசனத்தினுலேயே மக்களுக்கு விசேஷ நன்மைகள் ஏற்படும். இன்றும் வயது முதிர்ந்தவர்கள் கோபுரங்களைக் காணும் போதெல்லாம் கைகூப்பி வணங்கிவருவதை நாம் காண்கிறோம். கோபுரங்களை உற்று நோக்கினுல் பல விசேஷமான அம்சங்களை நாம் காணலாம். விஜயநகர சாம்ராஜ்யத்தின் அதிபராக விளங்கிய ஸ்ரீ கிருஷ்ண தேவராயர் இராமேச்வரத்திற்கு விஜயம் செய்த பொழுது நம் தென்னுட்டிலுள்ள பல தேவாலயங்களின் கோபுரத் திருப்பணிகளைச் செய்வித்தார் எனத் தேச சரித்திரம் கூறுகிறது. அஸ்திவாரம் மாத்திரம் போட்டு அவரால் செய்து முடிக்கப் பெருத சில கோபுரங்களையும் இன்று நம் நாட்டில் நாம் காணலாம். இவர் கட்டியவை இராயகோபுரமென்று கூறப்படுகின்றன. இராயர் என்னும் சொல் கிருஷ்ணதேவராயரையே குறிக்கும். இராய கோபுரங்களில் முதன்மையாக ஸ்ரீரங்கம் தெற்கு வாயிலில் தோன்றும் மொட்டைக் கோபுரத்தைக் கூறலாம். கிருஷ்ணதேவராயர் ஸ்ரீரங்கம், திருவானைக்கா. மதுரை முதலான இடங்களில் ஆரம்பித்து முடிவுபெருத இத்திருப்பணிகளைப் பூர்த்தி செய்து வைக்கப் பின்னர் மன்னர்களோ மற்றவர்களோ இதுவரை தோன்ருதது நாட்டின் துர்ப்பாக்கிய மாகும்.

பாடகச்சேரி சுவாமிகளின் கண்ணைக் கவர்ந்த கும்பகோணம் நாகேசுவர சுவாமி ஆலயத்தின் கோபுரமானது மரம் செடிகள் முளைக்கப் பெற்றும், அநேக விடங்களில் பிளப்புண்டும் பொது ஜனங்களுக்கு அபாயம் விளைவிக்கக் கூடிய நிலையில் இருந்தது. அம் மாபெரும் கோபுரத்தைச் சீர்படுத்தவே பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் தேவையாயிருந்தது. மற்றும் பழமையான அவ்வாலயத்தின் மற்ற பகுதிகளையும் சீர்படுத்த வேண்டியிருந்தது.

அந்த ஆலயம் அப்பர் சுவாமிகள் பாடிய ஸ்தலங்களில் ஒன்ருகும். அக்கோவிலில் சுமார் 6 அடி உயரமுள்ள நடராஜ

மூர்த்தம் உளது. அந்த மூர்த்தம் அமைந்துள்ள சபாமண்டபம் ஓர் நகரும் விமானம் போல அமைந்துள்ளது. கல்லினுல் செதுக்கப்பட்ட சுமார் 10 அடி குறுக்கள்வுள்ள அவைகளின் சக்கரங்கள் கல் அச்சுகளில் கோக்கப்பட்டிருப்பதைப் பார்த்தால் சிற்பிகள் அவைகளை எவ்விதம் அமைத்தார்கள் என்று நாம் வியப்பையே அடைவோம். விமானத்தை முழுப்பலத்துடன் முண்டி இழுக்கும் தோற்றத்தில் மிகப்பெரிய கல்குதிரைகளையும், கல்யானைகளையும் நாம் அவ்விடம் காண்கிறோம். மேலும் இந்த ஆலயத்தில் ஒவ்வொரு ஆண்டிலும் சித்திரை மாதம் 11–ந் தேதி தொடங்கி மூன்று நாட்கள் சூரிய பூஜை நடைபெறும். அந்த மூன்று நாட்களும் சூரியனது ஒளி சிவிலிங்கத்தின் மேல் காலை வேளையில் நேராகவிழும்.

பாடகச்சேரி சுவாமிகள் தாம் சேர்த்த பொருளைக்கொண்டு இவ்வாலயத்தைச் சீர்திருத்தம் செய்யும் பணியில் சில வருடங்கள் ஈடுபட்டுத் திருப்பணியையும் மிகவும் சீரிய வகையில் செய்து முடித்தார். பின்னர் கும்பாபிஷேகத்திற்கும் நாள் குறிப்பிடப் பட்டது. அப்பொழுது அவர் மனஸிற்கு கவலை தரக்கூடிய ஓர் நிகழ்ச்சி தோன்றியது. திருப்பணியில் ஈடுபட்டிருந்த விசுவகர்ம வகுப்பினர் அபிஷேகத்தைத் தாங்களே முதலில் செய்யவேண்டுமென்றும் அதன் பிறகே ஆதி சைவர்களான அர்ச்சகர்கள் அபிஷேகம் செய்ய வேண்டுமென்றும் கூறினர். இதில் அபிப்பிராய பேதம் ஏற்படவே விசுவகர்ம வகுப்பினர் நீதிஸ்தலத்தில் வியாஜ்ஜியத்தையும் தொடர்ந்து விட்டார்கள். தாம் மிகவும் அன்புடன் செய்துவந்த இறைவன் திருப்பணி பூர்த்தி அடையாமல் போய்விடுமோ என்ற கவலை பாடகச்சேரி சுவாமிகளின் உள்ளத்தில் குடிகொண்டது. கும்பாபிஷேகத்திற்கு நாள் நெருங்கிவிடவே பொதுமக்களின் மனதிலும் கவலை உண்டாயிற்று. பின்னர் பாடகச்சேரி சுவாமிகள் நம் ஆசார்ய சுவாமிகளை 1920 ஞு தஞ்சை ஜில்லா விஷ்ணுபுரத்தில் தரிசித்து அவர்களிடம் இவ்விஷயங்களையெல்லாம் விவரமாகக் கூறி, இதற்கு ஒரு முடிவைக்கண்டு குறித்த காலத்தில் கும்பாபிஷேகம் நடைபெறும்படி அனுக்கிரகிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். நம் ஸ்வாமிகளும் பாடகச்சேரி ஸ்வாமிகள் உள்ளன்புடன் செய்துவரும் தெய்வத் திருப்பணியைப் போற்றி இவ்விஷயத்தில் தம்மால் ஆவதைச் செய்வதாக ஏற்றுக்கொண்டார்கள். பின்னர் அவர்கள் சிற்பிகளையும் ஆதி சைவர்களையும் தனித்தனியே வரவழைத்து

அவர்களின் கக்ஷிகளையும் ஆதாரங்களையும் கேட்டறிந்து, மடத்திலிருந்து கூறும் முடிவை இருவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர்களிடம் தனித்தனியே ஓர் ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்டார்கள். இரு கக்ஷியாரும் கோர்ட்டிலும் அதுபோலவே மனுவையும் தாக்கல் செய்தார்கள். இதனால் இந்த வியாஜ்ஜியத்தை எவ்விதம் தீர்மானம் செய்வதென்று கவலை கொண்டிருந்த நீதிபதியின் பொறுப்பும் ஓர் அளவு குறைந்தது. ஸ்வாமிகளின் முடிவையே இதில் தீர்ப்பாகக் கூறுவதென அவரும் முடிவுசெய்து கொண்டார். விக்கிரகங்களை அமைக்கும் விசுவகர்ம வகுப்பினர் கும்பாபிஷேக காலங்களில் முதலில் அபிஷேகம் செய்வதைச் சாஸ்திரங்கள் குறிப்பாகத் தடைசெய்யவில்லை என்றும், அவ்விதம் செய்வதால் மூர்த்திகளின் பெருமை பாதிக்கப்படாதென்றும், கும்பாபிஷேகத்திற்கு முன் அவர்கள் அபிஷேகம் செய்வதை அனுமதிக்கலாம் என்றும் ஸ்வாமிகள் தம் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள். இந்த அபிப்பிராயத்தை ஆதாரமாகக் கொண்டே கும்பகோணம் ஜில்லா முனிசீப்பும் இந்த வியாஜ்ஜியத்தில் தம் தீர்ப்பைக் கூறினர். பின் இரு கக்ஷிகளுள் மனத்தாங்கல் எதுவுமில்லாமல் அந்த ஆலயத்தின் ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகத்தை ருத்ரோத்காரி வருடம் ஆனி மாதம் (1923 ஜூனில்) வெகு விமரிசையாக நடத்தி வைத்தார்கள். அப்பெரிய கும்பாபிஷேகத்தைப் பல்லாயிரக் கணக்கான மக்கள் தரிசித்தனர். பாடகச்சேரி ஸ்வாமிகளும் அளவு கடந்த மகிழ்ச்சியை அடைந்தார். வியாபாரிகள், வக்கீல்கள், மிராசுதார்கள், உத்தியோகஸ்தர்கள் யாவரும் அவருடன் ஒத்துழைத்து அந்த விழாவை மிகவும் சிறப்பாக நடத்தி வைத்தார்கள். தேப்பெருமாநல்லூர் அன்னதான சிவன் அவ்விழாவில் பெரியதொரு அன்னதானத்தை நடத்திவைத்தார். சிவனிடம் பாடகச்சேரி சுவாமிகளுக்கு நல்ல மதிப்பும் மரியாதையுமுண்டு. சிவன் அவருக்கு அடிக்கடி ஊக்கமளித்துத் திருப்பணி செவ்வனே நடைபெற வேண்டிய உதவிகளை எல்லாம் செய்துவந்தார்.

இன்றைக்குச் சில வருடங்களுக்கு முன்னர் பாடகச்சேரி சுவாமிகள் திருவொற்றியூரில் சமாதி அடைந்தார். அவர் சமாதியடைந்த இடத்தில் ஒரு மடம் கட்டிவைக்கப் பெற்று அவரது சீடர்களால் நன்கு பரிபாலித்து வரப்பெறுகிறது. பட்டினத்தடிகள் சமாதிக்குப் போகும் மார்க்கத்தில் அது அமைந்துள்ளது.

இராமலிங்க சுவாமிகளின் பெரிய உருவப்படம் ஒன்று அங்கு வைக்கப்பட்டிருக்கிறது. மனதிற்கு சாந்தியை அளிக்கும் இடமாக அஃது அமைந்திருக்கிறது.

பாடகச்சேரி சுவாமிகளைப் பற்றிக் கூறும்பொழுது மற்ெருரு சிவ பக்தரது நினைவும் வருகிறது. சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் கும்பகோணத்தில் சிவக்கொழுந்து என்னும் பெயர்பெற்ற ஓர் நாதஸ்வர வித்வான் இருந்தார். அவருக்கு ஓர் இளைய சகோதரர் உண்டு. அவர் தமது வாழ்நாளின் பெரும்பகுதியைத் தர்ம காரியங்களிலே ஈடுபடுத்தி வந்தார். கும்பகோணம் சங்கர மடத்திற்குத் தென்புறம் காளஹஸ்தீச்வரர் ஆலயம் என்ற ஒரு கோயில் இருக்கிறது. அந்நாளில் அவ்வாலயத்திற்குக் கோபுரம் இல்லாமலிருந்தது. இக்குறையை உணர்ந்த அந்தச் சிவபக்தர் ஒரு பித்தளைச் செம்பினுல் ஓர் உண்டியல் தயாரித்து, அதை ஒவ்வொரு நாளும் ஆலயத்திற்கு எதிர்ப்புறம் சாலையின் ஓரமாக ஒரு நாற்காலியின் மீது காலை 5 மணிக்கே வைத்துவிடுவார். அவர், விடியுமுன் காவேரியில் நீராடி விபூதி உத்திராக்ஷம் தரித்து அந்த உண்டியலின் அருகே சில மணி நேரம் நின்று 'சிவதருமம் சிவதருமம்' எனக் கூறிக்கொண்டே இருப்பார். அவருடைய தோற்றமும் குரலும் அவ்வழியே காவிரிக்கு நீராடச் செல்பவர் களின் மனஸையும், வேறு அலுவலாகச் செல்பவர்களின் மனஸை யும் இழுத்துவிடும். அந்தச் செம்பில் ஒரு தம்பிடியையாவது போடாது அவரைத்தாண்டி எவரும் செல்லமாட்டார்கள். ஒவ்வொரு நாளும் அவர் மடத்திற்கு வந்து வெகுதூரத்தில் நின்று ஸ்வாமி களைத் தரிசனம் செய்துகொண்டு போவார். சுமார் 5, 6 வருடங்கள் செப்பு நாணயமாகச் சேமித்த தொகையைக் கொண்டு காளஹஸ்த் தீசுவரர் ஆலயத்திற்கு ஓர் அழகிய கோபுரத்தையே அவர் அமைத்துவிட்டார். உள்ளன்பும், ஊக்கமும் இருந்தால் எந்தப் பெரிய காரியங்களையும் சாதாரண மனிதன்கூடச் செய்துமுடிக்கலா மென்பதற்கு உதாரணமாக இந்தச் சிவபக்தரைப்பற்றி அக்காலத் தில் ஸ்வாமிகள் சிறப்பாகக் குறிப்பிடுவதுண்டு.

தேசபந்து ஸி. ஆர். தாஸுக்கு அளித்த பேட்டி

1922-ஆவது வருடம் கயா காங்கிரஸ் மகாசபையில் ஏற்பட்ட சில கொள்கை வேற்றுமையினுல் அந்த மகா சபைக்குத் தலைமை வகித்த, வங்காளத்தின் ஒப்பற்ற தலைவரான சித்தரஞ்சனதாஸ்

காங்கிரஸிலிருந்து விலகி, ஸ்வராஜ்ய கட்சி என்ற பெயருடன் ஒரு புது ஸ்தாபனத்தை அமைத்தார். இவருக்குத் தமிழ் நாட்டில் எ. ரங்கஸாமி அய்யங்கார், எஸ். ஸ்ரீனிவாஸ அய்யங்கார், எஸ். சத்தியமூர்த்தி போன்ற தலைவர்கள் ஆதரவளித்தனர். தேர்தல்களில் போட்டியிட்டுச் சட்டசபைகளைக் கைப்பற்றி, எதிர்க்கட்சிகளில் இருந்து கொண்டு அரசாங்கத்தை ஸ்தம்பிக்கச் செய்வதே இக்கட்சியின் நோக்கமாகும். காங்கிரஸ் மகாசபையோ அக்காலத்தில் காந்தி அடிகளின் திட்டப்படி சட்டசபைகளைப் பகிஷ்கரிக்க வெண்டுமெனத் தீர்மானித்தது. அப்புதிய கட்சியின் பிரசாரத்திற்காகவும், அக்கட்சியின் வேலைகளுக்கு நிதி திரட்டவும், ஸ்ரீயுத தாஸ் நாடு முழுவதும் அப்பொழுது சுற்றுப் பிரயாணம் செய்தார். 1923-ஆவது வருடம் ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் அவர் தமிழ் நாட்டில் சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டார். அப்பொழுது நமது ஸ்வாமிகள் திருச்சி ஜில்லா பட்டவாய்த் தலையில் விஜயம் செய்திருந்தார்கள். ஸ்வாமிகள் ஓர் ஒப்பற்ற மதத் தலைவராகவும், பெரிய மேதாவியாகவும், அன்னிய நாகரீகத்திலிருந்தும் ஆட்சியிலிருந்தும் நமது நாடு விடுதலை பெறவேண்டுமென்று மிகவும் ஆர்வமுள்ளவராகவும், இருப்பதை தாஸ் நண்பர்கள் மூலம் கேள்வியுற்று, ஸ்வாமிகளைத் தரிசிக்கவேண்டுமென்று தமது விருப்பத்தைச் சத்தியமூர்த்தியிடம் தெரிவித்தார். சத்தியமூர்த்தியும் ஸ்வாமிகளிடமிருந்து அனுமதி பெற்று, இந்தச் சந்திப்பிற்கு ஏற்பாடு செய்தார். ஸ்வாமிகள் தங்கியிருந்த பட்டவாய்த் தலையில் இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. குறிப்பிட்ட நாளில் இந்தச் சந்திப்பை ஒட்டிப் பொதுமக்களும், நூற்றுக்கணக்கான தொண்டர்களும் பட்டவாய்த் தலையில் கூடிவிட்டனர்.

ஸி. ஆர். தாஸும் ஸ்வாமிகளை முறைப்படி வணங்கி அவரது திவ்ய தேஜோமயமான உருவத்தில் ஈடுபட்டுச் சற்று நேரம் மௌனமாக இருந்தார். சத்தியமூர்த்தி, எ. ரங்கசாமி அய்யங்கார் இவர்களுடன் மேலும் இரண்டொருவரே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். ஸ்வாமிகள் தாஸ் அவர்களது க்ஷேமங்களையும், அவரது குடும்ப நலன்களையும் பற்றிப் பல கேள்விகளைக் கேட்டுப் புதிய கட்சியினால் தேசத்திற்கு விளையக்கூடிய நன்மைகளைப் பற்றியும் வினவினார்கள். மேலும், தமது சொந்த சந்தேகங்கள் சிலவற்றையும், ஆலோசனைகள் சிலவற்றையும் ஸ்வாமிகள் அப்

பொழுது தாஸிடம் எடுத்துக் கூறினர். வெகு நுட்பமான கேள்வி களையெல்லாம் கேட்ட ஸ்வாமிகளின் அரசியல் ஞானத்தையும் கண்டு ஸி. ஆர். தாஸ் வியந்தார். கேள்விகளெல்லாம் எளிதில் பதிலளிக்க முடியாதவாறு இருந்தன. முடிந்தவரையில் அவை களுக்குத் தாஸ் பதில் கூறி, ஸ்வாமிகளின் சந்தேகங்களுக்குத் திருப்தி அளித்தார். ஸ்வாமிகளும் எந்தக் கட்சியானாலும் மக்க ளுக்குக் கடவுள் பக்தி குறையும் வண்ணம் நடந்துகொள்ளலாகா தென்று கூறித் தாஸுக்குத் தமது பூர்ண ஆசியை அளிப்ப தாகவும் அனுக்கிரஹித்தார்கள். மேலும் தாம் ஒரு ஸந்யாஸி என்னும் காரணத்தினாலும், மதத்தின் தலைவர் என்ற முறையி லும், எந்தக்கட்சியிலும் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள முடியா தென்றும் ஆயினும் நம் நாடு சுதந்திர நாடாகி மக்கள் சுகமாக வாழும் நன்னாளைத் தாம் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாயும் கூறினர். தாஸும் மிகவும் மனமகிழ்ச்சி அடைந்தவராய் ஸ்வாமி களிடம் விடைபெற்றுக் கொண்டார். தாஸ் தமிழ் நாட்டில் சுமார் பத்து நாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு. திருச்சிக்கு வந்து, அப்பொழுது திருவானைக்காவில் தங்கியிருந்த நமது ஸ்வாமி களை மறுமுறையும் தரிசித்துக்கொண்டார். அப்பொழுது ஸ்வாமி கள் முன்னிலும் அதிகமான அன்புடன் அவரை ஆசீர்வதித்தார். மடத்தின் சிஷ்யர்கள் பலர் ஸ்வராஜ்யக் கட்சிக்கு அக்காலத்தில் ஆதரவளித்தனர். அவர்களில் தஞ்சை ஜில்லா மிராசுதார்களான மூலங்குடி கோபாலகிருஷ்ண ஐயர், மகிழஞ்சேரி சாம்பசிவ ஐயர், தோழுதூர் டி. வி. நாராயணஸ்வாமி ஐயர் இவர்களை முதன்மை யாகக் குறிப்பிடலாம்.

சென்னை ஹிந்து தர்ம ஸ்தாபன மசோதா

ஜஸ்டிஸ் கட்சியின் தலைவரான பனகல் ராஜா அவர்களின் மந்திரி சபையில் 1923-ஆவது வருடம் ஹிந்துக்களின் தர்ம ஸ்தா பனம் சரிவரப் பாதுகாக்கப் படவேண்டு மென்ற நோக்கத்துடன் மசோதா ஒன்றைச் சர்க்காரே கொண்டு வந்தனர். அந்த மசோதா ஓர் தனிக் கமிட்டியின் பரிசிலனைக்கு விடப்பட்டிருந்தது. மசோதாவைப் பற்றிப் பொது ஜனங்கள் தங்கள் அபிப்பிராயங் களை மசோதா விஷயத்தில் தெரிவிக்கும்படி அவர்களுக்குத் தனிமையில் கடிதங்களும் சர்க்கார் அனுப்பியிருந்தனர். மேலும் தனிக்கமிட்டியின் முன் ஆஜராகி அவர்கள் தங்கள் அபிப்பிராயங்

களை நேரிலும் தெரிவிக்கலாமென்றும் பிரகடனம் செய்திருந் தார்கள்.

மடத்தின் சார்பாகவும் மகஜர் ஒன்று தயாரிக்கப்பட்டது. அனுபவம் வாய்ந்த வழக்கறிஞர் பலர் அதைத் தயாரிக்க முன் வந்தனர். ஸ்வாமிகள் அவர்களுக்கு ஆலோசனை கூறியதுடன், ஆங்காங்கு சேர்க்கவேண்டிய பொருத்தமான வார்த்தைகளையும் தாமே எடுத்துக் கொடுத்தார்கள். அந்த மகஜருடன் பனகல் ராஜாவைப் பேட்டி காண கும்பகோணம் வக்கீல் எஸ். மகாலிங்க ஐயர் அனுப்பப்பட்டார். பனகல் ராஜா மசோதாவைப் பெற்றுக் கொள்ளும் முன்னர், ஐயரிடம் தர்ம ஸ்தாபனங்களைப் பாதுகாக்க இவ்விதமாக ஒரு சட்டம் தேவை யென்பதை ஸ்வாமிகள் ஒப்புக் கொள்கிறார்களா, அல்லது அவசியம் இல்லையென்று நினைக்கிறார் களா, என்று கேட்க, ஐயரும் இவ்விதம் ஒரு சட்டம் அவசிய மென்பதாகவே ஸ்வாமிகள் எண்ணுகிறார்களென்றும், ஆனல் மசோதாவின் சில ஷரத்துக்கள் சட்டத்தின் நோக்கத்தையே பாதிக்கக் கூடியதாக அமைந்திருக்கின்றனவென்றும், அவை சம்பந்தமாகவே ஸ்வாமிகள் மடத்தின் சார்பாக மகஜர் அனுப்பி யுள்ளாரென்றும் தெரிவித்து விட்டு மகஜரையும் அவரிடம் கொடுத்தார். மகஜரின் துவக்கத்திலேயே சர்க்காரின் இந்த நல்ல முயற்சி பெரிதும் பாராட்டப் பட்டிருந்தது. அதைக் கண்ணுற்ற பனகல் ராஜாவும் மிகவும் மகிழ்ச்சி அடைந்து, ஸ்வாமிகளின் ஆசியால் இந்த மசோதா சட்டசபையில் நிறைவேறித் தர்மங்கள் சரிவர பரிபாலிக்கப்பப்பட்டு வருமென்று தாம் நம்புவதாகத் தெரி வித்தார். அன்று பிற்பகல் தனிக் கமிட்டியின் கூட்டம் சென்னை ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டை சட்டசபை மண்டபத்தில் நடை பெற்றது. மடத்தின் சார்பாக அக்காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கிய வக்கீல் டி. ஆர். இரரமச்சந்திர ஐயர் ஆஜராகி மகஜரின் விஷயங்களையெல்லாம் விளக்கினர். மாகாணத்திலுள்ள மற்ற பாகங்களிலிருந்தும் மதத் தலைவர்களின் பிரதிநிதிகள் தங்கள் தங்கள் ஆட்சேபனைகளை எடுத்துக் கூறினர். கூட்டம் முடியு முன்னர் பனகல் ராஜா, "காமகோடிபீடம் ஆச்சாரிய ஸ்வாமிகள் இந்த மசோதாவின் நோக்கத்தைப் பொதுவாக ஆதரித்திருக்கிறார் கள்; அவர்களுடைய மற்ற யோசனைகளும் சர்க்காருக்கு மிகவும் உதவியாயிருக்கும்; இவ்விஷயத்தில் ஸ்வாமிகளுக்குச் சர்க்கார்

மிகவும் கடமைப்பட்டுள்ளார்கள்; தனிக் கமிட்டியாரின் நன்றியையும் வணக்கத்தையும் ஸ்வாமிகளுக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்" என்று வக்கீல் இராமச்சந்திர ஐயரிடம் கூறினர்.

திருச்சி ஜில்லாவில் விஜய யாத்திரை.

1923-வது வருடம் திருவானைக்காவில் சாதுர்மாஸ சங்கல்பம் முடிவுபெற்றவுடன் ஸ்வாமிகளின் விஜய யாத்திரை சில மாதங்கள் தொடர்ந்து திருச்சி ஜில்லாவிலேயே கரூர், குழித்தலை, லால்குடி தாலுக்காக்களில் நடைபெற்று வந்தது. அந்த ஜில்லா வாசிகள் மிகுந்த பக்தியுடன் மடத்தின் பணிகளில் ஈடுபட்டு, ஒவ்வொரு கிராமத்திற்கும் ஸ்வாமிகளை அழைத்துச் சென்று வழிபாடுகளையெல்லாம் மிகவும் சீரிய முறையில் நடத்திவைத்தனர். 1924-ஆவது வருடம் ஸ்வாமிகள் திருச்சியில் தங்கியிருந்த பொழுது காங்கிரஸில் முதன்மையாக விளங்கிய தலைவர்களுள் ஒருவரான புருஷோத்தமதாஸ் தாண்டன் ஸ்ரீ ஸ்வாமிகளைத் தரிசித்துக் கொண்டார். அப்பொழுது ஹிந்திப் பிரசாரத்திற்காக ரூபாய் 1,000 அவரிடம் ஸ்வாமிகள் நன்கொடையாக அளித்தார்கள்.

காவிரி வெள்ளமும். ஸ்ரீ ஆசாரியரின் கருணை வெள்ளமும்.

1924-ஆவது வருடம் ஜூலை மாதம் ஸ்வாமிகள் திருவையாற்றில் அவ்வூர் மகாஜனங்களின் வேண்டுகோளுக்கிணங்கி காவிரியின் வட கரையில் புஷ்யமண்டபத் துறையைச் சார்ந்த கட்டிடத்தில் தங்கி, அவ்வருட வியாஸ பூஜையை மிகவும் விமரிசையாக நடத்தினர்கள். பக்கத்திலுள்ள தஞ்சை நகர்த்திலிருந்தும், சுற்றுப்புறங்களிலிருந்தும் ஸ்வாமிகளின் பூஜையைத் தரிசிக்க ஏராளமான பக்தர்கள் கூடியிருந்தனர். அந்த வருடம் ஆடிப்பெருக்கின்போது, எதிர்பாராதபடி காவிரி அம்மன் கரை புரண்டு ஓட ஆரம்பித்து விட்டாள். சிலவிடங்களில் கரைகளும் தகர்ந்தன; பல விடங்களில் உடைப்புக்கள்; காவிரியின் கரையிலேயே ஸ்வாமிகளின் பூஜையும் வைக்கப்பட்டிருந்ததால், பூஜா மண்டபத்திற்குள்ளும் தண்ணீர் புகுந்து விட்டது. இதைக் கண்டு, திருவையாறு வாசிகள் மிகவும் கலக்கமுற்று ஸ்வாமிகளிடம் வந்து வேறு இடத்திற்குப் பூஜையை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டனர். சாதுர்மாஸ சங்கல்பம் முடியும் வரை எவ்வித ஆபத்து நேர்ந்த போதிலும் வேறு இடத்திற்குப் பூஜையை மாற்ற

இயலாதென ஸ்வாமிகள் கூறிவிட்டார்கள். பொது மக்களின் கவலை பெருகிற்று; அதற்கேற்றவாறு வெள்ளமும் மேலும் அதிகரித்தது. காவிரி வெள்ளம் வடக்கே சுமார் மூன்று மைல் தூரத்திலுள்ள கொள்ளிடம் வரையில் பரவி எங்கும் ஒரே தண்ணீர் மயமாகி விட்டது. ஏழைகளின் குடிசைகளெல்லாம் தண்ணீருக்குள் முழுகி விட்டன. அவைகளில் பெரும்பான்மை யானவை ஹரிஜனங்களின் குடிசைகளாகும். வீடுகளையும், பொருள்களையும், ஆடு மாடுகளையும், இழந்த அந்த மக்கள் தங்கள் குழந்தைகளுடனும், மற்றும் வயது முதிர்ந்த உறவினர்களுட னும், காவிரியின் கரையில் மேடான இடங்களில் தங்க ஆரம்பித்தனர். உணவின்றித் தவிக்கும் இந்த நூற்றுக்கணக் கான குடும்பங்களின் பரிதாபமான நிலையை ஸ்வாமிகள் நேரில் கண்டு வருந்தி, அவர்களுக்கு எந்த எந்த விதங்களில் உதவியளிக்க முடியுமோ அந்தந்தவழிகளில் திட்டங்களையெல்லாம் வெகு சீக்கி ரத்தில் வகுத்து, அவற்றை நிறைவேற்ற அவ்வூர்ப் பிரமுகர் களைக் கொண்டு ஏற்பாடு செய்தார்கள்; மடத்தில் நடைபெறும் அன்னதானத்தைக்கூட குறைத்துக் கொண்டு, மடத்தின் உக்கிரா ணத்திலிருந்த உணவுப் பொருள்களின் பெரும் பகுதியைக் கொண்டு அன்றாடம் உணவு தயாரிக்கச் செய்து, அதைப் பெரிய அண்டாக்களில் நிரப்பி மடத்தின் வண்டிகளில் ஏற்றி ஏழை மக்களுக்கு விநியோகம் செய்யும்படி கட்டளையிட்டார்கள்; அந்த விநியோகப்பணியை அவ்வூர்க் காங்கிரஸ் தலைவராக இருந்த வக்கீல் சாரங்கபாணி ஐயங்கார் பல தொண்டர்களின் உதவியைக் கொண்டு நிறைவேற்றி வைத்தார். சுமார் பதினைந்து நாட்கள் அந்த அன்னதானம் நடைபெற்று வந்தது. காவிரியின் வெள்ள மும் ஒருவாறு குறைந்தது. மக்களுக்குச் சற்று நிம்மதி ஏற்பட்டது. சிறுகச் சிறுக அவர்கள் தங்கள் குடிசைகளைப் பழுது பார்த்து, அவைகளில் மறுபடியும் வசிக்க வசதி செய்து கொண்டார்கள். ஏழை மக்கள் ஸ்வாமிகள் செய்த அந்த அன்னதானத்தின் பெருமையை வாயாரப் புகழ்ந்தார்கள்; ஸ்வாமிகளைப் போற்றி னார்கள். கஷ்டம் நேரும் சமயத்தில் கிடைக்கும் உதவியே சமயத்தில் கிடைத்த உதவியாகும். ஸ்வாமிகள் செய்த சமயோசித மான அந்த உதவியைக் கண்டு எல்லோரும் ஆச்சரியமடைந்தனர். ஏழைகளுக்கிரங்கும் ஸ்வாமிகளின் சுபாவத்தை விளக்கும் மற்றும் சில உதாரண நிகழ்ச்சிகளையும் இங்கே கூறலாம்.

மேலே சொன்ன நிகழ்ச்சிக்குச் சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் வங்காளத்தில் குல்னு என்ற இடத்தில் கங்கையின் உபநதியில் வெள்ளப் பெருக்கேற்பட்டு அதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் வசிக்க வீடும், புசிக்க உணவும், உடுக்க உடையுமின்றித் தவித்தனர். நாடு முழுவதும் அவர்களுக்கு உதவ நிதி திரட்டப்பட்டது. சென்னையில் ஹிந்துப் பத்திரிகையின் ஆசிரியர் எஸ். கஸ்தூரிரங்க ஐயங்கார் நமது மாகாணத்தில் ஒரு நிதி சேர்க்க ஏற்பாடு செய்து தமது பத்திரிகையில் பொதுமக்களுக்கு ஓர் வேண்டுகோளையும் விடுத்தார். அந்த வேண்டுகோளைக் கண்ணுற்ற அன்றே ஸ்வாமிகள் மடத்திலிருந்து அந்த நிதிக்கு ரூபாய் ஐந்நூறு அனுப்பிவைக்கும்படி கட்டளையிட்டார்கள். கஸ்தூரிரங்க ஐயங்கார் அந்த நன்கொடையை மிகவும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு மடத்தின் அதிகாரிகளுக்கு எழுதிய கடிதத்தில், "ஸ்வாமிகள் தமது பூஜை, தவம், இவைபோன்ற முக்கியமான அலுவல்களுக்கிடையே தம் வேண்டுகோளைக் கவனித்துச் சற்றும் தாமதமின்றி இந்த உதவியை அளிக்கச் செய்ததற்கு தமது பக்தியுடன் கூடிய வந்தங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்; இவ்வித உதவியை மடத்தின் அதிபர்களிடமிருந்து தாம் பெற்றுக்கொண்டது இதுவே முதல் தடவை" என்று குறிப்பிட்டிருந்தார்.

மற்றொரு சமயம் கும்பகோணத்தில் காவிரியின் வடகரையில் பழைய பாலத்திற்கருகே உள்ள கள்ளத்தெருவில் தீப்பற்றிக்கொண்டது. கீற்றினால் அமைக்கப்பெற்ற அத்தெருவின் வீடுகளெல்லாம் நெருப்புக்கு இரையாகி விட்டன. மக்கள் வைத்திருந்த பொருள்களெல்லாம் சேதமடைந்தன: இதை அறிந்த ஸ்வாமிகள் மடத்திலிருந்து அவர்களுக்கு உணவுப் பொருள்களை அளித்துச் சேதமடைந்த எல்லா வீடுகளையும் கட்டித்தரும்படி மடத்தின் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள். 1955-ஆவது வருடம் நவம்பர் மாதம் இறுதியில் தஞ்சை, இராமநாதபுரம், திருச்சி ஜில்லாக்களில் புயலினால் சேதமடைந்த ஏழை மக்களுக்கு கஞ்சிவார்க்க 100 மூட்டை அரிசியை மடத்திலிருந்து ஸ்வாமிகள் உதவினார்கள்.

திருக்காட்டுப் பள்ளி சிவஸ்வாமி ஐயர் உயர் நிலைப் பள்ளிக்கு விஜயம்.

1924-வது வருட துவக்கத்தில் ஸ்வாமிகள் கோவிலடி மார்க்கமாக திருக்காட்டுப் பள்ளிக்கு விஜயம் செய்து அவ்விடமிருந்து பக்கத்து கிராமங்களாகிய நேமம், பழமார் நேறி, ஓம்பத்து வேலி,

அரங்கநாதபுரம், வரகூர், மரூர், சாத்தனூர், கூத்தூர், முல்லக்குடி, பூதலூர் முதலான கிராமங்களுக்கு விஜயம் செய்து அங்கெல்லாம் சிஷ்யர்கள் அளித்த பிக்ஷை, பாதபூஜை முதலானவைகளை ஏற்றுக் கொண்டார்கள். திருக்காட்டுப்பள்ளியில் ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயரால் ஸ்தாபனம் செய்விக்கப்பட்ட உயர்நிலைப்பள்ளிக்கு ஸ்வாமிகள் (22-3-1924)-ந் தேதியில் விஜயம் செய்தார்கள். பள்ளியின் மாணவர்களும், ஆசிரியர்களும், ஸ்வாமிகள் தங்கள் பள்ளிக்கு விஜயமாவதை ஒட்டி மிகவும் உற்சாகத்துடன் பள்ளியை அலங் கரித்து ஸ்வாமிகளை வரவேற்றார்கள். பள்ளியின் தலைமை ஆசிரியர் குருசாமி சாஸ்திரிகள் அன்று மாணவர்கள் சார்பாகவும் ஆசிரியர்கள் சார்பாகவும் ஸ்வாமிகளுக்குப் பாதபூஜை நடத்தினர். ஸ்வாமிகளை சாஸ்திரிகள் வரவேற்றுப் பேசுகையில், அப்பள்ளிக்கு ஸ்வாமிகள் விஜயம் செய்வது அவர்களுக்குக் கிடைப்பதற்கரிய ஒரு பாக்யமென்றும், ஸ்தாபகரின் நல்ல எண்ணமே அதற்குக் காரணம் என்று தான் நம்புவதாகவும் கூறினர். ஸ்வாமிகள் அன்று அருளிய உபதேச மொழிகளில் மாணவர்களுக்கு ஆசிரியர்களிடம் பக்தியும், ஆசிரியர்களுக்கு மாணவர்களிடம் அன்பும் பழைய குருகுல முறையில் அங்கு அமைந்திருப்பதைக் காணத் தாம் மிகவும் மகிழ்ச்சியுறுவதாகவும், ஆசிரியர்களைத் தெய்வமாகக் கருதவேண்டுமென நமது சாஸ்திரங்கள் கூறுவதாயும், ஆசிரியர்கள் ஊதியத்திற்கு மாத்திரம் கல்வி பயிற்றுவதானல் அது பயனற்றதாகிவிடுமென்றும், மாணவர்களும், ஆசிரியர்களும் ஒரே குடும்பம் போல் வாழ்ந்துவர வேண்டுமென்றும், அங்குப் பயிலும் ஒவ்வொரு மாணவனும் தன் பெற்றோருக்கும், தனக்கும், உலகத்திற்கும் உதவக்கூடிய வகையில் எதிர்காலத்தில் நல்ல தீர புருஷனாக விளங்கவேண்டுமென்றும், அதே எண்ணத்துடன் தான் சிவ ஸ்வாமி ஐயர் இந்தப் பள்ளியை நிறுவியிருப்பதாகத் தாம் எண்ணுவதாகவும் கூறினர்கள். குழந்தைகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் முதலில் தங்கள் தாய், தந்தையரைக் குறித்தும், பின்னர் உலகிற்கெல்லாம் தாய், தந்தையாக விளங்கும் பார்வதி, பரமேச்வரனைக் குறித்தும் வணக்கம் தெரிவித்துவிட்டுப் பாடங்களைப் பயில ஆரம்பிக்கவேண்டுமென்றும் உபதேசித்தார்கள்.

1924-ஆவது வருட இறுதியில் ஸ்வாமிகள் தஞ்சைக்கடுத்த வல்லத்திற்கு விஜயம் செய்தபொழுது, அவ்வூரில் கிருஸ்துவர்கள்,

இஸ்லாமியர்கள் ஆகியோர்களும் ஹிந்துக்களுடன் ஒத்துழைத்து ஸ்வாமிகளுக்கு ஒரு பெரிய வரவேற்பை அளித்தனர். வல்லம் அன்றுவரை கண்டிராதபடி ஒரு பெரிய கோலாகலத்துடன் அப்பொழுது விளங்கிற்று. சுற்று வட்டாரங்களிலுள்ள ஜனங்களெல்லாம் அவ்வூரில் கூட்டம் கூட்டமாக அன்று கூடினர். ஏராளமான ஹரிஜனங்களும் அவர்கள் செய்யக்கூடிய பணியில் ஈடுபட்டு ஸ்வாமிகளின் வரவேற்பில் பணியாற்றினர். ஒரு பெரிய ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஸ்வாமிகள் தந்தச் சிவிகையில் வீற்றிருந்து ஆயிரக்கணக்கான மக்களுக்குத் தரிசனம் அளித்தார்கள். ஜனங்களின் ஆரவாரமும், மகிழ்ச்சியும் கட்டுக்கடங்காததாய் இருந்தன. ஸ்வாமிகள் தங்கள் ஊருக்கு விஜயம் செய்வதால் ஊர் செழித்து மக்களுக்கு எல்லா நன்மைகளும் ஏற்படுமென்பதை ஜனங்கள் நம்பினுர்கள். பல மணி நேரம் நடைபெற்ற அந்த ஊர்வலம் ஜாகையை அடைந்தவுடன் ஸ்வாமிகள் எல்லோருக்கும் உபதேச மொழிகள் கூறிப் பல மதத்தினரும் ஒற்றுமையுடனிருந்து தமக்கு இவ்வளவு பெரிய வரவேற்பு ஒன்றை அளித்ததற்காக மிகுந்த மகிழ்ச்சி அடைவதாயும், கிராமங்களில் இவ்வித ஒற்றுமைதான் அவசியம் வேண்டுமென்றும், கிராமங்களில் கட்சிச் சண்டை ஏற்பட்டால் அதனுல் நகரங்களில் உள்ளோருக்கு லாபம் கிடைக்குமென்றும், கிராம மக்கள் கோர்ட்டுகளுக்குச் செல்லுவதற்கு பணம் செலவிட வேண்டிய சந்தர்ப்பங்களை ஒருபொழுதுமே ஏற்படுத்திக் கொள்ளக் கூடாதென்றும், எந்த மதத்தினராய் இருந்தாலும், அவர்களது கோட்பாடுகளின்படி கடவுளைத் தொழ வேண்டுமென்றும், இவ்விஷயத்தில் ஹிந்துக்களைவிட கிருஸ்துவர்களும், இஸ்லாமியர்களும் அதிக ஈடுபாடுள்ளவர்களாக இருப்பதைத் தாம் மிகவும் மெச்சுவதாகவும், அவர்களைப் பார்த்து ஹிந்துக்கள் நடந்துகொள்ள வேண்டுமென்றும், அன்று ஆயிரக்கணக்கில் அவ்விடம் கூடியிருந்த ஹரிஜனங்களின் வஞ்சனையற்ற விபூதி பூசிய முகங்களில் நல்ல அருளைத் தாம் காண்பதாகவும், ஹரிஜனங்களின் நன்மைகளை இதர ஜனங்கள் கவனித்து அவர்களுக்கு வேண்டுவனவற்றை அவ்வப்பொழுது செய்துகொடுத்தால்தான் கிராமமும் கிராம மக்களும் செழிப்புடன் வாழ்வார்களென்றும், கிராமத்தின் கட்சி விவகாரங்களில் வெளியிலிருந்து வரும் மூன்ருவது மனிதனுக்கு இடந்தராமல் அவர்களே சமரசமாகத் தீர்த்துக்

வல்லத்து விஜயம்.

கொள்ள வேண்டுமென்றும், நாட்டில் தெய்வ நம்பிக்கை குறையாமல் எல்லோரும் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் கூறினார்கள். அந்த உபதேசங்களைக் கேட்ட ஜனங்கள் அவ்விதமே நடந்துகொள்வதாகக் கூறி ஸ்வாமிகளிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றனர். ஸ்வாமிகள் தனிமையில் ஹரிஜனங்களில் எழுபது வயதிற்குமேற்பட்ட ஆண், பெண் பாலர்களுடன் பேசி, அவர்களின் பூர்வோத்திரங்களை யெல்லாம் விசாரித்து, அவர்களுக்கு விபூதி கொடுத்து அனுக்ரகம் செய்தனுப்பினார்கள்.

தஞ்சை கலெக்டரின் வாஸஸ்தலம் வல்லத்தில் அமைந்திருக்கிறது. அப்பொழுது தஞ்சை கலெக்டராக இருந்த ஆங்கிலேயர் எச். எம். ஹுட் என்பார், அன்று வல்லத்தில் நடைபெற்ற அவ்வளவு பெரிய வரவேற்புக்கு உரியவர் யாரென்பதை விசாரித்தறிந்து, தாமும் ஸ்வாமிகளைக் காண வேண்டுமென்று விரும்பினார்.

கலெக்டருக்குப் பேட்டி அளித்தது.

ஸ்வாமிகளைக்காண வேண்டிய ஓர் அலுவலும் ஏற்கனவே அவரிடம் காத்திருந்தது. சமீபத்தில் திருவையாற்றில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருந்த மக்களுக்கு ஸ்வாமிகள் அன்னம் அளித்ததற்காக, சர்க்கார் சார்பாக ஸ்வாமிகளுக்கு நன்றி செலுத்த வேண்டியதே அக்காரியம்; அதன் பொருட்டும் அப்பொழுதே ஸ்வாமிகளைப் பேட்டி காணக் கலெக்டர் விரும்பித் தமக்கு பழக்கமுள்ள ஹிந்து நண்பர் ஒருவர் மூலம் தமது விருப்பத்தை ஸ்வாமிகளுக்குச் சொல்லி அனுப்பினார். ஸ்வாமிகளும் அவரது வேண்டுகோளுக்கு இசைந்து, அன்று மாலை கலெக்டரை அங்கு வரும்படி அனுமதித்தார்கள். கலெக்டரும் அதன்படியே குறித்த வேளையில் ஸ்வாமிகளைக் காணச்சென்றார். ஸ்வாமிகள் தாம் தங்கி இருந்த ஜாகையின் திண்ணையின்மேல் வீற்றிருக்க, கலெக்டருக்குத் திண்ணையின் கீழ் ஒரு நாற்காலி போடப்பட்டிருந்தது. (சாதாரணமாக ஹிந்துக்கள் எவரும் ஸ்வாமிகள் முன்னிலையில் ஆசனங்களில் அமர்வது வழக்கமில்லை;) ஸ்வாமிகளுக்குத் தெளிவாக ஆங்கிலம் பேசக்கூடிய திறமை இருந்தபோதிலும், அம்மொழியில் பேசுவதை ஸ்வாமிகள் அநேகமாகத் தவிர்த்து விடுவதுண்டு. கலெக்டரின் நண்பர் ஒருவர் ஸ்வாமிகள் தமிழில் கூறியவற்றையெல்லாம் ஆங்கிலத்தில் கலெக்டருக்கு மொழி பெயர்த்துக் கூறினார். கலெக்டர் திருவையாற்றில் ஸ்வாமிகள் நடத்திய அன்னதானத்

தைக் குறித்துச் சர்க்காரின் நன்றியை ஸ்வாமிகளுக்குத் தெரிவித்துக் கொள்வதாகக் கூறினுர். ஸ்வாமிகளின் வசீகரமான முகத் தோற்றத்திலும், தெளிவான அறிவிலும் கலெக்டர் ஈடுபட்டவராகிச் சுமார் ஒரு மணி நேரம் பொது விஷயமாகவும், அரசாங்க விஷயமாகவும், மடத்தின் அலுவல்களைப் பற்றியும், ஸ்வாமிகளிடம் கேட்டுத் தெரிந்துகொண்டார். பின்னர் கலெக்டர் ஸ்வாமிகளிடம், 'எனது வாழ்நாளில் இந்தச் சந்திப்பை ஒரு நாளும் மறக்கமாட்டேன்' என்று கூறி விடைபெற்றுக்கொண்டார்.

இப்பிரயாண காலத்தில் ஸ்வாமிகள் கருத்தைக் கவர்ந்த சில ஆராய்ச்சிகளைப் பற்றி இங்குக் கூறுவோம். இன்று, இந்தோனேஷ்யாவென சொல்லப்படும் ஜாவா, பாலி தீவுகளில் இந்திய நாகரீகமும், பண்பாடும், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வந்திருக்கின்றன. மேலும் அவை தமிழ் நாட்டு நாகரீகங்களுக்கு ஒத்ததாகவே விளங்கி வருகின்றன. பல வருடங்களாகவே ஸ்வாமிகள் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்திருக்கிருர். Raffles History of Java என்னும் பழைய புத்தகத்திலிருந்து இந்த ஆராய்ச்சி சம்பந்தமாக ஸ்வாமிகளுக்குப் பல விஷயங்கள் புலனுயின. இரண்டு பாகங்கள் கொண்ட இந்தப் புத்தகம் சுமார் இரண்டாயிரம் பக்கங்கள் உள்ளது. அப்புத்தகம் ஓர் ஆங்கிலேயரால் இயற்றப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சியினுல் நம் நாடு அடிமைப்பட்டிருப்பதைக் குறித்து நாம் வருந்தாமல் இருக்க முடியாதெனவும், ஆனுல் அவர்களுள் பல மேதாவிகள் இயற்றியுள்ள புத்தகங்களினுல் நாம் பெரும் பயனை அடைந்திருக்கிருேமெனவும், அதை ஒரு நாளும் நாம் புறக்கணிக்க முடியாதெனவும், ஸ்வாமிகள் அடிக்கடி கூறுவதுண்டு. நமது பழந்தமிழர்கள் கீழ்த்திசைத் தீவுகளை வென்று, அவற்றில் குடியேறி ஹிந்து நாகரீகத்தை அவ்விடம் பரவச் செய்திருக்கலாம்; அல்லது நமது தமிழ் நாடே அவ்வளவு தூரம் வரையில் விசாலமாக இருந்திருக்கலாம் என்பது ஸ்வாமிகளின் அபிப்பிராயம்.

கடல் கடந்த நம் நாகரீகத்தைப் பற்றிய ஆராய்ச்சி. கிழக்காசியாவில் ஹிந்து நாகரீகம்.

இன்று அங்குக் காணும் விநாயகர், சிவன், அம்பிகை, விஷ்ணு, இவைகளின் விக்கிரகங்களைக் காணும்பொழுது நமது மனம் அத்தேசச் சரித்திரத்தின் ஆராய்ச்சியில் ஈடுபடாமலிருக்க

முடியாது. ஹிந்து மதத்தின் நாகரீகச் சின்னங்களும் அங்கே அதிகமாகத் தென்படுகின்றன. ஆனால் சைவம், வைஷ்ணவம் என்று இரண்டு மதங்களும் இன்று அந்நாட்டிலிருந்து மறைந்து. இஸ்லாம் மதமே தேச மதமாக மாறிவிட்டது. பாலித் தீவில் மாத்திரம் இன்னும் ஹிந்துக்கள் மதம் மாருமல் இருக்கிருர்க ளென்று சொல்லப்படுகின்றது. இன்றும் பிராமணர்கள் அங்கு வேதம் ஓதுதலை வழக்கமாக வைத்துக் கொண்டிருக்கிருர்களென் றும் சொல்லப்படுகிறது. ஜாவா நாடு மத மாற்றத்தை அடைந் திருந்தபோதிலும் அங்கு மக்களின் பெயர்களெல்லாம் ஹிந்து தெய்வங்களின் பெயர்களாகவே விளங்குகின்றன. அவர்களின் நாடகங்களும், நாட்டியங்களும், இராமாயணம் மகாபாரதம் இவை கள் போன்ற இதிகாஸங்களையே அடிப்படையாகக் கொண்டிருக் கின்றன.

அந்த நாட்டிற்கு நேரில் சென்றவர்களை ஸ்வாமிகள் சந்தித்து அதனுடைய பூர்வீக நாகரீகங்களைப்பற்றிய விஷயங்கள் யாவற் றையும் கேட்டு அறிந்துகொள்வர். அந்த நாடு அப்பொழுது டச்சுக் காரர்கள் வசம் இருந்தது. வெகு சமீப காலத்தில்தான் அது சுதந்திரம் பெற்று, இந்தோனேஷியா என்னும் பெயருடன் விளங்கு கிறது. ஜாவா, பாலி என்ற இரண்டு தீவுகளிலும் உள்ள ஹிந்து கலாசாரத்தை விளக்கும் நூல்கள் எந்தப் பாஷையிலிருந்தாலும் அவைகளை வரவழைத்து ஆராய்ச்சி செய்வதில் ஸ்வாமிகளுக்கு மிகுந்த ஆர்வமுண்டு. ஸ்வாமிகளின் விருப்பப்படி டச்சுக்கார ரால் ஹாலந்தில் வெளியிடப்பட்ட அத்தீவுகள் சம்பந்தமான எல்லாப் புத்தகங்களையும் அந்தச் சர்க்கார் மடத்திற்கு அனுப்பி வைத்தனர்; மேலும் ஸ்வாமிகள் இவ்விஷயத்தில் எடுத்துக் கொண்டுள்ள சிரத்தையையும் பாராட்டிக் கடிதங்கள் எழுதி யிருந்தனர்; சர்க்கார் வெளியிட்டு வந்த தி ஜாவா என்னும் மாதாந்திர டச்சுப் பத்திரிகையையும் ஸ்வாமிகளின் பார்வைக்கு இலவசமாக அனுப்பி வந்தனர்.

சுமார் இருபது வருடங்களுக்கு முன் ஜாவானிய நடன கோஷ்டி ஒன்று சென்னையை அடுத்த அடையாற்றுக்கு வந்திருந்தது. இராமாயணத்தையும். மகாபாரதத்தையும் சித்தரித்துப் பல நடனங் களை அந்தக் கோஷ்டியார் சென்னையில் நடத்தினர்கள். ஸ்வாமி கள் அந்தக் கோஷ்டிக்கு ஒரு ஆசிச் செய்தியையும், கோஷ்டியைச்

சார்ந்த ஒவ்வொருவருக்கும் இந்தியக் கலையை விளக்கும் சில பரிசுகளையும் மடத்தின் விசேஷ பிரதிநிதியான மைலாப்பூர் வெங்கட்டரமணா வைத்திய சாலையின் ஆசிரியர் கே. ஜி. நடேச சாஸ்திரிகளின் மூலம் ஸ்வாமிகள் அனுப்பி வைத்தார்கள். ஸ்வாமிகளின் உருவப் படமும், அவர்கள் கோரிக்கையின் பேரில், அவர்கள் யாவருக்கும் அளிக்கப்பட்டது. கோஷ்டியின் தலைவர் ஸ்வாமிகளுக்கு நன்றி செலுத்திவிட்டு ஸ்வாமிகள் தங்கள் நாட்டிற்கு விஜயம் செய்ய வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டார். ஸ்வாமிகள் அந்நாட்டிற்கு விஜயம் செய்யப் போவதென்பது ஒரு பொழுதும் நடைபெறக் கூடியதில்லை; ஆயினும் அந்நாட்டில் ஹிந்து பௌத்த புராதன சின்னங்கள் அமைந்திருக்கும் ஒவ்வொரு இடத்தைப் பற்றியும் ஸ்வாமிகள் நன்கு அறிந்துகொண்டிருக்கிறார்கள். இவ் விஷயங்களை எவ்விதமோ அறிந்திருந்த உலகத்தின் பெரிய பிரயாண ஏஜண்டுகளாக விளங்கும் தாமஸ் குக் அண்டு கம்பெனியார் ஜாவா சம்பந்தமான சரித்திர வெளியீடுகளை ஸ்வாமிகளுக்கு அனுப்பி, ஸ்வாமிகள் அந்நாட்டுக்கு விஜயம் செய்வதானால் அவர்கள் அங்கு தங்குவதற்கான எல்லா ஏற்பாடுகளையும். மேலும் பிரயாண ஏற்பாடுகளையும் செய்துகொடுப்பதாக எழுதியிருந்தனர். ஸ்வாமிகளின் ஆசார அனுஷ்டானங்களைப் பற்றி அவர்கள் எவ்விதம் அறிவார்கள்?

ஓவியங்களில் ஆராய்ச்சி. சித்தன்ன வாசல் முதலிய குகைக் கோவில்களைப் பார்வையிட்டது.

மற்றொருவகை ஆராய்ச்சியிலும் ஸ்வாமிகளின் மனம் ஈடுபட்டிருந்தது. புதுக்கோட்டைச் சீமையில் சித்தன்னவாசல், நார்த்தாமலை, குண்டாண்டார் கோவில், குடுமியா மலை, திருக்கோகர்ணம், திருமயம் முதலானவை குகைக் கோவில்களைக் கொண்டுள்ளன. சித்தன்ன வாசல் குகையின் கூறையில் தாமரைப் புஷ்பங்களைக் கையிலேந்தி நடமாடும் நடனப் பெண்களின் உருவங்கள் வர்ணச்சித்திரங்களில் வெகு அழகாக அமைக்கப்பட்டுள்ளன; அவை ஆயிரம் வருடங்களுக்கு முன் நம் நாட்டிலிருந்த பல்லவர் காலத்து ஜைன நாகரிகத்தை விளக்குகின்றன. அந்தச் சித்திரங்களையெல்லாம் ஸ்வாமிகள் புகைப்படங்கள் எடுக்கச் செய்தார்கள். நார்த்தாமலைக் குகைக் கோவிலில் ஜைன நாகரிகமும், ஹிந்து நாகரிகமும் ஒருங்கே அமையப் பெற்றிருக்கின்றன. குடுமியாமலை சிவாலயத்திலும்,

திருமயம் சிவாலயத்திலும், சங்கீத சாஸ்திரம் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டிருக்கிறது. இவை மஹேந்திரவர்மன் காலத்தில் பொறிக்கப்பட்டனவாகும். இந்தக் கல்வெட்டுகளை ஸ்வாமிகள் ஆராய்ச்சி செய்தார்கள். திருக்கோகர்ணம் குகைக்கோவிலில் புராதன சிவஸ்தலமாகும். திருமயத்தில் கல்வெட்டினுல் சித்த ரிக்கப்பட்ட பள்ளிகொண்ட பெருமாள் விக்ரகத்தின் சிறப்பைப் போல் வேறெங்கும் காணமுடியாது. திருமயம் சிவாலயத்தில் குகைக்கோயிலுள் அமைந்துள்ள லிங்கோத்பவ மூர்த்தியின் பெரிய அழகான உருவத்தைப் போல் வேறு எச்சிவாயத்திலும் காண முடியாது. 1924-ஆவது வருடம் பிற்பகுதியில் ஸ்வாமிகள் புதுக்கோட்டைச் சீமைக்கு விஜயம் செய்து அக்குகைக் கோவில் களையெல்லாம் தரிசித்துக்கொண்டார்கள். ஆராய்ச்சி முறையில் கல்வெட்டுகளையெல்லாம் பார்வையிட்டார்கள். நார்த்தா மலையி லும், சித்தன்ன வாசலிலும் மலையின் மேற்புறத்தில் தண்ணீர் நிறைந்த சுனைகளைக் காணலாம். அச்சுனைகளின் அடித்தலத்தில் கல்வெட்டினுல் சிவலிங்கங்கள் சித்தரிக்கப்பட்டிருப்பதை ஸ்வாமி கள் அறிந்து, அச்சுனைகளின் தண்ணீரை இயந்திர உதவி கொண்டு இறைக்கச் செய்து, அவைகளின் கீழுள்ள சிவலிங்கங்களுக்கு அபிஷேகம், அர்ச்சனை, பூஜை இவைகள் செய்து அவைகளைத் தரிசித்துக்கொண்டார்கள். அந்த லிங்கங்களை அதுவரை அப்பக்கத்து மக்கள் கண்டதில்லையாதலால், புதுக்கோட்டையி லிருந்தும், சுற்றுப்புறங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் அவ்விடங்களில் கூடிச் சிவலிங்க தரிசனத்தைச் செய்துகொண்டார் கள். அச்சமயம் புதுக்கோட்டை சமஸ்தான அதிகாரிகளும் கடியாப்பட்டி தீ. நா. முத்தையா செட்டியாரும் ஸ்வாமிகளுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் புரிந்தார்கள். இவ்வித ஆராய்ச் சிகள் ஸ்வாமிகளிடம் ஒரு காலத்திலோ இடத்திலோ தோன்றி மறைவனவல்ல; அவர்களின் இளமை முதற்கொண்டே அவர்களின் மனம் இவை போன்றவற்றில் ஈடுபட்டு இன்னும் வளர்ந்து கொண்டே வருகின்றன.

தமிழிலுள்ள சங்க நூல்கள், பழைய காப்பியங்கள், மற்றும் தேவாரம், திருவாசகம், திருக்குறள், ஆழ்வாராதிகள் திவ்ய பிரபந் தங்கள், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், இவைகளின் ஆராய்ச்சியில் சமயம் வாய்க்கும்போதெல்லாம் ஸ்வாமிகள்

ஈடுபடுவதுண்டு. தக்க புலவர்கள் ஸ்வாமிகளைத்தரிசிக்க வரும் பொழுது காலம் கடப்பது தெரியாமல் ஸ்வாமிகள் அவர்களுடன் அளவளாவி அவ்வரிய நூல்களில் பொதிந்துள்ள பொக்கிஷங்களைப் பற்றி அவர்கள் விளக்கம் கூறுவதைக் கேட்டு அகமகிழ்வார்கள்.

தமிழில் ஆர்வம். நாகஷிணாத்திய கலாநிதிப் பட்டம் அளித்தது.

அக்காலத்தில் மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் ஸ்வாமிகளைத் தரிசிக்க மடத்திற்கு வருவதுண்டு. தமிழில் ஸ்வாமிகளுக்குள்ள ஆர்வத்தைக் கண்டு ஐயர் அவர்கள் பெருமகிழ்ச்சியுற்று, வயதின் காரணமாக ஏற்பட்டுள்ள தமது உடல் தளர்ச்சியையும் பொருட்படுத்தாது ஸ்வாமிகளிடம் இத்துறையில் பல மணி நேரம் பேசிக் கொண்டே இருப்பர். சிறியோர், பெரியோர் எல்லோருடைய மனமும் இன்புறும் வண்ணம் எப்பொழுதும் இனிய சொற்களையே பேசி, சில சமயங்களில் ஒரே மொழியில் பல கருத்துக்களை அடக்கி, ஐயர் அவர்கள் நயமாக உரையாடுவார்கள் என்பதை அவர்களை நேரில் கண்டோர் அறிந்திருப்பர். ஸ்வாமிகளிடம் ஐயர் உரையாடும் பொழுது ஸ்வாமிகள் பல புதிய கருத்துக்களை வெளியிடுவார்கள் அவைகளைக் கேட்ட ஐயர் புளகாங்கிதம் அடைந்து, ஸ்வாமிகளைத் தமிழ் தெய்வத்தின் அவதாரம் எனப் போற்றுவார்; இந்த அவதாரம் தமது வாழ் நாளில் ஏற்பட்டிருப்பதைக் குறித்து பெருமையும் கொள்வார். ஸ்வாமிகளைக் காண வரும்பொழுதெல்லாம் ஐயர் அவர்கள் பெரிய மகர கண்டி ருத்திராக்ஷ மாலை அணிந்து வருவார். ஸ்வாமிகள் அன்றாடம் செய்யும் சிவ பூஜையை ஐயர் தரிசித்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கித் தியானத்தில் அமர்ந்திருப்பார். காமகோடி பீடத்தின் 65-ஆவது ஆசாரியர்களான ஸ்ரீமகாதேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் சிவ பூஜை செய்வதில் மிகச் சிறந்தவர்களென்றும், அக்காட்சியைத் தாம் தமது பதினெட்டாவது பிராயத்தில் நேரில் கண்டிருப்பதாகவும், அக்காலத்தில் அவர் கண்ட அந்தச் சிவ பூஜையை இப்பொழுது மறுமுறை காணும் பாக்கியத்தைத் தாம் பெற்றிருப்பதாகவும், ஐயர் அவர்கள் கூறுவார்கள். மேலும் அக்காலத்திலேயே தாம் தமிழில் செய்துவந்த புராணப் பிரசங்கத்தைக் கேட்டு மடத்தின் ஆஸ்தான வித்வான்கள் தம்மைப் பாராட்டி இருப்பதைப் பற்றியும், அவர்கள் தமது சுய சரித்திரத்தில் கூறியுள்ளார்கள்.

மகாமகோபாத்தியாய சுவாமிநாத ஐயர் அவர்கள் தமிழுக்கும், தமிழ் வளர்ச்சிக்கும் செய்துள்ள அரிய தொண்டைப் பாராட்டி 1925-ஆவது வருடம் ஸ்வாமிகள், அவர்களுக்கு தாக்ஷிணாத்ய கலாநிதி என்னும் பட்டத்தை வழங்கி மடத்தின் உயரிய கௌரவமான இரட்டை காஷ்மீர் சால்வைகளை அவர்களுக்குப் போர்த்தச் செய்து அவர்களைச் சிறப்பித்தார்கள். அப்பட்டம் வழங்கப் பெற்ற ஸ்வாமிகளது திருமுகமானது அவ்வருடம் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் அவர்களது தலைமையில் நடைபெற்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் வருடாந்திரக் கூட்டத்தில் ஐயர் அவர்களுக்கு அளிக்கப்பெற்றது. ஐயர் அவர்களும் அத்திருமுகத்தைப் பெற்றுக் கொண்டு அது தனக்குக் கிடைப்பதற்கரிய ஓர் கௌரவம் என்றும், அதைத் தனக்கு அளித்த மகா புருஷர்களான ஸ்ரீ ஆசாரிய ஸ்வாமிகள் பல்லாண்டு வாழ்ந்து மக்களை உய்விக்க வேண்டுமென்றும் கடவுளைப் பிரார்த்திப்பதாகவும் கூறினார்கள்.

இவ்வைபவத்தைப் பற்றி மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடான செந்தமிழ் தொகுதி 23 (பக்கம் 311) இல் கூறியிருப்பதை இங்குக் குறிப்போம்.

"ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளான கும்பகோணம் ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகள் மஹாமஹோபாத்யாய ஐயரவர்களுக்கு தக்ஷிணகலாநிதி என்ற பட்டத்துடன் அளிக்கும்படி அனுப்பிய ஜோடி சால்வையும், தங்கத் தோடாவும் பைம்பொற் பவுண்டன் பேனாவும், மந்த்ராக்ஷதை விபூதிப்ரஸாதங்களும் ஸ்ரீமுகமும் வந்தன. ஸ்ரீமுகத்தை மதுரை வக்கீல் மக·ா-ா-ஸ்ரீ வி. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியவர்கள் ஸபையிற் படித்துக் கொடுக்க, ஸபா நாயகரவர்கள்,

செந்நாப் புலவர் திறமறிந்து பொற்கிழிகள்
அந்நாளிக் கூட லளித்ததமைநந்—தொன்னூல்கள்
கற்றறிந்தோம் மற்றதனைக் கண்ணுற் கண்டறிந்தோம்
இற்றநா ளிங்கே யினிது.

என்று புலவர் பாராட்டும் வண்ணம், தமிழபிமானச் செல்வர்கள் வழங்கிய ரூபா ஐயாயிரம் அடங்கிய பொற்கிழியையும், ஸ்ரீஜகத்குரு ஸ்வாமிகள் வழங்கிய தக்ஷிணகலாநிதி என்ற பட்டத்தையும், சால்வை முதலியவற்றையும் மஹாமஹோபாத்யாய ஐயரவர்களுக்கு உவப்புடன் அளித்தார்கள்.

அதன்பின் மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் தம்மைக் கௌரவித்தமைக்கு நன்றி பாராட்டி, தமிழ் மொழியைக் கௌரவிக்க வேண்டிய தமக்கு இந்த விசேஷ சன்மானம் செய்யப்பட்டதென்று தாம் கருதுவதாகக் கூறினர்கள்.''

இன்னும் ஸ்ரீ ஐயரவர்கள் அவ்வாண்டு வெளியிட்ட தம் 'நன்னூல் சங்கர நமச்சிவாயருரைப்' பதிப்பின் முகவுரையில் (28-9-25) பின்வருமாறு எழுதியுள்ளமையும் குறிக்கத்தக்கது.

''தரிசிக்குங்காலங்களிலெல்லாம் பழைய தமிழ் நூல்களை ஆராய்ந்து பதிப்பிப்பதிற் சிறிதும் தளர்ச்சியடையாமல் மேன்மேலும் உழைத்து வரவேண்டுமென்று பெருங்கருணையுடன் கட்டளையிட்டருளியதன்றி, மேற்கூறிய தமிழ்ச்சங்க வருஷோத்ஸவ காலத்தில் அடியேனுக்குத் திவ்யப்ரஸாதங்களையும் ஸ்ரீ முகத்தையும் ஸன்மானங்களையும் அனுப்பி அனுக்கிரஹித்த ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான கும்பகோணம் ஜகத்குரு ஸ்ரீமத் சங்கராச்சார்ய ஸ்வாமிகளுடைய பரிபூரண கிருபையைச் சிந்தித்து, 'தாயுநற் றந்தையுந் தவமுமன்பினுன், மேயவான் கடவுளும் பிறவும் வேறுநீ' (கம்ப. திருவவதார.) என்பதையே சொல்லித் துதித்துத் திசைநோக்கி அவர்களை வந்திக்கின்றேன்.

> காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்
> சீரணி சிந்தா மணியணி தில்லைச் சிவனடிக்குத்
> தாரணி கொன்றையன் றக்கோர்தஞ் சங்க நிதிவிதிசே
> ரூருணி யுற்றவர்க் கூரன்மற் றியாவர்க்கி மூதியமே
>
> —திருச்சிற்றம்பலக்கோவையார், ௪00.

இப்போது கும்பகோணத்தில் ஆசார்யமூர்த்திகளாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்கள் தேவார திருவாசகங்களில் ஈடுபட்டிருப்பதன்றி.........தமிழ் புலவர்களையும் ஆதரித்தருளிவருவது யாவராலும் கொண்டாடத்தக்கது.''

ஸ்வாமிகளின் இந்த யாத்திரையில் செட்டிமார் நாட்டுக்கு விஜயம் செய்யவேண்டு மென்று கண்டனூர் நகரத்தார் செய்து கொண்ட பிரார்த்தனைக்கு இணங்கி, அவர்கள் கண்டனூருக்கு 15-4-1923-ந் தேதி அன்று விஜம் செய்தார்கள். அப்பொழுது அவ்வூரை அடுத்த சாக்கோட்டை என்னும் தலத்தில் ஸ்வாமிகள் ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டார்கள். பின் 1925-வது வருடம் துவக்கத்தில் தேவகோட்டையில் சுமார் ஒரு மாதமும், பிறகு காரைக்

குடியில் ஒரு மாதமும், தங்கி அங்குள்ள பக்தர்களை அனுக்ரகித்தார்கள். தேவகோட்டையில் சிலம்பணி விநாயகர் ஆலயத்தின் அருகில் உள்ள துவாதசி மடத்தில் அவர்கள் தங்கியிருந்தார்கள். அவ்வூர் அள. அரு. ஜமீந்தார் குடும்பத்தாரும் மற்ற நகரத்தார்களும், வக்கீல்களும், உத்தியோகத்தார்களும் ஸ்வாமிகளின் பணியில் ஈடுபட்டனர். காரைக்குடியில் அவர்கள் தங்கியிருந்தபொழுது ஜில்லாபோர்டு மெம்பர் சித. நாராயணன் செட்டியாரும், சின்னையா ஐயரும், ஹெட்மாஸ்டர் N. S. வேங்கடராமையரும் மடத்தின் கைங்கரியங்களில் பக்தியுடன் ஈடுபட்டிருந்தனர். பிறகு, பள்ளத்தூர், கடியாபட்டி, இராயவரம், அரிமளம் இவ்விடங்களுக்கு ஸ்வாமிகள் விஜயம் செய்தார்கள். 1925-ஆவது வருடத்து வியாஸ பூஜையும் சாதுர்மாஸ சங்கல்பமும் இளையாற்றங்குடியில் நடைபெற்றன. இளையாற்றங்குடிக்குப் போகும் மார்க்கத்தில் ஸ்வாமிகள் கோனாப்பட்டில் சுமார் பத்துத் தினங்கள் தங்கியிருந்து நகரத்தாரால் உபசரிக்கப்பட்டார்கள். காரைக்குடியில் தங்கியிருந்தபொழுது ஸ்வாமிகள் அரியக்குடிக்கும், குன்றக்குடிக்கும், கோவிலூருக்கும் சென்று ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டார்கள். கோவிலூர் மடாலயத்தின் தலைவரான ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஸ்வாமிகள் நம் ஸ்வாமிகளைத் தக்க மரியாதைகளுடன் வரவேற்று உபசரித்தார். வியாஸ பூஜை முடிந்த பின்னர், ஸ்வாமிகள் நச்சாந்துப்பட்டி, பனையப்பட்டி, விராய்ச்சிலை, குழிபிரை இவ்விடங்களுக்கெல்லாம் விஜயம் செய்தார்கள். இளையாற்றங்குடியில் நம் ஸ்வாமிகள் சாதுர்மாஸ சங்கல்பத்தை நடத்திக்கொண்டிருந்தபோது, ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள் 5 மைல் தூரத்திலுள்ள குன்றக்குடியில் தம் சாதுர்மாஸ விருதத்தை நடத்திவந்தார்கள். வித்வான்களும், பக்தர்களும், இரு மடங்களுக்கும் வந்துபோவதுண்டு. அவர்கள் மூலம் இரு மகான்களும் ஒருவருக்கொருவரின் நலன்களைப் பற்றி விசாரிப்பதுண்டு. குரோதன வருடம் தை மாதம் முதல் தேதி (14-1-1926) ஏற்பட்ட சூரிய கிரஹணத்திற்கு ஸ்வாமிகள் இராஜா மடம் சென்று அவ்விடம் சமுத்திர ஸ்நானம் செய்துவிட்டு, பன்னிரண்டாம் தேதி நேமத்தான்பட்டியில் நடைபெற்ற மே. மு. குடும்பத்தாரால் கட்டப்பட்ட சத்திரத்தின் கிரஹப்ரவேசத்திற்காக அவ்வூருக்கு விஜயம் செய்தார்கள். பின்னர் கானாடுகாத்தானில் பதினைந்து நாட்களுக்கு மேல் விஜயம் செய்திருந்தார்கள். அவ்விடம்

செட்டி நாட்டுக்கு விஜயம்.

சர். எம். ஸி. டி. முத்தையா செட்டியார் முதலிய நகரப் பிரமுகர்கள் ஸ்வாமிகளுக்குத் தகுந்தவாறு வரவேற்பளித்து ஸ்வாமிகளின் பூஜைக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து கடைசி நாளன்று பெரியதொரு ஊர்வலத்தையும் நடத்திவைத்தார்கள்.

தர்ம பூஷணம் பட்ட மளிப்பு.

கடியாபட்டியில் ஸ்வாமிகள் தங்கியிருந்தபொழுது அவ்வூர் நகரத்தார் மிகுந்த பக்தியுடன் ஸ்வாமிகளின் பணியில் ஈடுபட்டிருந்தனர், திருப்பாதிரிப்புலியூரில் ஆலயத் திருப்பணியும், திருவண்ணுமலையில் வெள்ளி ரதப் பணியும் நடத்திய அவ்வூர் தீ. சொ குடும்பத்தார் ஸ்வாமிகள் பணியில் முக்கியமான பங்கு எடுத்துக்கொண்டனர். அவ்வூர் பி. கு. நா. குடும்பத்தினர் ஸ்வாமிகளின் பூஜைக்கெனத் தங்கம் கட்டிய வலம்புரிச் சங்கு ஒன்றைக் காணிக்கையாக அளித்தார்கள். தி. சொ. குடும்பத்தைச் சார்ந்த திவான்பகதூர் தீ. நா. முத்தையா செட்டியாருக்குத் 'தர்மபூஷணம்' என்னும் பட்டத்தை ஸ்வாமிகள் அப்பொழுது அளித்தார்கள். அவர் அந்த பட்டத்தைப் பெற்ற பெருமையைக் கொண்டாடுவதற்காக அன்பர்கள் பலர் கடியாபட்டியில் ஒரு பாராட்டுக் கூட்டத்தை ஏற்பாடு செய்தனர். அந்தக் கூட்டத்திற்கு மகாமகோபாத்யாய தாக்ஷிணுத்ய கலாநிதி உ. வே. சுவாமிநாத ஐயர் தலைமை தாங்கினர். இராமலிங்க ஸ்வாமிகளின் திருவருட்பாவை அதுவரை வெளிவராத முறையில் ஓர் உயர்ந்த வெளியீடாக, ஆயிரத்தைந்நூறு பக்கங்களுக்குமேல் ஒரே புத்தகமாக உருவாக்கி ஆயிரக்கணக்கான பிரதிகளைச் செட்டியார் அடியார்களுக்கு இனமாக வழங்கிய பெருமையை, ஐயர் அவர்கள் எடுத்துக் கூறிச் செட்டியாரின் இந்த ஒரு தர்மச் செயலே ஸ்வாமிகள் அளித்த பட்டத்திற்கு உரியதாக ஆகுமென்றும், இதுபோல் பல தருமங்களைச் செட்டியார் செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். இன்னும் பல பெரியோர்கள் அன்று செட்டியாரைப் பாராட்டிப் பேசினர். மகிபாலன்பட்டி பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாரும் தம் பாராட்டுரைகளை அழகிய முறையில் அன்று வெளியிட்டார்.

வைனாகரம் இராமநாதன் செட்டியார்

வைனாகரம் இராமநாதன் செட்டியார் என்னும் பெரியார் தேவக்கோட்டைக்கடுத்த அமராவதிப்புதூரைச் சார்ந்தவர். அவர் ஓர் ஒப்பற்ற சிவ பக்தர்; ஆசார சீலர் ஒவ்வொரு நாளும் சிவ பூஜை செய்த

பிறகே அவர் உணவருந்துவார். பல மணிநேரம் பக்தி பரவசத்தில் அவர் பூஜையில் அமர்ந்திருப்பார்; எப்பொழுதும் உருத்திராக்ஷ மாலைகளை அணிந்திருப்பார்; தேவாரம், திருவாசகம், திருமந்திரம், முதலிய நூல்களை நன்கு ஆராய்ச்சி செய்து அவைகளின் கருத்துக்களை பிறருக்குப் பயன்படுமாறு அவர் உபதேசிப்பார்; அவற்றுடன் அவர் ஓர் கவியாகவும் விளங்கிவந்தார். அவர் மதுரை மீனாக்ஷி அம்மன் ஆலயத்தின் டிரஸ்டியாகச் சிலகாலம் இருந்தும் வந்தார்; அவர் அவ்வாலய டிரஸ்டியாக இருந்தபொழுது கடவுள் நம்பிக்கை இல்லாத கோஷ்டியார் மதுரையில் பக்தர்களுக்குப் பலவாறு துன்பங்களை விளைத்து வந்தனர். அப்பொழுது செட்டியார், ஓர் தொண்டர்படையைத் திரட்டி நாஸ்திகர்களின் தொந்தரவுகளை நீங்கும்படி செய்தார்.

ஸ்வாமிகள் கடியாபட்டியில் விஜயம் செய்திருந்தபொழுது ஸ்வாமிகளின் சிவ பூஜையைக் காணவும், சமய சம்பந்தமாகவும், உலக சம்பந்தமாகவும், ஸ்வாமிகள் உரையாடும் சொல் நயங்களை அனுபவிக்கவும் செட்டியார் சுமார் ஒரு வாரம் கடியாபட்டியிலேயே தங்கியிருந்தார். அப்பொழுது அவர் ஒவ்வொரு நாளும் பல மணி நேரம் ஸ்வாமிகளிடம் உரையாடி அந்தச் சம்பாஷணைகளில் களித்திருப்பார். கடியாபட்டி நகரத்தார் அப்பொழுது ஸ்வாமிகளுக்கு ஓர் பெரிய ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்தனர். ஊர்வலத்தின்பொழுது ஸ்வாமிகளைத் தரிசிக்க வெளியூர்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து கூடியிருந்தனர். அப்பொழுது முக்கியமானவர்கள் சிவிகையுடன் தொடர்ந்து வருவதை ஸ்வாமிகள் கண்டார்கள். ஆனால் அக் கூட்டத்னிடையே இராமநாதன் செட்டியாரைக் காணவில்லை. தொடர்ந்து ஒரு வாரமாகப் பழகிய செட்டியார் அச்சமயம் அங்கில்லாததை ஸ்வாமிகள் ஒருவாறு குறிப்பாக உணர்ந்தார்கள். இரவு ஒரு மணி வரை அந்த ஊர்வலம் நடைபெற்று அதற்குமேல் ஜாகையை அடைந்தது. ஸ்வாமிகள் சிவிகையிலிருந்து இறங்கியதும் வழக்கம்போல் ஒரு சிம்மாசனத்தில் சிறிது நேரம் அமர்ந்தார்கள். அமர்ந்தவுடன் இராமநாதன் செட்டியாரை அழைத்து வரும்படி கட்டளையிட்டார்கள். அப்பொழுது கூட்டத்தின் நடுவில் ஓர் மூலையில் நின்றிருந்த செட்டியார் கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஸ்வாமிகள் முன் வந்து அவர்களை வணங்கினர்.

ஸ்வாமிகளும் அவர்களைப் பார்த்து, 'தங்களை இவ்வளவு நேரம் காணவில்லையே! எங்கு சென்றிருந்தீர்கள்?' என்று வினவினார்கள். அதற்குச் செட்டியார் ஸ்வாமிகளை நோக்கி, "நான் ஊர்வலத்துடன்தான் வந்துகொண்டிருந்தேன்' எனக் கூறினார். தாம் அவரைக் காணவில்லையே என ஸ்வாமிகள் மேலும் வற்புறுத்திக் கேட்க, அவர், 'எனது தோள்கள் இன்றே பெரும் புண்ணியப் பயனை அடைந்தன: அவை ஸ்வாமிகளது திருமேனியைத் தாங்கி வந்தன' என்றார், அப்பொழுது ஸ்வாமிகள் புன்சிரிப்புடன், 'அப்படியா! சிவிகையைத் தாங்கி வந்தீர்களா?', என்று கேட்டார்கள். செட்டியார், 'ஆம்' எனக் கூறிவிட்டு, பக்தர்களைச் சிவனடியார்கள் சிவிகையில் அமர்த்தி அவர்களைத் தாங்கிப் போவது தமிழ் நாட்டின் பழைமையான பண்பாட்டில் ஒன்று என்றும், அன்று சமயகுரவர்கள் திருத்தலங்களுக்கெல்லாம் யாத்திரை செய்த பெருமையை இன்று ஸ்வாமிகள் யாத்திரையில் தாம் நேரில் கண்டதாகவும், புண்ணிய வசத்தால் ஸ்வாமிகளின் சிவிகையைத் தாங்கும் வாய்ப்பு தமக்கும் கிடைத்ததென்றும் கூறிவிட்டு, ஸ்வாமிகள் பேரில் ஐந்து பாக்கள் அமைத்து, அவைகளை அப்பொழுதே பாடி ஸ்வாமிகளிடம் சமர்ப்பணம் செய்து, அப்பாக்களுக்கு விளக்கத்தையும் அங்குக் கூடியிருந்த நூற்றுக்கணக்கான மக்களுக்கு எடுத்துரைத்தார். அப்பொழுது, அக்ஷம், அக்கம் என்னும் சொற்கள் கண்ணைக் குறிப்பதால், பல கண்கள் கண்டு மகிழும் பொருளே பல்லக்கு எனச் செட்டியார் சாதுர்யமாகப் பொருள் கூறினார்; மக்கள் யாவரும் செட்டியாரின் பக்தியைக் கண்டு மகிழ்ச்சியுற்றனர். ஸ்வாமிகளும் செட்டியார் அவர்களது புலமையைப் பெருமைப்படுத்த விரும்பி, அவருக்கு விலையுயர்ந்த ஒரு காசிப் பீதாம்பரத்தைச் சன்மானமாக அளித்து, விபூதி பிரசாதமும் கொடுத்து அவருக்கு ஆசி கூறினார்கள். செட்டியாரும் ஆனந்தக் கண்ணீர் பெருக்கி ஸ்வாமிகளை வணங்கி விடை பெற்றுக் கொண்டார்.

ஸ்வாமிகள் விஜயம் செய்யும் பல ஊர்களில் அவ்வூர்ப் பிரமுகர்களும், புலவர்களும், சாதாரண மனிதர்களும் ஸ்வாமிகளின் ஊர்வலத்தில் சிவிகையைத் தாங்களே தாங்கி வருவது வழக்கம்.

1925-ஆவது வருடம் ஜூலை மாதம் ஸ்வாமிகள் இளையாற்றங்குடியில் தங்கியிருந்தபொழுது வழக்கம்போல் வித்வான்கள் பலர் ஸ்வாமிகளைத் தரிசித்து, தங்கள் தங்கள் புலமைகளை வெளிப்படுத்தி, எல்லாக் கலைகளிலும் தேர்ச்சிபெற்ற ஸ்வாமிகளுடன் உரையாடிப் போவதற்கு வந்துகொண்டேயிருந்தனர். பல சமயங்களில் வேதாந்த, சித்தாந்த சாஸ்திரங்களில் சர்ச்சைகள் அப்பொழுது நிகழ்வதுண்டு. அவரவர்கள் புலமைக்குத் தக்கவாறு ஸ்வாமிகள் வித்வான்களைப் பெருமைப்படுத்தி அனுப்புவது வழக்கம்.

பண்டித மணியைப் பாராட்டியது.

ஒரு நாள் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் ஸ்வாமிகளைத் தரிசிக்க அவ்விடம் வந்தார். செட்டியார் வடமொழி, தென்மொழி இவ்விரண்டிலும் நல்லபுலமை வாய்ந்தவர்; பேசுவதில் சமர்த்தர்; ஒரே மொழியில் பல பொருள்களை அடக்கி ஹாஸ்யமாகப்பேசும் திறமைபடைத்தவர். தமிழ் நூல்களின் ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்; இப்படிப்பட்ட ஒரு வித்வானைச் சந்தித்து அவருடன் உரையாடுவதில் ஸ்வாமிகளுக்கு மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது. பழைமையான நூல்களைப் பற்றியும், தமிழும், வடமொழியும் இப்பொழுது அடைந்துள்ள நிலைமையைப் பற்றியும் காலம் கடந்தது தெரியாமல் மூன்றுமணி நேரத்திற்கும்மேல் ஸ்வாமிகள் அவரிடம் உரையாடினார்கள். நம் நாட்டுப் புராதனக் கலைச்செல்வங்கள் அழியாமலிருப்பதற்குத் தமிழும், வடமொழியும் ஒருங்கே வளம்பெற வேண்டுமென்றும், அன்று இருந்த நிலையில் அவ்விருமொழிகளும் புறக்கணிக்கப்படுகின்றனவென்றும், பண்டிதமணியைப் போன்றவர்களே எதிர்காலத்தில் நல்ல புலவர்களை உருவாக்க முடியுமென்றும், ஸ்வாமிகள் தெரிவித்தார்கள். பண்டிதமணியும் ஸ்வாமிகளின் தவமகிமையையும், பன்மொழிப் புலமையையும் பல்கலைப் புலமையையும் கண்டு வியப்படைந்தவராகி, ஸ்வாமிகளைப் போன்ற பெரியவர்களின் ஆசியினால் இருமொழிகளும் நன்கு வளருமென்றும், தம்மால் அதற்கானவைகளை யெல்லாம் செய்யச் சித்தமாக இருப்பதாகவும் கூறினார். ஸ்வாமிகள் அவரது புலமையை மெச்சி அவருக்கு ஓர் பீதாம்பரமளித்துத் தக்க மரியாதை செய்தார்கள். செட்டியாரும் ஸ்வாமிகளை வணங்கி என்றென்றும் தம்மைப்பற்றிய நினைவு ஸ்வாமிகளுக்கு இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெற்றுக்கொண்டார்.

1926-ஆவது வருடம் பிப்ரவரி மாதம் இரண்டாம் தேதி ஸர். சா. ராம. மு. சித. முத்தையா செட்டியார் முதலான நகர மக்களின் அழைப்பிற்கிணங்கி ஸ்வாமிகள் கானாடுகாத்தானுக்கு விஜயம் செய்ததைப் பற்றி முன்பே கூறி யுள்ளோம். அப்பொழுது டில்லி சென்றி ருந்த சா. ராம. மு. அ. அண்ணாமலை செட்டி யார் ஸ்வாமிகளைத் தரிசிக்க வேண்டு மென்று, தம் அலுவல்களைச் சீக்கிரம் முடித்துக் கொண்டு தமது சொந்தத் ஸ்தலமாகிய கானாடுகாத்தானுக்கு வந்துசேர்ந்தார். அண்ணாமலை செட்டியார் ஸ்வாமிகளைத் தரிசித்து அவர்களிடம் உரையாடிக் கொண்டிருந்த பொழுது, ஸ்வாமிகளின் அந்த யாத் திரையானது மக்களுக்கிடையே நல்ல பயனை அளித்திருப்பதாக வும், எந்த மடாதிபதிகளும் இவ்வளவு நீண்டகால யாத்திரையை இதுவரை மேற்கொள்ள வில்லையென்றும், நாஸ்திகர்களை நல்வழிப் படுத்த ஸ்வாமிகளின் தரிசனம் ஒன்றே போதுமென்றும், மற்ற மடாதிபதிகளும் ஸ்வாமிகளைப் பின்பற்றித் தீவிரமான பிரசா ரத்தைச் செய்யவேண்டுமென்று தாம் விரும்புவதாகவும் தெரிவித் தார். மேலும் பிராமணக் குடும்பங்கள் ஏழ்மைநிலை அடைந்து வருவதைப் பற்றிச் செட்டியார் ஸ்வாமிகளிடம் மன வருத்தத் துடன் விண்ணப்பித்து, அதைத் தடுக்க ஒரு வழி தேடவேண்டு மென்றும், பெண்களுக்காகக்கொடுக்கும் வரதட்சிணையே அதற்குக் காரணமென்று தாம் எண்ணுவதாகவும், அந்தச் சமூகத்திலுள்ள அக்கொடிய பழக்கத்தை அகற்ற ஸ்வாமிகள் ஒரு திட்டத்தை வகுத்துக் கொடுத்தால் அதன் பிரசாரத்திற்காகத் தாமே பொருளு தவி செய்வதாகவும் உரைத்தார். மற்றும் அந்நியர் நாகரிகத்தில் எல்லாச் சமூகங்களைக் காட்டிலும் பிராமண சமூகமே அதிகமாக ஈடுபடுகிறதென்றும், அந்தச் சமூகத்தை மற்றச் சமூகங்களும் பின்பற்றித் தங்கள் வாழ்க்கைச் செலவுகளை அளவுக்குமீறிப் பெருக்கிக் கொள்கின்றதென்றும், இந்தத் தீமையையும் தடுக்க முயற்சிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார். செட்டியார் கூறியவற்றையெல்லாம் ஸ்வாமிகள் மிகுந்த கவனத்துடன் கேட்டுத் தமக்கும் இவ் விஷயங்களில் மிகுந்த கவலை இருப்ப தாகவும், சரீரத்தில் விஷம் ஏறுவது போல இந்தத் தீமைகள் சமூகத்தில் பரவி வருவதைத் தாம் உணர்ந்திருப்பதாகவும், இதில் செட்டியார் அவர்களுக்குச் சிரத்தை ஏற்பட்டிருப்பதே ஓர் நல்ல

ராஜா. ஸர். அண்ணா மலை செட்டியாருக்கு அளித்த பேட்டி

அறிகுறியாகத் தாம் கருதுவதாகவும், தேவையுள்ள போதெல்லாம் அவரது உதவியைத் தாம் உபயோகித்துக் கொள்வதாகவும் தெரிவித்தார்கள். செட்டியாரும் மனமகிழ்ச்சியோடு ஸ்வாமிகளை வணங்கி விடைபெற்றுக் கொண்டார்.

இளையாற்றங்குடியில் சாதுர்மாஸ விருதம்.

நம் ஸ்வாமிகள் தம் குருநாதருடைய அதிஷ்டானத்தைத் தரிசிக்க இளையாற்றங்குடிக்கு அடிக்கடி செல்வதுண்டு என்பதை முன்பே கூறினேம். 1925-ஆவது வருட சாதுர் மாஸத்தை யொட்டி ஸ்வாமிகள் அங்கு மூன்று மாதங்கள் தங்கியிருந்தார்கள். அப்பொழுது ஒவ்வொரு நாளும் கைலாசநாதரையும், நித்யகல்யாணி அம்பிகையையும், தம் குருவின் அதிஷ்டானத்தையும், தவருது அவர்கள் தரிசனம் செய்தார்கள். ஸ்வாமிகள் தங்குவதற்கு நகரத்தார் விடுதியில் இடம் அமைத்துக்கொடுத்திருந்தார்கள் என்ருலும், அநேகமாக ஸ்வாமிகள் தேவஸ்தானத்தைச் சேர்ந்த தென்னந் தோப்பின் சோலையிலேயே மாலை நேரங்களில் தங்கி வந்தார்கள்.

இளையாற்றங்குடி பிரிவைச் சார்ந்த ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக அந்தச் சிறிய ஊர் இன்று மிகவும் சிறப்பாக விளங்குகிறது. ஆலயத்தின் பழமையான நிலை மாருதவாறு, திருப்பணிகள் செய்விக்கப்பட்டு, சென்ற 1939-ஆவது வருடம் (பிரமாதி வருடம் வைகாசி மாதம்) கும்பாபிஷேகமும் நடைபெற்றது. சுமார் நூறு வீடுகள் கொண்ட அவ்வூரில் தேவஸ்தானத்தார் சிப்பந்திகளுக்கெல்லாம் அவரவர்கள் தகுதிகளுக்கேற்றவாறு வீடுகளும், குழாய்மூலம் குடி தண்ணீர் வசதியும், ஊர் நடுவில் ஓர் அழகிய பூங்காவும், அதன் நடுவில் ஒருரேடியோ ஒலிபெருக்கியும், இலவச ஆரம்பப் பள்ளியும், தபால் ஆபீசும், பிரசவ விடுதியும், வெளியூர்களிலிருந்து வருவோர்களுக்குத் தங்க வசதியான விடுதிகளும் அமைத்துள்ளார்கள். தேவஸ்தானத்தைச் சேர்ந்த நந்தவனத்தில் அன்ருடம் பூஜைக்கு வேண்டிய புஷ்பங்கள் கிடைக்கும்படி செய்திருப்பதுடன், நூற்றுக்கணக்கான வகையில் பல்வேறுவிதங்களான புஷ்பச் செடிகளையும் பழ வகைகளையும் வளர்க்கச்செய்து, அவைகளை மிகவும் ஜாக்கிரதையாகக் கண்காணித்து வருகிருர்கள். இந்த நந்தவனத்தைக் காண்பதே ஓர் கண்காட்சியாக அமைந்திருக்கிறது. அங்கே

தனிமையாக ஒரு பசுமடமும் ஏற்படுத்தப்பட்டு அதில் கோ சம்ரக்ஷணமும் நடைபெற்று வருகிறது. இளையாற்றங்குடிக் கோவிலின் ஒரு பிரிவைச் சேர்ந்த ஒக்கூர் நகரத்தார் இளையாற்றங் குடியில் சுமார் பத்து லக்ஷ ரூபாய் செலவில் ஒரு குளத்தையும், ஓர் விநாயகர் ஆலயத்தையும் அமைத்துள்ளார்கள். அந்தப் பெரிய குளத்திற்குப் பிரளயம் எனப் பெயரிட்டுள்ளார்கள். நகரத் தார் நாட்டில் குடி தண்ணீருக்கு உதவும் குளங்களுக்கெல்லாம் ஊருணி என்பது பெயர், இளையாற்றங்குடியில் வேறு சில ஊருணிகளும் உண்டு. அவ்வூரில் அமைந்துள்ள புராதனமான ஆதி கேசவப் பெருமாள் ஆலயத்திற்கு நகரத்தாரின் மற்றொரு பிரிவைச் சேர்ந்த கழனி வாசல் நகரத்தார் மிகச் சிறந்த முறையில் திருப்பணி செய்துள்ளார்கள். பழைமையான ஆலயங்களையும், அவைகளில் அமைந்துள்ள சிற்பங்களையும் நாம் கண்டு உண்மையில் பிரமிக்கக்கூடியவர்களாவோம். அவைகளை அமைத்த தொழிலாளி களும் சிற்பிகளும் இக்காலத்தில் இல்லையே என மனஸில் வருத்தமும் உண்டாகும். பழைய நிலைக்கு எவ்விதத்திலும் குறையாதவாறு கைவேலைகளை செய்யக்கூடிய நுண்ணறிவு படைத்த தொழிலாளி களும், சிற்பிகளும் இன்றும் நம் நாட்டைவிட்டு அகலவில்லை யென்பதை இந்த விஷ்ணு ஆலயம் நிரூபிக்கிறது. இக்கோயிலில் சிற்பிகள் பெரிய கல்தூண்களில் தசாவதாரத்தின் உருவங்களைச் சித்தரித்திருக்கிறார்கள்; தார்சின் ஒரு புறத்தில் காந்திமகானின் உருவத்தையும், அமைத்திருக்கிறார்கள்.

65-ஆவது ஆச்சாரிய ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தைச் சுற்றிலும் வெளிச்சுவர்களும் பிரகாரங்களும் அமைத்து தண்ணீர் வசதியும் அமைத்துள்ளார்கள். இளையாற்றங்குடி தேவஸ்தானமும் திறமைவாய்ந்த அதிகாரிகளால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொருவருடமும் பங்குனி மாதத்தின் அமாவாசையில் நிகழும் ஸ்ரீ மகாதேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் ஆராதனையைத் தேவஸ்தானத்தார் சிறப்பாக நடத்தி வருகிறார்கள்.

காங்கிரஸ் தலைவர்கள் ஸ்வாமிகளை பேட்டி கண்டது.

ஸ்வாமிகள் இளையாற்றங்குடியில் விஜயம் செய்திருந்த பொழுது காங்கிரஸ் தலைவர்களான எஸ். சத்தியமூர்த்தி, டாக்டர் யூ. ராமராவ் முதலியவர்கள் ஸ்வாமிகளைப் பேட்டி கண்டு, சட்டசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் தலைவர்கள் கலந்துகொள்ளப்

போவதை அவர்களிடம் தெரிவித்து, அவர்களுடைய ஆசியைப்பெற விண்ணப்பித்துக்கொண்டார்கள். அவர்களிடம் ஸ்வாமிகள், சிஷ்யர்களின் நன்மையில் தமக்கு எப்பொழுதும் சிரத்தை உண்டென்றும், அவர்களுக்குத் தம் ஆசியை அளிக்க தாம் சித்தமாய் இருப்பதாகவும் கூறி, ஆனால், எந்தக் கட்சியைச் சேர்ந்தவாயினும் பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற்றால்தான் தேர்தலில் வெற்றியடைய முடியுமென்றும், அவர்களால் முடிந்தவரையில் மக்களுக்கும் தெய்வத்திற்கும் பணி செய்யவேண்டுமென்று தேர்தல்களில் நிற்பவர்கள் சங்கல்பம் செய்து கொள்ளவேண்டுமென்றும் சொல்லி அனுப்பினார்கள்.

இராயவரத்தில் ஸ்வாமிகள் விஜயம் செய்திருந்தபொழுது ஹிந்து பத்திரிகை அதிபர், ஏ. ரங்கஸ்வாமி ஐயங்காரும், தஞ்சை ஈ. சூரியநாராயண ஐயரும் ஸ்வாமிகளைத் தரிசிக்க வந்தனர். காந்தியடிகளின் சத்தியாக்ரகத்தைப்பற்றியும், நம் நாட்டில் அக்காலத்தில் நடைபெற்று வந்த சுதந்திரக் கிளர்ச்சிகளைப்பற்றியும், வெகு நேரம் அவர்கள் ஸ்வாமிகளுடன் சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். ரங்கஸ்வாமி ஐயங்கார் ஒப்பற்ற அரசியல் ஞானி; காந்தியடிகளின் உள்ளத்தை நன்கு அறிந்தவர். சில முக்கியமான விஷயங்களில் ஸ்வாமிகளின் அபிப்பிராயத்தை அறியவே ஐயங்கார் அப்பொழுது அங்கு வந்தார். சம்பாஷணைக்குப் பிறகு ஸ்வாமிகள் அளித்த சில ஆலோசனைகளால் தாம் மிகவும் பயனடைந்ததாகவும், அந்த ஆலோசனைகளின்படி நடந்துகொள்வதாகவும் அவர் தெரிவித்தார். ஐயங்கார் விடைபெற்றுக் கொள்ளும் முன்னர் ஸ்வாமிகள் ஐயங்காரிடம் ஹிந்து பத்திரிகையை நடத்திவரும் விவரங்களையெல்லாம் கேட்டறிந்து, அதன் சேவையைப்பற்றித் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துப் பத்திரிகை நடத்துவோர் இலாபத்தைக் கருதவேண்டியது அவசியமேயானாலும் மனஸில் சரியென்று தோன்றுவதை மறைக்காமல் வெளியிட ஒரு பொழுதும் பின் வாங்கக்கூடாதென்றும், எந்த நிலையிலும் தெய்வ நம்பிக்கையை இழக்கலாகாதென்றும் கூறி, ஐயங்காரை அனுக்ரகித்து விடைகொடுத்தார்கள்.

ஒரு முஸ்லீம் பக்தர்.

1926-ஆவது வருடம் ஜனவரி மாதத்தில் ஸ்வாமிகள் ராஜா மடத்திற்குச் சமுத்திர ஸ்நானத்திற்காகச் சென்றபொழுது, புதுக்கோட்டைச் சீமையைச் சேர்ந்த கறம்பக்குடியில் ஒரு நாள் தங்கினார்கள். அவ்விடமிருந்து பட்டுக்கோட்டைக்கு அடுத்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்

தது. கறம்பக்குடி ஜனங்கள் ஸ்வாமிகளை வழியனுப்பப் பெரிய கூட்டமாக ஊர் எல்லைவரை வந்தனர். அக்கூட்டத்தில் சில இஸ்லாமியர்களும் காணப்பட்டனர். அவர்களில் ஒரு இஸ்லாமியர் மாத்திரம் ஸ்வாமிகளின் பல்லக்கைப் பிடித்துக்கொண்டு சுமார் மூன்று மைல்கள்வரை தொடர்ந்து வந்து கொண்டிருந்தார். இதைக் கவனித்த ஸ்வாமிகள் பல்லக்கை நிறுத்தும்படி கூறி, அந்த இஸ்லாமியரை அழைத்து விசாரித்தார்கள். அவர் ஸ்வாமிகளிடம் தம் சொந்த விஷயங்கள் பலவற்றைத் தெரிவித்துவிட்டு, ஸ்வாமிகளின் பேரில் தாம் இயற்றிய சில பாடல்களையும், ஒரு பூமாலையையும், மற்றும் தாம் கொண்டுவந்த பழங்கள், கற்கண்டு, வாசனைத் திரவியம், பவுன் காணிக்கை, இவைகளையும் ஸ்வாமிகளின் பாதங்களின் சமீபத்தில் சேர்ப்பித்தார். ஸ்வாமிகள் அவைகளை அன்புடன் ஏற்றுக்கொண்டு அவர் எழுதிய பாடல்களை அவரையே படிக்கும்படி கேட்க, அவரும் அப்பாடல்களைப் பாடி அவற்றிற்கு விளக்கமும் கூறினர். ஸ்வாமிகள் தமது வழக்கமான புன்சிரிப்புடன் அப்பாட்டுக்களைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த முஸ்லிம் சற்று நேரம் மௌனமாக இருந்து, பிறகு ஆனந்தக் கண்ணீர் பெருக்கினர். பின்னர் அவர் ஸ்வாமிகளைப் பார்த்து, "என் கண்களுக்கு ஸ்வாமிகள் அல்லாவின் உருவமாகவே தோன்றுகிறது; மனிதன் உலக பாசங்களிலிருந்து விடுபடுவதற்கு ஸ்வாமிகளைப் போன்ற மகான்களின் தரிசனமே போதும். வெகுநாட்கள் ஸ்வாமிகள் அடியார்களுக்குத் தரிசனம் கொடுத்து அவர்களை உய்விக்கச்செய்யவேண்டும்; ஏகாந்தமான தரிசனத்தை வேண்டியே நான் பல்லக்குடன் அவ்வளவு தூரம் ஓடிவந்தேன்" என்று தெரிவித்தார், மேலும் அவர் ஆனந்தக் கண்ணீர் விடுத்து உள்ளம் உருகி அழுதார். ஓர் உண்மை பக்தருடைய நிலை அவரிடம் பிரதிபலித்தது. மடத்தின் சிப்பந்திகள் அந்தப் பக்தரது நிலையைக்கண்டு ஆச்சரியமடைந்தனர். ஸ்வாமிகள் கருணை கூர்ந்து அவரைத் தேற்றி அவருக்குப் பரிபூரண அனுக்ரகத்தைச் செய்து விடைகொடுத்தனுப்பினர்கள்.

சேத்ஜமன்லால் பஜாஜும், ராஜாஜியும் ஸ்வாமிகளைத் தரிசித்தது.

1926-ஆவது வருடம் மார்ச்சு மாதம் ஸ்வாமிகள் திருவானைக்கா ரங்கூன் ரெட்டியார் சத்திரத்தில் முகாம் செய்திருந்தார்கள். அச்சமயம் சேத்ஜமன்லால் பஜாஜ் என்ற காங்கிரஸ் பிரமுகர் தமிழ்

நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்துவந்தார். அவருக்கு ஸ்வாமிகளைத் தரிசிக்கவேண்டுமென்ற அவா இருந்தது. அவர் தம் அவாவைத் திருச்சியில் அக்காலத்தில் காங்கிரஸ் தலைவராயிருந்த டாக்டர் டி. வி. ஸ்வாமிநாத சாஸ்திரிகளிடம் தெரிவிக்க, அவரும் மடத்தின் அதிகாரிகளைக் கலந்துகொண்டு அவரை ஸ்வாமிகளுடன் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தார். குறிப்பிட்ட அந்நாளில் பஜாஜ், சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், டாக்டர் சாஸ்திரி, மடத்தில் நெருங்கிய தொடர்புள்ள வக்கில் வி. ஐயராம ஐயர், ஆகியோர்கள் ஸ்வாமிகள் தங்கி இருந்த அந்த ஜாகைக்கு வந்தனர். பஜாஜ், சாஸ்திரி, வக்கீல் ஐயர் இவர்கள் மட்டும் ஸ்வாமிகள் இருந்த சத்திரத்தின் மேல் மாடிக்குச் சென்றனர். இவர்கள் ஸ்வாமிகளை வணங்கி அமர்ந்தவுடன் இன்னும் யாராவது வந்திருக்கிறார்களா வென்று ஸ்வாமிகள் கேட்டார்கள். ராஜாஜியும், வந்திருப்பதாகவும், அவர் வெளியிலிருப்பதாகவும், அவர்கள் தெரிவித்தார்கள். ஸ்வாமிகள் வக்கில் ஐயராம ஐயரை அனுப்பி, ராஜாஜியை அழைத்துவரும்படி கூறினார்கள், அப்பொழுது ராஜாஜியும் ஸ்வாமிகள் அமர்ந்திருந்த சத்திரத்தின் மேல் மாடிக்குச் சென்று, ஸ்வாமிகளை முறைப்படி வணங்கிக் கீழே அமர்ந்தார். ஸ்வாமிகள் அவரைப் பார்த்து அவர் கீழே தங்கி இருந்ததற்கு காரணத்தைக் கேட்க, ராஜாஜி தாம் ஸ்நானம் செய்து சரீர சுத்தி செய்து கொண்டுதான் தரிசனத்திற்கு வரவேண்டுமென வெளியில் தங்கியிருந்ததாகக் கூறினார். அப்பொழுது ஸ்வாமிகள் அவரைப் பார்த்து, தேச சேவையில் ஈடுபட்டவர்களுக்கு அடிக்கடி சரீர சுத்தி செய்துகொள்ள அவகாசம் கிடைக்காதென்றும், சலியாத உழைப்பே அவர்களது விருதமாக அமைந்திருப்பதென்றும், தூய்மையான மனம் படைத்த ராஜாஜியைப் போன்றவர்கள் எந்தச் சமயத்திலும் தம்மிடம் வருவதற்குத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்களென்றும் கூறினார்கள். ராஜாஜியும் மனம் குளிர்ந்தவராகி, மேலே தொடர்ந்த சம்பாஷணையில் ஈடுபட்டார். தேசத்தின் விடுதலைப் போராட்டத்தைப் பற்றியும், கதர், ஹிந்திப் பிரசாரம், காந்தியடிகளின் தேச சேவை இவைகளைப் பற்றியும், நீண்ட நேரம் சம்பாஷணை நடைபெற்றது. ஸ்வாமிகள் அந்தச் சம்பாஷணைகளில் ஆர்வத்துடன் கலந்துகொண்டு அத்தலைவர்களுக்குத் தம் அபிப்பிராயங்களையும் எடுத்துக் கூறினார்கள். ஸ்வாமிகளின் தரிசனத்தால் ஆத்மீகத் துறையிலும்,

லௌகிகத் துறையிலும், அவர்கள் மிகப் பெரிய பயனை அடைந்த தாகக் கூறிவிட்டு, ஸ்வாமிகளை வணங்கி விடைபெற்றுக் கொண்ட னர். ஸ்வாமிகள் அப்பொழுது கதர் இயக்கத்திற்காக ரூபாய் ஆயிரம் நன்கொடையளித்தார்கள்.

மேற்கூறியவாறு சுமார் ஒரு வருட காலம் ஸ்வாமிகள் நகரத் தார் நாட்டிலும், புதுக்கோட்டைச் சமஸ்தானத்திலும், விஜயம் செய்துவிட்டு, திருச்சி மார்க்கமாக 1926-ஆவது வருடம் ஜுலை மாதம் உடையார்பாளையத்திற்கு விஜயம் செய்தார்கள். உடையார்பாளையம் சமஸ் தானத்திற்கும் நமது மடத்திற்கும் பரம்பரை யாகப் பிரிக்க முடியாத தொடர்பு ஏற்பட்டிருந்தது. மடம் காஞ்சி யிலிருந்து கும்பகோணத்துக்கு மாற்றப்பட்டபோது, அப்பொழு திருந்த ஆசார்ய ஸ்வாமிகள் உடையார் பாளையத்தில் தங்கிச் சென்ற செய்தி முன்பே கூறப்பட்டது. அந்தக் காலத்தில் உடையார்பாளையம் சமஸ்தானம் தஞ்சை மகாராஷ்டிர மன்னர் களின் கீழ் ஓர் பாளையப்பட்டாகவிருந்தது. அதை ஆண்ட தலைவர் கள் அம்மன்னர்களின் கீழ் நாட்டைக் காக்கும் இராணுவ அதி காரிகளாக அமர்ந்திருந்தார்கள். பின்னர் அவர்கள் சிற்றரசர் களின் நிலைமையைப் பெற்று ஜமீன்தார்கள் என அழைக்கப் பட்டனர். அவர்கள் காஞ்சி காமாக்ஷியம்மனுக்குத் தொன்று தொட்டே அடிமைகள். அதனால்தான் அந்தச் சமஸ்தானாதிபதி கள் தம் பெயர்களைக் கச்சி சின்ன நல்லப்பன், கச்சி யுவரங்கப்பன் என்று கச்சிப் பெயரைக்கூட்டி அமைத்துக் கொண்டிருந்தார்கள், இந்தச் சமஸ்தானாதிபதிகள் நல்ல கலா ரசிகர்கள். சங்கீதத்தை ஆதரித்த அரச குடும்பங்களில் உடையார்பாளையத்தை மிகவும் சிறப்பாகக் கூறலாம். 'பிற்காலத்தில் (சுமார் 70 வருஷங்களுக்கு முன்கூட) கனம் கிருஷ்ணையர் என்னும் சங்கீத வித்வான் அவர் களது ஆஸ்தானத்தில் அமர்ந்திருந்து தமிழில் பல கீர்த்தனைகளை இயற்றியுள்ள செய்தி உலகம் அறிந்ததே; அவைகளில் பெரும் பான்மை கும்பகோணம் ஸ்ரீ சாரங்கபாணி சுவாமி பேரில் இயற் றப்பட்டவைகளாகும்.

உடையார் பாளையம் விஜயம்.

காமகோடி பீடத்தின் சங்கரமடமானது காஞ்சியிலிருந்து சோழ மண்டலத்திற்கு விஜயமாகப் போவதை அறிந்த உடையார் பாளையத்தின் அக்காலத்து அதிபர் சுவாமிகளின் பிரயாணத்

திற்கு வேண்டிய பந்தோபஸ்துகளை யெல்லாம் செய்துகொடுத்து, உடையார் பாளையத்திலேயே மடத்தைச் சிலகாலம் தங்க ஏற்பாடு செய்திருந்தார். காஞ்சியில் காமாக்ஷியம்மன் ஆலயத்திலிருந்த பங்காரு காமாக்ஷியம்மன் விக்கிரகத்தை, அப்பொழுது முகம்மதியர் களிடமிருந்து காப்பதற்காக ஆசாரிய சுவாமிகள் தம்முடன் எடுத்துவந்ததாகக் கூறப்படுகிறது. பங்காரு என்பது பொன்னைக் குறிக்கும் தெலுங்குமொழி. இன்றும் காஞ்சிபுரம் காமாக்ஷி அம்மன் ஆலயத்தில் பங்காரு காமாக்ஷியம்மன் சன்னதி காலியாக இருந்து வருவதைக் காணலாம். அந்த அம்மனுடன் அக்காலத்து ஆசார்ய சுவாமிகள் உடையார்பாளையத்தில் தங்கி யிருப்பதை அறிந்த தஞ்சை மகாராஷ்டிர மன்னர் பிரதாப சிம்மன் ஸ்வாமிகளைத் தஞ்சைக்கு அழைத்தார். மன்னரின் விருப்பப்படி தஞ்சையில் சிலகாலம் ஸ்வாமிகள் தங்கியிருந்தபொழுது, இந்தப் பங்காரு காமாக்ஷியம்மன் விக்கிரகத்தைத் தஞ்சை மேல வீதியில் மன்னரால் கட்டுவிக்கப்பெற்ற ஆலயத்தில் பிரதிஷ்டை செய்தார் கள். இந்த அம்மனைப் பூஜிக்கும் பெருமைவாய்ந்தவர்களான வடமர் வகுப்பைச் சேர்ந்த அந்தணர்கள் அப்பொழுது காஞ்சியிலிருந்து தஞ்சைக்குக் குடியேறினர்கள். சங்கீதக் கலையின் மும்மணிகளில் ஒருவாராக விளங்கிய சியாமா சாஸ்திரிகள் இந்த மரபைச் சேர்ந்த வர்கள் என்பதை இவ்விடம் குறிப்பிடவேண்டும். இவர் காமாக்ஷி அம்மன் பேரில் பல கீர்த்தனைகளை இயற்றியுள்ளார். உடையார் பாளையத்திலுள்ள ஆலயத்திலும் பங்காரு காமாக்ஷியம்மன் வைக் கப்பட்டிருந்த மூலஸ்தானமானது இன்றும் காலியாகவே இருந்து வருகின்றது. அப்போதிருந்த ஆசார்ய சுவாமிகளுக்குத் தஞ்சை யில் வசிக்க மனமில்லாததால், அவர்களுக்காகக் கும்பகோணத்தில் காவிரியின் தென் கரையில் மன்னரது மந்திரியான டபீர்பந்த் என்பவரால் ஒரு மடம் கட்டுவிக்கப்பெற்றது. அப்பொழுது அந்த அமைச்சர் மடத்தைச் சுற்றிலும் அக்கிரகாரம் அமைத்து, அதை வேதங்களைக் கற்றறிந்த அந்தணர்களுக்குத் தானமாகக் கொடுத்தார். அந்த அக்கிரகாரம் அந்த அமைச்சர் பெயரால் இன்று டபீர் தெருவென வழங்கப்படுகிறது. அன்றுமுதல் காம கோடி பீடத்தின் நிர்வாகஸ்தானம் கும்பகோணத்தை அடைந்தது. இவைகளெல்லாம் நிகழ்ந்தது சுமார் 200 வருடங்களுக்கு மேலா கும். அன்றுமுதல் உடையார்பாளையம் ஜமீன்தார்களும் மடத்திற்கு வேண்டிய பணிகளை எல்லாம் அவ்வப்போது புரிந்து வந்தனர்.

நம் ஸ்வாமிகள் 1926-ஆம் வருடம் உடையார்பாளையத்திற்கு விஜயம் செய்தபோது ஜமீன்தார் தமது பரம்பரைக்கு ஏற்றவாறு ஸ்வாமிகளுக்குச் சீரிய முறையில் வரவேற்பளித்து, சுமார் 15 நாட்கள் தமது அரண்மனையிலும் அவ்வூர் ஆலயத்திலும் அவர்கள் தங்கவசதிகள் செய்துகொடுத்து, பாதபூஜை, பிக்ஷை, ஊர்வலம் முதலியவைகளை நடத்தி வைத்தார். மேலும் அவர், ஆறு மாதங்களே நிறைந்த ஒரு ஆண் யானைக்கன்றையும், இரண்டு குதிரைகளையும், ஒரு ஒட்டகத்தையும், பசுக்களையும் அப்பொழுது மடத்திற்குக் காணிக்கைகளாக அளித்தார். பல ஆண்டுகள் மழையையே காணாத அந்த ஸமஸ்தானப் பகுதியில் அவ்வாண்டு நல்ல மழை பொழிந்து பயிர் செழித்துப் பலன் பெருகி மக்களுக்கெல்லாம் களிப்பை அளித்தது.

அவ்வருஷத்து வியாஸ பூஜைச் சாதுர்மாஸ சங்கல்பத்தை ஸ்வாமிகள் சிதம்பரத்துக்கு அடுத்த காட்டுமன்னார் கோயிலில் நடத்தினார்கள். அங்கிருந்து கிளம்பி திருப்பாதிரிப்புலியூர், மஞ்சக்குப்பம், கடலூர், புதுப்பாளையம் இவ்விடங்களிலுள்ள பக்தர்களின் பிராத்தனைகளுக்கிணங்கி ஆங்காங்குத் தங்கி, ஸ்வாமிகள் திருப்பாதிரிப்புலியூருக்கு வந்து அங்குக் கடியாபட்டி தர்மபூஷணம் தி. நா. நாச்சியப்ப செட்டியார் தரும சத்திரத்தில் 1926-ஆவது வருடத்தில் நவராத்திரி பூஜையை மிகவும் விமரிசையாக நடத்தினார்கள். அந்த ஊருக்கு ஸ்வாமிகளின் விஜயம் செய்தது அதுவே முதல் தடவையானதால், ஆயிரக் கணக்கான பக்தர்கள் ஒவ்வொரு நாளும் பூஜையைத் தரிசிக்கச் சத்திரத்தில் கூடினார்கள். ஒன்பது நாட்களும் ஊர் முழுவதும் திருவிழாக் காட்சியாக விளங்கியது. கடியாபட்டி, தர்மபூஷணம் செட்டியார் ஸ்வாமிகளின் பூஜைக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து கொடுத்து, ஒன்பது நாட்களும் கூடவே இருந்து பணி ஆற்றினார். விஜய தசமி யன்று ஓர் பெரிய ஊர்வலத்தையும் செட்டியாரவர்களும் மற்றும் ஊர் மக்களும் ஏற்பாடு செய்தார்கள். அன்றிரவு ஸ்வாமிகள் அவ்வூரின் முக்கிய வீதிகளின் வழியே பவனி வந்த காட்சி மிகச் சிறப்பானதொன்றாகும்.

சுவாமிகள் திருப்பாதிரிப்புலியூரில் தங்கியிருந்தபோது தமிழில் நல்ல பாண்டித்யம் பெற்றவரும், பல வருடங்கள் காங்கிரஸில் ஈடுபட்டுத் தேச சேவைபுரிந்தவரும் காந்திமகான்

சரித்திரத்தை செய்யுள்களாக இயற்றியவருமான பண்டிதை அசலாம்பிகை அம்மையார் சுவாமிகளின் பேரில் ஐந்து செய்யுள் களை இயற்றி அவற்றை அவர்களின் முன்னிலையில் வாசித்து வழங்கினர். அந்த அம்மையார் சுவாமிகளின் தந்தையாரிடம் கல்வி கற்ற பேற்றைப் பெற்றவர். அக்காலத்தில் குழந்தையா யிருந்த நம் ஸ்வாமிகளை அவர் அன்புடன் பாராட்டியதுண்டு. ஸ்வாமிகளைத் தரிசிக்க வந்தபொழுது அம்மையாருக்கு உடல்நலம் மிகவும் குன்றியிருந்தது. ஆயினும் தாம் முன் அறிந்த சுவாமிநாதன் இப்பொழுது குருநாதன் வடிவமாக விளங்குவதைக் கண்டு பெரிதுங்களித்து அவரை வணங்கி ஆனந்தக்கண்ணீர் பெருக்கினர். அப்பொழுது மௌன நிலையிலிருந்த ஸ்வாமிகள் தம் அருள் பெருகும் பார்வையினுல் அந்த அம்மையாரை அனுக்கிரகித் தார்கள்.

காமகோடி பீடம் ஆசார்ய ஸ்வாமிகள் புதுச்சேரிக்கு விஜயம் செய்யும் போதெல்லாம் பிரெஞ்சு சர்க்கார் ஸ்வாமிக ளுக்குத் தக்க பல மரியாதைகள் செய்வது வழக்கம். 1926–வருடம் டிசம்பர் மாதம் ஸ்வாமிகள் புதுச்சேரிக்கு விஜயமானர்கள். அப்பொழுது சர்க்கார் செலவில் ஊர் முழுவதும் தோரணங்களாலும் ஆங்காங்கு அமைக் கப்பெற்ற ஆர்ச் வளைவுகளாலும் பந்தல்களாலும் அலங்கரிக்கப் பெற்றிருந்தது. போலீஸ் படைகளின் அணிவகுப்புக்களுடனும் சர்க்கார் பாண்டு வாத்தியங்களுடனும் எல்லா உயர்தர இந்திய உத்தியோகஸ்தர்களும் மத வேற்றுமையின்றிப் பல்லாயிரக்கணக் கான பொதுமக்களும் நகரின் எல்லையில் ஸ்வாமிகளை வரவேற்ருர் கள். மிகப் பெரியதொரு ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பெற்றி ருந்தது. பிரஞ்சு கவர்னர் தம்பதிகளும், சேர்மன், மேயர் முதலான ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களும் நகரின் நடுவில் ஒரு முக்கிய சந்திப்பில் நின்று ஸ்வாமிகளை இந்து முறைப்படி கைகூப்பி வணங்கி, அவர்களின் தரிசனத்தினுல் தாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்ததாகவும், ஜாதிபேதமின்றி நகரமக்கள் அன்று பெரும் உற்சாகத்தைக் காட்டுவதாகவும் தெரிவித்தார்கள். ஸ்வாமிகளும் அவர்களெல்லோரது பிரீதிக்கும் தம் சந்தோஷத்தைப் புன்னகை யுடன் தெரிவித்தார்கள். சுமார் ஒரு வாரம் ஸ்வாமிகள் புதுச் சேரியில் தங்கியிருந்தார்கள். சேர்மன் மேயர் முதலான பிரெஞ்சு

புதுச்சேரி விஜயம்

உத்தியோகஸ்தர்களுக்கு ஸ்வாமிகள் தம் ஜாகையில் ஒரு நாள் தனியாக பேட்டியளித்தார்கள். ஸ்வாமிகள் புதுச்சேரியில் தங்கியிருந்தபொழுது ஸா. குப்புசாமி ஐயர் முதலான சிஷ்யர்களும் மற்றும் பொதுமக்களும் மிகவும் உற்சாகத்துடன் மடத்தின் பணியில் ஈடுபட்டிருந்தனர், உள்ளூரிலிருந்தும் வெளியூர்களி லிருந்தும் ஸ்வாமிகளைத் தரிசிக்க ஆயிரக்கணக்கான மக்கள் அன்றாடம் புதுச்சேரியில் வந்து கூடினர். அன்றைக்குச் சுமார் 20 வருடங்களுக்கு முன் இந்தப் பீடத்தில் அமர்ந்திருந்த 66-ஆவது ஆசார்ய சுவாமிகள் அவ்வூருக்கு விஜயம் செய்திருந்ததை ஜனங்கள் அப்பொழுது நினைவுக்குக் கொண்டுவந்தார்கள். ஸ்வாமிகள் புதுச் சேரியில் விஜயம் செய்துகொண்டிருந்த காலத்தில் திருவாரூரில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை இங்குக் கூறுவது இன்றியமையாதது.

திருவாரூர் தேர் திருப்பணி.

இன்றைக்கு சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் நம் தமிழ் நாட்டின் திருத்தலங்கள் பலவற்றில் அமைந்திருந்த அழகிய தேர்கள் தீய எண்ணம் கொண்ட சிலரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. புகழ் பெற்ற பல தலங்களுள் அமைந்திருந்தவைகளும் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடினவைகளுமான நம் நாட்டுத் தேர்கள் பல இத்தீச் செயலால் சாம்பலாயின. இவைகளைக் கொளுத்தியவன் ஓர் சிற்பி என்று சிலரும், பிற மதத்தினனென்று சிலரும், கடவுள் நம்பிக்கை இல்லாத யாரோ ஒருவன் என்று வேறு சிலரும் கூறிவந்தனர், போலீஸாரும் தேர்களைக் கொளுத் தியவன் என்று ஒருவனைக் கைது செய்து அவன்மீது நடவடிக்கை யும் எடுத்துக்கொண்டனர். விசாரணையில் அவன் ஒரு பைத்தியக் காரனென முடிவு செய்யப்பட்டது, எந்த நோக்கத்துடன் இச் செயலைச் செய்தவன் இதனில் ஈடுபட்டிருந்திருப்பினும், நாட்டின் புராதன கலைக்கும், அக்கலையின் 'சின்னங்களுக்கும் பெரியதோர் பாதகத்தை அவன் விளைவித்து விட்டான்.

நம் ஆலயங்களின் தேர்களில் மிகுந்த அழகிய வேலைப்பாடு களை நாம் காண்கின்றோம். இவைகளை மனிதன்தான் நிர்மாணித் தானோ என்னும் ஐயம்கூட நமக்குச் சில சமயங்களில் தோன்றி விடுகின்றது. ஆகமங்களையும், புராணங்களையும் நன்கு கற்றிருந்த சிற்பிகள் தங்கள் கைத்திறனை எவ்வளவு தூரம் அவைகளில் காட்டி யுள்ளார்களெனச் சற்று நாம் சித்தனையும் செய்து பார்க்கிறோம்.

திருவாரூர் க்ஷேத்திரத்தில் ஸ்ரீ தியாகராஜர் ஆரோகணித்துப் பவனி வரும் தேர் நம் நாட்டுத் தேர்கள் யாவற்றிலும் மிகப் பெரியதாகும். வேலைப்பாட்டிலும் அதற்கிணையாக வேறு எதையும் கூறமுடியாது. திருவாரூரைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'திருவாரூர்த் தேர் அழகு' என மக்கள் அவ்வூரைப்பற்றி பெருமையாகக் கூறுவார்கள். அக்காலத்தில் தீக்கு இலக்கான தேர்களில் திருவாரூர்த் தேரும் ஒன்று. தீயிடப்பட்ட அந்தத் தேரானது சுமார் ஒரு மாதம் எரிந்துகொண்டிருந்ததாக நேரில் கண்டவர் கூறியுள்ளனர். பழமையானதும் அழகு நிரம்பியதுமான அந்தத் தேர் அழிந்த செய்தி தஞ்சை ஜில்லா மக்களை வெகுவாகப் புண்படுத்தி விட்டது. தியாகேசர் பணியில் நெருங்கி, ஈடுபட்டு வரும் வடபாதிமங்கலம் குடும்பத்தாரும், மற்றும் தஞ்சை ஜில்லாப் பிரபல மிராசுதார்களும் எவ்வகையிலாவது பழைய தேருக்கு நிகராகப் புதிய தேர் ஒன்றை அமைத்துவிட வேண்டுமென்ற எண்ணம் கொண்டனர். அந்தத் தேர் அழிந்த செய்தி அறிந்த நம் ஸ்வாமிகளும் புதிய தேர் ஒன்றை நிர்மாணிப்பதில் சிஷ்யர்கள் யாவரும் தக்கவாறு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென வற்புறுத்தி வந்தார்கள்.

இந்தப் பணியில் பெரும் பங்கெடுத்துக் கொண்டவர்களில் எழுலூர் சுப்பராய வாத்தியார் என்ற வேதியரைப்பற்றி முதன்மையாகக் குறிப்பிடவேண்டும். புரோகிதத்தைப் பரம்பரை தொழிலாகக் கொண்ட அவர் தமக்கு இருந்த பூர்வீகச் சொத்துக்களில் பெரும் பாகத்தை விற்று ஆலயத் திருப்பணிகளில் செலவிட்டு வந்தார். எங்குச் சென்றாலும் அவர் தமக்கு வேண்டிய உணவைத் தாமே தயாரித்துக் கொள்வார்; அவர் நம் ஸ்வாமிகளுடன் மிகுந்த பக்திகொண்டு அடிக்கடி அவர்களைத் தரிசிக்க வருவார். இந்தத் தேர்த் திருப்பணியில் அவர் ஈடுபட்டு, ஸ்வாமிகளை 1926-ஆவது வருடம் அக்டோபர் மாதத்தில் திருப்பாதிரிப்புலியூரில் தரிசித்து, தியாகேசர் தேர்த் திருப்பணிச் சம்பந்தமாக சிஷ்யர்களுக்கு ஓர் ஸ்ரீமுகத்தையும், ஸ்வாமிகள் மனமுவந்து அளித்த ரூபாய் 1001 நன்கொடையையும் பெற்றுக் கொண்டு, பின்னர் தஞ்சை ஜில்லாவில் இத் திருப்பணிக்கென அன்பர்களிடம் தொகைகளை வசூல் செய்யத் தொடங்கினர். ஆரூர்த் தேவஸ்தான மானேஜர் நரஸிம்மய்யர் முதலான நண்பர்களின் ஒத்துழைப்புடன் 6 மாதங்களுக்குள் இத் திருப்பணிக்கென அவர் சுமார்

ஒரு லக்ஷம் ரூபாய் சேர்த்து விட்டார். 1927-ஆவது ஆண்டில் ஸ்வாமிகள் மலையாளம் ஜில்லாவில் விஜயம் செய்திருந்தபொழுது தேருக்கு வேண்டிய மரம் முதலியவற்றைப் பெறுவதற்கும் ஸ்வாமிகள் உதவி அளித்தார்கள்.

தேர்த் திருப்பணியானது வெகு மும்மரமாக நடைபெறத் தொடங்கிற்று. நூற்றுக்கணக்கான கைதேர்ந்த தொழிலாளிகள், எஞ்சியுள்ள நம் நாட்டுச் சிற்பிகளின் மேற்பார்வையில், சுமார் இரண்டு வருடங்களுக்குள் புதுத் தேரை நிர்மாணித்து விட்டார்கள். திருப்பணி வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபொழுது ஸ்வாமிகள் அம் முயற்சியில் மிகுந்த அக்கரை கொண்டு அடிக்கடி அதைப் பற்றி விசாரித்த வண்ணமாயிருந்தார்கள். தேர் வேலை முடிந்த அடுத்த வருடம் தேருக்கு வெள்ளோட்டம் விடப்பட்டது. இஃது ஓர் வியக்கத்தக்க சாதனையாகும். மக்களும் திருவாரூரின் புகழை நிலைநாட்டினார்கள்.

இந்தத் திருப்பணியில் ஈடுபட்ட சுப்பராய வாத்தியார் தமது பிற்காலத்தில் துறவு பூண்டு ஸ்ரீ நாராயண பிரும்மேந்திரர் என்னும் பெயருடன் சில வருடங்கள் வாழ்ந்து வந்தார். அவர் துறவறத்தை மேற்கொண்டிருந்த பொழுதும், ஆலயத் திருப்பணியில் அவருக்கு இருந்த பற்று அவரை விட்டு விடவில்லை. ஆண்டா நல்லூர், நரிவெளி, மருதவனஞ்சேரி இவ்விடங்களில் திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகங்களையும் செய்தார். 1948-ஆவது வருடம் ஜனவரி மாதம் 10-ந் தேதி மருதவனஞ் சேரி என்ற கிராமத்தில் ஆசனத்தில் அமர்ந்தவாறே (தமது 77-ஆவது வயதில்) தியாகேசா எனக் கூறிக்கொண்டே அவர் ஈசனது பரமபதத்தை அடைந்தார்.

விழுப்புரத்திற்குத் தெற்கேயுள்ள சேந்தனூர் ரயில் நிலையத்திற்குக் கிழக்கே வடவாம்பலம் என்னும் சிற்றூர் உண்டு. ஸ்வாமிகள் புதுச்சேரிக்கு விஜயம் செய்யும் முன்னர் அவ்வூருக்கு விஜயம் செய்தார்கள். காமகோடி பீடத்தின் 58ஆவது ஆசார்யர்களான ஆத்மபோதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அந்த ஸ்தலத்தில் சமாதி அடைந்திருப்பதாக மடத்தின் குரு பரம்பரை கூறுகிறது. ஆத்மபோதர் விருத்தாசலத்தைச் சேர்ந்தவர் என்றும், பாரத பூமி முழுவதும் யாத்திரை செய்து அவர் பல வருடங்கள் காசியில் தங்கியிருந்தார் என்றும் ஸ்ரீருத்திர மந்திரத்திற்கு அவர் ஓர்

வடவாம்பலத்தில் 58ஆவது ஆசார்ய ஸ்வாமிகளின் பிருந்தாவன பிரதிஷ்டை.

உரை, இயற்றியுள்ளாரென்றும், 52 வருடங்கள் பீடத்தில் அமர்ந் திருந்தாரென்றும் மேலும் அந்தக் குரு பரம்பரை கூறுகிறது. ஆனால் அந்த ஸ்வாமிகள் அவ்வூரில் சமாதியடைந்த இடம் இன்ன தெனக் குறிப்பிட்டுக் கூறுவதற்குள்ள அடையாளங்கள் கண் களுக்குப் புலப்படாமல் மறைந்துவிட்டன. அந்த இடத்தைக் கண்டுபிடிப்பதற்காக நம் ஸ்வாமிகள் அந்தக் கிராமத்தின் தோப் புக்கள், வயல்கள், முதலிய எல்லாவற்றையும் சுற்றிவந்து, கடைசி யில் ஓர் இடத்தைக் குறிப்பிட்டு, அவ்விடத்தில் மண்ணை வெட்டிப் பார்க்கும்படி கட்டளையிட்டார்கள். அப்பொழுது கிராம மக்கள் பலர் ஸ்வாமிகளைப் பின் தொடர்ந்து வந்தனர். அவர்கள் வேறு பல காரியங்களுக்காக முன் பல முறை அவ்விடம் மண்ணை வெட் டிப் பார்த்திருப்பதாகவும், ஆனால் சமாதியின் அடையாளம் எது வும் அங்கு அவர்களுக்குத் தென்படவில்லையென்றும், ஓர் கிணறு மட்டும் அதன் பக்கத்தில் தென்பட்டதென்று கூறினர். ஆயினும் ஸ்வாமிகள் அவர்களை வற்புறுத்தி அதே இடத்தில் மேலும் மண் ணைத் தோண்டிப் பார்க்கும்படி கட்டளையிட்டார்கள். பலர் மண் வெட்டி கொண்டு அப்பொழுது பூமியைப் பறித்தார்கள். அவ் விடம் சிறிது ஆழத்தில் ஓர் கபால அஸ்தி (மண்டையோடு) தென் பட்டது. அப்பொழுது மண்ணைப் பறித்துக் கொண்டிருந்த குமார மங்கலம் சாம்பமூர்த்தி சாஸ்திரி என்னும் வைதிக அந்தணர் ஒரு வர் மெய்ம்மறந்து கீழே சாய்ந்துவிட்டார். அவர் மற்றவர்களைப் பார்த்து, "நிறுத்து, நிறுத்து" என உரக்கக் கூறினார். வெகு நேரம் சென்று அவருக்குச் சுய அறிவு வந்தது. கூட்டத்தில் யாவரும் அவர் மயங்கிய நிலையில் அடைந்த அநுபவத்தைப்பற்றி பின்னர் அவரிடம் கேட்க, அவர் தாம் கண்ட ஓர் அற்புத காட்சி யைக் கீழே கண்டவாறு விவரித்தார்.

"காஷாய வஸ்திரம் உடுத்து, கையில் தண்டம் ஏந்தி, நெற்றி யில் விபூதி அணிந்து, கழுத்தில் தொங்கும் ருத்திராக்ஷ மாலையுடன் ஆகாயத்தை அளாவிநிற்கும் துறவியின் உருவம் ஒன்று என் கண் முன் தோற்றம் அளித்தது. அந்த உருவத்தின் முன் ஆயிரக்கணக் கான அந்தணர்கள் உபநிஷத் பாராயணம் செய்வதைக் கண்டேன். அந்தப் பெரிய ஸ்வரூபம் அந்த பாராயணத்தை நிறுத்தும்படி உத்திரவிட நானும் வேகமாகத் தாவி நிறுத்தும்படி கூறினேன். மேலும் 'தோண்டாதே தோண்டாதே' என்று மெல்லிய சொல்லில்

அவ்வுருவம் சொல்லிக்கொண்டிருந்ததை நான் கேட்டேன். பிறகு அந்த உருவம் வரவரச் சிறிதாகிக்கொண்டே எனது கண்களின் தோற்றத்திலிருந்து மறைந்துவிட்டது. அதன்பின், 'சதாசிவம் சதாசிவம்' என்று யாரோ ஜபித்துக்கொண்டிருந்த ஒலி மட்டும் காதில் விழுந்து கொண்டிருந்தது. அதுவும் சற்று நேரத்தில் நின்றுவிட்டது'' என்றார். அவ்வந்தணரது இந்த அநுபவத்தைக் கேட்ட அவ்வூர் ஜனங்கள் யாவரும் மிகவும் ஆச்சரியம் அடைந்து, நம் ஸ்வாமிகளை வணங்கி, மேலே செய்யவேண்டுவனபற்றிக் கட்டளையிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். பின்னர் ஸ்வாமிகள் விருப்பத்திற்கிணங்க அந்த இடமும் மடத்திற்குச் சாசனம் செய்விக்கப்பெற்றது. அவ்வூர் ரெட்டியார் ஒருவரின் மேற்பார்வையில் அங்கு ஒரு பிருந்தாவனம் கட்டுவிக்கப்பெற்றது. சந்நியாசிகளை அடக்கம் செய்யப்படும் இடங்களில் ஒரு மேடை கட்டி, அதற்குமேல் ஒரு துளசிமாடம் அமைத்து, அதில் எப்பொழுதும் பசுமையான துளசிச் செடியை வளரும்படி செய்வார்கள். அதையே பிருந்தாவனம் எனக் கூறுவர். அவ்விடங்களில் ஆலயம் நிர்மாணிப்பதுமுண்டு. அவ்விதம் ஆலயம் கட்டுவித்தால் அதில் சிவலிங்கைப் பிரதிஷ்டை செய்வார்கள். அப்பொழுது அந்த இடம் அதிஷ்டானம் என வழங்கப்படும். 1927-ஆவது வருடம் ஜனவரி மாதம் 17-ந் தேதி ஸ்வாமிகளால் அந்தப் பிருந்தாவனம் பிரதிஷ்டை செய்விக்கப்பெற்றது. பிற்காலத்தில், ஸ்வாமிகள் தென்னார்க்காடு ஜில்லாவிற்கு விஜயம் செய்யும் பொழுதெல்லாம் அந்தப் பிருந்தாவனத்தைத் தவறாது தரிசனம் செய்து போவார்கள்.

கொங்குநாட்டு யாத்திரை.

புதுச்சேரியில் சுமார் ஒரு வாரம் தங்கிவிட்டு ஸ்வாமிகள் கடலூர், விருத்தாசலம் கள்ளக்குறிச்சி, சின்னசேலம், ஆத்தூர் மார்க்கமாகச் சேலம் ஜில்லாவை அடைந்து (1927-ஆம் வருடம் மார்ச்சு மாதம் 31-ந்தேதி) சேலத்திற்கு விஜயமானார்கள். சேலம் மக்கள் ஸ்வாமிகளுக்கு மிகப் பெரியதொரு வரவேற்பு அளித்தனர். சேலத்திலிருந்து ஈரோடுக்கு பிறகு அவர்கள் விஜயமானார்கள்.

ஸ்வாமிகள் ஈரோட்டிற்கு விஜயம் செய்திருந்தபொழுது முகம்மதிய கனவான் ஒருவர் ஸ்வாமிகளைத் தரிசிக்க வந்திருந்ததை மடத்தின் சிப்பந்திகள் ஸ்வாமிகளிடம் தெரிவித்தனர். ஸ்வாமிகள் அவருக்குத் தனிமையான ஓர் இடத்தில் தரிசனம் அளிப்பதாகக்

கூறி குறிப்பிட்ட அந்த இடத்திற்கு அவரை வரும்படி கட்டளை யிட்டார்கள். ஸ்வாமிகளும் சிறிது நேரத்தில் அவ்விடத்திற்கு எழுந்தருளினார்கள். ஸ்வாமிகளைக் கண்டதும் அந்தக் கனவான் தமது வணக்கத்தை ஸ்வாமிகளுக்கு தெரிவித்துவிட்டு அவர்கள் பால் தாம் வடமொழியில் இயற்றிய சில சுலோகங்களைச் சித்திரத்தினால் வரையப்பட்ட சிவலிங்க உருவத்தில் கட்டங்கள் அமைத்து அக்ஷரங்கள் யாவையும் அவைகளில் பந்தனம் செய்து (அடக்கி), வைத்திருந்தார். அந்தச் சுலோகங்களை அவர் தாமே ஸ்வாமிகள் முன்னிலையில் படித்து, அவைகளுக்குப் பொருளையும் கூறினார். அப்பொழுது அங்குக் கூடியிருந்த பக்தர்கள் மிகுந்த மகிழ்ச்சியையும் வியப்பையும் அடைந்தனர். அப்பொழுது ஸ்வாமிகள் அந்த அன்பரைப் பார்த்து, சுலோகங்கள் இயற்றக்கூடிய அளவுக்கு அவருக்கு எவ்விதம் வடமொழிப்புலமை வாய்த்ததென வினவினார்கள். அந்த முஸ்லீம் கனவான் ஸ்வாமிகளுக்கு விடையளிக்கையில் தம் முன்னோர்கள் எல்லாம் ஸம்ஸ்கிருதத்தில் மிகுந்த புலமை வாய்ந்தவர்களென்றும், வழி வழியாகவந்த அந்தக் கலையை அவர் தமது தந்தையாரிடமிருந்து கற்றதாகவும் ஸ்வாமிகளைப் போன்ற பெரியோர்களிடம் தமது வித்தையை வெளிக்காட்டவேண்டுமென்று அவர் வெகு நாள்களாக ஆவல்கொண்டிருந்ததாகவும், எதிர்பாராதவாறு அன்றைக்கு இந்த வாய்ப்பு தமக்குக் கிடைத்ததென்றும் தமது முன்னோர்களுக்குக் கூட இவ்வித வாய்ப்பு கிட்டினதாகத் தெரியவில்லையென்றும் கூறி ஆனந்தக் கண்ணீர் விடுத்துச் சிறிதுநேரம் மௌனமாக இருந்தார். ஸ்வாமிகள் அவரது கலைத்திறனை மெச்சி வடமொழியில் தேர்ச்சிபெற்ற முஸ்லீம் ஒருவரைக் காண்பது, தமக்கு அதுவே முதல் தடவையெனக் கூறி அக்கலையைத் தொடர்ந்து காத்து வரும்படி கட்டளையிட்டு அந்த அன்பருக்கு ஆசி கூறினார்கள்.

ஸம்ஸ்கிருதம் கற்ற முஸ்லிம் அன்பர்.

பின்னர் பவானி நெருஞ்சிப்பேட்டை மார்க்கமாக ஸ்வாமிகள் மேட்டூருக்கு விஜயம் செய்தார்கள். அக்காலத்தில் மேட்டூர் அணையின் அஸ்திவார வேலைகள் நடந்துகொண்டிருந்தன. ஸ்வாமிகள் இஞ்சினீயர்கள் பின்தொடர வேலை நடைபெறும் இடங்களையெல்லாம் நேரில் பார்வையிட்டு, அணையைப் பற்றிய எல்லா விவரங்களையும் கேட்டறிந்தார்கள். அணையைச் சேர்ந்த சர்க்கார்

உத்தியோகஸ்தர்களும், கண்ட்ருக்டர்களும் சுவாமிகளுக்குப் பிக்ஷை, பாதபூஜை முதலானவைகளைச் செய்துவைத்தார்கள்,

மலைகளில் ஏறுவதில் ஸ்வாமிகளுக்கு இயற்கையாக ஆவல் உண்டு என்பதை முன்பே கண்டோம். ஸ்வாமிகள் சித்திரை மாதம் ஓர் ஏகாதசியன்று மேட்டூரினின்று செல்லும் வழியில் நெருஞ்சிப்பேட்டை சமீபமுள்ள மலையொன்றைக் கடந்து, 15 மைல்கள் சென்று, மைசூரிலிருந்து நம் நாட்டிற்குள் காவிரி பாயும் இயற்கை வனப்பைக் காண விரும்பினார்கள். சுமார் இருபது பேர்களுடன் காலை 6 மணிக்கே புறப்பட்டு அவர்கள் மலையைக் கடந்து, மேல் புறமுள்ள காட்சிகளைக் கண்டுவிட்டு, 10 மணிக்குத் திரும்புங்கால், வெயிலும் அதிகமாகிவிடவே, கூடச்சென்றவர் களிற் சிலர் மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தனர். ஸ்வாமிகள் களைப் படைந்திருந்தும், கீழேயுள்ள கிராமத்திற்கு விஷயத்தைச் சொல்லி யனுப்பக் கிராம மக்கள் பரபரப்புடன் இளநீர், எலுமிச்சம்பழம், கற்கண்டு, மோர், தண்ணீர் இவைகளைக் கொண்டுவந்தனர். அவை களை மயக்கமுற்றிருந்தோருக்கும் மற்றோருக்கும் கொடுக்கச் செய்து,மாலை 5மணிக்கு மலையிலிருந்து ஸ்வாமிகள் கீழே இறங்கினார் கள். ஜனங்கள் பஜனை கோஷத்துடன் ஸ்வாமிகளை வரவேற்றனர்.

பின்னர் சூலூர் மார்க்கமாக ஸ்வாமிகள் 1927-ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 26-ந் தேதி கோயம்புத்தூருக்கு விஜயமானார்கள். அவ்விடம் சிருங்கேரி சங்கர மடத்தில் ஸ்வாமிகளுக்கு ஜாகை ஏற் பாடு செய்யப்பட்டிருந்தது. நகரப் பொதுமக்கள், சர்க்கார் உத்தி யோகஸ்தர்கள், வக்கீல்கள், வர்த்தகர்கள் யாவரும் ஓர் சிறந்த வர வேற்பை அன்று ஸ்வாமிகளுக்கு அளித்தனர். காலையில் 7 மணிக் குத் தொடங்கிய பெரிய ஊர்வலம் பகல் 12 மணிக்கு ஜாகையை வந்தடைந்தது. பகல் பூஜை முடிந்ததும் பக்தர்களுக்கு விபூதிப் பிரசாதம், அபிஷேக தீர்த்தம் இவைகளைக் கொடுத்து ஸ்வாமிகள் யாவரையும் அனுக்கிரஹித்தார்கள். பக்த ஜனங்கள் ஸ்வாமிகளின் உபதேச மொழிகளைக் கேட்கவேண்டுமென்னும் தங்கள் அவாவைத் தெரிவித்துக் கொண்டபடியால், அன்று மாலை ஸ்வாமிகள் சிவ விஷ்ணு அபேதம் என்பதைப் பற்றி சுமார் 4 மணி நேரம், தமக்கே உரிய எளிய தமிழ் நடையில், எல்லோருடைய மனதையும் கவரும் படியாக உபதேசித்தருளினார்கள். ஆறு மாதங்கள் சேர்ந்தாற் போல் மழையின்றி இருந்த கோயம்புத்தூரில் அன்று வருணன்




1920-ல் மாயவரத்தில் சாதுர்மாத
சங்கல்பம் நடைபெற்றபொழுது

உடையார் பாளையத்தில்



1926-ஜமீந்தார் ஏற்பாடு செய்த
ஊர்வலத்திற்குப் புறப்படுமுன்



1927-பாலக்காடு நல்லிசேரி கிராமத்தில்



1927-பாலக்காட்டிற்கு அடுத்த
கஞ்சிக்கோட்டில் சாதுர்மாத
சங்கல்பத்தின்பொழுது

கருணை புரிந்து நல்ல மழையைப் பொழிந்ததால், ஊரும் குளிர்ந்து ஜனங்களின் மனதும் மகிழ்ச்சியுற்றது. நான்கு நாட்கள் ஸ்வாமிகள் கோயம்புத்தூரில் தங்கியிருந்து பின்னர் 1927-ஆம் வருடம் மே மாதம் 2-ந் தேதி பாலக்காட்டிற்கு விஜயம் செய்தார்கள்.

ஸ்வாமிகள் பாலக்காட்டின் பதினெட்டு அக்கிரகாரங்களிலும் சுமார் ஒரு மாதம் வரையில் தங்கியிருந்து, அக்ரகார மகா ஜனங்களை அனுக்ரகித்துவிட்டுப் பின்னர் பக்கத்திலுள்ள பல கிராமங்களுக்கும் விஜயம் செய்தார்கள்.

கேரள நாட்டு விஜயம்.

ஸ்வாமிகள் பாலக்காட்டில் தங்கி இருந்த பொழுது, டாக்டர் சங்கர நாராயணய்யர் மடத்திற்கு வேண்டிய பணிகளை எல்லாம் செய்து வைத்தார். கோல்லங்கோடு ராஜாவின் விருப்பத்திற்கிணங்க ஸ்வாமிகள் கொல்லங்கோட்டிற்கு விஜயம் செய்து, அவ்விடம் 3 நாட்கள் தங்கி, அந்த அரச குடும்பத்தினரால் செய்யப்பட்ட மரியாதைகளைப் பெற்றுக் கொண்டார்கள். அவர்கள் விஜயம் செய்த ஒவ்வொரு கிராமத்திலும், ஜனங்களது உற்சாகம் எல்லையைக் கடந்ததாக இருந்தது; ஊர்களெல்லாம் திருவிழாக்களைப்போல் விளங்கின. எங்குச் சென்றாலும் ஸ்வாமிகளைப்பற்றிய பேச்சே தான் நடைபெற்று வந்தது. ஸ்வாமிகள் தெளிவான மலையாளத்தில் அழகுடன் பேசிப் பிரசங்கம் புரிவதைக் கேட்ட மலையாள வாசிகள் ஸ்வாமிகள் மலையாள நாட்டைச் சேர்ந்தவர்களென்றே நம்பியிருந்தனர். 1927-ஆவது வருடத்திய வியாஸ பூஜையை ஸ்வாமிகள் பாலக்காட்டிற்கு அருகிலுள்ள கஞ்சிக்கோடு என்னும் இடத்தில் நடத்தி, அவ்விடம் இரண்டு மாதங்கள் தங்கிச் சாதுர் மாஸ சங்கல்பத்தையும் முடித்துக் கொண்டார்கள்.

ஸ்வாமிகள் மலையாள நாட்டில் பாரை என்னும் தலத்திற்கு விஜயம் செய்தபோது அத்தலத்தைப் பற்றிய புராணவரலாறு ஒன்றைப் பக்தர்களுக்கு எடுத்துக் கூறினார்கள். அவ்வரலாறு பின்வருமாறு :—

மலையாள நாடானது பரசுராமரால் ஸ்தாபனம் செய்விக்கப் பட்டது. அந்த நாட்டை ஸ்தாபனம் செய்யும்பொழுதே வெளி நாட்டவர் எவரும் அந்நாட்டின் எல்லைக்குள் நுழையலாகாதெனப் பரசுராமர் சாபமிட்டிருந்தார். ஸ்ரீ ராமபிரான்

சரகங்கா தீர்த்தம்.

வனவாஸம் செய்த காலத்தில் கேரள நாட்

டின் எல்லையான வாழையார் நதியில் நீராடி அச்சாபத்தின் தன்மையை மறந்தவராகி ஆற்றைக் கடந்து அக்கரை சென்று அத்தேசத்தின் எல்லையில் நின்றவாறு வல்கலம் என்னும் தமது ஆடையைக் கொண்டுவரும்படி எதிர்க் கரையில் நின்றிருந்த இலக்ஷ்மணருக்குக் கட்டளையிட்டார். ஆனால் அச்சாபத்தை யறிந்த இலக்ஷ்மணரோ அந்த ஆடையை அக்கரைக்கு எடுத்துவர மறுத்துவிட்டார். இலக்ஷ்மணரது இந்த மாறுபட்ட செயலைக் கண்டு இராமர் மிகுந்த வியப்பை அடைந்தார். பின்னர் இளையவர் ஸ்ரீ இராமபிரானுக்கு அந்தப் பரசுராமரது சாபத்தை நினைவிற்குக் கொண்டு வந்தார். அப்பொழுது இராமபிரான் சற்று ஆலோசித்த வராகி கங்கா நதியில் ஸ்நானம் செய்வதால் மாத்திரம் இந்தச் சாபக்கேடு விலகுமென்னும் தீர்மானத்திற்கு வந்தார். ஆனால் 14 ஆண்டுகள் முடிந்த பிறகல்லவோ கங்கையை அடையலாம். இந்நிலையில் ஸ்ரீராமர் அவ்விடத்திலேயே கங்கையை வரவழைக்க நினைத்தவராகித் தாம் நின்றிருந்த இடத்திலிருந்தே பூமியை நோக்கி ஓர் அம்பை எய்தார். அந்தப் பூமியும் இரண்டு மைல் விஸ்தீரணத் திற்குச் சமதளமுள்ள பாறையாக அமைந்திருந்தது. இராமர் விடுத்த அந்த அம்பானது பாறையைப் பிளந்து கொண்டு உள் சென்றதும் பிளக்கப்பட்ட இடத்திலிருந்து கங்கை நீர் பெருகிவர இராமபிரான் அதில் நீராடிச் சாபத்தை விலக்கிக்கொண்டார். இலக்ஷ்மணரும் அப்புனித கங்கையில் நீராடினர். பல வருடங் களுக்கு முன்பே இந்த வரலாற்றைக் கேட்டிருந்த நமது ஸ்வாமி களும் அப்புனித தீர்த்தத்தில் நீராடினர்கள். இராமபாணத்தின் வேகத்தினல் பிளக்கப்பட்ட பாறையானது நெருப்பினல் உருக்கப் பட்டதுபோல இன்றும் அங்குக் காட்சியளிப்பதாகக் கூறப்படு கிறது. கங்கையை அங்குக் கொணர்ந்ததால் பரசுராமரது சாபத்தை இராமபிரான் நீக்கிவிட்டதாக நாம் ஒருவாறு ஊகிக்கலாம்.

ஸ்வாமிகள் பாலக்காட்டில் விஜயம் செய்திருந்தபொழுது, சென்னை வக்கீல் டி. எம். கிருஷ்ணஸ்வாமி ஐயர் தம் பக்த கோஷ்டி யுடன் ஸ்வாமிகளைத் தரிசித்து அவர்கள் முன்னிலையில் திருப்புகழ் பஜனையை நடத்தினர்கள். கந்தன் புகழை எவர் பாடினலும் ஸ்வாமிகள் அதைக் கேட்டு மகிழ்வார்கள். அன்று ஐயர் அவர் கள் நல்ல இசையுடன் உள்ளம் உருகிப் பாடியதைக் கேட்டுக்

திருப்புகழ் மணி பட்டமளிப்பு.

கொண்டிருந்த ஸ்வாமிகள், ஐயர் அவர்களைத் திருப்புகழ் மணி எனப் பெயரிட்டு அழைத்து, அவர்களுக்குக் காஷ்மீர் சால்வை போர்த்திப் பெருமைபடுத்தினார்கள். குருநாதரிடமிருந்து கிடைத்த இப்பெருமையை ஐயர் சிரமேல்தாங்கி ஸ்வாமிகளை வணங்கி ஆனந்தக்கண்ணீர் பெருக்கினார்.

மகாத்மா காந்தியுடன் சந்திப்பு.

1927-ஆம் வருடம் பிற்பகுதியில் மகாத்மா காந்தி தென்னாட்டிற்கு விஜயம் செய்து காங்கிரஸின் நிர்மாணதிட்டங்களைப் பிரசாரம் செய்யவும், அதற்காக நிதி திரட்டவும், ஓர் சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டார். மதத்தலைவராக விளங்கும் ஸ்வாமிகளின் தெள்ளிய அறிவையும், பரந்த நோக்கத்தையும், எவரையும் ஏற்றுக்கொண்டு அருள் புரியும் தன்மையையும்பற்றி 'ஹிந்து' பத்திராதிபர் ஏ. ரங்கஸ்வாமி அய்யங்கார், எஸ். ஸத்தியமூர்த்தி ஆகியோர் மூலம் காந்தியடிகள் முன்பே கேள்வியுற்றிருந்ததால் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு ஸ்வாமிகளைச் சந்தித்து அவர்களுடன் பேசவேண்டுமென்ற தீர்மானத்தைச் செய்துகொண்டார். அதையொட்டியே சரித்திரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சந்திப்பு 15-10-1927ல் நிகழ்ந்தது.

பாலக்காட்டைச்சேர்ந்த நல்லிச்சேரியில் ஸ்வாமிகள் தங்கியிருந்த ஜாகையின் பின்புறம் அமைந்திருந்த மாட்டுக் கொட்டிலில் காந்தியடிகளுக்கும் ஸ்வாமிகளுக்கும் சந்திப்பு ஏற்பட்டது. குறிப்பாக இரண்டொருவரே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். பத்திரிகை நிருபர்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை. காந்தியடிகளும் ஸ்வாமிகளை நெருங்கியதும் இந்து முறைப்படி அவர்களை வணங்கினார். காஷாயக் கதராடை ஒன்றை அணிந்து தரையில் அமர்ந்திருந்த ஸ்வாமிகளின் ஒளி நிறைந்த திருமேனியில் காந்தியடிகளின் மனம் ஈடுபட்டுவிட்டது. அப்பொழுது சற்று நேரம் மௌனம் நிலவியது. பின்னர் ஸ்வாமிகள் ஸம்ஸ்கிருதத்தில் இரண்டொரு வார்த்தைகள் கூறி, காந்தியடிகளை வரவேற்று உட்காரும்படி தெரிவித்தார்கள். காந்தியடிகளும் கீழே அமர்ந்து, தமக்கு ஸமஸ்கிருதம் பேசுவதற்கு பழக்கமில்லையென்றும், ஹிந்தியிலேயே பேச அனுமதிக்கவேண்டுமென்றும், ஆனால் கூடியவரையில் ஸமஸ்கிருத மொழிகளைப் புரிந்துகொள்ள முடியுமென்றும் தெரிவித்துக்

கொண்டார். ஹிந்தியில் பேசுவதை ஸ்வாமிகளும் புரிந்து கொள்ளக்கூடியவர்களாதலால், இந்த ஏற்பாட்டின்படி ஸ்வாமிகள் ஸமஸ்கிருதத்திலும் காந்தியடிகள் ஹிந்தியிலும் பேசத் தொடங்கினுர்கள். கடவுள் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டே ராஜ்யங்கள் அமையவேண்டுமென்றும், ஆத்ம சிந்தனையைப் புறக்கணித்து மனித சக்தியை மாத்திரம் பயன்படுத்தி அமையும் எந்த ராஜ்யமும் சீக்கிரத்தில் அழிவுதான் அடையுமென்றும், இதன் உண்மையைக் காந்தியடிகள உலகிற்கு எடுத்துக் கூறுவதைத் தாம் மிகவும் பாராட்டுவதாகவும், ஹரிஜன ஆலயப் பிரவேச விஷயத்தில் சாஸ்திரங்களையும் பழைய வழக்கங்களையும், நம்பி இருப்பவர்கள் நம் நாட்டில் பெரும்பாலோர் இருக்கிருர்களென்றும், அவர்களுடைய மனம் நோகும்படி செய்யும் எந்த மாறுதலும் ஹிம்சைக்கு ஒப்பாகுமென்றே தாம் முடிவுக்கு வரவேண்டியிருக்கிறதென்றும் ஸ்வாமிகள் காந்தியடிகளிடம் தெரிவித்தார்கள். மேலும் பரமார்த்த விஷயங்களிலும் சம்பாஷணை தொடர்ந்து நடைபெற்றது. பேச்சுக்களெல்லாம் ஒருவருக்கொருவரது உள்ளன்பை வெளிக்காட்டும் வகையில் அமைந்திருந்தன. வாதப்பிரதி வாதங்கள் எதுவும் அப்போது நடைபெறவில்லை. தம் மனதில் தோன்றியதை ஒன்றையும் ஒளிக்காமல் வெளியிடுவதில் காந்திக்கு நிகராக வேறு எவரையுமே காண முடியாது. மக்கள் தம்மை ஏற்றுக்கொள்வார்களோ ஏற்றுக் கொள்ளமாட்டார்களோ என்பதைப்பற்றி அவர் கவலைப்படுவதேயில்லை. அவரது ஒவ்வொரு சொல்லிலும் உள்ளப்பற்று நிறைந்திருக்கும். காந்தியடிகளின் அந்தக் குணத்தை ஸ்வாமிகள் அடிக்கடி பாராட்டுவதுண்டு. சுமார் ஒரு மணிநேரம் காந்தியடிகள் ஸ்வாமிகளுடன் பேசிக்கொண்டிருந்தார். ஸ்வாமிகளது மேதையைக் கண்டு அவர் வியந்தார். முடிவில் ஸ்வாமிகளிடம் விடைபெற்றுக்கொள்ளும்பொழுது, ஸ்வாமிகளுடைய தரிசனத்திஞல் தாம் மிகவும் பெரியதொரு பயனை அடைந்ததாகவும், ஸ்வாமிகள் விருப்பங்களை எல்லாம் மனஸில் வைத்துத் தம்மால் முடிந்தவரை அவைகளை நிறைவேற்றுவதாகவும் தெரிவித்துக் கொண்டு ஸ்வாமிகளை வணங்கி அவர் விடைபெற்றுக் கொண்டார்.

காந்தியடிகள் ஸ்வாமிகளிடம் உரையாடிக் கொண்டிருந்த பொழுது நிகழ்ந்த ஓர் சம்பவத்தை இவ்விடம் குறிப்பிடவேண்யது

அவசியமாகிறது, அப்பொழுது மாலை 5-30 மணியாகிவிட்டதால் வெளியில் இருந்த ராஜாஜி உள்ளே வந்து, காந்திஜியிடம் அவரது ஆகாரத்தைப்பற்றி நினைவூட்டினார். காந்திஜி மாலை 6-மணிக்கு மேல் ஆகாரம் எதுவும் உட்கொள்வதில்லை. அப்பொழுது காந்திஜி ராஜாஜியைப் பார்த்து, 'ஸ்வாமிகளிடம் சம்பாஷணை புரிவதே எனக்கு இன்றைய ஆகாரம்' எனக் கூறினார்கள். ஸ்வாமிகள் காந்திஜிக்கு ஓர் பம்பளிஸ் நாரத்தம்பழத்தை அளித்த பொழுது, அதைக் காந்திஜி வெகு பரிவுடன் பெற்றுக் கொண்டு, அது தனக்கு மிகவும் பிரியமான பழம் என்பதாகத் தெரிவித்தார். அன்று மாலை கோயம்புத்தூர் பொதுக்கூட்டத்தில் காந்தியடிகள் பேசிய பொழுது, கூட்டத்தில் ஒரு சிலர் அவர் ஸ்வாமிகளிடம் சம்பாஷணை செய்த விஷயங்களைத் தெரிவிக்கும்படி காந்தியடிகளைக் கேட்டனர். காந்தியடிகள் ஸ்வாமிகளிடம் தாம் பேசியதெல்லாம் அந்தரங்கமான விஷயங்களென்றும், அவைகள் தமக்கும் ஸ்வாமிகளுக்கும் தனி முறையில் நிகழ்ந்தவை யென்றும், அதன் காரணமாகவே பத்திரிகை நிருபர்கள் அப்பொழுது அனுமதிக்கப்படவில்லை யென்றும், ஆகையினால் அவைகளை வெளியிடத் தாம் விரும்பவில்லையென்றும் பதில் கூறிவிட்டார். இந்தச் சம்பாஷணையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைப்பற்றி ஸ்வாமிகளும் எதையும் வெளியிடவில்லை. சம்பாஷணையின்போது கூட இருந்த ஒருவரது மூலமாகத் தெரிந்து கொண்டவைகளை ஆதாரமாகக் கொண்டு இவ்விஷயம் இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்வாமிகள் கஞ்சிக்கோடு என்ற ஊரில் தம் சாதுர் மாஸ விரதத்தை முடித்துக் கொண்டு, மேலும் மலையாளம் ஜில்லா தென் பாகத்திலுள்ள பல பக்தர்களின் வேண்டுகோளுக் கிணங்கி அங்குள்ள பல ஊர்களுக்கு விஜயம் செய்து, 2-2-1928-ல் குருவாயூரில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் ஆலயத்தைத் தரிசனம் செய்தார்கள். ஸ்வாமிகளின் வரவையொட்டி அன்று குருவாயூரில் பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் கூடியிருந்தனர். கிருஷ்ண விக்ரகத்திற்கு விசேஷமாக அபிஷேக அலங்காரங்கள் செய்விக்கப்பட்டிருந்தன. தேவஸ்தான அதிகாரிகளும் ஸ்வாமிகளைத் தகுந்த மரியாதையுடன் கோவிலுக்கு அழைத்துச் சென்று சுவாமி தரிசனம் செய்துவைத்தார்கள். பின்னர் ஸ்வாமிகள்

கொச்சி-திருவனந்தபுரம் ஸமஸ்தானங்களில் யாத்திரை.

சித்தூர் மார்க்கமாகத் திருச்சூருக்கு விஜயம் செய்து அங்கு, (5-2-28-ந் தேதி) வடக்குநாதன் ஆலயத்திலும் ஸ்வாமி தரிசனம் செய்து கொண்டார்கள். அவ்வூரில் பழைமையான இரண்டு சங்கர மடங்கள் உள்ளன. அம்மடங்களுக்கு நம்பூத்ரி ஸந்நியாசிகள் அதிபர்களாக இருந்துவருகிறார்கள். ஸ்வாமிகள் அம்மடங்களுக்கு விஜயம் செய்து, அவைகளின் பூர்வ சரித்திரங்களையெல்லாம் விசாரித்து, அங்கு வைக்கப்பட்டுள்ள பழைய ஏட்டுப் பிரதிகளிலிருந்து ஆதி சங்கரரது சரித்திரத்தையும் பரிசீலனைசெய்தார்கள். மேலும், அவ்விடமுள்ள பிரம்மஸ்வ மடம் என்று கூறப்படும் குருகுலத்தைப் பார்வையிட்டு, அதில் அப்பொழுது வித்தியாப்பியாசம் செய்துவந்த வித்யார்த்திகளுக்கு ஆசிகூறி அனுக்கிரகித்தார்கள். திருச்சூரிலிருந்து ஸ்வாமிகள் கிராங்கனூர் என்ற கடல்துறைப் பட்டினத்துக்கு விஜயம் செய்து, அவ்வூர் மன்னரால் உபசரிக்கப்பட்டு, அங்குள்ள பகவதி ஆலயத்தையும் தரிசனம் செய்து கொண்டார்கள். பிறகு (19-3-28:ல்) எர்ணாகுளத்தை அடைய, அங்குக் கொச்சி ராஜ குடும்பத்தினர் ஸ்வாமிகளை மிகவும் உபசரித்து வரவேற்றனர். அவ்விடம் மார்ச்சு மாதம் முடிய (திருப்பணத்துறையிலேயே) ஸ்வாமிகள் தங்கியிருந்தார்கள். அங்கு ராஜ குடும்பத்தைச் சேர்ந்த தேவாலயத்தில் ஸ்வாமிகள் அன்றாடம் ஸ்வாமி தரிசனம் செய்து கொண்டதுடன், அவ்விடத்திலுள்ள ஸமஸ்கிருத கலாசாலைக்கும் விஜயம் செய்து, மாணவர்களுக்கு ஸமஸ்கிருதத்தில் உபதேசங்களைச் செய்தருளினார்கள். அங்குத் தங்கியிருந்த காலத்தில் மடத்திற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் சமஸ்தான திவான் டி. எஸ். நாராயணய்யர் ஸமஸ்தான அதிகாரிகளின் மூலம் செய்து வந்தார். ஸமஸ்தானத்தின் சார்பாகப் பிக்ஷை, பாதபூஜை முதலியவைகளும் நடந்தது. ஒரு பெரிய ஊர்வலமும் ஏற்பாடு செய்யப்பட்டது. பின்னர், வைக்கம் க்ஷேத்திரத்தில் ஸ்வாமிகள் ஒரு நாள் தங்கி, சுவாமி தரிசனம் செய்துகொண்டு, திருவனந்தபுரம் ஸமஸ்தானத்தின் முக்கிய ஸ்தலங்களைத் தரிசனம் செய்து கொண்டு, கோட்டயம் மார்க்கமாக 1928-ஏப்ரல் மாதம் 15-ந் தேதி ஆலப்புழைக்கு விஜயம் செய்தார்கள். ஆலப்புழையில் பக்தர்கள் ஸ்வாமிகளுக்கு நல்ல வரவேற்பளித்து அவர்களை அங்கு ஒரு வாரம் வரையில் தங்கச்செய்தார்கள். பின்னர் அவ்விடமிருந்து ஜல மார்க்கத்தில் 7 மைல் தூரமுள்ள மன்கோம்புக்கு யாத்திரை

தொடங்கிற்று. அவ்வருடத்திய சங்கர ஜயந்தி உத்ஸவம் ஏப்ரல் மாதம் 24-ந் தேதி அங்குக் கொண்டாடப்பட்டது. அதன் பின்னர் அம்பலப்புழை, மானூர் இவற்றின் மார்க்கமாக மே மாதம் 3-ஆந்தேதி கோல்லத்திற்கு ஸ்வாமிகள் விஜயம் செய்து, அவ்விடம் 5 நாட்கள் தங்கியிருந்தார்கள். ஸ்வாமிகளின் பெயராலும் அவர்களின் ஆதரவிலும் பல வருடங்களாக ஆலப்புழையில் நடைபெற்றுவரும் ஸ்ரீ சந்திரசேகரேந்திர பாடசாலைக்கு ஸ்வாமிகள் விஜயம் செய்து, வேதம், சாஸ்திரம் கற்கும் மாணவர்களைப் பரீக்ஷித்து அவர்களை ஆசீர்வதித்தார்கள். ஆங்கிலம் பயிலும் மாணவர்களும் அங்கு வேதப் பயிற்சி பெறுவதைக் குறித்து அவர்கள் நிர்வாகிகளைப் பாராட்டினார்கள். கொல்லத்திலிருந்து கோட்டாரக் கரை, புனலூர், ஆரியங்காவு, செங்கோட்டை மார்க்கமாகத் திருக்குற்றாலத்தை அடைந்து, அவ்விடம் குற்றாலநாதரைத் தரிசனம் செய்துகொண்டு ஒரு வாரம் அங்குத் தங்கியிருந்தார்கள். இவ்வாறு கோச்சி, திருவனந்தபுரம் இரண்டு சமஸ்தானங்களிலும் ஸ்வாமிகள் யாத்திரை செய்த காலத்தில் அவ்விரு ஸமஸ்தானங்களிலும் ஸ்வாமிகள் தங்குவதற்காகச் சர்க்கார் அரண்மனைகளையும், கட்டிடங்களையும் கொடுத்து உதவியிருந்தார்கள். மடத்தின் வண்டிகளுக்கும், கால் நடைகளுக்கும் சாலைச் சுங்கம் எதுவும் கட்டவேண்டாமென்றும் அவ்விரு அரசாங்கங்களும் உத்திரவு பிறப்பித்திருந்தார்கள். குற்றாலத்திலிருந்து ஸ்வாமிகள் திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள ஸ்தலங்களைத் தரிசனம் செய்துகொண்டு ஜூன் மாதம் 9-ந் தேதி தாம்பரபரணியின் உற்பத்தி ஸ்தானமாகிய பாண தீர்த்தத்தில் நீராடிப் பின் நாகர்கோயில் மார்க்கமாகக் கன்னியா குமரியை அடைந்து ஜூன் மாதம் 17-ந் தேதி அங்கு அம்பிகையைத் தரிசனம் செய்துகொண்டு, அவ்விடம் இரண்டு நாட்கள் தங்கி, சமுத்திர ஸ்நானத்தையும் முடித்துக் கொண்டு, நாங்குநேரி, திருநெல்வேலி, கோயில் பட்டி, சாத்தூர், விருதுநகர் மார்க்கமாகத் திருவேடகத்தை அடைந்தார்கள்.

திருவேடகம் என்னும் இந்தத் தலம் வைகை நதிக் கரையில் சோளவந்தானிலிருந்து 3 மைல் தூரத்திலுள்ளது. இது திருஞான சம்பந்தரால் பாடப்பெற்ற தலம். ஞானசம்பந்தர் சமணருடன் வாதுசெய்த பொழுது, 'வாழ்க அந்தணர்' என்னும்

திருவேடகத்தில் வியாஸ பூஜை.

பதிகத்தை ஓர் ஏட்டில் எழுதி மதுரையில் வைகை நதியிலிட்டதாகவும், அந்த ஏடு வைகை ஆற்றை எதிர்த்துத் திருவேடகம் வரையில் சென்றதாகவும் அப்பொழுது சம்பந்தர் 'வன்னியும் மத்தமும்' என்னும் பதிகத்தைப் பாட, அந்த ஏடும் அத்தலத்தில் கரை சேர்ந்ததாகவும், அதனல் அத்தலத்திற்கு திருவேடகம் என்னும் பெயர் வந்ததாகவும், குலச்சிறையாரென்னும் அமைச்சர் பரியேறி ஏட்டுடன் தொடர்ந்து அதனை எடுத்துவந்ததாகவும் புராணம் கூறுகின்றது. அங்கு மூலத்தானம் ஏடு உருவத்தில் அமைந்திருப்பதும் குறிக்கத்தக்கது. அவ்விடத்தில் ஆலயத்திற்குப் பின்புறம் வைகை நதி தெற்கு நோக்கி ஓடுகின்றது. தமது தியானத்திற்கும், தவத்திற்கும் ஏற்றதாக ஸ்வாமிகள் இத்தலத்தைக் குறிப்பிட்டு அவ்விடம் விபவ வருட (1928) வியாஸ பூஜை செய்து, இரண்டு மாதங்கள் சாதுர்மாஸ சங்கல்பத்தையும் அங்குச் கழித்தார்கள். ஸ்வாமிகள் அவ்விடம் தங்கியிருந்த காலத்தில் காங்கிரஸ் தலைவரான மட்டப்பாறை வெங்கட்டராமய்யரும், சோளவந்தான் அக்ரஹார மஹா ஜனங்களும் மற்ற கிராமவாசிகளும் மடத்திற்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்துகொடுத்தனர். அவ்வூரில் ஸ்வாமிகள் முகாம் செய்திருந்தபொழுது மைசூர் மகாராஜா தமது காணிக்கையாக மடத்திற்கு ஒரு பெண்யானையை அளித்தார். பிரசித்திபெற்ற சங்கீத பரம்பரையைச் சேர்ந்த மழவராய நேந்தல் சுப்பராம பாகவதர் ஸ்வாமிகள் முன்னிலையில் அங்கு ஒரு நாள் மூன்று மணி நேரம் கச்சேரி நடத்தினர். ஸ்வாமிகள் பாகவதரது சங்கீத ஞானத்தை மிகவும் போற்றி அவருக்குப் பீதாம்பரம் முதலான சன்மானங்களை அளித்தார்கள்.

திருவேடகத்தில் சாதுர் மாஸ சங்கல்பம் முடிவுபெற்றவுடன் ஸ்வாமிகள் மதுரைக்கு வந்து அங்கு ஒரு வாரம் தங்கியிருந்தார்கள். அப்பொழுது நமது நாட்டின் தலை சிறந்த சட்ட நிபுணர்களில் ஒருவராக விளங்கிய அலகாபாத்தைச் சேர்ந்த சர் தேஜ் பகதூர் சப்ரூ ஸ்வாமிகளைத் தரிசித்து அவர்களின் ஆசியைப் பெற்றுர். அக்காலத்தில் சர்க்கார் அடக்கு முறையினல் நாட்டில் குழப்பம் அதிகமாக ஏற்பட்டிருந்தது. காந்தி அடிகள் உள்பட பல தேசத் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த நிலையில் சப்ரூ சர்வகட்சி மகாநாடு ஒன்றைத் கூட்டிச்

மதுரையில் சர் தேஜ் பகதூர் சப்ரூ ஸ்வாமிகளைத் தரிசித்துக் கொண்டது.

சர்க்காரிடம் ஆலோசித்து நிலைமையைச் சீர்படுத்த முயன்று வந்தார்; அவ் விஷயத்தில் தாம் எடுத்துக்கொண்ட முயற்சிகளைப் பற்றி விரிவாக அவர் ஸ்வாமிகளிடம் தெரிவித்தார். எவ்வகையி லாவது தேசத்தில் சமாதானம் ஏற்பட்டு மக்கள் நன்மை அடைய வேண்டுமென்பதே தம் அவாவென்றும், சப்ரூ இம்முயற்சியில் ஈடுபட்டிருப்பதைத் தாம் மிகவும் பாராட்டுவதாகவும் ஸ்வாமிகள் கூறினார்கள். மதுரையிலிருந்து ஸ்வாமிகள் வத்தலகுண்டு, பெரியகுளம், தேனி, சின்னமனூர், முதலான இடங்களுக்குச் சென்று விட்டு, நவராத்திரி பூஜைக்காக அம்மையநாயக்கனூருக்கு விஜயம் செய்தார்கள்.

அம்மையநாயக் னூரில் நவராத்திரி பூஜை-ஜமீன்தாரின் பூமி காணிக்கை.

ஸ்வாமிகள் அம்மையநாயக்கனூர் ஜமீன்தார் ஸ்ரீ இராமசாமி நாய்க்கரின் அழைப்பிற்கிணங்க, அங்கு விஜயம் செய்து சுமார் பதினைந்து நாட்கள் அவ்வூரில் தங்கி, அவ்வருட நவராத்திரி பூஜையையும் அங்கு மிகவும் சிறப்பாக நடத்தினார்கள். ஸ்வாமி களையும், அவர்களின் பரிவாரங்களையும் ஜமீன்தார் அன்புடன் உபசரித்துப் பூஜைக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் அன் புடன் சேகரித்ததுக் கொடுத்துடன், சிறுமலை யில் 300 ஏக்கர் நிலத்தையும் மடத்திற்குத் தானமாக அளித்தார் நவராத்திரிக்குப் பிறகு ஸ்வாமிகள் திண்டுக்கல் மார்க்கமாய் இரண்டாவது முறை பழனிக்கு விஜயம் செய்து, தண்டாயுத பாணியைத் தரிசித்து, விசேஷமாக அபிஷேகம் முதலியவற்றை அவருக்கு நடத்திவைத்தார்கள். ஊர் மகாஜனங்களும் ஸ்வாமி களை வரவேற்றுப் பிக்ஷை பாதபூஜை முதலானவைகளை செய்து வைத்தார்கள். பழனியிலிருந்து தாராபுரம், கோளிஞ்சிவாடி, சின்ன தாராபுரம், கரூர் வழியாக, திருச்சிக்கு 1929-வருடம் ஜனவரி மாதத்தில் ஸ்வாமிகள் விஜயம் செய்தார்கள்.

தென்னார்க்காடு, வட ஆர்க்காடு ஜில்லாக் களில் சுற்றுப் பிரயா ணம்.

1929-ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் திருச்சி ஜில்லாவை விட்டுத் தென்னார்க்காடு ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் தொடங் கப் பெற்றது. ஸ்வாமிகள் சுமார் ஏழு மாதங்கள் கள்ளக்குறிச்சி, திருக்கோயிலூர் தாலுக்காக்களில் விஜயம் செய்து, அவ்வரு டத்து வியாஸ பூஜையை (21-7-1929-ல்) மணலூர்ப்பேட்டையில் நடத்தி, இரண்டு மாதங்கள் அவ்விடமே

தங்கியிருந்தார்கள்.* அப்பொழுது ஸ்வாமிகளின் உடல்நிலை சுமார் ஒரு மாதம்வரையில் ஜுரத்தினால் பாதிக்கப்பட்டிருந்தது. அச் சமயத்திலும் ஸ்வாமிகள் தினந்தோறும் மூன்று வேளைகளிலும் ஒவ்வொரு நாளும் ஸ்நானம் செய்து தமது பூஜையை எவ்விதக் குறைவுமின்றி நடத்திவந்தார்கள். அதனால் சிஷ்யர்கள் மனஸில் கவலை குடிகொண்டது. சிஷ்யர்கள் எவ்வளவு வற்புறுத்தியும் ஜுரத்திற்கு ஏற்ற சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள ஸ்வாமிகள் மறுத்துவிட்டார்கள். துளசி தீர்த்தத்தை மாத்திரம் மருந்தாக உட்கொண்டுவந்த ஸ்வாமிகளின் உடல்நிலை நாளடைவில் குணமடைந்துவிட்டது. ஸ்வாமிகளின் உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த சமயம் பாலக்காடு டாக்டர் சங்கரநாராயணய்யரும், மயிலாப்பூர் வைத்திய விசாரத பண்டித கே. ஜி. நடேச சாஸ்திரிகளும் கூடவே தங்கியிருந்து ஸ்வாமிகளைக் கவனித்து வந்தார்கள். பின்னர் ஸ்வாமிகள் பிறந்த ஊராகிய விழுப்புரத்திற்கு 28-11-1929-ந் தேதி விஜயம் செய்தார்கள். விழுப்புரத்தில் பொதுமக்கள் ஸ்வாமிகளுக்கு அமோகமாக வரவேற்பளித்து உபசரித்தனர். அவ்விடம் வயோதிகர்களில் சிலர் ஸ்வாமிகளைக் குழந்தை வடிவத்தில் கண்டிருந்த தங்கள் பெருமையைக் கூறிக்கொண்டனர். இளமையில் கல்விகற்ற இடமாகிய திண்டிவனத்திற்கு 1-5-1930ல் அவர்கள் விஜயம் செய்தார்கள்.

மாடுமேய்க்கும் ஓர் இடையனின் பக்தி.

இந்த யாத்திரையில் ஸ்வாமிகள் தண்டலம் என்னும் கிராமத்தின் வழியாகச் சென்றுகொண்டிருந்தபோது, அவ்வூர் இடையன் ஒருவன் தனது நிலத்தைவிற்று அதனால் கிடைத்த பொருளை ஸ்வாமிகளுக்குக் காணிக்கையாக அளிக்க வேண்டுமென விரும்பினான். ஸ்வாமிகள் எவ்வளவு மறுத்தும் அவன் ஏற்றுக்கொள்ளாமல் நிலத்தை ஒரு தனவந்தரிடம் விற்று அதில் கிடைத்த பொருளை மிகுந்த சந்தோஷத்துடன் ஸ்வாமிகள் முன்னிலையில் சமர்ப்பணம் செய்தான். ஸ்வாமிகளும் அவனது பக்தியை மெச்சி அதை அன்புடன் ஏற்றுக்கொண்டு, புறம்போக்கு நிலத்தில்

---

*ஸ்வாமிகளின் தந்தையார் சுப்பிரமண்ய சாஸ்திரிகள் 24-7-1929ல் கும்பகோணத்தில் சிவபதமடைந்த செய்தியை மடத்தின் அதிகாரிகள் அதுசமயம் ஸ்வாமிகளிடம் விண்ணப்பித்துக் கொண்டார்கள். அச் செய்தியை ஸ்வாமிகள் மௌனத்துடன் கேட்டுக்கொண்டு மேலும் யாதொன்றும் கூருமல் இருந்துவிட்டார்கள்.

அவனுக்கு நல்லதாக நான்கு காணி நிலம் சாஸனம் செய்யும்படி தாசில்தார் மூலம் ஏற்பாடு செய்தார்கள். அதன்படி அவனுக்கு நிலமும் கிடைத்தது.

1929-ஆம் வருடம் டிசம்பர் மாதத்தில் திருவண்ணமலையில் நடைபெற்ற தீப தரிசனத்திற்காக ஸ்வாமிகள் அவ்வூருக்கு விஜயம் செய்தார்கள். பஞ்ச பூதங்களில் இதுதேயுக்ஷேத்திரமாகும்.

கார்த்திகை தீப தரிசனம்.

அண்ணமலை நகரம் மிகுந்த புராணப் பிரசித்தி பெற்றது. பிருங்கி என்னும் முனிவர் தமக்குச் சிவபிரான் மீது ஏற்பட்டுள்ள பக்தியினல் மற்ற எந்தத் தெய்வங்களையும் வணங்குவதில்லையெனத் தீர்மானம் செய்து கொண்டவராய், அம்பிகையையும் வணங்க மனமில்லாமலிருந்தவராயிருந்தார். இதைக் கண்ட அம்பிகை கோபம் கொண்டுதான் பரமசிவனது இடப்பாகத்தையே அடைந்துவிட்டதாகப் புராணம் கூறுகின்றது. இதன் காரணமாகப் பரமசிவன் அர்த்தநாரீச்வரர் எனப் பெயர் பெற்று விளங்கினர். திருவண்ணமலையில் விளங்கும் மூர்த்திக்கு அர்த்தநாரீச்வரர் என்ற ஒரு பெயரும் உண்டு. அர்த்தம் என்றல் பாதி எனப் பொருள்படும்; நாரீ என்பது பெண்ணைக் குறிக்கும். அபீதகுசாம்பாள் என்பது இங்கு அமைந்துள்ள அம்பிகையின் பெயர்; உண்ணமுலை என்பது இதன் பொருள். ஈச்வரனின் ஜோதி வடிவத்தை விளக்கவே இங்கு மலைமீது கார்த்திகைத் தீபம் ஏற்றப்படுகிறது. அப்பர், சம்பந்தர் இவ்விருவராலும், பாடப்பெற்ற தலம் இது. பரமசிவனது விச்வரூபத்தைக் காண மகாவிஷ்ணு பன்றி உருவம் எடுத்துப் பாதாளத்திற்குச் சென்றதாகவும், பிரும்மா அன்னபட்சியின் உருவத்துடன் ஆகாயத்தில் பறந்து சென்றதாகவும், ஒருவர் கீழும் மற்றொருவர் மேலுமாக இருவரும் எவ்வளவு தூரம் சென்றும், ஈசனது உருவம் முழுவதையும் அவர்களால் காணமுடியவில்லை யென்றும் சொல்லப்படுகிறது. இந்த நிலையைச் சித்தரிப்பதே லிங்கோத்பவ மூர்த்தியாகும். அநேகமாக எல்லாப் பெரிய சிவாலயங்களும் கர்ப்பகிரகங்களுக்குப் பின்புறம் மேற்கு முகமாக நோக்கிய லிங்கத்தில் இந்த உருவத்தைக் காணலாம். அவ்வுருவத்தின் கீழ் ஒரு பன்றியின் உருவமும், மேலே ஓர் அன்னப் பறவையின் உருவமும் காணப்பெறும். திருவண்ணமலையில்தான் இவ்விதம் விஷ்ணுவும், பிரும்மாவும் சிவபிரானின் அடி முடியைத்

தேடினார்களாம். இன்னும் முருகப்பிரான் அருணகிரிநாதருக்கு உபதேசித்த தலமும் இதுதான்; பட்டினத்தாரும் இத்தலத்தில் தங்கியிருந்ததாகச் சொல்லப்படுகிறது. இடைக்காட்டுச் சித்தர் இவ்விடத்தில்தான் முக்தி பெற்றார். நமது காலத்தில் தோன்றிய ரமண ரிஷிகளும் தமது ஞான சாதனத்திற்கும், தவத்திற்கும் ஏற்றதலமாக இதையே ஆக்கிக்கொண்டார்கள்.

இந்த அண்ணாமலை க்ஷேத்திரத்திற்கு முதல் முறையாக விஜயம் செய்த ஸ்வாமிகளை அத்தலவாசிகள் மிகுந்த பக்தியுடன் வரவேற்று, பீடத்திற்குரிய மரியாதைகளையெல்லாம் செய்தனர். ஸ்வாமிகளும் அந்த க்ஷேத்திரத்தில் சுமார் ஒரு மாதம் தங்கியிருந்தார்கள். அப்பொழுது அவர்கள் அண்ணாமலையின் கிரிப்ரதக்ஷணத்தைப் பலமுறை செய்தார்கள்; ஆலயத்திலும் அருணாசலேச்வரரை தரிசனம் செய்து வந்தார்கள்.

பின்னர் ஸ்வாமிகள் காவிரியின் இயற்கைக் காட்சிகளைக் காணவேண்டி திருவண்ணாமலையிலிருந்து செங்கம் வழியாக சேலம் ஜில்லா ஹரூர், தர்மபுரி, இவ்விடங்களுக்கு விஜயம் செய்து தீர்த்த மலை என்னும் தலத்தில் காவிரியின் நீர்வீழ்ச்சியில் நீராடினார்கள். பின்னர் ஹோகேநகல் என்னும் இடத்திற்கு அடுத்த மேகேதாடு என்னும் தலத்தில் காவிரி இரண்டு பாறைகளுக்கு நடுவில் ஆடு தாண்டும் அளவில் அவ்வளவு குறுகலாக ஓடுவதைக் கண்டு அவ்விடத்திலும் நீராடினார்கள். மேகே என்னும் மொழி கன்னட பாஷையில் ஆட்டைக் குறிப்பதாகும்; ஆடு தாண்டும் அளவிற்கு அவ்விடம் காவிரி குறுகியிருப்பதால் அந்த இடத்திற்கு மேகேதாடு என்னும் பெயர் அமைந்துள்ளது. 1930-ஆம் வருடத்திலும் ஸ்வாமிகள் அநேகமாக வட ஆர்க்காடு ஜில்லாவிலேயே சுற்றுப் பிரயாணம் செய்துவந்தார்கள். அவ்வருடத்து வியாஸ பூஜையும், சாதுர்மாஸ சங்கல்பமும் 10-7-1930 முதல் ஆரம்பித்து ஆரணி ஜாகீரைச் சேர்ந்த பூசைமலைக்குப்பம் என்னுமிடத்தில் நடைபெற்றன. தகுந்த வசதியில்லாமல் காட்டின் நடுவே அமைந்திருந்த அவ்விடத்திலும் இரண்டு மாதங்கள் ஸ்வாமிகள் முகாம் செய்வதற்கும் தரிசனத்திற்கு வரும் பக்தர்களுக்குத் தகுந்த வசதிசெய்து கொடுப்பதற்கும் ஜாகீர் அதிகாரிகள் சலிப்பின்றி உழைத்தனர்.

இவ்வூரில் தங்கியிருந்தபோது, மடத்து யானை கட்டியிருந்த இடத்திற்குச் சமீபத்தில் ஓர் இரவு கீற்றுக்கொட்டகை

ஒன்றில் தீப்பற்றிக் கொண்டது. அந்நிகழ்ச்சியை இரவில் ஒருவரும் கவனிக்கவில்லை. பக்கத்திலிருந்த யானை தீயின் அனல் தாங்கமாட்டாமல் சங்கிலியை அறுத்துக்கொண்டு காட்டிற்கு ஓடிவிட்டது. மறுநாள் காலையில் யானை காணப் படவில்லை. பக்கத்தில் இருந்த கொட்டகையும் சாம்பலாக இருந்தது. இரண்டு நாட்கள் மடத்தின் சிப்பந்திகள் யானையை எல்லாத் திசைகளில் தேடியும் அது தென்படவில்லை. பின்னர் ஐந்து மைல் தூரத்தில் காட்டின் நடுவில் தண்ணீர் நிறைந்த ஒரு குளத்தில் யானை ஒன்று படுத்திருப்பதை அப்பக்கம் சென்றவர்கள் மடத்திற்குத் தெரிவித்தார்கள். யானைப்பாகன் முதலானவர்கள் அவ்விடம் சென்று யானையை வெளியில் கொண்டுவர எவ்வளவோ முயற்சி செய்தும் அது வெளிவரவில்லை. பின்பு ஸ்வாமிகளே அந்த இடத்திற்குச் சென்றார்கள். ஸ்வாமிகளைக் கண்டதும் அந்த யானை கரைக்கு வந்து ஸ்வாமிகளை வணங்கும் முறையில் முன் வந்து நின்றது. அதன் உடலில் சிறிய தீப்புண்கள் காணப்பட்டன. ஸ்வாமிகளும் தம் கரத்தினால் அதைத் தடவிக்கொடுத்து, அதற்குச் சிகிச்சைகள் செய்யும்படி உத்திரவிட்டார்கள்.

மடத்து யானை காணாமல் போனது.

பூசமலைக் குப்பத்தில் ஸ்வாமிகள் விஜயம் செய்திருந்தபோது வேலூரிலிருந்து ஒரு பக்தகோஷ்டியார் ஸ்வாமிகளைத் தரிசிக்க வந்தனர். அவர்களில் வக்கீல்கள், வியாபாரிகள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், டாக்டர்கள் இவ்விதமாகப் பல தொழில் நிபுணர்கள் கூடியிருந்தனர். அக்கூட்டத்தில் சங்கீதத்தில் தேர்ச்சி பெற்று நன்றாய்ப் பாடக்கூடியவர்களும் சிலர் இருந்தனர். அவர்கள் தம்புராவுடனும் இதர வாத்யங்களுடனும் வந்திருந்தனர். ஸ்வாமிகள் முன்னிலையில் கச்சேரி செய்யவேண்டுமென்று அவர்களுக்கு மிகவும் அவா இருந்தது. ஸ்வாமிகள் அவர்களை ஜாகைக்கு ஒரு மைல் தூரத்திலுள்ளதும் இயற்கை அழகு வாய்ந்ததுமான ஓர் குன்றின் அடி வாரத்திற்கு வரும்படி கட்டளையிட்டார்கள். அவ்வாறே மாலை 5-மணிக்கு அவ்விடம் யாவரும் கூடினார்கள். ஸ்வாமிகளும் அந்த இடத்திற்கு விஜயம் செய்தார்கள். அப்பொழுது ஒரு சங்கித வினிகை ஏற்பாடாயிற்று. நன்றாகப் பல்லவி பாடக்கூடிய வித்வான்கள் சிலரும் அதில் கலந்துகொண்டனர்.

சங்கீதத்தின் மூலம் கடவுள் பற்று.

அப்பொழுது ஒரு ஸ்ரீவைஷ்ணவர் வெகு இனிமையாகவும், சாஸ்த்ரோக்த்தமாகவும் பாடிக்கொண்டிருந்தார். அவருடைய சங்கீதத்தில் யாவரும் ஈடுபட்டிருந்தனர். அவர் சிவதீக்ஷாபருலா என்னும் கீர்த்தனையைப் பாடும்பொழுது, ஸ்வாமிகள் அந்தக் கீர்த்தனையின் பொருளை விளக்கிக் கூறும்படி அந்த வித்வானுக்குக் கட்டளை இட்டார்கள். கீர்த்தனையில் ஸ்ரீவைஷ்ணவருடன் சேரமாட்டேனென்று பொருள் அமைந்திருக்கிறது. வித்வானோ அதன் பொருளைக்கூறச் சற்று தயங்கவே, கூட்டத்தில் யாவரும் ஹாஸ்யமாகச் சிரித்தனர். ஸ்வாமிகள் பின்னர் அந்தக் கீர்த்தனத்தின் உண்மைப் பொருளை விளக்கி, இதில் துவேஷத்திற்கோ ஹாஸ்யத்திற்கோ இடமில்லையென்றும், தனது பற்று முழுவதையும் ஒரே தெய்வத்தின் மேல் வைத்து ஒரு பக்தன் பாடும்பொழுது துவேஷத்தை மனதில் கொள்ளமாட்டானென்றும், கீர்த்தனையில் கடுமையான சொற்கள் ஏதாவது இருந்தால், அது பாடியவரின் தீவிர பக்தியையே விளக்குகிறதென்றும் அந்தச் சாகித்திய கர்த்தா எந்த நிலையில் கடவுளிடம் பக்தி கொண்டிருந்தாரோ அதே நிலையில் யாவரும் தாங்கள் வழிபடும் தெய்வங்களிடம் பற்றுக் கொள்ளவேண்டுமென்றும் கூறினார்கள். பக்தகோஷ்டியினர் ஸ்வாமிகளின் இந்த உபதேச மொழிகளைக் கேட்டு எதிர்பாராது தங்களுக்குக் கிடைத்த ஓர் உபதேசமாய் இதை மதித்து மகிழ்ச்சியுற்றவர்களாகி ஸ்வாமிகளை வணங்கி விடைபெற்றுக் கொண்டனர்.

வடமொழியில் பல நூல்கள் இயற்றி ஒப்பற்ற சிவபக்தராக விளங்கிய அப்பையதீக்ஷிதர் அவர்களது சொந்த தலமாகிய அடையபலம் என்னும் சிற்றூருக்கு ஸ்வாமிகள் 2-6-1930-ல் விஜயம் செய்தார்கள். இந்த ஊர் ஆரணிக்கு அருகில் மூன்று மைல் தூரத்திலுள்ளது. ஸ்வாமிகள் அவ்வூர்ச் சிவன் கோவிலில் தங்கி பூஜைகளை முடித்துக்கொண்டு, 400 வருடங்களுக்கு முன் அவ்வூரில் வாழ்ந்த அந்த மஹானைப்பற்றிய சரித்திரத்தையும் அவர் இயற்றிய நூல்களையும் பற்றி பிரஸங்கம் புரிந்தார்கள். தீக்ஷிதரது அவதார நாளை ஒவ்வொருவருடமும் கொண்டாட வேண்டுமென்று ஸ்வாமிகள் அவ்வூராரிடம் வற்புறுத்தினர்கள். தீக்ஷிதர் பிறந்த ஊராகிய விரிஞ்சிபுரத்திற்கும் ஸ்வாமிகள்

மஹான் அப்பைய்ய தீக்ஷிதரின் ஊருக்கு விஜயம்.

விஜயம் செய்தார்கள். அவர்களின் சந்ததியார் தீக்ஷிதரது வமிசத்தில் பிறந்ததாக மாத்திரம் பெருமை கொள்ளாது, அவர் நூல்களைக் கற்று அவரது பெருமை என்றும் உலகில் நிலைத்திருக்கச் செய்யவேண்டுமென ஸ்வாமிகள் அங்குக் கூறினார்கள்.

பூசமலைக்குப் பக்கத்தில் 1930-ம் வருடத்திய வியாஸ பூஜை, சாதுர்மாஸ சங்கல்பத்தை முடித்துக்கொண்டு ஸ்வாமிகள் காவேரிப்பாக்கம், ராணிப்பேட்டை, வாலாஜாபாத், ஆர்க்காடு, திருவள்ளூர், பூந்தமல்லி, சென்னைக்கடுத்த கோயம்பேடு ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்துவிட்டு அவ்வருட இறுதியில் செங்கற்பட்டுக்கும் அதன் பின்னர் பக்ஷிதீர்த்தம் என்னும் திருக்கழுக்குன்றத்திற்கும் விஜயம் செய்து வேதகிரீசுவர ஆலயத்தில் ஸ்வாமி தரிசனம் செய்து கொண்டார்கள். அவ்விடம் அகில இந்திய சாதுமகா சங்கத்தார் ஸ்வாமிகளுக்கு (25-12-1930) ஒரு வரவேற்பளித்தனர். நமது ஸ்வாமிகளிடம் 'சாதுசங்கத்தார் வைத்திருந்த ஆழ்ந்த பக்தியை வெளிக்காட்டும் அவ்வரவேற்பின் வாசகத்தைக் கீழே காணலாம்.

செங்கற்பட்டு ஜில்லாவில் விஜய யாத்திரை.

"இப்பாரத பூமியை ஞான ஒளியால் விளங்கச் செய்யும் ஜகத் குருநாதா! முற்காலத்தில் நம் கண்டத்தை அறிவு மயமாய்த் திகழச் செய்வதற்கான பெருங் கைங்கரியத்தை மேற்கொண்டு ஆன்மாக்களுக்கு இதத்தையே செய்யும் சங்கரரே திரு அவதாரமாகி, சன்மார்க்கம் தழைக்கச் செய்த சத்குரு மரபில் தோன்றிய அருள் வள்ளலே! நின் வரவு நல் வரவாகுக! ஞானமயமாய் விளங்கும் கிருபா மூர்த்தி! தொன்மைப் பெரும் புகழ்கொண்ட நின் அடிமலர் பதிந்த இத்தலம் மேலும் மேலும் தூயதாய்ப் பக்குவான்மாக்களுக்கு ஏற்ற வண்ணம் ஞானத்தியாகம் செய்யும் தன்மையை மேற்கொள்ளும் என்பதற்கு ஐயுறவின்று. இம் மண்டபம் ஸ்வாமிகளின் அரிய திருவடி தீண்டப்பெறுதலின் 'புனிதமாம் என்ன மாதவம் செய்தது இச்சிறு குடில்'? என்ற உண்மையை விளக்குகின்றது. ஆன்ம ஞானம் குன்றி அதன் உண்மை இன்னதென்றே விளங்காமல், கண்டன கண்டன கூறித் திரியும் போலி ஞானிகள் மலிந்த இக்காலத்தில் உண்மைத் தத்துவ ஞானத்தை உணர்த்தி எவரையும் நன்னெறிப் படுத்தும் ஒழுக்கத்தில் எழுந்தருளியிருக்கும் ஞான சத்குருவே! நின் மலரடி

வணங்குகின்றோம். தமோ குணம் எங்கும் நுழைந்து, மனம் வலி இழந்து நிற்கின்ற இன்றைப்பொழுது, அன்பாகிய தருவில் பழுத்த தவமாகிய அருங்கனி; அதன் ரசமாகிய அத்வைதத்தைக் கற்பிக்க எழுந்தருளிய ஞானதருவே! நின் மலரடியை உவந்து வணங்கின்றோம். அன்பைப் பெருக்கி ஆனந்தம் ஊட்டி ஆன்ம சக்தி வளரச் செய் வோய்! சரணம்! சரணம்! நின் பாத பங்கயம், சரணம்! சரணம்! ஜகத் குரு சங்கர பகவத்பாதரே! சரணம்! சரணம்!''

இந்த வரவேற்புப் பத்திரத்திற்கு ஸ்வாமிகள் பதிலளிக்கையில் சாதுக்கள் தங்களுக்கு மோக்ஷ சாதனமாகவுள்ள வழிகளைத் தேடிக் கொள்வதுடன் ஆத்மீகத் துறையில் மக்களை நல்வழிப் படுத்துவதிலும் முயற்சிக்க வேண்டுமெனக் கூறினார்கள்.

1931-ஆவது வருடம் ஜனவரி மாதத் துவக்கத்தில் ஸ்வாமிகள் செங்கற்பட்டிற்கு விஜயம் செய்திருந்தார்கள். பல வருஷங்களாக ஸ்வாமிகளை எதிர்பார்த்திருந்த செங்கற்பட்டு வாசிகளுக்கு ஸ்வாமிகள் விஜயம் ஒரு பேரின்பத்தை அளித்தது. பெரியோர்கள், குழந்தைகள், பணக்காரர்கள், ஏழைகள், மற்றும் கீழ்க்குலத்தோர் மேல் குலத்தோர் என்னும் பாகுபாடின்றி ஸ்வாமிகளின் வழிபாட்டில் யாவரும் அப்பொழுது கலந்து கொண்டனர். ஸ்வாமிகள் அவ்வூரில் தங்கியிருந்தபோது ஒவ்வொரு இரவிலும் அவ்வூர்ச் சிவன்கோயிலில் பக்தர்களுக்கு உபதேசமொழிகளைக் கூறிவந்தார்கள்.

செங்கற்பட்டில் பால் பிரண்டன் என்னும் ஆங்கிலேயருக்குப் பேட்டியளித்தது.

அச் சமயம் பால்பிரண்டன் என்னும் ஆங்கிலேயேர் நமது பாரத பூமியிலுள்ள யோகிகள் பலரைச் சந்தித்து அவர்களின் ஆசியைப் பெறும் எண்ணத்துடன் ஓர் சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டிருந்தார். அவர் வட இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு, தென் இந்திய யாத்திரையின் பொருட்டுச் சென்னைக்கு வந்தார்: சென்னையில் பிரபல ஆங்கில எழுத்தாளராய் விளங்கிய ஸ்ரீ கே. எஸ். வேங்கடரமணிக்கு இவர் இங்கிலாந்திலிருந்து ஓர் அறிமுகக் கடிதம் கொண்டுவந்திருந்தார். அக்கடிதத்துடன் சென்னையில் முதன்முதலாக அவர் ஸ்ரீ வெங்கடரமணியைச் சந்தித்தார். பால்பிரண்டன் அவரைப்பற்றி தம் மர்ம இந்தியாவில் தேடல் (Search in Secret India) என்னும் புத்தகத்தில், இங்கிலாந்திலுள்ள ஹால்டேன் பிரபு மற்றும்

ரவீந்தரநாத் டாகூர் முதலானவர்களால் புகழப்பெற்ற இவர் ஆங்கில பாஷையின் மூலம் இந்திய கிராம வாழ்க்கையை முதன் முதலாக வெளியிட்டவர். சென்னைச் சர்வ கலாசாலை செனட்டில் அவர் ஓர் அங்கம் வகிப்பவர். உயர்ந்து மெல்லிய மேனிபடைத்த அவரது சிறிய தலையின் மேல் சிறிதளவு குடுமி காணப்பட்டது, மூக்குக்கண்ணாடி பொருத்தப்பட்ட அவரது கண்களின் தோற்றத்தில், சிந்தனையில் ஆழ்ந்த உள்ளத்தையும், ஆதர்ச புருஷனையும், கவியையும் கண்டேன். ஆயினும் நாட்டில் உழுது பயிரிடும் ஏழை மக்களின் துக்கமும் துன்பமும் அவருடைய கண்களில் பிரதி பலித்துக் கொண்டிருந்தன' எனக் கூறியுள்ளார்.

அந்த ஐரோப்பியர் சென்னையில் வெங்கடரமணியைச் சந்தித்து, சித்திபெற்ற யோகிகளைக் காணத் தமக்கு அவர் உதவி புரிய வேண்டுமென்றும், வெறும் வேஷதாரிகளான பலரைக் காண்பதைத் தான் விரும்பவில்லையென்றும் தெரிவித்துக் கொண்டார். வெங்கடரமணியும் சற்று நிதானத்துடன் அவரது வேண்டுகோளைப்பற்றி யோசித்து, ஒருபுறம் நாத்திகமும் மற்றொருபுறம் மேல் நாட்டு நாகரீகமும் நிறைந்திருக்கும் இந்நாளில் வெளிப்படையாக யோகிகளைக் காண்பது அரிதென்றும், அவர்கள் தனிமையில் ஜனங்களின் கண்களுக்குப் புலனாகாமல் நிஷ்டையில் இருப்பார்களென்றும், இந்தியர்களுக்கே சுலபமாகக் கிட்டாத இந்த யோகிகளை ஓர் ஐரோப்பியர் அடைவது மிகவும் கடினமென்றும் அவரிடம் கூறிவிட்டார். ஆயினும் மறுநாள் வெங்கடரமணி மறுபடியும் பால்பிராண்டனைச் சந்தித்து கீழேகண்ட ஆலோசனை ஒன்றைத் தெரிவித்தார்.

"தென்னிந்தியாவின் மதத் தலைவரும் எனக்கு மிகுந்த ஆதரவு அளிப்பவருமான கும்பகோணம் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் செங்கற்பட்டுக்கு வந்திருப்பதாக நேற்றிரவு பிற்பகுதியில் எனக்குத் தகவல் எட்டியது. ஆத்மீகத் துறையில் நான் அவர் உபதேசத்தையே நாடி வருகிறேன். அவர் தவத்தின் உன்னத நிலையை அடைந்தவர்; ஓர் உண்மைத் துறவி; பெரிய வேதாந்தி. அவர் ஒரு யோகியாக இல்லாவிடினும் யோக மார்க்கத்தின் உண்மைகளை நன்கறிந்தவர். இந்த நாட்டிலுள்ள நகரங்களிலும் கிராமங்களிலும் யாத்திரை செய்து வருகிறார். அவர் செல்லும் இடமெல்லாம் பக்தர்கள் அவரை வணங்கி வருகிறார்கள்.

தாங்கள் உபயோகமுள்ள முறையில் அவர் மூலம் சில உபதேசங்களைப் பெறலாமென்று நினைக்கிறேன். அவர் தங்கியிருக்கும் இடம் சென்னையிலிருந்து 35 மைல்கள் தூரத்தில் தான் இருக்கிறது. ஆனால் தங்களுக்கு ஸ்வாமிகள் பேட்டியளிப்பார்களோ என்பது தான் சந்தேகம். எப்படியாயினும் நான் அதற்கான முயற்சிகளைச் செய்கிறேன்'' என்றார்.

இந்த ஆலோசனையைக் கேட்ட பிரண்டனும் நம் ஸ்வாமிகளைத் தரிசிக்க அவருடன் செல்லச் சம்மதிக்கவே இருவரும் அதிகாலையில் செங்கற்பட்டிற்குப் புறப்பட்டனர். போகும் வழியில் ஸ்வாமிகளின் எளிய வாழ்க்கையைப்பற்றியும், பீடத்தின் ஆதி ஆசார்யரான ஸ்ரீ சங்கரரைப் பற்றியும், அவரது சித்தாந்தத்தைப்பற்றியும், வெங்கடரமணி கூறிக்கொண்டே போனார். மேலும் பீடத்தின் சரித்திரத்தைப்பற்றியும் தாம் அறிந்த யாவற்றையும் அந்த ஐரோப்பியருக்குச் சொல்லிக்கொண்டுவர, அவரும் மிகுந்த கவனத்துடன் கேட்டுவந்தார். இருவரும் செங்கற்பட்டை அடைந்து ஸ்வாமிகள் விஜயம் செய்திருந்த வீட்டிற்குச் சென்றனர். பிரண்டன் ஓர் ஐரோப்பியராக இருந்ததாலும், நூற்றுக் கணக்கானவர்கள் முன்கூட்டியே அன்று தரிசனத்திற்குக் காத்திருந்ததாலும் அவருக்குத் தரிசனம் கிடைப்பது சாத்தியமில்லை யென்று மடத்தின் அதிகாரிகள் கூறிவிட்டனர். பின்னர் வெங்கடரமணியே ஸ்வாமிகளிடம் நேரில் சென்று விண்ணப்பித்துக் கொள்ள, ஸ்வாமிகள் அந்த ஆங்கிலேயரைத் தம்மிடம் அழைத்து வர அனுமதித்தார்கள். அதில் வெங்கடரமணிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியும் பெருமையும் அளவு கடந்திருந்தன. அந்த ஆங்கிலேயர் புஷ்ப ஆரங்கள், ஆரஞ்சு பழங்கள் முதலியவற்றைத் தாம் தூக்கிச் செல்லக்கூடிய அளவுக்கு எடுத்துக்கொண்டு, ஸ்வாமிகள் தங்கியிருந்த வீட்டிற்குள் நுழைந்தார். அவ்விடம் மேஜை நாற்காலி ஒன்றுமில்லாத ஓர் இருட்டறை; அதன் ஒரு மூலையில் மங்கலான எண்ணெய் விளக்கு ஒன்று எரிந்துகொண்டிருந்தது. அந்த விளக்கின் நிழலில் அதிக உயரமில்லாத ஸ்வாமிகளின் உருவத்தைப் பிரண்டன் கண்டார். அவர் தயக்கத்துடன் முன் நெருங்கித் தாம் கொண்டுவந்த பழம், புஷ்பம் இவைகளை ஸ்வாமிகளின் முன்னிலையில் சமர்ப்பித்து, இந்துக்கள் வணங்கும் முறையில் ஸ்வாமிகளை நோக்கித் தரையில் வணங்கினர். (ஸ்வாமிகளின்

தோற்றத்தில் அவர் மிகவும் வன்மையாக ஈடுபட்டு, அது மிகவும் தெய்வத் தன்மை வாய்ந்ததெனத் தம் புத்தகத்தில் பிறகு வரைந்துள்ளார்). முதலில் அவர் ஆங்கிலத்தில் ஸ்வாமிகளைப் பார்த்து, "தாங்கள் என்னை இவ்விடம் வர மிகவும் அன்புடன் அனுமதித்தீர்கள்'' எனக் கூறினர். ஸ்வாமிகள் வழக்கமான தமது மந்தகாசத்துடன் அதை ஏற்றுக்கொண்டார்கள். ஆங்கிலம் பேசுவதை ஸ்வாமிகள் புரிந்துகொள்வார்களென்றும், ஆனல் அவர்கள் பதிலை இந்திய பாஷைகளில் கூறுவார்கள் என்றும், தாம் அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கூறுவதாகவும் பிரண்டனிடம் வெங்கடரமணி தெரிவித்தார். ஸ்வாமிகள் தீர்க்கதரிசிகளென்றும், பின்னல் நடைபெறப்போவதை முன்னலேயே யூகித்துச் சொல்லக்கூடியவர்களென்றும் வெங்கடரமணி மூலம் அந்த ஆங்கிலேயர் கேள்விப்பட்டிருந்ததால், உலகத்தின் எதிர்காலத்தைப்பற்றி ஸ்வாமிகளை அவர் சில கேள்விகள் கேட்கத் தொடங்கினர்.

கேள்வி:— உலகத்தின் தற்கால ராஜீய நிலைமையும், பொருளாதார நிலைமையும் எப்பொழுது சீர்படுமென்று தாங்கள் நினைக்கிறீர்கள்?

பதில்:— நிலைமை திருந்துவதென்பது சுலபமாகவும் வேகமாகவும் நடைபெறக்கூடியதன்று. அது காலக்கிரமத்தில்தான் நடைபெறவேண்டும். பெரிய நாடுகள் ஒவ்வொரு ஆண்டிலும் அழிக்கும் ஆயுதங்களை உற்பத்தி செய்வதில் ஏராளமான பொருளைச் செலவிட்டுக்கொண்டிருக்கும் போது எவ்விதம் உலகம் சீர்திருந்த முடியும்?

கேள்வி:— உலகில் ஆயுத ஒழிப்புப் பேச்சுக்களும், தற்காலம் நடைபெற்று வருகின்றனவே! அதனல் ஏதாவது பயன் ஏற்படுமா?

பதில்:— உங்கள் சண்டைக் கப்பல்களை உடைத்தெறிந்தாலும், இயந்திர பீரங்கிகளைத் துருப்பிடிக்கச் செய்தாலும் அவையொன்றும் சண்டையை நிற்கச் செய்யாது. கையில் கம்புகளை ஏந்தியாவது ஜனங்கள் சண்டையிடுவார்கள்.

கேள்வி:— அப்படியானல் உலகம் சீர் அடைய என்னதான் வழியெனத் தாங்கள் எண்ணுகிறீர்கள்?

பதில் :— ஆத்மீகத் துறையில் ஒரு நாடு மற்றொரு நாட்டைப் புரிந்துகொள்ள வேண்டும். அவ்விதமே முதலாளிகள் ஏழைகளைப் புரிந்து கொள்ளவேண்டும். இதனுல் தான் ஒருவருக்கொருவர் நல்லெண்ணம் ஏற்படும். இவ்வித நல்லெண்ணம் ஏற்படுவதால் உண்மையான சமாதானமும் தேசங்களுக்கு நன்மையும் உண்டாகும்.

கேள்வி :— தாங்கள் கூறுவது எளிதில் நடைபெறக் கூடியதாக நான் எண்ணவில்லை. ஆகையால் எங்களுக்கு (ஐரோப்பியர்களுக்கு) ஒருபொழுதும் மனநிம்மதி கிடைக்காதென்றே நாங்கள் முடிவுக்கு வரவேண்டுமா?

பதில் :— அவ்விதம் நினைப்பதற்கில்லை. நம்மை எல்லாம் ஆளும் கடவுளது சக்தி ஒன்று உலகில் இருக்கிறது.

கேள்வி :— கடவுள் ஒருவர் இருக்கிருர் என்ருலும், அவரை அடைவது எளிதான காரியமன்றே?

பதில் :— மனித சமுதாயத்தில் எப்பொழுதும் கடவுள் அன்பு கொண்டவராகவே இருக்கிருர். அன்பு நிறைந்த இடத்தில் கடவுளைக் காணலாம்.

கேள்வி :— தற்காலம் உலகில் வியாபித்திருக்கும் அமைதியின்மையையும் அக்கிரமங்களையும் கவனிக்கும்போது கடவுள் மக்களைப்பற்றிச் சற்றும் கவலை கொள்ளாமல் இருக்கிருரோ என நினைக்கவேண்டியிருக்கிறதல்லவா?

பதில் :— அவ்விதம் நினைப்பதற்கில்லை. பொறுமையுடன் இருப்பவன், எதிர்காலத்தை ஆழ்ந்த சிந்தனையுடன் பார்ப்பான். கடவுள் மனிதன் உருவத்திலேயே தோன்றி ஓர் குறிப்பிட்ட காலத்தில் இந்தச் சிக்கல்களையெல்லாம் சீர்ப்படுத்துவார். பெரிய சாம்ராஜ்யங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் சச்சரவுகளும், மக்களின் அதர்மச் செயல்களும், கோடிக்கணக்கான ஏழைகளின் கஷ்டங்களும், எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகின்றனவோ, அப்போதுதான் ஒரு மாறுதலுக்கும் சந்தர்ப்பம் நேரிடும். தெய்வீக சக்தி வாய்ந்த மனிதன் ஒருவன் உலகில் அப்பொழுது தோன்றுவான். இந்தக் கஷ்டங்களுக்கெல்லாம் அந்த மனிதன் மூலம் ஓர் முடிவு

ஏற்படும்; ஒவ்வொரு நாட்டிலும் இவ்விதமகா புருஷன் தோன்றி மக்களைக் காப்பாற்றலாம். பௌதீக சாஸ்திரத்தின் நியாயத்தைப் போல், இந்த மாறுதல் உலகில் படிப்படியாக ஏற்படும். மக்களது நாத்தீகக் கொள்கைகளாலும் தன்னை உணராததாலும் எவ்வளவு வேகமாகத் துன்பங்கள் பரவுகின்றனவோ அவ்வளவு, வேகமாகவே உலகத்தைக் காப்பாற்றவும் கடவுள் சக்தியுடன் இந்த மனிதன் தோன்றுவான்.

கேள்வி:— ஆகையால், நமது காலத்தில் கூட அத்தகைய மனிதன் அவதரிப்பானெனத் தாங்கள் நினைக்கின்றீர்களா?

பதில்:— ஆம், எங்கள் நாட்டிலேயே அவ்வித அவதார புருஷன் தோன்றலாம். இந்த அவதாரத்திற்கு இப்பொழுது அவசியமும் ஏற்பட்டு விட்டது. உலகில் அஞ்ஞான இருளும் அதிகமாகப் பரவியிருக்கிறது.

கேள்வி:— உலக மக்கள் இப்பொழுது மிகவும் கேவலமான நிலையை அடைந்து விட்டதாகத் தாங்கள் கருதுகிறீர்களா?

பதில்:— இல்லை. ஒவ்வொரு மனிதனது இருதயத்திலும் ஆத்ம சக்தி நிறைந்திருக்கிறது. அந்தச் சக்தியானது அவனை முடிவில் கடவுளிடமே கொண்டுபோய் விடுகிறது.

கேள்வி:— மேல் நாடுகளில் இப்போது மனிதனது இருதயத்தில் பைசாசங்கள் அல்லவோ புகுந்திருக்கின்றன? அவர்கள் செயல்களும் அவ்விதம்தான் இருக்கின்றன. இவ்விஷயத்தில் தாங்கள் எவ்விதம் நினைக்கிறீர்கள்?

பதில்:— மனித வர்க்கத்தை அவ்விதம் குறை கூறவேண்டாம், அவரவர்கள் பிறந்த சூழ்நிலையில் அவரவர்கள் நடந்துகொள்கிறார்கள். உண்மையில் எவரும் அவ்வளவு மோசமானவர்களல்லர். சந்தர்ப்பங்களை ஒட்டியே அவர்கள் மோசமாக நடந்துகொள்ளும்படி நேரிடுகிறது. இவ்வுண்மை மேற்கு நாடுகளுக்கும் கிழக்கு நாடுகளுக்கும் ஒன்றேதான். உலகெல்லாம் ஓர் உயர்ந்த கொள்கை பரவ வேண்டும். இன்று நாம் பார்ப்பதும் அனுபவிப்பதும்தான் உண்மை என்னும்

எண்ணத்தை மனிதன் மாற்றிக்கொண்டு, மனித சக்திக்குமேல் ஓர் தெய்வ சக்தி இருக்கிறதென்பதை அவன் உணர வேண்டும். அப்பொழுதுதான் உலகத்தில் துன்பங்களுக்கு எல்லாம் ஓர் முடிவு காணலாம். எல்லா நாடுகளிலும் இவ்விதத் துன்பங்களில் மக்கள் மூழ்கியிருக்கிறார்கள். ஒருவனது தவறு உச்ச நிலையை அடையும்போது, அவனுக்குப் புதிதாக ஒரு நல்ல மார்க்கம் தோன்றுவதுபோல, ஓர் உலக மாறுதலை நாம் இப்பொழுது காணவேண்டும்.

கேள்வி:— ஆகையால் தாங்கள் மனிதனது உலக வாழ்க்கையிலேயே தெய்வீகத்தை புகுத்துவிடலாமென்று நினைக்கின்றீர்களா?

பதில்:— ஆம். அது சாத்தியமானதென்றே நான் கருதுகிறேன் அதுதான் எல்லோருக்கும் முடிவுகாலத்தில் திருப்தியைத் தரக்கூடிய பயனை அளிக்கும். அப்பயனும் எளிதில் மறைந்துவிடாது. தெய்வீக சக்தி வாய்ந்த மனிதர்கள் எவ்வளவுக் கெவ்வளவு உலகில் அதிகமாகத் தோன்றுகின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு உலகில் இந்த எண்ணம் சீக்கிரமாகப் பரவும். தெய்வத் தன்மை வாய்ந்த மகான்களைப் பாரத தேச மக்கள் மதிப்புடன் நடத்தி வருகிறார்கள். அதுபோல் உலகில் மற்றெல்லாத் தேசங்களும் நடந்து, அந்த மகான்கள் காட்டும் வழியைப் பின்பற்றுவார்களானால், உலகெல்லாம் அமைதியும் சிறப்பும் பெற்று விளங்கும் என்பதில் ஐயமில்லை. இப்பொழுது நன்மை தீமை இவை இரண்டும் உலக முழுவதும் பரவியிருக்கின்றன. இனிப் பிறக்கும் சந்ததியார் அவர்களது (ஆசிய-ஐரோப்பிய) நாகரிகத்தின் உயரிய கொள்கைகளைக் கடைப்பிடித்து, சமுதாயத்தின் சீரிய மக்களாக விளங்குவார்களென நான் நம்புகிறேன்.

பின்னர் பால் பிரண்டன் நம் ஸ்வாமிகளைப்பற்றிய விஷயங்களைச் சில கேள்விகள் மூலம் கேட்கத் தொடங்கினர்.

கேள்வி:— தாங்கள் எவ்வளவு ஆண்டுகளாக இந்தப் பீடத்தில் அமர்ந்திருக்கிறீர்கள்?

பதில்:— 1907-ம் வருடம் நான் இந்தப் பீடத்தில் அமர்ந்தேன். அப்போது எனக்கு பிராயம் சுமார் 12.

கேள்வி:— தாங்கள் தங்கள் நிர்வாக ஸ்தலமாகிய கும்பகோணத்தில் அதிகமாகத் தங்குவதில்லையென நினைக்கிறேன். நான் நினைப்பது சரிதானு?

பதில்:— ஆம், நான் சென்ற 15 ஆண்டுகளாக இந்த ஜில்லாக்களில் கிராமம் கிராமமாக யாத்திரை செய்து வருகிறேன். என் யாத்திரையும் மெதுவாகவே நடந்து வருகிறது. இப்பொழுது வடக்கே காசி வரை போவதாகத் திட்டமிட்டுள்ளேன்.

அதன் பின்னர் அந்த ஐரோப்பியர் தாம் நாடி வந்த விஷயத்தைப்பற்றி ஸ்வாமிகளிடம் பேசத் தொடங்கினர். ஸ்வாமிகளும் அதுவரை அந்த ஐரோப்பியர் பாரத நாட்டில் சந்தித்த யோகிகளையும் சாதுக்களையும்பற்றி விசாரித்தார்கள். அவர் அவர்கள் எல்லோரையும் பற்றியும் விளக்கமாகக் கூறிவிட்டு ஸ்வாமிகளைப் பார்த்து;

கேள்வி:— யோகாப்பியாசத்தில் சித்தி பெற்று அதன் பயனை நிதர்சனமாகக் காட்டக் கூடிய ஒரு மகானை நான் காண விரும்புகிறேன். அவரிடம் அதிகமாகப் பேசுவதைக் கூட நான் விரும்பவில்லை. நான் இவ்விதம் கேட்பதால் என் நிலைமைக்கு அதிகமானதொரு பயனை நான் எதிர்பார்ப்பதாகத் தாங்கள் நினைக்கலாம். இவ்விஷயத்தில் தாங்கள் எனக்கு வழி காட்டுவீர்களா?

பதில்:— உயரிய யோக மார்க்கத்தை நீங்கள் பயில வேண்டுமென்று நினைப்பதில் யாதொரு தவறுமில்லை. அதில் உங்கள் சிரத்தைதான் உங்களுக்குப் பயனளிக்கும். தீவிரமான மன உறுதியும் இதற்கு வேண்டும். இவை உங்களிடம் இருப்பதாகவே நான் நினைக்கின்றேன். இப்பொழுது உங்கள் உள்ளத்தில் ஒரு ஒளி தோன்றமுற்பட்டிருக்கிறது. அந்த ஒளியே நீங்கள் கோரும் பயனை அளிப்பதற்கு உங்களுக்கு நிச்சயமாக உதவியளிக்கும்.

கேள்வி :— தாங்கள் கூறுவதை நான் முற்றிலும் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆயினும் இதுவரை நானும் சிந்தனை செய்து வந்திருக்கிறேன். பாரத நாட்டின் பழைய காலத்து ரிஷிகளும்கூடக் கடவுள் நமது ஹிருதயத்திலேயே வசிப்பதாகக் கூறியுள்ளார்கள். இதை எனக்கு விளக்கமாகக் கூறுவீர்களா?

பதில் :— கடவுள் எங்கும் நிறைந்தவர். அவரை ஒருவர் ஹிருதயத்தில் மாத்திரம் அடங்கியவராக எண்ணிவிடலாகாது. இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் அவரே தான் தாங்கிக் கொண்டிருக்கிறார்.

கேள்வி :— பின்னர் நான் எந்த மார்க்கத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்பதை எனக்குக் கூறுவீர்களா?

பதில் :— உங்கள் சுற்றுப் பிரயாணத்தை நீங்கள் மேலும் தொடர்ந்து அது ஒருவாறு முடிவடைந்தவுடன் நீங்கள் சந்தித்த யோகிகளையும் சாதுக்களையும் பற்றி சிந்தித்துப் பாருங்கள். அவர்களில் யாரை உங்கள் மனத்திற்கு உகந்தவர்களாக எண்ணுகின்றீர்களோ அவரையே அடையுங்கள். அவர் நீங்கள் கோரும் மார்க்கத்தை உங்களுக்கு உபதேசிப்பார்.

கேள்வி :— என் மனதிற்குத் திருப்தி யளிக்கக்கூடியவராக எனக்கு எவருமே கிடைக்காவிட்டால், நான் மேலும் செய்யவேண்டுவதென்ன?

பதில் :— அவ்விதம் ஒருவரும் கிடைக்காவிட்டால் நீங்களாகவே தனிமையில் முயற்சி செய்யவேண்டும். ஒவ்வொரு நாளும் தியானத்தில் மனதை ஈடு படுத்தவேண்டும். அற்ப விஷயங்களையெல்லாம் மனதை விட்டு அகற்றி உயரிய விஷயங்களை அன்புடன் மனதில் சிந்தனை செய்யவேண்டும். ஆத்மாவைப்பற்றி அடிக்கடி நினைக்கவேண்டும். அதுவே சாதனைக்கு உதவும். இந்த அப்பியாசங்களைச் செய்வதற்கு விடியற்காலையே ஏற்ற காலமாகும். மாலைச் சந்தி நேரங்களிலும் தியானம் செய்யலாம், இந்த இரண்டு நேரங்களிலுமே அமைதி நிறைந்து இருக்கும். அப்பொழுது தியானத்திற்கு இடையூறும் அதிகமாக ஏற்படாது.

கேள்வி :— என் சொந்த முயற்சியிலும் எனக்குப் பயன் கிடைக்கா விட்டால் நான் மறுபடியும் தங்கள் உதவியை நாட லாமா?

பதில் :— நான் ஒரு பொது ஸ்தாபனத்தின் தலைவனாக அமர்ந் துள்ளேன். அநேகமாக இரவு பகல் முழுவதுமே இந்த ஸ்தாபனத்தின் காரியங்களில் நான் ஈடுபட வேண்டியவனாக யிருக்கிறேன். அப்படியிருப்பதால், தனிமையில் காலத்தைச் செலவிட வசதியுள்ள ஓர் குருவையே நீங்கள் நாடவேண்டும்.

கேள்வி :— உண்மையான ஆசார்யர்கள் கிடைப்பது அரிதென் தென்றும் அதிலும் ஒரு ஐரோப்பியன் அவர்களைக் காண முடியாதென்றும் கூறுகின்றார்களே?

பதில் :— உலகில் உண்மை இல்லாமலில்லை. அதை நாம் காண வும் முடியும்.

கேள்வி :— அப்படியானால் அப்படிப்பட்ட ஓர் உண்மையான ஒரு ஆசார்யரிடம் என்னை அனுப்புவீர்களா?

பதில் :— அப்படிப்பட்ட இருவர்களை மாத்திரம் நான் மனதில் கொண்டுள்ளேன். அவர்களிலொருவர் இந்த நாட்டின் தென் பாகத்தில் அடர்ந்த கானகத்தில் வசித்து மௌனத்தையும் மேற்கொண்டு வருகிறார். வெகு சிலரே அவரைக் காண முடியும். இதுவரை ஐரோப் பியர் எவரும் அவரைக் கண்டதில்லை. நான் அவரிடம் தங்களை அனுப்பலாம். ஆனால் அவர் ஐரோப்பியரை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடலாம்.

கேள்வி :— மற்றொருவரைப்பற்றி நான் அறிந்துகொள்ள ஆவ லுள்ளவனாக இருக்கிறேன். அவர் யார்?

பதில் :— மற்றொருவர் உள்நாட்டில்தான் வாசம் செய்கின்றார். அவர் ஒரு சிறிய ஞானியாக விளங்குகிறார். நீங்கள் அவரை நாடிச் செல்லலாம்.

கேள்வி :— அவரைப்பற்றி நான் மேலும் விபரம் தெரிந்து கொள்ளலாமா?

பதில் :— அவரை மகரிஷி எனக் கூறுவார்கள். வட ஆர்க்காடு ஜில்லா, திருவண்ணாமலை என்னும் ஊரில், ஜோதிமய

மாக விளங்கும் அருணசலத்தில், அவர் வசித்து வருகிருர். அவரை அடைய மேலும் விபரங்களை அவசியமானுல் தெரிவிக்கின்றேன்.

கேள்வி :— தங்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். அதே இடத்திலிருந்து என்னைக் காண ஒருவர் வந்திருக்கிருர். தங்களுக்குள்ள எவ்வளவோ முக்கியமான அலுவல்களுக்கிடையில் தங்களது காலத்தை நான் உபயோகித்துக் கொண்டுவிட்டேன். அதற்காக என்னை மன்னிக்கவேண்டும். எனக்கும் போக விடை தருகின்றீர்களா?

பதில் :— சரி. நீங்கள் தவருது திருவண்ணுமலைக்குச் செல்வீர்களென்று நினைக்கின்றேன்.

கேள்வி :— தென்னிந்தியப் பயணத்தை நான் இன்றுடன் முடித்துக்கொண்டு, நாளை புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் முன்பே செய்துவிட்டேன். நான் இந்த நிலையில் என்ன செய்வது?

பதில் :— உங்கள் ஏற்பாட்டை மாற்றிக்கொண்டு, மகரிஷியைச் சந்தித்த பிறகே தென்னிந்தியாவை விட்டுப் புறப்படுவதென்று ஓர் தீர்மானத்தைச் செய்துகொள்ளுங்கள்; நீங்கள் கவலை கொள்ள வேண்டாம். உங்கள் விருப்பமெல்லாம் நன்கு நிறைவேறும்.

பால்பிரண்டன் ஸ்வாமிகளின் விருப்பப்படியே மகரிஷியைப் பார்த்துவிட்டு பிறகு செல்வதாக வாக்களித்தார். பின்னர் பிரிவதற்கு மனமில்லாமல் ஸ்வாமிகளிடம் விடைபெற்றுக்கொண்டு வெளியில் வந்து அதன் பின்னர் தாம் அடைந்த சில அனுபவங்களைப்பற்றி தமது புஸ்தகத்தில் அவர் கீழேகண்டவாறு கூறியுள்ளார்.

"குழந்தைப் பருவத்திலிருந்தே கடவுள் பணியில் ஈடுபட்டிருக்கும் இப்பெரியாரை விட்டுப் பிரிய எனக்கு மனம் வரவேயில்லை. அவர் ஒரு பீடாதிபதியாக இருந்தும் அவரது மனம் அதிகாரத்தில் நாடவில்லை. அவர் எல்லாவற்றையும் துறந்தவர். அவருக்கு அளிக்கும் காணிக்கைகளையெல்லாம் அவர் அவைகளைப் பெறத் தகுதி உள்ளவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிடுகிருர். தேஜோமயமான அவரது அழகிய உருவத்தை நான் ஒருபொழுதும் மறக்க முடியாது".

"அன்று மாலை வரையில் நான் செங்கற்பட்டிலேயே சுற்றிக்கொண்டு அந்த ஊரின் அழகில் என் மனஸை ஈடுபடுத்திக்கொண்டிருந்தேன். அவ்விடமிருந்து செல்லும்முன்னர் ஸ்வாமிகளை மற்றொருமுறை பார்த்துவிட வேண்டுமென்ற எண்ணம் எனக்கு உதித்தது. அப்பொழுது அந்த ஊரின் பெரிய ஆலயமொன்றில் கூடியிருந்த ஒரு பெரிய கூட்டத்தின் நடுவில் ஸ்வாமிகள் அமர்ந்து சில உபதேச மொழிகளைக் கூறிக்கொண்டிருந்தார்கள். கூட்டத்தில் பெரியோர்கள், பெண்கள், குழந்தைகள் யாவரும் உட்கார்ந்திருந்தனர். ஆயினும் அவர் பேசிய மொழி எனக்குப் புரியாவிடினும், நல்ல கல்வி அறிவுள்ள பிராமணனும், படிப்பில்லாத குடியானவனும் ஒரேவிதமாக ஸ்வாமிகளின் உபதேச மொழிகளில் ஈடுபட்டிருந்தார்களென்பதை மட்டிலும் நான் தெரிந்துகொண்டேன். ஸ்வாமிகளின் அழகிய திருமேனி என் உள்ளத்தைக் கவர்ந்தது. அந்தக் கூட்டத்தில் அமர்ந்திருந்தவர்களின் திடமான நம்பிக்கையைக் கண்டு நான் பொறுமைகொண்டேன். அவர்களது வாழ்க்கையில் அவர்கள் சந்தேகம் கொள்ளவில்லை. 'கடவுள் ஒருவர் இருக்கிறார்' என்ற எண்ணம் அவர்களது வாழ்க்கையை மேலும் திடப்படுத்தியிருந்தது. அவர்கள் வேறு எந்தச் சிந்தனையிலும் தங்கள் மனஸை ஈடுபடுத்தவில்லை. மேடு பள்ளமான இந்த உலக வாழ்க்கையைப் பற்றியோ, பிரபஞ்சத்தின் ஒரு பாகமாகிய பூமியின் அழிவைப்பற்றியோ அவர்கள் கவலை கொள்ளவில்லை."

பின் நாங்கள் செங்கற்பட்டிலிருந்து மோட்டாரில் திரும்பிச் சென்னைக்கு பிரயாணமானோம். நிறைந்த நக்ஷத்திரங்கள் நீல நிறமான ஆகாயத்தில் பதிக்கப்பட்டனபோல் காணப்பட்டன; சாலை ஓரங்களில் தண்ணீர் தடத்திற்கு அருகிலுள்ள தென்னை மரங்களில் மட்டைகள் குளிர்ந்த காற்றினால் ஆடி அசைந்து கொண்டிருந்த சப்தம் என் காதுகளில் விழுந்தவாறேயிருந்தது. சிறிது நேரம் நாங்கள் மௌனமாகவே பிரயாணம் செய்துகொண்டு வந்தோம். என் நண்பர் வெங்கடரமணி திடீரென்று எங்கள் மௌனத்தைக் கலைத்தார். அவர் என்னைப் பார்த்து, 'நீர்தான் உண்மையில் அதிர்ஷ்டசாலி' என்று கூறினார். அவரை நான் 'ஏன்' என்று கேட்டேன். ஐரோப்பிய எழுத்தாளர் ஒருவருக்கு ஸ்வாமிகள் பேட்டியளித்தது இதுதான் முதல் தடவையென்றும்,

ஆகையால் ஸ்வாமிகளின் ஆசி எனக்குப் பரிபூர்ணமாக இருக்கிற தென்றும் அவர் என்னிடம் கூறினர். நானும் அதில் பெருமை கொண்டேன்.

"சென்னையில் நான் என் ஜாகைக்குத் திரும்பியபொழுது இரவில் நடுநிசி வேளை வந்துவிட்டது. விடுதிற்குள் நுழையு முன்னர் ஆகாயத்தை ஒருமுறை உற்று நோக்கினேன். கூடாரம் போன்ற ஆகாயவளைவில் கணக்கில்லாத வயிரங்கள் பதித்தன போல நக்ஷத்திரங்கள் காணப்பட்டன, ஐரோப்பாக் கண்டத்தில் எங்கும் இம்மாதிரிக் காட்சி காணவே முடியாது. நான் அந்த விடுதியின் படியில் ஏறி எனது பாட்டிரி விளக்கை ஏற்றிக் கொண்டே வராந்தா பக்கமாகச் சென்றேன். அங்கு அந்த இருளில் படுக்கையிலிருந்து என் நண்பர் (திருவண்ணமலையி லிருந்து என்னை அழைக்கவந்தவர்) எழுந்து உட்கார்ந்தவண்ணம் என்னை வரவேற்றார். அவரைப் பார்த்து, 'சுப்பிரமண்யம், நீர் என்ன செய்து கொண்டிருக்கிறீர்?' எனக் கேட்டேன். அவர் சிறிது பல்லை இளித்துப் புன்னகை புரிந்தார். மேலும் அவர் என்னைப் பார்த்து, 'நான் தங்களைச் சந்திப்பதாக முன்னரே கூறவில்லையா? என்றார். நானும், 'ஆம்' என்று கூறிவிட்டு, அவரைப் பார்த்து, "உங்கள் குருநாதரை மகரிஷி எனக் கூறுவார் களா?' எனக் கேட்டேன். நான் இவ்விதம் கூறவே, அவர் வியப்பை அடைந்தார். எனக்கு அந்தப் பெயர் எவ்விதம் தெரிந்த தென ஆவலுடன் கேட்டார். நான் அவரைப் பார்த்து, 'அதைப் பற்றி நீர் கவலைப்படவேண்டாம். நாம் இருவரும் அந்த மகரிஷி உள்ள இடத்துக்குச் செல்லுவதாக ஏற்பாடாகிவிட்டது. நான் எனது பிரயாணத்தை மாற்றிக்கொண்டுவிட்டேன்.' என்றேன். இதையெல்லாம் கேட்டு அவர் அளவு கடந்த மகிழ்ச்சி தெரிவித்தார். அதற்குப் பிறகு அரை மணிநேரம் நாங்களிருவரும் பேசிக்கொண்டிருந்தோம். இரவில் வெகு நேரம் சென்றுவிட்ட தாலும் நானும் மிகக் களைப்பு அடைந்திருந்ததாலும் இருவரும் படுக்கச் சென்றோம். அவர் தரையில் கிடந்த ஓர் ஓலைப் பாயின் மேல் படுத்துக்கொண்டு தாம் உடுத்திருந்த மெல்லிய துணியைப் போர்வையாகப் போர்த்துக்கொண்டார். ஜமக்காளம் விரிப்பு இவைகளை நான் அவருக்குக் கொடுத்தேன். அவைகளை அவர் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்."

"நான் சிறிது நேரம் தூங்கியிருப்பேன். பின்னர் எதிர் பாராதவாறு விழித்துக்கொண்டேன். நான் படுத்திருந்த அறை யில் ஒரே இருட்டு பரவியிருந்தது. அப்போது என் உடலிலுள்ள நரம்புகள் சற்று விரைப்படைந்து இழுப்பதுபோல ஓர் உணர்ச் சியை நான் அடைந்தேன்; என்னைச் சுற்றியுள்ள காற்றெல்லாம் மின்சாரம் பாய்ந்திருப்பதுபோல உணர்ந்தேன்; தலையணைக்குக் கீழிருந்த எனது கைக்கடியாரத்தை அப்பொழுது எடுத்துப் பார்த்தேன். ரேடியம் டயலுள்ள அந்தக் கடியாரம் இரண்டே முக்கால் மணியைக் காட்டிற்று. அப்பொழுது என் படுக்கையின் கால்மாட்டின் ஓரத்தில் ஓர் ஒளி தென்பட்டது. நான் உடனே எழுந்து உட்கார்ந்துகொண்டு, அந்த ஒளியைக் கவனித்தேன். மிகுந்த பரபரப்புடன் நோக்கிய என் பார்வையில், ஆசார்ய ஸ்வாமிகளின் உருவம் மிகவும் தெளிவாகக் காணப்பட்டது. அந்த உருவம் ஒரு பிசாசன்று; ஓர் மனித உருவம் தான் என்பதில் சந்தேகமில்லை. அந்த உருவத்தைச் சுற்றிலும் ஓர் ஒளி நிலவியது. பக்கத்திலிருந்த இருட்டும் இந்த ஒளியும் வேறுபட்டிருந்தன; உண்மையில் அது காணமுடியாத உருவம்தான்; ஆனாலும் செங் கல்பட்டில் அன்று நான் கண்ட உருவமே அது என்பதில் ஐய மில்லை. இதைப் பரீக்ஷித்துப் பார்த்துவிடலாமென்பதற்காக, நான் என் கண்களை இறுக மூடிக்கொண்டேன். அப்பொழுதும் அதே உருவம் முன்போலவே தென்பட்டது. கருணையையும் அன்பை யையும் என்னிடம் காட்டவே அந்த உருவம் அவ்விடம் வந்ததாக நான் தீர்மானித்துக் கொண்டேன். பிறகு என் கண்களைத் திறந்து பார்த்தபோது, காஷாயம் தரித்த அதே உருவத்தை மறுபடியும் கண்டேன். உதடுகளில் ஏற்பட்ட சிரிப்பினால் அவரது முகம் சற்று அசைந்தது. 'தாழ்மையுடன் இரு. நீ கோருவதை யெல்லாம் அடைவாய்' என்று சொன்னது போன்ற வார்த்தை களை என் காதுகள் உணர்ந்தன. அந்த வேளையில ஒரு மனித உருவம் என்னைப் பார்த்துப் பேசுவதுபோல நான் ஏன் உணர வேண்டும்? அதைப் பிசாசென நான் நினைத்துவிடலாகாதா? அந்த உருவம் எவ்விதம் தென்பட்டதோ அதுபோலவே மறைந்து விட்டது. அசாதாரணமான இந்த நிகழ்ச்சியில் நான் அமைதியை யும் பெருமையையும் மகிழ்ச்சியையும் அடைந்தேன். நான் இதை ஓர் கனவெனத் தள்ளிவிடலாமென்றாலோ, அவ்விதம் அதைத் தள்ளுவதற்கில்லை. அதன் பின்னர் அன்றிரவு எனக்குத் தூக்கமே

வரவில்லே. தென்னிந்திய மக்கள் கடவுள் அவதாரமாக மதிக்கும் கும்பகோணம் ஆசார்ய ஸ்வாமிகளிடம் அன்று பகலில் எனக்குக் கிடைத்த மறக்க முடியாத சந்திப்பைப் பற்றியே மிகுதி நேரத்தில் சிந்தனை செய்து கொண்டிருந்தேன்."

பஞ்சபூத க்ஷேத்திரங்களில் பிருதிவி க்ஷேத்திரமாக விளங்கும் காஞ்சிபுரத்திற்கு முதன் முதலாக ஸ்வாமிகள் (சென்ற பிரமோதூத வருடம் தை மாதம் 12-ந் தேதி ஞாயிற்றுக் கிழமை 25-1-1931) விஜயம் செய்தார்கள். அந் நகரில் சுமார் அறுபதுக்கு மேற்பட்ட தேவாலயங்கள் விளங்கிவருகின்றன. அங்குள்ள ஸ்ரீ ஏகாம்பரநாதரின் ஆலயத்தில் ஸ்ரீ காமாக்ஷி அம்பிகை தனது கைகளால் மண்ணைப் பிடித்து லிங்கமாக அமைத்து, அந்த லிங்கத்தைப் பூஜை செய்ததாகவும், அதனுல் அது பிருதிவி க்ஷேத்திரமாக விளங்கிவருகிறதென்றும் கூறப்படுகிறது. அந்த க்ஷேத்திரத்தின் மத்தியில்தான் காமாக்ஷி அம்மனது ஆலயமும் அமைந்துள்ளது காஞ்சிபுரத்திலுள்ள எந்தச் சிவாலயத்திற்கும் தனிமையாக அம்பாள் காணப்படவில்லே. காமாக்ஷி அம்மனே பரமசிவனை அடையத் தவக்கோலத்திலிருந்து அவ்விடமுள்ள எல்லாச் சிவாலயங்களுக்கும் அம்பிகையாக வீற்றிருக்கிருள். காஞ்சிபுரத்தில் உள்ள மற்ற எல்லா ஆலயங்களும் காமாக்ஷி அம்மன் ஆலயத்தின் திசையையே நோக்கி இருக்கும். மற்ற ஆலயங்களில் உத்ஸவங்கள் நடைபெறும்போதெல்லாம் எல்லா ஆலயங்களின் மூர்த்திகளும் காமாக்ஷி அம்மன் ஆலயத்தையே சுற்றி வருவது இன்றும் வழக்கமாக இருந்துவருகிறது. ஸ்ரீ ஆதிசங்கராசார்ய சுவாமிகள் காமாக்ஷி அம்பிகையின் ஆலயத்தில் ஸ்ரீ சக்ர பிரதிஷ்டை செய்துள்ளாரென முன் அத்தியாயம் ஒன்றில் கூறப்பட்டுள்ளது. மேலும் ஸ்ரீ ஆதி சங்கரர் காஞ்சியில் சர்வக்ஞ பீடம் ஏறி ஸ்ரீ காமாக்ஷி அம்மனின் ஆலயத்தில் உட்புறத்திலேயே சித்தி அடைந்ததாகவும் சரித்திர வாயிலாக அறிகிருேம். இன்றும் அந்த ஆலயத்தின் உட்புறத்தில் மனுஷ்ய ஆக்ருதி அளவில், ஸ்ரீ சங்கரரது சிலா விக்ரகம் காணப்படுகிறது.

காஞ்சிபுரத்திற்கு விஜயம்.

காமகோடி பீடத்தின் அதிஷ்டான ஸ்தலமாக விளங்கும் இந்தக் காஞ்சி நகருக்கு ஸ்வாமிகள் விஜயம் செய்வதை அவ்வூர்ப் பொது மக்கள் மிக ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். அவர்

களால் தக்க வரவேற்பும் ஸ்வாமிகளுக்கு அளிக்கப்பெற்றது; பெரிய காஞ்சீபுரத்திலுள்ள தமது மடத்தில் ஸ்வாமிகள் சுமார் ஒரு மாத காலத்திற்கு மேல் தங்கி இருந்தார்கள். அக்காலத்தில் அவர்கள் ஸ்ரீ வரதராஜர், ஸ்ரீ ஏகாம்பரேச்வரர் இவ்வாலயங்களை அடிக்கடி தரிசித்துக் கொண்டும், அநேகமாக ஒவ்வொரு நாளும் காமாக்ஷி அம்மனைத் தரிசித்தும் வந்தார்கள்.

காமாக்ஷி அம்மன் ஆலயத்தின் நிர்வாகம் பல நூற்றுண்டுகளாகக் காமகோடி பீடத்தின் பொதுவான மேற்பார்வையில் இருந்து வந்திருக்கிறது. சென்ற 1840 வருடம் அந்த ஆலயத்திற்குக் கும்பாபிஷேகத்தை அப்பொழுதிருந்த 64-ஆவது ஆசார்யர்களான ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் நடத்திவைத்தார்கள் ; அதற்கடுத்த வருடமே அந்த ஆலயத்தின் நிர்வாகத்தை மடத்தின் மேற்பார்வையில் ஆங்கில அரசாங்கத்தார் விட்டுவிட்டனர். நம் ஸ்வாமிகள் இந்தத் தேவஸ்தானத்தில் பற்பல சீர்திருத்தங்கள் செய்ய விரும்பி, சென்னை பெஸ்ட் அண்டு கம்பெனி துபாஷ் ஸ்ரீ டி. எஸ். ராமஸ்வாமி ஐயரவர்களை ஆலயத்தின் கௌரவ நிர்வாகியாக நியமனம் செய்தார்கள். அவர்களின் காலத்தில் ஆலய பூஜைகளைச் செய்பவர்கள் நல்ல ஒழுக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதையொட்டி பூஜைகிரமத்தில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பெற்றன. ஆலயத்தின் சில பகுதிகள் ஜீர்ணமடைந்திருந்ததை ஸ்வாமிகள் அக்காலத்தில் நேரில் கண்டு அவைகளைச் செப்பனிடும் திருப்பணியைக் கூடிய சீக்கிரம் மேற்கொள்ளவேண்டுமென்றும், சற்று ஏறக்குறைய 90 வருடங்களுக்கு முன் நடைபெற்ற மேற்படி ஆலயத்தின் கும்பாபிஷேகத்தைத் தமது காலத்திலே மற்றொருமுறை செய்து முடிக்கவேண்டுமென்றும் மடத்தின் நிர்வாகிகளிடமும் மற்றுமுள்ள சிஷ்யர்களிடமும் ஸ்வாமிகள் தெரிவித்தார்கள். அன்று முதலே மேற்படி ஆலயத் திருப்பணிக்கும் வேலைகள் துவக்கப்பட்டு திறமை வாய்ந்த அதிகாரிகள் மூலம் அவை நடைபெறத் தொடங்கின.

ஸ்வாமிகள் அவ்வருடம் ஏப்ரல் மாதம் முடிய பெரிய காஞ்சீபுரத்திலேயே முகாம் செய்திருந்தார்கள். பின்னர் அவர் உத்திரமேரூருக்கு விஜயம் செய்து அங்குள்ள ஆலயத்தின் சுவர்களில் பழைய காலத்து நீதி நிர்வாகத்தைப்பற்றியும் கிராம நிர்வாகத்தைப்பற்றியும் செதுக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களை வெகு

எளிதில் படித்து அங்குக் கூடியிருந்தவர்களுக்கு அதன் பொருள் களையும் விளக்கினர்கள். உத்திரமேரூர் சாஸனம் சரித்திரப் புகழ்பெற்ற தாகும். அந்தக் கல்வெட்டானது நாட்டில் ஜன நாயக ஆட்சி அக்காலத்தில் எவ்விதம் நடைபெற்று வந்ததென் பதை நன்கு விளக்குகிறது. அதன் பின்னர் செங்கற்பட்டு ஜில் லாவில் தென்பாகத்திலுள்ள வந்தவாசி, பாலூர், அச்சிறுபாக்கம், தென்னர்க்காடு ஜில்லா திண்டிவனம் தாலுக்காவிலுள்ள மரக் காணம், திண்டிவனம் ஆகிய இடங்களுக்கு அவர்கள் சென்று அவ் வவ்வூர்களின் பொதுமக்களின் விசேஷ அழைப்பிற்கிணங்க, இரண்டு மாதங்கள் வரையில் விஜய யாத்திரை செய்துவந்தார்கள். அப்பொழுது ஸ்வாமிகளிடம் விசேஷமான பக்தி கொண்டவரும், அவர்களின் தந்தையாரின் பழைய நண்பரும், குணம்பட்டு ஜமீந்தாருமான திவான்பகதூர் ஸி. அருணசல முதலியார் ஸ்வாமிகளின் யாத்திரையில் கூட இருந்து, மடத்திற்கு எவ்விதக் குறையுமில்லாமல் பணியாற்றிவந்தார்.

ஸ்ரீ பெரும்பூதூர் விஜயம்.

நம் ஸ்வாமிகள் செங்கற்பட்டு ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்கையில் ஸ்ரீராமானுஜர் அவதரித்த தலமாகிய ஸ்ரீ பெரும்பூதூருக்கு விஜயம் செய்து, அந்த க்ஷேத்திரத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ எதிராஜவல்லி சமேத ஸ்ரீஆதிகேசவப்பெருமாள் சந்நிதியைச் சேவித்தார்கள். தேவஸ்தானத்தின் அதிகாரிகளும், ஊர்ப் பொதுஜனங் களும் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு தேவஸ்தானத்தில் சடாரி முதலிய மரி யாதைகளைச் செய்து அவர்களை ஆலயத்தில் வரவேற்றார்கள். அந்த க்ஷேத்திரத்தின் மகிமையைப்பற்றி, ஸ்வாமிகள் அன்று உபந்யாசம் செய்துவிட்டு, புஷ்பதந்தர் என்னும் மகாகவி இயற்றிய சிவமஹிம்ன ஸ்தோத்திரத்திலிருந்து கீழே கண்டுள்ள சுலோகத்தை எடுத்துக்காட்டி மானிடர்கள் கடவுளை அடையப் பலமார்க்கங்களைக் கடைப்பிடித்திருந்தபோதிலும் அவ்வெல்லா வழிகளாலும் அடை யப்படும் பொருள் ஒன்றுதான் என்பதை எடுத்துக் கூறினர்கள்.

त्रयी सांख्यं योग: पशुपति मतम् वैष्णवमिति
प्रभिन्ने प्रस्थाने परमिदमद: पथ्यमिति च ।
रुचीनाम् वैचित्र्यया दृजुकुटिल नानापथजुषां
नृणामेको गम्यस्त्वमसि पयसा मर्णव इव ॥

மேலும் இந்தச் சுலோகத்தின் கருத்தை ஸ்ரீ ஸ்வாமிகள் விளக்கம் செய்கையில் வெவ்வேறு மத பேதங்களால் முடிவில் அடையப் படும் பொருள் ஒன்ருகவிருந்தாலும், மனிதர்கள் அவரவர்களது விருப்பத்திற்கிணங்க வேதாந்த மார்க்கம், சாங்க்யம், யோகம், பாசுபதம் என்னும் சைவமதம், வைஷ்ணவம், முதலான பற்பல மதங்களைக் கடைப்பிடித்து அவரவர்களுக்கு எது உயர்ந்ததெனத் தோன்றுகின்றதோ அதையே பெரிதெனக் கொண்டாடி வருகின்றனரென்றும், அவ்விதம் கொண்டாடி வருவதில் யாதொரு தவறுமில்லை யென்றும், ஆனல் பிற மதங்களைத் தூஷிக்காமலும், மதச் சண்டைகள் போட்டுக்கொள்ளாமலும், எவ்வழியில் சென்ருலும் முடிவு ஒன்ருகவிருக்கும் பரமாத்மாவை அடைவதே தங்களது லக்ஷியமென்பதை மனதில் கொண்டு தங்கள் மதத்தில் பற்றுடனும் நல்ல ஒழுக்கத்துடனும், ஒற்றுமையுடனும் வாழவேண்டுமென்றும் உபதேசித்தருளினர்கள். இந்தச் சுலோகத்தில் கவியானவர் தண்ணீருக்கும் மனிதனுக்கும் உவமை கூறி இருப்பதால் அந்த உவமையை விரித்துக் கூறும்பொழுது ஸ்வாமிகள் " தண்ணீரானது மலை போன்ற மேடான பிரதேசங்களில் உற்பத்தியாகிப் பாறைகளின் இடுக்குகளில் நுழைந்து, அவ்விடமிருந்து பள்ளங்களை அடையும்பொழுது அருவியாக மாறி, பெரிய சத்தத்துடன் மலைச்சரிவில் விழுந்து, பின்னர் சமவெளியை அடைந்து அமைவுடன் ஓர் பெரிய ஆருகி, பல கிளைகளாகப் பிரிந்து வயல்களில் பாய்ந்து, பல வகைகளில் மனிதனுக்கு உதவி புரிந்துவிட்டு, பின்னர் தண்ணீர் குறைவினல் சிறு ஆருக மாறி, கடலில் நுழைந்து சத்தம் ஒடுங்கி, தன் நிலை இழந்து, கடல் நீரில் ஒன்ருகக் கலந்து விடுவதுபோல், மனிதனும் குழந்தைப் பருவத்தில் வளர்ந்து, யௌவனம் எனப்படும் இளமைப் பருவத்தில் ஆசைகளாலும் அகங்காரத்தாலும் சத்தங்கள் செய்து, சம்சார வாழ்க்கையில் புகுந்து, பற்பல விதமாக அலைந்து முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளை ஒட்டிப் பற்பல கருமங்களைச் செய்து, இன்ப துன்பங்களை அனுபவித்து, முதிர்ந்த வயதில் ஓய்வடைந்து, அகங்காரத்தை அதாவது தான் என்னும் அகந்தையைப் போக்கி ஈசனது திருவடிகளில் மனஸை அர்ப்பணம் செய்து அவரது சொரூபத்தில் கலந்து, தன்னிலை மாறி அவருடன் ஒன்ருகிவிடுகின்ருன் " எனக் கூறினர்கள்.

இந்த உபந்யாசம் நடைபெற்றபொழுது சென்னையிலிருந்து பல பக்தர்கள் ஸ்வாமிகளைத் தரிசிக்க வந்திருந்தனர். ஆங்கிலம், வடமொழி, தமிழ் இவைகளில் நல்ல தேர்ச்சி பெற்றவரும், இரசிகத் தன்மை வாய்ந்தவருமான மயிலாப்பூர் வக்கீல் கே. பால சுப்பிரமணிய ஐயர் ஸ்வாமிகளின் திருவாக்கிலிருந்து வந்த இவ்வரிய உபதேச மொழிகளைக் குறிப்பெடுத்துக் கொண்டார். அக் குறிப்பை அவர் சென்ற 26-11-1931-ந் தேதியுள்ள ஆரிய தர்ம சஞ்சிகையில் வெளியிட்டுள்ளதை ஆதாரமாகக் கொண்டு இவ் விஷயம் இங்குத் தரப்பட்டுள்ளது.

ஸ்வாமிகள் செங்கற்பட்டு ஜில்லாவில் விஜய யாத்திரையை முடித்துக் கொண்டு வட ஆர்க்காடு ஜில்லாவிலுள்ள எசையனூர் என்னும் கிராமத்தில் சில நாட்கள் தங்கியிருந்தார்கள். அவ்வூரி லுள்ள கோகிலாம்பாள் என்னும் மாது சிரோ மணி பன்முறை ஸ்வாமிகளை அவ்விடத்திற்கு விஜயம் செய்யும்படி அழைத்து மடத்திற்கு விசேஷமாகக் கைங்கர்யம் செய்துவந்தார். எசையனூரிலிருந்து ஸ்வாமிகள் 1931-ஜுலை மாதம் 28-ந்தேதி சித்தூருக்கு விஜயமானார்கள். ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளின் மாம னாகிய நம்பிராசன் என்னும் வேடுவனது பட்டினமே இப்பொழுது சித்தூரென வழங்கப்படுகிறது. அதன் பக்கத்தில் வெள்ளிமலை என்ற சிறு குன்று அமைந்திருப்பதும், இதற்கு அத்தாக்ஷியாக இருக்கிறது. அக்குன்றின் பக்கத்தில் ஒரு சிவாலயமும், அவ்வால யத்தின் அருகே ஒரு நதியும் இருக்கின்றன. அந்நதிக்கு நீவா என்னும் பெயர் அமைந்துள்ளது. ஒரு காலத்தில் அந்த நதியா னது ஆலயத்திலிருந்து சற்றுதூரம் விலகியிருந்ததாகவும், ஒரு நாள் அர்ச்சகர் சிவபெருமானது அபிஷேகத்திற்காகத் தண்ணீர் கொண்டுவரச் சென்றபொழுது ஓர் அரக்கன் அவரைப் பயமுறுத்த, சுவாமி கருணையுடன் அந்த நதியை ஆலயத்தின் சமீபத்திற்கே வரும்படி தமிழ் மொழியில் ‘நீ வா’ என்று அழைத்ததாகவும், உடனே அந்த நதி ஆலயத்தின் பக்கத்திலேயே ஓடியதாகவும் வரலாறு கூறப்படுகிறது. அதனால் அந்த நதிக்கு நீவா என்ற பெயரையே சூட்டியிருக்கிறார்கள்.

சித்தூரில் வியாஸ பூஜை-சாதுர்மாத சங்கல்பம்.

சித்தூர் அகஸ்தீஸ்வர ஸ்வாமி ஆலயத்தின் முன்புறம் ஓர் பெரிய பந்தல் அமைக்கப் பெற்று, அதன் நடுவில் வியாச மண்ட

பத்தையும் அமைத்திருந்தார்கள். வியாஸ பூஜைக்கு முதல் நாள் ஸ்வாமிகள் அந்நகருக்குள் பிரவேசம் செய்தபொழுது ஊர்ஜனங்கள் ஆயிரக்கணக்காகக் கூடி, ஊரில் முக்கியமான வீதிகளின் வழியாகத் தந்தச் சிவிகையில் ஸ்வாமிகள் வந்த காட்சியைக் கண்டு களித்தார்கள். வியாஸ பூஜை அன்று மடத்தின் முத்ராதிகாரியான அந்துக்கூர் சுப்பிரமணிய சாஸ்திரிகளும், வக்கீல் ஸி. வெங்கட்ரமண அய்யரும் ஸ்வாமிகளைப் பூர்ண கும்பத்துடன் வரவேற்று வியாஸ பூஜா மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர். பூஜை ஆரம்பிப்பதற்கு வெகு நேரம் முன்னரே மண்டபத்தில் பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் கூடியிருந்தனர்.

மாலை நான்கு மணிக்குப் பூஜை முடிந்ததும், பக்தர்கள் எல்லோருக்கும் வியாஸ பிரசாதம் வினியோகம் செய்யப்பட்டது, ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி சென்னை மயிலாப்பூர் சமஸ்கிருத கலாசாலையின் அதிபர் வேதாந்த விபூஷணம் கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகள் அன்று வியாசரது வேதாந்த சூத்திரத்தை விளக்கம் செய்தார். மற்றும் அன்று அவ்விடம் கூடியிருந்த சாஸ்திர ரத்னாகரம் திருவையாறு விசுவநாத சாஸ்திரிகளும், போலகம் ராமா சாஸ்திரிகளும், வரகூர் வெங்கட்ராம சாஸ்திரிகளும், பக்ஷிதீர்த்தம் டி. ஏ. வெங்கடேச தீக்ஷிதரும், மதுரை கே. வி. சுப்பிரமணிய சாஸ்த்ரிகளும், மடம் ஆஸ்தான வித்வான் லக்ஷ்மி நாராயண சாஸ்த்ரிகளும், வாக்யார்த்த விளக்கத்தில் கலந்து கொண்டனர். ஸ்வாமிகளின் பேரில் பிரம்மஸ்ரீ வெங்கடேச்வர தீக்ஷிதர் தாம் இயற்றிய சமஸ்கிருத சுலோகங்கள் பதினைந்தையும் சபையில் வாசித்து அவைகளுக்குப் பொருளும் விளக்கிக் கூறினர். வெளி ஜில்லாக்களிலிருந்தும் தேவஸ்தானங்களிலிருந்தும் பிரதிநிதிகள் ஏராளமாகக் கூடி அன்று ஸ்வாமிகளைத் தரிசித்துக்கொண்டனர். அன்று சித்தூர் மிகவும் குதூகலத்துடன் விளங்கியது. எங்குப் பார்த்தாலும் ஸ்வாமிகளின் மகிமையைப் பற்றிய பேச்சுத்தான். ஸ்வாமிகள் சித்தூரில் இரண்டு மாதங்கள் தங்கிச் சாதுர்மாஸ விரதத்தைப் பூர்த்தி செய்துகொண்டார்கள். அந்நகரவாசிகள் எவ்விதக் குறைவுமின்றி ஒவ்வொரு நாளும் ஸ்வாமிகளுக்குப் பிக்ஷை பாதபூஜை இவைகளைச் செய்துவைத்தனர். சாதுர்மாஸம் முடிவுபெற்ற நாளாகிய 26-9-31-ந் தேதி சனிக்கிழமை, சந்திர கிரஹணத்திற்கு இரவில் நதியில் ஸ்நானம்

செய்துவிட்டு, விஸ்வரூப யாத்திரையின் பொருட்டு முருகன்பட்டுக்கு ஸ்வாமிகள் விஜயமானார்கள், அவ்வருஷத்து நவராத்திரி பூஜையைச் சித்தூரிலேயே நடத்தவேண்டுமென்று பக்தர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, 1931 அக்டோபர் மாதம் 12-ந் தேதி முதல், சித்தூரில் நவராத்திரி பூஜையை விசேஷமாக அவர்கள் நடத்தினார்கள். பின்னர் அக்டோபர் மாதம் முடிய ஸ்வாமிகள் சித்தூரிலேயே தங்கியிருந்தார்கள்.

சித்தூரிலிருந்து ஸ்வாமிகள் குடியாத்தத்திற்கு விஜயம் செய்து, பின்னர் வைத்தியநாதன் குப்பம், காட்பாடி வழியாக வேலூருக்கு விஜயம் செய்து, 1931-டிசம்பர் மாதம் 22-ந் தேதி வரை, வேலூர் தாரகேச்வரர் ஆலயத்தில் தங்கியிருந்தார்கள். ஸ்வாமிகளின் வரவில் மிகவும் குதூகலமடைந்த வேலூர் மக்கள், வக்கீல் கங்காதர சாஸ்திரிகள் தலைமையில் ஸ்வாமிகளுக்குப் பெரியதொரு வரவேற்பை அளித்து, நகரில் ஒரு ஊர்வலத்தையும் ஏற்பாடு செய்திருந்தனர். வக்கீல்கள், வியாபாரிகள், உத்யோகஸ்தர்கள் யாவரும் எவ்வித வேற்றுமையின்றி ஸ்வாமிகளை வரவேற்பதிலும், அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளைப் புரிவதிலும் மிகவும் ஊக்கம் எடுத்துக்கொண்டனர். மாலை வேளைகளில் ஸ்வாமிகள் செய்த பிரசங்கங்களைக் கேட்க ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். ஸ்வாமிகள் பின்னர் ஆருத்ரா தரிசனத்தை உத்தேசித்து எசையனூருக்குச் சென்று அவ்விடமிருந்து, ஆரணிமார்க்கமாகக் காஞ்சிபுரத்திற்கு விஜயமானார்கள்.

வேலூருக்கு விஜயம்

ஸ்வாமிகள் ஆரணியில் தங்கியிருந்தபொழுது சுமார் 200 பேருக்கு அதிகமாகவுள்ள காங்கிரஸ் தொண்டர் படை ஒன்று ஸ்வாமிகளைத் தரிசிக்கவேண்டுமென்று விரும்பியது. காங்கிரஸ் தொண்டர்களுக்கு அபயமளித்து, அவர்களுக்கு எவ்விதமான சிறிய உதவி செய்தாலும் அதை ஒரு பெரிய குற்றமாகக் கருதி அவ்விதம் உதவியவர்களைச் சர்க்கார் தண்டனைக்கும் உள்ளாக்கி வந்த காலம் அது. அதனால் மடத்தின் அதிகாரிகள் அவர்களை மடத்திற்குள் அனுமதிக்கத் தயங்கி, ஸ்வாமிகளிடம் இவ்விஷயத்தைத் தெரிவித்துக்கொண்டனர். ஸ்வாமிகள் அவர்கள் யாவரையும் மடத்தின் ஜாகைக்குள்

காங்கிரஸ் தொண்டர்களுக்குத் தரிசனமளித்தது.

அழைத்துவரும்படி மடத்தின் அதிகாரிக்கு உத்தரவிட்டார்கள். ஸ்வாமிகளின் அநுமதியின்படி அவர்கள் யாவரும் மடத்தின் ஜாகைக்குள் சென்று ஸ்வாமிகளையும் மடத்தின் அதிஷ்டான தெய்வங்களான ஸ்ரீசந்திரமௌளீஸ்வரர் திருபுர சுந்தரி அம்மனையும் தரிசித்துக்கொண்டனர். ஸ்வாமிகள், அவர்களில் ஒவ்வொருவரைப்பற்றியும் விசாரித்துவிட்டு அவர்களுக்கு விபூதி பிரசாதத்தையும் வழங்கினார்கள். அன்று அவர்கள் யாவருக்கும் மடத்திலேயே உணவு தயாரித்து அளிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சி ஊர் மக்கள் பலருக்கும் மடத்தின் சிப்பந்திகளுக்கும் சற்று கவலையையே அளித்தது. சர்க்காரிடமிருந்து ஏதாவது கேள்விகள் பிறந்து மடத்திற்கு ஏதாவது குறைவு ஏற்படுமோவென்று அவர்கள் பயந்தனர். ஆனால் ஸ்வாமிகள் அதைப்பற்றிச் சற்றும் கவலைகொள்ளவில்லை. காங்கிரஸ் தொண்டர்களானாலும், சர்க்கார் உத்தியோகஸ்தரானாலும் மடத்திற்குத் தரிசனத்திற்கென வருகிறவர்களை வித்தியாசமின்றி அநுக்கிரகிக்க வேண்டிய கடமையை ஸ்வாமிகள் மேற்கொண்டுள்ளார்களென பின்னர் அவர்கள் அறிந்து கொண்டு கவலை நீங்கினவர்களாக ஆனார்கள்.

1932 -ஆம் வருடம் மார்ச்சு மாதம் 5-ஆம் தேதியில் நிகழ்ந்த மகா சிவராத்திரிக்குக் காளஹஸ்தி க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்யவேண்டுமென்று ஸ்வாமிகள் விரும்பினார்கள். காஞ்சிபுரத்திலிருந்து திருப்பாற்கடல், வேப்பூர் மார்க்கமாக வேலூரை அடைந்து பிப்பிரவரி மாதம் 28-ஆம் தேதி சித்தூருக்கு விஜயம் செய்து, பாக்காலா மார்க்கமாகத் திருப்பதியில் ஒரு நாள் தங்கி காளஹஸ்திக்கு விஜயமானார்கள். அன்று ஸ்வாமிகள் சொர்ணமுகி ஆற்றில் நீராடிப் பெரியதொரு மாமரத்தின் அடியில் உட்கார்ந்து அடியார்களுக்குத் தரிசனம் அளித்த காட்சி தக்ஷிணாமூர்த்தியே உலகில் அவதரித்துக் காட்சி அளித்ததுபோல விளங்கிற்று. காளஹஸ்தி வாசிகள் கூட்டம்கூட்டமாக வந்து ஸ்வாமிகளைத் தரிசித்து, அவர்களை வரவேற்க அவசரமாக ஏற்பாடுகளைச் செய்தார்கள். எதிர்பாராதவாறு அந்த விசேஷ தினத்தில் ஸ்வாமிகள் அந்த க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்ததை மக்கள் யாவரும் மிகுந்த சந்தோஷத்துடன் கொண்டாடினார்கள். காளஹஸ்தி ராஜா, ஸ்வாமிகள் நீராடிய இடத்தில் சொர்ணமுகியின் கரையில்

மகா சிவராத்திரிக்குக் காளஹஸ்தி விஜயம்.

ஓர் பந்தல் அமைக்கச் செய்தார். அம்மன்னர் தமது பரிவாரங்களுடனும் தேவஸ்தான அதிகாரிகளுடனும் தேவஸ்தான மரியாதைகளுடனும் ஸ்வாமிகளைப் பூர்ண கும்பத்துடன் வரவேற்றுப் பெரியதொரு ஊர்வலத்தையும் ஏற்பாடு செய்தார். அன்று சிவராத்திரி தினமாதலால் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமாக ஜனங்கள் காளஹஸ்தியில் கூடியிருந்தனர். ஊரின் முக்கியமான வீதிகளின் வழியாக ஊர்வலம் சென்றது. ஊர்வலத்தின் மத்தியில் ஸ்வாமிகள் சிவிகையிலிருந்து இறங்கி, ஸ்ரீ காளஹஸ்தீச்வரரையும் ஞானகுசாம்பிகையையும் தரிசித்துக் கொண்டார்கள். பின்னர் ஸ்வாமிகள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கற்பக சத்திரத்தில் ஊர்வலம் முடிவடைந்தது. காளஹஸ்தி ராஜாவும் ஊர்வலத்தின் கூடவே வந்து சத்திரத்தில் ஸ்வாமிகளை இறக்கி அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டார். ஸ்வாமிகள் காளஹஸ்தியில் ஒரு வாரம் தங்கியிருந்தார்கள். அப்பொழுது அந்த க்ஷேத்திரத்திலுள்ள பரத்வாஜ தீர்த்தம், மயூர தீர்த்தம், மார்க்கண்டேய தீர்த்தம், பனஸகொனு, ஸகஸ்ரலிங்கேச்வரகொனு இவைகளில் நீராடினார்கள். சிவராத்திரி அமாவாசை அன்று ஸ்வாமிகள் அவ்வூர் ஆலயத்திற்குப் பக்கத்தில் அமைந்துள்ள கைலாசகிரி மலையைச் சுற்றிவர விரும்பவே, அவ்வூர் வாசிகள் மலைப்பாதைகள் சீராக இல்லை என்றும், பாதை இல்லாத மேடு பள்ளங்களையும் முட்புதர்களையும் கடந்து செல்ல வேண்டுமென்றும், சுமார் முப்பது மைல்கள் நடக்கவேண்டும் என்றும் கூறி அந்தக் கிரிப்பிரதக்ஷணம் செய்வதை நிறுத்திக் கொள்ளவேண்டுமென்றும் பலமுறை பிரார்த்தித்துக் கொண்டனர். ஆனால் எவ்வளவு கஷ்டமிருந்தபோதிலும் அந்த மலைமீது ஏறி அதை வலம் வருவதென ஸ்வாமிகள் தீர்மானம் செய்துகொண்டு விட்டார்கள். காலையில் சுமார் 9 மணிக்கு ஸ்வாமிகள் கால்நடையாகப் புறப்பட்டு பகல் முழுவதும் கடும் வெயிலில் மலையைக் கடந்து மாலை இருட்டுக்குள் கிரிப்பிரதக்ஷணத்தை முடித்துக் கொள்ள எண்ணியும், அன்றிரவு 12 மணி வரையில் அவர்கள் மலையில் நடக்கவேண்டியதாக ஏற்பட்டது. ஸ்வாமிகளுடன் சென்ற சுமார் 20 பேர்களும் வெயிலின் கடுமை தாங்கமாட்டாமல் தங்கள் உடுத்திருந்த துணிகளைக் கிழித்துக் கால்களில் சுற்றிக் கொண்டு நடக்கவேண்டியதாயிற்று. அவர்கள் யாவரும் மிகவும் களைப்படைந்தவர்களாகிவிட்டார்கள். ஸ்வாமிகளின் அடிப்

பாதத்திலும் சூடு தாங்கமாட்டாமல் பற்பல கொப்புளங்கள் காணப்பட்டன ; அன்றிரவு ஸ்வாமிகள் காளஹஸ்தியில் தமது ஜாகைக்குத் திரும்பிவர மணி ஒன்று ஆயிற்று. இவ்வளவு மன உறுதியுடன் ஸ்வாமிகள் செய்த அந்தக் கிரிப் பிரதக்ஷணத்தைக் கண்டு, அவ்வூர் வாசிகள் யாவரும் ஆச்சரியத்தை அடைந்தனர். காளஹஸ்தி ராஜா ஸ்வாமிகளைத் தம் அரண்மனைக்கு வரவேற்று, பாதபூஜை முதலான வந்தனை வழிபாடுகளைச் செய்து தமது அரண்மனையில் புனிதமாக வைக்கப்பட்டிருக்கும் பழைமையான தந்தத்தினால் செய்யப்பட்ட ஓர் சிம்மாசனத்தில் ஸ்வாமிகளை அமரச் செய்தார். அந்தச் சிம்மாஸனத்தில் ஸ்வாமிகளைப் போன்ற பெரியோர்களே அமருவது வழக்கம். முன் 1887-ஆவது வருடம் காமகோடி பீடத்தின் 65-ஆவது ஆசார்யர்களான ஸ்ரீ மகாதேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அந்தச் சிம்மாஸனத்தில் அமர்ந்திருந்த நிகழ்ச்சியை அந்த அரண்மனையில் வைக்கப்பட்டிருக்கும் குறிப்புக்கள் மூலம் அப்பொழுது யாவரும் தெரிந்துகொண்டனர்.

காளஹஸ்தி பஞ்சபூத க்ஷேத்திரங்களில் ஒன்று. இது வாயு க்ஷேத்திரம், இங்குக் கர்ப்ப கிரகத்தில் இருக்கும் தூண்டா மணி விளக்கின் தீப ஜோதி எப்பொழுதும் அசைந்தும் ஆடியும் கொண்டிருப்பதை ஞானிகள் குண்டலினி சக்தியின் நடனமெனக் கூறுவர். ஸ்வாமிகள் காளஹஸ்தியில் ஒரு வாரம் தங்கிவிட்டு மார்ச்சு மாதம் 13-ந் தேதி திருப்பதிக்கு விஜயமானார்கள்.

திருப்பதி விஜயம்.

திருப்பதியில் கிழக்கு எல்லையில் அமைந்துள்ள அங்காளம்மன் ஆலயத்தில் திருப்பதிப் பொது மக்களும் தேவஸ்தான அதிகாரிகளும், தேவஸ்தான மரியாதைகளுடன் ஸ்வாமிகளை வரவேற்றார்கள். மிகவும் நேர்மையுடன் புஷ்பத்தினால் அலங்கரிக்கப்பட்ட தந்தப் பல்லக்கில் ஸ்வாமிகள் வீற்றிருந்து வேதபாராயணம், பஜனை கோஷ்டி இவைகளுடன் ஜயகோஷங்கள் முழங்க, பல்லாயிரக்கணக்கான மக்கள் பின் தொடர்ந்து வரச் சென்ற அந்த ஊர்வலம் கோவிந்தராஜஸ்வாமி தேவஸ்தானத்தை அடைந்ததும் ஸ்வாமிகள் சிவிகையிலிருந்து இறங்கி ஸ்ரீ கோவிந்தராஜரை சேவித்துக்கொண்டார்கள். ஸ்வாமிகள் தங்குவதற்காக ராமஸ்வாமி ஆலயத்தின் முன்புறமுள்ள புஷ்பத் தோட்டத்தைத் திருப்பதி ஸ்ரீ மகந்த் அவர்கள் பிரத்யேகமாகச் சீர்படுத்தி வைத்திருந்தார்கள். ஸ்வாமிகள் புஷ்பத்

தோட்டத்தை அடைந்ததும், பிரும்மஸ்ரீ வேங்கடேச்வர தீக்ஷிதர் வடமொழியில் ஒரு வரவேற்புப் பத்திரத்தையும், நாகபூடி என். குப்புசாமி ஐயர் தெலுங்கில் ஒரு வரவேற்புப் பத்திரத்தையும் ஸ்வாமிகளுக்கு வாசித்தளித்தார்கள். அன்று மாலை ஸ்வாமிகள் சங்கர மடத்திற்கு விஜயம் செய்து, மடத்தின் முத்ராதிகாரி பிரும்மஸ்ரீ வேங்கடேச்வர தீக்ஷிதரால் செய்யப்பட்ட பாத பூஜையை ஏற்றுக்கொண்டார்கள். ஸ்வாமிகள் கீழைத் திருப்பதியில் 21-4-32 வரை மூன்று நாட்கள் தங்கியிருந்தார்கள். இந்த அவகாசத்தின் மத்தியில் ஸ்வாமிகள் மூன்று நாட்கள் திருமலைக்கு விஜயம் செய்து ஸ்ரீ வேங்கடேச்வர பெருமாளைத் தரிசனம் செய்து கொண்டார்கள். திருமலையில் தேவஸ்தான அதிகாரிகளும் பொது மக்களும் ஸ்வாமிகளுக்குப் பிக்ஷை, பாதபூஜை இவைகளைச் செய்து வைத்தார்கள். தேவஸ்தானத்தின் சார்பாக ஸ்வாமிகளின் பிக்ஷைக்கென விசாரணை கர்த்தா ரூபாய் 700 அளித்தார். வழக்கம்போலுள்ள மரியாதைகளை ஸ்வாமிகளுக்குத் தேவஸ்தானத்தார் செய்ததுடன், ஸ்வாமிகளுக்குப் பிரத்யேக மரியாதையைக் காட்டும் பொருட்டுத் தங்கக் கலசம் வைத்த குடை ஒன்றையும், பொன்னுடைகளையும், பெருமாளுக்கு அலங்கரிக்கப்பட்ட இருபத்தைந்து முழு நீளமுள்ள பீதாம்பரம் ஒன்றையும் வழங்கினார்கள். ஸ்ரீ வெங்கடேச்வரப் பெருமாளுக்கு ஸ்வாமிகள் விலையுயர்ந்த ரத்னங்கள் பதிக்கப்பெற்ற மகரகண்டி பதக்கமொன்றையும், பீதாம்பரம் ஒன்றையும் அளித்தார்கள்; மேலும் உண்டியில் பவுன் நாணயங்களையும், முத்து, பவழம், கோமேதகம், வைரம், வைடூரியம் இவைகளையும் சேர்த்தார்கள்; தவிர, ஸ்வாமிக்கு ஸகஸ்ரகலச அபிஷேகமும், சுக்கிர வார அபிஷேகமும், கருடோத்ஸவமும் நடத்திவைத்தார்கள். மகரகண்டி பதக்கம் சமர்ப்பித்ததற்கும் ஸகஸ்ர கலசாபிஷேகம் செய்ததற்கும் தேவஸ்தானத்திற்கு வழக்கமாகச் செலுத்தவேண்டிய காணிக்கையில் பாதித் தொகையையே தேவஸ்தான அதிகாரிகள் மடத்திலிருந்து வசூலித்துக்கொண்டனர். தேவஸ்தான அதிகாரிகளுக்கெல்லாம் ஸ்வாமிகள் வஸ்திரங்கள் கொடுத்து, அவர்களை ஆசீர்வதித்தார்கள். மற்றும் அர்ச்சகர்கள், தீர்த்தவாசிகள்: சிப்பந்திகள் இவர்களுக்கும் தக்க மரியாதைகளைச் செய்தார்கள். திருமலையில் ஸ்வாமிகள் தங்கியிருந்த 3 நாட்களிலும் பாபநாசம், ஆகாச கங்கை இவ்விரண்டு நீர்வீழ்ச்சிகளிலும் ஸ்வாமிகள் நீராடினார்கள். மலையிலிருந்து இறங்கும்பொழுது

பாதை நெடுகிலும் உட்கார்ந்திருக்கும் ஏழை மக்களுக்கு ஸ்வாமிகள் வஸ்திரங்களையும், நாணயங்களையும் அளித்தார்கள். கீழைத்திருப்பதியில் ஸ்வாமிகள் தங்கியிருந்தபொழுது ஸ்மார்த்த பிராம்மணர்களுடன், வைசியர்களும், பேரிவைசியர்களும், பலிஜா சமுகத்தினரும், ரெட்டி சமுகத்தினரும், மற்றும் கண்ட்லா சமுகத்தினரும் ஸ்வாமிகளுக்குப் பிக்ஷை, பாதபூஜை முதலானவைகளைச் செய்துவைத்தார்கள். ஸ்வாமிகள் திருப்பதியில் தங்கியிருந்த ஒவ்வொரு நாள் இரவிலும், அவர்கள் தெலுங்கு பாஷையில் எளிய நடையில் உபன்யாஸம் செய்து வந்ததை ஆயிரக்கணக்கான மக்கள் கேட்டுத் தங்களது அறிவைப் பெருக்கிக்கொண்டனர். ஸ்வாமிகள் திருப்பதியில் விஜயம் செய்திருப்பதை அறிந்த வெளி ஜில்லாக்களிலுள்ள மடத்தின் சிஷ்யர்கள் நூற்றுக்கணக்காகத் திருப்பதிக்கு வந்து ஸ்வாமிகளைத் தரிசனம் செய்து கொண்டார்கள். அப்பொழுது மடத்திற்கு வந்த பண்டிதர்களெல்லோருக்கும் சுவாமிகள் காஷ்மீர் சால்வைகளை அளித்து மரியாதை செய்தார்கள். திருப்பதியிலிருந்து ஸ்வாமிகள் 21-4-32-ந் தேதி வேங்கடகிரிக்கு விஜயமானார்கள்.

வேங்கடகிரிக்கு விஜயம் செய்தது.

வேங்கடகிரி மகாராஜாவின் அழைப்பிற்கிணங்க ஸ்வாமிகள் 24-4-32ல் வேங்கடகிரிக்கு விஜயம் செய்தபொழுது, அவ்வூரின் எல்லையில் தகுந்த மரியாதைகளுடன் ஊர் மக்களும் வேங்கடகிரி குமாரராஜாவும் வரவேற்றார்கள். அவ்வூரில் புதிதாய் தர்பா காளஹஸ்தி சாஸ்திரிகளால் கட்டப்பட்ட சங்கரமடத்தில் ஸ்வாமிகள் தங்கியிருந்தார்கள். அவ்வருடத்து சங்கர ஜயந்தியும் அந்த மடத்திலேயே நடைபெற்றது. வேங்கடகிரி ராஜபரம்பரையினர் ஸ்வாமிகள் அவ்விடம் தங்கியிருந்த ஒவ்வொரு நாளும் பிக்ஷை, பாதபூஜை முதலானவைகளைச் செய்துவைத்தார்கள். அரச குடும்பத்தினருக்கும் வித்வான்களுக்கும் பீதாம்பரம் சால்வை முதலான மரியாதைகளை ஸ்வாமிகள் அளித்துவிட்டு அவர்களை ஆசீர்வதித்து 11-5-32-ல் வேங்கடகிரியை விட்டுப் பிரயாணமானார்கள்.

கார்வேட்நகரத்திற்கு விஜயம்.

வேங்கடகிரியிலிருந்து ஸ்வாமிகள் பூடி, வடமல்பேட்டை, பதிரேடு, ஜோகுல மல்லவரம், புங்குனூர், இவ்வூர்களின் வழியாக மறுமுறை திருப்பதியை அடைந்து பௌர்ணமியன்று திருமலையில்

வெங்கடேச்வரப் பெருமாளைச் சேவித்துக்கொண்டு, இரண்டு நாட்கள் திருச்சானூரில் தங்கி பத்மாவதி அம்மனைத் தரிசனம் செய்துகொண்டு, மே மாதம் 22-ந் தேதி புத்தூரை அடைந்தார்கள். அவ்விடம் சுமார் பதினைந்து நாட்கள் தங்கியிருந்து, இயற்கை அழகு வாய்ந்த கைலாசகோனு, சதாசிவகோனு, அம்மவாருகோனு என்னும் நீர்வீழ்ச்சிகளில் நீராடினார்கள். ஸ்வாமிகள் புத்தூரில் தங்கியிருந்த பொழுது நகரிக்குச் சமீபமாக உள்ள புக்கை என்னும் தலத்திற்கு ஸ்வாமிகள் விஜயம் செய்யவேண்டுமென்றும், அவ்விடத்திலேயே அவ்வருடத்து வியாஸபூஜை சாதுர்மாஸ சங்கல்பத்தை நடத்தவேண்டுமென்றும் ஆனம் குப்புசாமி நாயுடு, ஜி. ரெங்கைய ரேட்டி முதலிய பிரமுகர்கள் ஸ்வாமிகளை வேண்டிக்கொண்டிருந்தனர். ஸ்வாமிகளும் அவர்களது வேண்டுகோளை அன்புடன் ஏற்றுக்கொண்டார்கள். ஸ்வாமிகள் 4-6-32-ந் தேதி கார்வேட் நகரத்திற்கு விஜயம் செய்து நான்கு நாட்கள் அவ்விடம் தங்கியிருந்தார்கள். கார்வேட் நகர ராஜா ஸ்வாமிகளுக்குத் தக்க வரவேற்பளித்து தமது லக்ஷ்மி விலாச அரண்மனையில் ஸ்வாமிகள் தங்க இடவசதி செய்துகொடுத்தார். அந்த ராஜாவும், அவரது குடும்பத்தினரும். மற்றும் அவ்வூர்ப் பொதுமக்களும் ஸ்வாமிகளுக்குப் பிக்ஷை, பாதபூஜை முதலியவைகளைச் செய்துவைத்தனர். கார்வேட்நகர் ராஜா ஸ்ரீ சந்திரமௌளீஸ்வரரின் அபிஷேகத்திற்கென் வெள்ளியினால் சகஸ்ரதாராப் பாத்திரம்-அதாவது ஆயிரம் துவாரங்களுள்ள ஓர் கிண்ணத்தைச் செய்து சமர்ப்பித்தார். ஸ்வாமிகள் ராஜாவிற்கும், அரண்மனைப் பண்டிதர்களுக்கும் சால்வைகள் வெகுமானம் செய்து அவர்களை அனுக்ரகித்தார்கள்.

தாயின் வியோகம்.

1932-ஆவது வருடம் ஸ்வாமிகள் சித்தூர் ஜில்லா நகரி என்னும் ஸ்தலத்தில் விஜயம் செய்திருந்தபொழுது ஒரு நாள் காலையில் மடத்தின் மானேஜருக்கு ஒரு தந்தி கிடைத்தது. அத்தந்தியின் சாரம் ஸ்வாமிகளின் தாயாராகிய மகாலக்ஷ்மி அம்மையார், ஆங்கிரஸ வருடம் ஆனி மாதம் 1-ந் தேதி (14-6-1932) ஜேஷ்ட சுக்ல ஏகாதசி அன்று, கும்பகோணத்தில் சிவபதம் அடைந்துவிட்டார்கள் என்பதேயாகும். ஏகாதசியன்று மரணமும், துவாதசியன்று தகனமும் கிடைப்பது ஓர் பெரிய புண்ணியமென்று பெரியோர்கள் கூறுவர். உலக ஆசார்யரைப் பெற்றெடுத்த அந்த அம்மையாருக்கு இப்பெரும் புண்ணியம் கிடைத்ததில் யாதொரு ஆச்சரியமுமில்லை.

இத் தந்தி கிடைத்தபொழுது ஸ்வாமிகள் பண்டிதர்களின் நடுவில் வேதாந்த விசாரம் செய்து கொண்டிருந்தார்கள். மடத்தின் நிர்வாகி இத் தந்தியைக் கையிலேந்தி ஸ்வாமிகள் வீற்றிருந்த இடத்தை நோக்கி வந்துகொண்டிருந்தபோதே, ஸ்வாமிகள் அவரிடம், 'அந்தத் தந்தி கும்பகோணத்திலிருந்து வந்ததா ?' எனக் கேட்க, நிர்வாகி, ஸ்வாமிகளின் கேள்விக்குப் பதிலாக 'ஆம்' எனக் கூறவே, எவரிடமும் மேலே எதுவும் கேட்காமல், அவரைத் திரும்பிப் போகும்படி அவர்கள் கட்டளையிட்டார்கள். அதன்பின் ஸ்வாமிகள் சில விநாடிகள் மௌனமாக இருந்தார்கள். அங்குக் கூடியிருந்த பண்டிதர்களுக்குத் தந்தியின் விபரம் யாதும் விளங்கவில்லை. அந்தத் தந்தியைப்பற்றிய தகவலை அவர்கள் தெரிந்து கொள்ள ஆவலுள்ளவர்களாக இருந்தபோதிலும், ஸ்வாமிகளின் வாக்கினின்று எதுவும் வெளிவராத நிலையில் அவர்களும் மௌனமாகவே இருந்தார்கள். சற்றுநேரத்திற்கெல்லாம் ஸ்வாமிகள் அந்தப் பண்டிதர்களை நோக்கி, 'தாயாரின் வியோகத்தைக் கேட்ட சந்நியாசி உடனே செய்ய வேண்டுவதென்ன ?' எனக் கேட்டார்கள். அங்குக் கூடியிருந்த பண்டிதர்கள் தர்ம சாஸ்திரங்களில் நன்கு தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தும், விஷயத்தை ஒருவாறு ஊகித்தவர்களாகி, மனக்கிலேசத்தை அடைந்து, எதையும் உரைக்கத் தோன்றுதவர்களாய் மௌனம் சாதித்தனர். ஸ்வாமிகள் அப்பொழுது தாம் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்திருந்து, அவ்விடமிருந்து சுமார் இரண்டு மைல் தூரத்திலுள்ள ஒரு நீர் வீழ்ச்சியை நோக்கிப் புறப்பட்டார்கள். இந்தத் துக்ககரமான சம்பவத்தை அறிந்த பண்டிதர்களும், ஸ்வாமிகளைப் பின் தொடர்ந்து சென்றனர். இந்தச் செய்தி வெகு சீக்கிரத்தில் அந்த ஊர் மக்களுக்கும் ஸ்வாமிகளைத் தரிசிக்க வெளியூர்களிலிருந்து வந்தவர்களுக்கும் எட்டிவிடவே பெரியோர்கள், ஆண், பெண், குழந்தைகள் ஈருக எல்லோரும் ஸ்வாமிகளைப் பின் தொடர்ந்து சென்றனர். ஸ்வாமிகள் முன்னுல் மௌனமாக நடந்து செல்ல, மற்றவர்கள் பகவன் நாமாக்களை உச்சரித்தவாறு பின் சென்றனர். நாம உச்சரிப்பைத் தவிர வேறு எந்தப் பேச்சும் அப்பொழுது கேட்கவில்லை. பலர் உள்ளம் உருகிக் கண்ணீர் விடுத்தனர் ஸ்வாமிகளின் தாயார் உலகத்திற்கெல்லாம் தாயாரே என்ற எண்ணம் அவர்கள் மனங்களில் உதித்தது. யாவரும் உணர்ச்சி மிகுந்தவர்களாகக் காணப்பட்டனர். ஸ்வாமிகள் நீர்வீழ்ச்சியில் ஸ்நானம் செய்தவுடன் பின்

தொடர்ந்து வந்த கூட்டத்திலுள்ளவர்களும் அமைதியுடன் ஸ்நானம் செய்தனர். மடத்தின் அதிகாரிகள் வேதம் ஓதும் அந்தணர்களுக்குப் பொற்காசுகளையும் வெள்ளிக்காசுகளையும் தானமாக அளித்தார்கள். அந்த அம்மையார் இறந்த பத்தாவது நாளன்று கும்பகோணம் மடத்தில் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு அன்ன தானம் அளிக்கப்பட்டது.

புக்கையில் வியாச பூஜையும், சங்கர ஆலய பிரதிஷ்டையும்.

புக்கை என்னும் க்ஷேத்திரம் நகரியிலிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ளது. அங்குள்ள கோயிலுள் ஒரே பிராகாரத்திற்குள் காசிவிசுவநாதர் ஆலயமும் பிரயாகை மாதவர் ஆலயமும் அமைந்து சிவவிஷ்ணு அபேதத்தை விளக்கக்கூடியஸ்தலமாகஅக்கோயில் அமைந்திருக்கிறது. அந்த ஆலயத்தை ஒட்டினாற்போல குசஸ்தலி என்னும் ஜீவநதி ஓடுகிறது. அந்நதியின் கரையில் பஞ்ச கங்கை என்று கூறப்படும் ஐந்து அருவிகள் எப்பொழுதுமே தண்ணீரைச் சொரிந்து கொண்டு இருக்கின்றன. அந்தத் தண்ணீர் அவ்வாலயத்திலுள்ள மூர்த்திகளின் கீழ்ப் புறத்தில் உற்பத்தியாகி இவ்விதம் அருவிகளாக விழுகின்றன எனக் கூறுகின்றார்கள். இவ்வித இயற்கை அழகு பெற்ற புண்ணிய க்ஷேத்திரத்தில் வியாஸபூஜையை நடத்தி அவ்விடத்திலேயே இரண்டு மாதங்கள் தங்கியிருப்பது ஸ்வாமிகளுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தரக்கூடியதாகவிருந்தது. 1932–ம் வருடம் ஜுலை மாதம் 17-ந் தேதி புக்கையில் வியாஸபூஜை மிகவும் விமரிசையாய் நடைபெற்றது. வழக்கம் போல் பண்டிதர்களும் ஆயிரக்கணக்கில் பக்தர்களும் அன்று அவ்விடம் கூடி ஸ்வாமிகளைத் தரிசித்துக் கொண்டனர். அத்தலத்தில் வியாஸபூஜை நடை பெற்ற நினைவாக, அங்கிருந்த அன்பர்கள் வியாஸ தீர்த்தம் எனப் பெயரிட்டு ஓர் கிணற்றை அமைத்துள்ளார்கள். ஸ்வாமிகள் புக்கையில் தங்கியிருந்த காலத்தில் ஸ்ரீகாசி விசுவநாதர் ஆலயத்திற்கும் ஸ்ரீ பிரயாக மாதவஸ்வாமி ஆலயத்திற்கும் ஜீர்ணோத்தாரணம் செய்து 11-9-32-ல் கும்பாபிஷேகமும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கும்பாபிஷேகத்திற்கெனப் பல்லாயிரக்கணக்கான மக்கள் சித்தூர் ஜில்லாவிலிருந்தும், மற்றும் வெளி ஜில்லாக்களிலிருந்தும் சென்னை நகரத்திலிருந்தும் வந்து குவிந்தனர். எம். எஸ். எம். ரயில்வே அதிகாரிகள் பொது மக்களின் நன்மையை முன்னிட்டுச் சென்னையிலிருந்து பிரத்யேக

ரயில்கள் விட ஏற்பாடு செய்திருந்தனர். கும்பாபிஷேகத்திற்கு வந்திருந்த மக்கள் யாவருக்கும் அன்னதானம் அளிக்கக் கும்பாபிஷேகக் கமிட்டியார் சிறந்த முறையில் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஸ்வாமிகளின் மேற்பார்வையில் இந்த வைபவங்களெல்லாம் மிகவும் மேன்மையாக நடைபெற்றன. அச்சமயம் கும்பாபிஷேகத்திற்கு ஆக வேண்டிய பணிகளையெல்லாம் ஆனம் குப்புசாமி நாயுடு, பா. மாணிக்க நாயுடு, குண்டாரெட்டி, ரேங்கையரெட்டி, பி. கிருஷ்ணசாமி அய்யர் முதலானவர்கள் சலியா உழைப்புடன் செய்துகொடுத்தனர். சாதுர்மாஸ சங்கல்பம் முடிந்தவுடன் சென்னை நகரவாசிகளின் பிரார்த்தனைக்கிணங்கி ஸ்வாமிகள் சென்னைக்குப் பயணமானார்கள். வழியில் திருத்தணியில் தங்கி ஸ்ரீ சுப்பிரமண்ய ஸ்வாமியையும் தரிசித்துக்கொண்டார்கள்.

சித்தூர் ஜில்லாவின் பெருமையும் ஸ்ரீ வேங்கடேச தத்துவமும்.

சித்தூர் ஜில்லாவை விட்டுப் புறப்படு முன்னர் ஸ்வாமிகள் அந்த ஜில்லாவின் அழகையும் புனிதத்தன்மையையும் வர்ணித்து ஓர் உபந்யாஸம் செய்தார்கள். அதில் அந்த ஜில்லாவில் திருப்பதியில் ஸ்ரீ வேங்கடேச்வரரும், காளஹஸ்தியில் ஸ்ரீ காளஹஸ்தீச்வரரும் அமைந்திருப்பதுடன், திருத்தணியில் ஸ்ரீசுப்பிரமண்யர் ஆலயம் அமைந்திருப்பதும் ஒரு விசேஷமென்றும், தவிர, சதாசிவக் கோனா, கைலாசக் கோனா, அம்மவாரி கோனா என்னும் நீர்வீழ்ச்சிகளும் அங்கு அமைந்திருக்கின்றனவென்றும், வடக்கே பதரிவனம், காசிஸ்தலம், கைலாச பர்வதம், மகா மேரு இவைகள் உள்ளன போலச் சித்தூர் ஜில்லாவில் நாராயண வனம், காசிவிச்வநாதர் ஆலயம், பஞ்சகங்கை, பிரயாக மாதவ ஆலயம் இவைகள் அமைந்திருக்கின்றன என்றும், இவைகளெல்லாம் இந்த ஜில்லாவின் பெருமையைக் குறிக்கின்றன என்றும். திருப்பதியில் விளங்கும் ஸ்ரீ வேங்கடேச்வரர் சுப்பிரமண்யம், சிவன், சக்தி, விஷ்ணு, இவர்களுடைய ஸ்வரூபத்தைக் கொண்ட ஒரு மூர்த்தியேயென்றும், மலையில் அமர்ந்து பாலாஜி என்று பெயர் பெற்றிருப்பதால், அந்தக் கடவுளைப் பால சுப்பிரமண்யரெனக் கூறலாமென்றும், அந்த மூர்த்தியின் தலையில் சிவச் சின்னத்தை விளக்கும் ஜடையும், நாகமும் காணப்படுகின்றன வென்றும், ஒவ்வொரு நாளும் அந்த மூர்த்திக்குப் பில்வ அர்ச்சனை நடைபெறுகின்றதென்றும். அதனால் அவர் சிவ வடிவமாகவும் காட்சியளிக்கின்றார்

என்றும், கிரீடத்தில் ஸ்ரீசக்ரம் காணப்படுவதாலும், வெளிப் பிரா காரத்தில் சுவர்களின் மேல் சிம்ம உருவங்கள் காணப்படுவதாலும், அவை அம்பிகையின் சின்னமாகயிருக்கின்றனவென்றும், சங்கு, சக்கரம், கிரீடம் இவைகள் காணப்படுவதால் அவை விஷ்ணுவின் அம்சத்தைக் குறிப்பிடுகிறதென்றும் கூறினார்கள். மேலும் ஸ்வாமி கள் கூறுகையில் சிவ விஷ்ணு சர்ச்சைகளெல்லாம் பிற்காலத்தில் எழுந்தவைகளென்றும், உபநிஷதங்களில் இவ்விதப் பாகுபாடு எதுவும் விவரிக்கப்பட வில்லையென்றும், மாண்டுக்ய உபநிஷத்தில் ஓர் இடத்தில் மாத்திரம் சிவன் என்னும் சொல்லையும், கடோப நிஷத்தில் ஓர் இடத்தில் விஷ்ணு என்னும் சொல்லையும் காண கிறோமென்றும், அவ்விரு சொற்களுக்கும் மங்களம் என்னும் பொருளே பொருந்துமென்றும், ஆகையால் பக்தர்கள் யாவரும் சிவ விஷ்ணு அபேதத்திற்குச் சாக்ஷியாக நிற்கும் ஸ்ரீ வெங்கடேச் வரப் பெருமாளை என்றும் வணங்கி அவரது அருளுக்குப் பாத்திரர் களாக வேண்டுமென்றும் அருள்மொழி பொழிந்தார்கள்.

ஒரு நாயின் அறிவும் பக்தியும்.

1927-ஆம் வருடம் முதல் மடத்தின் முகாமுடன் நாய் ஒன்று வந்துகொண்டிருந்தது. அது நல்ல அறிவு படைத்த நாய். அசுத்தங்களை அது தொடுவதில்லை. அது மடம் முகாம் செய்யும் இடங்களிலெல்லாம் தங்கி, இரவில் மடத் தின் கால்நடைகளையும், சாமான்களையும் திருடர்கள் எடுத்துப் போகாமல் பாதுகாத்து வரும். அது வழக்கம்போல் மடத்திலிருந்து போடப்படும் அன் னத்தை உட்கொள்ளுமே ஒழிய, வேறு யாராவது கொடுக்கும் எந்தவித உணவையும் அது உட்கொள்ளுவதில்லை. அதனால் ஸ்வாமி கள் ஒவ்வொரு நாளும் மாலையில் புன்முறுவல் செய்துகொண்டே, 'நாய்க்கு ஆகாரம் கொடுத்தாகிவிட்டதா?' எனக் கேட்பார்கள். ஸ்வாமிகள் பல்லக்கில் ஆரோகணம் செய்துகொண்டு, ஓர் ஊரி லிருந்து மற்றொரு ஊர் போகும்போது, இந்த நாய் பல்லக்கின் கீழேயே போய்க்கொண்டிருக்கும். நடுவில் ஏதாவது ஓர் ஊரில் பக்தர்களுக்குச் சேவை அளிக்கப் பல்லக்கு நிறுத்தப்பட்டால், இந்த நாய் வெகு தூரத்தில் போய் நின்றுவிடும். சில சமயம் சாலைகளில் நடந்து செல்லும் மடத்தின் யானையின் நான்கு கால் களின் நடுவில் அது சென்றுகொண்டே யிருக்கும். நீராடி விபூதி தரித்துத் தூய்மையுடன் ஸ்வாமிகளைத் தரிசிக்க வருபவர்களைக்

கண்டால் வாலைக்குழைத்துக் கொண்டு அது தூரத்தில் விலகி நிற்கும். மடத்தின் காவற்காரர்கள் சற்று அயர்ந்திருந்தால், அவர்களுக்காக அது மடத்தில் காவல் காக்கும். மடத்திலிருந்து வழக்கமாக அன்னமிடுகிறவர் ஒரு நாள் அன்னமிட மறந்துவிட்டால் அன்று அது பட்டினியே கிடக்கும். அந்த நாயை ஒரு நாள் ஒரு சிறுவன் கல்லால் அடிக்க, அது குரைத்துக்கொண்டு அவனைக் கடிக்க வரவே, மடத்தின் அதிகாரிகள் பயந்து, அந்த நாயின் கண்களை மறைத்து இருபத்தைந்து மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்தில் அதைக்கொண்டு போய்விட்டுக் கயிற்றினால் கட்டி வைக்கும்படி செய்து வந்துவிட்டார்கள். ஸ்வாமிகளை விட்டுப் பிரிந்த அந்த நாய் எந்தவிதமோ கயிற்றிலிருந்து விடுபட்டுக்கொண்டு, தன்னைக் கொண்டுவந்து விட்டவன் ஊர் போய்ச் சேரும் முன்னரே வேறு பாதையின் வழியாக நடந்து ஸ்வாமிகளின் முகாமுக்கு ஓடிவந்து விட்டது. அன்றுமுதல் அது உயிர் வாழ்ந்தவரை ஸ்வாமிகளைத் தரிசிக்காமல் ஆகாரம் உட்கொள்ளுவதில்லை. மடத்திற்குத் தரிசனத்திற்கு வரும் பக்தர்களெல்லாம் இந்த நாயையும் பார்த்துவிட்டுச் செல்வார்கள்.

ஸ்வாமிகள் சென்னையை நோக்கி யாத்திரை செய்யப் புறப்பட்ட செய்தியை முன்பு கூறினோம். சென்னை போன்ற பெரிய நகரங்களில் தம் ஸ்நானத்திற்கும், பூஜைக்கும் வேண்டிய வசதிகள் குறைவாக இருக்குமென்ற காரணத்தினால், ஸ்வாமிகள் அது போன்ற இடங்களில் அதிகக் காலம் தங்க விரும்புவதில்லை. அதே காரணத்தினால் சென்ற 1930-ஆம் வருடம் டிசம்பர் மாதத்தில் ஸ்வாமிகள் சென்னையைச் சார்ந்த கோயம்பேடு வரை விஜயம்செய்திருந்த போதிலும், நகரத்திற்குள் பிரவேசிக்காமல் இருந்துவிட்டார்கள். சென்னை வாசிகளான அடியார்கள் பலர் ஸ்வாமிகள் புக்கையில் தங்கியிருந்தபொழுது அவ்விடம் சென்று, ஸ்வாமிகள் சென்னை நகரத்திற்கு வந்து இரண்டொரு மாதங்களாவது தங்கியிருக்கவேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டார்கள். அவர்களும் அதற்கொருவாறு இணங்கிப் புக்கையில் சாதுர்மாஸ்யம் முடிந்தவுடன், அவ்விடமிருந்து திருத்தணி மார்க்கமாக 28-9-32-ல் சென்னை நகருக்கு விஜயமானார்கள். ஸ்வாமிகளின் வரவை எதிர்பார்த்து, அன்று மாலை ஆயிரக்கணக்கான ஜனங்கள் பூர்ண

ஸ்வாமிகள் சென்னைக்கு விஜயம் செய்தது.

கும்பங்களுடனும், மாலைகளுடனும் மயிலாப்பூர் லஸ் சர்ச் ரோட்டிலும்,மௌபரிஸ் ரோட்டிலும் கூட்டங்கூட்டமாகக் காத்திருந்தார்கள். ஸ்வாமிகள் சுமார் இரவு எட்டரை மணிக்கு அங்கு விஜயம் செய்தவுடன், முதலில் வரவேற்புக் கமிட்டியின் சார்பாக, கே. பாலசுப்ரமண்ய ஐயர், மற்றும் சென்னை கார்ப்பரேஷன் தலைவர் T. S. ராமஸ்வாமி ஐயர் முதலானவர்கள் ஸ்வாமிகளுக்குப் பூர்ண கும்பம் அளித்து, ஊர்வலமாக வரவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டார்கள். ஓர் பெரிய ஊர்வலத்திற்கு முன்னரே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஸ்வாமிகள் புஷ்ப அலங்காரம் செய்யப்பெற்றிருந்த தந்தச் சிவிகையில் ஆரோகணித்துக் கொண்டு, இரவைப் பகலாக்கும் எண்ணிறந்த காந்த விளக்குகளின் ஜோதியில் பக்தர்களுக்குக் காட்சியளித்ததை அன்று கண்டவர்கள் என்றும் மறக்க முடியாது. வேதம் ஓதும் அந்தணர்கள், வரிசை வரிசையாக நின்று வேத கோஷங்களை ஒருபுறம் ஒலிக்கச் செய்தனர்; இசையுடன் ஈசனைப் பாடிப் பழகிய அடியார்கள் இன்னிசை வாத்தியங்களுடன் ஒருபுறம் பஜனை செய்தனர்; இவைகளைத் தவிர நாற்புறமும் பக்தர்களின் ஜய கோஷங்கள். அப்பொழுது அங்குக் கூடியிருந்தவர்களின் கண்களும் மனமும் ஜோதிர்மயமாய் விளங்கிய ஸ்வாமிகளின் திருமேனியிலேயே லயித்திருந்தனவென்றால் அது மிகையாகாது. ஸ்வாமிகள் தமது புன்முறுவலால் எல்லோரையும் அனுக்கிரகித்தார்கள். நெருங்கிப் பழகிய சிலருடன் இரண்டொரு வார்த்தைகளைக் கூறி அவர்களை மகிழ்விக்கச் செய்தார்கள். மயிலாப்பூர் சமஸ்கிருத கலாசாலையில் ஸ்வாமிகள் தங்குவதற்கென விசாலமான கொட்டகைகள் போடப்பட்டும், இதர வசதிகள் செய்யப்பட்டும் இருந்தன. ஸ்வாமிகள் ஜாகைக்கு வந்து தங்கியவுடன் சமஸ்கிருதத்திலும், தெலுங்கிலும், தமிழிலும் அவர்களுக்கு வரவேற்புப் பத்திரங்கள் வாசித்து அளிக்கப்பட்டன. அன்றிரவு ஸ்வாமிகள் சிவபக்தியின் பெருமையையும், அவ்வூரில் எழுந்தருளியிருக்கும் கபாலீச்வரர் மகிமையையும் பற்றிச் சிறிது நேரம் பக்தர்களுக்கு உபதேசித்தருளினார்கள். சென்னைக்கு ஸ்வாமிகள் விஜயம் செய்ததை முன்னிட்டு ஸ்வாமிகளின் பக்தர்களில் ஒருவரான ஏ. கே. ரங்கநாதய்யர் அடுத்த நாளாகிய 29-ந் தேதி 3000 ஏழைகளுக்கு அன்னதானமும் வஸ்திர தானமும் செய்தார்.

ஸ்ரீ ஸ்வாமிகள் சென்னைக்கு விஜயம் செய்யும் முன்னர் சென்னைக் கார்ப்பொரேஷனில் ஸ்வாமிகளுக்கு நகர மக்களின் சார்பாக வரவேற்பளித்து ஓர் உபசாரப் பத்திரத்தை வாசித்து அளிப்பதென்றும், அதற்காக ரூபாய் 300 செலவிடுவதென்றும் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்தத் தீர்மானத்தை ஸர். ஏ. ராமசாமி முதலியார் பிரேரேபித்துப் பேசுகையில், ஓர் மதத் தலைவருக்குக் கார்ப்பொரேஷன் வரவேற்பளிப்பது அதுவே முதல் தடவையென்றும், நம் ஸ்வாமிகள் இந்துக்கள் மாத்திரமல்லாமல் பிற மதத்தினருடைய மதிப்பிற்கும் பாத்திரர்களாக விளங்குகிறார்களென்றும், அப்பெரியாருக்கு வரவேற்பளிக்கும் ஓர் தீர்மானம் விவாதம் ஒன்றுமில்லாமலேயே அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். அதன்படியே எவ்வித விவாதமுமில்லாமலேயே தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. ஆயினும், ஸ்வாமிகள் கார்ப்பரேஷன் கட்டிடத்திற்குச் சென்று லௌகிக சம்பிரதாயத்துடன் கூடிய அந்த வரவேற்பை நேரில் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில், கார்ப்பொரேஷனுக்கு ஸ்வாமிகள் தமது நன்றியை மடத்தின் அதிகாரிகள் மூலம் தெரிவித்து விட்டார்கள்.

ஸ்வாமிகளுக்கு வரவேற்பளிக்கச் சென்னைக் கார்ப்பொரேஷன் நிறைவேற்றிய தீர்மானம்.

ஒன்பது இரவுகளைக் குறிப்பதே நவராத்திரி யாகும். நவராத்திரி பூஜையானது ஒவ்வொரு வருடத்திலும் மடத்தில் மிகவும் விசேஷமாகக் கொண்டாடப்படும். சரத் காலத்தில் வரும் நவராத்திரி யாதலால் இதற்கு சாரத நவராத்திரி யென பெயர் வழங்குகிறது. வஸந்த காலத்தில் வரும் நவராத்திரியிலும் தேவி பக்தர்கள் விசேஷ பூஜைகளைச் செய்வதுண்டு. இதற்கு வஸந்த நவராத்திரி என்றும் பெயருண்டு. சரத் காலத்தில் பாரத பூமி முழுவதும் சற்றேறக்குறைய ஒரே சீதோஷ்ண நிலைமை அடைந்திருக்கும். சாந்திரமான ரீதியாக ஆச்விஜ மாதம் சுக்கில பக்ஷத்தில், அதாவது புரட்டாசி மாதம் வளர்பிறையில், முதல் நாள் தொடங்கி 9 நாட்கள் இந்தப் பூஜை நமது பாரத தேச முழுவதும் பராசக்தியைக் குறித்து நடைபெறுகிறது. தேவியை அதிகமாக வழிபடும் வங்காளத்தில் இந்தப் பூஜையை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

சென்னையில் நவராத்திரி பூஜை.

அவ்வருடம் அக்டோபர் மாதம் 1-ந் தேதியில் சென்னையில் நவ ராத்திரி பூஜை ஆரம்பமாயிற்று. பூஜை தொடங்கும் நாள் முதல் 9 நாட்களும் ஸ்வாமிகள் மௌனத்தை மேற்கொள்ளுவார்கள். 10-ஆவது நாளாகிய விஜயதசமி அன்றுதான் ஸ்வாமிகளின் மௌனம் நீங்கும். அந்த நாள்களில் ஸ்வாமிகள் ஆகாரம் எதையும் அருந்துவதில்லை. இரவும் பகலும் தேவியின் பூஜையி லேயே ஈடுபட்டிருப்பார்கள். ஏராளமான பக்தர்கள் ஸ்வாமி களின் தரிசனத்திற்காகவும், அவர்கள் செய்யும் விசேஷ பூஜையைக் காணவும் மடத்திற்கு வந்து கூடுவார்கள். ஸ்வாமிகள் அம்பி கைக்குச் செய்யும் அபிஷேக தீர்த்தத்தைக் கொண்டு ஸ்நானம் செய்வோருக்கு வியாதிகள் நீங்கும், பெண் மக்களுக்கு ஏற்படும் சங்காதோஷம் என்னும் கெடுதிகளும் அவர்களை விட்டகலும். மேலும் அவர்கள் நல்ல அறிவையும் எல்லா பாக்யங்களையும் பெறுவார்கள் என்பது பக்தகோடிகளின் ஆழ்ந்த நம்பிக்கை. பக்தர்கள் அவரவர்கள் சக்திக்குத் தகுந்தவாறு ஸ்வாமிகளின் பூஜைக்கு வேண்டிய திரவியங்களைக் காணிக்கையாக அளிப் பார்கள்.

நவராத்திரி பூஜை நடைபெறும் அக்காலங்களில் மடத்தில் பெண்களுக்கே அதிக உரிமையுண்டு. மாங்கல்யத்துடன் விளங்கும் அவர்களை அவ்வொன்பது நாட்களும் பரதேவதையின் அம்சமாகப் பாவித்து அவர்களுக்கு ஆடைகள். மஞ்சள், குங்குமம், புஷ்பம் இவைகளை வழங்குவார்கள். அவர்களுக்கு முதலில் உண்டி அளித்த பிறகே மற்றவர்கள் ஆகாரம் உட்கொள்ளுவார்கள். இரண்டு வயது முதல் பத்து வரையில் உள்ள கன்னிப் பெண்க ளுக்கு முறையே முதல் நாளிலிருந்து நடைபெறும் பூஜையைக் கன்னியா பூஜையெனக் கூறுவார்கள். ஸ்வாமிகள் தமது திருக் கரங்களால் செய்யும் இந்தக் கன்னியா பூஜையைப் பக்தர்கள் வெகு நேரம் காத்திருந்து காண்பார்கள். வேதங்களைக் கற்ற றிந்த அந்தணர்கள் அப்பொழுது வேதபாராயணத்தைச் செய்வார் கள். மற்றும் தேவிபாகவதம், இராமாயணம், கீதை, பிரம்ம சூத்திர பாஷ்யம் இவைகளையும் வித்வான்கள் பாராயணம் செய்வார்கள். மடத்தில் சண்டி ஹோமம், ஸ்ரீ வித்யா ஹோமம் இவைகளெல்லாம் நடைபெறும். இவற்றிற்கெல்லாம் ஏராளமாகப் பொருள் செலவாகும். இவற்றிற்குச் சிஷ்யர்கள் போட்டியிட்டுக்

கொண்டு தங்கள் தங்கள் காணிக்கைகளைச் செலுத்துவார்கள். இந்தப் பூஜையின் கோலாகலத்தைச் சென்னை வாசிகள் பலர் அதற்கு முன் கண்டதில்லை யாகையால் ஏராளமான கூட்டம் மயிலாப்பூர் சமஸ்கிருத கலாசாலையில் கூடிற்று. கலாசாலையின் கட்டிடங்கள் வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. பத்து நாட்களும் அப்பொழுது ஒரு திருவிழாப்போல மயிலாப்பூர் காணப் பட்டது. இந்த விசேஷ பூஜைகளும் ஹோமங்களும் சரஸ்வதி பூஜையன்று முடிவு பெற்று, விஜயதசமியன்று ஸ்வாமிகள் தமது மௌன விரதத்தை முடித்துக்கொண்டார்கள்.

சந்திரசேகர தீர்த்தமும், பாஷ்ய விஜய மண்டபமும்.

ஸ்ரீ ஸ்வாமிகள் சென்னையில் ஸமஸ்கிருத கலாசாலையில் விஜயம் செய்தபொழுது கே. பாலசுப்ரமண்ய ஐயர் முன்னேற்பாடாக ஸ்வாமிகளின் ஸ்நானத்திற்கென முன்பேயிருந்த ஓர் கிணற்றைப் பெரிதாக்கி, அதை ஒரு சிறிய தடாகமாக மாற்றிவிட்டார். அதில் ஒவ்வொரு நாளும் ஸ்வாமிகள் பலமுறை ஸ்நானம் செய்துவருவார்கள். அவ்விடத்திற்கு ஸ்வாமிகள் விஜயம் செய்தது எந்நாளும் மறவாமல் இருக்கும் பொருட்டு, ஐயர் அந்தக் கிணற்றிற்கு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி தீர்த்தமெனப் பெயரிட்டார். நவராத்திரி முடிந்ததும் விஜயதசமி அன்று ஸ்வாமிகள் பிரம்ம சூத்திர பாஷ்யபாடம் நடத்திப் பண்டிதர்களுடன் வேதாந்த தத்துவ விசாரம் செய்வதற்காகத் தனிமையான ஓர் மண்டபத்தை ஸமஸ்கிருத கலாசாலையில் அமைத்துக் கொடுத்திருந்தார்கள். அந்த மண்டபத்திற்கு ஸ்வாமிகளே பாஷ்யவிஜய மண்டபம் என்னும் பெயரைச் சூட்டினார்கள்.

இராமகிருஷ்ண மாணவர் இல்லத்திற்கு விஜயம்.

மயிலாப்பூரில் ஸ்வாமிகள் தங்கியிருந்தபொழுது ஒரு நாள் ஸ்ரீ ராமகிருஷ்ண மாணவர் இல்லத்திற்கு அவர்கள் விஜயம்செய்தார்கள். அங்கு அவ்வில்லத்தின் தலைவரான இராமானுஜாசாரியார் ஸ்வாமிகளைப் பூர்ண கும்பத்துடன் வரவேற்று, இல்லத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் அவர்களை அழைத்துச் சென்று, மாணவர்களின் அன்றாட அலுவல்களைப் பற்றி விளக்கினார். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரது உபதேசங்களை மனஸில் சிந்தனை செய்து யாவரும் பக்தி மார்க்கத்தில் ஈடுபட வேண்டுமென்றும், இராமகிருஷ்ண மடத்தார் செய்துவரும் பல

நல்ல காரியங்களைக் கண்டு தாம் மிகவும் மகிழ்ச்சியுறுவதாகவும், ஸ்வாமிகள் கூறினார்கள். இல்லத்தின் நிர்வாகியான இராமா னுஜாசாரியாரது ஒப்பற்ற சேவையை ஸ்வாமிகள் மிகவும் பாராட்டினார்கள். அன்று ஸ்வாமிகள் முன்னிலையில் வித்வான் ஜி. என். பாலசுப்ரமண்ய ஐயர் ஒரு சங்கீதக்கச்சேரி நடத்தினார், இல்லத்தில் வசிக்கும் மாணவர்கள் யாவருக்கும் ஸ்வாமிகள் விபூதி, அக்ஷதை கொடுத்து எல்லோரையும் ஆசீர்வதித்தார்கள். ஸ்வாமி கள் அந்த இல்லத்திற்கு விஜயம் செய்த நினைவு என்றும் மறவாம லிருக்கும் பொருட்டு ஸ்வாமிகளிடம் ஆழ்ந்த பக்தி பூண்ட செட்டி நாட்டு அன்பர் ஒருவர் அந்த இல்லத்திற்கு ஸ்வாமிகளின் பெரிய தொரு உருவப்படத்தைக் காணிக்கையாக அளித்தார்.

தேவாலயப் பிரவேசத்தில் அரசாங்கத்தின் தலையீடு.

ஜாதி ஹிந்துக்களுக்கும் ஹரிஜனங்கள் எனக் கூறப்படுபவர் களுக்கும் சமரஸமான ஓர் ஒப்பந்தம் ஏற்படாவிடில், தாம் பட் டினி கிடந்து உயிரை மாய்த்துக் கொள்ளப் போவதாகக் காந்தியடிகள் 1932-ம் வருடம் செப்டம்பர் மாதம் 2வது வாரத்தில் ஓர் அறிக்கையை விடுத்தார். இதனால் பண்டித மதன்மோகனமாளவியா, ஸி. ராஜகோபாலாச்சாரியார் போன்ற தலைவர்களும் மிகவும் கவலை கொண்டு தேசமக்களுக்கு ஓர் அறிக்கை விடுத்தார்கள். காந்திஜி பட்டினியை மெற்கொண்ட ஐந்தாவது நாளிலேயே ஹரிஜனங்களின் உரிமைகளை ஏற்றுக் கொள்ளும் எட்டு நிபந்தனைகளைக் கொண்ட ஒப்பந்தம் ஒன்று 24-9-32ல் பூனாவில் ஏற்பட்டது. அதனால் காந்திஜியும் தமது பட் டினியை நிறுத்திக்கொண்டார். அந்த ஒப்பந்தத்தில் ஜாதி ஹிந் துக்களுக்குப் பிரதிநிதியாக பண்டித மாளவியா, டாக்டர் சாலாங்கி, ஸர். தேஜ்பகதூர் ஸப்ரூ, எம். ஆர். ஜேயக்கர் இவர்கள் நால்வரும் ஹரிஜனங்களின் சார்பாக டாக்டர் அம்பேத்கார், ராவ்பகதூர் ஸ்ரீநி வாஸன், ராவ்பகதூர் எம், ஸி. ராஜா, ராஜ்போஜ், பி. பாலு இவர் கள் ஐவரும் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தப்படி ஆலயங் களை ஹரிஜனங்களுக்குத் திறந்துவிட வேண்டுமென்று காந்தியடி கள் தேசமக்களைக் கேட்டுக்கொண்டார். ஆலயப் பிரவேசம் புனா ஒப்பந்தத்தில் ஓர் அம்சமாகக் குறிப்பிடப்படவில்லை யென்றும், பழைமையான வழக்கத்திற்கும் வைதீக ஆகம சாஸ்திரங்களுக்கும் மாறாக ஹரிஜனங்களை ஆலயத்தில் பிரவேசிக்கச் செய்வது நியாய

மாகாதென்றும் ஸநாதனிகள் வாதாடினார்கள். அதே காலத்தில் ஹரிஜனங்கள் பலர் ஆலயப் பிரவேசத்தினால் தங்களுக்கு விசேஷ பயன் எதுவும் ஏற்பட்டுவிடாதென வெளிப்படையாகத் தெரிவித்தார்கள். ஆலயப் பிரவேச இயக்கத்திற்கு அக் காலத்தில் ஜாதி ஹிந்துக்களின் எதிர்ப்பு அதிகமாகக் காணப்பட்டது. ஆயினும் காந்திஜியின் விருப்பப்படி நாடெங்கும் ஆலயப் பிரவேசத்திற்குத் தீவிரமான பிரசாரம் செய்து வரப்பட்டது. தீண்டாமையை மிகக் கடுமையாக அனுஷ்டிக்கும் மலையாள தேசத்தில். அதிலும் கிருஷ்ண பரமாத்வாவின் ஸ்தலமாகிய குருவாயூரில் இது ஓர் சோதனையாக ஆரம்பிக்கப்பட்டது. கேலப்பன் என்னும் மலையாளவாசி பட்டினி கிடந்து அவ்விடம் சத்தியாக்கிரகம் செய்தார். நம் ஸ்வாமிகளின் பரிபூர்ண ஆசியைப் பெற்று ஸநாதனிகளின் கோஷ்டி ஒன்று 1932-ம் வருடம் டிசம்பர் மாதம் 10-ஆந் தேதி மலையாளத்திற்குச் சென்றது. முதலில் சென்ற அந்த கோஷ்டியில் சட்ட நிபுணர்களான டி. ஆர். ராமச்சந்திரய்யர், திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர், சிவராமகிருஷ்ணய்யர், ராஜகோபாலய்யர், எஸ். சுப்ரமண்ய ஐயர், இவர்களும், பிரபல ஸநாதனியாக இந்திய சட்ட சபையில் பல வருடங்கள் பணியாற்றிய எம். கே. ஆச்சார்யாவும், மற்றும் வே. சோமதேவ சர்மாவும் இருந்தனர். பாலக்காடு முனிஸிபல் சேர்மன் எஸ். கே. இராமசாமி ஐயரால் அவர்களுக்குப் பாலக்காட்டில் தகுந்த வரவேற்பளிக்கப்பட்டது. டிசம்பர் மாதம் 10-ஆந் தேதி பாலக்காட்டில் ஒரு பொதுக்கூட்டமும், 11-ஆந் தேதி குருவாயூரில் ஒரு பொதுக் கூட்டமும் நடைபெற்றது. கோட்டக்கல் ராஜா குருவாயூர் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். இந்தக் கோஷ்டியில் சேர்ந்தவர்களைத் தவிர பாலக்காடு டாக்டர் சங்கரய்யரும், தேக்காடு கோவிந்த மேனன் முதலானவர்களும் இந்த ஆலயப் பிரவேச இயக்கத்தை மிகவும் வன்மையாகக் கண்டித்துப் பேசினர். அதையொட்டித் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. இந்த எதிர்ப்பு இயக்கத்திற்கு மலையாளத்தில் நல்ல ஆதரவு காணப்பட்டது.

25 பேர்கள் கொண்ட திருப்புகழ் கோஷ்டி ஒன்றும், அதைத் தவிர கே. பாலசுப்ரமண்ய ஐயரைத் தலைவராகக் கொண்ட மற்றொரு கோஷ்டி ஒன்றும் டிசம்பர் மாதம் 16-ஆந் தேதி

சென்னையை விட்டுக் குருவாயூருக்குச் சென்று நம் ஸ்வாமிகளின் ஆசியுடன் பொதுக் கூட்டங்கள் நடத்தினக் கூட்டங்களுக்கு மலையாள மக்கள் நல்ல ஆதரவளித்ததுடன், நூற்றுக்கணக்கான பெண்மணிகளும் அக்கூட்டங்களில் கலந்துகொண்டனர்.

இந்த ஆலயப் பிரவேச இயக்கத்தை ஒருவாறு சமரஸமாக முடிவுபெறச் செய்யலாமென்ற எண்ணத்துடன் காந்திஜியின் யோசனைப்படி காங்கிரஸ் தலைவர்களான பாபு ராஜேந்திரபிரஸாத், சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியார், கே. பாஷ்யம், வரதாசாரி இவர்கள் மயிலாப்பூரில் ஸ்வாமிகளைச் சந்தித்து அவர்களுடன் இரண்டு மணி நேரம் ஆலோசனை செய்தனர். ஆயினும் அந்தப் பேச்சு வார்த்தைகளால் அவர்கள் எதிர் பார்த்தபடி முடிவு ஒன்றும் காணமுடியவில்லை. ஆயினும் பல விஷயங்களைக் குறித்து அவர்கள் மனம் விட்டுப் பேசியதாகவும், ஸ்வாமிகளின் தரிசனத்தினால் ஆத்மிகத் துறையில் அவர்கள் நல்ல பயனைப் பெற்றதாகவும் கூறினார்கள். சென்னையில் அச்சமயம் ராஜாஜி பேசிய பொதுக்கூட்டம் ஒன்றில் அவர் ஸ்வாமிகளுடன் நிகழ்த்திய சம்பாஷணைகளைக் குறிப்பிட்டு, ஹரிஜன ஆலயப் பிரவேச விஷயத்தில் ஸ்வாமிகளின் முடிவான அபிப்பிராயம் என்னவென்று சிலர் அவரைக் கேட்டனர். அதற்கு ராஜாஜி பதிலளிக்கையில் அதற்கு முன்னும் அவர் ஸ்வாமிகளைத் தரிசித்திருப்பதாகவும், குறிப்பிட்ட ஒரு தனிப் பிரச்னையில் ஸ்வாமிகளின் அபிப்பிராயம் எவ்விதமிருந்தபோதிலும், ஸ்வாமிகள் ஓர் ஒப்பற்ற தவசியென்றும், நல்ல ஆத்மஞானி என்றும், ஹரிஜனங்களின் நலனை அவர்கள் எப்பொழுதும் கோரியவர்களென்றும், ஒரு பிரச்னையை மாத்திரம் மனதில் கொண்டு ஸ்வாமிகளைப் போன்ற பெரியவர்களின் நிலைமையைப்பற்றி ஆராய்வதால் எவ்வித நன்மையும் கிடைக்கப் போவதில்லையென்றும் கூறினார்.

பின்னர் ஆலயப் பிரவேசத் திட்டத்தைச் சர்க்கார் சட்டமாக்கி, அந்தச் சட்டத்தின் உதவியைக் கொண்டு எல்லா முக்கிய ஆலயங்களிலும் ஹரிஜனங்களைச் சர்க்கார் செல்வாக்குள்ள பிரமுகர்கள் உள்ளே அழைத்துச் சென்றனர். சட்டத்தின் உதவியை நாடிப் புரட்சிகரமான இவ்விதச் சீர்திருத்தம் செய்வதில் காந்தியடிகளுக்கும் விருப்பமில்லை, என்பது அவர் அடிக்கடி பேசியவைகளி

லிருந்தும் எழுதியவைகளிலிருந்தும் வெளியாயிற்று. மக்களின் மன மாற்றத்தினுல்தான் இவ்விதச் சீர்திருத்தங்கள் நாட்டில் ஏற்படவேண்டுமென்று அவர் வற்புறுத்தி வந்தார்.

சென்னையில் ஸ்வாமிகளின் உபந்யாசம்.

ஸ்வாமிகள் சென்னையில் தங்கியிருந்த காலத்தில் நான்கு மாதங்களுக்கு மேல் அவர்கள் ஒவ்வொரு நாள் இரவிலும் பூஜை முடிந்தபிறகு, சிம்மாசனத்தில் வீற்றிருந்து, பக்தர்களுக்கு உபதேச மொழிகளைக் கூறிய அழகை எழுத்தினுல் விவரிக்க இயலாததாகும். டி. ஆர். வெங்கடராம சாஸ்த்ரிகள், ஜட்ஜ் குமாரசாமி சாஸ்த்ரிகள், ஸர். பி. எஸ். சிவஸாமி ஐயர் போன்ற மேதாவிகள் முதல், சாமான்ய ஜனங்களில் ஸ்திரீ புருஷர்கள் குழந்தைகள் ஈருகப் பல்லாயிரக்கணக்கில் ஜனங்கள் ஸ்வாமிகளின் உபதேச மொழிகளைக் கேட்க அப்பொழுது கூடியிருக்கும். அவ்வளவு பெரிய கூட்டத்தினிடையே ஆச்சரியத்தைத் தரக்கூடிய ஓர் அமைதி நிலவும். எல்லோரது பார்வையும் திவ்ய தேஜோமயமாக விளங்கும் ஸ்வாமிகளின் கருணை ததும்பும் முகத்தையே நோக்கியவாறு இருக்கும். சில நிமிஷங்கள் ஸ்வாமிகள் மௌனத்தை மேற்கொள்ளுவார்கள். ஸ்வாமிகள் எந்த விஷயத்தைப்பற்றி பேசப்போகிறார்கள் என்பது முன்கூட்டியே ஒருவருக்கும் அறிவிக்கப்படுவதில்லை. அவர்கள் தமது ஆஸனத்தில் அமர்ந்தவுடன் தமக்குச் சுற்றியுள்ள ஏதாவதொரு விஷயத்தைப்பற்றியோ, அல்லது அந்த நாளின் விசேஷத்தைப்பற்றியோ, தமது இனிமையான குரலில் சாதாரணமான சம்பாஷணைபோல பேசத் தொடங்குவார்கள். சில நாட்களில் சௌந்தர்யலகரியிலிருந்தோ, சிவானந்தலகரியிலிருந்தோ, அப்பையதீக்ஷிதரின் கவிதைகளிலிருந்தோ சில சுலோகங்களைச் சொல்லிவிட்டு அவைகளின் பொருள்களைக் கூறுவார்கள். இவ்விதம் ஆரம்பிக்கப்படும் சாதாரணப் பேச்சே சற்று நேரத்திற்குள் ஒரு பெரிய உபந்யாசமாகத் திகழும். நேரம் போவதே தெரியாமல் ஸ்வாமிகள் அருளும் உபதேச மொழிகளை யாவரும் மிகக் கவனத்துடன் கேட்டு வருவார்கள். ஸ்வாமிகளின் உபந்யாசங்களையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் அதை ஹிந்து மதத்தின் நிகண்டு எனக் கூறிவிடலாம். ஸ்வாமிகள் அம்பிகையைப்பற்றியோ, ஆறங்கங்களைப்பற்றியோ, அர்த்த சாஸ்த்திரத்தைப் பற்றியோ, நம் நாட்டு தேவாலயங்களைப்பற்றியோ, பேசும்

போதுகூட நடுவில் உயர்தரமான ஹாஸ்யத்தின் மூலம் பெரிய விஷயங்களைப் புகுத்திக் கேட்பதற்குச் சிறிதும் சலிப்பு ஏற்படாத வாறு அவர்களது கவனத்தையெல்லாம் தம்முடன் இழுத்துச் செல்லும் ஓர் சக்தியை அவர்களிடமேதான் காணலாம். அந்த உபந்யாசங்கள் யாவும் ஒவ்வொரு நாளும் ஹிந்து, சுதேசமித்திரன் முதலிய பத்திரிகைகளில் அவ்வப்போது வெளிவந்தன. மயிலாப்பூர் லாஜர்னல் பிரஸின் சொந்தக்காரரான ஆர். நாராயணசாமி ஐயர் ஸ்வாமிகளின் ஐம்பது சொற்பொழிவுகளை 610 பக்கங்கள் கொண்ட முதல் பாகமாகவும், சங்கர விஜய உபந்யாசங்களை இரண்டாவது பாகமாகவும் வெளியிட்டு, முறையே அவைகளுக்கு ரூ. 1-8-0-ம், ரூ. 0-8-0-ம் விலை நிர்ணயித்து, இக் குறைந்த விலை யில் அவைகளை மக்களுக்கு வழங்கும் ஓர் புண்ணியத்தை ஏற்றுக் கொண்டார். அப்புஸ்தகத்தின் முதல் பாகத்திற்கு கே. பால சுப்ரமண்ய ஐயர் எழுதியிருக்கும் முகவுரையின் முடிவில் அழகிய ஆங்கிலச் சொற்களைக்கொண்டு கீழேகண்ட தமது கருத்தை வெளி யிட்டுள்ளார்.

"தத்துவங்களை உள்ளபடி விளக்கும் ஸ்வாமிகளின் மொழிகளை வேண்டுமானால் நாம் அச்சில் பொறித்துவிடலாம். ஆனால் தேஜோமயமாய் விளங்கும் அவர்களின் ரூபத்தையும், குரலின் இனிமையையும், காண்போரை வசப்படுத்தும் கண்களின் சக்தியையும், முகத்தில் தோன்றும் மந்தஹாஸத்தையும் எவ்விதம் விளக்க முடியும்?"

ஸ்வாமிகளின் மற்ற சொற்பொழிவுகள் 18-ஐ மூன்றாவது பாகமாக மயிலாப்பூர் காமாக்ஷி நிலயத்தார் 156 பக்கங்கள் கொண்ட புத்தகமாக வெளியிட்டு, அதற்கு மிகக் குறைந்த 6 அணா விலை நிர்ணயித்துப் பொருள் நஷ்டத்தையும் பாராமல் மக்களுக்கு வழங் கினார்கள். இந்தப் பிரதிகளெல்லாம் வெகு சீக்கிரத்தில் செலவாகி விட்டபடியால், ஸ்வாமிகளின் முதல் 50 உபந்யாசங்களையும் சென்னை ஜார்ஜ்டவுன் பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெருவிலுள்ள காமகோடி கோசஸ்தானத்தார் இப்பொழுது 5 பாகங்களாகத் தனித் தனியே பிரித்துப் பிரசுரித்துள்ளார்கள். ஒவ்வொரு வீட்டிலும் இந்தப் புத்தகங்கள் பொக்கிஷமாக அமையவேண்டும். பின்வரும் சந்ததியார் இவைகளைப் பிரிவினை செய்யப்படாத பொது சொத்தாக வைத்துக் காப்பாற்ற வேண்டும்.

மயிலாப்பூரில் பிரபல டாக்டர் ஒருவருக்கு ஸ்வாமிகளைத் தமது வீட்டிற்கு அழைத்து உபசரிக்க வேண்டுமென்ற ஆசை மனஸில் குடி கொண்டு இருந்தது. ஆனால் அவருக்கு அவ்விதம் செய்யச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அது அவரது உள்ளத்தில் ஓர் பெரும் குறையாகவே இருந்தது. அவர் ஸ்வாமிகளை ஒவ்வொரு நாளும் தவறாது தரிசித்துப்போவார். அவரது மனக் குறையை அவரது முகக் குறிப்பிலிருந்து உணர்ந்த ஸ்வாமிகள் ஒரு நாள் அந்த டாக்டரைப் பார்த்து அவரது வீடு எங்கிருக்கிறதென்று கேட்டார்கள். எதிர்பாராத அந்தக் கேள்வியால் டாக்டர் ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் அடைந்தவராகி, ஸ்வாமிகளிடம் தமது ஜாகை இருக்கும் இடத்தைக் குறிப்பிட்டுக் கூறினார். அப்பொழுது ஸ்வாமிகள் அவரைப் பார்த்து இன்னும் அரை மணி நேரத்தில் அவரது வீட்டிற்குத் தாம் வரப்போவதாகவும், அவரை வீட்டிற்குச் சென்று குடும்பத்தாருடன் தம்மை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படியும் கட்டளையிட்டார்கள். அப்பொழுது அந்த டாக்டர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. ஆயினும் அவ்வளவு குறைந்த அவகாசத்தில் ஸ்வாமிகள் பெருமைக்குத் தக்கவாறு அவர்களை வரவேற்கும் ஏற்பாடுகளை எவ்விதம் செய்வதென அந்தப் பக்தர் சற்றுக் கவலையடைந்தார். அப்பொழுது ஸ்வாமிகள் அவரைப் பார்த்து, 'உங்கள் வீட்டிற்கு வருவதற்கு நானே எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொள்ளுகிறேன். மடத்தின் சிப்பந்திகள் அதையெல்லாம் கவனித்துக் கொள்ளுவார்கள். நீங்கள் கவலையில்லாமல் வீட்டிலிருங்கள்' என்றார்கள். அவரும் அவ்வாறே தம் ஜாகையில் தங்கியிருக்கவே, ஸ்வாமிகள் சிறிது நேரத்திற்கெல்லாம் அந்த வீட்டிற்குச் சிவிகையில் ஏறிச்சென்றார்கள். டாக்டரும் ஸ்வாமிகளைப் பூர்ணகும்பத்துடன் வரவேற்றார். ஸ்வாமிகள் அவரது வீட்டில் சிறிது நேரம் தங்கிக் குழந்தைகள் உள்பட அந்தக் குடும்பத்தினர் யாவரையும் தனித் தனியே விசாரித்து, அவர்களுக்கெல்லாம் விபூதி, குங்குமம் அக்ஷதை இவைகளை வழங்கி, எல்லோரையும் பரிபூர்ணமாக ஆசிர்வதித்தார்கள். எதிர்பாராது அவ்விதம் ஸ்வாமிகள் அருள் தமக்குக் கிடைத்ததுபற்றி அந்த டாக்டர் மிகப் பெருமை அடைந்து உள்ளம் உருகி ஆனந்தக் கண்ணீர் விடுத்தார். உண்மை பக்தி நிறைந்த யாவரும் அவரைக் கொண்டாடினார்கள்.

பக்தர் வீட்டுக்கு எதிர்பாராத விஜயம்.

1932-ஆம் வருடம் அக்டோபர் 8-ஆந் தேதி சென்னை சுதேச மித்திரன் பத்திரிகையின் வெள்ளி விழா கொண்டாடப்பட்டது. மித்திரன் பத்திரிகையிலும் அதன் ஆசிரியர்களிடமும் ஸ்வாமிகளுக்கு நல்ல மதிப்புண்டு. அவ்விழாவன்று ஸ்வாமிகள் தம் ஆசிச் செய்தியடங்கிய திருமுகத்தை மடத்தின் பிரதிநிதியொருவர் மூலம் அனுப்பிவைத்தார்கள். இந்நிகழ்ச்சி ஆசிரியர் ஸி. ஆர். ஸ்ரீனிவாச அய்யங்காருக்கும் மற்ற நிர்வாகிகளுக்கும் மிகுந்த மகிழ்ச்சியைத்தந்தது. தங்கள் பத்திரிகைக்குக் கிடைத்த தனிப் பெருமையாக அவர்கள் அதை மதித்தனர்.

மித்திரன் பத்திரிகைக்கு அளித்த ஆசி.

மயிலாப்பூரில் ஸ்வாமிகள் தங்கியிருந்த காலத்தில் திருவல்லிக் கேணி புத்தக வியாபாரியான பி. டி. பாணி அண்டு கம்பெனி சொந்தக்காரர் தண்டபாணி ஐயர் ஸ்வாமிகளின் யாத்திரைக்குத் தகுந்த ஓர் மேனாப் பல்லக்கை நல்ல வேலைப்பாடுகளுடன் தயாரித்து அதில் ஐந்து கலசங்கள் அமைத்து ஸ்வாமிகளுக்குச் சமர்ப்பணம் செய்தார். இந்தக் கைங்கரியத்தை ஊக்கத்துடனும் சிரத்தையுடனும் செய்து முடித்த தண்டபாணி ஐயரைப் பக்தர்கள் மிகவும் கொண்டாடினார்கள். தாம் அளித்த சிவிகையில் ஸ்வாமிகள் ஆரோகணித்துக் காட்சியளித்ததைக் கண்டு தண்டபாணி ஐயர் அகமகிழ்ந்தார்.

ஸ்வாமிகளுக்கு சிவிகை அளித்த பக்தர்.

காலத்தின் மாறுதலால் வேதவேள்வியைச் செய்யத் தகுதியுள்ளவர்கள் நாட்டில் குறைந்துவருவதை உணர்ந்த ஸ்வாமிகள், யாகங்கள் எங்கு நடைபெற்றாலும் அதைச் செய்யும் பெரியோர்களுக்கு ஊக்கமளித்து, மடத்திலிருந்தும் மடத்தின் சிஷ்யர்கள் மூலமாகவும் எல்லா வசதிகளையும் செய்து கொடுக்கும்படி கட்டளையிட்டுள்ளார்கள். உலக க்ஷேமத்தின் பொருட்டு யாகங்கள் செய்யப்படவேண்டிய அவசியத்தை அடிக்கடி ஸ்வாமிகள் தமது சிஷ்யர்களுக்கு வற்புறுத்திக் கூறுவதுண்டு. யாகம் செய்பவர்களைக் கண்டால் ஸ்வாமிகளுக்கு நல்ல மதிப்புண்டு. மடத்தில் அவர்களுக்குத் தனிமையான சில உரிமைகள் காட்டப்படும். தண்டாங்கோரை அப்பாத்துரை தீக்ஷிதர்

வாஜபேயருக்கு வெண்பட்டு, குடை சன்மானம்.

என்பவர் சுமார் 25 ஆண்டுகளுக்கு மேல் பல யாகங்களை நடத்தி, அவைகள் எல்லாவற்றிலும் உயர்வான வாஜபேயம் என்னும் யாகத்தையும் செய்து முடித்திருந்தார். அவரைச் சிறப்பிக்கும் பொருட்டு ஸ்வாமிகள் மயிலாப்பூரில் தங்கியிருந்தபொழுது ஒரு வெண் பட்டுக் குடையை அவருக்குச் சன்மானமாக அளித்தார்கள். யாகம் செய்த மகரிஷிகளுக்குச் சக்ரவர்த்திகள் வெண்பட்டுக் குடை அளிப்பது நமது பாரத நாட்டின் சிறந்த பண்பாடுகளில் ஒன்றாகும். இதிகாசங்களும் இவ்விஷயத்தை விளக்கமாகக் கூறுகின்றன. சக்ரவர்த்திகளுக்குச் சக்ரவர்த்தியாக விளங்கும் நம் ஆசார்ய ஸ்வாமிகள் வாஜபேய யாகம் செய்த ஒரு மகானுக்கு வெண்பட்டுக் குடை அளித்தது மிகவும் பொருத்தமான வெகுமதியாகும். ஸ்ரீ ராமபிரானே உலகில் அவதாரம் செய்து அந்தக் குடையைத் தமக்கு அளித்ததாக அந்தச் சோமயாஜி மனஸில் எண்ணி மகிழ்ந்தார். அதன் பின்னர், இந்த வாஜபேய யாகத்தை நடத்திய சேங்காலிபுரம் நாராயண வாஜபேயர், அவரது சகோதரர் வெங்கடேச வாஜபேயர் இவர்கள் இருவருக்கும் ஸ்வாமிகள் வெண்பட்டுக் குடைகள் சன்மானம் செய்துள்ளார்கள்.

1933-ஆவது வருடம் ஜனவரி மாதம் மாட்டுப் பொங்கல் அன்று, மடத்தில் நடைபெற்ற கோபூஜை சென்னைக்கடுத்த திருமங்கலத்தில் ஏ. கே. ரங்கநாதையரின் ஓட்டுத் தொழிற்சாலையில் நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் மடத்தில் உதயத்திற்கு முன் கோபூஜை நடைபெறுவதுண்டு. மாட்டுப் பொங்கலன்று நடைபெறும் பூஜை மிகவும் விசேஷமான பூஜையாகும். ஏராளமான பசுக்களுக்கும் பசுங்கன்றுகளுக்கும் விருஷபங்களுக்கும் அப்பொழுது பூஜை நடைபெறும். அந்த மாட்டுப் பொங்கலன்று ஹரிஜனத் தலைவர் ராவ்பகதூர் எம். ஸி. ராஜா ஸ்வாமிகளைத் தரிசிக்கத் தமது குடும்பத்துடன் திருமங்கலத்திற்கு வந்திருந்தார். அக்காலத்தில் ஹரிஜன ஆலயப் பிரவேச இயக்கம் மிகவும் மும்முரமாகக் காந்தியடிகளின் ஆதரவில் நடந்துவந்தது. சநாதனிகள் இதை வன்மையாக எதிர்த்து வந்தனர். ஸ்வாமிகள் ஸநாதனிகளுக்கு மிகவும் ஊக்கம் அளித்துவந்ததுடன், வேதாகம சாஸ்திரங்களுக்கு விரோதமாய் ஹரிஜனங்களை ஆலயங்களுக்

ஹரிஜன அரசியல் தலைவர்களுக்கு அளித்த பேட்டி.

குள் பிரவேசிக்க அநுமதிப்பது தவறென்பதாகவே வெளிப்படை யாக அபிப்பிராயம் தெரிவித்தார்கள். இந்த நிலையில் எம். ஸி. ராஜா ஸ்வாமிகளைத் தரிசிக்கச் சென்றது ஆலயப்பிரவேச விஷயத்தில் ஸ்வாமிகளுடன் சர்ச்சை செய்ய வேண்டுமென்ற எண்ணத்துட னன்று; தவத்தினுல் மேன்மை பெற்று விளங்கும் ஓர் பெரி யாரைத் தரிசித்து அவர்கள் ஆசியைப் பெறவேண்டுமென்பதற் காகவே அவர் தமது குடும்பத்துடன் ஸ்வாமிகளைக் காண வந்தார். ஸ்வாமிகளின் திருமேனியும் அவர்களின் அன்பு நிறைந்த சொற் களும் அனுக்கிரகம் செய்யும் தன்மையும் ராஜாவின் உள்ளத் தைக் கவர்ந்தன. அகில இந்திய ஆதித்திராவிட சபைக்குக் கார்ய தரிசியாகயிருந்து அந்தச் சமூகத்தினரின் முன்னேற்றத்திற்காக அவர் மிகவும் பாடுபட்டிருக்கிருர். சென்னைச் சட்ட சபையிலும், இந்தியச் சட்டசபையிலும் பல ஆண்டுகளாக அங்கம் வகித்துத் தேசத்திற்குப் பணியாற்றியிருக்கிருர். அவர் அகில - இந்திய - தாழ்த்தப்பட்டோர் சங்கத்திற்குத் தலைவராகவும், அகில இந்திய ஹிந்துமகா சபையின் உபதலைவராகவும் இருந்துள்ளார். 1929-ஆவது வருடம் லண்டனில் நடைபெற்ற முதல் வட்ட மேஜை மகாநாட்டிலும் பங்கெடுத்துக்கொண்டுள்ளார். அரசியல் சம்பந்தமான இன்னும் எவ்வளவோ ஸ்தாபனங்களில் அவர் சம்பந்தம் வைத்துக் கொண்டு தேசப்பணியாற்யிறிருக்கிருர்.

எம். ஸி. ராஜா ஸ்வாமிகளை வணங்கியவுடன் ஸ்வாமிகள் அவரை மந்தஹாஸத்துடன் வரவேற்று, அவரது குடும்ப நலனைப் பற்றி விசாரித்துவிட்டு, பிறகு உலக அரசியலைப்பற்றியும், இந்தி யாவின் அப்போதிருந்த நிலையைப்பற்றியும், ஆதித்திராவிடர் களின் நிலையைப் பற்றியும், ராஜாவிடம் பல கேள்விகளைக் கேட்டார்கள். அந்தச் சம்பாஷணையில் ஸ்வாமிகளது ஒப்பற்ற அரசியல் ஞானத்தை ராஜா கண்டு வியந்தார். நம் நாடு அந்நியர் ஆட்சியிலிருந்து விடுதலையடைந்து நம்மவர்களாலாயே ஆளப்பட வேண்டுமென்ற ஆசை ஸ்வாமிகளுக்கு வெகு நாட்களாகவே உண்டு. ஆங்கிலேய ஆட்சியால் நம் நாட்டுக்குச் சில நன்மைகள் ஏற்பட்டிருந்த போதிலும், அந்த நன்மைகளைவிட அவர்களால் ஏற்பட்டிருக்கும் தீமைகளே அதிகமென்பதாக ஸ்வாமிகள் சில சமயம் கூறுவதுண்டு. "நம் நாட்டிலிருந்து ஏழ்மை அகலவேண்டும்; எல்லா மக்களும் சுகத்தை அடைய வேண்டும்; எந்நிலையிலும்

மக்கள் தர்மங்களிலிருந்து விலகலாகாது; கடவுள் நம்பிக்கையுடன் இருந்தால்தான் மனச்சாந்தியுடன் வாழலாம்; சாந்தியில்லாவிட்டால் பேராசை அதிகரிக்கும்; பேராசையினுல் தான் உலகில் சண்டைகளும் துன்பங்களும் ஏற்படுகின்றன" என்றும் தமது அபிப்பிராயத்தை ஸ்வாமிகள் அன்றைச் சம்பாஷணையில் வற்புறுத்திக் கூறினுர்கள். ஸ்வாமிகளின் பரந்த நோக்கத்தைக் கண்டு எம். ஸி. ராஜா மகிழ்வுற்று, ஸ்வாமிகளின் எண்ணங்களை மனஸில் வைத்துக்கொண்டு, தம்மால் கூடியவரை தேசத்துக்குச் சேவைபுரிவதாக வாக்களித்தார். பின்னர் அவர் தம் குடும்பத்துடன் ஸ்வாமிகளை வணங்கி விடைபெற்றுக் கொண்டார்.

அவர் ஸ்வாமிகளிடம் விடைபெற்றுச் செல்லும்பொழுது நடைபெற்ற பக்தி பெருகிய நிகழ்ச்சி ஒன்றை இவ்விடம் குறிப்பிட வேண்டியது அவசியமாகவிருக்கிறது. சம்பாஷணைகளெல்லாம் நடைபெற்றபொழுது ராஜாவின் பக்கத்திலேயே யிருந்த அவரது மனைவியார் ஸ்வாமிகள் நின்றுகொண்டிருந்த ஸ்தலத்திலிருந்து கைப்பிடி அளவுள்ள மண்ணை எடுத்துத் தனது முன் தானையில் பத்திரமாகச் சேகரித்து வைத்துக் கொண்டார். மிகப் புனிதமென்று அவ்வம்மையார் மதித்த அந்த மணலைச் சேகரித்தபொழுது அவரது கண்களிலிருந்து பக்திவெள்ளமாக ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று. பக்கத்தில் நின்ற அவரது கணவரும் மற்றோரும் இந்த நிகழ்ச்சியைக் கண்டு ஆச்சரியமடைந்தார்கள். தம் மனைவிக்கு உதித்த உள்ளன்பு தமக்கு உதிக்கவில்லையேயென அவர் நினைத்தார். இந்த நிகழ்ச்சிகளைக் கண்டவர்களெல்லாம் இந்த அம்மையாரின் பக்தியைக் கொண்டாடினுர்கள். பக்தர்கள் தங்கள் மனதைக் கடவுளிடம் அர்ப்பணம் செய்து, உள்ளம் உருகிப் பாடும் பொழுது, உலகில் எந்த உயர்வான பொருளும் தமக்கு வேண்டாமென்றும், ஈசனது அடியார்களாக விளங்கும் பக்தர்களின் பாததுளி ஒன்று மட்டுமே தங்களுக்குக் கிடைத்தால் போதுமென்றும் கூறுவர். அந்த நிலையிலேயே இந்த அம்மையார் ஸ்வாமிகளின் பாதங்கள் பட்ட மணலை எடுத்துச் சேகரித்து வைத்துக்கொண்டதாக எண்ண வேண்டியிருக்கிறது. பக்தியின் பெருமையை என்னவென்று கூறுவது!

பின்னர் ஒரு சமயம் இப்பொழுது சென்னை 'அரசாங்கத்தில் அறநிலையப் பாதுகாப்பு மந்திரியாகவுள்ள பரமேசுவரரின் பாட்ட

னரும், அக்காலத்தில் ஹரிஜனத் தலைவராக விளங்கியவருமான திவான்பகதூர் ஸ்ரீனிவாசன் ஸ்வாமிகளைத் தரிசித்து ஹரிஜனங்களின் நலனைக் குறித்து ஸ்வாமிகளிடம் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார். தாழ்த்தப்பட்டோரின் பொருளாதார நிலைமையை உயர்த்தி அவர்கள் கஷ்டமின்றி வாழ்வதற்குத் தம் ஆலோசனைகள் சிலவற்றை ஸ்வாமிகள் ஸ்ரீநிவாசனிடம் தெரிவித்தார்கள். சென்னையில் ஹரிஜனங்களின் வாசஸ்தலத்தில் நூதனமாக ஆலயம் கட்டுவிக்க ரூ. 500 ஸ்வாமிகள் நன்கொடையாகவும் அளித்தார்கள்.

பிரமுகர்களுக்குப் பட்டமளிப்பு.

ஸ்வாமிகள் சென்னையிருந்து புறப்படும் முன்னர் சென்னைப் பிரஸிடென்ஸி கல்லூரி, சமஸ்கிருதப் பேராசிரியராக விளங்கிய மகாமகோபாத்யாய குப்புஸ்வாமி சாஸ்திரிகளுக்குத் தர்சந கலாநிதி என்னும் பட்டத்தையும், அட்வோகேட், டி. ஆர். ராமச்சந்திர ஐயருக்குத் தார்மிக துரந்தரர் என்னும் பட்டத்தையும், மயிலாப்பூர் வக்கீலும் ஸ்வாமிகளின் சென்னை விஜயத்தின்போது விசேஷமாகப் பணியாற்றியவருமான கே. பாலசுப்ரமண்ய ஐயருக்குத் தர்ம ரக்ஷாமணி என்னும் பட்டத்தையும் வழங்கினர்கள். அந்தப் பட்டங்களைப்பெற அவர்கள் மிகவும் பொருத்தமானவர்களாதலால் அவர்களை யாவரும் கொண்டாடினர்கள்.

ஸ்ரீ ஸ்வாமிகளது சென்னைவிஜயத்தின் பொழுது மேலும் அவர்களிடம் நெருங்கிப் பணியாற்றிய அன்பர்கள் பலரில் சென்னையில் போலீஸ் கமிஷனராக உத்யோகம் வகித்து ஓய்வு பெற்றிருந்த ராவ்பகதூர் ஏ. கிருஷ்ணஸ்வாமி ஐயரைப் பற்றி இங்குக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. மயிலாப்பூரில் சிறிய ஏழையாயினும், பெரிய சீமானுயினும் ஐயரது நட்பைப் பெறுவதில் எவரும் மிகப்பெருமை கொள்வார்கள். நண்பர்களின் சுகதுக்கங்களையெல்லாம் தம்முடையனவாக அவர் மதித்து யாவருக்கும் உற்ற துணைவராக அவர் விளங்கினர். பிராயத்தினாலும், அறிவாலும், போற்றப்பட்டு வந்த ஐயர், சென்னைச் சர்க்கார் நிர்வாக சபை அங்கத்தினராகப் பெரிய பதவி வகித்து வந்த, காலம் சென்ற ஸ்ரீ வீ. கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு உற்ற தோழராகவும் விளங்கிவந்தார். வீ. கிருஷ்ணஸ்வாமி ஐயர் தமது சொந்த முயற்சியினால் தோற்றுவித்த மயிலாப்பூர் ஸமஸ்கிருத கலாசாலையையும்,

வேங்கடரமண ஆயுர்வேத வைத்தியசாலையையும் நிர்வாகம் செய்யும் பொறுப்பை நமது ஐயர் ஏற்று, வெகு திறமையுடன் அவைகளை நிர்வதித்து வந்தார்.

வீ. கிருஷ்ணஸ்வாமி அய்யரின் தவப்புதல்வர்களான ஸ்ரீமான்கள், கே. பாலசுப்ரமண்ய ஐயரும், ஸ்ரீ கி. சந்திரசேகர ஐயரும், அவர்களின் தந்தையின் காலத்திற்குப் பிறகும் ராவ்பகதூர் ஐயர் அவர்களை தங்கள் தந்தைப்போல் மதித்து இவ்விரண்டு ஸ்தாபனங்களின் நிர்வாகத்தையும் அவரிடமே ஒப்புவித்து விட்டார்கள்.

ஸ்வாமிகள் மயிலாப்பூரில் தங்கிய சுமார் மூன்று மாதங்களிலும், அன்னாரின் தரிசனத்திற்கு வரும் பக்தர்களில் எ, கிருஷ்ணஸ்வாமி ஐயரை யாவரும் முதன்மையாகக் காண்பர். ஸ்வாமிகளுக்குச் செய்யவேண்டிய பணிகளில் மிகுந்த ஆர்வம் எடுத்துக்கொண்டு தமக்கு அறிமுகமானவர்களுக்கெல்லாம் ஸ்வாமிகளின் ஆசி கிட்டும்படி அவர் செய்து வந்தார். பிறர்க்கு உதவிபுரிவதே தமது வாழ்வின் நோக்கம் என்பதைச் செயலில் காட்டிய ஐயர் அவர்களுக்கு ஸ்வாமிகள் பரோபகார சிந்தாமணி என்னும் பட்டத்தையளித்துப் ;பொற்கவசங்கள் பதித்த ஸ்படிக மாலையொன்றையும், காஷ்மீர் சால்வையும் வெகுமானமாக அளித்தார்கள்.

எதிர்பாராதவாறு இவ்வுயரிய பெருமையைக் குரு பீடத்திலிருந்து பெற்ற ஐயர் தமக்குக் கிடைத்த அவ்வாசியை ஒப்பற்ற பாக்யமாக நினைத்து மெய்ம்மறந்து ஆனந்தக்கண்ணீர் பெருக்கி ஸ்வாமிகளின் பாதகமலங்களில் பன்முறை வணங்கி, இப்பெருமைக்கெல்லாம் காரணம் "தமது மூதாதையர் செய்த தவப்பயனே" எனக் கூறினர்.

நகரத்தில் வசிக்கும் பிராம்மண சமூகத்துக்கு உபதேசம்.

ஸ்வாமிகள் 17-11-32-ந் தேதியில் மயிலாப்பூரில் செய்த உபந்யாசத்தில் நகரத்தில் வசிக்கும் பிராம்மண சமூகத்தின் நலனுக்காகச் சில உபதேச மொழிகளைப் புரிந்தார்கள். அவைகளில் சில பகுதிகள் இங்குச் சுருக்கமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன :—

"கிராமவாசிகள் தங்கள் கிராமங்களை விட்டு இப்பொழுது நகரங்களில் வந்து வசிக்க ஆரம்பித்துவிட்டார்கள். அவர்களில் சிலர் தங்கள் நிலத்தையும் வீட்டையும் விற்று, அதனால் கிடைத்த

பொருளைக் கவர்ண்மெண்டு கடன் பத்திரமாகவோ, பாங்கி ரசீது களாகவோ மாற்றிவைத்துக்கொண்டுள்ளார்கள். இப்பொழுது படிப்புக்கு உத்யோகம் கிடைப்பதில்லை. ஜாதிக்குத்தான் உத்யோகம் கிடைக்கிறது. அதனால் வேறு ஜாதியில் பிறக்கவேண்டுமெனச் சிலர் பரமேசுவரனைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறார்கள். முதலில் பிராம்மணனுக்கு வேலை இல்லையென்று சொன்னார்கள். பிறகு எல்லோருக்குமே வேலை இல்லை என்றாகிவிட்டது. நிலங்களை முதன்முதலில் விற்று வந்தவர்கள் பிராம்மணர்கள் தாம். அவர்களைப் பின்பற்றி மற்ற சமூகத்தாரும் தங்கள் நிலங்களை விற்க முற்பட்டிருக்கிறார்கள். கிராமங்களிலுள்ள வீடுகளிற் பல இடிந்து குட்டிச் சுவர்களாக மாறிவிடுகின்றன. நகரங்களிலோ நமது தேவைக்கு அதிகமாக எல்லாவற்றையும் நம்மீது சுமத்திக் கொள்ளுகிறோம். தட்டுமுட்டுச் சாமான்கள், சட்டை துணி, உடுப்புக்கள், இவைகளை அதிகமாக வாங்கவேண்டியிருக்கிறது. இவைகளைச் சேகரித்து வைக்க வசதியாக அதிக வாடகையுடன் இடம் வேண்டும். இவைகளெல்லாம் செய்துகொண்டும், அடுத்த மாதம் சாப்பாட்டிற்கு என்ன செய்வதென்ற கவலை பெரும்பாலோர் மனஸில் குடி கொண்டிருக்கிறது. உலகில் அதிகப் பணமிருப்பதாக எண்ணம் மட்டுமிருக்கிறது. ஆனால் மனிதனுடைய மனதிலிருக்கும் திகில் விலகவில்லை. எங்கும் தரித்திரம் குடி கொண்டு இருக்கிறது. அரசாங்கங்களுக்கும் பணம் போதவில்லை. அமெரிக்காவில் கூட இவ்வித நிலைதான். உலகில் இப்பொழுது வியாபாரம் அதிகமாகிவிட்டது. இலாபத்தில் அதிக ஆசையினால் எல்லாக் காரியங்களும் மிகவும் வேகமாக நடைபெற்று வருகின்றன நகரத்தில் எல்லாம் வேகமாக நடைபெறவேண்டியிருக்கின்றன. இங்கு நிதானத்திற்கு இடமில்லை. வேகமாக நடைபெறவேண்டியிருப்பதால் பணச் செலவும் அதிகம். நம்மிடம் ஏற்பட்டிருக்கும் வறுமையைச் சற்றுக் குறைப்பதற்கு எனக்கு மூன்றுவிதமான யோசனைகள் தோன்றுகின்றன, 1. ஸ்திரீகள் உள்பட யாவரும் கடைசித் தரமான வஸ்த்ரங்களையே உடுத்திக்கொள்ளுவதெனத் தீர்மானம் செய்துகொள்ளவேண்டும், 2. காப்பிக்குப் பதிலாகக் காலையில் கோதுமைக் கஞ்சியை சாப்பிடலாம் அல்லது மோர் சாப்பிடலாம். மோர் அமுதத்திற்கு நிகரென வைத்திய சாஸ்திரம் கூறுகின்றது. இதனால் நூற்றுக்கு அறுபது மடங்கு செலவு குறைந்துவிடும். ஒரு குடும்பத்தில் காப்பிக்கொட்டை பால் இவைகளுக்குத்

தான் அதிகச் செலவு. அரிசிக்குக் கூட அவ்வளவு செலவாகிற தில்லை. 3. பிள்ளைகளைப் பெற்றவர்கள் வரதக்ஷிணை வாங்கு வதைக் குறைத்துக்கொள்ளவேண்டும். கல்யாணத்தில் ஆடம் பரச் செலவுகள் எதுவும் விதிக்கப்படவில்லை. இரண்டு ரூபாய் செலவில்கூட கல்யாணத்தை நடத்தலாம். ஒருநாள் கல்யாணமும், மூன்று நாள் ஔபாசனமும் செய்ய வேண்டும். வரதக்ஷிணையினால் அதிகச் சங்கடங்கள் ஏற்படுகின்றன. பிள்ளை வீட்டுக்காரர் வாங்கும் பணம் வீணான வழியில் செலவழிக்கப்படுகின்றது. பணம் வாங்காவிட்டாலோ, கௌரவம் இல்லையென நினைக்கிறார் கள். இந்தக் கெடுதியைத் தடுக்க எவ்வளவோ முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. முன் நாளில் கன்னிகைகளுக்கே பிள்ளைவீட்டுக்காரர்கள் பணம் கொடுத்து வந்தார்கள். இப் பொழுது நிலைமை மாறிவிட்டது. அதற்குக் காரணம் அப் பொழுது கன்னிகைகள் குறைவு. ஆகையால் பிள்ளைவீட்டுக் காரன் கன்னிகையின் பிதாவிடம் வந்து யாசித்துக் கன்னிகையைப் பெற்றுப்போவான். இப்பொழுதோ ஒவ்வொரு குடும்பத்திலும் பெண்கள் அதிகமாகிவிட்டார்கள். அதிகமாக இருக்கும் சாமா னுக்குக் கிராக்கியில்லை. இதனால் கல்யாணம் ஒரு வியாபார விஷயமாக மாறிவிட்டது. அந்தக் காலத்தில் புருஷர்கள் ஆசார அனுஷ்டானங்களை வைத்துக்கொண்டிருந்ததால் ஆண் சந்ததி அதிகமாக உண்டாயிற்று. சூரிய உதயத்துக்கு முந்தி ஸ்நானம் செய்து சந்தியாவந்தனம் செய்கின்றவன், அகால மரணத்தை அடையமாட்டான். எல்லோரும் ஆடம்பர ஆடைகளை விலக்க வேண்டும். நீங்கள் கிளப்புக்கும் பீச்சுக்கும் போகும் நேரத்தை சற்றுக் குறைத்துக்கொண்டு நித்ய கர்மானுஷ்டானங்களைச் செய்து வரவேண்டும். உங்களுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும்."

ஸ்வாமிகள் பள்ளி ஆசிரியர்களுக்கு ஒருமுறை செய்த உபதேசத்தின் சாராம்சத்தையும் இங்குத் தருகிறோம்:—

பள்ளி ஆசிரியர்களுக்கு உபதேசம்.

"தாங்கள் கற்ற வித்தையை உபயோகித்துக் கொண்டு அதை ஒரு ஜீவனத்திற்கு வழியாகத் தேடிக்கொள்பவர்கள் உபாத்தியாயர்கள். மற்றவர்கள் எல்லோரும் படிப்பு முடிவு பெற்றதும் வேறு வேடம் போட்டுக்கொண்டு படிப்புக்குச் சம்பந்த மில்லாத தொழில்களில் ஈடுபட்டு வருகிறார்கள். தாங்கள்

கற்பிக்கப் போவதை உபாத்தியாயர்கள் முன்னுடியே ஆராய்ந்து கொண்டால்தான் மாணவர்களின் மனதில் படியும்படி போதிக்கக் கூடிய சக்தி அவர்களுக்கு உண்டாகும். ஒரு வித்வான் ஒரு அரசனிடம் சென்று பாகவதம் சொல்வதாகக் கூறினர். அந்த அரசன் அவரைப் பார்த்து, மற்ருெருமுறை பாகவதத்தைப் படித்து வரும்படி சொல்லி அவரைத் திருப்பியனுப்பிவிட்டான். மறுபடியும் அவர் வந்தபொழுதும் 'மறுபடியும் படித்துவாரும்' எனக் கூறினன். இவ்விதம் 21 முறை அரசன் அவரைத் திருப்பியனுப்பிவிட்டான். இருபத்தோருமுறை பாகவதம் வாசித்த அந்த வித்வான் பாகவதத்தின் உட் பொருளை நன்ருக உணர்ந்து, ஆத்மஞானத்தை அடையும் பொருட்டு காட்டுக்குச் சென்றுவிட்டார். அவர் காட்டுக்குச் சென்றுவிட்டதை அறிந்து அந்த அரசன் தனக்கு உபதேசம் செய்ய அவர் அப்பொழுதுதான் பக்குவமடைந்தார் என்பதை உணர்ந்து அவரைக் காட்டில் தேடிச்சென்று தனக்கு உபதேசம் செய்யும்படி கேட்டுக்கொண்டான். அதுபோல, பலமுறை படிக்கப்படிக்கத்தான் விஷயத்தின் உட்கருத்து வெளிப்படும். அப்பொழுதுதான் நீங்கள் கல்வி போதிக்கத் தகுதியுள்ளவர்களாகயிருப்பீர்கள். பழைய காலத்து ரிஷிகள்போல் நீங்கள் வாழ்ந்து சிஷ்யர்களை நல்ல மார்க்கத்தில் பயில்விக்கச் செய்ய வேண்டும்.''

1932-ஆம் வருடம் டிசம்பர் மாதம் 18-ஆந் தேதி ஸ்வாமிகள் சென்னைத் தங்கசாலைத் தெரு, இந்து தியாலாஜிகல் ஹைஸ்கூலில் மாணவர்களுக்குச் செய்த உபதேசத்தின் சாரம்:—

மாணவர்களுக்கு உபதேசம்.

'' இந்த உலகம் முழுமையும் ஓர் குடும்பம். இந்தக் குடும்பத்திற்குப் பார்வதி பரமேச்வரன் இவர்களே தாய் தந்தையர். இதையே காளிதாஸன் ரகுவம்சம் முதல் சுலோகத்தில் சொல்லியிருக்கிருர். ஆசிரியர்களும் நீங்களும் சேர்ந்து உலகத்தில் ஓர் சிறிய குடும்பமாக விளங்குகிறீர்கள். குழந்தைகளாகிய நீங்கள் இளமையிலேயே கல்வி கற்கவேண்டும். வித்தையைக் கற்பதில் இரண்டு அங்கங்கள் உண்டு. ஒன்று குரு பக்தி; மற்றது ஒழுக்கம். மாணவர்கள் கோபத்தைத் தவிர்க்கவேண்டும். எதையும் கண்டனம் செய்வதில் முற்படலாகாது. மருந்து சாப்பிடும் பொழுது பத்தியமாக இருக்கவேண்டுமல்லவா? அதுபோலவே

கல்வி பயிலும் காலத்தில் மருந்து சாப்பிடும் காலம்போல் நினைத்துக் கொள்ளவேண்டும். அப்பொழுது சுதந்தரத்தைப் பற்றியோ பெரியோர்களின் சொற்களை மீறுவது பற்றியோ நினைக்காதீர்கள். குருபக்தியும், ஒழுக்கமும் மாணவர்களுக்குத் தேவை. அடக்கமே உயர்வைத் தரும். சிறுவர்களாக இருக்கும்பொழுது தாழ்மையுடன் இருப்பவர்கள் பிற்காலத்தில் மேன்மை அடைவார்கள். உங்களுக்கு மாதுர்பக்தி, பிதுர் பக்தி, குரு பக்தி இம்மூன்றும் அவசியமாக இருக்கவேண்டும். தான் என்னும் செருக்கை நீக்கவேண்டும், 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று ஔவைப்பிராட்டியார் கூறியுள்ளளார். வேதமும் அவ்விதமே கூறுகிறது. நீங்கள் கல்வி பயிலும் காலத்தில் உலக விஷயங்களில் தலையிடவேண்டாம். 'உலகத்திற்குச் சேவை செய்யவேண்டாமா?' என நீங்கள் கேட்கலாம். அவசியம் அது செய்யப்பட வேண்டியதுதான். ஆனால் அதற்கு அவசியமான கல்வி அறிவைச் சம்பாதித்துக் கொண்டு பிறகு அதன் வழிநின்று காரியங்களில் ஈடுபடலாம். மூட்டை தூக்குகிற ஒருவனுக்கு ஜுரம் வந்திருக்கும்போது அவன் மூட்டையைத் தூக்கினால் ஜுரம் அதிகமாகிவிடுமல்லவா? நீங்கள் கல்வி பயில்வதை உலக சேவைக்குப் பூர்வாங்கமாக எண்ணி அதில் ஈடுபடவேண்டும். உலக விஷயங்களைப்பற்றி நீங்கள் காதில் போட்டுக்கொள்ள வேண்டாம்."

நம் ஸ்வாமிகள் சென்னைக்கு விஜயம் செய்திருந்தபொழுது' திருவொற்றியூருக்குச் சென்று, அப்புனித க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தியாகேசப் பெருமானையும், ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்மையையும், தரிசித்துக்கொண்டார்கள். பிரும்மா, வால்மீகி, வாசுகி, முதலானோர் இத்தலத்தில் சிவபெருமானைப் பூசித்துள்ளார்கள். அப்பர், சுந்தரர், சம்பந்தர் இம்மூவராலும் பாடப்பெற்ற தலம் இது. சுந்தரர் சங்கிலியாரை இவ்விடம் மணந்த பெருமையைப் பெரியபுராணத்தில் காணலாம். இத்தலத்தில் பல அடியார்கள் பிறந்தும், பல அடியார்களும், சித்தர்களும் முக்திபெற்றும் இருக்கிறார்கள். பட்டினத்தார் முக்தி அடைந்த க்ஷேத்திரம் இதுவே. அவரது சமாதியை ஒரு சிவாலய வடிவத்தில் இன்றும் நாம் இங்குக் காணலாம். அவ்வூர்

திருவொற்றியூருக்கு விஜயமும் தலத்தின் பெருமையும்.

கடற்கரையை நோக்கி நின்ருேமானல், நூற்றுக்கணக்கான சமாதிகள் நம் கண் முன் தோற்றமளிக்கின்றன. இன்றைக்குச் சுமார் 2500 வருடங்களுக்கு முன் தோன்றிய ஸ்ரீ ஆதிசங்கரரும் இத்தலத்தின் பெருமையை அறிந்து, ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்மையின் முன்பு ஸ்ரீ சக்கிர பிரதிஷ்டையும் செய்திருக்கிருர்கள். ஸ்ரீ ஆதிசங்கரரது அழகிய சிலா உருவம் ஒன்றைத் தியாகேசர் ஆலயத்தின் உட்பிரகாரத்தில் காண்கிருேம். இன்றும் திரிபுர சுந்தரி அம்மையைப் பூஜிப்பவர்கள் ஸ்ரீ சங்கரரின் மரபினரான நம்பூத்ரி பிராமணர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அம்பிகைக்கு அங்கு வைதிக முறைப்படி பூஜையும், ஈசனுக்கு ஆகம முறைப்படி பூஜையும் நடைபெற்று வருகின்றன. ஸ்ரீ ஆதிசங்கரருக்குப் பின்னர் காமகோடி பீடத்தை அலங்கரித்த ஆசார்ய ஸ்வாமிகள் பலர் இந்தத் தலத்தில் பல வருடங்கள் தங்கி, தங்களது வேதாந்த விசாரத்திற்கும், தியானத்திற்கும், சமாதிக்கும் ஏற்ற தலமாக இதைக் கொண்டிருந்தாகள். இவ்வூர் ஆலயத்தில் தெற்கு மடவளாகத்தில் சங்கர மடம் ஒன்று அமைந்துள்ளது. இந்த மடம் ஜீர்ணம் அடைந்திருந்ததாதால், ஸ்வாமிகள் விருப்பப்படி அது இச்சமயம் செப்பனிடப்பட்டது. அந்த மடத்தின் உட்புறத்தில் இரண்டு அதிஷ்டானங்கள் காணப்பெறுகின்றன. அவைகளில் ஒன்று 1704 முதல் 1746 வரை பீடத்தில் அமர்ந்திருந்த 61-ஆவது ஆசார்யர்களான மூன்ருவது மஹாதேவேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளுடைய தெனத் தெரிகிறது. மற்ருென்று, 55-ஆவது ஆசார்யர்களான ஸ்ரீ சந்திரசூடேந்திர ஸ்வாமிகளுடைய தென ஊகிக்கப்படுகிறது. மற்றுமொரு அதிஷ்டானமும் தெற்கு வீதியில் அமைந்துள்ளது. இந்த அதிஷ்டானத்திற்குரியவர்கள் இன்னுர் என்பதை நிச்சயமாகக் கூறமுடியவில்லை. ஸ்வாமிகளின் உத்திரவுப்படி இன்று இந்த அதிஷ்டானங்களுக்கு அன்ருடம் பூஜை நடைபெற்றுவருகிறது. இவர்களைத் தவிர இன்னும் பல ஆசார்யர்கள் இத்தலத்தில் தங்கி, திரிபுரசுந்தரி அம்மையை வழிபட்டு இவ்விடத்திலேயே விதேக முக்தி அடைந்திருக்கிருர்களெனவும் கூறப்படுகிறது.

நான்கு மாதங்களுக்கு மேல் ஸ்வாமிகள் சென்னையில் தங்கி மயிலாப்பூர், மாம்பலம், கிண்டி, டவுன், கோமளேச்வரர் ஆலயம், கச்சாலேச்வரர் ஆலயம், மல்லிகேச்வரர் ஆலயம், காளகஸ்தீச்வரர்

ஆலயம், புரசைவாக்கம், திருவல்லிக்கேணி இவ்விடங்களில் நமது ஹிந்துசமைய சம்பந்தமாகப் பக்தர்களுக்கு உபதேசமொழிகளைக்கூறிப் பக்தர்களால் பூஜிக்கப்பெற்று, கும்பகோணத்தில் **1933-**ஆம் வருடம் மார்ச்சு மாதம் நடைபெற்ற மகாமக உத்ஸவத்திற்காக யாத்திரையாகப் புறப்பட்டபொழுது, சென்னை மக்களுக்கு ஸ்வாமிகள் கீழ்கண்டவாறு ஒரு ஆசிச் செய்தியை விடுத்தார்கள் :—

சென்னை மக்களுக்கு விடுத்த ஆசிச் செய்தி.

"சத்தியத்தைச் சொல்; தர்மத்தை நடத்து; அன்னை, பிதா, குரு இவர்களைத் தெய்வமாகக் கொள் ;" என நமது வேதம் உபதேசிக்கின்றது. நம் சைவம், வைஷ்ணவம் முதலிய ஆறு சமயங்களையும் நமது புண்ணிய பூமியில் ஸ்தாபிக்கும் பொருட்டு ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னர் நமது நாட்டில் அவதரித்த ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாதாசார்ய ஸ்வாமிகள் தாம் அருளிய பிரச்னோத்ர ரத்ன மாலிகை என்னும் நூல்ல் வேதத்தில் கூறப்பட்ட சத்தியம், தர்மம் என்ற சொற்களுக்குக் கீழ்க் கண்டவாறு பொருளை விளக்கி உள்ளார்கள்.

"பிராணிகளுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியதுதான் சத்தியம், தனது வம்சத்தில் சதாசாரமுள்ள சாதுக்களான முன்னோர்கள் எதைத் தர்மம் எனக் கொண்டார்களோ அதுவே ஒருவனுக்கு தர்மம்."

உலகத்திற்கே அன்னையாகவும் தந்தையாகவும் குருவாகவும் விளங்கும் அம்பிகை, ஈசன், தக்ஷிணாமூர்த்தி, அல்லது கீதையை உபதேசித்த கிருஷ்ண பகவான் இவர்களை மனதில் விட்டகலாது எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

வேதியர்கள் வேத சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட கர்மானுஷ்டானங்களைப் புறக்கணிக்காது கூடிய மட்டும் அவைகளை அனுஷ்டித்துத் தங்கள் உடை நடை முதலியவைகளால் சுமத்திக் கொண்டிருக்கும் அதிகச் செலவுகளையாவது குறைத்துக்கொண்டு, சில சமயங்களில் உணவுகூட கிடைக்காது சிரமப்படும் குடியான மக்களுக்கும் பிற மக்களுக்கும் ஒரு வாரத்தில் ஒரு முறையாவது அந்த அந்தக் கிராம தேவதைகளின் சந்நிதானங்களில் குறிப்பாக வெள்ளியிலாவது, செவ்வாயிலாவது, தங்கள் சக்திக்கு இயன்றவாறு கஞ்சி, கூழ் முதலியவைகளை ஊற்றும் கடமையைக் கைகொள்ளவேண்டும்.

வர்த்தகர்கள், வேளாளர்கள், தொழிலாளர்கள், குடிமக்கள் முதலானோர் தங்கள் குலத்திலுதித்த பெரியோர்கள் மனப்பான்மையை அனுசரித்து அந்தணர்களையும் ஹரிஜனங்களையும் அன்புடன் ஆதரிப்பதைக் கடமையாகக் கொள்ளவேண்டும்.

ஹரிஜனங்களும், 63 நாயன்மார்களில் திலகமாக விளங்கும் ஸ்ரீ நந்தனாரின் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து, ஈசனிடத்திலே பேரன்பு செலுத்தி தங்கள் முன்னோர்களின் குலாசாரத்தை மீறி நடவாமல் இருப்பது அவர்களின் நன்மைக்கு ஏதுவாகும். இவ்விரு ஒழுக்கங்களையும் தம் வாழ்க்கையின் இலக்ஷியங்களாகக் கொண்ட நந்தனாரின் உள்ளொளி எவ்விதம் பரமசிவனின் பாதாரவிந்தத்திற்கு ஆளாயிற்றோ, எவ்விதம் நந்தனாரின் தூய மனம் இவ்வுலக வாழ்க்கைக்கு ஆதாரமான நெல்விளை நிலங்களையும் செழிக்க வைத்ததோ, அதுபோல் ஒவ்வொருவரும் தம் குலத்து முன்னோர்களுடைய தர்மத்தைத் கடைப்பிடித்து, அருளையும் பொருளையும் பெற்று, பக்தி, பொறுமை, அடக்கம் இவைகளில் எல்லோருக்கும் வழிகாட்டிகளாக இருக்கவேண்டும்.

எல்லாச் சமூகங்களிலுமுள்ள ஸ்திரீகளும், அவர்களின் புருஷர்கள் அயற் பழக்கங்களினால் ஒரு சமயம் சமயாச்சாரங்களிருந்து வழுவினாலும், பண்டைக் காலத்துத் திலகவதியார் போலவும், மங்கையர்க்கரசியார் போலவும் ஈசனிடத்தில் சித்தத்தை ஒரே நிலையில் செலுத்தி, தம் கணவன், உடன்பிறந்தார், மக்கள் ஆகிய அனைவரையும் நல்வழிப்படுத்தவேண்டும். இவ்விதமான நம் பெரியோர்களின் நல் வழிகளால் நமது சமயமும் சமூகமும் மேன்மேலும் க்ஷேமத்தை அடையவேண்டும்.''

சென்னையிலிருந்து மகாமகத்திற்காக ஸ்வாமிகள் புறப்பட்ட செய்தியைக் கூறினோம். அம்மகோற்சவத்திற்குரிய நகரமான கும்பகோணம், மடத்தின் சரித்திரத்தில் மிகவும் பெருமை வாய்ந்தது என்பது இதுவரையில் கூறிய வரலாறுகளினாலேயே தெரியவரும். இந்நகர்க்குப் பாஸ்கர க்ஷேத்திரம் என்றும் மற்றோர் பெயர் உண்டு. பாஸ்கரன் என்பது சூரியனைக் குறிக்கிறது. சித்திரை மாதத்தில் இத்தலத்தின் நாகேசர் ஆலயத்தின் சிவலிங்கத்தின் மேல், நேராகச் சூரிய ஒளி வீசுவதால் இத்தலத்திற்கு இந்தப் பெயர் வந்திருக்கலாம். பிரும்மா உள்பட மும்மூர்த்தித் தலங்கள் பல இவ்வூரில் விளங்கி வருகின்றன.

கும்பகோண தலத்தின் புராண வரலாறு.

மகாப்பிரளய காலத்தில் உலகெலாம் தண்ணீரில் மூழ்கிவிடும். அப்பொழுது பரமசிவன், மகாவிஷ்ணு, பிரும்மா, இம்மூவரே எஞ்சியிருப்பர். சிருஷ்டி காலத்திலிருந்து பல முறை இவ்விதப் பிரளயங்கள் தோன்றியதுண்டு. இம்மாதிரியான ஒரு பிரளய காலத்தின் முன்பாகவே பிரும்மா பரமசிவனை அடைந்து, பிரளயத்திற்குப்பின் மீண்டும் உலக சிருஷ்டி செய்யச் சாதனம் வேண்டுமே யெனக் கேட்க, பரமசிவன் தமது திருக்கரங்களினால் மண்ணெடுத்து அதை அமிர்தத்துடன் கலந்து பிசைந்து, ஒரு குடமாக்கி அக்குடத்தில் அமிர்தத்தையும், சிருஷ்டிக்கு ஆதாரமான விதைகளையும், நான்கு வேதங்களையும், நிரப்பி அதன்மேல் ஒரு தேங்காயையும், மாவிலையையும், தர்ப்பைப் புல்லையும் (யக்ஞோபவீதம் என்னும்) பூணூலையும், வைத்து அலங்கரித்து அக்குடத்தை மகா மேரு மலையின் உச்சியில் வைத்துவிட்டு வரும்படி பிரும்மாவிடம் கொடுத்தார். பிரும்மாவும் பரமசிவனின் ஆணையைச் சிரமேற் கொண்டு அக்குடத்தை ஓர் உரியில் அமைத்து, அதை மேரு மலையின் சிரத்தில் வைத்து வந்தார். பிரளயம் வந்தவுடன் அந்தக் குடமானது தண்ணீரில் மிதந்து, காற்றினால் தள்ளப்பட்டு, வெகு தூரம் தெற்கு நோக்கி வந்துகொண்டிருந்தது. பிரும்மாவும் அக்குடத்துடனேயே வந்துகொண்டிருந்தார். புயல் காற்றில் ஏற்பட்ட அசைவினால், கும்பத்தில் வைத்திருந்த தேங்காய் தென்கிழக்குத் திசையில் ஓர் இடத்தில் விழுந்தது; அவ்விடத்தில் நாரிகேளேச்வரர் என்னும் பெயருடன் ஒரு சிவலிங்கம் விளங்கிற்று. மாவிலையும், தருப்பையும் திருப்புறம்பியம் என்னும் இடத்தில் விழவே, அவ்விடத்திலும் ஒரு லிங்கம் தோன்றிற்று. பூணூல் விழுந்த இடத்தில் சூத்திரநாதர் என்னும் லிங்கம் உண்டாயிற்று. மேலும் தெற்கு நோக்கி வந்துகொண்டிருந்த அந்தக் குடம் ஓர் இடத்தில் தங்கிற்று. அப்பொழுது பரமசிவன் அதை நோக்கி ஓர் அம்பை எய்தார்; எந்த இடத்தில் நின்று அவர் அம்பை எய்தாரோ அவ்விடத்திற்குப் பாணபுரி என்னும் பெயர் அமைந்தது; அவ்விடமுள்ள ஈசனுக்குப் பாணபுரீசுவரர் என்பது பெயர்; கும்பகோணத்தில் பாணுதுறை என்று கூறப்படும் தலம் இதுதான். (பாணுதுறை என்பது இப்பொழுது வாணுதுறை என்று மாறியிருக்கிறது.) அம்பினால் ஏற்பட்ட துவாரத்தின் வழியாகக் குடத்திலுள்ள அமிர்தம் வழிந்தோடியது; ஐந்து வழிகளாக அது வழிந்து வரவே, அவ்வழிகளில் பஞ்சக்குரோசம் என்னும் ஐந்து புண்ணியத்

தலங்கள் தோன்றின. அவை திருவிடைமருதூர், திருநாகேச்வரம், தாராசுரம், சுவாமிமலை, கருப்பூர் என்பனவாகும். குடத்தின் வாய் சிதறி விழுந்த இடமே குடவாசல் எனக் கூறப்படும் குடவாயில். கடைசியாகக் குடம் தங்கிய இடம்தான் கும்பகோணம். இங்குத் தான் ஆதிகும்பேச்வரர் காட்சியளிக்கின்றார். கும்பம் என்றால் குடம்; கோணம் என்றால் மூக்கு; இங்குக் கும்பத்தின் மூக்கு பரமசிவனால் உடைக்கப்பட்டதால், இத்தலத்திற்குக் குடமூக்கு என்ற பெயர் வந்தது. வைஷ்ணவர்கள் இத்தலத்தைத் திருக் குடந்தை எனக் கூறுவர். அந்தக் கும்பத்திலிருந்த அமிர்தம் முடி வில் தங்கிய இடம் மகாமக தீர்த்தமும், பொற்றாமரைத் தீர்த்தமும் ஆகும். இவ்விதமான ஆச்சரியகரமான நிகழ்ச்சிகளெல்லாம் மாசி மாதமாகிய கும்ப மாதத்திலேயே நிகழ்ந்திருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும். கும்பேச்வரர் ஆலயத்தைத் தவிர, பழமையானதும், புராண மகிமை பெற்றதும், பக்தர்களால் பாடப்பெற்றதுமான பல சிவ, விஷ்ணு ஆலயங்கள் இத்தலத்தில் அமைந்துள்ளன அவற்றுள் சிவத்தலங்களில், நாகேசர், சோமேசர், அபிமுக்தேசர் ஆலயங்களையும், வைணவ தலங்களில், சாரங்கபாணி, சக்ரபாணி, ராமஸ்வாமி ஆலயங்களையும் முதன்மையாகக் கூறலாம். பிரும் மாவிற்கும், இங்கு ஒரு தனி ஆலயம் அமைந்துள்ளது. பிரும்மாவிற் குத் தனி ஆலயம் நமது பாரத நாட்டில், மற்றும் ஓர் இடத்தைத் தவிர வேறெங்கும் அமைந்துள்ளதாகத் தெரியவில்லை. அமிர்த குடத்துடன் இத்தலத்திற்கு வந்த பிரும்மாவை வணங்க வேண்டி இவ்வாலயம் ஏற்பட்டதாக நினைக்கவேண்டியிருக்கிறது. வைஷ் ணவத் தலங்களுள் முதன்மையாக விளங்கும் சாரங்கபாணி ஆல யத்தின் கோபுரம் நம் நாட்டில் மற்ற கோபுரங்களைவிட உயர்ந்த தாகும். சாரங்கபாணியை, நம்மாழ்வார் உள்பட பத்து ஆழ்வார் கள் மங்களா சாஸனம் செய்துள்ளார்கள்; ஹேமரிஷி என்னும் முனிவர் இப்பெருமானைக் குறித்துத் தவம் செய்து தமது குமாரி யான கோமளவல்லியை உத்தராயண புண்ய காலத்தில், மகர சங்கராந்தி அன்று, சாரங்கபாணிக்குப் பாணிக்கிரகணம் செய்து கொடுத்ததாகத் தல புராணம் கூறுகின்றது. (ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாள் ஸ்ரீரங்கநாதரை அடையத் தானே தவம் இருந்தாள். திருக்குடந்தையிலோ தம்புதல்வியின் விவாகத்தில் கவலைகொண்ட ஹேமரிஷி அக்கன்னிகையின் பொருட்டு தவம் இருந்தார். இன் றைக்கும் பொற்றாமரைக் குளத்தின் வடகரையில் ஹேமரிஷி

மண்டபம் என்ற ஓர் மண்டபம் அமைந்துள்ளதைக் காணலாம்.) சாரங்கபாணியை ஆராவமுதன் எனவும் கூறுவார்கள். 'எப்பொழுதும் குறைவில்லாத அமுதத்தை வைத்திருப்பவன்' என்பது இதன் பொருளாகும். பரமசிவன் அளித்த அமிர்தமானது இத்தலத்தில் தங்கியிருப்பதாலும் இப்பெயர் சாரங்கபாணிக்கு மிகப் பொருத்தமாகும். இவ்வூரில் சங்கர மடம் அமைந்திருப்பதுடன், இராமாநுஜ, மத்வ ஆசாரியர்களின் மடங்களும், சைவ மடங்களும், ஒரு ஜைன மடமும் அமைந்துள்ளன. இத்தலத்தைக் காசிக்கு வீசம் அதிகமெனப் பெரியோர்கள் பெருமையாகக் கூறுவதுண்டு.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை குரு சிம்ம ராசியில் வரும்பொழுது கும்ப மாதத்தில் இந்த மகாமக புண்யகாலம் கும்பகோணத்தில் ஏற்படுகிறது. இப்புண்ய காலத்தில் கங்கையானது மகாமகக் குளம் எனக் கூறப்படும் தடாகத்திற்கு வருவதாகவும், புராணத்தின் மூலம் அறிகின்றோம். ஒன்பது கன்னிகைகள் இத் தடாகத்தில் நீராடி அவர்கள் விரும்பிய பேறுகளைப் பெற்றார்கள். மகாமகக் குளக்கரையின் வட பாகத்தில் அமைந்துள்ள காசிவிசுவநாதர் ஆலயத்தில் அக்கன்னிகைகளின் விக்ரகங்கள் காணப்படுகின்றன. மகாமக காலத்தில் லக்ஷக்கணக்கான மக்கள் அக்குளத்தில் நீராடி வருவதால் தண்ணீரில் மூழ்கி ஜனங்களுக்கு உயிர்ச்சேதம் நேராதவண்ணம் சர்க்காரும், நகர சபையும், முன்யோசனையுடன் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு முன்னரே, குளத்தின் தண்ணீரை இயந்திர சாதனத்தைக் கொண்டு இறைத்து, இடுப்பளவுக்கு மேல் தண்ணீர் நிற்காமல் செய்து, சுகாதாரத்திற்காகத் தடுப்பு மருந்தையும், தண்ணீரில் கலந்து விடுவார்கள்.

1933 - ஆவது வருடத்திய மகாமகம்.

ஆங்கிரஸ வருடம் மாசி மாதம் இருபத்தைந்தாம் தேதி (8-3-1933) புதன்கிழமை அவ்வருடம் மகாமகம் நிகழ்ந்தது. அப்பொழுது யுத்தமோ, பஞ்சமோ இல்லாமல் காலம் மிகவும் சுபிக்ஷமாக இருந்தது. போக்குவரவுச் சாதனங்களும் மக்களுக்குக் குறைவில்லாமல் கிடைத்தன. தென்னிந்திய ரயில்வே கம்பெனியாரும் நாலா பக்கங்களிலிருந்தும் அதிக வண்டித் தொடர்களைவிட ஏற்பாடு செய்திருந்தனர். போலீஸ் இலாகாவிலும் பஸ்போக்குவரத்தை நன்கு கட்டுப்பாடு செய்து, ஜனங்கள் ஊருக்குள் வரவும், தாமதமின்றி அவர்களை வெளியேற்றவும், ஏற்பாடுகளைச் செய்திருந்

தனர். சுமார் ஆறு லக்ஷம் ஜனங்கள் அன்று கும்பகோணத்திற்கு வந்து மகாமகக் குளத்தில் நீராடியதாக மதிப்பிடப்படுகிறது. இதில் கால் மடங்கு சுற்றுப்புறங்களிலிருந்து கால்நடையாகவும், மாட்டு வண்டிகளிலும் வந்தவர்கள். திருவிழாக்களில் கண்காட்சி ஏற்படுத்துவதென்பது அந்நாளில் ஓர் புதுமையாக இருந்தது. நகர சபையார் அவ்விதக் கண்காட்சி ஒன்றை அப்பொழுது ஏற்படுத்தினர்கள். வியாபாரிகள் தங்கள் பொருள்களை மக்களது மனதைக் கவரும் வண்ணம் தீப அலங்காரத்துடன் விளம்பரம் செய்தார்கள். கண்காட்சியில் சங்கீதம், நாட்டியம் முதலிய நிகழ்ச்சிகளையும் அமைத்திருந்தனர். அவ்வருட மகாமகம் பொதுமக்களுக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தரக்கூடியதாக இருந்தது. தனி மனிதர்களும், பொது ஸ்தாபனங்களும், பல இடங்களில் அன்னதானத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அவைகளுள் சங்கர மடத்தில் நடைபெற்ற தேப்பெருமாநல்லூர் சிவன் நடத்திய அன்னதானம் மிகப் பெரியதாகும்.

நம் ஸ்வாமிகள் 1933-இல் பிப்ரவரி மாத முதல் வாரத்தில் சென்னையிலிருந்து புறப்பட்டு, மகாமகத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் திருவிடைமருதூரில் விஜயம் செய்தார்கள். ஸ்வாமிகள் 1919-ல் பிப்ரவரி மாதம் கும்பகோணத்திலிருந்து விஜய யாத்திரையாகப் புறப்பட்டு, (1922-ல் அக்டோபர் மாதம்) துந்துபி புரட்டாசி பூர்ணிமி அன்று இராமேச்வரத்தில் கங்கா யாத்திரைக்காகச் சங்கல்பம் செய்துகொண்டு கங்கையில் கலப்பதற்கெனக் கடலிலிருந்து மணலை எடுத்துக்கொண்டார்கள் என்று முன்னே கூறினேம். ஆகையால் அந்தச் சங்கல்பம் நிறைவேறும் வரையில் தமது சொந்த மடத்தில் தங்கலாகாதென்ற காரணத்தினல், திருவிடைமருதூர் பச்சையப்ப முதலியார் அக்ரஹாரத்தில், சென்னை மயிலாப்பூர் லாஜர்னல் பிரஸ் சொந்தக்காரர் ஆர். நாராயண சுவாமி ஐயர் அவர்களது ஜாகையில் தங்கியிருந்து, மகாமக ஸ்நானத்திற்கும், ஸ்வாமி தரிசனத்திற்கும் ஸ்வாமிகள் கும்பகோணத்திற்கு அவ்விட மிருந்தேச் சென்று வந்தார்கள்.

மகாமகத்தன்று காலை 4 மணிக்குப் புறப்பட்டு 5-மணி சுமாருக்கு, மகாமகக் குளத் தென்கரையில் வழக்கமாக ஸ்வாமிகள் தங்கும் மண்டபத்திற்கு விஜயம் செய்து, தடாகத்தில் விதிப்படி சங்கல்பம் செய்துகொண்டு நீராடினர்கள். ஸ்வாமிககள் நீராடிய

பொழுது அவர்களுடன் ஆயிரக்கணக்கான சிஷ்யர்களும், கூடவே நீராடினர். போலீஸ் அதிகாரிகள் அப்பெருந்திரளான கூட்டத்தில் ஸ்வாமிகளுக்குத் தகுந்த வசதி ஏற்படுத்திக் கொடுத்தனர். அந்த மகாமகக் குளத்திற்குத் தீர்த்தம் கொடுக்க வந்த தேவாலயங்களின் உத்ஸவ மூர்த்திகளையெல்லாம் ஸ்வாமிகள் அன்று தரிசனம் செய்து கொண்டார்கள். பன்னிரண்டு ஆண்டுகளுக்குப்பின் ஸ்வாமிகளைத் தரிசிக்க விரும்பிப் பக்தர்கள் அப்பொழுது மிகுந்த ஆவலுடன் மேலும் மேலும் வந்துகொண்டிருந்தனர். அக்காலத்தில் மடத்தின் திருப்பணியும் பூர்த்தியடைந்திருந்தது. அவ்வருட மகாமகத்தன்று திருப்பணி பூர்த்தியடைந்த நாளைக் கொண்டாட நகர மக்களும், மடத்தின் அதிகாரிகளும், ஏற்பாடு செய்திருந்தனர். கங்கா யாத்திரை பூர்த்தியடைவதற்குமுன் மடத்திற்கு வருவது தாம் செய்து கொண்டிருந்த சங்கல்பத்திற்கு விரோதமாகையால், ஸ்வாமிகள் அப்பொழுது மடத்தினுள் பிரவேசிக்கவில்லை. ஸ்வாமிகள் மடத்தில் பிரவேசிக்காமல் மடத்தின் திருப்பணியை வெளியிலிருந்தே பார்வையிட்டார்கள். மேலும் நடைபெறவேண்டிய திருப்பணிகளைப் பற்றியெல்லாம் தமது ஆலோசனைகளைக் கூறினார்கள்.

கும்பகோணத்தில் சங்கரமடம் தோன்றிய வரலாறும் திருப்பணியும்.

இன்றைக்குச் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர் காமகோடி பீடத்தின் 62-ஆவது ஆசாரியர்களான ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள், அக்காலத்தில் காஞ்சி பிராந்தியத்தில் நடைபெற்ற கர்நாடக யுத்தத்தின் காரணமாகத் தஞ்சை ராஜ்யத்திற்குத் தமது வாசஸ்தலத்தை மாற்றிக்கொண்டார்களென முன் பகுதியில் கூறப்பட்டிருக்கிறது. அப்பொழுது தஞ்சையில் மகாராஷ்டிரர்களின் அரசு நடைபெற்று வந்தது; மன்னர் பிரதாபசிம்ஹரது அமைச்சர் டபீர்பந்த் என்னும் அந்தணர் கும்பகோணத்தில் காவிரியின் தென்கரையில் இந்த மடத்தையும், நான்கு அக்ரஹாரங்களையும், மடத்துக்காக அமைத்துக்கொடுத்தார். இந்த மடம் அங்கு அமைக்கப் பெறுவதற்கு முன்னர் அவ்விடங்களிலெல்லாம் தென்னைமரச் சோலைகள் நிறைந்திருந்தன. டபீர்பந்த் அப்பொழுது மடத்தை ஓர் ஓட்டுக் கட்டிடமாகவே அமைத்துக்கொடுத்தார். அப்பொழுது தஞ்சையில் தங்கியிருந்த ஸ்வாமிகள் காவிரிக்கரையிலுள்ள கும்பகோணத்திற்குத் தமது வாசஸ்தலத்தை விரைவில் மாற்றிக்கொள்ள விரும்பியதால் அவசர நிமித்தம் இவ்விதம் கட்டப்பட்டதாக ஊகிக்கலாம்.

ஆனால் பிரதாபசிம்ஹ மன்னருக்குப் பின்னர் வந்த சரபோஜி மன்னர், காசி யாத்திரை சென்றுவந்தபொழுது 1820-ஆவது ஆண்டில் பழைய கட்டிடத்திற்கு வடபுறம் ஸ்வாமிகளின் பூஜைக்கென விமானத்துடன் கூடின ஒரு கர்ப்பக்கிருகத்தையும், அதைச் சுற்றி மண்டபங்களையும், அமைத்துக்கொடுத்தார். இதை விளக்கும் ஓர் சிலாசாஸனம் அந்தக் கர்ப்பக்கிருகத்தின் முன்சுவரில் பதிக்கப்பெற்றிருக்கிறது. பழைய ஓட்டுக் கட்டிடங்களும், வருடங்கள் பல சென்றமையால் சிதிலம் அடைந்து கீற்றுக்கொட்டகையாக மாற வேண்டிய நிலை வந்துவிட்டது. 1923-ஆம் வருடம் திருவானைக்கா மடத்தின் திருப்பணி முடிவுபெற்றவுடன், கும்பகோணம் மடத்தின் திருப்பணியையும் நடத்தவேண்டுமென ஸ்வாமிகள் விரும்பினார்கள். அக்காலத்தில் மடத்தின் சர்வாதிகாரியாக இருந்த வக்கீல் கே. குப்புஸ்வாமி ஐயர் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு தளராத ஊக்கத்துடன் அப்பணியில் ஈடுபட்டார். முழுவதும் கருங்கல் மண்டபமாகவே இக்கட்டிடத்தை அமைக்கவேண்டுமெனத் தேப்பெருமா நல்லூர் சிவன் விரும்பினர். மரமோ, இரும்போ சேராமல் பழைய முறையில் கல்லை மாத்திரம் உபயோகித்துக் கட்டிடம் அமைப்பதில், அதிகப் பொருள் செலவாகுமென மடத்தின் அதிகாரிகள் எடுத்துரைத்தனர். ஆயினும் அடிக்கடி பழுதுபார்க்க வேண்டிய அவசியம் ஏற்படாதென்ற காரணத்தினால் திருப்பணியானது கற் கட்டிடமாகவே அமையவேண்டுமெனச் சிவன் கூறியதை ஸ்வாமிகளும் ஏற்றுக்கொண்டார்கள். இவ்வேலைக்கென திருக்கோவிலூரிலிருந்து முதிர்ந்து தேர்ச்சிபெற்ற கருங்கற்கள் ரயில்மூலம் தருவிக்கப்பட்டன. புதுக்கோட்டை சமஸ்தானம் கடியாபட்டி திவான்பகதூர் தர்மபூஷணம் தீ. நா. முத்தையா செட்டியார் இத்திருப்பணிக்கென ரூ. 25,000-0-0 நன்கொடையாக அளித்தார். மடத்தின் வருமானத்திலிருந்து ரூ. 75,000க்கு மேல் இத்திருப்பணியில் செலவிடப்பட்டது. சிவனின் மேற்பார்வையிலும், மடத்து நிர்வாகிகளின் பராமரிப்பிலும் அந்தத் திருப்பணி 1933-ஆவது ஆண்டு முடிவுபெற்று அதன் விழா மகாமகத்தன்று கொண்டாடப்பட்டது.

பின்னர் வெளிமண்டபம், உக்கிராணக்கட்டு, ஸ்வாமிகள் தனிமையில் தங்கியிருக்கும் இடங்கள், கோசாலை, இவைகளின் திருப்பணிகளை நடத்தும் பொறுப்பைக் கும்பகோணம் டாக்டர் ஆர். மகாலிங்க ஐயரின் தந்தையாரும், மாஜி தாசில்தாருமான

இராமமூர்த்தி ஐயரும், கும்பகோணம் டபீர் நடுத்தெருவு டெபுடி கலெக்டர் அ. கிருஷ்ணஸ்வாமி ஐயரின் புதல்வர் ஏ. கோபால ஐயரும் ஏற்றுக்கொண்டு, சிஷ்யர்களின் பொருளுதவியின் பேரில் செய்து முடித்தார்கள். மேலும் இந்தத் தர்மத்திற்கென இராமநாத புரம் ராஜா, கோல்லங்கோடு ஸீனியர் இராணி, மற்றும் தமிழ் நாட்டிலும், ஆந்திர தேசத்திலுமுள்ள பிரமுகர்கள் பலர் தாராள மாகப்பண உதவி செய்துள்ளார்கள்.


கும்பகோணத்தில் ராஜா கோவிந்த தீக்ஷிதர் பாடசாலைக் கட்டிடத் திறப்புவிழா.

தஞ்சையில் நாயக்க மன்னர்களிடம் அமைச்சராக இருந்த ஐயன் என்ற கோவிந்த தீக்ஷிதரைப் பற்றி இப்புத்தகத்தின் துவக் கத்தில் கூறப்பட்டுள்ளது. கும்பகோணத் தில் காமாக்ஷி ஜோஸ்யர் தெருவின் மேற்குக் கோடியில், காவிரியின் கரையை அடுத்த ஓரிடத்தில் அந்த அமைச்சர் ஒரு வேதசாஸ் திர பாடசாலையை ஏற்படுத்தியிருந்தார். அப்பாடசாலையானது நாயக்கர்கள் ராஜ்யம் மறைந்த பிறகு, மகாராஷ்டிர மன்னர்களால் பரிபாலிக்கப்பட்டு வந்தது. ஏராளமான மாணவர்கள் இந்தக் குரு குலத்தில் நான்கு வேதங்களையும், பல சாஸ்திரங்களையும் கற்று வந்தார்கள். தஞ்சை அரசுரிமையைக் கிழக்கிந்தியக் கம்பெனியார் நேரில் ஏற்றுக்கொண்ட பிறகு இதன் நிர்வாகம் தஞ்சை கலெக்ட ரிடமும், பின்னர் சத்திரம் இலாகாவினிடமும், அதன் பின்னர் தேவஸ்தானக்கமிட்டி இடமும் வந்தது. கே. ஆர். எம். சிங்காரம் செட்டியார் என்னும் பக்தர் தேவஸ்தானக் கமிட்டியின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டவுடன் இந்தப் பழைய குருகுலத்தின் கட்டிடத்தைப் புதுப்பிக்கச் செய்தார். 1933-ஆவது வருடம் மகாமகத்தன்று அதன் கிரஹப்ரவேசத்தைக் கமிட்டியின் வேண்டுகோளுக்கிணங்க ஸ்வாமிகள் நிறைவேற்றி வைத்தார்கள். அப்பொழுது முனிஸிபல் சேர்மெனாகவிருந்த முத்துக்குமர செட்டியார் ஸ்வாமிகளுக்கு அங்கு ஓர் வரவேற்புப் பத்திரம் வாசித் தார். அன்று அந்தக் குருகுலத்தைப் பற்றி ஸ்வாமிகள் பேசிய பொழுது, "நல்ல அஸ்திவாரத்துடன் கட்டப்படும் கட்டிடம் பல வருடங்கள் நிலைத்திருப்பதுபோல், நானூறு ஆண்டுகளுக்கு முன் னர் மகான் கோவிந்த தீக்ஷிதரால் துவக்கப்பட்ட இந்தக் குருகுலத் தில் அன்று முதல் இன்று வரை நாள் தவறாது வேத கோஷம் ஒலித்துக்கொண்டிருக்கிறது; இராஜ்யங்கள் பல மாறினாலும் அந்த அமைச்சர் ஏற்றிவைத்த விளக்கு அணையா விளக்காக

ஒளிபெற்று வருகிறது; நல்ல எண்ணத்துடனும், பலமான அடிப்படையுடனும் ஏற்படுத்தப்படும் எந்தத் தருமமும் நீடூழிக்காலம் நடைபெற்று" வரும் என்று கூறினார்கள். அச்சமயம் கோவிந்த தீக்ஷிதரின் சரித்திரத்தை அனந்தப்பூர் அரசாங்கக் கல்லூரியின் ஆங்கிலப் பேராசிரியர் என். கே. வேங்கடேசம் பந்துலு ஆங்கிலத்தில் ஓர் ஆராய்ச்சி நூலாக வெளியிட்டு, அதை ஸ்வாமிகளுக்குச் சமர்ப்பணம் செய்தார். இந்தப் பாடசாலையின் தலைவராக மகான் அப்பைய்ய தீக்ஷிதர் வம்சத்தில் உதித்தவரும், மன்னார்குடி ராஜு சாஸ்திரிகளின் பேரருமான மகாமகோபாத்தியாய சாஸ்திர ரத்னகரம் யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் சில ஆண்டுகள் இருந்து வந்தார்கள்.

திருவிடைமருதூரில் வடக்குக் கோபுர வாயிலுக்கு அடுத்த மகாதானவீதியில் சங்கர மடம் ஒன்று அமைந்துள்ளது. 1933-ஆவது வருடத்திய மகாமகம் முடிந்தபிறகு ஸ்வாமிகள் சில மாதங்கள் திருவிடைமருதூரில் அந்த மடத்தில் தங்கி இருந்தார்கள். திருவிடை மருதூர் மூவரால் பாடப்பெற்ற சிறப்பு வாய்ந்த தலம்; இங்குத் தலவிருக்ஷம் மருதுமரம்; வரகுணபாண்டியனுக்கு பிரும்மஹத்திதோஷம் நீங்கிய தலமும் இதுதான். ஸ்ரீ ஆதிசங்கரர் இத்தலத்திற்கு விஜயம் செய்தபோது, ஸ்ரீ மகாலிங்க ஸ்வாமியைத் தரிசித்துக் கொண்டார்கள். அப்பொழுது லிங்கத்தின் நுனியிலிருந்து ஓர் புருட உருவம் தோன்றித் தன் வலதுகையை உயர்த்தி, "அத்வைதமே உண்மை" யென மும்முறை கூறி மறைந்ததென மாதவீய சங்கர விஜயத்தில் கூறப்பட்டுள்ளது. தைப்பூசத்தன்று இங்கு நடைபெறும் தேர்விழாவைப் பல்லாயிரம் மக்கள் கண்டு களிப்புறுவர். 1933ல் நடைபெற்ற ஸ்ரீ மகாலிங்க ஸ்வாமியின் வெள்ளி ரத விழாவன்று, திருவாவடுதுறை ஆதினம் ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க பண்டார சந்நிதி அவர்கள் நம் ஸ்வாமிகளை நேரில் சந்தித்து, மதிப்பிற்குரிய மரியாதைகளையெல்லாம் செய்து வெகுவாக அவர்களைப் பாராட்டினார்கள். ஸ்வாமிகளும் பண்டார சந்நிதிகளின் ஆதினத்தின் கீழ்த் தேவாலயங்களும், மற்ற தருமங்களும், தக்க முறையில் நிர்வகித்து வரப்படுவதைப்பற்றியும், ஆதினத்தின் பழைய பெருமைகளைப்பற்றியும், ஆதீனம் செய்து வரும் பணிகளைப் பற்றியும், முதிர்ந்த வயதில் பண்டார சந்நிதிகள் செய்துவரும் பல கைங்கரியங்களைப்பற்றியும் வெகுவாய்


திருவிடைமருதூருக்கு விஜயம்.



1933-ல் திருவிடை மருதூரில் சங்கர ஜயந்தி விழா



1948-ல் கொச்சி மகாராஜாவுக்கு "தர்சனகலாநிதி" பட்டம் அளிக்கப்பெற்ற பொழுது-நடுவில் மகாராஜாவும் அவரது இருபக்கங்களிலும் மடத்தின் பிரதிநிதிகளும் நிற்கின்றார்கள்.



1933-சங்கர ஜயந்தி உத்ஸவம் ஆதிசங்கரர் பட ஊர்வலத்துடன்
ஸ்ரீ ஸ்வாமிகள் வரும் காட்சி

மெச்சினர்கள். ஸ்ரீலஸ்ரீ ஆதீன கர்த்தர்கள் அவர்கள் 14-3-1933 அன்று ஸ்வாமிகளுக்குப் பிக்ஷை நடத்திவைத்து, மடத்தின் அன்றைச் செலவுகளையெல்லாம் ஆதீனத்திலிருந்தே நடைபெறச் செய்தார்கள்.

திருவிடை மருதூரில் சங்கர ஜயந்தி.

அவ்வருடத்து ஸ்ரீ சங்கரஜயந்தி உத்ஸவத்தை ஸ்வாமிகள் திருவிடைமருதூரில் மிகவும் சிறப்பாக நடைபெறச் செய்தார்கள். வித்வான்களின் பெரிய சபை ஒன்று கூட்டி அவர்களைக் கொண்டு வேதாந்த தத்துவ விசாரமும், உபந்யாசங்கள் பலவும் நிகழச் செய்தார்கள். ஐந்து நாட்கள் நடைபெற்ற அந்த விழாவின்போது ஸ்ரீ ஆதி சங்கரர் இயற்றியுள்ள நூல்களைப்பற்றியும், குறுகிய காலத்திற்குள் அவர்கள் பாரத பூமி முழுவதும் சஞ்சரித்து நிகழ்த்தியுள்ள பல சாதனைகளைப் பற்றியும், அத்வைத சித்தாந்தத்தைப் பற்றியும் ஸ்வாமிகள் சிஷ்யர்களுக்கு உபதேச மொழிகளாக அருளினர்கள். விழா முடிவு பெற்ற நாளன்று, ஆதி சங்கரரின் திருவுருவப்படமானது யானைமீது ஆரோகணிக்கப்பெற்று நான்கு வீதிகளின் வழியாக ஊர்வலமாக எழுந்தருளியது. பல பிரபல நாதஸ்வர வித்வான்கள் ஊர்வலத்தில் கைங்கர்யம் செய்யும் பாக்யத்தைப் பெற்றார்கள். ஸ்வாமிகளும் ஊர்வலத்துடன் கூடவே தொடர்ந்து வந்து பக்தர்களுக்குக் காட்சியளித்தார்கள். சபைக்கு வந்திருந்த பண்டிதர்கள் எல்லோருக்கும் ஸ்வாமிகள் தக்கவாறு பரிசுகளை வழங்கினர்கள்.

சிதம்பரத்தில் நடராஜர் தரிசனம்.

பஞ்சபூத க்ஷேத்திரங்களில் சிதம்பரம் ஆகாய க்ஷேத்திரமாகும். காஞ்சீபுரம் பிருதிவீ க்ஷேத்திரம்; திருவானைக்கா அப்பு க்ஷேத்திரம்; திருவண்ணாமலை தேயு க்ஷேத்திரம்; காளஹஸ்தி வாயு க்ஷேத்திரம், காஞ்சீபுரம் முதலான நான்கு க்ஷேத்திரங்களையும் ஸ்வாமிகள் முன்னரே தரிசித்தார்களென்பது முன் பக்கங்களில் கூறப்பட்டுள்ளன. ஆகாய க்ஷேத்திரமான சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜப் பெருமானைத் தரிசிக்க ஸ்வாமிகளுக்கு மிகவும் ஆவலுண்டு ஆனல், பீடத்தின் அதிபர்கள் நடராஜர் ஆலயத்திற்குச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்துகொள்வதில் சிறியதொரு லௌகிகமான இடையூறு வெகு காலமாக இருந்து வந்தது. சங்கர பீடத்தைச் சார்ந்த ஆசார்ய ஸ்வாமிகள் மற்ற தேவாலயங்களுக்கு வரும்

பொழுது அர்ச்சகர்கள் தங்கள் கைகளிலேந்திவரும் தாம்பாளத்தி லிருந்தோ, கிண்ணத்திலிருந்தோ, விபூதி, குங்குமம் முதலான பிரசாதங்களை ஸ்வாமிகளே தமது கரத்தினல் எடுத்துக்கொள்வது வழக்கம். அர்ச்சகர்கள் கொடுத்து இவர்கள் வாங்கிக் கொள்ளும் வழக்கம் இல்லை. தில்லை மூவாயிரத்தார் ஸ்மார்த்த பிராமணர்களா கவும், ஸ்ரீ சங்கரரின் அத்வைத சித்தாந்தத்தைத் தழுவினவர்களா கவும் இருந்தும் மற்றத் தேவாலயங்களில் நடைபெற்று வரும் இவ் வழக்கத்தை ஏற்றுக்கொள்ள மறுத்ததாகக் கூறப்படுகிறது. இதை ஊர்ஜிதம் செய்யும் வகையில் 1909-ஆம் வருடம் சென்னை அரசாங் கத்தினரால் வெளியிடப்பட்ட "Castes and Tribes of Southern India" by E. Thurston என்னும் புஸ்தகத்தில் முதல் வால்யூம் 340-ஆவது பக்கத்தில் கீழே கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "As a class Dikshitars are haughty and refuse to acknowledge any of the Sankaracharyas as thier Priest, because they are almost equal to God Siva who is one of them. If a Sankaracharya comes to the temple he is not allowed to take the Sacred ashes direct from the cups as is done at other temples to show respect to the Sanyasin". மேற் கண்ட குறிப்பின் உண்மை எவ்வாருயினும், காமகோடி பீடத்தில் நம் ஸ்வாமிகளின் முன்னிருந்த ஆசார்யர்களுள் எவ ரும் இரண்டு நூற்ருண்டுகளுக்குள் சிதம்பர தரிசனம் செய்து கொண்டதில்லை; ஸ்வாமிகளைத் தரிசனத்துக்கு எவ்வகையிலாவது அழைத்து வரவேண்டுமெனப் பல ஆண்டுகளாக விருப்பம் கொண்டிருந்தவர்களில் ஸ்வாமிகளிடம் ஒப்பற்ற பக்தியும், மதிப்பும் வைத்திருந்தவர்களும், மகாவித்வானும், தீக்ஷிதர்களின் மரபைச் சார்ந்தவர்களுமான மகாமகோபாத்தியாய தண்டபாணி ஸ்வாமி தீக்ஷிதர் அவர்களையும், ஸ்வாமிகளைத் தமிழ்த் தெய்வத்தின் அவதாரம் என்று மதித்து வந்த மகாமகோபாத்யாய தாக்ஷிணுத்ய கலாநிதி உ. வே. சுவாமிநாத ஐயர் அவர்களையும் முக்கியமாகக் குறிப்பிடலாம். ஸ்வாமிகளை ஒருமுறையாவது நடராஜர் சந்நி திக்கு அழைத்துவரவேண்டுமென்று ராஜா ஸர் அண்ணுமலை செட்டியார் தம்மிடம் பல முறை கூறியிருப்பதாக ஐயர் அவர்கள் சொல்லியுள்ளார்கள்.

திருவிடைமருதூரில் சங்கரஜயந்தி விழா நடத்திய பிறகு, தங்கள் ஊருக்கு ஸ்வாமிகள் விஜயம் செய்ய வேண்டுமெனச்

சிதம்பரம் வாசிகள் கேட்டுக்கொண்டனர். தென்னார்க்காடு ஜில்லாவில் ஸ்வாமிகள் பலமுறை யாத்திரை செய்திருந்தும், அருகிலுள்ள ஊர்களுக்குப் பலமுறை விஜயம் செய்திருந்தும் சிதம்பர க்ஷேத்திரத்திற்கு ஸ்வாமிகள் விஜயம் செய்து அங்குள்ள சிஷ்யர்களை நேரில் அனுக்கிரஹிக்கும் வாய்ப்பு அதுவரை அவர்களுக்கு நிகழாமலிருந்தது அவர்கள் மனஸில் வெகுநாளாக இருந்து வந்த ஒரு குறையாகும். இக்குறையைத் தீர்க்கவே, கருணையுடன், ஸ்வாமிகள் சிஷ்யர்களின் அழைப்பை ஏற்றுக்கொண்டார்கள். பீடத்தின் அதிபர்களாக அந்த க்ஷேத்திரத்திற்கு முதன்முதல் விஜயம் செய்யும் ஸ்வாமிகளைத் தகுந்த முறையில் வரவேற்கச் சிதம்பரம் வாசிகள் விசேஷமான ஏற்பாடுகளையெல்லாம் செய்திருந்தனர். சிதம்பரம் மக்கள் தெருக்களையெல்லாம் சுத்தம் செய்து ஊர் முழுவதையும் தோரணங்களால் அலங்கரித்து, ஸ்வாமிகள் எழுந்தருளும் நாளை ஒரு புனித நாளாக மதித்தார்கள். ஸ்வாமிகள் 1933-ஆம் வருடம் மே மாதம் 18-ஆந் தேதி வியாழக்கிழமை ஸ்ரீமுக வருடம் வைகாசி மாதம் 5-ஆந் தேதி அன்று, அவ்வூருக்கு விஜயம் செய்தபொழுது, தீக்ஷிதர் சமூகத்தினர் உள்பட பொதுமக்கள் யாவரும் ஊர் எல்லையிலேயே ஸ்வாமிகளைப் பூர்ண கும்பம், வேதகோஷம், பஜனைகோஷ்டி, மேளவாத்யங்கள், இவற்றுடன் வரவேற்று, நான்கு ரத வீதிகளின் வழியே பெரியதொரு ஊர்வலமாக அவர்களை அழைத்து வந்தார்கள். பல்லாயிரக் கணக்கான மக்கள் அன்று ஸ்வாமிகளைத் தரிசித்து அவர்களின் அருளைப் பெற்றார்கள். கீழவீதியில் ஸ்வாமிகளுக்குக் காரைக்குடி ராம. சு. வேத பாடசாலையில் ஜாகை அமர்த்திக்கொடுக்கப் பட்டிருந்தது. ஊர் பொதுமக்களுக்கோ நடராஜர் ஆலயத்தில் ஸ்வாமிகளுக்கு நடைபெறவேண்டிய விபூதி மரியாதையைப் பற்றிய கவலை; ஆனால் ஸ்வாமிகளுக்கோ அதைப் பற்றிக் கவலை சிறிதுகூட இல்லை. பொன்னம்பலத்தில் நடனமாடும் அந்த நடராஜ மூர்த்தியைச் சீக்கிரமாகத் தரிசிக்க வேண்டுமென்ற அவாதான் அவர்கள் மனதில் குடிகொண்டிருந்தது.

எல்லையற்ற பெருமை படைத்தது சிதம்பர க்ஷேத்திரம். கோயில் என்னும் சொல், சிதம்பரத்தையே குறிக்கும். அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் இவர்கள் நால்வரும் இத் தலத்தில் ஈசனைப் பாடியுள்ளார்கள். நடராஜர் எனப் பெயர் தாங்கி இங்குப் பரமேசுவரர்

க்ஷேத்திரமகிமை.

தெற்கு நோக்கி நடனம் செய்ய, மகாவிஷ்ணு கோவிந்தராஜ ரென்னும் பெயருடன் கிழக்கு நோக்கிக் காட்சியளிக்கின்றார். இவ்விரு ராஜாக்களையும் ஒரே இடத்தில் நின்று பக்தர்கள் தரிசிக்கும் பாக்கியம் இவ்விடத்தில்தான் அமைந்துள்ளது. கோவிந்த ராஜர் சந்நிதியில் குலசேகராழ்வாரும், திருமங்கை ஆழ்வாரும் மங்களா சாஸனம் செய்துள்ளார்கள். மாணிக்கவாசகர் திருத் தலங்கள் பலவற்றையும் தரிசித்து விட்டுச் சிதம்பரத்தை அடைந்தார். அவர் பாடிய பாக்களினால் மகிழ்ச்சியுற்ற சிவபெருமானும், மாறுவேடம் தாங்கி மாணிக்கவாசகரை அடைந்து அவரது திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் எழுதிக்கொண்டு, அதில் சிற்றம்பலமுடையான் எனக் கையெழுத்திட்டு, அதைப் பஞ்சாக்ஷரப் படியில் வைத்துவிட்டு மறைந்து விட்டார். மறுநாள் விடியற்காலை இந்த அதிசயத்தைக் கண்ட தலவாசிகள் அதை மாணிக்கவாசகரிடம் கொண்டுவந்து, அதற்குப் பொருள் கூற வேண்டுமென வேண்டினர். அப்பொழுது மாணிக்கவாசகர் பொற் சபையின் முன் எழுந்தருளியுள்ள நடராஜ மூர்த்தியைச் சுட்டிக் காட்டி, ‘இவரே இதற்குப் பொருள்’ எனக் கூறிவிட்டு, எல்லோர் முன்முன்னிலையிலும் திருச்சபையில் மறைந்து விட்டார். மற்றும் திருநீலகண்டர், திருநாளைப்போவார், கூற்றுவ நாயனார், இவர் களுக்கும் இங்கு முக்தி ஏற்பட்டுள்ளது. சுமார் 400 வருடங்களுக்கு தோன்றிய மகான் அப்பைய தீக்ஷிதரும் தமது வாழ்நாளின் பிற்பகுதியை இந்த க்ஷேத்திரத்தில் கழித்து இவ்விடத்திலேயே பரமபதம் அடைந்தார்கள். சிதம்பரம் ஆகாச க்ஷேத்திரமான தால் பரந்த வெளியை இங்குச் சிதம்பர ரகசியமெனக் காட்டுகின்றார்கள். கமலையிற் பிறத்தலும், காசியில் இறத்தலும், அண்ணாமலையை நினைத்தலும், தில்லையைக் காண்டலும் முக்தியென்பர் பெரியோர்.

தில்லை அம்பலத்தில் நடராஜப் பெருமாள் நடனமாடியதை நேரில் கண்டுகளித்தவர்கள் வியாக்ரபாதர், பதஞ்சலி, பாணினி, சனகர், சநந்தனர், சநாதனர், சனத்குமாரர் போன்ற முனிவர்களாவர். அவர்களில் வியாக்ரபாதர் இருள்சூழ்ந்த சிதம்பரவனத்தில் புஷ்பம் கொய்து விடியுமுன் ஈசனை அர்ச்சிப்பது வழக்கம். இருளில் புஷ்பம் கொய்வதற்குத் தமக்குக் கால் வலிமையும் கண் வலிமையும் வேண்டுமென அந்த முனிவர் பரமசிவனை வேண்ட, அவருக்குப் புலியின் கால்களையும், பார்வையையும் ஈசன் தந்தரு

ளினர். புலியின் காலைப் பெற்றதினால் அவருக்கு வியாக்ரபாதர் எனப் பெயர் வந்தது. அனந்தன் (ஆதிசேஷன்) நடராஜ மூர்த்தியின் நடனத்தைத் தரிசிக்க விரும்பியதால், மகாவிஷ்ணுவின் அருளால் அவர் ஒரு முனிவர் உருவத்துடன் தில்லையில் வசிக்கலானார். அவரே பதஞ்சலி முனிவர். அவர் சம்பு நடனவிருத்தத்தில் சிவதாண்டவத் தோத்திரம் என்னும் ஒன்பதுதோத்திரங்களை இயற்றி அவற்றை இசையுடனும், தாளத்துடனும், பிரதோஷ காலத்தில் பாடி அப்பனது ஆனந்தத் தாண்டவத்தைக் கண்டு மகிழ்ந்தார். இவ்விரு முனிவர்களுள் ஒருவர் விடியும் முன்னரும், மற்றொருவர் சூரியன் மேற்கில் சாயும் முன்னரும் ஈசனது நடனத்தில் மகிழ்ச்சியைக் கண்டவர்கள்.

[ஸ்ரீ நடராஜப் பெருமானது நடன தத்துவத்தைக் குறித்து ஸ்வாமிகள் சென்னையில் 20-10-1932-ந் தேதி செய்த பிரசங்கத்தின் சில பகுதிகளைக்கீழே காணலாம்.]

"நடராஜா என்பது பரமேசுவரனின் ஒரு பெயர். நடன், விடன், காயகன் என்பவர்களுள் நடன் ஒருவன். நடன், நாட்டியம் செய்பவன்; நடர்களுக்கெல்லாம் ராஜா நடராஜா. அவரைக் காட்டிலும் உயர்ந்த நடனம் வேறு எவராலும் செய்யமுடியாது என்பது இதன் பொருள். மகாநடன் என்று அவர் சொல்லப்படுகின்றார்; அம்பலக் கூத்தாடுவானென்று தமிழில் அவரைச் சொல்லுவார்கள். (அம்பலத்தாடுவான் பட்டனென்பது பிராமணர்களுக்குரிய பெயராக ஒரு காலத்தில் இருந்ததென்று சிலா சாஸனங்களால் தெரியவருகிறது.) நடராஜா பெரிய கூத்தாடி; நாமெல்லாம் ஆடவேண்டிய கூத்தை அவர் ஆடுகிறார். அந்த நடராஜ விக்ரகத்தில் தலையில் படர்ந்தாற் போல் ஒன்று காணப்படுகிறது; அது இரண்டு பக்கங்களிலும் நீண்டு இருக்கும். அதில் சந்திரன் இருக்கும்; கங்கையும் இருக்கும்; அது யாது? அதுதான் நடராஜருடைய ஜடாபாரம். இந்தக் காலத்தில் போட்டோ எடுக்கிறார்கள்? அதில் ஸ்நாப் ஷாட் என்பது ஒன்று. ஒரு வஸ்து சலனத்திலிருக்கும்பொழுது திடீரென்று ஓர் அவசரத்திலெடுப்பது அது. நடராஜா வெகு வேகமாக நர்த்தனம் பண்ணுகிறார். நர்த்தனம் நிறுத்தப்போகும் சமயத்தில் ஜடாபாரம் இரண்டு பக்கங்களிலும் நீட்டிக் கொண்டு இருக்கும். அந்த நிலையை அந்தக் காலத்துச் சிற்பி மனதிலே எடுத்த ஸ்நாப்

நடராஜ தத்துவம்.

ஷாட்டுத்தான் இந்தச் சொரூபம். அவருடைய கையில் ஓர் உடுக்கு இருக்கிறது. அதற்கு டக்கா என்றும், டமருகம் என்றும் பெயர்களுண்டு. பாதத்தின் தாளத்தை அனுசரித்து அந்த டமருகத் தாளமும் இருக்கும், வாத்யங்களில் முக்கியமானவை மூன்று வகை. அவை சர்மவாத்யம் (தோல்கருவி), தந்திரிவாத்யம் (நரம்புக்கருவி) வாயுரந்திரவாத்யம், (துளைக் கருவி) என்பவை. இவைகளில் சர்மவாத்யம் குச்சியினுலும் கையினுலும் அடிக்கப் படும். இந்த வாத்யத்தை நிறுத்தும்பொழுது சாப்புக்கொடுப்பது வழக்கம். அதாவது சேர்ந்தாற்போல் சில அடிகள் அடிப்பது வழக்கம். அதுபோல நடராஜருடைய டமருகத்தில் நடனம் முடியும் காலத்தில் ஓர் சாப்புத்தொனி உண்டாயிற்று.

நடராஜா நிருத்தம் செய்கிருர். சனகாதிகள், பதஞ்சலி, வியாக்ரபாதர், முதலியவர்கள் சுற்றி நின்றுகொண்டிருக்கிருர்கள். அவர்கள் மகா தபஸ்விகள். ஆகையால் அவர்கள் அந்த நிருத்தத் தைத் தெரிந்துகொள்ள முடிந்தது. நடராஜாவின் நடனத்தை ஞானநேத்ரம் உடையவர்கள் மாத்திரம்தான் பார்க்கமுடியும். லென்ஸ் என்ற ஒரு கருவி நம் கண்ணிலிருக்கிறது. அதைப் பொருத்தே நம் பார்வையும் இருக்கிறது. இன்னும் பெரியவை களாகப் பார்க்கக் கூடிய லென்ஸ் இருந்தால் அப்படியே பார்ப் போம். ஆகையால் நாம் இப்பொழுது பார்ப்பவை உண்மை யானவையல்ல என்று தெரிகிறது, நிஜமான கண்களைக் கொண்டு சனகாதிகள் பார்த்துக்கொண்டிருந்தார்கள்; விஷ்ணு மத்தளம் கொட்டுகிருர்; பிரும்மா தாளம் போட்டுக்கொண்டிருக்கிருர். நிருத்தம் முடிகிற சமயத்தில் டமருகத்தில் பதினுன்கு சப்தங்கள் எழுந்தன. அந்தச் சப்தங்களின் கணக்குக்கு, ஏற்ப வித்தை களின் கணக்கும் பதினுலாகத்தான் இருக்கின்றன. அந்தப் பதினுன்கு சப்தங்கள் சனகாதிகளை உத்தாரணம் செய்வதற்காக உண்டாயின; அப்படி எழுந்த சப்தங்கள் சிவஸ்வரூபத்தை ஏக போகமாக அனுபவிப்பதற்கு மார்க்கமாக இருந்தன. அந்த சப்தங் களையே சிவபக்தி தோத்திரங்களென்று வைத்து, அவற்றிற்கு நந்திகேச்வரர் பாஷ்யம் எழுதினுர். அப்பொழுது அங்கே இருந்த வர்களுள் பாணினி என்பவரும் ஒருவர். அந்தச் சூத்திரங்களின் முதல் எழுத்தாகிய அ என்பதையும், கடைசி எழுத்தாகிய ல் ஐயும் வைத்துப் பாணினி வியாகரணம் செய்தார். எல்லாப் பாஷைகளுக்கும் அகாரம் ஆதியாயிருக்கிறது; (ஹிந்துஸ்தானி

பாஷையில் அலிப் என்பது முதல் எழுத்து, கிரீக்கில் ஆல்பா என்பது முதல் எழுத்து.) இந்த இரண்டும் எழுத்துக்களையெல்லாம் குறிக்கும் அல் என்பவைகளிலிருந்து வந்தவைகளே. இங்கிலீஷில் ஆல்ப்பபெட்; என்று எழுத்துக்களைக் குறிப்பதும் 'அல்' என்பதிலிருந்துவந்தது தான் இவ்வாறு வியாகரணத்துக்கு மூலகாரணமாக இருந்தது, நடராஜாவுடைய டமருகத்திலிருந்து உண்டாகிய மாகேச்வரசூத்திரங்களென்று தெரிகிறது. நடராஜாவுக்கருகில் பதஞ்சலி, வியாக்ரபாதர் என்னும் இருவரும் இருக்கிறார்கள். அவர்களுடைய பிம்பங்களை நடராஜாவினுடைய பிம்பத்துக்குப் பக்கத்தில் பார்க்கலாம். பதஞ்சலி வியாகரண பாஷ்யம் செய்தவர். கையிலிருந்து உண்டான சப்தத்தை வைத்துக்கொண்டு பாணினி வியாகரணம் பண்ணினார்; பதஞ்சலி காலிலிருந்து உண்டான ஆட்டத்தைக்கொண்டு அதற்கு பாஷ்யத்தைச் செய்தார். பதஞ்சலி ஆதிசேஷரது அவதாரம். ஆதிசேஷன் பரமசிவனது காலில் பாதசரமாக இருக்கிறார். இவ்விதமாகப் பரமேச்வரனே வியாகரண சாஸ்திரத்திற்கு மூல புருஷராக விளங்குகிறார்''

நம் ஸ்வாமிகள் வியாக்ரபாத முனிவர் கண்டு களித்த காட்சியை முதலில் காணவிரும்பினார்கள் போலும். ஆகவே அவர்கள் சிதம்பரத்திற்கு விஜயம் செய்த அன்றிரவே, இவ்விதம் தீர்மானம் செய்து கொண்டவர்களாகி, தமக்கு வஸ்திரம் துவைத்து உலர்த்திவைக்கும் சிஷ்யர் ஒருவருக்கு மாத்திரம் இந்தக் கருத்தைத் தெரிவித்து, ஒருவரும் அறியாதவாறு அவரைத் தமக்கான மடி வஸ்திரத்துடன் ஆலயத்தின் உட்புறத்திலுள்ள சிவகங்கைத் தடாகத்திற்கு விடியற்காலை நான்கு மணி சுமாருக்கே வரும்படி கட்டளையிட்டிருந்தார்கள். ஸ்வாமிகளும் அதே சமயத்தில் தனிமையில் அத்தடாகத்திற்கு வந்து, அந்தப் புண்ய தீர்த்தத்தில் நீராடி, அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, ஆலயம் திறக்கும் பொழுதே உட்சென்று திருச்சபையின் முன்புறம் நின்றுவிட்டார்கள். அப்பொழுது சந்நிதியின் உட்புறம் சென்றிருந்த, அன்றைய பூஜை முறையைப் பெற்றிருந்த, தீக்ஷிதர் பின்புறம் திரும்பிப் பார்க்கவே, பரமசிவனது உருவம்தானோ என ஐயமுறும்படி நின்ற ஸ்வாமிகளின் திருமேனியைக் கண்டார். அப்பொழுது ஸ்வாமிகள் நடராஜரது தரிசனத்திலேயே தம் அகக்கண், புறக்கண் இரண்டையும் ஈடுபடுத்தி, நடராஜர் பேரில் தோத்திரங்களைத் தமது திருவாக்கினால் உச்சரித்துக்கொண்டிருந்தார்கள்.

தீக்ஷிதரோ ஸ்வாமிகளை அவ்வேளையில் தனிமையாக அங்கு எதிர் பார்க்க வில்லையாதலால், அந்நிலையில் ஸ்வாமிகளை எவ்வாறு வரவேற்பதென்பது அவருக்கு விளங்கவில்லை. அவர் உடனே மெய்க்காவலர் மூலம் பொது தீக்ஷிதர்களுக்கெல்லாம் நடராஜர் சபைக்கு ஸ்வாமிகள் விஜயம் செய்திருப்பதைப்பற்றிய செய்தியைச் சொல்லியனுப்பினர். இச்செய்தி சில நிமிஷங்களில் ஊர் முழுவதும் பரவிவிட்டது. நூற்றுக்கணக்கான மக்கள் விரைவில் கோவிலை அடைந்தார்கள். தீக்ஷிதர்களும் கோவிலுக்கு வந்து ஸ்வாமிகளை வணங்கி, 'ஸ்வாமிகளைத் தக்கமுறையில் மரியாதைகளுடன் ஆலயத்திற்கு வரவேற்க எல்லா ஏற்பாடுகளையும் தாங்கள் செய்திருப்பதாகவும், இவ்விதம் தனிமையில் ஸ்வாமிகள் கோவிலுக்கு விஜயம் செய்தது அவர்கள் மனஸிற்குக் கவலையைத் தருவதாகவும்' தெரிவித்துக்கொண்டனர். ஆனல் ஸ்வாமிகள் விச்வரூப தரிசன மென்னும் நடராஜரது முதல் காலக் காட்சியைத் 'தனிமையில் காணவேண்டுமெனத் தாம் விரும்பியதாகவும், அதனல் அவ்விதம் வந்ததாகவும், இனிச் சிதம்பரத்தில் தங்கியிருக்கும் வரை ஒவ்வொரு நாளும் பல தடவை நடராஜப் பெருமானைத் தரிசிக்கப் போவதாகவும் கூறினர்கள்.

மற்றத் தேவாலயங்களில் நடைபெறுவதைப் போலவே தீக்ஷிதர்கள் ஸ்வாமிகளுக்கு நடராஜர் சந்நிதியில் தக்கவாறு மரியாதைகளைச் செய்து, தேவஸ்தான மரியாதைகளுடன் ஸ்வாமிகளை ஜாகைக்குக் கொண்டுவந்து விட்டனர். பின்னர் தீக்ஷிதர்கள் ஒரு பொதுக்கூட்டம் கூட்டி, ஸ்வாமிகளை ஆலயத்திலேயே சில நாட்கள் தங்கும்படி கேட்டுக் கொள்வதென்றும், அவ்விடத்திலேயே அவர்களின் ஸ்ரீசந்திரமௌளீச்வரர் நித்திய பூஜையையும், நடத்த ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். அதற்காக ஆயிரக்கால் மண்டபமும் சுத்தம் செய்யப்பட்டது. ஸ்ரீமுக வருடம் வைகாசி மாதம் 10-ந் தேதி (23-5-1933) செவ்வாய்க்கிழமை அன்று ஆயிரக்கால் மண்டபத்திற்கு ஸ்வாமிகள் விஜயம் செய்தார்கள். அங்குப் பொது தீக்ஷிதர்களின் சார்பாக ஸ்வாமிகளுக்கு உபந்யாச ரத்னகரம் ஸி. எஸ். சிவகாமி சுந்தர தீக்ஷிதர் அவர்களால் வடமொழியிலும், அவருடைய திருக்குமாரர் ஸி. எஸ். சச்சிதானந்த தீக்ஷிதர் அவர்களால் தமிழிலும், வரவேற்புப் பத்திரங்கள் வாசிக்கப்பட்டன. ஸ்வாமிகள் சுமார் பதினைந்துநாட்கள் அவ்விடம் தங்கி, ஸ்ரீ சந்திரமௌளீச்வரர்

பூஜையை நடத்தினார்கள். ஸ்ரீ ஆதிசங்கரர் கைலாசத்திலிருந்து ஐந்து ஸ்படிக லிங்கங்களைக்கொண்டு வந்ததாகவும், அவைகளுள் போகலிங்கத்தைச் சிருங்கேரியிலும், வரலிங்கத்தை நேபாளத்திலும், முக்திலிங்கத்தைக் கேதார க்ஷேத்திரத்திலும், யோகலிங்கத்தைக் காஞ்சியிலும், மோக்ஷலிங்கத்தைச் சிதம்பரத்திலும் பிரதிஷ்டை செய்ததாகவும் புராணம் கூறுகிறது. காஞ்சியில் ஸ்தாபித்த லிங்கமே இப்பொழுது காமகோடி பீடத்தில் பூஜையில் அமர்ந்திருக்கும் யோகலிங்கமாகும். இந்த லிங்கங்களெல்லாம் பரிமாணத்திலும் தோற்றத்திலும் ஒன்றுக்கொன்று ஒற்றுமையுடன் விளங்கிவருகின்றன. ஒவ்வொருநாளும் ஆயிரக்கணக்கான மக்கள் ஸ்வாமிகள் தங்கியிருந்த அந்தப்பிரம்மாண்டமான மண்டபத்தில் நடைபெற்ற ஸ்வாமிகளின் பூஜையைக்கண்டும், அவர்கள் ஒவ்வொரு நாள் மாலையிலும் நிகழ்த்திவந்த உபதேச மொழிகளைக் கேட்டும், மனமகிழ்ந்தார்கள். எல்லாச் சமூகத்தினரும் ஸ்வாமிகளுக்கு அன்றாடம் பிக்ஷை பாத பூஜை முதலியவைகளை நடத்திவைத்தார்கள். ஸ்வாமிகளும் ஒவ்வொருநாளும் நடராஜர் சந்நிதியிலும், கோவிந்தராஜர் சந்நிதியிலும் ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டார்கள். நடராஜாவுக்குப் பாவாடை, அபிஷேகம், தேருக்கு அலங்காரம், இவைகளை விசேஷமாகச் செய்துவைத்தார்கள். மேலும் சிவபிரானது நெற்றியில் தோற்றமளிக்கும் சந்திரகலையை ரத்தினங்கள் இழைத்த ஓர் ஆபரணமாக அமைத்து, அதை நடராஜப் பெருமானுக்கு ஸமர்ப்பணம் செய்தார்கள். ஸ்வாமிகள் அளித்த இந்த ஆபரணம் அப்பெருமானுக்கு மிகவும் பொருத்தமாக அமைந்திருந்ததைக் கண்டு யாவரும் மகிழ்ச்சியுற்றனர். ஸ்வாமிகள் சிதம்பரத்தில் அச்சமயம் ஒரு மாதம் தங்கியிருந்துவிட்டு, பக்கத்திலுள்ள பறங்கிப்பேட்டை, கவரப்பட்டு முதலான இடங்களுக்கு விஜயம் செய்தார்கள்.

பறங்கிப் பேட்டையில் தந்தையாரின் பழைய மாணவரிடம் காட்டிய பரிவு.

சிதம்பரத்திலிருந்து புறப்பட்டு ஸ்வாமிகள் பறங்கிப் பேட்டைக்கு விஜயம் செய்திருந்தபொழுது, ஸ்வாமிகள் தந்தையாரிடம் அவ்வூரில் பல வருடங்களுக்கு முன் கல்வி பயின்ற பாவா மரக்காயர் என்ற இஸ்லாமியப் பிரமுகர் ஸ்வாமிகளைக் காண வேண்டுமென விரும்பினார். 1898-ஆவது வருடம் ஸ்வாமிகளின் தந்தையார் பறங்கிப்பேட்டையில் பள்ளி ஆசிரியராக இருந்தார்கள். அவர்களிடம் கல்வி கற்ற இந்தப்

பிரமுகர் அவர்கள் பாலும், அவர்கள் குடும்பத்தார்கள் பாலும், மிகுந்த பக்தி கொண்டிருந்தார். ஸ்வாமிகளின் இளமைப்பிராயத்திலேயே அவர்களுடன் நன்கு பழகி, அவர்களின் மேதா விலாசத்தை அந்நாளிலேயே கண்டறியும் பாக்கியத்தைப் பெற்றவர் இந்த அன்பர். ஸ்வாமிகளின் தந்தையார் பறங்கிப்பேட்டையிலிருந்து வேறு இடங்களுக்கு மாறிச் சென்ற பிறகுங் கூடப் பாலன் வடிவமாக இருந்த ஸ்வாமிகளைக் காண்பதற்கெனவே மிகுந்த ஆவலுடன் அவர் அவ்வூர்களுக்கெல்லாம் சென்று வருவார். ஸ்வாமிகளின் தந்தையாரையும், தாயாரையும் தமது தாய், தந்தை போலவும் அவர்களின் குழந்தைகளையெல்லாம் தம் உடன் பிறந்தார் போலவும் மதித்து அவர்களிடம் அவர் அத்தகையை உள்ளன்பையே பாராட்டி வந்தார். அக்காலத்தில் இளைஞராக இருந்த இந்த மகம்மதிய கனவான் பரம்பரையாக ஏற்பட்ட வியாபாரத்துறையில் நல்ல செல்வம் படைத்தவராகவுமிருந்தார். அவர் வியாபார நிமித்தம் அக்காலத்தில் சென்னை முதலிய பெரிய ஊர்களுக்குச் சென்று வரும்போதெல்லாம் சிறு பிராயத்திலிருந்த நம் ஸ்வாமிகளுக்கும், அவர்களின் உடன் பிறந்த குழந்தைகளுக்கும் விளையாட்டுச் சாமான்கள், ஆடை, பழங்கள் முதலியவற்றை வாங்கி வருவார்; அவைகளை இவர்களுக்கு வழங்கிவிட்டுப் பிறகே ஊருக்குச் செல்வார். வேறு எவர் எதைக் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளாத தாய், தந்தையர் இணையற்ற அன்பின் காரணமாக அவைகளை மட்டும் ஏற்றுக்கொண்டு வந்தனர். ஆயினும் அந்த இளைஞரிடம், 'ஏனப்பா, இவைகளையெல்லாம் வாங்கி வருகிறாய்? அவசியமில்லாமல் பணத்தைச் செலவிடுகிறாயே'' என மட்டும் அன்னையார் கூறுவார்கள். அதற்கு அவர், 'அம்மா, நான் வெளியூர்களுக்குச் செல்லும்போது கடைகளில் குழந்தைகளுக்கான பொருள்கள் என் கண்களில் படும்போதெல்லாம், இந்தக் குழந்தைகளின் நினைவுதான் எனக்கு வருகின்றது. அப்படியிருக்கும்போது நான் அவைகளை வாங்காமல் எப்படி இங்கு வருவேன்?' என்பார். இந்த அன்பான சொற்களைக் கேட்க அவர்கள் உள்ளம் பூரிக்கும்.

இத்தகைய நிலையில் பழகிய அந்த இஸ்லாமியக் கனவானுக்குப் பறங்கிப்பேட்டைக்கு ஸ்வாமிகள் விஜயமானபொழுது பிராயம் சுமார் நாற்பத்தெட்டு இருக்கலாம். அப்பொழுது அவர் தம் வியாபாரத்தைப் பெருக்கி நல்ல செல்வவானாக விளங்கி வந்தார். ஸ்வாமிகளிடம் இளமைப் பருவத்தில் பழகியதை அவர்

தம் நண்பர்களிடமும், உறவினர்களிடமும் கூறி அதனல் பெருமையை அடைந்தார். ஸ்வாமிகள் அவ்வூருக்கு விஜயம் செய்யும்போது அவர்களை முதன்முதல் காண்பதற்கு உரிமை தமக்கே உண்டெனவும் அவர் கருதினர். அப்பொழுது அவர் தாம் பிறமதத்தைச் சேர்ந்தவர் என்ற எண்ணத்தையே மறந்து விட்டார். அவர் ஏராளமாகப் பழங்களையும் புஷ்பங்களையும் வாங்கிக்கொண்டு ஸ்வாமிகளைக் காணவந்தார். ஸ்வாமிகள் ஊருக்குள் பிரவேசித்தபொழுது அவர் தரிசனம் செய்வதுகொண்டார்; அன்று மௌன விருதமாதலால் புன்னகையுடன் ஸ்வாமிகள் அவ்வன்பை ஏற்றுக்கொண்டார்கள். அந்த மகம்மதியர் உப்பளங்களையும், பாய்க்கப்பல் மூலம் வியாபாரங்களையும் நடத்தி வந்தார். பறங்கிப்பேட்டை ஒரு சிறிய துறைமுகம். போர்ட்டோ நோவோ (Porto Novo) என இதை ஆங்கிலத்தில் கூறுவர். கடற்கரையிலுள்ள தம் வியாபார ஸ்தலங்களையெல்லாம் ஸ்வாமிகள் நேரில் காணவேண்டுமென்றும், தம் உப்பளம் முழுவதும் ஸ்வாமிகளின் காலடிபடவேண்டுமென்றும். அவர் பிரார்த்தனை செய்துகொண்டார். அவரது கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு ஸ்வாமிகள் அவர் அழைத்துச் சென்ற இடத்திற்கெல்லாம் மௌன நிலையுடனேயே குழந்தை போல் அவரைப் பின் தொடர்ந்து சென்றார்கள். இந்தக் காட்சியைக் காண நூற்றுக்கணக்கான அவ்வூர் மக்கள் ஸ்வாமிகளுடன் சென்றனர். கடற்கரை ஓரமாகச் சுமார் பத்து மைல் தூரம் கடுமையான வெயிலில் ஸ்வாமிகள் நடந்தே வந்து கொண்டிருந்தார்கள். அந்தக் கனவான் பாதையில் கப்பல்கள் போக்குவரத்தைப்பற்றியும், வியாபாரத்தைப்பற்றியும் விவரித்துக் கூறிக்கொண்டே வந்தார். எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு ஸ்வாமிகள் ஜாகைக்கு வரும்பொழுது பகல் பன்னிரண்டு மணி ஆகிவிட்டது. ஸ்வாமிகளுக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுத்து விட்டதற்காக அந்த மரக்காயர் ஸ்வாமிகளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். அந்தரங்கமான பக்தி எவ்விடம் இருக்கின்றதோ அவ்விடம் கடவுளருளும் இருக்குமென்பதற்கு எடுத்துக் காட்டாக ஓர் இஸ்லாமிய அன்பரிடம் ஸ்வாமிகள் காட்டிய பரிவைக் கண்டு பக்தர்கள் யாவரும் வியப்படைந்தனர். இந்த நிகழ்ச்சியைக் குறித்தும், ஸ்வாமிகளின் தாராள மனப்பான்மையைக் குறித்தும் அக்காலத்தில் அவ்வட்டாரத்திலுள்ள மக்கள் பெருமையாகப் பேசிக்கொண்டிருந்தனர்.

பறங்கிப்பேட்டையிலிருந்து ஸ்வாமிகள் பல ஊர்களில் தங்கித் தஞ்சை நகரத்திலுள்ள சிஷ்யர்களின் வேண்டுகோளுக்கிணங்கி 1933-ஆவது வருடத்து வியாச பூஜையையும், அதைத் தொடர்ந்து நவராத்திரி விழாவையும் ஸ்வாமிகள் தஞ்சையில் நடத்தினார்கள்.

தஞ்சையில் நடந்த வியாச பூஜையும், நவராத்திரி விழாவும்.

ஸ்ரீமுக வருடம் ஆனி மாதம் 24-ந் தேதி வெள்ளிக்கிழமை (7-7-1933) வியாச பூர்ணமி அன்று தஞ்சையில் ராஜராஜ சோளீயம் எனப்படும் ஸ்ரீ பிரகதீச்வரர் ஆலயத்தில் இந்தப் பூஜை நடைபெற்றது. இவ்வாலயத்திற்குப் பெரிய கோவிலென்று மற்றொரு பெயரும் உண்டு. இவ்வாலயத்தின் முன்புறம் அமைந்துள்ள பெரியதொரு மண்டபத்தில் நடைபெற்ற இந்தப் பூஜையைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் தரிசித்தனர். வியாஸ பூர்ணமியைத் தொடர்ந்து சாதுர்மாஸ விரதத்தை ஸ்வாமிகள் தஞ்சை மேல வீதியிலுள்ள முகாசா கட்டிடத்தில் நடத்தினார்கள். ஒவ்வொரு நாளும் அவ்விடத்தில் வித்வத் சபைகளும் கலைஞர்களின் கூட்டமும் கூடின; தத்தம் கலைத்திறன்களை ஸ்வாமிகள் முன்னிலையில் கலைஞர்கள் வெளிப்படுத்தினார்கள். ஸ்வாமிகள் யாவருக்கும் தகுந்த சன்மானம் அளித்து அவர்களை மகிழ்வித்தார்கள்.

ஸ்வாமிகள் தஞ்சையில் தங்கியிருந்தபொழுது அவ்வூர் வரதப்ப ஐயர் சந்துக்குச் சென்று அங்கு ஒரு வீட்டில் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளால் பூஜை செய்யப்பட்ட இராம விக்ரகத்தைத் தரிசித்து வந்தார்கள்.

அந்த வருட நவராத்திரி பூஜை தஞ்சை மேல வீதியிலுள்ள கோவாப்பரேட்டிவ் கட்டிடத்தில் நடைபெற்றது. இந்தப் பூஜைக்கென இந்தக் கட்டிடம் விசேஷமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. வழக்கத்திற்கு மேல் அதிகக் கோலாகலமாக அவ்வருட நவராத்திரி விழா அவ்வூரில் நடைபெற்றது. ஒன்பது நாட்களும் ஸ்வாமிகள் செய்து வந்த அம்பிகையின் பூஜையை ஆயிரக்கணக்கான மக்கள் தரிசித்துக்கொண்டனர். பத்தாவது நாளாகிய விஜயதசமி அன்று ஸ்வாமிகளுக்குப் பெரியதொரு ஊர்வலத்தை நடத்தப் பொதுமக்கள் ஏற்பாடு செய்தனர். மாபெரும் யானையின் மீது தங்க அம்பாரியை அமைத்து அதில் ஸ்வாமிகளை ஆரோகணிக்கச் செய்து, நகரத்தின் நான்கு பிரதான வீதிகளின் வழியாக அன்று ஊர்வலம் சென்றது. அம்பாரியின் முன்புறம் தஞ்சை சீனியர் பிரின்ஸ் ராஜா

ராம் சாகிப்பும், அவருடைய சகோதரரும், பின்புறம் மடத்தின் சர்வாதிகாரியும் வீற்றிருந்தனர். நடுவில் வீற்றிருந்த ஸ்வாமிகளின் திவ்ய தேஜோமயமான ஸ்வரூபத்தைக் காணப் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஊர்வலத்துடன் வந்துகொண்டிருந்தனர். வீதிகளின் இரு புறங்களிலும், உயர்ந்த கட்டிடங்களின் மாடிகளிலும் மக்கள் பலர் திரண்டு நின்று ஸ்வாமிகளைத் தரிசித்தனர். தோரணங்களால் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்த வீதிகளின் வழியே இரவைப் பகலாக்கும் நூற்றுக்கணக்கான காந்த விளக்குகளுடன் யானைகள், குதிரைகள், ஒட்டகங்கள், குடைகள், பாவட்டாக்கள், நாதஸ்வர கோஷ்டிகள், பாண்டு வாத்ய கோஷ்டிகள், இவைகள் முன் செல்லவும், வேத கோஷ்டி, தேவார கோஷ்டி, பஜனை கோஷ்டி முதலியன பின் செல்லவும் நடைபெற்ற இந்த ஊர்வலத்தின் சிறப்பைத் தஞ்சை மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள். முன்னர் தஞ்சையை அரசாண்ட சோழ, நாயக்க, மகாராஷ்டிர மன்னர்கள் விழாக்காலங்களில் பவனி வந்த காட்சியை நினைவூட்டும் வண்ணம் அந்த ஊர்வலம் அமைந்திருந்தது. வழி நெடுக ஸ்வாமிகளுக்குப் பக்தர்கள் பூர்ண கும்பம் அளித்து, புஷ்ப மாலைகளை அணிவித்து, கற்பூர ஹாரத்தி சுற்றி வழிபாடு செய்தனர்.

தஞ்சையில் ஸ்வாமிகள் தங்கியிருந்தபொழுது சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள், மிராசுதார்கள், வியாபாரிகள், தேசியத் தலைவர்கள். மற்றும் பல துறைகளில் ஈடுபட்டிருந்த மக்கள், எவ்வித வேறுபாடும் பாராட்டாமல் ஸ்வாமிகளுக்குச் செய்யவேண்டிய பணிகளைச் சிறப்பாக நடத்தி வைத்தனர். அவர்களில் முக்கியமாக வக்கீல்கள் நாகநாத ஐயர், கோதண்டராம ஐயங்கார், கே. நடராஜன், மற்றும். ஆத்மராம் காடே சாகேப், வெங்கடேச பாண்ட்யா, ஜில்லா ரிஜிஸ்டரார்கள் நாகராஜ ராவ், ஆர். கிருஷ்ணஸ்வாமி ஐயர், டிபுடி கலெக்டர்கள் பி. கிருஷ்ணஸ்வாமி ஐயர், ரங்கஸ்வாமி ஐயங்கார், கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரி, கவிஞர் சுந்தரேச்வர சர்மா,மிராசுதார் எஸ். ரத்தினம் ஐயர், கண்ட்ராக்டர் சீதாராமராஜா, வியாபாரம் ராஜமாணிக்கம் செட்டியார், காங்கிரஸ் தலைவர் வெங்கடகிருஷ்ண பிள்ளை இவர்களைக் குறிப்பிடலாம். மற்றும் நூற்றுக்கணக்கானவர்கள் ஸ்வாமிகளின் பணியில் நெருங்கி ஈடுபட்டிருந்தனர். அக்காலத்தில் தஞ்சையில் முனிஸிபல் சேர்மனாக இருந்த இராமநாதன் செட்டியார் ஸ்வாமிகளுக்கு வரவேற்பளிப்பதில் மிகுந்த ஊக்கம் எடுத்துக்கொண்டதுடன் ஸ்வாமிகளின்

பூஜைக்கென தங்கத்தினால் ஓர் விநாயக விக்கிரகம் அமைத்து அவர்களுக்கு அளித்தார். தஞ்சையில் தங்கியிருந்த காலத்தில் அநேகமாக ஒவ்வொரு நாளும் ஸ்வாமிகள் மேல வீதியிலுள்ள பங்காரு காமாக்ஷி ஆலயத்திற்குச் சென்று அம்பிகையைத்தரிசித்து வந்தார்கள்.

தஞ்சையில் சங்கர மடம் ஸ்தாபிதம்.

சுமார் 200 ஆண்டுகளுக்கு மேல் காமகோடி பீடத்துப் பரம்பரையில் தோன்றிய ஆசார்ய ஸ்வாமிகள் பலர் அவ்வப் போது தஞ்சையில் தங்கியிருந்ததன் நினைவு மக்கள் உள்ளத்தில் எப்போதும் இருக்கவேண்டுமென்ற நோக்கத் துடன், நகரில் ஒரு சங்கர மடம் நிறுவ வேண்டுமென மடத்தின் பணியில் நெருங்கிய தொடர்புகொண்ட பக்தர்கள் சிலர் ஆலோசித்தனர். அதற்கான முயற்சியையும் அவர்கள் எடுத்துக்கொண்டனர். பின்பு ஸ்வாமி கள் கங்கா யாத்திரையை முடித்துக்கொண்டு தென்னாட்டிற்குத் திரும்பிய சமயத்தில் இந்த முயற்சி சற்று வலுவடைந்தது. அப்பொழுது ஸ்வாமிகளிடம் மிகுந்த பக்தி பூண்ட தஞ்சை ஜூனியர் பிரின்ஸ் பிரதாபசிம்ம ராஜாவும், டி. ஆர். ஜோஷியும், இந்த முயற்சி வெகு எளிதில் நிறைவேறும் வண்ணம் என்றும் நிலைத்திருக்கும் ஒப்பற்ற ஓர் பணியைத் தங்கள் தாராள மனப் பான்மையினால் செய்து முடித்தனர். ஸ்வாமிகள் முன்னர் தங்கி யிருந்ததும் மேல வீதியிலுள்ளதுமான முகாஸா ஆபீஸ் எனக் கூறப்படும் மாபெரும் கட்டிடத்தின் உரிமையாளர்களான அவர்கள் இருவரும் தங்கள் உரிமையை மடத்திற்கே தான சாஸனம் செய்துவிட்டார்கள். அன்று முதல் அக்கட்டிடம் தஞ்சையில் சங்கர மடமாக விளங்கி வருகிறது. தஞ்சையில் சங்கர மடம் நிறுவ வேண்டியதற்கு முயற்சி எடுத்துக்கொண்ட வர்களில் அப்பொழுது தஞ்சைஜில்லா ஜட்ஜாக இருந்த எம். அனந்த நாராயணனை முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். அவர் பெரிய மேதாவியாக விளங்கிய அ. மாதவய்யாவின் புதல்வர். ஸ்வாமி களிடம் ஒப்பற்ற பக்தி கொண்டவர். அக்கட்டிடத்தில் ஆதி சங்கரரின் பிம்பப் பிரதிஷ்டை செய்யப்பெற்று அன்றாடம் பூஜையும் நடந்து வருகிறது. மத சம்பந்தமான விசேஷ நாட்களைப் பக்தர்கள் அங்குக் கொண்டாடி வருகிறார்கள். மத சம்பந்தமான சொற் பொழிவுகளும் கலைவிழாக்களும் அங்கு நடைபெறுகின்றன. ஓர் இலவச ஆயுர்வேத வைத்தியசாலையும் அங்கு நடந்து வருவதாகத்

தெரிகிறது. அக்கட்டிடத்தில் ஸ்வாமிகளின் திரு உருவப்படத்தை 1946 நவம்பர் மாதக் கடைசியில் திறந்து வைத்த சென்னைப் பிரபல வழக்கறிஞர் (காலஞ்சென்ற) டி. ஆர். வெங்கடராம சாஸ்திரிகள், 'நம் ஸ்வாமிகள் ஓர் மகாபுருஷரென்றும், இவ்வித மகாபுருஷர்கள் உலகில் மிகவும் அரிதாகவே தோன்றுவார்களென்றும், நமது காலத்தில் இவர்கள் தோன்றியுள்ளது நமது அதிர்ஷ்டம் என்றும், ஜனங்கள் அவர்களை நன்கு புரிந்துகொண்டு அவர்களது உபதேசப்படி நடந்தால் உலகிற்கு எல்லா நன்மைகளும் உண்டாகுமென்றும் கூறியுள்ளார். அந்த விழாவிற்குச் சென்னை ஹைகோர்ட்டு நீதிபதி என். சந்திரசேகர ஐயர் தலைமை தாங்கினர்.

கங்கா யாத்திரை. கால்நடையாகக் காசிக்குச் சென்ற அனந்த கிருஷ்ண சர்மா.

சாலை மார்க்கமாகக் காசிக்குச் செல்வதற்கு வசதியான வழிகளை அறிந்து வரும்பொருட்டு தென்காசியைச் சேர்ந்த அனந்த கிருஷ்ணசர்மா என்னும் இருபது பிராயமுள்ள வாலிபரை ஸ்வாமிகள் (கங்கா யாத்திரைக்குப் புறப்படுவதற்குச் சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னரே) அனுப்பி வைத்திருந்தார்கள். அவ்விதம் அனுப்பும்பொழுது அவருக்குக் கீழ்கண்டவாறு சில நிபந்தனைகளையும் குறிப்பிட்டார்கள்.

1. அவர் காசியை அடையும்வரை முழுவதும் நடந்தே செல்லவேண்டும்.

2. அவருக்குத் தேவையான உணவை அவரே தயாரித்துக் கொள்ளவேண்டும்.

3. காப்பி, டீ முதலிய பானங்களை அவர் அருந்தக் கூடாது.

4. உணவு தயாரித்துக்கொள்ளச் சிற்சில பாத்திரங்களையும், மிகவும் அவசியமான உடையையுமே அவர் எடுத்துச் செல்லவேண்டும்.

5. அன்றாடம் உணவு தயாரித்துக்கொள்ளத் தேவையான அரிசியையோ, கோதுமை மாவையோ அவர் போகுமிடங்களில் அன்பர்களிடம் யாசித்துப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

6. எவரிடமும் அவர் பணம் வெகுமதியாய்ப் பெற்றுக் கொள்ளக்கூடாது.

7. உடல்நிலை காரணமல்லாது, ஓர் ஊரில் ஒரு நாளைக்கு மேல் தங்கக் கூடாது.

8. ஸ்வாமிகளின் உத்தரவின்படி நடந்து காசி யாத்திரை செல்லுவதாக அவர் ஆங்காங்கு மக்களிடம் சொல்லிக்கொள்ள லாம். (ஆனால் அவரிடம் எவ்வித அடையாளச் சீட்டும் கொடுக்கப் படவில்லை.)

9. அவரிடம் கொடுக்கப்பட்ட போஸ்டு கார்டுகளில் அன் றுடம் அவர் சென்ற ஊர்களைப் பற்றியும் பாதையின் தன்மை களைப்பற்றியும், சந்தித்த மனிதர்களைப் பற்றியும், காப்பியிங் பென்ஸிலினால் சுருக்கமாக எழுதி மடத்திற்குத் தபால் மூலம் அனுப்பவேண்டும். அவரிடம் கொடுத்திருந்த போஸ்டு கார்டுகள் குறைந்தவுடன் அவ்வப்போது அவருக்குக் கார்டுகள் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

10. காசியிலிருந்து திரும்பி வரும்பொழுது அவர் ஹிந்தி யைப் பேசக் கற்றுக் கொண்டு வரவேண்டும். அவர் திரும்பி வரும்பொழுது ரயில் மார்க்கமாக வருவதற்கு அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

இவ்வகையான கடுமையான நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு கால் நடையாகக் காசி யாத்திரை செல்வதென்பது எவராலும் எளி தில் செய்து முடிக்கக் கூடியதன்று. ஸ்வாமிகளிடம் ஒப்பற்ற பக்தியும், மன வலிமையும், உடல் வலியும் ஒருவருக்கு இருந்தா லொழிய இதைச் சாதிக்க முடியாதென்பது திண்ணம். அப்பொழுது பிரும்மசாரியாக இருந்த அனந்தகிருஷ்ண சர்மாவுக்கு நல்ல உடல் வலியையும், மனத் திடமும், ஆசாரிய பக்தியும் ஒருங்கே அமைந்திருந்தன. அவருக்குத் தமிழுடன், ஆங்கிலமும் பேசத் தெரியும். ஸ்வாமிகளின் கட்டளையை அவர் ஏற்றுக்கொண்டு அவர் களிட்ட நிபந்தனைகளிலிருந்து சிறிதும் வழுவாது சுமார் ஆறு மாதங்களில் காசியை அடைந்தார். அவர் ஒவ்வொரு நாளும் மடத் திற்கு எழுதி அனுப்பிய கார்டுகளிலிருந்து சில ரசமான விஷயங் கள் புலப்பட்டன. ஓர் ஊரிலிருந்து அடுத்த ஊருக்குள்ள தூரத் தையும், பாதை நிலைமையையும், தண்ணீர் வசதியையும், அவர் முக்கியமாகக் குறிப்பிட்டிருந்தார். ஸ்வாமிகளின் உத்திரவின்படி தாம் காசிக்கு நடந்து செல்வதாக ஆங்காங்குள்ள ஊர் மக்களுக்கு அவர் தெரிவித்தவுடன், பலர் அவர் பாதங்களைத் தொட்டு வணங்கு வார்களாம். அவர்களில் மிகப் பெரியோர்களும், கற்றோர்களும் இருப்பார்களாம். தான் மிகவும் சிறியவனென்றும், தன்னை வணங்க

வேண்டாமென்றும் அவர் எவ்வளவு சொல்லியும் மக்கள் கேட்க மாட்டார்களாம். அநேகமாக அவர் பகலிலேயே பிரயாணம் செய்வது வழக்கம். ஆனால் ஒரு நாள் அடர்ந்த காடுகள் அமைந்த சாலையில் நடந்து சென்றபொழுது, சூரியன் மேற்கில் மறைந்து விட்டதாகவும், அந்த இடம் துஷ்ட மிருகங்கள் வசிக்குமிடமாதலால் அவர் அப்பொழுது தொடர்ந்து மேலே செல்லாமல் சாலையைச் செப்பனிடும் ஓர் இரும்பு உருளையின் உட்புறத்தில் பதுங்கிக்கொண்டு இரவு முழுவதையும் அங்குக் கழித்ததாகவும், அப்பொழுது தமது அருகிலேயே இரண்டு புலிகள் சென்றதைத் தாம் பார்த்ததாகவும், உருளைக்குள் மறைந்திருந்ததால் தாம் காப்பாற்றப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்விதம் பல இன்னல்களைக் கடந்து அவர் காசியை அடைந்து அவ்விடம் சில நாட்கள் தங்கி இருந்தார். பின்னர் ஸ்வாமிகளின் உத்தரவின்படி காசியிலுள்ள மடத்தின் ஏஜண்ட் அவரை ரயில் மூலம் கும்பகோணத்திற்குத் திருப்பி அனுப்பிவைத்தார். அனந்தகிருஷ்ண சர்மாவும் திரும்பி வந்தபொழுது ஹிந்தியை நன்ருகப் பேசப் பழகிக்கொண்டு விட்டார். அவர் ஸ்வாமிகளை நேரில் தரிசனம் செய்துகொண்டு யாத்திரையின்போது தாம் பெற்ற அனுபவங்களை எல்லாம் ஸ்வாமிகளிடம் தெரிவித்துக்கொண்டார். அவரது ஆழ்ந்த பக்தியையும், விடாமுயற்சியையும் ஸ்வாமிகள் மிகவும் பாராட்டி அவரை அனுக்ரகித்தார்கள். அனந்தகிருஷ்ண சர்மா பின்னர் மணம் புரிந்துகொண்டு மக்கள் பேற்றைப் பெற்று இப்பொழுது மடத்திலேயே ஊழியம் செய்துவருகிருர்.

அனந்தகிருஷ்ண சர்மா சென்ற மார்க்கத்திலேயே கங்கா யாத்திரையை நடத்துவதெனத் தீர்மானித்தவர்களாய், ஸ்வாமிகள் குன்னக்குடி ஸ்வாமிநாத ஐயர் என்பவரை ஆங்காங்குத் தங்குவதற்கு இட வசதிகளைக் கவனித்து வரும்படி 1932-ஆவது வருட இறுதியில் வட இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார்கள். அவர் மூலம் ஸ்வாமிகள் கங்கா யாத்திரைக்கு வருவதை அறிந்த கங்கா தீர வாசிகள் மிகவும் மகிழ்ச்சியுற்றவர்களாய் ஸ்வாமிகளின் வரவை வெகு சீக்கிரமாக எதிர்பார்ப்பதாகவும், ஸ்வாமிகளுக்கு அவர்களின் பரிவாரங்களுக்கும் வேண்டிய வசதிகளையெல்லாம் செய்துகொடுக்க அவர்கள் மிகுந்த ஆவலுடன் இருப்பதாகவும், ஸ்வாமிகளுக்கு விக்ஞாபனப் பத்திரிகைகள் எழுதிச் சுவாமிநாத

கங்காதீரவாசிகளின் பிரார்த்தனை.

ஐயர் மூலம் அனுப்பிவைத்தார்கள். அவ்விதம் பத்திரிகைகள் அனுப்பியவர்களில் முதன்மையான சிலரின் பெயர்கள் கீழே குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

1. அலகாபாத் சர்வகலாசாலை உப அத்யக்ஷகர் மகாமகோபாத்யாத கங்காநாத் ஜா.

2. அலகாபாத் ஸ்ரீ சங்கர பந்த் தர்மாதிகாரி.

3. அலகாபாத் ஸ்ரீ கமலகாந்த மிச்ர.

4. காசி ஸ்ரீ விச்வநாத ஆலயத்தின் தலைவர்.

5. காசி தாரகை மடத்தின் நிர்வாகிகள்.

6. காசி பஞ்சகங்கா மடத்தின் நிர்வாகிகள்.

7. காசி சிருங்கேரி மடத்தின் நிர்வாகிகள்.

8. காசி ஸ்ரீ ஸ்வாமி பாகவதானந்த மண்டலேச்வரர்.

9. காசி ஸ்ரீ ஸ்வாமி ஸ்வரூபானந்த மண்டலேச்வரர்.

10. காசி பாரததர்ம மகா மண்டலத்தின் பிரதான பண்டிதர் மகாமகோபாத்யாய ஸ்ரீ ஆனந்தசரண தர்க்க சூடாமணி.

11. காசி தர்ம சாஸ்திர பண்டிதர் ஸ்ரீ வித்யாதர கௌடா.

12. கயா ஸ்ரீ காசிநாத்ஸிம்ஹா.

13. கயா ஸ்ரீ கோவர்த்தன மிஸ்ரா.

குன்னக்குடி சுவாமிநாத ஐயர் ஸ்வாமிகளின் வட இந்திய யாத்திரையை முன்னிட்டு ஆங்காங்கு பரிவாரங்கள் தங்குவதற்குரிய இடவசதிகளைக் கவனித்துக்கொண்டு நூற்றுக்கணக்கான பக்தர்களின் விக்ஞாபன பத்திரிகைகளுடன் 23-4-1933-ந் தேதியில், ஸ்வாமிகள் அப்பொழுது விஜயம் செய்திருந்த தஞ்சை ஜில்லா குற்ருலத்திற்கடுத்த கோமல் என்னும் கிராமத்திற்கு வந்து சேர்ந்தார். அவரிடம் ஸ்வாமிகள் பாதை சௌகரியங்களையெல்லாம் விசாரித்துவிட்டு. அடுத்த சாதுர்மாஸம் முடிந்தவுடன் யாத்திரை தொடங்கவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டார்கள். அதை ஒட்டித் தஞ்சையில் நடந்த நவராத்திரி விழாவின் முடிவு நாளாகிய விஜயதசமி அன்று ஸ்வாமிகளின் கங்கா யாத்திரை தொடங்கிற்று.

ஔரங்சீப் காலந்தொட்டு பின். வந்த நவாப்கள் காலங்களிலும் பீடத்தின் அதிபர்கள் யாத்திரை செய்யும்பொழுதெல்லாம்

சுங்கச் சாவடிகளில் எவ்விதச் சுங்கமும் வசூலிக்கக்கூடாதென்றும்; சர்க்கார் அதிகாரிகளும் பொது மக்களும் ஸ்வாமிகளின் பிரயாணத்திற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்துகொடுக்க வேண்டுமென்றும் அவ்வப்போது விளங்கிய

ஸ்வாமிகளின் யாத்திரைக்கு அரசாங்கத்தினரின் ஏற்பாடுகள்.

அரசாங்கத்தார் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். பின்னர் வந்த இங்கிலிஷ் ஈஸ்ட் இந்தியாக் கம்பெனியாரும் இவ்வித உத்தரவுகளை ஊர்ஜிதம் செய்து, 18-4-1792-ல் ஓர் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். அக்காலத்தில் காமகோடி பீடத்தின் ஆசார்ய ஸ்வாமிகள் 500 சிப்பந்திகளும், 25 மாட்டு வண்டிகளும், 20 குதிரைகளும், 5 ஒட்டகங்களும், 3 யானைகளும், 10 பல்லக்குகளும் ஆகிய பரிவாரங்களுடன் காசிக்குச் சென்று வந்திருப்பது அவ்வுத்தரவுகளிலிருந்து வெளியாகிறது.

நம் ஸ்வாமிகள் திருவனந்தபுரம், கொச்சி, புதுக்கோட்டை முதலிய சமஸ்தானங்களில் விஜயம் செய்தபொழுதும், அந்த அந்த அரசாங்கங்கள் மடத்தின் கால்நடைகளுக்கும் வண்டிகளுக்கும் பாதைகளில் சுங்கம் வசூலிப்பதை விலக்கியதுடன், சர்க்கார் கட்டிடங்களில் ஸ்வாமிகள் தங்குவதற்கு வசதியளிக்கவும், போலீஸ், ரெவின்யூ அதிகாரிகள் மூலம் மடத்திற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்கவும் உத்தரவிட்டிருந்தனர்.

ஸ்வாமிகளின் வட இந்தியா யாத்திரையின் போது சென்னை சர்க்கார் (G. O. No. MS. 612 Public Police Department d/26-11-1933) உத்தரவு மூலம் ஸ்வாமிகள் யாத்திரை செய்ய உத்தேசிக்கும் மற்ற மாகாணங்களுக்கும் சுதேச சமஸ்தானங்களுக்கும் ஸ்வாமிகளின் யாத்திரைக்கு வேண்டிய வசதிகளைச் சர்க்கார் தம் சிப்பந்திகள் மூலம் செய்துகொடுக்க வேண்டுமென ஓர் வேண்டுகோளை விடுத்தனர். அதன்படி ஸ்வாமிகளுக்கு ஐதராபாத் ராஜ்யம், மத்யமாகாணம், ஐக்ய மாகாணம், பீகார் மாகாணம், ஒரிஸா மாகாணம், வங்காளம், கிழக்கு சமஸ்தானங்களைச் சேர்ந்த ராஜ்யங்கள் இவைகளின் அதிகாரிகள் ஸ்வாமிகளின் யாத்திரைக்கு எல்லா வசதிகளையும் அளித்தனர்.

தஞ்சையிலிருந்து 1933-ஆவது வருடம் செப்டம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் புறப்பட்டு, நாள் ஒன்றுக்குச் சுமார் இருபது மைல் வீதம் பிரயாணம் செய்து, ஸ்வாமிகள் திருவண்ணா

மலை, ஆரணி, வேலூர், சித்தூர், பலமனேரு, மார்க்கமாக மதனப் பள்ளியை அடைந்தார்கள். அவ்வூர் மக்கள் ஸ்வாமிகளுக்குப் பெரியதொரு வரவேற் பளித்தார்கள். அப்பொழுது மதனப்பள்ளிக்கு அடுத்த சின்னதிப்பசமுத்திரம் என்னும் சிற் றூரில் ஒரு மாத காலம் அவர்கள் தங்கியிருந்தார்கள். பின்னர் கதிரி என்னுமிடத்தில் ஸ்ரீ நரசிம்ஹமூர்த்தியைத் தரிசித்துக் கொண்டார்கள். அவ்விடமிருந்து தருமாபுரம், அனந்தப்பூர், தோன், துரோணசலம், இவ்வூர்களின் மார்க்கமாகக் கர்னூலை அடைந்து, அவ்விடம் சுமார் ஒரு வாரம் முகாம் செய்திருந்தார்கள். ஸ்வாமி கள் முகாம் செய்திருந்த இடமெல்லாம் ஆயிரக்கணக்கான மக்கள் ஸ்வாமிகளை உபசரித்து அவர்கள் செய்துவரும் சந்திரமௌளீச் வரர் பூஜையைத் தரிசித்து வந்தார்கள்.

ராயலசீமைவழி யாக யாத்திரை தொடக்கம்.

श्रीशैल शृंगे विबुधाति संगे तुलाद्रितुंगेऽपि मुदावसंतम् ।
तमर्जुनं मल्लिक पूर्वमेकम् नमामि संसार समुद्रसेतुम् ॥

தக்ஷிணகைலாயம் எனக் கருதப்படும் ஸ்ரீசைலம் நமது பாரத நாட்டிலுள்ள மிகவும் புனிதமான தலங்களில் ஒன்ருகும். ஸ்காந்த புராணத்திலும், மகா பாரதத்திலும், இந்தியாவின் *பன்னிரண்டு ஜோதிர் லிங்கங் களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவைகளில் ஸ்ரீசைலத்தி லுள்ள மல்லிகார்ஜுனர் எனப் பெயர் பெற்று விளங்கும் ஜோதிர்லிங்கமும் ஒன்ருகும். இந்த க்ஷேத்திரத்தின் தல விருக்ஷம் அர்ஜுனம் என்னும் மருத மரமாகும். மருத மரத்தைத் தலவிருக்ஷமாகக் கொண்ட மேலும் இரண்டுத் தலங்கள் நம் தமிழ் நாட்டில் உள்ளன. அவைகளில் ஒன்று மத்தியார் ஜுனம் எனக் கூறப்படும் திருவிடைமருதூர் மற்ருென்று திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள புடார்ஜுனம் என்னும் தலம். ஸ்ரீசைலத்தில் அமைந்துள்ள அம்பிகைக்குப் பிரமராம்பிகை என்பது பெயர். பிரமரம் என்னும் சொல் வண்டைக்குறிப்ப தாகும். மல்லிகையின் பெயரை ஈசன் இங்கு பெற்றிருப்ப

ஸ்ரீசைல யாத்திரை

*12 ஜோதிர்லிங்கங்கள்:—(1) ஸோமநாதர் (2) வைத்யநாதர் (3) நாகநாதர் (4) விசுவநாதர் (5) ராமநாதர் (6) ஓங்காரேசுவரர் (7) திரயம்பகேசுவரர் (8) கேதாரேசுவரர் (9) க்ருஷ்ணேசுவரர் (10) பீமேசுவரர் (11) மல்லிகார்ஜுனர் (12) மகாகாளர்.

தால், மல்லிகை மலரை அம்பிகையாகிய வண்டு மொய்க்கும் தன்மையை இங்குக் குறிப்பதாக உணரலாம். மேலும் இத்தலம் தேவி பாகவதத்தில் கூறப்பட்டுள்ள பதினெட்டுச் சக்தி பீடங்களில் ஒன்ருகும். இத்தலத்தை அடைய ஆந்திர நாட்டின் சமீபத் தலை நகராயிருந்த கர்னூலிலிருந்து 67 மைல் தூரத்திலுள்ள பெத்தசெறுவு என்னும் இடம் வரை இருபுறமும் காடுகள் அமைந்த சாலை வழியாக மோட்டாரில் சென்று, அவ்விடமிருந்து 11 மைல்கள் மலை மீது நடந்தே செல்லவேண்டும். கடல் மட்டத்திற்கு 1500 அடி உயரமுள்ளதாக அமைந்துள்ள ஸ்ரீ சைல மலைமீது ஏறுவது மிகவும் கடினமான காரியமாகும். நல்ல மனேதிடமும், கடவுள் பக்தியும், அமைந்தவர்கள்தாம் இத்தலத்திற்குச் சென்றுவர முடியும். வருடத்திற்கு ஒருமுறை சிவராத்திரி சமயத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்குச் சென்று மல்லிகார்ஜுனரைத் தரிசித்து வருகின்றனர். மகர சங்கராந்தி அன்றும் யுகாதி எனக் கூறப்படும் சாந்திரமான வருடப்பிறப்பன்றும் சிலர் அங்குச் சென்று வருவதுண்டு. மார்க்காபூரிலிருந்தும், நந்தியாலிலிருந்தும் பெத்தசெறுவுக்குப் போகப் பாதைகள் அமைந்துள்ளன. மேலே குறிப்பிட்டுள்ள விசேஷ நாட்களைத் தவிர மற்ற நாட்களில் அங்கு யாத்திரிகர்கள் எவரும் செல்வதில்லை.

ஆதிசங்கரர் பாரதபூமியைச் சுற்றி வந்தபொழுது ஸ்ரீசைலத்தை அடைந்து அங்கு அமைந்துள்ள மல்லிகார்ஜுன மகாலிங்கத்தைத் தரிசித்தார்கள். இதற்குச் சான்ருக ஆதிசங்கரர் அருளிய சிவானந்த லகரி என்னும் தோத்திரங்களில் ஓர் சுலோகத்தைக் கூறலாம்.

संध्यारम्भ विजृम्भितं श्रुति शिरस्थानान्तरा धिष्ठितम्
सप्रेम भ्रमराभिराममसकृत् सद्वासना शोभितम् ।
भोगीन्द्राभरणम् समस्त सुमनः पूज्यं गुणाविष्कृतम्
सेवे श्रीं गिरिमल्लिकार्जुन महालिङ्गं शिवालिङ्गितम् ॥

இதன் பொருள்:—'சந்தியாகாலமென்னும் பிரதோஷ காலத்தில் ஆனந்தத் தாண்டவமாடி புஷ்பம்போல் மலர்கின்றவரும், வேதங்களுக்கெல்லாம் சிகரமாக விளங்கும் உபநிடதங்களில் தங்கியிருப்பவரும், தன்பால் எப்பொழுதும் ஆசைகொண்டு விளங்கும் இனிமையான வண்டின் பெயரைப் பூண்ட பிரமராம்பிகையினல்

அழகுபடுத்தப்பட்டவரும், பாம்பை ஆபரணமாகப் பூண்டவரும், எப்பொழுதும் ஸத்துவ குணத்துடன் விளங்கி எல்லாத் தேவர்களாலும் பூஜிக்கத் தக்கவரும், சிவா என்னும் பெயருடன் விளங்கும் அம்பிகையினுல் அணையப்பெற்றவருமான ஸ்ரீசைலத்தில் விளங்கும் மல்லிகார்ஜுன மகாலிங்கத்தை வணங்குகின்றேன்.'

இன்னும் பல விசேஷப் பொருள்களையும் இந்தச் சுலோகத்திற்கு உரையாசிரியர்கள் கூறியுள்ளார்கள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சிவானந்தலகரியின் சுலோகம் நமது ஸ்வாமிகளின் மனஸிற்கு மிகவும் பிடித்தமான சுலோகங்களில் ஒன்ருகும். அதை அவர்கள் அடிக்கடி தமது இனிமையான குரலால் பாடி ஈசனைத் துதி செய்வதைப் பக்தர்கள் பலர் கேட்டிருக்கின்றனர். மசூலிப்பட்டினத்திலுள்ள ஆந்திர அறநிலையப் பாதுகாப்பு இலாகா டெபுடி கமிஷனர் ஸ்ரீ ஸி. வி. எல். வரப்பிரசாத ராவ் என்பவர் இந்தச் சுலோகத்தை ஸ்வாமிகளின் திருவாக்கிலிருந்து கேட்டதின் விளைவாகவே, ஸ்ரீசைலம் சென்று வர வேண்டுமென்றும், மல்லிகார்ஜுனரைத் தரிசிக்க வேண்டுமென்றும் தமக்கு அவா ஏற்பட்டதென ஹிந்துப் பத்திரிகையின் 7-2-1954 ஞாயிறு இதழில் அவர் ஸ்ரீசைலத்தைப் பற்றி எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இங்குத் தேவியின் ஆலயம் மல்லிகார்ஜுன ஆலயத்தை ஒட்டித் தனிமையான ஒரு பிரகாரத்தில் அமைந்துள்ளது. இத்தலத்தின் புண்ணிய தீர்த்தம் பாதாளகங்கையென்ற பெயர் பெற்று விளங்குகிறது. இதற்குக் கிருஷ்ணவேணி யென்று மற்ருெரு பெயருமுண்டு. இந்தத் தண்ணீர் நிலையை அடைவதற்கு மல்லிகார்ஜுன ஆலயத்திலிருந்து 900 படிகள் இறங்கி, இரண்டு மைல்கள் தூரம் செல்லவேண்டும். வேங்கட மலையில் ஆகாய கங்கையும், இத்தலத்தில் பாதாள கங்கையும் மிகவும் புனித தீர்த்தங்களாகக் கருதப்பட்டு வருகின்றன. பக்தர்கள் இவைகளில் நீராடித் தங்களைப் புனிதமாக்கிக் கொள்வர். திருப்பருப்பதம் என்னும் இத்தலத்தை அப்பர், சுந்தரர், சம்பந்தர் இம்மூவரும் ஈசனைக் குறித்துப் பாடியுள்ளார்கள். இத்தலத்திற்கருகில் நந்தி தேவர்மலை உருவமாக அமைந்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

ஸ்வாமிகள் கர்னூலில் முகாம் செய்திருந்தபொழுது ஸ்ரீசைல யாத்திரை சென்று வரவேண்டுமெனக் கருதி அத்தலத்திற்குச்

செல்லும் வழியைப்பற்றி அவ்வூர் மக்களிடம் வினவினுர்கள். அப்பொழுது அவ்வூர்வாசிகள், சிவராத்திரி முதலான விசேட நாட்களில் மாத்திரமே அங்குப் பயமின்றி சென்று வரலாமென்றும், அடுத்த மாதத்தில் சிவராத்திரி வருவதால் அப்பொழுது சௌகரியமாகப் போய்வரலாமென்றும் கூறினர். ஆனல் ஸ்வாமிகளோ கங்கா யாத்திரையைச் சீக்கிரமாக முடிக்க எண்ணம் கொண்டிருந்ததால், ஸ்ரீசைலத்திற்கு விரைவில் சென்று வர ஓர் மார்க்கத்தைத் தாமே ஆலோசித்து, அதன்படி கர்னூல் கடப்பை கால்வாய் வழியாகப் படகில் போய் வருவதெனத் தீர்மானித்தார்கள். மேலும் ஜனக் கூட்டம் இல்லாத சமயத்தில் ஸ்ரீ மல்லிகார்ஜுனரைத் தரிசிக்க ஸ்வாமிகள் ஆவல்கொண்டார்கள் போலும். அதன்படியே, ஸ்வாமிகள் ஸ்ரீ சந்திரமௌளீச்வரர் பூஜைக்கு வேண்டிய சாமான்களையும், ஓர் சிறு பரிஜனக் கூட்டத்தையும் உடன் வரப் பணித்து, 24-1-1934-ந் தேதியில் கர்னூலிலிருந்து படகில் பிரயாணமானுர்கள். 25-ந் தேதி பகடிபாலாவிலும், 26-ந் தேதி ஆத்மக்கூரிலும், 27-ந் தேதி நாகலூட்டியிலும், 28-ந் தேதி பெத்த செறுவிலும் தங்கி, அன்ருடம் நித்ய பூஜைகளை அங்கங்கே முடித்துக்கொண்டு பெத்தசெறுவிலிருந்து கால்நடையாக மலைமீது ஏறி, சுக்லபருவதம் எனக் கூறப்படும் மிகக் கடுமையான ஏற்றத்தைக் கடந்து, 29-ந் தேதி, மல்லிகார்ஜுனரையும், ஸ்ரீபிரமராம்பிகையையும் தரிசித்துக்கொண்டார்கள். ஸ்வாமிகளின் வரவை அறிந்த தேவஸ்தான அதிகாரிகள் குறுகிய அந்தக் காலத்திற்குள் ஸ்வாமிகள் அவ்விடம் தங்குவதற்கென எவ்வளவு வசதி அளிக்க முடியுமோ அவ்வசதிகளை யெல்லாம் முன்கூட்டியே செய்து வைத்திருந்தனர். ஸ்வாமிகள் வெகு நேரம் ஈசன் சந்நிதியிலும், அம்பிகை சந்நிதியிலும் நின்று ஆதிசங்கரர் அருளின சிவானந்தலகரியிலிருந்தும் சௌந்தர்யலகரியிலிருந்தும் பல சுலோகங்களைப் பாடி மெய்ம்மறந்து துதி செய்தார்கள். இதைக் கண்ணுற்ற பக்தர்கள் பரவசமடைந்தனர். அதற்கடுத்த 30-ந் தேதி அன்று சந்திர கிரகணம் நிகழ்ந்தபடியால், கிரகண ஸ்நானத்திற்கென ஸ்வாமிகள் பாதாள கங்கைக்குச் சென்ருர்கள். அவ்விடத்தை அடைவதற்கு 900 படிகள் இறங்கிச் செல்லவேண்டுமென முந்தியே கூறப்பட்டுள்ளது. அன்றைக் கிரகணம் இரவு 9-30 மணிக்கு பிடித்து, 10-45க்கு விட்டது. மலைமீது அமைந்துள்ள அடர்ந்த கானகத்தில் ஓங்கி வளர்ந்திருந்த மரக்கூட்டம் நிலவின் ஒளியைக்

கூடக் கண்களுக்குப் புலனாகாதவாறு செய்துவிட்டது. பாதாள கங்கையின் கரையோரமாக மரக்கிளைகளையும் காட்டுத்தழைகளையும் கொண்டு ஓர் பர்ணசாலை அமைக்கப்பெற்றது. அந்தப் பர்ணசாலையில்தான் அன்றிரவு ஸ்வாமிகளின் ஸ்ரீ சந்திரமௌளீச்வரர் நித்ய பூஜை நடைபெற்றது. பெரிய தீவட்டங்களைச் சிப்பந்திகள் இரவு முழுவதும் எரியவிட்டனர். குளிர் நீங்குவதற்குக் காட்டுத் தழைகளையும், மரச்சுள்ளிகளையும் சேகரித்து நெருப்பு ஜ்வாலையை அவர்கள் உண்டாக்கினர். அந்த அக்னி ஜ்வாலையைக் கண்டதனால், துஷ்ட மிருகங்கள் எதுவும் கிட்ட அணுகவில்லை. அவ்விதம் அன்றிரவை ஸ்வாமிகள் பாதாளகங்கைக் கரையில் கழித்தார்கள். மறுநாள் காலையில் புறப்பட்டு 900 படிகள் மேலே ஏறி, மறுபடியும் ஸ்ரீசைலத்தை அடைந்து, ஸ்ரீ மல்லிகார்ஜுனரை மறுமுறை தரிசனம் செய்துகொண்டு, அன்றும் மறுநாளும் ஆலயத்திலேயே தங்கியிருந்து பின்னர் பெத்தசெருவை அடைந்து அவ்விடமிருந்து படகிலேயே பிரயாணத்தைத் தொடங்கி 6-2-1934-ந் தேதி கர்னூலுக்கு விஜயமானார்கள். 1934-ஆவது வருடம் பிப்ரவரி மாதம் 12-ந் தேதி சிவராத்திரியன்று ஸ்வாமிகள் அலம்புரியென்னும் தலத்தில் துங்கபத்ரா நதியில் ஸ்நானம் செய்து அவ்விடம் ஸ்ரீ பாலபிரும்மேச்வரரைத் தரிசனம் செய்துகொண்டு ஸ்ரீ சந்திரமௌளீச்வரருக்கு நான்கு கால பூஜையையும் அவ்விடத்திலேயே நடத்தினார்கள். அம்மாதம் 21-ந் தேதி வரையில் அவர்கள் பக்தர்களின் வேண்டுகோளின்படி அப்பக்கங்களிலுள்ள சில கிராமங்களுக்கு விஜயமாகிப் பின்னர் ஐதராபாத் சமஸ்தானத்திற்கு விஜயமானார்கள்.

செஞ்சுக்கள் என்னும் மலைஜாதியினர் செய்த உதவி.

ஸ்வாமிகள் ஸ்ரீ சைலத்திற்கு விஜயமாவதைத் தேவஸ்தான அதிகாரிகள் மூலம் அறிந்த செஞ்சுக்கள் எனக் கூறப்படும் ஆதிவாசிகளான மலைஜாதியினர் (சுமார் 100 பேர்களடங்கிய ஓர் கோஷ்டியினர்) நாகலூட்டியில் ஸ்வாமிகளைத் தரிசித்து, அவர்களின் யாத்திரைக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்துகொடுப்பதாக வாக்களித்தனர். இந்த மலைஜாதியினர் தேர்ச்சி பெற்ற வில்லாளிகள். காடுகளிலுள்ள விலங்குகளைத் கொன்றும், மலைகளிலுள்ள தேனைச் சேகரித்தும், மற்றும் பழங்கள், கிழங்குகள், காய்கள் இவைகளினாலும் தம் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். நல்ல உடல்

வலிமை படைத்த அப் பழங்குடி மக்கள் வெளியார்களை சாதாரண நாட்களில் அப்பிரதேசத்தினுள் நுழைய அனுமதிப்பதில்லை. வில்லைக் கொண்டு பிறரை எதிர்ப்பார்கள். அவர்கள் பேசும், பாஷையும், தனிமையானது. ஸ்வாமிகளின் கோஷ்டியைத் தங்கள் பகைவர்களென முதலில் எண்ணிய அவர்கள் பின்னர் உண்மை யறிந்து அந்த கோஷ்டிக்கு வனவிலங்குகளால் எவ்வித அபாய மும் நேராத வண்ணம் பிரயாணம் முழுவதும் அவர்கள் காவல் காத்து வந்ததுடன், சாமான்கள் பலவற்றை மலைமீது ஏற்றிச் செல்லவும் அவர்கள் மிகுந்த உதவி புரிந்தனர். ஸ்வாமிகள் அவர்களுக்குப் பணத்தைக் கொண்டு வெகுமதி அளிக்க உத்திர விட்டபொழுது, அவர்கள் அதை ஏற்க மறுத்துவிட்டனர். மதிப்பிற்குரிய பெரியோர்கள் அப்பிரதேசத்திற்கு விஜயம் செய்யும் பொழுது அவர்களின் முன்னிலையில் நடனமாடி அவர் களைக் களிப்புறச் செய்வதே தங்களது வழக்கம் என்றும், அந்த நடனத்தை ஸ்வாமிகள் பார்வையிட்டு அவர்களுக்கு ஆசி கூற வேண்டுமென்றும், அதுவே தங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கு மென்றும் அவர்கள் கூறினார்கள். மடத்தின் அதிகாரிகள் இதை விரும்பவில்லை, ஆனால் எவரையும் மகிழ்விக்கச் செய்யும் கருணை உள்ளம் படைத்த ஸ்வாமிகளோ அவர்களது நடனத்தையும் பார்வையிட அன்புடன் இசைந்தார்கள், செஞ்சுக்களும் அது கேட்டு மகிழ்ந்து, சிறிதுநேரம் அவர்கள் தங்கள் நடனங்களை ஆடிக்காட்டிட, அவற்றைக் கண்டு ஸ்வாமிகள் மகிழ்ந்தார்கள். சிறிய பெண் குழந்தைகளும், அந்த நடனத்தில் கலந்துகொண்டு அவர்களது பழமையான முறைப்படி வெகு அழகாக நடனம் ஆடினர். ஸ்வாமிகள் அவர்கள் யாவருக்கும் நற்சுவை உண்டி அளிக்கச் செய்து, விபூதிப் பிரசாதம் கொடுத்து, அவர்கள் எல்லோ ரையும் ஆசிர்வதித்தார்கள். அப்பொழுது அச் சமூகத்தினர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

ஸ்வாமிகள் கர்னூலில் துங்கபத்ரா நதியைக் கடந்து, அதன் வடகரையிலுள்ள ஐதராபாத் சமஸ்தானம் ஜல்லாபுரம், அனந்த புரம், இவைகளின் வழியாகக் கத்துவால் என்னும் பட்டணத்தை அடைந்தார்கள். அக்காலத்தில் கத்துவால் ஐதராபாத் சமஸ் தானத்திற்குள்ளடங்கிய ஓர் உப சமஸ் தானமாக இருந்தது. அதை ஓர் இராணி

ஐதராபாத் சமஸ்தான மக்கள் அளித்த விசேஷ வரவேற்பும் அரசாங்க மரியாதை யும்.

ஆண்டு வந்தார். கத்துவால் மகாராணியால் ஸ்வாமிகள் விசேஷ மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டு, அவ்விடம் நான்கு நாட்கள் தங்கியிருந்தார்கள். அப்பொழுது அச் சமஸ்தான கிராம மக்கள் கத்துவாலில் ஆயிரக்கணக்காகக் கூடி ஸ்வாமிகளைத் தரிசித்துக் கொண்டனர். அங்கிருந்து கிருஷ்ண அக்ரகாரம், ஆத்மக்கூர், கோத்த கோட்டா, சின்னஜானம் பேட்டா, ஜட்ஜோர்லா, பெத்த ஜானம் பேட்டா இவைகளின் மார்க்கமாக ஸ்வாமிகள் 12-3-1934-ந் தேதியன்று ஐதராபாத் நகரத்திற்கு விஜயமானுர்கள்.

ஸ்வாமிகள் ஐதராபாத்திற்கு விஜயமாகும் முன்னரே அந்நகர மக்கள் திவான் பகதூர் எஸ். ஆராவமுத ஐயங்கார் தலைமையில் ஓர் வரவேற்புக் கமிட்டி அமைத்து, ஸ்வாமிகளின் ஐதராபாத் விஜயத்தை மிகவும் வெற்றிகரமாக நடைபெறச் செய்யவேண்டிய எல்லா முன்னேற்பாடுகளையும் செய்திருந்தனர். ஸ்வாமிகள் அவ் விடம் விஜயம் செய்த 12-2-34-ந் தேதி அன்று மாலை 6 மணிக்கு நகர எல்லையில் நகரப் பிரமுகர்களான ஸ்ரீ ராஜா ராய் ராய், வாமன் நாயக், ச்யாம் ராவ், துக்காராம், ரங்கதாம் நாட், இன்ஜினீயர் நடராஜ ஐயர், மற்றும் பல்லாயிரக்கணக்கான மக்களும் கூடி ஸ்வாமிகளுக்குப் பூர்ணகும்பம் அளித்து மிகவும் குதூகலமாக அவர்களை வரவேற்ருர்கள். அவ்விடமிருந்து நைஜாம் சமஸ் தானத் திருப்புகளும், விருதுகளும் முன் செல்ல ஒரு பெரிய ஊர்வலம் புறப்பட்டு லால்தார்வாயா ரோடிலுள்ள, ராஜா ராயுக்குச் சொந்தமான லக்ஷ்மணேச்வரபாக் என்னும் அரண்மனைக்குச் சென்றது. அவ்விடம் ஸ்வாமிகள் சிவிகையிலிருந்து இறங்கிச் சிம்மாசனத்தில் அமர்ந்தவுடன், யாவரும் ஸ்வாமிகளை வணங்கினர். நகரப் பிரமுகரான வாமன் நாயக் ஸ்வாமிகள் மேற்கொண்டுள்ள கங்கா யாத்திரையை விளக்கி, மார்க்கத்தில் ஸ்வாமிகள் தங்குவதற்குத் தகுந்த ஏற்பாடுகளை மக்கள் குறைவின்றி செய்து கொடுக்க வேண்டுமென்றும், ஐதராபாத் சமஸ்தான மக்கள் இவ் விஷயத்தில் முன்னேறி நிற்பார்கள். என்று தாம் நம்புவதாயும், மற்றும் ஸ்வாமிகளின் பெருமைகளைப் பற்றியும் எடுத்துக் கூறினுர். 24-3-34-ந் தேதி வரை ஸ்வாமிகள் லக்ஷ்மணேச்வர பாக்கிலேயே தங்கியிருந்தார்கள். 25-ந் தேதி துளஜாபவனில் நகர மக்களின் பொது பிக்ஷையும், பாதபூஜையும் நடைபெற்றன. 27-ந் தேதி அட்வகேட் கல்யாணராம ஐயர் வீட்டிலும், 28-ந் தேதி நைஜாம் காலேஜ் புரபொசர் கிருஷ்ணமூர்த்தி ஐயர் வீட்டிலும்

ஸ்வாமிகள் தங்கியிருந்தார்கள். நைஜாம் சமஸ்தானத்தின் பிரதம மந்திரியாக இருந்த மகாராஜா கிஷன் பிரசாத் பகதூர் அவர்களின் பிரார்த்தனைக்கு இணங்கி அவரது அரண்மனையில் ஸ்வாமிகள் 29-ந் தேதி தங்கி பிக்ஷை, பாதபூஜை முதலியவைகளை ஏற்றுக் கொண்டார்கள். பிரதம மந்திரிக்கு ஸ்வாமிகள் ஒரு விலை உயர்ந்த காஷ்மீர் சால்வை அணிவித்து அவரைக் கௌரவித்தார்கள். பின்னர் மார்ச்சு மாதம் 30-ந் தேதி முதல் ஏப்ரல் 16-ந் தேதி முடிய சூப்பிரண்டெண்டிங் இன்ஜினீயர் எம். கோபால ஐயர் ஜாகையில் ஸ்வாமிகள் தங்கியிருந்தார்கள். பிரதம மந்திரியின் அரண்மனையில், ஸ்வாமிகள் தங்கியிருந்தபொழுது சமஸ்தானத்தின் பிரதான உத்தியோகஸ்தர்களெல்லாரும் ஸ்வாமிகளுக்கு அறிமுகம் செய்விக்கப்பட்டனர். நிஜாமின் விருப்பத்திற்கிணங்க மடத்திற்கு ஏற்பட்ட ஒரு நாள் செலவைச் சமஸ்தான சர்க்காரே ஏற்றுக்கொண்டார்கள். இந்தத் தொகை தகுந்த அதிகாரிகள் மூலம் ஸ்வாமிகளுக்குக் காணிக்கையாகச் செலுத்தப்பட்டது. நைஜாம் சமஸ்தானத்தில் அந்நாளில் யானைகள் வைத்துக்கொள்ள சமஸ்தான அதிபதிகளைத் தவிர வேறெவருக்கும் உரிமையில்லை. இவ் விதியிலிருந்து மடத்திற்கு விலக்களித்து ஓர் உத்திரவையும் சர்க்கார் வெளியிட்டனர். ஸ்வாமிகள் ஐதராபாத்தில் தங்கியிருந்த பொழுது அரசகுடும்பத்தில் நிகழ்ந்த ஓர் மரணத்தை ஒட்டிச் சில நாட்கள் துக்கம் கொண்டாடப்பட்டது. அவ்விதம் துக்கம் கொண்டாடும் நாட்களில் நகரத்தில் எவ்வித வாத்யமும், சங்கீதமும் நடைபெறக்கூடாதென்பது சர்க்கார் ஏற்படுத்தியிருந்த விதியாகும். அப்படியிருந்தும், ஸ்வாமிகளின் நித்ய பூஜைக்கு நாதஸ்வர வாத்யம் வாசிப்பதற்கு நைஜாம் இவ்விதிகளிலிருந்து விலக்களித்தார். இவ்விதம் பொதுமக்களும் அரசாங்கமும் ஸ்வாமிகளுக்குத் தகுந்தவாறு மரியாதை செலுத்தினார்கள்.

ஸ்வாமிகள் ஐதராபாத்தில் தங்கியிருந்தபொழுது காட்கேரு மாதவராவ் வீட்டில் சநாதன தர்ம சபை ஒன்று கூட்டப்பட்டது. அந்தச் சபைக்கு நம் ஸ்வாமிகள் விஜயம் செய்திருந்தார்கள்.

ஐதராபாத்தில் சநாதன தர்ம சபை நிறுவியது.

மகா பண்டிதர்களான நியாய, வேதாந்த பாஸ்கர பிரும்மஸ்ரீ புலுசு அப்பண்ண சாஸ்திரிகளும், வனபர்த்தி சமஸ்தான வித்வான் உபய வேதாந்த நம்பாக்கம் ராகவாச்சாரியாரும், மற்றும் வேலூரி ரங்கதாமுலு முதலான பல வித்வான்

களும் வந்திருந்தனர். ஸ்வாமிகள் சபையைத் துவக்கி வைத்துப் பேசுகையில், சநாதனமான நமது மதத்தையும் தர்மத்தையும் காப்பதற்கு ஹிந்துவாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் தம்மாலான முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், அவரவர்கள் தங்களது சுயதருமத்தைக் காத்துக்கொண்டால் சநாதன தருமம் எப்பொழுதும் நிலைத்திருக்குமென்றும், தர்மத்தை விளக்கிக் காட்டத் தர்மசபைகள் ஆங்காங்கு நிறுவ வேண்டியது மிகவும் அவசியமென்றும், அந்தப் பணியில் வித்துவான்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் முக்கியமாக வேண்டுமென்றும், பொதுமக்கள் அவர்களுக்கு எல்லா உதவிகளையும் அளித்து அவர்கள் மூலம் நற்பயனை அடைய வேண்டுமென்றும் உபதேசித்தார்கள்.

பின்னர் ஸ்ரீ அப்பண்ண சாஸ்திரிகள் பேசுகையில் ஸ்வாமிகளை ஸ்ரீ ஆதி சங்கரரின் அவதாரமென்றே தாம் நம்புவதாகவும் அவர்களின் திருவாக்கிலிருந்து வரும் உபதேசங்களை எல்லாம் ஆதிபகவத் பாதரது உபதேசமாகவே மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கூறினர். உபய - வே - ராகவாச்சாரியார் ஸ்வாமிகளின் மேதா விலாசத்தைக் கண்டு வியந்து ஈசுவர அம்சமாகவே ஸ்வாமிகளைத் தாம் காண்பதாயும் அவர்கள் விஜயத்தினால் உலகத்திற்கு எல்லா நன்மையும் ஏற்படுமென்றும் கூறினர். அன்று அங்குத் கூடியிருந்த நகரமக்களில் கீழேகண்டவர்கள் சபையின் அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1. ராஜாபகதூர் ஸ்ரீ வெங்கடராம ரெட்டி.
2. ராஜா ஸ்ரீ நரசிங்க ராவ்.
3. ராஜா ஸ்ரீ ச்யாம் ராவ்.
4. ஸ்ரீ ஸ்ரீபதி ராவ்.
5. ஸ்ரீ பாண்டுரங்க ராவ்.
6. ஸ்ரீ காட்கில் மாதவ ராவ்.
7. ஸ்ரீ விஷ்ணு தத்தாத்ரேய பிசோங்கர்.
8. ஸ்ரீ ராமச்சந்திர ராவ்.
9. ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஐயர்.
10. ஸ்ரீ ரங்கசாமி ஐயர்.
11. ஸ்ரீ ச்யாமாபந்துல கோபால ராவ்.

12. ஸ்ரீ நடராஜ ஐயர்.

13. ஸ்ரீ கோபால ஐயர்.

14. ஸ்ரீ நாராயண ராவ்.

15. ஸ்ரீ டாக்டர் ஸ்ரீ டௌரே.

16. ஸ்ரீ கோவிந்த ராவ்.

ஸ்வாமிகளின் உபதேசப்படி சநாதன தர்மத்தைக் காப்பாற்றுவதில் தங்களாலான பணிகளைச் செய்வதாக அங்கத்தினர்கள் தெரிவித்துக்கொண்டனர். சபைக்கு ஓர் தனிக் கட்டிடம் அவசியமெனச் சபையில் சிலர் ஆலோசனை கூற, அதற்காக ஒரு நிதி திரட்டத் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிதிக்கு முதன் முதலாக மடத்தின் நன்கொடையாக ரூபாய் 100. அளிக்க ஸ்வாமிகள் கட்டளையிட்டார்கள். இவ்விதம் ஐதராபாத்தில் சநாதன சபையின் ஆரம்ப விழா மிகவும் விமரிசையாக நடைபெற்றது. அந்த நகரத்தில் ஓர் அத்வைத சபையும் நிறுவ வேண்டுமென ஸ்வாமிகள் விருப்பம் கொண்டார்கள். இப்பணியை நிறைவேற்றும் பொறுப்பை மகாதேவ தாமோதர கட்கில் என்னும் பிரமுகரிடம் அவர்கள் ஒப்படைத்தார்கள்.

ஐதராபாத்திலிருந்து புறப்பாடும், மக்களின் பக்தியும்.

நாற்பது நாட்களுக்கு மேல் ஐதராபாத்தில் தங்கியிருந்த ஸ்வாமிகள் கங்கா யாத்திரையின் பொருட்டு மேலும் தமது பிரயாணத்தைத் தொடங்க வேண்டி, 22-4-34-ந் தேதி அந்நகரத்திலிருந்து புறப்பட முன்னேற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டன. ஜனசஞ்சாரமே இல்லாத பிரதேசங்களின் வழியாக அதற்குமேல் யாத்திரை செய்ய வேண்டி இருந்ததை உத்தேசித்து, தமது பரிவாரங்களின் ஒரு பாகத்தை ஐதராபாத்திலேயே விட்டுவைப்பதென ஸ்வாமிகள் தீர்மானித்தார்கள். (இதன்படி மடத்தின் வண்டிகள், கால்நடைகள், சாமான்கள் முதலான சிலவற்றை அங்கே விடுத்து வைக்க, மடத்தின் சிஷ்யர்கள் சிலர் அவைகளை நன்கு காப்பாற்றி, நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு ஸ்வாமிகள் ஆந்திர தேசத்திற்குத் திரும்பியபொழுது அவற்றை மடத்தில் ஒப்படைத்தார்கள்.)

ஒரு மாதத்திற்கு மேல் ஸ்வாமிகளிடம் நெருங்கிப் பழகியவர்களும் அவர்களின் பூஜையை அன்றாடம் தரிசித்தவர்களும்,

ஸ்வாமிகள் அவ்வப்பொழுது அருளிய உபதேச மொழிகளைக் கேட்டவர்களுமான அந்நகர் மக்கள், 'இனித் தங்களுக்கு இத்தகைய வாய்ப்பு கிட்டுமோ?' என்ற மனக்கவலையுடன் ஆயிரக் கணக்கில் அன்று ஸ்வாமிகளைத் தரிசிக்க வந்தார்கள். ஸ்வாமிகள் ஒவ்வொருவருடனும் இரண்டொரு வார்த்தைகள் பேசி, அவர்கள் யாவருக்கும் மந்திராக்ஷதை தந்து அவர்களை ஆசீர்வதித்தார்கள். நகரத்திலுள்ள கோடீசுவரர்களும். அரசாங்க உத்தியோகஸ்தர் களும், பல தொழில்களில் ஈடுபட்டவர்களும், ஏழை மக்களும் ஒருங்கே சேர்ந்து அன்று ஸ்வாமிகளை வழியனுப்பிய காட்சி என்றும் மறக்கமுடியாததாகும். செகந்திராபாத்திலுள்ள பக்தர் களின் விருப்பப்படி ஸ்வாமிகள் அந்நகரத்தில் திவான் பகதூர் ராமகோபால் சேட்டின் பௌத்திரர் ஸ்ரீ கிஷன்சேட்டின் மாளிகை யில் 23-ந் தேதி தங்கி, அவ்விடத்தில் பூஜையை முடித்துக்கொண்டு. நகரமக்களுக்குச் தரிசனம் கொடுத்துவிட்டு மறுநாள் அவ்விட மிருந்து புறப்பட்டார்கள்.

நைஜாம் ராஜ்ய வட பகுதியில் யாத்திரை கோதாவரி ஸ்நானம்.

1934-ஆவது வருடம் ஏப்ரல் மாதம் 24-ந் தேதி ஸ்வாமிகள் செகந்தராபாத்திலிருந்து புறப்பட்டு மேச்சல், தூப்ரான், நரசிங்கி, பிக்னூர், காமரேட்டிபேட், இன்டல்வாய், மேட ராஜ்பல்லி மார்க்கமாகக் கோதாவரிக் கரையிலுள்ள சோண்ணு என்னும் இடத்திற்கு மே மாதம் 5-ம் தேதி விஜயமானுர்கள். பம்பாய் மாகா ணம் திரயம்பகம் என்னும் தலத்திற்கு அருகில், மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்ற இந்தக் கோதாவரி நதியானது, நைஜாம் சமஸ்தானத்தின் வழியாகப் பாய்ந்து பின்னர் ஆந்திர தேசத்தில் பிரவேசித்து, அந்நாட்டைச் செழிப்புறச் செய்யும் ஓர் புண்ணிய நதியாகும். மிகப் புனிதமான இந்த நதியில் ஸ்வாமிகள் அன்று நீராடி, வேதமோதிய அந்தணர் களுக்குத் தானங்களை வழங்கினுர்கள். மறுநாள் ஸ்வாமிகள் அவ்விடமிருந்து புறப்பட்டு நிர்மல், அதிலாபாத், மார்க்கமாக மத்திய மாகாணத்தைக் சார்ந்த பேண்டல்வாடா என்னும் இடத் திற்கு மே மாதம் 15-ந் தேதி விஜயமானுர்கள். இவ்விடங்களி லெல்லாம் மக்கள் ஸ்வாமிகளுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்துகொடுத்துப் பிக்ஷை, பாதபூஜை முதலியவைகளை நடத்தி அதுவரை கண்டிராத ஸ்வாமிகளின் சந்திரமௌளீச்வரர் பூஜை யைக் கண்டு மகிழ்ச்சியுற்றனர். ஒவ்வொரு ஊரிலும் ஸ்வாமிகளின்

வரவை தகுந்த உற்சாகத்துடன் திருவிழாப் போல், அவ்வூர் மக்கள் கொண்டாடினார்கள்.

பெண்டல்வாடாவில் சங்கர ஜயந்தி.

மத்திய மாகாணத்தைச் சேர்ந்த பேண்டல்வாடா என்னும் இடத்தில் ஸ்வாமிகள் மே மாதம் 15-ந் தேதி முதல் 22-ந் தேதி வரை தங்கியிருந்தார்கள். அவ்வருடத்து ஆதிசங்கரரின் அவதார மகோத்ஸவத்தை ஸ்வாமிகள் அந்த ஊரில் கொண்டாடினார்கள். வேத பாராயணம், பிரும்மசூத்திர பாஷ்ய பாராயணம், கீதா பாஷ்ய பாராயணம், உபநிஷத் பாராயணம் இவைகளையெல்லாம் நன்கு கற்றறிந்த வித்வான்களைக் கொண்டு நான்கு நாட்கள் உற்சவம் நடைபெற்றது. ஆதிசங்கரரது மகிமையைப்பற்றியும், அவர்கள் பாரத தேசத்தில் திக் விஜயம் செய்தது பற்றியும் ஸ்வாமிகளே உபந்யாஸம் செய்தார்கள். இந்தச் சங்கரஜயந்தி உத்ஸவமானது கோதாவரியின் உபநதியான பெண்கங்கா என்று கூறப்படும் நதியின் கரையில் நடைபெற்றது. அவ்விடத்தில் மகாராஷ்டிர தேசப் பண்டிதர் பலர் ஸ்வாமிகளைத் தரிசித்துக் கொண்டார்கள். அதன் பிறகு, ஸ்வாமிகள் மேலும் யாத்திரையைத் தொடர்ந்து கரஞ்சி, மர்சாடா, வணி (வன்) வரோரா, தேமுட்டா, இவ்வூர்களின் வழியாக மே மாதம் 31-ந் தேதி நந்தூரி என்னும் இடத்திற்கு விஜயமானார்கள்.

நாகப்பூருக்கு விஜயம்.

1934-ஆவது வருடம் ஜூன் மாதம் 1-ந் தேதி ஸ்வாமிகள் ஜாம் என்னும் ஊரில் தங்கி அவ்விடமிருந்து காந்தினி, அசோசா, தங்கர்தாம் முதலான ஊர்கள் மார்க்கமாக ஜூன் மாதம் 5-ந் தேதி நாகப்பூருக்கு விஜயமானார்கள். நாகப்பூரில் மகாராஷ்டிரர்கள், ஆந்திரர்கள், தமிழ் நாட்டு மக்கள் யாவரும் ஒருங்கே கூடி, ஸ்வாமிகளுக்கு அன்று ஒரு பெரிய வரவேற்பை அளித்தார்கள். நகரத்தின் முக்கிய வீதிகளின் வழியாகப் பெரியதொரு ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். சுமார் நான்கு மணிநேரம் ஊர்வலம் நடைபெற்றது. ஸ்வாமிகள் ஜாகையை அடைந்தவுடன் பொது மக்கள் சார்பாக ஸ்வாமிகளுக்கு வரவேற்பு பத்திரங்கள் வடமொழியிலும், மகாராஷ்டிரத்திலும், தமிழிலும் வாசித்தளிக்கப்பட்டன. தேசியத் தலைவர்களும், சர்க்கார் உயர்தர உத்தி

யோகஸ்தர்களும் அங்கு ஏராளமாகக் கூடியிருந்தனர். ஸ்வாமிகள் மூன்று பாஷைகளிலும் பேசி, நமது சநாதன தர்மத்தைக் காப்பாற்ற யாவரும் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும், தர்மத்திலிருந்து வழுவி நடப்பதால்தான் மக்களுக்குப் பல துன்பங்கள் ஏற்படுகின்றனவென்றும் கூறினார்கள். ஸ்வாமிகள் ஜூன் மாதம் 18-ந் தேதி வரை நாகப்பூரில் தந்தோலியில் கவர்ன்மெண்ட் பென்ஷனர், கிருஷ்ணய்யர் ஜாகையில் தங்கியிருந்தார்கள். அவ்விடமிருக்கும் தமிழ் நாட்டு மக்கள் அப்பொழுது மிகுந்த ஒற்றுமையுடன் ஸ்வாமிகளின் விஜயத்திற்கு வேண்டிய பணிகளையெல்லாம் எவ்விதக் குறைபாடின்றியும் செய்தனர். மேலும் ஒவ்வொரு நாளும் பல சமூகத்தினர் ஸ்வாமிகளுக்குப் பிக்ஷை, பாதபூஜை முதலானவைகளைச் செய்து வைத்தனர். உயர் நீதிபதி பாண்டே என்பவர் ஸ்வாமிகளைத் தரிசித்து ஸ்வாமிகளின் அருளைப் பெற்றார். மத்ய மாகாணத்தில் சிறந்த பண்டிதர்களாக விளங்கும், ஸ்ரீவர்ணேகர் என்பவரும் ஸ்ரீதானேசாஸ்திரி என்பவரும் ஸ்வாமிகளைத் தரிசித்து அவர்களிடம் காஷ்மீர் சால்வை முதலிய பரிசுகளைப் பெற்றார்கள்.

1934-ஆவது வருடம் ஜூன் மாதம் 19-ந் தேதி ஸ்வாமிகள் நாகப்பூரிலிருந்து புறப்பட்டு காம்டி, மன்ஸேர், தியோல்பார், காவாஸா, கோராய், மூர்க்கான், மார்க்கமாகச் சியோனி என்னும் ஜில்லாத் தலைநகருக்கு விஜயமானார்கள். தியோல்பார் என்னும் இடமும் காவாஸா என்னும் இடமும் விந்திய மலைப் பிரதேசத்தைச் சார்ந்தவையாகும். அந்த வனப்பிரதேசத்தில் தண்ணீர் கிடைப்பதும் மிக அரிதாக இருந்தது. உஷ்ண நிலையும் ஜூன் மாதமாதலால், அவ்விடம் சுமார் 120 டிகிரி வரையில் எட்டியிருந்தது. ஸ்வாமிகளின் ஸ்நானத்திற்கும், பூஜைக்கும், கால்நடைகளுக்கும் நூற்றுக்கணக்கான சிப்பந்திகளுக்கும் தண்ணீர் வசதியும், உணவு வசதியும் செய்து கொடுப்பதற்கு மிகவும் கஷ்டப்பட வேண்டியதாயிற்று. பகலெல்லாம் வனப்பிரதேசங்களில் கூடாரங்கள் அமைத்து, அவைகளில் தங்கியிருந்து இரவில் பெரிய திவர்த்திகளின் உதவியுடன் பிரயாணத்தைத் தொடங்கவேண்டியதாக இருந்தது. பிரயாணம் எவ்வளவு கடுமையாக இருந்தபோதிலும், வழியில் எவ்வளவு இன்னல்கள் நேர்ந்த போதிலும், மிகவும் திடச் சித்தத்துடன் பசி, தாகம்

விந்திய மலைப்பிரதேசத்தின் வழியாக யாத்திரை.

இரண்டையும் மறந்தவர்களாகி ஆசார்யமூர்த்திகளின் சேவையே தங்களது லக்ஷியம் என மதித்து, எவ்வகையிலும் ஸ்வாமிகளின் கங்கா யாத்திரையை முடிக்கச் சேவை செய்யவேண்டுமெனத் தீர் மானித்துக்கொண்ட அந்தச் சிப்பந்திகளின் பெருமையையும், அவர் கள் ஆசார்யமூர்த்திகளின்பால் வைத்திருந்த பக்தியையும் ஈடற் றனவெனக் கொள்ளவேண்டும். அவர்களிற் பலர் எவ்வித ஊதிய மும் பெறுது, ஸ்வாமிகளுக்குக் கைங்கர்யம் செய்து வந்தனர்; பலர் வைதீக வாழ்க்கையின் நன்கு தோய்ந்த ஆசார சீலர்கள்; நாள் ஒன்றுக்குச் சுமார் 15 மைல்கள் செல்லக்கூடிய யாத்திரை யானது, அப்பிரதேசத்தில் சுமார் 25 மைல்களுக்கு மேல் செல்ல வேண்டியதாயிற்று. பாதையில் தண்ணீர்த்தடங்கள் சில மைல் களுக்கு அப்பால் ஆங்காங்கு வெகு அரிதாகவே காணப்பட்டன. மத்திய மாகாண போலீஸ் இலாகா ஸ்வாமிகளின் முகாமுக்குச் சிறந்த வகையில் பந்தோபஸ்து அளித்து வந்ததால், அவர்கள் மூலம் ஒருவாறு சில வசதிகள் செய்துகொள்ளச் சௌகரியமாக இருந்தது. ஸ்வாமிகளின் இந்த யாத்திரை முழுவதும் கால்நடை யாகவே நிகழ்ந்தது என்பதை இங்குக் குறிப்பிடவேண்டியது அவசியமாகிறது. பல்லக்கைச் சுமப்பவர்களுக்கு ஓய்வு கொடுக்க வேண்டுமென்னும் கருணையுடன் பல சமயங்களில் ஸ்வாமிகள் பல தடவைகளில் சிவிகையில் ஏறுது, வெகு தூரம் கால்நடையாகவே சென்றூர்கள்; அப்பொழுது பல்லக்குச் சுமப்பவர்களான போகிகள் எனக் கூறப்படும் சிப்பந்திகள் கண்ணீர் வடித்து, ஸ்வாமிகளைச் சிவிகையில் ஏறும்படி வேண்டிக்கொள்வார்கள். ஸ்வாமிகளின் பரி வாரங்களான யானை, குதிரைகள், மாடுகள் முதலிய வாயில்லா ஜீவன்களும் இக்கடுமையான பிரயாணத்தை மேற்கொண்டு நல்ல புண்யபயனைப் பெற்றன. (அவைகளுக்கும் அடுத்த ஜன்மா உயர்ந்த ஜன்மாவாகக் கிடைக்குமென்று நாம் உறுதியாக நம்பலாம்.) சிப்பந்திகள் சம்பந்தப்பட்ட வரையில் பாஷைப் பிரச்சினையானது எளிதில் சமாளிக்க முடியாததாக இருந்தது. ஸ்வாமிகள் அந்தந்தப் பிரதேச பாஷைகளை எளிதில் பேசக்கூடியவர்களாதலால் அவசியம் நேர்ந்தபோதெல்லாம் அவர்களே அந்த அந்தப் பாஷையை பேச வேண்டியிருந்தது. (பாரத நாடு முழுவதும் ஒரு பொது பாஷை அமைய வேண்டுமெனத் தேசத் தலைவர்கள் கூறி வருவதை ஸ்வாமிகள் ஆதரித்துள்ளார்கள் என்பது இங்குக் குறிப்பிட வேண்டியதொன்று.)

மத்திய மாகாணத்தின் ஒரு ஜில்லா தலைநகராகிய சீயோனி என்னும் ஊரில் பொது மக்கள் ஸ்வாமிகளுக்குத் தக்கதொரு வரவேற்பை அளித்து, ஸ்வாமிகள் தங்குவதற்கும் தகுந்த வசதிகள் கூடிய இடமொன்றையும் அமைத்திருந்தார்கள். ஒரு வாரமாவது அங்குத் தங்கிச் சிப்பந்திகள் ஓய்வு பெற்ற பிறகு, அவ்விடமிருந்து புறப்படலாமென அவ்வூர்வாசிகள் விண்ணப்பித்துக் கொண்டனர். ஆனால் சாதுர்மாத சங்கல்பத்தை மேற்கொள்ள அது முதல் ஓர் மாத காலமே இருந்ததாலும், அந்தச் சங்கல்பத்தை அலகாபாத் என்னும் பிரயாகையில் முடிப்பதென ஸ்வாமிகள் தீர்மானம் செய்துகொண்டுவிட்டபடியாலும், மேலும் தொடர்ந்து சுமார் 400 மைல்கள் யாத்திரை செல்லவேண்டியிருந்ததாலும், அவர்களது பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப்பட முடியவில்லை.

ஸ்வாமிகள் சீயோனியில் ஒரு நாள் தங்கிவிட்டு அவ்விடமிருந்து மண்டோல், சப்ரா, லக்னடோன், தூமா, சுக்ரீ, பர்க்கீ, இவ்வூர்களின் மார்க்கமாக 1934-ஆவது வருடம் ஜூலை மாதம் 3-ந் தேதி ஜபல்பூரை அடைந்தார்கள். அவ்விடம் பெரியதொரு ரயில்வே தொழிற்சாலை அமைந்துள்ளது. அத்தொழிற்சாலையில் சென்னை மாகாணவாசிகள் ஆயிரக்கணக்கில் வேலைபார்த்து வருகின்றனர். ஜூலை 3-ந் தேதி முதல் 6-ந் தேதி வரையில் ஸ்வாமிகள் நான்கு நாட்கள் ரயில்வே காலனியில் தங்கியிருந்தார்கள். அங்கு வசித்து வந்த சென்னை வாசிகள் ஸ்வாமிகளின் பூஜைக்கு எல்லா வசதிகளையும் அமைத்துக் கொடுத்தனர். ஆயிரக்கணக்கில் மக்கள் அங்கு ஸ்வாமிகளின் பூஜையைத் தரிசித்துத் தீர்த்தம், அக்ஷதை இவைகளைப் பெற்றுப் போனார்கள். நான்கு நாட்கள் அங்குத் தங்கியதால் சிப்பந்திகளுக்கும் சிறிது ஓய்வு கிடைத்தது. ஸ்வாமிகள் ஜபல்பூரில் தங்கியபொழுது (ஜூலை 4-ந் தேதி புதன்கிழமை) நர்மதை நதி கௌரி கட்டத்தில் அவர்கள் விதிப்படி சங்கல்பம் செய்துகொண்டு நீராடினார்கள். (பாரத தேசத்தில் ஓடும் புண்ணிய நதிகளில் நர்மதையும் ஒன்றாகும். அப்புண்ய நதிகளாவன :—1. சிந்து, 2. கங்கை, 3. யமுனை, 4. ஸரஸ்வதி, 5. நர்மதை, 6. கோதாவரி, 7. காவிரி.)

ஜபல்பூர் விஜயமும். நர்மதை ஸ்நானமும்.

ஸ்வாமிகள் ஜபல்பூரிலிருந்து பண்ராகர், கோசல்பூர், சிஹோரா, சீம்னபாத், முதலான ஊர்களின் மார்க்கமாகக் கத்தினி

மைசார், ரீவா சமஸ்தானங்கள் வழியாக யாத்திரை.

என்னும் ஊரை ஜூலை மாதம் 10-ந் தேதி அடைந்தார்கள். அவ்விடமிருந்து அடுத்த நாள், ஜுக்கேரி என்னும் இடத்திற்கு விஜயமானார்கள். அந்த ஊர் மைகார் என்னும் சமஸ்தானத்தைச் சேர்ந்ததாகும். சமஸ்தான அதிகாரிகள் ஸ்வாமிகளை அவ்விடம் தங்குவதற்குத் தக்க வசதிகளைச் செய்திருந்தார்கள். அதனைக் கடந்து ஸ்வாமிகள் ரீவா சமஸ்தான எல்லைக்குள் விஜயம் செய்ய, அந்த எல்லைக்குள் ஜூலை 15-ந் தேதி முதல் 21-ந் தேதி வரையில் யாத்திரை நடைபெற்றது. சமஸ்தானப் போலீஸ் அதிகாரிகளும், ரெவின்யூ அதிகாரிகளும் ஆங்காங்கு ஸ்வாமிகளுக்குத் தக்கவசதிகளைச் செய்து கொடுத்தார்கள். ஸ்வாமிகளின் அடுத்த முகாம் ஜாரி என்னும் தலம், இது ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்ததாகும்.


அலகபாத் விஜயம். இராமேசு வரத்தில் எடுத்த மணலைக் கங்கையில் கலந்தது.

1934-ஆவது வருடம் ஜூலை மாதம் 23-ந் தேதி திங்கட்கிழமை ஸ்வாமிகள் அலகாபாத் என்னும் பிரயாகை க்ஷேத்திரத்திற்கு விஜயமானார்கள். இந்நகரத்தின் எல்லையில் ஸ்வாமிகளைச் சர்வ கலாசாலை உப அத்யக்ஷதர் மகாமகோபாத்யாய கங்காநாத்ஜா, மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் கன்யாலால், லீடர் பத்திரிகை ஆசிரியர் ஸி. ஒய். சிந்தாமணி நகரசபை அங்கத்தினர் வெங்கடேச சாஸ்திரி முதலான பிரமுகர்கள் அடங்கிய வரவேற்புக் கமிட்டியார் பூர்ண கும்பத்துடனும், அந்தத் தேசத்து வாத்யங்களுடனும் ஆயிரக்கணக்கான மக்கள் சூழ வரவேற்றனர். ஸ்வாமிகளுக்கு தாராகஞ்ச் தர்மசாலையில் ஜாகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நகரின் பிரதான வீதிகளின் வழியாக தாராகஞ்ச் வரையில் சென்ற ஸ்வாமிகளின் ஊர்வலக் காட்சியைப் பல்லாயிர மக்கள் கண்டு களித்தனர். ஸ்வாமிகளின் திருமேனியைத் தரிசித்து, அவர்கள் ‘குருமகராஜிக்கி ஜே!’ எனக் கோஷமிட்டனர்.

1922-ஆவது வருடம் அக்டோபர் மாதத்திலேயே கங்கையில் கலப்பதற்கென இராமேசுவர க்ஷேத்திரத்தில் ஸ்வாமிகள் சேது மாதவர் ஸந்நிதியில் எடுத்துக்கொண்ட மணலை அன்று முதல் தம் பூஜையிலேயே வைத்திருந்தார்கள். அந்த மணலைக் கங்கை, யமுனை, ஸரஸ்வதி ஆகிய இம்மூன்று நதிகளும் சேருமிடமாகிய பிரயாகையிலுள்ள திரிவேணி சங்கமத்தில் கலப்பதற்கென 1934

ஜுலை மாதம் 25-ஆம் நாள் குறிப்பிடப்பட்டிருந்தது. அன்று காலையில் ஸ்வாமிகள் தம் பரிவாரங்களுடன் திரிவேணி சங்கமத்திற்கு விஜயமானுர்கள். ஆயிரக்கணக்கான மக்கள் ஸ்வாமிகளின் பின் சென்றனர். இந்த க்ஷேத்திரவாசிகளாகிய புரோகிதர்களும், மற்றும் வித்வான்கள் பலரும் அப்பொழுது அங்கு விஜயமாயிருந்தார்கள், ஸ்வாமிகள் விதிப்படி சங்கல்பம் செய்துகொண்டு புரோகிதர்களுக்கும், மற்ற அந்தணர்களுக்கும் தானங்கள் வழங்கி விட்டு, சேதுவில் எடுத்துக்கொண்டதும் ஒரு வெள்ளிப் பேழையில் வைக்கப்பட்டிருந்ததுமான அந்த மணலைக் கையில் தாங்கி வேணி மாதவர் சந்நிதியில் புனித கங்கையில் கலந்தார்கள். அந்த வெள்ளிப் பேழையையும் ஒரு பண்டாவுக்குத் தானமாக அளித்தார்கள். அதே சமயத்தில் அங்குக் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களும் ஸ்வாமிகளுடன் ஸ்நானம் செய்து தங்களைப் புனிதமாக்கிக் கொண்டனர். அங்கு ஸ்வாமிகள் தாமாகவே கங்கை எடுத்து, தென்னுட்டிலுள்ள எல்லா க்ஷேத்திரங்களுக்கும் அனுப்பினுர்கள். அப்பொழுது காணப்பெற்ற திவ்ய தேஜோ மயமான ஸ்வாமிகளின் திருமேனியையே யாவரும் தரிசித்து அவர்களை வணங்கி நின்ருர்கள். அந்தக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக விளங்கியது. ஸ்வாமிகள் கங்கையிலிருந்து திரும்பி வரும் வழியில் அந்த க்ஷேத்திரத்திலுள்ள சோமேச்வரர் ஆலயத்தில் சுவாமி தரிசனம் செய்துகொண்டார்கள்.

மறு நாளாகிய ஜுலை மாதம் 26-ந் தேதி வியாஸபூர்ணமி ஆதலால் அன்றைய விசேஷ பூஜைக்குத் தனிமையாக ஓர் மண்டபம் அமைக்கப்பெற்றிருந்தது. அந்தப் பூஜையைக் காணப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். தென்னுட்டிலிருந்தும் மடத்தின் சிஷ்யர்கள் பலர் அப்பொழுது அந்தப் பூஜையைத் தரிசிக்க அங்கு வந்திருந்தனர். வழக்கம்போல் அந்தப் பூஜை மிகுந்த வைபவத்துடன் நடைபெற்றது. ஸ்வாமிகளும் அன்று சாதுர்மாத சங்கல்பத்தை முறைப்படி செய்துகொண்டார்கள். அன்று சந்திரகிஹணமாதலால் ஸ்வாமிகள் இரவில் கங்கை நதியில் கிரஹணஸ்நானத்தைச் செய்து விட்டு பூர்ணமி பூஜையை விசேஷமாக ஜாகையில் நடத்திஞர்கள். அன்று முதல் செப்டம்பர் மாதம் 21-ந் தேதி வரை நான்கு பக்ஷங்கள் ஸ்வாமிகள் அலகாபாத்திலேயே தங்கியிருந்தார்கள்.



1934-ஜபல்பூரில் சிஷ்யர்களுக்கு உபதேசமளித்தல்



1935 கல்கத்தாவில் வங்காளி பக்தர்களின் நடுவில்



3-10-1934-ல் ஸ்வாமிகளுக்கு காசி பொது மக்கள் அளித்த வரவேற்பு.
ஸ்வாமிகளுக்கு இடதுபுரம் காசி மகாராஜாவையும், யுவராஜாவையும் காணலாம்.

ஸ்வாமிகள் அலகாபாத்தில் தங்கியிருந்தபொழுது 1934-ஆவது வருடம் செப்டம்பர் மாதம் 1-ந் தேதி ஒரு பெரிய வித்வத் சபை கூட்டப்பட்டது, அந்தச் சபைக்கு வடநாட்டு வித்வான்கள் பலர் விஜயம் செய்து வாக்யார்த்த தத்துவ விசாரங்களில் கலந்துகொண்டனர். அவர்கள் யாவருக்கும் ஸ்வாமிகள் தகுந்தவாறு சன்மானங்களை அளித்தார்கள். செப்டம்பர் மாதம் 18-ஆம் தேதி ஸ்வாமிகள் வாசுகி தரிசனத்தையும், பரத்துவாஜ ஆசிரம தரிசனத்தையும் செய்துகொண்டார்கள். 20-ஆம் தேதி சிவகோடி என்னும் தலத்தைத் தரிசித்தார்கள். 21-ந் தேதி காசி பொதுமக்களின் சார்பாக ஒரு கோஷ்டி ஸ்வாமிகளை நேரில் தரிசனம் செய்துகொண்டு, அடுத்து வரும் நவராத்திரி விழாவைக் காசியிலேயே நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். 22-ஆம் தேதி பிரயாகையில் ஸ்வாமிகள் அக்ஷயவட (வடவால விருஷம்) தரிசனம் செய்துகொண்டார்கள். 24-ஆம் தேதியாகிய பூர்ணமி அன்று சாதுர்மாத சங்கல்பம் முடிவுற்றது. அன்று ஸ்வாமிகள் வபனம் செய்துகொண்டு கங்கையில் நீராடினார்கள். அந்த நாளை மடத்தில் விச்வரூப யாத்திரை எனக் கூறுவார்கள்; அன்றுதான் யாத்திரை மேலும் தொடங்குவது வழக்கம். அலகாபாத் நகர மக்கள் அன்று திரள் திரளாக வந்து, ஸ்வாமிகளின் நித்ய பூஜையைத் தரிசித்துக்கொண்டு தங்களை அனுக்ரகிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். ஸ்வாமிகளும் அவர்களுக்கு அக்ஷதை அளித்து ஆசீர்வதித்தார்கள்.

அலகாபாத்திலிருந்து காசி 79 மைல்கள் தூரத்திலுள்ளது. இந்த வழி முழுவதையும் ஸ்வாமிகள் கால்நடையாகவே கடந்து சென்றார்கள். 1934-ஆவது வருடம் அக்டோபர் மாதம் 3-ந் தேதி ஸ்வாமி காசி பஞ்சக்ரோச எல்லைக்குள் பிரவேசித்தார்கள்; 6-ந் தேதி சனிக்கிழமை அன்று ஸ்வாமிகள் கால்நடையாகப் பாரத பூமியின் புனித நகரமும், முக்தி கொடுக்கும் க்ஷேத்திரமுமான காசிமா நகரத்தில் பிரவேசித்தார்கள். நகர எல்லையில் காசி மகாராஜாவும், மதன்மோகன மாளவியா முதலிய பிரமுகர்களும், காசி பண்டிதர்களும், சந்நியாசிகளும், மற்றும் பொது மக்களும் ஆயிரக்கணக்கில் கூடி ஸ்வாமிகளுக்குப் பூர்ண கும்பம் அளித்து வரவேற்றனர். நகர மண்டபத்தில் (டவுன் ஹால்) பல சங்கங்களும், பண்டிதர்களும் ஸ்வாமி

காசிமா நகரத்தில் பிரவேசம். ஐந்து மணி நேர ஊர்வலம்-லக்ஷம் ஜனங்களுக்கு மேல் கூடி தரிசனக் காட்சி.

களுக்கு வரவேற்புப் பத்திரிகைகளை வாசித்தளித்தார்கள். பலர் ஸ்வாமிகளுக்கு பாதபூஜை செய்தனர். அன்றிரவே ஸ்வாமிகள் ஸ்ரீ விச்வநாதரையும், அன்னபூரணியையும் தரிசித்துக் கொண்டார்கள். அன்று நகரம் முழுவதும் ஒரே கோலாகலமாக விளங்கிற்று. ஸ்வாமிகளைத் தரிசிக்க லக்ஷம் ஜனங்களுக்கு மேல் அன்று நகரத்தில் கூடினர். இவ்வைபவத்தைப் பற்றிய விபரங்களைக் காசியிலிருந்து வெளிவரும் பண்டித பத்திரிகை 8-10-1934-ந் தேதி இதழில் ஹிந்தியில் வெளியிட்டதை இங்குத் தமிழில் தருகிறோம்.

"ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் பிரயாகையிலிருந்து கால்நடையாகவே யாத்திரை செய்துகொண்டு, இன்று (6-10-1934) பகல் 2 மணிக்கு கமச்சாசௌ முகானிக்கு விஜயம் செய்தார்கள். காலையிலிருந்தே காசிப் பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் அங்குக் கூடி ஸ்வாமிகளின் வரவை எதிர்பார்த்துக்கொண்டு, வரவேற்புக்குள்ள ஏற்பாடுகளில் முனைந்து ஈடுபட்டிருந்தனர். தவத்தினால் சிறந்த அப்பெரியோரின் வதனத்தைத் தரிசித்த உடனேயே அவர்களது மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடியது. ஜே! ஜே! என மக்களிட்ட கோஷம் வானைப்பிளந்தது, கமச்சாசௌ முகானில் பெரியதொரு வரவேற்பு வளைவு மிகவும் அழகுடன் அமைக்கப் பட்டிருந்தது. அதில் மனிதருள் பெரிய கடவுளைப் போன்றவர் என ஸ்வாமிகளின் விலாசம் எழுதப்பட்டிருந்தது. அதற்குப் பக்கத்தில் ஒரு மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது. அதில் காசி ராஜாவின் தலைமையில், காசியில் பிரபல சீமான்களும் வித்வான்களும், மேலும் பிரமுகர்களும் குழுமியிருந்தனர். காசி மக்களின் சார்பாகக் காசி மகாராஜாவும், வரவேற்புக் கமிட்டித் தலைவர் என்ற முறையில் இளவரசருடன் அங்கு விஜயம் செய்திருந்தார். காசி மக்களின் சார்பாக அவர் ஸ்வாமிகளை வரவேற்று அவர்களுக்குப் பூஜையும் செய்தார். இதற்கு முன்னரே அவர் காலியா ஸாகேப் என்னும் தமது நந்தவனத்திற்கு யுவராஜாவுடன் சென்று, தமது சொந்த முறையில் சாஸ்திர முறைப்படி ஸ்வாமிகளுக்குப் பாதபூஜை நடத்தினர். மேலும் காணிக்கையாக ரூபாய் 1001 சமர்ப்பணம் செய்தார்.

கமச்சாசௌ முகானியில் யானைகள், ஒட்டகம், குதிரைப் படை, பாண்டு வாத்யம், கொடி, தோரணம், இவைகள் பவனியாக நின்றமை கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. 2-30 மணிக்கு அங்கிருந்து ஊர்வலம் கிளம்பிற்று. அது நகரத்தின் முக்கியமான வீதிகளின் வழியாக, இரவு 7-மணிக்கு ராவ் சாகேப் மாதவராம் சன்ட் அவர்களின் (விருந்தாளிகள் தங்கும்) மாளிகையை அடைந்தது. நகரத்தில் ஒவ்வொரு இடமும் கொடிகளாலும், வாழை மரங்களாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஸ்ரீ சத்தியநாராயண ஆலயத்தில் செய்யப்பட்டிருந்த அலங்காரம் மிகவும் அழகு வாய்ந்ததாக அமைந்திருந்தது. ஸ்ரீ பாக்லா அவர்களது காரியஸ்தர் மெச்சத் தகுந்த வகையில் மிகுந்த உற்சாகத்துடன் பலவகையான ஏற்பாடுகளை அங்குச் செய்து வைத்திருந்தார். அங்கு, ஜகத்குரு அவர்களுக்குப் பூஜை, கற்பூர ஹாரத்தி முதலியன நடைபெற்றன: ஸ்வாமிகள் அந்த ஆலயத்திற்குள் சென்று தரிசனம் செய்துகொண்டார்கள். ஸ்வாமிகள் சென்ற இடங்களெல்லாம் அவர்களுக்கு ஹாரத்திகளோடு, மலர்களாலும், பணம், காசுகளாலும் மக்கள் மரியாதை செய்தனர். பணத்தை மழைபோல் பெய்யச் செய்தார்கள். தெருக்களில் உள்ள எல்லாக் கட்டிடங்களிலும் கீழிருந்து மேல் வரை ஆண்களும், பெண்களும் நிறைந்து நின்றனர். தெருக்கள் முழுமையும் ஒரே கூட்டமாக இருந்தது. உடலோடு உடல் இடித்துக்கொண்டும் மக்கள் நெருங்கி நின்றுகொண்டிருந்தனர். இளைஞர் கூட்டம், வர்ணாச்ரம சுயம் சங்கத்தின் தர்ம வீரர்கள் கூட்டம், ஸ்லாமிலால் நாத்தின் தலைமையில் சாரணர் கூட்டம், ஹிந்து வாலிபர் சங்கக் கூட்டம், காசி சுயம் சேவா சங்கத்தின் சேவகர்கள், மற்றும் போலீஸ் படைகள் இவ்வளவு பேர்களும் சேர்ந்து கூட்டத்தை ஒழுங்குபடுத்தப் படாதபாடு பட்டார்கள். ஆனால் எவ்வளவு முயற்சித்தும் ஒன்றும் பயனில்லாது போய்க்கொண்டிருந்தது. சுமார் 25,000 பேர்கள் அக் கூட்டத்தில் இருந்தனர். மேலும் காண வந்தவர்களின் கூட்டம் ஒரு லக்ஷத்துக்கு மேலாக உயர்ந்தது. பாரதிய சுயம் சங்கத்தின் தலைவர் ஸ்ரீ சதர் யதங்ஜீ பாண்டேயும், பண்டித மதன்மோகன் மாளவியாவும் ஸ்வாமிகளைத் தரிசிக்க அக்கூட்டத்துடன் வந்திருந்தார்கள். ஸ்ரீ பாண்டே ஊர்வலத்தில் முழுவதும் கால் நடையாகவே தொடர்ந்து வந்தார். ஊர்வலத்தின் முன்னால் யானைமீது ஸ்வாமி சிவானந்த பிரும்மச்சாரி


ரிஷபக் கொடியைத் தாங்கிக்கொண்டு வீற்றிருக்க, பின்னுல் மற்றெரு யானையின் மீது ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கராசார்யருடைய உருவப்படம் சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. ஸ்வாமிகளும் கால்நடையாகவே வந்துகொண்டிருந்தார்கள். அவர்களின் பாதங்களைத் தொடவேண்டுமென்ற ஆவலுடன் பாய்ந்து வருகின்ற மக்களிடமிருந்து அவர்களைக் காப்பாற்றச் சுயம் சேவகர்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டுக்கொண்டிருந்தது. ஸ்ரீ ராய் சாகேப் மாதவ ராம்ஜீ சன்ட் அவர்கள் மட்டும் மிகவும் உறுதியுடன் நின்று மக்கள் கூட்டத்தைத் தடுத்து. ஜகத்குருவின் சமீபத்தில் நிலைமையை ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்தார். பல இடங்களில் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் தம் பல்லக்கின் மீது ஏறி நின்று மக்களுக்குத் தரிசனம் கொடுக்க வேண்டியதாயிருந்தது, மணிக்கணக்காகத் தரிசனத்திற்காக வீதிகளின் ஓரங்களில் உட்கார்ந்து கொண்டிருந்தவர்களுக்கு எண்ணில் அடங்காத இம் மாபெரும் கூட்டம் பெரும் தடையை ஏற்படுத்தி விட்டது. ஸ்வாமிகளின் வரவேற்பிற்காகச் செய்யப்பட்டிருந்த இத்தகைய உயர்ந்த ஏற்பாடும், இந்த மாபெரும் கூட்டமும் காசியின் சரித்திரத்திலேயே மிகவும் மகத்துவம் வாய்ந்ததெனச் சொல்லப்படுகிறது. அன்றிரவு ஸ்வாமிகள் ராம்காட்டிலுள்ள சாங்கவேத வித்தியாலயத்திற்கு விஜயம் செய்தார்கள். அங்கு, வித்யாலயத்தின் தலைவர் தர்மமூர்த்தி ஸ்ரீ மேஹ்தா முராரிலால் அவர்கள் ஸ்வாமிகளுக்கு மலரினுல் பாதபூஜை செய்து ரூபாய் 501 காணிக்கையாகச் சமர்ப்பணம் செய்தார்."

காசியில் நவராத்திரி விழா.


ஸ்வாமிகள் அக்டோபர் மாதம் 7-ந் தேதி மணிகர்ணிகை கட்டத்தில் ஸ்நானம் செய்து ஸ்ரீ விச்வநாதர் ஆலயத்திலேயே ஸ்ரீ சந்திரமௌளீஸ்வரர் நித்ய பூஜையை நடத்தினுர்கள். அனுமந்த கட்டத்திலுள்ள காமகோடி பீடத்தைச் சார்ந்த மடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் ஆதி சங்கர பகவத் பாதர்களின் விக்ரஹத்தை ஸ்வாமிகள் அன்று தரிசித்து வந்தார்கள். 8-ந் தேதி திங்கட்கிழமை சாரதா மடத்திலும், பஞ்ச கங்கா மடத்திலும் அளித்த பாத பூஜைகளை ஏற்றுக்கொண்டு, கேதாரேச்வரர் ஆலயத்திலும், பிந்துமாதவர் ஆலயத்திலும் ஸ்வாமி தரிசனம் செய்து கொண்டார்கள். அக்டோபர் 9-ந் தேதி அவ்வருடத்து நவராத்திரி விழா ஆரம்பமாயிற்று. ஸ்வாமிகள் நவராத்திரி

காசி மகாராஜாவுடன் சம்பாஷணை





1934-பண்டித மதன்மோஹன் மாளவியா, காசி மகாராஜா, ஸந்நியாஸிகள், பண்டிதர்கள் இவர்களுக்கு தர்சனம் அளித்தது



1934-ல் காசிமாநகரப் பிரவேசம்

பூஜையை ராய் சாகேப் மாதவராம் ஸன்ட் அவர்களின் இல்லத்தில் நடத்தினார்கள். நவராத்திரியை முன்னிட்டு அக்டோபர் மாதம் 16-ந் தேதி வரையில் கீழே கண்டவாறு ஜபம், பாராயணம், ஹோமம் இவைகள் நடைபெற்றன. 1. ரிக்வேத சம்ஹிதா ஹோமம். 2. ஸ்ரீ வித்யா ஹோமம். 3. சண்டிகாஹோமம். 4. மகாருத்ர ஹோமம். 5. ரிக்வேத பாராயணம். 6. சுக்ல யஜுர் வேத பாராயணம். 7. கிருஷ்ண யஜுர் வேத பாராயணம். 8. சாமவேத பாராயணம். 9. அதர்வண வேத பாராயணம். 10. உபநிஷத் பாராயணம். 11. பாஷ்ய பாராயணம். 12. ஸ்ரீ வித்யா மூல மந்திர ஜபம். 13. பாலா மந்திர ஜபம். 14. துர்க்கா ஸப்தசதி பாராயணம். 15. லலிதோபாக்யான பாராயணம். 16. தேவி பாகவத பாராயணம். 17. லலிதா சகஸ்ஹரநாம திரிசதி அஷ்டோத்திர பாராயணம். 18. விஷ்ணு சகஸ்ஹரநாம பாராயணம். 19. ராமாயண பாராயணம். 20. கீதா பாராயணம். 21. மூன்று வேதங்களின் முறைப்படி தனித்தனியே சூரிய நமஸ்காரம். 22. நவக்ரஹ ஜபம். 23. மஹன்யாச ஏகாதச ருத்ர ஜபம்.

16-ந் தேதி செவ்வாய்க்கிழமை மகாநவமியன்று கன்யாபூஜையும் சரஸ்வதி பூஜையும் நடைபெற்றன. கன்னிகைகளுக்கும், சுமங்கலிகளுக்கும் அன்னதானம் வஸ்திர தானம், ஸுவர்ண தானம் இவைகள் வழங்கப்பட்டன. அன்றிரவில் ஹோமங்களுக்குப் பூர்ண ஆகுதி நடைபெற்றது. காசி மகாராஜாவும், மற்ற நகரப் பிரமுகர்களும் கூட இருந்து இவற்றை நடத்தி வைத்தார்கள். விச்வநாதர் ஆலயத்தில் அன்று விசேஷமாக அபிஷேகம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்டோபர் மாதம் 17-ந் தேதி விஜயதசமி அன்று, யாக முடிவை ஒட்டி ஸ்வாமிகள் கங்கை நதியில் அவப்ருத ஸ்நானம் செய்தார்கள். ஜபம், ஹோமம், பாராயணம் இவைகளில் கலந்துகொண்டு வித்வான்களுக்குத் தகுந்தவாறு சன்மானங்கள். அளிக்கப்பட்டன. இதுவரை கண்டிராத இந்த வைபவங்களைக் காசி மக்கள் ஆயிரக்கணக்காக வந்து தரிசித்துப் புண்யப்பயனை அடைந்தனர்.

நமது பாரத தேசத்தின் புனிதமான 7 நகரங்களுக்குள் காசி ஒன்றாகும். அந்நகரங்கள் முறையே அயோத்தியா, மதுரா, வட மதுரை, மாயாபுரி, ஹரித்வாரம், காசி, காஞ்சி, அவந்தீ, துவாரகை

இவைகளாகும். காசியை அவைகளுக்குள் முதன்மையாகக் கூறலாம். இவை போலவே, புனிதமான நதிகளும் 7 உள்ளன. அவ்வேழு புண்ய நதிகளுள் கங்கை மிகச் சிறந்ததாகும். தேவி மாகாத்மி யத்தில் கூறப்பட்டுள்ள 16 சக்தி பீடங்களில் காசியும் ஒன்று கும். தீர்த்த விசேஷமும், தலவிசேஷமும் ஒருங்கே அமைந்து முக்தி க்ஷேத்திரமாக விளங்குவது காசி. வாரணசி என்னும் மற்றொரு பெயரும் இத்தலத்திற்கு அமைந்துள்ளது. வாரண, அசி என்னும் இரண்டு நதிகள் இந்நகரைச் சூழ்ந்திருப்பதால் இதற்கு அப்பெயர் வந்தது. வா என்னும் எழுத்தானது பா வாக மாறியதால் இதைப் பனரஸ் என இக்காலத்தில் கூறுகின்றனர். இந்த க்ஷேத்திரத்தை மஹா ஸ்மசானம் எனக் கூறுவதும் உண்டு. 'காச்யாந்து மரணன் முக்தி;' என வட மொழியில் ஒரு பழமொழி உண்டு. 'காசியில் மரணமடைந்தோர்க்கு மறு பிறப்பு இல்லை' என்பது இதன் பொருள்.

காசி நகரத்தின் புனிதத் தன்மை

காசியைப்போலத் தமிழ் நாட்டிலும் சில முக்கிய க்ஷேத்திரங் கள் அமைந்துள்ளன. 'ஸ்ம்ரணாத் அருணசலம்' எனக் கூறப்படுவ தால், திருவண்ணாமலையை நினைத்தாலேயே முக்தி கிட்டும் என்பர் பெரியோர்; 'திருவாரூர்ப் பிறந்தார்க்கு மறு ஜென்மம்' இல்லை யென்று சொல்லப்பட்டிருக்கிறது. தரிசனத்தினாலேயே முக்தி தருவது சிதம்பர க்ஷேத்திரம் என்பதை முன்பே கூறியுள்ளோம்.

சாஸ்திரங்களில் நம்பிக்கை கொண்ட பலர் அங்கு இறப்ப தற்கெனவே தங்கள் பிற் காலங்களைக் காசி மா நகரத்தில் கழித்து வருகின்றனர். காசியில் கங்கா நதி உத்திரவாகினியாக (வடக்கு நோக்கி) ஓடுகின்றது; வில் வடிவமாக வளைந்தும் செல்கின்றது. அதன் கரையில் 64 ஸ்நான கட்டங்கள் அமைந்திருக்கின்றன. அவைகளில் மிகச் சிறந்ததாகக் கருதப்படுபவை மணிகர்ணிகா கட்டம், பஞ்ச கங்கா கட்டம், அசி கட்டம், தசாச்வமேத கட்டம், வாரண சங்கம கட்டம் இவைகளாகும். ஆதிசங்கரர் இத்தலத்தில் தங்கி, அநேக அற்புதமான செயல்களைப் புரிந்திருக்கிறார்கள். காசியிலுள்ள விச்வநாதர் ஆலயம் நம் நாட்டு ஆலயங்களைப் போல விசாலமாகவும், உயர்ந்த கோபுரங்களுடனும் அமையப் பெறவிடினும், உட்புறமெல்லாம் மிகவும் அழகான சலவைக்கற் களால் அமைக்கப்பெற்றிருக்கிறது. (உச்சிக்காலத்திலும், அர்த்த

ஜாமத்திலும் பண்டாக்கள் எனக் கூறப்படும் அர்ச்சகர்கள் லிங்கத்திற்கு அபிஷேகம் செய்து முறைப்படி பூஜிக்கிறார்கள். இதற்கென ஏராளமான பொருள் செலவில் நாட்டுக்கோட்டை நகரத்தார் கட்டளை ஏற்படுத்தியுள்ளார்கள், (இந்தப் பூஜாகாலங்களில் தென்னாட்டு நாதசுர வாத்யம் அங்கு வாசிக்கப்படுகிறது.) இவ்வாறு குறிப்பிட்ட சில நேரங்களைத் தவிரப் பிற காலங்களில் அடியார்கள் தாங்களே லிங்கத்திற்கு அபிஷேகம் செய்து பூஜிக்கலாம். ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக்கள் காசியை அடைந்து இவ்விதம் விச்வநாதரைப் பூஜித்துச் செல்கின்றனர். சக்தி பீடமாகிய அன்னபூரணியின் சந்நிதியில் ஆதி சங்கரர் ஸ்ரீ சக்கிரப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். இந்த அம்பிகையின் பேரில் அவர்கள் பாடிய அன்னபூர்ணாஷ்டகம் மிகப் பிரசித்தி வாய்ந்த தோத்திரங்களில் ஒன்றாகும். காசி விசாலாக்ஷி அம்மன் ஆலயம் விச்வநாதர் ஆலயத்திலிருந்து சிறிது தூரத்தில் அமைந்துள்ளது. மகாராஜாக்களும், கோடீசுவர்களும் இத்தலத்தில் அன்ன சத்திரங்கள் பல அமைத்துள்ளார்கள். காஷாயம், தண்டம், கமண்டலு இவைகளைத் தாங்கி வரும் சன்னியாசிகள் பலரை நாம் இத்தலத்தில் தரிசிக்கலாம்.

1934-ஆவது வருடம் அக்டோபர் மாதம் 17-ந் தேதி புதன் கிழமை விஜயதசமி அன்று ஸ்வாமிகள் கங்கையைக் கடந்து எதிர்க்கரையிலுள்ள தக்ஷிணாமூர்த்தி மடத்திற்குச் சென்று அங்குத் தக்ஷிணாமூர்த்தியைத் தரிசனம் செய்துகொண்டு, பக்தர்கள் செய்வித்த பாதபூஜையையும் ஏற்றுக்கொண்டார்கள். அக்டோபர் 19-ந்தேதி கோகட்த்தில் தர்பங்கா மகாராணி ஸ்வாமிகளைத் தரிசித்துக்கொண்டு, ஸ்வாமிகளுக்குப் பாதபூஜை செய்தார். 27-ந் தேதி சனிக்கிழமை காசியிலுள்ள வடநாட்டுச் சந்யாசிகள் ஸ்வாமிகளுக்குப் பிக்ஷை அளித்தனர். அதற்கு மறுநாள், அத்தலத்தில் வசிக்கும் தென்னாட்டுச் சந்யாசிகளும் ஸ்வாமிகளுக்குப் பிக்ஷை அளித்தார்கள். வடநாட்டு சந்யாசிகளுக்குக் கௌட சந்யாசிகள் என்றும், தென் நாட்டு சந்நியாசிகளுக்கு திராவிட சந்யாசிகள் என்றும் அங்குப் பெயர்கள் வழங்கிவருகின்றன.

காசி க்ஷேத்திராடனம் பக்தர்கள் நடத்திய பிக்ஷை பாதபூஜை.

நவம்பர் மாதம் 16-ந் தேதி ஸ்வாமிகள் ஹனுமந்த கட்டத்தில் அசி நதியில் ஸ்நானம் செய்தார்கள். நவம்பர் 19-ந் தேதி ஹனுமந்த

கட்டத்தில் பஞ்ச கங்கா ஸ்நானம் செய்துவிட்டு, காசியின் நகர தேவதையையும் குகையையும் தரிசனம் செய்துகொண்டார்கள். டிசம்பர் 17-ந் தேதி மார்கழி தனுர்மாத பூஜை ஆரம்பமாயிற்று. அம்மாதம் 19-ந் தேதி ஸ்வாமிகள் வியாச காசிக்குச் சென்று அவ்விடம் வேத வியாசரைத் தரிசனம் செய்துகொண்டார்கள்; டிசம்பர் 21-ந் தேதி கேதார கட்டத்தில் கௌரீ கும்பத்தில் ஸ்நானம் செய்தார்கள். 1935-ஆவது வருடம் ஜனவரி மாதம் 19-ந் தேதி சந்திரகிரஹணம் ஏற்பட்டது. அன்றிரவு ஸ்வாமிகள் கங்கைக் கரையிலேயே தங்கி முறைப்படி கிரஹண ஸ்நானத்தைச் செய்து கொண்டார்கள். பிப்ரவரி மாதம் 3-ந் தேதி அர்த்தோதய புண்ய காலம் சம்பவித்தது. அன்று ஸ்வாமிகள் புனித கங்கையில் நீராடினார்கள்.

1934 ஆவது வருடம் அக்டோபர் மாதம் முழுவதும் கோகடத்திலுள்ள ஸ்ரீராய் சாகேப் மாதவராம் சன்ட் அவர்களின் மாளிகையிலேயே தங்கியிருந்தார்கள். அதன் பின்னர் ஹனுமந்த கட்டத்திலுள்ள தம் சொந்த மடத்திற்கு விஜயம் செய்து, காசியை விட்டுப் புறப்படும் வரையில் அவ்விடத்திலேயே தங்கி இருந்தார்கள்.

காசி ஹிந்து சர்வ கலாசாலைக்கு விஜயம்.

பண்டித மதன்மோகன மாளவியா அவர்களின் அழைப்பை ஏற்றுக்கொண்டு ஸ்வாமிகள் 1935 பிப்ரவரி மாதம் 9-ந் தேதி காசி ஹிந்து சர்வ கலாசாலைக்கு விஜயமானார்கள். அன்று, சர்வ கலாசாலையின் கட்டிடங்களெல்லாம் மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஸ்வாமிகள் சர்வகலாசாலையின் பிரதான வாயிலில் வந்ததும் மாளவியா அவர்களும், சர்வகலாசாலையின் மற்ற அதிகாரிகளும், பேராசிரியர்களும் மாணவர்களும் ஸ்வாமிகளை மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்றனர். பண்டித மாளவியா முக்கியமானவர்களை ஸ்வாமிகளுக்கு அறிமுகம் செய்துவிட்டு, சர்வகலாசாலையின் ஒவ்வொரு பகுதிக்கும் அவர்களை அழைத்துச் சென்று ஆங்காங்கு நடைபெறும் கல்வி போதனைகளைப்பற்றி விவரித்துக் கூறினார். பின்னர் பிரதான மண்டபத்தில் அமைக்கப் பெற்றிருந்த பிரத்யேகமான ஆசனத்தில் ஸ்வாமிகள் அமர்ந்திருந்தார்கள். யாவரும் ஸ்வாமிகளை வணங்கியவுடன், தாம் இயற்றிய ஐந்து சுலோகங்கள் அடங்கிய, (கிமேகண்ட) வரவேற்பைப் பண்டித மாளவியா வாசித்துஸ்வாமிகளிடம் சமர்ப்பணம் செய்தார்.

यद्वाचां लसितैस्त्रिलोकजनता मोहान्धकारक्षयः
पादाब्जस्मरणेन यस्य कलुषध्वंसात् प्रसादः स्थिरः ।
तस्याद्वैत गिरांगुरोर्भगवतः श्रीशंकरस्योन्नतं
काञ्चीपीठपदं यतीश्वरमहन् स्थाने त्वयाधिष्ठितम् ॥ १ ॥

तत्त्वज्ञान तपः समाधि करुणौदार्य प्रसादादिभिः
पुण्यं भारतवर्षमेतदनघं प्राप्नोति लाभंपरम् ।
कीर्त्या तेमलया यतीन्द्र! महतामादर्शतां प्राप्तया
सन्तः सन्ततमुल्लसन्ति च दिशःसर्वाः समुद्भासिताः ॥ २ ॥

स्वामिन्! स्वागतमस्तुते शिवपुरी श्रीविश्व विद्यालये
शिक्षाकेन्द्र वरेऽत्र भारतभुवां विद्यार्थिनां सर्वतः ।
श्रीमद्वक्त्र सरोरुहोदित शुभाशीर्गीस्सुधाधारया
साफल्यं श्रुतिजन्मनोभवतु नःशान्त्यै स्रवन्त्या भुवः ॥ ३ ॥

घोरे कलौ प्रतिदिशं भुविसत्यधर्मोहन्तापकर्षमधुना नितरामुपैति ।
तस्योन्नतिः पुनरिहाकिलमङ्गलार्था भूयाद्यथा, करुणयोपदिशेति याचे ॥ ४ ॥

प्राच्य प्रतीच्यशुभभावसमन्वयेन भोगापवर्गद सुशिक्षणदानशीलः ।
एषोऽखिलाभ्युदयकृद्यतिवर्य! विश्वविद्यालयस्तव शुभागमनेन धन्यः ॥ ५ ॥

माघ शुक्ल सप्तमी सं० १९९१] —इति निवेदयति-**मालवीयो मदनमोहनः ।**

பண்டித மாளவியா அவர்கள் வாசித்தளித்த மேலே கண்ட ஐந்து ஸ்லோகங்களின் கருத்து கீழே தரப்பட்டுள்ளது.

"எவரது திருவடியை மனிதன் எண்ணியவுடன் எல்லாவித அஞ்ஞான இருளும் இருந்தவிடம் தெரியாமல் மறைந்து விடுமோ, எந்த மகானது திருவாக்கிலிருந்து வெளிப்படும் தேன் மொழிகள் உலகத்தில் எல்லாத் திசைகளிலும் பரவி ஒலிக்கின்றனவோ. எவரிடம் எல்லாச் சாஸ்திரங்களின் உட்பொருளும் அடங்கிப் பிறர் அறியக் கண்ணாடியைப்போல் பிரதிபலித்து வருகின்றனவோ, அவ்வித மகிமைகள் வாய்ந்த ஸ்ரீ சங்கரரது காஞ்சி பீடத்தில் அவர்களது ஸ்தானத்தில் விளங்கிவரும் அண்ணலே!

பாரத நாட்டின் தவப்பயனும், தத்துவம், ஞானம், தவம், கருணை, கொடை, அருள் முதலிய குணங்களின் உருவாகத் தோன்றியிருக்கும் தங்கள் கீர்த்தியும், கருணையும் நாடு முழுவதும் பரவி மக்களைப் புனிதராக்கிப் பிரகாசித்து வருகின்றன.

பாரத நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல கலைகளைக் கற்க இங்குக் குழுவியுள்ள மாணவர்கள் சார்பாகவும் எங்கள் சார்பாகவும் வணக்கத்துடன் தங்களுக்கு நல்வரவளிக்கின்றோம்.

மிகவும் கொடிய இக்கலியில் தருமங்களுக்குக் குறைவு ஏற்பட்டு வரும் இத்தருணத்தில் என்று மழியாத நலனை மக்கள் அடைவதற்கு ஆதாரமாக உள்ளனவும், தங்கள் திருவாக்கிலிருந்து வெளி வரப்போவனவுமான தேன் மயமான உபதேச மொழிகளைப் பருக நாங்கள் காத்து நிற்கின்றோம். தங்கள் உபதேசம் உலகத்தின் நன்மைக்கே அஸ்திவாரமாக விளங்கும்.

உலக வாழ்க்கைக்கும், தெய்வத் தன்மையை அடையவும் பயன்படக் கூடியவாறு மேல்நாட்டு, கீழ்நாட்டு முறைகளில் எவைகள் உயர்ந்தனவைகளாகக் கருதப்படுகின்றனவோ, அந்த முறைகளிலேயே கல்வி கற்பிக்கப்படும் இந்தக் கலாசாலையும் நமது நாடும் நம் மக்களும் தங்கள் விஜயத்தினாலும், கருணை மிக்க உபதேச மொழியினாலும் உயர் நிலையை அடையுமெனத் திண்ணமாய் நம்புகிறோம்."

பண்டித மதன்மோகன மாளவியா இந்த வரவேற்பை வாசித்தளித்த பிறகு ஸ்வாமிகள் கீழ்கண்டவாறு உபதேச மொழிகளை அருளினார்கள். அவர்கள் அன்று வடமொழியில் பேசிய கருத்து இங்குத் தரப்பட்டுள்ளது.

"உள்ளத்தில் எவ்வளவுக்கெவ்வளவு அமைதி நிலவுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு இன்பம் மேலிடுகிறதென்பது உலக அனுபவம். மன அமைதியின் உயர் நிலையே மேலான புருஷார்த்தமாகும். அமைதி குறையக் குறையத் துன்பமும் வளரும். மனிதர்கள் தங்கள் துன்பங்கள் நீங்குவதற்கு முயற்சிக்கும்பொழுது, பிறரை அவர்கள் துன்புறுத்தவும் நேருகிறது. இவ்விதம் ஒவ்வொருவரும் சந்தர்ப்பங்களை ஒட்டி மற்றவர்களைத் துன்புறுத்த முயலும் பொழுது சமுதாயத்தில் குழப்பம் ஏற்படுகிறது. அவ்விதம் குழப்பம் நேரும்பொழுதெல்லாம் அதை அடக்கி அமைதியையும், சமாதானத்தையும் நிலை நிறுத்த அரசாங்க அதி

காரிகள் சட்டத்தின் மூலம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள முன்வருகிருர்கள். மக்கள் எல்லோரும் புலன்களைப் பறிக்கும் வெளி விஷயங்களிலிருந்து தங்கள் மனதைத் திருப்பி அதைத் தங்கள் வசமாக்கி அமைதியாக இருக்க எப்பொழுது முற்படுகின்ருர்களோ அப்பொழுதுதான் துன்பம் அவர்களை அணுகாமலிருக்கும். உலகில் அமைதிக்குக் குறைவு ஏற்படும்பொழுது ராஜநீதி, தண்டனை, சட்டம் இவைகளின் அமுலும் அதிகரிக்கும். நல்ல கல்வியைப் பயிலும் பயனுல்தான் அமைதி சித்திக்க வேண்டும். அதிலும் சர்வகலாசாலைகளில் கல்வி கற்பதினுலும், குறிப்பாக இந்தக் காசிமாநகரத்திலுள்ள ஹிந்து சர்வகலாசாலையில் கல்வி பயிலுவதாலும், மிகவும் உயர்ந்த அமைதியை உங்களிடம் எதிர்பார்க்கலாம். அமைதியை மாணவர்களுக்குள் நிலைக்கச் செய்வதே இங்குள்ள பெரியோர்களின் கடமையாகும். நாட்டில் அமைதி நிலைத்தால் அரசாங்கத்திற்கும். போலிஸ் இலாகாவிற்கும் ராணுவத்திற்கும் ஏற்படும் செலவு ஒருவாறு குறையும்.

நம் பாரத நாட்டின் முற்காலக் கல்வியின் முதல் நோக்கம் மன அமைதியை அடைவதேயாகும். புதிது, புதிதாகத் தோன்றும் பௌதிக விஞ்ஞான ஆராய்ச்சித் துறைகளில் மேன்மேலும் கல்வியைப் பெருக்கி, அதன் பயனைத் தர்ம மார்க்கத்தில் உதவுமாறு செய்தால், நாடும் மக்களும் உயர்வான அமைதி நிலையை அடைய முடியும். இவ்வாறில்லாமல் புலன்கள் போன வழியே அவைகளை விட்டுக்கொண்டிருந்தால் கெட்ட எண்ணங்களும் ஆசைகளும் வளரும். வெளி இன்னல்களும், துன்பங்களும் பெருகும்.

கல்வியினுல்தான் மக்கள் அமரத்துவம் (மரணமில்லாத் தன்மை) அடைகின்ருர்கள். ஆகையால் எதற்கு மேலாக ஒரு பயன் உலகில் இல்லையோ அந்தப் பயனைக் கல்வி அளிக்கின்றது. அமரத்துவத்தைக் கொடுப்பதே மேலான கல்வியாகும். மற்ற விதமான கல்விப் பயிற்சிகளெல்லாம் உலகப் பயனை அளிக்கின்றன. ஆனுலும் அவைகளும் படிப்படியாக இறைவனைச் சேர உபயோகப்படலாம். உலகப்பயன் என்பது பொருள் திரட்டுவதையே குறிக்கின்றது. பொருளும் பலவித தருமங்களைச் செய்யப் பயன்படுகிறது. இந்தத் தருமங்களும் பிரும்மஞானத்

திற்குச் சாதனமாகின்றது. 'தனக்கு விதிக்கப்பட்ட தர்மங்களைச் சரிவர நடத்துவதாலும், தவத்தினாலும், இறைவனை வணங்கி வழிபடுவதாலும் ஒருவன் ஆத்மஞானத்தை அடைகின்றான்.' என ஆதி ஆசாரியர்கள் கூறியுள்ளார்கள்.

ஆத்ம ஞானத்தை அளிக்கும் கல்வியைப் பரவித்யை எனவும், மற்றவற்றை அபர வித்யை எனவும் கூறுவர். பரவித்யை எனும் பிரும்ம ஞானம் நேரான பலனை அளிக்கின்றது; அஞ்ஞான இருளைப் போக்குகின்றது. இந்த காசியிலுள்ள வித்யாலயமோ ஆஸ்திக முறையில் ஹிந்து என்னும் சொல்லுடன் பிணைக்கப் பெற்று, வெளி உலகிலும் மிகப் புகழுடன் விளங்குகிறது. மேலும் எல்லா விதமான கலைகளையும் தன்னிடமிருந்து பிரகாசிக்கச் செய்கின்றது. இறைவனது அருளால்தான் இத்தகைய விரிவான கட்டிடங்களுடன் இணையற்றதாக இந்தச் சர்வ கலாசாலை விளங்கிவருகின்றது. இதைக் கண்ணுறும் ஒவ்வொருவரது உள்ளத்திலும் எல்லையில்லாத மகிழ்ச்சி தானாகவே ஏற்படுமெனச் சொல்லத் தேவையில்லை. இக்கலா மண்டபத்தைக் காணும் ஒவ்வொரு மனிதனது உள்ளத்திலும் பெருந்தகையோரான பண்டித மாளவியாவின் வியக்கத்தக்க மனோசக்தியும் பெருமையும் தானாகவே புலப்படும். இங்குத் தரும சாஸ்திரம், தத்துவ ஞானம், சட்ட ஞானம், சிற்பம், வேத வேதாந்தங்கள், ஸ்மிருதி முதலியனவும், மற்றும் பலவித கலாஞானங்களும் இடம் பெற்றிருக்கின்றன. தவிரவும், இக்காலத்திய மேல் நாட்டுப் பௌதிக ஆராய்ச்சிகளும் இங்குப் போதிக்கப்படுகின்றன. மேலும், இங்குப் போதிக்கப்படும் (கண்களுக்குப் புலனாகும் பொருள்களை அறிவிக்கக்கூடிய) வானசாஸ்திரம் முதலிய கலைகளும் வேதத்தின் அங்கங்களின் ஒரு பகுதியாகவே போதிக்கப்படுமென நான் நினைக்கிறேன். கண்களுக்குப் புலனாகாத தர்மத்தின் பயனை வேதம், ஸ்மிருதி இவைகளின் மூலமாகத் தான் அறியமுடியும். ஞானத்திற்கோ வென்றால் வேதம், யுக்தி, அனுபவம் இவ்வகையான பிரமாணங்கள் ஆதாரமாக இருக்கின்றன. இது ஆதி பகவத் பாதாசாரியர்களின் தீர்மானம். ஆனாலும், மனிதனது புத்தி நுட்பத்தால் கண்களுக்குப் புலனாகும் பயனை விளக்கக் கூடிய வான சாஸ்திரம், அரசியல், பொருளாதாரம் இவைகளும் வெளி நாட்டாரது ஆராய்ச்சி முறைகளும் இங்குக் கற்பிக்கப்படுவது இக்கலாசாலையின் முன்னேற்றத்திற்கு உதவியாக இருக்கிறதென்பது

மகிழ்ச்சியைத் தரக்கூடியதாகும். ஆயினும் நமது ஆஸ்திக மயமான கல்வி போதனைகளுடன் அன்னிய நாட்டாரின் முறைகளைக் கலந்து போதிப்பதில் நாம் மிகவும் நிதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும். ஏனெனில் நமது ஆத்ம சுத்தி, அந்தரங்க சுத்தி, ஒழுக்கம், இவைகள் ஆஸ்திகத்தை வளர்க்க உதவியாக இருக்கின்றன. நம் புலன்களுக்கு உணர்ச்சியையும், மகிழ்ச்சியையும் எளிதில் தரக்கூடிய வகையில் உள்ள எல்லா அம்சங்களையும் போதனை முறையிலிருந்து விலக்க வேண்டும். மேல் நாட்டாரின் நடை, உடை, பாவனை, உணவு, உரையாடல், முதலியவைகளில் ஈடுபட்டு அவைகளைக் கையாளுவோமானால் படிப்படியாக நமது நிலை, அறம் இவைகளிலிருந்து நாம் நழுவுவதுடன் நமது நன்மைக்கும் இடையூறு ஏற்பட்டு, புண்ணிய பூமியாகிய இந்தப் பாரத நாட்டிற்கே கெடுதி ஏற்பட்டுவிடும்.

அயல் நாட்டாரிடமிருந்து நாம் அறிந்துகொள்ளும் நவீன விஞ்ஞான ஆராய்ச்சிகளும் நாம் காணும் அளவில் நமக்கு எவ்விதப் பயனையும் தரக் கூடியதாயில்லையென்று தெரிந்தால் அவைகளை மேன்மேலும் கற்பதில் என்ன பயன் என்பதைப் பற்றிச் சிந்திக்கவும் இடமுண்டாகிறது. பாரத நாட்டில் தற்காலம் நமது மக்கள் பெரும்பாலும் சிறு பிராயம் முதலே ஒழுக்கம், இறை வணக்கம். இவ்விதமான பழக்கமே இல்லாமலும், கலாசாரங்கள், விஞ்ஞானம் இவைகளைப் பயில்வதில் வெளிநாட்டாரது பழக்கங்களையே பின்பற்றியும் வருகின்றனர். இதனால் மக்களுக்கு இந்த உலகத்திலும் மறு உலகத்திலும் பேரின்ப வழியை அடையத் தடை ஏற்படுகிறதென்பது தெளிவு. ஆஸ்திகமயமான இந்த விச்வ வித்யாலயத்திலும் இத்தகைய பழக்கங்கள் புகுந்திருப்பதும் விசனிக்கத் தக்கதே.

ஆதலால் ஆஸ்திக பரம்பரையில் தோன்றிய நமது குழந்தைகளுக்குச் சிறு வயது முதலே நமது பண்புக்குரிய தருமம், ஒழுக்கம், உண்மை முதலியவைகளைக் கடைபிடித்து ஒழுகுவதற்கு அனுகூலமான கல்வியைப் போதிக்கவேண்டுமென்பதே எனது விருப்பம். இக்கலாசாலை தோன்றிய அக்காலத்திலேயே இதைத் தோற்றுவிக்கக் காரணமாக இருந்த மிகுந்த சீலம் படைத்த பண்டித மாளவியாவின் தார்மீக வாழ்க்கையையும், சீரிய ஒழுக்கத்தையும், நன்குணர்ந்த நமது தேச மக்கள் மாளவியா அவர்களின் தார்மீகக்

கொள்கைகள் இங்கு லக்ஷியத்துடன் போதிக்கப்படுமென்று எதிர்பார்த்ததையே நான் இப்பொழுது எல்லோருடைய நினைவிற்கும் கொண்டு வருகிறேன்.

இப்பொழுது நமது தேசம் முழுவதும் பழமையான பண்பாடுகளைப் போதிக்கும் முறைகளைக் கீழ்த்திசைக் கல்வி (Oriental Learning) என்றழைப்பதை நினைக்க மிகவும் வருந்த வேண்டியிருக்கிறது. உலகின் கிழக்குப் பாகத்தில் வசிக்கும் நம்மைக் கீழ் நாட்டாரென்றும், நமது சாஸ்திரப் பயிற்சிகளைக் கீழ்த்திசைப் பகுதியென்றும் மேல் நாட்டார் கூறுகின்றனர். அதனோடு, நம்மவர்களே மேல் நாட்டுப் பழக்கத்திலுள்ள மயக்கத்தினால் நமது சாஸ்திரங்களைக் கீழ்நாட்டுப் படிப்பு என்று கூறிக்கொள்வது விந்தையாக இருக்கிறது. எவ்வகையிலும் இது பொருந்தாததாகும். இஃது இருக்கட்டும். மேல் நாடுகளில் எங்காவது அவர்களது கல்விச் சாலைகளுக்கு மேல் நாட்டுக் காவியம், விஞ்ஞானம், கற்பிக்குமிடம் என விளம்பரம் செய்கிறார்களா? இவ்விதம் பெயரளவில் உள்ள மாறுதல்களைப் பற்றி நான் மிகுந்த கவலை கொள்ளவில்லை. ஆயினும் நமது பழமையான கல்வியின் அமைப்பு, புராதன பண்பாடு, தருமம் முதலியவைகளுக்கு உறைவிடமாயிருக்க வேண்டிய இந்த விச்வ வித்யாலயத்திலும் இந்தக் கருத்துகள் நுழைந்து விடாமல் இருக்க வேண்டுமென்ற எண்ணத்துடனேயே இங்கு இதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஏனெனில் பெரும் முயற்சியுடன் அரும்பாடு பட்டு, பாலப் பருவத்தில் வரக்கூடிய இன்னல்களையெல்லாம் கடந்து, தருமத்திற்கும், நமது புராதன பண்பாட்டிற்கும் ஜீவநாடியாக இந்தச் சர்வகலாசாலை இருக்கவேண்டுமென்று நினைத்துக் கண்ணும், கருத்துமாகப் பண்டித மாளவியா இதைத் தோற்றுவித்தார். இந்தச் சர்வகலாசாலையானது மனுநீதி தர்மத்திலிருந்து ஓர் இழையேனும் பிறழாமல் சுயேச்சையாக விளங்கவேண்டுமென்று நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஆசி கூறுகின்றேன். பரமசிவனது அருளால் இந்த விச்வ வித்யாலயத்தில் யாவரும் ஒரே மனமுள்ளவர்களாகவும், ஆஸ்திக புத்தியிலிருந்து விலகாதவர்களாகவும், முன்னோர்களின் நல்ல ஆசாரங்களைப் புறக்கணிக்காதவர்களாகவும், நாட்டிலுள்ள ஏழை மக்களின் ஏழ்மையைப் போக்கி அவர்களுக்குச் சிவனுபாயத்திற்கு வழி தேடிக் கொடுப்பவர்களாகவும் இருந்து உலகிற்கே நன்மை பயக்கக்கூடிய

வழியில் இதைத் திகழ வைக்க யாவரும் ஈடுபட வேண்டுமென்பதே நான் இதுவரை பேசியதின் கருத்தாகும்.

அரசியல் முன்னேற்றத்தைப் பற்றி கவனம் செலுத்த நமது நாட்டின் தலைவர்கள் பலர் இருக்கின்றனர். மக்களுக்கும், தலைவர்களுக்கும் நமது மதாசார சம்பிரதாயங்களைப் பற்றிய விஷயங்களில் கருத்து வேற்றுமை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சம்பிரதாயங்கள் அரசியல் முன்னேற்றத்திற்கு இடையூறுகள் போல் அவர்களுக்குக் காணப்படுகின்றன. தலைவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாகவும், தார்மீக நெறியில் பண்பாடு உடையவர்களாகவும் இருக்கவேண்டும். இந்த விச்வ வித்யாலயத்திலிருந்து கல்வி பயின்று வெளிவரும் வித்வான்கள் ராஜரிஷிகளைப் போல மக்களைச் சீரிய வழியில் நடத்தத் திறன் படைத்தவர்களாக இருக்க வேண்டும்.

சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் நமது நாட்டில் ஒவ்வொரு சுரோத்திரியப் பண்டிதரது வீடும் ஒரு கலாசாலையாகத் திகழ்ந்திருக்கிறது. அக்காலத்தில் படிப்புக்காகச் சம்பளம் கொடுப்பதும், சம்பளம் பெற்றுக்கொள்ளுவதுமான வழக்கம் இல்லை. அப்பொழுது இங்குள்ளது போல் ஒரே இடத்தில் கணக்கற்ற மாணவர்கள் கூடி இருக்கமாட்டார்கள். இக்காலத்தில் படிப்பு தொழிலின் லக்ஷியமாக மாறிவிட்டதால் சங்கடங்கள் தோன்றி விட்டன. முன்பெல்லாம், ஆசிரியர்களின் வீடுகளுக்குப் பக்கத்திலேயே மக்களும் வசித்து வந்தனர். மாணவர்களோ அன்றாடம் அவர்களது உணவைச் சில வீடுகளுக்குச் சென்று யாசித்து அதைக் கொண்டு ஜீவித்து வந்தனர். மன்னர்களும், பிரபுக்களும் பண்டிதர்களை ஆதரிப்பது தங்கள் கடமை என எண்ணி, அவர்கள் எக்கவலையும் இன்றி வாழுமாறு அவர்களைக் காத்து வந்தனர். அதுபோல் கல்வி கற்றுக் கொடுப்பதே தங்கள் கடமையென மதித்துப் பண்டிதர்கள் மாணவர்களுக்குக் கல்வி போதித்து வந்தனர். இருசாராரிடையும் இவ்விதம் சம்பளம் கொடுப்பது வாங்குவது என்ற பழக்கம் இல்லாதிருந்ததால்தான் ஆங்காங்கு ஒவ்வொரு கிராமத்திலும் மாணாக்கர்கள் ஒரு வரையறைக்குள் அடங்கியவர்களாக இருந்தனர். உண்மை, ஒழுக்கம் முதலிய குணங்களை அவர்கள் கடைபிடிக்க ஆசிரியர்கள் செய்து வந்த முயற்சியும் நல்ல பயனை அளித்தது.

ஆசிரியர்கள் பொருளில் ஆசையில்லாமலும், மாணவர்களிடம் அன்புடனும் அக்காலத்தில் கல்வி போதித்து வந்தனர். ஆதலால் மாணவர்கள் குருபக்தி, ஒழுக்கம், சீலம், பொறுமை, அடக்கம் இவைகளுடன் இருந்து கல்வி பயின்றார்கள். ஆசிரியர்களும் சுதந்திரத்துடன் வாழ்ந்து வந்தமையால், எவரது விருப்பு வெறுப்புக் களையும் பாராட்டாமல் சாஸ்திரங்களின் தத்துவங்களை உள்ளபடி மாணவர்களுக்குப் போதித்து வந்தார்கள். அக்காலத்தில் எங்கும் கடவுள் நம்பிக்கையும், ஆஸ்திகமும் நிறைந்து மக்கள் தங்களது வாழ்க்கையைக் கஷ்டமின்றி நடத்தி வந்தனர். இப்பொழுதோ வென்றால், அத்தகைய பண்டிதர்கள் எங்கெங்கோ மூலை முடுக்கு களில் தேடிப்பிடிக்கும் நிலையிலிருக்கின்றனர். இதற்குக் காரணம் யாவரும் நன்கு தெரிந்துகொண்டதுதான். தேச கால வர்த்தமான நிலைகளை அனுசரித்துப் பணம்படைத்தவர்கள் வெளிநாட்டுக் கல்வி, பழக்கம் இவைகளைப் பின் பற்றி அந்த வாசனையிலேயே ஊறி யிருப்பதால் நாட்டில் ஆஸ்திகத்திற்குப் பஞ்சம் தோன்ற ஆரம் பித்தது. இந்த விச்வ வித்யாலயத்தின் பண்டிதர்களும் நிர்வாகி களும் சுதந்திரம் உள்ளவர்களாக இருக்கவேண்டும். மாணவர் களும் கிராமங்களுக்குச் சென்று பிக்ஷை எடுப்பதின் மூலம் ஜீவ யாத்திரையை நடத்தி அடக்கம், ஒழுக்கம், உண்மை முதலிய நற்குணங்களைப் பெற்றவர்களாக ஆக வேண்டும்.

எனக்கு இங்கு ஓர் உபாயம் தோன்றுகின்றது. முன் காலத்தில் எவ்விதம் பயனை எதிர்பாராது பிரபுக்கள் வித்வான்களை ஆதரித்தார்களோ அதே போல் இந்த வித்யாலயமும் பண்டிதர் விஷயத்தில் ஆதரவு காட்டவேண்டும். வேதத்தில் ஒரு சாகை யையும், தரிசனங்களில் ஒரு தரிசனத்தையும் அவற்றுடன் ஓர் ஸ்மிருதியையும் நன்கு கற்று நல்ல தேர்ச்சிபெற்ற சுரோத்திரியர் ஒருவருக்கு அவரது குடும்ப காலக்ஷேபத்திற்குக் கஷ்டமின்றி அவரது ஆயுள் வரை வாழ்க்கை நடத்த நமது நாட்டுப் பிரமுகர் கள் ஒவ்வொருவரும் வசதி செய்துகொடுப்பார்களானால், நமது பாரத நாட்டில் முன்போலத் தருமமும், ஆஸ்திகமும், ஒழுக்கமும் வளர்ந்து உலகத்திற்கு மேலான நன்மை ஏற்படும். இதுதான் தருமத்தை ரக்ஷிக்கும் வழி.

இங்குக் கூடியுள்ள மாணவர்களுக்குச் சில வார்த்தைகள் கூறவேண்டுமென்று எனக்கு ஆசை ஏற்படுகிறது. உங்களது

புண்ணியம் எத்தகையது என்று எளிதில் கூற முடியாது. ஞானம், விவேகம் இவை இரண்டும் வாழ்க்கையில் பயன் தரக் கூடிய வகையில் புனிதமான இம் மனித ஜன்மாவை நீங்கள் அடைந்திருக்கிறீர்கள். நாட்டின் நலனுக்கும் அபிவிருத்திக்கும் இவைஇரண்டும் உதவுமாறு நீங்கள் ஊழியம் செய்யவேண்டும். முன் காலத்தில் பண்டிதர்களுக்குக் கஷ்டம் அதிகமாக இருந்ததில்லை. ஆங்காங்கு மக்கள் ஒற்றுமையுடன் கூடித் தரும காரியங்களைச் செவ்வனே நடத்தி வந்தனர். இப்பொழுதோவென்றால் கால வேறுபாட்டினால் மக்கள் மனதில் பலவித மாறுபாடான எண்ணங்கள் தோன்றி வருகின்றன. ஆற்றின் வெள்ளம் போல் பாய்ந்து வரும் அரசியல் மாறுபாடுகளால் உதவியின்றித் தனித்து நிற்கும் இந்தச் சநாதன தர்மமானது துன்புறுத்தப்படும் நிலையிலும் இருந்து வருகிறது. ஜன சமுதாயமும் மாறிக்கொண்டே வருகிறது. ஆகையால் இந்தச் சர்வகலாசாலையில் கல்வி கற்று விவேகிகளாகவும், வித்வான்களாகவும் வெளி வருகிறவர்கள் மிகவும் தீரத்துடன் அரசியல் விஷயங்களில் முன்னேறும் வழிகளில் பிரவேசித்துத் தருமத்திற்கு இடையூறு இல்லாமல் நாட்டின் நன்மைக்காக உழைக்க முற்படவேண்டும். உங்கள் படிப்பின் தன்மையானது மக்களின் நல்வாழ்வுக்கு உதவும்படியாகவும், அரசியல் நிர்வாகத்தை எளிதாகச் செய்யக்கூடியதாகவும் இருக்கவேண்டுமென்பது எனது அவா.

இங்கிருந்து வெகு சமீபத்தில் வடபுறமாகக் கங்கை நதி ஓடுகின்றது. அதன் கரையில் நின்று வணங்கும் புண்ணியவான்களின் எதிரில் சூரியன் பிரகாசிக்கிறார். எல்லாத் தருமங்களையும் விட ஆசாரமே உயர்வானது, ஆசாரத்தைப் பின்பற்றித் தருமத்தைக் கடைப்பிடிக்க மிகவும் புனிதமான இந்த இடம் நல்ல வசதியளிக்கக் கூடியதாயிருக்கிறது. இந்தப் பாரதநாட்டின் பல பக்கங்களிலிருந்தும் தங்கள் பெற்றோர்களால் இவ்விடத்திற்கு அனுப்பப்படும் மாணவன் ஒவ்வொருவனும் தனக்கு நேரம் கிடைக்கும்பொழுதெல்லாம் புனிதமான கங்கைக் கரையில் அமைந்திருக்கும் இந்த விசாலமான மண்டபத்தில் அவரவர்களது வழக்கப்படி கடவுள் வழிபாட்டைச் செய்து அன்பை வளர்த்துத் தருமத்தினின்றும், ஒழுக்கத்தினின்றும் பிறழாமலிருக்க உறுதிகொள்ள வேண்டும். அதனால் உங்களுக்கு எல்லாவிதமான நன்மைகளும் கீர்த்திகளும் உண்டாகும். நாமெல்லோரும் பார்த்து மகிழ்ச்சி

அடையக் கூடிய மங்களகரமான செயல்களில் அதுவே எல்லா வற்றிலும் மேம்பட்ட மங்களச் செயலாகும்.''

ஸ்வாமிகள் இந்த உபதேச மொழிகளைக் கூறிய பிறகு பண்டித மாளவியா சிறியதொரு சொற்பொழிவை ஆற்றினர். அவர் பேசுகையில் ஸ்வாமிகளின் உபதேச மொழிகளைக் கேட்டுத் தாம் மிகவும் ஆனந்த பரவசம் அடைந்திருப்பதாயும், அவர்களின் உபதேசங்களில் கூறப்பட்டவைகளைச் சாத்தியமான வகையில் நடவடிக்கைக்குக் கொண்டு வருவதாகவும் உறுதி கூறினர். மேலும் 2000 வருடங்களுக்கு முன்னர், ஆதி சங்கரர் இந்தக் காசிமா நகரத்திற்கு விஜயம் செய்து உலக க்ஷேமத்தின்பொருட்டு பல அற்புதச் செயல்களைப் புரிந்துள்ளார்களெனப் புராணங்கள் மூலமே தாம் அறிவதாகவும், இன்றோ அவர்களின் அவதாரமாகவே ஸ்வாமிகளை இப்புனித நகரில் நேரில் காணும் பாக்கியம் எல்லோ ருக்கும் கிடைத்திருக்கிறதெனவும், தவத்தினுல் சிறந்த இந்த மகான் கால்நடையாகவே இக்காசியம்பதியில் திக்விஜயம் செய்வது ஆதி சங்கரரது விஜயத்தையே நினைவிற்குக் கொண்டு வருகிற தென்றும், இம்மகானது தரிசனமே நம்மைப் புனிதமாக்கக் கூடிய தெனவும், தனது வேண்டுகோளுக்கு இணங்கி ஸ்வாமிகள் இந்தச் சர்வகலாசாலைக்கு விஜயம் செய்தது மாணவர்களுக்கும், ஆசிரியர் களுக்கும், நிர்வாகிகளுக்கும், கிடைப்பதற்கரிதான பாக்கிய மென்றும் குறிப்பிட்டார், பிறகு மாளவியா எல்லோருடைய சார்பிலும் தமது பக்தி நிறைந்த வணக்கத்தை ஸ்வாமிகளுக்குத் தெரிவித்துக்கொண்டார். யாவரும் ஸ்வாமிகளது ஆசியைப் பெற்று அகமகிழ்ந்தனர்.

1935-ஆவது வருடம் பிப்ரவரி 11-ந் தேதி ஹரித்துவாரத்தி லிருந்து இரண்டு பண்டித கோஷ்டியினரும், ஸ்வர்க்காச்ரமத்தி லிருந்து ஒரு பண்டித கோஷ்டியினரும் ஸ்வாமிகளைத் தரிசிப்பதற் கெனக் காசிக்குவந்தனர். காசியில் ஹனுமந்த கட்டத்திலுள்ள மடத்தில் ஸ்வாமிகளை அக் கோஷ்டியினர் அன்று தரிசித்துக்கொண்டார் கள். அவர்களில் பலர் சாஸ்திரங்களில் நல்ல தேர்ச்சி பெற்றுப் புலமை வாய்ந்திருந்தமையால், ஸ்வாமிகள் அவர்களுடன் சாஸ்திர விசாரங்கள் செய்தார்கள். பண்டிதர்கள் யாவரும் அப்பொழுது ஸ்வாமிகளின் புலமையைக் கண்டு மிக

ஹரித்துவார் பண்டித கோஷ்டியை வெகு மானித்தது.

வியந்து, தவத்தினுலும், சாஸ்திர ஞானத்தினுலும் சிறந்து விளங்கும் இத்தகைய ஒரு மகா புருஷரை இது வரை தாங்கள் கண்டதில்லையெனக் கூறினுர்கள். ஸ்வாமிகள் ஹரித்துவாரத்திற்கு விஜயம் செய்யவேண்டுமென்று அவர்கள் விண்ணப்பிக்கொண்டார்கள். ஆனல் ஸ்வாமிகள் அச்சமயம் ஹரித்துவாரத்திற்கு விஜயம் செய்யத் திட்டமிடவில்லையென்றும், பின்னர் நேருமானுல் ஒரு முறை வருவதாகவும் கூறினுர்கள். அந்தப் பண்டிதர்களுக்கெல்லாம் ஸ்வாமிகள் காஷ்மீர் சால்வைகளைக் கொடுத்து பணப் பரிசும் அளித்து அவர்களை வெகுமானித்தார்கள்

காசி ஸாங்க வேத வித்யாலயத்திற்கு விஜயம். காசி மன்னர் அளித்த பாராட்டு.

1935 பிப்ரவரி மாதம் 16-ந் தேதி ஸ்வாமிகள் ராம்காட்டிலுள்ள ஸாங்க வேத வித்யாலயத்திற்கு விஜயம் செய்தார்கள். ஸ்வாமிகளைத் தரிசிக்க ஆயிரக்கணக்கில் அங்குப் பொது மக்கள் கூடி இருந்தனர். காசி மன்னரும் தமது குடும்பத்துடன் அங்கு விஜயம் செய்தார். வித்யாலயத்தைச் சேர்ந்த பண்டிதர்களும் நிர்வாகிகளும் வடமொழியில் 10 ஸ்லோகங்களை இயற்றி அவைகளைப் படித்து ஸ்வாமிகளிடம் சமர்ப்பணம் செய்தார்கள். வித்யார்த்திகளையெல்லாம் ஸ்வாமிகள் பரீக்ஷித்து அவர்களை ஆசிர்வதித்தார்கள். வித்யாலயம் மிகவும் சிறந்த முறையில் சநாதன தர்மத்திற்கு உழைத்து வருவதைப்பற்றி ஸ்வாமிகள் மகிழ்ச்சி அடைந்தார்கள். பிராமணர்கள் வேதத்தைக் கற்க வேண்டிய அவசியத்தைப் பற்றி ஸ்வாமிகள் சில உபதேச மொழிகளைக் கூறினுர்கள். காசி மன்னர் பாராட்டுரை ஒன்றைத் தமது கையால் வடமொழியில் வசன ரூபமாக எழுதிக் கையெழுத்து இட்டு, அதை ஸ்வாமிகள் சரணங்களில் அர்ப்பணம் செய்தார். ஸ்வாமிகள் அந்த வித்யாலயத்தில் வேத வியாசரைப் பற்றியும், ஆதி சங்கர பகவத்பாதர் அவர்களின் மகிமையைப் பற்றியும் உபன்யசித்தார்கள். அன்று, காசி மகாராஜா தமது அரண்மனையிலிருந்து கொண்டுவந்த ஸ்ரீபாதராயணர் படத்தையும், ஸ்வாமிகளின் கட்டளைப்படி ஹனுமந்த கட்டத்திலுள்ள மடத்திலிருந்து கொண்டுவரப்பட்ட ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாத மூர்த்திகளின் திருவுருவப் படத்தையும் ஸ்வாமிகள் சாங்கவேத வித்யாலயத்தில் ஸ்தாபனம் செய்தார்கள். ஸ்வாமிகள் தமது மடத்திற்கு விஜயமான பின்னர் அவர்களின் திருவுருவப் படம் ஒன்றை அந்த வித்யாலயத்தில் மக்கள் உற்சாகத்தின் மத்தியில் காசி மகாராஜா

திறந்து வைத்தார். நன்கு அலங்கரிக்கப்பட்ட அம்மூன்று படங்களுக்கும் வித்யாலயத்தார் அன்று விசேஷமான பூஜை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

ஸ்வாமிகள் காசியை விட்டுப் புறப்படப் போவதை உத்தே சித்துத் தங்கள் மரியாதையை ஸ்வாமிகளுக்குத் தெரிவிக்க வேண்டி 1935 மார்ச்சு 9-ந் தேதி காசி மக்கள் டவுன் ஹாலில் ஒரு பொதுக் கூட்டம் கூட்ட ஏற்பாடு செய்திருந்தனர். நகரத்தின் பிரதான பண்டிதர்களும், மற்றும் பிரமுகர்களும் 75 பேர்களுக்கு மேல் கையெழுத்திட்ட அழைப் புப் பத்திரிகையை நகர மக்களுக்கு ஏராளமாக வழங்கியிருந்தனர். அன்று டவுன் ஹால் மைதானத் தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஸ்வாமிகள் விஜயம் செய்வ தற்கு வெகு நேரத்திற்கு முன்பாகவே கூடி விட்டார்கள். மைதா னம் அடங்க முடியாதவாறு ஜனத்திரள் அங்குக் கூடி இருந்தது. சேவா சமிதியைச் சார்ந்த சாரணர்களும், போலீஸ் படையினரும் ஜனக் கூட்டத்தை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தனர். விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தபடி சரியாக மாலை 4 மணிக்கு ஸ்வாமிகள் அங்கு விஜயம் செய்திருந்தார்கள். ஸ்வாமிகளின் வரவை அறிந்தவுடன் மக்கள், 'ஜகத்குரு மகாராஜிக்கி ஜே' எனக் கோஷமிட்டனர். ஸ்வாமிகளுக்கு வடமொழியிலும், ஹிந்தியிலும் உபசாரப் பத்திரங்கள் வாசித் தளிக்கப்பட்டன. மகா பண்டிதர்களான ஜெய்ப்பூர் மகா மகோபாத்யாய கிரிதர் சர்மாவும், மகாமகோபாத்யாய பஞ்சானன தர்க்க ரத்தினம் அவர்களும், தேவநாயகாசாரியார் அவர்களும், அன்று கூட்டத்தில் பேசினார்கள். ஸ்வாமிகளின் தவ மகிமையைப்பற்றியும் அவர்களது விஜயத்தினால் காசி மக்கள் அடைந்த நன்மையைப்பற்றியும் அவர்கள் விரிவாகச் சொற்பொழிவாற்றினார்கள். அன்று ஸ்வாமிகள் ஹிந்தி யில் சில உபதேச மொழிகளை அளிக்கையில் பொது மக்கள் ஏராளமாக அங்குக் கூடியிருப்பதைக் கண்டு தாம் மகிழ்ச்சியுறுவ தாகவும், அம்மாபெரும் கூட்டத்தைக் காணும்பொழுது மக்கள் உள்ளத்தில் எவ்வளவு தூரம் ஆசார்ய பக்தியானது ஆழ்ந்து பதிந்திருக்கிறது என்பது விளங்குகிறதென்றும், ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாதரது அடிச்சுவடுகளைப் பின்பற்றியே இந்த யாத்திரை யைத் தாம் மேற்கொண்டிருப்பதாயும், கரைபுரண்டு ஓடும் மக்க

காசி டவுன் ஹாலில் நடைபெற்ற மாபெரும் பாராட்டுக் கூட்டம்.

ளது உற்சாகத்தைக் காணத் தாம் மிகவும் மகிழ்ச்சியுறுவதாயும் கூறி, விச்வநாதர், விசாலாக்ஷி, அன்னபூரணி இவர்களின் அனுக்ர கத்தினுல் உலகம் முழுவதற்கும் நன்மை ஏற்பட்டுத் தருமத்தில் சுதந்திரம் உள்ளவர்களாக யாவரும் வாழ வேண்டுமென்றும் ஸ்வாமிகள் ஆசீர்வதித்தார்கள். அன்றிரவு 8 மணிக்கு சௌக்கின் மார்க்கமாக ஓர் பெரிய ஊர்வலம் புறப்பட்டு விச்வநாதர் ஆலயத் திற்குச் சென்றது. ஊர்வலத்தில் பண்டிதர்களும், சந்நியாசிகளும், பொதுமக்களும் ஏராளமாகக் கலந்துகொண்டனர். இந்த ஊர் வலத்தில் ஸ்வாமிகள் எப்பொழுதும் போல் கால் நடையாகவே சென்ருர்கள். விச்வநாதர் ஆலயத்தில் ஆதி சங்கரரின் சிஷ்யர் களுடன் அமைந்த பெரிய படமொன்றை அன்றிரவு ஸ்வாமிகள் திறந்து வைத்தார்கள். ஆலயத்தின் நிர்வாகிகள் இதை மகிழ்ச்சி யுடன் ஏற்றுக்கொண்டு கூடிய சீக்கிரத்தில் ஆதி பகவத்பாதரது சிலா உருவ ப்ரதிஷ்டையும் அங்கு நடைபெற வேண்டுமென்றும், காசி க்ஷேத்திரத்திற்கு அது மிகவும் பொருத்தமாயிருக்கு மென்றும் கூறி, அதற்கறிகுறியாகவே இந்தப் படம் ஸ்வாமி களால் அங்கு ஸ்தாபனம் செய்யப்பட்டிருப்பதாக அவர்கள் எண்ணுவதாகவும் விண்ணப்பித்துக்கொண்டனர்.

ஸ்ரீ ஆதி சங்கரர் ஸ்தாபித்த ஆம்னய பீடங்களைப் பற்றித் தத்துவவிசாரம் செய்து அதிலிருந்து ஒரு முடிவைக்காண வேண்டு மென்ற நோக்கத்துடன் காசியில் 9-3-1935 உயன்று காசி பண்டிதர் களின் மகா சபை ஒன்று கூட்டப்பட்டது. காசியிலுள்ள பிரபல பண்டிதர்கள் யாவரும், மதிப்பிற்குரிய தண்டி சந்யாசிகள் பலரும் அன்று சபைக்கு விஜயம் செய்திருந்தார்கள்.

காசி நகரமத்ய மண்டபத்தில் பண்டித மஹாசபை.

விஜயம் செய்த பண்டிதர்களில் முதன்மையானவர்களின் சிலரின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

1. ஸ்ரீ பஞ்சானன தர்க்க ரத்ந, 2. ஸ்ரீ ஹரிஹர கிரு பாலு, 3. ஸ்ரீ கிரிதர சர்மா 4. ஸ்ரீ தைலிங்க லக்ஷ்மண சாஸ்திரி, 5. ஸ்ரீ பிரதமநாத தர்க்க பூஷண, 6. ஸ்ரீ துர்க்கா சரன், 7. ஸ்ரீ முகுந்தா ஜா பக்ஷ, 8. ஸ்ரீ பண்டித ராஜ சண்டீ பிரசாத சுக்லா, 9. ஸ்ரீ பாலகிருஷ்ண மிச்ரா, 10. ஸ்ரீ ராமயெஸஸ் திரிபாடி, 11. ஸ்ரீ வாமாசரன் பட்டா சாரியார். 12. ஸ்ரீ பட்டபல்லி ஸ்ரீ ஜிவநியாய தீர்த்தா.

தண்டி ஸ்வாமிகளில் 1. காசி சாரதா சாகை மடத்தின் அதிபர்கள், 2. ஸ்வாமி கரபாத்ரஜீ என்னும் பெயர் பெற்று விளங்கும் அவந்தி சங்கராநந்தா, 3. ஸ்வாமி மாதவாநந்த தீர்த்தர், 4. ஸ்வாமி நிஜபோதாச்ரமி, 5. ஸ்வாமி பௌமாச்ரமி, 6. ஸ்வாமி வாசுதேவாச்ரமி.

இத்தகைய பண்டிதர்களும், சந்யாசிகளும் அடங்கிய மாபெரும் சபையில் பீடங்களின் தத்துவங்களை விளக்கக்கூடிய கிரந்தங்கள் பலவற்றைப் பண்டிதர்கள் பரிசீலனை செய்தார்கள். காசி மகா ராஜாவின் புத்தகசாலையிலிருந்து கிடைத்த ஏட்டுப் பிரதிகளாக வும் புஸ்தகங்களாகவுமிருந்த சிவரகஸ்யம், ஆனந்தலகிரி, சங்கர விஜயம் போன்ற கிரந்தங்களையும், மற்றும் பழமையான வேறு கிரந்தங்களையும் பரிசீலனை செய்து, காமகோடி பீடம் ஸ்ரீ சங்கர பகவத்பாதரது சாக்ஷாத் பீடமென்பதாக முடிவு செய்து, அந்த முடிவையும் ச்லோகங்கள் மூலமாக எழுதி யாவரும் கையெழுத் திட்டு ஸ்வாமிகள் முன் சமர்ப்பித்தனர்.

இதைப் போன்றே, கல்கத்தாவில் வங்காள பிராமண மகா சபையின் ஆதரவில் (இதற்குச் சில நாட்களுக்கு முன்னரே) வங்கத்தில் பிரசித்தி பெற்ற 130 பண்டிதர்களுக்கு மேல் கூடி, ஸ்ரீ சங்கர மட ஆம்நாய விஷயமாக, நூற்றுக்கணக்கான நூல் களை ஆராய்ச்சி செய்து, காமகோடி பீடம் ஆதி சங்கரரது அதிஷ் டான பீடமென்ற தீர்மானத்தைச் செய்து அத்தீர்மானங்களிலும் யாவரும் கையெழுத்திட்டனர். கையெழுத்திட்டவர்களில் முதன் மையான சில பண்டிதர்களின் பெயர்கள் கீழே குறிப்பிடப்பட் டுள்ளன :—

1. கல்கத்தா பிராமண மகா சபையின் தலைவர் ஸ்ரீ பஞ் சானன தர்க்க ரத்ன.
2. நவத்விபத்தைச் சார்ந்த மகாமகோபாத்யாய காமாக்ஷ்ய நாத்தர்க்காவாகிசர்.
3. மகாமகோபாத்யாய ஸ்ரீ துர்க்கா சரன் சாங்க தீர்த்தா.
4. ,, ஸ்ரீ யோகேந்திரநாத் தேவ சர்மா.
5. ,, ஸ்ரீ சிதிகண்ட வாசஸ்பதி சர்மா.
6. ,, பண்டித ஸ்ரீ சீதாராம சாஸ்திரி.
7. ,, ஸ்ரீ அனந்தகிருஷ்ண சாஸ்திரி.

8. மகாமகோபாத்யாய ஸ்ரீ குஞ்சவிகாரி தர்க்க சித்தாந்தா.
9. ,, ஸ்ரீ ஹரிதாஸ சித்தாந்த வாகிசா.
10. ,, ஸ்ரீ ஸகல் நாராயண சர்மா.
11. ,, ஸ்ரீ தேவநாயகாசார்யா.

இந்தத் தீர்மானத்தைப் பண்டிதர்களின் சார்பாக ஸ்வாமிக ளிடம் நேரில் சமர்ப்பணம் செய்வதற்காக மகாமகோபாத்யாய ஸ்ரீ துர்க்காசரன் சாங்க தீர்த்தரும், ஸ்ரீ தாமோதர தாஸ் கன்னுவும் 1-3-1935ந் தேதி காசியை அடைந்து ஸ்வாமிகள் டவுன் ஹாலில் விஜயம் செய்திருந்த பொழுதே அவர்களிடம் அதைச் சமர்ப்பித் தார்கள். ஸ்வாமிகளின் விஜய யாத்திரையின பொழுது ஸ்வாமிகளை கல்கத்தாவிற்கு விஜயம் செய்யவேண்டுமாய்ப் பிரார்த்தனை செய்து கொள்ளவே அவர்கள் அங்கு வந்ததாகவும், தவறாது வங்காளத் திற்கு ஸ்வாமிகள் விஜயம் செய்து வங்க மக்களை ஆசிர்வதிக்க வேண்டுமெனவும் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். ஸ்வாமி களும் கூடிய சீக்கிரம் அவர்கள் பிரார்த்தனையைப் பூர்த்தி செய்து வைப்பதாக வாக்களித்தார்கள்.

1935 மார்ச்சு 11-ந் தேதி காசியில் பிராமண மகாசபையிலும், வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத்திலும் ஸ்வாமிகளுக்கு உபசாரப் பத்திரங்கள் அளித்துப் பிக்ஷை, பாதபூஜை முதலியவைகளை நடத்தி வைத்தார்கள். மார்ச்சு மாதம் 18-ந் தேதி காசியிலுள்ள தென் நாட்டு மக்கள் ஹிந்து சர்வ கலாசாலையின் சரித்திரப் பேராசிரியர் கே. வி. ரேங்கஸ்வாமி ஐயங்காரைத் தலைமையாகக் கொண்டு ஸ்வாமிகளுக்குப் பிக்ஷை, பாதபூஜை முதலியவைகள் நடத்தி வைத்தார்கள். சுமார் 100 தென்னிந்தியர் கையெழுத்திட்டு ஸ்வாமிகளுக்குத் தமிழில் ஓர் உபசாரப் பத்திரத்தையும் அன்று வாசித்தளித்தார்கள். மார்ச்சு மாதம் 20-ந் தேதி ஸ்வாமிகள் ராஜ்கட்டத்தின் வழியாகக் கங்கையைக் கடந்து கயா யாத் திரையை முன்னிட்டுக் காசியிலிருந்து புறப்பட்டார்கள். மகா மகோபாத்யாய சின்னஸ்வாமி சாஸ்திரிகள், பண்டித ராஜராஜேச் வர சாஸ்திரிகள் முதலான சில பிரபல பண்டிதர்களும் ஸ்வாமி களின் யாத்திரையில் கலந்துகொண்டனர்.

காசியிலிருந்து புறப் படுதல்.

1935 ஏப்ரல் 2-ந் தேதி ஸ்வாமிகள் கஸ்தர் மஹாதேவ் என்னும் க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்தார்கள். அங்குள்ள

கயாவுக்கு யாத்திரை.
கஸ்தர் மஹாதேவ் க்ஷேத்திரத்திற்கு விஜயமும். ஸந்யாஸிகள் செய்த பூஜையும்.

சிவாலயத்திலுள்ள ஈசனுக்கும் கஸ்தர் மஹாதேவ் என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. அந்த க்ஷேத்திரத்தில் சந்யாசிகள் ஏராளமாக வசிக்கின்றனர். நூறு வயதிற்கு மேற்பட்ட துறவிகள் பலரை அவ்விடம் தரிசிக்கலாம். அவர்களில் தண்டிபாபா என்னும் சந்யாசி மிகவும் பெருமை வாய்ந்தவர். தமது இளமைப் பருவத்தில் காமகோடி பீடத்தின் பூர்வாசார்யர்களின் ஆசியைத்தாம் பெற்றிருப்பதாக அவர் ஸ்வாமிகளிடம் விண்ணப்பித்துக்கொண்டார். அத்தலத்தில் அவரது ஆதீனத்தில் ஒரு மடமும் அதைச் சுற்றி ஒரு தேவாலயமும் அமைந்துள்ளன. ஸ்வாமிகளை அவர் தமது மடத்திற்கு அழைத்து, அவ்விடம் அவர்களைத் தங்கச் செய்து அவர்களுக்குத் தக்கவாறு உபசாரணைகளையெல்லாம் செய்தார். அந்த மடத்தின் பண்டிதர்கள் ஸ்வாமிகளுக்கு ஒரு வரவேற்புப் பத்திரத்தை வாசித்தளித்தனர். ஸ்வாமிகள் மஹாதேவ் ஆலயத்திற்கும், மடத்தில் அமைந்துள்ள தேவாலயத்திற்கும் சென்று ஸ்வாமி தரிசனம் செய்து கொண்டார்கள். அவ்வூரிலுள்ள சந்யாசிகள் யாவரும் அவ்விடம் கூடி ஸ்வாமிகளுக்கு ஒரு பெரிய வரவேற்பை அளித்தனர். வட இந்தியாவில் கரபாத்ரஜி என்னும் பெயர் பெற்றுப் புகழுடன் விளங்கும் சந்யாசி அங்குக் கூடியிருந்தவர்களின் சார்பாக வடமொழியில் உபசாரப் பத்திரம் ஒன்றை ஸ்வாமிகளுக்கு வாசித்தளித்தார். அதில் காமகோடி பீடத்தின் பெருமையைப் பற்றியும் ஸ்வாமிகள் கங்கா யாத்திரை செய்து வரும் நோக்கத்தைப்பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஏப்ரல் மாதம் 4-ந் தேதி ஸ்வாமிகள் சுராஜ்புரா என்னும் சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தார்கள். அந்தச் சமஸ்தான மன்னர் ஸ்வாமிகளைத் தக்க மரியாதைகளுடன் வரவேற்று, அவர்களுக்குத் தமது அரண்மனையில் பாதபூஜை முதலியவைகளைச் செய்து வைத்தார். தண்டிபாபாவின் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்வாமிகள் மறுமுறையும் 6-ந் தேதி கஸ்தர் மஹாதேவுக்கு விஜயம் செய்தார்கள். பின்னர் அவ்விடமிருந்து புறப்பட்டுக் காஸிபூரி, பக்ஸார் மார்க்கமாக ஏப்ரல் மாதம் 19-ந் தேதி ஆரா என்னும் நகரத்தை அடைந்தார்கள். அந்த நகரம் காசியிலிருந்து சுமார் 130 மைல்கள் தூரத்திலுள்ளது. அந்த நகரத்திலும் ஸ்வாமிகளுக்குப் பெரிய வரவேற்பு ஏற்பாடு செய்திருந்

தனர். அங்குள்ள மகாமகோபாத்யாய பண்டித சகல் நாராயண சர்மாவும், மற்றும் பல பண்டிதர்களும் ஸ்வாமிகளைத் தரிசிக்க வந்தனர். ஸ்வாமிகள் அவர்களுடன் ஹிந்துஸ்தானி பாஷையில் வெகு எளிதாக உரையாடினார்கள். சாஸ்திர சம்பந்தமான சர்ச்சைகள் எல்லாம் ஹிந்துஸ்தானி பாஷையிலேயே அப்பொழுது நடைபெற்றன. ஸ்வாமிகள் பக்தர்கள் கூட்டத்தில் பக்தியைப் பற்றி அன்று உபன்யசித்தார்கள். தேச பாஷையில் ஸ்வாமிகள் செய்த உபன்யாசம் மக்கள் மனதில் நன்கு பதிந்தது. ஸ்வாமிகளை அவர்கள் வெகுவாகப் புகழ்ந்தனர்.

கோயில்கார்.

1935 ஏப்ரல் 21-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை ஸ்வாமிகள் கோயில்கார் என்னும் க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்தார்கள். அந்தத் தலம் சோன் எனக் கூறப்படும் சோணபத்ரா நதியின் கரையில் அமைந்துள்ளது. அந்த நதி பாட்னா நகரத்திற்கு மேற்கே 20 மைல் தூரத்தில் கங்கையில் சேருகிறது- ஸ்வாமிகள் அந்தப் புண்ணிய நதியில் விதிப்படி சங்கல்பம் செய்துகொண்டு நீராடி, அன்று அவ்வூரில் தங்கி நித்திய பூஜையை முடித்துக்கொண்டார்கள். அந்த நதியின் அடித்தளத்தில் சோணபத்ரம் எனக் கூறப்படும் விநாயகர் உருவங்கள் கிடைப்பதை அறிந்து, ஸ்வாமிகளே தண்ணீரில் மூழ்கி அந்த மூர்த்தங்களை எடுத்தார்கள்; அந்த விநாயக மூர்த்தங்கள் இன்றும் மடத்தின் பூஜையில் வைக்கப்பட்டுள்ளன.

பாட்னா நகரப் பிரவேசம், பீஹார் மக்களின் குதூகல வரவேற்பு.

கோயில்கார் என்னும் ஊரிலிருந்து ஸ்வாமிகள் தானாபூர் மார்க்கமாக 1935 ஏப்ரல் 24உ புதன் கிழமை மாலை பாடலீ புத்ரம் என்று சரித்திரப் புகழ் பெற்றதும் பீஹார் மாகாணத்தின் தலைநகருமான பாட்னாவுக்கு விஜயம் செய்தார்கள். பாட்னா நகரத்தின் வழியே புனிதமான கங்கை நதி ஓடுகின்றது. அத்வா மகாராஜா, அமாவான் மகாராஜா மற்றும் நகரத்தின் பிரமுகர்கள் பலர் சேர்ந்து அன்று ஸ்வாமிகளுக்குப் பெரியதொரு வரவேற்பை அளித்தனர். நகர எல்லையில் ஓர் அலங்கார மான கொட்டகை அமைக்கப் பெற்றிருந்தது. அதில் உயர்ந்த மேடையொன்றும் அமைத்திருந்தார்கள். அந்த மேடையின் மீது ஸ்வாமிகள் சிம்மாசனத்தில் அமர்ந்து, பல்லாயிரக்கணக்கான மக்களுக்குத் தரிசனம் அளித்தார்கள். பல சங்கங்களின் சார்பாக

ஸ்வாமிகளுக்கு வரவேற்புப் பத்திரங்கள் ஹிந்தியிலும், வட மொழியிலும் வாசித்தளிக்கப்பட்டன. இரண்டு மகாராஜாக்களின் துருப்புகள், பரிவாரங்கள், குதிரைப்படைகள் முன் செல்ல, பெரியதொரு ஊர்வலம் நகர எல்லையிலிருந்து புறப்பட்டது. ஸ்வாமிகள் தந்தச் சிவிகையில் அமர்ந்து வீதிகளின் இரு புறங்களிலும் கூட்டங் கூட்டமாக நின்றிருந்த ஜனத்திரளுக்குத் தரிசனம் அளித்து, யாவரையும் ஆசிர்வதித்தார்கள். ஊர்வலம் ஜாகையை அடைந்ததும். மகாராஜாக்களும், பிரமுகர்களும் ஸ்வாமிகளுக்குப் பாதபூஜை செய்தார்கள். ஏப்ரல் மாதம் 26-ந் தேதி ஸ்வாமிகள் பண்டிதர்களின் மகாசபை ஒன்றுக்கு விஜயம் செய்தார்கள். அங்கு மகதம், விதேகம் முதலான தேசங்களின் பண்டிதர்கள் நூற்றுக்கணக்காகக் கூடி ஸ்வாமிகளுக்குப் பூர்ண கும்பம் அளித்து அவர்களை வரவேற்றனர். பாட்னு விஹார பண்டித சமாஜத்தார் அப்பொழுது ஸ்வாமிகளுக்கு ஒரு வரவேற்புப் பத்திரத்தை வட மொழியில் வாசித்தளித்தார்கள். 1935 மே மாதம் 3உ பாட்னு ஹரி சபையின் வேண்டுகோளுக்கிணங்கி அந்தச் சபைக்கு விஜயம் செய்தார்கள். தன் அங்கத்தினர்களின் சார்பாக ஸ்வாமிகளுக்கு அங்குப் பாத பூஜை நடத்தப்பட்டது. ஏப்ரல் 26, 27உ களில் அத்வா மகாராணி ஸ்வாமிகளைத் தரிசித்து சிறந்த முறையில் ஸ்வாமிகளுக்குப் பிக்ஷை முதலான பணிகளைச் செய்து வைத்தார். ஸ்வாமிகளது பாட்னு விஜயத்தைப்பற்றி அந்த ஊரில் வெளியாகும் ஸர்ச்சு லைட் என்னும் ஆங்கிலத் தினசரிப் பத்திரிகை ஏப்ரல் 28உ எழுதிய தலையங்கத்தின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

"Bihar accords a cordial and respectful welcome to Jagadguru Swami Sankaracharya of Kamakotipitam. Heir to a great and honoured tradition, Swamiji Maharaj is an object of veneration to Hindus all over India and his presence in our midst is a rare privilege. Religious leadership is on the wane in these modern days but there is something truly majestic and inspiring in some of these traditions of old that had their roots in the spiritual needs and requirments of the people. The many Pitas established in India served a definite purpose and were parts of the closely knit religious organisation of the times. We have no doubt Swamiji's message will leave an abiding impression

on all who receive it, for what he has to say is the result of study and Tapas."

1935-ஆவது வருடத்திய சங்கர ஜயந்தியை ஸ்வாமிகள் பாட்னுவிலுள்ள அத்வா மகாராஜாவின் அரண்மனையில் நடத்தினார்கள். அப்பொழுது பெரிய பண்டித சபை ஒன்று கூட்டப்பட்டது. ஆதி சங்கரர் பிறந்த நாளாகிய மே மாதம் 7உ செவ்வாய்க் கிழமை அன்று கங்கைக் கரையிலுள்ள பாகீரதி கட்டத்திற்கு ஓர் பெரிய ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மடத்தின் கம்பீரமான ஆண் யானையின்மீது ஆதி சங்கரரின் திருஉருவப் படத்தையும், ஆசார்ய பாதுகைகளையும் வைத்து மடத்தின் ஜாகையிலிருந்து வேத கோஷத்துடனும், மடத்தின் நாதஸ்வர கோஷத்துடனும் பெரியதோர் ஊர்வலம் புறப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். ஸ்வாமிகள் ஊர்வலத்துடன் கால்நடையாகவே வந்துகொண்டிருந்தார்கள். ஊர்வலம் கங்கைக்கரையை அடைந்ததும் அவ்விடம் ஆசார்ய பாதுகைகளுக்கு அபிஷேகம் நடைபெற்றது. அந்த அபிஷேகத்தைக்காண மக்கள் கூட்டங் கூட்டமாக அங்குக் கூடியிருந்தனர். பின்னர் ஊர்வலம் திரும்பி ஜாகையை அடைந்ததும், ஆதி சங்கரரது திருவுருவப் படத்திற்கும், பாதுகைகளுக்கும் பூஜை, ஆராதனைகள் செய்விக்கப்பட்டன. ஆதி சங்கர பகவத்பாதரது ஜனனத்தைப் பற்றி, ஸ்வாமிகள் ஹிந்துஸ்தானி பாஷையில் சொற்பொழிவாற்றினார்கள். வித்வான்களுக்கெல்லாம் பரிசுகள் வழங்கப்பட்டன. சங்கர ஜயந்தி சம்பந்தமான எல்லாச் செலவுகளையும் டிகாரி மகாராஜா ஏற்றுக்கொண்டார். மறு நாள் பாட்னா பண்டித சபையார் சுவாமிகளுக்குப் பிக்ஷை, பாதபூஜை இவைகளை நடத்திவைத்தார்கள்.

பாட்னுவில் சங்கர ஜயந்தி உத்ஸவம்.

பாட்னுவில் மாஜி ஹைக்கோர்ட்டு ஜட்ஜ் சடர்ஜியும், ஹைக்கோர்ட்டின் பிரதம நீதிபதியும், மற்ற நீதிபதிகளும், பிரதம இன்ஜினீயர், மற்றுமுள்ள சர்க்கார் அதிகாரிகளும் பாபு ராஜேந்திர பிரசாத் குடும்பத்தினரும் ஸ்வாமிகளைத் தரிசித்துக் கொண்டனர். அக்காலத்தில் அங்கு மராமத்து இலாகா உத்தியோகம் வகித்துவந்த திருவிடைமருதூர் வாசியான ராவ் சாகேப் ஆர். மகாலிங்கம் ஐயர் மடத்திற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்துகொடுத்தார்.

இப்பொழுது ஓய்வு பெற்றிருக்கும் அவர் திருவிடைமருதூரில் மடத்தின் காரியங்களில் ஈடுபட்டுச் சலியாது உழைத்துவருகிறார்.

ஸ்வாமிகள் பாட்னாவை விட்டுப் புறப்பட்டு 1935 மே மாதம் 11உ ஹரிஹர க்ஷேத்திரத்தை அடைந்தார்கள்; இந்த க்ஷேத்திரம் கங்கையின் வடகரையில் அமைந்துள்ளது. இவ்விடம் கூடும் வாரச்சந்தையில் நமது நாட்டில் மாடுகள் விற்பனைக்கு வருவதுபோல், யானைகள் ஏராளமாக விற்பனைக்கு வரும். அவ்விடம் கண்டகி நதியில் முறைப்படி ஸ்வாமிகள் நீராடினார்கள். மறு நாள் புன்புன் என்னும் தலத்தில், புண்ணிய நதியாகிய புன்புனாவில் ஸ்நானம் செய்தார்கள். பின்னர் டேஹடா என்னும் சிறியதொரு கிராமத்திற்கு விஜயம் செய்தார்கள். அந்த ஊர் கிழக்கிந்திய ரயில்வேயிலுள்ள ஒரு சிறிய நிலையம். அன்று நரசிம்ம ஜயந்தீ ஆதலால் மடத்தில் விசேஷ ஆராதனையும் பானக பூஜையும் நடைபெற்றன. பஞ்ச கௌடர்களில் ஒரு பிரிவான கன்யாகுப்ஜ பிராமணர்கள் அவ்வூரில் ஸ்வாமிகளை சிறப்புடன் வரவேற்றுப் பாதபூஜை முதலியவைகளை நடத்தி வைத்தார்கள். அவர்களில் ஸ்ரீ மாதவ மிச்ரா என்பவராலும், அவர்கள் சகாக்களாலும் பிரத்யேகமாக தயாரிக்கப்பட்ட ஒரு புஷ்ப விமானத்தில் ஸ்வாமிகள் அமர்ந்து ஊர்வலமாக வந்தார்கள். குரு பீடத்தின் ஆசார்ய புருஷர்கள் இவ்விதம் வருவதை அதுவரை கண்டிராத அந்தக் கிராம மக்களுக்கு ஸ்வாமிகளின் வரவு பெரு மகிழ்ச்சியை உண்டாக்கிற்று. ஆண், பெண் அடங்கலாக அவ்வூர்வாசிகள் யாவரும் ஸ்வாமிகளுக்குத் தங்களாலான பணிகளைச் செய்தார்கள். பின்பு, சில கிராமங்களின் வழியாக கயா க்ஷேத்திரத்தை நோக்கி ஸ்வாமிகளின் விஜய யாத்திரை தொடங்கிற்று. பாட்னாவிலிருந்து கயா நகரம் தெற்குத் திசையில் சுமார் 65 மைல் தூரத்திலுள்ளது.

கயா க்ஷேத்திர யாத்திரா மார்க்கம். கண்டகி நதி ஸ்நானம்.

1935-ஆவது வருடம் மே மாதம் 20உ ஸ்வாமிகள் கயா க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்தார்கள். அந்த நகரத்தின் எல்லையில் டிக்காரி மகாராஜாவும் தலத்தின் மகந்துக்களும், புரோகிதர்களும், கயாவாசிகளும், மற்றுமுள்ள ஊர் மக்களும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் ஸ்வாமிகளை மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்று டிக்காரி மகாராஜாவின் அரண்மனைக்கு ஊர்வலமாக அழைத்துச்

கயா க்ஷேத்திரத்திற்கு விஜயம்.

சென்றார்கள். ஏராளமான ஜனத்திரள் ஸ்வாமிகளைத் தரிசிக்க வீதிகளில் முழுவதும் கூடியிருந்தனர். ஸ்வாமிகள் அந்தத் தலத்தை அடைந்ததும் பல்குனி நதியில் ஸ்நானம் செய்து, விஷ்ணு பாதங்களைத் தரிசித்து அவைகளைத் தமது தண்டத்தினால் தொட்டு வணங்கிப் பூஜை முதலிய வழிபாடுகளையெல்லாம் செய்தார்கள். அன்றும் மறுநாளும் ஸ்வாமிகள் டிக்காரி மகாராஜாவின் அரண்மனையிலேயே தங்கியிருந்தார்கள். ஸ்வாமிகளின் பூஜைக்கும், பரிவாரங்களுக்கும் எல்லாவித வசதிகளையும் அத்தலத்தின் பிரதான மகந்து செய்து கொடுத்து ஸ்வாமிகளுக்கும் பாதபூஜை செய்தார். மே மாதம் 22உ ஸ்வாமிகள் காசீநாத் சிம்ஹா என்னும் பிரமுகருடைய ஆனந்தபவனம் என்று பெயர் பெற்று விளங்கும் விசாலமான அரண்மனைக்கு அவர்கள் விஜயமானார்கள். அவ்விடம் கயா ஸநாதன தர்ம சபையார் ஸ்வாமிகளுக்கு ஓர் வரவேற்புப் பத்திரத்தை வாசித்தளித்தனர். அந்த வரவேற்புக்கு ஸ்வாமிகள் ஹிந்துஸ்தானியில் பதிலளித்தார்கள். அன்று முக்ஸூபுரம் மகாராஜா ஸ்ரீ சந்திரேச்வர பிரஸாத் ஸ்வாமிகளைத் தரிசித்துப் பாதபூஜை நடத்தினார்.

1935 மே மாதம் 25உ சனிக்கிழமை ஸ்வாமிகள் புத்த கயாவுக்கு விஜயம் செய்தார்கள். புத்த கயாவின் ஆலய நிர்வாகியான மகந்து ஸ்வாமிகளைத் தக்க மரியாதையுடன் வரவேற்று, நகரத்தின் முக்கியமான வீதிகளின் வழியாக ஊர்வலத்துடன் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார். அவ்விடமுள்ள புராண பிரசித்தி பெற்ற போதி விருக்ஷத்தையும், புத்தரது சிலையையும் தரிசித்துவிட்டு, அவைகளுக்கு முன்பாக ஸ்ரீ ஆதி சங்கரரால் ஸ்தாபிக்கப்பட்ட சிவ லிங்கத்தையும் தரிசித்துக்கொண்டார்கள். அதற்கடுத்த நாளும் ஸ்வாமிகள் புத்தகயாவிலேயே தங்கினார்கள். அன்று ஸ்வாமிகள் பல்குனி நதியைக் கடந்து தர்மாரண்யத்தை அடைந்து, அவ்விடம் மதங்க தீர்த்தத்தில் சங்கல்பம் செய்துகொண்டு ஸ்நானம் செய்தார்கள். அவ்விடமுள்ள மதங்கேசுவரர் ஆலயத்திலும் ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டு, தர்மகூபத்தையும் (கிணறு) தர்மயூபத்தையும் (யாகத்தூண்) தமது தண்டத்தினால் தொட்டு வணங்கினார்கள். புத்த கயாவிலிருந்து திரும்பி ஸ்வாமிகள் மே 27உ கயைக்குச் சென்று 28உ அக்ஷய வட (ஆலமரம்) தரிசனத்தை செய்துகொண்டார்கள். அவ்விடம் முதுகு மாத்திரம்

புத்த கயாவுக்கு விஜயம் செய்தது.

காணும் முண்ட பிரஷ்ட சிலையையும் தமது தண்டத்தினுல் தொட்டு வணங்கினுர்கள்.

1935 ஜூன் மாதம் 4௳ ஸ்வாமிகள் புதோலி கிராமத்தை அடைந்து, அவ்விடமுள்ள மகந்தினுல் உபசரிக்கப்பட்டு அங்கு 3 நாட்கள் தங்கியிருந்தார்கள். அடுத்த முகாம் டோடா மடத்தில் போடப்பட்டது. அந்த மடத்தின் மகந்தும் ஸ்வாமிகளுக்குப் பலவித உபசரணைகளைச் செய்து மடத்தின் பரிவாரங்கள் தங்குவதற்கு விசேஷ ஏற்பாடுகளைச் செய்துகொடுத்தார். பின்னர் நவாடா, சிகந்திரா மார்க்கமாக 11௳ ஜமுயி நகரத்திற்கு ஸ்வாமிகள் விஜயமானுர்கள். அவ்விடம் ஸ்ரீ சிவஸோஹ்ன தலைமையில் நகரப் பிரமுகர்கள் ஸ்வாமிகளுக்குத் தக்கவாறு மரியாதைகள் செய்தார்கள். பின்னர் 14௳ கிதோர் என்னும் பட்டணத்திற்கு விஜயமானுர்கள். அந்தப் பட்டணம் அதன் பெயராலுள்ள சுதேச சமஸ்தானத்தின் தலைநகரமாகும். க்ருக்ரகூடம் என்று அதற்கு மற்ருெரு பெயரும் உண்டு. அந்தச் சமஸ்தானத்தின் மகாராஜா ஸ்வாமிகளை இராஜ மரியாதைகளுடன் தமது அரண்மனைக்கு அழைத்துச் சென்று பாதபூஜை முதலான வந்தன வழிபாடுகளையெல்லாம் செய்தார். அரண்மனையின் சமஸ்தான பண்டிதர்களால் ஸ்வாமிகளுக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

பிகார் மாகாணத்தின் வழியாக யாத்திரை.

பீஹார் மாகாணத்திலுள்ள இந்த க்ஷேத்திரம் பாரத நாட்டில் பழமையானதொரு ஸ்வயம்பூ க்ஷேத்திரம்; இத்தலத்தைத் தேவ்கர் எனக் கூறுகின்றனர். தேவ்கர் என்னும் சொல்லுக்கு கடவுளது வீடு என்பது பொருள் இப்புனிதத் தலத்திற்கு ஸ்வாமிகள் 1935 ஜூன் மாதம் 21௳ வெள்ளிக்கிழமை அன்று விஜயமானுர்கள். ஸ்வாமிகள் ஊர்வலத்துடன் நகரத்தில் பிரவேசித்து, அங்குள்ள சமஸ்கிருத வித்யாலயத்திற்கு முதலில் விஜயம் செய்தார்கள். அவ்விடத்தில் ஸ்வாமிகளுக்கு நகர மக்களும், பண்டிதர்களும், தேவஸ்தான நிர்வாகிகளும், பண்டாக்களும் வரவேற்புப் பத்திரங்களை வாசித்தளித்தார்கள். ஸ்வாமிகள் யாவருக்கும் ஆசி கூறி விடை கொடுத்து அனுப்பிவிட்டு, அத்தலத்தின் புண்ணிய தீர்த்தமாகிய சிவகங்கையில் விதிப்படி நீராடினுர்கள்.

வைத்யநாத க்ஷேத்திரத்திற்கு விஜயம்.

பின்னர் ஸ்வாமிகள் வைத்யநாதர் ஆலயத்திற்கு விஜயம் செய்தார்கள். ஆலய நிர்வாகிகளும், பண்டாக்களும் ஸ்வாமிகளைத் தேவஸ்தான மரியாதைகளுடன் எதிர்கொண்டு ஆலயத்தினுள் அழைத்துச் சென்றார்கள். ஸ்வாமிகள் அவ்வாலயத்தின் லிங்கத்தைத் தரிசித்து வெகு நேரம் தியானத்தில் இருந்தார்கள். இவ்வாலயத்தின் அம்பிகையாகிய கிரிஜா தேவியின் சந்நிதானத்தையும் ஸ்வாமிகள் தரிசித்துக்கொண்டார்கள். எல்லாச் சந்நிதிகளுக்கும் ஸ்வாமிகள் பட்டு, பீதாம்பரங்களை வழங்கி அலங்கரிக்கச் செய்தார்கள். அன்று ஆலயத்தில் விசேஷமாகப் பூஜைகள், அர்ச்சனைகள் நடைபெற்றன. அன்று மாலை தலத்தின் பண்டிதர்களுக்கும், தேவஸ்தான பண்டாக்களுக்கும் ஸ்வாமிகள் சால்வை முதலான மரியாதைகளைச் செய்தார்கள். அதற்கு மறு நாள் ஸ்வாமிகள் அவ்வூரிலுள்ள ஸ்வர்க்காச்ரமத்திற்கு விஜயம் செய்தார்கள். அந்த ஆச்ரமமானது பாலானந்தபிரும்மசாரி என்பவரால் ஸ்தாபனம் செய்விக்கப்பட்டது. அவர் ஸ்வாமிகளைத் தமது ஆச்ரமத்திற்கு வரவழைத்துப் பாதபூஜை முதலான மரியாதைகளைச் செய்தார். அவர் ஸ்வாமிகளுக்குக் கௌரீசங்கர ருத்ராக்ஷ மாலை ஒன்றையும் சமர்ப்பணம் செய்தார். அந்தப் பிரும்மசாரி ஸ்வாமிகளைக் கடவுளது அம்சமெனவே நினைத்து அவர்களுக்குப் பக்தியுடன் நடத்திய வழிபாடுகளைக் கண்டு அத்தேச மக்கள் பரவசமடைந்தார்கள்.

வைத்யநாத க்ஷேத்திரத்திலிருந்து கல்கத்தா தென் கிழக்கில் சுமார் 250 மைல்கள் தூரத்திலுள்ளது. அந்த வருஷ வியாஸ பூஜையை ஸ்வாமிகள் கல்கத்தா நகரத்தில் நடத்துவதெனத் தீர்மானித்திருந்தார்கள். மேலும் நாட்கள் 23 தான் இருந்தன. நாள் ஒன்றுக்கு 20 மைல்களுக்கு மேல் யாத்திரை செய்து கல்கத்தாவைக் குறித்த காலத்திற்குள் அடைய முன்னேற்பாடுகள் செய்யப்பட்டன. இந்த ஏற்பாட்டின்படி எந்த ஊரிலும் ஒரு நாள்கூட முழுவதும் தங்கமுடியவில்லை. ஆங்காங்கு மக்கள் அளித்த வரவேற்புக்களையும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அன்றாடம் பூஜைக்கு மாத்திரம் ஒவ்வொரு இடத்தில் தங்கிப் பூஜையை முடித்துக்கொண்டு வெயில் சாய்ந்ததும் பிரயாணத்தைத் தொடங்க வேண்டியிருந்தது. அந்த மார்க்கத்தில் ஸ்வாமிகள் விஜயம் செய்த முக்கிய இடங்களில் டும்கா, சூரி, காட்வா, பர்த்துவான் இவைகளைக் குறிப்பிடலாம்.

1935 ஜூலை 13உ சனிக்கிழமை ஸ்வாமிகள் ஹூக்ளி எனக் கூறப்படும் பாகீரதி நதியின் தென்கரையில் உள்ள ஹௌராவுக்கு விஜயம் செய்தார்கள். அங்கு நகரப் பிரமுகர்கள் ஏராளமாகக் கூடி ஸ்வாமிகளை வரவேற்றார்கள். நகரத்தி லுள்ள வங்க மக்களுடன், கல்கத்தாவில் குடி யேறியிருக்கும் குஜராத்திகள், மகாராஷ்டிரர் கள், ஹிந்துஸ்தானிகள், மார்வாடிகள் தென் னிந்தியர்களான ஆந்திர, திராவிட, கேரள, கர்னாடிக நாட்டு மக்க ளும் மிகுந்த ஒற்றுமையுடனும், உற்சாகத்துடனும் இருந்து ஸ்வாமி களின் வரவேற்பில் பணியாற்றினார்கள். நகர சபை அங்கத்தினரான வஸந்தகுமார் என்பவராலும், மற்றும் சில பிரமுகர்களாலும் புஷ்ப அலங்காரத்துடன் வெகு அழகாகத் தயாரிக்கப்பட்டிருந்த பிரத்யே கமான சிவிகையில் ஸ்வாமிகள் அமர்ந்து நகரத்தின் பிரதான வீதி களின் வழியே சென்றார்கள். இந்தியாவின் நகரங்களுக்குள் பெரிய நகரமாக விளங்கும் கல்கத்தாவின் வீதிகளின் இருபுறங்களிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் நின்று ஸ்வாமிகளைத் தரிசித்தார்கள். போலிஸ் படைகள் ஊர்வலத்தில் பின் தொடர்ந்து கூட்டத்தைச் சமாளித்து யாவரும் ஸ்வாமிகளை நன்கு தரிசிக்க ஏற்பாடு செய்தனர். அன்று பகலில் ஸ்வாமிகள் ஹௌராவில் தங்கி யிருந்து, அன்று இரவு கங்கையைக் கடந்து அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத்தின் காரியலாயத்திற்கு விஜயம் செய்தார்கள். அந்தச் சங்கத்தார் ஸ்வாமிகளுக்கு அப்பொழுது ஒரு வரவேற்புப் பத்திரத்தை வாசித்தளித்தார்கள். அங்கு ஆயிரக் கணக்கான மக்கள் கூடியிருந்தனர். அவர்களில் சுதேச சமஸ்தான மன்னர் சிலரும், அரசாங்க உயர்தர அதிகாரிகள் பலரும், பத்திரிகைப் பிரதிநிதிகள் பலரும் காணப்பட்டனர். காளி கட்டத்தில் ஆதி கங்கைக் கரையில் அமைந்துள்ள நாட்டுக் கோட்டை நகரத்தார் விடுதிக்கு ஸ்வாமிகள் அன்று இரவு விஜய மானார்கள். ஸ்வாமிகளின் கல்கத்தா நகர விஜயத்தைப் பற்றிய செய்திகளை நகரத்தின் ஆங்கிலத் தினசரிகளும், வங்காளி, ஹிந்திப் பத்திரிகைகளும் விரிவாக வெளியிட்டன.


கல்கத்தா நகரப் பிரவேசம், மக்களின் குதூகல வரவேற்பு.

1935-ஆவது ஆண்டு ஜூலை மாதம் 16உ செவ்வாய்க் கிழமை யுவவருடத்திய ஆஷாட சுக்ல பூர்ணமி அன்று நிகழ்ந்த வியாஸ பூஜையைக் கல்கத்தா காளி கட்டத்திலுள்ள நகரத்தார் சத்திரத்தில்

கல்கத்தாவில் 1935 வது வருட வியாஸ பூஜை.



13-7-1935-ல் கல்கத்தாவில் நகர மக்கள் அளித்த வரவேற்பு
ஸ்வாமிகள் ஊர்வலமாக நகரத்தில் பவனிவரும் காக்ஷி



13-7-1935 கல்கத்தா பொதுமக்கள் அளித்த வரவேற்பின் மாபெரும் கூட்டத்தின் ஒரு பகுதி 264

ஸ்வாமிகள் நடத்தினார்கள். அன்று காலை ஸ்வாமிகள் வபனம் செய்துகொண்டு, கங்கையில் நீராடி, வழக்கமாக அன்று பூஜைக்குப் பிரதிஷ்டை செய்யப்படும் ஸ்ரீகிருஷ்ணவிக்ரகத்துடன் ஊர்வலமாக ஜாகைக்கு வந்து சேர்ந்தார்கள். தமிழ் நாட்டின் முக்கிய தேவாலயங்களிலிருந்தும், காசி, கயை முதலிய வடநாட்டுத் தேவாலயங்களிலிருந்தும், பிரசாதங்களும், சமஸ்தானங்களிலிருந்து மரியாதைகளும் பிரதிநிதிகள் மூலம் அன்று ஸ்வாமிகளுக்குச் சமர்ப்பணம் செய்விக்கப்பட்டன; ஸ்வாமிகள் அவைகளையெல்லாம் பூஜையில் அமர்ந்திருந்தவாறே ஏற்றுக்கொண்டார்கள். பூஜை முடிந்ததும் பண்டிதர்கள் பிரம்ம சூத்திரத்தில் வாக்கியார்த்தம் நடத்தினார்கள். மறுநாள் பண்டிதர்களுக்குச் சன்மானங்கள் அளிக்கப்பட்டன. அன்று முதல் சாதுர்மாஸ விரதத்திற்காக ஸ்வாமிகள் கல்கத்தாவிலேயே தங்கியிருந்தார்கள்.

1935 ஜூலை 19௳ சனிக்கிழமை அன்று ஸ்வாமிகள் சிறந்ததோர் பக்தரான தாமோதர தாஸ் கன்னு அவர்களது தேவி மந்திரத்திற்கு விஜயம் செய்தார்கள். அவ்விடம் மகாமகோபாத்யாய சீதாராம சாஸ்திரிகள் முதலான பிரபல பண்டிதர்களால் வரவேற்புப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன. ஆகஸ்ட் மாதம் 2௳ சனிக்கிழமை கல்கத்தா தேவாலயப் பாதுகாப்புச் சங்கம், மார்வாடி மகாஜன சபை, விசுத்தானந்த வித்யாலயத்தின் நிர்வாக சபை இவைகளால் ஸ்வாமிகளுக்குப் பாதபூஜை செய்விக்கப்பட்டது. அன்று மாலை ஸ்வாமிகள் அந்த வித்யாசாலைக்கு விஜயம் செய்தார்கள். அங்கு மகாமகோபாத்யாய துர்க்கா சரன் அவர்களால் ஸ்வாமிகளுக்கு வடமொழியில் ஓர் வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. அப்பொழுது நூற்றுக்கணக்கான பண்டிதர்கள் விஜயம் செய்திருந்தனர். ஸ்வாமிகளின் பூஜைக்கென வெள்ளி கட்டிய வலம்புரிச் சங்கு ஒன்றைப் பண்டிதர்கள் காணிக்கையாக அளித்தார்கள். ஆகஸ்ட் 7௳ ஸ்வாமிகள் பக்தர்களின் அழைப்புக்கு இணங்கி, ரதன் சர்க்கார் கமுரார் லால் மேத்தா நகர சமாஜ மண்டபத்திற்கு விஜயம் செய்தார்கள். சமாஜ கட்டிடத்தில் அப்பொழுது ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூடியிருந்தார்கள். சமாஜத்தின் பிரதிநிதிகளான முர்ட வீதியிலுள்ள கிரிதர்லால் முதலான பிரமுகர்கள் ஸ்வாமிகளை வரவேற்றனர். ஸ்வாமிகள்

கல்கத்தாவில் பல சங்கங்களுக்கு விஜயம் செய்தது.

அங்கு அவர்களுக்கென அமைக்கப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்தவுடன் அவர்களுக்கு வங்காள பாஷையில் ஓர் வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. ஸ்வாமிகள் ஸமஸ்கிருதத்திலும், ஹிந்தியிலும் அந்த உபசாரத்திற்குப் பதில் அளித்து, ஹிந்துவாகப் பிறந்த ஒவ்வொருவரும் அவரவர்களது சுயதர்மத்தைக் கைவிடாது ஆஸ்திகத்தை வளர்க்க வேண்டுமென்றும், குழந்தைகளுக்கு நல்ல வழியில் பயிற்சியளிக்க வேண்டுமென்றும் கூறினார்கள். ஆகஸ்ட் மாதம் 23உ வெள்ளிக்கிழமை விதேக தேசத்திலிருந்தும், சௌராஷ்டிர ராஜ்யத்திலுள்ள சோமநாத் க்ஷேத்திரத்திலிருந்தும், மிதிலா தேசத்திலிருந்தும் மிகவும் பிரசித்தி பெற்ற பண்டிதர்கள் பலர் ஸ்வாமிகளைத் தரிசிக்கக் கல்கத்தாவுக்கு விஜயம் செய்து அவர்களைக் காளி கட்டத்தில் தரிசித்து, தங்கள் தேசங்களுக்கெல்லாம் ஸ்வாமிகள் விஜயம் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டனர். அப் பிரார்த்தனையை விஞ்ஞாபனம் மூலம் எழுதியும் ஸ்வாமிகளிடம் சமர்ப்பணம் செய்தார்கள். ஸ்வாமிகளோ அந்தத் தேசங்களுக்கெல்லாம் வரவேண்டுமென்ற அவா தமக்கு இருப்பதாகவும், ஆனால் இந்த யாத்திரையில் அவ்விடங்களுக்கெல்லாம் விஜயம் செய்யும் முன்னேற்பாடுகள் எதையும் தாம் செய்துகொள்ளாததால், பின்னர் அவ்விஷயத்தை ஆலோசிப்பதாயும் கூறினார்கள். அந்தப் பண்டிதர்களுக்கெல்லாம் ஸ்வாமிகள் காஷ்மீர் சால்வைகள் அளித்து மரியாதை செய்து அவர்களைப் பெருமைப்படுத்தினார்கள்.

1935 செப்டம்பர் மாதம் முதல் தேதி கல்கத்தா காளி கோவிலின் தேவஸ்தான தர்மகர்த்தர்கள் ஸ்வாமிகளுக்கு ஓர் வரவேற்பை அளித்தார்கள், பக்தர்கள் அங்கு ஆயிரக் கணக்கில் கூடியிருந்தனர். அம்பிகைக்கு ஆடுகளை பலியிடக் கூடாதென்று ஓர் இயக்கமானது அப்பொழுது கல்கத்தாவில் ஒரு சிலரால் தோற்றுவிக்கப்பெற்றது. அந்த இயக்கத்தில் பங்கெடுத்துக்கொண்டவர்கள் ஒவ்வொரு நாளும் தேவியின் ஆலயத்திற்கு முன்னர் சத்தியாக்கிரகமும், மறியலும் செய்யத் தொடங்கினர். தொன்றுதொட்டுப் பலியிடும் வழக்கமானது அவ்வாலயத்தில் இருந்து வந்திருக்கிறது. ஆடுகளைப் பலியிடுவதில் நம்பிக்கை கொண்ட பெரும்பாலான பொதுமக்கள் இவ்வியக்கத்தைக் கண்டு கவலையுற்றனர். அதனால் அதற்கு ஒரு எதிர்ப்பு இயக்கமும்

காளி தேவியின் ஆலயத்தில் நடைபெற்ற பெரிய வரவேற்பு.

கிளம்பிற்று. எவ்வித விபரீதச் செயல்களும் அப்பொழுது நடை பெருமலிருக்க அரசாங்கத்தார் மிக நிதானத்துடன் நிலைமையைச் சமாளித்து வந்தனர். அன்று ஸ்வாமிகளுக்கு வடமொழியிலும், வங்காளி பாஷையிலும், ஆங்கிலத்திலும் உபசாரப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன. தேவாலயத்தின் தர்மகர்த்தர்கள், பூஜகர்கள், இவர்களின் சார்பாக அந்த வரவேற்பை 'தர்சனசாகர்' ஸ்ரீ குருபாத சர்மா ஹால்தார் வாசித்தளித்தார். அந்த வரவேற்பில் ஆதி சங்கரர் முதலில் சிருங்கேரி, பூரி, துவாரகை, பத்ரி, (ஜோதிர் மடம்) இவ்விடங்களில் நான்கு மடங்களை ஸ்தாபித்து அவைகளில் முறையே சுரேச்வரர், பத்மபாதர், ஹஸ்தாமலகர், தோடகர், இவர்களை நியமித்துப் பின்னர் காஞ்சியை அடைந்து அங்கு சர்வக்ஞபீடம் ஏறி, காஞ்சீ என்னும் மத்ய ஸ்தானத்தில் தமக்கென ஒரு மடத்தை ஸ்தாபனம் செய்துகொண்டார்களென்றும். அதுவே இன்று காஞ்சி காமகோடி பீடம் என்று பாரத பூமி முழுவதும் பிரசித்தி அடைந்துள்ள தென்றும், தற்காலத்தில் அந்தப் பீடத்தை அலங்கரிக்கும் மகானுகிய ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஆதி சங்கரரைப் போலவே கால் நடையாகப் பாரத தேசத்தில் விஜய யாத்திரையை மேற்கொண்டுள்ளார்களென்றும், நாட்டில்தோன்றியுள்ள நாஸ்திகத்தை ஒழித்து ஆஸ்திகத்தைப் பரவச்செய்து இந்த விஜய யாத்திரையைக் கூடிய சீக்கிரம் பூர்த்திசெய்துகொண்டு பரமேச்வரரது அனுக்ரகத்தினுலும் மகா காளியின் வரப்பிரசாதத்தினுலும் ஸ்வாமிகள் வெற்றிக்கொடியுடன் காஞ்சியை அடைய வேண்டுமென்றும் கோரப்பட்டிருந்தது.

இந்த உபசாரப் பத்திரமானது ஸ்வாமிகள் காளி கட்டத்திற்கு விஜயம் செய்த உடனடியாக ஏன் அளிக்கப்படவில்லை என்னும் கேள்வியை எழுப்பி அதற்கு விடையளிக்கும் வகையில், வண்டுகள் முதலில் சிறிது நேரம் புஷ்பங்களைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டே வருமென்றும், பின்னர் புஷ்பத்தின் மேல் உட்காரும் என்றும், அதன் பின்னரே புஷ்பத்திலுள்ள தேனை முகர்ந்து அதைப் பருகி அதன் சுவையை அனுபவிக்கும் என்றும், அதுபோலவே அவர்கள் படிப்படியாக ஸ்வாமிகளது பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்களென்றும், அந்த உபசாரப் பத்திரத்தில் அழகாகக் கூறப்பட்டிருந்தது.

அந்த உபசாரத்திற்கு ஸ்வாமிகள் ஹிந்தியிலும், வங்காளியிலும் பதிலளிக்கையில் தேவலாய நிர்வாகஸ்தர்கள் தமக்குச் செய்த உபசாரங்களையெல்லாம் ஆதி சங்கரபகவத் பாதருக்கே செய்ததாகத் தாம் ஏற்றுக்கொள்ளவதாகக் கூறி எல்லோரையும் ஆசீர்வதித்தார்கள். மேலும் காளி மந்திரத்தில் ஆடு பலியிடும் சம்பந்தமாக சத்தியாக்ரமும் மறியலும் நடைபெறுவதைக் குறிப்பிட்டு ஸ்வாமிகள் பேசிய பொழுது, தேவிக்கு அர்ப்பணமாகப் பலியிடும் வழக்கம் நமது நாட்டில் வெகு காலமாக இருந்து வருகிறதென்றும், சாஸ்திரங்களிலுள்ள நம்பிக்கையினாலேயே புலால் உண்ணும் சமூகத்தைச் சார்ந்த மக்கள் இந்த வழக்கத்தை மேற்கொண்டுள்ளார்களென்றும், இவ்விதம் பலியிடுவதால் பலியிடுவோருக்கும் பலியிடப்படும் பிராணிகளுக்கும் நன்மையே ஏற்படுமென்பது சாஸ்திரங்கள் அனுமதித்துள்ள உண்மையென்றும் கூறி, ஜீவஹிம்சை தடுப்பில் அக்கரைகொண்டவர்கள் ஆகாரத்திற்கெனக் கோடிக்கணக்காக உயிர்ப் பிராணிகள் உலகெல்லாம் அன்றாடம் கொல்லப்படுவதைத் தடுக்க ஏன் முயற்சிக்கக் கூடாதென்றும் வினவினார்கள். சாஸ்திரங்களில் நம்பிக்கைவைத்திருக்கும் ஆஸ்திகர்களுக்கு எதிராக நடத்தப்படும் இயக்கமாக இஃது இருப்பதால், இதைத் துவக்கி வைத்தவர்களின் எண்ணம் எவ்வாறாக இருந்தபோதிலும், இந்த இயக்கத்தைத் தாம் ஆதரிக்க முடியாதென ஸ்வாமிகள் மேலும் தமது அபிப்ராயத்தைத் தெரிவித்தார்கள்.

1935 செப்டம்பர் 4உ கல்கத்தா ஹைகோர்ட்டு ஜட்ஜ் மன்மதநாத் முகர்ஜி ஸ்வாமிகளுக்கு பிக்ஷை, பாத பூஜை முதலியவற்றைச் செய்து வைத்தார். செப்டம்பர் 12உ வியாழக்கிழமை சாதுர்மாஸ சங்கல்பம் முடிவடைந்தது. அன்று ஸ்வாமிகள் கங்கையைக் கடந்து ஊர்வலத்துடன் நகரத்தை அடுத்துள்ள அகர் என்னும் கிராமத்திற்கு விஜயம் செய்தார்கள். அவ்விடம் சிவராம் க்ருஷ்ண என்பவரது ஜாகையில் அவர்கள் தங்கியிருந்தார்கள். அந்தக் கிராம மக்கள் மிகுந்த மரியாதைகளுடன், ஸ்வாமிகளை வரவேற்றுப் பாதபூஜை முதலியவைகளைச் செய்து வைத்தார்கள். அதை அடுத்து பர்த்வான் மகாராஜாவும், நாடோர் மகாராஜாவும் ஸ்வாமிகளுக்குப் பிக்ஷை. பாதபூஜை முதலியவைகளை நடத்தினார்கள். செப்டம்பர் மாதம் 14உ சனிக்கிழமை ஸ்வாமிகள் மகா

கல்கத்தா பிரமுகர்கள் செய்த விசேஷப் பணிகள்.

மகோபாத்யாய என். எஸ். அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள் ஜாகையில் தங்கி, அவர் அளித்த பிக்ஷையை ஏற்றுக்கொண்டார்கள். அன்று கல்கத்தா அரசாங்க சமஸ்கிருத கலாசாலையின் தலைவர் துவாரக்நாத் மித்தர் முதலான பல பிரசித்திபெற்ற பண்டிதர்கள் ஸ்வாமிகளுக்கு வடமொழியில் உபசாரப் பத்திரங்களை வாசித்தளித்தார்கள். செப்டம்பர் மாதம் 18உ ஸ்வாமிகள் பட்டபள்ளி என்னும் கிராமத்திற்கு விஜயமானார்கள். அந்தக் கிராமம் சாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்ற பண்டிதர்கள் பலர் வசிக்குமிடம். இது பாகீரதி நதியின் கரையில் அமைந்துள்ளது. அங்கு ஐந்து சிவாலயங்களின் நடுவில் பெரியதோர் அலங்காரக் கொட்டகை அமைத்து அதில் ஸ்வாமிகளை வரவேற்றுப் பண்டித சபையார் தாங்கள் தயாரித்த வரவேற்பிதழ்களை வாசித்துக்கொடுத்தனர். வேதங்களையும், தருமங்களையும் பிரசாரம் செய்வதற்குப் பண்டிதர்கள் எடுத்துக் கொள்ளவேண்டிய முயற்சிகளைப் பற்றி ஸ்வாமிகள் அன்று சில உபதேச மொழிகளைக் கூறினார்கள். செப்டம்பர் மாதம் 19உ ஸ்வாமிகள் நவத்வீபத்தைச் சார்ந்த காஞ்சன்பள்ளி என்னும் இடத்தில் நிறுவப்பட்டிருக்கும் கோசாலையைப் பார்வையிட்டார்கள். அப்பொழுது அங்கு ஒரு கோ பூஜையும் நடைபெற்றது. செப்டம்பர் 23உ வங்காளப் பிராமண சபையின் அழைப்பை ஏற்றுக்கொண்டு, ஸ்வாமிகள் அந்தச் சபையின் காரியாலயத்திற்கு விஜயம் செய்தார்கள். வங்கப் பிராமண சமூகத்தினரும், மற்றும் ஹிந்துஸ்தானி, குஜராத்தி, மகாராஷ்டிரம், ஆந்திரம், திராவிடம், முதலான தேசங்களின் பிராமண சமூகத்தினரும் அங்கு ஏராளமாகக் கூடியிருந்தனர். அந்தச் சபையின் தலைவர் வங்கத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற பண்டித பஞ்சானன தர்க்க ரத்னு என்பவராவர். வங்கத்தில் அவர் மிகுந்த மதிப்பு வாய்ந்த பண்டிதர். அரசாங்கம் சாரதா சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்ததின் காரணமாக அவர் தமது மகாமகோபாத்யாய பட்டத்தைத் துறந்த பண்டிதர்களில் இவர் முதல்வராவர். ஸ்வாமிகளுக்கு அன்று அவர் வடமொழியில் ஓர் உபசாரப் பத்திரத்தை வாசித்தளித்தார். அந்த உபசாரப் பத்திரத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு கீழே தரப்பட்டுள்ளது.

பண்டித பஞ்சானன தர்க்க ரத்னு அளித்த வரவேற்புரை.

"ஸ்ரீமத் ஆதி சங்கரரது பரம்பரையின் ஜோதியாகிய ஸ்ரீகாமகோடி பீடத்தை அலங்கரிக்கின்றவர்களும், சிவபிரானது மானிட உருவமோ என நினைக்

கும் வண்ணம் துறவிகளுக்கெல்லாம் வேந்தராக விளங்கி வரு கின்றவர்களுமான தங்கள் வரவு நல்வரவாகுக!

நமது தர்மம் இன்னதென அறியமாட்டாமல் துன்பக்கடலில் மூழ்கித் தவிக்கும் மக்களைச் சன்மார்க்க உபதேசங்களாலும், கருணை மிக்க அருளினாலும் கைகொடுத்துக் கரை ஏற்றி நல்வழியில் ஈடுபடும் படிச் செய்யும் தங்கள் விஜயமானது இந்தக் கல்கத்தா நகரத்திற்கு இத்தருணம் கிடைத்தது நாங்கள் செய்த புண்ணியத்தின் பயனே அன்றி வேறில்லை. மானிட உருவத்துடன் வந்த சிவபெருமான் போல எங்கள் முன் காட்சி அளிக்கும் தங்கள் திருவடித்தாமரைகளை வணங்கிச் சிற்சில சொற்களைச் சொல்ல விரும்புகின்றேன்.

இந்த கௌட மண்டலத்தில் அமைந்துள்ள கல்கத்தா நகர மானது புதிதாக நிர்மாணிக்கப்பட்டதேயாகும். இந்த நகரத் திற்குச் சரித்திரப் பிரசித்தி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. வராகமிஹிரர் இயற்றிய மிகப் பழமையான பிருஹத்சம்ஹிதை என்னும் நூலை ஆராய்ந்து பார்த்ததில் சுமார் 2,500 வருடங் களுக்கு முன்னர் இந்தப் பிரதேசம் முழுவதும் பெரிய சமவெளி யாகவும், மணற்பாங்காகவும் இருந்து வந்ததாகவே புலப்படுகிறது. இந்த நகரத்திற்குத் தற்காலம் அமைந்துள்ள கல்கத்தா என்னும் பெயரும் காரணப் பெயரேயாகும். பொதுவாகப் பரங்கிகள் என அழைக்கப்பட்டு வந்த ஐரோப்பியர்கள் இந்த நகரத்தில் குடியேறிய பிறகும் வெகுகாலம் வரையில் இந்த இடம் தாக்குத் தாக்காக அமைந்து, மனிதர்கள் வாழ்வதற்கு முழு வசதிகளும் அற்றதாகவே இருந்து வந்திருக்கிறது. ஆகையால் இந்த நகரமானது தோன்றிய காலம் முதலே தங்களைப் போன்ற பெரிய மகான்களது வரவால் புனிதமாக்கப்படவில்லை என்றே நான் நினைக்கிறேன். ஸ்ரீ ஆதி சங்கரரது காமகோடி பீடத்தின் 68-ஆவது ஆசாரியர்களாகவும், ஜகத் குருவாகவும் விளங்கும் தாங்கள் மிகுந்த கருணையுடன் இங்கு விஜயம் செய்து இந்த இடத்தைப் புனிதமாக்கியது எங்களது பெரிய பாக்யமேயாகும்.

காசி மகாராஜாவின் புத்தகசாலையில் பாதுகாத்து வைக்கப் பட்ட பழமையான ஏட்டுப் பிரதிகளில் சிவ ரகஸ்யம் என்னும் நூலைக் கண்ணுற்று அதைப் படித்து ஆராய்ச்சி செய்து பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. ஸ்ரீ ஆதி சங்கரர் பாரத நாட்டின் நான்கு திசைகளிலும் துவாரகை, ஜகந்நாதம், பதரி

காச்ரமம், சிருங்ககிரி, என்ற நான்கு இடங்களில் மடங்களை ஸ்தாபித்து, பின்னர் காஞ்சியில் ஸர்வக்ஞ பீடம் ஏறி அங்குத் தமக்கென ஓர் மடத்தை அமைத்து அவ்விடத்திலேயே சித்தி பெற்றதாகவும் அந்த நூலில் கூறப்பட்டுள்ளது. மேலும் ஸ்ரீ சுரேச்வராசாரியார், தமது குருவான ஸ்ரீ சங்கரரால் காஞ்சியில் ஸ்தாபிக்கப்பட்ட பீடத்தைப் பாதுகாத்துக்கொண்டு தமது குரு நாதனின் அருகில் வசித்து வந்ததாகவும் ஆனந்தகிரி சங்கர விஜயம் என்னும் பழமையான நூலின் வாயிலாக அறிகின்றோம். பரம் பரையாக வரும் இந்திர ஸரஸ்வதி என்னும் பட்டத்தைத் தாங்கள் அடைந்திருக்கிறீர்கள். இதனால் “इन्द्रो मायाभिः पुरुरूपईयते” என்னும் வேதச் சொற்கள் நினைவுக்கு வருகின்றன. பரமாத்ம வாசகத்தைக் குறிக்கும் இந்திர பதமும், பிரும்மவாசகமான ஆனந்தத்தைக் குறிக்கும் ஸரஸ்வதி பதமும் சேர்ந்து தங்களது பிரும்மத்தன்மையை எடுத்துக் காட்டுகின்றன. சுரேச்வராசாரி யாரது காலந்தொட்டே இந்தப் பட்டத்தை பீடத்தின் அதிபர்கள் அடைந்து வந்திருப்பதாகவும் சிலர் கூறுகின்றனர்.

இந்தப் பரம்பரையில் தோன்றி ஆதி சங்கரரைப்போலவே தாங்கள் ஸ்ரீ சக்கிர பிரதிஷ்டை செய்து வருவதுடன், சுகமாக சஞ்சாரம் செய்ய நவீன காலத்தில் பலவித சாதனங்கள் இருந்தும், அவைகளுள் எதையும் ஏற்காது, பழைய முறைப்படி சிவிகை யையே வாகனமாக உபயோகித்துப் பாரத பூமியைச் சுற்றி வருகிறீர்கள்.

தங்கள் திருவடிகளைக் கண்டு போற்றுவது எங்களுக்கு கிடைப்பதற்கரிய பெரும் பேருகும். ‘தீர்த்தங்கள், க்ஷேத்திரங் கள், ஆலயங்கள் முதலியவைகளைச் சேவிப்பதால் பின்னர் ஏதோ ஒரு காலத்தில்தான் பயனை அடையமுடியும். ஆனல் பெரியோர் களைத் தரிசித்த மாத்திரத்திலேயே ஒருவனது ஜன்மம் கடைத் தேறுகிறது,’ என்னும் உண்மையைப் பாகவதம் நமக்கு உணர்த்து கிறது.

ஸ்ரீ ஆதி சங்கரரது காலத்தில் பௌத்தர்களாலும், ஜைனர் களாலும் நமது தர்மத்திற்கு இடையூறுகள் ஏற்பட்டிருந்தது போல், தற்காலத்திலும் இடையூறுகள் காணப்படுகின்றன. வேத மதத்திற்குப் புறம்பாயுள்ள மார்க்கங்கள் ஒருவாறு கண்டிக்கப் பட்டிருந்த போதிலும் அவைகள் முற்றிலும், அகற்றப்படவில்லை.

ஆதி குருவைப் போலவே அவைதிக மதங்களை முற்றிலும் அகற்று வதில் தாங்களே தீவிரமாக முயற்சி எடுத்துக்கொண்டிருக் கிறீர்கள்.

இத்தகைய பெருமைகள் வாய்ந்த தங்களை நாங்கள் எவ்வாறு போற்றுவதென்பதை அறியமுடியவில்லை. எனது வாக்கோ, தடுமாறுகிறது; தொண்டை விம்முகின்றது; சரீரமோ ஆனந்தத் தினல் மயிர்க்கூச்செறிகின்றது; கண்களில் ஆனந்தக்கண்ணீர் பெருகுகின்றது; மிகவும் மங்களகரமான இந்நாளில் சநாதன தர்மத்தைப் பிரதிஷ்டை செய்துவரும் ஆசார்யமூர்த்திகளான தங்களுக்கு எங்களது தழுதழுத்த குரலினல் ஜய கோஷத்துடன் நல்வரவு கூறுகின்றோம்."

மேலும் இந்தச் சபையின் சார்பாக ஸ்வாமிகளுக்கு அவர் பாதபூஜை முதலான மரியாதைகளைச் செய்து வைத்தார். ஸ்வாமி களும் பண்டிதர்களுக்குச் சில உபதேசமொழிகளைக் கூறி அவர்களை ஆசிர்வதித்தார்கள். அங்குக் கூடியிருந்த மக்கள் யாவரும் ஸ்வாமி களை ஜய கோஷத்துடன் வழியனுப்பினர்கள். செப்டம்பர் மாதம் 28உ அவ்வருடத்திய சாரதா நவராத்திரி விழா ஆரம்பமாயிற்று. தேவியைக் குறித்துக் கொண்டாடப்படும் இவ்விழா மற்ற நாடு களைவிட இவ்விழா வங்கத்தில் மிகுந்த சிறப்புடன் மக்களால் கொண்டாடப்படுகிறது. இந்தப் பூஜையை ஸ்வாமிகள் வங்காள அக்கவுண்டேண்ட் ஜெனரல் எம். சுப்பிரமணியம் அவர்கள் ஜாகை யில் நடத்தினர்கள். அன்று முதல் ஒன்பது நாட்களும் ஸ்வாமி கள் நடத்திய அம்பிகையின் பூஜையை ஆயிரக்கணக்கான மக்கள் தரிசித்துப் பெரும்பயனை அடைந்தனர். ஒவ்வொரு நாளும் கன்னி கையின் பூஜைகள் வழக்கம்போல் நடைபெற்றன. இந்த நவராத்திரி பூஜையின் செலவுகளையெல்லாம் நகரத்தில் வாழும் வங்க, குஜராத்தி, மார்வாரி, தென்னிந்திய மக்கள் ஆகியோர் ஏற்றுக்கொண்டனர். கன்னிகைகளுக்கும், ஸுவாஸினிகளுக்கும் வஸ்திரம் முதலான தானங்கள் வழங்கப் பெற்று வெகு விமரிசை யாக அவ்வருடத்து நவராத்திரி விழா கல்கத்தா நகரத்தில் கொண் டாடப்பட்டது. 1935 அக்டோபர் 6உ ஸரஸ்வதி பூஜையன்று சண்டீ ஹோமம் முதலான யக்ஞ ஹோமங்கள் பூர்த்தியடைந்தன. அக்டோபர் மாதம் 7உ விஜயதசமி அன்று ஸ்வாமிகள் தமது விஜய யாத்திரையை மேலும் தொடங்கினர்கள்.

கல்கத்தாவில் ஸ்வாமிகள் விஜயம் செய்திருந்தபோது அடிக்கடி ஸ்வாமிகளைத் தரிசித்து அவர்களிடம் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டு அவர்களது ஆசியைப் பெற்ற

ஸ்வாமிகளின் தொண்டில் ஈடுபட்ட கல்கத்தா பிரமுகர்கள்.

பிரமுகர்கள் பலரில் பண்டித பஞ்சானன தர்க்க ரத்னு, கல்கத்தா ஹைக்கோர்ட்டின் பிரதான நீதிபதி ஸ்ரீ மன்மதநாத் முகர்ஜி, ஹைக்கோர்ட்டு நீதிபதி ஸ்ரீ துவாரகநாத் மித்ரா, சுபாஷ் சந்திர போஸின் சகோதரர் ஸ்ரீ சரத் சந்திர போஸ், பர்த்துவான் மகாராஜா, ஸ்ரீ தாமோதர தாஸ் கன்னு, டி. என். மோகன் இவர்களைக் குறிப்பிடலாம். இவர்களைத் தவிர பண்டிதர் பலரும் பல தொழில்களில் ஈடுபட்ட பிற மக்களும் ஸ்வாமிகளிடம் நெருங்கிய தொடர்பை வைத்துக்கொண்டிருந்தார்கள். இடச் சுருக்கம் காரணமாக அவர்களின் பெயர்களை எல்லாம் இவ்விடம் குறிப்பிட முடியாதது பற்றி வருந்த வேண்டியிருக்கிறது. அப்பொழுது இந்தியா கவர்மெண்டின் நிர்வாக சபை அங்கத்தினராக இருந்த ஸர். ஸி. பி. இராமஸ்வாமி ஐயரும் ஸ்வாமிகளைக் கல்கத்தாவில் தரிசித்துப் பல மணிநேரம் ஸ்வாமிகளுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். ஸ்வாமிகள் அந்த நகரத்தில் தங்கியிருந்த போது, போலீஸ் இலாகாவில் ஸ்வாமிகளது முகாமிற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் அளித்து வந்தார்கள். அவ்வப்போது ஸ்வாமிகள் ஜாகையிலிருந்து புறப்பட்டுச் சிவிகையில் வெளி இடங்களுக்கு சென்று வந்த சமயங்களிலெல்லாம் போலீஸாரின் உதவி மிகவும் உபயோகமுள்ளதாக இருந்தது. யானை, குதிரை முதலான பரிவாரங்களுடன் பல்லக்கில் ஸ்வாமிகள் வீதிகளில் செல்லும்போது முன்னறிக்கையின் பேரில் போலீஸார் ஸ்வாமிகள் செல்லும் பாதைகளில் மற்ற எல்லா போக்குவரத்துக்களையும் நிறுத்தி வைத்துத் தடையின்றி ஸ்வாமிகள் சென்றுவர அவர்கள் வகைசெய்து தந்தார்கள். மேலும் ஸ்வாமிகளது சவாரியுடன் குதிரைமீது ஏறிய போலீஸ் சார்ஜண்டுகளும் தொடர்ந்து வந்து, ஸ்வாமிகளை ஜாகை வரையில் கொணர்ந்து விடும் ஏற்பாட்டையும் செய்துவந்தார்கள். ஸ்வாமிகளது கல்கத்தா விஜயத்தின்போது நமது தமிழ் நாட்டு மக்கள் நூற்றுக்கணக்கானவர்கள் ஸ்வாமிகளது பணியில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களில் மகாமகோபாத்யாய என். எஸ். அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள், கே. கே. எஸ். ஐயர், ஜி. வி. ராமன், வி. டி. சுவாமி, ரயில்வே இன்ஜீனியர் ராமஸ்வாமி ஐயர்,

இந்தியன் ஸ்டோர்ஸ் டிபார்ட்மெண்டு அகௌண்டெண்ட் ராவ் சாகெப் வி. சுப்பிரமணிய ஐயர், ஸர். ஆர். எஸ். சர்மா, மந்தரேசுவர சர்மா, பி. வி. சுந்தரமய்யர் வி. ஆர். சுந்தரராமன் இவர்களை முதன்மையாகக் குறிப்பிடலாம். இச்சிறு புத்தகத்தில் இடச் சுருக்கம் காரணமாக மற்றவர்களின் பெயர்கள் சேர்க்கப்படாததைத் தன்னலம் கருதாது ஊழியம் செய்த அவர்கள் யாவரும் மன்னித்து விடுவார்கள் எனக் கருதி இங்குக் குறிப்பிடவில்லை. ஸ்வாமிகளின் சிப்பந்திகளுக்கும், மற்ற பரிவாரங்களுக்கும் அவர்கள் அவ்வப்போது செய்து வந்த உதவி ஒரு நாளும் மறக்க முடியாததாகும். ஸ்வாமிகளது கல்கத்தா விஜயம் மடத்தின் சரித்திரத்தில் என்றும் நிலைபெற்றிருக்கும். பக்தர்களின் ஒப்பற்ற சேவையே இதற்குக்காரணம்.

1935 அக்டோபர் மாதம் 3-ஆவது வாரத்தில் ஸ்வாமிகள் கல்கத்தாவிலிருந்து புறப்பட்டார்கள். ஆதிகங்கையில் சேரும் தாமோதர், ரூப்நாராயண் நதிகளைச் சாலைமார்க்கமாகக் கடக்க அதிக தூரம் சுற்றி வரவேண்டியிருந்ததால் ஸ்வாமிகளது பிரயாணத்திற்கென ஒரு சிறு நீராவிக் கப்பல் ஏற்பாடு செய்யப்பட்டது. ஸ்வாமிகளின் பரிவாரங்களான யானை, குதிரைகள், மாடுகள், வண்டிகள், பல்லக்குகள் இவைகளெல்லாம் அந்தக் கப்பலில் ஏற்றப்பட்டு பிரயாணம் தொடங்கிற்று. துறைமுகத்தில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் ஸ்வாமிகளை அன்று வழியனுப்பிய காட்சி மனதை உருக்கும்படி செய்தது. ஸ்வாமிகளது தரிசனத்தையும், அவர்கள் பூஜை செய்யும் காட்சியையும் இனி எப்பொழுது காணப்போகின்றோமென பக்தர்கள் ஏங்கி நின்றார்கள். ஸ்வாமிகள் அங்குக் கூடியிருந்த எல்லோருக்கும் மந்திராக்ஷதை அளித்து, ஒவ்வொருவரிடமும் இரண்டொரு வார்த்தைகள் பேசி அவர்களை ஆசிர்வதித்தார்கள். கல்கத்தா சமஸ்கிருத கலாசாலையின் தலைவர் பண்டித ஸ்ரீ ஜீவன் நியாயதீர்த்தா எம். ஏ. ஸ்வாமிகளது யாத்திரையில் அப்பொழுது கலந்துகொண்டார். அன்று கயாவிலிருந்து வந்த காசிநாத் சிங் என்னும் பிரமுகர் ஸ்வாமிகளைக் கப்பலிலேயே தரிசனம் செய்துகொண்டார். கப்பலிலேயே நதிகளைக் கடந்து ஸ்வாமிகள் அக்டோபர் மாதம் 20உ கோலாகாட் என்னும் இடத்திற்கு விஜயம் செய்து அவ்விடம் பக்தர்கள் அளித்த பாதபூஜை முதலிய மரியாதைகளை ஏற்றுக்கொண்டு அங்கு மூன்று

கல்கத்தாவிலிருந்து புறப்பட்டது.

நாட்கள் தங்கியிருந்தார்கள். அடுத்த முகாம் பஞ்ச்கூரா என்னும் ஊர். அவ்விடத்திலிருந்து 64 சக்தி பீடங்களில் ஒன்றாகிய தாம்பிரலிப்தி என்னும் சரித்திர பிரசித்தி பெற்ற பழமையான துறைமுகப் பட்டணத்திற்கு விஜயமானார்கள். அக்டோபர் மாதம் 25, 26உ களில் ஸ்வாமிகள் ஜனார்தன் பூரில் தங்கினார்கள். அவ்வருடத்து தீபாவளி அவ்விடத்தில் நடைபெற்றது. அன்று மடத்தின் சிப்பந்திகள் ஒவ்வொருவருக்கும் புது வஸ்திரம் இனாம் அளிக்கப்பட்டது.

1935 அக்டோபர் மாதம் 27உ அமாவாசை அன்று ஸ்வாமிகள் கல்கத்தாவிற்கு மேற்கில் சுமார் 70 மைல்கள் தூரத்திலுள்ள மிட்னாபூருக்கு விஜயமானார்கள். அது அப்பெயருடன் விளங்கும் ஜில்லாவின் தலைநகர். இவ்வூர் வங்காளத்தின் சுதந்திர இயக்கத்திற்கு அஸ்திவாரமாக இருந்துவந்திருக்கிறது. அரசாங்கத்திற்கு எதிராக அவ்வப்போது அவ்வூரில் தோன்றிய இயக்கத்தைப் பயங்கர இயக்கம் எனவும் கூறுவர். ஸ்வாமிகள் ஜனார்த்தன் பூருக்கு விஜயமானதை அறிந்த மிட்னாபூர் மக்கள் எவ்வகையிலும் தங்கள் ஊருக்கும் ஸ்வாமிகளை விஜயம் செய்விக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அவ்விதம் தீர்மானித்த சில மணி நேரங்களுக்குள் அதற்கென ஒரு வரவேற்புக் கமிட்டியையும் நிறுவிக்கொண்டார்கள். ஆனால் அவ்வூரில் எவ்விதமான ஊர்வலங்களோ, பொதுக்கூட்டங்களோ நடைபெறக் கூடாதென்பதும், இரவு ஒன்பது மணிக்கு மேல் வீதிகளில் எவரும் நடமாடக் கூடாதென்பதும் சர்க்கார் விதித்திருந்த நிபந்தனைகளாகும். இவ்வித நிபந்தனைகள் பல வருடங்களாக அவ்வூரில் அமுலிலிருந்து வந்தது. மக்கள் அங்கு சுதந்திரம் அற்று இருந்தபோதிலும் அவர்களது மனதிலும், உடலிலும் ஊறியுள்ள சுதந்திர எண்ணம் எவ்வித கட்டுப்பாடுகளுக்கும் அடங்காமல் எல்லையற்றதாக இருந்தது. வரவேற்புக் கமிட்டியின் அங்கத்தினர்கள் சிலர் ஜனார்தன்பூருக்கு சென்று ஸ்வாமிகளை நேரில் தரிசித்துக் கொண்டார்கள். அந்த ஊரில் சட்டம் அமுலிலிருந்து வருவதை ஸ்வாமிகள் அறிந்திருந்தார்கள்; அவ்விதமிருந்தும் எவ்விதத்திலும் அவ்வூர் மக்களை அனுக்ரகிக்க வேண்டுமென்று எண்ணி, அவர்களது அழைப்பை ஏற்றுக்கொண்டார்கள். இச் செய்தியை மக்கள் கலெக்டருக்கும், கல்கத்தாவிலுள்ள உயர்தர அதிகாரிகளுக்கும் அறிவித்தனர். ஸ்வாமிகள் மிட்னாபூரில் விஜயமான

மிட்னாபூரில் மக்களின் குதூகல வரவேற்பு.

நாளன்று ஊரடங்குச் சட்டத்தின் சில ஷரத்துக்களையும், ஜில்லா அதிகாரிகள் தளர்த்தி மக்களை மகிழ்விக்கச் செய்தனர். பல வருடங்களாக கிடைக்கப்பெறாத இந்த நாளை ஒரு சுதந்திரத் திருநாளாக அவ்வூரார் கருதினார்கள். மேலும் மதத்தலைவர் ஒருவரை வரவேற்பதில் அவர்களது உற்சாகம் கரைபுரண்டு ஓடியது. ஊரையெல்லாம் அவர்கள் தோரணங்களாலும், வரவேற்பு வளைவுகளாலும் நன்கு அலங்கரித்தனர். இந்த ஏற்பாடுகளையெல்லாம் தலைமை தாங்கி நடத்தியவர் ஜமீந்தார் ப்ரபுல்ல குமார் மல்லிக் என்னும் பிரமுகர் ஆவர். அவருடன் பல வியாபாரிகளும், வக்கீல்களும், டாக்டர்களும் கலந்துகொண்டார்கள். சர்க்கார் உத்தியோகத்தில் அமர்ந்திருந்தவர்களும் ஸ்வாமிகளை வரவேற்கும் பணியில் மிகுந்த ஊக்கத்தைக் காட்டினர். முன் கூறியபடி 1935-அக்டோபர் 27உ காலையில் ஸ்வாமிகள் அவ்வூருக்கு விஜயம் செய்தார்கள். முக்கியமான வீதிகளின் வழியாக மக்கள் ஸ்வாமிகளை ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். ஆண், பெண், குழந்தைகள் ஈறாக, மக்கள் வீதிகளின் இரு புறங்களிலும் தங்கி ஸ்வாமிகளைத் தரிசித்துக்கொண்டனர். அன்று ஸ்வாமிகளுக்கு 12 இடங்களில் வரவேற்பு அளிக்கப்பட்டது. ஸ்வாமிகள் ஸம்ஸ்கிருதத்திலும், ஹிந்தியிலும் அவைகளுக்குப் பதிலளித்துத் தர்மத்தைப் பற்றியும் பக்தியைப் பற்றியும் உபதேசம் அருளினார்கள். ஆங்காங்கு பக்தர்கள் ஸ்வாமிகளுக்குப் பாதபூஜை செய்து வைத்தனர். அன்று காலை புறப்பட்ட ஊர்வலம் மாலை 2 மணிக்கு ஜாகையை அடைந்தது, அதற்கு மேல் ஸ்வாமிகளது நித்ய பூஜை நடைபெற்றது. ஸ்வாமிகளின் பூஜையைத் தரிசிக்க மக்கள் அன்று அவ்விடத்தில் ஆயிரக்கணக்காகக் கூடியிருந்தனர். பூஜை முடிந்ததும் ஸ்வாமிகள் யாவருக்கும் தீர்த்தப் பிரசாதம் கொடுத்தார்கள்.

ஸ்வாமிகள் மிட்னாபூருக்கு விஜயம் செய்த செய்தியானது அவ்வூர் சிறைச்சாலைக் குள்ளும் பரவி விட்டது. நாட்டின் சுதந்திரத்திற்காகத் தங்கள் வாழ்வையே அர்ப்பணம் செய்துவிட்ட தேச பக்தர்கள் பலர் அச்சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். தேச பக்தியுடன் மத பக்தியும் அவர்கள் இரத்தத்தில் தோய்ந்திருந்தது. அவர்களில் சிலர் கல்லூரி மாணவர்கள். சிலர் பட்டதாரிகள், சிலர் வக்கீல்கள், டாக்டர்கள் போன்ற தொழில்களில்

காவல் கைதிகளுக்கு தரிசனம் அளித்தது.

ஈடுபட்டிருந்தவர்கள். அவர்கள் தங்கள் வருமானங்களை யெல்லாம் துறந்து, தேச விடுதலையின் பணியிலேயே தங்களை ஈடுபடுத்திக்கொண்டார்கள். அவர்களில் சிலருக்கு ஸ்வாமிகளை எவ்வகையிலாவது தரிசித்துவிட வேண்டுமென்ற எண்ணம் உதித்தது. சிறைச்சாலை அதிகாரி ஓர் ஆங்கிலேயர். அப்படி யிருந்தும் 'அவர்கள் தங்களது அவாவை அந்த அதிகாரியிடம் விண்ணப்பித்துக்கொண்டனர். மதத் தலைவர் ஒருவர் அவ்வூருக்கு விஜயம் செய்திருந்தது அந்த அதிகாரிக்கும் தெரிந்திருந்தது. அந்தக் காவல் கைதிகளின் மத உணர்ச்சியை மதித்து, சில நிபந் தனைகளின் பேரில் அவர்களை அந்த அதிகாரி வெளியில் சென்று வர அனுமதித்தார். கூண்டில் அடைக்கப்பட்டிருந்த அந்தக் கிளிகள் வெளியேறியவுடன் பறந்துபோகாமல் இருக்கவேண்டி யதைக் கண்காணிப்பதற்காகத் துப்பாக்கியும் கையுமாக போலீஸ் வீரர்கள் அவர்களைத் தொடர்ந்து வந்தனர். மாலை 6 மணிக்குள் ஜெயிலுக்குள் திரும்பி வந்துவிட வேண்டுமென்பது அவர்களுக்கு அந்த அதிகாரி விடுத்த நிபந்தனைகளில் ஒன்ருகும். இவ்வித நிபந்தனைகளையெல்லாம் ஏற்றுக்கொண்டு இளைஞர்களான சில காவல் கைதிகள் ஸ்வாமிகள் தங்கியிருந்த ஜாகைக்கு வந்து சேர்ந்தனர். அப்பொழுது மணி சுமார் 5-30 இருக்கும். சிறிது நேரத்திற்கு முன்புதான் நித்திய பூஜையை முடித்துக்கொண்டு சிறிது ஓய்வு எடுத்துக்கொள்ள ஸ்வாமிகள் ஒரு தனிமையான இடத்திற்குச் சென்றிருந்தார்கள். அச்சமயத்தில் ஸ்வாமிக ளுக்குச் சிரமத்தைக் கொடுக்க மடத்தின் அதிகாரிகள் விரும்ப வில்லை. ஆயினும், 10 நிமிடங்களில் ஸ்வாமிகள் வெளியே வந்து விடுவார்களென அவர்கள் எதிர்பார்த்தனர். அது வரை சற்றுக் காத்திருக்கும்படி அந்தக் காவல் கைதிகளிடம் அதிகாரிகள் தெரி வித்தனர். தாங்கள் 6 மணிக்குச் சிறைக்குள் சென்றுவிடவேண்டு மென்றும், அதற்குப் பின் காலம் கடந்து விட்டால் காவலாளி களின் கைகளிலுள்ள துப்பாக்கியின் குண்டுகள் தங்கள் மேல் பாய்ந்துவிடுமென்றும், தங்கள் உயிர் போவதைப்பற்றி அவர்கள் சிறிதேனும் கவலைப்படவில்லையென்றும், ஆனல் ஸ்வாமிகளைத் தரிசிக்க நேராது அப்பொழுது உயிர் துறப்பதை அவர்கள் விரும்ப வில்லையென்றும் கூறிவிட்டு, மிகுந்த ஏமாற்றத்துடன் பக்கத்தி லிருந்த சிறைச்சாலையை நோக்கித் திரும்பினர். இவர்கள் திரும்பிய சில நிமிடங்களுக்குள் ஸ்வாமிகள் தாமாகவே வெளியில் வந்து

தரிசனத்திற்கு யாராவது காத்துக்கொண்டிருக்கிறார்களா என வினவினார்கள். அப்பொழுது மடத்தின் அதிகாரி, சற்று முன் சில காவல் கைதிகள் தரிசனத்திற்காக வந்தார்களென்றும், சில நிமிடங்களுக்கு முன்தான் அவர்கள் திரும்பிச் சென்றார்களென்றும், அவர்கள் இப்பொழுது சிறிது தூரம்தான் சென்றிருப்பார்களென்றும் கூறினார். ஸ்வாமிகள் உடனே ஓர் ஆளை அனுப்பி அவர்களை அழைத்து வரும்படி கட்டளையிட்டார்கள். அதன்படி அவர்கள் யாவரும் அங்கு மறுபடியும் அழைத்து வரப்பட்டனர். அவர்கள் வந்தவுடன் ஸ்வாமிகளை வணங்கி அன்னிய ஆட்சியால் தேச மக்கள் பல வகையிலும் துன்புறுத்தப்படுகின்றனரென்றும், நாடு சுதந்திரம் அடைந்து மக்கள் யாவரும் துன்பம் நீங்கியவர்களாகி இன்பமுற வாழ வேண்டுமென ஸ்வாமிகள் அனுக்ரகம் புரியவேண்டுமெனவும், அதுவே அவர்கள் கோரிக்கை என்றும் கூறிவிட்டு, வேறொன்றும் கூறாது ஸ்வாமிகளை வணங்கி விரைவில் திரும்பினர். அவர்கள் ஸ்வாமிகளைத் தரிசித்த மகிழ்ச்சியுடன் குறிப்பிட்ட நேரத்திற்குள் சிறைச்சாலைக்குள் சென்று விட்டனர். ஸ்வாமிகள் இவர்களது தேசபக்தியைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியுற்றார்கள். இந்த நிகழ்ச்சியைக் கண்ணுற்ற அவ்விடம் கூடியிருந்த மக்கள் மிகவும் வியப்படைந்தனர்.

1935 அக்டோபர் 27உ மாலை ஸ்வாமிகள் மிட்னாபூரிலிருந்து புறப்பட்டு கோசை, கபீசா என்னும் இரண்டு நதிகளையும் கடந்து, அன்றிரவே பக்கத்திலுள்ள காரக்பூரை அடைந்தார்கள். காரக்பூர் பி. என். ஆர். ரயில்வே தொழிற்சாலை உள்ள ஒரு சிறிய பட்டணம். ரயில்வேயில் வேலை பார்க்கும் தொழிலாளிகளும், உத்தியோகஸ்தர்களுமாக தேசத்தின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் அங்குக் குடியேறியுள்ளார்கள். மற்றவர்களை விடத் தென்னிந்தியர்கள் சற்று அதிகமாக அங்கு வசிப்பதாகத் தெரிகிறது. அவ்வூரில் வட இந்தியர், தென்னிந்தியர் என்ற பாகுபாடில்லாமல் ஸ்வாமிகளுக்கு ஹிந்துக்கள் யாவரும் தகுந்த வரவேற்பு அளித்து ஸ்வாமிகளது பணியில் ஈடுபட்டிருந்தார்கள். தென்னிந்திய மக்களின் பிரார்த்தனைக்கிணங்கி ஸ்வாமிகள் அவ்வூரில் 1935 நவம்பர் 24உ வரையில் சுமார் ஒரு மாத காலம் தங்கியிருந்தார்கள். அங்கு தங்கள் சொந்த நாட்டு மக்களுடன் பழகும் வாய்ப்பு பெற்ற மடத்தின் சிப்பந்திகள் தங்களது உறவினர்களுடன்

காரக்பூருக்கு விஜயம்.

எவ்விதம் பழகுவார்களோ அவ்விதம் அவர்களுடன் பழகி இரண்டு ஆண்டுகளாக ஓய்வு இல்லாமல் நடைபெற்று வந்த இந்த யாத்திரையில் அப்பொழுது சிறிது ஓய்வைப் பெற்ருர்களெனக் கூறலாம்.

இந்தியாவின் இரும்புத் தொழிற்சாலேகளுள் மிகப் பெரியத் தொழிற்சாலே அமைந்துள்ள டாட்டா நகருக்கு விஜயம் செய்ய வேண்டுமென அங்கு குடியேறியிருக்கும் பக்தர்கள் விண்ணப்பித்துக் கொண்டதின் விளைவாக காரக்பூரிலிருந்து வடமேற்கே சுமார் 140 மைல்கள் தூரமுள்ள அவ்வூருக்கு ஸ்வாமிகள் விஜயம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 1935 நவம்பர் 24உ இரவு காரக்பூரிலிருந்து புறப்பட்டு 25உ மாணிக்பர்ஹாவிலும், 26, 27உ களில் ஜர்க்ராம் என்னும் சிறிய சமஸ்தானத்திலும், 28உ போர்ஹிஹாடியிலும் 29, 30உ களில் சகூலியாவிலும், டிசம்பர் மாதம் முதல் தேதி நரஸிங்கார் சமஸ்தானத்திலும், 2உ கட்ஸிலாவிலும், 3உ தாமிரச்சுரங்கம் உள்ள மேளபந்தரிலும், 4உ மார்வாரிகள் தங்கியிருக்கும் கலூதிஹ் என்னும் ஊரிலும் தங்கி, சந்திரலேகா என்னும் சிற்றூரில் சோர்ணலேகா நதியைக் கடந்து, டிசம்பர் மாதம் 5உ டாட்டா நகரை அடைந்தார்கள். 1936 ஜனவரி 27உ வரையில் ஸ்வாமிகள் டாட்டா நகரிலேயே தங்கியிருந்தார்கள். அவ்வருடத்திய தனுர்மாத பூஜை அங்கு நடைபெற்றது. ஸ்வாமிகள் 54 நாட்கள் சேர்ந்தாற்போல் அவ்விடம் விஜயம் செய்திருந்தபொழுது குளிரின் காரணமாகவும், ஓய்வில்லா பிரயாணத்தின் காரணமாகவும் சிப்பந்திகள் பலர் கடுமையாக நோயுற்றிருந்தார்கள். அங்குள்ள தென்னிந்தியக் குடும்பத்தினர் அவர்களேயெல்லாம் தங்கள் நெருங்கிய உறவினர்களேப் போல மதித்துத் தங்கள் வீடுகளில் அவர்களேத் தங்கச் செய்து வைத்திய உதவிகளே அளித்துத் தக்கவாறு போஷித்துக் குணமடையச் செய்தனர். இச்செயல் மடத்தின் சிப்பந்திகள் ஒரு நாளும் மறக்க முடியாததாகும். டாட்டா நகரில் ஸ்வாமிகள் தங்கியிருந்தபொழுது ஸ்வாமிகளே இரும்புத் தொழிற்சாலேக்கு விஜயம் செய்யவேண்டுமெனத் தொழிற்சாலேயின் நிர்வாகிகள் கேட்டுக்கொண்டனர். அவர்கள் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு ஸ்வாமிகள் மாபெரும் உருக்கு இரும்புத் தொழிற்சாலேக்கு விஜயம் செய்து தேசத்தின் தேவைக்கு வேண்டிய இரும்புச்

டாட்டா நகருக்கு விஜயம்.

சாமான்கள் எவ்விதம் தயாரிக்கப்படுகின்றன என்பதைப் பார்வையிட்டார்கள். அப்பொழுது அங்குத் தொழிற்சாலையின் நிர்வாகியாக இருந்த எஸ். சாம்பசிவ தீக்ஷிதர் ஸ்வாமிகளை எல்லாப் பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று வேலை முறையையும் காண்பித்தார். ஸ்வாமிகளும் பல வேலை நுட்பங்களைப் பற்றிக் கேட்டறிந்து கொண்டார்கள். ஸ்வாமிகள் டாட்டா நகரில் தங்கியபொழுது சந்திரகிரஹணம் நிகழ்ந்தது. அந்த கிரஹணத்தன்று ஸ்வாமிகள் சுவர்ணலேகா நதியில் கிரஹண ஸ்நானம் செய்தார்கள்.

1936 ஜனவரி 27உ ஸ்வாமிகள் டாட்டா நகரத்தை விட்டுப் புறப்பட்டு சேரய்கேல்லா என்னும் சுதேச சமஸ்தானத்திற்கு விஜயமானார்கள். அவ்வூர் மன்னர் ஸ்வாமிகளைத் தகுந்தவாறு வரவேற்றுத் தம் அரண்மனையில் ஓர் தர்பார் கூட்டி ஸ்வாமிகளுக்குப் பாதபூஜை நடத்தி வைத்தார். ஸ்வாமிகள் அந்த ஊரில் ஜனவரி மாதம் 28உ முதல் நான்கு நாட்கள் தங்கினார்கள். இந்த இடம் வங்காளி பாஷைக்கும், ஒரியா பாஷைக்கும் எல்லைப் புறமாக அமைந்துள்ளது. ஸ்வாமிகள் செரெய்கெல்லாவிலிருந்து புறப்பட்டுப் பீகார் மாகாணம் சிங்பூம் ஜில்லாவின் தலைநகரான சைபாசா என்னும் பட்டணத்திற்கு விஜயம் செய்து, அவ்விடத்திலும் இரண்டு நாட்கள் தங்கி, பிறகு மேற்கே 15 மைல்கள் தூரத்திலுள்ள சக்ரதர்பூருக்கு விஜயம் செய்து அங்கும் நான்கு நாட்கள் தங்கினார்கள். அந்த ஊரிலும் ஓர் ரயில்வே தொழிற்சாலை அமைந்துள்ளது. அங்கிருந்து ஸ்வாமிகள் கார்ஸ்வான் என்னும் சமஸ்தானத்திற்கு விஜயம் செய்து, அவ்வூர் மன்னரால் மிகவும் விமரிசையுடன் வரவேற்கப்பட்டு பிப்ரவரி 6, 7, 8 தேதிகளில் அவ்விடத்திலேயே தங்கியிருந்தார்கள். அந்த மன்னரும் தம் அரண்மனையில் ஓர் தர்பார் கூட்டி அந்தத் தர்பாரில் ஸ்வாமிகளுக்குப் பாதபூஜை செய்தார். 8உ பெரியதொரு ஊர்வலமும் அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கார்ஸ்வான் சமஸ்தானத்திலிருந்து புறப்பட்டு மறுபடியும் சைபாசா வந்து அவ்விடம் 1936 பிப்ரவரி 9உ முதல் 17உ வரை 9 நாட்கள் தங்கி ஸ்வாமிகளின் பரம குருவின் ஆராதனையை அவ்விடம் நடத்தினார்கள்.

பீகாரின் சுதேச சமஸ்தானங்கள் அளித்த வரவேற்பு.

கியோஞ்சர் என்னும் நகரம் கியோஞ்சர் சமஸ்தானத்திற்குத் தலைநகரமாகும். இந்த நகரம் சைபாஸாவிலிருந்து தெற்கே சுமார் 65 மைல்கள் தூரத்தில் ஒரியா நாட்டிலுள்ளது. இந்தப் பகுதி முழுவதும் மலைகளும், காடுகளும் அடர்ந்த இடமாகும். இவைகளைக் கடப்பதற்கு அந்த ராஜ்ய சர்க்கார் வேண்டிய பந்தோபஸ்துகள் செய்து வழி முழுமையும் ஆங்காங்கு ஸ்வாமிகளும், பரிவாரங்களும் தங்குவதற்கு அழகிய பர்ணசாலைகளை அமைத்திருந்தார்கள். போலிஸ் பந்தோபஸ்து ஏராளமாக ஏற்படுத்தப்பட்டிருந்தது. வழியில் ஹாடகனேரியா நதியின் கரையில் உள்ள சாம்பேள மற்றும் போலஸ்போங்கா, பிரிட்டிஷ் எல்லையில், கமேரியா முதலான இடங்களில் ஸ்வாமிகள் தங்கி 1936 பிப்ரவரி மாதம் 23உ கியோஞ்சர் நகரத்திற்கு விஜயமானார்கள். சமஸ்தான அரண்மனையில் ஸ்வாமிகளுக்கு சிறந்ததொரு வரவேற்பு அளிக்கப்பட்டது. வரவேற்புக்குப் பின் ஸ்வாமிகள் ஹிந்தியில் பதிலளித்துப் பக்தியைப் பற்றி உபன்யசித்தார்கள். அந்தச் சமஸ்தானத்தின் மன்னர் வயதில் இளையவராக இருந்தும், தெய்வ பக்தி நிறைந்தவராக விளங்கினர். அவர் ஸ்வாமிகளைத் தமது தலைநகருக்கு வரவழைக்கவேண்டுமென பெரும் முயற்சி எடுத்துக் கொண்டு தமது சமஸ்தான அதிகாரிகளை சைபாஸாவுக்கு அனுப்பியிருந்தார். கியோஞ்சர்காரில் ஸ்வாமிகளின் குருவின் ஆராதனையும், அவ்வருடத்துச் சிவராத்திரி பூஜையும் நடைபெற்றன. அந்தச் சமஸ்தானத்தின் மிகப் பழமையாகவும் கம்பீரமாகவும் விளங்கும் சில தேவாலயங்களுக்கு ஸ்வாமிகள் விஜயம் செய்து, அவ்விடங்களில் ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டார்கள். அவைகளில் முதன்மையானது தரணீதேவியின் ஆலயம், ஆலய விக்ரகங்களுக்கெல்லாம் அலங்காரத்திற்கென ஸ்வாமிகள் காசி பீதாம்பரங்களை அளித்தார்கள். அந்தத் தேவியின் சிலையை அந்தச் சமஸ்தானத்தில் ஸ்தாபனம் செய்த கோவிந்த்பஞ்ச் தேவ் என்பவர் அதைக் காஞ்சி நகரத்திலிருந்து கொண்டு வந்து பிரதிஷ்டை செய்ததாக அந்தச் சமஸ்தானச் சரித்திரம் கூறுகின்றது. அந்தச் சமஸ்தானத்தில் மேலும் பல புனிதத் தலங்கள் அமைந்துள்ளன. பிராமண சாஸனங்கள் எனக் கூறப்படும் அக்ரகாரங்கள் பல அங்குள்ளன. மலைப் பிரதேசங்களிலும், காட்டுப் பிரதேசங்களிலும் உள்ள பழங்குடி மக்களிடம் பழமையான நாகரீகமும், கலையும் இன்றும்

கியோஞ்சர் சமஸ்தானத்திற்கு விஜயம்.

அங்கு நிலை பெற்றிருப்பதைக் காணலாம். ஸ்வாமிகள் அவ்வூருக்கு விஜயம் செய்த நாளன்று, மடத்தின் உக்ராணத்திலிருந்து அவ்வூரிலுள்ள 150 ஏழைக் குடும்பங்களுக்கு மூன்று நாட்களுக்கு உணவுப் பொருள்கள் அளிக்கப்பட்டன. இவ்விதம் அளிக்கப்படும் உணவுப்பொருளுக்கு உலுப்பை என்பது மடத்தில் வழங்கப்படும் பெயராகும்.

ஸ்வாமிகளது யாத்திரை கியோஞ்சர்காரிலிருந்து மறுபடியும் வடக்கு நோக்கிச் சைபாஸாவிற்கு திரும்பிற்று. 1936 பிப்ரவரி 29உ சைபாஸாவை அடைந்து அவ்விடமிருந்து மார்ச்சு மாதம் 1உ புறப்பட்டு மயூர்பஞ்ச் சமஸ்தானம் வழியாக யாத்திரை தொடங்கிற்று. வழியில் மார்ச்சு மாதம் 2உ பகல்டாவிலும், 3உ ராயன்ரங்கன்பூரிலும், 4, 5உ களில் டாட்டா இரும்புச் சுரங்கம் இருக்கும் பேசை என்னும் இடத்திலும், 6உ மிகப் பெரிய மலையின் அடிவாரத்திலுள்ள பங்கிரிபோசி என்னும் இடத்திலும் ஸ்வாமிகள் முகாம் செய்தார்கள். இவைகளெல்லாம் அடர்ந்த காடுகள் நிறைந்த இடங்களாகும், வன விலங்குகள் அங்கு ஏராளமாக சஞ்சரிக்கும். ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊரைக் காண சுமார் 15 மைல்கள் செல்லவேண்டும். சாலை வழிகளிலெல்லாம் மயூர்பஞ்ச் சமஸ்தான அதிகாரிகள் தக்கவாறு போலீஸ் பந்தோபஸ்துக்களை அமைத்திருந்ததுடன், ஸ்வாமிகளது சவாரி* யுடன் ஆயுதம் தாங்கிய போலீஸ் படைகள் பின் தொடர்ந்து வர ஏற்பாடு செய்திருந்தனர்.

மயூர்பஞ்ச் சமஸ்தானத்திற்கு விஜயம்.

சைபாஸாவிலிருந்து மயூர்பஞ்ச் சமஸ்தானத்தின் தலைநகரமாகிய பாரிபாடா என்னும் பட்டணம் தென் கிழக்கில் 25 மைல்கள் தூரத்திலுள்ளது. ஸ்வாமிகள் மார்ச்சு மாதம் 7உ பாரிபாடாவுக்கு விஜயம் செய்தார்கள். சமஸ்தான திவான் கே. ஸி. நியோகியும், நியாயாதிபதிகளும், மற்ற உயர்தர உத்தியோகஸ்தர்களும் ஸ்வாமிகளை அவ்வூர் எல்லையில் வரவேற்று ஊர்வலமாக அவ்வூர்த் தர்மசாலைக்கு அழைத்து வந்தார்கள். ஸ்வாமிகள் அவ்வூரிலுள்ள வாரணேச்வரர் ஆலயத்தை அடைந்து

* சவாரி என்னும் சொல், பழைய காலத்தில் மன்னர்களும் மதத் தலைவர்களும் குதிரை மீதோ பல்லக்குகளிலோ பரிவாரங்கள் புடை சூழ வெளிக் கிளம்புவதை குறிப்பதாகும்.

அவ்விடமுள்ள மகாலிங்கத்தைத் தரிசித்துக்கொண்டார்கள். அந்த ஆலயத்தில் கருங்கல் தரையில் ஓர் கிணறு அமைந்துள்ளது. அக் கிணற்றின் சுற்றுப்புறமும் கல்பாறையாகவே காணப்படு கின்றது. அந்தக்கிணற்றிலிருந்து கைப்பிடி சுவரில் உள்ள துவாரங் கள் வழியே எப்பொழுதும் குறையாது தண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருக்கிறது. இது மிகவும் அதிசயிக்கத் தக்கதாக இருக் கிறது. பாரிபாடாவில் ஸ்வாமிகள் மார்ச்சு மாதம் 7உ முதல் 13உ தேதிவரை ஒரு வாரம் விஜயம் செய்திருந்தார்கள். ஊர் மக்களும் ஸ்வாமிகளுக்கு பிக்ஷை, பாத பூஜை முதலியவைகளை நடத்திவைத்தார்கள். பாரிபாடாவிலிருந்து 13உ மாலை புறப் பட்டு 14, 15உ களில் குண்டா என்னும் ஊரிலும் 16உ உட்லா என்னும் இடத்திலும் 17, 18உ களில் கப்தீபாடா என்னும் இடத்திலும் விஜயம் செய்தார்கள். கப்தீபாடா என்னும் இடம் மயூர்பஞ்ச் சமஸ்தானத்திற்கு உள்ளடங்கிய ஓர் சிற்றரசாகும். மகாபாரதத்தில் பிரசித்தி பெற்று விளங்கும் விராடநகர் என்று இதைக் கூறுகின்றார்கள்

நீலகிரி சமஸ்தானத் தின் வழியாக யாத் திரை.

மயூர்பஞ்ச் எல்லையைக் கடந்து ஸ்வாமிகள் யாத்திரை நீலகிரி சமஸ்தானத்தின் வழியாகத் தொடங்கிற்று. 1936 மார்ச்சு மாதம் 19உ ஸ்வாமிகள் அந்தச் சமஸ்தானத்திலுள்ள சுஜனுகாட் என்னும் தலத்திற்கு விஜயமானார்கள். அத்தலத்தில் சண்டீ தேவியின் ஓர் விசால மான ஆலயம் அமைந்துள்ளது. சாதாரண மாக எங்கும் சிம்ஹத்தை வாகனமாகக் கொண்டுள்ள தேவி அங்கு வராகத்தின் (பன்றியின்) மேல் வீற்றிருப்பது ஓர் அதிசயமாகும், அத்தலத்தில் ஸ்வாமிகள் மார்ச்சு 22உ வரை நான்கு நாட்கள் தங்கியிருந்தார்கள். அவ்வூர் உயர்தரப் பள்ளியின் நிர்வாகிகளும், ஆசிரியர்களும் ஸ்வாமிகளை அப்பள்ளிக்கு விஜயம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண் டார்கள். ஸ்வாமிகளும் அங்கு விஜயம் செய்து ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சில உபதேச மொழிகளைக் கூறினார்கள். ஸ்வாமிகளது யாத்திரைக்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் நீலகிரி சமஸ்தான அதிகாரிகள் செவ்வனே செய்திருந்தார்கள். பின்னர் தாது வருடத்திய யுகாதிபண்டிகை (சாந்திரமான வருடப் பிறப்பு) கண்டபாரர என்னும் சிற்றூரில் 23உ நடைபெற்றது. அந்த ஊர் ஒரியா மாகாணத்தின் பலாசூர் ஜில்லாவில் அமைந்

துள்ளது. அங்கு ஸ்வாமிகள் 2 நாட்கள் தங்கி சோரா, பத்ரக், பண்டாரிபுக்கூர், என்னும் ஊர்களின் வழியாக யாத்திரையை மேலும் தொடங்கினர்கள். 1936 மார்ச்சு 31உ முதல் ஏப்ரல் 3உ வரை பண்டாரிபுக்கூரில் ஸ்ரீராமநவமி கொண்டாடப்பட்டது. அன்று ஸ்வாமிகள் வைதரணி நதியில் ஸ்நானம் செய்து கொண்டார்கள்.

ஒரிஸாவின் கலைக் கோவிலாகிய ஜாஜ்பூருக்கு விஜயம்.

1936 ஏப்ரல் மாதம் 4உ பண்டாரிபுக்கூரிலிருந்து ஸ்வாமிகள் ஒரிஸா மாகாணம் கட்டாக் ஜில்லாவிலுள்ள ஜாஜ்பூருக்கு விஜயமானர்கள். ஒரிஸாவின் புராதன கலைகளுக்குச் சின்னமாக விளங்குவது ஜாஜ்பூர் நகரம். இங்கு வைதரணீ நதியானது உத்திரவாகினியாக வடக்கு நோக்கிச் செல்கின்றது. வருடம் முழுவதும் இவ்வூர் ஓர் யாத்திரைத் தலமாக விளங்கி வருகின்றது. மகாபாரதத்தில் கூறப்பட்ட பதினெட்டு சக்தி பீடங்களில் விராஜபீடம் எனப்பெயர் பெற்று இது விளங்கி வருகின்றது. கயாசுரனது தலை கயையிலும், நாபி (தொப்புள்) இந்த ஜாஜ்பூர் க்ஷேத்திரத்திலும் இருப்பதாகப் புராணம் கூறுகின்றது. விராஜ பீடத்திற்கு அருகில் உள்ள நாபிகயாவில் பித்ருக்களின் பொருட்டு இன்றும் மக்கள் பிண்டம் போட்டு வருகின்றார்கள். ஜாஜ்பூரைச் சுற்றிலும் கியாதிபெற்ற 12 தேவாலயங்களும், தீர்த்தங்களும் விளங்கிவருகின்றன. ஒரியா நாட்டின் சிற்பக் கலையை விளக்கும் வண்ணம் அவை மிகப் பெரிய கோபுரங்கள் அமையப் பெற்றவைகளாகவும் சித்திரங்கள் செதுக்கப்பட்டவைகளாகவும் விளங்கிவருகின்றன. இந்த 12 ஆலயங்களையும் தவிர மற்றும் கணக்கற்ற ஆலயங்களும் அங்குக் காணப்பெறுகின்றன. அங்குள்ள எண்ணிறந்த ஆலயங்களைக் காணும்பொழுது அவைகளை காசி, காஞ்சி, கும்பகோணம் இவ்விடங்களிலுள்ள ஆலயங்களுக்கே ஒப்பிடலாம். அங்கு ஸப்த மாதாக்களின் விக்ரகங்கள் வேறு எங்கும் காணமுடியாதபடி அவ்வளவு பெரியனவாக அமைந்துள்ளன. சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர் இத்தலத்தில் 100 சோமயாஜிகள் நிறைந்திருந்தனர் எனக் கூறப்படுகிறது.* அதே காரணமாகவே இந்நகருக்கு யாஜீபுரம் அல்லது ஜாஜ்புரம்

* சோமயாகம் என்னும் யாகத்தைச் செய்தவர்களே சோமயாஜிகள் எனக் கூறப்படுவர்.

என்று பெயர் வழங்கலாயிற்று.* வைதரணீ நதியின் கீழ்ப் பாகத்தில் மறைமுகமாக அந்தர்வேதி அல்லது யாகவேதீ என்னும் மேடை அங்கு அமைந்திருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. இதன் காரணமாகவே அங்கு இன்றுகூட வைதரணீ கோதா னங்கள் செய்யப்பட்டு வருகின்றன. அங்குப் பண்டிதர்கள் புராதனக் கலைகளை நன்கு காப்பாற்றிவருகின்றனர்.

இத்தலத்தில் மக்கள் ஸ்வாமிகளை மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்று ஸ்வாமிகளும் அவர்களின் பரிவாரங்களும் தங்குவ தற்கு ஏற்ற இடங்களை அமைத்துக் கொடுத்து முறைப்படி ஸ்வாமிகளுக்குப் பாதபூஜை முதலியவற்றைச் செய்து வைத்தனர். அத்தலத்தில் ஸ்வாமிகள் 5 நாட்கள் தங்கி இருந்தார்கள். அச் சமயம் அங்குள்ள 12 தேவாலயங்களையும் மற்றும் பல சிறிய தேவாலயங்களையும் ஸ்வாமிகள் தரிசித்துக்கொண்டார்கள். தேவாலய நிர்வாகிகளும், பண்டாக்களும் ஸ்வாமிகளுக்கு தனிச் சிறப்புடன் ஆலயங்களில் மரியாதைகளைச் செய்தார்கள். அவ்விட முள்ள பண்டித சபையினர், 7உ ஸ்வாமிகளுக்கு ஓர் வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தார்கள். அத்தலத்தில் மகா பிரதோஷத் தன்று ஸ்வாமிகள் வைதரணீ நதியில் ஸ்நானம் செய்து, ஸ்ரீ வித்யா தரபதி என்னும் புகழ்பெற்ற பண்டாவுக்கு கறவைப் பசு ஒன்றை தானமாக அளித்தார்கள். அதனுடன் பால் கறக்க வெள்ளிப் பாத்திரங்களையும் அளித்து விலையுயர்ந்த பட்டு வஸ்திரங்களையும் அவருக்குப் பரிசாக அளித்தார்கள்.

1936 ஏப்ரல் மாதம் 8உ இரவு ஸ்வாமிகள் ஜாஜ்பூரிலிருந்து புறப்பட்டு, 9உ ஹரிபூரில் தங்கி, அவ்விடமிருந்து ஒரே மணல் மயமாக இருந்த பிரம்மணி நதியைக் கடந்து, 10உ தர்மசர்லா என்னும் கிராமத்திற்கு விஜயம் செய்து அங்கு 3 நாட்கள் தங்கிருந்து அவ்விடமிருந்து மணல் பிரதேசங்களை வெகு பிரயாசையுடன் கடந்து, 13, 14உ களில் டாங்கி என்னும் ஊரில் விஜயம் செய்து, அவ்விடம் மகாநதியின் கிளை நதி ஒன்றையும் பின்னர் மகாநதியை யும் கடந்து 15உ கட்டாக்கை அடைந்தார்கள். கட்டாக்கிலுள்ள மயூர்பஞ்ச சமஸ்தான அரண்மனையில் ஸ்வாமிகளும் பரிவாரங்

கட்டாக்கில் சங்கர ஜயந்தி.

---

*இலக்கணத்தின் ஓர் விதிப்படி யா என்னும் எழுத்து ஜா வாக மாறியிருக்கிறது.

களும் தங்குவதற்கு இட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. ஒரிஸாவின் புதிய தலைநகராகிய புவனேச்வரத்திற்கும் ஸ்வாமிகள் விஜயம் செய்து, அங்கு ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டார்கள். ஒரிஸா கவர்ன்மெண்டின் கட்டிடப் பிரிவில் ஸ்பெஷல் இன்ஜினீய ராக அக்காலத்தில் அங்கு வேலை பார்த்து வந்த எல். வேங்கட கிருஷ்ண ஐயரது ஜாகையின் காம்பௌண்டின் முன்புறத்தில் அமைக்கப் பெற்ற பெரியதொரு அலங்காரக் கொட்டகையில் அவ்வருடத்திய சங்கரஜயந்தி நடைபெற்றது. பெரிய வித்வத் சபை ஒன்றும் அப்பொழுது கூட்டப்பட்டது. பண்டிதர்கள் பலர் ஸ்ரீ ஆதி சங்கராசாரிய ஸ்வாமிகளின் அவதாரத்தைப் பற்றியும், அவர்களின் அத்வைத சித்தாந்தத்தைப் பற்றியும் சொற்பொழி வாற்றினார்கள். ஜயந்தி அன்று யானை மீது ஆதி சங்கரர் படத்தையும், பாதுகைகளையும் வைத்து ஓர் மிகப் பெரிய ஊர்வலம் மகாநதிக்குச் சென்றது. மகாநதியில் பாதுகைகளுக்கு விதிப்படி அபிஷேகம் செய்விக்கப்பட்டது. இரவில் அங்கிருந்து பெரியதொரு ஊர்வலம் புறப்பட்டது. மடத்தின் நாதஸ்வர கோஷ்டியுடனும் அத்தேசத்து வாத்ய கோஷ்டிகளுடனும் கால் நடையாக வந்து கொண்டிருந்த ஸ்வாமிகளை ஆயிரக்கணக்கான நகர மக்கள் அன்று தரிசித்துக்கொண்டார்கள். அன்று ஓர் பெரிய வாண வேடிக்கையையும் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். இந்த ஏற்பாடுகளெல்லாம் இன்ஜினீயர் எல். வேங்கிடகிருஷ்ண ஐயரது மேற்பார்வையில் மிகுந்த சீரிய முறையில் நடைபெற்றன. ஸ்வாமிகள் கட்டாக்கில் விஜயம் செய்திருந்தபொழுது பூரி கோவர்த்தன மடத்தின் நிர்வாகிகள் கட்டாக்கிற்கு வந்து, ஸ்வாமி களைப் பூரிக்கு விஜயம் செய்யவேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டனர்.

சாக்ஷி கோபால் தர்சனம்.

1936 ஏப்ரல் 15உ முதல் 24உ வரை 10 நாட்கள் ஸ்வாமி கள் கட்டாக்கில் முகாம் செய்து, 25உ அவ்விடமிருந்து புறப் பட்டு, சிறிய கிராமங்களின் வழியாக 30உ பலியநாத் என்னும் ஊரிலும் அடுத்த மே மாதம் 1உ பால்காட்டீ என்னும் ஊரிலும், 2உ முகுந்தாபூரிலும் விஜயம் செய்தார்கள். முகுந்தாபூரில் ஸ்வாமி கள் முகாம் செய்திருந்தபொழுது, ஜகன்னாத முக்தி மண்டப சபையார் ஓர் அவசரக் கூட்டம் கூட்டி, ஸ்வாமிகளை ஜகந்நாத திற்கு விஜயம் செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்வதாக ஓர்

தீர்மானம் நிறைவேற்றினார்கள். அத்தீர்மானத்தின் கையெழுத்துப் பிரதியுடன் சபையின் பிரதிநிதிகள் முகுந்தாபூரில் ஸ்வாமிகளைத் தரிசித்துக்கொண்டு, ஸ்வாமிகளிடம் அதைச் சமர்ப்பித்தனர். ஸ்வாமிகளும் அவர்கள் வரவேற்பை ஏற்றுக்கொண்டு இரண்டொருநாட்களில் பூரிக்கு விஜயம் செய்வதாக வாக்களித்தார்கள்.

1936 மே மாதம் 3வ ஸ்வாமிகள் சாக்ஷிகோபால் என்னும் பழமையான புகழ் பெற்ற தலத்திற்கு விஜயம் செய்தார்கள். சாக்ஷிகோபாலைப் பற்றிய ஓர் கதையை ஒரிஸா மக்கள் கர்ண பரம்பரையாகக் கூறி வருகின்றனர். அந்தச் சாக்ஷிகோபால் விக்ரகம் வடமதுரையில் இருந்ததென்றும், ஓர் அந்தணருக்குச் சாக்ஷி சொல்ல அந்தக் கோபாலனே காஞ்சிபுரத்திற்கு ஒரு சமயம் வந்ததாகவும் கூறப்படுகிறது. பின்னர் காஞ்சிபுரத்திலிருந்து பூரி மன்னனாகிய புருஷோத்தம மகாராஜா அந்தக் கோபால மூர்த்தியை பூரிக்கு எடுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது. அவ்வந்தணரது கதைச் சுருக்கம் பின் வருமாறு :—

காஞ்சீ மண்டலத்திருந்து இரண்டு அந்தணர்கள் கங்கா யாத்திரை சென்றனர். அவர்களிலொருவர் வயது சென்றவர்; மற்றொருவர் இளைஞர். அவ்விளைஞர் பிரம்மசாரி. போகும் வழியில் வயதுசென்றவர் உடல்நிலை குன்றி, அவதியுற்றார். அப்பொழுது இளைஞர் அவரைத் தூக்கிச் சென்று, அவரது வியாதியைக் குணப்படுத்தி யாத்திரையை செவ்வனவே நடக்கச் செய்தார். மகிழ்ச்சியுற்ற அந்தக் கிழவர் அப்பொழுது தம்பெண்ணை அவ்விளைஞருக்கு மணம் செய்துவைப்பதாக வாக்களித்தார். அவ்விதம் வாக்களிப்பு வடமதுரையில் இந்தக் கோபாலன் சந்நிதானத்திலேயே நடைபெற்றது. ஊர் திரும்பிய இளைஞர் கிழவரைப் பார்த்து அவருடைய பெண்ணைத் தனக்குத் திருமணம் செய்து வைத்து அவர் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி வைக்கும்படி கேட்டுக்கொண்டார். ஆனால் அந்தக் கிழவரோ, (ஜாதியில் அந்த வாலிபர் தம்மைவிடக் கீழ்ப்பட்டவர் என்பதின் காரணமாக) தன் பெண்ணை அவருக்கு விவாகம் செய்துகொடுக்க மறுத்து விட்டார். வாலிபர் இந்த வழக்கைப் பற்றிஅவ்வூர் அரசனிடம் முறையிட்டுக்கொண்டார். கிழவரது வாக்குறுதிக்கு ஏதாவது சாக்ஷி உண்டாவென்று அரசன் கேட்க, மதுராபுரியில் வீற்றிருக்கும் கோபாலனே தனக்குச் சாக்ஷியென அந்த வாலிபர்

கூறினர். அந்தக் கோபாலனை அழைத்து வரும்படி அப்பொழுது அந்த அரசன் வாலிபரிடம் கட்டளையிட, மறுமுறையும் அந்த இளைஞர் மதுரா நகரம் சென்று, கோபாலனிடம் முறையிட்டு நிகழ்ந்தனவற்றையெல்லாம் விண்ணப்பித்துக்கொண்டார். கோபால னும் தாம் நேரில் வந்து, அரசனிடம் சாக்ஷி கூறுவதாக அருளிய அசரீரியான சொற்கள் அந்த இளைஞரின் காதில் விழுந்தன. அப்படியே கோபாலன் அந்த இளைஞரைத் தொடர்ந்து வரும் பொழுது, இளைஞர் பின்புறம் திரும்பிப் பார்க்கக்கூடாதென்றும், அவ்விதம் அவர் திரும்பிப் பார்த்தால், அவர் எந்த இடத்தில் தன்னைத் திரும்பிப் பார்க்கின்றாரோ அதே இடத்தில் தாம் தங்கிவிடு வதாகவும் அந்த அசரீரிச்சொற்கள் கூறின. இந்த நிபந்தனையுடன் கோபாலன் பின் தொடர, இளைஞர் பல நாடுகளைக் கடந்து காஞ்சீ புரத்தை அடைந்தார். அந்நகரை அடைந்ததும் தமது சொந்த ஊரை அடைந்த மகிழ்ச்சியாலும், பின்னர் நடைபெறப்போகும் நிகழ்ச்சிகளை எண்ணியதாலும், அந்த இளைஞர் திடீரெனப் பின் புறம் திரும்பிப் பார்க்க, அக்கணத்திலேயே கோபாலன் சிலை உருவ மாக மாறி அங்கேயே தங்கிவிட்டார். இந்த அதிசய நிகழ்ச்சி ஊரெங்கிலும் பரவ, அரசனும் நேரில் வந்து சாக்ஷிகோபாலரைத் தரிசித்துக்கொண்டார். வயோதிக அந்தணரும் பெரும் மகிழ்ச்சி யுற்றவராகித் தமது பெண்ணை அந்த வாலிபருக்குத் திருமணம் செய்துவைத்தார்.

பின்னர் ஒரு சமயம் பூரி மன்னர் காஞ்சி மன்னரது பெண்ணை மணம் புரிய வேண்டிக் காஞ்சிக்கு வந்து, பத்மாவதி என்னும் ராஜகுமாரியை மணந்து அவளுடன் பூரிக்குச் சென்றபோது, அந்தக் கோபால விக்ரஹத்தையும் மன்னரிடம் கேட்டுவாங்கி எடுத்துச் சென்றாரென ஒரு வரலாறு கூறப்படுகிறது. இந்தக் கதை மிகவும் விரிவாக ஒரிஸாவில் வழங்கப்பட்டு வருகிறது. அதன் கருத்து மாத்திரம் இவ்விடம் தரப்பட்டுள்ளது. கண்ணனே சாக்ஷி கூற வந்ததின் காரணமாக இந்த மூர்த்திக்குச் சாக்ஷிகோபாலனெனப் பெயர் விளங்குகிறது. ஸ்வாமிகள் மே மாதம் 2, 3வ இந்தஸ்தலத்தில் தங்கியிருந்து சாக்ஷி கோபாலரைத் தரிசித்துக்கொண்டார்கள். ஸ்வாமிகள் வரவை ஒட்டித் தேவஸ் தானத்தில் விசேஷமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. தேவஸ்தான பண்டாக்களும், நிர்வாகிகளும் ஸ்வாமிகளைத் தேவஸ் தானத்தில் வரவேற்று மரியாதைகள் செய்தனர்.

மே மாதம் 4உ இரவு, ஸ்வாமிகள் ஹரிகிருஷ்ணபூர் சாஸனத்திற்கு (அக்ரஹாரம்) விஜயம் செய்தார்கள். அவ்வூரிலுள்ள பண்டிதர்களும், கவிகளும் ஸ்வாமிகளுக்கு ஓர் வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தார்கள். 5உ விடியும் முன்னர் ஸ்வாமிகள் பூரி ஜகந்நாத்தின் எல்லைப்புறத்திலுள்ள சந்தன்தலாப் என்னும் தடாகத்தில் நீராடினார்கள். அந்தத் தடாகத்தினருகில் ஓர் அலங்காரக் கொட்டகை அமைக்கப் பெற்றிருந்தது. பூரியிலுள்ள பிரமுகர்கள் பலர் ஸ்வாமிகளை வரவேற்பதற்கு அதிகாலையிலேயே அவ்விடம் கூடியிருந்தனர். அவர்களில் பூரியிலுள்ள நான்கு அத்வைத மடங்களின் சந்நியாசிகளும், பூரி ராஜாவும், முக்திமண்டப பண்டிதர்களும், சர்க்கார் அதிகாரிகளும், மற்றும் பொதுமக்களின் கூட்டமும் ஏராளமாக நிறைந்திருந்தனர். ஜகத்குருவைத் தரிசிப்பதற்கென பல்லாயிரக்கணக்கான மக்கள் அதிகாலையில் அங்குக் கூடியிருந்த காட்சி எவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. ஊர் முழுவதும் அன்று தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொருவரும் தங்களால் இயன்றவரை ஸ்வாமிகளது வரவேற்புப் பணியில் ஈடுபட்டவராகக் காணப்பட்டனர். காலை 7 மணிக்கு சந்தன்தலாப்புக்கருகில் ஸ்வாமிகளுக்கு ஓர் வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது அதன் பின் சிறிது நேரத்திற்கெல்லாம் அவ்விடத்திலிருந்து ஓர் பெரிய ஊர்வலம் கிளம்பிற்று. அந்த ஊர்வலத்தில் தேவஸ்தானத்தைச் சேர்ந்த விருதுகளும், பூரி ராஜாவின் விருதுகளும், மடத்தின் யானை, குதிரை, பாலா, மகரத்தோரணம், குடைகள் முதலான விருதுகளும் முன் செல்ல, மடத்தின் நாதஸ்வர வித்வான்களுடைய மேள வாத்யத்துடன் ஊர்வலம் கிளம்பிற்று. வீதிகளின் இருபுறங்களிலும் மக்கள் ஏராளமாகக் கூடி ஸ்வாமிகளைத் தரிசித்தனர். ஊர்வலம் காலை 10 மணிக்குக் கடற்கரையிலுள்ள கோவர்த்தன மடத்தை அடைந்தது. அந்த மடத்தின் வாயிலில் ஸ்வாமிகளுக்குப் பூர்ண கும்பம் மரியாதைகள் காட்டப்பட்டன. பின்னர் ஸ்வாமிகளுக்கு மக்கள் பாதபூஜை செய்தனர். ஸ்வாமிகள் கோவர்த்தன மடத்தின் ஸிம்மாஸனத்தில் அமர, கோவர்த்தன மடம், சங்கரானந்த மடம், சிவதீர்த்த மடம், கோபால தீர்த்த மடம், இந்த நான்கு மடங்களின் சந்நியாசிகளும் நிர்வாகிகளும் ஸ்வாமிகளை வணங்கினர். ஸ்வாமிகளுக்கு அப்

பூரி ஜகந்நாதத்திற்கு விஜயம்.

பொழுது காணிக்கைகளும் செலுத்தப்பட்டன. அன்று பகல் ஒரு மணிக்கு ஸ்வாமிகள் பூரியின் பிரதான ஆலயமான நீலாத்ரிக்கு விஜயம் செய்தார்கள். அங்குத் தேவஸ்தான நிர்வாகிகளும், பண்டாக்களும் தேவஸ்தான மரியாதைகளுடன் ஸ்வாமிகளை வரவேற்று ஜகந்நாதர், பலராமர் சுபத்ரா தேவி, ஸ்ரீதேவி, பூதேவி. விமலாதேவி, காஞ்சி கணபதி, நரசிம்மமூர்த்தி இவைகளின் சந்நிதிகளில் ஸ்வாமி தரிசனம் செய்துவைத்தார்கள். பொன்னால் ஆன புஷ்பங்களால் தொடுக்கப்பட்ட மாலைகளை எல்லாச் சந்நிதிகளுக்கும் ஸ்வாமிகள் சமர்ப்பணம் செய்தார்கள். அன்றிரவு கோபால தீர்த்த மடத்தின் அதிபரும், மற்றும் ஸ்ரீமத் வாசுதேவ தீர்த்த ஸ்வாமிகளும் -அவர்களின் மடங்களின் சார்பாக ஸ்வாமிகளுக்குக் காணிக்கைகள் செலுத்தி மரியாதை செய்தனர்.

ஜகந்நாதத்தில் பண்டிதர்களின் மகா சபை ஒன்று பழங்காலந் தொட்டு இருந்து வருகிறது. ஜகந்நாதத்தின் ஆலயம் எவ்வளவு பழமையானதோ அவ்வளவு பழமை வாய்ந்தது இந்தச் சபை.

ஜகந்நாதம் முக்தி மண்டப சபையின் பீடத்தில் அமர்ந்தது.

பூரியை அடுத்த 18 சாஸனங்களின் பண்டிதர்கள் இந்த சபையில் அங்கம் வகிக்கிறார்கள். இந்தச் சபையும் பூரியின் ஆலயத்திலேயே அமைந்துள்ளது. பூரியிலுள்ள நான்கு அத்வைத மடங்களில் எந்த மடத்தின் அதிபர் அதிக வருடங்கள் சந்யாஸ ஆசிரமத்துடன் இருந்துள்ளாரோ அவரே அந்தச் சபைக்குத் தலைவராக இருந்து வருவது பழங்காலத்து ஏற்பாடாகும். அந்த நாட்டில் தர்ம சாஸ்திரம் சம்பந்தமான சர்ச்சைகள் எழும்போதெல்லாம், அவைபற்றி இந்தச் சபை செய்யும் தீர்ப்பே முடிவானதாகும், இந்தச் சபை கூடும் இடம் ஆலயத்திலுள்ள முக்தி மண்டபமாகும். ஆகவே இதற்கு முக்தி மண்டப சபை என்று பெயர் வழங்கலாயிற்று. இந்த மண்டபத்தின் நடுவில் அமைந்துள்ள புனிதமானதும் பழமையானதுமான பீடத்தில் ஆதிசங்கரரின் நேர் பரம்பரையைச் சார்ந்த ஆசார்ய புருஷர்களே அமர்வதற்குத் தகுதியுள்ளவர்களென ஓர் விதி ஏற்பட்டுள்ளது. இம்மாதிரி ஓர் சந்தர்ப்பம் நிகழ்வது சரித்திரத்திலேயே மிகவும் அரிதாக இருக்குமாதலால், இதை ஓர் பெரும் விழாவாக அன்று கொண்டாட'வேண்டுமென முக்தி மண்டப சபையார் தீர்மானித்தார்கள். இத்தீர்மானத்தை ஸ்வாமிகளிடம் அவர்கள் விண்ணப்பித்துக் கொள்ள, ஸ்வாமிகளும் அன்றிரவு மறுமுறை தேவால

யத்திற்கு விஜயம் செய்து, முதலில் எல்லாச் சந்நிதிகளிலும் ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டார்கள். பண்டிதர்கள் ஸ்வாமிகளைத் தக்க மரியாதைகளுடன் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்த முக்தி மண்டப சபைக்கு அழைத்துச் சென்று அச்சபையின் பீடத்தில் அமர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள். ஸ்வாமிகள் அந்தப் பீடத்தில் அமர்ந்தவுடன் எல்லோரும் ஸ்வாமிகளைப் புஷ்பங்களினால் அர்ச்சித்து அவர்களை வணங்கி, ஜய கோஷத்தை எழுப்பினார்கள். இந்தக் கோலாகலமான வைபவத்தைக்காண ஆயிரக்கணக்கான மக்கள் ஆலயத்தில் அப்பொழுது கூடியிருந்தனர். சபையின் சார்பாக ஸ்வாமிகளுக்கு வடமொழியில் ஓர் உபசாரப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. சங்கரானந்த மடத்தின் அதிபரும், முக்தி மண்டபத்தின் தலைவருமான வயது முதிர்ந்த ஸ்வாமிகளும், மற்றும் பல பண்டிதர்களும் ஆதி சங்கரர் பாரத பூமி முழுவதும் திக் விஜயம் செய்ததைப் பற்றியும், அவர்கள் ஸ்தாபித்த மடங்களைப்பற்றியும், அத்வைத சித்தாந்தத்தைப் பற்றியும் விரிவாகப் பேசி, நமது ஸ்வாமிகள் ஆதிசங்கரரைப் போலவே இந்நாளில் பாரத பூமியில் திக்விஜயம் செய்து உலக க்ஷேமத்திற்குப் பாடுபட்டு வருகிறார்களென்றும், இம்மாதிரி மகா புருஷர்கள் விஜயம் செய்வது மிகவும் அரிதாகவே நேரும் என்றும் கூறினார்கள். மேலும் ஸ்வாமிகள் பூரிக்கு விஜயம் செய்தது ஒரிஸா மக்கள் செய்த புண்ணியப் பயனேயாகும் என்றும், ஸ்வாமிகள் அத்தலத்தில் தங்கியிருக்கும் வரை மக்கள் அவர்களது விஜயத்தை மிகவும் சிறப்பாகக் கொண்டாட அவரவர்களாலான பணிகளை உள்ளன்புடன் நடத்திவைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். பின்னர் ஸ்வாமிகள் வடமொழியில் ஒரு சொற்பொழிவாற்றினார்கள். அதில் பாரத நாட்டின் மற்ற பாகங்களை விட ஒரிஸா மாகாணத்தில் வேதக் கலை நன்கு காப்பாற்றப்பட்டு வருவதைக் காண தாம் மிகவும் மகிழ்ச்சியுறுவதாகவும், புனிதமான அந்த ஜகந்நாத க்ஷேத்திரத்திலுள்ள முக்தி மண்ட சபையார் தமக்கு அன்று அளித்த பெருமைகளெல்லாம் எவருடைய திருவடிகளை யாவரும் வணங்குகின்றோமோ, நாட்டிலிருந்த பல துர்மதங்கள் எவரது அவதாரத்தினால் மறைந்தனவோ, அப்படிப்பட்ட ஆதி சங்கரருக்கே சாரும் என்றும், ஜகந்நாத பண்டிதர்கள் பாரத பூமிக்கே வழிகாட்டியாக இருந்து உலகத்தில் தர்மம் பரவ பாடுபட வேண்டுமென்றும் கூறினார்கள்.

1936 மே மாதம் 6உ ஸ்வாமிகள் பூரியிலுள்ள தாஸ்பூர் ராஜாவின் அரண்மனையில் தங்கியிருந்தார்கள். அன்று பௌர்ணமி; சந்நியாசிகள் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை பௌர்ணமியில்தான் வபனம் செய்து கொள்ளுவது வழக்கம். அன்றே வபன பூர்ணமியும் நேர்ந்தது. அந்த நாட்களில் அநேகமாக ஆறுகளிலேயே ஸ்வாமிகள் ஸ்நானம் செய்வார்கள்; கடலில் ஸ்நானம் செய்ய நேர்ந்தால் அது மேலும் புனிதமாகக் கருதப்படும். ஸ்வாமிகள் அன்று கடல் ஸ்நானத்திற்குச் சென்றபொழுது கடல் கரையில் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். ஸ்வாமிகள் அன்று மகோததி என்னும் கிழக்குக் கடலில் விதிப்படி நீராடினார்கள். (கிழக்கேயுள்ள வங்கக்கடலுக்கு மகோததியென்றும், மேற்கிலுள்ள அரபிக் கடலுக்கு ரத்னாகரம் என்றும், பெயர் விளங்கி வருகின்றது.) பூரியிலுள்ள சந்நியாசிகள் பலர் அன்று ஸ்வாமிகளுடன் சமுத்திர ஸ்நானம் செய்துகொண்டார்கள்.

பூரியில் சமுத்திர ஸ்நானம்.

1936 மே மாதம் 7உ, ஸ்வாமிகள் பூரியிலுள்ள சங்கரவித்யா பீடத்திற்கு விஜயம் செய்து, அவ்விடம் பயிலும் மாணவர்களுக்கும், ஆசிரியர்களான பண்டிதர்களுக்கும் உபதேச மொழிகளைக் கூறினார்கள். மே மாதம் 8உ தாஸ்பூர் ராஜாவின் அரண்மனையில் ஸ்வாமிகளுக்கு பொது மக்கள் பிக்ஷை, பாதபூஜை முதலியவைகளைச் செய்துவைத்தார்கள். 9உ ஸ்வாமிகளது முன்னிலையில் ஒரிஸா நாட்டுப் பண்டிதர்கள் சபை ஒன்று கூட்டப் பட்டது. அந்தச் சபையில் சுமார் 100 பண்டிதர்களுக்கு மேல் விஜயம் செய்திருந்தனர். சாஸ்திரங்களில் விளக்கங்கள் கூறுவதில் பண்டிதர்கள் ஒவ்வொருவரும் தங்களது புலமையை ஸ்வாமிகளின் முன்பு காட்டிக்கொண்டனர். ஸ்வாமிகள் அந்தச் சபையில் விஜயம் செய்திருந்த பண்டிதர்களில் 70 பேருக்குக் காஷ்மீர் சால்வைகளையும், பணப் பரிசுகளையும் அளித்தார்கள். மற்றவர்களுக்கும் அவரவர்கள் பெருமைக்குத் தக்கவாறு பரிசுகள் வழங்கப்பட்டன. வித்வான்களின் சமூகத்தை அதுவரை எவரும் இவ்விதம் பெருமைப் படுத்தியதில்லை என அங்குள்ள மக்கள் பேசிக்கொண்டனர். பண்டிதர்களும் பெரும் மகிழ்ச்சியுற்றனர். அவர்களில் முதியோர்கள் சிலர் அதற்கு 50 வருடங்களுக்கு முன்னர், 1886-ஆவது வருடம், காமகோடி பீடத்தின் 65-ஆவது ஆசாரியர்

பூரியில் பண்டிதர்களுக்குப் பரிசுகள் வழங்கியது.

களான ஸ்ரீ மகாதேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் பூரிக்கு விஜயம் செய்து பண்டிதர்களை ஆதரித்த பெருமைகளைப்பற்றி ஸ்வாமிகளிடம் விண்ணப்பித்துக்கொண்டு, 50 வருடங்களுக்குப் பின்னர் நடைபெறும் அதே காட்சியை அன்று தாங்கள் காணும் பாக்யம் பெற்றதாகக் கூறினார்கள். ஸ்வாமிகள் மே மாதம் 5உ முதல் 9உ முடிய, 5 நாட்கள் பூரியில் தங்கி விட்டு 10உ மறுமுறையாக சாக்ஷிகோபால் தலத்திற்கு விஜயம் செய்தார்கள்.

சில்கா ஏரியையும், மலைப்பிரதேசத்தையும் கடந்தது

1936வது வருடம் மே மாதம் 10உ, இரவு, ஸ்வாமிகள் சாக்ஷி கோபால் தலத்திலிருந்து புறப்பட்டு மறு நாள் டிலாங் என்னும் ஊரில் தங்கி, 12உ குர்தாவுக்கு விஜயமானார்கள். குர்தா பூரி ஜில்லாவிலுள்ள ஒரு பெரிய பட்டணம். பூரியிலிருந்து சுமார் 40 மைல்கள் தூரத்திலுள்ளது. அன்று பகல் அவ்விடம் தங்கி விட்டு அன்றிரவே யாத்திரையை மேலும் தொடங்கினார்கள். அவ்விடமிருந்து சுமார் தெற்கே 85 மைல்கள் தூரத்திலுள்ள சத்திரபூரை நோக்கி யாத்திரை புறப்பட்டது. இந்தத் தூரத்தை கால் நடையாகக் கடப்பது எளிதான காரியமன்று. பாதையில் இருபுறங்களிலும் உயர்ந்த மலைத்தொடர்ச்சிகள்; சேர்ந்தாற் போல் பல மைல்கள் வரை அடர்ந்த கானகம், இங்கெல்லாம் வன விலங்குகள் ஏராளமாக வசிக்கும். பகலிலேயே துப்பாக்கி முதலான பந்தோபஸ்துகளுடன்தான் அந்தப் பகுதியைக் கடக்க வேண்டும். சுமார் 15 மைல் அகலமும், 50 மைல் நீளமுமுள்ள சில்கா ஏரியின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள உயர்ந்த மலைகளின் அடிவாரத்தில் இந்த மலைப்பிரதேசம் அமைந்துள்ளது. அங்குத் தங்குவதற்கு வசதியான இடமோ, குடி தண்ணீர் வசதியோ கிடைப்பது மிவுவும் அரிதாக இருந்தது. சில மைல்கள் கடந்ததும் வெகு தூரம் ஒரே மணற்பாங்கான பிரதேசம்; மலை மீது செல்லும் பாதைகள் ஏற்றம் இறக்கத்துடன் வளைந்து, வளைந்து செல்லும் காட்சி! கிழக்குப்பாகத்தை நோக்கினால் கடல் போல் காணப்படும் சில்கா ஏரி; மேற்கில் காடுகள் அடர்ந்த மலைகளின் பயங்கரத் தோற்றம்; ஜன சஞ்சாரமற்ற பிரதேசம்; இவைகளுடன் வெயிலின் கொடுமையும் தாங்கமுடியாதவாறு இருந்தது. இந்தப் பிரதேசத்தைச் சிப்பந்திகள் மிகுந்த பிரயாசையுடன் கடந்தார்கள். ஸ்வாமிகளிடம் அந்தச் சிப்பந்திகளுக்கு இருந்த ஒப்பற்ற பக்தியே இந்தக் கடுமையான பிரயாணத்தைக் கடக்க

அவர்களுக்கு மன உறுதியையும், உடல் வலிமையையும் கொடுக்கக் காரணமாயிருந்ததெனக் கூறலாம்

நாள் ஒன்றுக்கு சுமார் 25 மைல்கள் பிரயாணம் செய்து, மே மாதம் 17உ ஸ்வாமிகள் சத்திரபூருக்கு விஜயமானார்கள். வழியில் 13உ ஜாங்கியாவிலும், 14உ டங்கியிலும், 15உ பாலுகோனிலும், 16உ ரம்பா என்னும் ஊரிலும் தங்கினார்கள். இங்கெல்லாம் வசதிகள் வெகு குறைவாயிருந்த போதிலும் ஒருவாறு சமாளித்துக் கொண்டு ஸ்வாமிகள் யாத்திரையை மேலே தொடங்கினார்கள். சத்திரபூர் சில்கா ஏரியின் தெற்குக்கோடியிலுள்ள கடலை ஒட்டிய ஒரு பட்டணம்; கஞ்சம் ஜில்லாவின் தலைநகரம்; அவ்விடம் ஆதி சங்கரரது ஆலயம் ஒன்று அமைந்துள்ளது. ஸ்வாமிகள் அங்கு 17உ முதல் 23உ முடிய 7 நாட்கள் தங்கி இருந்தார்கள். அவ்விடமுள்ள மார்வாரி சமூகத்தினரும், மற்ற அந்நகரவாசிகளும் ஸ்வாமிகளை வெகு குதூகலத்துடன் வரவேற்று, ஸ்வாமிகளின் விஜயத்தை மிகவும் வெற்றிகரமாகக் கொண்டாடினார்கள், மே மாதம் 24உ ஸ்வாமிகள் அவ்வூரிலிருந்து புறப்பட்டு தென்மேற்கில் 12 மைல் தூரத்தில் உள்ள பர்ஹாம்பூருக்கு விஜயமானார்கள். அவ்விடம் ஸ்வாமிகள்; 1936-ஆவது வருடம் ஜூன் மாதம் 1உ வரை-23 நாட்கள் தங்கியிருந்து, பின்னர் ஜூன் மாதம் 16உ முதல் 21உ வரை இச்சாபூரிலும், 22, 23, 24உகளில் நௌபாஸாவிலும் 25உ பத்மனப்பூரிலும், 26 திருபாஹண்டியிலும், 28உ சேருகாடாவிலும் 29, 30, ஜூலை 1உயில் தாமோதர்பள்ளியிலும், ஜூலை 2உ ஹிங்கில்லிக்காட்டிலும் விஜயம் செய்தார்கள். இவ்விடங்களிளெல்லாம் மக்கள் ஸ்வாமிகளை மிகுந்த பக்தியுடன் வரவேற்று, ஒவ்வொரு ஊரிலும் அவர்களுக்குப் பிக்ஷை, பாத பூஜை முதலிய உபசரணைகளைச் செய்தார்கள். ஆங்காங்கு ஸ்வாமிகள் அத்தேச பாஷையில் மக்களுக்கு உபதேசம் அருளினார்கள்.

பர்ஹாம்பூரில் 1936 ஆவது வருடத்திய வியாஸ பூஜை.

1936-ஆவது வருடம் ஜூலை மாதம் 4உ நடைபெற்ற வியாஸ பூஜையை முன்னிட்டு ஸ்வாமிகள் 2உ இரவு பர்ஹாம்பூருக்குத் திரும்பவும் விஜயமானார்கள். பர்லாகிமிடி மகாராஜாவின் தலைமையில் பர்ஹாம்பூர் பொது மக்கள் ஸ்வாமிகளின் பூஜைக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் சிறந்த

முறையில் செய்திருந்தார்கள். அதற்கென அமைக்கப் பெற்றிருந்த ஓர் அலங்கார மண்டபத்தில் ஸ்வாமிகளது வியாஸ பூஜை வெகு விமரிசையுடன் நடைபெற்றது. ஏராளமான மக்கள் கூடி பூஜையைத் தரிசித்துக்கொண்டனர். ஆந்திர நாட்டுப் பண்டிதர்கள் பலர் அப்பொழுது ஸ்வாமிகளைத் தரிசித்துக்கொண்டு தங்கள் புலமையைக்காட்டி ஸ்வாமிகளிடம் சன்மானம் பெற்றுப் போனார்கள். சாந்திரமான ரீதியாக வரும் மாதங்களில் அந்த வருடத்தில் பாத்திரபத மாதத்தில் ஒரு மாதம் அதிக மாதமாக வந்ததால், சாதாரணமாக இரண்டு மாதங்களில் முடிவு பெறும் சாதுர் மாத சங்கல்பம் அவ்வருடத்தில் மூன்று மாதங்களுக்கு நீடித்தது. 1936-ஆவது வருடம் செப்டம்பர் மாதம் 28உ பர்ஹாம்பூரில் ஒரு சநாதன தர்ம மகாநாடு கூடிற்று. அந்த மகா நாட்டை ஸ்வாமிகளே திறந்து வைக்க வேண்டுமெனப் பர்லாகிமிடி மகாராஜாவும் தாரகோடா ராஜாவும் விண்ணப்பித்துக் கொண்டதற்கிணங்க, ஸ்வாமிகள் அந்த மகாநாட்டுப் பந்தலுக்கு விஜயம் செய்து, ஆயிரக்கணக்கான மக்கள் மகிழுமாறு அந்த மகா நாட்டைத் துவக்கி வைத்தார்கள். அன்று, அவர்கள், நமது தர்மம் என்பதைப் பற்றித்தெலுங்கில் மிகவும் தெளிவாக உபதேசம் அருளினார்கள். அந்த மகாநாடு பின்னர் பர்லாகிமிடி மகா ராஜாவின் தலைமையில் கூடிப் பல தீர்மானங்களைக் நிறை வேற்றிற்று. ஸ்வாமிகள் ஆந்திர நாட்டுக்கு விஜயம் செய்வதைக் குறித்து மகாநாடு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டது.

ஸ்ரீகூர்ம க்ஷேத்திரத்திற்கு விஜயம்.

1936 ஆவது வருடம் செப்டம்பர் மாதம் 30உ, ஸ்வாமிகள் பர்ஹாம்பூரிலிருந்து புறப்பட்டு அக்டோபர் மாதம் 1, 2உ களில் இச்சாபூரிலும், 3உ முதல் 5உ முடிய சோம் பேட்டாவிலும், 6உ பாருவாவிலும் 7உ பலாசாவிலும், 8உ டக்காலியிலும், 9உ நரசன் னப்பேட்டையிலும், முகாம் செய்துகொண்டு 10உ சிகாகோலுக்கு விஜயம் செய்தார்கள். வழி நெடுகிலும் ஒவ்வொரு ஊரிலும், அந்த நாட்டு மக்கள் ஸ்வாமிகளைத் தக்கவாறு உபசரித்து, ஸ்வாமி களது ஆசியைப் பெற்றார்கள். சிகாகோலில் ஸ்வாமிகள் குஜராத் திப் பேட்டையில் தங்கியிருந்தார்கள். பர்ஹாம்பூரிலிருந்து சிகா கோல் 95 மைல்கள் தூரத்திலுள்ளது. செப்டம்பர் 10உ சிகா கோலை அடுத்துக் கடற்கரையில் அமைந்துள்ள ஸ்ரீ கூர்மா என்னும்

தலத்திற்கு ஸ்வாமிகள் விஜயம் செய்தார்கள். கூர்மாவதாரம் என்னும் பெயருடன் ஆமை உருவத்தில் மகாவிஷ்ணு அவ்விடத்தில் காட்சி அளிக்கின்ருர். மந்தர மலையை மத்தாக வைத்துத் தேவர்கள் அமிர்தத்தைக் கடைந்தனர். அந்த மந்தர பர்வதத்தைக் கீழே முழுகவிடாமல் தாங்கவே திருமால் கூர்மாவதாரம் எடுத்தார். அந்தக் *கூர்மக்ஷேத்திரம் விஜயநகர சமஸ்தானத்தின் நிர்வாகத்திலுள்ளது. ஸ்வாமிகள் அந்தத் தேவாலயத்திற்கு விஜயம் செய்த பொழுது, சமஸ்தானத்தின் உத்தியோகஸ்தர்கள் ஸ்வாமிகளுக்குத் தக்கவாறு மரியாதைகள் அளித்துச் சுவாமி தரிசனம் செய்து வைத்தார்கள். ஸ்ரீ கூர்மக்ஷேத்திரத்திற்கு விஜயம்செய்து திரும்பும் பொழுது ஸ்வாமிகள் அரசவல்லி என்னும் இடத்தில் சூர்யநாராயணஸ்வாமி தேவாலயத்தைத் தரிசனம் செய்துகொண்டார்கள். அத்தலத்தில் இன்றும் வேதக் கலை நன்கு பரிபாலிக்கப்பட்டு வருகிறது. வைதிக முறைகளையும் மக்கள் செவ்வனே கையாண்டு வருகின்றனர்.

விஜய நகர சமஸ்தானத்திற்கு விஜயம். 1936-ஆவது வருட நவராத்திரி பூஜை.

1936-ஆவது அக்டோபர் 12உ ஸ்வாமிகள் சிகாகோலிலிருந்து புறப்பட்டு 13உ சுமத்திராபுரத்திலும், 14உ சிபூர்பள்ளியிலும், 15உ முற்பகல் நேல்லிமர்லாவிலும் தங்கி, அன்று மாலை விஜய நகரத்தை அடைந்தார்கள். அன்று அவ்வூர் முழுவதும் ஒரு திருவிழாவைப் போல் விளங்கிற்று. நான்கு மாதங்களுக்கு முன்னரே ஸ்வாமிகளது விஜயத்திற்காக அவ்வூர்ப் பொது மக்களும், மகாராணியும், எல்லாவித ஏற்பாடுகளையும் செய்து வந்தார்கள். ஸ்ரீ எச்சூரி நரசிம்ம பந்துலு தலைமையில், (4-6-1936) ஓர் வரவேற்புக் கமிட்டி அமைக்கப்பெற்று, ஸ்வாமிகளின் அவ்வூர் விஜயத்தை மிகவும் சிறந்த வகையில் கொண்டாட வேண்டுமென்று மக்கள் ஏற்பாடு செய்திருந்தனர். இந்த வரவேற்புக் கமிட்டியின் பிரதிநிதிகள் 11-10-1936உ ஸ்வாமிகளை ஸ்ரீகாகுளம் முகாமில் தரிசித்து 16-10-1936உ முதல் அவ்வருட

---

* ஸ்ரீ இராமானுஜர் காலத்திற்கு முன்பு அத்தலத்தில் கூர்ம நாதரைச் சுற்றிலும் சிவ சம்பந்தமான விக்ரஹங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தன வென்றும், ஸ்ரீ இராமானுஜர் அவைகளைக் கடலில் எறிந்துவிட்டதாகவும், ராமானுஜாசாரியார் என்பவர் இயற்றியுள்ள ஸ்ரீ ராமானுஜ சம்பூ என்னும் காவியத்தில் கூறப்பட்டுள்ளது.

நவராத்திரி விழாவை விஜய நகரத்திலேயே நடத்தவேண்டு மென்று கேட்டுக்கொண்டனர். அதற்கு 50 வருடங்களுக்கு முன்னர் 1885-ஆவது வருடத்தில் காமகோடி பீடத்தின் 65-ஆவது ஆசார்ய ஸ்வாமிகளாக விளங்கிய ஸ்ரீ மகாதேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் விஜய நகர சமஸ்தானத்திற்கு விஜயம் செய்து, அவ்வருட நவராத்திரி பூஜையை அங்கு நடத்தி இருப்பதை அக் காலத்தில் எழுதி வைக்கப்பட்ட தினக்குறிப்புகள் மூலம் ஸ்வாமி களிடம் அவர்கள் தெரிவித்துக்கொண்டனர்.

1936 அக்டோபர் 15வ, விஜய நகரம் முனிஸிபல் தண்ணீர்த் தேக்கத்தின் அருகில், ஸ்வாமிகளின் வரவேற்பிற்கென ஓர் பெரிய அலங்காரக் கொட்டகை அமைக்கப்பெற்றிருந்தது. அன்று மாலை சூரியன் மேற்குத் திசையில் மறையும் பொழுது, ஸ்வாமிகள் அவ்விடத்திற்கு விஜயம் செய்தார்கள். அங்குச் சமஸ்தான திவானும், மற்ற அதிகாரிகளும், பொது மக்களும் ஆயிரக்கணக் காகக் கூடி ஸ்வாமிகளுக்குப் பூர்ண கும்பம் அளித்து, ஸ்வாமிகளை வரவேற்று, ஓர் வரவேற்புப் பத்திரத்தையும் வாசித்தளித்தார்கள். அவ்விடம் ஸ்வாமிகள் தந்தச் சிவிகையில் அமர்ந்ததும் சமஸ்தான விருதுகளுடன் ஓர் பெரிய ஊர்வலம் நகரத்தின் முக்கிய வீதிகளின் வழியே சென்றது. பொது மக்கள் ஸ்வாமிகளுக்கு பூர்ண கும்பங் கள் அளித்து, புஷ்ப ஹாரங்களும் அணிவித்து, கற்பூர ஹாரத்தி முதலான மரியாதைகளைச் செய்தனர். ஊர்வலமும் அன்றிரவு 9 மணிக்கு டாக்டர் காதே ராமய்யங்காரின் ஜாகையை அடைந் தது, ஸ்வாமிகள் பல்லக்கிலிருந்து இறங்கி அந்த வீட்டின் முன் புறம் ஓர் சிம்மாசனத்தில் அமர்ந்து அங்குக் கூடியிருந்த ஆயிரக் கணக்கான மக்களுக்கு ஆசி கூறினார்கள். மறு நாள் 16-10-1936 வெள்ளிக்கிழமை அவ்வருட நவராத்திரி விழா ஆரம்பமாயிற்று. அன்று முதல் ஒன்பது நாட்கள் ஸ்வாமிகள் மௌன விரதத் தையும் உபவாசத்தையும், ஏற்றுக்கொள்வது வழக்கம். அந்தப் பூஜைக்கெனப் பொது மக்கள் விசேஷ ஏற்பாடுகளைச் செய்திருந் தனர். பூஜா மண்டபமும் மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட் டிருந்தது. வழக்கம் போல் கன்னியா பூஜை, ஹோமம், பாரா யணம், இவைகளெல்லாம் முறைப்படி நடைபெற்றன. ஒவ் வொரு நாளும் பகலிலும், இரவிலும் ஸ்வாமிகள் நிகழ்த்திய பூஜையை ஆயிரக்கணக்கான மக்கள் தரிசித்துத் தங்களைப் புனித மாக்கிக் கொண்டனர்.

1936 அக்டோபர் 25உ, விஜயதசமி அன்று ஸ்வாமிகள் தமது மௌன விரதத்தை முடித்துக்கொண்டார்கள். அன்று ஓர் பண்டித மகாசபை கூட்டப்பட்டது. அந்தச் சபையில் ஆந்திர மாகாணத்தில் மிகவும் புகழ் பெற்று விளங்கிய பண்டிதரான மகாமகோ பாத்தியாய தாத சுப்பராய சாஸ்திரிகளுக்கு சாஸ்திர ரத்னுகரம் என்னும் பட்டத்தை வழங்கி, இரட்டைக் காஷ்மீர் சால்வைகள், மற்றும் வெள்ளிப் பாத்திரங்கள் இவைகளையும் ஸ்வாமிகள் அளித்தார்கள். அன்று மாலை, ஸ்வாமிகள் விஜய நகரத்திலுள்ள ஆறு தேவாலயங்களுக்கும் சென்று அவ்விடங்களில் ஸ்வாமி தர்சனம் செய்துகொண்டார்கள், 25—10—36உ ஸ்வாமிகள் வேத விஞ்ஞான பரிஷத் கட்டிடத்திற்கு விஜயம் செய்தார்கள். அங்குப் புகழ் பெற்ற பண்டிதர்களான மூலராமப்ரிய காணுகுர்த்தி வெங்கிடகிருஷ்ண ராவ், ஆகின்ன சத்ய நாராயண. மகாமகோபாத்யாய தாத சுப்பராய சாஸ்திரி, மகாமகோ பாத்யாய நோதூரி வெங்கட சாஸ்திரி, நியாய ரத்ன பேரி லக்ஷ்மீ நாராயண சாஸ்திரி, ஸ்ரீமத் கோயில் கந்தாடை வெங்கட ராமாசாரியார் இவர்கள் ஸ்வாமிகளை வரவேற்று ஓர் உபசாரப் பத்திரத்தை வாசித்தளித்தார்கள். ஸ்வாமிகள் அவர்களது உபசரிப்பை ஏற்றுக்கொண்டு, வேதத்தின் பெருமையைப் பற்றி உபந்யாசித்தார்கள். வேதங்களிலும், சாஸ்திரங்களிலும் நன்கு தேர்ச்சி அடைந்த நூற்றுக்கணக்கான பண்டிதர்களும், மற்றும் பொது மக்களும் ஸ்வாமிகளது உபந்யாசத்தைக் கேட்டு மகிழ்வுற்றனர். ஸ்வாமிகள் அங்குக் கூடியிருந்த பண்டிதர்களைக் கௌரவித்து அவர்களுக்குத் தக்கவாறு சன்மானங்கள் அளித்து யாவரையும் ஆசீர்வதித்தார்கள். (27—10—36) செவ்வாய்க் கிழமை அன்று ஸ்வாமிகள் விஜய நகர சமஸ்தான அரண்மனைக்கு விஜயம் செய்து, அங்குத் தேவஜர் மகாராணி ஸ்ரீலலிதா குமாரி தேவியால் செய்விக்கப்பட்ட பாதபூஜையை ஏற்றுக்கொண்டார்கள். (30—10—1936), ஸ்வாமிகள் அவ்வூர் மகாராஜா ஆங்கில கலாசாலைக்கு விஜயம் செய்தார்கள். அங்குக் கலாசாலையின் அதிபரும், மற்றும் தத்துவ சாஸ்திர பேராசிரியர் என். வெங்கட ராமனும், மற்ற ஆசிரியர்களும் ஸ்வாமிகளை வரவேற்று அவர்களுக்கு ஓர் உபசாரப் பத்திரத்தையும் வாசித்தளித்தார்கள். பேராசிரியர் என். வெங்கடராமன் சென்னை கணேஷ் கம்பெனியார் 1923-வது வருடம் வெளியிட்ட "Sankaracharya the Great

and his Successors in Kanchi" என்னும் புத்தகத்தின் ஆசிரியர் ஆவர். அன்று அவர் ஸ்வாமிகளுக்குப் பாதபூஜை செய்து ஸ்வாமிகளது அருளைப் பெற்றார். ஏராளமான மாணவர்கள் அன்று அவ்விடம் கூடி ஸ்வாமிகளைத் தரிசித்து அவர்களது ஆசியைப் பெற்றார்கள்.

1936 அக்டோபர் 31உ பண்டிதர்களும், பொது மக்களும் நிறைந்த ஒரு பெரிய கூட்டத்தில் ஸ்வாமிகள் அத்வைத சித்தாந்தத்தைப் பற்றி உபந்யாசித்தார்கள். சிவ விஷ்ணு அபேதத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, அதுவே ஹரிஹராத்வைதம் எனக் கூறி, ஸமர்த்த ராமதாஸ் முதலான பக்தர்கள் பக்தியின் பெருமையினாலும், உபாசனா மார்க்கத்தினாலும் இந்தப் பேதமற்ற அத்வைதத்தை மேற்கொண்டே மோக்ஷமடைந்தார்களெனக் கூறினார்கள். ஸ்வாமிகள் ஞான மார்க்கத்தைப் பற்றி விளக்கம் செய்தபொழுது ஞானியானவன் குருவின் உபதேசத்தினால் சிறிது சிறிதாக உலகப்பற்றை நீக்கி, வைராக்யத்துடன் இருந்து, தனது சொந்த அனுபவத்தைக் கொண்டு மோக்ஷமடைவதாயும் இதுவே ஜீவபிரும்ம அத்வைதம் எனவும் விளக்கினார்கள். மேலும் உபாசனா மார்க்கமும், ஞான மார்க்கமும் முடிவில் ஒரே நிலைமையை அடைவதற்குப் பயன்படுவதாயும் கூறினார்கள். பெண்கள் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்பதைப் பற்றியும் ஸ்வாமிகள் சில உபதேசமொழிகளை அருளினார்கள். அன்று மாலை, சமஸ்தான சங்கீத வித்வான் வீணை வேங்கடரமண தாஸ் ஸ்வாமிகள் முன்னிலையில் வீணை கச்சேரி செய்தார். ஸ்வாமிகள் அவரது திறனை மெச்சி அவருக்குப் பீதாம்பரம் அளித்து அவரைப் பெருமை படுத்தினார்கள். அன்று விஜய நகரத்திலிருந்து புறப்பட எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. தேவஜர் மகாராணியும் அன்று ஸ்வாமிகளுக்கு பிக்ஷை செய்து வைத்தார். நகர மக்கள் பலர் பாத பூஜை செய்து வைத்தனர்,

ஸ்வாமிகளை வழியனுப்ப ஆயிரக்கணக்கான மக்கள் ஜாகை முன் கூடியிருந்தனர். ஸ்வாமிகள் புறப்படும் சமயம் ஸ்வாமிகளைத் தரிசிக்க வேண்டுமென்ற ஆவலுடன் ஜனக் கூட்டம் ஸ்வாமிகளின் சிவிகையை நகரமுடியாதபடி செய்து விட்டது. அதனால் கூட்டத்தை வெகு பிரயாசையுடன் விலக்கவேண்டியதாயிற்று. அன்றிரவு ஸ்வாமிகள் விஜய நகரத்தை விட்டுப் புறப்


பட்டு பத்மநாப க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்து, மறு நாள் (1—11—1936), விடியற் காலை கோஸ்தனீ நதியில் ஸ்நானம் செய்து, பத்மநாப சுவாமியைத் தரிசித்துக்கொண்டார்கள். அன்று அவ்விடம் தங்கி, அவ்வூர் மக்கள் செய்த பாத பூஜை முதலிய வழி பாடுகளை ஏற்று, மறு நாள் 2உ பீம்ளிபட்டணத்திற்கு விஜயம் செய்தார்கள். பீம்ளி பட்டணம் பழைய நாட்களில் ஆந்திர தேசத்தின் ஓர் முக்கிய துறைமுகமாக அமைந்திருந்தது. அவ் வூரில் கடற்கரையை அடுத்தாற்போல், ஓர் குன்றின் மீது ஸ்ரீ நரசிம்மஸ்வாமி ஆலயம் அமைந்துள்ளது. அந்த ஆலயத்திலும் ஸ்வாமிகள் சுவாமி தரிசனம் செய்துகொண்டு மறு நாள் 3உ ஆனந்தபுரம் என்னும் இடத்தில் தங்கி, அதற்கு மறு நாள் சிம்ஹாசல க்ஷேத்திரத்திற்கு விஜயமானார்கள்.

ஸிம்ஹாசல யாத்திரை.

ஆந்திர நாட்டில் சிவலாயங்களை விட, விஷ்ணு ஆலயங்களே அதிகமாக அமைந்துள்ளன எனக் கூறலாம். அதிலும் நரஸிம்ம அவதாரத்தையே ஆந்திரர்கள் விசேஷமாகக் கொண்டாடுகிறார்கள். நரஸிம்ம மூர்த்தியின் ஆலயங்கள் ஆந்திர நாட்டின் பல பாகங்களிலும் அமைந்துள்ளன. கர்னூல் ஜில்லாவில் நந்தியாவிலிருந்து 37 மைல் தூரத்தில் ஜன சஞ்சாரமில்லாத விசாலமான கானகத்தின் நடுவில் அகோபிலம் என்னும் க்ஷேத்திரமுள்ளது. அதுவும் மிகப் பழமை பெற்ற நரஸிம்ம க்ஷேத்திரமாகும். அழகிய சிங்கர் என்னும் சிறப்புப் பெயரை வைணவ வடகலைச் சம்பிரதாய மடாதிபதிகளான ஜீயர் ஸ்வாமிகள் தாங்கி வருகிறார்கள், சிங்கர் என்னும் சொல் நரசிம்மத்தையே குறிக்கும். அகோபிலத்திலுள்ள நரசிம்மப் பெருமாள் அந்த மடத்தின் உபாசனா மூர்த்தியாக அமைந்திருப்பதால், அந்த மடத்திற்கு அகோபிலமடம் என்னும் பெயர் அமைந்துள்ளது. இதைப்போல் புராணப் பிரசித்தி பெற்ற பல நரஸிம்ம ஆலயங்களில் ஸிம்ஹாசல ஆலயமும் ஒன்றாகும். இது விஜய நகர சமஸ்தானத்தின் நிர்வாகத்திலுள்ளது. இந்த க்ஷேத்திரத்தில் அமைந்துள்ள நரசிம்ம மூர்த்தியை பக்தனான பிரஹலாதனே பிரதிஷ்டை செய்ததாக அந்நாட்டு மக்கள் கூறுகின்றனர். சுமார் 1000 அடி உயரமுள்ள ஸிம்ஹாசலம் என்னும் மலையின், 800 அடி உயரத்தில் இந்த நரஸிம்ம ஆலயம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் அமைப்பும் குறிப்பாக விமானத்தின் தோற்றமும் வெகு அழகாக அமைந்துள்ளன. விமானத்தின்



1936-ல் ஸிம்ஹாசலத்தில்



ஸ்ரீ ஸ்வாமிகள் ஏகாந்தமாக
அடிக்கடி தங்கியிருக்கும்
சிவாஸ்தான க்ஷேத்திரம்



ஓரிருக்கை
பாலாற்றங்கரையில்

பக்கச் சுவர்களிலும், தூண்களிலும் பார்ப்பவர்கள் வியக்கும்படி விசித்திரமான வேலைப்பாடுகள் செய்து சிற்பிகள் தங்கள் கைத்திறனைக் காட்டியுள்ளார்கள். கண்களைக் கவரும் இவ்விதச் சிற்பங்களை மிக அரிதாகவே மற்ற விடங்களில் காணமுடியும். ஆலயமும் மலை மீது அடர்ந்த கானகத்தில் இயற்கை அழகு பெற்றதும் ஜன சஞ்சாரமற்றதுமான இடத்தில் அமைந்திருப்பது இத்தலத்திற்கு இன்னும் அதிகப் பெருமையைக் கொடுக்கின்றது. இவ்வாலயத்திற்கு நிகராக பாண்டிய நாட்டிலுள்ள அழகர் கோவிலை ஒப்பிடலாம்.

1936 நவம்பர் மாதம் 4உ, ஸ்வாமிகள் ஸிம்ஹாசலத்திற்கு விஜயமாவதை முன்னிட்டு, விஜய நகர சமஸ்தான அதிகாரிகள் எல்லாவித முன்னேற்பாடுகளையும் செய்துவைத்திருந்தனர், ஸ்வாமிகள் தங்குவதற்கென மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள தேவஸ்தான விடுதியும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. தேவஸ்தான பண்டிதர்களும் தேவஸ்தான அதிகாரிகளும் அங்கு ஸ்வாமிகளுக்கு ஓர் வரவேற்பை அளித்தார்கள். அன்று மடத்தின் செலவுகளெல்லாம் தேவஸ்தான நிதியிலிருந்தே நடைபெற்றது. மறுநாள் அதிகாலையில் ஸ்வாமிகள் ஸ்நான அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, மலை மீது ஏறி, வழியிலுள்ள ஆஞ்சனேயர் ஆலயத்தில் முதலில் சுவாமி தரிசனம் செய்துகொண்டார்கள். அந்த மலையின் இயற்கை அழகைப் பற்றி கவிதைகள் மூலம் விவரணம் செய்துகொண்டு வந்த பண்டிதர்கள் பலரும், மற்றும் நூற்றுக்கணக்கான அந்தக் கிராமவாசிகளும், ஆதிவாசிகளும், சமஸ்தான அதிகாரிகளும் பின் தொடர ஸ்வாமிகள் அந்த மலையின் மீது கால் நடையாக ஏறிய காட்சி அதைத் தரிசித்தவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. தேவஜர் மகாராணியும் ஸ்வாமிகளுடன் வந்து தரிசனத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் நேரில் கவனித்து வந்தார்கள். கோவிலை அடைந்ததும் ஸ்வாமிகள் அதை வலம் வந்து, கோவிலுக்குள் பிரவேசித்து, காலை 7½-மணிக்கு ஸிம்ஹாத்ரி நாதரைத் தரிசனம் செய்துகொண்டார்கள். சுவாமிக்கு பட்டு பீதாம்பரங்கள் அளிக்கப்பட்டன. பின்னர் அங்குள்ள வராக, லக்ஷ்மீ நரஸிம்ம ஸந்நிதிகளையும், மற்ற ஸந்நிதிகளையும் ஸ்வாமிகள் தரிசித்துக்கொண்டார்கள். எல்லா ஸந்நிதிகளிலும் ஸஹஸ்ர நாம அர்ச்சனை முதலான ஆராதனங்கள் நடைபெற்றன. சேவை முடிந்ததும் தேவஸ்தான

அதிகாரிகளும், அர்ச்சகர்களும் ஸ்வாமிகளுக்கு விசேஷ மரியாதைகளைச் செய்தனர். அங்குக் கூடி இருந்த பண்டிதர்களுக்கெல்லாம் ஸ்வாமிகள் பலவிதமான சன்மானங்களைச் செய்தார்கள். ஸிம்ஹாசலத்தின் தல மகிமையைப் பற்றி விவரித்து அத்தலம் மிகவும் பவித்திரம் (புனிதத் தன்மை) அடைந்ததென ஸ்வாமிகள் கூறினார்கள். பின்னர் அருகிலுள்ள ஸ்ரீ திருபுராந்தகேசுவரர் ஆலயத்திற்குச் சென்று அங்கு அமைந்துள்ள சிவலிங்கத்திற்கு ருத்ராபிஷேகம், அர்ச்சனை முதலானவைகள் நடைபெறச் செய்து அங்கும் அவ்வாலயத்தில் அமைந்துள்ள அம்பிகை முதலான மற்ற ஸந்நிதிகளையும் தரிசித்துக் கொண்டார்கள். அதன் பின்னர் அம்மலையில் அமைந்துள்ள கங்கதாரா நீர்வீழ்ச்சிக்குச் சென்று, அப்புனித நதியில் ஆசமனம் செய்து மார்ஜனம் செய்துகொண்டு, தமது தண்டத்தினால் நீரைத் தொட்டு அதைப் புனிதமாக்கிக்கொண்டார்கள். பிறகு நாற்புறமும் செடி கொடிகள் அடர்ந்து வெகு அழகாகக் காணப்பட்ட ஓர் பாறையின் மீது ஸ்வாமிகள் சுமார் ஒரு மணி நேரம் தியானத்தில் அமர்ந்திருந்தார்கள். அங்கு அமரும்பொழுது மகாராணியின் வேண்டுகோளின்படி எடுக்கப் பெற்ற ஸ்வாமிகளது புகைப்படம் இவ்விதழின் முன்புறம் காட்சியளிக்கின்றது. பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்வாமிகள் அவர்களுக்கென புதிதாகத் தயாரிக்கப்பட்ட டோலியில் அமர்ந்து மலையின் இயற்கை அழகை அனுபவித்தவாறு மலையிலிருந்து கீழே இறங்கினார்கள். தேவஸ்தான விடுதியில் ஸ்வாமிகளின் அன்றையப் பகல் பூஜை நடைபெற்றது. ஏராளமாகப் பக்தர்கள் கூடிப் பூஜையைத் தரிசித்துக்கொண்டனர். நவம்பர் மாதம் 6உ, ஸிம்ஹாசல கிராம மக்களின் பிக்ஷையும், பாதபூஜையும் நடைபெற்றன. 7உ ஸிம்ஹாசல மக்கள் ஸ்வாமிகளுக்கு ஓர் ஊர்வலம் நடத்தி வைத்தார்கள். வேத சாஸ்திரக் கலைகளில் தேர்ச்சி பெற்ற வித்வான்களை ஆதரிப்பதும், அக்கலைகளை பாதுகாப்பதும் ஸிம்ஹாசல தேவஸ்தானத்தின் கடமைகளில் ஒன்றாக அமைந்துள்ளபடியால், அவ்விடத்தில் வேதம் ஓதியவர்களும், சாஸ்திரங்களைக் கற்றவர்களுமாகப் பலர் இன்றும் வசித்து வருவது பாராட்டதற்குரியதாகும்.

1936 நவம்பர் 7உ இரவு ஸ்வாமிகள் ஸிம்ஹாசலத்திலிருந்து விசாகப்பட்டணத்திற்கு விஜயம் செய்தார்கள். அவ்வூர்ப் பொது மக்களும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களும். வக்கீல்களும், வியா

பாரிகளும் மற்றும் பிறதொழில்கள் புரிகின்றவர்களும் ஸ்வாமிகளை மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்று அவ்வூருக்கு அவர்கள் விஜயம் செய்ததை மிகவும் சிறப்புடன் கொண்டாடினார்கள். இரவு நேரங்களில் பூஜை முடிந்ததும் ஸ்வாமிகள் செய்த உபதேசங்களைக் கேட்க ஆயிரக்கணக்கில் மக்கள் கூடினர். துறைமுக இலாகா அதிகாரிகள் வேண்டுகோளுக்கிணங்கி அவ்வூரில் அமைந்துள்ள இயற்கைத் துறைமுகத்தையும், கப்பல் தளத்தையும் ஸ்வாமிகள் பார்வையிட்டார்கள். ஸ்வாமிகள் அங்குத் தங்கியிருந்தபொழுது ஒரு பெரிய பண்டித மகா சபை கூட்டப்பட்டது. இந்தச் சபைக்கு அவ்வூர் ஜில்லா ஜட்ஜ் சாகித்ய ரத்னகர டாக்டர் எம். கிருஷ்ணமாச்சாரியார் தலைமை தாங்கினர். ஸிம்ஹாசல பண்டிதர்களும், மற்றும் அந்நாட்டிலுள்ள பண்டிதர்களும் அந்தச் சபையில் கலந்துகொண்டார்கள். சாஸ்திர சம்பந்தமான பல விஷயங்கள் சபையில் ஆராயப் பெற்றன. ஸ்வாமிகள் நேரில் இந்தச் சபைக்கு விஜயம் செய்து பண்டிதர்களுக்கும், பொது மக்களுக்கும் உபதேச மொழிகளை அருளினார்கள். அந்தச் சபையை நடத்தி வைத்த எல்லாப் பொறுப்பையும், செலவுகளையும் ஸ்வாமிகளிடம் ஒப்பற்ற பக்தி பூண்ட அட்வகேட் பிரபலா லக்ஷ்மீ நரஸிம்மபந்துலு ஏற்றுக்கொண்டார். டிசம்பர் மாதம் 2௳ வரையில் ஸ்வாமிகள் விசாகப்பட்டணத்திலேயே தங்கியிருந்தார்கள். சபைக்கு வந்திருந்த பண்டிதர்களையெல்லாம் சால்வை முதலான வெகுமானங்களால் ஸ்வாமிகள் பெருமைப் படுத்தினர்கள்.

விசாகப்பட்டணத்தில் பண்டித சபை.

1936 டிசம்பர் 3௳ ஸ்வாமிகள் விசாகப்பட்டிணத்திலிருந்து புறப்பட்டு அகனம்பூண்டி என்னும் ஊரில் தங்கி, அன்றிரவே காசீம் கோட்டாவுக்கு விஜயம் செய்தார்கள். காசீம்கோட்டா ராஜா ஸ்வாமிகளை மிகுந்தபக்தியுடன் வரவேற்றுத் தமது அரண்மனையில் பாதபூஜை முதலானவைகளை நடத்தி வைத்தார், டிசம்பர் 4, 5௳ களில் அவ்விடம் தங்கி 6௳ ஸ்வாமிகள் சோடாவரத்திற்கு விஜயம் செய்தார்கள். அவ்விடம் 3 நாட்கள் தங்கினர்கள். 10௳ அனகபள்ளியில் வேதுல திராவிடர்கள் எனக் கூறப்படும் அந்தணப்பிரிவினர் ஸ்வாமிகளுக்கு பிக்ஷை, பாதபூஜை முதலான வழிபாடுகளை மிகுந்த பக்தியுடன் செய்து வைத்தார்கள். இவர்களும் காசீம்கோட்டாவிற்கு அருகிலுள்ள வேதூர்பர்த்தி

விசாகப்பட்டணம் ஜில்லாவில் யாத்திரை.

என்னும் ஊரில் வசிக்கும் இவர்களின் மரபினர்களும் இன்றும் வேதக்கலையை நன்கு பரிபாலித்து வருவது குறிப்பிடத்தக்கது. இவர்கள் பிறரிடம் எவ்வித ஊதியமும் பெறுமல் அவர்களது பூர்வீக ஆஸ்தியின் சிறு வருமானத்தை இக்கலைக்கே அர்ப்பணம் செய்து மிகவும் ஆசார சீலர்களாக விளங்கி வருகின்றனர். ஸ்வாமிகள் வேதூர்பர்த்திக்கும் விஜயம் செய்து, டிசம்பர் 20, 21 இவ்விரண்டு நாட்களிலும் அவ்விடம் தங்கி. அவ்வந்தணர்கள் செய்வித்த பூஜை, மரியாதைகளையும் ஏற்றுக்கொண்டார்கள்.

1936 டிசம்பர் மாதம் 21உ இரவு வேதூர்பர்த்தியிலிருந்து ஸ்வாமிகள் எல்லமஞ்சிலி என்னும் ஊருக்கு விஜயமானுர்கள். அப்பொழுது அவ்வூரில் ஜில்லா முன்சீபாக இருந்த ஸ்ரீ முத்து கிருஷ்ண நாயுடு (Bar-at-law)வின் தலைமையில் அவ்வூர்ப் பொது மக்கள் ஸ்வாமிகளுக்கு சிறந்ததொரு வரவேற்பு அளித்துப்பிக்ஷை, பாதபூஜை முதலியவற்றைச் செய்தனர். ஸ்வாமிகள் எல்லமஞ்சிலி யில் விஜயம் செய்திருந்தபொழுது, காசியிலுள்ள பிரபல பண்டிதரான ராஜேச்வர சாஸ்திரி திராவிட் ஸ்வாமிகளைத் தரிசித்துக்கொண்டார். அவ்வூரில் ஸ்வாமிகள் 1937 ஜனவரி மாதம் 2உ வரை முகாம் செய்திருந்தார்கள். பின்னர் பேனுகல், தர்மாவரம், கோரூப்லோரு, நக்கப்பல்லி, இவ்வூர்களின் வழியாக ஜனவரி மாதம் 11உ தூனி என்னும் பட்டணத்தை அடைந்தார் கள். அவ்வூர் ராஜா ஸ்ரீ வேங்கட நராயண கஜபதி ராஜா பகதூர் ஸ்வாமிகளுக்குப் பிக்ஷை, பாதபூஜை முதலியவைகளை நடத்தி வைத்தார். சென்ற 1886-வது ஆண்டில் 65-வது ஆசாரியர் களான ஸ்ரீ மகா தேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் தூனிக்கு விஜயம் செய்துள்ளார்கள். ஸ்வாமிகள் தூனியிலிருந்து 21உ புறப்பட்டு ஹம்ஸவரம், தட்டகுண்டா, தோட்டாங்கி, அன்னவரம், கோல்லப்போராலு, மார்க்கமாக 28உ இரவு பித்தாபுரத்திற்கு விஜயமானுர்கள். பித்தாபுரத்தில் ஸ்வாமிகளுக்குப் பெரியதொரு வரவேற்பு அளிக்கப்பட்டது. மக்கள் அங்கு ஓர் ஊர்வலமும் ஏற்பாடு செய்திருந்தார்கள். பித்தாபுரத்திலுள்ள பாதகயா தீர்த் தத்தில் ஸ்வாமிகள் நீராடினுர்கள். கயாசுரனது தலை பீகாரி லுள்ள கயா க்ஷேத்திரத்திலும், தொப்புள் ஒரிஸாவிலுள்ள ஜாஜ் பூரிலும், கால்கள் ஆந்திர நாட்டிலுள்ள பித்தாபுரத்திலும் அமைந் திருப்பதாகக் கூறுவர். அந்தப் பாதகயாகுளத்தின் கரையில் அமைந்துள்ள குக்குடேசுவரர் ஆலயத்தை அன்று ஸ்வாமிகள்

தரிசனம் செய்து கொண்டார்கள். ஆந்திர நாட்டின் பெயர் பெற்ற தர்க்க சாஸ்திர வித்வானான வடலீ லக்ஷ்மி நாராயண சாஸ்திரிகள் ஸ்வாமிகளுக்கு ஜனவரி மாதம் 29உ பிக்ஷை நடத்தி வைத்தார். ஸ்ரீபாத லக்ஷ்மிநரஸிம்ம சாஸ்திரிகள் என்னும் மகா பண்டிதரது தலைமையில் அன்று ஓர் வித்வத் சபை கூடிற்று. அங்குக் கூடியிருந்த வித்வான்களுக்கெல்லாம் ஸ்வாமிகள் சால்வை முதலான மரியாதைகளை அளித்தார்கள்.

காகிநாடா விஜயமும், பீமேசுவர தரிசனமும்.

1937 ஜனவரி 29உ இரவு ஸ்வாமிகள் காக்கிநாடாவிற்கு விஜயம் செய்தபொழுது, அவ்வூர் மக்கள் ஏராளமாகக் கூடி ஸ்வாமிகளுக்குப் பெரியதொரு வரவேற்பு அளித்தனர். அவ்வூரில் ஸ்வாமிகள் பிப்ரவரி மாதம் 28உ வரை ஒரு மாத காலம் தங்கி யிருந்தார்கள். பிப்ரவரி மாதம் 10உ அமாவாசை அன்று துல்ய கோதாவரி நதி அவ்வூருக்கருகில் கடலில் சேரும் இடத்தில் ஸ்வாமி கள் சங்கம ஸ்நானம் செய்தார்கள். அன்றைய அமாவாசைக்கு அந்நாட்டில் சோளங்கி அமாவாசை என்று பெயர், நம் நாட்டில் மஹாளய அமாவாசையைப் போல் அது ஓர் புனித நாளாகக் கருதப்படுவதால், அன்று ஒரு லக்ஷம் ஜனங்களுக்கு மேல் அந்த சங்கமத்தில் நீராடிய காட்சி கண்கொளாக் காட்சியாக அமைந் திருந்தது. கோதாவரி நதி ஏழு ரிஷிகளின் பெயர்களால் ஏழு கிளைகளாகப் பிரிந்து ஸப்த கோதாவரி என்னும் பெயர்பெற்று அந் நாட்டில் ஓடுகின்றது. அவைகளில் துல்ய கோதாவரி என்னும் கிளைநதி மிகவும் புனிதத்தன்மை வாய்ந்ததெனக் கூறப்படுகிறது.

ஸ்வாமிகள் காக்கிநாடாவில் தங்கியிருந்தபொழுது, அந்த அமாவாசை அன்றே துவாதச ஜோதிர்லிங்க க்ஷேத்திரமான பீமா வரத்திற்கு விஜயம் செய்தார்கள். பாரத நாட்டில் அமைந்துள்ள பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்களைப் பற்றி முன் பகுதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்விடம் ஸ்வாமிகள் பீமேசுவர ஜோதிர்லிங்கத்தையும், மாணிக்க அம்பிகையையும் தரிசித்துக் கொண்டார்கள். அன்று லிங்கத்திற்கு விசேஷ அபிஷேகமும், அர்ச்சனைகளும் நடைபெற்றன. சுவாமிக்கும், அம்பிகைக்கும் அலங்காரத்திற்கென ஸ்வாமிகள் பட்டு, பீதாம்பரங்களை அளித் தார்கள். பிப்ரவரி மாதம் 23உ ஸ்வாமிகள் ஜனார்த்தன கிரிக்கு விஜயம் செய்து, அவ்விடம் நான்கு நாட்கள் தங்கியிருந்தார்கள்.

1937 பிப்ரவரி 28உ ஸ்வாமிகள் காக்கிநாடாவிலிருந்து புறப்பட்டு மார்ச்சு 1உ கோடிபல்லிக்கு விஜயம் செய்தார்கள். கோடிபல்லியிலுள்ள கோடீசுவர லிங்கம் இந்திரனுலும், சோமேசுவர லிங்கம், சந்திரனுலும் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக அந்நாட்டு மக்கள் கூறுகின்றனர். ஸ்ரீ சந்திரசேகர இந்திர ஸரஸ்வதி என்னும் திருநாமம் தாங்கிய நம் ஸ்வாமிகள் இவ்விரண்டு லிங்கங்களையும் ஒருங்கே தரிசித்தது ஓர் விசேஷமான நிகழ்ச்சியாகும். கோடிபல்லி என்னும் தலம் சப்த கோதாவரி நதிகளுக்குத் தாய்போல் விளங்கும் மாதுரு கோதாவரி நதியின் கரையில் அமைந்துள்ள புனிதத் தலமாகும். ஸ்வாமிகள் அந்தப் புனித நதியில் நீராடி ஆலயங்களைத் தரிசனம் செய்துகொண்டார்கள். தேவஸ்தான அதிகாரிகள் அங்கு ஸ்வாமிகளுக்கு உரிய மரியாதைகளைச் செய்தனர்.

கோடிபல்லிக்கு விஜயம்.

ஸ்வாமிகள் கோடிபல்லி, முக்தேசுவரம், முதலான தலங்களைத் தரிசித்துவிட்டுக் கோதாவரி நதியின் கீழ் டெல்டா பிரதேசமான கோனசீமா எனக் கூறப்படும் செழிப்புற்ற பிராந்தியத்தில் தமது யாத்திரையைத் தொடங்கினுர்கள். அவ்விடங்களில் காவிரி நதியின் தீரத்தைப் போலவும் நாட்டின் தென் கோடியிலுள்ள தாம்பிரபரணியின் தீரத்தைப் போலவும் ஏராளமான அக்ரஹாரங்கள் அமைந்துள்ளன. ஸ்வாமிகள் விஜயம் செய்த ஒவ்வொரு அக்ரஹாரத்திலும் ஆயிரக்கணக்கான மக்கள் ஸ்வாமிகளை வரவேற்று உபசரித்து ஸ்வாமிகளது நித்ய பூஜையைத் தரிசித்து அவர்களின் ஆசியைப் பெற்றுர்கள். ஒவ்வொரு நாளும் ஸ்வாமிகள் மாலை நேரத்தில் ஆந்திர பாஷையில் தர்மத்தைப் பற்றி உபதேச மொழிகளை அருளி வந்தார்கள். டெல்டா பிரதேசத்தில் ஸ்வாமிகள் கன்னவரம், ரசூல், வேமவரம், முதலான இடங்களுக்கு விஜயம் செய்தார்கள். அவ்வருட சங்கர ஜயந்தி உத்சவம் கௌசிக கோதாவரி நதிக்கரையில் அமைந்துள்ள முக்கமாலா என்னும் ஊரில் 1937 மே மாதம் 14உ முதல் 20உ வரை ஏழு நாட்கள் கொண்டாடப்பட்டது. அப்பொழுது ஒரு பெரிய பண்டித சபையும் கூட்டப்பட்டது. ஆந்திர நாட்டுப் பிரபல பண்டிதர்கள் அந்தச் சபையில் பிரசன்னமாயிருந்தனர். விஜயநகர சமஸ்தான பண்டிதர் வேதாந்தம் சேஷய்ய சாஸ்திரிகளும்

கோதாவரி தீர யாத்திரை.


அந்தச் சபைக்கு வந்திருந்தார். ஒவ்வொரு நாளும் அத்வைத சித்தாந்தத்தைப் பற்றியும், ஸ்ரீ ஆதி, சங்கரரது சரித்திரத்தைப் பற்றியும் சொற்பொழிவுகள் நடைபெற்றன. அவ்வருட வியாஸ பூஜை நரஸாபூருக்கு அடுத்த பாலக்கோல் என்னும் இடத்தில் 1937 ஜுலை மாதம் 23உ நடைபெற்றது. சாதுர் மாத சங்கல்பத்தை நிறைவேற்றுவதின் பொருட்டு ஸ்வாமிகள் அங்குச் செப்டம்பர் மாதம் 20உ வரை தங்கியிருந்தார்கள். அப்பொழுது ஸ்ரீ வீரபத்திர ஸோமயாஜி என்னும் பெரியார் ஸ்வாமிகளது பணியில் ஈடுபட்டிருந்தார். அவ்வருடத்திய நவராத்திரி பூஜை ஹுக்கம்பேட்டை என்னும் இடக்தில் நடைபெற்றது. பின்னர் ஸ்வாமிகள் போலாவரம், கோவூரு, ஏலூரு, மார்கமாக 1937 அக்டோபர் முதல் தேதி ராஜமகேந்திரபுரத்திற்கு விஜயமானார்கள், சுமார் நான்கு மாதங்கள் ராஜமகேந்திரபுரத்தில், தங்கி அவ்வப்போது பக்கத்து ஊர்களுக்கும் அவர்கள் விஜயம் செய்து வந்தார்கள். ராஜமகேந்திரவாசிகள் தங்களது இணையற்ற பக்தியை ஸ்வாமிகளிடம் காட்டி ஸ்வாமிகள் அங்குத் தங்கியிருந்தபொழுது ஸ்வாமிகளது முகாமிற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்துகொடுத்து ஸ்வாமிகளது ஆசியைப் பெற்றார்கள். ராஜமகேந்திரபுரத்திற்கு வடக்கில் 27 மைல்கள் தூரத்தில் அகண்ட கோதாவரி நதியானது சுமார் 2000 அடி உயரமுள்ள இரண்டு மலைகளின் நடுவில் பாய்ந்து வரும் காட்சியைக் காண்பதற்காக ஸ்வாமிகள் பிரத்யேகமான ஓர் நீராவிப்படகில் சென்று வந்தார்கள். அந்த இடத்திற்கு பாப்பி குன்றுகள் எனப் பெயர். சுமார் 100 கஜம் அகலத்தில் கோதாவரி நதியானது இங்கு ஓடுகின்றது. ஸவாமிகள் அந்த இயற்கைக் காட்சியைக் கண்டு மகிழ்ச்சியுற்று அப்புனிதமான கோதாவரியில் நீராடினார்கள், மேலும் அங்கு கோயில் கொண்டுள்ள மஹாநந்தீசுவரர் ஆலயத்திலும் ஸ்வாமி தர்சனம் செய்து கொண்டார்கள். 1938 ஜனவரி மாதம் 31உ நிகழ்ந்த மகோதயபுண்ய காலத்தில் சமுத்திர ஸ்நாநம் செய்யவேண்டுமென ஸ்வாமிகள் விரும்பினார்கள். அதற்காக ராஜமகேந்திரபுரத்திலிருந்து 40 மைல்கள் தூரத்திலுள்ள காக்கிநாடாவிற்கு விஜயம் செய்து அங்கு விதிப்படி சங்கல்பம் செய்துகொண்டு சமுத்திர ஸ்நானம் செய்தார்கள். புனித காலத்தை முன்னிட்டு அன்று காக்கிநாடாவில் ஒரு லக்ஷம் ஜனங்களுக்கு மேல் கூடி கடலில் நீராடினர். கோதாவரி

தீரவாசிகள் ஒவ்வொரு இடத்திலும் ஸ்வாமிகளின் விஜயத்தை மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடி, ஆங்காங்கு தக்கவாறு ஸ்வாமிகளுக்கு வரவேற்பு அளித்து ஸ்வாமிகளது ஆசியைப் பெற்றூர்கள்,


கிருஷ்ணு, குண்டூர், நெல்லூர் ஜில்லாக்களில் யாத்திரை.

கோதாவரி தீர யாத்திரையை முடித்துக்கொண்டு ஸ்வாமிகள் 1938 மார்ச்சு மாதம், கிருஷ்ணு நதி தீரத்திற்கு விஜயம் செய்தார்கள். அவ்வருட சங்கர ஜயந்தி உத்ஸவம், 1938 ஏப்ரல் மாதம் 30௳ முதல் மே மாதம் 4௳ வரை, ஐந்து நாட்கள் பீமவரத்தில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. ஸ்வாமிகள் பெஜவாடாவில் கிருஷ்ணு நதியில் ஸ்நாநம் செய்து அவ்விடமுள்ள கநகதுர்க்கா ஆலயத்தில் அம்பிகையைத் தரிசித்துக் கொண்டார்கள், பெஜவாடா நகர மக்கள் ஸ்வாமி களுக்கு விசேஷ வரவேற்பு அளித்து, சுமார் ஒரு வாரம் அவ்விடம் தங்க எல்லா ஏற்பாடுகளேயும் செய்திருந்தனர். பெஜவாடாவி லிருந்து 6 மைல்கள் தூரத்திலுள்ள மங்களகிரி என்னும் க்ஷேத் திரத்திற்கு ஸ்வாமிகள் விஜயம் செய்தார்கள். அந்த க்ஷேத்திரத் திலும் ஸிம்மாசலத்தைப் போலவே அழகிய ஓர் குன்றின்மீது நரஸிம்மஸ்வாமி ஆலயம் அமைந்துள்ளது. இந்தச் சந்நிதிக்குப் பானக நரசிம்மர் எனப் பெயர் விளங்குகிறது. இத்தலத்தில் சுவாமியின் நிவேதனத்திற்காக ஒவ்வொரு நாளும் பானகம் கரைத்து வைக்கப்படுவதாகவும், அவ்விதம் வைக்கும் பானகத்தில் ஒரு 'பகுதி குறைந்துவிடுவதாகவும் கூறப்படுகிறது. குறைந்து போகும் பானகமானது நரஸிம்மசுவாமியால் ஏற்றுக்கொள்ளப் படுகிறதென அங்கு மக்கள் கூறுகின்றனர்.

கோவூர் என்னும் ஊரில் அமைந்துள்ள சமஸ்கிருத கலா சாலேக்கு ஸ்வாமிகள் விஜயம் செய்து, அங்கு நடைபெறும் போதனுமுறைகளேப் பற்றியெல்லாம் விசாரித்து,மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சமஸ்கிருத பாஷையில் சில உபதேச மொழிகளே அருளினுர்கள். கலாசாலேயின் தலேவர் ஸ்ரீ புருஷோத்தம பந்துலு எம். ஏ., எல். டி., ஸ்வாமிகளுக்கு வடமொழியில் ஓர் உபசாரப் பத்திரம் வாசித்தளித்தார். பின்னர் தாடேபள்ளிக்கூடம், குடிவாடா, கபிலேசுவரம், அயிலூரு, தேனலி முதலிய இடங்களுக்கு அவர் கள் விஜயம் செய்து சாதுர் மாத சங்கல்பத்திற்கெனக் குண்டூரை



1938-ல் குண்டூர் அனந்த ஸ்ரீலக்ஷ்மி கோஸம்ரக்ஷண சங்கத்தில் ஸ்ரீ ஆசார்யாள் 308



1939-நெல்லூரில், காலையில் கோபூஜை. கஜபூஜை முடிவு பெற்றவுடன்
வேதாந்த பாஷ்ய பாட ஆரம்பம்

அடைந்தார்கள். குண்டூரில் 1938 ஜுலை மாதம் 12உ ஸ்வாமிகள் வியாஸ பூஜையை மிகச் சிறப்பாக நடத்தினார்கள். அவ்வூர் மக்கள் ஸ்வாமிகள் தங்கி இருந்த ஜாகையில் அந்தப் பூஜைக்கெனத் தனி மண்டபம் ஒன்றை அமைத்துக் கொடுத்திருந்தனர். ஆயிரக் கணக்கான மக்கள் அன்று அங்குப் பூஜையைத் தரிசித்துக்கொண் டனர். அன்று முதல் இரண்டு மாதங்கள் ஸ்வாமிகள் அவ்விடம் தங்கியிருந்தார்கள். அப்பொழுது ஒவ்வொரு நாளும் நடைபெற்ற வித்வத் சபையில் அந்நாட்டுப் பண்டிதர்கள் பலர் கலந்து கொண்டு தங்கள் திறனை ஸ்வாமிகளின் முன் புலப்படுத்தி அவர்களிடம் சன்மானம் பெற்றார்கள். அகில ஆந்திர தேச தார்மீக பண்டித பரிஷத்தின் பிரதான காரியதரிசியும், கோதாவரி தீரம் முனிகண்ட அக்ரஹாரவாசியும், பிரபல வியாகரண பண்டிதருமான புல்யம் உமாமகேசுவர சாஸ்திரிகள் அப்பொழுது ஸ்வாமிகளின் பேரில் வடமொழியில் 170 சுலோகங்களை இயற்றி, அவைகளை ஸ்வாமி களின் முன்னிலையில் அரங்கேற்றினார். அவருடைய அரிய அக்கவிதைகள் புத்தக வடிவமாக வெளிவந்துள்ளது. சாதுர் மாதம் முடிவு பெற்றவுடன் ஸ்வாமிகள் குண்டூரிலிருந்து புறப் பட்டுக் கர்னூல் ஜில்லாவிலுள்ள மார்க்காபூருக்கு விஜயமானார் கள். அவ்வூரில் அவ்வருடத்து நவராத்திரி பூஜையை ஸ்வாமிகள் மிகுந்த விமரிசையுடன் நடத்தினார்கள். அங்கு மராமத்து இலாகாவில் ஓவர்ஸியர் வேலை பார்த்து வந்த ஓம் ராமச்சந்திர ஐயர் என்னும் பக்தர் அந்தப் பூஜைக்கு வேண்டிய எல்லா வசதி களையும் செய்துகொடுத்தார்.

1938 நவம்பர், டிசம்பர், 1939 ஜனவரி இம்மாதங்களில் ஸ்வாமிகள் நெல்லூரில் விஜயம் செய்திருந்தார்கள். நெல்லூர் பொதுமக்கள் மிகுந்த பக்தியுடன் ஸ்வாமிகளை 3 மாதங்களுக்கு மேல் ஆராதித்து ஸ்வாமிகளது அவ்வூர் விஜயத்தை மிகவும் சிறப்புடன் கொண்டாடினார்கள். அப்பொழுது கோடா நரஸிம்மம் பந்துலு, வக்கீல், இங்குவ ஸ்ரீ கிருஷ்ணய்யா முதலான பிரமுகர்கள் விசேஷமாக மடத்தின் பணியில் ஈடுபட்டார்கள். நெல்லூரில் விஜயம் செய்திருந்தபொழுது ஸ்வாமிகள் தும்மகுண்டா முதலான பக்கத்துக் கிராமங்களுக்கும் விஜயம் செய்து வந்தார்கள் 1939 பிப்ரவரி மாதம் 6உ ஸ்வாமிகள் நெல்லூரிலிருந்து புறப்பட்டு வேங்கடகிரியில் அவ்வூர் மகாராஜாவின் வேண்டுகோளுக்கிணங்கி, மார்ச்சு 12உ முதல் 25உ வரை, தங்கினார்கள். பின்னர் கோரேர்,

நாயுடுபேட்டை, சூலூர் மார்க்கமாக விஜய யாத்திரை செய்து கொண்டு அல்லாடி என்னும் கிராமத்தை அடைந்தார்கள். அந்த ஊர், சென்னை வழக்கறிஞர் சர் அல்லாடி கிருஷ்ணஸ்வாமி ஐயரின் சொந்த ஊராகும். ஐயர் அவர்களும் அப்பொழுது அங்கு வந்திருந்து தமது இல்லத்தில் ஸ்வாமிகளுக்குப் பிக்ஷை பாதபூஜை முதலியவற்றைச் செய்து வைத்தார்.

காளஹஸ்தி, திருப்பதி க்ஷேத்திரங்களுக்கு இரண்டாவது முறை விஜயம்.

சென்ற 1932-ஆவது வருடம் சிவராத்திரியின் பொழுது ஸ்வாமிகள் காளஹஸ்திக்கு விஜயம் செய்திருந்ததைப் பற்றி முன் பகுதிகளில் கூறப்பட்டுள்ளது. அதற்கு 7 வருடங்களுக்குப் பின்னர் 1939 ஏப்ரல் மாதம் 7உ முதல் 17உ வரை 11 நாட்கள் ஸ்வாமிகள் காளஹஸ்தியில் தங்கியிருந்தார்கள். அப்பொழுது ஸ்வாமிகள் ஒவ்வொரு நாளும் சுவர்ணமுகி நதியில் ஸ்நானம் செய்து ஸ்ரீ காளஹஸ்தி நாதரைத் தரிசனம் செய்துகொண்டார்கள். பின்னர் ஏப்ரல் 19, 20உகளில், திருப்பதிக்கு அவர்கள் விஜயம் செய்து திருமலையில் ஸ்ரீ வெங்கடேச்வர பெருமாளைச் சேவித்துக்கொண்டார்கள். தேவஸ்தான அதிகாரிகள் ஸ்வாமிகளுக்கு வழக்கம்போல் செய்யவேண்டிய மரியாதைகளையெல்லாம் செய்து, விசேஷமான பூவங்கி சேவையையும் செய்துவைத்தார்கள். அந்த வருடத்திய சங்கர ஜயந்தி உத்ஸவம் நகரியை அடுத்த புக்கை க்ஷேத்திரத்தில் ஏப்ரல் மாதம் 24உ நடைபெற்றது. அந்த க்ஷேத்திரத்தில் சென்ற 1932 செப்டம்பர் மாதம் 11உ ஸ்வாமிகள் ஆதி சங்கரரது விக்ரஹத்தைப் பிரதிஷ்டை செய்திருப்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

திருத்தணி, காஞ்சி, சிதம்பரம் க்ஷேத்திரங்களைத் தரிசனம் செய்துகொண்டது.

ஸ்வாமிகள் புக்கையிலிருந்து புறப்பட்டு 1939 ஏப்ரல் மாதம் 30உ திருத்தணியில் குன்றின் மீது அமைந்துள்ள ஸ்ரீ முருகப் பெருமானைத் தரிசித்துக்கொண்டு, மே மாதம் முதல் தேதி திருமால் பூரில் தங்கி 2உ காஞ்சிபுரத்தை அடைந்தார்கள். காஞ்சிபுரத்தில் ஏகாம்பர நாதரையும், காமாக்ஷி அம்பிகையையும் தரிசித்துக்கொண்டு, ஆரணி, செஞ்சி, விழுப்புரம், பண்டுருட்டி, திருப்பாதிரிப்புலியூர், பறங்கிப்பேட்டை மார்க்கமாக மே மாதம் 17உ சிதம்பர க்ஷேத்திரத்திற்கு விஜயமானார்கள். சிதம்பரம் பொதுமக்களும், நடராஜர் ஆலயத்தின் பொது தீக்ஷிதர்களும்,

ஸ்வாமிகளைத் தகுந்த மரியாதைகளுடன் வரவேற்றார்கள்; ஆலயத்திலுள்ள ஆயிரக்கால் மண்டபத்தில் ஸ்வாமிகளுக்கு ஜாகை ஏற்பாடு செய்திருந்தார்கள். அன்று ஸ்வாமிகள் சபா நாயகர் சந்நிதியிலும், கோவிந்தராஜர் சந்நிதியிலும் சுவாமி தரிசனம் செய்துகொண்டார்கள். இரு சந்நிதிகளிலும் ஸ்வாமி களுக்கு உகந்த மரியாதைகள் செய்யப்பட்டன. அன்று ஸ்வாமி களது நித்ய பூஜை ஆயிரக்கால் மண்டபத்தில் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் அன்று ஸ்வாமிகளது பூஜையைத் தரிசித்துக்கொண்டனர்.

இரண்டாவது இராமேச்வர யாத்திரையும், இராமநாத ஸ்வாமிக்கு செய்வித்த கங்காபிஷேகமும்.

ஸ்வாமிகள் 1922-ஆவது வருடம் செப்டம்பர் மாதத்தில் இராமசேதுவில் மணல் எடுத்துக் கங்கா யாத்திரைக்குச் சங்கல்பம் செய்துகொண்டது பற்றி முன்பகுதிகளில் கூறப்பட்டுள்ளது. கங்கா யாத்திரையை முறையாக மேற்கொள்ள வேண்டிய நியதிப் படி அப்பொழுது எடுத்த மணலை 1934-ஆவது வருடம் ஜுலை மாதம் 25௳ அலகாபாத்தில் த்ரிவேணி சங்கமத்தில் சேர்த்தார்கள் என்பது முன்னரே கூறப் பட்டுள்ளது ஸ்ரீராம நாத சுவாமிக்கு அபிஷேகம் செய்யவேண்டி, அவிடம் கங்கை எடுத்து அதைத் தமது பூஜையிலேயே வைத்துக் கொண்டிருந்தார்கள். ஸ்வாமிகள் சிதம்பரத்திலிருந்து புறப்பட்டு சேத்தியா தோப்பு, அணக்கரை, ஒழுகுசேரி, கோனேரிராஜபுரம், முடிகொண்டான், திருவாரூர், மூலங்குடி. தண்ணீர்குன்னம், சாத்த னூர், மன்னார்குடி, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, ஆவுடையார் கோவில், உப்பூர், தேவி பட்டணம் இந்த ஊர்களின் வழியாக 1939 ஜுன் 10௳, இராமேச்வரத்தை அடைந்தார்கள். தேவஸ் தான அதிகாரிகளும், பண்டாக்களும், மற்ற பொதுமக்களும் அப்பொழுது ஸ்வாமிகளுக்கு விசேஷமான வரவேற்பை அளித் தனர். காலையில் ஸர்வ தீர்த்தத்தில் ஸ்வாமிகள் சமுத்திர ஸ்நானம் செய்தபொழுது மக்கள் ஏராளமாகக் கூடி ஸ்வாமி களைத் தரிசித்துக்கொண்டனர். பின்னர் ஸ்வாமிகள் இராமநாத சுவாமி தேவாலயத்திற்கு விஜயம் செய்தார்கள். சுவாமிக்கு முறைப்படி ஏகாதச ருத்திரத்துடன் ஸ்வாமிகள் கொணர்ந்த கங்கை அபிஷேகம் செய்விக்கப்பட்டது. அன்று ஸ்வாமி களது கங்கா யாத்திரையும் பூர்த்தி அடைந்தது. மறுநாள் ஜுன் மாதம் 11௳ முதல் ஸ்வாமிகள் மௌனத்தை மேற்கொண்டு

விட்டார்கள், அந்த மௌனம் 6 மாதங்களுக்கு மேல் நீடித்திருந்தது. மௌனத்தை மேற்கொண்ட அன்றே ஸ்வாமிகள் தனுஷ்கோடியில் நீராடிப் பின்னர் தர்ப்பசயனம், நவபாஷாணம், முதலிய க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு அவ்வருட வியாஸ பூஜையைக் கும்பகோணத்தில் நடத்த வேண்டிய தீர்மானத்துடன் வழியில் அதிகமாகத் தங்காமல் யாத்திரையை விரைவாக மேற்கொண்டார்கள்.

இராமநாதபுரம், சிவகங்கை முதலான இடங்களுக்கு விஜயம்.

1939 ஜுன் மாதம் 13௳ ஸ்வாமிகள் இராமநாதபுரத்திற்கு விஜயம் செய்திருந்தபொழுது, சேதுபதி ராஜா ஸ்வாமிகளைத் தக்கவாறு வரவேற்று தமது ராஜாங்க விருதுகளுடன் ஊர்வலமாகத் தமது அரண்மனைக்கு அழைத்துச் சென்று, அவ்விடம் பாதபூஜை முதலிய மரியாதைகளை வழக்கம் போல் செய்துவைத்தார். ஜுன் மாதம் 14௳ ஸ்வாமிகள் மானுமதுரையில் முகாம் செய்தார்கள். 15௳ சிவகங்கைக்கு விஜயம் செய்தபொழுது சிவங்கை ராஜாவும் ஸ்வாமிகளை வரவேற்று ஸ்வாமிகளுக்குப் பிக்ஷை, பாதபூஜை முதலியவற்றைச் செய்வித்தார். ஊர் மக்களும் ஸ்வாமிகளுக்கு மரியாதை செலுத்தி அவர்களது நித்ய பூஜையைத் தரிசித்துக்கொண்டனர். 16௳ ஸ்வாமிகள் திருப்பத்தூரில் தங்கினார்கள். 17௳ இளையாற்றங்குடியில் தமது பரமேஷ்டி குருவான ஸ்ரீமகாதேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தைத் தரிசித்துக்கொண்டார்கள். 18௳ கடியாபட்டியில் முகாம் செய்து, அன்றிரவு திருமயத்தில் ஸ்ரீ சத்தியமூர்த்தி பெருமாளையும், ஸ்ரீ சத்தியகிரீஸ்வரரையும் தரிசித்துக்கொண்டு மறுநாள் காலை 5 மணிக்கு புதுக்கோட்டைக்கு விஜயமானார்கள். கடியாபட்டியில் உ. மு. உ. குடும்பத்தார் ஸ்வாமிகளுக்குப் பிக்ஷை நடத்திவைத்தார்கள். அவ்வூரை அடுத்த ராயவரம் நகரத்தார்கள் வேண்டுகோளுக்கு இணங்கி அவ்வூருக்கு ஸ்வாமிகள் விஜயம் செய்தபொழுது ஊர்மக்கள் பெரியதொரு ஊர்வலத்தை ஏற்பாடு செய்தார்கள்.

புதுக்கோட்டையில் குதூகல வரவேற்பு.

1939 ஜுன் மாதம் 19௳ காலை புதுக்கோட்டை சமஸ்தானம் உதவி நிர்வாகி (Assistant Administrator) ராவ்பகதூர் கிருஷ்ணமாச்சாரியார் மற்ற சமஸ்தான அதிகாரிகளுடனும், தானதி

காரி முதலான பண்டிதர்களுடனும் மற்றும் அரசாங்க மரியாதைகளுடனும் நகர எல்லையில் ஸ்வாமிகளுக்குப் பூர்ணகும்பம் அளித்து வரவேற்றூர். ஸ்வாமிகளிடம் மிகுந்த பக்திகொண்ட புதுக்கோட்டை மக்கள் 16 வருடங்களுக்குப் பின்னர் அவர்களைத் தரிசிப்பதில் மிகுந்த ஆவல்கொண்டவர்களாகி அதிகாலையிலேயே திரள் திரளாக வீதிகளில் கூடிவிட்டனர். அன்று காலை அரசர் கல்லூரியிலிருந்து ஓர் பெரிய ஊர்வலம் புறப்பட்டது, அரசாங்க குதிரைப்படை, போலிஸ்படை, மிலிடரி பாண்டு, தேவஸ்தான விருதுகள், இவைகளுடன் ஸ்வாமிகளின் ஊர்வலம் கீழ ராஜ வீதியை அடைந்ததும் ஜனக் கூட்டம் தாங்கமுடியாதவாறு இருந்தது. புதுக்கோட்டை நகர மக்கள் பலர் ஸ்வாமிகளுக்கு அறிமுகமானவர்களாதலால் ஸ்வாமிகள் மௌனமாயிருந்த நிலையிலும் அவர்கள் ஒவ்வொருவரையும் கருணை மிக்க தமது பார்வையினுலும், புன்சிரிப்பினுலும் அனுக்ரகித்தார்கள். ஸ்வாமிகளுக்கு ஸ்ரீ சாந்தநாதர் கோவிலுக்கு சமீபமுள்ள சமஸ்தான தர்ம சத்திரத்தில் ஜாகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது, ஜூன் மாதம் 19, 20. ஆகிய இரண்டு நாட்களுக்கும் ஸ்வாமிகளது விஜயத்தை முன்னிட்டு சமஸ்தானம் முழுவதும் பொது விடுமுறை நாட்களாக சமஸ்தான தர்பார் பிரகடனம் செய்தார்கள், அவ்விரண்டுநாட்களிலும் ஸ்வாமிகள் செய்து வந்த நித்ய பூஜையை மக்கள் தரிசித்து ஸ்வாமிகள் அருளிய அபிஷேகதிர்த்தத்தையும்,விபூதி, அக்ஷதை பிரசாதங்களையும் பெற்று தங்களைப் புனிதமாக்கிக் கொண்டனர். சமஸ்தான உயர்தர அதிகாரிகள் பலருக்கும், பொது மக்களுக்கும் ஸ்வாமிகள் பேட்டி அளித்து, தனித்தனியே ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்தார்கள். முதல் நாள் சமஸ்தானத்தின் சார்பாக ஸஹஸ்ர பாதபூஜை, பிக்ஷை முதலானவைகள் நடைபெற்றன. பல அன்பர்கள் ஸ்வாமிகளைத் தங்கள் வீடுகளுக்கு அழைத்துச் சென்று பாதபூஜை செய்தார்கள். புதுக்கோட்டையில் இரண்டு நாட்களே தங்கத் திட்டம் இட்டிருந்த போதிலும் அவ்வூர்ப் பேட்டையார்கள் எனக் கூறப்படும் வியாபாரச் சங்கத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி மற்றொரு நாளும் அவ்விடம் தங்க ஸ்வாமிகள் இசைந்தார்கள். அன்று பேட்டையார்கள் ஸ்வாமிகளுக்குப் பிக்ஷை, பாதபூஜை முதலியவைகளைச் செய்வித்து, அன்றிரவு ஓர் பெரிய ஊர்வலத்தையும் ஏற்பாடு செய்திருந்தனர். புஷ்பங்களால் வெகு நேர்த்தியாக அலங்கரிக்கப்

பட்ட தந்தச் சிவிகையில் ஸ்வாமிகள் அமர்ந்து அன்றிரவு புதுக்கோட்டை நகரின் முக்கிய வீதிகளின் வழியே ஊர்வலம் வந்த காட்சி இன்னும் மக்களால் மறக்கமுடியாத காட்சியாகும். ஸ்வாமிகள் 22௳ காலை புதுக்கோட்டையிலிருந்து கீரனூருக்கு விஜயமானார்கள். கீரனூர் சிவாலயத்தில் ஸ்வாமிகளின் நித்ய பூஜை அன்று நடைபெற்றது. ஏராளமான மக்கள் பூஜையைத் தரிசித்துக்கொண்டார்கள்.

கீரனூரிலிருந்து ஸ்வாமிகள் 1939 ஜூன் 23௳, திருச்சிராப்பள்ளிக்கு விஜயம் செய்து திருவானைக்காவில் தமது மடத்தில் தங்கி, திருச்சி மக்கள் செய்த மரியாதைகளை ஏற்றுக் கொண்டார்கள். ஸ்வாமிகள் அப்பொழுது ஜம்புகேச்வரத்தில் ஸ்ரீ அகிலாண்டேச்வரி அம்மனையும், திருச்சியில் மாதுர்பூதேச்வரரையும், ஸ்ரீரங்கத்தில் ரங்கநாதரையும் தரிசித்துக் கொண்டார்கள். ஸ்வாமிகள் சென்ற இடமெல்லாம் அவர்களுக்கு மக்கள் பூர்ண கும்பம் அளித்து அவர்களை மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்றார்கள். மூன்று நாட்கள் திருச்சியில் தங்கிப் பின்னர் பூதலூர், வல்லம், தஞ்சாவூர், ஈச்சங்குடி, ஸ்வாமிமலை மார்க்கமாக ஜூன் மாதம் 29௳ கும்பகோணத்தை அடைந்தார்கள். ஸ்வாமிகளின் இருபத்தொரு வருடத்திய சங்கல்ப யாத்திரையும் மிகுந்த வெற்றியுடன் அன்று பூர்த்தியடைந்தது.

இருபத்தொரு வருட சங்கல்ப யாத்திரையின் நிறைவு. கும்பகோணத்தில் வியாஸ பூஜை விழா. ஸ்வாமிகளைத் தரிசிக்க மக்கள் கொண்ட ஆர்வம்.

வெகு நாட்களாக ஸ்வாமிகளின் தரிசனத்தை எதிர்பார்த்திருந்த கும்பகோணம் நகர மக்கள் அன்று ஸ்வாமிகளுக்கு மிகச் சிறந்த முறையில் வரவேற்பு அளித்தனர். அப்பொழுது ஸ்வாமிகள் மௌன விரதத்தை மேற்கொண்டிருந்ததால் அவர்களின்

குறிப்பு: ஸ்வாமிகளது புதுக்கோட்டை விஜயத்தின் நினைவாக அவ்வூர் பொதுமக்கள் அம்பாள்புரம் என்னும் பகுதியில் சங்கரமடம் ஒன்றை அமைத்து அதில் ஸ்ரீ ஆதிசங்கராது பிம்பத்தையும் ஸ்ரீ ராஜ ராஜேசுவரி அம்பிகையின் பிம்பத்தையும் பிரதிஷ்டை செய்தனர். அவ்வாலய கும்பாபிஷேகம் சென்ற 1951-வது வருஷம் ஜூன் மாதம் 24 தேதி நடைபெற்றது. இவ்வாலயம் எழுப்பப்பட்டிருக்கும் நிலத்தை வககில் ஆர். ராமகிருஷ்ணய்யர் என்னும் பக்தர் இனமாக வழங்கினர்.

திருவாக்கிலிருந்து வரும் உபதேச மொழிகளைக் கேட்டுப் பயனை யடையலாம் என்று நம்பியிருந்த பலருக்கு அது பெரிய ஏமாற்றத்தை அளித்தது. ஆயினும் ஸ்வாமிகள் ஊருக்குள் பிரவேசித்த பொழுது, ஒவ்வொரு வீதியிலும் ஒவ்வொரு வீட்டிலு முள்ள சிறு குழந்தைகள் முதல் தள்ளாத பருவத்திலுள்ள வயோதிகர்கள் ஈருக, எல்லோரையும் கண்டு தமது முக ஜாடையி னாலும். கை ஜாடைகளினாலும் அவர்களின் நலன்களைப் பற்றி யெல்லாம் கேட்டறிந்து அவர்களை ஆசீர்வதித்தார்கள். சாதாரணமாகக் கும்பகோணத்திலிருந்து ஸ்வாமிகள் யாத்திரை புறப்படும் பொழுதும், யாத்திரையிலிருந்து திரும்பி வரும்பொழு தும், முதலில் அவ்வூர்ச் சௌராஷ்டிர பிரமுகரும். தார்மீகருமான அரண்மனை கிருஷ்ணன் செட்டியாரது ரயிலடி சத்திரத்தில் தங்குவது வழக்கம். அதுபோல் ஸ்வாமிகள் செட்டியாரின் சந்ததியார்களின் வேண்டுகோளுக்கிணங்கி அந்தச் சத்திரத்தில் தங்கி, அன்று அவர்கள் அளித்த பிக்ஷை, பாதபூஜைகளை ஏற்றுக் கொண்டார்கள். அன்றிரவு நகர மக்கள் மிகப் பெரியதொரு ஊர்வலத்தை ஏற்பாடு செய்ய, அவ்வூர்வலம் காவிரியின் கரையில் அமைந்துள்ள ஸ்ரீமடத்தை இரவு 2 மணிக்கு அடைந்தது.

மறு நாளாகிய 1939 ஜுன் 30உ அவ்வருட வியாஸ பூஜை நிகழவிருந்ததால் அந்தப் பூஜைக்கென மடத்தின் பெரியமுற்றத்தின் நடுவே ஓர் அலங்கார மண்டபம் அமைக்கப் பெற்றிருந்தது. அன்று காலை ஸ்வாமிகள் காவிரியில் நீராடி மடத்திற்குள் நுழைந்தபொழுது ஸ்வாமிகளைத் தரிசிக்க ஆவலுடன் காத்திருந்த கூட்டம் கட்டுக்கடங்காதவாறு இருந்தது. அப்பொழுது ஸ்வாமி கள் மடத்தின் மாடி மீது ஏறி, கைப்பிடி சுவரை ஒட்டி ஓர் உயர்ந்த பீடத்தில் நின்று, வீதியிற் கூடியிருந்த யாவருக்கும் தரிசனம் அளித்தார்கள். அன்றைய வியாஸ பூஜையைத் தரிசிக்க வட இந்தியாவிலிருந்தும், ஆந்திர நாட்டிலிருந்தும் மைசூர் சமஸ்தானத்திலிருந்தும் பக்தர்கள் பலர் தம் குடும்பங்களுடன் வந்திருந்தனர். நம் நாட்டிலுள்ள பிரபலமான வடமொழிப் பண்டிதர்கள் அன்று அங்கு விஜயம் செய்திருந்தனர். சிதம்பரம், திருவானைக்கா, ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம் முதலான பல வெளி ஊர் தேவஸ்தானங்களிலிருந்தும், உள்ளூர் தேவஸ்தானங்களிலிருந்தும் அர்ச்சகர்களும், தேவஸ்தான அதிகாரிகளும் பிரசாதமும், மாலை

முதலியவைகளையும் ஸ்வாமிகளிடம் சேர்ப்பித்தார்கள். பல ராஜாக்களிடமிருந்தும், ஜமீன்தார்களிடமிருந்தும் பிரதிநிதிகள் வந்து ஸ்வாமிகளுக்குப் பாதபூஜை செய்வித்தார்கள். அன்று பகல் 11 மணிக்கு ஆரம்பமான பூஜை மாலை 4 மணி வரையில் நடைபெற்றது. மறு நாள் மடத்தில் ஓர் வித்வத்சபை கூடிற்று, பண்டிதர்கள் அப்பொழுது அத்வைத சித்தாந்தத்தைப் பற்றி விளக்கம் கூறினார்கள். அவர்கள் யாவருக்கும் ஸ்வாமிகள் தகுந்த சன்மானங்களை வழங்கினார்கள். ஆந்திர நாட்டிலிருந்து, ஏலூரு, சாஸ்திர ரத்னாகர மண்டலிக வேங்கட சாஸ்திரி என்னும் மகா வித்வானும் அந்தச் சபையில் கலந்துகொண்டார். அவ்வருட நவராத்திரி பூஜையும் கும்பகோணம் மடத்திலேயே நடைபெற்றது.

ஸ்வாமிகளுடன் பழகிய நல்லோர்கள் பலர் என்றாலும்’ அவர்களுள் ஒருவரான தேப்பெருமாநல்லூர் சிவன் அவர்கள் ஸ்வாமிகளிடம் வைத்திருந்த பக்தி ஒரு தனிச்சிறப்புள்ளதாதலால், அவரைப் பற்றிச் சில வரலாறுகள் இங்கு கூறப்படுகிறது.

தேப்பெருமா நல்லூர் சிவனது மறைவு.

அன்னதான சிவனது பெயரைக் கேட்ட அளவிலேயே சோழநாட்டு மக்களது உள்ளத்தில் ஓர் உணர்ச்சி எழும் என்பதில் ஐயமில்லை. அன்னதானம் என்றால் ஆயிரம் பேருக்கா? பதினாயிரம் பேருக்கா? லக்ஷம் பேருக்கா? அல்லது கோடி பேருக்கா? எனக் கணக்கிட்டால் அவரது அன்னதானம் கணக்கிலடங்காது என்று சொல்லுமாறு அவரது வாழ்நாளில் அன்னதானம் சுமார் 50 ஆண்டுகள் அவரால் நடத்தப்பட்டது. அந்தத் தனி மனிதர், அதிலும் ஓர் ஏழை அந்தணர், அறுசுவையுடன் இவ்வளவு பெரிய அன்னதானத்தைச் செய்வித்தாரென்றால் அதனுடைய மர்மம்தான் என்னவென்பதை அறிய யாவரும் ஆவல் கொள்வார்கள்.

இவர் கும்பகோணத்திற்கடுத்த தேப்பெருமா நல்லூரில் சென்ற 1852-ஆவது ஆண்டில் ஓர் எளிய பிராமணக் குடும்பத்தில் உதித்தவர். இவர் பெயர் இராமசுவாமி. இவருக்கு இவரது தந்தையார் வேதத்தை மாத்திரம் சிறு வயதில் கற்றுக்கொடுத்தார். பள்ளிப் படிப்பைப் பெற இவருக்குச் சந்தர்ப்பமே வாய்க்கவில்லை. இவரது இளமைப் பருவத்தில் கயத்தூர் சீநிவாச ஐயர் என்னும் தஞ்சை ஜில்லா மிராசுதார் ஒருவர் திருவிழா நடைபெறும் இடங்களிலெல்லாம் அன்னதானம் செய்து வந்ததை இவர் நேரில்

கண்டிருந்தார்; சில காலம் அவருக்குப் பணிவிடைகளையும் செய்தார். பசித்தவருக்கு அன்னமளிப்பதே மனிதன் கடவுளுக்கும், மக்களுக்கும் செய்யக்கூடிய முதல் பணி என்னும் எண்ணம் இவர் உள்ளத்தில் அப்பொழுது உதித்தது. இவருடைய தாய், தந்தையரும் இவரது இளமைப்பருவத்திலேயே உயிர் துறந்தனர். இவருக்கு மணம் செய்விக்கப்பட்ட அம்மையாரும் சிறிது காலத்தில் இம்மண்ணுலகை நீத்தார். தமக்கிருந்த ஒரு வீட்டையும், சிறிது நிலத்தையும் இவர் விற்று, அப்பொருளைக்கொண்டு அவ்வூரிலுள்ள ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்ம பெருமாள் ஆலயத்தில் நடைபெற்ற திருவிழாவில் ஏழை மக்களுக்கு அன்னதானம் செய்தார். அக்காலத்தில் அவர் தமது வீட்டையும், ஆஸ்தியையும், இழந்து ஒரு வேலையுமில்லாமல் இருந்ததால், சில நண்பர்களின் வற்புறுத்தல்களின் பேரில், அவர் அவ்வூருக்குப் பக்கத்திலுள்ள திருபுவனம் என்னும் க்ஷேத்திரத்தின் சிவாலயத்தில் பரிசாரகர் வேலைக்கு அமர்ந்தார். இந்த வேலையில் அவருக்கு மன நிம்மதி ஏற்படவில்லை. தாம் செய்யும் குற்றம், குறைகளால் சிவாபராதம், ஏற்படுமோ என்று அவர் பயந்தார். அதனுல் அந்த வேலையையும் சில காலத்திற்குள் விட்டுத் துறந்து, முன் கூறியவாறு மக்களுக்கு அன்னம் அளிப்பதே தாம் கடவுளுக்குச் செய்யும் பணியென்ற தீர்மானத்துடன் தஞ்சை ஜில்லாவிலுள்ள பல க்ஷேத்திரங்களில் அன்னதானம் செய்யத் தொடங்கினர்.

1897-ஆவது வருடம் மாசி மாதத்தில் நிகழ்ந்த மகாமகத்தில் கும்பகோணம் ஸ்ரீ சங்கராசாரியார் மடத்தில் அதுவரை செய்திராத ஓர் பெரிய அன்னதானத்தை அவர் செய்ய மேற்கொண்டார். நாள் ஒன்றுக்கு ஐயாயிரம். பதினையிரம் ஜனங்களுக்கு அளிக்க எவ்வளவு உணவுப்பொருள் வேண்டுமென்பதை நாம் ஒருவாறு ஊகிக்கலாம். அவரோ கையில் ஒரு காசுகூட இல்லாத ஏழை; அப்பொழுது அவரது ஆர்வத்தையும், மன உறுதியையும் கண்ட தஞ்சை ஜில்லா மிராசுதார்களும், வியாபாரிகளும், அன்னதானத்திற்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தாமாகவே அவருக்கு உதவ முன்வந்தனர். பணம் பெருது ஊழியம் செய்யப் பல இளைஞர்கள் சிவனை அடைந்தனர். அப்பொழுது நடந்த மாபெரும் அன்னதானத்தில் சிவன் பெரியதொரு வெற்றியைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தபோதிலும், அதனுடன் நிற்காது மேலும் அவர் இப்பணியில் ஈடுபடத் தொடங்கினர். அன்று

முதல் அநேகமாக ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு ஊரில் அன்னதானம் செய்வதென அவர் திட்டமிட்டுக்கொண்டார். அதன்படி சித்திரை மாதம் திருச்செங்காட்டங்குடி அமுதுபடித் திருவிழாவிலும், வைகாசி மாதம் திருவம்பர் மாகாளம் சோமயா கத்திலும், ஆனி மாதம் காரைக்கால் மாம்பழத் திருவிழாவிலும், ஆடி மாதம் காவிரிப்பட்டணத்தில் ஆடி அமாவாசைப் புண்ய காலத்திலும், ஐப்பசி மாதம் மாயவரம் துலாமாத உற்சவத்திலும் கார்த்திகை மாதம் திருநாகேசுவரம் சோமவார விழாவிலும், மார்கழி மாதம் நாச்சியார் கோவில் தெப்ப உற்சவத்திலும், தை மாதம் திருவிடைமருதூர் தைப்பூச விழாவிலும், மாசி மாதம் கும்ப கோணம் மக உற்சவத்திலும், பங்குனி மாதம் எட்டுகுடி பங்குனி உத்திரத்திலும் இவ்விதம் பல ஊர்களில் அவர் அன்னதானங்களைச் செய்யத்தொடங்கினர்.

இவ்வாறு அவர் பல ஊர்களில் செய்து வந்த அன்னதானத் துடன், அவ்வப்பொழுது பல க்ஷேத்திரங்களில் நடைபெறும் கும்பாபிஷேகங்களிலும், அவர் அன்னமளித்து வந்தார். சுமார் 47 ஆண்டுகளுக்கு முன்னர் திருவிடைமருதூரில் நடைபெற்ற மாபெரும் கும்பாபிஷேகத்திலும், பின்னர் திருச்சி மலைக் கோட்டை யில் நடைபெற்ற கும்பாபிஷேகத்திலும் இவரது அன்னதானம் நடைபெற்றது. 1916-ஆவது ஆண்டில் கும்பகோணம் ஸ்ரீ சங்கர மடத்தில் நவராத்திரி காலத்தில் நடைபெற்ற லக்ஷார்ச்சனை, லக்ஷதீபம், லக்ஷப்பிராமண போஜனம், இந்த விழாவின்போது அன்னதானம் முழுவதையும் சிவன் அவர்களே ஏற்றுக்கொண்டு நடத்தினர். 1923-ஆவது ஆண்டில் திருவானைக்காவில் ஸ்ரீ அகிலாண்டேச்வரி அம்மனுக்கு நடைபெற்ற தாடங்கப் பிரதிஷ்டையிலும் சிவன் அன்னதானம் செய்திருக்கிறார். இந்த விழாக்களிலெல்லாம் ஐந்து நாட்கள் முதல் பத்து நாட்கள் வரை வேளை ஒன்றுக்குப் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு அன்னம் அளிக்கப்பட்டிருக்கிறது. இவைகளெல்லாம் சிவன் அவர்கள் செய்வித்த அன்னதானங்களில் மிகப்பெரியவையாகும்.

1909-ஆவது வருட மகாமக காலத்தில் சிவன் நமது ஸ்வாமி களை அவர்களின் 15-ஆவது பாலப்பருவத்தில் முதன் முறையாகச் சந்தித்தார். அன்று முதல் சிவனுக்கு ஸ்வாமிகளிடம் ஒப்பற்ற அன்பும், பக்தியும் எற்பட்டன. தெய்வத்தன்மை வாய்ந்த மகா

புருஷர் என ஸ்வாமிகளைப் பற்றி இவர் கூறிவந்தார். பிராயம் செல்லச் செல்ல ஸ்வாமிகளின் பெருமை உலகத்திற்கு நன்கு விளங்குமென இவர் அடிக்கடி கூறி வருவதுண்டு. சிவன் 1916-ஆவது ஆண்டு முதல் மடத்தில் நெருங்கிய தொடர்பு கொண்டு, அநேகமாக தமது வாசத்தை மடத்திலேயே வைத்துக் கொண்டு. அவ்விடத்திலிருந்தவாறே அவ்வப்போது அன்னதானம் செய்வதற்கு வெளியூர்களுக்குப் போய்வருவார். மடத்தின் அதிகாரிகளும் அவரது சொல்லுக்கு மறு சொல் இல்லாமல் அவருடைய கட்டளைகளை அவ்வப்போது நிறைவேற்றி வந்தனர்.

சென்ற 1921-ஆவது ஆண்டில் ஸ்வாமிகள் தஞ்சை ஜில்லாவில் விஜய யாத்திரை செய்துகொண்டிருந்தபொழுது, ஒரு சமயம் ஸ்வாமிகள் பல நாட்கள் பிக்ஷை ஏற்றுக்கொள்ளாமல் உபவாசம் இருப்பதாகவும், அதனால் ஸ்வாமிகளது சரீரம் மெலிவடைந்து வருவதாகவும், சிலர் சிவனிடம் தெரிவிக்க, சிவன் ஸ்வாமிகளிடம் வைத்துள்ள அன்பின் பெருக்கினால் மிகுந்த உணர்ச்சியுடன் கண்ணீர் விட்டு ஸ்வாமிகளுக்கு ஒரு நீண்ட கடிதத்தை எழுதினர். அக்கடிதத்தில் ஸ்வாமிகள் இவ்விதம் உபவாசம் இருக்கலாகாது என்றும், வெகு காலம் ஸ்வாமிகள் திடகாத்திரர்களாக இருந்து மக்களுக்கு அருள் புரியவேண்டுமென்று சிஷ்யர்கள் விரும்புவதாகவும், எளிய உணவாக சிறிதளவாவது ஒவ்வொரு நாளும் அன்ன பிக்ஷையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும், உடல்நலம் குன்றியிருக்கும்பொழுது வென்னீரிலேயே ஸ்நானம் செய்யவேண்டுமென்றும், ஆற்றிலோ, குளங்களிலோ, கடலிலோ நீராடப் போகும்பொழுது நீளமான கம்பைக்கொண்டு முன்பே ஒருவரை ஆழத்தைப் பார்க்கச்செய்து பிறகே தண்ணீரில் இறங்க வேண்டுமென்றும், ஸ்வாமிகள் எக்காரணத்தைக் கொண்டும் தனிமையில் தண்ணீரில் இறங்கக் கூடாதென்றும், அவ்விடங்களில் நீராடும் பொழுது ஸ்வாமிகளைச் சுற்றிலும் பாதுகாப்பிற்காக மனிதர்கள் நிற்கவேண்டுமென்றும், இரவில் வெகு நேரம் கண்விழித்துக் கொண்டிருக்கலாகாதென்றும், ஸ்வாமிகள் தனிமையில் எங்கும் செல்லக்கூடாதென்றும், நித்யபூஜையை வெகு நேரம் கழித்துச் செய்யாமல் காலத்தில் முடித்துக்கொண்டு சிறிது ஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் சிவன் குறிப்பிட்டிருந்தார். தனது வேண்டுகோளின்படி ஸ்வாமிகள் நடந்துகொள்வதை அறியத் தாம் மிகவும் ஆவலுள்ளவனாக இருப்பதாயும், அது சம்பந்தமாய் தனக்கு

மடத்தின் அதிகாரிகள் மூலம் ஓர் கடிதம் எழுதியனுப்ப உத்தர விட வேண்டுமென்றும் அக்கடிதத்தில் கேட்டுக்கொண்டார். இங்ஙனம் அன்பான ஓர் கடிதத்தை ஸ்வாமிகளுக்குச் சிவனைத் தவிர வேறு எவர்தான் எழுதமுடியும்? கடிதத்தை ஸ்வாமிகளிடம் மடத்தின் நிர்வாகி வாசித்துக்காட்டியபொழுது, ஸ்வாமிகள் புன் முறுவல் செய்து, மறுமுறையும் அதை வாசிக்கும்படி கட்டளை யிட்டார்கள். ஓர் தந்தை அன்புடன் தனது அருமைப் புதல்வனுக்கு எழுதிய கடிதம் போல அது அமைந்திருந்தது. எனினும் ஸ்வாமிகள் அப்பொழுது அதைப் பற்றி எதுவும் கூறுமலிருந்து விட்டார்கள். மறு நாள் சிவனுக்கு என்ன பதிலெழுதுவதென்று மடத்தின் அதிகாரிகள் கேட்க, எல்லாம் சிவனது மனம் போலவே நடைபெறும் என்று ஆள் மூலம் சொல்லியனுப்பும்படி ஸ்வாமிகள் உத்தரவிட்டார்கள், ஆனல் சிவனே இந்தப் பதிலால் திருப்தி அடையாதவராகி நேரில் ஸ்வாமிகளைத் தரிசித்து தம் மனதில் தோன்றியவற்றையெல்லாம் ஸ்வாமிகளிடம் விண்ணப்பித்துக்கொள்ளவேண்டி ஸ்வாமிகள் தங்கியிருந்த கிராமத்திற்கு வந்தார். ஸ்வாமிகளும் அவரிடம் மிகுந்த அன்புடன் பேசி சாத்யமான வரையில் அவர் கோரிக்கைப் படி நடந்துகொள்வதாகக் கூறினர்கள்,

1925-ஆவது வருடம் முதல் 1932-ஆவது வருடம் வரை, நடைபெற்ற மடத்தின் திருப்பணி சம்பந்தமாய் சிவன் ஆலோசனை களைக் கூறிவந்ததுடன் அதற்கெனச் சில மிராசுதார்களிடமிருந்து பொருளையும் சேகரித்தார். சிவனது வயோதிக காலத்தில் மடத்தின் சிப்பந்திகள் சிலரை அவருடன் கூடவே இருந்து அவரது உடல் நலனையும், ஆகாரத்தையும் கவனித்துக்கொள்ளும்படி ஸ்வாமிகள் உத்திரவிட்டிருந்தார்கள். பின்னர் தாம் வெகு காலம் ஜீவித் திருக்க முடியாதென்பதை உணர்ந்த சிவன் தம்மைத் திருபுவனத் துக்கு கொண்டுபோய் விடும்படி கேட்க, அவ்வாறே செய்யப் பட்டது. திருபுவனத்தில் தாம் வழிபட்ட ஸ்ரீ கம்பஹரேசுவரர் சந்நிதானத்திலேயே சிவன் தமது பூதவுடலை 1939 மே மாதம் 19உ விடுத்தார், அன்றே நமது ஸ்வாமிகளும் கங்கா யாத்திரையை முடித்துக்கொண்டு சோழநாட்டில் அடிவைத்தார்கள்.

சிவன் ஓர் துறவியின் ஆசிரமத்தை ஏற்றுக்கொள்ளாவிடினும் அவர் ஒரு உண்மைத் துறவியாகவே விளங்கினர் என்பதற்குச்

சிறிதும் ஐயமில்லை. அவரது புகழ் உலகில் என்றும் அழியாத தாகும். சிவன் சிவபிரான் அடி சேர்ந்த செய்தி ஸ்வாமிகளுக்கு அறிவிக்கப்பட்டவுடன், சந்நியாசம் பெறுமலும் ஞான மார்க்கத்தில் சாதனை இல்லாமலும் இந்த ஜன்மத்தில் செய்த புண்ணியத்தின் பயனால் சிவன் மோக்ஷ நிலையை அடைந்து விட்டாரென்றும், அவருக்கு இனி மறு ஜென்மமில்லையென்றும், ஸ்வாமிகள் கூறினார்கள். அன்று கும்பகோணத்திலும், திருபுவனத்திலும் உள்ள ஆலயங்களில் மோக்ஷதீபம் ஏற்றும்படி ஸ்வாமிகள் கட்டளையிட்டார்கள். அவ்வாறே அவ்வாலய கோபுரங்கள் மீது தீபங்கள் ஏற்றப்பட்டன. ஸ்வாமிகளின் விருப்பப்படி அவர் மோக்ஷமடைந்த பத்தாவது நாள் கும்பகோணம் மடத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அன்னமளிக்கப்பட்டது. சிவன் தமது இறுதிநாளில் தம்மிடம் இருந்த ரூ. 160-யையும் பூர்த்த தருமம் எனக் கூறப்படும் குளம் வெட்டுக் கைங்கரியத்தில் செலவிடும்படி, திருச்சி வக்கீல் ஆர். ஸ்ரீநிவாஸ ஐயரிடம் கொடுத்திருந்தார். அந்தத் தொகையை ஐயர் ஸ்வாமிகளிடம் சமர்ப்பணம் செய்தார். ஸ்வாமிகள் திருவள்ளூரில் ஹரிஜனங்களின் உபயோகத்தில் இருந்த ஓர் குளத்தைச் சீர்திருத்தம் செய்ய அதைச் செலவிட உத்திரவிட்டார்கள்.

---

9. சீர்திருத்தங்களும் பிரசாரங்களும்

ஸ்ரீ மடம் முத்ராதிகாரிகள் சங்கம் நிறுவியது.

மடத்திற்கும், மக்களுக்கும் ஓர் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு மதப்பிரசாரம், சமூகத்தொண்டு இவைகளைச் செய்ய வேண்டி மடம் முத்ராதிராதிகாரிகள் சங்கம் என்னும் ஓர் சங்கத்தைத் தோற்றுவித்து, அதற்குச் சில விதிகளையும் ஏற்படுத்தி முதலில் தஞ்சை ஜில்லாவில் அநேகமாக ஒவ்வொரு கிராமத்திலும் அதை நிறுவ ஸ்வாமிகள் உத்தேசம் கொண்டார்கள். இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர 1939-ஆவது வருட இறுதியிலும், 1940, 1941, 1942-ஆவது வருடங்களிலும் ஸ்வாமிகள் தஞ்சை, திருச்சி ஜில்லாக்களில் பல கிராமங்களுக்கு விஜயம் செய்தார்கள். இந்தச் சங்கத்தின் நோக்கங்கள் பலவற்றுள் முதன்மையானவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. சமூகசேவை:—கிராம மக்கள் தங்களுள் ஒற்றுமையுடனிருந்து சமூகசேவை செய்தல்.

2. தேவாலயக் கட்டிடப்பாதுகாப்பு:—கிராமத்திலுள்ள ஆலயங்களின் நிலை மேலும் சீர்கெட்டுப் போகாமல், பழமையின் காரணமாக அவ்வாலயத்திருப் பணிகளுக்கு நேரும் சிறிய பழுதுகளை அவ்வப்போதே சீர்திருத்தம் செய்தல்; கோவில் மண்டபங்களிலும், கோபுரங்களிலும் முளைக்கும் ஆல், இச்சி, அரசு முதலிய செடிகளை முளையிலேயே பெயர்த்து எடுத்து, அவ்வழகிய கட்டிடங்களை அழியாதவாறு காப்பாற்றுதல்; ஆலயங்களின் பிராகாரங்களில் முளைத்திருக்கும் நெருஞ்சி முதலான முட்செடிகளையும், பிற செடி வர்க்கங்களையும் கிராமமக்களே அவ்வப்போது அப்புறப்படுத்தி, ஆலயங்களை வலம் வருவதற்கு அனுகூலமாக அவ்விடங்களைச் சுத்தம் செய்தல்.

3. ஆலயநிர்வாகம்:—சீரிய முறையில் நிர்வாகம் நடைபெருமலிருக்கும் இடங்களில் அந்த நிர்வாகத்தைச் சீர்படுத்த முயலுதல்.

4. ஏகாதசிப் புராணபடனம்:—ஒவ்வொரு ஏகாதசி அன்றும், கிராம மக்கள் யாவரும் ஓர் பொது இடத்தில் கூடிப் புராணம் படிக்கக் கேட்டல்; ஹரிஜனங்கள் உள்பட எல்லாச் சமூகத்தினருக்கும் இப்புராணங்கள் கேட்பதற்கு வசதி அளித்தல்; புராணங்கள் தமிழிலேயே படிக்கப்படவேண்டும்; ஒவ்வொரு ஏகாதசியிலும் படிக்க வேண்டிய புராணம் பத்திரிகை வாயிலாக முன்கூட்டியே முத்திராதிகாரிகளுக்கு அனுப்பப்படும்; அவை பெரும்பாலும் பெரிய புராணம், திருவிளையாடல் புராணம், இவைகளிலிருந்தே தேர்ந்தெடுக்கப்படும்; வடநாட்டு வைணவ பக்தர்களின் சரித்திரங்களும் தமிழில் மொழி பெயர்த்துச் சேர்க்கப்படும். இந்தப் புராண படனம் முடிந்தவுடன் யாவரும் பகவன் நாமாவை சொல்லிக் கொண்டு கலையவேண்டும்.

5. ஆவினத்தைக் காப்பாற்றுதல்:—ஒவ்வொரு நாளும் ஹிந்து ஒவ்வொருவனும் பசுமாட்டிற்கு ஒரு கைப்பிடி பசும் புல்லாவது கொடுக்கவேண்டும். வீடுகளில் பசுமாடு வளர்க்கச் செய்து, அந்தப் பசுவிலிருந்து கிடைக்கும் பாலின் ஒரு சிறிய பாகத்தையாவது நெய்யாக்கி, அதை

அந்த ஊர் ஆலயத்தில் பிரதி வெள்ளிக்கிழமையாவது விளக்கேற்ற உபயோகப்படுத்தவேண்டும். கறவை நின்ற பசுமாடுகளை அடிமாட்டுக்காக விற்காமல் ஜீவிதகாலம் வரை அவைகளைக் காப்பாற்ற வேண்டும். மக்கள் காப்பிகுடிக்கும் கெட்ட பழக்கத்தை விட்டால் நாட்டில் பாலும், நெய்யும் ஏராளமாகப் பெருகும்.

6. மரம் வளர்ப்பு:—அரசு, ஆல், வில்வம், நெல்லி, மா, வேம்பு முதலான மரங்களை நட்டு அவைகளைச் சரிவர வளர்க்கச் செய்தல். அவரவர்கள் தோட்டங்களிலேயே ஆகாரத்திற்கு உதவும் கிழங்கு வகைகளைப் பயிரிடுதல்.

7. பூர்த்ததர்மம்:—கிராமங்களிலுள்ள கிணறுகள், குளங்கள் இவைகளைத் துருவெடுத்து ஆழமாக்கி மக்களுக்கு உதவும்படி செய்தல். அவசியமான இடங்களிலெல்லாம் புதிதாகக் கிணறுகள், குளங்கள் இவைகளை வெட்டுதல்; இந்தப் பணியைக் கூலியாட்களைக்கொண்டு செய்யாமல், பணக்காரன், ஏழை என்னும் பாகுபாடு எதுவுமின்றி, வீட்டிற்கு ஒரு மண்வெட்டியுடன் நேரில் வந்து இந்தப் பணியில் ஈடுபடுதல்; பெண்களும் இப்பணியில் ஈடுபடலாம்; இதையே பூர்த்த தர்மம் என்று நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன.

8. தர்ம சாஸ்திரம்:—ஆசாரம், அனுஷ்டானம், தர்ம சாஸ்திரம் இவைகளில் மக்களுக்கு எழும் சந்தேகங்களை முத்ராதிகாரிகள் மூலம் மடத்திற்கு எழுதி மடத்திலிருந்து வரும் தீர்மானத்தின்படி நடந்துகொள்ளுதல்.

9. விருந்தோம்பல்:—ஒவ்வொருவரும் தமக்குக் கிடைக்கும் உணவுப் பொருளின் ஒரு சிறிய பாகத்தைப் பிறர்க்கென ஒதுக்கினால் நாட்டின் பசிப்பிணி எளிதாகத் தீருமாகையால் மக்கள் இக்கருத்தை மனதில் கொண்டு அன்றாடம் இதை நிறைவேற்றி வைத்தல்.

இவைகளைத் தவிர இன்னும் பல நோக்கங்கள் இந்தச் சங்கத்திற்காக வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தில் தஞ்சை ஜில்லாவில் மாத்திரம் சுமார் 2000 சங்கங்களுக்கு மேல் நிறுவி, ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒவ்வொரு முத்திராதிகாரியையும், ஓர்

உப முத்ராதிகாரியையும், தொண்டர்களையும் ஸ்வாமிகள் தேர்ந்தெடுத்து நியமனம் செய்தார்கள். ஒவ்வொரு முத்ராதிகாரிக்கும் அடையாளமாக வில்லையும் அளிக்கப்பட்டது. தாலுக்கா கமிட்டிகள் என்றும், கோட்டகக் கமிட்டிகள், கிராமச் சங்கங்கள் என்றும் இதைப் பலவாருகப் பிரித்தார்கள். பட்டணங்களில் தெருவுக்கு ஒரு முத்திராதிகாரியும், ஓர் உப முத்திராதிகாரியும் நியமிக்கப்பட்டார்கள். இந்தச் சங்கங்களை நிறுவுவதற்கு ஸ்வாமிகள் பல கிராமங்களுக்குத் தாமே ஓய்வின்றி நேரில்விஜயம் செய்து தம் பூஜை நேரத்தைத் தவிர மிகுதியுள்ள காலத்தைப் பகல், இரவு இரண்டு நேரங்களிலும், தீவிரமாக ஈடுபடுத்தி உழைத்தார்கள். பூர்வாங்கமாக இந்தத் திட்டத்தை நிறுவுவதற்கு முதல் இரண்டு வருடங்களில் ரூபாய் முப்பதினுயிரத்திற்கு மேல் மடத்திலிருந்து செலவிடப்பட்டது. தஞ்சை ஜில்லாவில் அநேகமாக ஒவ்வொரு கிராமத்திலும், மடத்திற்கெனப் பட்டயமான்யம் என்ற பெயருடன் ஒரு சிறிய பகுதி நிலம் உளது. இந்த நிலங்களின் வருமானம் இந்த முத்ராதிகாரியின் திட்டத்திற்கே பயன்படுமாறு அவைகளின் நிர்வாகத்தையும் அந்த அந்த ஊர் முத்ராதிகாரிகளிடம் ஒப்படைத்து விட்டார்கள். இந்தத் திட்டத்தை ஒட்டிக் காமகோடி என்னும் பெயருடன் ஓர் செய்தித் தாளும் ஆரம்பிக்கப்பட்டது. அப்பத்திரிகையில் முத்ராதிகாரிகளுக்கு அவ்வப்போது தெரிவிக்க வேண்டிய அறிக்கைகளும் மத சம்பந்தமாக ஸ்வாமிகள் அருளும் உபதேச மொழிகளும், ஏகாதசி அன்று படிப்பதற்கெனச் சரிதைகளும், சங்கத்தின் நடவடிக்கைகளும் வெளியிடப்பட்டு வருகின்றன. இந்தச் சங்கத்திற்கு ஓர் மத்திய ஆலோசனைக் கமிட்டியும் நிறுவப்பட்டுள்ளது. மடத்தில் இதற்கென ஒரு தனி இலாகாவும் வேலைசெய்து வருகிறது. குறிப்பாகத் தஞ்சை ஜில்லாவின் பல பாகங்களில் இந்தச் சங்கம் நல்ல வேலை செய்து மக்களுக்குச் சேவை செய்துவருகிறது. இதன் உதவியால் பல கோவில்கள் சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கின்றன ; பல குளங்கள் சீர்திருத்தப்பட்டும் புதுக்குளங்கள் வெட்டப்பட்டும் இருக்கின்றன. ஜில்லாவின் பெரிய தனவந்தர்கள் அவர்களது குடும்பங்களுடன் தங்கள் தோள்களிலும் தலைகளிலும், இடுப்புகளிலும் மண் சுமந்து பணி செய்வதைக் கண்ட சாதாரண மக்கள் தாங்களாகவே இப்பணியில் ஈடுபடலாயினர். சில ஊர்களில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை பன்னிரண்டு மணி நேரம் ஆயிரக்கணக்கான மக்கள் சேர்ந்து

இப்பணிகளை நிறைவேற்றியுள்ளார்கள். தஞ்சை ஜில்லாவில் மட்டும் சுமார் 5000 தொண்டர்கள் ஸ்வாமிகள் வகுத்த இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் பல சமூகங்களைச் சார்ந்த மிராசுதார்கள். பிரசாரத்திற்காக நல்ல கல்வி அறிவும் சொல்வன்மையும் படைத்த தமிழ்ப் பண்டிதர்கள் பலர் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.

1940வது வருட வியாஸபூஜையும், நவராத்திரி விழாவும்.

1940வது வருடத்தில், ஸ்வாமிகள் முத்ராதிகாரிகளின் சங்கங்களை நிறுவுவதற்காக, தஞ்சை ஜில்லாக் கிராமங்களில் சிறிதும் ஓய்வில்லாது, மிகவும் தீவிரமான யாத்திரையை மேற்கொண்டதின் காரணமாக ஸ்வாமிகளின் உடல்நலம் குன்றிச் சிறிது ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்பொழுது ஸ்வாமிகள் திருச்சேறைக்கருகில் கீழவடையல் என்னும் கிராமத்திற்கு அடுத்த குப்பசமுத்திரம் என்னும் இடத்தில் சுமார் இரண்டு மாதங்கள் தங்கிப் பின்னர் பட்டுக்கோட்டை, அறந்தாங்கி தாலுக்காக்களில் விஜய யாத்திரையைத் தொடங்கினர்கள். அவ்வருட வியாஸபூஜை பட்டுக்கோட்டையை அடுத்த துவரங்குறிச்சியில் 19-7-1940-ந் தேதியில் நடைபெற்றது. ஸ்வாமிகள் அவ்விடம் இரண்டு மாதங்கள் தங்குவதற்கு வசதிகளை மன்னங்காடு விசுவநாதய்யர் குடும்பத்தினர் செய்து கொடுத்தனர். அவ்வருட நவராத்திரி விழாவும் அறந்தாங்கி தாலுக்கா சோர்ணக்காடு என்னும் கிராமத்தில் நடைபெற்றது. அவ்வருட இறுதியில் ஸ்வாமிகள் ஆவுடையார் கோவிலுக்கு விஜயம் செய்து, ஸ்ரீ ஆத்மநாத சுவாமியைத் தரிசித்துக்கொண்டார்கள். அப்பொழுது அங்குக் கட்டளைத் தம்பிரானுகவிருந்த ஸ்ரீலஸ்ரீ நமச்சிவாய தம்பிரான் அவர்கள் நம் ஸ்வாமிகளைத் தேவஸ்தான மரியாதைகளுடன் வரவேற்று மடத்திற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்துகொடுத்தார்.

தஞ்சை பங்காரு காமாக்ஷி அம்மன் கோயில் கும்பாபிஷேகம்.

1941வது ஆண்டின் துவக்கத்தில் ஸ்வாமிகள் பட்டுக்கோட்டைதாலுகாவில் பேராவூரணிக்கடுத்த மாவடைக்குறிச்சி என்னும் மடத்தைச் சார்ந்த கிராமத்திற்கு விஜயம் செய்து அவ்விடம் சில மாதங்கள் தங்கியிருந்தார்கள். சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர்த் தஞ்சையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட பங்காரு காமாக்ஷி அம்மன் ஆலயத்திற்கு

ஜீரணோத்தாரணத் திருப்பணிகள் நடைபெற்று வெகு காலம் சென்று விட்டதால், அந்த ஆலயத் திருப்பணிகளைச் செய்ய ஸ்வாமிகள் ஏற்பாடு செய்திருந்தார்கள். அவ்வாலயத்தின் கும்பாபிஷேகமும் (1941 ஜுன் 4உ) விஷு வருடம் வைகாசி 22உ புதன்கிழமை நடைபெற்றது. அந்தக் கும்பாபிஷேகத்திற்கென ஒரு வாரத்திற்கு முன்பே ஸ்வாமிகள் தஞ்சைக்கு விஜயம் செய்திருந்தார்கள். வைதீக முறைப்படி நடைபெற்ற யாகசாலை, பூஜை முதலானவைகளை ஸ்வாமிகளே நேரில் கவனித்தார்கள். கும்பாபிஷேகத்தன்று தஞ்சை மக்களும் வெளியூர் வாசிகளும் பல்லாயிரக்கணக்கில் தஞ்சையில் கூடி அம்பிகையைத் தரிசித்துக்கொண்டார்கள்.

அவ்வருடத்து வியாஸ பூஜை 8-7-1941உ நாகப்பட்டினத்தில், ஸ்ரீ நீலாயதாக்ஷி சமேத ஸ்ரீ காயாரோகணேச்வரர் ஆலயத்தில் நடைபெற்றது. ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் வெளி ஜில்லாக்களிலிருந்தும் பக்தர்கள் ஏராளமாகக் கூடிப் பூஜையைத் தரிசித்துக்கொண்டனர். அவ்வருடத்து நவராத்திரி விழா முத்துப்பேட்டைக்கடுத்த ஆலங்காட்டில் நடைபெற்றது.

1942வது ஆண்டில் நடைபெற்ற அதிருத்ர யாகம் முதலியன.

உலக யுத்தத்தின் காரணமாக மக்களுக்கு நேர்ந்த பலவிதத் துன்பங்களைப் போக்குவதற்குப் பரமேச்வரனை ஸ்ரீருத்ர மந்திரத்தைக் கொண்டு உபாசனை செய்தும், திருமாலை ஸஹஸ்ரநாமத்தினால் துதித்தும் வரவேண்டுமென்றும் ஸ்வாமிகள் ஆங்காங்குள்ள தேவாலய நிர்வாகிகளுக்கும், அறநிலைய இலாகா அதிகாரிகளுக்கும் ஓர் அறிக்கை விடுத்திருந்தார்கள், அவ்வறிக்கைப்படி நாடெங்கும் பல தேவாலயங்களில் விசேஷமாக ருத்ரஜப பாராயணமும் விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணமும் நடைபெற்று வந்தன, பலர் தங்கள் இல்லங்களில் இந்தப் பாராயணங்களையும், அதைச் சார்ந்த ஹோமங்களையும் செய்து வந்தனர்.

ஸ்வாமிகள் 1942 ஏப்ரல், மாதத்தில் மன்னார்குடிக்கடுத்த பூவனூரில் விஜயம் செய்திருந்தபொழுது, வேங்கடகிரி மகா ராஜாவின் வேண்டுகோளின்படி அவ்வூரில் (பூவனூரில்) ஓர் அதிருத்ர ஹோமம் நடத்தப்பட்டது. நூற்றிருபத்தொரு ரித்விக்குகளைக் கொண்டு, பதினொரு நாட்கள் நடைபெற்ற இந்த ஹோமத்தைத் தஞ்சை ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் ஏராளமாக



1941-குஜராத்தி பிராம்மண சமுகத்தினர் அளித்த ஸ்வாகதம்



26-5-1939-ல் மன்னார்குடியில்







வந்து தரிசித்தனர். அந்த யக்ஞத்தின் செலவுகள் பெரும் பகுதியை வெங்கடகிரி மகாராஜாவே ஏற்றுக்கொண்டார். இந்த யாகத்திற்குச் சுமார் ரூபாய் 25,000 வரையில் செலவானதாக மதிப்பிடப்படுகிறது. இந்த யாகம் நடைபெற இடவசதி முதலானவற்றைத் தார்மிகர் பூவனூர் ராஜு முதலியாரது திருக்குமாரர் சுப்பராய முதலியார் செய்து கொடுத்தார்.

புதுக்கோட்டை சமஸ்தானத்தில்.

மன்னார்குடி தாலுகாவில் யாத்திரை செய்துகொண்ட பின்னர் ஸ்வாமிகள் முத்ராதிகாரிகள் சங்கங்கள் நிறுவ வேண்டிய உத்தேசத்துடன் புதுக்கோட்டைச் சமஸ்தானத்திலுள்ள சில கிராமங்களுக்கு விஜயம் செய்தார்கள். இந்த யாத்திரையில்ஸ்வாமிகள் 1942 ஜூன் மாதம் 6-ந்தேதி தஞ்சாவூரில் தங்கி, அவ்விடம் ஸ்ரீ பங்காரு காமாக்ஷியைத் தரிசனம் செய்துகொண்டு, 7-ந்தேதி வல்லத்திலும், 8உ செங்கிப்பட்டியிலும் முகாம் செய்து, 9உ புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ள கிள்ளுக்கோட்டை மார்க்கமாக மறுநாள் கீரனூர் தாலுகா மலையடிப்பட்டிக்கு விஜயம்செய்தார்கள். அங்குமலையில் வெட்டப்பட்ட ஸ்ரீ வடிவுடையாம்பாள் சமேத வாகீச்வரர் ஆலயத்தையும், ஸ்ரீ ரங்கநாதர் ஆலயத்தையும் தரிசித்துக்கொண்டார்கள். அவ்வாலயங்களின் கர்ப்பக்கிரஹம், அர்த்த மண்டபம், எல்லாம் மலையிலேயே குடையப்பட்டுள்ளன. அன்றே ஸ்வாமிகள் விசலூர் என்னும் கிராமத்தை அடைந்து, அவ்வூர்ச் சிவாலயத்தில் அன்று பூஜையை நடத்திவிட்டு, மறு நாள் ஜூன் மாதம் 10-ந்தேதி, குண்டாண்டர் கோவிலுக்கு விஜயம்செய்தார்கள். அன்று பகலில் அவர்கள் மலையிலுள்ள சுனையில் நீராடி, உமாதேவியையும் மலை மீதுள்ள முருகப் பெருமானையும் தரிசித்துக்கொண்டார்கள். மறு நாள் 11-ந் தேதி ஆரணிப்பட்டிக்கு விஜயம் செய்து, அவ்வூரிலுள்ள சிவாலயத்தில் ஸ்ரீ மங்களாம்பிகா சமேத தானவனேச்வர சுவாமியைத் தரிசித்துக்கொண்டார்கள். அவ்விடமிருந்து 12-ந் தேதி காலை ஸ்வாமிகள் பெருங்களூருக்கு விஜயம் செய்தார்கள். அப்பொழுது அவ்வூருக்குப் புதுக்கோட்டையிலிருந்து நூற்றுக் கணக்கான பக்தர்கள் வந்து ஸ்வாமிகளைத் தரிசித்துக்கொண்டார்கள். 13-ந் தேதி ஸ்வாமிகள் வாராப்பூரில் தங்கி, 14-ந் தேதி அம்புக்கோவிலுக்கு விஜயமானார்கள். அம்புக்கோவிலில் ஸ்வாமிகள் ஐந்து நாட்கள் தங்கியிருந்தார்கள். அப்

பொழுது அந்நாட்டு குடிமக்கள் ஏராளமாகக் கூடி ஸ்வாமிகளை வரவேற்றுர்கள். புதுக்கோட்டை மன்னர்கள் இந்த அம்புக்கோவில் நாட்டைச் சேர்ந்தவர்களாவார்கள். அம்புக்கோவில் நாட்டார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் மடத்திற்குத் தாமிரபட்டய சாஸனம் செய்துகொடுத்திருக்கின்றனர். ஸ்வாமிகள் 19, 20-ந் தேதிகளில் ஆலங்குடியில் தங்கியிருந்து, 21-ந் தேதி திருவரங்குளத்தில் மூன்று காலபூஜையையும் முடித்துக்கொண்டு, அன்றிரவே 10 மணிக்கு பட்டுக்கோட்டை தாலுகா, நகரத்திற்கு விஜயம் செய்தார்கள். பின்னர் மாவிடைக்குறிச்சி, புக்கரம்பை, ஆண்டிக்காடு, பட்டுக்கோட்டை, மன்னார்குடி மார்க்கமாக ஜுலை மாதம் 1, 2-ந் தேதிகளில் கும்பகோணத்திற்கு விஜயம் செய்து, பின்பு 9-ந் தேதி முதல் 15-ந் முடிய, உடையார்பாளையம் சமஸ்தானுதிபதியின் வேண்டுகோளுக்கிணங்கி அந்த ஊரில் தங்கிப் பிறகு அரியலூர், லால்குடி, திருச்சி, முசிரி மார்க்கமாக அகண்ட காவிரியின் வடகரையில் அமைந்துள்ளதும் காட்டுப்புத்தூருக்குச் சமீபத்திலுள்ளதுமான நத்தம் என்னும் ஊருக்கு விஜயமானுர்கள். அவ்வூரில் ஜுலை மாதம் 27-ந் தேதி திங்கட்கிழமை அவ்வருஷ வியாஸ பூஜை நடைபெற்றது.

மற்றோர் அதிருத்ர யஞ்ஞம்.

சாதுர் மாத சங்கல்பத்தின் நடுவில், 14-9-42-ந் தேதி முதல் 24-9-42-ந் தேதி முடிய, பூவனூரில் நடைபெற்றது போல ஓர் அதிருத்ர யக்ஞத்தை அவ்வூரில் நடத்தவேண்டுமென ஸ்வாமிகள் உத்தரவிட்டார்கள். அதற்காகக் காவிரியின் வடகரையில் மாபெரும் கொட்டகை ஒன்று அமைக்கப்பெற்றது. அதில் 11 பெரிய ஹோம குண்டங்கள் வகுத்து, அந்தக் குண்டங்களை மக்கள் சுற்றி வரவும், ஹோமம் நடைபெறுவதைத் தரிசிக்கவும் இடங்கள் அமைக்கப்பெற்றிருந்தன. ஹோம குண்டம் ஒவ்வொன்றைச் சுற்றிலும் வேதக் கலையில் தேர்ச்சி அடைந்த 11 அந்தணர்கள் அமர்ந்து ஹோமத்தை நடத்தி வந்தனர். ஒவ்வொரு குண்டத்திற்கும் 11 பேராக, மொத்தம் 121 பேர்கள் இந்த யக்ஞத்தை நடத்திய காட்சி ஓர் புனிதக் காட்சியாக அமைந்திருந்தது. ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும், வெளி ஜில்லாக்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அந்தப் பெரிய யக்ஞத்தைத் தரிசிக்க வந்திருந்தார்கள். நங்கவரம் எஸ்டேட் என். எ.

ரங்கநாத ஐயர் இந்த யக்ஞத்தின் நிர்வாகத்தின் பொறுப்பை ஏற்று நடத்தினர். சென்னை அட்வகேட் கே. பாலசுப்பிரமணிய ஐயர், குணம்பட்டு ஜமீன்தார் திவான் பகதூர் எஸ். அருணசல முதலியார் மற்றும் பல பிரமுகர்களும் 11 நாட்களும் அவ்விடம் தங்கி, யக்ஞத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் கவனித்து வந்தனர். யக்ஞத்தின் முடிவு நாளான 24-9-42-ந் தேதி பூர்ணமி அன்று, பூர்ண ஆகுதி ஆன பிறகு வேதியர்கள் யக்ஞ மேடையில் ஸ்தாபனம் செய்யப்பட்டிருந்த கும்பங்களை எடுத்து. அவைகளைத் தலையில் சுமந்து மேள வாத்யங்கள், யானைகள் முன் செல்ல, ஊர் வலமாகக் காவிரி நதிக்குச் சென்றனர். ஸ்வாமிகள் முன்பே அங்குச் சென்று, தண்ணீரின் நடுவில் நின்றுகொண்டிருந்தார்கள். அந்தணர்கள் எடுத்துச் சென்ற கும்பங்களில் உள்ள தீர்த்தங்களை அவர்கள் அப்பொழுது ஸ்வாமிகளுக்கு அபிஷேகம் செய்தனர். இந்த அபிஷேகம் ஆனவுடன் ஸ்வாமிகள் புனிதக் காவிரியில் நீரா டியபொழுது, அங்குக் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களும் அதே சமயத்தில் நீராடினர்கள். அந்த 121 அந்தணர்களைத் தவிர, மேலும் சுமார் 250 வேதியர் வேத பாராயணம் செய்வதெற்கென தருவிக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கெல்லாம் கொடுக்கப்பட்ட தக்ஷிணை முதலான வெகுமதிகளைச் குணம்பட்டு ஜமீன்தார் ஏற்றுக்கொண்டார். காட்டுப்புத்தூர் ஜமீன்தாரும் இந்த யாகத் திற்கென அரிசி முதலான உணவுப்பொருள்களை ஏராளமாக வழங்கினர். மற்றும் பல அன்பர்கள் இந்த யாகச் செலவிற்குத் தாராளமாகப் பண உதவி செய்தனர்.

1942-ஆவது வருடம் இறுதியிலும் ஸ்வாமிகள் திருச்சி ஜில்லாவிலேயே யாத்திரை செய்துகொண்டிருந்தார்கள். நவம்பர் மாதம் 27உ நங்கவரத்தில் தங்கிப் பெரிய பண்ணை ரங்கனாத ஐயரால் அளிக்கப்பட்ட பாதபூஜை, பிக்ஷை இவைகளை ஏற்றுக் கொண்டு டிசம்பர் மாதம் 2உ, திருப்பராய்த்துறையில் சுவாமி தரிசனம் செய்து கொண்டார்கள். அன்று அந்தநல்லூரிலும், 3உ, பழுவூரிலும் விஜயம் செய்தார்கள். பழுவூரில் வேதாந்த பாட சாலையின் இரண்டாவது வருடக் கொண்டாட்டத்தில் ஸ்வாமிகள் கலந்துகொண்டு வித்யார்த்திகளுக்கு அரிய சில உபதேசமொழிகளை அருளினர்கள்.

1943-ஆவது வருட துவக்கத்திலும் ஸ்வாமிகள் திருச்சி ஜில்லாவில் அகண்ட காவிரியின் இரு கரைகளிலும் உள்ள அக்ர ஹாரங்களில் விஜய யாத்திரை செய்து கொண்டு வந்தார்கள். திருச்சிக்கு மேற்கில் 30 மைல்கள் தூரத்தில் மதுக்கரை என்னும் இடத்திலிருந்து இரண்டு மைல்களுக்கு அப்பால் சங்கர மலை என்னும் பெயருடன் ஒரு குன்று உள்ளது. அக் குன்றின் உச்சியில் ஓர் ஆலயம் அமைந்திருக்கிறது. அதில் ஒரு மகாலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பெற்றிருக்கிறது. ஸ்வாமிகள் கிருஷ்ணராஜ புரம் முகாமிலிருந்து, 1943 மார்ச்சு 2உ அவ்விடம் சென்று, குன்றின் மேல் ஏறி, அந்த மகாலிங்கத்தைத் தரிசனம் செய்து கொண்டார்கள். காஷ்மீரத்திலுள்ள ஸ்ரீ நகரிலும் இவ்வாறு சங்கராச்சாரிய மலை என்று ஒரு மலை உளது. அதில் ஆதி சங்கரர் சிவாலயப் பிரதிஷ்டை செய்துள்ளார்கள். இதனால் காஷ்மீரத்திற்கும், சோழநாட்டிற்கும் உள்ள ஒற்றுமையை ஸ்வாமிகள் அப்பொழுது விளக்கினார்கள். அந்த யாத்திரையில் ஸ்வாமிகள் நாமக்கல்லுக்கு விஜயம் செய்து, அவ்விடம் மார்ச்சு மாதம் 26உ முதல் ஏப்ரல் 2உ வரையில் 8 நாட்கள் தங்கி, குன்றின் மீதுள்ள ஸ்ரீ ரங்கநாதரையும், நாமகிரி அம்மனையும், கீழுள்ள நரசிம்ம மூர்த்தியையும், ஆஞ்சனேயரையும் தரிசித்துக் கொண்டார்கள். ஸ்வாமிகளின் விஜயத்தை நாமக்கல் மக்கள் மிகவும் விமரிசையாகக் கொண்டாடினார்கள்.

சங்கர மலை நாமகிரி தரிசனம்.

திருவானைக்காவல் வடக்கு வீதியில் ஸ்ரீ சங்கர மடத்தை யொட்டி வடகிழக்குப் பாகத்தில் ராஜராஜேச்வரர் ஆலயம் எனக் கூறப்படும் ஓர் பழைய ஆலயம் பல வருடங்களாகப் பூஜைகள் செய்விக்கப்படாமல் செடி கொடிகள் மரங்கள் ஏராளமாக முளைத்தும், கட்டிடங்கள் இடிந்தும் உள்ளே புகமுடியாதபடி கவனிப்பார் அற்ற நிலையில் இருந்தது. ஸ்வாமிகள் 1943-ஆவது ஆண்டில் திருவானைக்காவுக்கு விஜயம் செய்த பொழுது, இந்த ஆலயத்தின் நிலையை நேரில் கண்டு, அங்கு முளைத்திருந்த பெரிய மரங்களையும், புதர்களையும் வெட்டி உட்புகுந்து பார்த்தபொழுது, அதனில் இரண்டு சிவாலயங்கள் காணப்பெற்றன. அவ்விரண்டில் ஒரு சிவாலயத்தில் நான்கு புறங்

திருவானைக்காவில் உள்ள பஞ்சமுகேசுவரா ஆலயம்.

களிலும் நான்கு வாயில்களும், மேலே ஒரு வாயிலுமாக ஐந்து வாயில்கள் அமைந்திருந்தன. அதன் நடுவில் அமைந்துள்ள லிங்கத்தில் நான்கு திசைகளிலும் பரமசிவனது அழகிய உருவமாக நான்கு முகங்களும், மேலே ஆகாயத்தை நோக்கிய ஊர்த்துவ முகம் அரூபமாகவும், ஜோதிர் மயமாகவும் காணப்பட்டன. ஸ்ரீ ருத்ர மகன்யாச மந்திரத்தில் தத்புருஷம், அகோரம், சத்யோ ஜாதம், வாமதேவம் ஈசானம் என ஐந்து வேத மந்திரங்களால் கூறப்பட்டுள்ள பரமசிவனின் ஐந்து முகங்களே இந்தப் பஞ்சமுக லிங்கத்தின் தத்துவமாகும்.* கிழக்கு முகமாக உள்ளது தத்புருஷம், (சாம வேதம்); தெற்கு முகமாக உள்ளது அகோரம் (அதர்வண வேதம்); மேற்கு முகமாக உள்ளது சத்யோஜாதம் (ருக் வேதம்); வடக்கு முகமாக உள்ளது வாம தேவம் (யஜுர் வேதம்); ஐந்தாவது முகமாயுள்ளது ஈசானம் தேஜோரூபம், அது அரூபமாக விளங்குகிறது. மிகவும் புனிதத் தன்மை வாய்ந்த இந்த ஆலயங்களைப் பழுது பார்க்கச் செய்து, சென்ற 12-6-1943 அன்று கும்பாபிஷேகத்தையும் மிகச் சிறப்பாக ஸ்வாமிகள் நடத்தி வைத்தார்கள். அன்று முதல் அந்த ஆலயங்களுக்குப் பூஜையும் நடைபெற்று வருகிறது. இந்த ஆலயம் குபேரனால் பிரதிஷ்டை செய்யப்பட்டதெனத் திருவானைக்காத் தல புராணம் கூறுகிறது. நம் நாட்டில் வேறு எங்கும் காணமுடியாத இந்த ஆலயத்தைச் சிவ பக்தர்கள் தவறாது தரிசிக்க வேண்டும்.

நேபாளத்தில் பஞ்ச முக மஹாலிங்கம்.

இவ்விதமான ஐந்துமுக மகாலிங்கமும் ஐந்து வாயில்களோடு கூடிய சிவாலயமும் இங்குள்ளன போலவே, நேபாள ராஜ்யத்தில் ஆதி சங்கரரால் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஆலயத்திற்குப் பசுபதீசுவரர் ஆலயம் என்று பெயர். ஒவ்வொரு வருடமும் சிவராத்திரி காலத்தில் லக்ஷக்கணக்கான மக்கள் அங்குச் சென்று அந்தப் பசுபதீசுவர லிங்கத்தைத் தரிசித்து வருகின்றனர். நம் நாட்டிலிருந்து அங்குச் செல்வதற்கு நேபாள சர்க்காரின் அனுமதி வேண்டும். அவ்வித அனுமதியை அந்தச் சர்க்கார் சிவராத்திரி காலத்தில் யாத்ரீகர்களுக்குத் தாராளமாக அளிக்கின்

---

* இந்தப் பஞ்சமுக லிங்கத்தின் உருவத்தை எல்லாக்கோணங்களிலிருந்தும் சித்திரம் வரைந்து, ஆனந்தவிகடன் பத்திரிகையில் 27-12-1953-ந் தேதி இதழில் சில்பி என்னும் சைத்திரிகர் தத்ரூபமாகக் காட்டியுள்ளார்.

ளூர்கள். அங்கு அந்த மகாலிங்கத்திற்குப் பூஜை செய்கின்றவர்கள் கன்னட நாட்டைச் சார்ந்த ஸ்மார்த்தப் பிராமணர்களாவர். தென்னாட்டவர்களுக்கு அங்கு பூஜை செய்யும் உரிமை எவ்விதம் கிடைத்ததென்பது ஆராய்ச்சிக்குரிய விஷயமாகும். ஆதி சங்கரர் காலந்தொட்டே இந்த ஏற்பாடு அவ்விடம் நடந்து வருவதாகக் கூறுகின்றனர்.

பதரிகாசிரமத்தில் நம்பூத்திரிகள் பூஜை.

ஹிமாலயப் பிரதேசத்திலுள்ள பதரிகாசிரமத்தில் அலகநந்தா என்றும் பெயருடன் விளங்கும் கங்கை நதிக்கரையில் ஸ்ரீ பதரி நாராயண மூர்த்தியின் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயம் ஒரு காலத்தில் கங்கையில் மூழ்கி விட்டதென்றும், ஸ்ரீ ஆதி சங்கரர் அந்தப் பிரதேசத்தில் யாத்திரை செய்தபொழுது அந்த நாராயண மூர்த்தியை மறுபடியும் ஸ்தாபனம் செய்தார்களென்றும் ஒரு புராண வரலாறு கூறுகிறது. அது முதல் அங்கு உஷ்ண கங்கையும் (சூடான நீர்ஊற்று) வெளிப்பட்டு யாத்ரீகர்களுக்கு மிகவும் உதவியாக இருந்து வருகிறது. அன்று முதல் இன்றுவரை அந்த பதரீநாராயணரைப் பூஜை செய்து வருகின்றவர்கள் கேரள நாட்டைத் சார்ந்த நம்பூதிரி பிராமணர்கள் ஆவர். ஆதி சங்கரரும் நம்பூதிரிகளின் மரபில் உதித்தவர்களே. வருடத்தில் ஆறு மாதங்கள் பதரீநாத் ஆலயம் பனிக்கட்டியால் மூடப்பட்டிருக்கும். அப்பொழுது ஆலயக் கதவுகளும் பூட்டப்பட்டு, யாவரும் கீழே இருக்கும் ஜோதிர் மடத்திற்குவந்து தங்கியிருப்பார்கள். அங்குப் பூஜைசெய்கின்றவர்களுக்கு இரண்டு ஸ்தானங்கள் உள்ளன.முதல் ஸ்தானம் ராவல் என்ற பெயருடனும், இரண்டாவது ஸ்தானம் நாயிப்ராவல் என்ற பெயருடனும் வழங்கி வருகின்றன. இருவரும் பிரும்மச்சாரிகளாகவே இருக்க வேண்டுமென்பது ஒரு விதியாகும். நாயிப்ராவல் ஸ்தானத்திற்கு ஓர் நம்பூத்ரியைத் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டுமெனப் பதரீநாத் ஆலயத்தை நிர்வாகம் செய்யும் டெஹ்ரி சமஸ்தானச் சர்க்கார் ஓர் கடிதம் மூலம் நம் ஸ்வாமிகளைக் கேட்டுக்கொண்டார்கள். அதன்படி கொச்சி, சமஸ்தானத்தைச் சார்ந்த புது எடத்து கிருஷ்ண நம்பூத்ரி என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டு மடத்தின் காரியஸ்தர் ஒருவரது துணையுடன் சென்ற 1943 எப்ரல் மாதத்தில் பத்ரீநாத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார். மடத்தின் காரியஸ்தர் அவரை டெஹ்ரி சமஸ்தானத் தலைநகராகிய

நரேந்திரநகருக்கு அழைத்துச் சென்றதும், அந்த ராஜ்யத்தின் அதிகாரிகள் அவரை மரியாதைகளுடன் வரவேற்றுப் பதரீநாத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அவ்வருடம் ஹிமாலயத்தின் பனி கரைந்த பின்னர், சித்திரை மாதம் 28உ (11-5-1943) பதரீநாராயணருடைய ஆலயம் திறக்கப்பட்டு பூஜைகள் ஆரம்பிக்கப்படும் நாளாக அமைந்திருந்தது. நரேந்திர நகரத்திலிருந்து அந்த நம்பூத்திரி பதரீநாத் சென்ற விவரங்களைக்கண்டு ஸ்வாமிகளுக்கு ஓர் கடிதம் எழுதியிருந்தார். மலையாளத்தில் எழுதப்பட்ட அக்கடிதம் தமிழ் எழுத்துக்களில் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

"பதரீநாத தர்சனால் முக்தி: என்னு ஆதிபுராணமாயிருக்குன்ன பத்ம புராணம் முதல் பல புராணங்களிலும் உள்ளதாயி பண்டிதன்மார் பரயின்னு. பதரீநாத தர்சனம் சாதிப்பிச்சுதன்னு அனுக்ரகிச்ச ஸ்வாமி ! அங்ஙக்கு நமஸ்காரம்.

இனியிக்கு சகசரநாயி அயச்ச அத்தேகம் சுகமாயி மடங்ஙி எத்தியிருக்குமென்னு விசுவசிக்குன்னு, பாஷா வைஷம்யம் கொண்டு காரியம் தரிப்பிக்குவான் ஞான் செய்த சிரமங்களில் சிலதெங்கிலும் அத்தேகத்தின்ன ஹிதமாயி தோன்னிட்டெங்கில் அவ பொருத்து மாப்பு தருவான் அபேக்ஷிக்குன்னதாயி பரயணம். அத்தேகத்தின்றே அனுவச்யத்தின்னில்லயீகையும், ஆவச்யத்தின்னுள்ளதி லதிகவும் அத்யாதரணீயம் தன்னே;

நரேந்திர நகரம் வரையும் உள்ள சரித்திரங்கள் அத்தேகம் பரஞ்சிருக்குமல்லோ. மேடம் 14-ங் தேதி காலத்தூணு கழிச்சு ஸ்டேட் காரில் ராவல்ஜீ ஒருமிச்சு வைகுன் நேரம் கீர்த்தி நகரத்திலெத்தி, பிற்றே நாள் குதிரபுறத்து அவிடே நின்றும் புறப்பெட்டு எட்டு திவஸம் கொண்டு, ராவல், மஞ்சுகாலத்து தாமஸிக்குன்ன ஸ்தலமாய ஜோஷி மடத்திலெத்தி, யீ ஜோதீச்வர மடமான—த்ரெ ஆசார்ய ஸ்வாமிகளுடே ஆதிமஸ்தாபனம். இருபத்தாறும் தேதி ஊணு கழிச்சி, ராவல் ராஜோசிதமாய ரீதியில் அலங்கரிச்சு மாமூல் பிரகாரமுள்ள சில சடங்குகளெல்லாம் நிர்வகிச்சு கனகமயமாய ஓர் பல்லக்கில் எட்டு ஆளுகளெக் கொண்டடிப்பிச்சு,வாத்யகோஷத்தோடும் பரிவாரங்களோடும் அதே வரெ அவிடே கூடியிருந்த தீர்த்த யாத்திரக்காரரோடும் மற்றும் கூடி புறப்பெட்டு வைகும் நேரம் பாண்டகேசுவரத்து, பிற்றே திவசம் காலத்ஊணு கழிச்சு புறப்பெட்டு அஞ்சு மணிக்கு மும்பு பதரீகாச்மரத்தில் எத்தி

க்ஷேத்திரத்தின்று பிரதக்ஷிணம் வெச்சு தொழுது, ஸ்வஸ்தானத்தி லிருந்து இனியிக்கும் வாகனம் உண்டாயிருந்து பிற்றே திவசம், 28-ந் தேதி எட்டரை மணிக்கு சேஷும் ராஜப்ரோகிதன்றே நேத் ருத்துவத்தில், பக்த ஜனங்களுடே ஹிருதயம் கவிஞ்ஞொழுகுன்ன வேதத்தோத்திராதி நாஞ கோஷங்களுக்கிடையில் நடதுரன்னு ஒரு நெய் விளக்கின்றே வெளிச்சத்து தேவதரிசனம் செய்து, இனி யிக்கு தாமசிக்குவான் பிரத்தியேக ஸ்தலம் தன்னிட்டுண்டு. ஆசா ரிய ஸ்வாமிகளோடு ஞான் நமஸ்கரிக்குன்னதாயி உணர்த்திகு வான் அபேக்ஷ.


"புதியெடத்து கிர்ஷ்ணன் நம்பூதிரி, நாயிப் ராவல் சாகிப். பதரிநாதம் போஸ்ட், காவர்வான் டிஸ்ட்ரிக்ட் யூ. பி."

1943 ஏப்ரல் 23உ ஸ்வாமிகள் திருச்சி ஜில்லா முசிரிக்கு விஜயம் செய்து அவ்விடம் மூன்று நாட்கள் தங்கியிருந்தார்கள்.

திருவானைக்காவில் முத்ராதிகாரிகள் சம்மேளனம்.

அவ்வூரில் வக்கீல்களும், சர்க்கார் உத்தியோ கஸ்தர்களும், மிராசுதார்களும் ஸ்வாமிகளைச் சிறப்புடன் வரவேற்றுப் பாதபூஜை முதலிய வைகளைச் செய்துவைத்தார்கள். அம் மூன்று நாட்களிலும் ஸ்வாமிகள் கீதையைப் பற்றிய உபதேச மொழிகளைப் பக்தர்கள் கூட்டத்தில் அருளினார்கள். 1943 மே மாதம் முதல் அக்டோபர் மாதம் முடிய ஸ்வாமிகள் திருவானைக்கா மடத்திலேயே தங்கியிருந்தார்கள். மே மாதம் 20உ பொன்மலையி லுள்ள சிஷ்யர்களின் அழைப்பிற்கிணங்கி அங்குள்ள பஜனை மடத்திற்கு ஸ்வாமிகள் விஜயம் செய்தார்கள். அன்றிரவு ஸ்வாமி களுக்கு அங்கு ஓர் பெரிய ஊர்வலம் நடைபெற்றது. அவ்வருட சங்கர ஜயந்தி, வியாஸ பூஜை, நவராத்திரி இவ்விழாக்களெல்லாம் திருவானைக்கா மடத்திலேயே மிகவும் விமரிசையாகக் கொண் டாடப் பட்டன. அக்காலத்தில் திருச்சியிலிருந்தும், வெளி ஊர் களிலிருந்தும் ஏராளமாக மக்கள் திருவானைக்காவில் கூடி ஸ்வாமி களையும், அவர்களின் பூஜையையும் தரிசித்துக்கொண்டனர். அவ் வருடத்திய முத்ராதிகாரிகளின் வருடாந்தச் சம்மேளனம் திரு வனைக்கா மடத்தில் நடைபெற்றது, ஆயிரம் முத்ராதிகாரிகளுக்கு


குறிப்பு: பத்ரிநாதர் சன்னிதியின் கதவுகள் பனிக்காலத்தில் ஆறு மாதங்கள் மூடப்பட்டிருந்த போதிலும், அங்கு ஏற்றிவைக் கப்பட்டிருக்கும் நெய் விளக்கு அப்பனிக்காலம் முழுவதும் அணைவதில்லையெனச் சொல்லப்படுகிறது.



பெரிய காஞ்சீபுரம் ஸ்ரீமடம்



சின்ன காஞ்சீபுரம் யானைக் கட்டித்தெருவிலுள்ள ஸ்ரீமடத்தின் பக்கத் தோற்றம்



கும்பகோணம் ஸ்ரீமடத்தின் வெளித் தோற்றம்



திருவிடை மருதூர் ஸ்ரீ விசாலாக்ஷி சமேத ஸ்ரீவிச்வநாதர் ஆலய
ஜீர்ணோத்தாரண மகாகும்பாபிஷேகம்
1-12-1943

மேல் தஞ்சை ஜில்லாவிலிருந்தும், பக்கத்து ஜில்லாக்களிலிருந்தும் இந்தச் சம்மேளனத்திற்காக அங்கு வந்து கூடினர். முத்ராதிகாரிகளின் கடமையைப் பற்றி ஸ்வாமிகள் அந்தச் சம்மேளனத்தில் பேசியதுடன், முத்ராதிகாரிகள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே பேட்டி அளித்து, அவர்கள் நடந்துகொள்ளவேண்டியதைப்பற்றி அவர்களிடம் சில வார்த்தைகள் கூறி அவர்களுக்கு ஊக்கத்தை அளித்தார்கள். அச்சமயத்தில் பகல், இரவு இரு நேரங்களிலும் சிறிதுகூட ஓய்வின்றி ஸ்வாமிகள் தர்மப் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்ததைக் கண்டு யாவரும் ஆச்சரியமடைந்தார்கள். நவராத்திரி விழா முடிந்தவுடன் 1943 அக்டோபர் 25-ந் தேதி ஸ்வாமிகள் உத்தமர் கோவிலுக்கு விஜயம் செய்தார்கள். பின்னர் பூதலூர், ரங்கநாதபுரம் மார்க்கமாக, தஞ்சை ஜில்லாவை அடைந்தார்கள். ரங்கநாதபுரத்தில் ஸ்வாமிகளால் திராவிடக் கவி மணி என்னும் பட்டம் அளித்துக் கௌரவிக்கப்பட்ட வித்வான் வே. முத்துஸ்வாமி ஐயர் எம்.ஏ.எல்.டி. ஸ்வாமிகளின் மீது தமிழில் கவிதைகள் இயற்றி, அவைகளைப் பக்தர்கள் முன்னிலையில் பாடிப் பக்தர்களை மகிழ்வுறச் செய்தார், 1943 டிசம்பர் மாதம் 11-ந் தேதி ஸ்வாமிகள் கும்பகோணத்திற்கு விஜயம் செய்து அம்மாதம் முழுவதும் தஞ்சை ஜில்லாவிலேயே யாத்திரையை நடத்திக்கொண்டிருந்தார்கள்.

திருவிடை மருதூரில் நடைபெற்ற சிவாலயத் திருப்பணி.

திருவிடைமருதூரில் வீரசோழன் ஆற்றங்கரையில் பழைய சிவாலயம் ஒன்று பல வருடங்களாகப் பழுதடைந்தமை நம் ஸ்வாமிகளின் கவனத்திற்கு வந்தது. அவ்வாலயத்தைச் சீராக்கி அன்றுடம் பூஜைகள் நடைபெறச் செய்யவேண்டுமென்றும், ஆற்றின் கரையில் அமைந்திருப்பதால் நீராட வரும் பக்தர்களின் வழிபாட்டிற்கு அவ்வாலயம் பெரிதும் உதவுமென்றும் ஸ்வாமிகள் கருதினார்கள். ஸ்வாமிகளின் இக்கருத்தை நிறைவேற்றி வைக்க ஸ்வாமிகளிடம் ஒப்பற்ற பக்திகொண்டவரும், அவ்வூர் வாசியும், சென்னைப் பிரபல பிரசுரகர்த்தர்களான B. G. பால் அண்டு கம்பெனியின் உரிமையாளருமான ஸ்ரீ D. பாலசுப்ரமண்ய ஐயர் முன்வந்து அவ்வாலயத் திருப்பணிகளை தமது சொந்தச் செலவில் செய்து முடித்தார், ஸ்ரீ விசாலாக்ஷி சமேத ஸ்ரீ விச்வநாதர் எனப் பெயர் பூண்ட. அந்த ஆலயத்திற்கு ஜீர்ணோத்தாரண

கும்பாபிஷேகம் சுபானு௵ கார்த்திகை௴ 16-ந் தேதி (1-12-1943) புதன்கிழமை ஸ்ரீ ஸ்வாமிகளின் முன்னிலையில் நடைபெற்றது. அந்த ஆலயத்தின் நித்திய பூஜைக்கு உதவுமாறு ஐயர் அவர்களது விருப்பத்தைப் பூர்த்திசெய்யும் நோக்கத்துடன் அவர்களது மனைவியார் ஸ்ரீமதி சுந்தராம்பாள் அம்மாள் இரண்டு வேலி நஞ்சை புஞ்சை நிலத்தை ஸ்ரீ ஸ்வாமிகள் விருப்பப்படி ட்ரஸ்டுஏற்படுத்தியுள்ளார். இந்த ட்ரஸ்டு வருமானத்திலிருந்து ஒரு பகுதி திருவிடைமருதூர் விஷ்ணு ஆலயத்திற்கும், கோவிந்தபுரம் ஸ்ரீ போதேந்திர ஸ்வாமிகள் அதிஷ்டானத்திற்கும், திருவிசநல்லூர் ஸ்ரீ அய்யாவாள் மடத்திற்கும் நிவேதனத்திற்கென வழங்கப் பெற்று வருகிறது.

இந்தக் கும்பாபிஷேகம் முடிவுபெற்றவுடன் பீடத்தின் அதிஷ்டான தெய்வமான காஞ்சி காமாக்ஷி அம்பிகையின் ஆலய கும்பாபிஷேகத்தை நடத்தவேண்டியதற்காகக் கும்பகோணத்திலிருந்து ஸ்வாமிகள் காஞ்சீபுரத்திற்கு யாத்திரையை மேற்கொண்டார்கள்.

காஞ்சி காமாக்ஷி அம்பிகையின் ஆலய கும்பாபிஷேகம்.

1944-ஆவது வருடம் ஜனவரி மாதம் துவக்கத்தில் கும்பகோணத்திலிருந்து புறப்பட்டு, அம்மாதம் 27-ந் தேதி காஞ்சிபுரத்தை அவர்கள் அடைந்தார்கள். அன்று காஞ்சி பொதுமக்களால் அவ்வூர்ச் சர்வ தீர்த்தக் கரையில் முக்தி மண்டபத்தில் ஸ்வாமிகளுக்கு பெரியதொரு வரவேற்பு அளிக்கப்பட்டது. பரம்பரையாக மடத்தின் நிர்வாகத்திலிருந்து வரும் ஸ்ரீகாமாக்ஷி அம்பிகையின் ஆலயத்தில் சில பகுதிகள் காலத்தின் மிகுதியினுல் ஜீரணம் அடைந்திருந்தது. அவற்றைச் சீர்திருத்தம் செய்ய ஸ்வாமிகள் கட்டளை பிறப்பித்தார்கள். அதன்படி மடத்திலிருந்து ரூபாய் ஐம்பதினுயிரத்திற்கு மேல் செலவிடப்பட்டது. ஆதிகாலந்தொட்டு நம் நாட்டு மன்னர்கள் பலர் இந்த ஆலயத் திருப்பணியை நடத்தியுள்ளார்கள். விஜய நகர சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தியாக இருந்த ஹரிஹர மன்னன் காலத்தில் சாலிவாகன சகம் 1315-ல் (கி. பி. 1392) இந்த அம்பிகையின் ஆலயத்தின் கர்ப்பக்கிரக விமானத்திற்குத் தங்கத் தகடு பதித்துக் கும்பாபிஷேகமும் நடைபெற்றதெனச் சிலா சாஸன இலாகாவினர் சேகரித்துள்ள பட்டையங்களிலிருந்து புலனுகிறது. சென்ற 1840-ஆவது வருடம் விகாரி


தை மாதம் 10-ந் தேதி புதன்கிழமை காமகோடி பீடத்தின் 64-வது ஆசார்யர்களாக அமைந்திருந்த ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளால் இந்த ஆலயத்திற்கு மிகச் சிறப்புடன் கும்பாபிஷேகம் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. அவர்களே அக்காலத்தில் திருவானைக்காவல் ஸ்ரீ அகிலாண்டேச்வரி அம்மனுக்கும் தாடங்கப் பிரதிஷ்டையும் செய்திருக்கிறார்கள். அவர்கள் தம் பூர்வாச்சிரமத்தில் தஞ்சை நாய்க்கர் மன்னர்களிடம் அமைச்சராக அமைந்திருந்த கோவிந்த தீக்ஷிதரின் பரம்பரையைச் சார்ந்த கன்னட ஸ்மார்த்த பிராமண வகுப்பைச் சார்ந்தவர்கள்.

நம் ஸ்வாமிகள் கட்டளைப்படி 1944 பிப்ரவரி 7-ந் தேதி சுபானு வருடம் தை மாதம் 25-ந் தேதி திங்கட்கிழமை காலை மீன லக்கினத்தில், இந்த ஆலயக் கும்பாபிஷேகத்திற்கு நாள் குறிப்பிட்டு முன்னேற்பாடுகளெல்லாம் ஸ்வாமிகளின் நேர் பார்வையில் நடைபெற்று வந்தன. இந்தக் காமாக்ஷி ஆலயமே ஸ்ரீ சக்ர வடிவமாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதெனக் கூறப்படுகிறது. இங்குச் சாந்நித்யம் பெற்று விளங்கும் ஸ்ரீ காமாக்ஷி தேவியின் முன், ஆதி சங்கர பகவத் பாதர் ஸ்ரீ சக்ர பிரதிஷ்டையை செய்துள்ளார்கள். இன்றைக்கும் அம்பிகைக்குச் செய்யப்படும் அர்ச்சனை (குங்கும அர்ச்சனை) இந்த ஸ்ரீ சக்ரத்திலேயே செய்யப்பட்டு வருகிறது. இவ்வாலயத்தில் காணப்படும் சந்நிதிகள் பின்வருமாறு:—


1. தவக்கோலத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ காமாக்ஷி அம்பிகை.
2. சிஷ்யர்களுடன் புருஷ ஆகிருதியில் வீற்றிருக்கும் ஸ்ரீ சங்கர பகவத் பாதர்.
3. கர்ப்பக்கிருகத்திற்கு வலப்புறம் அமைந்துள்ள ரூப லக்ஷ்மி சமேத கள்ளர் பெருமாள் (மகாவிஷ்ணு); இந்தச் சந்நிதி 108 வைணவத்திருப்பதிகளில் ஒன்றாகும்.
4. கச்சிக் காமகோட்டத்தின் காவலனாகிய சாஸ்தா (ஐயப்பன்).
5. ஸ்ரீ ச்யாமளா, ஸ்ரீ வராகி, ஸ்ரீ அன்னபூரணி, ஸ்ரீ மந்திர பூரணி.
6. ஸ்ரீ அர்த்தநாரீச்வரர்.
7. பஞ்ச தீர்த்தக் கரையில், நின்றான், கிடந்தான், இருந்தான் என்னும் பெயர் பெற்று விளங்கும் மூன்று மூர்த்திகள்.

இந்த ஆலயத்திலிருந்து தஞ்சைக்கு மாற்றப்பட்ட பங்காரு காமாக்ஷி அம்பிகையின் சந்நிதி இரண்டு நூற்றுண்டுகளுக்கு மேலாகக் காலியாகவே இருந்து வந்தது. அங்கு, இரண்டு தங்கப் பாதுகைகளை ஸ்வாமிகள் பிரதிஷ்டை செய்தார்கள்.

சுபானு, தை மாதம் 18-ஆந் தேதி திங்கட்கிழமை அன்று, எல்லாச் சந்நிதிகளிலும் கலாகர்ஷணம் செய்து, அன்றே யாக சாலையும் ஆரம்பிக்கப்பட்டது. வேதக்கலையிலும் வைதீக ஆகமத் திலும் மிகுந்த தேர்ச்சி பெற்ற அந்தணர்கள் நூற்றுக்கணக்காக அவ்விடம் கூடி, யாகசாலையின் பூர்வாங்க வேள்விகளையெல்லாம் சாஸ்திரங்களில் கூறியவாறு மிகச் சிறப்புடன் நடத்தி வைத்தனர். அதற்கடுத்த திங்கட்கிழமை அன்று, சுப முகூர்த்தமான மீன லக்கனத்தில் கும்பாபிஷேகம் மிகவும் சிறப்புற நடைபெற்றது. அம்பிகையின் விமான கலசத்திற்கு ஸ்வாமிகளே தமது திருக்கரங் களால் அபிஷேகம் செய்தார்கள். அன்று நமது நாட்டிலுள்ள பிரபல தேவஸ்தானங்களான திருவானைக்கா, சிதம்பரம் ஆவுடையார் கோவில், இராமேச்வரம் முதலான ஆலயங்களி லிருந்து பிரசாதம், மாலை முதலான மரியாதைகளை ஆலயப் பூசகர் களும், தேவஸ்தான அதிகாரிகளும் கொண்டுவந்து ஸ்வாமிகளிடம் சேர்ப்பித்தனர். இராமேச்வரம் தீர்த்தவாசிகள் அவ்வூரில் புனித மாக விளங்கும் கோடி தீர்த்தத்தை அம்பிகையின் கும்பாபிஷேகத் திற்கென முன்னரே கொணர்ந்திருந்தனர். புத்தகயா மடம் ஸ்ரீ ஹரிஹர மகந்த், பம்பாய் மாகாணத்திலுள்ள ஸ்ரீ சங்கேச்வர மடம், பம்பாய் கோகுல்நாத்ஜீ வல்லபாசாரிய மகாராஜா, சிதம் பரம் ஸ்ரீ ஸபாநாயகர் ஆலயப் பொது தீக்ஷிதர்கள், அகோர சிவாச் சாரியார் மடம், தர்மபுரம் ஆதீனம், திருநாரையூர் ஆதீனம் இவ்விடங்களிலிருந்து பிரதிநிதிகள் பத்திரிகைகளுடனும், காணிக் கைகளுடனும் வந்திருந்து கும்பாபிஷேகத்தைச் சிறப்பித்தனர். உடையார்பாளையம், விஜயநகரம், வேங்கடகிரி, காளஹஸ்தி, கத்வால் முதலான சமஸ்தானங்களிலிருந்தும், சூணம்பட்டு ஜமீன் தார், அலங்காநத்தம் மிட்டாதார், ஐதராபாத் சமஸ்தானத்திலுள்ள ஸ்ரீ ராஜா ராம்ராய் முதலான பிரமுகர்களிடமிருந்தும் காணிக்கைகள் அன்று சேர்ப்பிக்கப்பட்டன. தஞ்சை ஜூனியர் பிரின்ஸ் ஸ்ரீ பிரதாபசிம்ம ராஜா நேரில் வந்து ஸ்வாமிகளுக்குப் பொன்னுடை சூட்டி அவர்களை வழிபட்டார். இராமநாதபுரம்,



தஞ்சை ஸ்ரீ பங்காரு காமாக்ஷி அம்மன் ஆலயம். 4-6-1941-ல் இந்த
ஆலயத்திற்கு ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகம் நடைபெற்றது



7-2-1944-ல் காஞ்சி காமாக்ஷி அம்பிகையின் ஆலயத்திற்கு ஜீர்ணோத்தாரண
மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. (ஆலயத்தின் தோற்றம்)

மதுரை, சென்னை, தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, தென்னார்க் காடு, வடஆர்க்காடு, செங்கற்பட்டு, சித்தூர், நெல்லூர் இவ்விடங் களிலுள்ள சிஷ்ய கோடிகள் பல்லாயிரக்கணக்காக வந்து காஞ்சி யில் கூடி அம்பிகையையும், குருநாதரையும் தரிசித்துக்கொண்ட னர். தஞ்சை ஜில்லாவிலிருந்து வந்தவர்கள் தீபத்திற்கும், ஹோமத்திற்கும் எனத் தங்கள் வீடுகளில் தயாரித்த பசு நெய்யை ஏராளமாகக் கொண்டுவந்து சேர்த்தார்கள். ஆந்திர நாட்டுப் பக்தர்களும் நூற்றுக்கணக்காக அங்குக் கூடிக் கும்பாபிஷேகத் தைத் தரிசித்துக்கொண்டனர். மேலே கூறப்பட்ட பக்தர்கள் செலுத்திய காணிக்கைகளைத் தவிர காஞ்சிபுரம் பட்டு, ஜவுளி வியாபாரிகள் ரூ. 4052-ம், மடத்திற்கு அவ்வப்போது தாராள மாக கைங்கர்யம் செய்து வரும் எசையனூர் கோகிலத்தம்மாள் என்னும் பாட்டி ரூபாய் 2500-ம், ஸ்வாமிகளிடம் நெருங்கிய தொடர்புகொண்டு மடத்திற்கு விசேஷ பணிகளைப் புரிந்து வந்த பாலக்காடு டாக்டர் சங்கர ஐயரது பாரியை அன்னபூரணி அம்மாள் ரூபாய் 5500-ம் இவ்விதம் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் கும்பாபி ஷேகச் செலவிற்கெனக் காணிக்கை அளித்தனர். திருநெல்வேலியில் ஓர் சிறிய கடை வைத்து வியாபாரம் செய்து வரும் அன்பர் ஒருவர் ஏழ்மையின் காரணமாகத் தாராளமாக இப்பணிக்கு உதவ முடியவில்லையேயென வருந்தி, ஸ்வாமிகளுக்கு நீண்டதொரு கடிதத்தை எழுதி, தமது காணிக்கையாக ஒரு ரூபாயை மணி யார்டர் மூலம் அனுப்பி வைத்திருந்தார். அவ்விதம் அவர் மன முருகித் தந்த காணிக்கையை ஸ்வாமிகள் மிகவும் பாராட்டி அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்கள்.

இக்கும்பாபிஷேகத்தைப்பற்றி முன்கூட்டி எவ்வித விளம்பர மும் செய்யப்படவில்லையாயினும், அன்று ஆலயத்தினுள் மாத்திரம் சுமார் 50,000 பக்தர்கள் கூடிக் கும்பாபிஷேகத்தைத் தரிசித்தனர். கும்பாபிஷேகம் முடிவடைந்தவுடன் பக்தர்கள் ஸ்வாமிகளைத் தரிசிக்க ஆவலுள்ளவர்களாகக் காத்திருந்தனர். அப்பொழுது ஸ்வாமிகள் உயரமுள்ள ஓர் மண்டபத்தின் மீது ஏறி ஒரு மணி நேரத்திற்கு மேல் அங்கு நின்று யாவருக்கும் தரிசனம் அளித்தார் கள். எல்லோரையும் தம் கருணை மிகுந்த பார்வையினால் ஸ்வாமிகள் அனுக்ரகிக்க, ஸ்வாமிகளுக்கு அறிமுகமானவர்கள் யாவரும் அப்பெருங்கூட்டத்தில் தங்களை 'ஸ்வாமிகள் நேரில்

கண்டுகொண்டுவிட்டார்கள்,' என மன மகிழ்ச்சி அடைந்தனர். கும்பாபிஷேகத் தீர்த்தத்தை ஸ்வாமிகளே தம் திருக்கரத்தினுல் பக்தர்கள் மீது தெளித்தார்கள். அப்பொழுது மக்கள் பரவச மடைந்து ஜயகோஷத்துடன் ஸ்வாமிகளைப் போற்றினர். அன்று காமாக்ஷி அம்பிகையையும், குருநாதரையும் ஒருங்கே தரிசித்துப் பக்தகோடிகள் பரவச மடைந்தார்கள். யாவருக்கும் மடத்தில் அன்னம் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கும்பாபிஷேகம் மடத்தின் சரித்திரத்திலேயே ஓர் முக்கியமான சம்பவமாகும். இந்த வைபவத்தையொட்டி "மூகபஞ்சசதி" என்னும் நூலைக் காமகோடி கோசஸ்தானத்தினர் வெளியிட்டார்கள்.

கும்பாபிஷேகம் முடிவுற்றதும் ஸ்வாமிகள் காஞ்சீபுரத்தில் ஸ்ரீ கைலாசநாதர் ஆலயத்திலும், ஸ்ரீ ஏகாம்பரநாதர் ஆலயத்திலும் ஸ்வாமி தரிசனம் செய்து கொண்டார்கள்.

கும்பாபிஷேகத்தை அடுத்து, மண்டலாபிஷேகம் 1944 மார்ச்சு மாதம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்த வைபவங்களுக்குப் பின்னர் ஸ்வாமிகள் செங்கற்பட்டு ஜில்லாவில் திருவள்ளூர் முதலான இடங்களுக்கும், வடஆர்க்காடு ஜில்லாவில் கிராமங்கள் சில வற்றிற்கும் விஜயம் செய்து, அவ்விடங்களில் பக்தர்கள் அளித்த வழிபாடுகளை எல்லாம் ஏற்றுக்கொண்டார்கள்.

அம்பி என்னும் அம்பிகாபுரம். கம்பன் பிறந்த நாட்டைப் பற்றிய ஓர் ஆராய்ச்சி.

1944 மார்ச்சு மாதம் 23-ந் தேதி ஸ்வாமிகள் காஞ்சீபுரத்திற்கு 4 மைல்கள் தூரத்திலுள்ள அம்பி என்னும் கிராமத்திற்கு விஜயம் செய்தார்கள். இந்தக் கிராமம் பதினோராவது நூற்றுண்டில் ஸ்ரீ விஜயகண்ட கோபால சோழ மன்னனுல் ஒவ்வொரு நாளும் நூற்றெட்டு அந்தணர்களுக்கு அன்னதானம் செய்வதற்கெனத் தானமாக அளிக்கப்பெற்றதாகும். இந்தத் தான சாஸனம் ஓர் தாம்பிர பட்டயமாக அமைந்துள்ளது. இந்தச் சாஸனத்தையும் மடத்தின் சம்பந்தமான மற்றும் பல சாஸனங்களையும் திருவனந்தபுரத்தில் சிற்ப இலாகா அதிகாரியாக இருந்த ஸ்ரீ து. அ. கோபிநாத ராவ் என்பவர் ஆராய்ச்சியுடன் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறுர். அந்தச் சாஸனத்தில் இவ்வூரை அம்பிகா புரமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. காஞ்சீபுராணத்திலும் அம்பிகாபுரமென்றே இவ்வூரின் பெயர் காணப்படுகிறது. இவ்வூர் சிவாலயத்திலுள்ள மகாலிங்கத்திற்கு அம்பிகாபதி என்னும் பெயர் வழங்கி வருகிறது.

அம்பி என்னும் இச்சிற்றூர் வேகவதி என்னும் பெயர் பெற்று விளங்கும் ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது. அந்த ஆற்றில் தண்ணீர் வற்றிய கோடைக்காலத்திலும், தோண்டப்பட்ட ஊற்றுக்களின் வழியே, தண்ணீர் பெருகிப் பாய்ந்து வருகிறது. தற்காலம் அந்தக் கிராமத்தில் பதினான்கு காணி நிலம் மட்டுமே மடத்தின் வசம் உள்ளது. காமகோடி பீடத்தின் குருபரம்பரையை அலங்கரித்த ஆசாரிய ஸ்வாமிகள் ஒருவரது பிருந்தாவனம் (ஸமாதி) இவ்வூரில் விளங்கி வருகின்றது. அந்தப் பிருந்தாவனம் அமைந்துள்ள விசாலமான ஓர் இடத்தை அவ்வூர் மக்கள் இன்றும் சந்நியாசி மேடு என்று கூறுகின்றனர். அவ்வூர் அக்ரஹாரத்தின் நடுவில் ஒரு பெரிய தோட்டம் அமைந்துள்ளது. அந்த இடத்தை ஊர் மக்கள் மடம் என்றே குறிப்பிடுகிறார்கள். ஆகையால் அவ்விடத்தில் ஒரு காலத்தில் மடம் ஒரு பெரிய கட்டிடமாக அமைந்திருத்தல் வேண்டுமெனவும், குருபரம்பரையின் ஆசாரியர்கள் பலர் அவ்விடம் தங்கியிருந்திருக்கக் கூடுமெனவும் ஊகிக்க இடமிருக்கிறது.

மேலும் இந்தக் கிராமத்தைக் கம்பனுடன் சம்பந்தப்படுத்தி ஒரு நூதன ஆராய்ச்சியை, பல ஆண்டுகள் கம்ப ராமாயணத்தின் ஆராய்ச்சியில் திகழ்ந்து பிரசங்கங்கள் புரிந்துவந்த வயது முதிர்ந்த புலவர் ஒருவர், ஸ்வாமிகளிடம் வெளியிட்டார். அவரது ஆராய்ச்சியின் கருத்து பின் வருமாறு :—

> "காஞ்சீபுரத்தில் கோவில் கொண்டருளும் ஸ்ரீ ஏகாம்பர நாதர் கம்பநாடர் என்னும் சொல்லாலும் குறிக்கப்படுவதால், கம்பர் காஞ்சி மண்டலத்தில் பிறந்தவராகவே இருத்தல் வேண்டும். ஏகம்பன் என்னும் சொல் கம்பன் என மருவியது. காஞ்சி மண்டலத்தில் கம்பா என்னும் ஆறு பாய்வதால் அந்நாட்டிற்கு கம்ப நாடு என்னும் பெயர் அமைந்துள்ளது. அம்பிகாபுரத்தின் சிவாலயத்தில் அமைந்துள்ள ஈசனது திருநாமம் அம்பிகாபதி என்றிருப்பதால், அத் திருநாமத்தையே கம்பர் தமது மைந்தனுக்கு இட்டிருக்கலாம். கம்பநாட்டாழ்வார் என ஒரு நாட்டின் பெயரால் அவர் அழைக்கப்படுவதால், பிற நாட்டாரே அவரை அப்பெயர் கொண்டு அழைத்திருத்தல் வேண்டும். திருவெண்ணெய் நல்லூரில் சடையப்ப வள்ளல் அவரைப் போற்றி அவருக்கு

ஆதரவு அளித்து வந்தார். கம்பர் அவருக்கு உயிர்த் தோழ ராகப் பல வருடங்கள் அவ்வூரிலேயே வாழ்ந்து வந்திருக் கிறுர். தேரழுந்தூர், நாட்டரசன் கோட்டை இவ்விடங்கள் கம்பரது வாழ்க்கையில் இணைக்கப் பெற்றிருப்பதால் இவ் விடங்களிலும் கம்பர் சில காலம் தங்கியிருக்கக் காரண முண்டு. இப்பிற நாட்டினர் யாவரும் கம்பரைக் கம்பநாடர் என அவரது நாட்டின் பெயரைக் குறித்து அழைத்திருப் பார்கள்.''

நூதனமானதொரு இந்த ஆராய்ச்சியை ஸ்வாமிகளிடம் அந்தப் புலவர் தெரிவிக்க, ஸ்வாமிகள் இக் கருத்துக்கள் யாவும் மிகப் பொருத்தமாக அமைந்துள்ளனவென்றும், இவைகளைப் புலவர் களது ஆழ்ந்த ஆராய்ச்சிக்கு விடவேண்டுமென்றும் கூறினுர்கள். மேலும், ஸ்வாமிகள் கூறுகையில், அவர்களது ஆராய்ச்சியின் முடிவு எவ்விதம் அமைந்தபோதிலும், கம்பரது ஊர் மடத்தின் ஊராக அமைந்திருக்குமாஞல் அது மடத்திற்கு ஓர் பெருமையைத் தருமென மொழிந்தார்கள்.

சித்தூர் ஜில்லாவில் யாத்திரை தொடக்கம். ராஜுக்களது நாட் டிற்கு விஜயம்.

1944 மே மாதம் 11-ந் தேதி ஸ்வாமிகள் அம்பியிலிருந்து புறப்பட்டு, அதற்கு வடக்கே 25 மைல்கள் தூரத்திலுள்ள மகேந்திரவாடி என்னும் ஊருக்கு விஜயம் செய்தார்கள். அவ்விடமிருந்து யாத்திரை தொடங்கி 18 மைல்கள் தூரத்திலுள்ள சோழங்கிபுரத்தில் மே மாதம் 16-ந்தேதி வரை தங்கினுர்கள். 17-ந்தேதி ரமணராஜு கண்டிகை என்னும் ஊருக்கு விஜயம் செய்து, பின்னர் ராமகிருஷ்ணராஜபேட்டை, குமரமேட்டா, நரசுராஜ கண்டிகை, துச்சுலி முதலான கிராமங் களுக்கு விஜயம் செய்தார்கள். இவ்விடங்களிலெல்லாம் பெரும் பாலாக ராஜுக்கள் என்னும் சமூகத்தினர் வசித்து வருகின்றனர். இந்த ராஜுக்கள் விஜய நகரத்தில் அரசாண்ட கிருஷ்ண தேவ ராயரது மரபைச் சார்ந்தவர்களெனக் கூறப்படுகிறது. இவர்கள் நல்ல கல்வி அறிவு படைத்தவர்களாக விளங்கிவருகின்றனர். எப் பொழுதுமே எளிய வாழ்க்கை நடத்தி வருகிறுர்கள். அநேகமாக இவர்கள் கூரை வீடுகளிலேயே வசிக்கின்றனர். தங்கள் வீடுகளை மிகவும் சுத்தமாக வைத்துக்கொள்ளுகிறுர்கள். அவர்கள் வசிக்கும் வீதிகளில் அசுத்தமே காணப்படுவதில்லை. சோளிங்கருக்கருகில்

போடகோண்டா என்னும் ஊரில் இவர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கும் பெரியதனக்காரர் ஒருவர் இருக்கிருர். அவரிடம் இந்தச் சமுகத்தினருக்கு நல்ல மதிப்பு இருந்து வருகின்றது. இவர்கள் வசித்து வரும் இடங்களெல்லாம் மலையடிவாரங்களைச் சார்ந்தவைகளாகும். மலை ஊற்றுக்காலால் தண்ணீர் வசதியும் அங்கு நன்கு அமைந்துள்ளது. ஸ்வாமிகளை இந்தச் சமுகத்தினர் யாவரும் தங்கள் ஊர்களுக்கு அழைத்துச் சென்று, ஸ்வாமிகளின் பூஜைக்கென ஆங்காங்கு பர்ணசாலைகள் அமைத்துக்கொடுத்து, அவர்களது விஜயத்தை மிகச் சிறப்பாகக் கொண்டாடினுர்கள். ஸ்வாமிகளுக்கு ஒவ்வொரு ஊரிலும் ஊர்வலமும் நடத்தி வைத்தார்கள்.

1944 மே மாதம் இறுதியில் ஸ்வாமிகள் அத்திமாஞ்சேரிப் பேட்டை என்னும் ஊரில் சுமார் ஒரு வாரம் தங்கியிருந்தார்கள். அவ்வூரில் வசிக்கும் மக்களில் பெரும்பாலோர் செங்குந்தர்கள். இவர்கள் யாவரும் தெலுங்குச் செங்குந்தர்களாவர். வங்கனூர் என்னும் ஊரில் தமிழ்ச் செங்குந்தர்களும் வாழ்ந்து வருகின்றனர். ஸ்வாமிகள் வீரகாவேரி ராஜபுரத்தை அடைந்தபொழுது, நூற்றுக் கணக்கான ஹரிஜனங்கள் சேரிகளுக்கடுத்தாற்போல் கூட்டம் கூட்டமாக நின்று, தேங்காய் உடைத்து, கற்பூரம் கொளுத்தி ஸ்வாமிகளை வழிபட்டார்கள். ஸ்வாமிகள் சுமார் அரை மணி நேரம் அவ்விடம் தங்கி, அவர்களது நலனைப்பற்றியும், வாழ்க்கைத் தரத்தைப் பற்றியும், வழிபடும் தெய்வங்களைப் பற்றியும், நாகரிகத்தைப் பற்றியும், அவர்கள் பேசும் பாஷையைப் பற்றியும், பல கேள்விகள் கேட்டு, மிகுந்த அக்கரையுடன் அவர்களது நிலையையெல்லாம் அறிந்து, பின்னர் அவர்களை ஆசீர்வதித்து, யாவருக்கும் விபூதிப் பிரசாதம் வழங்கினுர்கள்.

கைலாஸ கோனை நீர் வீழ்ச்சியில் ஸ்நானம். இராமகிரி மலை தரிசனம்.

1944 ஜூன் மாதம் 2-ந் தேதி வெள்ளிக்கிழமை, ஸ்வாமிகள் சித்தூர் ஜில்லா நகரிக்கருகிலுள்ள நாராயண வனத்திற்கு விஜயமானுர்கள். அன்று ஸ்வாமிகள் அவ்வூர் சிவாலயத்தில் தங்கி, தம் நித்ய பூஜைகளை முடித்துக்கொண்டார்கள் மறு நாள் அதிகாலையில் அவர்கள் அவ்விடமிருந்து புறப்பட்டு, 5 மைல்கள் தூரத்திலுள்ள கைலாஸகோனை நீர்வீழ்ச்சிக்கு விஜயம் செய்தார்கள். அங்குக் காணப் பெறும் மலை ஒரு குதிரைக் குளம்பின் வடிவத்தில் அமைந்துள்ளது. மலை

யின் அமைப்மையும் அதன் மீது காணும் அடர்ந்த கானகத்தின் அழகையும் சொற்களால் வர்ணிக்க இயலாது.

அம்மலையின் ஒரு மூலையில் மிகுந்த உயரத்தினின்று ஓர் நீர் வீழ்ச்சி விழுந்தவாறே இருக்கிறது. அது அதிகக் கனமின்றியும், வேகமின்றியும் இருப்பதால் யாவரும் வெகு எளிதில் பயமின்றி அங்கு நின்று நீராடுவதற்கு வசதியுள்ளதாக இருக்கிறது. வருடம் முழுவதும் அந்த நீர்வீழ்ச்சியில் தண்ணீர் பெருகிக்கொண்டே இருக்கிறது. இதற்குச் சற்றுத் தூரத்தில், வேகமாக விழும் இரண்டு நீர்வீழ்ச்சிகளும் அமைந்துள்ளன. நீர்வீழ்ச்சிக்கு அரை பர்லாங் தூரம் வரை மோட்டார் வண்டிகள் சென்று வர நல்ல பாதை அமைந்துள்ளது. அன்று காலை ஸ்வாமிகள் அந்தக் கைலாசகோனை நீர்வீழ்ச்சியில் ஸ்நானம் செய்துவிட்டு, தம் அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு அதற்கு அடுத்த குகை களில் அமைந்துள்ள மகாலிங்கங்களையும், அம்பிகையையும், வீர பத்ர சுவாமியையும் தரிசித்துக்கொண்டார்கள்.

ஸ்வாமிகள் அன்றே அவ்விடமிருந்து கிழக்கே 8 மைல்கள் தூரமுள்ளதும், அப்பக்கத்திலேயே மிகப் பெரியதாய் அமைந்துள் ளதுமான ஸ்ரீராமகிரி மலையை அடைந்தார்கள். அங்கு நீர்வீழ்ச்சி எதுவும் காணப்படவில்லையாயினும், மலையின் அடிவாரத்தில் தண் ணீர் பல ஊற்றுக்களாக கிளம்பி, ஓர் சிறிய ஆருகப் பெருகு கின்றது. அது மற்ெருரு புறமுள்ள வேறோர் ஊற்றுடன் கலந்து பின்னர் சற்றுப் பெரிய ஆருக மாறுகின்றது. இவ்விதம் வருடம் முழுவதும் அங்கு நீர்வளம் பெருகிக்கொண்டே இருக்கிறது. ஸ்வாமிகள் இந்த ஊற்றுப் பெருக்கிலும் நீராடி, அதன் கரையில் அமைந்துள்ள மரகதவல்லி சமேத ஸ்ரீ வாலீச்வரரையும், மற்றும் பத்ர காளி, பைரவ மூர்த்திகளையும் தரிசித்துக்கொண்டார்கள். சாதாரணமாக இவ்விடங்களில் மனிதர்களின் நடமாட்டமே காணப்படுவதில்லை. ஆலய மண்டபத்தின் மேல் தளத்தில் புல் லும், செடிகளும் அடர்த்தியாக முளைத்திருக்கின்றன. மலை மீது ஓர் ஆலயமும், தடாகமும் அமைந்துள்ளன. மலையின் உச் சியை அடைவதற்கே சுமார் 5 மணி நேரம் பிடிக்குமாதலாலும் அன்று வெயிலும் மிகக் கடுமையாயிருந்தாலும் மாலை பிரதோஷ பூஜையை அடுத்த ஊராகிய நாகலாபுரத்தில் நடத்த வேண்டி யிருந்ததாலும், அந்த மலை மீது ஸ்வாமிகள் அன்று ஏறவில்லை.

ஆனால் சற்று உயரத்தில் ஒரு குன்றின் மீது அமைந்துள்ள முருகன் ஆலயத்தை மாத்திரம் ஸ்வாமிகள் அன்று தரிசித்துக்கொண்டார்கள். இம்மலைத்தொடரை ஒட்டிப் பரவியிருக்கும் காளஹஸ்தி மலையானது அவ்விடத்திலிருந்து சுமார் 30 மைல்கள் தூரத்திலுள்ளது.

அன்று மாலை ஸ்வாமிகள் இராமகிரிக்கு இரண்டு மைல் தூரத்திலுள்ள நாகலாபுரம் என்னும் சிற்றூருக்கு விஜயம் செய்தார்கள். அங்குத் தெலுங்கு செங்குந்தர்களும், இதர குடிமக்களும் ஸ்வாமிகளை மேள வாத்தியத்துடன் வரவேற்று ஊர்வலத்துடன் ஜாகையில் கொண்டுவந்துவிட்டார்கள். ஸ்வாமிகளின் அன்றைய பிரதோஷ பூஜையானது மிகச் சிறப்பாக நடைபெற்றது. பக்தர்கள் நூற்றுக்கணக்கில் அங்குக் கூடி ஸ்வாமிகளின் பூஜையைத் தரிசித்துக்கொண்டார்கள். பக்கத்து ஜில்லாக்களிலிருந்தும் பக்தர்கள் பலர் ஸ்வாமிகளைத் தரிசிக்க அவ்விடத்திற்கு வந்திருந்தார்கள்.

வேத தர்ம சாஸ்திர பரிபாலன சபை.

வேதத்தை ஆதாரமாகக் கொண்டதே நமது மதம். அதன் காரணமாகவே இது வைதீக மதமெனக் கூறப்படுகிறது. தற்காலத்தில் வேதத்தை அத்யயனம் செய்துள்ள பலருக்கு அதன் பொருளும், மந்திரங்களில் குறித்த காரியங்களுக்கு உபயோகிக்கும் விதிகளும் (ப்ரயோகம்) புலப்படுவதில்லை. இவைகளை அறிந்தவர்களின் தொகையும் வரவரக் குறைந்துகொண்டே போகிறது. வேதத்தைப் பயில மாணவர்கள் முன்வருவதில்லை. அதற்குப் பெற்றோர்களும் ஒருவாறு காரணமாயிருக்கிறார்கள். இந்தவேதக் கலையில் புலமை பெற்றவர்களிடம் வருடத்திற்கு ஒருவராவது இக்கலையைக் கற்று முழுவதும் தேர்ச்சி பெற்றவராக வெளி வரவேண்டு மென்பது ஸ்வாமிகளின் விருப்பம். சில வருடங்களுக்கு முன்னரே இருந்து இவ்விதம் படித்து நல்ல தேர்ச்சி பெற்ற வித்வான்களுக்கு மடத்தில் வருடாவருடம் ஒரு பரீக்ஷை வைத்து, அதில் தேறியவர்களுக்கு ரூபாய் 150 சன்மானமும், காஷ்மீர் சால்வையும் தங்க மோதிரமும், தர்மக்ஞ என்னும் பட்டமும் அளித்து வரப்படுகின்றன. இதைவிடச் சற்று எளிதான ஒரு பரீக்ஷையை வைத்து, அதில் தேறியவர்களுக்கு ரூபாய் 50 சன்மானமும், க்ருஹ்யக்ஞ

என்னும் பட்டமும் அளிக்கப் பெற்று வருகிறது. ஆனால் இந்த ஏற்பாட்டினால் கிடைக்கும் பயன் மிகவும் குறைவாகவே இருக்கு மாதலால், இத்தகைய வித்வான்களை அவர்கள் ஆயுள் காலம் முழுவதும் ஆதரித்து வர, நிரந்தரமான ஓர் ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்னும் நோக்கத்துடன் வேத தர்ம பரிபாலன சபை என்னும் பெயருடன் ஓர் சங்கமானது ஸ்வாமிகளது விருப்பப்படி 1944-ஆவது வருடம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. இதற்கு ஆரம் பத்தில் எற்படுத்திய உத்தேச மூலதனம் ரூபாய் 4,00,000; வசூலான மூலதனத்தொகையின் வட்டியைக் கொண்டு ஸ்வாமி களின் நோக்கத்தைப் பூர்த்திசெய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்னும் தர்க்கம், வியாகரணம், மீமாம்சை, வேதாந்தம், இந்த நான்கு சாஸ்திரங்களிலும், மற்றும் சிற்ப சாஸ்திரம், வான சாஸ்திரம் இவைகளிலும் தேர்ச்சி பெற்ற தகுதிவாய்ந்த ஆறு வித்வான்களை மடத்தில் நிரந்தரமாக வைத்து அவர்கள் மூலம் இந்தச் சாஸ்திரங்கள் உலகிற்குப் பயன்படுமாறு செய்யவேண்டு மென்பதும் ஸ்வாமிகளின் அவா. மேலும், அந்த வித்வான்களைக் கொண்டே தற்காலம் மங்கி இருக்கும் நாடி சாஸ்திரம், பிரச்ன சாஸ்திரம், யோக சாஸ்திரம், ரசவாத சாஸ்திரம், சாயாபுருஷ சாஸ்திரம் முதலான பல புராதன கலைகளையும், மற்றும் நவீன மாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் நமது வாழ்க்கைக்கு அவசிய மான மேல்நாட்டுக் கலைகளையும் ஆராய்ச்சி செய்யலாமென்பதும் ஸ்வாமிகளின் விருப்பமாகும்.

சென்ற 10 ஆண்டுகளாக இந்தச் சபையின் ஆதரவில் நம் நாட்டின் பல பாகங்களிலும் ஒவ்வொரு வருடமும் சபைகள் கூட் டப்பெற்று ஆங்காங்கு வேதக் கலையில் தேர்ச்சிபெற்ற வித்வான் களுக்குச் சன்மானங்கள் அளிக்கபெற்று வருகின்றன. மேலும் வித்வான்களைக் கொண்டு வேத தர்மங்களைப் பற்றிய சொற் பொழிவுகளும் நடைபெற்று வருகின்றன. வடநாட்டிலும் பம் பாய், பூனா, நாகப்பூர், டெல்லி, கல்கத்தா, இவ்விடங்களில் இந்தச் சபைகள் நடைபெற்று வருகின்றன. ஆங்காங்கு மக்கள் இம் முயற்சிக்குப் பேராதரவு காட்டி வருவது மிகவும் மெச்சத் தகுந் தாகும். இந்தச் சபைகள் நடைபெறும் இடங்களிலெல்லாம் ஒவ் வொரு பிராமணக் குடும்பத்தினின்றும் சிறு தொகையான ஒரு ரூபாய் வீதம் வசூலிக்கப்பட்டு, அத்தொகையைக்கொண்டே அந்த

அந்த ஊர்களில் சபை நடத்தப்பட்டு வருகிறது. இந்தச் சபையின் நிர்வாகத்திற்கென்றே ஒரு கமிட்டியும் நிறுவப்பெற்று அந்தக் கமிட்டியின் காரியதரிசியால் சபையின் அலுவல்கள் மிகச் சிறந்த முறையில் கவனிக்கப்பட்டு வருகின்றன. பெரும்பாலும் இந்தச் சபையின் நோக்கங்களை அனுசரித்தே தம் பரமகுருவின் பெயரால் "கலவை பிருந்தாவன ட்ரஸ்டு" என்று ஓர் நிதியை ஏற்படுத்தி வேதவித்பன்னர்களுக்கு வருடாவருடம் பெருந்தொகைகளை சன்மானமாக ஸ்வாமிகள் அளித்துவருகிறார்கள்.

வட ஆற்காடு ஜில்லாவில் யாத்திரை.

ஆறு காடுகள் சுற்றியுள்ளதால் இந்தப் பகுதிக்கு ஆறுகாடு எனப் பெயர் அமைந்துள்ளது என்பர். (ஆர் என்னும் மரங்கள் நிறைந்த காடாயிருந்ததால் ஆர்க்காடு என்ற பெயர் வந்ததென்றும் சொல்வர்). இவ்விடத்திற்கு ஷடாரண்ய க்ஷேத்திரமென வடமொழிப் பெயரும் உண்டு. இங்கு ஆறு காடுகளில் ஆறு ரிஷிகள் தவம் செய்தனர் என்பர். இந்த ஆறு ரிஷிகளும் தங்களுக்கென தனித் தனியே ஒவ்வொரு ஆசிரமத்தை அமைத்துக்கொண்டு அதனருகில் ஒரு சிவலிங்கப் பிரதிஷ்டையையும் செய்துள்ளார்கள். அவை,

1. புதுப்பாடி — பாரத்வாஜ ஆசிரமம்; லிங்கத்தின் பெயர் — பாரத்வாஜேச்வரர்.
2. குடிமல்லூர் — அத்ரியாசிரமம்; லிங்கத்தின் பெயர் — அத்திரீச்வரர்.
3. காரைக்காடு — அகஸ்தியாசிரமம்; லிங்கத்தின் பெயர் — அகஸ்தியேச்வரர்.
4. வேப்பூர் — வசிஷ்டாசிரமம்; லிங்கத்தின் பெயர் — வசிஷ்டேச்வரர்.
5. விஷாரம் — வால்மீகி ஆசிரமம்; லிங்கத்தின் பெயர் — வால்மீகநாதர்.
6. நவலாத்தோப்பு — கச்யபாசிரமம்; லிங்கத்தின் பெயர் —கச்யபேச்வரர்.

ஸ்வாமிகள் இந்த க்ஷேத்திரங்களையெல்லாம் தரிசித்துவிட்டுத் தாரண வருட வியாச பூஜையை 1944 ஜுலை 7உ காவேரிப்பாக்கத்திற்கருகிலுள்ள இசையனூரில் நடத்தினார்கள். சாதுர்மாச சங்கல்பம் முடிவுபெற்றவுடன் ஸ்வாமிகள் அவ்வூருக்கு 6 மைல்கள் தூரத்தில் கலவை என்னும் ஊரிலமைந்துள்ள தம் குருவினுடையதும், பரம குருவினுடையதுமான இரண்டு அதிஷ்டானங்களையும் தரிசித்துக்கொண்டார்கள். அவ்வருடம் நவம்பர் மாதம் 29-ந் தேதி ஸ்வாமிகள் திருவண்ணாமலையில் கார்த்திகை தீப தரி

சனம் செய்துவிட்டு, டிசம்பர் மாதம் 2-ந் தேதி அண்ணுமலை கிரிப் பிரதக்ஷிணத்தையும் செய்தார்கள். பின்னர் தாமரப்பாக்கம், காஞ்சீ, கடலாடி, மாம்பாக்கம், எலத்தூர் முதலான ஊர்களுக்கு விஜயம் செய்தார்கள்.

கடலாடியில் பர்வத மலைக் கிரிப்ரதக்ஷிணம்.

திருவண்ணுமலைக்கு வடமேற்கே 18 மைல்கள் தூரத்திலமைந்துள்ள கடலாடி என்னும் இடத்தில் பர்வத மலை என்ற பெயருடன் ஓர் மலை உள்ளது. அதற்கடுத்த, மிகவும் உயர்ந்த கம்பீரமாக விளங்கும் கற்பாறை ஒன்று காட்சி அளிக்கின்றது. அந்தப் பாறையின் உச்சியில் ஒரு சிவாலயம் இருக்கிறது. அந்த ஆலயத்தில் அமைந்துள்ள சிவலிங்கத்திற்கு மல்லிகார்ஜுனர் என்பது பெயர். ஸ்ரீசைலத்தின் சிவலிங்கத்தின் பெயர் அங்கு அமைந்திருப்பதுடன், அங்கு ஓர் பாதாள கங்கையும் காணப்படுகிறது. மலையின் மீதுள்ள வில்வ மரங்களில், ஒன்பதும், பதினொன்றும் தளங்கள் உள்ள மஹா பில்வவிருக்ஷம் காணப்படுகிறது. அந்த மகாபில்வம் வெகு அரிதாகவே காணப்படுமென்றும், அது பரமசிவனது பூஜைக்கு மிகவும் ஏற்றதென்றும் பெரியோர்கள் கூறுகின்ருர்கள். மலை மீது ஏராளமாகக் கல் மூங்கில்கள் வளருவதால் ஸ்வாமிகளின் தண்டத்திற்கென இவ்விடத்திலிருந்தே அடிக்கடி மூங்கில் கம்புகள் வரவமைக்கப்படுவது வழக்கம். 1905-ஆவது வருடத்தில் பீடத்தின் 66-ஆவது ஆசாரியார்களான அமைந்துள்ள ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸ்ரஸ்வதி ஸ்வாமிகள் அவ்வூருக்கு விஜயம் செய்திருந்த பொழுது, இந்த மலையின் மீது ஏறி ஸ்ரீ மல்லிகேசுவரரைத் தரிசித்துள்ளார்கள். நம் ஸ்வாமிகளும் சென்ற 1903-வது ஆண்டு இந்தப் பர்வதத்தின் மீது முன் ஒருமுறை ஏறியுள்ளார்கள். இந்தப் பர்வத மலையின் அமைப்பை நோக்கும்பொழுது துங்கபத்ரா, கிருஷ்ணு இவ்விரு மகா நதிகளால் இருபுறமும் சூழப்பெற்ற ஸ்ரீசைலப் பருவத்தின் நினைவே வருகிறது. இந்தப் பர்வத மலையைச் சுற்றிலும் இரண்டு சிறிய நதிகள் பாய்கின்றன. இந்த மலையில் ஏறுவதைவிட இதைக் கிரிபிரதக்ஷிணம் செய்வதே அதிக் கடினமானகாரியமாகும்.

இந்தப் பர்வதத்தின் கிரிப்பிரதக்ஷிணம் செய்யவேண்டி ஸ்வாமிகள் 1944 டிசம்பர் 15-ந் தேதி மாலை 3 மணிக்குக் கால் நடையாகச் சில குறிப்பிட்ட சிஷ்யர்களுடனும் அவ்வூர்க் கிராம அதிகாரிகளுடனும் புறப்பட்டார்கள். மனித சஞ்சாரமே இல்

லாததும் கரடுமுரடானதும், முள் செடிகள், முள் மரங்கள் நிறைந்ததுமான அந்தப் பாதையை வெகு சிரமத்துடன் கடந்து, மாலை 6 மணிக்குச் செய்யாறும் மிருகண்டு நதியும் சேரும் இடத்தை அடைந்தார்கள். மாலை அனுஷ்டானங்களை அங்கே முடித்துக்கொண்டார்கள். அன்று அமாவாசை ஆதலால் தீவட்டிகள் முதலான வெளிச்சங்களுடன் இந்த கிரிப்பிரதக்ஷிணம் மேலே தொடங்கப் பெற்றது. குன்றுகளின் மீது ஏறியும், இறங்கியும் சுமார் 25 மைல்கள் நடந்து இரவு 10 மணிக்குக் கடலாடி விஷ்ணு ஆலயத்தில் அமைக்கப் பெற்றிருந்த ஜாகையை அவர்கள் அடைந்தார்கள். அன்றிரவு வெள்ளிக்கிழமை பூஜையை ஸ்வாமிகள் அவ்வாலயத்திலேயே நடத்தினர்கள்.

ஸ்வாமிகள் பின்னர் சேங்கம் மார்க்கமாகத் திருப்பத்தூர் முதலான ஊர்களில் தங்கி 1945-ம் வருஷம் ஜனவரி மாதம் 24௳ சேலம் ஜில்லா கிருஷ்ணகிரிக்கு விஜயம் செய்தார்கள். ஸ்வாமிகள் பிப்ரவரி மாதம் தொடக்கத்தில் சேலத்தில் சுமார் 10 நாட்கள் தங்கியிருந்தார்கள், அவ்வூர் வக்கீல்கள் என். கோபாலஸ்வாமி ஐயர், எஸ். பாலசுப்பிரமணிய ஐயர், ஹரிஜன சேவா சங்கக் காரியதரிசி சேவாப்பேட்டை வி. வாஞ்சிநாத ஐயர், பென்ஷன் பெற்ற ஜில்லா ஜட்ஜ் டி. சுந்தரமையர், சென்னை சட்டசபைக் காரியதரிசி ஆர் வி. கிருஷ்ணையர் முதலானவர்கள் அடங்கிய ஒரு வரவேற்புக் கழகம் ஸ்வாமிகளைத் தகுந்த முறையில் வரவேற்றுப் பாதபூஜை பிக்ஷை முதலானவைகளைச் செய்துவைத்தது; மேலும் ஷராப் ஏ.வி ராமச்சந்திர செட்டியார், மிட்டாதார் ஸ்ரீநிவாச குப்தா, ஆர். வி. நாராயணஸ்வாமி செட்டியார், முதலான பிரமுகர்களும் ஸ்வாமிகளுக்கு மிகுந்த பக்தியுடன் பணிகளைப் புரிந்தனர். அவ்வூரிலிருந்து புறப்படும் முன்னர், சேலம் மக்கள் ஸ்வாமிகளுக்கு ஒரு பெரிய ஊர்வலத்தை நடத்திவைத்தார்கள். அந்த மாதத்தின் இறுதியில் மகாமகம் நிகழ்வதை ஒட்டி ஸ்வாமிகள் தம் யாத்திரையை வேகமாக தொடர்ந்து செய்து, ஆத்தூர், சின்னசேலம், கள்ளக்குறிச்சி, விருத்தாசலம், அரியலூர் மார்க்கமாக கும்பகோணத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

சேலத்திற்கு விஜயம் செய்தது.

1945-ம் வருஷம்பிப்ரவரி 22௳ கும்பகோணத்திற்கு வடக்கே 6 மைல்கள் தூரத்தில் ஸ்வாமிகள் கொள்ளிடத்தைக் கடந்து, அதன்

தென் கரையில் அமைந்துள்ள மதனத்தூர் சத்திரத்தில் அன்று பகலில் தங்கி, மாலை அவ்விடமிருந்து புறப்பட்டுக் கும்பகோணம் பழைய பாலத்திற்கு அருகில் உள்ள கல்யாணராம ஐயர் சத்திரத்தில் தங்கினார்கள். அப்பொழுது அந்நகர மக்கள் பல்லாயிரக் கணக்காக அவ்விடம் கூடி, ஸ்வாமிகளுக்குப் பெரியதொரு வரவேற்பை அளித்தனர். அவ்விடமிருந்து முக்கிய வீதிகளின் வழியே ஸ்வாமிகள் ஊர்வலமாகச் சென்று இரவு 10-30 மணிக்கு தம் மடத்தை அடைந்தார்கள்.

கும்பகோணத்தில் 1945-வது வருட மகாமகம்.

1945 பிப்ரவரி 26உ மகாமகத்தன்று காலை சுமார் 4 மணிக்கு ஸ்வாமிகள் மடத்தின் விருதுகளுடன் தந்தச் சிவிகையில் அமர்ந்து ஊர்வலமாகக் காமாக்ஷி ஜோஸ்யர் தெரு, ஸ்ரீ சக்ரபாணிஸ்வாமி கீழவீதி, அந்த ஆலயத்தின் தெற்கு வீதி, பெரியகடைத் தெரு, பொற்றாமரை வடகரை, உச்சிப்பிள்ளையார் கோவில், நாகேச்வரஸ்வாமி வடக்கு வீதி, கீழ வீதி, ரயில்வே ஸ்டேஷன் ரோடு, இவைகளின் வழியாகச் சென்று, மகாமகக் குளத்தை வலம் வந்து தென்கரையில் வழக்கமாகத் தங்கும் மண்டபத்தில் தங்கி சூரியோதயத்திற்கு முன்னரே அப்புனித தீர்த்தத்தில் நீராடினார்கள். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் அன்று அவ்விடம் வந்திருந்த பல்லாயிரக்கணக்கான மடத்தின் சிஷ்யர்கள் ஸ்வாமிகளைத் தரிசிக்க விரும்பியதால், ஸ்வாமிகள் காலை 7 மணி வரை அந்த மண்டபத்திலேயே தங்கி, யாவருக்கும் தரிசனம் அளித்தார்கள். அன்று அதி காலை 3 மணி முதல் விடியும் வரை சுமார் ஐந்து லக்ஷம் ஜனங்களுக்கு மேல் அக்குளத்தில் நீராடியதாக மதிப்பிடப்பட்டது. திருச்சி ரேடியோ நிலயத்தார் அன்று காலை ஒலிபரப்பில் மகாமகஸ்நானக் காட்சி வருணனையை ஒலிபரப்பினார்கள். காலை 8 மணிக்கு ஸ்வாமிகள் மடத்தை அடைந்தார்கள். நடுப் பகலிலும் மறு முறை தடாகத்தை அடைந்து உச்சிக்காலத்தில் செய்ய வேண்டிய ஸ்நானத்தைச் செய்து முடித்தார்கள். குளத்தின் வட கரையில் ஓர் மண்டபத்தில் அமர்த்தப்பட்டிருந்த ஸ்ரீ ஆதி கும்பேசர், ஸ்ரீ நாகேச்வரர் ஆகிய உற்சவ மூர்த்திகளை அவர்கள் தரிசித்துக்கொண்டு, காசி விச்வநாதர் ஆலயத்தில் ஒன்பது கன்னிகைகளின் சிலைகளையும் தரிசித்துக்கொண்டார்கள்.

ஜில்லா போலீஸ் ஸுபரிண்டெண்டு ஸ்வாமிகளின் ஊர்வலத்துக்குப் பந்தோபஸ்தாக ரிஸர்வ் படை அடங்கிய போலீஸ் வான் ஒன்றைக் கூடவே தொடர்ந்து வரும்படி கட்டளையிட்டுத் தாமும் மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஏறி அந்த ஊர்வலத்திற்கு முன் சென்று, கூட்டங்களை விலக்கி, ஸ்வாமிகள் குளத்தில் நீராடுவதற்குத் தகுந்த வசதிகளை செய்து கொடுத்தார்.

மகாமகத்தில் அன்ன தானம்.

அவ்வருட மகாமகத்தின் பொழுது ரேஷன் சட்டம் அமுலிலிருந்தபடியால் முன் மகாமகங்களைப் போல அவ்வளவு தாராளமாக அன்னதானம் நகரத்தில் நடைபெறவில்லை என்றே கூறவேண்டும். ஆயினும் நகரத்தின் பல பாகங்களிலும் பல சமூகத்தினர் ரேஷன் அதிகாரிகளின் அனுமதி பெற்று அன்னதானத்தை நடத்தினர்கள். அவைகளில் மிகப் பெரிய அன்னதானம் காலஞ்சென்ற தேப்பெருமா நல்லூர் சிவனது பெயரால் கும்பகோணம் சங்கர மடத்தில் நடைபெற்றதாகும். மகாமகத்தன்று மாத்திரம், சுமார் 8,000 மக்களுக்கு அங்கு அன்னம் அளிக்கப்பட்டது. இதைத் தவிர, ஸ்வாமிகளின் கட்டளைப்படி நகரத்தின் எல்லைகளிலுள்ள கிராமங்களில் கொட்டகைகள் அமைத்து, அங்கு எல்லாச் சமூகத்தினருக்கும் அன்னதானம் அளிக்கப்பட்டது. சிவன் பெயரால் நடைபெற்ற அன்னதானமானது திவான் சேஷையா சாஸ்திரிகளின் பேரன் ஸ்ரீ கல்யாணசுந்தர சாஸ்திரிகளின் மேற்பார்வையில் நடைபெற்றது. ஆனந்தவிகடன், கல்கி, சுதேசமித்திரன் முதலான பத்திரிகைகள் விளம்பரம் செய்ததின் மூலம், பாரத நாட்டின் பல பாகங்களிலுள்ள அன்பர்கள் ஏராளமாக இந்தக் கைங்கர்யத்திற்குப் பொருளுதவி புரிந்தனர். ரேஷன் அதிகாரிகளும் பொது மக்களுடன் ஒத்துழைத்து இவ்வித அன்னதானங்கள் நடைபெற உதவி புரிந்தனர். சிவனது அன்னதானத்திற்கு வழக்கமாகப் பண உதவியோ, பொருளுதவியோ செய்து வந்தவர்கள் அவ்வருடத்திலும் அவ்வுதவிகளைச் செய்து அந்தப் பணியில் பங்கெடுத்துக்கொண்டார்கள்.


ஸ்ரீமடம் தர்மத் தொண்டு சபை.

முத்திராதிகாரிகளின் இயக்கத்தின் ஒரு பகுதியாகச் சென்ற 1945-ஆவது வருடத்தில் ஸ்ரீமடம் தர்மத்தொண்டு சபை என்னும் பெயருடன் ஒரு சபையை ஸ்வாமிகள் நிறுவினர்கள். நம் தர்மங்களைக் குறித்துத் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு அவை


களை இனமாக இந்தச் சபையின் மூலம் பொதுமக்களுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதன் தொண்டர்கள் அநேகமாகச் சர்க்கார் உத்தியோகங்களிலிருந்து விலகி உபகாரச் சம்பளங்களைப் பெற்றுவருபவர்கள். அவர்கள் சில சமயங்களில் வீடு வீடாகச் சென்று ஸ்வாமிகளின் உபதேசங்களைப் பற்றிப் பிரசாரமும் செய்து வருகின்றார்கள். இந்தத் தொண்டர் சபை மூலமாகத் திருச்சி முதலான இடங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளில் இருக்கும் ஹிந்து நோயாளிகளுக்கு ஸ்வாமிகள் அளித்த விபூதி, குங்குமம், அக்ஷதை, பிரசாதங்கள் கங்காதீர்த்தம் முதலியன விநியோகிக்கப் பட்டுவருகின்றன. இறக்கும் தருவாயிலிருக்கும் ஹிந்து மக்களுக்கு அவரவர்கள் காதுகளில் அவரவர்கள் கோட்பாட்டின்படி சிவ நாமத்தையும், விஷ்ணு நாமத்தையும் சொல்லச் சில தொண்டர்களையும் ஸ்வாமிகள் நியமித்துள்ளார்கள். இவர்கள் யாவரும் எவ்வித ஊதியமும் பெறுமல் இப்பணியில் ஈடுபட்டிருப்பது பாராட்டுதற்குரியதாகும்.

அத்வைத சபையின் பொன் விழா. 108 பண்டிதர்களுக்கு பொன் மோதிரம் பரிசளிப்பு.

அத்வைத சித்தாந்தத்தை உலகில் பரப்பவும், அந்தச் சித்தாந்தத்தில் தேர்ச்சி பெற்ற பண்டிதர்களுக்கு ஊக்கம் அளிக்கவும், வருடா வருடம் பரீக்ஷைகள் வைத்து, அதில் தேறியவர்களுக்கு அவர்களது ஆயுள் முழுமைக்கும் சன்மானம் அளிக்கவும், தர்ம சாஸ்திரங்களில் வரும் சந்தேகங்களைத் தீர்த்து வைக்கவும், சென்ற 1894-ஆவது ஆண்டில், காமகோடி பீடத்தை அலங்கரித்த 66-வது ஆசாரிய ஸ்வாமிகளான ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளது பரிபூர்ண ஆதரவில், அத்வைத சபை என்னும் பெயருடன் ஒரு சபையானது கும்பகோணம் ஸ்ரீ சங்கர மடத்தில் துவக்கப் பட்டது. அக்காலத்தில் வடமொழியில் மகா பண்டிதர்களாக விளங்கிய மன்னார்குடி மகாமகோபாத்யாய ராஜு சாஸ்திரிகள், திருவையாறு மகாமகோபாத்யாய பாலகிருஷ்ண சாஸ்திரிகள், சிதம்பரம் மகாமகோபாத்யாய ஹரிஹர சாஸ்திரிகள் மற்றும் மடத்தின் ஆஸ்தான வித்வான்களாக இருந்த, திருவையாறு மீமாம்ஸா குப்புஸ்வாமி சாஸ்திரிகள், திருவிசலூர் மகாலிங்க சாஸ்திரிகள், கோமல் நீலகண்ட தீக்ஷிதர், சுவேதாரண்யம் நாராயண தீக்ஷிதர் இவர்களும் இந்தச் சபையின் பண்டிதர்களாக இருந்து அந்தச் சபையைத் துவக்கிவைத்தார்கள். இவர்களுக்கு ஊக்கம் அளித்துச் சபையைத்



1945 - கும்பகோணத்தில் அத்வைத சபையின் பொன்விழாவில்



1939-ல் இருபத்தோராண்டு விஜய யாத்திரை முடிவு பெற்று கும்பகோணம்
ஸ்ரீமடத்திற்கு விஜயம் செய்தார்கள்.
ஸ்ரீஸ்வாமிகள் மடத்தின் சிப்பந்திகளின் மத்தியில் காக்ஷியளிக்கின்றார்கள்.

தோற்றுவிக்கவும் பிரகாசிக்கவும் உதவிய அக்காலத்துப் பிரமுகர்களில், திவான் சர். ஏ. சேஷையா சாஸ்திரிகளையும், வக்கீல் வி. கிருஷ்ண ஐயரையும், கும்பகோணம் காலேஜ் பேராசிரியர் என். வைத்தியனாத ஐயரையும், கும்பகோணத்தில் ஸ்ரீ வித்தியா அச்சுக்கூடத்தை ஸ்தாபித்த கோனேரிராஜபுரம் சாம்பசிவ ஐயரையும், கும்பகோணம் நேடிவ் ஹைஸ்கூலை ஸ்தாபித்த ராவ் பகதூர் அப்பு சாஸ்திரிகளையும் முதன்மையாகக் கூறலாம். இந்தப் பிரமுகர்களின் உதவியினாலும் மற்றும் பல பிரமுகர்களின் உதவியினாலும் ஒத்துழைப்பினாலும் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சபையானது ஐம்பது வருடங்கள் சேர்ந்தாற் போல் அத்வைதசித்தாந்தத்தையும், சநாதன தர்மத்தையும் நாட்டில் பரப்பப் பல பணிகள் ஆற்றியுள்ளது. (இந்தச் சபையில் பின்பு பங்கெடுத்துக்கொண்டு பணி ஆற்றியுள்ள வித்வான்களில் பின் வருகிறவர்களையும் கூறலாம்.)

1. மகாமகோபாத்யாய பைங்காநாடு கணபதி சாஸ்திரிகள்.
2. ,, கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகள்.
3. ,, திருவிசநல்லூர் வெங்கடசுப்பா சாஸ்திரிகள்.
4. ,, சிதம்பரம் தண்டபாணி சுவாமி தீக்ஷிதர்.
5. ,, மன்னார்குடி யக்ஞசுவாமிசாஸ்திரிகள்.
6. புதுக்கோட்டை தானாதிகாரி திருவையாறு விச்வநாத சாஸ்திரிகள்.

பேராசிரியர் கே. சுந்தரராம ஐயர் பல ஆண்டுகள் இந்த சபைக்குக் காரியதரிசியாக இருந்து அரும் பணியாற்றியுள்ளார்.

இந்தச் சபையின் பொன் விழாவானது 1945 பிப்ரவரி மாதம் 28உ முதல் 10 நாட்கள் நம் ஸ்வாமிகள் சந்நிதானத்தின் முன்னிலையில் கும்பகோணம் ஸ்ரீ மடத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது, சிறந்த பண்டிதர்களான போலகம் ராமா சாஸ்திரிகள், போலகம் சுந்தர சாஸ்திரிகள், பிராந்தியங்கரை சுப்ரமண்ய சாஸ்திரிகள், அண்ணாமலைச் சர்வகலாசாலையைச் சார்ந்த வேப்பத்தூர் சுப்ரமண்ய சாஸ்திரிகள் இவர்கள் நால்வரும் அவ்வருடம் பரீக்ஷாதிகாரிகளாக அமைந்து சபையை வெகு அழகாக நடத்தி வைத்தார்கள். சென்னையிலிருந்து திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகளும், அட்வகேட் கே. பாலசுப்ரமண்ய ஐயரும், மேலும் மதுரை வக்கீல் என். நடேச ஐயரும், திருக்கருகாவூர் டி. எல். சுப்பய்யரும், டவுன் ஹைஸ்கூல் முன்னாள் தலைமை ஆசிரியர் ஆர். சுவாமிநாத

ஐயரும், மற்றும், உள்ளூர், வெளியூர்ப் பிரமுகர்களும் இவ்விழாவில் பங்கெடுத்துக் கொண்டு பணியாற்றினர்கள். ஒவ்வொரு நாளும் ஸூத்திரபாஷ்யத்தில் வாக்கியார்த்தங்கள் நடைபெற்றதுடன் சிறந்த பண்டிதர்களால் நமது தர்மங்களைப் பற்றி இரவு நேரங்களில் உபந்யாசங்களும் நடைபெற்று வந்தன.

முடிவு நாளன்று ஸ்வாமிகள் பண்டிதர்களுக்குச் சில உபதேச மொழிகளை அருளிவிட்டு, அவரவர்களது புலமைக்குத் தக்கவாறு சால்வை, பீதாம்பரம் முதலிய சன்மானங்களையும் தாராளமாகச் செய்ததுடன் நூற்றுக்கு மேற்பட்டு அந்தச் சபைக்கு விஜயம் செய்திருந்த பண்டிதர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சவரன் எடையில் பொன் விழா நினைவாக, ஆதி பகவத் பாதரது உருவம் அமைக்கப்பட்ட தங்க மோதிரத்தைப் பரிசாக அளித்தார்கள், இவ்விதம் ஸ்வாமிகள் பண்டிதர்களுக்கு இது வரை எவரும் அளிக்காத பேராதரவை அளித்ததை யாவரும் கொண்டினார்கள்.

அத்வைத சபையின் பொன் விழாவின் போது ஸ்வாமிகள் அத்வைத சாஸ்திரத்தைப் பற்றிப் பக்தர்களுக்கு அருளிய சில உபதேச மொழிகள் கீழே தரப்பட்டுள்ளன.

அத்வைத வித்யையைப் பற்றி ஸ்வாமிகள் அருளிய பொன் மொழிகள்.

"ஆத்மா ஒன்று; அதுதான் சத்யம்; மற்றெல்லாம் மித்யை" என்பது ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதரது அத்வைத சித்தாந்தமாகும். இதிலுள்ள மித்யா என்னும் சமஸ்கிருதச் சொல்லுக்கு பொய் எனப் பொதுவாகப் பொருள் கூறப்படுவதால், அப்பொருளை வைத்துக் கொண்டு சிலர் நமது அத்வைத சித்தாந்தத்தைக் குறை கூறுகின்றனர். ஆனல் குறைவற்றதும் உண்மையை உணர்த்துவதும் அத்வைத சித்தாந்தமே ஆகும்,

உலகிலுள்ள எல்லா வஸ்துக்களையும் சேதனம், அசேதனம், அதாவது அறிவுள்ளது, அறிவில்லாதது, என இரு வகையாகப் பிரிக்கலாம். அதில் அறிவுள்ள வஸ்துவை ஜீவாத்மா எனவும், பரமாத்மா, எனவும் மேலும் இரு வகையாகப் பிரிக்கலாம். இவ்விதம் பிரிக்கப்படும்பொழுது, (1) அசேதனம் எனக் கூறப்படும் அறிவில்லாத வஸ்துக்கள், (2) எங்கும் நிறைந்துள்ள பரமாத்மா, (3) ஒவ்வொரு சரீரத்திலும் தனியே காணப்படுகிற ஜீவாத்மா என்றவாறு இவ்விதம் மூன்று பிரிவாக நிற்கின்றன. இவற்றுள் பரமாத்மா ஒன்றைத் தவிர மற்ற இரண்டும் மித்யை.

பிரம்மமே சத்யம்; ஜகத் மித்யை. ஜீவனும் பிரும்மத்தைத் தவிர வேறில்லையென நமது ஆசாரிய பகவத் பாதர் சித்தாந்தம் செய்திருக்கிறுர்கள்.

இவ்விதம் சித்தாந்தம் இருக்கும்பொழுது குரு, சிஷ்யன், உபாசிக்கப்படும் பொருள், உபாசிப்பவன் என்னும் பேதங்கள் எவ்விதம் ஏற்பட்டுள்ளன என்ற சந்தேகம் எழலாம், உலகம் மித்யை எனக் கூறப்படுவதாலேயே, அது முயல் கொம்பைப் போல் முழுவதுமே இல்லாத வஸ்துவெனக் கொள்ளலாகாது. ஜீவனுக்கு ஆத்ம ஞானம் ஏற்படும் பொழுது இவ்வுலகம் மறைந்து விடும்; அல்லது நசித்துவிடும். இதையேதான் மித்யை என்னும் சொல்லால் நமது ஆசார்யர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆகையால் ஆத்ம ஞானம் ஏற்படும் வரையில் உலகம் இருப்பதால், அதுவரை அதை ஒருவாறு சத்யம் என்றே கூறவேண்டும். இதையே வியாவகாரிக சத்யம் என்று நமது சாஸ்திரம் கூறுகின்றது. ஆத்மா எப்போதும் இருப்பதால் அதற்குப் பாரமார்த்திக சத்யம் என்பது பெயர். சிப்பியில் தோன்றும் வெள்ளியானது அவ்விதம் தோன்றும் வரை வெள்ளியாகவே இருப்பதால் அது பிராதிபாசிக சத்யம் எனக் கூறப்படுகிறது.

உலகில் பிறவி எடுத்த யாவருக்கும் உண்மைப் பொருளாகிய பரம்பொருளை விளக்கக்கூடியது அத்வைத வித்யை ஆகும். இந்த உண்மையை உணர்பவன் மயக்கத்தையும், துயரத்தையும் அடைய மாட்டான். உபநிடதங்கள் எல்லாம் இதையே வற்புறுத்துகின்றன.

ஒவ்வொருவனும் துயரத்தையும், அச்சத்தையும் நீக்க வேண்டும். உபாசனை, வேள்வி, தியானம் முதலியவைகளால் சிறிதளவு துயரத்தை நீக்கிக்கொள்ளலாம். ஆனுல் துயரத்தின் மூலத்தை மறுமுறை தளிர்க்காமல் ஒழிப்பதையே மனிதன் தன் லக்ஷ்யமாகக் கொள்ளவேண்டும். துயரத்திற்கு மூல காரணம் பிறவி. பிறவிக்குக் காரணம் கருமம். கருமங்களுக்கு அடிக் காரணம் பற்று. பற்றினுல் ராகத் துவேஷம், அச்சம் இவைகள் ஏற்படுகின்றன. ஆன்மாவைத் தவிற இரண்டாம் பொருளின் தோற்றம் இல்லையானுல் பற்று வெறுப்பு இவைகளுக்கு இடமில்லை.

இரண்டாம் பொருளின் தோற்றத்திற்குக் காரணம் பொய் அறிவு, அல்லது அக்ஞானம். இரண்டற்ற ஒன்றை, உணர்ந்து,

அனுபவிப்பதனுல் அப் பொய் அறிவு நீங்கும். இந்த முறையில் ஜீவர்களுக்கு அத்வைத வித்யை பெரிதும் உதவுகின்றது. உண்மை ஞானத்தினுல் மட்டுமே அஞ்ஞானத்தை நீக்கமுடியும்.

மன அமைதி, இறைவனருள், முதலிய யாவும் அத்வைத சாக்ஷாத்காரத்தையே கொடுக்கின்றன. "இது முழுவதும் பிரும்மமே." "அறிவும், ஆனந்தமும் பிரும்மம்." என்றெல்லாம் வேதங்கள் கூறுகின்றமையால், அந்தப் பிரும்மத்தை அடைவதே ஜீவர்களது புருஷார்த்தமாகின்றது.

காரியத்தை விடக் காரணத்தையே முதன்மையாகக் கொள்ள வேண்டும். குடத்திற்கு காரணம் மண்ணே ஆகும். குடத்தில் மண்ணுருண்டையைத் தவிர வேறு எதுவும் இல்லை. அதற்குக் குடம் என்பது பெயர் மாற்றம்; வடிவம், உருமாற்றம். அவ் விரண்டையுமே நாமரூபங்கள் என வேதங்கள் கூறுகின்றன. இவைகள் கற்பனைப் பெயர்கள் ஆகும். சிந்தித்துப் பார்க்கும் அளவில் மண் மாத்திரமே உண்மையாகிறது. வேதங்களும் அவ் விதமே மொழிகின்றன. இரண்டாவதாகக் காணப்படுவதே மாயை.

காரணத்தின் காரணம், அக்காரணத்தின் காரணம், என்று காரண வரிசையை மேன் மேலும் ஆராய்ந்துகொண்டே போனுல் முடிவில் பரம காரணம் பிரும்மம் என்பது தெளிவாகும். அதுவே பரம்பொருள்; அதுவே சத்யம்; 'அது நீயாகிருய்' என்கிற அத் வைதத் தன்மையைச் சாந்தோக்கிய உபநிடதம் எடுத்துக்காட்டு கிறது.

ஒருவன் உயிருடன் இருக்கும்பொழுதே, ஞானத்தினுல் மாயையை விலக்கி, சர்வபாவா பத்தியை அடைவதுதான் உண்மை யான மோக்ஷம். இதுதான் ஜீவன் முக்தி; அதாவது இறப்பதற்கு முன் முக்தி எனக் கூறப்படுகிறது. இதற்குச் சுருதி, ஸ்மிருதி, நியாயம், என்கிற பிரஸ்தான திரயத்திலும் பிரமாணம் இருக் கின்றது. ஜீவனே அமிருதன்: இவனுக்கு மரணம் என்பது இல்லை.

இந்த ஜீவன்முக்தனுக்கு உலகம் எவ்விதம் தோன்றும் என்னும் சந்தேகம் எழலாம். அவனுக்கும் மற்றவனைப் போலவே உலகம் தோன்றத்தான் செய்யும். ஆனுல் அவன் அதைப் பார்க்கும் வகையில்தான் மாறுபாடுகள் காணப்படு

கின்றன. அவன் உலகத்தைப் பொய்யாக நினைப்பான். நாற்புறமும் கண்ணாடி பதிப்பிக்கப்பட்ட ஓர் அறையின் நடுவில் ஒரு மாட்டைக் கொண்டு போய் நிறுத்தினால், அது எல்லாத் திசைகளிலும் தெரியும் மாடுகளின் உருவம் அனைத்தையும் உண்மை மாடுகள் எனவே நினைக்கும், ஆனால் மனிதனோ அவனது கண்களுக்கு புலப்படும் அவ்வுருவங்களையெல்லாம் பொய் உருவங்களாகவே மதிப்பான்.

ஆகவே ஜீவன் முக்தன் இந்த உலகத்தை எல்லாம் பொய் யெனக் கொள்வான். ஜீவன் முக்தியை அடைவதற்குச் சாஸ்திரங்களில் ஏழு படிகள் கூறப்பட்டுள்ளன. அதில் முதலாவது படி சுபேச்சை. நமக்கு இன்றியமையததாகத் தேவையுள்ளதும் இந்தச் சுபேச்சைதான்.

மற்ற மதத்தினர் தங்கள் மதத்தைத் தவிர வேறு மதங்களினால் மோக்ஷம் கிட்டாதென்று கூறுகின்றனர். ஆனால் அத்வைதிகளாகிய நாம் மட்டும் அவ்விதம் கூறுவதில்லை. ஈசுவர பக்தியால்தான் அத்வைதம் சித்திக்கும் என்பது நமது கொள்கை. பக்திக்குச் சாதனமாக அவரவர்களது ருசிக்குத் தக்கவாறு மக்கள் எந்த மதத்தையும் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் முடிவில் உண்மையை அத்வைதத்தினால் தான் காண முடியும். தற்கால விக்ஞானிகள் கூட எல்லாவற்றிற்கும் மூல சக்தி ஒன்றே தானெனக் கண்டுபிடித்துள்ளார்கள். ஆனால் அவர்களது ஆராய்ச்சியோ ஜடப்பொருளுடன் நின்று விடுகிறது.

ஒரு வஸ்துவை அறியக் கண், வெளிச்சம், மனம், ஆத்மா இவைகள் வேண்டும். இவைகளுள் ஆத்மாவே முதன்மையாகும். எலெக்டிரிக் வேவ் எனக் கூறப்படும் மின்சார அலையானது, வெட்டவெளி (Atmosphere) எங்கும் பரவியிருப்பது போல, எங்கும் வியாபகமாயுள்ளது. ஆத்மா ஒன்றுதான். பல மார்க்கங்களைக் கடை பிடிப்பவர்கள் வெவ்வேறு விஷயங்களைக் கூறுவதாக வெளிப்பார்வைக்குத் தோன்றினாலும் அவர்களது மனம் அத்வைதத்தையே நாடும்.

மோக்ஷத்திற்கு உபாயமாக ராகத்துவேஷங்களை விலக்க வேண்டுமென நியாய சூத்திரம் கூறுகின்றது. ஒன்றை இரண்டாகப் பாவிக்கும் தன்மை ஒருவனிடம் இருக்கும் வரை அவனிடமிருந்து ராகத்துவேஷமும் விலகாது. பிரிக்கப்படாத ஒரே வஸ்து

வாக உலகத்தைக் காண்பவன் எவ்வித ராகத்துவேஷத்தாலும் பாதிக்கப்படமாட்டான்.

இதர சித்தாந்திகள் சிலர் அத்வைதிகளைப் பிரச்சன்ன பௌத்தர்கள் என்றும், மாயாவாதிகள் என்றும் கூறுகிறார்கள். அத்வைதிகள் பொதுவாக மாயை என்னும் சொல்லை உபயோகிப்பதாலேயே அவர்கள் மாயாவாதிகளாக ஆகிவிடமாட்டார்கள்.

வியாசர் முதலிய மகரிஷிகள் வேதத்தைப் பிரமாணமாக ஒப்புக்கொண்டு, பல தரிசன நூல்களை இயற்றி, உலகத்திற்குப் பரோபகாரத்தைச் செய்திருக்கிறார்கள். வியாஸ சூத்திரத்திற்கு ஸ்ரீ சங்கர பகவத் பாதர் பாஷியம் இயற்றி உள்ளார்கள். இந்தப் பாஷியத்திற்கு எண்ணற்ற உரைகள் பிற் காலத்தில் ஏற்பட்டுள்ளன. அத்வைத சாஸ்திரத்திற்குத்தான் நூல்கள் மிக அதிகம். ஹிமாசலம் முதல் குமரி வரை, பல மகான்கள் அத்வைதத்திற்கு விளக்கம் கூறி நூல்களை இயற்றியுள்ளார்கள் - கௌடபாதர், வித்யாரண்யர், அப்பய்யதீக்ஷிதர் பிரும்மாநந்தர், முதலிய பெரியோர்களை இவ்வரிசையில் சேர்க்கலாம். இவர்களின் நூல்களைக் கற்று நாம் நற்பயனைப் பெறுவோமாக."

* * * * *

1945, 1946-வது ஆண்டுகளில் தஞ்சை ஜில்லாவில் தங்கியது.

1945-ஆவது வருடத்து மகாமகம் முடிவு பெற்றவுடன் ஸ்வாமிகள் கும்பகோணத்திற்கு அடுத்த மணஞ்சேரி என்னும் கிராமத்தில் சில மாதங்கள் தங்கியிருந்தார்கள், அவ்வருட வியாச பூஜை 24-7-1945-ல் பாபநாசத்தற்கு அடுத்த திருக்கருகாவூரில் நடைபெற்றது. அதை அடுத்த நவராத்திரி விழாவும் அவ்வூரிலேயே கொண்டாடப்பட்டது. ஸ்வாமிகளின் கருணைக்குப் பாத்திரமான டி. எல். சுப்பையர் என்னும் பெரியார் தலைமையில் அவ்வூரார் அவ்விடம் ஸ்வாமிகள் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் குறைவற்ற முறையில் செய்திருந்தனர். 1945-ஆவது வருட அக்டோபர் மாதம் முதல் 1946-ஆம் வருஷம் ஏப்ரல் வரை, சுமார் 6 மாதங்கள் கும்பகோணம் காரைக்கால் ரோடில் ஆடுதுறைக்கு அடுத்த மேலூர் என்னும் கிராமத்தில் ஸ்வாமிகள் விஜயம் செய்திருந்தார்கள். ஸ்வாமிகளது பக்தர்களில் 'மிகச்சிறந்து விளங்குகின்ற அவ்வூர் ராமச்சந்திர ஐயர் என்னும் மிராசுதார் தனது சொத்துக்களை தருமத்திற்கு அளித்துவிட்டு ஸ்வாமிகளது கைங்கரியத்தில் ஈடுபட்

டிருப்பதைப் பலர் அறிவர். ஸ்வாமிகளது பூஜாமண்டபத்தில் எக்காலத்திலும் அவர் கைங்கரியம் புரிவதைப் பக்தர்கள் காணலாம். 1946-ஆவது வருடம் வியாச பூஜை கும்பகோணம் மடத்தில் 14-7-1946-ல் நடைபெற்றது. அன்று முதல் சுமார் நான்கு மாதங்கள் ஸ்வாமிகள் தம் மடத்திலேயே தங்கியிருந்தார்கள்.

1946-ஆம் வருஷம் டிசம்பர் 12உ பண்டித மதன்மோகன மாளவியா காசியில் காலமான செய்தியைக் கேட்டு ஸ்வாமிகள் மனம் கசிந்து அவரது குடும்பத்தாருக்கு ஓர் அனுதாபச் செய்தியை அனுப்பினார்கள்.

ஜீவாத்ம கைங்கரியம்.

1946-ஆவது ஆண்டு பிப்ரவரி மாதம் 5-ஆம் தேதி ஸ்வாமிகள் முத்ராதிகாரிகளுக்குக் கீழே கண்ட சுற்றறிக்கை ஒன்றை விடுத்தார்கள்.

"ஒவ்வொரு ஜீவனும் உடலைவிட்டுப் பிரிந்து செல்லும் காலத்தில் எந்த எண்ணத்துடன் செல்லுகின்றானோ அது நல்லதாயினும், கெட்டதாயினும் அந்த எண்ணமே அவனுக்கு மறு ஜன்மமாகி விடுகிறது. இறுதிக் காலத்தில் ஈசனது நாமத்தைக் காதினால் கேட்பவனுக்கு மோக்ஷம் என்னும் மேல்பதவி கிட்டும். ஒருவன் தனது ஜன்மத்தின் நடுவில் எவ்வளவு பாபியாயிருந்திருப்பினும் கடைசி விநாடியில் பகவானது நாமத்தைக் கேட்பதால் அவன் பரிசுத்தனாகி விடுகிறான். அவனுக்கு நற்கதியும் சித்திக்கின்றது. ஒவ்வொரு ஜீவனும் இவ்விதம் நற்கதியை அடைய மக்கள் உதவி புரிவது மிகவும் அவசியமாகும்.

முத்ராதிகாரிகள்; அக்ரஹாரம், பண்டாரவாடை, குடித்தெருவு, முதலிய இடங்களில் எந்த வீட்டில் யார் மரண அவஸ்தையிலிருப்பினும், அவர்களுக்குப் பிரக்ஞை தப்புவதற்கு முன், அவ்வூர்க் கோவில் பிரசாதத்துடன் அவர் அருகில் சென்று, ஸ்ரீமடத்திலிருந்து பகவத் சிரவண விஷயமாக அச்சிடப்படும் பத்திரிகையிலுள்ள தமிழ்த் தாத்பரியத்தை மூன்று முறை வாசித்துக் காட்டி, 1008 தடவை ஈசுவர நாமாவையாவது, விஷ்ணு நாமாவையாவது உரக்க உச்சாடனம் செய்துவிட்டுப் பிரசாதத்தையும் கொடுத்து வரவேண்டும்.

அவ்விதமாகவே சேரிகளிலுள்ள நாட்டாண்மைக்காரர்கள் மூலம் கோவில் பிரசாதத்தைச் சேர்ப்பித்து, அவரைக்கொண்டே மரணவஸ்தையில் இருப்பவர்களின் முன்னிலையில் ஈசன் நாமாவை

1008 தடவை உரக்க ஜபிக்கச் செய்யவேண்டும். முக்கியமாக ஹிந்து மதத்திலுள்ள ஒவ்வொரு ஜீவனுக்கும் கடைசிக் காலத்தில் நமது முத்திராதிகாரி ஏற்பாட்டின் மூலம் பகவத் சிரவணம் காதில் விழும்படிச் செய்வதே இதன் நோக்கமாகும்."

* * * * *

தேச கலகக் காலத்தில் ஸ்திரீ புருஷர்களுக்கு சுத்தி அனுமதித்தது.

1946-ஆவது ஆண்டின் பிற்பகுதியில் நமது பாரத நாட்டைத் துண்டாக்க வேண்டுமென்ற கிளர்ச்சியை முகம்மதியர்கள் மேற்கொண்டதின் காரணமாக, வங்காளத்தில் மதவெறி பிடித்த அந்தச் சமூகத்தினர் நவகாளி முதலிய இடங்களில் ஹிந்துக்களைக் கொலை, களவு, தீ வைத்தல் முதலிய செய்கைகளால் துன்புறுத்த முற்பட்டனர். அவர்கள் அவற்றோடு நிற்காமல் ஹிந்துக்களைப் பலாத்காரமாக மதம் மாற்றுவதும், ஹிந்துப் பெண்களைத் தூக்கிச் சென்று துன்புறுத்திப் பலாத்காரம் செய்வதுமான செயல்களில் ஈடுபட்டனர். இதைக் கேள்வியுற்ற நாட்டு மக்கள் மிகவும் கவலை கொண்டனர். காந்திஜீயும் இந்த நிலைமையை நேரில் காண நவகாளிக்குச் சென்றார். இவ்விதம் பலவந்தமாக மதம் மாற்றப்பட்டவர்களையும் பலாத்காரம் செய்யப்பட்ட ஸ்திரீகளையும் மறுபடியும் நமது மதத்தில் சேர்த்துக்கொள்ள மதம் எவ்வாறு இடம் தருகின்றது, என்பதை விளக்கி, ஸ்வாமிகள் ஓர் அறிக்கையை விடுத்தார்கள். அந்த அறிக்கை பின்வருமாறு :—

"பலாத்காரமாக மதம் மாற்றப்பட்டவர்கள் தங்களது மதத்தை இழந்ததாகக் கொள்ளக்கூடாது, பலாத்காரமாகத் தூக்கிச் செல்லப்பட்டும் மானபங்கப் படுத்தப்பட்டவர்களுமான ஹிந்து ஸ்திரீகளை ஹிந்து சமயம் நிராகரிக்கக்கூடாது. இப்படிப் பட்டவர்களை மீட்பதற்குப் பிராயச்சித்த வழிகள் நமது சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளன. மேலும் மானபங்கப்படுவதை விட இறப்பதையே மேலாகக் கருதிய ஹிந்து ஸ்திரீகளின் எல்லோருடைய பெயர்களையும் சேகரிக்கவேண்டும், அப் பெண்மணிகளைப் பற்றித் தினமும் காலையில் எல்லா ஹிந்துக்களும் ஸ்மரித்து அவர்களைக் கௌரவிக்கவேண்டும். கலவர சமயத்தில் அபாய நிலையிலிருந்தும், கஷ்டங்களிலிருந்தும், பிற சமூகத்தினரை மீட்டு உதவி செய்த உத்தம புருஷர்கள் இந்துக்களா யிருந்தாலும், அல்லது அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் தேச மக்கள் அவர்களைக் கௌரவிப்பது தகுதியாகும்."

* * * * *

மேற்கண்ட அறிக்கையை விடுத்ததுடன், திக்கற்றவர்களுக்குப் பண உதவியும் போர்வை துணிமணிகளும் அனுப்பும்படி ஸ்வாமிகள் தம் சிஷ்யர்களுக்கு ஓர் ஆக்ஞையையும் விடுத்தார்கள். மடத்திலிருந்தும் அவர்களுக்கு உதவி அனுப்பப்பட்டது.

பிராசீன இந்தியக் கலை, எகிப்து முதல் ஜாவா வரையில் ஹிந்து நாகரீகம்.

1947-ஆவது வருடம் ஜனவரி மாதத்தில் ஸ்ரீ மடத்தில் நடைபெற்ற அய்யுவய்யர் வேதாந்த பாடசாலையின் வருடாந்தக் கொண்டாட்டத்தில், நமது புராதனக் கலையின் புனருத்தாரணமும் — தற்கால நெருக்கடியைத் தீர்க்கும் வழியும் — என்னும் விஷயம்பற்றி ஸ்வாமிகள் அரியதோர் சொற்பொழிவாற்றினார்கள். அதன் சுருக்கம் பின்வருமாறு:—

"பண்டைக் காலத்தில் இந்தியக் கலையின் நாகரீகம், மேற்கில் எகிப்து முதல் கிழக்கில் ஜாவா வரையில் பரவி மிகுந்த உன்னத நிலையை அடைந்திருந்தது. அதன் மேன்மையை நாம் இன்று நன்கு உணர்வதன் மூலம், நமது நாடானது மீண்டும் அதற்கேற்ற உயர் நிலையை அடையுமாறு நாம் செய்யக்கூடும். நமது நாட்டுக்கும் அந்நாடுகளுக்கும் தேசிய ஒற்றுமையை நாம் மீண்டும் வளர்ச்சி செய்யலாம். ஹிந்து கலா சாஸ்திரங்களின் அறிவானது வெளி நாடுகளில் வேரூன்றியிருக்கிறது. அதன் அடையாளங்களை இன்றும் நாம் அந்நாடுகளில் காணலாம்.

நமது புராதன சமஸ்கிருத நூல்கள் பலவற்றை, ஜெர்மன் நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்த நிபுணர்கள் பலர் எடுத்துச் சென்று அந்நாட்டின் தேசிய புஸ்தக சாலைகளுக்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டனர். அந் நூல்களையெல்லாம் சென்ற மகாயுத்தத்தின் நஷ்ட ஈடாக இந்தியாவுக்குத் திருப்பித் தரவேண்டுமென நமது அரசாங்கத்தார் கோரியிருப்பதைப்பற்றி நாம் மிகவும் பெருமைப்படவேண்டும். இக்காலத்தில் அரசியல்தான் ஜனங்களின் மனதைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. மதத்தைப்பற்றி அதிகமாகக் கவலைப்படுவோரில்லை. அப்படியிருந்தும் சமஸ்கிருதத்தின் அருமையை உணர்ந்து நம் பிரதிநிதிகள் ஜெர்மன் நாட்டிடம் அவ்விதம் கோரியிருப்பதானது நமது கலையின் சக்தி மக்களது மனஸில் வேரூன்றி இருப்பதைத் தெளிவாக்குகின்றது. ஜாவா நாட்டின் தலைவரான டாக்டர் சோகர்னோ (சுகர்ணன்) இந்தியாவின் வாழ்த்துக்களை ஏற்றுக்கொண்டு, இந்திய மக்களிடை தமது

பரியைக் காட்டிக்கொண்டிருக்கிருர், இந்தியாவிலிருந்து அந்நாட்டிற்குள் பரவிய கலாசாஸ்திர ஞானத்தின் மூலம் இவ்விரு நாடுகளுக்குள் ஏற்பட்டுள்ள தொடர்பைப் பாராட்டி நம்முடன் உறவு கொண்டாடி யிருக்கிருர். இன்றும் ஜாவா நாட்டில் இந்தியச் சின்னங்களை நாம் காண்கிருேம். அங்கு மக்களின் பெயர்கள் ஹிந்துப் பெயர்களுடன் சம்பந்தப்பட்டுள்ளன. நம் தேசத்தின் ஆலயங்கள் இன்றைக்கும் அங்குக் காணப்பெறுகின்றன.

புத்தமதம் வேத மதத்தின் ஒரு பிரிவேதான். புத்தரை விஷ்ணு பகவானது அவதாரமெனவே நாம் கொண்டாடுகிருேம். அவர் அஹிம்சையையும் சத்தியத்தையும் விசேஷமாக வற்புறுத்தினுர். வேதமும் இவையிரண்டையும் வற்புறுத்துகின்றது. ஆனுல் வேதத்தில் கூறப்பட்டுள்ள யாகம் முதலான கர்மாக்களை மட்டும் புத்தர் ஏற்றுக்கொள்ளவில்லை. அதிகாரி பேதத்தை ஒப்புக்கொள்ளாத வைதீக மதந்தான் புத்த மதம். அந்த மதத்தை இதர நாடுகளில் பரவும்படி நாம் விட்டுவிட்டோம். மிகப் புராதனமான சீன மத நூல்களில் கௌடபாதரது காரிகை சீன பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதை நாம் காண்கிருேம், சாந்திநிகேதனத்தில் சீன அறிவாளிகளைக்கொண்டு அந்நாட்டுடன் கலைத் தொடர்பைப் புதுப்பித்துக் கொள்ள ரவீந்தரநாத் தாகூர் முயன்றிருக்கிருர். நமக்கும் சீன மக்களுக்குமுள்ள பொதுவான கலை அறிவைப்பற்றி அந்த நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்றனர்.

எகிப்தின் பண்டைய காலத்திற்கும் புராதன இந்தியாவுக்கும் இணைப்பு இருந்ததென ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளார்கள். ஸஹாரா பாலைவனத்துக்கு அடுத்துள்ள பல இடங்களுக்கு ராமரது பெயருடன் சம்பந்தப்படுத்திப் பெயர்கள் இடப்பட்டுள்ளன. ஸஹாரா பாலைவனமே வற்றிப்போன கடல் இருந்த இடமெனக் கூறப்படுகிறது. ஸாகரம் என்னும் சொல்லே ஸஹாரா என்று மருவுற்றிருத்தல் வேண்டும். இவ்வாறு இந்த இரு நாடுகளின் தொடர்புக்கு அங்குச் சில சின்னங்கள் காணப்படுகின்றன.

கிறிஸ்தவர்களால் பழைய வேதம் எனக் கூறப்படும் பைபிளில் காணப்படும் ஆதம் என்னும் சொல் ஆத்மாவையும், ஈவான் என்னும் சொல் ஜீவன் என்பதையும் குறிப்பிடுகின்றன. அதில்

கூறப்பட்டுள்ள ஆப்பிள் என்னும் சொல் பிப்பலம் என்னும் கனியைக் குறிப்பிடுகின்றது. இது ஆசையைக் காட்டுகிறது. ஆதம் என்பது தோஷங்கள் அற்ற பரமாத்தும ஸ்வரூபம்; ஈவான் அல்லது ஜீவன் பாபத்தில் சம்பந்தப்பட்டதாகும். இதுவே பிறப்பு இறப்பு இவைகளுக்குக் காரணம்.

"த்வா சுபர்ண—பிப்பலம்" என்னும் உபநிடத மந்திரம் இவ்விஷயத்தை அறிவுறுத்துகிறது. பழைய பைபிளை யூதர்களும், முஸ்லீம், அராபியர்களும், கிறிஸ்தவர்களும், ஒப்புக்கொள்ளுகிறார்கள். அதில் அடங்கியிருக்கும் கதைகளும், உபதேசங்களும் ஹிந்து சாஸ்திரங்களை ஆதாரமாகக் கொண்டுள்ளனவெனக் கூறலாம்.

ஆரியன், திராவிடன், ஸெமிட்டிக் என்றெல்லாம் வெவ்வேறு பிரிவுகளாகச் சமூகத்தைப் பிரித்துக் கூறியவர்கள் மேனாட்டு ஆராய்ச்சியாளர்களாவர். அவர்களில், முதன்மையாக இந்தியாவில் குடி ஏறிய மேல்நாட்டு கிறிஸ்துவ பாதிரிகளே இவ்வித பேதங்களைக் கற்பனை செய்தார்கள். பிளவுக்கான விதைகளை முதலில் விதைத்தவர்களும் கிறிஸ்துவ மிஷினரிகள் தான். அதைக்கொண்டு அவர்கள் நம் தேசத்தினர்மீது தங்களுக்கு ஆதிக்கத்தையும் உறுதிபடுத்திக்கொண்டனர். அரசியல் வாதிகள் அதைத் தங்களுக்கு அனுகூலமாகப் பயன் படுத்திக்கொண்டனர்.

எகிப்து முதல் ஜாவா வரையில் இந்தியா தேசத்துக்கு ஏற்பட்ட கலைத் தொடர்பைக்கொண்டு இப்பொழுது இந்நாடுகளுக்குள் உறவையும், ஒற்றுமையையும் உண்டு பண்ணிக்கொள்ளவேண்டும். இத்தகைய உண்மைகளை உணர்ந்து நம் நாட்டிலும் பல சமூகத்தினரிடையே சகோதரத் தன்மையையும், நல்லுணர்வையும் ஏற்படுத்த முயலவேண்டும். தெய்வ வழிபாடு, பாஷை முதலிய சிறு பேதங்களைக் காரணமாகக் கொண்டு இந்தியாவைப் பல பாகங்களாகப் பிரிக்க முயலக்கூடாது. தவறான சரித்திரங்களை படிப்பதன் மூலம் பொய்யான பிரிவினைகளை ஏற்படுத்தி அரசியல் நோக்கத்துடன் மக்கள் போராட்டத்தை நடத்துவார்களானல், நமது ஆசிய நாடே பிளவுபட்டுச் சிதறுண்டு போகும். மற்றொரு மூன்றாவது கட்சியினருக்கே அஃது இடம் தருவதாகும்.

ஒரு முஸ்லீம் நாட்டின் பிரதிநிதியான டாக்டர் சுகர்னோ இத்தேசத்திற்கும், தமது நாட்டிற்கும் பொதுவாகவுள்ள பழைய நாக

ரீகத்தைப்பற்றி ஆதரவுடன் கூறியிருப்பது குறிப்பிடத்தக்க தாகும். அதுபோல் மேற்கு ஆசிய நாடுகளுடனும் நமது கலைத் தொடர்பைத் திரும்பவும் கண்டு அவர்களுடன் சமரசத்தையும், சகோதரத் தன்மையையும் வளர்த்து, ஆசிய கண்டத்தின் பரிபூர்ண ஒற்றுமைக்கும், உலக சமாதானத்திற்கும் வழி தேட வேண்டும். இதுவே இத்துறையில் சிறந்த வழியென நான் கருதுகிறேன். இந்தத் துறையில் ஆராய்ச்சி நடத்தச் சர்க்காரும், தனிப்பட்டவர்களும் உதவிபுரியவேண்டும்.

சீனர், பாரசீகர், கிரேக்கர், ஆகிய எல்லா ஜாதியினரைப் பற்றியும் மநு குறிப்பிட்டிருக்கிறார். இவர்கள் யாவரும் க்ஷத்திரிய அம்சம் பெற்றவர்களென அவர் கூறியிருக்கிறார். நாம் அவர்களுடன் நட்புக்கொண்டாடலாம். இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு அரசியல் தூது கோஷ்டிகள் அனுப்புவதைவிட, கலை கோஷ்டிகளை அந்நாடுகளுக்கு அனுப்புவதால் ஒற்றுமையை நாம் நன்கு வளர்க்கலாம். அவர்களிடையே பரஸ்பர நல்லெண்ணத்தையும் ஏற்படுத்திக்கொள்ளலாம். பழைய காலத்தில் நம் முன்னோர்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்ததுபோல் நாமும் வாழ்ந்து கலையையும், சாஸ்திரங்களையும் காப்பாற்றுவோமாக.''

* * * * *

காஞ்சி ஸ்ரீ காமாக்ஷி அம்பிகைக்குச் செய்வித்த வெள்ளி ரதத் திருப்பணி.

காஞ்சி ஸ்ரீ காமாக்ஷியம்மன் ஆலயத்திற்குக் கும்பாபிஷேகம் செய்த பின் அந்த அம்பிகைக்கு ஓர் வெள்ளி ரதத்தையும் செய்துவைக்கவேண்டுமென்று ஸ்வாமிகள் திருவுள்ளம் கொண்டார்கள். இந்தப் பணியை நிறைவேற்றிவைக்கும் பொறுப்பை மடத்தின் சிஷ்யர்களில் ஒருவரான, சென்னை தர்ம ரக்ஷாமணி கே. பாலசுப்பிரமணிய ஐயரிடம் சுவாமிகள் ஒப்படைத்தார்கள். ஐயரவர்கள் தமக்கிருக்கும் பல அலுவல்களுக்கிடையே இந்தத் திருப்பணியைத் தொடக்கம் செய்தார்கள். திருப்பணிக்குச் சுமார் ரூபாய் எழுபத்தையாயிரம் வரை செலவாயிற்று. இதில் பாதித் தொகை மடத்திலிருந்து ரொக்கமாகவும், வெள்ளியாகவும் கொடுக்கப்பட்டது. மீதித் தொகையானது ஐயரவர்களது தீவிரமான உழைப்பினால் சேகரிக்கப்பட்டது. இரதத்தை நிறுத்துவதெற்கெனச் சுமார் பதினாயிர ரூபாய் செலவில் ஒரு மண்டபம் கட்டப்பட்டது. அந்தச் செலவில் ரூபாய் நான்காயிரத்தை காஞ்சீபுரம் ஜவுளி, மளிகை வியாபாரிகள் ஏற்றுக்கொண்டனர்.

1947 பிப்ரவரி 16௳ விய வருடம் மாசி மாதம் 4௳ ஞாயிற்றுக்கிழமை அந்த வெள்ளி ரதத்தை வெள்ளோட்டம் விடுவதற்கு நாள் குறிப்பிடப்பட்டிருந்தது. ஸ்வாமிகளும் அன்று காஞ்சிபுரத்திற்கு விஜயம் செய்தார்கள். அன்று காலையில் ஸ்ரீ அம்பிகையைச் சிறந்த முறையில் அலங்கரித்து, மிகுந்த வேலைப்பாடுகளுடன் கைதேர்ந்த சிற்பிகளால் வெகு அழகாக நிர்மாணிக்கப்பட்ட அந்த ரதத்தில் ஆரோகணிப்பித்து வழக்கமாக அம்பிகை பவனி வரும் ராஜ வீதியின் வழியே ஊர்வலம் நடைபெற்றது. ஸ்வாமிகளும் ஊர்வலத்துடன் முழுவதும் கால்நடையாகவே வந்தார்கள். உள்ளூர் வாசிகளும், சென்னையிலிருந்தும், மற்றும் வெளியூர்களிலிருந்தும் வந்தவர்களுமான பல்லாயிரககணக்கான மக்கள் அந்தக் கண்கொள்ளாக் காட்சியைக்கண்டு களித்தனர். அவர்கள் யாவருக்கும் வெள்ளி ரதத்தில் பவனிவரும் அம்பிகையையும், கால் நடையாக உடன்வரும் ஆசாரிய மூர்த்திகளையும் அன்று ஒருங்கே தரிசிக்கும் வாய்ப்பு கிடைத்தது. சுமார் நான்கு மணி நேரம் நடைபெற்ற இந்த ஊர்வலம் பகல் 12 மணிக்குக் கோயிலை அடைந்தது. இந்தத் திருப்பணியில் மிகுந்த சிரத்தையுடன் ஈடுபட்ட ஸ்ரீ பால சுப்பிரமணிய ஐயரவர்களுக்கு ஸ்வாமிகள் பொன்னாடை போர்த்தி அவருடைய பணியைப் புகழ்ந்து அவரை ஆசீர்வதித்தார்கள். அப்பொழுது சென்னையில் தங்கியிருந்த பூரி ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகளும் காஞ்சீபுரத்திற்கு விஜயம் செய்து அம்பிகையைத் தரிசித்துக்கொண்டு, நமது ஸ்வாமிகளையும் சந்தித்து, தர்ம பிரசார சம்பந்தமாய் ஸ்வாமிகளிடம் வெகு நேரம் உரையாடினார்கள்.

வசந்த கிருஷ்ணபுரத்தில் சாதுர்மாஸம்.

அவ்வருட சிவராத்திரி பூஜையை ஸ்வாமிகள் காஞ்சீபுரத்திலேயே நடத்தினார்கள். பின்னர் உத்திர மேரூர், மதுராந்தகம், திருக்கழுக் குன்றம் முதலான க்ஷேத்திரங்களுக்கு அவர்கள் விஜயம் செய்துவிட்டு, சங்கர ஜயந்தி உத்ஸவத்தை 1947-வது வருடம் ஏப்ரல் மாதம் 26௳ வட ஆர்க்காடு ஜில்லா எசையனூரில் கொண்டாடினார்கள். அவ்வருட வியாச பூஜை திருக்கோயிலூருக்கு அருகிலுள்ள வசந்த கிருஷ்ணபுரம் என்னும் சிற்றூரில் ஜுலை மாதம் 3௳ நடைபெற்றது. சாதுர்மாத சங்கல்பத்திற்காக அவ்விடம் ஸ்வாமிகள் இரண்டு மாதங்கள் தங்கியிருந்தார்கள். ஸ்வாமிகள் அங்குத் தங்கியிருந்தபொழுது திருக்கோவி

ஊர் வக்கீல் V. G. இராமச்சந்திர ஐயர் முதலான பிரமுகர்கள் மடத்தின் பணிகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

சுதந்திர தினச் செய்தி.

1947-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி நமது நாடு சுதந்திரமடைந்ததை ஒட்டி ஸ்வாமிகள் 1947 ஆகஸ்ட்டு மாதம் 15-ந் தேதியில் தேச மக்களுக்கு விடுத்த செய்தி கீழே பிரசுரிக்கப்பட்டுள்ளது.

"நமது பாரத நாடு விடுதலை அடைந்திருக்கும் இத்தருணத்தில் இந்தப்புராதன நாட்டு மக்கள் யாவரும் ஒரே மனதுடன் ஸ்ரீ பகவானை மனமுருகித் துதிக்கவேண்டும். நமக்கு மேன்மேலும் மனோ பலத்தையும் ஆத்மீகத்துறையில் இறங்கச் சக்தியையும் கொடுத்தருளுமாறு வேண்டுவோம். அவரது அருளால்தான் நமக்குக் கிடைத்திருக்கும் இந்தச் சுதந்தரத்தை நாம் காப்பாற்றிக்கொள்ளவும், உலகின் கண்ணுள்ள எல்லா ஜீவன்களும் ஆனந்த வாழ்க்கையைப் பெற உதவி செய்யவும் முடியும்.

"பாக்யவசமாக நமது நாட்டின் கொடியின் நடுவில் தர்ம ஸ்வரூபியான பகவானது சக்கரம் அமைக்கப்பெற்றிருப்பது போற்றத்தக்கதாகும். அதனுடன் சரித்திரப் பிரசித்திபெற்ற தேவானும் பிரியன் என்னும் அசோக சக்கரவர்த்தியால் வகுக்கப்பட்ட நீதிகளோடு அந்தச் சக்கரம் நம்மைச் சம்பந்தப்படுத்துகிறது. பகவத் கீதையில் பகவானால் உபதேசிக்கப்பட்ட ஆத்மீகத் துறையில் அது நம்மை ஈடுபடச்செய்கிறது. கீதை 3-வது அத்தியாயம் 16-வது சுலோகத்தில், 'ஏவம் ப்ரவர்த்திதம் சக்ரம்' என்று பகவான் கூறியிருப்பதால் தர்மம் சக்ரத்தின் உருவத்திலேயே பிரகாசிப்பது விளக்கமாகின்றது. மேலும் அந்த அத்தியாயம் 14, 15 சுலோகங்களில், உணவிலிருந்து உடல் உண்டாகிறது என்றும், மழையிலிருந்து உணவு விளைகிறது என்றும், யாகங்கள் செய்வதால் மழை பொழிகிறதென்றும், கர்மத்தினால் யாகங்கள் செய்யப்படுகின்றனவென்றும், கர்மமானது வேதங்களிலிருந்து பிரதிபாதிக்கப்படுவதென்றும், வேதமானது அக்ஷர ஸ்வரூபமான பிருமத்தினின்று வெளிவருவதென்றும், இக்காரணங்களைக் கொண்டு பிரும்மம் வேள்விகளில் அடங்கியுள்ளதாக இந்த தர்ம சக்கரமானது நமக்கு விளக்கம் கூறுகின்றது. அசோக சக்கரவர்த்தியின் உயரிய நினைப்புடன் தொடங்கும் இந்த சுதந்திரமானது கடவுள் அருளால் அறம், பொருள், இன்பம், வீடு, இத்தகைய அரிய பயன்களை அளிக்கட்டும்

"வெகு காலமாக நாடு சுதந்திரத்திற்காகப் பாடுபட்டுள்ளது. கடவுள் அருளாலும், மகான்களின் ஆசியினாலும், மக்களின் ஒப்பற்ற தியாகத்தினாலும் கிடைத்த இந்தச் சுதந்திரத்தினால் நமது நாடு செழித்தோங்கி, பஞ்சம், விலகி, தேசமக்கள் சமூகச் சச்சரவுகள் எதுவுமின்றி, ஒற்றுமையுடன் அன்புகொண்டு வாழ அருள் பொழியவேண்டுமென எங்கும் நிறைந்த கடவுளைப் பிரார்த்திப்போமாக.

"நம் நாடு சுதந்திரம் அடைந்ததை ஒட்டி நாமும் சுதந்திரம் அடைய முற்பட வேண்டும், நம்மை நாம் முற்றிலும் அறிந்து கொண்டால் தான் நாம் சுதந்திரம் அடைந்தவர்களாவோம். நமது மனமோ நம் இந்திரியங்களுக்கு வசப்படுவதில்லை. ஆசை யையும் கோபத்தையும் நம்மால் அடக்க முடியவில்லை. இவை இரண்டுமே நம்மை எப்பொழுதும் துன்புறுத்தி வருகின்றன, எந்தப்பொருளை எவ்வளவு அடைந்தபோதிலும், போதும் என்னும் மன நிம்மதி நமக்கு ஏற்படுவதில்லை. உலகத்துயரம் நம்மை விட்ட பாடில்லை. துயரத்தைக் கண்டு மனமும் கலங்கத்தான் செய்கிறது. இது நின்றும் கரை ஏற வழியென்ன ?

"நமது மனம் நமக்கு வசமாகவேண்டும். எவ்வளவோ கால மாகத் தீவிரமாக வேலை செய்துகொண்டிருந்த இந்த மனதைத் தன்னுள் அடக்கச் சிறிது சிறிதாகவே முயற்சிக்கவேண்டும். மனம் அடங்கிவிட்டால் நமக்கு வேறொன்றும் தேவையில்லை. அது தான் நாம் பெற வேண்டிய பூர்ண சுதந்திரமாகும்.

"ஒவ்வொரு நாளும் சிறிது நேரமாவது மனதைச் சாந்தமாக வைத்துக்கொண்டு, வேறு நினைவுகளை மனதில் செலுத்தாமல் கடவுளது தியானத்தில் அமரவேண்டும். வேறு நினைவுகளில் லாமல் தியானம் செய்வதால் நாளடைவில் புத்தியானது தெளி வடையும். ஆசையையும், கோபத்தையும் அடக்குவதற்கு இஃது ஓர் சாதனமாகும். இவ்வித சாதனையைப் படிப்படியாக மேற் கொண்டவனுக்குச் சீக்கிரமாக ஆத்ம ஞானம் உண்டாகும். குறை வில்லாத ஞானத்தைப் பெறுபவன்தான் உண்மையான சுதந்திரனா கின்றான்.

"பிற ஸ்திரீகளைத் தாயார்களாக மதிக்கவேண்டும். பிற உயி ரைத் தன்னுயிர் போல் மதிக்க வேண்டும். உயிர் போவதாயிருந்தா லும் உண்மையையே பேசவேண்டும். சமூகச்சச் சரவுகள் செய்வதை

அறவே ஒழிக்கவேண்டும். ஒவ்வொருவனும் தனது அறிவு வளர்ச்சிக்கும், ஆத்ம முன்னேற்றத்திற்கும் பாடுபட வேண்டும். எல்லோரிடமும் சம அன்பு கொண்டு ஒழுக வேண்டும். மக்களெல்லாம் சுகமாக வாழவேண்டுமென ஒவ்வொருவனும் நினைக்க வேண்டும்.''

* * * * * *

வசந்தகிருஷ்ணபுரத்தில் சாதுர்மாச சங்கல்பம் முடிவடைந்த பிறகு அதற்கடுத்த ஒரு வருடம் தென்னார்க்காடு வாசிகளின் பிரார்த்தனைக்கு இணங்கி ஸ்வாமிகள் அந்த ஜில்லாவிலேயே விஜயம் செய்திருந்தார்கள். 1948 பிப்ரவரி 9உ நிகழ்ந்த மகோதய புண்ணிய காலத்தன்று திருப்பாதிரிப்புலியூருக்குக் கிழக்கில் தென்பெண்ணையாறு கடலில் சங்கமம் ஆகும் இடத்தில் ஸ்வாமிகள் சமுத்திர ஸ்நானம் செய்தார்கள். அவ்வருட சங்கர ஜயந்தி, வியாச பூஜை, நவராத்திரி இவ்விழாக்களெல்லாம் விழுப்புரத்திற்கடுத்த சேந்தனூர் ரயில் நிலயத்திலிருந்து கிழக்கே 3 மைல் தூரத்திலுள்ள வேங்கடாத்திரி அகரம் என்னும் ஊரில் நடைபெற்றது. ஸ்வாமிகள் அந்த ஊரில் விஜயம் செய்திருந்தபோது அவ்விடமிருந்து 3 மைல்கள் தூரமுள்ள வடவாம்பலத்தில் காமகோடி பீடத்தின் 58-வது ஆசார்யர்களான ஆத்மபோதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் அதிஷ்டானத்திற்கு அடிக்கடி சென்று அவ்விடம் வெகு நேரம் தியானத்தில் அமர்ந்திருப்பார்கள். ஏகாந்தமான அந்த இடத்தில் பல மணி நேரம் அவர்கள் தங்கிப் பண்டிதர்களுடன் வேதாந்த தத்துவ விசாரத்தையும் செய்துகொண்டிருப்பார்கள். வெளி ஜில்லாக்களிலிருந்தும் சென்னையிலிருந்தும் பக்தர்கள் பலர் ஒவ்வொரு நாளும் அந்த ஊருக்கு வந்து ஸ்வாமிகளைத் தரிசித்தவண்ணமாக இருந்தனர். அக்காலத்தில் சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜாக இருந்த ஸ்ரீ என். சந்திரசேகர ஐயர் பல நண்பர்களுடன் ஸ்வாமிகளை ஒருநாள் தரிசிக்க வந்தார். அந்த நண்பர்கள் பலர் ஆங்கிலம் படித்துப் பெரிய சர்க்கார் உத்தியோகத்திலும், வக்கீல் முதலிய பிற தொழில்களிலும் ஈடுபட்டுள்ளவர்கள். அவர்களது பக்குவத்திற்குகந்தவாறு அவர்களுக்கு உபதேச மொழிகளை அருளவேண்டுமென்று ஐயரவர்கள் ஸ்வாமிகளை வேண்டிக்கொள்ள, உலக சரித்திர சம்பந்தமாகவும், விஞ்ஞானத்தைக்கொண்டும் பரம்பொருளின் தத்துவத்தைப்பற்றி மிகவும் தெளிவாக ஸ்வாமிகள் அவர்களுக்கு உபதேசம் அருளினார்கள்.

ஆத்மபோதேந்திரர் அதிஷ்டான தரிசனம்.

மகாத்மா காந்தி அவர்களது மறைவு.

1948 ஜனவரி 30உ வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு டில்லியில் பிரார்த்தனைக் கூட்டத்திற்குச் செல்லுகையில் மகாத்மா காந்தி துஷ்டன் ஒருவனால் சுடப்பட்டு காலகதி யடைந்துவிட்டார். தியாகம், தபஸ் முதலான ஆத்ம குணங்களுடன் விளங்கி, பாரத நாட்டில் இருக்கும் எல்லா மக்களிடமும் பேதமற்ற அன்பு வைத்து, தம் உள்ளத்திற்குத் தோன்றிய பலவழிகளில் உறுதியுடன் மக்களது நலனுக்கு அவர் பாடுபட்டு வந்தார். அவர் ஒரு மகாபுருஷர். எவரும் எதிர்பாராத வகையில் அவர் காலகதியடைந்ததானது உலகத்தார் அனைவரையும் துக்கத்தில் ஆழ்த்திற்று. காந்திஜியின் பிரிவினால் நாட்டுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை விளக்கி ஸ்வாமிகள் பத்திரிகைகளுக்கு ஒரு செய்தி அனுப்பியிருந்தார்கள். அதில் தாம் சென்ற 1927-ஆவது ஆண்டில் பாலக்காட்டில் மகாத்மாவை சந்தித்ததைப்பற்றியும், ராமநாம மகிமையில் அவருக்கு இருந்த பக்தியைப்பற்றியும் குறிப்பிட்டிருந்தார்கள். அவரது ஆத்மா சாந்தியடையவேண்டுமென்று மக்கள் யாவரும் கடவுளைப் பிரார்த்திக்கவேண்டுமென அச்செய்தியில் ஸ்ரீ ஸ்வாமிகள் குறிப்பிட்டிருந்தார்கள்.

குற்றாலத்தில் அகில முத்ராதிகாரிகளின் சம்மேளனம்.

1948-ம் வருடத்தின் பிற்பகுதியில் ஸ்வாமிகள் சில மாதங்கள் தஞ்சை ஜில்லா குற்றாலத்தில் விஜயம் செய்திருந்தார்கள். அப்பொழுது ஸ்வாமிகள் ஒவ்வொரு நாளும் இரவு 1 மணிக்குக் கிளம்பி மாயவரம் சென்று துலாஸ்நானம் செய்து கொண்டு திரும்பிப் பூஜைக்குக் குற்றாலம் வருவது வழக்கம். அப்பொழுது அங்குவந்த ஸர். ஸி. பி. இராமஸ்வாமி ஐயர் ஸ்வாமிகளைத் தரிசித்து, உலக மக்களிடையே கடவுள் பக்தியைப் பரப்பும் விஷயம்பற்றியும் ஸமஸ்கிருத பாஷையைக் காப்பாற்றும் விஷயம்பற்றியும் பல மணி நேரம் அவர்களுடன் உரையாடி அவர்களின் அரிய ஆலோசனைகளையும் கேட்டறிந்தார்.

அநேகமாக ஒவ்வொரு வருடமும் முத்திராதிகாரிகளை நேரில் வரவழைத்து அதற்கு முன் வருடத்தில் அவர்களால் நடத்தப்பெற்ற கைங்கரியங்களைப்பற்றியும், அடுத்த வருடம் நடைபெற வேண்டிய வேலைகளைப்பற்றியும் ஸ்வாமிகள் பரிசீலனை செய்வது வழக்கம். அதன்படி, குற்றாலத்தில் 1948 நவம்பர் மாதம் 6, 7, 8,

9டகளில் ஒரு சம்மேளனம் கூட்டப்பட்டது. பகுதிபகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு நாளும் சில குறிப்பிட்ட முத்ராதிகாரிகளை அங்கு வரும்படி ஸ்வாமிகள் கட்டளையிட்டிருந்தார்கள். அவ்விதம் நாளொன்றுக்குச் சுமார் 300 முத்ராதிகாரிகள் அங்குக் கூடி ஸ்வாமிகளின் உபதேச மொழிகளைக் கேட்டனர். ஒவ்வொரு முத்ராதிகாரியையும் தனிமையில் அழைத்து முன் வருடத்தில் அவர் இலாகாவில் நடைபெற்ற கைங்கரியத்தைப்பற்றி ஸ்வாமிகள் கேட்டறிந்தார்கள்.

மாயவரத்தில் ஸ்வாமிகள் செய்த உபந்யாசம்.

1948 நவம்பர் மாதத்தில் ஸ்வாமிகள் துலா காவேரி ஸ்நானத்திற்காக மாயவரத்திற்கு விஜயம் செய்தபொழுது ஸர். டி. முத்துஸ்வாமி அய்யரின் பேரன், ஸ்ரீ கோபால ஸ்வாமி சாஸ்திரிகள் ஸ்வாமிகளைத் தமது இல்லத்திற்கு வரவேற்றுப் பாதபூஜை பிக்ஷை முதலானவற்றை நடத்திவைத்தார். ஸ்வாமிகளைத் தரிசிக்கவும், அவர்களின் உபதேசமொழிகளை கேட்கவும் ஆயிரக்கணக்கான ஸ்திரீ புருஷர்கள் அவ்விடம் கூடியிருந்தனர். ஸ்வாமிகள் அப்பொழுது ஸம்ஸ்கிருதம் கற்கவேண்டி அவசியம் பற்றி சிஷ்யர்களுக்கு உபதேசிக்கையில் பின்வருமாறு கூறினர்கள்.

"உலகம் நன்மை பெற வேதங்கள் வளரவேண்டும். ஒவ்வொரு பிராமணனும் சிறிதாவது வேதம் கற்கவேண்டும். வேதக்கலையைக் கற்பதற்கு ஸம்ஸ்கிருத பாஷை இன்றியமையாததாகும். பள்ளிக்கூடங்களில் அந்தப் பாஷைக்கு ஆதரவு குறைந்து வருகிறது. அவ்விதம் குறைந்து வருவதற்கு மக்களது சிரத்தைக் குறைவே காரணம். ஒவ்வொரு ஹிந்துச் சிறுவனும் சிறுமியும் குறைந்தது ஆறு மாதங்களாவது இந்தப் பாஷையைக் கற்கவேண்டும். ராமோதந்தம் போன்ற எளிய புத்தகங்களைக் கற்பதினுல் அந்தப் பாஷையிலுள்ள உயர்ந்த நூல்களின் பொருளைச் சிரமமின்றி அறியலாம். இதற்காக ஒவ்வொரு ஊரிலும் ஒரு சிறிய பள்ளிக்கூடம் அமைக்கவேண்டும். அந்த அந்த ஊரிலுள்ள மக்கள் இதை நடத்தி வரவேண்டும். இதற்கென ஒவ்வொரு ஊரிலும் ஓர் ஆஸ்திக சபை அமைத்துக் கொள்ளலாம்."

அன்று ஸ்வாமிகளைத் தரிசிக்க அங்குவந்த சாஸ்திர ரத்னுகரம் தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள் ஸ்வாமிகளுக்கு காணிக்

கையாக ரூ. 1,008 சமர்ப்பணம் செய்தார். அத்தொகை ஸம்ஸ்கிருத பாஷையின் அபிவிருத்தியின் பொருட்டு செலவிடப்படுமென ஸ்வாமிகள் கூறினார்கள். ஸ்திரீகளுக்கு உபதேசம் செய்கையில் ஸ்வாமிகள் குடும்பப் பெண்களுக்கு நாட்டியம் கற்றுக்கொடுத்து வயது வந்த அவர்களைப் பல புருஷர்கள் முன்னிலையில் ஆடவைப்பது தவறு என்றும், ஆகையால் குழந்தைகளுக்கு நாட்டியம் பயில்விக்க வேண்டாமென்றும் எச்சரிக்கை செய்தார்கள்.

கொச்சி மஹாராஜாவுக்குத்தர்சனகலாநிதி என்னும் பட்டம் அளித்தது. எர்ணுகுளத்தில் நடைபெற்ற விசேஷ தர்பார்.

இந்தியாவின் சுதேச சமஸ்தான மன்னர்களுள் மிகப் பெரிய பண்டிதராக விளங்குபவர் கொச்சி மன்னராகிய ஸ்ரீ ராமவர்ம மகாராஜா ஆவர். ஸ்வாமிகள் சென்ற 1928-ஆவது ஆண்டில் கொச்சி சமஸ்தானத்திற்கு விஜயம் செய்திருந்தபொழுதே ராஜ குமாரராயிருந்த மன்னர் ஸ்வாமிகளை நேரில் தரிசித்துள்ளார். அக்காலத்திலேயே அன்னாரின் வித்வத் தன்மைகளை யெல்லாம் ஸ்வாமிகள் மிகவும் பாராட்டியுள்ளார்கள். இந்த மன்னர் 1948-ஆவது ஆண்டில் விநாயக சதுர்த்தியன்று சிம்மாஸனம் ஏறி, மகாராஜா பதவியை ஏற்றுக்கொண்டார். இவரது கலைத்திறனைப் பாராட்டி ஸ்வாமிகள் இவருக்குத் தர்சன கலாநிதி என்னும் உயர்ந்ததொரு பட்டத்தை அன்று அளித்தார்கள். அந்தப்பட்டத்தையும், அதற்கான சின்னங்களையும் வழங்குவதற்கென 1948-வது ஆண்டு டிசம்பர் மாதம் 4உ மாலை 3 மணிக்கு எர்ணுகுளத்தில் அரசாங்க தர்பார் ஹாலில், ஒரு விசேஷ தர்பார் கூட்டப்பட்டது. சர்க்கார் நியதிப்படி 2-45 மணிக்கே பிரதம மந்திரி ஸ்ரீ இக்கண்ட வாரியர், சட்ட மந்திரி ஸ்ரீ பனம்பள்ளி கோபால மேனன், ரெவின்யூ மந்திரி ஸ்ரீ கே. ஐயப்பன், கல்வி மந்திரி ஸ்ரீ ஸி. ஏ. ஊசேப், இவர்கள் தர்பார் ஹாலுக்கு வந்துசேர்ந்தனர். மற்றும் சட்டசபைத் தலைவர் ஸ்ரீ எல். எம். பைலி, ஹைக்கோர்ட்டு பிரதம நீதிபதி ஸ்ரீ ஸி. வி. அனந்தகிருஷ்ணய்யர் இவர்களும் மற்ற நீதிபதிகளும், ராஜ குடும்பத்தினரும், மகாராஜாவின் சர்வாதிகாரி, சேனதிபதி, பல்வேறு இலாக்காக்களின் அதிகாரிகள், சர்க்கார் பிரதம காரியதரிசி, மற்ற காரியதரிசிகள், பிரபல பத்திரிகைகளின் ஆசிரியர்கள், நிருபர்கள், செய்தி ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள்,

சட்டசபை அங்கத்தினர்கள், பொதுமக்களில் பிரபலஸ்தர்கள் இவர்களடங்கிய சுமார் 500 பேர்கள் விசேஷ அழைப்பின் பேரில் தர்பார் ஹாலில் முன்னதாகவே கூடியிருந்தனர்.

இவர்களைத் தவிர, பேராசிரியர்கள் பலரும், சென்னைச் சர்வ கலாசாலையின் ஸம்ஸ்கிருத இலாகாவின் தலைவர் டக்டர் ஸி. குஞ்சன் ராஜா. திருவனந்தபுரம் மகாகவி உல்லூர் ஸ்ரீ எஸ். பரமேச்வரய்யர். ஸ்ரீமதி அம்பாடி மீனாக்ஷி அம்மாள், சாகித்திய குசலன் ஸ்ரீ. எ. டி. ஹரி சர்மா இவர்களும் சமஸ்தான ஆஸ்தான வித்வான்களும் அங்கு விஜயம் செய்திருந்தனர். இளைய ராஜா பகல் 2-55 மணிக்கு விஜயம் செய்தார். அவரைப் பிரதம காரியதரிசி அரசாங்க மரியாதைகளுடன் வரவேற்றார். மகாராஜா திருப்பணத்துறை அரண்மனையிலிருந்து பகல் 2-40-க்கு புறப்பட்டுச் சரியாக 3 மணிக்குத் தர்பார் ஹாலுக்கு வந்து சேர்ந்தார். மகாராஜாவை இளைய ராஜா, பிரதம நீதிபதி, பிரதம மந்திரி இவர்கள் தக்க முறையில் வரவேற்றார்கள். சமஸ்தான ராணுவக் காலாட்படை வெளி மைதானத்தில் அணிவகுப்புடன் நின்று மகாராஜாவுக்கு மரியாதை செலுத்திற்று. அப்பொழுது ராணுவ பாண்டு வாத்தியம் முழங்கிற்று.

ஸ்வாமிகளின் பிரதிநிதியாக அங்கு விஜயம் செய்திருந்த சென்னை ஹைக்கோர்ட்டு நீதிபதி ஸ்ரீ எஸ். பஞ்சாபகேச சாஸ்திரிகள், மகாமகோபாத்யாய ஸ்ரீ என். எஸ். அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள், சென்னை மாகாண மாஜி பிரதம இஞ்சினீயர் ஸ்ரீ எம். கே. ரங்கநாதைய்யர், சென்னை அட்வகேட் ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய ஐயர் ஆகியோர் தர்பார் ஹாலின் வாயிலில் நின்று மகாராஜாவை வரவேற்று அவரை மேடைக்கு அழைத்துச் சென்றனர். ஹாலுக்குள் மகாராஜா பிரவேசித்தபொழுது அங்குக் கூடியிருந்த யாவரும் அவருக்கு மரியாதை செலுத்தும் வண்ணம் தங்கள் தங்கள் ஆஸனங்களிலிருந்து எழுந்து நின்றனர். மகாராஜா தமது சிம்மாஸனத்தில் அமர்ந்தவுடன் மற்றவர்களும் அவரவர்களுக்குரிய ஸ்தானங்களில் அமர்ந்தனர். மகாராஜாவின் வலப் புறத்தில் நமது ஜகத்குரு ஸ்வாமிகளின் பிரதிநிதிகளும், இடப் புறத்தில் இளைய ராஜாவும் பிரதம மந்திரியும், மற்ற மந்திரிகளும் அமர்ந்திருந்தனர்.

சங்கீத கலாநிதி செம்பை ஸ்ரீ வைத்தியநாத பாகவதர் மங்கள கீதத்துடன் கடவுள் வாழ்த்துப்பாடத் தர்பார் துவங்கிற்று.

நம் ஸ்வாமிகள் தர்சனகலாநிதி என்னும் பட்டத்தை மகாராஜாவுக்கு அளித்து அனுப்பியிருந்த ஸ்ரீமுகத்தை மகாமகோபாத்யாய ஸ்ரீ அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள் படித்தார். வடமொழியில் எழுதப்பட்ட அந்த ஸ்ரீமுகத்தின் ஒரு பகுதி பின் வருமாறு :—

"எல்லா நற்குணங்களுக்கும் ரத்தினம்போல் விளங்கி, தர்மங்களிலும், ஆசாரங்களிலும் ஈடுபட்டு எப்பொழுதும் பரமசிவனது திருவடித் தாமரைகளை வணங்கி லக்ஷ்மி கடாக்ஷத்துடன் விளங்கும் கொச்சி ராஜ்ய மன்னர் ஸ்ரீ ராமவர்மா அவர்களுக்கு ஸர்வாபீஷ்டங்களும் சித்திக்குமாறு நாராயண ஸ்மரணம் செய்யப் படுகிறது.

நியாயம், வைசேஷிகம் முதலிய தர்சன சாஸ்திரங்களில் பரிபூர்ண ஞானத்தைப் பெற்றுள்ள நீங்கள் அவற்றை மேன்மேலும் பிரசாரம் செய்து பரப்புவதில் கொண்டுள்ள விசேஷ முயற்சியையும், சாஸ்திர கலாசாலைகளை நடத்திவருவதாலும், அவ்வப்போது வித்வத் பரிஷத்துக்களை கூட்டுவதாலும், பண்டித சிரேஷ்டர்களை ஆதரிப்பதாலும், ரிஷிகளால் வகுக்கப்பட்ட சாஸ்திரங்களைக் காப்பாற்றுவதில் நீங்கள் கொண்டுள்ள ஆர்வத்தையும் பாராட்டுகிறோம், வழிவழியாக வந்துள்ள இந்தத் தன்மையுடன் சாஸ்திரங்களில் நல்ல தேர்ச்சி பெற்றுப் பண்டிதர்கள் மெச்சத்தக்கவாறு அவைகளுக்கு விளக்கம் கூறுவதில் நல்ல திறமை வாய்ந்த தங்களுக்கு ஸ்ரீ சந்திரமௌளீச்வரர் கிருபையால் மேன்மேலும் நன்மைகள் உண்டாகவேண்டுமென ஆசீர்வதித்து, தர்சனகலாநிதி என்னும் பட்டத்தைத் தங்களுக்கு அளிக்கின்றோம்."

இந்த ஸ்ரீமுகத்தை ஜகத்குரு அவர்களின் சார்பாக நீதிபதி பஞ்சாபகேச சாஸ்திரிகள் மகாராஜாவிடம் அளித்தார். மகாமகோபாத்யாய ஸ்ரீ அனந்தகிருஷ்ண சாஸ்த்திரிகள் ஸ்வாமிகள் அனுக்கிரத்தனுப்பியிருந்த விபூதி, குங்குமம், அக்ஷதை இவைகளை மகாராஜாவுக்கு அளித்து, விலை உயர்ந்த பொன்னுடை ஒன்றை மகாராஜாவுக்கு போர்த்தினர். ஸ்ரீ ஆதி சங்கரரின் உருவம் அமைந்ததும், நவரத்தினங்களால் இழைக்கப்பட்டதுமான மோதிரம் ஒன்றும், தர்சனகலாநிதி என்னும் பெயர் பொறிக்கப் பட்ட மற்றொரு தங்கமோதிரமும் ஜகத்குருவின் சார்பாக மகாராஜாவுக்கு வழங்கப்பட்டன. ஸ்ரீ. எஸ். பஞ்சாபகேச சாஸ்திரிகளும், ஸ்ரீ.கே. பாலசுப்பிரமணிய ஐயரும் மகாராஜாவின் நற்குணங்

களைப்பற்றியும், கலைத்திறனைப்பற்றியும், சமஸ்கிருத மொழிக்கு அவர் காட்டி வரும் ஆதரவைப்பற்றியும் பாராட்டிப் பேசினார்கள். டாக்டர் ஸ்ரீ குஞ்சன் ராஜா மகாராஜாவின் பேரில் தொகுத்த சமஸ்கிருத சுலோகங்களை அப்பொழுது படித்துக் கொடுத்தார்.

ஸ்வாமிகள் தமக்களித்த இந்தக் கௌரவத்திற்கு மகாராஜா நன்றி செலுத்தும் வகையில் கீழ்க்கண்டவாறு ஓர் சொற்பொழிவாற்றினார்.

"மிகவும் மகிமை வாய்ந்த ஸ்ரீமத் ஆசார்ய ஸ்வாமிகளின் அருளுக்குப் பல வருடங்களாகவே பாத்திரமாகவுள்ள நான் இந்த விசேஷ அனுக்கிரத்தினால் என்னை மேலும் புனிதமடைந்தவனாகக் கருதுகிறேன். சாஸ்திரங்களில் தேர்ச்சிபெற்ற பலசமஸ்தான பண்டிதர்களும் என்னைப் போலவே ஸ்வாமிகளால் அனுக்கிரக்கிப் பட்டிருப்பதை அறிந்து நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். என் சம்பந்தப்பட்ட வரை இங்குச் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். எவ்வளவு, ஆலோசனை செய்து பார்த்தும் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளால் எனக்கு அளிக்கப்பட்ட இந்தப் பெருமைக்குரிய தகுதி எதுவும் என்னிடமிருப்பதாக நான் கருதவில்லை. எனக்கு அளித்த இந்தக் கௌரவத்திற்காக எனது நன்றியைத் தெரிவிக்கப் போதிய சொற்கள் எதுவும் அகப்படவில்லையே யென எனது மனம் சஞ்சலமடைகிறது. என்றால் இதற்குமேல் எதுவும் கூறமுடியவில்லை.

மகான்கள் எல்லாத் தத்துவங்களையும் அறிந்தவர்கள். மனஸில் கருணை நிறைந்தவர்கள். தங்களிடமிருந்துவரும் உத்தம குணங்களின் நிறைவை அவர்களின் அன்பிற்குப் பாத்திரமான மற்றவர்களிடமும் காண்பது அவர்களின் இயற்கை. இஃது அவர்களின் சம திருஷ்டியைக் காட்டுகிறது. ஆனால் நான் இவ்வாறு நினைப்பது எனது மனஸில் தோன்றும் பிரமையாகவிருக்கலாம். ஏனென்றால், உத்தம குருவின் வாக்கானது உலகிலுள்ள பாமர மக்களின் வார்த்தைகளைப்போல் புலப்படுகிற பொருளை மறுபடியும் சொல்லிக்கொண்டிராது. ஆனால் பூர்வ காலத்தில் ரிஷிகளது முகத்திலின்றும் வெளிவந்த வாக்குக்களைப் போலவே நமது குருநாதருடைய சொற்களோடு அவற்றின் பொருளும் தொடர்ந்தே வந்தடைகிறதென்பது யாவரும் அறிந்த விஷயம். ஆகையால்,

ஸ்ரீமது ஆசார்ய மூர்த்திகளின் ஆக்ஞா பத்திரத்தில் எது கட்டளையாகச் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த வாக்கானது வருங்காலத்தில் அப்படியே நடக்கும் என்று நிச்சயமாகச் சொல்லுகிறேன்.

ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாதர்களைப் போலவே உலக மக்களை உய்விப்பதையே விரதமாகப் பூண்டுள்ள ஸ்ரீ ஜகத்குரு ஆசார்ய ஸ்வாமிகளின் கருணை வெள்ளத்தையே சரணமடைகிறேன். புராதன காலங்களில் சக்கரவர்த்திகள்கூட தங்களது நாடுகளுக்கு ஏற்பட்ட துயர்களைத் தீர்ப்பதற்குத் தவத்தையே செல்வமாகக் கொண்ட மகான்களது மலரடிகளை அடைக்கலமாக அடைந்தனர். அங்க தேச மன்னரான ரோமபாதர் ரிஷ்யசிருங்க மகரிஷியை தமது ராஜ்யத்திற்கு அழைத்துவந்து வெகு காலமாக அந்த ராஜ்யத்தில் மழையின்மையினால் ஏற்பட்ட துயரத்தை அவர் அருளால் நீக்கி வைத்தார். புத்திரப்பேறில்லாமல் வருந்திய திலீப சக்கரவர்த்தி முதலானவர்கள் வசிஷ்டர் முதலிய மகரிஷிகளது அருளால் வம்ச விருத்தியைப் பெற்று, சோகக் கடலிலிருந்து கரை ஏறினார்கள். இவ்விதமாகப் பலர் இத்தகைய தபஸ்விகளின் அருளினால் தம் கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளார்கள். இவைகளைப் பாரத நாட்டின் புராதன புராணங்களிலிருந்து கேட்டறிந்திருக்கிறோம்.

இப்பொழுது நவீன விஞ்ஞானக் கலைகளில் தேர்ச்சி பெற்ற நூற்றுக்கணக்கான நிபுணர்கள் ராஜ்யத்தில் ஏற்பட்டுள்ள கஷ்டங்களைப் போக்குவதற்குப் பல உபாயங்களைக் கூறிவருகின்றார்கள். அவைகளால் கூட நிலையுள்ள பயனெதுவும் கிடைக்கவில்லை. நாகரீகத்தின் முன்னேற்றத்தினாலும், விஞ்ஞானத்தின் பெருக்கினாலும் மனிதன் அனுபவிக்கக்கூடிய சுகசாதனங்கள் உலகில் ஒவ்வொரு வினாடியும் கணக்கற்றுப் பெருகிக்கொண்டே வருகின்றன. மேலும் பணப் பெருக்கத்தினால் செல்வங்கள் எங்கும் பரவிவருகின்றன. இவ்விதமிருந்தும் மக்கள் சாதாரண நிலையில் அனுபவிக்கும் கஷ்டங்களைவிட இன்னும் மிகக் கொடுமையான துயரத்தில்தான் உழன்று வருகின்றார்கள். நமது தேசம் முழுவதும் மக்கள் இவ்விதம் நிம்மதியற்று இருப்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். இந்தத் துயரைத் தீர்ப்பதற்கு எவ்வித பரிகாரத்தையும் இதுவரை காண முடியவில்லை, நாட்டில் விபரீதமான சச்சரவுகள் நாளுக்கு நாள் அதிகமாகி வருகின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளின் ஆக்ஞையைக் கொண்டு வந்துள்ள சிறப்பு வாய்ந்த பிரதிநிதிகளிடம் நான் ஒரு விஷயம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஸ்வாமிகளின் திருமுகத்தில் கூறப்பட்டுள்ள சுபிட்சத்திற்குச் சாதமான காரியங்களை நிறைவேற்றுவதற்கு இடைவிடாமல் உழைப்பவர்களும் மக்களுக்கு நலனைக் கொடுக்கும் சிறந்த வகையில் ஆலோசனை கூறுகின்றவர்களுமான திறமை வாய்ந்த மந்திரிகளைப் பெற்றுள்ள இந்தச் சமஸ்தானத்து மக்களது முயற்சிகள் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளின் கருணையினால் நல்ல பயனை அளிக்குமென நம்புகிறேன்.

மேலும், ஒப்பற்ற இத்தகைய கௌரவப் பட்டத்தை எனக்கு அளித்ததற்குத் தக்க முறையில் கைம்மாறு செய்வதற்கு நான் சக்தியற்றவனாக இருக்கிறேன். எனது அன்பிற்குப் பாத்திரர்களான பிரஜைகளையும், என் ஆத்துமாவையும் பகவான் ஸ்ரீ ஜகத்குரு ஆசார்ய ஸ்வாமிகளது சரணங்களில் சமர்ப்பணம் செய்து ஒருவாறு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

மகாராஜா அவர்களின் மேற்கண்ட சொற்பொழிவு முடிந்தவுடன் ஸ்ரீ மடத்தின் பிரதிநிதிகளுக்கு மரியாதை செய்விக்கப்பட்டது. யாவருக்கும் சந்தன தாம்பூலம் வழங்கிய பின்னர் சமஸ்தான தேசீய கீதம் முழங்க, அந்த விசேஷ தர்பார் மிகுந்த விமரிசையுடன் முடிவுற்றது.

* * * * *

திருவிடைமருதூரில் நடைபெற்ற அதிருத்திர ஹோமம்.

1949-வது வருட முழுவதும் அனேகமாக ஸ்வாமிகள் திருவிடைமருதூரிலேயே விஜயம் செய்திருந்தார்கள். சென்னை பி. ஜி. பால் அண்டு கம்பெனியின் சொந்தக்காரர் காலஞ்சென்ற ஸ்ரீ D. பாலசுப்பிரமணிய ஐயருக்குச் சொந்தமானதும், திருவிடைமருதூரில் பச்சையப்ப முதலியார் அக்கிரஹாரத்தில் புதிதாகக்கட்டப்பட்டதுமான ஒரு வீட்டையும், அதைச் சுற்றியுள்ள தோப்பையும் அவரது விருப்பத்தின்படி தானமாக அவரது பார்யை ஸ்ரீமதி சுந்தராம்பாள் அம்மாள் மடத்திற்குத் தான சாஸனம் செய்து கொடுத்தார். அந்த வீடும் தோப்பும் வீரசோழன் ஆற்றுக்கு வெகு அருகில் அமைந்துள்ளதால் ஸ்வாமிகள் தங்குவதற்கு ஏற்ற வசதியுடன் அந்த இடம் காணப்பட்டது. அவ்வப்போது உரிய காலங்களில், வேறு சில கிராமங்களுக்கு விஜயம் செய்த காலத்தைத் தவிர, சுமார் மூன்று வரு

டங்கள் ஸ்வாமிகள் அந்த இடத்திலேயே தங்கிப் பக்தகோடி களுக்குத் தரிசனம் அளித்துவந்தார்கள். ஸ்ரீமதி சுந்தராம்பாள் அம்மாளும் தம் காலஞ்சென்ற கணவரைப்போல் இன்னும் மடத்திற்கு அவ்வப்போது கைங்கர்யம் செய்துவருவதுடன், அன்றுடம் உபவாசமிருந்து ஸ்வாமிகளின் பூஜையைத் தரிசித்துத் தீர்த்தப் பிரசாதம் பெற்ற பின்னரே ஆகாரம் உட்கொள்ளுவதென்ற நியமத்துடன் இருந்து வருகிருர். பின்னர் 1955-வது வருடத்தில் அந்த அம்மையார் அந்தக் கட்டிடத்திற்கு அடுத்த வீட்டையும் தோப்பையும் அவ்வூரில் நடைபெற்றுவரும் ஸ்ரீமடம் வேதசாஸ்திர பாடசாலையின் உபயோகத்திற்காக விலைக்கு வாங்கி மடத்திற்குத் தான சாஸனம் செய்திருக்கிருர்.

1942-வது வருடம் மன்னுர்குடிக்கு அடுத்த பூவனூரிலும், பிறகு திருச்சி ஜில்லா அகண்டகாவேரி தீரம் நத்தம் என்னும் இடத்திலும் நடைபெற்ற அதிருத்திர ஹோமத்தைப்போல் திருவிடைமருதூரில் 1949 பிப்ரவரி 16-ந் தேதிமுதல் 26-ந்தேதி முடிய 11 நாட்களுக்கு மற்ருெரு ஹோமத்தை நடத்த வேண்டுமென ஸ்வாமிகள் திருவுள்ளம் கொண்டார்கள். இந்த ஹோமத்திற்குக் குறைந்தது சுமார் ரூ. 25,000 செலவாகுமாதலால், அந்தச் சமயம் மடத்திலிருந்து அப்பெருந் தொகையைச் செலவிட வசதியில்லையேயென மடத்தின் அதிகாரிகள் ஸ்வாமிகளிடம் விண்ணப்பித்துக் கொண்டனர். ஆனுல் ஸ்வாமிகளோ ஹோமம் எவ்விதமாவது நடைபெறவேண்டுமென்றும், ஹோமத்தின் செலவிற்கென மடத்தின் சிஷ்யர்களிடமும் அபிமானிகளிடமும் முன்னதாகத் தெரிவித்து எவ்விதத் தொகையும் வசூலிக்கக் கூடாதென்றும் கட்டளை பிறப்பித்துவிட்டார்கள். அந்தக் கட்டளையை மேற்கொண்டு மடத்தின் அதிகாரிகள் ஹோமத்திற்கென எல்லாப் பொருள்களையும் சேகரிக்கவும், வேதக் கலையில் தேர்ச்சிபெற்ற அந்தணர்கள் சுமார் 350 பேர்களை அங்கு வரவழைக்கவும் ஏற்பாடு செய்தார்கள். இந்த ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஸ்வாமிகளைத் தரிசிக்க வந்த சில தனவந்தர்கள் தாமாகவே சுமார் ரூ. 5000 வரையில் இதற்கெனக் காணிக்கை செலுத்தினர். பின்னர் ஹோமம் நடைபெற்றுக்கொண்டிருந்தபொழுது ஆயிரக்கணக்கான பக்தகோடிகள் ஹோமத்தைத் தரிசிக்க வந்தனர். அவர்கள் பலர் தாமாகச் செலுத்திய காணிக்கைகளைக் கொண்டு அந்த ஹோமம் தக்க முறையில் முடிவுற்றது.

இந்த ஹோமத்திற்கென பெரியதொரு கொட்டகை நிர்மாணிக்கப்பட்டு, அதில் 11 குண்டங்கள் அமைத்து, ஒவ்வொரு குண்டத்தைச் சுற்றிலும் 11 அந்தணர்கள் அமர்ந்து இப்பெரிய ஹோமத்தை 11 நாட்கள் நடத்தினர். மேலும் நூற்றுக்கணக்கான அந்தணர்கள் வேதம், ஸப்தசதி, பாகவதம், ராமாயணம், முதலியவைகளைப் பாராயணம் செய்துவந்தனர்.

முடிவு நாளன்று வஸோர்த்தாரை முடிந்தவுடன் மாலை 3 மணிக்கு அங்கு ஸ்தாபனம் செய்விக்கப்பட்ட தண்ணீர் நிறைந்த கும்பங்களை அந்தணர்கள் தலையில் ஏந்தி மேளவாத்தியத்துடன் ஊர்வலமாகக் காவிரியாற்றுக்கு எடுத்துச் சென்றனர். ஸ்வாமிகள் முன்னரே அங்குச் சென்று இடுப்பளவு தண்ணீரில் நின்றுகொண்டிருந்தார்கள். அந்தக் குடங்களிலுள்ள புனிதத் தண்ணீரை அவ்வந்தணர்கள் ஸ்வாமிகளுக்கு அபிஷேகம் செய்வித்தனர். அப்பொழுது சுமார் 5000 பேர்களுக்கு மேல் பக்தர்கள் காவிரியில் நீராடினர். அந்த ஹோமத்தில் பங்கெடுத்துக்கொண்ட அந்தணர்கள் யாவருக்கும் தட்சிணை, வஸ்திரம், பாத்திரம், கம்பளத்தினால் தயாரிக்கப்பட்ட பைகள் இவைகளை ஸ்வாமிகள் தாராளமாக வெகுமானம் அளித்தார்கள். இந்த ஹோமத்தின் நிர்வாகத்தின் பொறுப்பை அவ்வூர் வாசியான ராவ் சாகிப் ஆர். மகாலிங்கய்யர் வகித்து நடத்தினார்.

கல்வைத்த வாரம் என்னும் வேதபரீக்ஷை.

திருவிடைமருதூரில் அதிருத்ர ஹோமம் நடைபெற்றபொழுது வேதத்தை நன்கு கற்றவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு கல்வைத்த வாரம் என்னும் ஒரு பரீக்ஷையை நடத்தும்படி ஸ்வாமிகள் கட்டளை இட்டார்கள். அதில் தேறியவர்களுக்குப் பொன் நாணயங்களாகவும், பொன் ஆபரணங்களாகவும் பரிசளித்தார்கள். யஜுர் வேதத்தில் இந்தப் பரீக்ஷை நடைபெற்றது. வேதத்தில் பதம், கிரமம், கனம் என்னும் மூன்று வரிசைகளையும பூர்ணமாக அத்தியயனம் செய்தவர்கள் பலர் அப்பொழுது அங்குக் கூடியிருந்தனர். இந்தப் பரீக்ஷையானது சோழிகளைக்கொண்டு ஓர் எண்ணிக்கையைத் தெரிந்தெடுத்து, அந்தக் குறிப்பிட்ட எண்ணிக்கையில் வரும் வேதப்பிரச்னத்தில் கண்ட அன்வாகம் முதல், முறையாகப் பதம் சொல்ல ஆரம்பித்து, 250 பதங்கள் வரையில் எவ்விதமான சொற்பிழையும், ஸ்வரப்

பிழையும் இல்லாதவாறு முன் சொன்ன, பதத்தைத் திருப்பிச் சொல்லாமலும், எண்ணிக்கைகளில் கூடுதல் குறைவில்லாமலும் கணக்குடன் எவர் வேதத்தை ஒப்பிக்கிருரோ அவரே அந்தப் பரீக்ஷையில் தேறியவராவர். இந்தக் காட்சியைக் காண ஆயிரக்கணக்கான மக்கள் அங்குக் கூடியிருந்தனர். முதல் நாள் பரீக்ஷை மாலை 7-மணிக்கு தொடங்கி, இரவு 11-மணிக்கு முடிவு பெற்றது. அன்று பரீக்ஷையில் மூவர் தேறினுர்கள். அம்மூவருக்கும் தலைக்கு முன்றேஅரைக்கால் பவுன் வீதம் ஸ்வாமிகள் கருணையுடன் வெகுமதி அளித்தார்கள். பரீக்ஷையில் தவறிய 40 பேர்களுக்கும் தங்கக் காசுகளையும் கொடுத்தருளினுர்கள். இவ்விதம் மூன்று நாட்கள் பரீக்ஷை நடைபெற்றது. இரண்டாவது நாளில் 6 பேர்கள் இந்தக் கடினமான பரீக்ஷையில் தேறினுர்கள். அவர்கள் யாவருக்கும் ரத்தினக் கல் இழைந்த மோதிரங்களை வெகுமதியாக அளிக்கவேண்டுமென ஸ்வாமிகள் திருவுள்ளம் கொண்டார்கள். இதை அறிந்த சிஷ்யர்கள் சிலர் இவ்வித மோதிரங்களைத் தாங்களே தயாரித்துத் தருவதாக ஸ்வாமிகளிடம் விண்ணப்பித்துக்கொண்டனர், ஆனுல் அதே சமயத்தில் வெகுமதிகளை அளித்துவிடவேண்டுமென்று ஸ்வாமிகள் எண்ணி, அங்குக் கூடியிருந்தவர்கள் அணிந்திருந்த கல் வைத்த மோதிரங்களை யெல்லாம் கழற்றி ஓர் தாம்பாளத்தில் சேர்ப்பிக்கும்படி கட்டளை இட்டார்கள். மோதிரங்கள் யாருடையனவென அடையாளங்கள் கண்டுபிடிக்க ஓர் காகிதத் துண்டில் ஒவ்வொருவருடைய பெயரையும் எழுதி அந்தக் காகிதத்தினுலேயே மோதிரத்தைச் சுற்றி தாம்பாளத்தில் அவை வைக்கப்பட்டன. அப்பொழுது கூட்டத்தில் பிரமுகர்கள் பலர் இருந்தபடியால் சுமார் 25 மோதிரங்களுக்கு மேல் தாம்பாளத்தில் சேர்ந்துவிட்டன. அந்த மோதிரங்களிலிருந்து தம் திருக்கரத்தினுல் ஆறு மோதிரங்களை எடுத்துப் பரீக்ஷையில் தேறின இந்த 6 பேர்களுக்கும் ஸ்வாமிகள் வெகுமானம் அளித்தார்கள். ஸ்வாமிகள் அவைகளை எடுக்கும் போது அவைகள் யாருக்குச் சொந்தமென்பதும் அவைகளின் மதிப்பு என்னவென்பதும் ஒருவரும் அறியார். மிகுதியிருந்த மோதிரங்களையும் மடத்திலேயே வைத்துக்கொண்டு அவைகளைத் தக்கவர்களுக்கு வெகுமானம் அளிக்கும்படி அவைகளை அணிந்திருந்தவர்கள் ஸ்வாமிகளை வேண்டிக்கொண்டனர். ஆனுல் ஸ்வாமிகளோ அத்தருணத்தில் 6 மோதிரங்களே தேவை என்றும் அவை கிடைத்து விட்டதால்

மற்றவைகளை அவைகளின் சொந்தக்காரர்கள் எடுத்துக்கொண்டு விட வேண்டுமென்றும் கட்டளையிட்டுவிட்டார்கள். பரிசாக அளிக்கப்பட்ட மோதிரங்களின் சொந்தக்காரர்கள் இவ்வித வாய்ப்பு தங்களுக்குக் கிடைத்ததைப்பற்றி மகிழ்ச்சி அடைந்த வர்களாகித் தங்களை மிகுந்த பாக்யவான்களாகக் கருதி உள்ளம் குளிர்ந்தார்கள். எதிர்பாராத வண்ணம் இவ்விதமான உயர்ந்த பரிசுகளைப் பெற்ற வேதவித்பன்னர்கள் மனம் திருப்தி அடைந்த வர்களாகி, வேதக்கலைக்கு இவ்வித உயர்வு கொடுத்ததைப்பற்றி ஸ்வாமிகளை மனமாரப் புகழ்ந்தார்கள். இந்த வைபவங்களை யெல்லாம் கண்ணுற்ற சிஷ்யகோடிகளும் பொதுமக்களும் அது வரை வேறெவராலும் அளிக்கப்படாத அந்தப் பெருங் கொடை யைப்பற்றியே பெருமையாகப் பேசிக்கொண்டனர்.

மூன்றுவது நாள் வேதத்தின் வர்ணக் கிரமங்களை லக்ஷணத் துடன் கூறுவதில் பரீக்ஷைகள் வைக்கப்பட்டன. அதில் தேறிய வர்களுக்குத் தக்கவிதமாக உயரிய சன்மானங்கள் அளிக்கப்பட்டன.

ஸ்வாமிகள் திருவிடைமருதூரில் தங்கியிருந்தபோது வட இந்தியாவிலிருந்து ராமராஜ்ய பரீஷத்தின் அதிபரான ஸ்ரீ காபாத் ரஜீ ஸ்வாமிகள் நம் ஸ்வாமிகளை தரிசித்து, தர்மப் பிரசார சம்பந்தமாய் ஸ்வாமிகளின் ஆலோசனைகளைக் கேட்டுக் கொண்டார். மேலும் ஹிந்துகோடு மசோதா சம்பந்தமாய் மக்கள் தங்கள் ஆக்ஷேபணைகளை சர்க்காருக்குத் தெரிவிக்கவேண் டிய விஷயமாகவும் அன்று ஆலோசனைகள் நடைபெற்றன. நம் ஸ்வாமிகளின் ஆலோசனையின்படி நாடெங்கும் சனாதனிகளின் பொதுக் கூட்டம் கூட்டி அந்த மசோதா சம்பந்தமான மக்களது அபிப்பிராயத்தை சர்க்காருக்குத் தெரிவிப்பதென முடிவு செய்யப் பட்டது.

ஸ்வாமி ஸ்ரீ காபாத் ரஜீ நமது ஸ்வாமிகளை தரிசித்துக்கொண்டது

1949-ஆவது வருடத்திய சங்கரஜயந்தி உத்ஸவம், சாதுர் மாத சங்கல்பம், நவராத்திரி விழா இவைகளை யெல்லாம் ஸ்வாமி கள் திருவிடைமருதூரிலேயே நடத்தினார்கள். அவ்வருடத்தில் ஸ்வாமிகள் இராமநாதபுரம் தமிழ் வித்வான் மு. இராகவய்யங்காரை கௌரவித்து, அவருக்கு இரட்டைக் காஷ்மீர் சால்வைகளை போர்த்தி அநுக்ரகம் செய்தார்கள். 1950-ஆவது

1949-50-ஆவது வருடங்களின் சாதுர் மாத சங்கல்பங்கள்.

ஆண்டில் சாதுர்மாத சங்கல்பத்திற்கு ஸ்வாமிகள் திருவிடைமருதூருக்கு மேற்கே 3 மைல் தூரத்தில் காவிரியின் வடகரையிலுள்ள திருவிசைநல்லூர் என்னும் தலத்தில் தங்கியிருந்தார்கள். இந்த ஊர் மகான்கள் பலருக்கும், வித்வத் ரத்னங்கள் பலருக்கும் பிறப்பிடமாகும். ஸ்ரீ சதாசிவ பிரமேந்திரர், ஐயாவாள் எனப் பிரசித்திபெற்ற ஸ்ரீதரவேங்கடேசர் ஆகிய பெரியோர்கள் இவ்வூரில் பிறந்தவர்கள். சென்ற 19-ஆவது நூற்றாண்டிலும், நாளது 20-ஆவது நூற்றாண்டின் துவக்கத்திலும் மகாபண்டிதராக விளங்கிய மகாமகோபாத்யாய ராமசுப்பா சாஸ்திரிகள் இவ்வூரில் வசித்துவந்து, பல வித்வான்களுக்குச் சாஸ்திரம் போதித்துவந்ததும், அவர்களது சிஷ்யர்களாக பல மகா வித்வான்கள் தோன்றியுள்ளதும் யாவரும் அறிந்த விஷயமே. ஸ்வாமிகள் திருவிசைநல்லூரில் ஐயாவாள் மடத்திலேயே வியாஸபூஜையை நடத்தி, சாதுர்மாத சங்கல்பத்தையும் அவ்விடத்திலேயே முடித்துக்கொண்டார்கள்.

ஐயாவாள் என்னும் ஸ்ரீதர வேங்கடேச்வரர் வரலாறு.

ஸ்வாமிகள் திருவிசைநல்லூருக்கு விஜயம் செய்யும்பொழுதெல்லாம், ஸ்ரீதர வேங்கடேச்வரர் என்னும் பெரியார் வாழ்ந்த இல்லத்திற்கு விஜயம் செய்வது வழக்கம். அப்புனித இல்லம், தஞ்சை ஜில்லாவில் ஓர் யாத்திரைத் தலமாக இன்று கருதப்பட்டு வருகிறது. ஸ்ரீதர வேங்கடேச்வரர் ஓர் கிருஹஸ்தராக வாழ்ந்து மறைந்தபோதிலும், அந்த வீட்டை அந்தவூரில் மடம் என்றே இன்றும் குறிப்பிடுகிறார்கள். அவர் மகா பண்டிதராக விளங்கி, தூய வாழ்வு நடத்தி, பக்திமார்க்க சம்பந்தமாய், பல நூல்களை வடமொழியில் இயற்றியுள்ளார். அவைகளில் ஆக்யாஷஷ்டி, குளீராஷ்டகம், தாராவளி, கங்காபஞ்சகம் என்பவை முதன்மையானவை. ஆக்யாஷஷ்டியில் ஒரு செய்யுளில் அம்பிகையைக் குறித்து அவர் துதிக்கும்பொழுது, "உன்னை அண்டியவர்களைச் சிவனிலும் பெரியவர்களெனக் கூறலாம், ஏனென்றால் காமனை வெல்ல எண்ணிய பரமசிவனே கோபத்தை அடைந்து அவனை எரித்தார்; உனது அடியார்களோ என்றால், காமத்தையும் கோபத்தையும் ஒருங்கே ஒழித்துவிடுகிறார்கள்." எனப் பொருள்படக் கூறியுள்ளார்கள். குளீராஷ்டகம் என்னும் செய்யுளை இயற்றி, ஸ்ரீதரர் ஒரு சமயம் மழைபொழியும்படி செய்தார். கங்காபஞ்சகம் என்

னும் செய்யுளைக் கொண்டு, தமது வீட்டின் கொல்லைப் புறத்தி லுள்ள கிணற்றில் கங்கையை வந்தடையும்படி அவர் செய்தார். அவரது ஜீவிய சரித்திரத்தில் மிகவும் மகிமையுடன் கொண்டாடப் படும் இந்த நிகழ்ச்சியின் வரலாறு பின்வருமாறு :—

அவர் தந்தையின் சிராத்ததினம் ஒன்றில், ஒரு பஞ்சமன் கொல்லைப்புறத்தில் நின்று, 'பசி பசி' எனக் கூவ, அப்பஞ்சம னுக்கு முதலில் அவர் அன்னம் இட்டுவிட்டார். அதன் காரண மாக ஊர் வேதியர்கள் அவரது இல்லத்தில் அன்று உணவு ஏற் றுக்கொள்ள மறுத்துவிட்டனர். அதனால் அவர் பிதுர்தேவதை களைத் தர்ப்பை புல்லில் ஆவாகனம் செய்து அன்றைய சிராத் தத்தை ஒருவாறு முடித்துக்கொண்டார். அவர் செய்யவேண்டிய அடுத்த சிராத்தம் வந்தபோது, அந்தணர்களை வரிக்காமல் சிராத் தம் செய்ய மனமில்லாமல் அவ்வேதியர்களை நெருங்கித் தாம் செய்த தவறை நீக்கக்கூடிய பிராயச்சித்தம் ஒன்றை விதிக்கும்படி வேண்டிக்கொண்டார். அவ்வந்தணர்களோ, 'நீர் செய்த தவறுக் குக் கங்கா ஸ்நானமே பிராயச்சித்தம்; ஆகையால் கங்கையில் முழுகி வாரும்' எனக் கூறினார்கள். அந்நாளில் கங்கா ஸ்நானம் செய்துவருவதானால் சுமார் ஒரு வருட காலமாவது பிடிக்கும். அவ் விதம் கங்காஸ்நானம் செய்துவந்த பிறகு சிராத்தத்தைச் செய்து முடிப்பது சாத்தியமில்லை.

அப்பொழுது ஸ்ரீதரர் தம் மனஸில் சற்று சிந்தனை செய்து, தமது இஷ்ட தேவதையை ஸ்மரித்தவராய், கங்கா அஷ்டகம் என் னும் எட்டு சுலோகங்களால் கங்கா தேவியைத் துதிக்கலானார். அப்பொழுது அவர் வீட்டுக் கொல்லைப்புறத்திலுள்ள கிணற்றில் எதிர் பாராதவாறு தண்ணீர் பெருகிற்று. பெருகிய வெள்ளமும் கிணற்றின்மேல் வழிந்து ஓடியதைக் கண்ட அவ்வூர் அந்தணர்கள் அவரை ஓர் பெரிய மகான் என்பதாக அப்பொழுதுதான் கண்டு கொண்டனர். பின்னர் அவர்கள் ஸ்ரீதரரது திருவடிகளில் வணங்கி அவர்கள் செய்த தவறுக்கு அன்னாரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்கள். அக்கிணற்றில் அன்று யாவரும் நீராடி ஸ்ரீதரர் செய்யவேண்டிய சிராத்தத்தை முறைப்படி நடத்திவைத் தனர். இது சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற நிகழ்ச்சியாகும். கார்த்திகை மாத அமாவாசை யன்று இது நிகழ்ந் தது. அந்த அமாவாசையன்று இன்றும் அவ்வூரில் ஆயிரக்கணக்

கான மக்கள் அந்தக் கிணற்றில் தண்ணீர் மொண்டு அதனில் நீராடித் தங்களை புனிதமாக்கிக் கொள்ளுகிறார்கள். ஆயிரக்கணக் கான குடங்களில் தண்ணீர் மொண்டபோதிலும் கிணற்றின் தண்ணீர் மட்டம் குறைவதேயில்லை. ஸ்ரீதர வேங்கடேச்வரரை ஐயாவாள் என்னும் மரியாதைப் பெயருடன் அக்காலத்தில் மக்கள் அழைத்துவந்தார்கள். கார்த்திகை மாத அமாவாசைக்குப் பத்து நாள்கள் முன் தொடங்கி, அவ்வூரில் ஸ்ரீ ஐயாவாள் உத்ஸவம் கொண்டாடப்படுகிறது. ஐயாவாள் உத்ஸவம் நடைபெறும் பொழுது, பக்தர்கள் ஏராளமாக அங்குக் கூடுகின்றார்கள். சிறப் பாக அன்னதானமும் நடைபெற்று வருகின்றது; பஜனைகளும், சங்கீதக் கச்சேரிகளும் கதாகாலக்ஷேபங்களும், வித்வான்களின் சொற்பொழிவுகளும் அந்தப் பத்து தினங்களிலும் அங்கு நடை பெற்றுக்கொண்டேயிருக்கும். பிரபல சங்கீத வித்வான்கள் அப் பொழுது அங்குக் கூடுவார்கள். இந்த உத்ஸவத்தை தமது வயோதி கத்தையும் பாராட்டாமல், மிகுந்த சீரிய முறையில், அவ்வூர் அக் கிரகார வாசிகள் ஒத்துழைப்புடன், நம் ஸ்வாமிகளால் ஹாஸ்ய கலா சக்ரவர்த்தி என்னும் பிருதைப் பெற்றிருக்கும் விகடம் ராமஸ்வாமி சாஸ்திரிகள் பல வருடங்களாகத் தொடர்ந்து நடத்தி வருகிறார்.

கோவிந்த புரத்தில் பகவன்நாம போதேந் திரர் அதிஷ்டானம்.

கோவிந்தபுரமென்பது திருவிடைமருதூருக்குக் கிழக்கே இரண்டு மைல் தூரத்தில் காவிரியின் தென் கரையில் அமைந் துள்ள ஒரு சிறிய ஊர். தென்னை மரச் சோலைகளாலும் வாழைத் தோட்டங்களாலும் நிறைந்துள்ள இந்தவூர் இயற்கை அழகுடன் விளங்குகிறது. ஸ்ரீ பகவன் நாம போதேந் திரர் என்னும் மகானது அதிஷ்டானம் இந்தவூரில் அமைந்திருப்ப தால், இந்தவூருக்கு அது மேலும் பெருமையைத் தருகிறது. போதேந்திரர் என்னும் பெரியார் காமகோடி பீடத்தின் 59-ஆவது ஆசார்ய ஸ்வாமிகளாவர். ஸ்ரீதர வேங்கடேச்வரர் தமது ஞான குருவாக இவரை வழிபட்டு, இவர்மீது சில தோத்திரங்களையும் இயற்றியுள்ளார். அந்தத் தோத்திரமானது இந்நாளிலும் ஹரிபஜனை நடைபெறும் இடங்களிலெல்லாம் குரு ஸ்துதியாகப் பாடப்பட்டு வருகின்றது, ஸ்ரீ போதேந்திரர் காஞ்சிபுரத்தில் மண்டனமிச்ர அக்ரகாரத்தில் பிறந்தவர். இவரது

தந்தையின் பெயர் கேசவபாண்டுரங்கா என்பதாகும். இவரது பூர்வாசிரமப் பெயர் புருஷோத்தமர். புருஷோத்தமர் பிரும்மசாரியாக யிருந்தபொழுது காசிக்குச் சென்றார். காமகோடி பீடத்தின் 58-ஆவது ஆசார்ய ஸ்வாமிகளான ஸ்ரீ ஆத்மபோதரை அவர் முதலில் காசியில் தரிசித்தார். புருஷோத்தமர் வாலிபத்திலேயே நல்ல சாஸ்திரப் பயிற்சியும், ஒழுக்கமும் வசீகரத் தோற்றமும் பெற்று விளங்கியதால் ஸ்ரீ ஆத்ம போதருக்கு இவர்பால் கருணை பிறந்தது. தம்மைச் சீடராக அடைந்த புருஷோத்தமர் சந்நியாசம் பெற விரும்பியதற்கிணங்க, புருஷோத்தமருக்குக் குருநாதர் சந்நியாச ஆச்ரமம் கொடுத்தருளினார். பின்னர் குருவும் சீடருமாக தென்தேசத்தை அடைந்தனர். அவர்களிருவரும் சிறிதுகாலம் காஞ்சியில் சங்கர மடத்தில் தங்கியிருந்தனர். பின்னர் ஆத்மபோதர் தென் பெண்ணை நதிக்கரையில் சஞ்சாரம் செய்துகொண்டிருந்த பொழுது, வடவாம்பலம் என்னும் இடத்தில் நிர்விகல்ப சமாதி அடைந்துவிட்டார்கள். சீடரான போதேந்திரர் குருநாதருக்குச் செய்யவேண்டிய மகாபூஜை முதலியவைகளை முடித்துக் கொண்டு, மேலும் தென் நாட்டில் யாத்திரையைத் தொடங்கினார். அப்பொழுது அவர் காமகோடி பீடத்தின் 59 ஆவது ஆசார்ய ஸ்வாமிகளாகத் தேசமெங்கும் பிரகாசிக்கலானார். ஸ்வாமிகள் பின்பு இராமேசுவரம் சென்று அங்கு ஸ்ரீ ராமநாதஸ்வாமியைத் தரிசனம் செய்துகொண்டார். பின்பு ஜம்புகேசுவரம் என்னும் திருவானைக்காவை அடைந்து, அங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அகிலாண்டேச்வரி அம்பிகையின் தாடகங்கங்களை ஜீர்ணோத்தாரணம் செய்து மறுபடியும் பிரதிஷ்டை செய்தார்.

ஸ்ரீ போதேந்திர ஸ்வாமிகளது மனம் பிற்காலத்தில் மக்களிடையே பக்தி மார்க்கத்தைப் பரப்புவதில் ஈடுபட்டது. திரேதா யுகத்தில் வேள்விகளாலும், துவாபரயுகத்தில் அர்ச்சனை மார்க்கத்தினாலும், அடையக்கூடிய பயனைக் கலியுகத்தில் நாமசங்கீர்த்தனத்தைக் கொண்டு பகவானைத் துதி செய்வதால் எளிதாக அடையக் கூடுமென விஷ்ணுபுராணம் கூறுகிறது. இவ்வுண்மையை விளக்கி, நாமசித்தாந்த கௌமுதி என்னும் நூலையும், மற்றும் சில பக்தி மார்க்கமான நூல்களையும் அவர் இயற்றினார். அவர் செல்லுமிடமெல்லாம் ராமநாமமும், கோவிந்தநாமமும் ஒலித்துக்கொண்டே இருக்கும். அக்காலத்தில் சீடர்கள் நூற்றுக்கணக்காக ஸ்ரீ போதேந்திரரைப் பின் தொடர்வார்கள். தென் நாட்டில் பக்திமார்க்கம்

உச்ச நிலையை அடைந்தது அவரது காலத்தில்தான். போதேந்திர ஸ்வாமிகள் இவ்விதம் சோழ நாட்டில் சஞ்சரித்துக்கொண்டு, 1692-ஆவது ஆண்டில் பிரஜோற்பத்தி வருடம் கோவிந்த புரத்தில் நிர்விகல்ப சமாதி அடைந்தார்கள். அம்மகானது ஆராதனை மகோத்ஸவமானது புரட்டாசி மாதம் பௌர்ணமிக்கு அடுத்த மகாளயபக்ஷத்தில் யதிமகாளயம் என்று கூறப்படும் துவாதசியில் கொண்டாடப்படுகிறது. புரட்டாசிப் பூர்ணமியன்றே அந்த உத்ஸவம் ஆரம்பமாகிறது. பக்திமார்க்கத்தில் ஈடுபாடுடையவர்கள் அந்தப் பிருந்தாவனத்தில் கூடி, வருடாவருடம் ஆராதனையை மிகச் சிறப்புடன் நடத்திவருகிறுர்கள்.

கோவிந்த புரத்திற்குச் சுமார் பத்து மைல்களுக்குள் நமது ஸ்வாமிகள் விஜயம் செய்யும் பொழுதெல்லாம் இந்தக் குருநாதருடைய சமாதியைத் தரிசிக்கத் தவறமாட்டார்கள். அவ்விடம் தரிசிக்கும் பொழுதெல்லாம் பல மணி நேரங்கள் அவ்விதம் தியானத்தில் அமர்ந்திருப்பார்கள். சில சமயங்களில் எவரும் அறியாதவாறு அந்தப் பிருந்தாவனத்துக்கு ஸ்வாமிகள் சென்று வருவதுண்டு. அசரீரியாக ராமநாமா அவ்விடம் கேட்கப்படுவதாக அனுபவம் வாய்ந்த பெரியவர்கள் பலர் கூறுகின்றனர். மனஸிற்கு மிகுந்த சாந்தியைத் தருவதாகக் காவிரி நதியின் ஓர் பிரிவான வீர சோழன் ஆற்றை ஒட்டி இந்தப் பிருந்தாவனம் வெகு அழகுடன் அமைந்துள்ளது. ஸ்ரீ ராமநாமாவை ஒவ்வொருவரும் அவர்களால் முடிந்தவரையில் ஒவ்வொரு நாளும் எவ்வளவு தடவை எழுத முடியுமோ அவ்வளவு தடவைகள் எழுதவேண்டுமென்று பக்தர்களுக்கு நம் ஸ்வாமிகள் உபதேசிப்பது வழக்கம். அதன்படி சிறு குழந்தைகள், ஸ்திரீகள், வயதுவந்தவர்கள், முதியோர்கள் யாவரும் அவரவர் சக்திக்குத் தக்கவாறு ராமநாமங்களை எழுதிவருவார்கள். இவ்விதம் எழுதிவருவதில் லட்சக்கணக்காகவும், கோடிக் கணக்காவும் நாமாக்களை எழுதிய பக்தர்கள் அந்த நாமாக்களடங்கிய புஸ்தகங்களை ஸ்வாமிகளிடம் சமர்ப்பணம் செய்து, அதற்கு அனுக்கிரகமாக அவர்கள் அளிக்கும் காமாக்ஷி அம்பிகை அமைக்கப்பெற்ற வெள்ளிக்காசுகளையோ, தங்கக் காசுகளையோ பெற்றுப் போவார்கள். அவ்விதம் எழுதப்பட்ட புஸ்தகங்களெல்லாம் கோவிந்தபுரத்தில் ஸ்ரீ போதேந்திரர் அதிஷ்டானத்தில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன.

நாடெங்கும் திருப்பாவை திருவெம்பாவை ஆறங்க மகா நாட்டைக் கூட்டிவைக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும், அதன் நோக்கங்களைப் பற்றியும் சென்ற 1950-ஆவது ஆண்டின் இறுதியில் ஸ்வாமிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்கள்.

திருப்பாவை. திருவெம்பாவை, திருமறை ஆறங்க மகாநாடு.

"நம் தமிழ் நாடு முழுவதிலும் ஒவ்வொரு ஊரிலும் சிவாலயமும் விஷ்ணு ஆலயமும் நிறுவப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். ஒவ்வொரு சிவாலயத்திலும் நாயன்மார்களது திருவாக்கான திருமுறைகளும், விஷ்ணு ஆலயங்களில் ஆழ்வார்களின் பிரபந்தங்களும், இரு ஆலயங்களிலும் ஆறு அங்கங்களுடன் கூடிய ரிக், யஜுர், சாமம் என்னும் மூன்று வேதங்களும் தொன்றுதொட்டுப் பாராயணம் செய்யப்பட்டுவருகின்றன.

மார்கழி மாதத்தில், ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகளது திருவெம்பாவையும், ஸ்ரீ ஆண்டாளுடைய திருப்பாவையும் முறையே சிவாலயங்களிலும் விஷ்ணு ஆலயங்களிலும் ஓதப்பட்டு வருகின்றன. சென்ற 50 ஆண்டுகளாக நம் தமிழ் நாட்டு மக்கள், சிறு பிராயம் முதலே மேல்நாட்டாரின் மொழியையும், நாகரீகத்தையும் பயின்று, அரசியல் கிளர்ச்சிகளில் மாத்திரம் பெரும்பாலும் ஈடுபட்டு வந்தமையால், தாய் நாட்டின் தெய்வீக முறைகளை அறியாது அருள் வழியில் பெரும் நஷ்டத்தை அடைந்துவிட்டார்கள். நம் முன்னோர்கள் அருளிய அத்திருமுறைகளின் கருத்துக்களையும் அவர்களது தூயவாழ்க்கையையும் நம் மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டியது எஞ்சியுள்ள பண்டிதர்களின் கடமையாகும்."

இந்த நோக்கத்துடன் ஸ்வாமிகள் திருவிடைமருதூரில் விக்ருதி வருடம் மார்கழிமாதம் 10உ முதல் (1950 டிசம்பர் 25உ) எட்டு நாட்கள் பெரியதொரு மகாநாட்டைக் கூட்ட வேண்டுமென்று திருவுள்ளம் கொண்டார்கள். அதற்கென, தேவகோட்டை திரு. மே. லே. மே. மகாலிங்கம் செட்டியாரைத் தலைவராகவும், மாயவரம் ஸ்ரீ ஏ. வி. வேங்கடராமையரை காரியதரிசியாகவும் கொண்டு, மற்றும் 18 பேர்களடங்கிய ஓர் வரவேற்பு குழு அமைக்கப்பெற்றது. மகாநாடு அவ்வூர் மகாதானத் தெருவில் அமைந்துள்ள ரா. ந. மெ. சத்திரத்தில் நடைபெற்றது. தேவகோட்டை திரு. அள. அரு. சோக்கையா செட்டியார் மகாநாட்டைத்

திறந்துவைத்தார். தமது வாழ்நாளின் பெரும்பகுதியை தர்மப் பிரசாரத்திலேயே ஈடுபடுத்தி, அண்மையில் துறவுபூண்ட ஸ்ரீ சச்சிதானந்த ஸ்வாமிகள் மகாநாட்டிற்குத் தலைமை தாங்கினுர்கள். சுமார் ஆயிரம் பேர்களுக்கு அழைப்புக்கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன. ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக்கள் மகாநாட்டில் கலந்துகொண்டு மகா வித்வான்கள் நிகழ்த்திய சொற்பொழிவுகளைக் கேட்டுப் பெரும் பயனடைந்தனர். திருவாடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகா சன்னிதானம் அவர்கள் தமது ஆதீன வித்வான் குலசேகரப்பட்டணம் திரு. வீர. சிவசுப்பிரமணிய பிள்ளை அவர்களைத் தமது பிரதிநிதியாக மகாநாட்டிற்கு அனுப்பி ஆசியளித்தார்கள். தர்மபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசன்னிதானம் அவர்களும் மகாநாட்டிற்கு ஆசி உரை ஒன்றை அனுப்பியிருந்தார்கள்.

ஸ்ரீமான்கள் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர், எம். ஆர். ஜெயகர், சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், எம். அனந்தசயனம் அய்யங்கார், வி. வி. சீனிவாச அய்யங்கார், ஏ. லெக்ஷ்மணஸ்வாமி முதலியார், பிரதம நீதிபதி ராஜமன்னுர், சென்னை மேயர் ஆர். ராமனுதன் செட்டியார், எஸ். ஜி. மணவாள ராமானுஜம், டி. எம். நாராயண ஸ்வாமி பிள்ளை, டி. கே. சிதம்பரநாத முதலியார், டி. கே. சங்கரவடிவேல், சென்னை டி. ராமஸ்வாமி அய்யங்கார், ஹிந்து பத்திரிகை உதவி ஆசிரியர் ரகுநாதய்யர், ஸர்தார் வேதரத்தினம் பிள்ளை எம். எல். ஏ. முதலான பிரமுகர்கள் இந்த மகாநாட்டின் நோக்கங்களை ஆதரித்துச் செய்திகளை அனுப்பியிருந்தனர்.

மகாநாட்டின் நோக்கங்களைப்பற்றி சென்னை அட்வகேட் கே. பாலசுப்பிரமணிய ஐயர் தொடக்கத்தில் ஓர் சொற்பொழிவாற்றினுர்கள்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வித்வான்கள் மகாநாட்டின் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக்கொண்டு அரிய விஷயங்களைப்பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

1. திருவாவடுதுறை ஆதீன வித்வான் குலசேகரப்பட்டணம் திரு. வீர. சிவசுப்ரமண்ய பிள்ளை.
2. திருவிடைமருதூர் திரு. நடராஜ தேசிகர்.
3. திருவிடைமருதூர் திரு. சிதம்பர தேசிகர்.

4. தர்மபுரம் ஆதீன வித்வான் திரு. தண்டபாணி தேசிகர்.
5. தர்மபுரம் திரு. வேலாயுத ஓதுவார்.
6. திருவையாறு அரசர் கல்லூரி தலைமைத் தமிழ் ஆசிரியர் திரு. இராம கோவிந்தசாமி பிள்ளை.
7. கும்பகோணம் நகர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் திரு. சுப்பராவ்.
8. ரங்கநாதபுரம் திராவிட கவிமணி வெ. முத்துசாமி அய்யர் எம் ஏ., எல். டி.
9. கூறைநாடு முனிஸிபல் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் திரு. இராமலிங்கம் பிள்ளை.
10. குப்பகோணம் நேடிவ் உயர்நிலைப்பள்ளி மாஜி தமிழ் ஆசிரியர் திரு. பி. ஸ்ரீநிவாஸ ஐயர்.
11. சென்னை கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன்.
12. திருவிடைமருதூர் ஆதீன உயர்நிலைப்பள்ளி தமிழ் ஆசிரியர் திரு. மகாலிங்க தேசிகர்.
13. தேவகோட்டை திரு. சக்திவேல் பிள்ளை.
14. தாம்பரம் சைவசமையப் பிரசாரகர் திரு. சமரிபுரி முதலியார்.
15. கும்பகோணம் உப. வே. இளையவல்லி ஸ்ரீனிவாஸாச்சாரியார்.
16. திருவழுந்தூர் தேவஸ்தானம் உப. வே. சேஷாத்திரி ஐயங்கார்.
17. திருவையாறு அரசர் கல்லூரி உப தலைவர் எஸ். டி. ஸ்ரீனிவாஸாசாரியார் எம். ஏ. எல். டி.
18. காரைக்கால் வைஷ்ணவமத போதகர் திரு. ஸ்ரீகாந்த இராமாநுஜ நாயுடு.
19. தேரழுந்தூர் உப. வே. ஸ்ரீனிவாஸாசாரியார்.
20. கும்பகோணம், தென்திருபேரை உப. வே. வெங்கடவரதாசாரியார்.
21. மாயூரம் உப. வே. நரசிம்மாசாரியார்.

22. திருப்பனந்தாள் ஆதீனம் செந்தமிழ்க் கல்வி விரிவுரை யாளர் திரு. கோபாலய்யா.
23. கும்பகோணம் உப. வே. ஸ்ரீநிவாஸ கோபாலாசாரியார்.
24. ஸ்ரீரங்கம் குண்டலம் உப. வே. ரங்காசாரியார்.
25. நாகர்கோயில் தொண்டன் ஆசிரியர் திரு ஆறுமுக நாவலர்.
26. திருவாடுதுறை திரு. பா. ஸ்ரீநிவாஸ ஐயர்,
27. மன்னார்குடி வேதபாடசாலை கனபாடி உப. வே. நரசிம் மாசாரியார்.
28. அண்ணாமலைச் சர்வகலாசாலை சம்ஸ்கிருத ஆசிரியர் ஸ்ரீ கே. ஏ. சிவராம கிருஷ்ண சாஸ்திரி.
29. கள்ளக்குறிச்சி வழக்கறிஞர் உப. வே. தாத்தாசாரியார்.
30. மன்னார்குடி ஸ்ரீராமநாத தீக்ஷிதர்.
31. கணபதி அக்கிரகாரம் வித்வான் ஸ்ரீ ராமஸ்வாமி சர்மா.
32. சிதம்பரம் ஸ்ரீ ரத்னவேலுப் புலவர்.
33. கும்பகோணம் ஆர்யதர்மம் பத்ராதிபர் தர்மப்ரவர்த்தகர் அக்நிஹோத்ரம் உப. வே. கோபால தேசிகாசாரியார்.

வைணவப்பெரியார்கள் பரமசிவனது பெருமையையும், சைவப் பெரியார்கள் ஸ்ரீமன் நாராயணன் கருணையையும் எடுத்துக்கூறிய பொழுது பெரியதோர் மதப் புரட்சியை அன்பர்கள் அங்குக் கண் டார்கள். ஆனால் அந்தப் புரட்சி எல்லாம் பக்திவெள்ளமாக மாறி, எல்லோரின் உள்ளங்களையும் குளிரச் செய்தது. ஒவ்வொரு நாளும் ஸ்ரீ ஸ்வாமிகள் மகாநாட்டிற்கு நேரில் விஜயம் செய்து அறிஞர் கள் ஆற்றிய சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்ந்தார்கள்.

மகாநாட்டின் 6-வது நாளன்று, சங்கீத வித்வான் சாத்தூர் திரு. சுப்ரமண்யம் அவர்கள் கச்சேரியும், முடிவு நாளன்று அரியக் குடி இராமானுஜய்யங்கார் அவர்கள் கச்சேரியும் நடைபெற்றன. இவ்விரு வித்வான்களும் தேவாரம், திருவாசகம், திருப்பாவை இவைகளிலிருந்தே பாட்டுக்களைத் தாமே ஸ்வரப்படுத்தியவாறு மிகவும் அழகாகக் கானம் செய்தார்கள். அவ்விரு வித்வான்களை யும் ஸ்வாமிகள் மிகவும் பாராட்டி ஆசீர்வதித்தார்கள். மகாநாட்

டில் கலந்துகொண்டு, சொற்பொழிவாற்றிய வித்வான்களுக்குச் சன்மானங்கள் அளிக்கப்பட்டன. போட்டிப்பரிக்ஷையில் கலந்து கொண்ட சிறுவர் சிறுமிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. மகா நாட்டின் முடிவு நாளன்று இரவில் ஸ்வாமிகள் நிகழ்த்திய அரிய தொரு உபந்நியாசத்தின் சுருக்கம் பின்வருமாறு :—

" புனிதமான கங்கைநதி கிழக்கு நோக்கி ஓடுகிறது. நர்மதை மேற்கே செல்லுகிறது. மகாநதி தெற்கிலிருந்து வடக்கே செல் கிறது. பல நதிகள் பல திசைகளில் ஓடுகின்றன. எல்லாம் முடி வில் கடலில் கலக்கின்றன. சேரும் இடம் ஒன்றே என்ற எண் ணம் நதிகளுக்கு இல்லை. அவை எங்குப் போனாலும் கடலும் அவை களைச் சூழ்கிறது. அதைப்போல் நாம் பலவழிகளில் இறைவனை வழிபடுகிறோம். பாதைகளில் வேற்றுமை உள. ஆட்கொள்ளும் வஸ்து ஒன்றே. பல வழிகளில் இறைவனை அடைய நாம் முயற் சிக்கலாம். ஆனால் வேற்று வழிகளில் செல்கையில் ஒற்றுமையை மறந்து கடவுளின் ஏகத்வத்தைக் கைவிடக்கூடாது. வேற்று மையை நினைத்தால் ஆனந்தம் இல்லை.

இம்மகாநாட்டில் நம் வைதிக மதத்தைச் சேர்ந்த எல்லா வழி பாடுள்ளவர்களும் கலந்துகொண்டது மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறது. இதுபோன்ற மகாநாடுகள் எங்கும் நடக்கவேண் டும். எல்லோரும் ஒருங்கு கூடி இறைவனை நினைத்து நம் துக்கத் தையும் கஷ்டத்தையும் சற்று மறந்து இருப்போம். தெய்வீக ஒளி வீசட்டும்.

பண்டை நாட்களில் நம் நாட்டில் லஞ்சம், பொய் என்பது ஜனங்களுக்குத் தெரியாமலிருந்தன. இப்பொழுது அவை எங்கும் காணப்படுகின்றன. இந்நிலை மாற இதைப்போன்ற மகாநாடுகள் உதவவேண்டும்.

ஆலய வழிபாடு நம் நாட்டில் தொன்றுதொட்டு இருக்கிறது. எல்லாம் கடவுளின் ஸ்வரூபம் என்ற பக்குவநிலை ஞானிகளுக்குத் தான் கிட்டும். ஸாமானிய ஜனங்களுக்குக் கடவுளை நினைக்க ஆலயவழிபாடு அவசியம் வேண்டும். தத்துவம் அறிந்த ஞானிகள் கூட தங்களுக்கு ஞானநிலையை அடைவித்த மூர்த்திகளை வணங்கு கிறார்கள்.

எல்லாவற்றையும் மறந்து, பொய்யே இல்லாமல், ஆனந்தமாக இருந்த நாயன்மார்களையும் ஆழ்வார்களையும் ஸ்மரிப்போம். அவர்

கள் வார்த்தைகள் தெய்வீக வார்த்தைகள்; முற்றிலும் உண்மை யானவை. ஆகவே அவை இன்றும் அழியாமல் இருக்கின்றன.

நல்வழியில் ஈடுபட்ட அப்பெரியார்களின் ஆனந்த வாழ்க் கையை அனுபவிப்போம். கடல் ஒன்றே; ஆனால் அதற்குப் பல இடத்தில் பல பெயர்கள் உண்டு, அதேபோல் கடவுள் ஒருவரே. நாமரூபங்கள் பல உள. சில நாட்களாவது நாம் இக்கடவுள் ஒற் றுமையைக் காண்போம். இவ்வொற்றுமையை உணர்த்தும் மகான் களை வணங்குவோம். அவர்களது அன்பு ததும்பும் பாடல்களைப் பாடுவோம். ஆழமானதும் மலைபோல் கனமானதுமான ஞானம் படைத்த அவர்கள் திருவாக்கை அனுபவிப்போம். உண்மை ஆனந்தம் நமக்குக் கிட்டும்.

திருமுறைகளிலும் திவ்யப் பிரபந்தங்களிலும் வேதங்களைப் பற்றியும், வேத ஆறங்கங்களைப்பற்றியும் சொல்லப்பட்டிருக் கிறது. நான்மறைகள், ஆறங்கங்கள், நான்கு உபாங்கங்கள், நான்கு உபவேதங்கள் ஆகப் பதினெட்டு வித்தைகள் நம்முன்னோர் அப்பிய சித்தவைகள். தனுர்வேதம், (ராணுவ சாஸ்திரம்), அர்த்த சாஸ் திரம், (அரசியல்), ஆயுர்வேதம், (வைத்யம்), காந்தர்வம், (சங்கீதம் நாட்டியம் முதலான கலைகள்), இவை உபவேதங்கள். இவ்வித்தை களைக் கற்றுணர்ந்தவர்கள் இவை ஆண்டவன் அருள் என்ற உணர்ச்சியை அடையவேண்டும்.

எல்லாச் சக்திகளுக்கும் காரணமாயிருப்பது பராசக்தி; மேகத்திற்குச் சமுத்திரம் காரணமாயிருப்பது போல, பராசக்தி எல்லாச் சக்திகளுக்கும் காரணமானவள். மகாபெரும் சக்தியென்று நாம் நினைப்பவைகூட பராசக்தியின் அணுவே. கடவுள் இல்லை யென்று சொல்லுவோர், நுனிக்கிளையிலிருந்து அடி மரத்தை வெட்டுபவர்களேயாவார்கள். நம் நாட்டில் பக்தி வளரவேண்டும். ஞானம் கமழவேண்டும். ஆஸ்திகம் தழைத்தோங்கவேண்டும்.

தில்லையில் ஒரு மூர்த்தி விளங்குகிறார்; அவர் மெய்ம்மறந்து ஆனந்த நடனம் புரிகிறார். நடன வேகத்தில் விரிந்த சடைக ளோடு ஆனந்த மூர்த்தியாகக் காட்சி அளிக்கிறார். அணுக்கள் எல்லாம் ஏககாலத்தில் ஆடிக்கொண்டிருக்கின்றன. அணுக்கள் இயங்க ஆண்டவன் அவ்வேகத்தில் நடனமாடுகிறார். நடனம் ஆடுவதால் அவர் ஆனந்த ஸ்வரூபியாக இருக்கிறார் என்பது விளங்குகிறது. அவரது வலக்கையில் உள்ள உடுக்கையிலிருந்து

வரும் ஒலியில் பதினுன்கு சப்தங்கள் தோன்றின. பாணினி அவைகளை ஆதாரமாகக்கொண்டு வியாகரண சூத்திரங்களை வெளியிட்டார். நடராஜரது ஊன்றிய வலக்காலின் கீழ் ஓர் அரக்கன் காண்கின்ருன். அஞ்ஞானத்தை ஈசன் அடக்கியிருப் பதையே இந்நிலை காண்பிக்கின்றது.

பேரானந்தம் அடைந்தவர்கள் ஆனந்த நடனம் செய்வார்கள். அல்லது சாந்தமே உருவாகிக் காட்சி அளிப்பார்கள். அஞ்ஞான அரக்கனைக் காலால் அமுக்கிக்கொண்டு ஆனந்த நடனம் புரியும் நடராஜப் பெருமான்போல் தென்திசை நோக்கிக் காட்சியளிக்கும் மற்ருெரு மூர்த்தி பேரானந்தத்தில் சாந்த ஸ்வரூபமாக இருக்கும் தக்ஷிணுமூர்த்தியாவர்.

இவ்விரு ஆனந்த மூர்த்திகளை வணங்குவோருக்கு யமபயம் இல்லை. இவர்களுக்குப் பேரானந்தமும் கிட்டும். இதேபோல் திரு மாலும் யோக நித்திரையில் காட்சி அளிக்கிருர். சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் உருவங்கள் வேறு; நிறம் வேறு; வாகனங்கள் வேறு; நாமங்கள் வேறு; ஆனல் உண்மை உணர்பவருக்கு வஸ்து ஒன்றே. இந்த உண்மையைச் சங்கர நாராயணர் ஸ்வரூபத்தில் காணலாம்.

நம் மதங்களில் காணப்படும் வேற்றுமைகளிலும் ஒற்றுமை உணர்ச்சி ஊடுருவிச் செல்கிறது. அதை உணர்ந்து அனுபவிப் போம். பல வழிகளிருப்பினும் எல்லாவற்றின் முடிவும் ஒன்றே. நதிகள் பல திசைகளிலும் ஓடவேண்டும். அப்பொழுதுதான் எல்லோருக்கும் க்ஷேமம். ஆனல் முடிவில் எல்லாம் ஓரிடத்தில் கலந்தாகவேண்டும்.

சநாதனமாகிய ஹிந்துமதம் பல்வேறு தத்துவங்களைப் போதித்து அவரவருக்குத் தகுந்த நிலையில் யாவரும் ஒரே லக்ஷி யத்தை அடைய வகை செய்கின்றது. அவரவர்கள் தங்கள் தங்கள் ஆசார்யர்கள் உபதேசித்த அனுஷ்டானங்களைப் பின்பற்றவேண் டும். அவ்வனுஷ்டானங்கள் ஒன்ருக இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. ஆனல் பெரியோர்கள் கடவுளை அடைய எந்த ஆதாரத்தை முக்கியமாக வாழ்க்கையில் கடைப்பிடித்தார்களென் பதில் ஒற்றுமையைக் காணலாம்.

நடனத்தின் மூலமாக அசைவைக் குறிப்பிடும் பகவான் நட ராஜரும், சயனத்தில் அசைவற்று காணப்படும் பகவான் விஷ்ணு

வும் ஒரே பரப் பிரும்மத்தின் இரு தத்துவங்களைப் காண்பிப்பவர் களே. இருவரும் ஆனந்த மயமாய் விளங்குகின்றனர்.

மதத்தினால் சண்டை உண்டாகுமென்று சொல்லுவது தவ றாகும். உண்மையான மதம் எப்பொழுதும் சச்சரவை உண்டு பண்ணாது. மதத்தின் அடிப்படை யில்லாவிட்டால் அரசியல், பொருளாதாரச் சச்சரவுகள் அதிகரித்து ஆபத்தை விளைவிக்கும். ஆதலால் இறைவன் வழிபாடு மனிதனுக்கு மிகவும் அவசியமாகும். அவ்வழிபாட்டிற்கு, எம்பாவைகளின் உதவி அளவிற்கடங்காது."

நாடெங்கும் பெருகிய பக்திவெள்ளம்.

அவ்வருடத்திலேயே மாயவரம், குழித்தலை, திருப்புகளூர், நாகப்பட்டினம், உழுந்தூர்ப்பேட்டை, சீர்காழி. முதலிய இடங் களில் இம்மகாநாடு மிக விமரிசையாக நடை பெற்றது. இம்மகாநாட்டின் நிகழ்ச்சிகளைப் பொதுமக்கள் நன்கறிந்து பயன் படுத்திக் கொள்ளுமாறு ஹிந்து, மதராஸ்மெயில். இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி, சுதேசமித்திரன் ஆனந்தவிகடன். முதலிய பத்திரிகை கள், அவைகளுக்கு முதல் ஸ்தானம் கொடுத்துச் செய்திகளை வெளி யிட்டு வந்தன: இதன் காரணமாக இந்தச் சமரஸ சன்மார்க்க இயக்கத்தில் மக்களின் மனம் பெரிதும் மாறிற்று. இந்த இயக் கத்தை மேலும் வலுப்படுத்த ஒரு மத்திய கேந்திரக் குழு அமைக்கப் பெற்றது. குருநாதனுடைய கட்டளைப்படி பணி செய்வதே தங்கள் கடமை என உறுதி செய்துகொண்ட சில அன்பர்கள் அதில் ஊழியர்களாகச் சேர்க்கப்பட்டார்கள். மாயவரத்தில் அந்தக் குழுவின் நிர்வாக ஸ்தலம் அமைக்கப்பெற்றது. அதில் தொண்டாற்றிவரும் ஷாப் இராமமூர்த்தி ஐயரது அரிய சேவை யும், ஆர் கிருஷ்ணராவின் இணையற்ற ஆர்வமும், காதி வஸ்தி ராலயம் ஏ. வி. வேங்கட்ராம ஐயரது சலியாத உழைப்பும் மிகவும் பாராட்டத்தக்கவை.

அடுத்த கர வருஷத்தில் (1951-52) இக்குழுவானது நாட்டின் பல பாகங்களிலும் ஆங்காங்கு அன்பர்களின் தொடர்பை ஏற் படுத்திக்கொண்டு பல தொண்டுகளைப் புரிந்தது. அவ்வருடம் மார்கழி மாதம் 38 ஊர்களில் இந்த மகாநாடு நடைபெற்றது. அடுத்த நந்தன வருடத்தில் (1952-53) இந்த மகாநாடு நாட்டில் பல பாகங்களினும் 61 இடங்களில் நடைபெற்றது. விஜய வருஷத்

தில் (1953-54) பாரதநாடு முழுவதும் 117 இடங்களில் மிகுந்த வெற்றிகரமாக இது நடைபெற்றது.

1954—55 ஜய வருடத்தில் கேந்திரக் குழுவினர் மகாநாடு நடைபெறுவதை அவ்வளவு முக்கியமாக வற்புறுத்தவில்லை. பள்ளிச் சிறுவர்களுக்கு திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி முதலான பக்திப் பாடல்களை மனப்பாடம் செய்துவைப் பதையே பண்டிதர்கள் மேற்கொள்ளவேண்டுமென்று ஸ்வாமிகள் திருவுள்ளம் கொண்டதால், இவ்வகையிலேயே அவ்வருடம் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. அப்படியிருந்தும் அவ்வருடத்திலும் சுமார் 57 இடங்களில் மகாநாடு நடைபெற்றதானது குறிப்பிடத் தக்கது. 1955-56 மன்மத வருடம் இம்மகா நாடு 77 இடங்களில் நடைபெற்றன.

இன்று இந்தோ சைனாவில் நடைபெறும் திருப்பாவை திருவெம்பாவை அரசாங்க விழாவைப் பற்றி மாயவரத்தில் ஸ்ரீ வள்ளலார்கோயில் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் ஸ்ரீ ஸ்வாமி கள் 8-12-52ல் செய்த பிரசங்கத்தின் சுருக்கம் பின்வருமாறு.

"நாம் இதுகாறும் திருவெம்பாவை, திருப்பாவை நம் தமிழ் நாட்டிலேயே பிரசாரம் அடைந்து வந்ததாக நினைத்திருந்தோம். சையாம் தேசத்து சரித்திர ஆராய்ச்சி நூல்களை நம் நாட்டுப் புலவர்கள் ஆராய்ந்து நம் தமிழ் நாட்டிற்கு அழியாப் புகழ் தரக் கூடிய சில அதிசயமான தகவல்களைத் தெரிவித்தார்கள். சையாம் தேசத்து உத்ஸவ விரதங்களைப்பற்றி விவரிக்கும் நூல்களில் வெகுகாலம் தொட்டு கவர்ன்மெண்டாரால் நடத்தப்பட்டுவருவ தான ஓர் உத்ஸவத்திற்குத் த்ரியம்பாவை-த்ரிபாவை என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நம் தமிழ்நாட்டிலிருந்து 2000 மைல்களுக்கப்பால் உள்ள ஓர் தேசத்தில் திருவெம்பாவை திருப்பாவை என்னும் பெயர் ஓர் உத்ஸவத்திற்கு கொடுக்கப்பட்டிருப்பது ஆச்சரியமானதாகும். அந்நாட்டு மக்களுக்குத் தற்சமயம் இப்பெயர்க்குப் பொருளும் தெரியாது. அது தமிழ்மொழி என்பதுகூட அவர்களுக்குத் தெரியாம லிருக்கலாம். அத்தகைய தேசத்தில் இப்பெயர் வழங்கிவருவதில் மூன்று முக்கிய விஷயங்கள் வெளியாகின்றன. திருவெம்பாவை, திருப்பாவை என்னும் பெயரால் ஓர் உத்ஸவம் சிவனுக்கும் விஷ் ணுவுக்கும் ஒரே உத்ஸவமாக நடத்தப்பட்டு வருகிறது; இது நம்

நாட்டின் ஆருத்ரா தரிசனம் உத்ஸவ சமயத்திலேயே அங்கு நடக்கிறது; அவ்வுத்ஸவத்தில் இங்கு நடக்கும் ஊஞ்சல் உத்ஸவம் அங்கேயும் நடக்கிறது. திருவெம்பாவை பாராயணமாக நடக்கும் நம் நாட்டில் இவ்வாருத்ரா தரிசன உத்ஸவத்திற்கு திருவெம் பாவை—திருப்பாவை என்ற பெயர்களில்லை. தமிழின் பெயரே தெரியாத நாட்டில் தொன்று தொட்டு நடந்துவரும் உத்ஸவத் திற்கு இப்பெயர் இருந்துவருகிறது. இதுவும் கவனிக்கத்தக்க தாகும். ஹிந்துமத தெய்வீக நூல்கள் இந்தோ சைன நாடு முழுவதும் பரவி யிருந்தனவென்பதற்கு அத்தாக்ஷியாக அங்கு, நம் தேசத்தில் காணப்படுவதைவிட தூய்மையான, சமஸ்கிருத பாஷையிலுள்ள ஏராளமான கல்வெட்டுகள் அத்தாக்ஷியாக விருக்கின்றன. இந்தோசைன நாட்டில் தெய்வீகத் தமிழ் நூல்களும் பழக்கத்திலிருந்தனவென்பதற்கு ஓர் உத்ஸவத்திற்கு இட்டிருக்கும் த்ரியெம்பாவை—த்ரிபாவை என்னும் பெயரே அத்தாக்ஷியாக இருக்கிறது.

இவ்விழாவில் சிவன் உருவத்தை நியமங்களோடு தாங்குபவர் ஈசான்ய திக்கிலிருந்து வரவேற்கப்படுகிறார். பிறகு ஊஞ்சலுக்கு வடபாகத்திலும் அழைத்துச் செல்லப்படுகிறார். சிவன் ஆனந்த மூர்த்தி என்பது அவர்களது கொள்கை. நமது கோயில்களில் ஈசான்ய திக்கில் விளங்கும் ஆனந்தத் தாண்டவ நடராஜ மூர்த் தியை இவ்வழக்கம் குறிக்கின்றதுபோலும். ஆசனத்தில் உட்காரும் பொழுது அவர் தமது வலக் காலை நிலத்தில் ஊன்றியும், இடது காலை வலத்துடை மீது போட்டுக் கொண்டும், உட்காருகிறார், என்று அவ்வாரய்ச்சி நூல்கள் கூறுகின்றன. இது நம் நாட்டின் தக்ஷிணாமூர்த்தியின் உருவத்தைத் ஞாபகப்படுத்துகிறது. சிவ பெருமானின் இவ் விரண்டு உருவங்களில் தக்ஷிணாமூர்த்தி ஞானத் தைக் கொடுக்கிறார்; நடராஜர் ஆனந்தத்தைக் கொடுக்கிறார். இவ்விருவரும் யமபாதையைக் கண்டிக்கும் முறையில் தென் திசையை நோக்கி இருக்கிறார்கள். அஞ்ஞானம் சோகம் இவை களுக்குக் காரணமான அபஸ்மாரத்தை ஸ்ரீ நடராஜ மூர்த்தியும், தக்ஷிணாமூர்த்தியும் காலால் மிதித்து இருத்தி நிற்பதை ஆலயங் களில் காணலாம்.

மாயூரத்தில் திருவெம்பாவை, திருப்பாவை வளர்ச்சிக்குத் தமது சான்னியத்யத்தால் அருள் புரிவது ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபம்.

சயாம் நாட்டிலும் திருவெம்பாவை திருப்பாவை உத்ஸவத்திற்குத் தொன்றுதொட்டு நடுநாயகமாக விளங்குவது ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் வடிவமேயாகும். ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் வடிவத்தை பொய்கை ஆழ்வார், 'அரன் நாரணன்நாமம்........................மேனியொன்று' என்னும் பிரசித்தமான ஒற்றுமைப் பாசுரத்திற்கு முன் பாசுரமாய் யிருக்கும்,

நெறிவாசல் தானேயாய் நின்றானை, ஐந்து
பொறிவாசல் போர்க்கதவம் சார்த்தி - அறிவானும்
ஆலமர நீழலறம் நால்வர்க் கன்றுரைத்த
ஆலமமர் கண்டத் தரன்.

என்னும் பாசுரத்தில் ஆழ்வார் அழகாக நிரூபித்திருக்கிறார். ஸ்ரீவேதாந்த தேசிகரும் தமது சங்கல்ப சூர்யோதயம் எனும் நாடகத்தில், தாண்டவம் புரியும் நடராஜ மூர்த்தியே ஆலமரத்தடியில் தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபமாக உள்ளார் என்பதாகக் கூறி, தக்ஷிணாமூர்த்தியும் நடராஜ மூர்த்தியும் ஒரே ஸ்வரூபமென்பதை நிரூபிக்கிறார்.

ஆனந்தத் தாண்டவ நடராஜமூர்த்தியின் உத்ஸவ காலமான ஆருத்ராதர்சன காலத்தில் சயாம் நாட்டில் நடக்கும் த்ரியெம்பாவை—த்ரிபாவை உத்ஸவத்திற்குப் பிரதானமாக விளங்குபவர் தக்ஷிணாமூர்த்தி யென்பதும், நம் நாட்டில் திருவெம்பாவை திருப்பாவை மகாநாடுகளுக்குப் பூர்வங்கமாய் நாம் இன்று கூடியிருக்கும் சந்நிதியும் தக்ஷிணாமூர்த்தியின் சந்நிதி என்ற விஷயமும் ஓர் ஒற்றுமையைத் தாங்கி இருப்பது கவனிக்கத்தக்கதாகும். இவ்வியக்கம் நம் நாட்டின் எல்லையைக் கடந்து மீண்டும் எங்கும் பரவ ஈசன் அருள் பாலிப்பாராக."

* * * * *

நந்தன வருடப் பிறப்பன்று ஸ்வாமிகள் மக்களுக்கு அருளிய உபதேசம்.

மக்கள் எளிதான வகையில் தெய்வவழிபாடு செய்ய உதவும்படியான பஞ்சாக்ஷர, அஷ்டாக்ஷர மந்திரங்களையும், திருநாவுக்கரசு ஸ்வாமிகளின் நாலாம் திருமுறையிலுள்ள 'சிவாயநம என்று சிந்தித்து' என்னும் பதிகத்தையும், திருமங்கை ஆழ்வாரது பெரிய திருமொழியில் 'குலம் தரும்' என்னும் பாடலையும் அச்சிட்ட ஒரு லிகிதத்தை நந்தன சித்திரை வருடப் பிறப்பன்று நம் நாடு முழுவதும் மக்களுக்கு வழங்க ஸ்வாமிகள் பணித்தார்கள். இதை மக்களுக்கு வழங்குவதான பணியில் ஈடுபடப் பக்தி நிறைந்த அன்பர்கள் தேவையாயிருந்ததால், திருப்பாவை

திருவெம்பாவை கேந்திரக் குழுவினர் இதைக் குறித்து பத்திரிகையில் ஒரு வேண்டுகோள் விடுத்தனர். 1600 அன்பர்கள் இப்பணியில் பங்கெடுத்துக்கொள்ள இசைந்து குழுவினருக்குக் கடிதம் எழுதினர். இந்த அன்பர்கள் வாயிலாக 4,20,000 லிகிதங்கள் மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன. இந்த லிகிதங்கள் தமிழுடன் மலையாளம், தெலுங்குப் பாஷைகளிலும், அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன. பர்மா, இலங்கை, மலாயா முதலான வெளிநாடுகளிலுள்ள அன்பர்களும் இப்பணியில் தொண்டாற்றினார்கள். முறையாக உபதேசங்களைப் பெறுதவர்களும் இவ்விதம் உபதேசங்களைப்பெற வசதியற்றவர்களுமான எல்லா ஹிந்து மக்களுக்கும் இந்த லிகிதத்தினால் உபதேசத்தை வழங்க வகை செய்யப்பட்டது.

சட்டசபை அங்கத்தினர்களுக்கு அனுப்பிய திருமுகம்.

பாரத நாட்டின் எல்லாச் சட்டசபை அங்கத்தினர்களுக்கும், மத்திய சட்டசபை அங்கத்தினர்களுக்கும் நமது தர்மத்தையும் கலாசாரத்தையும் காப்பாற்ற வகை செய்யும் பொருட்டு ஸ்வாமிகள் ஒரு திருமுகத்தை அனுப்பியிருந்தார்கள். மக்களது வாழ்க்கையை சம்பந்தப்படுத்திச் சட்டங்கள் இயற்றும் பொழுது, நமது பண்பாட்டுக்கு ஒவ்வாத சட்டமெதையும் நிறைவேற்றலாகாதென இந்த அங்கத்தினர்களுக்கு ஓர் வேண்டுகோளையும் ஸ்வாமிகள் விடுத்தார்கள். இந்தத் திருமுகம் 4056 அங்கத்தினர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதேபோல் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களுக்கும் ஓர் திருமுகம் அனுப்பிவைக்கப்பட்டது.

ஆலய நிர்வாகிகளுக்கு அனுப்பிய வேண்டுகோள்.

ஆலயங்களில் பணியாற்றுகின்ற யாவரும் சிவாலயங்களில் முறையே திருமுறை, திருவெம்பாவைப் பாசுரங்களையும், விஷ்ணு ஆலயங்களில் திவ்ய பிரபந்தம், திருப்பாவைப் பாசுரங்களையும் மனப்பாடம் செய்து பாராயணம் செய்யவேண்டுமென 1300 ஆலயங்களின் நிர்வாக அதிகாரிகளுக்கு ஸ்வாமிகளின் கட்டளையின்பேரில் ஒரு வேண்டுகோள் அனுப்பப்பட்டது.

மார்கழி மாதத்தில் விடியற்காலையில் விஷ்ணு ஆலயங்களிலும் சிவ ஆலயங்களிலும் முறையே திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்களை இசையுடன் பாராயணம் செய்து, அதை ஒலிபெருக்கி மூலம் பரப்ப வகை செய்யவேண்டுமெனப் பல ஆலய நிர்வாகிகளை மகாநாட்டின் கேந்திரக் குழுவினர் ஸ்வாமி

மார்கழி மாதம் ஆலயங்களில் திருப்பாவை திருவெம்பாவை பாராயணம்.

களின் விருப்பப்படி கேட்டுக்கொண்டார்கள். அவ்விதம் ஒலி பெருக்கி அமைத்த 43 ஆலயங்களுக்குத் திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி முதலான பாசுரங்களடங்கிய இசைத் தட்டுகளும், பஜகோவிந்தம், விஷ்ணு ஸஹஸ்ரநாமம் இசைத்தட்டுகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

திருவிழாக்களில் துண்டுப் பிரசுர விநியோகம்.

ஸ்ரீமத் ஆசார்யாள் அருளிய "வாழ்க்கையை சீர்ப்படுத்த மூவகை திட்டங்கள்" என்னும் துண்டுப் பிரசுரங்களை கேந்திரக் குழுவினர் திருவிழாக்கள் நடைபெறும் பல ஊர்களில் ஏராளமாக விநியோகம் செய்தனர். அவ்விதம் விநியோகம் செய்யப்பட்ட தலங்களில் மாயூரம், ஸ்ரீரங்கம், திருவண்ணாமலை, வடலூர், திருவையாறு, முதலான தலங்கள் முதன்மையாகும். இத்துண்டுப் பிரசுரங்களில் 1,00,000 பிரதிகளைக் கோயம்புத்தூர் அசோகா பாக்குத்தூள் தொழிற்சாலையின் அதிபரான ஸ்ரீ எம். கே. கிருஷ்ணப்ப செட்டியார் அச்சிட்டு இலவசமாகக் குழுவினருக்கு உதவினார். மேலும், அவர் ஹிந்துமதத்தின் அடிப்படைத் தத்துவங்கள் என்னும் பிரசுரத்தின் 80,000 பிரதிகளை அச்சிட்டு வழங்கினார். இந்தப் பிரசுரமும் திருவிழாக்காலங்களில் பலவூர்களிலும் விநியோகிக்கப்பட்டது. மொத்தம் இந்தப் பிரசுரங்கள் 1,00,000 பிரதிகளுக்கு மேல் வழங்கப்பட்டன.

சிறுவர், சிறுமியருக்கு இலவசமாக திருப்பாவை-திருவெம்பாவை புத்தகம் வழங்கப்பட்டது.

திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, இந்தப் பாசுரங்களை சிறுவர் சிறுமியருக்கு மனப்பாடம் செய்துவைக்கும் பணியில் நம் தமிழ் நாட்டிலுள்ள 390 பள்ளிக்கூடங்களில் தலைமை ஆசிரியர்களுக்கு ஓர் வேண்டுகோள் அனுப்பப்பட்டதில், 64 பள்ளிக்கூட ஆசிரியர்கள் இப்பணியில் தீவிரமாக பங்கெடுத்துக் கொண்டு தொண்டாற்றினர்கள். பள்ளிச் சிறுவர்களுக்கெனத் திருப்பாவை திருவெம்பாவை புஸ்தகங்களில் 21,000 பிரதிகள் இலவசமாக அனுப்பப்பட்டன, 1664 தனி அன்பர்களுக்கு அவர்களது வேண்டுகோளின்படி இப்பிரசுரங்கள் அனுப்பப்பட்டன. மேலும் இலங்கை, மலேயா, பர்மா முதலான வெளிநாடுகளில் 49 சங்கங்களுக்கும் இப்பிரசுரங்கள் அனுப்பப்பட்டுள்ளன. மொத்தத்தில் 90,000 பிரதிகள் இவ்வாறு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ ஆதி சங்கரர் அருளிய பஜகோவிந்தம் என்னும் சுலோகங்கள் முழுவதையும் குறிப்பிட்ட காலத்திற்குள் மனப்பாடம் செய்கின்றவர்களுக்கு ஸ்வாமிகளின் விருப்பப்படி ஸ்ரீமத் பாகவத சுருக்கப் புத்தகம் இனமாக வழங்கப்படுமென்பதாக சமாசாரப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்விக்கப்பட்டது. 1731 அன்பர்கள் அந்தத் தோத்திரங்களை மனப்பாடம் செய்து, அவைகளின் பிரதி தேவை என எழுதியதின் பேரில் அவர்கள் யாவருக்கும் தபால்மூலம் அப்புத்தகங்கள் அனுப்பப்பட்டன. அவர்களில் 265 அன்பர்கள் அப்பாடல்கள் முழுவதையும் மனப்பாடம் செய்துவிட்டதாகத் தெரிவித்துக்கொண்டனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஸ்ரீமத் பாகவதச் சுருக்கப் புத்தகம் இனமாக வழங்கப்பட்டது.

ஸ்ரீமத் பாகவதசுருக்க புத்தக பரிசளிப்பு.

வைகாசி மாதம் விசாகப் பெருநாளன்று ஆரம்பித்து விநாயக சதுர்த்திக்குள் ஔவையார் அருளிய விநாயகர் அகவலையும், திருமுருகாற்றுப் படையையும் மனப்பாடம் செய்ய விரும்பிய 200 நபர்களுக்கு அந்தத் தோத்திரங்களின் பிரசுரங்கள் இனமாக வழங்கப் பெற்றன.

விநாயகர் அகவல் திருமுருகாற்றுப்படை.

தமிழ் நாட்டில் வாரவழிபாட்டுச் சங்கங்கள் நிறுவும்படி 500 அன்பர்களுக்குக் கடிதம் எழுதியதில் பல அன்பர்களின் முயற்சியால் 130 சங்கங்கள் நாட்டின் பல பாகங்களிலும் நிறுவப்பட்டன. அந்தச் சங்கங்களுக்கு தோத்திரப் பாடல்கள் 2000 பிரதிகளும், தெய்வ வணக்கம் 3,700 பிரதிகளும் அனுப்பப்பட்டன. ஞாயிறுதோறும் காலை நீராடியவுடன் அன்பர்கள் சுருதியுடனும், தாளத்துடனும் தோத்திரப் பாடல்களை பாடிக்கொண்டு தங்கள் ஊரிலுள்ள தேவாலயத்தை வலம்வந்து, கோயில் வாயிலில் 12 முறை நமஸ்காரம் செய்து வீடு திரும்ப வேண்டுமென்பது இச்சங்கத்தின் முக்கிய கடமையாகும். பன்னிரெண்டு பேர்களுக்குக் குறையாமல் சேர்ந்த ஒரு ஊரில் இச்சங்கம் ஏற்படுத்திக்கொள்ளலாமென ஸ்வாமிகளின் விருப்பப்படி குழுவினர் ஓர் அறிக்கை விடுத்தார்கள்.

வாரவழிபாடு சங்கங்கள் நிறுவியது.

ஒவ்வொரு வருடமும் ஸ்ரீ ராம நவமிக்கு முன்பு, படிப்பதற்குப் போதிய தகுதி உள்ள ஒவ்வொருவரும் வால்மீகி ராமாயணத்

ஸ்ரீராம நவமியில் ராமாயண பாராயணம்.

தையோ, கம்ப ராமாயணத்தையோ, அல்லது துளசிதாஸரின் ஹிந்தி ராமாயணத்தையோ பாராயணம் செய்து வரவேண்டும் என்றும். அதை இன்ன முறையில் பாராயணம் செய்ய வேண்டுமென்றும், ஸ்வாமிகள் ஹிந்து மக்களுக்கு ஓர் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்கள். அதன்படி நாடெங்கும் ஆயிரக்கணக்கான அன்பர்கள் ராமாயண பாராயணம் செய்துவருகின்றனர். அவர்கள் யாவருக்கும் ராமநாமாவைச் சொல்லிப் பொறுக்கப்பட்ட முழு அக்ஷதை ஸ்வாமிகள் பிரசாதமாக வழங்கப்பெற்று வருகின்றன. இராமாயண சொற்பொழிவு ஆற்றுகின்றவர்களுகு நாம ராமாயணம் என்னும் புத்தகத்தையும் ஸ்ரீகோதண்டராமர்படத்தையும், 25,000 பிரதிகள் அச்சிட்டு அவை 320 ஊர்களுக்கு, சென்ற விஜய ஆண்டில் ஸ்ரீ ராமநவமியன்று அன்பர்களுக்கு கிடைக்கும்படி அனுப்பப்பட்டன. இந்தப் புத்தகங்களையும், படங்களையும் அச்சிடும் பணியை கோயம்புத்தூர் எம். கே. கிருஷ்ணப்ப செட்டியார் ஏற்றுக்கொண்டார்.

ஆஸ்திக அன்பர்களுக்கு ருத்ராக்ஷ மாலை வழங்கியது.

ஸ்வாமிகளைத் தரிசிக்க வரும் அன்பர்கள் ருத்ராக்ஷம் தரித்துக் கொள்ள விரும்பி ஸ்வாமிகளிடம் விண்ணப்பித்துக்கொண்டால், ஸ்வாமிகள் அவர்களுக்கு அந்த மாலைகளை வழங்குவது வழக்கம். ருத்ராக்ஷம் அணிய விருப்பமுள்ளவர்கள் மடத்திற்குக் கடித மூலம் தெரிவித்துக் கொண்டாலும் அவர்கள் யாவருக்கும் தபால் மூலம் இலவசமாக ருத்ராக்ஷ மாலைகளை ஸ்வாமிகள் ஆசியுடன் அனுப்பப்படுமென விளம்பரம் செய்ததன் விளைவாக பல அன்பர்கள் மடத்திற்கு விண்ணப்பித்துக்கொண்டனர். அவர்கள் யாவருக்கும் ருத்ராக்ஷ மாலைகள் அனுப்பப்பட்டன. தூத்துக்குடியில் மாத்திரம் 250 அன்பர்கள் மடத்திலிருந்து இவ்விதம் மாலைகளைப் பெற்றுக்கொண்டனர்.

1950—1951—1952-ஆவது ஆண்டுகளில் செய்த தருமப் பிரசாரம்.

மேற்கண்ட மூன்று ஆண்டுகளிலும் ஸ்வாமிகள் தீவிரமாக தருமப் பிரசாரத்தை மேற்கொண்டு தஞ்சை ஜில்லாவில் பல பாகங்களில் யாத்திரை செய்துகொண்டிருந்தார்கள். பல்வேறு இடங்களில் முத்ராதிகாரிகள் சங்க மகாநாடுகளும், திருப்பாவை திருவெம்பாவை திருமுறை ஆறங்க மகாநாடு

களும் அவ்வருடங்களில் நடைபெற்றன. பல்வேறு துறைகளில் ஈடுபட்ட பிரமுகர்கள் இந்த மகாநாடுகளில் கலந்துகொண்டனர். பொறையாறு சக்திவிலாஸ் மோட்டார் சர்வீஸ் உரிமையாளர் வீரப்ப பிள்ளை, தஞ்சை ஜில்லா போர்டு உபதலைவர் மேனுங்குடி மருதவாணம் பிள்ளை, வலிவலம் மனைத்துணைநாத தேசிகர் ஏனங்குடி விஜயராகவலு நாயுடு, வடபாதி மங்கலம் வி. எஸ். தியாகராஜ முதலியார். கபிஸ்தலம் கோவிந்தஸ்வாமி மூப்பனூர். கும்பகோணம் வக்கீல் கந்தசாமி மூப்பனூர். கும்பகோணம் முனிஸிபல் சேர்மன் ரத்ன சபாபதி செட்டியார், சென்னை, ஹைகோர்ட்டு ஜட்ஜுகள் டி. எல். வெங்கடராமய்யர், பி. ராஜகோபாலன், பஞ்சாபகேச சாஸ்திரிகள், ராகவராவ், சென்னை மேயர் ஆர். இராமநாதன் செட்டியார், திருவனந்தபுரம் சர்வகலாசாலை உப அத்யக்ஷகர் ஸர். ஏ. ராமஸ்வாமி முதலியார் முதலிய பிரமுகர்களும். மற்றும் தஞ்சை ஜில்லாவில் ஸ்வாமிகளுடன் நெருங்கிப் பழகி, அவர்களிடும் பணிகளைக் குறைவர ஆற்றிவரும் மிராசுதார்கள் பலரும். உயர்தர சர்க்கார் உத்யோகஸ்தர்களும்இந்தப் பிரசாரப்பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

1951 - ஆவது வருட சங்கர ஜயந்தி உத்ஸவத்தை ஸ்வாமிகள் நன்னிலம் தாலூகா செம்மங்குடியில் நடத்தினூர்கள். வியாஸபூஜையும் சாதுர்மாத சங்கல்பமும் அத்தாலுகா முடிகொண்டானில் நடைபெற்றன. அங்கு, நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சாஸ்திர வித்வான்களும், சங்கீத வித்வான்களும். கலா ரசிகர்களும். ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்காக வந்து ஸ்வாமிகளைத் தரிசித்து, தங்கள். கலைத் திறனை வெளிப்படுத்தி ஸ்வாமிகளிடம் சன்மானம் பெற்றுப்போனூர்கள். ஒவ்வொரு நாளும் ஸ்வாமிகளைத் தரிசிக்க வித்வான்களும், பிரமுகர்களும் சுமார் 200 பேர்களுக்கு மேல் தொடர்ந்து மூன்று மாதங்கள் வரை வந்துகொண்டிருந்தனர். இவர்கள் யாவருக்கும் அவ்வூர்மிராசுதார் மாடி நாராயணஸ்வாமி ஐயர் என்னும் பக்தர் மிகுந்த உபசரணையுடன் யாவர்க்கும் நற்சுவை உண்டி அளித்தது பாராட்டத்தக்கது. அவ்வருட சாதுர்மாச சங்கல்பம் மிகவும் சிறப்புடன் நடைபெறப் பணி செய்தவர்களில் அவ்வூர் மிராசுதார்களுள் ஸ்வாமிகளிடம் ஒப்பற்ற பக்திகொண்டவருமான வாஞ்சிநாதை

1951, 1952-ஆவது வருட வியாஸ பூஜை.

26

யரை முதன்மையாகக் குறிப்பிடவேண்டும். அவ்வருட நவராத்திரி பூஜை பூந்தோட்டம் ஸ்டேஷனுக்கு அடுத்த ருத்ரகங்கை என்னும் தலத்தில் நடைபெற்றது. அடுத்த 1952-ஆவது ஆண்டில் வியாசபூஜை, சாதுர்மாச சங்கல்பம் வீரசோழன் ஆற்றங்கரையிலுள்ள சாத்தனூர் என்னும் கிராமத்தில் நடைபெற்றது. அந்தக் கிராம மிராசுதார்களான ரத்னமய்யரும், எஸ். ஆர். கிருஷ்ணமூர்த்தி ஐயரும், மற்றவர்களும் ஸ்வாமிகள் அங்குத் தங்கியிருந்த காலத்தில் விசேஷப் பணிகளைப் புரிந்து நற்பயனைப் பெற்றார்கள். கார்த்திகை மாதம். ஆறுபாதியில் சனிப்பெயர்ச்சியை உத்தேசித்து, புருஷஸூக்த ஹோமம், ஸ்ரீ ஸூக்த ஹோமம், மகாருத்ர ஹோமம், ஸ்ரீவித்யாஹோமம், முதலியன நடந்தன:

வேத லக்ஷண வித்வான்கள் 100 பேருக்கு தங்கத்தோடா பரிசளிப்பு.

ஸ்வாமிகள் 1951-ஆவது வருட சங்கர ஜயந்தி உத்ஸவத்தைத் திருவாரூருக்கு அருகிலுள்ள சேம்மங்குடியில் நடத்தியபொழுது 22 வேதலக்ஷண பண்டிதர்களை வரவழைத்து, அவர்கள் யாவருக்கும் யாளி முகம் அமைத்துச் சித்திர வேலைப்பாடுகளுடன் தயாரிக்கப்பட்ட தோடா என்னும் தங்கக் கைவளைகளைப் பரிசாக அளித்தார்கள். இப்பரிசை முதலில் பெற்றவர் ருக்வேதத்தை லக்ஷணத்துடன் கற்றவரும், பரம்பரையாக மடத்தின் உபாத்தியாயராக விளங்கிவந்தவரும், பின்னர் சந்நியாச ஆச்ரமம் பெற்றுச் சித்தியடைந்தவருமான திருக்கோடிகாவல் கிருஷ்ண சாஸ்திரிகள் ஆவர். தென்னாட்டின் பல பாகங்களில் வசிக்கும் இத்தகைய திறமை வாய்ந்த மற்ற பண்டிதர்களுக்கும் பின்னர் மடத்திலிருந்து அழைப்புக்கள் அனுப்பப்பட்டன. அந்த அழைப்புக்கு இணங்கிப் பலர் ஸ்வாமிகள் முகாம் செய்த இடங்களுக்கு வந்து அந்த உயரிய பரிசைப் பெற்றுப் போனார்கள். வயதின் காரணமாக வெகு தூரத்திலிருந்து பிரயாணத்தை ஏற்றுக் கொள்ள முடியாதவர்களுக்குப் பிரதிநிதிகள் மூலம் அப்பரிசு அனுப்பப்பட்டது. இவ்விதம் 100 பண்டிதர்கள் இப்பரிசை பெற்றுள்ளார்கள்.

இவர்களில் 50 பேர்கள் தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்தவர்கள், மற்றவர்களின் வாசஸ்தலங்கள் பின்வருமாறு:

(1) திருச்சி ஜில்லா. 16, (2) மைசூர் ராஜ்யம். 10, (3) சென்னை நகரம். 5, (4) புதுக்கோட்டைச் சீமை. 4, (5) மலை

யாள ராஜ்யம். 3. (6) பம்பாய் ராஜ்யம். 2, (7) ஆந்திர ராஜ்யம். 3. (8) ஹைதராபாத் ராஜ்யம். 1, (9) செங்கல்பட்டு ஜில்லா. 1, (10) திருநெல்வேலி ஜில்லா. 1, (11) மதுரை ஜில்லா. 1, (12) தென்னார்க்காடு ஜில்லா. 1, (13) உத்திரப் பிரதேசம். 1, (14) பனாரஸ்-காசி க்ஷேத்திரம். 1.

சங்கர, ராமானுஜ, மத்வ சித்தாந்தங்களை அனுசரித்த மூன்று மதத்தினரும் எவ்விதப் பாகுபாடுமின்றி இந்தப் பரிசைப் பெற்றனர். இந்த 100 பண்டிதர்களைத் தவிர குறிப்பிட்ட திறன் பெற்றவர்கள் மடத்திற்கு வரும்பொழுதெல்லாம் அவர்கள் யாவருக்கும் இவ்விதத் தோடாப் பரிசைவழங்கி அவர்களை ஸ்வாமிகள் கௌரவித்து வருகிறார்கள்.

* * * *

ஸ்ரீ ராம நாம மகிமையைப்பற்றி ஸ்வாமிகள் சிஷ்யர்களுக்கு உபதேசிக்கையில் கீழேகண்டவாறு உறைத்தார்கள்.

ராமோ ராமோ ராம இதி ப்ரஜானாம் அபவத்கதா :
ராம பூதம் ஜகத் ஸர்வம் ராமே ராஜ்யம் ப்ரஹாஸதி
(வால்மீகி ராமாயணம் யுத்தகாண்டம் சர்க்கம் 131 சுலோகம் 100)

துயரங்கள் நீங்க மருந்து.

“ராமர் ராஜ்யபாரம் செய்து கொண்டிருந்த காலத்தில் ப்ரஜைகள் எப்பொழுதும் ஸ்ரீ ராமா ராமா ராமா என்று, சொல்லிக் கொண்டேயிருந்தார்கள். ராமரது ராஜ்ய பரிபாலனத்தில் உலகமே ராம மயமாகிவிட்டது.” என்று கூறியவாறு பகவந் நாம மகிமையால் நாம் நம் துக்கங்களிலிருந்து விடுதலை அடைய வேண்டும். ஒவ்வொரு ஹிந்துவும் ஒவ்வொரு நாளும் 108 தடவையாவது ராம நாமாவை ஜபிக்க வேண்டும். ராமா என்னும் இரண்டு எழுத்துக்களும் விஷ்ணு மந்திரத்திற்கும் சிவ மந்திரத்திற்கும் முறையே ஜீவாதாரமான அக்ஷரங்களாய் விளங்குவதால், இவ்விரு அக்ஷரங்களால் ஏற்பட்ட ராம என்னும் நாமத்தைச் சமயம் கிடைத்தபோதெல்லாம் காலவரையின்றி யாவரும் ஜபிக்கலாம்.

ஆங்கிலேயர்கூட அக்ஷரத்தின் மகிமையினால் வெற்றியடைந்தார்கள் என்பதைக் கடந்த யுத்தத்தின்பொழுது நாம் கண்கூடாகக் கண்டோம். ரஷ்யாவினாலும் ஜெர்மனியினாலும் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்த இங்கிலாந்து நாடானது மிகவும் பரிதாபப்படக்கூடிய நிலையிலிருந்தபோது, அப்பொழுது அரசாங்கம் நடத்தியவர்

கள் விக்டரி என்னும் சொல்லின் வி என்னும் முதல் எழுத்தை ஜீவநாடியாக வைத்து அரசாங்க நடவடிக்கைகளிலும் மற்றும் பொதுஸ்தாபனங்களிலும் அந்த எழுத்தைப் பொறித்து, யாவரும் அதைக் காணவும் அதைக் கூறவும் செய்தார்கள். அதன் பெருமையினுலேயே வெற்றியைக் கண்டதாக அவர்கள் நம்புகிருர்கள். அக்ஷரத்தின் மகிமையில் அவர்களுக்கு ஈடற்ற நம்பிக்கை இருந்தது, நாமும் ஆழ்ந்த நம்பிக்கையுடன் ராம நாமாவை ஜபிக்க வேண்டும்.''

* * * *

1951-ஆவது ஆண்டில் துலா காவிரி ஸ்நானத்தின்பொருட்டு ஸ்வாமிகள் மாயூரத்தில் தங்கியிருந்தபொழுது, பக்தர்கள் ஸ்வாமிகளுக்குப் பெரியதொரு வரவேற்பை அளித்தனர். இந்த வரவேற்பில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், வக்கீல்களும், வியாபாரிகளும், மிராசுதார்களும், பொது மக்களும் கலந்து கொண்டனர். அப்பொழுது ஸ்வாமிகளுக்குச் சிரிய முறையில் ஓர் ஊர்வலம் நடத்திவைக்க வேண்டுமெனப் பொதுமக்கள் விரும்பினர். அநேகமாகக் கால்நடையாகவே யாத்திரை செய்துவரும் ஸ்வாமிகள் சில வருடங்களாகவே சிவிகையில் அமர்ந்து ஊர்வலம் வருவதை நிறுத்திக்கொண்டுவிட்டார்கள். ஆயினும், மக்களது எல்லையற்ற ஆர்வமும், பக்தியும் அவர்களது கோரிக்கையை ஸ்வாமிகள் ஒருவாறு ஏற்றுக்கொள்ளும்படி செய்துவிட்டன. ஸ்வாமிகளின் சம்மதத்தைப் பெற்ற மகிழ்ச்சியினுல் மாயூரவாசிகள் மிகுந்த சிறப்பான வகையில் ஊர்வலத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனர். அப்பொழுது அங்குச் சப்ஜட்ஜியாக இருந்த ஆர் லக்ஷ்மண ஐயர் மேற்பார்வையில் இவ்வேற்பாடுகளெல்லாம் நடைபெற்றன.

மாயவரத்தில் பக்தர்கள் அளித்தவரவேற்பு. 20-11-1952-ல் நடைபெற்ற பெரிய ஊர்வலம்.

1951-ஆவது வருடம் நவம்பர் மாதம் 20உ இரவு, மாயூரத்தில் இந்த ஊர்வலத்தில் ஸ்வாமிகளைத் தரிசிக்க பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். ஸ்வாமிகள் அன்று தந்தச் சிவிகையில் அமர்ந்து பக்தர்களுக்குக் காட்சியளித்தது மாயூரவாசிகள் என்றும் மறக்கமுடியாத நிகழ்ச்சியாகும். நம் நாட்டில் புகழ்பெற்ற நாதஸ்வர வித்வான்களான திருவாடுவதுறை டி. என். ராஜரத்தினம் பிள்ளை, திருவிடைமருதூர் வீருசாமி பிள்ளை, திருவெண்காடு சுப்பிரமண்ய பிள்ளை, செம்பனுர்கோவில்

கோவிந்தசாமி பிள்ளை இவர்கள் நால்வரும் சேர்ந்து அவ்வூர் வலத்தின் முன் நாதஸ்வரம் வாசித்துப் பக்தர்களை மகிழ்விக்கச் செய்தார்கள்.

* * * *

சிவராத்திரி மகிமை.

மாயூரத்திற்கடுத்த நாகங்குடி என்னும் கிராமத்தில் ஸ்வாமி கள் விஜயம் செய்திருந்தபொழுது, 23-2-1952 மகா சிவராத்திரி அன்று, ஸ்வாமிகள் விசேஷ பூஜைகளை நிகழ்த்திய பின்னர், அங்குக் கூடியிருந்த பக்தர்களுக்குப் பரமசிவனது மகிமையை விளக்கிக் கீழேகண்ட வாறு உபதேசித்தார்கள் :—

"உஷ்ணத்தினுல் உருக்கப்பட்ட நெய்யை நிறமற்றதாகக் காண்கிறோம். அதே நெய் குளிர்ந்தவுடன் வேறொரு நிறத்தை அடைகிறது. ஈசனை உருவமற்றவர், அரூபி, எனச் சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆனால் பக்தர்களின் உள்ளத்தில் ஈசன்பால் அன்பு பரிபூர்ணமாக விளங்கும்பொழுது, அந்தக் குளிர்ந்த நிலையில் உருவமில்லாத கடவுளும், அவர்களது பக்திக்குக் கட்டுண்டு, அவர்களை உய்விக்க ஓர் உருவத்தை அடைகிறார். அவ்விதம் பல உருவங்களை எடுத்துக்கொண்டு ஈசன் நம்மை ரக்ஷிக்கிறார். பரமேச்வரன் மகாவிஷ்ணுவைப் போல் சில அவதாரங்களை எடுக்கா விடினும், அநேக மோகன ரூபங்களை எடுத்துக்கொண்டு பக்தர் களது உள்ளத்தைக் கவர்ந்து வருகிறார்.

ஓர் இடத்தில் ஆபரணம் எதுவுமின்றி இயற்கை எழிலுடன் ஈசன் பிக்ஷாண்டார் மூர்த்தியாகத் திருக்கோலம் கொள்ளுகின்றார்; மற்றொருபுறம் அழகே உருக்கொண்ட சுந்தரேச்வரராக அவர் காட்சியளிக்கிறார். அதே கடவுள் பயமுள்ளவர்களுக்குப் பயத் தைப் போக்கி அபயத்தை அளிக்கும் பைரவ மூர்த்தியாகத் தோன் றுகிறார். வீரத்தைக் காண்பிக்கும் நிலையில், அவரே வீரபத்ரராக வும் காட்சியளிக்கிறார்; தேவர்கள் விரும்பிய ஆனந்தத்தைக் கொடுக்கச் சிற்சபையில் அந்த ஈசனே நடனமாடுகிறார்; எல்லா வற்றிலும் உயர்ந்ததான ஞானத்தைக் கொடுக்கும் தெய்வமாகத் தக்ஷிணாமூர்த்தி வடிவத்துடன் அமர்ந்து, மௌனத்தினால் ஸன காதி முனிவர்களுக்கு அவரே உபதேசம் அருளுகிறார். இவை களெல்லாம் பரமசிவனின் திருக்கோலங்கள்; இவ்விதம் 62 திருக் கோலங்களைப் பரமசிவன் பெற்றிருக்கிறார். ஜகத்தைச் சிருஷ்டி

செய்யும் முறையில் பிரும்மாவென்றும், பரிபாலனம் செய்யும் வகையில் விஷ்ணு என்றும், சம்ஹாரம் அல்லது தன்னுள் அடக்கி வைத்துக்கொள்ளுதல் என்னும் முறையில் சிவன் என்றும் மூன்று நாமரூப பேதங்களை முழுமுதல் சக்தியான ஸர்வேச்வரன் அடைந்திருக்கிறார்.

அம்மூன்று மூர்த்திகளில் பரமசிவனுக்கே அதிகக் கருணை இருப்பதாக நினைக்க வேண்டியிருக்கிறது. சிருஷ்டி வேலையில் ஈடுபடும் பிரும்மாவுக்கு அதிகக் கருணை தேவையில்லை. அவர் சிருஷ்டி செய்யாமலேயே இருந்தால்கூட, அவரை மிகுந்த கருணை மிகுந்தவர் என்று முடிவு செய்துவிடலாம். மகாவிஷ்ணுவோ மக்களின் புண்ணிய பாபங்களுக்குத் தகுந்தவாறு சுக துக்கங்களை அளவிட்டுக் கொடுக்கிறார். பரமசிவனோ பாபம் புரிந்தவன், புண்ணியத்தைச் செய்தவன், ஞானி, அக்ஞானி என்னும் பாகுபாடு இல்லாமல் சம்ஹார காலத்தில், அதாவது பிரளய காலத்தில், யாவருக்கும் ஓய்வு அளித்து, அவர்களைச் சுக துக்கங்களிலிருந்து சிறிது நேரமாவது விடுதலை அடையும்படி செய்கிறார். ஆகவே அவரே கிருபாசமுத்திரம்; அவரே கருணைவள்ளல்.

முதலாழ்வார்கள் கூட, பரமசிவனை, 'முக்கண்ணப்பா' என மனமுருகிப் பாடியுள்ளார்கள். தாயுமானவர் ஈசனை, 'அம்மையப்பா!' எனப் பரிவுடன் அழைக்கிறார். இவ்விதம் எல்லா ஜீவராசிகளுக்கும் அடைக்கலமாக அமைந்திருக்கும் ஈசனது நாளைக் கொண்டாடுவதுதான் சிவராத்திரி. ரூபமற்ற அவர் பக்தர்களது பிரார்த்தனைக்கிணங்கி அரூபத்திற்கும், சொரூபத்திற்கும் இடையில் லிங்க வடிவமாகக் காட்சி அளிக்கின்றார். ஆதியும், அந்தமும் இல்லாத பரமசிவன் இவ்விதம் லிங்கோத்பவ மூர்த்தியாக, நள்ளிரவில் விச்வரூபம் எடுத்த நன்னாளே சிவராத்திரி ஆகும். இந்த உருவத்தின் முடியைக்காண விரும்பிய பிரம்மா அன்னபட்சி உருவத்துடன் ஆகாயத்தில் பறந்தும், அடியைக் காண மகாவிஷ்ணு பன்றி உருவத்துடன் பாதாளம் சென்றும், இவ்விருவராலும் அந்த விச்வரூபம் முழுவதையும் காணமுடியவில்லையாம். அந்த உருவம் எல்லாச் சிவாலயங்களிலும் ஈசனது சந்நிதானத்தின் கர்ப்பகிரஹ விமானங்களுக்குப் பின்புறம், மேற்கு நோக்கி, பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. அங்கு உட்பிரகாரத்தைப் பிரதக்ஷணம் செய்து வரும்பொழுது, இந்த உருவத்தைக் காணலாம். மேலும்

அன்னபக்ஷியின் உருவத்தை மேல் நோக்கியும்; பன்றி உரு வத்தை, கீழ் நோக்கியும் அங்குக் காண்கின்றோம்.

ஜோதி வடிவத்திலிருந்து லிங்கமாக வெளிவந்து பின்னர், லாவண்ய சொரூபத்தை ஈசன் அடைந்த இந்தப் புனித நாள் பிரார்த்தனைக்கும், தியானத்திற்கும் சிறந்த நாளாகும். நடுநிசி யிலேயே பரமசிவன் இந்த உருவத்தை எடுத்தார். பிறப்பில்லாத பரமசிவன் பக்தர்களின் அன்புக்கிசைந்து லிங்க வடிவமாக உதித் தாரென்றதால் அந்தக் கருணாமூர்த்தியின் நினைவாக, இந்த நாள் முழுவதும் நாம் உபவாசம் இருந்து, தூக்கத்தை ஒழித்து, அவரை நினைத்து அவர் திருநாமங்களை ஸ்மரித்து, சிவாலயங்களில் அவ ரது உருவத்தைத் தரிசித்து அவரை வழிபடவேண்டும். அந்த ஈசனை நாம் நாள்தோறும் நினையாவிடினும், இந்நன்னாளிலாவது நினைத்து அவரது அருளுக்குப் பாத்திரமாகவேண்டும்."

பஞ்சாயதன பூஜை யும். ஸ்ரீ சுப்ரமண்யர் ஆராதனையும்.

1952-வது வருடம் ஏப்ரல் மாதம் 29உ, சங்கரஜயந்தி உத்ஸ வத்தை ஸ்வாமிகள் ஆனைதாண்டவபுரத்தில் நடத்தியபொழுது, சிஷ்யர்களுக்குக் கீழே கண்ட உபதேச மொழிகளை அருளினார்கள்.


'ஆதித்யம், அம்பிகாம், விஷ்ணும், கண நாதம், மஹேச்வரம்' என்னும் ஐந்து மூர்த்தங்களை அர்ச்சிப்பதே பஞ்சாயதன பூஜை எனச் சொல்லப்படுகிறது. இந்தப் பஞ்சாயதன பூஜையானது நம் நாட்டில், பொதுவாகப் பலர் இல்லங்களில், தொன்றுதொட்டு நடைபெற்று வருகின்றது. இந்த வழிபாட்டு முறையில் பரமேச் வரர் நடுவிலும், மகாவிஷ்ணு வடகிழக்கிலும், சூரியன் தென் கிழக்கிலும், விநாயகர் தென் மேற்கிலும், அம்பிகை வடமேற் கிலும், இடம் பெற்றுள்ளனர்.

மேலும், பரமசிவன் லிங்க ரூபத்திலும், மகா விஷ்ணு சாளக் கிராமத்திலும், சூரியன் ஸ்படிகக் கல்லிலும், விநாயகர் சிவப்புக் கல்லிலும், அம்பிகை தங்கரேக் அமைந்த ஓர் உலோகத்திலும் அமைந்துள்ளார்கள். இவைகளுள் சிவலிங்கம் நர்மதை நதியிலும். சாளக்கிராமம் நேபாளத்திலும், ஸ்படிகம் தஞ்சைக்கடுத்த வல்லத் திலும், சிகப்புக்கல் வட நாட்டிலுள்ள சோண நதியிலும், தங்க ரேக்கு அமைந்த உலோகம் இமய மலைப் பிரதேசத்திலும் கிடைக் கின்றன. ஆகையால் எந்த வீட்டில் பஞ்சாயதன பூஜை அமைந்


துள்ளதோ, அந்த வீடானது நமது பாரத பூமி முழுவதிலும் உள்ள எல்லாப் புண்ய தீர்த்தங்களுக்கும், புண்ணியத் தலங்களுக்கும் இருப்புத் தலமாக அமைந்துவிடுகிறது. இது பாரத நாட்டின் ஒற்றுமையையும் எடுத்துக் காட்டுகிறது.

பேதமற்ற இந்த ஐந்து தெய்வ வழிபாடுகளுடன் ஸ்ரீ சுப்ரமண்ய வழிபாட்டை ஆறுவது வழிபாடாகச் சேர்த்துக்கொள்ளுவது மிகவும் உத்தமமாகும். இந்த ஆறு விதமான வழிபாடுகளையும் சரியான முறையில் அமைத்து. மக்கள் உஜ்ஜீவிக்கும் வண்ணம் ஸ்ரீ ஆதி சங்கரர் அருள் புரிந்துள்ளார்கள். அக் காரணம் பற்றியே, அவர்களுக்கு ஷண்மத ஸ்தாபனாசாரியார் என்னும் சிறப்புப் பெயர் அமைந்துள்ளது. வடமொழியில் சுமார் ஒன்றரை லக்ஷம் சுலோகங்களுடன் உள்ள ஸ்காந்தபுராணம் தனியே அமைந்திருப்பதுடன், மகாபாரதம், ராமாயணம் முதலான இதிகாசங்களிலும்,அமரகாவியமான காளிதாஸனது குமாரசம்பவம் என்னும் காவியத்திலும், குமரக்கடவுளின் சரித்திரம் கூறப்பட்டுள்ளது. தமிழில் சங்க நூல்களிலும், நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படையிலும் முருகன் பெருமை விளக்கப்பட்டிருக்கிறது. வட நாட்டில் சுப்ரமண்யக் கடவுளைக் கார்த்திகேயன் என்றும், குமாரஸ்வாமி என்றும் அழைக்கின்றனர். தமிழ் நாட்டிலோ குமரன், முருகன் என்னும் பலவிதப் பெயர்களுடன் அவர் விளங்குகிறார். திருமாலின் மருமகனாக அமைந்திருத்தலால், அருணகிரிநாதர் அவரை மருகன் என்ற அழகிய சொல்லால் தமது திருப்புகழில் அன்புடன் குறிப்பிடுகிறார். குமரன் என்னும் சொல்லில் உள்ள அன்பும், மருகன் என்னும் சொல்லில் அமைந்துள்ள அழகும் ஒருங்கே சேர்ந்து பாலன் வடிவமாக உள்ள முருகப்பிரான் தர்மத்திற்கும், சத்தியத்திற்கும் மாறுகச் செயலாற்றிய சூரபத்மாதி அசுரர்களை வென்று தேவர்களுக்கு அபயம் அளித்தார்.

மேலும் ஞானமே வடிவம் கொண்டவர் ஸ்ரீ சுப்ரமண்யர். ஞானஸ்கந்தர், ஞான பண்டிதர் என்றும் அவர் அழைக்கப்படுகிறார். ஞானத்தைக் கொடுத்து அருளும் மூர்த்தியும் அவர்தாம். ப்ரும்மஸ்வரூபமானது சத்து, சித்து, ஆனந்தம் என மூன்று வகையாக விவரிக்கப்படுகிறது. பிரபஞ்சத்தின் உற்பத்தி. நாசம் இவைகளுக்கு ஆதாரமாக இருப்பதே சத் எனப்படுகிறது ; இதைத்



20-11-1951 இரவில் மாயவரத்தில் நடைபெற்ற மாபெரும் பட்டண ப்ரவேசம்



3-6-1952-ல், தருமபுரத்தில் ஸ்ரீலஸ்ரீ பண்டார சந்நதிகள் அவர்களுடன்

தெரிந்து கொள்ளும் அறிவே சித்து என்னும் சக்தி ; சத்தும், சித்தும் சேரும்பொழுது ஆனந்தம் வெளிப்படுகிறது. குமரேசன் ஞானகுருவாக இருந்து இந்த மெய்ஞ்ஞானத்தை உலகிற்கு உபதேசிக்கிறார்.

பரமசிவனது வீர்யம் அக்னி. இந்த வீர்யத்தினால் உண்டானவர், சுப்ரமண்யர் ; அதனால் அவருக்கு அக்னிபூ, என்னும் பெயரும் அமைந்திருக்கிறது. அவரது ஒளி அக்ஞான இருளைப் போக்குகின்றது. ஷண்முகநாதர் திருச்செந்தூரில் கடலோரமாக எழுந்தருளியிருப்பதைக் காணும்பொழுது அலைகளெல்லாம் கடலிலேயே அடங்குவதுபோல், பிரளயகாலத்தில் உலகம் எல்லாம் அவரிடமே லயித்து விடும் என்பதை எடுத்துக் காட்டுவதாகத் தோன்றுகின்றது ; ஆதி சங்கரரும் திருச்செந்தூரிலுள்ள ஸ்ரீ ஷண்முகநாதரைக் குறித்துப் பாடியுள்ளார்.

தமிழ்நாட்டின் தவப்புதல்வரான ஞானசம்பந்தர் ஸ்ரீ சுப்ரமண்யரது அம்சமாகவே விளங்கினார் ; அக்காரணத்தினாலேயே அவருக்குப் பார்வதி தேவியார் ஞானப்பால் ஊட்டினார். கங்கைக் கரையில் வேதவேள்விகளை ஸ்தாபித்த குமாரிலரும் ஸ்ரீசுப்ரமண்யரின் அவதாரமேயாவர். அக்கடவுளை உபாசிப்பதால் மனிதனுக்கு ஏற்படும் எல்லாப் பயங்களும் அவனைவிட்டு விலகி விடும் ; மேலும் மோக்ஷமும் கிட்டும். முருகக் கடவுளின் திருவருள் நம் எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமாய்ப் பிரார்த்திப்போமாக.

* * * *

தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களது அழைப்பை அன்புடன் ஏற்றுக்கொண்டு, நம் ஸ்வாமிகள் சென்ற 1952-ஜூன் மாதம் 3உ இரவு தருமபுரத்திற்குக் கால்நடையாகவே விஜயம் செய்தார்கள், ஸ்வாமிகள் அத்தலத்திற்கு எழுந்தருளிய பொழுது ஆதீனகர்த்தர் அவர்கள் தம் திருக்கூட்டத்து அடியார்களுடன், பூர்ணகும்பம் முதலான மரியாதைகளை அளித்து ஸ்வாமிகளை வரவேற்றார். அப்பொழுது தருமபுரம் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பகுதியின் ஆசிரியர்கள், மாணவர்கள், ஸ்ரீ குருஞானசம்பந்த கழகத்தார் உயர்தரத்தொடக்கப்பள்ளி, தேவாரப் பாடசாலை இவைகளின் ஆசிரியர்கள், மாணவர்கள் ஞானசம்பந்தம் பதிப்பகத்தார், ஆதீனப்பிரசார கோஷ்டியார், வேதாகம பாடசாலையினர்

தருமபுரத்திற்கு விஜயம்.

முதலான பலரும் தத்தம் ஸ்தாபனங்களின் சார்பாக, ஸ்வாமிகளுக்கு வரவேற்பு நன்மலர்கள் அளித்தார்கள். தருமபுரத்தில் ஸ்வாமிகள் மூன்று நாட்கள் தங்கியிருந்தார்கள். ஸ்வாமிகளின் பூஜைக்கும், பரிவாரங்களுக்கும் வேண்டுவன யாவற்றையும் நன்கு கவனிக்க ஆதீனகர்த்தர் அவர்கள் சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். ஒவ்வொரு நாளும் ஸ்வாமிகளிடம் அவர்கள் தனிமையில் பல மணி நேரம் அளவளாவி, மக்களிடம் தெய்வ நம்பிக்கையைப் பரப்பும் விஷயமாய்ப் பற்பல ஆலோசனைகளைச் செய்தார்கள். இரண்டு சமயாசாரியர்களும் சந்தித்துப் பேசியது தருமபுரம் மட்டுமன்று, தமிழ்நாடே மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சியாகும்.

---

10. பொதுநலப் பணிகள்

சில பூர்த்த தருமங்கள்.

ஸ்வாமிகள் நிறுவிய முத்ராதிகாரிகள் திட்டப்படி, குறிப்பாகத் தஞ்சை ஜில்லாவில் பூர்த்த தருமம் எனக் கூறப்படும் குளம் வெட்டும் புனிதப் பணியானது பல ஊர்களில் நடைபெற்று வந்திருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் நூற்றுக்கணக்கான குளங்கள் வெட்டப்பட்டுள்ளன. நன்னிலம் தாலுகா, திருக்கண்ணபுரத்தில் ஸ்ரீ சௌந்திரராஜப் பெருமாள் சந்நிதியின் புஷ்கரணியானது பொது மக்களின் சரீரப் பிரயாசையுடன் வெட்டப்பட்டும், செம்பிய மகாதேவி கிராமத்தைச் சேர்ந்த தருமவான்களான ரங்கஸ்வாமி நாயுடு, கிருஷ்ண ஸ்வாமி நாயுடு இவர்களின் பொருளுதவியைக் கொண்டு ரூபாய் இருபத்தாறுயிரம் செலவில், நான்கு பக்கங்களிலும் சுவரும் படித்துறைகளும் எழுப்பப்பட்டும் உள்ளன. 25-10-1951ல் ஸ்வாமிகளே நேரில் அங்கு விஜயம் செய்து குளத்திற்குப் புதுத் தண்ணீர் விடும் விழாவைத் துவக்கி வைத்தார்கள்.

இந்தத் திட்டத்தின்படி பொறையாற்றில் 1 ஏக்கர் 38 செண்டு விஸ்தீரணமுள்ள அவ்வூர் விச்வநாத சுவாமி கோவில் குளமானது சென்ற 22-6-52உ ஒரே நாளில் வெட்டப்பட்டது. இந்தப் பணியானது பொறையாறு ஸ்ரீ சக்தி விலாஸ் பஸ் சர்வீஸ் சொந்தக்காரரும், மாயவரம் தாலுக்கா முத்ராதிகாரிகள் சங்கத் தலைவருமான ஜி. வீரப்ப பிள்ளையின் விசேஷமுயற்சியால் நடைபெற்றது.

அன்று காலை 7-மணிக்கு, சுமார் 1,200 ஜனங்கள் மண் வெட்டி, தட்டுக்கூடை முதலான சாதனங்களுடன் பஜனை செய்துகொண்டே குளம் வெட்டும் தலத்திற்கு வந்துசேர்ந்தனர். முதலில் நம் ஸ்வாமிகள் அனுக்கிரகித்து அனுப்பியிருந்த விபூதிப் பிரசாதம் யாவருக்கும் வழங்கப்பட்டது. தாலுக்கா முத்ராதிகாரிகள், ஸ்ரீ மடம் சிப்பந்திகள், பிரபல மிராசுதார்கள், சேரி மக்கள், பள்ளிச் சிறுவர்கள், தில்லையாடி சங்கரானந்த ஸ்வாமிகளது குருகுலத்தின் மாணவர்கள், இவர்கள் யாவரும் அந்தக் குளத்தை வெட்டும் திருப்பணியில் இறங்கினர். அவர்களில், மிராசுதார்களின் வீட்டுப் பெண்மணிகள் உள்பட ஆயிரக்கணக்கான ஸ்திரீகளும் காணப்பட்டனர். இவர்கள் யாவரும் ஒருங்கே சேர்ந்து மிகவும் குதூகலத்துடன் சரீரசிரமத்தை மறந்தவர்களாய், இந்தப் பணியைத் துவக்கினுர்கள். அவர்கள் ' ஹரோ, ஹரா! '' என்றும், ''ஸ்ரீ ராமா; ராமா!'' என்றும் கோஷங்களை எழுப்பியவாறு, உயர்வு தாழ்வு என்னும் மனப்பான்மை சிறிதுமின்றி தாங்களே மண்ணை வெட்டி, அதைக் கூடைகளில் தாங்கி, தலையில் சுமந்து கரையில் சேர்த்தனர். இந்தப்பணியில் அந்தக் கிராம மக்களுடன் பக்கத்து ஊர்களாகிய சந்திரவாடி, தில்லையாடி, கோட்டை, சுண்ணும்புப் பாளையம், அரிசிக் காரப்பாளையும், ஆறுபாதி முதலான கிராம மிராசுதார்களும், அவர்களின் பண்ணையாட்களும் கலந்து கொண்டனர். நகர காங்கிரஸ் கமிட்டி மெம்பர்களும் இதனில் ஈடுபட்டனர். காலையில் ஆரம்பித்த பணியானது பகல் 12-மணி வரையும் தொடர்ந்து நடைபெற்றது, பின்னர் இடைவேளைக்குக் கூட்டம் கலைந்தது. யாவரும் சிறிது உணவு அருந்தி, சிறிது நேரம் ஓய்வு எடுத்துக்கொண்டனர். மாலை 3 மணிக்கு மறுபடியும் திருப்பணி தொடங்கி, மாலை 6 மணி வரையில் நடைபெற்றது. திருப்பணி நடைபெற்ற பொழுது முத்ராதிகாரித் தொண்டில் இணையற்ற பற்றுடன் உழைத்துவரும் வழுத்தூர் இராமஸ்வாமி ஐயர் தொண்டர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வண்ணம் மனம் உருகிப் பஜனை செய்துகொண்டிருந்தார்.

மாலை 6 மணிக்கு இந்தக் கைங்கரியம் முடிவுற்றவுடன் யாவரும் படங்களுடன் குளத்தை வலம் வந்து சக்திவிலாஸ் காரியாலயத்தை அடைந்தனர். அங்கு மாயவரம் தாலுகா முத்ராதிகாரிகள் சங்கக் காரியதரிசி ஆர். கிருத்திவாஸய்யர் இந்தப் புது

முறையில் ஸ்வாமிகளின் விருப்பப்படி இத்திருப்பணி நடைபெற்ற ஏற்பாடுகளைப்பற்றி விளக்கம் கூறினர். ஸ்ரீமடம் சர்வாதிகாரியும், முத்ராதிகாரி சங்கத்தின் பொது நிர்வாகியுமான ஏ. ஆர். சேஷய்யா சாஸ்திரிகள் பேசியபொழுது, வீ ர ப் பி ள் ளை. ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளிடம் அளவுகடந்த பக்தி வைத்திருப்பதினல்தான் இம்மாதிரி கைங்கரியத்தைச் செய்து முடிப்பது சாத்தியமாயிற்றென்றும், அவர் இந்த இயக்கத்திற்கு ஓர் ஆணி வேர் போல் விளங்குகிருரென்றும் கூறினர். மேலும், பொறையாறு ரங்கஸ்வாமி ஐயரும், சேலக்கரை விச்வநாத சர்மாவும், சக்தி விலாஸ் மானேஜர் ராமன் நம்பியாரும், மற்ற சிப்பந்திகளும் இதில் எடுத்துக்கொண்ட முயற்சியைச் சாஸ்திரிகள் மிகவும் பாராட்டிப் பேசினர். இதில் தொண்டாற்றிய ஒவ்வொருவரும் தாங்கள் இப்புவியில் சிறந்த பயனை இச்சிறு பணியின் மூலம் அன்றே அடைந்ததாக எண்ணி மனமகிழ்ந்தனர். சமூக உழைப்பின் பெரிய சாதனையைக் கண்டு யாவரும் வியப்படைந்தனர். எளிதான வகையில் ஸ்வாமிகள் வகுத்த அந்தத் திட்டத்தை யாவரும் பாராட்டி, மேன்மேலும் இம்மாதிரித் திருப்பணிகள் நடக்க அநுக்கிரகம் புரியவேண்டுமென சர்வாதிகாரியின் மூலம் ஸ்வாமிகளை வேண்டிக் கொண்டனர்.

திருவலஞ்சுழியில் மற்றெரு குளம் வெட்டுத் திருப்பணி.

பொறையாற்றில் நடைபெற்றதுபோலவே, 1952-வதுவருடம் ஜூலை மாதம் 7-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை கும்பகோணம் தாலுக்கா திருவலஞ்சுழியில் குளம் வெட்டும் திருப்பணி ஒன்று நடைபெற்றது. அன்று அவ்வூர் விநாயகர் ஆலயத்திலிருந்து மேள வாத்தியத்துடனும், வேதபாராயணம், பஜனை கோஷ்டி முதலியவைகளுடனும் தொண்டர்கள் மண்வெட்டி, தட்டுக்கூடை சகிதம் குளம் வெட்டும் தலத்திற்கு ஊர்வலமாக வந்து சேர்ந்தனர். சுவாமி மலை ஸ்ரீ பாலசுப்பிரமண்ய தேசிகர் கடவுள் தோத்திரம் பாடியவுடன், திருப்பணி ஆரம்பமாயிற்று. சுமார் 1500 பேர்களுக்கு மேல் இத் திருப்பணியில் கலந்துகொண்டனர். அதில் முக்கியமாகக் காணப்பட்ட சிலரது பெயர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. பொறையாறு சக்திவிலாஸ் பஸ் உரிமையாளர், ஜி. வீரப்பபிள்ளை.

2. கபிஸ்தலம், ஆர். கோவிந்தசாமி மூப்பனுர்.
3. பாபநாசம் டாக்டர், பி. என். ரத்தினம் ஐயரும், அவரது குடும்பத்தினரும்.
4. அலவந்திபுரம், ஏ. லெக்ஷமணய்யர்.
5. பம்பப்படையூர், சுந்தரராஜ வன்னியர்.
6. மாடாக்குடி முத்தையாப் பிள்ளை.
7. சேஷம்பாடி, நடேசப் பிள்ளை.
8. திம்மகுடி, சுப்பிரமணியய்யர்.
9. ஷை சீனிவாஸய்யர்.
10. ஸ்வாமிமலை, தேவஸ்தானம் எக்ஸிகுடிவ் ஆபீஸர், கோவிந்தராஜலு நாயுடு.
11. சுவாமிமலை, அப்புராயர் என்னும் B. ராமசந்திரராவ்.
12. சுவாமிமலை, ஆத்மநாத தீக்ஷதர்.
13. பட்டீசுவரம், ராஜகோபால் நாயுடு.
14. கோவிந்தபுரம், கணேசய்யர்.
15. திருவலஞ்சுழி, பரமசிவம் பிள்ளை.
16. உடையாளூர், பி. வைத்தினுதய்யர்.
17. கும்பகோணம் டாக்டர், ஆர். மஹாலிங்கய்யர்.
18. கும்பகோணம் முனிஸிபல் சேர்மன், எம். ஸி. எஸ். ரத்னசபாபதி செட்டியார்.
19. ஸ்ரீ மடம் சர்வாதிகாரி, ஏ. ஆர். சேஷய்ய சாஸ்திரிகள்.
20. பொறையார் என். ரங்கசாமி ஐயர்.
21. கும்பகோணம், கோபு செட்டியார் குடும்பத்தினர்.
22. கும்பகோணம் வக்கீல், வி. விச்வேச்வரைய்யர்.
23. கும்பகோணம் வக்கீல், டி. சொக்கலிங்கம் செட்டியார்.
24. குப்பகோணம் வக்கீல், ஆர். வெங்கட்டரமணைய்யர்.

இவர்களுடன், திப்பராஜபுரம் மகாஜனங்கள், உள்ளூர் வைத்தி லிங்கம் பிள்ளை எஸ்டேட் சிப்பந்திகள், சுந்திரம் பிள்ளை எஸ்

டேட் குடி ஜனங்கள், அம்மாப்பேட்டை கிராமக் குடிமக்கள், நாட்டாண்மைக்காரர்கள், சேரிமக்கள், கும்பகோணம் தாலுக்கா முத்ராதிகாரிகள், உப முத்ராதிகாரிகள், ஸ்ரீ மடம் சிப்பந்திகள், தர்மத்தொண்டு சபையின் அங்கத்தினர்கள் இவர்கள் ஏராளமாக இப்பணியில் கலந்துகொண்டனர். உயர்தர மிராசுதாரர்கள் குடும்பத்தைச் சார்ந்த பெண்மணிகள் பலரும் அதில் காணப்பட்ட னர். 'ஸ்ரீ ராமா! ஸ்ரீ கோவிந்தா! ஸ்ரீ முருகா!' என்னும் கோஷங்களுடன் இந்தத் திருப்பணி காலை 7 மணிக்குத் துவக்கம் செய்யப்பட்டு பகல் 1 மணி வரை நடைபெற்றது. இந்த அரிய தொண்டில் ஈடுபட்டவர்களுக்கெல்லாம் வைத்திலிங்கம் பிள்ளை எஸ்டேட் தர்மத்திலிருந்து ஆகார வசதி அளிக்கப்பட்டது. பின் னர் பிற்பகல் 3 மணிக்கு, மறுபடியும் திருப்பணி துவக்கப்பட்டு 5 மணிவரை கைங்கரியம் நடைபெற்றது. எவ்வித ஊதியமும் கொடுக்கப்பெருமல், முழுவதும் மக்களின் உழைப்பினுலேயே நடைபெற்ற இத்திருப்பணியின் பெருமையைப்பற்றி அந்தப்பக் கங்களிலுள்ள கிராமத்தார்கள் மிகவும் பாராட்டிப் பேசினர். இந்த அதிசயமான திட்டத்தை மக்களுக்கு வகுத்துக்கொடுத்த ஸ்ரீ ஸ்வாமிகள் இத்துறையில் மக்களுக்கு மேலும் ஊக்கம் அளிக்க வேண்டுமென பிரார்த்திக்கொண்டனர். காரியதரிசி ச. சுப்பிரமணி ஐயர் யாவருக்கும் வந்தனோபசாரம் கூறியபிறகு அப்பெரும் கூட் டம் கலைந்தது.

குருவார விளம்பரம்.

தற்காலம் பல தொல்லைகளால் வருந்திவரும் பெரும்பாலான மக்கள் சீராகவும் நேர்மையாகவும், கடன் தொல்லையால் பாதிக்கப் படாமலும், கூடியவரை மன நிம்மதியுடனும் வாழ்வதற்குச் சில உபாயங்களை ஸ்வாமிகள் வகுத்து குருவார விளம்பரம் என்னும் பெயருடன் அவைகளை மக்கள் அறியுமாறு சென்ற 1952-வது வருடம் ஆகஸ்டு, செப்டம் பர் மாதங்களில் தமிழ் நாட்டின் பிரபல ஆங்கில, தமிழ்த் தினசரி பத்திரிகைகளில் வெளியிட விருப்பம் கொண்டார்கள். ஸ்வாமி களின் விருப்பப்படிப் பிரபல தினசரி பத்திரிகைகளான ஹிந்து' மெயில், எக்ஸ்பிரஸ், சுதேசமித்திரன், தினமணி, இவைகளின் உரிமையாளர்கள் அவரவர்களின் பத்திரிகைகளில் அவ்விளம்பரங் களைக் கட்டணம் எதுவும் பெருமல் தொடர்ந்து சில வியாழக் கிழமைகளில் வெளியிட்டனர். பிரபல விளம்பர கம்பெனி ஒன்

றின் உரிமையாளரும், ஸ்வாமிகளிடம் மிகுந்த பக்தி பூண்டவரு மான அன்பர் ஒருவரின் முயற்சி இத்துறையில் பாராட்டுதற்குறிய தாகவிருந்தது. அந்த விளம்பரத்தின் வாசகம் பின் வருமாறு:—

நாம் இனிக் கவனக் குறைவாக இருக்கக் கூடாத மூன்று விஷயங்கள்.

1. காப்பிக்குப் பதிலாக, அரிசி நொய், கோதுமை நொய் இவைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மோர்க்கஞ்சியைக் கையாண்டால் மக்களுக்குக் காப்பிப்பித்து குறைந்துவிடும். இதை அனுபவத்திஞல் அறியலாம்.

2. ஆடவர்கள் பள்ளிகளில் படிக்கும் காலம் வரையாகிலும், பெண்கள் எப்போழுதுமே, சினிமாக் காட்சிகளுக்குப் போகாமல் இருப்பது நலம். ஆனல் இலவசமாகக் கல்வி அபிவிருத்தியின் பொருட்டுக் காட்டப்படும் படங்களைப் பார்ப்பதில் தோஷமில்லை.

3. ஆடைகள், அதிலும் குறிப்பாகப் புடவைகள், கூடிய வரை ஆடம்பரமில்லாத ரகங்களாகவே வாங்கப்படவேண்டும். இவ் விஷயத்தில் பணக்காரர்கள் வழிகாட்டவேண்டும்.

மேற்கண்ட மூன்று விஷயங்களுடன் சமூகத்திற்குக் கீழ்க் கண்ட உபதேசங்களையும் ஸ்வாமிகள் அந்த விளம்பரத்தில் சேர்ந் திருந்தார்கள்.

குடும்ப நிர்வாகமும், சீரான வாழ்க்கையும், தெய்வீக அருளும் மக்களிடை வரவரக் குறைந்து வருவதைத் தடுக்கவேண்டும்.

காப்பியையும், சினிமாவையும், கற்புக்கு ஏற்படும் ஆபத்துக் களையும் கவனத்துடன் சிறிதுசிறிதாவது குறைக்கும் பணியில் ஒவ்வொருவரும் ஈடுபடவேண்டும்.

கலப்புப் படிப்பு வேண்டாம். வயது வந்த பெண்களைப் பள்ளிக்கு அனுப்பாமல் வீட்டிலேயே சாத்தியமானவரை கல்வியைக் கற்றுக்கொடுக்கலாம். வீட்டுப்படிப்பில், முக்கியமாகத் தாய்ப்பாஷையில் மகாபாரதத்தில் பீஷ்மரது உபதேசங்களடங்கிய அனுசாஸன பர்வத்தைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

வயது வந்த பிறகு கல்யாணமாகும்வரை, பெண் குழந்தை களைக் கண்டபடி வெளியில் விடாமல் காப்பாற்றுவது நமது மதத் தில் அநேக குடும்பங்களில் தொன்றுதொட்டு வழங்கி வருகிறது. காலத்தில் கல்யாணம் செய்ய முடியாதவாறு நிர்ப்பந்தம் ஏற்படும் எல்லாக் குடும்பங்களும் இம்முறையைக் கையாளலாம்.

நாடும், குடித்தனமும், உண்மையில் சீராக ஹிந்துக்கள் ஒவ்வொருவரது தனித்தனியான ஒத்துழைப்பும் இம் முயற்சிகளில் அவசியம் தேவையுள்ளதாக இருக்கிறது.

* * * *

ஒவ்வொரு நாளும் மாலையில் நேரும் சந்தியாகாலம் பிரதோஷ காலமாகும். ஒவ்வொரு திரயோதசியன்று நிகழும் சந்தியா காலத்தையே மகாப்பிரதோஷமெனக் கூறுகின்றோம். பரமசிவன் பிரதோஷ காலத்தில்தான் நர்த்தனம் செய்கிறார். இந்த நர்த்தனத்தில் பிரம்மா தாளத்தையும், மகாவிஷ்ணு மத்தளத்தையும் வாசிக்கின்றார்கள். அக்காலத்தில் எல்லா மூர்த்திகளும், தேவர்களும், சிவபிரானின் சந்நிதானத்தை வந்தடைகிறார்கள். அக்காரணமாகவே பெரியோர்கள் சந்தியா காலத்தில் சிவாலயத்தைத் தவிர வேறு ஆலயங்களில் ஸ்வாமி தரிசனம் செய்வது வழக்கமில்லை. மேலும் எல்லா மூர்த்திகளையும் ஒரே காலத்தில் தரிசிக்கும் பயன் சிவாலயத்தில் பிரதோஷ காலத்தில் தர்சனம் செய்வதால் கிட்டும். நம் ஸ்வாமிகளும், சந்திர மௌளீச்வரருக்கு மகாப்பிரதோஷ பூஜைசெய்யும்காலத்தில் சிவ தாண்டவச் சின்னங்களை விளக்குவதும், முழுவதும் ருத்திராக்ஷங்களினால் அமைக்கப் பெற்றவைகளுமான கிரீடம், கவசம் முதலானவைகளை அணிந்து சிவஸ்ரூபமாகக் காட்சியளித்து வருவதைப் பல பக்தர்கள் கண்டு பேரானந்தம் அடைந்துள்ளார்கள்.

பிரதோஷ காலத்தில் சிவதாண்டவம். சம்பு நடனம் அரங்கேற்றம்.

தத்துவங்களை மொழிகளைக்கொண்டு உபதேசிப்பதைக் காட்டிலும், நாட்டிய அபிநயவாயிலாகக் காட்டும் முறையில் அறிவிப்பது, உள்ளத்தில் ஆழ்ந்துப் பதியுமாதலால், அதே முறையை நம் முன்னோர்களான முனிவர்களும் கையாண்டனர்.

சிதம்பரத்தில் சிவபெருமான் பதஞ்தலி முனிவருக்குப் பிரபஞ்ச தத்துவங்களையும், மோக்ஷ தத்துவத்தையும் தம் ஆனந்தத் தாண்டவ நடனத்தின் மூலமே விளக்கிக் காட்டினார். அந்த நடனத்திற்கு உகந்த முறையை அனுசரித்துச் சம்பு நடனம் என்னும் விருத்தத்தில் அம்முனிவர் எட்டு சுலோகங்களை இயற்றினார். பதஞ்சலி முனிவரின் அந்தச் சம்புநடன அஷ்டகத்தில், மத்தள லயத்தின் ஓசையும், ஜலஜ்ஜலரவத்தின் ஆரவாரமும் ஒலிக்கின்றன. காலும் கொம்புமில்லாத, (சரண சிருங்க

ரகித) விருத்தங்களென இவைகளைக் கூறுவதுண்டு. உயிர் எழுத்துக்களான ஆ, ஈ, ஓ என்னும் எழுத்துக்கள் தனியாகவோ, மெய்யெழுத்துக்களுடன் சேர்ந்தோ இந்த விருத்தங்களில் எங்கும் காணப்படாததே இதற்குக் காரணமாகும். மேலும், பதஞ்சலி முனிவர் ஆதிசேஷன் அவதாரமாய்ப் பாம்பின் உருவத்துடன், காலும் கொம்புமில்லாதவராய் விளங்குவதாலும், அவரது பக்கத்தில் காட்சியளிக்கும் நந்திகேச்வருக்குக் கொம்பும், வியாக்ர பாதருக்கு காலும் இருப்பதாலும், பதஞ்சலி முனிவருக்கு இவ்விரண்டும் இல்லாததை அழுத்தமாகக் குறிப்பிடும் வகையில், காலும் கொம்புமற்ற அந்த முனிவர் இயற்றிய இந்த அஷ்டகத்திற்குச் சரணசிருங்க ரகிதம் (காலும் கொம்பும் இல்லாதது) என்னும் அடைமொழி வந்ததாகவும் ஒருவாறு ஊகிக்கலாம். சரணம்—கால்; சிருங்கம்—கொம்பு.

சிவபெருமான் தாண்டவமாடிக் காட்சியளித்த க்ஷேத்திரங்களிலெல்லாம் இன்றும் இந்த நடனத்தை அனுசரித்த சுத்த மத்தளமும், தாளமும் மாத்திரம் பிரதோஷ காலத்தில் வாசிக்கப்படுகின்றன. ஆனால், இந்த அஷ்டகத்தை நடைமுறையில் பாடும் வகையை இதுவரை எவரும் அமைக்கவில்லை. இக்குறை ஸ்ரீ மடத்தின் ஆஸ்தான சங்கீத வித்வான் ஆஸ்தான ரத்னமணி ஸ்ரீ வாஞ்சியம் ராமச்சந்திரையரால் நீக்கப்பட்டது. ஸ்வாமிகளின் கட்டளைபின்படி, இந்த வித்வான் சம்புநடன அஷ்டகத்திற்கு ராகதாளங்களை அமைத்து, அவற்றை அனுசரித்து சுத்த மத்தளத்தையும், சங்கநாதத்தையும் சேர்படுத்தி, நடனமாக அமைத்தார்.

ஸ்வாமிகள் சாதுர்மாத சங்கல்பத்திற்காகத் தஞ்சை ஜில்லா சாத்தனூர் என்னும் கிராமத்தில் விஜயம் செய்திருந்தபொழுது, (29-8-52) மகாப் பிரதோஷ காலத்தில் ஸ்வாமிகள் பூஜையில் அமர்ந்திருந்த சமயம், அந்த நடனத்தை அந்த வித்வான் ஸ்ரீ சந்திரமௌளீச்வரர் சந்நிதானத்தில் அரங்கேற்றம் செய்தார். அவருடன் அவருடைய நான்கு சீடர்கள் தாளத்துடன் இந்த அஷ்டகத்தைப் பாடினர். நன்னிலம் தாலுக்கா நல்லுவச்சேரியிலுள்ள பரம்பரை சங்கவாத்தியக்காரர்கள் இந்த நடனத்தில் சங்க வாத்தியம் வாசித்தனர். கைதேர்ந்த மிருதங்க வித்வான் ஒருவர் சுத்த மத்தளம் வாசித்தார். இந்த நர்த்தனத்தை அன்று அங்குத் தரிசனத்திற்குக் கூடியிருந்த அந்தக் கிராமவாசிகளும், நூற்றுக்கணக்கான

வெளியூர்ப் பக்தர்களும் கண்டுகளித்தனர். அச்சமயம் டில்லி சுப்ரிம்கோர்ட்டு நீதிபதி என். சுந்திர சேகர ஐயரும், சென்னைத் துறைமுக தலைமை அதிகாரி ஜி. வெங்கடேச்வரனும், சென்னை நகர் மாகாண மாஜிஸ்திரேட் ஸி.டி. வெங்கட்ரமணனும், ஸ்வாமிகளைத் தரிசிக்க அங்கு வந்திருந்தனர். அதுவரை கண்டிராத வகையில் அந்த ஆனந்த நடனத்தை ஆடிய அந்த வித்வானை அவர்கள் மிகவும் பாராட்டினர். இந்த நடனத்தின் புனிதத் தன்மைக்கு எவ்விதக் குறைபாடும் ஏற்படாமலிருக்கும்பொருட்டும், மேலும் இது ஒரு கண்காட்சியாக மாறிவிடக்கூடாதென்ற நோக்கத்துடனும் இந்த நடனத்தைத் தமது அனுமதியின்றி அந்த வித்வான் எவ்விடத்திலும் நர்த்தனம் செய்து காட்டக்கூடாதென ஸ்வாமிகள் கட்டளையிட்டுள்ளார்கள். நடனமாடிய வித்வான் ராமச்சந்திரையருக்கு அன்று ஸ்வாமிகள் பீதாம்பரமும் தங்கம் கட்டிய ஸ்படிக மாலையும் அளித்து அவரை மிகவும் பெருமைப்படுத்தினுர்கள். அவருடன் பாடிய சிடர்களுக்கும், சங்கவித்வானுக்கும், மிருதங்க வித்வானுக்கும் தக்கவாறு சன்மானங்கள் அளிக்கப்பட்டன.

* * * *

ஹிந்து அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்.

அநாதையாக இறக்கும் ஹிந்துக்களின் சடலங்களை ஹிந்து முறைப்படி ஸம்ஸ்காரம் செய்யவேண்டியதற்காகத் தொண்டர்களைக்கொண்ட சபை ஒன்றை 1953-ஆவது ஆண்டில் ஸ்வாமிகள் கும்பகோணத்தில் நிறுவினுர்கள். இந்தக் கைங்கரியத்தில் தொண்டர்களாக வருவதற்கு வெகு சிலரே முன்வருவார்களென்பது யாவரும் அறிந்ததுதான். கும்பகோணம் நகர முத்ராதிகாரி சங்கத்தின் ஒரு கிளையாகவே இது நிறுவப்பட்டது. கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் இவர்களில் எவராவது அநாதையாக இறந்தால், அவர்களது பிரேதத்தைத் தாமதியாமல் எடுத்து அடக்கம் செய்யச் சங்கங்கள் இருக்கின்றன. அதற்கெனச் சிலரால் பணமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நமது ஹிந்துக்களுக்குக்கோவென்ருல் இவ்வித ஏற்பாடுகள் எதுவுமில்லை. தெருக்களின் ஓரங்களில் இறந்துகிடக்கும் ஹிந்து அநாதைப்பிணங்கள் பலமணி நேரம் கேட்பாரற்றுக் கிடந்து, கடைசியாக முன்ஸிபாலிட்டி வண்டிகளில் தோட்டிகள் எடுத்துச் செல்லவேண்டிய நிலையில்

உள்ளன. இந்த அவலநிலையை ஸ்வாமிகள் மிகவும் வருத்தத்துடன் உணர்ந்தே இந்தச் சபையை நிறுவினார்கள். இது கும்பகோணம் நகரில் முதலில் பரீக்ஷார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டது. இந்தவகையில் மற்ற நகரங்களிலும். கிராமங்களிலும் இம்மாதிரி சபைகள் ஆரம்பிக்கப்படவேண்டுமென்பது ஸ்வாமிகளின் அவா. இது சம்பந்தமாக ஸ்வாமிகள் விடுத்த ஓர் அறிக்கை பின்வருமாறு :—

"ஜீவாத்ம கைங்கரியம் என்னும் தர்மத்தை அடிக்கடி நினையுங்கள். பஞ்சபூதங்களினாலும். சூரியன் சந்திரன் போன்ற விண்மீன்களாலும், பயிர் பச்சை முதலிய தாவரங்களினாலும், விலங்கு பறவை முதலிய ஜீவஜந்துக்களினாலும், மனித சமூகத்தினாலும் நாம் அடையும் நன்மைகளை எண்ணிப் பாருங்கள். அவற்றிற்கு நாம் செய்யும் கைம்மாறுதான் என்ன? நாம் தனி மனிதர்களாகப் பிறந்து வளர்ந்து சாகவில்லை; சமூகத்திலே பிறந்து வளர்ந்து இருக்கின்றோம்; சமூகமே நம்மை வளர்க்கிறது; அச்சமூகத்திற்கு நாம் செய்யும் நன்றி யாது?

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு (குறள்—110)

நாம் பெறும் நன்மைகளுக்கெல்லாம் கைம்மாறு ஜீவாத்ம கைங்கரியமேயாகும். இரவில் படுக்கும்பொழுது ஓர் கேள்வியைக் கேட்டுக்கொள்ளுங்கள். அதாவது. 'இன்று நாம் ஜீவாத்ம கைங்கரியம் என்ன செய்தோம்?' என்பதே; அதன் விடையில்தான் நமது மனிதத்தன்மை நிலைபெறுகிறது."

அச்வமேத யாகம் செய்யும் பயனைக் கொடுக்கும் இந்தக் கைங்கரியத்திற்குக் கும்பகோணம் நகர மக்கள் தாராளமாகப் பண உதவி செய்ய முன் வந்தனர். 1953 ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் முடிய, கும்பகோணம் சர்க்கார் ஆஸ்பத்திரியில் அநாதையாக இறந்தவர்கள் 19 பேர்கள். தெருக்களில் இறந்தவர்களின் தொகை 14. பிரேத விசாரணைக்கு எடுதது வரப்பட்டவர்கள் 3 பேர்கள். இந்த 36 பேர்களில் ஹரிஜனங்கள் 4, அந்தணர்கள் 2. இதர ஹிந்துக்கள் 30. இந்த 36 சடலங்களையும் அவரவரது குலாச்சாரப்படி ஸம்ஸ்காரங்கள் செய்யப்பட்டன. இந்தத் தருமத்திற்கென அன்பர்களிடமிருந்து நேரடியாகவும் உண்டியல் மூலமாகவும் அந்த 6 மாதங்களில் வசூலான தொகை ரூ. 2834-7-0.

ஸம்ஸ்காரங்கள் செய்யச் செலவானது ரூ. 473-15-6. இந்த 6 மாதங்களில் பிரசாரச் சிலவு ரூ. 205-10-2. மேலும் இந்தச் சபையானது தொடர்ந்து இந்தக் கைங்கரியத்தில் ஈடுபட்டு அரிய தொண்டாற்றி மக்களுக்குப் பேருபகாரத்தைச் செய்து வருகிறது.

* * * *

குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ அருணாசல தேசிக ஸ்வாமிகள்.

சென்ற 1953-ஆவது ஆண்டுமே மாதம் பிற்பகுதியில் குன்றக்குடி அடிகளார் நம் ஸ்வாமிகளைத் தஞ்சை ஜில்லாவில் முதலில் மாயவரத்திலும், இரண்டாவது முறையாகக் கும்பகோணம் தாலுக்கா வேட்டமங்கலம் என்னும் கிராமத்திலும் சந்தித்துப் பலமணிநேரம் அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார்கள். தமிழ் நாட்டில் அன்புநெறியையும், அருள்நெறியையும் மக்களிடையே வளர்க்கும் முறையைப்பற்றிச் சம்பாஷணைகள் நடைபெற்றன. அடிகளார் நாட்டின் பலபாகங்களிலும் அருள்நெறித் திருக்கூட்டங்களை அமைத்துவருவதை ஸ்வாமிகள் மிகவும் பாராட்டினார்கள். மேலும் ஓய்வின்றி மிக ஆர்வத்துடன் அடிகளார் செய்து வரும் சமயப் பிரசாரத்தை ஸ்வாமிகள் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். பின்னர் அடிகளார் ஸ்வாமிகளைக் காஞ்சீபுரத்திலும் சந்தித்துப் பிரசாரத்தின் போக்கைப்பற்றியும், மக்களது நிலையைப் பற்றியும் ஸ்வாமிகளிடம் உரையாடிக்கொண்டிருந்தார்கள்.

கபிஸ்தலத்தில் வஸந்த நவராத்திரி.

தஞ்சை ஜில்லாவில் திருவையாற்றுக்கும் கும்பகோணத்திற்கும் நடுவில் காவிரியின் வடகரையில் கபிஸ்தலம் என்னும் அழகிய ஊர் அமைந்துள்ளது. அந்த ஊரின் பெரிய மிராசுதார்கள் மூப்பனார் என்னும் புகழ்பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். தஞ்சை ஜில்லாவில் பிரசித்தி பெற்ற மிராசுதார்களின் குடும்பங்களில் இஃது ஒன்றாகும். பல நூற்றாண்டுகளாகவே இக் குடும்பத்தார் பலவித தர்மங்களைப் புரிந்து வந்துள்ளார்கள். இந்தக் குடும்பத்தைச் சார்ந்த ஆர். கோவிந்தசாமி மூப்பனார் ஸ்வாமிகளைச் சிலகாலம் தம் ஊரில் தங்க வேண்டுமெனப் பிரார்த்திக்க. அவரது விருப்பத்திற்கிணங்க ஸ்வாமிகள் 1953-ஆவது வருடம் மார்ச்சு மாதத்தில் சுமார் பதினைந்து நாள்கள் அங்கு தங்கியிருந்தார்கள்.

அம்பிகைக்கு விசேஷ ஆராதனம் செய்வதைச் சரத்ருதுவில் வரும் நவராத்திரியில் மக்கள் பெரும்பாலாகக் கொண்டாடி

வருவதைப்போல, வஸந்த ருதுவிலும் ஒன்பது நாள்களில் அம்பிகை பக்தர்கள் நவராத்திரியைக் கொண்டாடுவதுண்டு. மடத்திலும் வஸந்த நவராத்திரியின் பொழுது விசேஷமான பூஜைகளும், ஹோமங்களும், பாராயணங்களும் நடைபெறுவது வழக்கம். அவ்வருட வஸந்த நவராத்திரியை ஸ்வாமிகள் கபிஸ்தலத்தில் நடத்தினார்கள். மார்ச்சு மாதம் 16உ முதல் 24உ முடிய, இந்த விழா அங்கு நடைபெற்றது, ஏராளமான பொருட்செலவில் மூப்பனார் இந்த நவராத்திரி விழாவின் ஏற்பாடுகளை நேரில் கவனித்து நடத்திக்கொடுத்தார். அவருக்குப் பக்கபலமாக அவரது நண்பரும், ஆசார்ய பக்தருமான சந்திரசேகரபுரம் சந்துரு வையர் உடன் நின்று குறைவின்றி எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டார். தஞ்சை ஜில்லாவின் பலபாகங்களிலிருந்தும் பக்தர்கள் ஆயிரக்கணக்காக வந்து இவ்விழாவைத் தரிசித்தனர். முடிவு நாளன்று மாலையில் ஸ்வாமிகள் காவிரியின் மணற்பரப்பில் வீற்றிருந்து, பக்தர்களுக்குச் சில உபதேசங்களை அருளினார்கள். நமது ஆலயங்களின் பெருமையைப்பற்றி அன்று ஸ்வாமிகள் எடுத்துரைக்கையில் சோழமண்டலமே ஒரு பெரிய கோயிலெனக் கூறினார்கள். ஒவ்வொருவரும் சமூகப்பணி செய்யவேண்டுமென வற்புறுத்தினார்கள், கிராமத்திலுள்ள குளங்களை வெட்டுதல், பாதைகளைச் செப்பனிடுதல் முதலான பணிகளில் கிராமமக்கள் ஒற்றுமையுடன் சரீரப்பிரயாசை எடுத்துக்கொண்டு, உயர்வு தாழ்வு மனப்பான்மையில்லாமல் உழைக்கவேண்டுமென்று கூறினார்கள்.

11. காஞ்சியில்

பீடத்தின் ஆஸ்தானமாகிய காஞ்சி நகரத்தில் சில வருஷங்கள் வாசம் செய்யவேண்டுமென ஸ்வாமிகளுக்கு வெகுகாலமாக ஓர் எண்ணம் இருந்து வந்தது. மேலும், அப்புனி தத்தலத்திலேயே, பீடத்திற்குத் தமக்குப் பின்னுல் அதிபராக வரக்கூடிய ஒருவரை நியமனம் செய்துவிட வேண்டுமெனவும் ஸ்வாமிகள் எண்ணம் கொண்டார்கள்போலும்.

கால்நடையாகக் காஞ்சி யாத்திரை புறப்பட்டது.

1953-ஆவது வருடத்துச் சங்கரஜயந்தி உத்ஸவம் கும்ப கோணம் தாலுக்காவில் கொள்ளிடத்தின் தென்கரையில் அமைந் துள்ள ஒழுகுசேரி என்னும் கிராமத்தில் நடைபெற்றது. அதன் பிறகு பக்கத்துச் சில கிராமங்களில் தங்கிவிட்டு, ஜூன்மாத இறுதியில், ஸ்வாமிகள் காஞ்சிக்குக் கால்நடையாகப் பிரயாண மானுர்கள். நாள் ஒன்றுக்கு சுமார் இருபதுமைல்கள் நடந்து, ஓர் ஊரில் ஓரிரண்டு நாட்கள் மட்டும் தங்கி யாத்திரை செய்து கொண்டு, அவ்வருட ஜூலை மாதம் 26உ நடைபெற்ற வியாச பூஜையை முன்னிட்டு 22உயே காஞ்சிபுரத்தை அடைந்தார்கள்.

சிதம்பர க்ஷேத்திரத்தைத் தரிசிப்பதினுலேயே முக்தியென்பது பெரியோர்களது திருவாக்கு. இந்த உண்மையை உலகிற்கு எடுத்துக்காட்ட ஸ்வாமிகள் திருவுள்ளம் கொண்டார்களோவென நினைக்கும் வண்ணம் இந்த அவசரமான பிரயாணத்திற்கிடையில் ஸ்வாமிகள் சிதம்பரத் திற்கப்பால் சுமார் 20 மைல் தூரத்திலுள்ள ஓர் கிராமத்தில் தங்கியிருந்தபொழுது அவ்விடமிருந்து ஓர் இரவில் 20 மைல்கள் நடந்து, சிதம்பர க்ஷேத்திரத்தை யடைந்து, ஸ்ரீ நடராஜர் பவனி வரும் நான்கு தேர்வீதிகளையும் வலம் வந்து, எல்லாக் கோபுரங்களை யும் இரவு நடுநிசியில் தரிசித்துக்கொண்டு, அங்குச் சிறிது நேரங் கூட தங்காமல், 25 மைல்களுக்கப்பாலுள்ள அடுத்தயாத்திரை முகா மிற்கு எழுந்தருளினுர்கள். வீதிகளில் ஸ்வாமிகள் நடந்துவந்ததை அன்றிரவு கண்டிருந்த சிலர் மூலம் சிதம்பரவாசிகள் ஸ்வாமிகளின் வரவைப்பற்றிய இச்செய்தியை மறுநாட் காலையில் தெரிந்து கொண்டனர். இவ்விதம் ஒருவரும் அறியாதவாறு ஸ்வாமிகள் விஜயம் செய்துத் திரும்பியதுபற்றி மக்கள் சிறிது கவலைகொண் டனர். ஸ்வாமிகளையொத்த பெரியோர்கள் ஓர் ஊருக்கு விஜயம்

சிதம்பர தரிசனம்.



காஞ்சியில்





செய்யும்பொழுது அவர்களைத் தக்க முறையில் வரவேற்று உபசரிக்க வேண்டுவது ஊர் மக்கள் கடமையாதலால், அந்தக் கடமையிலிருந்து நழுவிவிட்டதாக அவர்கள் கவலை கொண்டனர். ஆனால் ஸ்வாமிகள் தமது அடுத்த முகாமிலிருந்து சிதம்பரத்திலுள்ள பக்தர்கள் எவரும் இந்த நிகழ்ச்சியினால் கவலைகொள்ள வேண்டாமென்றும், பின்னர் அவகாசம் கிடைக்கும்பொழுது அங்குவந்து பக்தர்களின் உபசரணைகளைப் பெற்றுக் கொள்வதாயும் ஓர் செய்தியை விடுத்தருளினார்கள்.

காஞ்சியில் நடைபெற்ற வியாச பூஜை.

ஸ்வாமிகள் பாத யாத்திரையாகக் காஞ்சியை அடைந்து அங்கு முதல்முறையாக காஞ்சியில் 1953ம் வருஷம் ஜூலை 26உ (சின்னக் காஞ்சிபுரத்திலுள்ள அவர்களது சொந்தமடத்தில்) ஆஷாடசுத்த பூர்ணமையன்று வியாஸ பூஜையை மிகவிமர்சையாக நடத்தினார்கள். அம்மாதம் 22உ ஸ்வாமிகள் அங்கு விஜயம் செய்தபொழுது வைணவர்கள், சைவர்கள், என்னும் மதவேற்றுமையும், ஜாதிப் பாகுபாடும் இல்லாமல் பொது மக்கள் மிகுந்த குதூகலத்துடன் ஸ்வாமிகளை வரவேற்றார்கள். யானைகட்டித் தெருவில் பழைய மடம் இருந்த இடத்தில் ஸ்வாமிகள் தங்குவதற்கு ஓர் நூதனக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டது. அக்கட்டிடத்தில் நடந்த அந்த வியாஸ பூஜையைச் சென்னையிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் வந்திருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் அன்று தரிசித்துக்கொண்டனர். அன்று முதல் சாதுர்மாத விரதமும் தொடங்கப்பெற்றது. அப்பொழுது ஸ்வாமிகள் சுமார் நான்கு மாதங்கள் தீவிரமான மௌன விரதத்தை அனுஷ்டித்தார்கள்.

ஸ்வாமிகளின் மௌன விரதம்.

பரமசிவன் பாலவடிவத்துடன் தக்ஷிணாமூர்த்தியாகக் கல்லால மரத்தின்கீழ் அமர்ந்து வயோதிகர்களான ஸநகர், ஸநந்தனர், ஸநாதனர், ஸநத்குமாரர், என்ற நான்கு முனிவர்களுக்கும் மௌனமாகவே உபதேசமருளினார், தத்துவங்களை உபதேசிப்பதற்குப் பேச்சைவிட, மௌனத்தையே ஞானிகள் சாதனமாகப் பெற்றிருந்தார்கள். மௌனத்தினாலேயே பரம்பொருளை வேதம் விளக்குகிறதெனக் கைவல்யம் கூறுகின்றது. சாதகன் ஏறிச் செல்லவேண்டிய படிகளில் மௌனமும் ஓர் முக்கியமான படியாகும். மௌனத்தினால் ஓர் தனிச்சக்தியை அவன் பெறுகின்றான்.

ஸ்வாமிகள் ஒவ்வொரு வருடத்திலும் சில மாதங்கள் மௌன விரதத்துடன் இருப்பது வழக்கம். ஸ்வாமிகள் மேற்கொள்ளும் மௌனம் மூன்று வகையாகவுள்ளது. பிறருக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களைச் சில சமயம் தம் கைகளினால் தரையில் எழுதிக் காண்பிப்பார்கள். அக்காலங்களில் ஸ்வாமிகளின் கை விரலில் ரத்தம் தோய்ந்து புண்ணாகக்கூடப் போய்விடுவதுண்டு. சில சமயங்களில் முகஜாடை, கண்ஜாடைகளால் தம் எண்ணங்களை மற்றவர்களுக்கு உணர்த்துவார்கள். வேறு சில சமயங்களில் அவர்கள் எவ்வித ஜாடைகளையும் செய்வதில்லை. எப்பொருளையும் தம் திருஷ்டிகளால் உற்று நோக்குவதுமில்லை. பூஜை செய்யும் வேளையிலோ அல்லது ஒரு குறிப்பிட்ட நேரத்திலோ மாத்திரம் தரிசனத்திற்காக வந்திருக்கும் பக்தர்கள் ஸ்வாமிகளைத் தரிசிக்க முடியும். அப்பொழுது எவரையும் நேரில் நோக்காமல் தம்மைத் தாமே நோக்குபவர்களாய்ப் பிறர் கூறுவதை தமது காதுகளிலோ, புத்தியிலோ, மனஸிலோ ஏற்றுக்கொள்ளாத ஓர் நிலையை அவர்கள் அடைந்திருப்பார்கள். அவர்களின் முகக் குறிப்பில் எவ்வித மான மாறுதலையும் பிறர் காணமுடியாது. இந்த மூன்றாவது மௌன நிலையைக் காஷ்டமௌனமெனக் கூறுவார்கள். இந்த காஷ்டமௌனத்தை ஒவ்வொரு மூல நக்ஷத்திரத்திலும் ஸ்வாமிகள் கடைப்பிடித்து வருகிறார்கள்.

ஸ்வாமிகள் இவ்வாறு மௌன நிலையில் இருந்த காலத்தில் பர்மா நாட்டிலிருந்து பௌத்த கோடீசுவரர் ஒருவர் ஸ்வாமிகளைத் தரிசிக்க வந்தார். ஸ்வாமிகளிடம் உரையாடி ஆத்மீகத்துறையில் அறிவு வளர்ச்சிக்கு அனுகூலமான விஷயங்கள் சிலவற்றை அறிந்து போகவே அவர் அங்கு வந்தவர். ஆனால் தீவிர மௌன நிலையிலிருந்த ஸ்வாமிகள் கருணை மிகுந்த தமது பார்வையினால் அவரை அனுக்கிரகித்தார்கள். ஸ்வாமிகள் அவரிடம் எதுவும் பேசாவிடினும் அவர்களது பார்வையினாலேயே பெரிய ஆத்மீகப்பயனைத் தாம் அடைந்ததாக அந்தப் பௌத்த கோடீசுவரர் பிறரிடம் கூறினார். பக்குவமான மனோநிலையிலிருப்பவர்கள் பலர் ஸ்வாமிகளின் தரிசனத்தினாலேயே மனச் சாந்தியை அடைந்துவிடுகிறார்கள் என்பது உலகமறிந்த விஷயம்.

உபவாசமும். ஆகார நியமமும்,

ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத்பாதர் தாம் அருளிய சோபானபஞ்சகம் என்னும் தோத்திரத்தில் குறிப்பாக துரிய நிலையிலுள்ளவர்களுக்கு உபதேசிக்கும் முறையில் கீழேகண்டவாறு கூறியுள்ளார்.

क्षुद्व्याधिश्च चिकित्स्यतां प्रतिदिनं भिक्षौषधं भुज्यताम् ।
स्वाद्वन्नं नतुयाच்யतां विधिवशप्राप्तेन संतुष्यताम् ॥

—ஸ்ரீ ஆதிசங்கரர்.

"நாள்தோறும் பீடிக்கும் பசி யென்னும் பிணிக்குப் பிக்ஷையாகிற அன்னத்தை மருந்தாக உட்கொள். ருசியுள்ள ஆகாரத்தைத் தேடாதே. தெய்வ வசத்தினுல் அதுவாகக் கிடைப்பதைக் கொண்டு திருப்தியடைந்தவனுக இரு."

இந்த உபதேசத்தை மனஸில் கொண்டுதானே, நம் ஸ்வாமிகள் சரீரத்தில் பிராணன் நிலைத்திருக்கவேண்டிய அளவுக்கு மட்டில் சிற்சில சமயங்களில் சிறிது உணவை ஏற்றுவருகிறுர்கள். ஸ்வாமிகள் பீடத்திலமர்ந்த இரண்டொரு ஆண்டுகளில் புளி, மிளகாய், உப்பு இவைகளை விலக்கி, ஒரு வேளை மட்டும் உணவை ஏற்கத் தொடங்கினுர்கள். சில வருடங்கள் நடைபெற்று வந்த இந்த ஏற்பாடும் பின்னர் மாறிற்று; அப்பொழுது பாலை மட்டும் பச்சையாக அருந்திவந்தார்கள். சில சமயங்களில் வில்வ இலையையும், வேப்பங்கொழுந்தையும் ஆகாரமாக ஏற்றும் வந்துள்ளார்கள். இந்த மாறுதல்களெல்லாம் ஸ்வாமிகளின் இளமைப்பருவத்தில் அவர்களது உடல்நிலையைப் பாதிக்கச் செய்யாவிடினும், பிற்காலத்தில் ஒருவாறு பாதிக்கவே செய்தன. அப்படியிருந்தும் ஸ்வாமிகள் ஒன்றையும் பொருட்படுத்துவதில்லை. சரீரத்திற்குச் சிகிச்சை செய்துகொள்ளுவதையும் ஏற்பதில்லை. பின்னர் சிலகாலம் மூன்று கைப்பிடி அன்னத்தை மட்டிலும் ஏற்றுவந்தார்கள். சமீபகாலத்தில் அதையும் நீக்கி, எப்பொழுதாவது நெற்பொரியைச் சிறிதளவு ஆகாரமாக ஏற்றுவருகிறுர்கள், இவ்விதம் தாமாகவே உடல் வலிமையை ஸ்வாமிகள் குறைத்துவருவதில் சிஷ்யர்கள் பெரும் கவலைகொண்டுள்ளார்கள். ஆனுல் உடல்வலிமை குறையக்குறைய மனோவலிமை பெருகி, அதனுல் அவர்கள் பலசாதனைகளை நிறைவேற்றி வருகிறுர்கள். ஆகாரம் ஏற்றுக்கொள்ளும் நாட்களைவிட ஸ்வாமிகளுக்கு உபவாச நாட்களே அதிகமாக நேரும். அவர்களின் ஆச்ரமத்திற்குத் தக்கவாறு ஆகாரம் ஏற்றுத்கொள்வதற்கு கால

நியதிகள் சிலவுண்டு. அக்காலம் கடந்து விட்டால், ஸ்வாமிகள் எவ்வித ஆகாரத்தையும் ஏற்பதில்லை. அன்றுட பூஜை, சிஷ்யர்களுக்குத் தர்சனம் அளித்தல் முதலான காரியங்களில் காலங்கடந்துவிடும். அந்நாட்களெல்லாம் ஸ்வாமிகளுக்கு உபவாச நாட்களாகவே அமைந்து விடுவதுண்டு. நவராத்திரி காலத்தில் ஸ்வாமிகள் சேர்ந்தாற்போல் ஒன்பது நாட்களும் பூர்ண உபவாசமிருந்து விசேஷ பூஜைகளை எட்டு மணி நேரத்திற்கு மேல் சோர்வின்றி நடத்துவார்கள். உபவாச காலத்தில் ஸ்வாமிகள் ஆசமன தீர்த்தத்தைத் தவிர வேறு தண்ணீர்கூட ஏற்பதில்லை.

ஸ்வாமிகளின் வியக்கத்தக்க ஞாபகசக்தி.

ஸ்வாமிகள் ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான பக்தர்களுக்குத் தரிசனமளித்து, அவர்கள் தெரிவித்துக்கொள்ளும் பல்வேறு குறைகளைப் பரிவுடன் கேட்டு, அவைகளின் நிவாரணத்திற்கும் வழிகாட்டி, யாவரையும் அனுக்கிரகித்து வருகிறார்கள். இவ்விதம் தர்சனத்திற்கு வருகின்றவர்களின் தொகை ஆயிரக்கணக்கிலும் பதினாயிரக்கணக்கிலுமாக பெருகிக்கொண்டே வருகின்றது. அப்படியிருந்தும் தரிசனத்திற்கு ஒருமுறை வந்தவர்களைப் பின்னர் எவ்வளவு வருடங்கள் சென்ற போதிலும் ஸ்வாமிகள் மறப்பதே இல்லை. அவர்கள் தெரிவித்துள்ள அவர்களது குடும்ப விஷயங்களைக் கூட ஸ்வாமிகள் நினைவில் வைத்துக்கொண்டு மறுமுறை அவர்களைச் சந்திக்கும் பொழுது அவைகளைப்பற்றி கேட்பார்கள். இவ்விதம் கேட்கும் அதிசயத்தைக் கண்டு சம்பந்தப்பட்டவர்கள் ஆச்சரியமடைவதுடன், தங்களிடம் ஸ்வாமிகள் வைத்திருக்கும் பரிவை நினைத்துப் பெருமை கொள்வார்கள்.

காஞ்சியில் வந்து தங்கிய பின்னர் அவர்கள் செய்துவரும் தருமத் தொண்டின் பெருமை மேன்மேலும் வளர்ந்து வருகிறது.

அம்ருதலஹரியின் அஞ்சலி.

காஞ்சி பிரதிவாதி பயங்கர ஸ்ரீ அண்ணங்காராசாரிய ஸ்வாமி, ஸ்ரீ ரங்கம் ஸ்ரீ மே. சுந்தர ராஜாசாரியார் ஸ்வாமி இவர்களைப் பத்ராதிபர்களாகக் கொண்டு ஸ்ரீ ரங்கத்திலிருந்து வெளிவரும் அம்ருதலஹரீ என்னும் ஸ்ரீ வைஷ்ணவ சம்பரதாயப் பத்திரிகையின் விஜய வருட ஐப்பசி மாத இதழில் நம் ஸ்வாமிகள் செய்துவரும்









தருமப்பிரசாரத்தின் பெருமையைப் பற்றிக் கீழ்கண்டவாறு வியாசம் ஒன்று எழுதப்பட்டுள்ளது:—

"உலகம் நிறைந்த புகழ்வாய்ந்த ஸ்ரீமத் காமகோடிபீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள், பலவருஷ காலமாக அநாதிவைதீக மார்க்க சம்ரக்ஷணார்த்தமாக அகோராத்திரமும் அநேகவிதமான வழிகளில் பாடுபட்டு வருவதை நாம் நீண்டகாலமாக அறிந்துவருகிறோம். அபரிமிதமான பொருட்செலவை அவர் செய்துகொண்டு, ஸம்ஸ்கிருத வித்வான்களிடத்தும், வேதாத்யயனத்தைச் சாங்கோபாங்கமாகச் செய்திருக்கிற வைதிகோத்தமர்களிடத்தும், சைவ வைஷ்ணவாதி பேதபாவனை சிறிதுமில்லாமல், இப்பெரியார் காட்டிவருகிற அபிமானம் அளவு கடந்ததென்பது ஜகத்பிரசித்தம். இதுவரையில் யாரும் இத்தகைய பெரும்புகழை படைத்ததில்லையென்றால், இது சிறிதும் அதிசயோக்தியாகாது. இவ்விஷயத்தில் எந்த மதத்தினரும் விவாதம் கொள்ளார். யாவரும் ஒருங்கே இசைந்த புகழ் இது.

இப்பெரியார், சென்ற ஆடி மாதத்துப் பௌர்ணமியன்று சின்ன காஞ்சீபுரத்திற்கு விஜயம் செய்து, யானை கட்டி வீதியிலுள்ள தங்கள் மடத்தில் சகல ஸ்தோமங்களுடனும் பரி ஜனபரிவாரங்களுடனும் ஆஸ்தானமலங்கரித்து, உலகிலுள்ள வைதீகர்கள், பண்டிதர்கள், ஆஸ்தீகர்கள், தார்மீகர்கள், செல்வர்கள், பக்தர்கள் யாவரும் நாடோறும் திரண்டுவந்து தரிசனம்செய்து அனுக்கிரகம் பெற்று ஆனந்திக்கும்படி இருக்கும் பெருமை வாசாமகோசரம். இப்பெரியார் சில மாதங்களாக மௌனவிரதம் ஆரம்பித்திருந்தாலும், திவ்யாக்ஞை சொல்லும் அழகு மிக வியக்கத்தக்கது............இப்பெரியாருடைய தூய திருவுள்ளத்தைப்பற்றி வாய் திறக்க நாமோ அதிகாரி? வைதிகஸ்ரீ பலபடியிலும் வளர்ந்து செல்லவேணுமென்று ஸ்ரீ ஸ்வாமிகள் கொண்டிருக்கிற குதூகலம் இதுவரை ஒருமகானுடைய உள்ளத்திலும் உதிக்கவில்லையன்றோ? இது ஒன்றேயன்று. இவ்விதமாக க்ஷணந்தோறும் ஸ்ரீஸ்வாமிகளின் அந்தரங்கத்தில் அபூர்வமாகத் தோன்றும் ஆசம்சைகள் அளவுகடந்தவை. அவற்றால் கலிகோலாகலம் கெட்டுக் கிருதயுக தர்மோன்மேஷம் விரைவில் விளையுமென்றே உலகம் நம்பியிருக்கிறது."


சென்ற விஜயவருட (1953) சாதுர்மாத காலத்தில் வைதிக வித்வான்கள் ஆங்காங்கு தசோபநிஷத் முழுவதையும் ஒருமுறை பாராயணம் செய்யவேண்டுமென்றும், அன்றுடம் படனம் செய்தபாகத்தின் தாத்பர்யத்தை முடிந்தவரை சங்கிரகமாகப் பிரவசனம் செய்யவேண்டு மென்றும், நாடுமுழுவதுக்கும் ஓர் ஸ்ரீமுகத்தை ஸ்வாமிகள் விடுத்தார்கள்.

சின்ன காஞ்சிபுரம் நம்பிள்ளை சந்நிதியில் ஸ்வாமிகளுக்கு பிரதி வாதி பயங்கர ஸ்ரீ அண்ணங்கராசாரிய ஸ்வாமி அளித்த வரவேற்பு.

அந்த ஸ்ரீமுகத்தில் கண்ட நியமனப்படி காஞ்சி பிரதிவாதி பயங்கர ஸ்ரீ அண்ணங்காராசார்ய ஸ்வாமி அவர்களால் சின்ன காஞ்சிபுரம் நம்பிள்ளை சந்நிதியில் 26-10-1953 முதல் பாராயணம் செய்யப்பட்டு, காலையில் பாராயணமும் மாலை 4 மணி முதல் 6 மணி வரை பிரவசனமும் நடத்தப்பபெற்று வந்தது. இந்தப் பிரவசனம் நடைபெற்றபொழுது ஸ்வாமிகள் நேரில் நம்பிள்ளை மண்டபத் திற்கு விஜயம் செய்து, அந்த மகாவித்வானது உபன்யாஸத்தைக் கேட்டு மகிழ்ந்தார்கள்.

முதல் தடவையாக ஸ்வாமிகள் அங்கு விஜயம் செய்த பொழுது (26-10-53ல்) ஸ்ரீமத் அண்ணங்காராசார்ய ஸ்வாமி வித்வத் கோஷ்டிகளுடனும். வேதவித்பன்னர்களுடனும் உபநிஷத் கோஷம் செய்துகொண்டு, ஸ்வாமிகளைப் பூர்ணகும்பம் கொடுத்து வரவேற்றினர். பின்னர் அவர் தம்மால் ஸ்வாமிகள் மீது தொகுக் கப்பட்ட ஐந்து சுலோகங்களையும் வாசித்து அவற்றின் பொருளை யும் விளக்கி அவற்றை ஸ்ரீமத் ஆசார்ய ஸ்வாமிகளின் பாதகமலங் களில் சமர்ப்பணம் செய்தார். அந்தச் சுலோகமாலிகையை ஸ்வாமிகள் பரமானுக்கிரகத்துடன் ஸ்வீகரித்து மௌனவிரதத் திற்கு விரோதமில்லாமல் புன்முறுவல் பொருந்திய கருணையான பார்வையினுல் தமது சந்தோஷத்தைத் தெரிவித்தார்கள். பின்னர் ஒவ்வொரு நாளும் உபந்யாசம் நடைபெறும்பொழுது ஸ்வாமிகள் தம் காரியங்களில் இதனை முதன்மையாகக் கருதி உபநிஷத் பிரவசனம் தொடங்கும் முன்னரே, சபையை அலங்கரித்த கருணை வருணிக்க முடியாததாகும். ஸ்வாமிகளின் இந்த உத்தம குணத் தைப் புகழாதாரில்லை. பகவான் பக்தர்களது அன்பிற்கு இசைந்து தீனர்களை ரக்ஷிக்கத் தாமாகவே சேவையளித்து, யாவரும் எளிதில் அடையும் தன்மையை ஏற்கின்ருர் என்பதை ஏடுகளில் காண் கின்ருேம், ஆனுல் ஸ்வாமிகளின் விஷயத்தில் இது பிரத்யக்ஷ மாகக் காணப்படுவதாக எண்ணிப் பக்தர்கள் மனமகிழ்ந்தனர்.

—அம்ருதலஹரி.



காஞ்சிபுரம், ஸர்வதீர்த்தக் கரையில் உள்ள முக்தி மண்டபம் ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளுக்கு ஆச்ரம உபதேசமளித்த இடம்



ஸ்ரீமது ஆசார்யாள்



ப்ரதம சிஷ்யர்
ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்

பிரதம சிஷ்யர் ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளுக்கு ஆசிரம உபதேசம் அளித்தது

தமக்குப் பின்னர் பீடத்தை அலங்கரிக்கத்தக்கதொரு மகானை நியமனஞ் செய்து, அவருக்குத் தரவேண்டிய பயிற்சிகளை யெல்லாம் தாமே கொடுக்க வேண்டுமென்று ஸ்வாமிகள் பல வருடங்களாக விருப்பம் கொண்டிருந்தார்கள். இந்த விருப்பத்தைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு சிஷ்யரை சிலவருடங்களாகவே தம் மனஸிற்குள் அவர்கள் தேர்ந்தெடுத்து, பின்னர் அவருடைய பெற்றோர்களின் சம்மதத்தையும் பெற்றிருந்தார்கள். தஞ்சை ஜில்லா மன்னார்குடி தாலுகாவைச் சார்ந்தவரும், தென் பிராந்திய ரயில்வேயில் திருச்சியில் உத்தியோகம் பார்ப்பவருமான மகாதேவ ஐயர் என்பவரின் தவப்புதல்வரான சுப்பிரமண்யம் என்னும் அந்தணச் சிறுவரே இந்தச் சிஷ்யராவர். சுமார் பத்தொன்பது பிராயம் நிறைந்த அவர், மடத்திலேயே இளமைப் பருவம் முதல் வேதம் கற்று, நல்ல சீலமும், நற்குணமும் பெற்று விளங்கிவந்தார்.

இந்தப் பாலகருக்குச் சன்னியாச ஆச்ரமும், உபதேசமும் தந்தருளும் வைதிக காரியங்கள் 1954ம் வருஷம் மார்ச்சு மாதம் 19உ முதல் தொடங்கி 22உ வரை காஞ்சிபுரத்தில் நடைபெற்றன. மடத்தின் சரித்திரத்திலேயே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த விழாவைக் காண பதினாயிரக்கணக்கில் பக்தர்கள் அப்பொழுது அங்குக் கூடியிருந்தனர். இந்த வைபவங்கள் நடைபெறுவதற்குப் பூர்வாங்கமாக, ஸ்வாமிகள் கலவை என்னும் தலத்திலுள்ள தம் குரு, பரமகுரு, இவர்களின் அதிஷ்டானங்களையும், காஞ்சிக்கு அடுத்த அம்பிகாபுரம் என்னும் ஊரிலமைந்துள்ள பூர்வாசாரியரொருவரது அதிஷ்டானத்தையும் தரிசித்துக்கொண்டார்கள். மார்ச்சு மாதம் 22உ அதிகாலையில், ஸ்வாமிகள் அனந்தசாகரம் என்னும் புனித தடாகத்தின் கரையிலுள்ள புராதன அச்வத்த மரத்தின் அடியிலிருந்து புனித மண்ணைப் பிரசாதமாகக் கிரகித்துக் கொண்டு, பிறகு மடத்திலுள்ள ஸ்ரீ சுரேச்வரராசாரியரது பிம்பத்திற்குப் பூசைசெய்தார்கள். பின்னர், காமாக்ஷி அம்பிகை சந்நிதி, அங்குள்ள ஆதிசங்கரரது சந்நிதி இவற்றைத் தரிசித்துக்கொண்டு சாலையிலிருந்தே குமரகோஷ்டத்தையும், ஏகாம்பரர் ஆலயத்திலுள்ள ஆம்ர (மாமரம்) விருக்ஷத்தையும் தரிசித்துக்கொண்டார்கள். பின்னர் மடத்தின் ஆஸ்தான தெய்வமான ஸ்ரீ திரிபுரசுந்தரி சமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வரரையும் பிரார்த்தனை செய்துகொண்டார்கள்.

உபதேசம் பெறும் சீடர் வேதவிதிப்படி தேவர்கள், ரிஷிகள், பித்ருக்கள் இவர்களுக்குச் செய்யவேண்டிய கிரியைகளையெல்லாம் செய்து முடித்து, பின்னர் அந்நாளுக்கு முதல் நாள் இரவு முழுவதும் மௌனமாகத் தூங்காத நிலைமையில் உட்கார்ந்தவாறே தியானத்தில் அமர்ந்திருந்தார்கள். மறுநாள் அதிகாலையிலேயே ஸர்வதீர்த்தக்கரையிலுள்ள முக்திமண்டபத்தை அவர் அடைந்து, பூர்வாங்கமான வைதீக காரியங்களை முடித்துக்கொண்டு, குருநாதரது வரவை எதிர் பார்த்தவண்ணமாக இருந்தார். அன்று காலை முதலே, காஞ்சி நகரம் ஒரு புதிய சோபையுடன் விளங்கிற்று. நாட்டின் பல பாகங்களிலிருந்து அங்கு வந்திருந்த சிஷ்யர்கள் நீராடி, தூய்மையான மனமுடையவர்களாய், ஆயிரக்கணக்காகக் காஞ்சி வீதிகளில் அன்று காணப்பட்டனர். காலை சுமார் 9 மணிக்கு, ஸ்வாமிகள் தம் மடத்திலிருந்து புறப்பட்டுப் பக்தர்கள் குழாத்துடன், எட்டு தண்டி சந்நியாசிகள் பின்தொடர, முக்தி மண்டபத்தை அடைந்தார்கள். அப்பொழுது குளத்தின் நான்கு கரைகளிலும், அதையடுத்த வீதிகளிலும் ஸ்வாமிகளையும், சீடரையும் தரிசிக்க ஏராளமான ஜனக்கூட்டம் கூடியிருந்தது.

சுமார் பத்து மணிக்கு, பிரதம சிஷ்யரான ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் வேதவித்பன்னர்களும், சாஸ்த்திர வித்பன்னர்களும் தொடர்ந்துவர, ஸர்வதீர்த்த தடாகத்தில் இறங்கி, இடுப்பளவு தண்ணீரில் நின்று, உலகபாசம் முழுவதையும் களைந்தார்கள். அந்தப் பாலப்பருவத்தில் அன்னவர் துறவறம் மேற்கொள்ளுவதையும், அதிலும் லோகாச்சாரியர்களால் உபதேசம் பெறுவதையும் காண, மக்கள் போட்டியிட்டுக்கொண்டு முன் வந்தனர். பின்னர் ஸ்வாமிகள் ஸ்ரீ விசுவேச்வரர் சந்நிதியில் தம் சிஷ்யருக்கு மகாவாக்யத்தை உபதேசித்தருளினார்கள். அப்பொழுது அவர்கள் தம் சிஷ்யருக்குக் காஷாய வஸ்திரத்தையும் அளித்தார்கள்.

இந்த வைபவங்கள் முடிவுபெற்றவுடன் சிஷ்யர் பின்தொடர, கால்நடையாக மடத்தின் எல்லா விருதுகளுடனும், மேளவாத்தியத்துடனும் லிங்கப்பய்யர் தெரு வழியாக, பெரிய காஞ்சிபுரம் கங்கைகொண்டான் மண்டபத்திற்கெதிரிலுள்ள தமது மடத்தை அவர்கள் பகல் 12 மணிக்கு அடைந்தார்கள். அப்பொழுது மடத்திற்கு உள்ளும் வெளியிலும் சுமார் பதினாயிரம் ஜனங்

களுக்குமேல் கூடியிருந்தனர். அன்று இரு மகான்களையும் ஒருங்கே தரிசித்தவர்களெல்லாம் மனமுருகி நின்றனர். இக் காட்சியைக் கண்டவர்களே மிகவும் பாக்கியசாலிகள். ஸ்வாமிகள் ஸ்ரீ சந்திரமௌளீஸ்வரர் சந்நிதியை அடைந்ததும், தம் சிஷ்யருக்கு ஓர் ருத்திராக்ஷ மாலையையும், ஓர் ஸ்படிக மாலையையும், திருப்பதி தேவஸ்தானத்தில் தமக்கு மரியாதையாக அளித்த பெரிய பீதாம்பரம் ஒன்றையும் அனுக்கிரகத்துடன் அளித்தார்கள். அன்றைய நித்யபூஜை மாலை சுமார் 3 மணிக்கு முடிவுபெற்றது. அதற்குப் பின்னர் சுமார் 4 மணி முதல், ஸ்வாமிகள் அன்று வெளியூர்களிலிருந்து வந்த சிஷ்யர்களுக்கு விபூதி, அக்ஷதை, குங்குமம் பிரசாதங்களைக் கொடுக்கத் தொடங்கினார்கள். யாவருக்கும் பிரசாதம் கொடுத்து முடிய இரவு 3 மணியாயிற்றென்றால், அன்று ஸ்வாமிகளைத் தரிசிக்க வந்தவர்களது தொகை எவ்வளவு இருந்திருக்குமென்பதை வாசகர்களே ஒருவாறு ஊகிக்கலாம்.

உபதேசமளித்ததற்கு முதல்நாள் ஸ்வாமிகள் சின்னகாஞ்சிபுரத்தில் தமது மடத்தில் பூஜையை முடித்துக்கொண்டு, அங்குக் கூடியிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு; மடத்திற்கும், சிஷ்யர்களுக்கும் இருக்கவேண்டிய தொடர்பைப்பற்றி சில உபதேசமொழிகளை அருளினார்கள். அவ்வுபதேசமொழிகளின் சுருக்கம் பின் வருமாறு :—


“எதிர்காலத்தில் இந்தப் பீடத்தை அலங்கரிக்கத்தக்க ஓர் ஸ்வாமிகளுக்குப் புதிதாக ஆச்ரமம் வழங்க ஏற்பாடுகள் செய்து வரும் இச்சமயத்தில் உங்களுக்கும் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். தற்காலம் இருந்து வரும் நிலையில் மடத்தின் காரியங்களைச் செவ்வனே நடத்திவருவதற்கு மடத்தின் சொத்திலிருந்து கிடைக்கும் வருமானம் போதுமானதாக இல்லை. வருமானத்திற்கு மேல் கிட்டத்தட்ட செலவு ஐந்துமடங்காக ஏற்படுகிறது. ஸ்வாமி பூஜை, மற்றும் மதப் பிரசாரம் பற்றிய முக்கியமான செலவுகள் தாம் மடத்தில் செய்யப்படுகின்றன. மடத்தின் வருவாயைக்கொண்டு மாத்திரம் இவைகளைச் செய்யப் போதுமானதாக இல்லை. புதிதாக ஸ்வாமிகளை நியமனம் செய்வது மாத்திரம் போதாது. மடத்தின் காரியங்களும் சரிவர நடந்துவர வசதிகள் செய்யவேண்டும். சாதாரணமாக நான் இவ்விஷயத்தைப் பற்றி


உங்கள் முன் பேசியிருக்கவே மாட்டேன். ஆனால், இப்பொழுது ஸ்வாமிகளொருவருக்கு உபதேசம் செய்யப்போவதால் இவ்விஷயத்தை நான் இப்பொழுது உங்கள் முன்னிலையில் அவசியமாகத் தெரிவிக்கவேண்டுமென எனக்குத் தோன்றுகிறது. இங்குக் கூடியிருக்கும் நீங்களும், மற்றும் வெளியிடங்களிலுள்ள பக்தர்களும் மடத்தின் விஷயத்தில் ஆழ்ந்த அபிமானம் வைக்கவேண்டும். ஒவ்வொரு சிஷ்யரும் தம் குடும்பத்தைக் கவனிப்பதுடன், மடத்தையும் தன் குடும்பம்போலவே பாவித்து அவரவர்கள் சக்திக்குத் தக்கவாறு மடத்திற்குத் திரவியசகாயம் செய்வதெனத் தீர்மானம் செய்துகொள்ளவேண்டும். இக்காலத்தில் குடும்ப சம்ரக்ஷணமே பலருக்குச் சிரமமாக இருக்கலாம். ஆயினும், மடத்திற்குச் சிறிதளவாவது உபகரிக்க வேண்டுமென்று எண்ணம் கொள்ளவேண்டும்.


மடத்திற்குத் திரவியசகாயம் செய்வதுடன் சரீரத்தினாலும் சேவை செய்ய நீங்கள் முன்வர வேண்டும். மடத்தின் கைங்கரியத்தை நடத்துவதில் இப்பொழுது பலர் சம்பளமெதுவும் எதிர்பாராது இங்குக் காரியங்களைக் கவனித்துவருகிறார்கள். அவர்களுள்ளும் சிலர் தங்கள் சாப்பாடு முதலியவற்றிற்குக்கூடத் தங்கள் பணத்தையே செலவிட்டுக்கொண்டு மடத்திலேயே தங்கிக் கைங்கரியங்களைச் செய்துவருகின்றனர். அவ்விதம் எல்லோரும் எக்காலத்திலும் செய்ய முடியாவிட்டாலும் வருஷத்தில் சில குறிப்பிட்ட காலத்திற்காகவாவது இங்கு வந்திருந்து அம்மாதிரிச் சேவைகளைச் செய்ய உங்களில் பலர் முன்வரலாம். மடத்திற்குப் பணம் கொடுப்பதைவிட இவ்வித கைங்கரியமே மிகவும் விசேஷமாகும். கைங்கரியத்தில் ஈடுபட விரும்புவோர் முக்கியமான பிராம்மண தர்மத்தை செய்யக்கூடியவர்களாக இருக்க வேண்டும். சந்தியாவந்தனாதி நித்திய கர்மானுஷ்டானங்களையாவது செய்துகொண்டு. சரீர சுத்தியுடனும், மனச் சுத்தியுடனும் அவர்களிருக்க வேண்டும். தற்காலம் பிராம்மணர்களிடையே கர்மானுஷ்டானங்கள் மிகக் குறைந்துவரும் ரீதியைப் பார்த்தால் மடத்தின் கைங்கரியங்களைச் செய்யக்கூட நித்தியகர்மானுஷ்டானம், சிகை, புண்டரம், முதலிய சின்னங்களுள்ளவர்கள் பிற்காலத்தில் எங்கு கிடைக்காமல் போய் விடுவார்களோவென்று அஞ்சவேண்டியிருக்கிறது. அதற்கு நீங்கள் இடம் கொடுக்கலாகாது. ஆகவே, மதானுஷ்டானத்தில் நம்பிக்கை வைத்து, அதைப் பின்பற்றுவதுடன், மடத்தின்

காஞ்சியில்














காரியங்கள் நடந்துவருவதிலும் நீங்களெல்லோரும் சிரத்தையுள்ள வர்களாக இருக்கவேண்டும். குடும்பத்திலொருவராவது மடத்தின் காரியங்களில் ஈடுபடவேண்டும். ஸ்ரீ திரிபுர சுந்தரி சமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வர ஸ்வாமியின் அனுக்கிரகம் உங்களுக்கு எக்காலத்திலும் ஏற்படும்.''

சஷ்ட்யப்த பூர்த்தி விழா

ஜயவருடம் வைகாசி மாதத்துடன் ஸ்வாமிகளுக்கு அறுபது ஆண்டுகள் நிறைந்ததை நாடெங்கும் மிகவும் விமரிசையாகவும் ஏற்றபடியும் கொண்டாட வேண்டுமென்று சிஷ்யர்கள் பலர் விருப்பம் கொண்டார்கள். ஆனுல், படாடோபமான முறையில் தமக்கென எவ்விதக் கொண்டாட்டத்தையும் நடத்தக்கூடாதென ஸ்வாமிகள் அவ்வப்போது சிஷ்யர்களுக்கு வற்புறுத்தி வந்ததன் காரணமாக, சிஷ்யர்கள் அதை மிகவும் சாதாரணமான முறையில் 18-5-54-ல் கொண்டாடினுர்கள்.

அப்பொழுது ஸ்வாமிகள் முகாம் செய்திருந்த காஞ்சீபுரத்தில் சிஷ்யர்கள் ஆயிரக்கணக்காகக் கூடி ஸ்வாமிகளைத் தரிசிக்க வந்தனர். அன்று விசேஷமான வைபவங்களெதுவும் அங்கு நடைபெருவிடினும், ஸ்வாமிகளின் விருப்பப்படி பெரிய காஞ்சீபுரம் மடத்திலும், ஸ்வாமிகள் தங்கியிருந்த பாலாற்றங்கரையிலுள்ள ஓரிக்கை (ஓரிரவிருக்கை) என்னும் தலத்திலும் விசேஷமாகச் சமாராதனைகளும், நகரின் பல பாகங்களில் ஏழைகளுக்கு அன்ன தானமும் நடைபெற்றன. அன்று, காஞ்சி வரதராஜருடைய கருடோத்ஸவமும் சேர்ந்ததால், ஏராளமான மக்கள் ஸ்வாமிகளைத் தரிசிக்கவந்தனர். ஆற்றங்கரையில் பிரத்யேகமாக அமைக்கப் பெற்ற ஓர் பர்ணசாலையில் அன்று ஸ்ரீ சந்திரமௌளீச்வர ஸ்வாமியின் நித்திய பூஜை நடைபெற்றது. பூஜை முடிவு பெற்றவுடன் அங்குக் கூடியிருந்த சிஷ்யர்கள் அந்த முக்கிய நாளில் தாங்கள் நடந்துகொள்ள வேண்டியதைப்பற்றி சில உபதேசங்கள் அருளவேண்டுமென்று ஸ்வாமிகளைக் கேட்டுக்கொண்டனர். அப்பொழுது ஸ்வாமிகள் தம் பிறந்தநாளை வைதிக முறையிலோ, லௌகிக முறையிலோ, ஆடம்பரத்துடன் நடத்தத் தாம் விரும்ப வில்லையென்றும், நாட்டில் வேதக்கலையையும் பக்தி

மார்க்கத்தையும் மக்களிடை பரப்பவும், அழியாது அவைகளைக்காக்கவும், சிஷ்யர்கள் தங்களாலானதைச் செய்யவேண்டுமென்றும், நிலம் பெற்றுள்ளவர்கள் அவற்றிற்கெனப் பூதானம் செய்யவேண்டுமென்றும் தாம் விரும்புவதாகவும் தெரிவித்தார்கள். ஸ்வாமிகளின் அவ்விருப்பப்படி அங்குக் கூடியிருந்த பிரமுகர்கள் அவரவர்கள் அளிக்கக்கூடிய பூமியின் அளவைக் குறிப்பிட்டு ஓர் ஜாப்தாவும் தயாரித்து, ஸ்வாமிகளின் முன்னிலையில் உடனடியாகவே சமர்ப்பணம் செய்தார்கள். மேலும், பென்ஷன் ஜில்லா ஜட்ஜ் எல். எஸ். பார்த்தசாரதி ஐயர் தலைமையில் ஓர் பிரசார கோஷ்டியும் ஓர் நிர்வாகக் குழுவும் அப்பொழுதே நிறுவப்பட்டது. அந்தக் கோஷ்டியார் தஞ்சை, திருச்சி முதலான ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணம் செய்து சிஷ்யர்களிடமிருந்து பூதானம் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஸ்வாமிகளின் விருப்பத்தை முன்பே அறிந்திருந்த கோயமுத்தூர் வாசியான மங்கையர்க்கரசி என்னும் மாது சிரோமணி காவிரி டெல்டா பிரதேசத்தில் திருவெம்பாவை-திருப்பாவை-திருமுறை ஆறங்க டிரஸ்டு என்னும் மற்றொரு தருமத்திற்கு ஒரு ஏக்கர் நிலத்தைத் தானமாக அளிப்பதாகக் கோயமுத்தூரிலிருந்து அன்று தந்தி மூலம் தெரிவித்தார். மற்றும் பல அன்பர்கள் இதற்கெனப் பூதானமும் நிதியும் அளித்தனர். இதை நிர்வாகம் செய்யச் சிறந்த பக்தர்களில் ஒருவரான சிதம்பரம் நகை வியாபாரம் சே. ரத்னசபாபதி செட்டியாரை மானேஜிங் ட்ரஸ்டியாகக்கொண்ட ஓர் நிர்வாகக் குழுவை ஸ்வாமிகள் நியமனம் செய்துள்ளார்கள்.

அன்று ஸ்வாமிகளுக்கு அபிஷேகம் செய்வதற்காகச் சிஷ்யர்கள் சிலர் காசியிலிருந்து குடங்களில் கங்கை நீரைக் கொணர்ந்திருந்தனர். அந்தத் தீர்த்தத்தை ஸ்வாமிகள் தாமாகவே எடுத்து அபிஷேகஞ்செய்துகொண்டார்கள். சிஷ்யர்கள் சிலர் கொணர்ந்த காஷாய வஸ்திரங்களையும் ஸ்வாமிகள் ஏற்றுக்கொண்டார்கள். பக்தர்கள் அளித்த காணிக்கைகளையெல்லாம் வேதவித்பன்னர்களுக்கு ஸ்வாமிகள் பரிசாக அளித்துவிட்டார்கள். இந்த விழாவையொட்டி காமகோடி கோசஸ்தானத்திலிருந்து ஸ்ரீபிரும்மஸூத்திர சாங்கர பாஷ்யம் டிப்பணியுடன் நூதனப்பதிப்பாக வெளியிடப்பட்டு ஸ்வாமிகளிடம் சமர்ப்பணம் செய்விக்கப்பட்டது.

அன்று, சென்னை நகரில் பல பாகங்களில் ஸ்வாமிகளின் சஷ்ட்யப்த பூர்த்தி எளிய முறையில் கொண்டாடப்பட்டது.

ஆலயங்களில் அபிஷேகமும், பிரார்த்தனையும், சிலவிடங்களில் பொதுக்கூட்டங்களும் நடைபெற்றன,

கும்பகோணம் மடத்தில் நகர முத்ராதிகாரிகள் சங்கத்தார் இந்த விழாவை விமரிசையாகக் கொண்டாடினார்கள். ஹிந்து பத்திரிகையின் உதவி ஆசிரியர் ரகுநாதையர் அவ்விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், இந்தச் சஷ்ட்யப்தபூர்த்தி விழாவானது மற்ற விழாக்களைப்போல நமது திருப்திக்காக மட்டும் ஏற்பட்டதன்றென்றும், அது எதிர்காலத்தில் தேசமக்களின் க்ஷேமத்தைக் கருதிய ஓர் மகத்தான சம்பவம் என்றும், உலக விஷயங்களில் உழன்று விடுதலைக்கு மார்க்கமறியாமல் தவிப்போருக்கு ஓர் மார்க்கத்தைக் காட்டும் நமது ஆசார்யாள் போன்ற மகான்கள் உலகில் அவதரித்திருப்பதால்தான் நாம் உஜ்ஜீவிக்க முடிகிறதென்றும் கூறினார். மேலும் ஸ்வாமிகளின் மகிமையைப் பற்றி உபயவேதாந்த அக்னிஹோத்ரம் தாத்தாசார்ய ஸ்வாமிகள், காவேரிப் பத்திரிகையின் ஆசிரியர் என். ஆர். ராமாநுஜம், விற்பனை வரி அதிகாரி கல்யாணசுந்தரமையர், மித்திரன் நிருபர் என். ஸ்ரீநிவாஸாசாரியார், சங்கீத வித்வான் ராஜாமணி சாஸ்திரிகள் முதலியோர்கள் பேசினார்கள். அன்று நாகேச்வரஸ்வாமி கோயிலில் பெரியதிட்டத்தில் விசேஷ அபிஷேக ஆராதனையும் வேதபாராயணமும் ருத்ர ஏகாதசி ஹோமமும் நடைபெற்றன. அன்று மாலை 6 மணிக்கு அவ்வாலயத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கவர்ன்மெண்டு கல்லூரித் தலைவர் டாக்டர் எ. சங்கரன் தலைமை வகித்தார். சுமார் ஐயாயிர மக்கள் அப்பொழுது ஸ்வாமிகளுக்குத் தங்கள் அஞ்சலியைச் செலுத்தினர்.

திருச்சியில் அத்வைதசபையின் ஆதரவில் ஏ. வி. கோபாலாசாரியார் தலைமையில் இந்த விழா கொண்டாடப்பட்டது. அங்கும் ருத்ர ஏகாதசி ஹோமம், வேதபாராயணம் முதலியன நடைபெற்றன.

தஞ்சைமக்கள் இவ்விழாவை மேலவீதி சங்கரமடத்தில் மிகவும் விசேஷமாகக் கொண்டாடினார்கள். அன்றிரவு பெரிய ஊர்வலமாக ஸ்வாமிகளின் படத்தை நான்கு பிரதான வீதிகளிலும் பக்தர்கள் பஜனைகோஷ்டியுடனும் வேதபாராயணங்களுடனும் வாத்தியகோஷத்துடனும் எடுத்துச்சென்றார்கள்.

ஸ்வாமிகளின் சஷ்ட்யப்தபூர்த்தி விழா சிதம்பரத்தில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கீழவீதி எம். எஸ். வித்யாசாலையில் நகரசபை உபதலைவர் டாக்டர் எஸ். நடராஜ ஜடாவல்லபர் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் கூடிற்று. இந்த விழாவை கே. எஸ். கல்யாணஸ்வாமி தீக்ஷிதர், ஞானமூர்த்தி தீக்ஷிதர், ஸி. எஸ். ஸச்சிதானந்த தீக்ஷிதர், இராம தங்கஸாமி தீக்ஷிதர் இவர்கள் முதன்மையாக இருந்து ஏற்பாடு செய்தனர். அண்ணாமலைச் சர்வகலாசாலை சமஸ்கிருதப் பேராசிரியர் ஸி.எஸ். வெங்கடேச்வர சர்மா, தமிழ் பேராசிரியர் இ. எஸ். வரதராஜய்யர், தத்துவப் பேராசிரியர் ஸி. ராமலிங்கம் மற்றும் கே. முத்துகிருஷ்ணப்பிள்ளை முதலியோர் ஆஸ்திகத்தைப் பரப்ப ஸ்வாமிகள் செய்து வரும் அரியபெரிய சாதனைகளைப்பற்றி விவரித்துக் கூறி, ஸ்வாமிகள் ஓர் அவதார புருஷர் என்றும், அவர்கள் பல ஆண்டுகள் ஜீவித்திருந்து பாரத நாட்டிற்கு மேலும் பல நன்மைகளைச் செய்ய வேண்டுமென்றும், அம்பலத்தாடும் ஸ்ரீநடராஜமூர்த்தியை வேண்டிக் கொண்டனர்.

புதுக்கோட்டையில் பென்ஷன் ஜட்ஜ் என். சேதுராமய்யர் தலைமையில் இந்த விழா மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்று காலையில் சங்கர ஆலயத்தில் ருத்ர ஏகாதசி ஹோமம் அர்ச்சனை முதலியனவும், மாலையில் குலபதி பாலய்யா கலாசாலையில் ஒரு பொதுக்கூட்டமும் நடைபெற்றன. முன்னாள் கிராமாபிவிருத்தி அதிகாரி ஜி. வேங்கடேசன் ஸ்வாமிகளின் பிறப்பு, வளர்ப்பு, இளமைப் பருவம், வித்தியாப்பியாசம் முதலியவைகளைப்பற்றி பல ருசிகரமான சம்பவங்களை மிகவும் உருக்கமாக எடுத்துக்கூறினார். இரவில் ஸ்வாமிகளது படத்துடன் ஊர்வலம் ஒன்று பிரதான வீதிகளின் வழியே நடைபெற்றது.

மற்றும், புதுச்சேரி, நீடாமங்கலம், சீர்காழி, நாகப்பட்டினம் முதலான இடங்களில் இந்த வைபவம் மிகவும் விசேஷமாகக் கொண்டாடப்பட்டதுடன், பக்தர்கள் அவரவர்களது சக்திக்குத் தக்கவாறு தங்கள் தங்கள் இல்லங்களிலும் இந்த விழாவை ஆத்மார்த்தமாகவும் கொண்டாடினார்கள்.

* * * * *

காஞ்சியில் வேத வித்பன்னர்களின் சபை.

நமது பாரதநாட்டில் வேதங்களை முறையுடன் கற்று அவைகளுக்குரிய பாஷ்யங்களையும் ஆராய்ச்சி செய்து பொருள் விளக்கக்கூடிய பண்டிதர்களின் சபை ஒன்றை ஸ்வாமிகள் சென்ற 1955-வது வருடம் ஜனவரி மாதம் 28உ காஞ்சியில் கூட்டிவைத்தார்கள், அந்தச் சபையில் கீழே குறிப்பிட்டுள்ள பண்டிதர்கள் நாட்டின் சிறந்த வேதவித்பன்னர்களெனத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்கெல்லாம் ஸ்வாமிகள் மதிப்புமிக்க சன்மானங்களை அளித்தார்கள் :

ரிக்வேதம் :—

1. போலகம் சுந்தர சாஸ்திரிகள்.
2. கும்பகோணம் கச்சபேசுவர சாஸ்திரிகள்.
3. கேரளம் லக்கிடி சமஸ்கிருத பாடசாலையைச் சார்ந்த சங்கரன் நம்பூத்திரிபாட்.

யஜுர் வேதம் :—

1. ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் டி. வி. லெக்ஷ்மிநாராயண சாஸ்திரிகள்.
2. ஸ்ரீரங்கம் சௌரிராஜ ஐயங்கார்.
3. புதுக்கோட்டை பஞ்சாபகேச தீக்ஷிதர்.
4. அய்யா தீக்ஷிதர்.
5. திருவிசநல்லூர் சீதாராம சாஸ்திரிகள்.
6. கும்பகோணம் அக்னிஹோத்ரம் ராமானுஜ தாத்தாசாரியார்.
7. காட்டேரி ராமகிருஷ்ண சாஸ்திரிகள்.
8. மண்டகொளத்தூர் அருணாசல சாஸ்திரிகள்.
9. மாயவரம் அண்ணாசாமி தீக்ஷிதர்.
10. விஜயவாடா குப்பா லக்ஷ்மண அவதானி.

ஸாமவேதம் :—

1. மன்னார்குடி ராமநாத தீக்ஷிதர்.
2. திருவானைக்கா சுப்பிரமண்ய தீக்ஷிதர்.
3, சென்னை மேலமாம்பலம் அருணாசல சாஸ்திரிகள்.

சுக்ல யஜுர்வேதம்: —

1. உத்திரப்பிரதேசம் ஜோதிர்மடம் தர்மப் பிரசாரகர் மாயாதத்த பாண்டேய சாஸ்திரி.

இந்த மகாசபை நடந்த பின்னர் 1955-ம் வருடம் ஜூன் மாதம் 15உ ஸ்வாமிகளது அறுபத்தோருவது அப்த பூர்த்தியை முன்னிட்டுக் காஞ்சியில் பண்டித சபையொன்று கூட்டப்பெற்றது. அந்தச் சபைக்குப் பாரதநாட்டின் பல ராஜ்யங்களிலிருந்து சிறந்த பண்டிதர்கள் ஐம்பது பேர்களுக்கு மேல் விஜயம் செய்திருந்தனர். வேதம், வேதாந்தம், நியாயம், வியாகரணம், மீமாம்சை, கவிதை முதலான கலைகளில் பரீக்ஷைகள் நடைபெற்றன, அச்சபைக்கு விஜயம் செய்திருந்த எல்லாப் பண்டிதர்களுக்கும் ஸ்வாமிகள் தக்க வெகுமானங்களை அளித்தார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் அறுபது வருடங்களுக்கு மேல் ஸ்ரீமடத்தின் ஆஸ்தான வித்வத் சபையில் பண்டிதராக இருந்து பணியாற்றிவரும் கும்பகோணம் வாஜபேயம் ஸ்ரீநிவாஸ தாதாசாரியாருக்கு ஸ்வாமிகள் ஓர் கல்லிழைத்த தங்க ஆபரணத்தை வெகுமதியாக வழங்கினார்கள்.

* * * * *

அறிஞர்களின் சந்திப்பு.

நம் ஸ்வாமிகள் காஞ்சிக்கு விஜயம் செய்ததுமுதல் ஒவ்வொரு நாளும் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சிஷ்யர்கள் நூற்றுக்கணக்காக அவர்களைத் தரிசிக்க வருவதும், அவர்கள் யாவருக்கும் ஸ்வாமிகள் தரிசனம் அளித்து ஒவ்வொருவரின் குறைகளையும் நேரில் விசாரித்து அவரவர்களுக்குத் தக்க உபதேச மொழிகளைக் கூறி வருவதும் உலகமறிந்ததேயாகும், இவர்களைத் தவிர பல பெரியோர்களும் மேல்நாட்டவர்களும் அடிக்கடி ஸ்வாமிகளைக் கண்டு அவர்களுடன் உரையாடி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

1955-ஆவது வருடம் பிப்ரவரி மாதம் 15உ ஸ்வாமிகளை வானமாமலை ஸ்ரீஜீயர் ஸ்வாமிகள் காஞ்சியில் சந்தித்து அவர்களோடு ஒரு மணி நேரம் உரையாடிக்கொண்டிருந்தார்கள். காலத்திற்கேற்றவாறு நடைபெற வேண்டிய தர்மப்பிரசாரத்தைப்பற்றி இருமகான்களும் அப்போது கலந்தாலோசித்தார்களெனக் கூறப்படுகிறது.

சென்னை ராஜ்ய கவர்னர் ஸ்ரீ பிரகாசாவும் நம் ஸ்வாமிகளை 1955-ஆவது வருடம் செப்டம்பர் 25உ சந்தித்து அவர்களிடம் வெகு நேரம் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்.

1956-ஆவது வருடம் ஜூன் மாதம் 7உ வினோபாபாவேக்கும் நமது ஸ்வாமிகளுக்கும் நடைபெற்ற சந்திப்புச் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஓர் நிகழ்ச்சியாகும். இந்தச் சந்திப்பில் நடைபெற்ற சம்பாஷணை கல்கி பத்திரிகையின் 1—7—56 இதழில் வெளியாகியுள்ளது.

ஸ்வாமிகளைத் தரிசிக்க வந்த மேற்குநாட்டைச் சேர்ந்தவர்களில் இரண்டொருவரைப் பற்றிக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

1954-ஆவது வருடம் ஜூலை மாதம் ஹவர்டு கான் (Howard Conn) என்னும் அமெரிக்கப் பாதிரியார் ஸ்வாமிகளைச் சந்தித்த பொழுது அமெரிக்கர்களது ஆன்மீக வாழ்க்கைக்கு ஓர் உபதேசமருள வெண்டுமென ஸ்வாமிகளிடம் அவர் விண்ணப்பித்துக் கொள்ள அவர்கள் மனமுவந்து கீழேகண்ட செய்தியை விடுத்தார்கள்.

"The God is watching you in all that you do. Whatever you do, be conscious of this presence."

சிக்காகோ சர்வ கலாசாலையைச் சார்ந்த மில்டன் சிங்கர் (Milton Singar) என்னும் பேராசிரியர் ஸ்வாமிகளை 1955-ஆவது வருடம் அக்டோபர் மாதத்தில் சந்தித்ததைப்பற்றி அவர் ஒரு நண்பருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கீழேகண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"Before I went to India, I had heard and read much about the great "Soul Force" of its Holy Men and Saints; but I had assumed that this was something in the ancient past. And it was not until I had met Sankaracharya that I realised, it was still a part of the living force of Hinduism to day."

* * * * *


அத்வைத சபையின் பொன்விழாவானது சென்ற 1945-வது ஆண்டில் கும்பகோணத்தில் நடைபெற்றதைப்பற்றி முன்பகுதிகளில் கூறப்பட்டுள்ளது. சபையின் வைர விழாவைக் காஞ்சிபுரத்தில் நடத்த வேண்டுமென்று ஸ்வாமிகள் விருப்பம் கொண்டார்

அத்வைத சபையின் வைரவிழா.

கள். அவர்களது விருப்பத்திற்கிணங்க அவர்கள் அடிக்கடி தங்கி வரும் சிவாஸ்தானம் என்னும் க்ஷேத்திரத்தில் சபை நடைபெறுவதற்குப் பெரியதொரு அலங்காரக் கொட்டகை அமைக்கப்பெற்றது. 18—3—56 முதல் 25—3—1956 வரை இந்த வைரவிழாவானது அவ்விடம் நடைபெற்றது. ராஜ்யத்தின் பலபாகங்களிலிருந்தும் பல வித்வான்கள் சபையின் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்கள். இந்த வைரவிழாவையொட்டி வைரக்கற்கள் இழைத்த ருத்ராக்ஷ மாலை ஒன்றை ஸ்வாமிகளுக்கு சிஷ்யர்கள் சமர்ப்பணம் செய்தார்கள். ஸ்வாமிகள் விழாவைத் துவக்கிவைத்துப் பேசுகையில் உபநிஷத்துக்களின் ஆத்ம ஒளியை உலகிற்குப் பரப்புவதே அத்வைத சபையின் கடமையாகுமென்றும், ஆத்மவத் ஸர்வ பூதானி என்னும் அத்வைத சித்தாந்தத்தைப் பின்பற்றும் வகையில் தன்னைத்தானே ஒருவன் நேசிப்பதுபோல் பிற ஜனங்களையும் மனிதன் நேசிக்க வேண்டுமென்றும், நமது அன்றாட வாழ்க்கையில் துன்பங்களிலுழலும் மக்களுக்கு ஏதாவதொரு வகையில் உதவி செய்யும் பணியை ஒவ்வொருவரும் ஏற்கவேண்டுமென்றும் கூறினார்கள். மேலும் அத்வைத மதத்திலிருந்து வேறுபட்ட மதங்கள் பல இருக்கின்றனவென்றும் அந்த சித்தாந்தங்களை கடைப்பிடிக்கும் அறிவாளிகளுடன் அத்வைதிகள் கலந்து வேற்றுமைக்கான காரணங்களை அறிய முயலவேண்டுமென்றும், அப்பொழுதுதான் அத்வைத சித்தாந்தம் கூர்மையடையுமென்றும் கூறினார்கள். அந்த நோக்கத்தைச் செய்கையில் காட்டும் வகையில் அதுசமயம் ஸ்வாமிகளைச்சந்திக்கக் காஞ்சிக்கு வந்திருந்த மத்வ மடாதிபதிகளான உடுப்பி ஸ்ரீ பண்டார்கரே ஸ்ரீ வித்யாமான்ய தீர்த்த ஸ்வாமிகளை அதே சபாமண்டபத்தில் த்வைத சித்தாந்தத்தை விளக்க அனுமதியளித்து, அப்பெரியாரின் அரிய உரைகளைப் பண்டிதர்களும் மற்றோரும் கேட்கும்படி செய்தார்கள், மேலும் அந்த மடாதிபதிகளுக்குப் பொன்னுடை போர்த்தும்படி செய்து அவர்களைச் சிறப்பித்தார்கள். ஸ்வாமிகளின் இப் பரந்த நோக்கத்தை யாவரும் புகழ்ந்தார்கள். இவ்விழாவையொட்டிச் சபையின் காரியதரிசியான இஞ்சினியர் எஸ். வைத்யநாத ஐயருக்கு ஸ்வாமிகள் அத்வைத ஸேவாமணி என்னும் பட்டத்தை அளித்தார்கள்.

இந்த விழாவில் கலந்துகொண்ட பண்டிதர்கள் சிலருக்கு வைரம் பதித்த தங்கத் தோடாக்களையும், பலருக்கு வைரம் பதித்த


காஞ்சியில்



அத்வைத சபையின் வைர விழா



1956-அத்வைத ஸபையின் வைர விழா-பண்டிதர்களின் கூட்டத்தில் ஒருபகுதி



ஸபைக்கு விஜயம் செய்யும் மார்க்கத்தில்

மோதிரங்களையும் ஸ்வாமிகள் பரிசாக வழங்கினார்கள். மேலும், வழக்கம்போல் கொடுக்கும் சம்பாவனையைப்போல் இருமடங்கு சம்பாவனையை அவ்வருடம் பண்டிதர்களுக்குக் கொடுக்கவும் ஸ்வாமிகள் கட்டளையிட்டார்கள்.

இந்த விழாவை அலங்கரித்த நூற்றுக்கணக்கான பண்டிதர்களுள் விழாவில் தீவிர பங்கெடுத்துக்கொண்டு சொற்பொழிவாற்றிய மகாபண்டிதர்களின் பெயர்களைக் கீழே காணலாம்.

1, சாஸ்த்திர ரத்னாகரம் மகாமகோபாத்யாய என். எஸ். அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள்.
2. சாஸ்த்திர ரத்னாகரம் போலகம் சுந்தர சாஸ்திரிகள்.
3. சாஸ்த்திர ரத்னாகரம் ஸ்ரீ மடம் ஆஸ்தான வித்வான் டி. வி. லெக்ஷ்மிநாராயண சாஸ்திரிகள்.
4. சாஸ்த்திர ரத்னாகரம் போலகம் ராமா சாஸ்த்திரிகள்.
5. பண்டிதராஜ பிராந்தியங்கரை சுப்பிரமண்ய சாஸ்திரிகள், எம். ஏ.
6. பண்டிதராஜ வேப்பத்தூர் சுப்பிரமண்ய சாஸ்திரிகள்.
7. வேப்பத்தூர் வைத்யநாத சாஸ்திரிகள்.
8. திருவையாறு பாலகிருஷ்ண சாஸ்திரிகள்,
9. தஞ்சாவூர் முத்துகிருஷ்ண சாஸ்திரிகள்.
10. ஆங்கரை ரங்கஸ்வாமி சாஸ்திரிகள்.
11. மயிலாப்பூர் ராமமூர்த்தி சாஸ்திரிகள்.
12. இஞ்சிக்கொல்லை ஆத்ம வித்யா பூஷணம் வி. ஜெகதீச்வர சாஸ்திரிகள்.
13. பழூர் பாடசாலை சுப்பிரமண்ய சாஸ்திரிகள்,
14. மைலாப்பூர் சமஸ்கிருத காலேஜ் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்.
15. புதுக்கோட்டை பஞ்சாபகேச தீக்ஷிதர்.
16. மைலாப்பூர் ஸமஸ்கிருத காலேஜ் பிரின்ஸிபால் K. பால சுப்ரமண்ய சாஸ்திரிகள்.

இந்த விழாவின் நடவடிக்கைகளையும், ஸ்வாமிகளின் சொற்பொழிவுகளையும், சபையைத் துவக்கிவைத்த பிரமுகர்களின் வரலாறுகளையும், சபையின் முன்னாள் பண்டிதர்கள், தற்கால

பண்டிதர்கள் இவர்களது குறிப்புகளையும் விளக்கி வைரவிழா மல ரொன்று வெளியிடப்பட்டுள்ளது.

* * * * *

இந்த மூன்று வருடங்களிலும் ஸ்வாமிகள் காஞ்சியிலேயே தங்கி அவ்வருடங்களின் சாதுர் மாஸ சங்கல்பங்களை அவ்விடத் திலேயே முடித்துக்கொண்டார்கள். 1956-வது வருட நவராத்திரி விழா அம்பி கிராமத்தில் கொண்டாடப்பட்டது. தெய்வ வழிபாடு சம்பந்தமாய் அவ்வப்போது ஸ்வாமிகள் பல அறிக்கைகளை விடுத்து வந்தார்கள். 1956-வது வருட இறுதியி லிருந்து பக்கத்துக் கிராமங்களின் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கிச் சிற்சில ஊர்களுக்கு ஸ்வாமிகள் சென்றுவருகிறார்கள். ஸ்வாமிகள் காஞ்சியில் தங்கியிருக்கும் நினைவாக பெரிய காஞ்சீபுரம் கங்கை கொண்டான் மண்டபத்திற்கு எதிராக உள்ள ஸ்ரீமடத்தில் நுட்பமான சிற்ப வேலைப்பாடுடன் 16 கால் மண்டபம் ஒன்றை அமைக்க சிஷ்யர்கள் ஏற்பாடு செய்துவருகிறார்கள்.


1954, 1955, 1956-வது வருடங்களில்.

1956-வது வருடம் பிப்ரவரிமீ 25உ கும்பகோணத்தில் நடை பெற்ற மகாமக விழாவின்பொழுது ஸ்வாமிகளது உடல் நிலை குன்றியிருந்ததால் அச்சமயம் ஸ்வாமிகள் கும்பகோணத்திற்கு விஜயம் செய்யவில்லை. சென்ற நான்கு மகாமகங்களில் அங்கு விஜயம்செய்து மக்களுக்கு தர்சனம் அளித்த ஸ்வாமிகளை அவ் வருடம் அங்கு காணாததால் பல பக்தர்கள் ஏமாற்றமடைய நேர்ந் தது. அன்று விடியுமுன்னர் மகாமகக் குளத்தில் தீர்த்தம் எடுத்து அந்தத் தீர்த்தத்தை மோட்டார் வண்டியில் பகல் 12 மணிக்குள் காஞ்சீபுரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஸ்வாமிகள் அப் புனித நீரால் தம் மாத்யான்ய ஸ்நானத்தை அன்று முடித்துக்கொண் டார்கள். கும்பகோணம் மடத்தில் சிஷ்யகோடிகளின் ஒத்துழைப் புடன் ஏழு நாட்களுக்குப் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அன்ன மளிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான யாத்திரிகர்களுக்கு மடத்தில் தங்க வசதியளிக்கப்பட்டது.

* * * * *

இந்திய யூனியன் சர்க்காரால் நியமனம் செய்விக்கப்பட்ட ஸமஸ்கிருத கமிஷன் தலைவர் டாக்டர் ஸுனிதிகுமார் சட்டர்ஜியும் மற்ற அங்கத்தினர்களும் ஸ்வாமிகளை 1957-வது வருடம் பிப்ரவரிமீ

ஸமஸ்கிருத கமிஷனுக்கு பேட்டியளித்தது.



திருப்பாவை—திருவெம்பாவை பாடிய குழந்தைகளின் நடுவில் 442



ஸ்ரீ சிவாஸ்தானத்தில் கூடிய பண்டித சபை

7உ காஞ்சியில் தரிசித்து நம் நாட்டில் ஸமஸ்கிருதம் அபி விருத்தியடைய வேண்டியதற்கான ஸ்வாமிகளின் ஆலோசனைகளை கேட்டறிந்தனர்.

ஸமஸ்கிருதக் கல்விச்சாலைகளில் நவீன பாடமுறைகளைச் சேர்த்துப் பாடங்களைக் கற்றுக்கொடுப்பதில் யாதொரு தவறுமில்லை யென்றும் ஆனால் பழையமுறையில் பாடம் கற்பிக்கும் உயரிய பழக்கத்தை மாற்றக் கூடாதென்றும் அம்முறையில் சில வித்யாசாலைகளைக் தனிமையாக அமைத்துப் பிராசீன வித்வான்களை ஆதரிக்க வேண்டுமென்றும், இவ்வகையில் செய்யும் எந்த மாறுதலையும் மிகவும் நிதானத்துடன் செய்யவேண்டுமென்றும் ஸ்வாமிகள் கூறினார்கள். பாரத நாட்டில் ஆசிரியத் தொழில்புரியும் எல்லோருக்கும் ஸமஸ்கிருதத்தில் ஆரம்பப் பயிற்சியாவது தேவையாக இருக்க வேண்டுமென்றும் கூறினார்கள். மேலும் ஸ்வாமிகள் கூறுகையில் ஐ. எ. எஸ். பரீக்ஷைக்கு மனு செய்துகொள்ளுகிறவர்கள் சிறிது ஸமஸ்கிருதப் பயிற்சியுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்றும் கூறினார்கள்.

கமிஷன் அங்கத்தினர் ஒருவரும் சென்னை சர்வகலாசாலை ஸமஸ்கிருதப் பிரிவின் தலைவருமான டாக்டர் வே. ராகவன் கமிஷன் செய்யப்போகும் வேலைகளைப்பற்றிய விபரங்களை ஸ்வாமிகளிடம் எடுத்துக்கூறினர். காமகோடி கோசஸ்தானத்தின் வெளியீடுகள் அங்கத்தினர்களுக்கு அளிக்கப்பட்டன. ஸ்வாமிகளின் தரிசனத்தினாலும் அவர்களது உயரிய ஆலோசனைகளாலும் தாங்கள் பெரும் பயனையடைந்ததாகக் கமிஷன் தலைவர் கூறினர்.

* * * * *

ஸ்வாமிகள் 1957ஆம் பிப்ரவரிமீ பின்பகுதியில் வடஆற்காடு ஜில்லா கலவை என்னும் ஊருக்கு விஜயம்செய்து அங்கு நிர்விகல்ப ஸமாதியில் அமைந்திருக்கும் 67-வது பீடாதிபர்களான தம் குருநாதருடையதும் 66-வது பீடாதிபர்களான பரமகுருநாதருடையதுமான இரண்டு அதிஷ்டானங்களையும் தர்சனம் செய்துகொண்டார்கள். இன்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் நமது ஸ்வாமிகள் இக்கலவை என்னும் இடத்தில்தான் பீடத்தில் அமர்ந்தார்கள் என்பதை வாசகர்களின் நினைவுக்குக் கொண்டுவருகிறோம்.

ஸ்வாமிகள் தமது பரம குருவினுடைய வருஷ ஆராதனையைக் கலவைக்கு இரண்டு மைல்கள் தூரத்திலுள்ள நல்லூர் என்னும் கிராமத்தில் நடத்தினார்கள். குருவின் ஆராதனையை மார்ச் மீ 2உ கலவையில் நடத்தினார்கள். அன்று சென்னையிலுள்ள பக்தர்கள் நூற்றுக்கணக்காக ஸ்வாமிகளைத் தரிசித்து அவர்களுக்கு பிக்ஷை நடத்திவைத்தார்கள்.

12. அன்றாட நடப்பு

இவ்வரலாற்றை ஒரு முடிவுக்குக் கொண்டுவருமுன் ஸ்வாமிகள் ஒவ்வொரு நாளையும் சாதாரணமாகக் கழிக்கும் முறையைப் பற்றிச் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறோம். ஒவ்வொருநாளும் விடியற் காலை ப்ரம்ம முகூர்த்தம் எனக் கூறப்படும் வேளையான சுமார் 4-30 மணிக்கு மடத்தில் நகரா என்னும் முரசொலி முழங்கும். அதை அடுத்து டங்கா என்னும் வாத்யமும் வாசிக்கப் பெறும். இவைகள் நம் நாட்டுப் பழைய அரசாங்கங்களின் அரண்மனைகளில் வாசிக்கப் பெறுவது வழக்கம். கலைக் கோவில்களாக விளங்கி வரும் மடாலயங்களிலும் அந்தச் சின்னங்கள் முழங்க வேண்டுமென்ற நோக்கத்துடன் பழைய காலத்து மன்னர்கள் அவற்றிலும் அவ்வழக்கத்தை அமைத்தனர் போலும். இவ்வொலிகளைக் கேட்டதும் மடத்தின் சிப்பந்திகள் யாவரும் விழித்துக்கொண்டு, பக்கங்களிலுள்ள குளங்களிலோ, நதிகளிலோ நீராடி அவரவர்களுக்குரிய அனுஷ்டானங்களைச் செய்துமுடித்துக் கொண்டு, தத்தம் வேலைகளுக்குத் தயாராக வந்து விடுவார்கள். ஸ்வாமிகளும் அவர்களுக்கு முந்தியே விழித்தெழுந்து சிறிது நேரம் த்யானத்தில் அமர்ந்திருப்பார்கள். பின்னர் அவர்களும் நீராடித் தாம் உபாசிக்கும் தெய்வமான ஸ்ரீ திரிபுர சுந்தரி சமேத ஸ்ரீசந்திர மௌளீச்வரர் சந்நிதியில் கோ பூஜை நடைபெறுவதைக் காண அங்கு வருவார்கள். அந்தப் பூஜையை செய்கின்றவர் நல்ல வேதப் பயிற்சியும், ஆசாரசீலமும் உள்ளவராக இருப்பார். அந்தப் பூஜைக்கென மடத்தில் காராம்பசு எப்பொழுதும் வளர்க்கப்பட்டு வருகிறது. கோ பூஜையை ஒட்டிக் கஜ பூஜையும் நடைபெறும், அப்பொழுது சந்நிதியில் திரை அகற்றப்படும். அன்றாடம் வெளியூர்களிலிருந்தும், உள்ளூரிலிருந்தும் தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் பலரும் நீராடி புனிதமான இந்தப் பூஜையை தரிசித்துக்கொள்வார்கள்.

ஸ்வாமிகளின் காலை நிஷ்டை, அநுஷ்டானம் ஆகியவை முடிந்தவுடன் அன்றைய திதி வாரம், யோகம், நக்ஷத்திரம், கரணம், என்னும் பஞ்சாங்க (ஐந்து அங்கங்கள்) சிரவணம் நடைபெறும். பின்பு காலை சுமார் 7-30 மணி முதல் வேதாந்த சாஸ்திர பாடங்கள் நடைபெறும், ஸ்வாமிகளே குறிப்பிட்ட சில சிஷ்யர்

களுக்கெனப் ப்ரும்ம சூத்திர பாஷ்ய பாடத்தை உரைப்பார்கள். சாஸ்திர விற்பன்னர்களான பண்டிதர்கள் ஸ்வாமிகளின் திரு வாக்கிலிருந்து வரும் அவ்வுரைகளைக் கேட்டுப் பெரும் பயனை அடைவார்கள். அப்பொழுது தத்துவ ஆராய்ச்சிகளும், நூல்களின் ஆராய்ச்சிகளும் நடைபெறும், (ஸ்வாமிகள் விஜயம் செய்யும் இடங்களுக்கெல்லாம் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் அடங்கிய நடமாடும் நூல் நிலையம் ஒன்றும் போய்க்கொண்டே இருக்கும்.)

காலை சுமார் 9 மணிக்கு ஸ்வாமிகள் பக்தர்களுக்குத் தரிசனம் அளிப்பதெற்கென, அவர்கள் வசிக்கும் தனிமையான இடத்தி லிருந்து, வெளி வருவார்கள். நாள் தவறாது நூற்றுக்கணக்கான பக்தர்கள் தரிசனத்திற்குத் தினந்தோறும் மடத்துக்கு வந்தவண் ணமே இருப்பார்கள். காலை நேரத்தில் ஸ்வாமிகள் வடமொழியி லேயே உரையாடுவார்கள். அவர்கள் மிகவும் எளிய நடையில் உரையாடுவது மக்கள் எளிதில் புரிந்துகொள்ளக் கூடியதாகவே இருக்கும். அவ்விதம் புரிந்துகொள்ள முடியாதவருக்கு பக்கத்தி லிருப்பவர்கள் ஸ்வாமிகளின் உரைகளை மொழி பெயர்த்துக் கூறு வார்கள். பக்தர்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் ஸ்வாமிகள் விவரமாக விசாரித்து, அவரவர்களின் சந்தேகங்களையோ, குறை களையோ கேட்டு அவைகளைப் போக்கும் வகையில் அவர்களுக்குத் தக்கவாறு உபதேச மொழிகளைக் கூறுவார்கள்.

இவ்வாறு வருபவர்களுள் ஞான வைராக்யத்தை நாடி வருப வர்கள் பலர்; நல்ல மக்கட்பேற்றைப் பெற்று அம்மக்கள் நல்ல புத்திமான்களாக விளங்கி எக் குறையுமில்லாமல் சந்ததிகள் வளர வேண்டுமென்று விரும்புவர் பலர்; வியாதியினின்றுச் சுக வாழ்வு வாழவேண்டுமென்று நினைப்பவர் பலர்; ஸ்வாமிகளது தரிசனத் தினாலேயே எல்லா நற்பயன்களையும் அடையலாமென்னும் நம்பிக் கையுடன் வருபவர்கள் பலர், இவ்விதமாக வரும் பலதரப்பட்ட பக்தர்களை அங்குக் காணலாம், மேலும் ஆலயத் திருப்பணி, பஜனை மடத் திருப்பணி, முதலான பொதுக் காரியங்களில் ஈடுபடு பவர்களும் ஸ்வாமிகளது ஆசியைப் பெற்றுப்போக வருவதுண்டு. பல கலைகளைக் கற்ற வித்வான்களும் தங்கள் திறன்களை ஸ்வாமி கள் முன்னிலையில் வெளிப்படுத்தும் அவாவுடன் அங்கு வந்திருப் பார்கள். திருப்பணிகளுக்கும், தர்ம காரியங்களுக்கும் மடத்தின் செல்வ நிலையை அனுசரித்துப் பொருளுதவியும் செய்ய, மடத்தின்

அதிகாரிகளுக்கு ஸ்வாமிகள் கட்டளையிடுவார்கள். வித்வான்களும் தங்கள் திறமைக்குத் தக்கவாறு சன்மானங்களையும் பெற்றுப் போவார்கள்.

ஸ்வாமிகள் தம் மத்தியான ஸ்நானத்தையும், அனுஷ்டானத்தையும் முடித்துக்கொண்டு நித்ய பூஜைக்கென ஸ்வாமி சந்நிதிக்கு எழுந்தருளுவார்கள். அப்பொழுது பக்தர் ஒருவர் ஸ்வாமிகளுக்குத் தாம் செய்ய உத்தேசித்திருக்கும் பிக்ஷையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென விண்ணப்பித்துக் கொள்வார் அவ்வாறு வேண்டிக் கொள்பவர்கள் பந்துக்களுடனும், மித்திரர்களுடனும் அங்குவந்து, பூர்ண கும்பம், வேத கோஷம், வாத்ய கோஷம் இவைகள் சகிதம் பக்தியுடன் பிக்ஷா வந்தனம் செய்வது ஓர் ஒப்பற்ற காட்சியாக விளங்கும். பகல் சுமார் 12-30 மணிக்குப் பூஜை தொடங்கி 3 மணிவரை நடைபெறும். பூஜையைக் காண நூற்றுக்கணக்கான பக்தர்கள் அங்குக் கூடியிருப்பார்கள். அப்பொழுது வேத கோஷங்கள், சங்கீத கோஷங்கள், வாத்ய கோஷங்கள் முழங்கும். பக்தர்கள் சிலர் குருநாதரின் பாதுகைகளுக்குப் புஷ்பங்களினுலும், தங்கம் வெள்ளி முதலான நாணயங்களினுலும் அர்ச்சனை செய்வார்கள். பூஜை முடிவு பெற்றவுடன் யாவருக்கும் விபூதி, குங்குமம் அக்ஷதைப் பிரசாதம் வழங்கப் பெறும், காலை முதல் எவ்வித ஆகாரமும் உட்கொள்ளாதவர்களுக்குப் புனிதமான அபிஷேக தீர்த்தத்தை ஸ்வாமிகள் தமது திருக்கரத்தினுலேயே வழங்குவார்கள். பின்னர் யாவருக்கும் உணவு அளிக்கப்பெறும், அப்பொழுது ஸ்வாமிகள் சுமார் 15 நிமிடங்கள் ஓய்வு எடுத்துக்கொள்வார்கள். இந்த ஓய்வு நேரத்தில் மனமிருந்தால் சிறிது சாத்வீக உணவை பிக்ஷையாக ஏற்றுக்கொள்வார்கள், இந்த ஓய்வு நேரம் முடிந்தவுடன், மடத்தின் நிர்வாகிகள் அன்று வந்த தபால்களை எடுத்து வந்து, ஸ்வாமிகளின் முன்னிலையில் வாசிப்பார்கள். ஸ்வாமிகள் அப்பொழுதே அவைகளுக்கு அனுப்பவேண்டிய விடைகளைப் பற்றி கூறிவிடுவார்கள். இந்த விடைகளை அந்த நிர்வாகி குறிப்பெடுத்துக்கொள்வார். நூற்றுக் கணக்காக மடத்துக்குத் தனி பக்தர்களிடமிருந்தும், சங்கங்களிலிருந்தும் கடிதங்கள் வந்தவாறே இருக்கும். தங்களுக்குள்ள பல வகையான சந்தேகங்களைத் தீர்த்துவைக்க வேண்டுமெனச் சிஷ்யர்கள் விண்ணப்பம் செய்துகொண்டிருப்பார்கள். இவை முடிந்த பின்னர் மடத்தின் நிர்வாக விஷயங்களைப் பற்றிச் சிறிது நேரம்

ஆலோசனைகள் நடைபெறும். அதன் பின்னர் அன்று பத்திரிகைகளில் வந்திருக்கும் முக்கியமான உலக விஷயங்களைப் பற்றி ஒருவர் சிறிது நேரம் ஸ்வாமிகளிடம் விளக்கம் கூறுவார். பின்னர் சில நிமிடங்கள் ஓய்வு.

மாலை சுமார் 5 மணிக்கு பக்தர்களுக்கு மறுபடியும் தரிசனம் அளிப்பதற்கென ஸ்வாமிகள் வெளியில் வருவார்கள். காலையை விட மாலையில் தரிசனத்திற்கு வருபவர்கள் தொகை அதிகமாயிருக்கும். பாரத நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல்வேறு பாஷைகளைப் பேசுகின்ற பக்தர்கள் ஸ்வாமிகளைத் தரிசிக்க வந்திருப்பார்கள். அந்நேரத்தில் தினந்தோறும் ஸ்வாமிகள் அந்தந்தத் தேச பாஷைகளில், அவரவர்களுடன் பேசி அவர்களுக்கெல்லாம் உபதேச மொழிகளைக் கூறி விடைகொடுத்தனுப்புவார்கள். பிறகு ஸ்வாமிகள் தமது மாலைநேர ஸ்நானத்திற்குச் சென்று மாலை ஜபம், த்யானம் முதலியவைகளை முடித்துக்கொள்வார்கள். ஸ்வாமிகள் ஸ்நானத்திற்கு செல்லும் முன்னர் ஸ்ரீ சந்திரமௌளீச்வரர் சந்நிதியில் கஜ பூஜை நடைபெறும். அப்பொழுது மடத்தின் பணியாளர்கள் யாவரும் அங்குக் கூடியிருக்க வேண்டுமென்பது ஒரு நியதி. அப்பொழுது வேத கோஷங்கள், ஸ்தோத்திர பாடல்கள் இவைகள் சிறிது நேரம் நடைபெறும். மடத்தின் பொக்கிஷதார் அன்று மடத்திற்கு வந்த வருமானத்தையும், ஏற்பட்ட செலவையும் கணக்குப் புத்தகத்திலிருந்து ஸ்வாமி சந்நிதியில் வாசிப்பார். கஜ பூஜை முடிவு பெற்றவுடன் பக்தர்கள் அவரவர்களுக்குரிய சந்தியா வந்தனம், பிரார்த்தனை முதலிய வழிபாடுகளைச் செய்ய வெளி இடங்களுக்குச் சென்று வருவார்கள். இந்தச் சமயம் ஸ்வாமிகள் சுமார் ஒரு மணி நேரம் த்யானத்தில் அமர்ந்திருப்பார்கள்.

மறுபடியும் இரவு சுமார் 8 மணிக்கு ஸ்வாமி சந்நிதானத்தில் பக்தர்கள் கூடியிருப்பார்கள். ஸ்வாமிகளும் அப்பொழுது சந்நிதிக்கு விஜயம் செய்து இரவு பூஜையைத் தொடங்குவார்கள். இரவு பூஜை சாதாரண நாட்களில் சுமார் ஒரு மணி நேரம் நடைபெறும். வெள்ளிக்கிழமை, நவராத்திரி, பிரதோஷம் பூர்ணமி இந்த விசேஷ நாட்களில் இந்த பூஜை சுமார் நான்கு மணி நேரம் நடைபெறும். பூஜை முடிந்த பின்னர் பக்தர்களுக்கு விபூதி, மந்திராக்ஷதை, குங்குமம் முதலான பிரசாதங்கள் வழங்கப்பெறும். பின்னர் மாலையிலிருந்து காத்திருந்தவர்களுக்கு ஸ்வாமிகள் அன்

புடன் விடை கொடுத்து அனுப்புவார்கள். அப்பொழுது இரவு 11 மணியாகிவிடும்.

ஸ்வாமிகளைத் தனிமையில் காண முன்னேற்பாடுடன் சில பக்தர்கள் அந்த நேரத்தில் காத்திருப்பார்கள். அவர்களுக்கு ஸ்வாமிகள் தனித் தனியே தரிசனம் அளிப்பார்கள். மத சம்பந்த மான பிரசாரங்களை வகுக்க அவ்வகையில் தொண்டாற்றும் சில பக்தர்களுடன் ஆலோசனைகள் நடத்துவதும் அந்தச் சமயத்தில் தான். பொது மக்களுக்கு மத சம்பந்தமான சில கட்டளைகளையிடு வதற்கு அப்பொழுது அறிக்கைகள் தயாரிக்கப் பெறும். இவ்வித அறிக்கைகளை ஸ்வாமிகளே கூறுவார்கள். சிஷ்யர்கள் அவை களைக் குறிப்பெடுத்துக் கொள்வார்கள். அவை பின்னர் துண்டுப் பிரசுரங்கள் மூலமும், பத்திரிகைகளின் வாயிலாகவும் வெளி வரும். இந்த ஆலோசனைகள் முடிவடையும்பொழுது இரவு சுமார் ஒரு மணிக்கு மேலாகிவிடும். அதன் பின்னர் ஸ்வாமிகள் தாம் அணிந்துள்ள ஒரே வஸ்திரத்தின் ஒரு பாகத்தை வெறும் தரையிலோ அல்லது ஒரு பலகையின் மீதோ விரித்துச் சுமார் ஓரிரண்டு மணி நேரம் கண்ணயர்வார்கள். மறுபடியும் காலை சுமார் 4 மணிக்கே ஸ்வாமிகள் வெகு உற்சாகத்துடன் காட்சியளிப் பதைக் காண யாவருக்கும் வியப்பாகவே இருக்கும். தமக்கென உடலை வளர்க்காத தியாகிகளின் நிலை இவ்வாருகவே இருக்கு மென்பதில் ஐயமில்லை. ஸ்வாமிகள் புரியும் எந்தச் சிறிய செய லும் உலக நன்மைக்கே என்பதை ஸ்வாமிகளைத் தரிசித்தவர்கள் அறிந்திருப்பார்கள். உலகெலாம் துன்பமின்றி சுகமாக வாழ வேண்டுமென்பதே அவர்கள் ஒவ்வொரு நாளும் தாம் வழிபடும் தெய்வத்தின் முன்னிலையில் மூன்று முறை செய்துகொள்ளும் பிரார்த்தனையாகும்.

சுபம்

13. அனுபந்தம்

|| ஸ்ரீ: ||

(1) ஸ்வாமிகள் ஜாதகம்

जननी जन्मसौख्यानां वर्द्धनी कुलसंपदां ।
पदवीपूर्व पुण्यानां लिख्यते जन्मपत्रिका ॥

ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகம் 1817, ஜய ளூ வைகாசி மீ 8௳, 1894 ளூ மே மீ 20௳ ஞாயிற்றுக்கிழமை உதயாதி நாழிகை 19, ப்ரதமை திதி நாழிகை 44 வி., 35, அனுஷ நக்ஷத்திரம் நா. 30 வி. 51, சிவ நாமயோகம் நா. 43 வி. 26 கூடிய சுபதினத்தில் சுதேச கடிகாரப்படி (Local Time) கணித்துக் கண்ட பகல் மணி 1, நி. 16-க்கு கும்பகோணம் சுப்ரமண்ய சாஸ்திரிகளுக்குப் புண்ய குமாரன் சுப ஜனனம். ஜன்ம லக்னம், ஸிம்மம். நவாம்சலக்னம் வ்ருச்சிகம். ஜன்ம நக்ஷத்திரம் அனுஷம் செல்லு நா. 49 வி. 4-க்கு ஆதியில் நக்ஷத்திர தசாபிரகாரம் சனி தசையிலிருப்பு ளூ 3, மீ 5 நாள் 18.

சுக் ரா		சூ பு குரு	
குஜ	ராசி		
			ல
	சந்		மா சனி கே

சூ		கே மா	குரு
குஜ பு	நவாம்சம்		
சுக்			
	ல சந் ரா		சனி

1. சூரியன் - கிருத். 4
2. சந்திரன் - அனுஷ. 4
3. குஜன் - சதயம் 3
4. புதன் - க்ருத். 3
5. குரு - ரோக. 3
6. சுக்கிரன் - ரேவதி 2
7. சனி - சித்திரை 2
8. ராகு - உத்திரட்டாதி 4
9. கேது - ஹஸ்தம் 2
10. லக்னம் - பூரம் 4 (ரா. 4 25°. 40′.)
11. மாந்தி - ஹஸ்தம் 2
12. அயனும்சம் - ரா. 0 பா. 22, 22

श्रीः

(2) ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபர்களின்

ஸ்ரீமுக-பிருதுகள்

முகர்

स्वस्ति श्रीमदखिलभूमण्डलालङ्कार त्रयस्त्रिंशत्कोटिदेवतासेवित श्रीकामाक्षी-देवीसनाथ श्रीमदेकाम्रनाथ श्रीमहादेवीसनाथ श्रीहस्तिगिरिनाथ साक्षात्कार परमाधिष्ठान सत्यव्रतनामांकित ; काञ्चीदिव्यक्षेत्रे ; शारदामठसुस्थितानाम् ; अतुलितसुधारस माधुर्य कमलासनकामिनी धम्मिल्लसम्फुल्ल मल्लिकामालिका निष्यन्द मकरन्दझरी सौवस्तिक वाङ्गुम्भ विजृम्भणानन्द तुन्दिलित मनीषि मण्डलानाम् ; अनवरताद्वैत विद्याविनोदरसिकानाम् ; निरन्तरालंकृतीकृत शान्ति दान्तिभूम्नाम् ; सकलभुवनचक्रप्रतिष्ठापक श्रीचक्रप्रतिष्ठाविख्यात यशोऽलंकृतानाम् ; निखिलपाषण्डषण्डकण्टकोद्घाटनेन विशदीकृतवेदवेदान्तमार्गषण्मतप्रतिष्ठापकाचार्याणाम्, श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य श्रीजगद्गुरु श्रीमच्छंकरभगवत्पादाचार्याणाम् अधिष्ठाने सिंहासनाभिषिक्त श्रीमन्महादेवेन्द्रसरस्वतीसंयमीन्द्राणाम् अन्तेवासिवर्य श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादाः ॥

குறிப்பு:—இதை ஒவ்வொரு சிஷ்யரும், முக்கியமாய் ஒவ்வொரு புரோகிதரும் மனப்பாடம் செய்துகொண்டு விவாஹம் முதலான சுப முகூர்த்தங்களில் மடத்திற்கு ஆசார்ய ஸம்பாவனை செய்யும்பொழுது யாவரும் சேர்ந்து சொல்ல வேண்டும்.

(3) தர்மப் பிரசாரங்கள்

ஸ்வாமிகளின் பரிபூர்ண அனுக்கிரகத்தைப் பெற்று நம் நாட்டில் பல பண்டிதர்கள் தர்மப் பிரசாரம் செய்துவருவது உலக மறியும். அவர்களில் பலர் நல்ல வாக்கு வன்மை படைத்தவர்களாகவும், சாஸ்திரங்களில் நல்ல தேர்ச்சி பெற்றவர்களாகவும் புராணங்களில் தோய்ந்து பல்லாயிரக்கணக்கான சுலோகங்களை மனப்பாடம் செய்தவர்களாகவும் இருக்கின்றனர். இவர்கள் யாவரும் இப்புத்தகத்தில் இடம் பெறத் தகுதி வாய்ந்தவர்களே யாவர். ஆயினும் எல்லோரைப்பற்றியும் இங்குக் குறிப்பிடுவதென்றால் இப்பகுதியே பெரியதோர் நூலாக அமையவேண்டி வருமாதலால், இடச்சுருக்கம் காரணமாக மடத்தில் நெருங்கிய தொடர்புகொண்டுள்ள அவர்களில் சிலரைப்பற்றியாவது இங்குக் குறிப்பிட முற்பட்டுள்ளோம்.

பாகவத சப்தாகம், நவாகம் என்னும் நினைவுகள் நம் மக்களுக்குள் வரும்பொழுது இப்பெரியாரை நினைவுபடுத்தாமல் இருக்கமுடியாது. அவர் நூற்றுக் கணக்கான முறை பாகவதப் பிரவசனம் செய்திருக்கிறார். பாகவதம் முழுவதுமே அவருக்கு மனப்பாடம் என்பது இவ்விடம் குறிப்பிடத் தக்கதாகும். அவர் சுலோகங்களைச் சொல்லிப் பொருள் கூறும் தனிச்சிறப்பை இச்சிறு கட்டுரையில் வர்ணிக்க முடியாததாகும். அவரது வாக்கினின்று வரும் சொற்கள் ஆற்றின் புது வெள்ளத்தைப்போல் வெகு விரைவுடன் வந்து கொண்டிருக்குமாதலால் கேட்பவர்கள் தங்களது கவனத்தை வேறு வகையில் செலுத்த முடியாதவாறு அவரது உபதேசத்திலேயே மக்கள் திகழ்ந்திருப்பர். இப்பெரியார் சுமார் நாற்பது ஆண்டுகளாகப் பெரும்பாலும் நாடெங்கும் பாகவதப் பிரவசனம் செய்து வருகிறார். சில ஆண்டுகளுக்கு முன்னர் அவருக்குச் சிறிது உடல்நிலை குன்றிய சமயம் மனோநிலையும் மாறி சில மாதங்கள் வாக்கினின்றும் சொற்கள்வராதநிலையை அவர் அடைந்துவிட்டார். அப்பொழுது மிகக் கவலையுற்ற அவர் உறவினர்களும் நண்பர்களும் நம் ஸ்வாமிகளிடம் அவரை அழைத்துவந்தார்கள். ஸ்வாமிகளை அவர் வணங்கி எதையும் கூற இயலாதவாறு கண்ணீர் சொரிந்தவண்ணம் நிற்க, ஸ்வாமிகளும் அவரை நோக்கி, "நீங்கள் இன்றே பழைய

1. மாயவரம் சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள்.

நிலையை அடைவீர்கள். கவலை வேண்டாம்'' எனக் கூறி மடத்தின் அதிஷ்டான தெய்வமான ஸ்ரீ சந்திரமௌளீச்வரர் சந்நிதியில் குறிப்பிட்ட பாகவத சுலோகங்கள் சிலவற்றைக் கூறும்படி கட்டளையிட்டார்கள், சாஸ்திரிகள் அப்பொழுது எவ்விதத் தங்கு தடையுமின்றிச் சுலோகங்களைக் கூற யாவரும் மகிழ்ச்சியுற்றவர்களானுர்கள். சாஸ்திரிகளும் சில நாட்களுக்குள் பழைய நிலையை அடைந்துவிட்டார்.

* * * * *

2. சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர்.

இருபத்தோரு தலைமுறையாக யாகங்கள் பல புரிந்து அணையாத அக்னியை வளர்த்துவரும் ஓர் உயரிய குடும்பத்தில் உதித்தவர் சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர். இவரது தந்தை சுப்பிரமணிய தீக்ஷிதர் தமது புதல்வர் அனந்தராமனை வெகு சிறு பிராயத்திலேயே ஸ்வாமிகளிடம் அடிக்கடி அழைத்துவருவதுண்டு. சென்ற முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்வாமிகள் சேங்காலிபுரத்திற்கு விஜயம்செய்தபொழுது சிறுவன் அனந்தராமனை அன்புடன் அழைத்து ப்ரஸந்ந ராகவம் என்னும் ராமகதை அடங்கிய ஓர் வடமொழிக்காவியத்தை அவரிடம் கொடுத்து, "நீ இதை படித்துவா'' யெனக் கட்டளையிட்டார்களாம். அன்று கிடைத்த ஸ்வாமிகளின் அந்த அனுக்கிரகமே இன்று ராமாயணத்தை உலகம் புகழும்படி பிரவசனம் செய்யும் சக்தி தமக்குக் கிடைத்ததென தீக்ஷிதர் கூறியுள்ளார், தீக்ஷிதர் தமக்கென ஓர் தனிப்பாணியில் சுலோகங்களைச் சொல்லிவரும்பொழுது வடமொழிப் பயிற்சி அதிகமில்லாதவர்கள்கூட அவைகளின் பொருள்களைப் புரிந்துகொள்ளுவார்கள், இன்று உலகம் உள்ள போக்கை அறிந்து சிறந்த மேற்கோள்களுடனும் ஹாஸ்யச் சுவையுடனும் அவர் புரிந்துவரும் புராணப் பிரவசனத்தை ஜாதிமத வேற்றுமையின்றி மேதாவிகளும், பாமரர்களும், குழந்தைகளும், பல்லாயிரக் கணக்கில் நாடெங்கும் ரசித்துவருகிறுர்கள், உபன்யாசங்களில் நடுவில் நமது ஸ்வாமிகளின் உபதேசங்களைப் பற்றியும், அவர்களது தவமகிமைகளைப் பற்றியும் அவ்வப்போது பல சான்றுகளுடன் அவர் எடுத்துக் கூறிவருவது ஸ்வாமிகளைத் தரிசிக்காதவர்களுக்கும் அவர்களது பெருமையை அறிந்து அவர்களிடம் பக்தி செலுத்தக் காரணமாக இருந்துவருகிறது. ஸ்வாமிகள் தோற்றுவித்த வேததர்மசாஸ்திர பரிபாலன சபையில் தீக்ஷிதர் தீவிரமாகப்

பங்கெடுத்துக்கொண்டு ஆங்காங்கு நடைபெறும் அச்சபையின் கூட்டங்களில் உபன்யாசங்கள் புரிந்துவருகிறார்.

* * * * *

3. ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா.

சென்னையில் ஓர் உயர்தரப் பள்ளியில் சமஸ்கிருத ஆசிரியராக அமர்ந்திருந்த இவர் சென்ற 1925-ஆவது ஆண்டு வரை தேச சேவையில் ஈடுபட்டு சத்தியமூர்த்தி போன்ற தலைவர்களுடன் அக்காலத்தில் பணியாற்றி வந்தார். பின்னர் நம் ஸ்வாமிகளின் தரிசனத்தின் பயனாக நமது மதத்திலுள்ள புராதனக் கலைப் பொக்கிஷங்கள் உலகிற்குப் பயன்படுமாறு செய்யும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, வடமொழியிலுள்ள பதினெட்டுப்புராணங்களையும் தமிழாக்கி வெளியிட்டு வருகிறார். தவிர, "வைதிகதர்மவர்த்தினி" என்னும் ஓர் பத்திரிகையையும் இவர் நடத்தி அதன் மூலம் நமது புராதனக் கலைகளை மக்கள் அறியும்படி செய்துவருகிறார். மேலும் பதினெண் புராணங்களைப்பற்றியும் அவ்வப்போது உபன்யாஸங்களையும் செய்துவருகிறார். குருபக்தியில் சிறந்து விளங்கும் இவரது தர்மத்தொண்டு போற்றுதற்குரியதாகும்.

* * * * *

4. அக்னிஹோத்திரம் ராமானுஜ தாத்தாசாரியார்.

இப்பெரியார் கும்பகோணத்தில் பரம்பரையான வித்வத் குடும்பத்திலுதித்தவர். விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றவர். வேதக் கலையை நன்கறிந்தவர். மதபேதமின்றி நம் ஸ்வாமிகளிடம் பக்தி செலுத்தி அவர்கள் அவ்வப்போது இடும் பணிகளை ஆற்றிவருகிறார். ஆங்கிலத்தையும் அவர் நன்கு கற்றறிந்தவராதலால் தமது உபன்யாஸங்களில் நவீனயுக்தி வாதங்களுடன் நமது தர்மத்தின் தத்துவங்களை மக்களுக்கு உபதேசித்து வருகிறார். நல்ல வாக்வன்மை படைத்த இவருடைய உபன்யாசங்களைக்கேட்டு மக்கள் பெரும் பயன்களை அடைந்துவருகிறார்கள்.

* * * * *

5. தஞ்சை ஆர். முத்துகிருஷ்ண சாஸ்திரிகள்.

இவர் அவ்வப்போது ஆற்றிவரும் புராணப் பிரவசனங்கள் மூலமும், தாம் நடத்திவரும் ஹிதபாஷிணி என்னும் பத்திரிகையின் மூலமும் ஸ்வாமிகளின் ஆக்ஞைகளை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டிருக்கும் ஓர் சிறந்த பண்டிதராவர்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் இவர் தமது பத்திரிகையில் ஸ்வாமிகளின் சரித்திரத்தை வெளியிட்டார்.

* * * * *

6. மஞ்சக்குடி ராஜகோபால சாஸ்த்திரிகள்.

குடவாசலுக்கடுத்த மஞ்சக்குடியில் நல்ல வேதவித்பன்னர்களின் மரபிலுதித்த இவர் பதினறு ஆண்டுகள் முறையுடன் வேதாத்யயனம் செய்து வடமொழிப் பயிற்சியுடன் தமிழும் சங்கீதமும் கற்றவர். இவரது வாக்வன்மையைக்கண்டு இவரை உபன்யாசங்கள் செய்வதில் ஈடுபடும்படி ஸ்வாமிகளே கட்டளையிட்டார்கள். நல்ல இசையுடனும் கம்பீரத்துடனும் இவர் செய்துவரும் புராணப் பிரவசனங்களை மக்கள் மிகவும் ரசித்து வருகின்றனர்.

* * * * *

7. திண்டிவனம் சுந்தரேச சர்மா. (ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள்.)

இவர் நம் ஸ்வாமிகளின் பாலப்பருவத்தில் அவர்கள் பள்ளியில் பயிலும்பொழுதே அவர்களுடன் சேர்ந்துபழகும் வாய்ப்பைப் பெற்றவர். பூர்வாசிரமத்தில் இவர் ஓர் பள்ளி ஆசிரியர். அத்வைத வேதாந்த நூல்களைத் தமிழில் பயின்று அவைகளின் தத்துவங்களை நன்கு ஆராய்ந்தறிந்தவர். பெரும் கூட்டங்களில் இனிமையாகப் பேசக்கூடிய வன்மை பெற்றவர். 1939-ஆவது வருடம் முதல் தமது பூர்வாசிரமத்தில் சுமார் பத்து ஆண்டுகள் ஸ்வாமிகளின் கட்டளைப்படி தமிழ்நாடு முழுவதும் தர்மப் பிரசாரம் செய்துவரும் பணியில் ஈடுபட்டு வந்தார். திருவிடைமருதூரில் நடைபெற்ற முதல் திருப்பாவை திருவெம்பாவை திருமறை ஆறங்க மகாநாட்டிற்கு இவர் தலைமை தாங்கினர்,

* * * * *

8. ஆஞ்சனேயர் (ஸ்ரீ அநந்தானந்தேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்.)

இவர் சர்வகலாசாலைப் பட்டதாரி. ஆங்கிலம், தமிழ், ஸமஸ்கிருதம் இம்மூன்று பாஷைகளிலும் நல்ல தேர்ச்சி பெற்ற இவர் சென்னை உயர் நீதி மன்றத்தில் உத்யோகம் வகித்து வந்தார். 15 ஆண்டுகளுக்கு முன்னர் சர்க்கார் அலுவலிலிருந்து ஓய்வு பெற்றவுடன் இவர் மடத்தின் பணியில் ஈடுபடத்தீர்மானித்து அன்றுமுதல் தர்மப் பிரசாரத்துறையில் ஸ்வாமிகளது ஸந்நிதானத்திலிருந்துகொண்டே ஒப்பற்ற பணியாற்றி வருகிறுர்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் சந்நியாஸ ஆசிரமம் பெறவேண்டு மென்ற தமது விருப்பத்தை இவர் ஸ்வாமிகளிடம் விண்ணப் பித்துக்கொள்ள 29-12-1954-ல் காஞ்சி உபநிஷத்பிரும்மேந்திர மடத்தின் அதிபர்களான ஸ்வாமிகளைக்கொண்டு இவருக்கு உப தேசமருளும்படி ஸ்வாமிகள் கட்டளையிட்டார்கள். துறவறம் பூண்ட இவர் இன்றும் மடத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸந்நிதானத் தில் அவர்கள் இடும்பணிகளில் ஈடுபட்டு வருகிறார்.

* * * * *

9. கலசபாக்கம் நாட் நாராயணராவ்.

வட ஆற்காடு ஜில்லாவைச் சார்ந்த இவர் சென்ற இருபத் தைந்து ஆண்டுகளுக்கு மேலாகவே மடத்தில் தொடர்பு கொண்டு ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி தர்மப் பிரசாரம் செய்துவருகிறார். ஒத்துழையாமைக் காலத்தில் தாம் வகித்துவந்த சர்க்கார் உத்தியோகத்தை விட்டு ராஜீயத்துறையில் தேச சேவை புரிந்துவந்த இவருக்கு ஸ்வாமிகளின் தர்சநத்தின் பயனாக மதத்துறையில் மக்களுக்கு சேவை புரியவேண்டுமென ஆர்வம் உண்டாயிற்று. தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் இம்மூன்று பாஷைகளிலும் இவர் கம்பீர மாகப் பேசுவார். ஸ்வாமிகளின் குறிப்பை உணர்ந்து நடந்துகொள் வதில் இவர் மிகவும் திறமை வாய்ந்தவர்.

* * * * *

மேலும், சைவசமயப் புலவர்கள் பலரும் ஸ்வாமிகள் கட்டளை யிடும் தர்மத்தொண்டில் ஈடுபட்டு சமயம் கிட்டும்பொழுதெல்லாம் ஆங்காங்கு சொற்பொழிவுகளை ஆற்றிவருகின்றனர். அவர்களில், காஞ்சி, வி. பி. அழகேச முதலியார், திருவையாறு கல்லூரிப் பேராசிரியர் இராம. கோவிந்தசாமிப் பிள்ளை, திருப்பூந்துருத்தி தங்கவேலு முதலியார், மதுரை திருநாடு ஆசிரியர் சிவனாண்டித் தேவர், வெங்கடாசலம் பிள்ளை இவர்களை முதன்மையாகக் குறிப் பிடலாம்.

* * * * *

இவர்களைத்தவிர மிராசுதார்களும் சர்க்கார் உத்தியோகங்களி லிருந்து ஓய்வுபெற்று இருப்பவர்களும் மற்றும் பல அன்பர்களும் அவ்வப்பொழுது ஸ்வாமிகள் இடும் பணிகளில் ஈடுபட்டுத் தொண் டாற்றி வருகின்றனர். அவர்களில் சிலரது பெயர்களைக் கீழே காணலாம்.

1. லால்குடி முன்னாள் ஜில்லா ஜட்ஜ் எல். எஸ். பார்த்த சாரதி ஐயர்.
2. வழுத்தூர் எ. எஸ். ராமசாமி ஐயர்.
3. விஷ்ணுபுரம் வி. எஸ். ராமமூர்த்தி ஐயர்.
4. கோனேரிராஜபுரம் ஆர். ஸ்ரீநிவாசய்யர்.
5. பாபநாசம் டாக்டர் ரத்தினமய்யர்.
6. மடம் ஸ்ரீகாரியம் சேஷய்யா சாஸ்திரி.
7. திப்பராஜபுரம் டி. எஸ். வெங்கடராமய்யர்.
8. புத்தகரம் ஜி. எம், ராமசாமி ஐயர்.
9, குழித்தலை வக்கீல் எஸ். அண்ணுத்துரை ஐயங்கார்,
10. ஈச்சங்குடி லெக்ஷ்மிநாராயண ஐயர்.
11. மெலட்டூர் பேராசிரியர் எம். வரத ஐயர்.
12. கும்பகோணம் டபீர் நடுத்தெரு ஏ. கோபாலய்யர்.
13. கும்பகோணம் ஓய்வுபெற்ற தாசில்தார் பி. ஜி. சிவசங்கர சாஸ்திரி.
14. கும்பகோணம் பக்தபுரி அக்ரஹாரம் ஏ. ராமனுத ஐயர்.
15. பழையவலம் சீதாராம ஐயர்.
16. கோவிந்தபுரம் கணேச ஐயர்.
17, திருக்கோவிலூர் வக்கீல் வி. ஜி. ராமச்சந்திர ஐயர்.
18. கள்ளக்குறிச்சி வக்கீல் T. A. தாத்தாச்சாரியார்.
19. வளவனூர் வி, டி. ராமசாமி ஐயர்.
20. கும்பகோணம் டாக்டர் ஆர். மகாலிங்க ஐயர்.
21. வேலூர் வக்கீல் ஏ. துரைசாமி ஐயர்.
22. பொய்யாமணி ராமரத்தினம் ஐயர்,
23. புதுக்கோட்டை ஜி. மலையப்ப சாஸ்திரி.
24. சிமிழி பட்டாமணியம் S. வாஞ்சிநாத ஐயர்.
25. நங்கவரம் எஸ்டேட் சுந்தர ராஜ ஐயர்.
26. சாத்தனூர் எஸ். ஆர். கிருஷ்ணமூர்த்தி ஐயர்.
27. சேங்காலிபுரம் குஹதாஸர் S. V. நடராஜ ஐயர்.
28. சென்னை விவேகானந்தர் கல்லூரி தத்துவப் பேராசிரியர் ப. சங்கரநாராயண ஐயர், எம். எ.,

29. சென்னை அடையாறு டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலைய கௌரவ அமைச்சர் பேராசிரியர் ஆர். விச்வ நாத ஐயர், எம். எ.,
30. திருச்சி பல் டாக்டர் வி. சுப்ரமண்ய ஐயர்.
31. கோயம்புத்தூர் வக்கீல் C. P. மீனுக்ஷி சுந்தர சாஸ்திரி.
32. சேலம் ஆடிடர் G. சங்கர ஐயர்.
33. மதுரை வக்கீல் குமாஸ்தா, G. சுந்தரம் ஐயர்.
34. பட்டுக்கோட்டை வக்கீல் ஸோமநாதராவ்.
35. திருச்சியில் ரயில்வே உத்யோகம் வகிக்கும் மன்னார்குடி P. மஹாதேவ ஐயர்.
36. ஸ்ரீமடம் மானேஜர் C. S. விச்வநாத ஐயர்.

(4) கவிஞர்களையும், கலைஞர்களையும் பாராட்டினது

எல்லாக் கலைகளுக்கும் இருப்பிடமாகவுள்ள நம் ஸ்வாமிகள் பல்வேறு கலைகளில் தேர்ச்சிபெற்றவர்களைச் சிறப்பித்து மேன்மேலும் அவர்களுக்கு அவ்வத்துறையில் ஊக்கம் அளிப்பதன் பொருட்டுச் சன்மானங்கள் அளித்தோ பட்டங்கள் வழங்கியோ வருகிறார்கள். இவ்விதம் கலைத்திறன் படைத்த நூற்றுக்கணக்கானவர்கள் ஸ்வாமிகளிடமிருந்து பாராட்டுதல்களையும், பட்டங்களையும் பெற்றுள்ளார்கள். அவர்கள் எல்லோரைப்பற்றியும் எழுதுவது என்றால் இக்கட்டுரை மிகப் பெரியதாக விரிந்துவிடும். முன்பே ஆங்காங்குக் குறிக்கப்பெற்ற வரலாறுகளை விட்டு எஞ்சிய சிலரைப்பற்றி மட்டும் இங்குக் குறிப்பிடப்படுகிறது.

* * * * *

புதைபொருள் ஆராய்ச்சியிலும், புராதன சாஸனங்களின் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டிருந்தவரும், புதுக்கோட்டை அந்நாள் சமஸ்தானத்தில் கல்வி இலாகா தலைவராயிருந்தவருமான கே. ஆர் வேங்கடராம ஐயருக்கு ஸ்வாமிகள் புராவிருத்த ஜ்யோதி என்னும் பட்டத்தை அளித்துள்ளார்கள். ஐயர் அவர்கள் டாட்டன்ஹாம் என்னும் ஆங்கிலேயர் புதுக்கோட்டையின் நிர்வாகியாயிருந்தபொழுது, புதுக்கோட்டை சமஸ்தானத்தின் சரித்திரத்தையும் சமஸ்தான மானுவலையும் (State Manual) தொகுத்துள்ளார். புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ள குகைக்

கோவில்கள் பலவற்றில் பழமையான கல்வெட்டுக்கள் பல உள்ளன வென்பதும் ஸ்வாமிகள் இவைகளைப் பலவருடங்களுக்கு முன்னரே ஆராய்ச்சிகள் செய்துள்ளார்கள் என்பதும் வாசகர்களின் ஞாபகத்திற்கு கொண்டுவரப்படுகின்றன.

* * * * *

தெய்வீகமான நடனக் கலையானது குறிப்பிட்ட சில சமூகத்தினரால் மாத்திரம் சிலகட்டுப்பாடுகளுடன் காப்பாற்றப்பட வேண்டுமென்பது ஸ்வாமிகளின் அபிப்பிராயம். அதற்கு மாறுன வழிகளில் அந்தக் கலை இன்று விரிவடைந்து வருவதினுல் சமூகத்திற்கு பல தீங்குகள் நேரும் என்பதை ஸ்வாமிகள் உணர்ந்து, சிஷ்யர்கள் முன்னிலையில் இதைப்பற்றி எச்சரித்துள்ளார்கள். ஆயினும் சம்பிரதாயமான முறையில் இந்தக் கலையில் நிகரற்ற தேர்ச்சி பெற்று விளங்கிய பரதம் நாராயணஸ்வாமி ஐயருக்கு ஸ்வாமிகள் தாண்டவ பண்டிதர் என்னும் பட்டத்தை அளித்து அக்கலையையும் பாராட்டியுள்ளார்கள்.

* * * * *

ஆங்கிலத்தில் அழகாகக் கட்டுரைகள் வரைவதில் பெரிய நிபுணராக விளங்கிய காலஞ்சென்ற கே. எஸ் வெங்கடரமணிக்குச் சென்ற 1952-ஆவது ஆண்டில் ஸ்வாமிகள் வெள்ளிக் கேடயம் ஒன்றைப் (Shield) பரிசாக அளித்தார்கள். வெங்கடரமணியின் புகழ் மேல் நாடு முழுவதும் பரவியுள்ளது. அவர் கட்டுரைகளெல்லாம் பல ஐரோப்பிய பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பாரதமணி என்னும் தமிழ்ச்சஞ்சிகை ஒன்றையும் இவர் நடத்தி வந்தார். கிராமங்களில்தான் மக்கள் சுகத்தையும், சந்தோஷத்தையும் அடையலாமென்பது அவருடைய கொள்கை. அவ்வழியிலேயே அவர் தீவிரமான பிரசாரம் செய்து வந்தார். அவரது பிரசாரத்திற்கு ஸ்வாமிகள் அவ்வப்பொழுது ஊக்கம் அளித்து வந்தார்கள்.

தெய்வத்தமிழை போற்றும் வகையில் ஸ்வாமிகள் புதுக்கோட்டை அரசர் கல்லூரியில் பேராசிரியராகவிருந்த ந. கநகராஜ ஐயருக்குக் "கவிராஜபண்டிதர்" என்னும் பட்டத்தை அளித்தார்கள்.

* * * * *

மேலும் கலைமகள் ஆசிரியர் வித்வான் கி. வா. ஜகந்நாத ஐயரது வாக்கு வன்மையையும், தமிழ் இலக்கியங்களில் அவருக்

குள்ள ஆழந்த அறிவையும், ஆஸ்திகப் பிரசாரத்திற்கு அவர் செய்து வரும் சேவையையும் பாராட்டிச் சென்ற 12—2—1951-ல் தஞ்சை ஜில்லா திருப்புகலூரில் அவருக்கு வாகீசகலாநிதி என்னும் பட்டத்தை ஸ்வாமிகள் மனமுவந்து அளித்தார்கள்.

* * * * *

கும்பகோணம் "ஆர்யதர்மம்" பத்திராதிபர் அக்னி ஹோத்திரம் கோபாலதேசிகாசாரியாருக்கு, ஸ்வாமிகள் சென்ற 17-6-1948-ல் 'தர்மப்ரவர்த்தகர்' என்னும் பட்டத்தை அளித்தார்கள்.

* * * * *

சங்கீத மும்மணிகளில் ஒருவரான முத்துஸ்வாமி தீக்ஷிதரது வாழ்க்கை வரலாற்றைச் சமஸ்கிருதத்தில் ஒரு மகா காவியமாக, சென்னைச் சர்வகலாசாலையின் சமஸ்கிருதப் பேராசிரியராயிருக்கும் டாக்டா வே. ராகவன் இயற்றியுள்ளார். டாக்டர் ராகவனது மேதையைப் பாராட்டி அவருக்குக் கவிகோகிலம் என்னும் பட்டத்தை ஸ்வாமிகள் அளித்துள்ளார்கள். அவ்வழகிய சொல்லையும் ஓர் தங்கப் பதக்கத்தில் ஒருபுறம் பொறித்து, மற்றொரு பக்கத்தில் ஒரு மரக்கிளையில் ஒரு கோகில பக்ஷி (குயில்) அமர்ந்திருப்பதைப் போல் அழகாகச் சித்தரிக்கச் செய்து, அப்பதக்கத்தையும் ஸ்வாமிகள் அவருக்கு அளித்தார்கள். இந்தப் பட்டமும், பதக்கமும் வால்மீகி தினக் கொண்டாட்டம் சம்பந்தமாய்ச் சென்னைச் சமஸ்கிருத சேவா சமிதியில் 31-3-1955-ல் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் சென்னைக் கவர்னர் ஸ்ரீபிரகாசாவால் டாக்டர் ராகவனுக்கு வழங்கப்பெற்றன.

* * * * *

மதுரை மீனாக்ஷி சுந்தரேசுவரர் ஆலய பரம்பரை ஸ்தானிகரும் தருமப் பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பவருமான சிவஸ்ரீ ம. க. சுந்தரேச பட்டருக்கு ஸ்வாமிகள் "சிவதர்ம பாஸ்கர" என்னும் பட்டத்தை அளித்துள்ளார்கள்.

(5) மடத்தின் புத்தகாலயமும், வெளியீடுகளும்

மடத்தின் புத்தகாலயத்தில் ச ம ஸ் கி ரு த ம், தெலுங்கு, தமிழ், ஆங்கிலம் ஆகிய பாஷைகளிலுள்ள சுமார் 5000 அச்சுப் பிரதிகளும், 2000-க்கு மேற்பட்ட ஏட்டுச் சுவடிகளும் இருக்கின்றன. ஏட்டுச் சுவடிகளில் சில இதுவரை வெளிவராத கிரந்தங்களாகவும் உள்ளன. இவைகளை ஆராய்ச்சி செய்யச் சில

பண்டிதர்களையும் ஸ்வாமிகள் நியமித்துள்ளார்கள். மடத்தின் முதல் வெளியீடாக தமிழில் முந்நூற்றிரட்டு என்னும் ஒரு புத்தகம் சென்ற 1941-ஆவது ஆண்டில் ஸ்வாமிகளின் கட்டளைப்படி வெளி வந்துள்ளது. இப்புத்தகத்தில் திருக்குறளி லிருந்து 56 செய்யுள்களும், கம்பரராமாயணத்திலிருந்து 98 பாட்டுக் களும், பெரியபுராணத்திலிருந்து 88 பாட்டுக்களும் பதவுரை, பொழிப்புரைகளுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்புத்த கத்தை வெளியிட்டதன் நோக்கம் பள்ளியில் பயிலும் மாணவர் களுக்கு இப்பாடல்களும் அவற்றின் பொருள்களும் மனப்பாடமாக அமையவேண்டுமென்பதேயாகும் அந்த நோக்கத்துடன் இப் புத்தகம் தமிழ்நாடு எங்கும் பல ஊர்களிலுள்ள ஆரம்பப் பள்ளிக் கூடங்களின் ஆசிரியர்களுக்கு அனுப்பப்பட்டது. ஒவ்வொரு ஊர் ஆசிரியரும் தாம் அவைகளை மனப்பாடம் செய்துகொண்டு பிள்ளை களுக்கும் மனப்பாடம் செய்து வைத்துப் பின்னர் அடுத்த ஊரி லுள்ள ஓர் பாடசாலைக்கு இந்தப் புத்தகத்தை அனுப்பிவிடவேண்டு மென்ற ஓர் நூதன ஏற்பாட்டையும் ஸ்வாமிகள் செய்திருந் தார்கள்.

அதற்கடுத்த 1942-ஆவது ஆண்டில் சென்னையில் காமகோடி கோசஸ்தானம் என்னும் ஒரு நிலையம் ஸ்தாபனம் செய்விக்கப்பட் டது. இந்த நிலையத்திலிருந்து சிறந்த முறையில் பல அரிய நூல்கள் வெளிவர பொறுப்பேற்றுக்கொண்டவர் குருபக்த சிகாமணியான காலஞ்சென்ற D. பாலசுப்ரமண்ய ஐயர் ஆவர். இவர் சென்னை பி. ஜி. பால் அண்டு கம்பெனியின் உரிமையாளர். ஐயர் அவர்களுக்குப் பின்னர் அவரது மைத்துனர் K. நீலகண்ட ஐயர் இந்த நிலையத் தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஒப்பற்ற பக்தியுடன் ஸ்வாமிகளுக்குப் பணியாற்றி வருகிறார். சமஸ்கிருதத்தில் பக்திப் பாடல்கள் நிரம்பிய பல நூல்கள் தமிழ் உரையுடன் இந்தக் கோசஸ்தானத்திலிருந்து வெளி வந்துள்ளன. மேலும் திருக் குறளையும் இந்த நிலையத்தார் உரையுடன் வெளியிட்டிருக்கிறார் கள். இந்நிலையத்திலிருந்து வெளிவந்துள்ள சிறந்த நூல்களெல் லாம் அடக்க விலைக்கே விற்கப்படுவதால் அன்பர்களுக்கு இந் நிலையம் இத்துறையில் பேருபகாரத்தைச் செய்து வருகின்றது. இதுவரை 50 புத்தகங்களுக்குமேல் இந்நிலையத்திலிருந்து வெளிவந் துள்ளன.

(6) ஸ்ரீமடம் வேத சாஸ்திர பாடசாலைகள்

காசி, காஞ்சி, மத்யார்ஜுனம் (திருவிடைமருதூர்); கும்பகோணம், ஜம்புகேச்வரம் (திருவானைக்கா) தஞ்சை முதலான இடங்களில் ஸ்ரீமடத்தின் வேத சாஸ்திர பாடசாலைகள் நடந்துவருகின்றன. மேலும் மடத்தின் நிர்வாகத்திலும், மடத்தின் பொருளுதவியைக் கொண்டும் நாட்டின் பல விடங்களில் பாடசாலைகள் நடைபெற்று வருகின்றன.

(7) ஸ்வாமிகளைப்பற்றி வடமொழியில் காவியம் இயற்றியவர்கள்

காசியில் சிருங்கேரி மடம் ஏஜெண்டாக இருந்த நஞ்சங்கூடு ஸ்ரீ கண்ட சாஸ்திரி என்பவர் ஸ்வாமிகளைப் பற்றி 1000 சுலோகங்களுக்கு மேல் இயற்றியுள்ளார். அந்த நூல் இன்னும் அச்சாகவில்லை. கிழக்குக் கோதாவரி ஜில்லா அம்பாஜிபேட்டை போஸ்ட்டு முங்கண்ட அக்ரஹாரத்தைச் சார்ந்த புல்லிய உமாமஹேச்வர சாஸ்திரி என்னும் வித்வான் 170 சுலோகங்களில் ஸ்வாமிகளின் சரிதையை வெளியிட்டிருக்கிறார். புதுக்கோட்டை சமஸ்தானத்தில் தானாதிகாரியாகயிருந்த சாஸ்திர ரத்னாகரம் காளி ரங்காசாரிய ஸ்வாமி நம் ஸ்வாமிகளின் பேரில் சுமார் 100 சுலோகங்கள் கொண்ட பாமாலை ஒன்றை வெளியிட்டுள்ளார். சென்னை அரசாங்கத்தின் ஆஸ்தான கவியாகவிருந்த மகாமகோபாத்யாய கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் ஸ்ரீ குருராஜஸ்தவம் என்னும் பெயருடன் ஒரு நூலை இயற்றி வெளியிட்டுள்ளார். ஸ்வாமிகளிடம் நெருங்கிய தொடர்புகொண்ட பக்தர்களில் ஒருவரான புதுக்கோட்டை மல்லாதி தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரி என்பவரும் ஸ்வாமிகளின் பேரில் ஸ்தோத்திரங்கள் இயற்றி அவைகளை வெளியிட்டிருக்கிறார். காலஞ்சென்ற மகாமகோபாத்யாய யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளின் புதல்வர் Y. மகாலிங்க சாஸ்திரிகள் எம்.ஏ., பி.எல், அவர்களும் ஸ்வாமிகளின் பெருமைகளைப் பற்றிச் சுலோகங்கள் பல இயற்றி அவைகளை வெளியிட்டுள்ளார்.

(8) TATANKA PRATHISHTA TO GODDESS AKHILANDESWARI.

The "Hindu Message" published at Srirangam under the editorship of Mr. T. K. Balasubramania Iyer, B. A., wrote in its editorial on May 10, 1923, as follows :—

"Never before in the annals of Trichinopoly have we witnessed the grandeur and enthusiasm that were displayed at the reception of His Holiness Sri Jagadguru Sri Sankaracharya of Kanchi Kamokoti Peetha who arrived at Trichinopoly on the 23-rd ult. The mile long procession headed by richly caparisoned elephants and surging crowds with His Holiness seated high on the Ivory palanquin in the centre surrounded by large concourse of Brahmins chanting thc Vedas, and followed by numerous Bhajana Parties and Tevaram Parties, the rich and tasteful decorations all along the route which extended to nearly eight miles, the buoyant enthusiasm of the huge crowd that pressed on all sides just to have a glimpse of His Holiness' beaming countenance and that followed the procession right through to the end, the festive appearance of the whole town and the eagerness of everyone in that vast concourse of people to do some sort of service to His Holiness were sights for Gods to see and they beggar all description. It showed in a clear and unmistakeable way the strong hold of religion and religious ideals still on the people of the country. No Viceroy or even the Emperor himself could have evoked such spontaneous and heartfelt enthusiasm. It took nearly five hours for the procession to reach its destination. His Holiness had a smile or a word of cheer for every one of the assembled people and when he retired into the Mutt, His Holiness observed that the weariness of the journey was counteracted by unprecedented enthusiasm of the

people. The very next day commenced the preliminaries for the Tatanka Pratishta for the Goddess Akhilandeswari at Jambukeswaram. As many of our readers may not quite understand what it means by Tatanka Pratishta we will describe it a little in detail.

When Adi Sankaracharya incarnated in this holy land, he went round the whole of Bharatavarsha several times and in the course of his Vijaya Yathra established several Yantras in different big temples. Of such temples, Jambukeswaram is an important one. It appears the Goddess here was very fierce and with her ugra kala used to burn everything before her. Even the archaka who opened the temple doors early in the morning was reduced to ashes and the people, unable to put up with such fierceness, eagerly availed themselves of the opportunity afforded by the presence in their midst of the great Sankaracharya who came to this kshetra in the course of his tour and implored him to draw out the ugra kala of the Goddess and thus appease her ferocity. Accordingly, he established a temple of Ganesa just opposite to that of the Goddess so that when the temple doors were opened in the morning the first person to catch the eye of the Goddess may be her own favourite son. This in a way reduced the ferocity, but not satisfied with this, Sri Sankaracharya prepared two Sri Chakras in the shape of two Tatankas (*Ear-Ornaments*) and drew forth all the ugra kala of the Goddess into these two Tatankas and fixed them on her two ears. Thence forward the Goddess became SOUMYA MURTI and ever since then this Tatanka has been worn by the Goddess always except during the nights. And whenever this ornament got into disrepair, it was repaired by the spiritual descendants of the Great world-teacher, who adorned the Kanchi Kama-Koti Peetha, and put up again on the ears of the Goddess

after due Pratishtha. In accordence with this time-honoured rule, the present occupant of Sri Kanchi Kama-Koti Peetham deemed it part of his duty to repair the Tatanka and perform the Pratistha while fixing it up again on the ears of the Goddess. With this object in view, His Holiness started from Kumbakonam more than four years ago and after touring through various parts of the country, teaching Dharma to his numerous disciples, reached Trichinoploy just two weeks ago. The preliminary ceremonies were performed on a grand scale with the help of thousands of Brahmins and the ceremony proper took place on the 29th ulto. Ever since a very early hour that morning, people began to assemble in large numbers and by about 8 A. M., when His Holiness left the Mutt for the temple, the crowd had become so dense that the town could not hold it. The twin attraction of the Goddess Akhilandeswari (Goddess of all the worlds) and the divine Jagadguru (the world-Teacher) was so great that it attracted enormous crowds with boundless enthusiasm. The sight of this surging mass of people and the tremendous enthusiasm that swayed them was simply marvellous. The rush was so great that it became very difficult even for His Holiness to enter the temple. After all, when His Holiness got into the Sanctum Sanctorum and the Kumbham was brought in from the Yagasala and the Abhishekam was performed for the Goddess, there arose a thrill of reverence throughout that surging mass of humanity. Soon after, under the commands of His Holiness and blessed by him, the Tatankas were fixed up as usual on the ears of the Goddess and immediately there shone a brilliant divine lustre which it was the privilege, of only those that were inside, to witness. Thus ended this unique festival, eagerly awaited by thousands of pilgrims from all parts of the country. People were fed in tens of thousands and a very large number of highly

learned vidvans, who had graced the occasion, delivered a number of public lectures under the command of His Holiness on various interesting topical subjects They were all duly honoured by His Holiness with valuable presents according to their merits. Thus ended this unique ceremony not witnessed by any for two generations past"

---

(9) ஸ்ரீ காமகோடி பீடத்தின் குருபரம்பரை

நெ.	ஆசார்யர்களின் பெயர்கள்	பீடத்தில் அமர்ந்திருந்த காலவரை வருடங்கள்	சித்தி பெற்ற நாள்			
			வருடம்	மாதம்	பக்ஷம், திதி*	இங்கிலீஷ் வருடம்
1.	ஸ்ரீ சங்கரர்	...	ரக்தாக்ஷி	வைசாகம்	சு. ப. 11	கி. மு. 476
2.	சுரேச்வரர்	70	பவ	ஜ்யேஷ்டம்	,, 12	,, 406
3.	ஸர்வக்ஞாத்மர்	112	நள	வைசாகம்	கி. ப. 14	,, 394
4.	ஸத்யபோதர்	96	நந்தன	மார்க்கசீர்ஷம்	,, 8	,, 298
5.	ஞானநந்தர்	63	மன்மத	மார்க்கசீர்ஷம்	சு. ப. 7	,, 235
6.	சுத்தாநந்தர்	81	நள	ஜ்யேஷ்டம்	,, 6	,, 154
7.	அநந்தாநந்தர்	69	குரோதன	வைசாகம்	கி. ப. 9	,, 85
8.	கைவல்யானந்தர்	113	சர்வதாரி	புஷ்யம்	பூ.	கி. பி. 28
9.	கிருபாசங்கரர்	41	விபவ	கார்த்திகம்	கி. ப. 3	,, 69
10.	ஸுரேச்வரர்	58	அக்ஷய	ஆஷாடம்	பூ.	,, 127
11.	சித்கனர்	45	விரோதிகிரது	ஜ்யேஷ்டம்	கி. ப. 10	,, 172
12.	சந்திரசேகரர் 1	63	ஆனந்த	ஆஷாடம்	சு. ப. 9	,, 235
13.	ஸச்சித்கனர்	37	கர	மார்க்கசீர்ஷம்	,, 1	,, 272
14.	வித்யாகனர் 1	45	தாது	மார்க்கசீர்ஷம்	அ.	,, 317
15.	கிஷ்பதிகங்காதரர்	12	சர்வதாரி	சைத்ரம்	சு. ப. 1	,, 329
16.	உஜ்வலசங்கரர்	38	அக்ஷய	வைசாகம்	,, 8	,, 367
17.	பாலகுருசதாசிவர்	8	பவ	ஜ்யேஷ்டம்	,, 10	,, 375

எ.	ஆசார்யர்களின் பெயர்கள்	பீடத்தில் அமர்ந்திருந்த காலவரை வருடங்கள்	சித்தி பெற்ற நாள்			
			வருடம்	மாதம்	பக்ஷம், திதி*	இங்கிலீஷ் வருடம்
18.	யோகி திலகஸுரேந்திரர்	10	தாருண	மார்க்கசிர்ஷம்	சு. ப. 1	கி. ப. 385
19.	மார்த்தாண்ட வித்யாகனர்	13	ஹேவிளம்பி	பாத்ரபதம்	கி. ப. 9	,, 398
20.	மூகசங்கரர்	39	தாது	சிராவணம்	பூ.	,, 437
21.	ஸார்வபௌம சந்திர சேகரர்	10	விய	சிராவணம்	கி. ப. 8	,, 447
22.	பரிபூர்ணபோதர்	34	ரௌத்ரி	கார்த்திகம்	சு. ப. 9	,, 481
23.	ஸத்சித்ஸுகர்	31	கர	வைசாகம்	,, 7	,, 512
24.	சித்ஸுகர்	15	பராபவ	சிராவணம்	கி. ப. 9	,, 527
25.	ஸச்சிதாநந்தகனர்	21	பிரபவ	ஆஷாடம்	,, 1	,, 548
26.	பிரக்ஞானகனர்	16	ஸ்வபானு	வைசாகம்	சு. ப. 8	,, 564
27.	சித்விலாஸர்	13	துர்முகி	சைத்ரம்	,, 1	,, 577
28.	மகாதேவர் 1	24	ரௌத்ரி	கார்த்திகம்	கி. ப. 10	கி. பி. 601
29.	பூர்ணபோதர் 1	17	ஈச்வர	சிராவணம்	சு. ப. 10	,, 618
30.	போதர்	37	ஆனந்த	வைசாகம்	கி. ப. 4	,, 655
31.	பிரும்மானந்தகனர்	13	பிரபவ	ஜ்யேஷ்டம்	சு. ப. 12	,, 668
32.	சிதானந்தகனர்	4	பிரஜோர்பத்தி	மார்க்கசிர்ஷம்	,, 6	,, 672
33.	ஸச்சிதாநந்தர்	20	கர	பாத்ரபதம்	கி. ப. 6	,, 692
34.	சந்திரசேகரர் 2	18	சௌம்ய	மார்க்கசிர்ஷம்	அ.	,, 710

நெ.	ஆசார்யர்களின் பெயர்கள்	பீடத்தில் அமர்ந்திருந்த காலவரை வருடங்கள்	சித்தி பெற்ற நாள்			
			வருடம்	மாதம்	பக்ஷம், திதி*	இங்கிலீஷ் வருடம்
35.	சித்ஸுகர் 2	27	தாது	ஆஷாடம்	சு. ப. 6	கி. பி. 737
36.	சித்ஸுகானந்தர்	21	ஹேவிளம்பி	ஆச்விஜம்	பூ.	,, 758
37.	வித்யாகனர் 2	30	பிரபவ	புஷ்யம்	சு. ப. 2	,, 788
38.	அபிநவசங்கரர்	52	சித்தார்த்தி	ஆஷாடம்	அ.	,, 840
39.	ஸத்சித்விலாஸர்	33	நந்தன	வைசாகம்	பூ.	,, 873
40.	சோபனமகாதேவர்	42	பவ	வைசாகம்	சு. ப. 6	,, 915
41.	கங்காதரர்	35	ஸௌம்ய	சிராவணம்	,, 1	,, 950
42.	பிரும்மாநந்தகனர்	28	ஈச்வர	கார்த்திகம்	,, 8	,, 978
43.	ஆநந்தகனர்	36	பிரமாதீச	சைத்ரம்	,, 9	,, 1014
44.	பூர்ணபோதர் 2	26	பிரமாதி	பாத்ரபதம்	கி. ப. 13	,, 1040
45.	பரமசிவர் 1	21	சார்வரி	ஆச்விஜம்	சு. ப. 7	,, 1061
46.	ஸாந்த்ரானந்த போதர்	37	ஈச்வர	ஆஷாடம்	அ.	,, 1098
47.	சந்திரசேகரர் 3	68	பார்த்திப	சைத்ரம்	அ.	,, 1166
48.	சித்விலாஸ அத்வைதானந்த போதர்	34	சித்தார்த்தி	ஜ்யேஷ்டம்	சு. ப. 10	,, 1200
49.	மகாதேவர் 2	47	பராபவ	கார்த்திகம்	கி. ப. 8	,, 1247
50.	சந்த்ரசூடர் 1	50	துர்முகி	ஜ்யேஷ்டம்	சு. ப. 6	,, 1297
51.	வித்யாதீர்த்தர்	88	ரக்தாக்ஷி	மாகம்	கி. ப. 1	,, 1385
52.	சங்கரானந்தர்	32	துர்முகி	வைசாகம்	சு. ப. 1	,, 1417
53.	பூர்ணாநந்த ஸதாசிவர்	81	பிங்கள	ஜ்யேஷ்டம்	,, 10	,, 1498

நெ.	ஆசார்யர்களின் பெயர்கள்	பீடத்தில் அமர்ந்திருந்த காலவரை வருடங்கள்	சித்தி பெற்ற நாள்			
			வருடம்	மாதம்	பக்ஷம், திதி*	இங்கிலீஷ் வருடம்
54.	வியாஸாசல மகாதேவர்	9	அக்ஷய	ஆஷாடம்	கி. ப. 1	கி.பி. 1507
55.	சந்திரசூடர் 2	17	ஸ்வபானு	பால்குணம்	சு. ப. 11	,, 1524
56.	ஸர்வக்ஞ ஸதாசிவ போதர்	15	விளம்பி	சைத்ரம்	,, 8	,, 1539
57.	பரமசிவர் 2	47	பார்த்திப	சிராவணம்	,, 10	,, 1586
58.	ஆத்மபோதர்	52	ஈச்வர	ஆச்விஜம்	கி. ப. 8	,, 1638
59.	பகவன்னுமபோதர்	54	பிரஜோத்பத்தி	பாத்ரபதம்	பூ.	,, 1692
60.	அத்வைதாத்மபிரகாசர்	12	ஸ்வபானு	சைத்ரம்	சு. ப. 2	,, 1704
61.	மகாதேவர் 3	42	குரோதன	ஜ்யேஷ்டம்	,, 9	,, 1746
62.	சந்திரசேகரர் 4	37	சாதாரண	கார்த்திகம்	கி. ப. 2	,, 1783
63.	மகாதேவர் 4	31	ஸ்ரீமுக	ஆஷாடம்	சு. ப. 12	,, 1814
64.	சந்திரசேகரர் 5	37	சாதாரண	கார்த்திகம்	கி. ப. 2	,, 1851
65.	மகாதேவர் 5	39	விரோதி	பால்குணம்	அ.	,, 1890
66.	சந்த்ரசேகரர் 6	17	பராபவ	மாகம்	கி. ப. 8	,, 1907
67.	மகாதேவர் 6	(8 நாள்)	பராபவ	பால்குணம்	சு. ப. 1	,, 1907

68. ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய ஸ்ரீமத் சந்திரசேகரேந்திர ஸரஸ்வதீ ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் காமகோடி பீடாதிபதிகளில் 7-வது சந்திரசேகரேந்திர ஸரஸ்வதியாக பீடத்தை அலங்கரிக்கின்றார்கள்.

* விளக்கம் : சு. ப=சுக்லபக்ஷம்; கி. ப=கிருஷ்ண பக்ஷம்: அ=அமாவாஸை; பூ=பூர்ணிமை. பீடத்தை அலங்கரிக்கும் ஆசார்யர்கள் யாவருக்கும் இந்திர ஸரஸ்வதி என்னும் பட்டமும் உண்டு.

(10) ஸ்வாமிகள் வியாஸபூஜை செய்து சாதுர்மாதங்களைப் பூர்த்திசெய்த இடங்கள்

1.	பிலவங்க	1907	கும்பகோணம்	.... தஞ்சை	ஜில்லா
2.	கீலக	1908	திருவானைக்காவல்	... திருச்சி	,,
3.	செளம்ய	1909	கும்பகோணம்	... தஞ்சை	,,
4.	சாதாரண	1910	,,	.... ,,	,,
5.	விரோதி கிருது	1911	திருவானைக்காவல்	.... திருச்சி	,,
6.	பரிதாபி	1912	மகேந்திரமங்கலம்	.... ,,	,,
7.	பிரமாதீச	1913	,,	.... ,,	,,
8.	ஆனந்த	1914	கும்பகோணம்	.... தஞ்சை	,,
9.	ராக்ஷஸ	1915	,,	.... ,,	,,
10,	நள	1916	,,	.... ,,	,,
11.	பிங்கள	1917	,,	.... ,,	,,
12.	காளயுக்தி	1918	,,	.... ,,	,,
13.	சித்தார்த்தி	1919	வேப்பத்தூர்	.... ,,	,,
14.	ரெளத்திரி	1920	மாயவரம்	.... ,;	,,
15.	துன்மதி	1921	கதிராமங்கலம்	... ,,	,,
16.	துந்துபி	1922	ஆவடையார்கோவில்	,,	,,
17.	ருத்ரோத் காரி	1923	திருவானைக்காவல்	... திருச்சி	,,
18.	ரக்தாக்ஷி	1924	திருவையாறு	... தஞ்சை	,,
19.	குரோதன	1925	இளையாத்தங்குடி (திருப்பத்தூர் சமீபம்)	.... ராமனாத புரம்	,,
20.	அக்ஷய	1926	காட்டுமன்னார் கோவில்	... தென்னார் காடு	,,
21.	பிரபவ	1927	கஞ்சிக்கோடு பாலக்காடு சமீபம்	.... மலையாளம்	,,
22.	விபவ	1928	திருவேடகம்	.... மதுரை	,,
23.	சுக்ல	1929	மணலூர்பேட்டை	.... தென்னார்காடு	

24.	ப்ரமோத	1930	பூசமலைக்குப்பம் ஆரணி சமீபம்	...	வட ஆர்க்காடு ஜில்லா
25.	பிரஜாபதி	1931	சித்தூர்	...	சித்தூர் ,,
26.	ஆங்கிரஸ	1932	புக்கை	....	,, ,,
27.	ஸ்ரீமுக	1933	தஞ்சாவூர்	....	தஞ்சை ,,
28.	பவ	1934	அலகாபாத்	....	ஐக்கிய மாகாணம் ,,
29.	யுவ	1935	கல்கத்தா	...	வங்காளம் ,,
30.	தாது	1936	பர்ஹாம்பூர்	....	ஒரிஸா மாகாணம் ,,
31.	ஈச்வர	1937	பாலக்கோல்	....	மேற்கு கோதாவரிஜில்லா
32.	பகுதான்ய	1938	குண்டூர்	....	குண்டூர் ,,
33.	பிரமாதி	1939	கும்பகோணம்	...	தஞ்சை ,,
34.	விக்ரம	1940	துவரங்குரிச்சி, பட்டுக்கோட்டை சமீபம்	....	,, ,,
35.	விஷு	1941	நாகப்பட்டிணம்	....	,, ,,
36.	சித்ரபானு	1942	நத்தம், காட்டுப் புத்தூர்சமீபம்	....	திருச்சி ,,
37.	சுபானு	1943	திருவானைக்காவல்	...	,, ,,
38.	தாரண	1944	எசயனூர், காவேரி பாக்கம் சமீபம்	...	வடஆர்காடு ,,
39.	பார்த்திப	1945	திருக்கருகாவூர்	....	தஞ்சை ,,
40.	விய	1946	கும்பகோணம்	...	,, ,,
41.	சர்வஜித்து	1947	வசந்த கிருஷ்ண புரம், திருக்கோவி லூர் சமீபம்	....	தென்னார் காடு ,,
42.	சர்வதாரி	1948	வெங்கடாத்திரி அகரம், விழுப் புரம் சமீபம்	....	,, ,,

43.	விரோதி	1949	திருவிடைமருதூர்	....	தஞ்சை ஜில்லா
44.	விகுருதி	1950	திருவிசைநல்லூர்	...	,, ,,
45,	கர	1951	முடிகொண்டான்	....	,, ,,
46.	நந்தன	1952	சாத்தனூர்	....	,, ,,
47.	விஜய	1953	காஞ்சீபுரம்	....	செங்கற்பட்டு,,
48.	ஜய	1954	,,	....	,, ,,
49.	மன்மத	1955	,,	....	,, ,,
50.	துர்முகி	1956	,,	...	,, ,,

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
6	32	தமிழ்நாட்டின்	தமிழ் நாடின
15	10	அவர்களுக்கு	இவர்களுக்கு
21	3	குரக்குடி	சூரக்குடி
,,	23	உடலம்	உடல் நலம்
,,	25	20-3-1860	20-3-1890
23	17	1603	1630
27	26	சர்வமுக்கியார்நாமா	சர்வமுக்தியார் நாமா
29	21	பரப்ருமம்	பரப்ரும்மம்
,,	33	நந்தவரம்	நங்கவரம்
,,	,,	இராஜாப்பையர்	இராஜப்பையர்
32	31	T. இராமச்சந்திர தீக்ஷிதர்	T. V. இராமச்சந்திர தீக்ஷிதர்
56	25	தாலுக்காக்களில்	தாலுக்காவில்
56	34	....	புலியூருக்குப்பின் - செங் காலிபுரம், மரத்துரை, மாம்படுக்கை, மாந்தை மேலப்பாலையூர், கூந்த லூர், தூத்துக்குடி, சித்தன்வாளூர் இவை களை சேர்த்துப் படிக் கவும்,
60	18	தனஷ்கோடியிலிருந்து	தனுஷ்கோடியிலிருந்து
95	26	செங்நப் புலவர்	செங்நாப் புலவர்
105	5	சேர்ந்தவாாயினும்	சேர்ந்தவராயினும்
109	19	ஒருவாராக	ஒருவராக
127	18	சேகரித்ததுக்	சேகரித்துத்
128	15	விமுப்புரத்தில்	விழுப்புரத்தில்
152	20	வெள்ளிமலை	வள்ளிமலை
186	17	அடைந்திருந்தாதால்	அடைந்திருந்ததால்
216	14	ஸ்ரீ ஶைல்	ஸ்ரீ ஶைல
217	28	ஸ்ரீ	ஸ்ரீ
218	30	இத்தலத்தை	இத்தலத்தில்

222	21	ராஜா ராயுக்குச்	ராஜா ராய்க்குச்
228	13	பாண்டே	பரண்டே
235	23	ஸ்லாமிலால்	ஸ்வாமிலால்
237	33, 34	வடமதுரை	(வட வதுரை)
,,	34	ஹரித்வாரம்	(ஹரித்வாரம்)
238	3	தேவி மாகாத்மியத்தில்	தேவி பாகவதத்தில்
241	7	तेमलया	तेऽमलया
254	10	ஆனந்தலகிரி,	ஆனந்தகிரி
258	17	தன்	அதன்
271	10	पुरुरूपर्डयते	पुरुरूपईयते
272	19	இவ்விழா	(இச்சொல்லை நீக்கிப் படிக்கவும்)
285	27	தங்கிருந்து	தங்கியிருந்து
332	8	என்றும்	என்னும்
344	14	மகாலிங்கங்களையும்	மகாலிங்கத்தையும்
348	8	அதற்கடுத்த	அதற்கடுத்து
,,	21	ஆசாரியார்களான	ஆசார்யர்களான
,,	23	மல்லிகேசுவரரை	மல்லிகார்ஜுனரை
,,	24	1903	1930
350	1	தென்கரையில்	வட கரையில்
374	13	அனுக்கிரக்கி	அனுக்ரஹிக்க
377	14	ஹோமத்தைதை	ஹோமத்தை
384	31	நாமசித்தாந்த கௌமுகி	நாமாமிருத ரஸாயனம்
388	14	சமரிபுரி	சமரபுரி
396	21	பூர்வங்கமாய்	பூர்வாங்கமாய்
400	10	ஆற்றுகின்றவர்களுகு	ஆற்றுகின்றவர்களுக்கு
403	15	ப்ரஹாஸதி	ப்ரசாஸதி
409	6	அக்னியூ	அக்னி பூ
422	15	நடைபெற்ற	நடைபெறவேண்டிய
425	6	विधिवशप्राप्तेन	विधिवशात्प्राप्तेन

